D
V211,31'N63
N63.15

137883
600 008.

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRD SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

18th, 19th, 20th, 21st, 22nd and 23rd November 1963.

Volume XV (Nos. 1 to 6).

TABLE OF CONTENTS.

Monday, 18th November 1963.

		PAGES
	Personnel of the Government of Madras	1
I	Obituary Reference to Sri S. R. Munusami and Sri U. Muthuramalinga Thevar, ex-M.L.As.	1
II	Questions and Answers	1-109
III	Adjournment Motions—	
	(1) Promulgation of prohibitory orders and arrest of D.M.K. Partymen	110-119
	(2) Promulgation of prohibitory orders	120
	(3) Alleged entry by the Police into three Textile Mills in Coimbatore and beating the workers	121-123
	(4) Failure to settle dispute between Canegrowers and Cauvery Sugars Limited, Tiruchirappalli district	124-125
IV	Calling attention to non-adherence to the three-language formula	125-127
V	Announcement— Business of the House	127-128
VI	Government Bills—	
	(1) The Madras Urban Land Tax Bill, 1963 (L. A. Bill No. 2 of 1963)	128
	(2) The Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 (L. A. Bill No. 19 of 1963)	128
	(3) The Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1963	128-129
VII	Papers laid on the table of the House	12

Tuesday, 19*th November* 1963.

		PAGES
I	Questions and Answers	211-250
II	Points of Order—	
	(1) Walkout by some Opposition Members after Speaker's Ruling	250-255
	(2) Ex-Chief Minister's failure to make a statement on his resignation	255-256
III	Adjournment Motions—	
	(1) Death of a person in Police Custody at Tirumangalam ..	256-257
	(2) Refusal of managements of some Textile Mills to give bonus to their workers	257-258
IV	Privilege matter—	
	Sub-editorial in the 'Dinamani'	258-260
V	Calling attention to difficulties of agriculturists in Dharmapuri Block in getting loans	260-261
VI	Government Bills—	
	(1) The Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1963—*cont.*	261-273
	(2) The Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963 (L. A. Bill No. 23 of 1963)	273-287
	(3) The Madras Urban Land Tax Bill, 1963 (L. A. Bill No. 2 of 1963) as amended by the Select Committee	288-305
VII	Papers laid on the table of the House	305

Wednesday, 20*th November* 1963.

I	Questions and Answers	317-353
II	Point of Order—	
	Walk-out by some Opposition Members after Speaker's Ruling —*cont.*	353-354
III	Calling attention to arrears of land revenue in the Sivaganga Zamin area	354-356
IV	Government Motion—	
	(1) Change in the Order of Business	356-357
	(2) Election to the Madras Land Improvement Board	395-396
V	Government Bills—	
	(1) Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963	357-395
	(2) Madras Urban Land Tax Bill, 1963 (L. A. Bill No. 2 of 1963)—*cont.*	397-413
IV	Papers laid on the table of the House	413

Thursday, 21*st November* 1963.

		PAGES
I	Questions and Answers	415-458
II	Privilege Matter	458
III	Adjournment Motions	458
IV	Calling attention to non-availability of scholarship forms for school-going children of political sufferers and Ceylon repatriates	458-459
V	Point of Information—Arrest of some Members	459-460
VI	Demands for Grants for Excess Expenditure in 1959-60—Presentation	460
VII	Demands for Grants for Excess Expenditure in 1960 61—Presentation	460
VIII	Point of order—Withholding of consent for an adjournment motion	461
IX	Non-Official Resolutions—	
	(1) Appointment of a Committee to enquire into the working of the Government Transport	461-499
	(2) Declaration of 'Tiruvalluvar Day' as a Public holiday under the Negotiable Instruments Act	499-515
	(3) Appointment of a Committee to secure reduction of prices of essential articles of life, to prevent hoarding speculation and blackmarketing and to arrest the growing menace of adulteration	516-524
X	Announcement—Arrest of Member	515-516
XI	Papers laid on the Table of the House	524

Friday, 22*nd November* 1963.

I	Questions and Answers	539-577
II	Request for a Half-hour Debate	577-579
III	Announcements—	
	(1) Arrest of a Member and release of Members	579-581
	(2) The Madras Appropriation (No. 5) Bill, 1963	596
	(3) The Madras Appropriation (No. 6) Bill, 1963	597
IV	Privilege Matter *re.*—Non-communication of information about arrest of a Member	581-590
V	Point of Order—	
	Posting of Policemen in the precincts of the House	590
VI	Calling attention to lathi charge on workers of some of the Textile Mills at Coimbatore	590-592

Friday, 22nd November 1963—*cont.*

PAGES

VII Voting on Demands for Grants for Excess Expenditure in 1959-60 — 592-595
- Demand III—Stamps Administration
- Demand VII—General Sales Tax and other Taxes and Duties Administration
- Demand VIII—Irrigation
- Demand XI—Elections
- Demand XIII—Administration of Justice
- Demand XV—Police
- Demand XXIII—Harijan Uplift
- Demand XX—Civil Works—Works
- Demand XXVI—Civil Works—Establishment and Tools and Plant
- Demand XXX—Stationery and Printing
- Demand XXXVI—Capital Outlay on Irrigation
- Demand XXXVII—Capital Outlay on Public Health

VIII Voting on Demands for Grants for Excess Expenditure in 1960-61 — 595-596
- Demand I—Land Revenue
- Demand III—Stamps Administration
- Demand IX—Head of State, Ministers and Headquarters staff
- Demand XXV—Labour including Factories
- Demand XXIV—Civil Works—Works
- Demand XXXVI—Road Transport Schemes
- Demand XXXVII—Capital Outlay on Irrigation
- Demand XXXVIII—Capital Outlay on Public Health

IX Government Bills—
1. The Madras Appropriation (No. 5) Bill, 1963 597
2. The Madras Appropriation (No. 6) Bill, 1963 597
3. The Madras Urban Land Tax Bill, 1963 (L. A. Bill No. 2 of 1963) as amended by the Select Committee—*cont.* .. 597-611
4. The Madras Irrigation (Levy of Betterment Contribution Amendment Bill, 1963) (L.A. Bill No. 19 of 1963) as amended by the Select Committee 612-648

X Papers laid on the table of the House 648-649

Saturday, 23rd November 1963.

I Condolence Resolutions *re.* the demise of Mr. J. F. Kennedy, President of the U. S. A. and five top-ranking Indian Military Officers 661-666

II Questions and Answers 666-742

III Request for a half-hour dabate 743

IV Privilege Matters—
1. Presence of Policemen within the precincts of the House .. 743-746
2. Functioning of the D. M. K. Members of the House in view of the party's announcement to burn a part of the Constitution 746-749

V Calling attention to damages to plantain and betelvine gardens in Thanjavur and South Arcot districts 749-750

Saturday, 23rd November 1963—*cont.*

PAGES

VI. Announcements—
1. Election to Madras Land Improvement Board 750-751
2. Bills passed by the Council 751
3. The Madras (Added Territories) Extension of Laws Bill, 1963 752
4. The Madras Sugarcane Cess (Validation) Bill, 1963 .. 772

VII. Statement by Minister *re.* Correction to answer to a supplementary question under question No. 394 751

VIII. Government Resolution—
Draft rule under Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 751-752

IX. Government Bills—
1. The Madras (Added Territories) Extension of Laws Bill, 1963 752-753
2. The Madras Appropriation (No. 5) Bill, 1963 753
3. The Madras Appropriation (No. 6) Bill, 1963 753
4. The Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 (L. A. Bill No. 19 of 1963) .. 754-771
5. The Madras Sugarcane Cess (Validation) Bill, 1963 .. 772-774
6. The Madras Cattle Disease (Amendment) Bill, 1963 .. 774-775

X. Papers laid on the Table of the House 775-776

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g. (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s),' 'Corporation(s),' etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the index is given below :—

A.M./Ad. Motion	Adjournment Motion.
Ann.	Announcement.
B.O.H.	Business of the House.
C.A.	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A. St.	Calling Attention Statement.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 18th November 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at eleven of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I—OBITUARY REFERENCE TO SRI S. R. MUNUSAMI AND SRI U. MUTHURAMALINGA THEVAR

MR. SPEAKER: It is my painful duty to inform the House about the death, on the 21st August 1963, at Thorappadi, Vellore, of Sri S. R. Munusami, a Member of the Assembly from 1957–62 representing Ambur Reserved Constituency.

It is also my painful duty to inform the House about the death of Sri U. Muthuramalinga Thevar, an ex-Member of the Assembly, on the 29th October 1963. He was a member of the Madras Legislative Assembly from 1937 to 1939, from 1946 to 1948 representing Ramanathapuram Rural (General) Constituency and from 1952–57 representing Mudukalathur (General) Constituency. He was a sitting Member of the Parliament from 1957 representing Aruppukkottai Constituency till his death.

On behalf of the House, I will convey the condolence to the bereaved families.

I request the hon. Members to stand in silence for a minute as a mark of expressing our sorrow and showing our respect to the departed souls.

The House stood in silence for a minute.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Rural water-supply.

* 117 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to take up pilot projects for supplying safe water to villages; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM: (*a*) Yes.

(*b*) The matter is under consideration of Government.

Consi.	Consideration stage of a Bill— This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.
Consid. Cl.	Consideration of clauses of a Bill.
D.E.E.	Demands for Excess Expenditure.
Dis. S.D.	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.	Demands for Supplementary Grants.
G.A.	Governor's Address.
G.D.	General Discussion.
H.A.H. Dis./H.H.D.	Half-hour Discussion.
Int.	Introduction stage of a Bill.
L.A.	Legislative Assembly.
L.C.	Legislative Council.
M.	Motion.
P.M.	Privilege Motion.
R./Res.	Resolution.
St.	Statement.

PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS

GOVERNOR OF MADRAS

SRI BISNURAM MEDHI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. SRI M. BHAKTAVATSALAM, *Chief Minister in-charge of Public; General Administration including the Board of Revenue and District Revenue Establishments; Planning; Finance; Education; Labour; Legislature; Elections; Religious Endowments and Official Language.*

2. THE HON. SRI R. VENKATARAMAN, *Minister in-charge of Industries; Commercial Taxes; Nationalised Transport; Technical Education; Electricity; Housing; Handlooms; Yarn; Textiles; Mines and Minerals; Iron and Steel Control; Prices and Supply of Goods Act; Companies; Newsprint Control; Ex-Servicemen; Legislation on Chits; Law and Transport.*

3. THE HON. SRI P. KAKKAN, *Minister in-charge of Police; Agriculture; Minor Irrigation; Animal Husbandry; Harijan Welfare; Prohibition and Bhoodan and Gramdan.*

4. THE HON. SRI V. RAMAIAH, *Minister in-charge of Public Works; Revenue; Legislation on Money Lending (Rural Indebtedness); Legislation on Weights and Measures; Indian Overseas; Refugees and Evacuees; Passports and Ports.*

5. THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM, *Minister in-charge of Public Health and Medicines; Women's and Children's Welfare; Orphanages; Accommodation Control; Beggars and Cinematograph Act.*

6. THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR, *Minister in-charge of Food; Co-operation; Courts; Forests and Cinchona; Khadi and Village Industries.*

7. THE HON. SRI G. BHUVARAHAN, *Minister in-charge of Information and Publicity; Registration; Stationery and Printing; Government Press; Prisons; Approved Schools and Vigilance Services and Fisheries.*

8. THE HON. SRI S. M. A. MAJID, *Minister in-charge of Municipal Administration; Community Development and Panchayats.*

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த மாநிலத்தில் எந்தெந்த ஊர்களில் அந்தக் குடிநீர் வழங்கும் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்பதற்கு ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? அதனுடைய விவரம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அது பற்றி ஒரு பட்டியல் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். சீஃப் எஞ்சினியர் அதை இன்னும் பூர்த்தி செய்யவில்லை, பூர்த்தியான பிறகு தான் அதுபற்றி தகவல் கிடைக்கும்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: அத்தியாவசியத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் திட்டம் ராஜ்யம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அமலுக்குக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறதா? அதற்குரிய திட்ட வரையறை ஏதேனும் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: குடி தண்ணீர் திட்டம் எப்படியாகிலும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்றுதான் 'யூனிஸெப்'-ம் ஆதரவு கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கமும் அதற்கு 100-க்கு 100 ஆதரவு அளிப்பதாகக் கூறியுள்ளார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர்: மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக குடி தண்ணீர் திட்டம் நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு சதவிகிதம் பூர்த்தி செய்யப்படும். நான்காவது திட்ட காலத்திற்குள்ளாக 100-க்கு 100 கிராமங்களில் குடி தண்ணீர் திட்டம் வழங்குவது பற்றி ஏதேனும் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அதுபற்றி தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன்: இந்தக் குடி நீர் திட்டத்திற்காக கிராமங்களை எடுத்துக்கொள்ளும் அடிப்படையிலே முதலில் பின்தங்கிய வறண்ட கிராமங்கள், ஏற்கனவே நல்ல தண்ணீர் வசதி இல்லாத கிராமங்கள் என்ற அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா? அல்லது வேறு எந்த அடிப்படையில் இந்தக் குடிநீர் திட்டம் எடுத்துக்கொள்ளப்படுகிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எங்கெல்லாம் குடி தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதோ அந்தக் கிராமங்களை முதலில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற அடிப்படையில் தான் ஆத்தூர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பிறகு வத்தலகுண்டில் 11 கிராமங்கள் எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள்.

திரு. து. ப. அழகமுத்து: இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட குடிநீர் திட்டங்கள் பஞ்சாயத்துகளில் போதிய பண வசதி இல்லாத காரணத்தினாலும், பொது மக்கள் போதுமான நிதி கொடுக்காத காரணத்தினாலும் நிறைவேற்றப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம். அவைகளெல்லாம் நன்றாகத்தெரியும். அதனால் தான் இதற்கு இப்பொழுது 'யூனிஸெப்' அஸிஸ்டென்ஸ் வேண்டுமென்று அதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டம் இதுவரையில் எத்தனை கிராமங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது? இனி எத்தனை கிராமங்களுக்கு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: அநேக கிராமங்களில் உப்புத் தண்ணீர் இருப்பதன் காரணமாக போரிங் கிணறு வெட்டி மேல்நிலை தொட்டி கட்டுவதற்காக மத்திய அரசாங்கம் கொடுத்துவந்த பகுதித் தொகையை இப்பொழுது கொடுத்துக்கொண்டு வருகிறார்களா? எவ்வளவு சதவிகிதம் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதெற்கெல்லாம் தனிக் கேள்வி போட வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன்: குடிநீர் வழங்கும் திட்டம் என்பது வெறும் திறந்த கிணறுகளை வெட்டிவிட்டு விடுவதா? அல்லது பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் கீழ் மேல்நிலை தொட்டி கட்டி தண்ணீர் வழங்கப்படுகிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கிராமங்களுக்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கவேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் இப்பொழுது ஒரு பட்டியல் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். அது பற்றி சரிவர முடிவு செய்த பிறகு சீப் எஞ்சினியர் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. மாதவன்: 'யூனிஸெப்' திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் ஊர்களில் பின்தங்கிய மாவட்டமாகிய ராமநாதபுரம் மாவட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா? அதன் விவரம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: குடி நீர் கிடைப்பது எங்கெல்லாம் கடினமாக இருக்கிறதோ அந்தக் கிராமங்களையெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற உத்தேசத்தில்தான் இப்பொழுது பட்டியல் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று மறுபடியும் கூறிக்கொள்ளுகிறேன்.

[18th November 1963

திரு. மு. சண்முகம்: கிராமங்களுக்கு பாதுகாப்புக் குடி தண்ணீர் திட்டம் வழங்குவதற்கு 'யூனிசெப்'-ம், மத்திய அரசாங்கமும் உதவி அளிக்கின்றன என்று சொல்லுவது போல் நகரங்களுக்கும் அத்தகைய உதவி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அதற்குத் தனி கேள்வி வேண்டும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் பல கிராமங்களில் சரிவர நிறைவேற்றப்படாத காரணத்தினுல், அங்கே தெருக்களிலெல்லாம் சகதியாகிற வகையில் வடிகால்கள் இல்லாமல் இருக்கிறது. அரசாங்கம் அப்படிப்பட்ட பகுதிகளை உடனடியாக எடுத்துக்கொண்டு, அங்கே அந்த திட்டத்தை நிறைவேற்ற முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஆலோசனை கருத்தில் வைக்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர்: கடல் நீரை குடி நீராக மாற்ற முடியும் என்று அண்மையில் அயல்நாடு சென்று திரும்பிய நமது தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அதுபற்றி என்னுடைய சக அமைச்சர் தொழில் அமைச்சர் அவர்கள் கூறுவார்கள்.

Mr. SPEAKER: Questions 222, 223 and 224 may be taken up together. Questions 227 and 228 also relate to the same subject.

குடிநீர் திட்டம் (திருவண்ணாமலை)

*222 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன், திரு. ப. உ. சண்முகம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(ஆ) திருவண்ணாமலை நகருக்குத் தேவையான குடிநீரைச் சாத்தனூர் அணையிலிருந்து கொண்டுவரும் திட்டம் எப்போது அனுமதிக்கப்பட்டது?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

(உ) அது எப்போது நிறைவேற்றப்படும்?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம்: (அ) திருவண்ணாமலை நகருக்குத் தேவையான குடிநீர் பொன்னியாற்றிலிருந்து ஓலகலப்பாடிக்கு அருகிலுள்ள அணைக்கட்டிலிருந்து கொண்டுவரப்படும். இத்திட்டம் 1963-ம் வருஷம் ஜூன் மாதத்தில் அனுமதிக்கப் பட்டது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 47.73 லட்சம் வருடாந்திரப் பேணுதல் மதிப்பீடு ரூபாய் 94,000.

(உ) இத்திட்டம் 1963-64-ம் (ஏப்ரல் 1963—மார்ச் 1964) வருடத்திற்குள் நிறைவேற்றுதலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

18th November 1963]

(a) The drinking water for Tiruvannamalai will be taken from the river Ponniyar Anicut near Olagalapadi. This scheme was sanctioned in June 1963.

(b) The estimated cost of the scheme is Rs. 47.73 lakhs to install and Rs. 94,000 to maintain annually.

(c) The scheme will be taken for execution during 1963-64.

*223 கேள்வி.—**திரு. இராம அரங்கண்ணல்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலை குடி தண்ணீர் சப்ளைக்கான விரிவான திட்டம் ஒன்றை சர்க்கார் அனுமதித்துள்ளனர் என்பது உண்மையா?

(இ) இதுபற்றி மேற்படியூரில் உள்ள பொது ஸ்தாபனங்கள் விண்ணப்பம் ஏதேனும் செய்துள்ளனவா?

திரு. திருமதி. ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆமாம்.

(இ) இல்லை.

*224 கேள்வி.—**திரு. கோ. சி. மணி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகராட்சிக் குடிநீர் திட்டத்துக்கென அரசாங்கம் கடனுதவி அளித்திருப்பது உண்மையா?

(இ) திருவண்ணாமலை நகராட்சி கடனுதவி கோரி மனுவை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இதுவரை எந்தக் கடனும் வழங்கவில்லை.

(இ) கடன் மனு எதுவும் வரவில்லை.

திரு. ப. உ. சண்முகம்: ஜூன் மாதத்தில் இந்தத் திட்டம் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். திருவண்ணாமலை இடைத் தேர்தலை ஒட்டி, இந்தத் திட்டத்தை அவசரம் அவசரமாக அனுமதித்ததற்கு காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஜனங்கள் தண்ணீருக்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததுதான் காரணம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கெனவே பல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படாமல் நிறுத்திவைக்கப் பட்டிருந்த நேரத்தில் திருவண்ணாமலைத் திட்டத்தை மட்டும் எடுத்துக்கொண்டதற்கு என்ன காரணம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: திருவண்ணாமலைப் பகுதியில் எப்போதுமே குடி தண்ணீர் கஷ்டம் உண்டு. அதை உணர்ந்துதான் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

[18th November 1963

திரு. இராம. அரங்கண்ணல் : அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அபேட்சகர் வெற்றி பெற்ற காரணத்தினால், இந்தத் திட்டம் அமலாக்கப்படமாட்டாது என்ற வதந்தி உலவுகிறதே, அப்படி இல்லாமல் திட்டம் நிறைவேற்றப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தேர்தலுக்கும் ஜனங்களுக்கு சலுகைகள் செய்து கொடுப்பதற்கும் சம்பந்தமே கிடையாது. பொது மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்குத் தான் அரசாங்கம் இருக்கிறது. ஆகவே தேர்தல் விஷயத்தைப் பற்றிக் குழப்பவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. பழனிப்பிள்ளை அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

(பதில் இல்லை).

புலவர் கா. கோவிந்தன் : 1963 ஜூனில் அரசாங்கத்தினுடைய அனுமதி கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்திற்கான விண்ணப்பம் நகர மன்றத்திலிருந்து எப்பொழுது வந்தது என்பதைச் சொல்ல முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே விண்ணப்பம் வந்துகொண்டுதான் இருந்தது. உடனடியாக நிறைவேற்றுவதில் பல கஷ்டங்கள் இருந்த காரணத்தினால், எப்பொழுது வேளை வந்ததோ, அப்பொழுது இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : விண்ணப்பம் வந்த தேதி எப்பொழுது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ப. உ. சண்முகம் : திருவண்ணாமலை குடி தண்ணீர்த் திட்டத்தோடு, நீர்ப்பாசனத்திற்கும் திட்டம் இணைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The main question relates to drinking water supply.

SRI P. U. SHANMUGHAM : There are two schemes. I want to know which scheme bas been taken up?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குடி தண்ணீர் சப்ளைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டம்தான் இது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தேசிய குடி தண்ணீர் திட்டம், பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டம், இவைகள் எல்லாம் நல்ல வளமான பகுதிகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வறண்ட பகுதிகளில் நிறைவேற்றப்படுவதில்லை. உடனடியாக அந்தப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

18th November 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : வறட்சிப் பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த தேசிய குடி தண்ணீர்த் திட்டத்தை அரசாங்கம் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். தற்போது நேஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீமுக்காக கிடைக்க வேண்டிய தொகை நம்முடைய அரசாங்கத்துக்குக் கிடைக்காத காரணத்தினால், எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதில் கஷ்டமிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கடந்த பல வருஷங்களாக கிராமப் புறங்களிலே குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டப்பட்டு, சில இடங்களிலே ஓவர்ஹெட் டாங்குகள் அமைத்து, குடி தண்ணீர் வழங்கப்பட்டுவருகிறது. அப்படி தண்ணீர் சப்ளை செய்யும் சில இடங்களிலே, கிணறுகள் வெட்டிய ஒரு சில வருஷங்களுக்குள், அந்தத் தண்ணீர் குடிப்பதற்கு தகுதியற்றதாக ஆகிவிடுகிறது என்பதை அனுபவத்தில் அறிந்து வருகிறோம். இப்பொழுது பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்குவதிலே, மழைத் தண்ணீரையோ அல்லது ஆறுகளிலிருந்து தண்ணீரையோ கொண்டு வந்து வழங்கக்கூடிய திட்டமாக இருக்கிறதா? கிணறுகள் வெட்டி தண்ணீர் வழங்குவதில் ஏற்கனவே உள்ள அனுபவத்தை வைத்துக் கொண்டு, செலவிடப்படும் பணம் வியர்த்தமாகாமல், குடி தண்ணீர் திட்டங்கள் நிறைவேற்றப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பழைய அனுபவத்தில் ஏற்பட்ட கெடுதல்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, நல்லபடியாக எப்படி தண்ணீர் கொடுக்க முடியுமோ, அந்தப்படி இப்பொழுது செய்துவருகிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அனுபவம் பலவிதமாக இருக்கக் கூடிய காரணத்தினால், தேசிய குடி நீர் வழங்கும் திட்டத்திற்காக நம்முடைய ராஜ்யத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ? செலவு செய்யப்பட்ட தொகைக்கு பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று ஏதாவது எவால்யுவேஷன் நடந்ததா ? அப்படி என்றால், அதன் முடிவு என்ன ? இனி அப்படி எவால்யுவேஷன் பண்ணும் உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கே. டி. கோசல்ராம் : இந்த தேசிய குடி நீர் திட்டத்தின் கீழ் சமுத்திரக்கரை ஓரமுள்ள கிராமங்களுக்கு நல்ல குடி தண்ணீர் வழங்க பிரையாரிட்டி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதை அம்மாதிரியான எல்லா சமுத்திரக்கரை ஓரமுள்ள கிராமங்களுக்கும் விஸ்தரிக்க முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினரின் ஆலோசனைகளை மனதிலே கொண்டு, என்னென்ன செய்ய வேண்டுமோ, அவை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: இந்தக் குடி தண்ணீர் சப்ளைத் திட்டம் ரூரல் வாட்டர் சப்ளை இலாகா, ரூரல் வெல்பேர் இலாகா, ஹரிஜன நல இலாகா, இவ்வாறு இரண்டு அல்லது மூன்று இலாக்காக்களின் மூலம் நிறைவேற்றப்படுவதால், ஒழுங்காக நடைபெறவில்லை. இத்திட்டங்களை எல்லாம் ஒரே இலாகா மூலம் நடத்த வேண்டுமென்று நம்முடைய மதிப்பீடுக் குழு சிபார்சு செய்திருக்கிறது. அதை அமல் நடத்தும் உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Rural Water-supply.

* 227 Q.—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to set up Rural Water-supply Pilot Projects under a scheme of assistance from UNICEF; and

(b) if so, the details thereof?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM:

(a) Yes.

(b) The matter is under consideration of the Government.

* 228 Q.—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to set up a Special Investigation Division consisting of experts to carry out the survey of the Rural Water-supply schemes with the assistance of the Central Government; and

(b) if so, the details thereof?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM:

(a) Yes.

(b) The matter is under consideration of the Government.

திரு. எம். எஸ். செல்வராஜன்: தேசிய குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு தொடர்ந்து மத்திய சர்க்காரின் உதவி கிடைப்பதில் தடை ஏதேனும் இருக்கிறதா, அப்படியானால் அவர்களது 95 சதவிகிதம் உதவியை ராஜ்ய சர்க்கார் கொடுத்துவரும் 75 சதவிகிதம் உதவித் தொகைக்கு பதிலாக ராஜ்ய நிதியிலிருந்தே அந்தத் தொகையை ஈடு செய்து திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: A Special Investigation Division consisting of experts to carry out the investigation had been sanctioned.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த எக்ஸ்பர்ட் டீமை அமைக்கவேண்டுமென்று மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது ஆலோசனை வந்ததா, நிதி சம்பந்தமான விவரம் என்ன? வல்லுநர்களை அமைப்பதில் கால தாமதத்திற்கு காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த ஸ்பெஷல் வாட்டர் சப்ளை இன்வெஸ்டிகேஷன் டிவிஷன் வேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து ஆலோசனை வந்தது. அது பற்றி ஆவன செய்யும் போது மாநில சர்க்காரின் ஆலோசனையை கேட்பார்கள்.

Schedule of rates (contracts)

* 124 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether it is a fact that 10 per cent increase in the schedule of rates to the rates of 1961–62 has been given in Dharmapuri and Omalur taluks in Salem district;

(b) whether the Government are aware that Pennagaram block area will be benefited by 35 per cent above the scheduled rates, whereas Dharmapuri, Palacode and Nallampalli areas are benefited only by 10 per cent of the rates;

(c) whether the Government are aware that contractors are not forthcoming to take up the works in Dharmapuri, Palacode and Nallampalli areas since the schedule of rates are not encouraging; and

(d) if so, will the Government come forward to keep the Dharmapuri, Palacode and Nallampalli blocks on a par with the Pennagaram Block in the schedule of rates?

The Hon. Sri V. RAMAIAH: (a) It is a fact that in the schedule of rates for Salem district for the year 1962-1963, for areas covered by Omalur taluk and Dharmapuri, Palacode and Nallampalli Block areas of Dharmapuri taluk, a 10 per cent increase over the general rates has been allowed.

(b) For the Pennagaram Block area, an increase of only 25 per cent over the general rates for the district has been allowed and not 35 per cent as stated by the Member in his question.

(c) It is reported that the contractors in sufficient numbers are not forthcoming to take up works in Dharmapuri, Palacode and Nallampalli Block areas as they are not willing to go and undertake works at places far away from their regular places of habitation.

(d) In view of the difficulties experienced in getting contractors in sufficient numbers to take up works in Dharmapuri, Palacode and Nallampalli Block areas, a 25 per cent increase over the general rates has been allowed in the schedule of rates for 1963-64 for the entire Dharmapuri taluk (which comprises Dharmapuri,

Palacode, Pennagaram and Nallampalli Blocks), thus bringing Dharmapuri, Palacode and Nallampalli Block areas on a par with Pennagaram Block area.

வைகை கால்வாய் சீர்திருத்த திட்டம்

*219 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி, திரு. செ. சீனிவாசன் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வைகை கால்வாயை சீர்திருத்தும் திட்டத்திற்கான பூர்வாங்க சர்வே வேலைகள் முடிந்துவிட்டனவா ?

(இ) ஆமென்றால் அவ்வேலை எப்போது துவங்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The re-investigation of the scheme for modernizing the Vaigai Channels has just been completed. The revised proposals are under scrutiny by the Chief Engineer (Irrigation) and the scheme will be taken up for execution after the proposals are sanctioned by the Government.

திரு. கரு. சீமைச்சாமி : சார், கடந்த இரண்டாண்டு காலமாக வைகை திட்டத்தை நவீன முறையாக அமைக்க பூர்வாங்க வேலைகள் செய்ய முடிவு எடுத்திருக்கிறோம் என்று கூறி வந்து இருக்கிறார்கள். அதில் எவ்வளவு நாளைக்கு இன்னும் காலதாமதம் ஏற்படும்? இந்தத் திட்டத்தை உடனடியாக அமுலாக்க ஆவன செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையயா : இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரை அவசரப்பட்டு செய்வதில் லாபம் இல்லை. இந்தப் பாசனம் நீண்ட காலத்திற்கு இருக்கக்கூடியது. முதலில் குறைபாடுகள் இருந்தன. இன்வெஸ்டிகேஷன் செய்த காரணத்தினால் ஒரு நல்ல திட்டமாக உருவாக்கி பாசனத்திற்கு உதவியாக செய்ய வேண்டும் என்பது எண்ணம். இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பு ஒரு சிறு திட்டத்தை உருவாக்கியிருந்தார்கள். அதை நிபுணர்களை வைத்து பரிசீலிக்கும்போது அந்தத் திட்டம் வைகை பாசன கால்வாய்களுக்கு பெரும் உதவியாக இருக்காது என்று தெரிந்தது. ஆகவே மீண்டும் நல்லபடியாக இன்வெஸ்டிகேஷன் செய்து ஒரு புது திட்டத்தை உருவாக்க சீப் எஞ்சினியர் பரிசீலனை செய்து வருகிறார்கள்.

SRI R. V. SWAMINATHAN : May I know the area and villages which will get benefit under this scheme?

THE HON. SRI V. RAMAIAH : Actually this is to benefit the entire Vaigai Irrigation System as such.

திரு. கரு. சீமைச்சாமி : வைகை கால்வாயை நவீனமாக்க சென்ற பட்ஜெட்டிலேயே பணம் ஒதுக்கப்பட்டது. அது எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையயா : தனிக் கேள்வி போட வேண்டும்.

வைகை நீர்த்தேக்கம்

*220 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வைகை நீர்த்தேக்கத்தினால் கிழக்கு இராமநாதபுரத்தில் எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கிறது?

(இ) இந்நிலங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு தண்ணீர் விடப்படுகிறது?

THE HON. SRI V. RAMAIAH : (a) (i) New ayacut with regular supplies—6,418.5 acres.

(ii) Old ayacut with occasional supplies—1,04,740 acres.

(b) 1,100 M.cft.

திரு. கரு. சீமைச்சாமி : பாசனத்திற்கு விடப்படும் தண்ணீரை வைத்துக் கொண்டு கணக்கு பார்க்கிறோம். ஆனால் விவசாயத்திற்கு போதிய தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே அதிகமான அளவு தண்ணீரை விட ஏற்பாடுகளை செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையயா : அதிகமான தண்ணீர் விட முடியாது. வைகை பாசனத்தில் ஆயக்கட்டு நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது. அதற்கான தண்ணீர் விடப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் ஸ்பெஷல் ரிலீஃப் கூட வழங்குகிறோம். அதிகத் தண்ணீர் விடுவதால் மற்ற இடங்கள் பாதிக்கப்படக்கூடாது.

SRI R. V. SWAMINATHAN : In view of the fact that this year the entire 6,400 acres have not been supplied with water, will the Government come forward to help at least certain villages where the crops require only one or two wettings ?

THE HON. SRI V. RAMAIAH : Right up today the Periyar system is in a precarious position. But I expect good rains in the next few days. If it materialises, Government will consider helping that new ayacut which has just come into existence.

SRI R. V. SWAMINATHAN : May I know whether the Hon. Minister would be pleased to supply water at least for a few acres, say for at least 500 acres, in that area, where the crops require one or two wettings?

THE HON. SRI V. RAMAIAH : Five hundred acres will not be in a compact block. It will be spread over the entire big area. If I let down water now, I will have to waste a lot of water, which I cannot afford now.

*221 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வைகை அணையை விஸ்தரித்து அதன் கொள்ளளவை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : No.

[18th November 1963

Home Guards

* 225 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the strength of the Home Guards so far raised in the Urban and Rural Areas in the State;

(*b*) the amount of expenditure to be incurred in respect of the Home Guards for the year 1963-64; and

(*c*) the details of the functions of the Home Guards ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) to (*c*) A statement[a] is placed on the Table of the House.

(அ) to (உ) இது குறித்து அறிக்கை ஒன்று சபையில் வைக்கப்பட்டுள்ளது.

Housing schemes

* 229 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the amount allotted in 1961-62 and 1962-63 for the Middle and Low income group housing schemes and the progress made in the construction of houses ?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[b] placed on the Table of the House.

* 230 **கேள்வி.—திரு. முனு. ஆதி:** *கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) **State Housing Board** *சரியான முறையில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்கவில்லை என ஏதேனும் புகார் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ?*

(இ) **State Housing Board** *எந்த அடிப்படையில் வீடுகள் கட்டித்தருகிறது ?*

(உ) இதனை திட்டம் செய்தது யார் ?

(எ) **State Housing Board**-*ல் அங்கம் வகிப்பவர்கள் யார் யார் ?*

(ஐ) இவர்களை அரசாங்கமே நியமித்துள்ளதா ?

(ஒ) எந்த அடிப்படையில் ?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[c] is placed on the Table of the House.

திரு. முனு ஆதி: *தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டங்களுக்காக நிலங்களை ஆக்கிரமிக்கும்போது குறைந்த பணத்தை கொடுக்கிறார்கள் என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?*

a Printed as Appendix I on page 142 Supra.

b Printed as Appendix II on pages 143–146 Supra.

c Printed as Appendix III on pages 147–148 Supra.

18th November 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: *சர்க்கார் "ஆக்கிரமிப்பு" செய்வதில்லை; "ஆர்ஜிதம்" தான் செய்கிறார்கள். (சிரிப்பு) பெரிய திட்டங்களை எடுத்து செய்யும்போது பிறருடைய நிலத்தை எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. அப்படித்தான் இந்த வீடு கட்டும் திட்டத்தையும் நிறைவேற்ற முடியும். ஆனால் இதில் ஒரு விதி செய்து இருக்கிறோம். யாராவது ஒருவருடைய நிலத்தை வீடு கட்டும் திட்டத்திற்கு எடுத்துக் கொண்டால், அவருக்கு ஒரு ப்ளாட் கொடுப்பது என்று செய்து இருக்கிறோம். (குறுக்கீடு) அவர்களுக்கு காம்பென்சேஷன் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுக்கு ஒரு பிளாட் வேண்டும் என்றால் பணம் கொடுத்து வாங்குகிறார்கள்.*

திரு. முனு ஆதி: *தலைவர் அவர்களே, இந்த ஸ்டேட் ஹவுசிங் போர்டு மூலமாக சைதாப்பேட்டையில் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க ஒரு சொஸைடி நிலத்தை அரசாங்கமே அபகரித்துக் கொண்டு அப்படியே விட்டுவிட்டார்களே . . . .* 11-30 a.m.

MR. SPEAKER : The hon. Member is alleging that the Government have committed robbery.

SRI MUNU ADHI : No, Sir. I will explain.

MR. SPEAKER : The hon. Member should use a proper word.

திரு. முனு ஆதி: *தலைவர் அவர்களே, நான் ஆக்கிரமிப்பு, அபகரிப்பு என்று குறிப்பிடுகிறபோது சரியான முறையில் காம்பென்சேஷன் எதுவும் கொடுக்கப்படாமல் எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்லவில்லை.*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: *கனம் அங்கத்தினர் ஏதோ ஒரு தனிப்பட்ட கோவாபரேடிவ் சொஸைடியைப் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி அவர்கள் கடிதம் எழுதலாம். அல்லது அந்த சொஸைடியைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும். கொள்கை பூர்வமாக சர்க்கார் நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறபோது லாண்ட் அக்விஸிஷன் ஆக்ட்படி என்ன நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்துத்தான் எடுத்துக் கொள்கிறார்கள். நஷ்டயீடு சரியானதாக இல்லையென்றால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய் நிர்ணயித்துக்கொள்ளலாம். ஹைகோர்ட் வரை சென்று நியாயமான தொகையை அவர்கள் பெறுவதற்கு உரிமை இருக்கிறது. நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயத்தில் ஏதோ சர்க்காரின் முடிவுதான் முடிவாக இருப்பது போன்ற நினைவோடு சொல்வது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.*

திரு. இராம. அரங்கண்ணல்: *நம்முடைய மின்சார போர்டு சம்பந்தமாக எப்படி ஆண்டுதோறும் ஒரு அறிக்கை வழங்கப்படுகிறதோ அதுபோல இந்த ஹவுசிங் போர்டு சம்பந்தமாகவும் அந்த அந்த ஆண்டில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன, எத்தனை வீடுகள் வழங்கப்பட்டன, யார் யாருக்கு வழங்கப்பட்டன என்பன போன்ற எல்லா விவரங்களும் அடங்கிய ஓர் அறிக்கையை இந்தச் சபை முன் வைக்க ஏற்பாடு செய்வார்களா ?*

[18th November 1963

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : ஆண்டுதோறும் எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்கிற விவரம் அடங்கிய அறிக்கை இந்தச் சபை முன்பு வைக்கப்படுகிறது. யார் யாருக்கு வீடு கொடுக்கப்பட்டது என்பது எல்லாம் எடுத்து வைக்க முடியாது. இப்போது இருக்கிற அறிக்கையில் மேற்கொண்டு விவரங்கள் தேவையானால் தனிக் கேள்வி மூலமாகப் பெற முடியும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : தனி நபர்களுடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது அவர்களுக்கு ஒரு ப்ளாட் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய நிலத்திலேயே அந்த ப்ளாட் கொடுக்கப்படுகிறதா? அல்லது வேறு ஓரிடத்தில் அந்த ஒரு ப்ளாட்டை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்வி எனக்குப் புரிகிறது. ஒருவருடைய நிலத்தை ரோடுக்காகவோ அல்லது வேறு பொதுக் காரியங்களுக்காகவோ ஆர்ஜிதம் செய்கிறபோது அந்த நிலக்காரருக்கு அந்த நிலத்திலேயே ஒரு ப்ளாட் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அந்த ஸ்கீமே அடிபட்டு போகும். ஆகையால் இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் வேறு ஓரிடத்தில்தான் நிலம் கொடுக்கப்படுகிறது. சர்க்கார் ஒருவருடைய நிலத்தை எடுத்துக்கொண்ட பிறகு, 'அது அவருடைய நிலம் இல்லை, ஆகவே அந்த நிலத்திலேயே கொடுக்க வேண்டும் என்று கேட்பது சரியல்ல.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கிராம மக்களுக்கு சர்க்கார் சகாயத்தின் பேரில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நிறைவேற்றப் பட்டு வந்தது. இப்போது தேசிய நெருக்கடி காரணமாக அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் அந்தத் திட்டத்தை சர்க்கார் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த 1963-64-ஆம் ஆண்டில் அவ்வாறு செய்யப்படும் என்கிற உத்தரவாதம் ஒன்றும் கொடுக்க இயலாது. 1964-65-ஆம் ஆண்டு பட்ஜெட் தயாரிக்கும்போது அது யோசிக்கப்படும்.

திரு. வை. சங்கரன் : வேறு பப்ளிக் பர்பசுக்கு நில ஆர்ஜிதம் செய்வது என்றால் மூன்று வருட சராசரி சதவிகிதம் போட்டு நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறது. ஆனால் ஸ்டேட் ஹவுசிங் போர்டுபடி நில ஆர்ஜிதம் செய்கிறபோது ஐந்து வருட சராசரி சதவிகிதம் போட்டு தான் நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறது. இதனால் நிலக்காரர்கள் மிகக் குறைந்த தொகை பெறுகிறார்கள். ஆகவே இதையும் மூன்று வருட சராசரி சதவிகிதத்தில் நஷ்ட ஈடு கொடுப்பது என்று மாற்ற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சட்டப்படி செய்யப் படுகிறது. சட்டத்தைத் திருத்தாமல் இப்படிச் செய்ய முடியாது. சட்டத்தைத் திருத்தும் யோசனையும் இப்போது இல்லை.

18th November 1963]

திரு. எம். எஸ். செல்வராஜன் : இவ்வாண்டு நிறுத்தி வைக்கப் பட்ட வீடு கட்டும் திட்டத்திற்காக மத்திய அரசாங்கம் 85 லட்சம் ரூபாய் அலாட் செய்தது என்பது வாஸ்தவம் தானா? அது எந்த எந்த விஷயத்தில் உபயோகப்பட்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியாகக் கேள்வி போட்டால் எந்தத் துறையில் எந்த எந்த இனத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் சொல்ல முடியும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : ரோடுக்காகவோ மற்ற கம்யூனிடி சென்டர் போன்றவைகளுக்காகவோ நில ஆர்ஜிதம் செய்கின்ற போது அந்த நிலத்திலேயே நிலக்காரர்களுக்கு ப்ளாட் ஒதுக்க வேண்டுமென்று இல்லாவிட்டாலும், அவர்களுக்கே ப்ளாட் இருந்தால் அதைக் கொடுப்பதற்காவது அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி உத்தரவாதம் கொடுக்க முடியாது. ஸ்கீம் எந்த இடத்தில் அமைகிறதோ அந்த இடத்தில் தான் கொடுக்க முடியும்.

திரு. எம். குழந்தைசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, சேலம் ஜில்லாவில் பனமரத்துப்பட்டித் தொகுதியில் இன்னும் ஹரிஜனங்களுக்குக் காலனியே கட்டிக்கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதை கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: அந்தக் கேள்வி என் சகா திரு. கக்கன் அவர்களுக்குப் போட வேண்டிய கேள்வி என்று தோன்றுகிறது.

திரு. கே. டி. கோசல்ராம் : வீடு கட்டும் திட்டத்திற்காக கொடுக்கப்பட்டு வந்த உதவிகள் நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் தான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்களில் எல்லாம் இந்தத் திட்டம் பாதிக்கப்படவில்லை என்று சொல்லப் படுகிறதே, நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் நிறுத்தி வைக்க அவசியம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்தில் தான் மின்சாரத் திட்டத்திற்கு அதிகமான தொகை 1963-1964 பட்ஜெட்டில் ஒதுக்கியதற்கும் அதிகமாகச் செலவிட வேண்டி ஏற்பட்டது. ஆகவே ஹவுசிங் திட்டத்திற்காக ஒதுக்கிய பணத்தை நிறுத்தி வைத்தோம்.

திரு. கே. டி. கோசல்ராம் : அப்படியானால் மத்திய அரசாங்கத்தினால் கொடுக்கப்படுகிற பணம் வாபஸ் ஆகிவிடாதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினருக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்திற்காக ஒதுக்கப்படுகிற பணத்தில்தான் ஒரு தம்படி கூட வாப்ஸ் ஆவதில்லை.

திருமதி டி. என். அனந்தநாயகி: கோடம்பாக்கம் மேம்பாலம் கட்டுவதற்கான தொகை முழுவதையும் ஸ்டேட் ஹவுசிங் போர்டு கொடுப்பதாக ஒத்துக் கொண்டிருப்பதனால், அங்கே இப்போது காலியாயுள்ள இடங்களை எல்லாம் ஆர்ஜிதம் செய்து வருகிறார்கள். அப்படி ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களை பின்னர் இம்ப்ரூவ்ட் ப்ளாட்டாக அதிக லாபத்திற்கு விற்று அந்த லாபத்திலிருந்து இந்தச் செலவை ஈடு செய்துகொள்ளலாம் என்று நினைக்கிறார்கள் என்பதாக எல்லாம் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படி இருந்தால் அது நியாயமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த மாதிரி திட்டம் ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் சொல்வது போல கோடம்பாக்கம் புதூர் திட்டம் என்பது முதலில் வகுக்கப்பட்டது. அதன்படி 400 ஏக்கரா ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதற்கப்பால் இன்னும் 600 ஏக்கரா ஆர்ஜிதம் செய்வது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு புது நகரமே அங்கே எழுந்து கொண்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்வதற்கும் மேம்பாலத்திட்டத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அதற்காக நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியதும் இல்லை.

திரு. வை. சங்கரன்: பொதுவாக நம்முடைய ராஜ்யத்தில் ஹவுசிங் ஸ்கீம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் ஹவுசிங் அக்காமடேஷன் என்பது ஒரு தேசியப் பிரச்சனையாக இருப்பதனால் அந்த வேலைகளையும் தொடர்ந்து நடத்த சர்க்கார் மறு பரிசீலனை செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 1963-64-ஆம் ஆண்டில் இல்லை. ஏனென்றால் நான்முன்பே சொன்னது போல மின்சாரத் திட்டங்களுக்கு முதலிடம் வகுத்துவிட்டதனால் இந்த ஹவுசிங் இனத்தில் தான் குறைத்தாக வேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: கட்டப்பட்ட வீடுகளை அலாட் பண்ணுகிறபோது விண்ணப்பங்களின் ப்ரையாரிடி லிஸ்ட்படி விநியோகம் செய்யப்படுகிறதா? அல்லது லாட்டரி போட்டு கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்காக ஒரு கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டி எல்லா விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து யார் யாருக்குக் கொடுப்பது என்று தேர்ந்தெடுக்கிறார்கள். ஏராளமாக அப்ளிகேஷன் வருகிறபோது லாட்டரி போட்டுகூட தீர்மானித்துவிடுகிறோம்.

கடற்கரை எஸ்டேட் வீடுகள்

*231 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மயிலாப்பூரிலுள்ள "Foreshore Estate" ல் வீடு ஒன்றுக்கு என்ன வாடகை வாங்க, கட்டியபோது உத்தேசிக்கப்பட்டது?

(இ) இப்போது ஒரு வீட்டுக்கு என்ன வாடகை வாங்கப் படுகிறது?

(உ) இந்த வீடுகளைக் கட்டி முடிக்க மத்திய அரசு வழங்கிய (1) கடன் தொகை (2) மானியத் தொகை எவ்வளவு?

(எ) மாநில அரசு கொடுத்த பணம் எவ்வளவு?

(ஐ) மொத்தம் செலவான தொகை எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) to (e) A statement[a] is placed on the Table of the House.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, போர்ஷோர் எஸ்டேட்டில் குடியிருக்கின்றவர்களிடமிருந்து மின்சாரத்திற்காக தனியாக செக்யூரிடி டெபாசிட் வாங்கப்படுகிறதா? அவ்விதம் வசூலிக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மின்சாரம் சம்பந்தமாகத் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துப் பதில் சொல்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: போர்ஷோர் எஸ்டேட்டு வீடுகள் மீனவர்களுக்காகக் கட்டப்பட்டன. வாடகை அதிகமாக இருக்கிறது என்று மீனவர்கள் போக மறுத்த காரணத்தினால் இப்போது அரசாங்க ஊழியர்களுக்கு மாதம் 33 ரூபாய் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பதில் அளித்திருக்கிறார்கள். இத்திட்டத்திற்காக மத்திய அரசாங்கம் கடனாகவும் மானியமாகவும் பன்னிரண்டு லட்சம் ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநில அரசாங்கம் 37 லட்சம் செலவிட்டிருக்கிறது. ஆகவே நம்முடைய மாநிலத் தொகை அதிகமாகவே இருப்பதனால் இந்த ஏழை மக்களுக்கு குறைந்த வாடகைக்கு இந்த வீடுகளை விடவும், அதே நேரத்தில் அந்த வீடுகள் அவர்களுக்கே சொந்தமாகும் விதத்தில் அமைக்கவும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தக் கேள்வியில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று குறைந்த வாடகைக்கு வீடு கட்டிக் கொடுப்பது. பத்து ரூபாய்க்கும் குறைவாக டெனமென்ட் கட்டிக் கொடுப்பது என்பது இயலாது. இரண்டாவது இந்தப் பத்து ரூபாய் கொடுப்பது என்பதே அவர்களுக்கு இயலாத காரியம் என்கிறபோது அந்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக ஆக்குவது என்றால், வாடகைப்பணத்தோடு கூட இந்த நிலத்தின் பணத்தையும் சேர்த்துக் கொடுக்க அவர்களால் முடியுமா என்று யோசிக்க வேண்டும். மேலும் அவ்வாறு அனுமதித்தால் மற்றவர்களுக்கு அவர்கள் விற்றுவிடுவார்களோ என்ற பயம் இருக்கிறது. சென்னை நகரத்தில் அந்தமாதிரி சிலவிடங்களில் விற்றிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம். ஆகவே விற்பதற்கு சர்க்கார் முடிவு செய்யவில்லை.

[a] Printed as Appendix IV on pages 148–149 supra.

[18th November 1963

திரு. இராம. அரங்கண்ணல் : சார், அமைச்சர் அவர்கள் பதிலில் இப்போது "போர் ஷோர் எஸ்டேட்டில்" புதிதாக வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அங்கே நிலத்திற்குப் பணம் கொடுக்கப் போவதில்லை. அங்கு கட்டப்பட இருக்கும் கட்டிடங்களை இரண்டு அடுக்கு மாளிகைகளாகக் கட்ட வேண்டுமென்று போர்டு திட்டமிட்டிருக்கிறது. பீச் அருகில் ஏராளமான இடம் இருக்கிறது. மாடி வீடுகள் என்றால் மீனவர்கள் குடியேற மறுக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குச் சிறு சிறு வீடுகளாகக் கட்டிக் கொடுத்து அந்த வீடு அவர்களுக்கே சொந்தமாகும் வகையில் இன்ஸ்டால்மெண்ட் பேசிஸில் அவர்களுக்குக் கொடுக்க வழி வகுக்கலாம் அல்லவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதுதான் அதற்குப் பதில் சொன்னேன். பத்து ரூபாய் வாடகை கொடுக்க முடியாது என்று சொல்கிற அவர்களால், இன்ஸ்டால்மெண்ட் சிஸ்டப்படி மாதம் 50, 55 ரூபாய் கொடுக்க முடியாது. இரண்டாவது, அவர்களுக்கு அப்படிக் கொடுத்தால் அதை அவர்கள் வேறு யாருக்காவது விற்று விட்டுச் சென்று விடுகிறார்கள். ஆகவே, வாடகைக்கு அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தால்தான் அவர்கள் சௌகரியமான இடத்தில் வாழ முடியும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த மாதிரி சேரிவாழ் மக்களுக்கு என்று வீடு கட்டி பிறகு மற்றவர்களுக்கு விட்டு விடுகிற காரணத்தால் மற்றப்பகுதி ஏழை மக்கள் தங்களுக்கு அவ்வாறு வீடு கட்டிக் கொடுக்க வேண்டாமென்று விண்ணப்பித்திருக்கிறார்களா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்வதற்கு மாறாக அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்கள், 'எங்களுக்கு வீடு கட்டிக் கொடுங்கள், நாங்கள் முன்பு தவறு செய்துவிட்டோம், இலவசமாக வீடுகள் கட்டித் தருகிறோம் என்று சிலர் பிரசாரம் செய்த காரணத்தால் நாங்கள் முன்பு வேண்டாமென்று சொல்லி விட்டோம்" என்று கூறுகிறார்கள். இப்போது அவர்கள் அந்த 10 ரூபாய் வாடகையைத் தரத் தயாராக இருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஒரு டெனமெண்ட் கட்ட 5,500 ரூபாய் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. இரண்டு மாடிக் கட்டிடங்களுக்குப் பதில் சிறு சிறு வீடுகளாகக் கட்டுவதால் இன்னும் குறைந்த விலையில் சர்க்காரே ஏற்றுக்கட்ட முடியும். அப்படிக் கட்டினால் மாதம் 10 ரூபாய் வீதம் வாங்கினால் 18 ஆண்டுகளில் ஏழை மக்களுக்கு அந்த வீடுகள் அவர்களுக்கே சொந்தமாகிவிடும். ஆகவே, இந்தத் திட்டத்தைப் பற்றி புனராலோசனை செய்வதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான உத்தேசம் கிடையாது. குடிசைவாழ் மக்களுக்கு நிலத்தையோ, டெனமெண்டையோ விற்று விட்டால் அவை அவர்களிடத்தில் நீடித்து இருப்பதில்லை என்பதை அனுபவசாத்தியமாகப் பார்த்திருக்கிறோம்.

18th November 1963]

Workers' Housing Scheme

*232 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how many houses have been built near Virudhunagar, Ramanathapuram district under the Workers' Housing Scheme on hire-purchase system;

(*b*) the expenditure incurred thereon; and

(*c*) whether those houses remain unoccupied and if so, for how long?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No houses were built on hire purchase basis under the Subsidised Industrial Housing Scheme near Virudhunagar. However, 116 tenements at Virudhunagar, and 20 in the Virudhunagar Industrial Estate, were constructed under the scheme on rental basis for the benefit of Industrial Workers.

(*b*) A total expenditure of Rs. 5,48,519 was incurred on the construction of the tenements.

(*c*) One hundred and sixteen tenements remained unoccupied from March 1961 till May 1962, when they were handed over to the State Housing Board, for allotment on rent or sale through hire purchase basis. The State Housing Board is taking steps to let out all the 116 tenements on economic rents to the public.

திரு. செ. மாதவன் : தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளுக்குத் தொழிலாளர்கள் வரமாட்டோம் என்று சொல்லுவதற்கு என்ன காரணம்? அதற்குச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழிலாளர்கள் வரமாட்டோம் என்று சொன்னால் அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. அந்த இடம் தங்களுக்கு வசதி இல்லையென்றும், வேலை செய்கிற இடத்திலிருந்து அதிக தூரம் செல்வேண்டியிருக்கிறது என்றும் சொன்னார்கள். அதனால் அவர்கள் வரவில்லை.

திருமதி டி. என். அனந்தநாயகி : இண்டஸ்ட்ரியல் ஹௌசிங் ஸ்கீமைப் பொறுத்தமட்டில் இந்தியாவில் பிற மாகாணங்களை விட சென்னை மாகாணம் முன்னேறியிருக்கிறதா? அல்லது பின் தங்கி இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தப் புள்ளிவிவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. "ஆன்யுவல் ஸ்டேட்மெண்ட்" போடுகிறபோது பார்த்துச் சொல்ல முடியும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : விருதுநகரில் கட்டப்பட்ட வீடுகள் நல்ல முறையில் கட்டப்படாத காரணத்தால் இடிந்து விழுந்து விடுமோ என்று அஞ்சி அவற்றில் குடியேற முன்வரவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது உண்மை அல்ல.

[18th November 1963

திரு. சி. பொன்னுசாமி: தூத்துக்குடியில் ஆழ்கடல் துறைமுக வேலை வேகமாக நடைபெற்று வருகிற காரணத்தால் அங்கு ஸ்லம் க்ளியரன்ஸ் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாகக் கேள்வி போட வேண்டும்.

தேசிய ஒருமைப்பாடு

*235 கேள்வி.—திரு. கே. மூக்கையா தேவர்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வளர்க்கும்பொருட்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement [a] is placed on the Table of the House.

திரு. கே. மூக்கையா தேவர்: இப்போது நாட்டுப் பிரிவினை கைவிடப்பட்ட காரணத்தால் இப்போர்ப்பட்ட பிரசாரங்களுக்காகச் செலவழிக்கிற பணத்தை கல்விக்கு வேறு முறையில் செலவழிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: யார் எந்தக் கொள்கையைக் கைவிட்டாலும் அரசாங்கம் நாட்டு ஒருமைப்பாடுக் கொள்கையைக் கைவிடுவதாக இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, இந்தத் தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வளர்ப்பதற்காக திட்டமிட்டபடி பள்ளிக்கூடங்களில் அமல் நடத்தப்பட்ட பிறகு ஒருமைப்பாடு உணர்ச்சி வளர்ந்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது பற்றிக் கனம் அங்கத்தினர் அவர்கள்தான் கருத்துத் தெரிவிக்கவேண்டும்.

திரு. மு. கருணாநிதி: மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வளர்க்கும் பொருட்டுப் பள்ளிகளில் இந்தி போதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த இந்தி போதனையின் காரணமாக தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சிக்கு மாறாக வேற்றுமையுணர்ச்சி மேலும் வளரப்படும் என்று பல காங்கிரஸ் தலைவர்களே கூறியிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒவ்வொருவரும் வேறு வேறு கருத்துக்களை வைத்துக்கொள்ளலாம். நாட்டு ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வளர்க்க இந்தியும் துணையாக நிற்கும் என்பதிலே இந்த அரசாங்கத்திற்கு ஐயமில்லை.

---

[a] Printed as Appendix V on pages 149–150 supra.

18th November 1963]

திரு. மு. கருணாநிதி: தேசிய ஒருமைப்பாடு உணர்ச்சியை வளர்க்கும் திட்டத்தின்படி பள்ளிக்கூடங்களுக்கான பாடப்புத்தகங்கள் எழுதப்பட்டனவா? அந்தப் புத்தகங்களில் 'திராவிடம், திராவிடர்' என்ற சொற்கள் இருக்குமா? அல்லது விலக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தேசியப் பாடலிலேயே 'திராவிடம்' என்ற சொல் இருக்கிறது. கனம் அங்கத்தினர் இதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்.

சர்க்கார் மரக்கிடங்கு (பொள்ளாச்சி)

*236 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் சர்க்காருடைய கிடங்கில் உள்ள மரங்கள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடப்பது உண்மையா?

(இ) அவைகளின் மதிப்பென்ன?

(உ) இவைகளை விற்பனை செய்வதற்கு சர்க்கார் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) (இ): பொள்ளாச்சியிலுள்ள அரசாங்க மரவடியில் மரங்கள் விற்பனையாகாமல் அதிக அளவுக்குத் தேங்கிக் கிடக்கவில்லை. 15-7-1963-ல் 28,804 கன அடி மரமும், 30-9-1963 ல் 23,536 கன அடி மரமும் மரவடியில் விற்பனையாயின. 1963 அக்டோபரில் இருந்த இருப்பு நிலையின்படி, மரவடியில் 53,547 கன அடி மரம் இருப்பில் உள்ளது. அதன் தோராய மதிப்பு ரூ. 2,62,316 ஆகும்.

(உ) கோயம்புத்தூர் தெற்கு டிவிஷனைச் சேர்ந்த ஜில்லா காட்டு அதிகாரி குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை விற்பனைகள் நடத்தி வருகிறார்.

திரு. க. ர. நல்லசிவம்: இந்த மரங்களை வெளி ராஜ்யங்களில் இருந்து அதிகமாக வாங்குகிறார்களா?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்: ஏலத்திற்கு எல்லா பாகங்களிலிருந்தும் வந்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

*237 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மருத்துவ மனைகள் இல்லாத பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்க உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் திறப்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும். ஆனால், தேசிய

[18th November 1963

நெருக்கடியை உத்தேசித்தும், டாக்டர்கள் கிடைக்காமையாலும், புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறப்பது தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

* 238 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், வேப்பூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த இலப்பைக்குடிக்காட்டில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் திறக்க உத்தேச முண்டா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No.

அனல் மின்சார நிலையம்

259 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் நெய்வேலியைத் தவிர மேலும் எத்தனை இடங் களில் அனல் மின்சார நிலையங்கள் நிறுவ உத்தேசிக்கப் பட்டுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN: The question of establishing Thermal Power Stations at Tuticorin, Ennore and Cuddalore or Nagapattinam is under consideration.

* 240 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பைய்யா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

1963-ல் அனல் மின் நிலையம் ஒன்று ஆரம்பிக்க உத்தேச முண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: There are certain proposals for starting new Thermal Power stations but none of them is likely to be finalised for execution during 1963.

* 241 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the steps taken for stepping up Thermal Generation in Madras State; and

(b) whether these schemes would be included in the Third Plan?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The generating capacity of the Basin Bridge Power House will be increased by the installation of a new 30 M.W. Plant in the place of the existing old one. The Government have also under consideration a proposal to establish three thermal stations of 100 M.W. capacity each in the coastal towns of Tuticorin, Ennore and Nagapattinam or Cuddalore. The Government of India have been addressed in the matter.

18th November 1963]

(b) This will depend on the clearance from the Government of India.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எண்ணூர், கடலூர், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் வைக்க உத்தேசித்திருக்கும் நிலையங்கள் தனியார் துறையிலா, அல்லது பொதுத் துறையிலா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எலக்ட்ரிசிட்டி போர்ட் தான்.

கல்பாக்கம் அணு மின்சார நிலையம்

* 242 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன்: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கல்பாக்கத்தில் அணு மின்நிலையம் அமைக்கப்படுவதினால் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் காலி செய்யப்படுமா?

(ஆ) அப்படியானால், அக்கிராமவாசிகளுக்கு வேறு இடங்களில் குடியிருப்பு வசதி செய்து தர உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) These matters will be considered at the appropriate stage of the land acquisition proceedings which have been initiated by Government in respect of lands required around Kalpakkam.

* 243 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the present stage of the proposal to locate a Nuclear Power Station near Kalpakkam in Chingleput district;

(b) whether final approval has been obtained from the Central Government; and

(c) if so, whether this scheme would be included in the Third Five-Year Plan?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The Government of India announced in December 1962 that when a decision is taken to establish a third nuclear power station in the country, it is proposed to locate it at Kalpakkam. No further communication has been received from them.

(b) & (c) Do not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசாங்கம் இன்னும் அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னால் நில ஆர்ஜிதம் செய்வதின் நோக்கம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய அரசாங்கம் இதை மூன்றாவது திட்டத்தில் சேர்ப்பதா அல்லது நாலாவது திட்டத்தில் சேர்ப்பதா என்பதுபற்றி அவர்கள் முடிவு செய்யவில்லை. மூன்றாவது நியூக்ளியர் பவர் ஸ்டேஷன், அணு சக்தி நிலைய அமைப்பதாக இருந்தால் அது கல்பாக்கத்தில்தான் என்று சொல்லி விட்டார்கள். முன்கூட்டியே அதற்காக நடவடிக்கைகள் எடுத்து

[18th November 1963

வைத்திருந்தால் அவர்கள் முடிவு செய்தவுடன் இதை நிறைவேற்ற சௌகரியமாக இருக்கும். முன்கூட்டி நடவடிக்கைகள் எடுக்கா விட்டால் முடிவு எடுத்த பிறகு இரண்டு ஆண்டுகளாகும், நிலம் எடுக்க நடவடிக்கைகள் எடுக்க. ஆகவேதான் முன் கூட்டியே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

உடலுறுப்பிழந்தோர்க்கு உதவித் தொகை

*244 **கேள்வி.—திரு. எஸ். ராமசாமி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதியோர் உதவித் தொகை அளிப்பதுபோல் குறைந்த வயதுள்ள அங்கஹீனர்களுக்கு (குருடர், கைகால் இல்லாதவர்களுக்கு) உதவித் தொகை வழங்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சென்னை முதியோர் பென்ஷன் திட்டம் சம்பந்தமான தற்போதைய விதிகளின்படி, அங்கஹீன மடைந்த அனாதைகளுக்குப் பென்ஷன் கொடுப்பதற்கான வயது வரையறை 60-ம், அதற்கு மேலும் என்றும், அங்கஹீனமற்ற அனாதைகளுக்கு 65 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அறுபது வயதுக்குக் குறைந்த அங்கஹீன அனாதைகளுக்குப் பென்ஷன் கொடுக்கும் திட்டம் எதுவும் இப்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: முதியோர் உதவித் தொகையை விட ஓய்வுபெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிற பென்ஷன் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதையும் சர்க்கார் புனர் ஆலோசனை செய்ய முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முதியோர் பென்ஷன் திட்டத்திற்கும் ஆரம்ப ஆசிரியர்களின் பென்ஷனுக்கும் சம்பந்தம் இல்லை. ஓய்வு பெற்ற ஆரம்ப ஆசிரியர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி அவர்கள் முதியோர் பென்ஷன் திட்டத்தின் கீழ் வரவேண்டுமென்றால் வரலாம்.

புலவர் கா. கோவிந்தன்: முதியோர் உதவித் தொகை அரசாங்கம் எதிர்பார்த்ததற்கு மேல் செலவாவதால் குறிப்பிட்ட அளவு இவ்வளவுதான் வரவேண்டுமென்று மாவட்ட கலக்டர்களுக்கும் ஆர்.டி.ஓ. க்களுக்கும் தனியாக ஏதாவது உத்தரவு இந்த அரசாங்கத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு ஒன்றும் உத்தரவு அனுப்பப்படவில்லை. மனுக்களைப் பரிசீலனை செய்து சாங்ஷன் செய்யவேண்டியிருக்கிறது. 65,000-க்கு மேல் இப்போது பெற்று வருகிறார்கள். ஒரு வருடத்திற்கு ரூ. 1 கோடி 30 லட்சம் செலவாகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஆசிரியர்கள் பென்ஷனைப் பற்றிக் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறாமல் இருந்திருந்தால் இந்த உப கேள்வியை நான் கேட்டிருக்க முடியாது.

18th November 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கேள்வி கேட்காமல் இருந்தால் பதில் கூறாமல் இருக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அவர்கள் பதிலிலிருந்து எழும் உப கேள்வி இது. முப்பது ஆண்டுகள் சர்விஸ் செய்த பிறகு பென்ஷன் பெறக் கூடிய தொகை 10, 12 ரூபாயாக இருக்கிறது. சர்க்கார் தயை செய்து கொடுக்கக் கூடியது 20 ரூபாயாக இருக்கிற போது—இவர்கள் விருப்பப்பட்டால் முதியோர் பென்ஷன் திட்டத்தின் கீழ் போக முடியாது. அவ்வாறு விதிகள் இல்லை. ஆகவே, விதிகள் அந்தமாதிரி தளர்த்தப்படுமா ? அல்லது அந்த ஆசிரியர்களுக்குப் பென்ஷனை அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்பு ஆசிரியர்களுக்கு பென்ஷன் திட்டமேயில்லை. பின்னர்தான் பென்ஷன் திட்டம் என்று அரசாங்கம் முடிவு செய்து கொடுத்து வருகிறது. அதைத் தனியாக எடுத்துக் கொண்டு அது போதுமா, இன்னும் அதிகப்படுத்த முடியுமா என்று பார்க்கவேண்டுமே தவிர முதியோர் பென்ஷன் திட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல என்று குறிப்பிட்டேன். முதியோர் உதவி திட்டத்தின் கீழ் 20 ரூபாய் ஒருவருக்கு வருகிறது என்றால் அவர் எந்த நிலையில் இருக்கிறாரோ அந்த நிலையில் வேறு யார் இருந்தாலும் அவர்கள் அந்த 20 ரூபாய்க்கு உரியவர்கள் என்ற கருத்தைத்தான் நான் தெரிவித்தேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: முதியோர் உதவித் திட்ட ஏற்பாட்டை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் இரண்டு கைகளை இழந்தவர்கள், இரண்டு கால்களை இழந்தவர்கள், இரண்டு கண்கள் இல்லாதவர்கள் போன்ற வாலிபர்கள் மிகவும் குறைவாகத்தான் இந்த நாட்டில் இருப்பார்கள். அவர்களுக்கும் இந்த உதவியை வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யலாம் அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சாதாரணமாக 65 வயதிற்கு மேற்பட்ட அநாதைகளுக்குத்தான் இந்த திட்டம். ஆனால் அங்கஹீனர்கள் 60 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருந்தால் இது வழங்கப்பட்டு வருகிறது. வேறு மாநிலங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிற விவரங்களைத் தெரிந்து கொண்டிலிருந்து பொதுவாக அங்கஹீனர்களாக இருந்தாலும் மற்றவர்களாக இருந்தாலும் 70 வயதிற்கு மேற்பட்டுத்தான் இத்திட்டம் இருக்கிறது. வயது குறைந்தவர்கள் இருந்தால் அது வேறு விஷயம். அத்தகையோருக்கு என்னென்ன சலுகைகள் அளிப்பது, என்னென்ன உதவி அளிப்பது என்பதில் கவனம் செலுத்தப்பட்டு முடிவு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஓய்வு பெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் வேண்டுமென்றால் இந்த முதியோர் பட்டியலில் சேர்ந்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான் என்று சொல்லப்படுகிற இந்தக் காலத்தில் 30, 40 ஆண்டுகள் உழைத்த ஆசிரியர்களை அநாதைப் பட்டியலில்தான் சேர்த்துக்

கொள்ள இந்த அரசாங்கம் எண்ணிக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் ஒருகாலும் அவ்வாறு எண்ணவில்லை. எழுத்து அறிவித்தவன் இறைவன் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். அனாதைகளின் பென்ஷன் திட்டம் பற்றி நான் விடை அளிக்கும்போது அதில் ஆசிரியர்களைக் கொண்டு வந்து நுழைத்து விட்டார்கள். இவ்வளவு அகௌரவமும், அவமரியாதையும் ஆசிரியர்களுக்கு அவர்கள் செய்கிறார்களே என்பதுதான் என் வருத்தம்.

திரு. வை. சங்கரன்: சுமார் முப்பது ஆண்டு காலம் வேலை செய்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ப்ராவிடெண்ட் பண்ட் சுமாராக எவ்வளவு கிடைக்கிறது? அவர்களுக்கு மேற்கொண்டு எதாவது வசதிகள் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றி தனி கேள்வி கேட்டால் விவரங்கள் அளிக்கலாம்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: ஒரு ஆண்டுக்கு ஒரு கோடிக்கு மேல் முதியோர் உதவித் தொகைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அது ஜில்லாவாரியாக பகிர்ந்து கொடுக்கப்படுகிறதா? அல்லது பொதுவாகவே கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒவ்வொரு ஜில்லாவிலும் கலெக்டர் மனுக்களை பெறுகிறார்கள், பரிசீலனை செய்கிறார்கள். பரிசீலனை செய்து பென்ஷன் வழங்குகிறார்கள். எல்லா ஜில்லாவிலும்தான் இவ்வுதவி பெற்று வருகிறார்கள்.

திரு. கோ. சி. மணி: ஓய்வு பெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் முதியோர் உதவித் தொகை பெறுகிற திட்டத்தின்கீழ் வர லாயக்குள்ளவர்களாக இருந்தால் அவர்களுக்குத் தரப்படுகிற பென்ஷன் தொகையோடு புதிதாகக் கொடுக்கப்படும் உதவித் தொகையும் சேர்த்துக் கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஓய்வு பெற்ற ஆசிரியர்களிடம் அவர்களுக்கு அக்கறையிருந்தால் தனியாகக் கேள்வி கேட்கலாம்.

திரு. அ. தியாகராஜன்: மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று அரசாங்கம் கலெக்டர்களுக்கு உத்தரவு அனுப்பவில்லை என்று சொன்னார்கள். திருச்சி ஜில்லாவில் முழுமைக்கும் மறுபரிசீலனை என்ற சொல்லை வைத்துக் கொண்டு நான்கு, ஏழு, எட்டு மாதங்கள் ஊதியம் வழங்கப்பட்டவர்களுக்குக் கூட அது நிறுத்தப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்திற்கு தெரியுமா? அதை மீண்டும் கொடுக்க வழி செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்காக, ஒரு கோடியே 30 லட்சம் ரூபாய் வரையில் கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட முதியோர் பென்ஷன் திட்டம் நிறைவேற்றப்படுகிற சில மாநிலங்

களில் இதில் பாதி கூட கொடுப்பதில்லை. குறிப்பாக ஏதாவது ஒரு மாவட்டத்தில் அப்படி உதவி கிடைப்பதில்லை என்று அங்கத்தினர் அவர்களுக்கு தெரிந்தால், அவர்கள் அதுபற்றி குறிப்பாக கேள்வி கேட்கலாம்.

திரு. து. ப. அழகமுத்து: இந்த முதியோர் உதவித் தொகை கொடுப்பதை அங்கஹீனமானவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்வதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், 12-00
அவர்கள் பிச்சை எடுப்பதை ஒரு தொழிலாக அரசாங்கம் அங்கீ noon.
கரிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் கூறும் கருத்து என்னுடைய சிற்றறிவுக்குப் புலப்படவில்லை.

திரு. வை. சங்கரன்: மணியார்டர் ஃபாரங்கள் ஏராளமாக கிடைக்காததால் முதியோர் பென்ஷன் அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுவதாக சொல்லப்படுகிறது. இதனால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே காலாகாலத்தில் போதிய அளவு மணியார்டர் ஃபாரங்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த விவரம் இப்போது என்னிடமில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஸார், ஏற்கனவே இப்பென்ஷன் வழங்குபவர்களை அடையாளந் தெரிந்து கொள்வதற்காக போட்டோ கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஜில்லாக் கலெக்டர்கள் மறு பரிசீலனைக்கு அனுப்புகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: முதியோர் பென்ஷனுக்காக மனு செய்து கொண்டவர்களில் பலரை " "Professional beggers என்ற காரணத்தின் மீது தள்ளிவிடுகிறார்கள். இது நியாயமான காரணம்தானா என்பதை அரசாங்கம் ஆலோசித்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: என்னிடம் இதைப்பற்றி தகவல் இல்லை.

திரு. ச. ஜீவரத்தினம்: இந்த முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் சிலர் வயதை கூடுதலாக சொல்லி இப்பணம் பெற்று வருகிறார்கள் என்கின்ற புகார்கள் வந்திருப்பது தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதில் எல்லோர் வயதை சரியாக கணக்கிடுவது கஷ்டம். சிலர் வயதை கூடுதலாக வேண்டுமென்று சொல்லி பணம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் எவ்வளவு தான் கண்காணிப்புடன் இருந்தாலும், சில தவறுகள் ஏற்படத்தான் ஏற்படும்.

[18th November 1963

திரு. கரு. சீமைச்சாமி : இந்த முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் அதிகமாகப் பணம் பெற்று வரும் மாவட்டம் எது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி என்னிடம் விவரங்கள் இல்லை.

சாத்தனூர் நீர்த்தேக்கம்

*** 245 கேள்வி.—திரு. ப. உ. சண்முகம் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் நீர்த் தேக்கத்தில் மேல் கதவுகள் (Shutters) அமைக்கப்பட்டுவிட்டனவா ?

(இ) இந்த நீர்த்தேக்க ஆயக்கட்டின்கீழ் இன்னும் பல கிராமங்களைக் கொண்டுவர உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The work is under progress.

(b) No.

Employees of erstwhile District Board Schools

* 246 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that there is a difference in the mode of payment of salaries to the staff of the Government High Schools and the staff of the High Schools managed by erstwhile District Boards; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The staff in the Board High Schools are not treated as Government servants, while the staff employed in Government high schools are Government servants.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார் : ஸார், அரசாங்க பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு மாத ஆரம்பத்திலேயும், டிஸ்ட்ரிக் போர்ட்டின் கீழ் வேலைசெய்யும் பள்ளி ஆசிரியர்களுக்கு 20-ம் தேதிக்கு மேலும்தான் சம்பளம் கொடுக்கப்படுவதாக என்னிடம் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இது உண்மைதானு என்பதை கனம் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் சொல்ல முடியாது. அரசாங்கம் நடத்துகிற பள்ளி ஆசிரியர்களுக்கு குறிப்பாக தலைமை ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நேரடியாக பணம் அனுப்புகிறது. ஜில்லா போர்டில் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு அந்தந்த ஜில்லா ஸ்பெஷல் கல்வி அதிகாரிகள் மூலமாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. இதனுல் சிறிதளவு வித்தியாசம் இருக்கலாம்.

18th November 1963]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : (ஜில்லா போர்ட்) கழகப் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப்போன்று தீபாவளி அட்வான்ஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி என்னிடம் எந்த விவரமும் வரவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், ஜில்லா போர்ட் சட்டபூர்வமாக மறைந்து விட்டது. இப்படி டிஸ்ட்ரிக்ட் போர்ட் என்பது இல்லாமல் இருந்தும், அரசாங்கம் இன்னும் அந்தப் பள்ளிகளை எல்லாம் ஏன் ஏற்று நடத்தாமல் இருக்கின்றன ? ஆகவே அவற்றை எல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கான உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னுடைய அபிப்பிராயம் முடிவில் இந்தப் பள்ளிகள் எல்லாம் அரசாங்கத்தின் கீழ் வரும் என்பதுதான். இப்போது இதில் பல கஷ்டங்கள் இருக்கலாம். மாவட்ட கழகத்தின் கீழ் நடக்கும் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் அவைகளுக்கு பலர் உதவி செய்திருக்கிறார்கள். பலர் அதில் அக்கரை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இருந்தாலும் கடைசியில் இது அரசாங்க பள்ளிகளாகவே வரும் என்பதுதான் என் அபிப்பிராயம்.

* 247 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the employees of the High Schools of the erstwhile District Boards have since been taken over by the Government as Government servants; and

(b) if so, whether they are given the same privileges as given to the employees of the Government High Schools ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

* 248 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is fact that the Teachers of Secondary Schools of the erstwhile District Boards are not treated on a par with the teachers of the Government High Schools; and

(b) if so, whether the Government will take steps to remove the said disparity ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, though the scales of pay are generally the same the rules governing their services are different.

(b) At present the Government have decided to treat the erstwhile District Board Secondary Schools as a separate category and have appointed Special District Educational Officers to administer them. The question of equating the teachers of these schools with those of the Government Schools does not, therefore, arise now.

[18th November 1963

சர்க்கரை

* 249 கேள்வி.—திரு. கரு. சிமைச்சாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சீனி கன்ட்ரோல் முறையை ரத்து செய்ய உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில் எப்போது?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (*a*) & (*b*) The order was issued by the Government of India in exercise of the powers conferred by the Defence of India Rules. The State Government are not aware of any proposal to cancel the order.

* 250 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் 1961-62, 1962-63-ம் ஆண்டுகளில் உற்பத்தியான சர்க்கரையின் மொத்த அளவு என்ன?

(இ) மொத்த உற்பத்தியில் வெளியிடங்களுக்கு முறையே அனுப்பப்பட்ட சர்க்கரையின் அளவு என்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:

(*a*) During 1961–62 (in Tonnes.)	During 1962–63 (in Tonnes.)
1,27,387	85,707
(November 1961 to October 1962.)	(November 1962 to May 1963 only.)
(*b*) 27,057	8,679

திரு. கரு. சிமைச்சாமி: இப்போதுள்ள நிலைமையில் சீனி வாங்க வேண்டுமென்றால் கள்ளமார்க்கட்டில் போய்தான் வாங்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி கள்ளமார்க்கட்டைக் காப்பாற்றுவதற்காகத்தான் இந்த கன்ட்ரோல் முறை நீடிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: நான் முந்திய கேள்வியில் சொன்ன பதில் தான் இதற்கும் பொருந்தும்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, நம் நாட்டில் உற்பத்தியாகிற சர்க்கரை நம் நாட்டுக்கு போதிய அளவு இருந்தும், கன்ட்ரோலை இந்த நாட்டில் வைத்துவிட்டு, சர்க்கரையை வெளியே அனுப்புவதின் நோக்கம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: நமக்கு வெளியில் சர்க்கரை அனுப்பும் போது நல்ல பணம் கிடைக்கிறது. நமக்கு வேண்டிய சர்க்கரைப் போக பாக்கியைத்தான் வெளியே அனுப்புகிறோம்.

18th November 1963]

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், 1961-62-ம் ஆண்டை விட 1962-63-ல் சர்க்கரை ஆலைகள் அதிகரித்து இருந்தும் சர்க்கரையில் உற்பத்தி குறைந்திருப்பதின் காரணம் என்ன என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்ததா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: கரும்பு கொடுக்கின்றவர்கள் குறைவாக கொடுப்பதினால்தான் இந்த குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் சொன்னது சரியல்ல என்று நினைக்கிறேன். கரும் பாலைச் சட்டப்படி கரும்பு கொடுக்க ஒப்புக்கொண்டவர்கள், கரும்பை ஆலைகளுக்கு கொடுக்காமல் இருக்க முடியாது. இவர்களுடைய கரும்பு பிரதேசங்களை ரிசர்வ் பிரதேசங்கள் என்று தனியாக வைக்கப்பட்டிருக்கிறது. இப்பிரதேசங்களிலுள்ள கரும்பை ஆலைகளுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று திட்டவட்டமாக சட்டம் இருக்கிறது. ஆனால் எக்ஸைஸ் டியூட்டியை அதிகமாக கொடுக்கவேண்டியிருக்கும் என்பதை மறைப்பதற்காக மில் முதலாளிகள் இப்படி கணக்கை கொடுத்திருக்கிறார்களா என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இதுபற்றி தனியாக கேள்வி போட வேண்டும்.

திரு. சா. கணேசன்: கரும்பு உற்பத்தி செய்கின்றவர்கள் மில்லில் கொடுத்தால் விலை குறைவாகத்தான் கிடைக்கும் என்ற காரணத்தால், வெளியில் கொண்டுபோய் சர்க்கரையாக விற்றால் அதிகமான அளவில் லாபம் கிடைக்கும் என்ற நோக்கத்துடன் தான் மில்லுக்கு கொடுக்காமல் இருக்கிறார்களா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆராய்ந்துப் பார்த்ததா? அப்படியானால் அப்படி கரும்பு கொடுக்காமல் இருப்பவர்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: "டிபென்ஸ் ஆப் இந்தியா" சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: அந்த மாதிரி செய்வது தனியார் விஷயத்தில் தலையிடுவது ஆகாதா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திரு. மு. கருணாநிதி: இந்த கன்ட்ரோல் முறை அடிப்படையில் கள்ளச் சந்தை வாணிபத்தில் யார் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் அறிவிக்க முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போது என்னிடத்தில் அந்தத் தகவல் இல்லை.

[18th November 1963

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, வேவையானது போக மிகுதியைத் தான் வெளியிடங்களுக்கு அனுப்புகிறோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் இப்போது கேள்விக்கு பதிலளிக்கும் போது சொன்னார்கள். இப்படி இங்கே சொல்லுகிற இதே நேரத்தில் சர்க்கரை கிடைப்பதில் நெருக்கடியும், தட்டுப்பாடும், அதை உத்தேசித்து கண்ட்ரோலும் தற்போது இருக்கிறது என்ற காரணத்தினால் தேவைக்குப் போதுமான அளவு இங்கே அனுமதிக்கப்படவில்லை என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களா அல்லது அதை மறுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, குடிசைத் தொழிலுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கிறோம் என்று சொல்லுகிற இந்த சர்க்கார், ஏழை விவசாயிகள் ஆலைகளை ஓட்டக் கூடாது என்று கட்டளை இடுவது அவர்கள் உரிமையைப் பறிப்பது ஆகாதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஏற்கனவே ஆலைகளுக்கு கரும்பு கொடுக்கிறோம் என்று அக்ரிமெண்ட் கொடுத்த ஏரியாக்களில் இருக்கும் நபர்களுக்கேதான் இந்தக் கட்டுப்பாடு.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குடிசைத் தொழில் மிகவும் அக்கரை உள்ளவர்கள் கூட வாங்கி உண்பதற்கு சர்க்கரை தான் கேட்கிறார்கள். வெல்லத்தை அவர்கள் கேட்பதில்லை. அது தான் முக்கிய காரணம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், சர்க்கரை கண்ட்ரோல் தான் கள்ள மார்க்கெட்டுக்குக் காரணமா அல்லது பற்றாக்குறையா என்று பார்த்தால் பற்றாக்குறை இல்லை என்று ஒத்துக்கொள்கிறார்கள். அப்படியானால் வினியோகத்தில் என்ன கோளாறு இருக்கிறது என்று பார்த்து, கள்ளமார்க்கெட்டிலிருந்து சர்க்கரையைக் காப்பாற்ற நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : எப்பொழுது என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சாதாரண மக்கள் உபயோகிக்கும் வெல்லத்தின் விலை ஒரு மடங்கு, இரு மடங்கு, மும் மடங்கு என்று உயருவதற்குக் காரணம், உற்பத்தியாகக் கூடிய கரும்பை ஆலைகளுக்கு விற்கவேண்டும் என்று சொல்லப்படுவதாலா என்று அறிய விரும்புகிறேன்,

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது கேட்ட கேள்விக்கு நான் ஆரம்பத்திலேயே பதில் சொல்லி விட்டேன்.

18th November 1963]

திரு. ஜெ. மாதா கவுடர் : நகரப் புறங்களில் இருக்கிறவர்கள் தான் சர்க்கரையை அதிகமாக உபயோகிக்கிறார்கள். கிராமப் புறங்களில் இருக்கிறவர்கள் வெல்லத்தை தான் அதிகமாக உபயோகிக்கிறார்கள். வெல்ல உற்பத்தியைக் குறைத்து விட்டால், வெல்லம் கிடைக்காத நிலை ஏற்பட்டு, கிராமத்தில் இருக்கிறவர்கள் கூட சீனியை உபயோகிக்க முற்பட்டால் சீனி பற்றாக்குறை அதிகமாக ஏற்பட்டு விடும். ஆகையால் வெல்லம் அதிகம் உற்பத்தி செய்ய எந்தத் தடையும் இல்லாமல் இருக்க அரசாங்கம் முற்படுவார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : சர்க்கரையும் கேட்கிறார்கள். வெல்லமும் கேட்கிறார்கள். இரண்டும் தான் வேண்டியிருக்கிறது.

திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : வெல்லத்தை வெளி மாகாணங்களுக்குப் போகக் கூடாது என்று அரசாங்கம் கட்டுப்படுத்தியிருப்பதாகச் சொல்லுகிறார்கள், அது உண்மையா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது சமீபத்தில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : தற்போதைய வினியோக முறையில் மதுரை போன்ற நகரங்களில் சாதாரண மக்களுக்கு அத்தியாவசியத் தேவைக்குக் கூட சர்க்கரை கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிற காரணத்தினால் ரேஷன் கார்டு முறையை மதுரை போன்ற நகரங்களில் கொண்டுவர சர்க்கார் உத்தேசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ரேஷன் கார்டு வேண்டுமென்பது அவசியம் இல்லை. அது கலெக்டர் உத்தேசத்தைப் பொறுத்தது. வேண்டுமென்றால் அந்த மாதிரி ஏற்பாடு செய்யலாம். வேண்டாமென்றால் விட்டுவிடலாம். இதெல்லாம் கலெக்டர் உத்தேசத்தைப் பொறுத்தது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஸார் இது போன்ற கண்ட்ரோல் ஏற்படுவதால் சாமான்கள் மறைந்து விடுவது சர்க்காருக்குத் தெரிந்திருக்கும். ஆகையால் சீனி போன்ற சாமான்கள் விஷயத்தில் கண்ட்ரோல் செய்வதை கைவிட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கண்ட்ரோல் மத்திய சர்க்கார் கொண்டு வந்தது. இப்போது கைவிடும் உத்தேசம் இல்லை.

திரு. சா. கணேசன் : வெல்லத்தை பிற மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாது என்று சொல்லுவது ஏன் ? தேசிய ஒருமைப்பாட்டை நம்புகிற நாம் இதிலே தேசிய ஒருமைப்பாட்டை நம்ப வேண்டாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வெல்லத்தை மற்ற மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்வதை அனுமதித்தால் வெல்லத்தின் விலை அதிகரிக்கிறது. சர்க்கரை விலையைவிட அதிகமாக ஆகிறது. வெல்லத்தை உபயோகிக்கிறவர்களின் சக்திக்கு அதிகமாக விலை ஏறுகிறது. இப்போது அந்த முறையில் தான் அரிசியை இந்த

[18th November 1963

மண்டலத்திலிருந்து அப்பால் அனுப்பக் கூடாது என்று வைத்திருக்கிறோம். இதை நீக்கினால் வியாபாரிகளுக்குத் தான் பலன் அளிக்குமே தவிர வெல்லத்தை உபயோகிக்கிறவர்களுக்கு அல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, ஆலைக்காரர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்ட விவசாயிகள் கட்டாயப்படுத்தப்படுவதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஒப்பந்தம் செய்துகொள்ளாத விவசாயிகளும் கூட எனது பகுதியில் இருக்கக் கூடிய ஆலைக்கு கரும்பு கொடுக்கவேண்டும் என்று 45 சுற்றுப்புற கிராமங்களில் யாரும் ஆலை போட்டு கரும்பு அடிக்கக் கூடாது என்று அவர்கள் நிர்ப்பந்தப்படுத்துவதாகத் தெரிகிறது. அப்படி கடன் வாங்காத விவசாயிகளுக்கு விதிவிலக்கு அளிக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. கோ. வெங்கட்ராமன் : தமிழ்நாட்டில் சர்க்கரை வினியோகத்தில் ரேஷன் கார்டு முறை இல்லாத காரணத்தினால் தான் வினியோகம் சரிவர இல்லாமல் குழப்பமும் கூச்சலும் இருக்கிறது. எந்த நகரத்திலாவது ரேஷன் கார்டு மூலம் வினியோகிக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோவை மாவட்டத்தில் ரேஷன் கார்டு முறை பரீட்சார்த்தமாக ஏற்படுத்தி பரிசீலனை செய்யப்பட்டது. ஆனால் அது திருப்திகரமாக இல்லை. முன்பு நமக்கு ஏற்பட்ட அனுபவமும் இருக்கிறது. உபயோகிக்கிறவர்கள், உபயோகிக்காதவர்கள் எல்லோருமே வாங்குகிறார்கள். உபயோகிக்காதவர்களும் வாங்கி கள்ள மார்க்கெட்டில் அதை விற்கிறார்கள். ஆகையால் தான் ரேஷன் கார்டு முறையில் வினியோகிக்கப்படவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இப்போது திருநெல்வேலி ஜில்லா சம்பந்தப்பட்ட மட்டில் தேவைக்குக் குறைவாக சரக்கு இருக்கிறது என்ற காரணத்தால் ரேஷன் கார்டு முறையில் வினியோகம் செய்யப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நான் இதைப்பற்றி முன்பே சொன்னேன். இது கலெக்டருடைய உத்தேசத்தைப் பொறுத்தது. அவர் எப்படி செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்கிறாரோ அந்த முறையில் செய்யப்படுகிறது. கோவை சம்பந்தப்பட்ட மட்டில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்லி விட்டார்.

திரு. க. ர. நல்லசிவம் : முதல் அமைச்சர் சொல்லிய பதிலில் நாட்டுச் சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றின் விலை அதிகமாக ஏறியதன் காரணமாக வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பக் கூடாது என்று தடை இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் அவைகளுக்கு நியாய விலை நிர்ணயிக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

18th November 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சர்க்கரைக்கு நியாய விலை இருக்கிறது. வெல்லத்திற்கு நியாய விலை நிர்ணயிக்கும் உத்தேசம் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : 1962-63-ம் ஆண்டில் கரும்பு உற்பத்திக்கான காரணங்களை விளக்கினார்கள். எங்கள் தொகுதியிலுள்ள நெல்லிக்குப்பம் ஆலையிலே 4-5 வருஷங்களாக போனஸ் பிரச்னை தீர்க்கப்படாமல் இருப்பதாலும், கரும்புக்கு அதிக விலை நிர்ணயிக்காமல் இருக்கிற காரணத்தினாலும் கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கம் இல்லாமல் கரும்பு உற்பத்தி குறைந்திருக்கிறது என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா ? அப்படியானால் விலையை உயர்த்த, போனஸ் வாங்கித் தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வியிலே ஃபாக்டரி சம்பந்தமான பகுதிக்கு நான் பதில் சொல்லவேண்டும். கரும்பு உற்பத்தி சம்பந்தமான பகுதிக்கு எனது நண்பர் கனம் திரு. கக்கன் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். சர்க்கரை வினியோகம் சம்பந்தமான கேள்விக்கு உணவு இலாகா அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். இப்படி மூன்று கேள்விகள் மாறி மாறி வருவதால் சரிவர ஒருவருக்கும் பதில் சொல்ல இயலாத நிலைமை வந்திருக்கிறது. (சிரிப்பு) ஏனென்றால் எல்லா விவரமும் ஒரு இலாகாவில் சேர்ந்து வரவில்லை.

ஃபாக்டரி சம்பந்தமான கேள்வியை அங்கத்தினர் கேட்டதற்கு, முன்பு எந்த விதத்தின் அடிப்படையில் போனஸ் கொடுக்க வேண்டும் என்பதற்கு சர்க்கரை ஆலை அதிபர்கள், தென் இந்தியாவில் இருக்கிற ஆலை அதிபர்கள் ஒரு ஃபார்முலா வைத்திருந்தார்கள். அதற்குப் பெயர் 'ஸிஸ்மா' ஃபார்முலா என்பது. அதாவது 'ஸவுத் இண்டியன் ஷுகர் மில்லர்ஸ் அஸோஸியேஷன் ஃபார்முலா' என்பது அது. அந்தத் திட்டத்தில் போனஸ் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு மத்திய சர்க்காரில் 'பி.எல்.எஃப். ஃபார்முலா' என்று கொண்டு வந்தார்கள். அதாவது 'ப்ரைஸ் லிங்கிங் ஃபார்முலா' என்பது அது. இந்த ஃபார்முலா கொண்டு வந்தாலும் அதிலே சில ஃபாக்டர்ஸ் தெளிவுபடுத்தவில்லை. ஆகையால் அந்த ஃபார்முலா பிரகாரம் கொடுக்க முடியாமல் போய்விட்டது. அதற்குப் பிறகு இந்தப் பிரச்னையை டாரிஃப் கமிஷனுக்கு அனுப்பினார்கள். இப்போது புதியதாக ஒரு ஃபார்முலா வந்திருக்கிறது. அதை நிர்ணயம் செய்ய மத்திய சர்க்கார் ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டி இப்போது வட இந்தியாவில் இருக்கக் கூடிய பீஹார் போன்ற ராஜ்யங்களில் நிர்ணயம் செய்து கொண்டிருக்கிறது. அவர்கள் தமிழகத்திற்கு வர ஆறு மாதம் ஆகும் என்று அவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறேன். அதன் பிறகு தான் நம் நாட்டுக்கான ஃபார்முலா தெரியும். அதனால் தான் இன்னும் ஃபார்முலா தெரியாமல் இருக்கிறது.

[18th November 1963

திரு. கே. டி. கோசல்ராம் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 'கோவை ஜில்லாவில் ரேஷன் கார்டு முறையை பரிசீலனை செய்தோம். அது சரியாக நடைமுறையில் நடைபெறவில்லை. ரேஷன் கார்டு நிலைமையைப்பற்றி, ஊழலைப்பற்றி நாம் முன்னதாக அறிந்திருக்கிறோம். ஆகையால் அங்கே ரேஷன் கார்டு கொடுக்கவேண்டாமென்று நினைக்கிறேன்' என்று சொன்னார். அடுத்த உபகேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது நமது உணவு இலாகா அமைச்சர் கலெக்டர் அவர்களுக்கு 'டிஸ்கிரெஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். முதல் அமைச்சர் அவர்கள் கூறியதை வைத்துக்கொண்டு திருநெல்வேலி ஜில்லாவிலும் உடனடியாக ரேஷன் கார்டு முறையை நிறுத்த வேண்டும் என்று கலெக்டர் அவர்களுக்கு அரசாங்கம் கட்டளை பிறப்பிக்குமா ?

கனம் சபாநாயகர் : திருநெல்வேலி ஜில்லாவில் இருப்பவர்கள் ரொம்ப நல்லவர்களாக இருப்பார்கள். (சிரிப்பு)

திரு. அ. பெ. தர்மலிங்கம் : மற்ற மாவட்டங்களில் இருப்பவர்கள் . . . .

MR. SPEAKER : That question does not arise.

Educational concessions

* 251 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of educational concessions given to the Children of retired or deceased Government servants; and

(*b*) whether these concessions are the same as given to the children of Government employees in service ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The children of retired and deceased Government servants are eligible for the general fee concessions given to all poor pupils, subject to the annual income limit of Rs. 1,500 per annum prescribed under the scheme.

(*b*) No, Sir.

(அ) வேலையிலிருந்து ஓய்வு பெறுகிற அரசாங்க ஊழியர்களின் குழந்தைகளும், இறந்துபோன அரசாங்க ஊழியர்களின் குழந்தைகளும், எல்லா ஏழை மாணவர்களுக்கும் வழங்கப்படுகிற பொதுச் சம்பளச் சலுகைகளைப் பெறத் தகுதி உடையவர்களாவார்கள். இத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டபடி ஆண்டு வருமானம் ரூ. 1,500-க்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு அச் சலுகைகள் வழங்கப்படும்.

(இ) இல்லை.

18th November 1963]

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஏழை மாணவர்கள் என்ற அடிப்படையில் கொடுக்கப்படுகிற சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவே தவிர, அவர்கள் அரசாங்க ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள் என்பதற்காக அவர்களுக்கு தனிச் சலுகை கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது அந்த உத்தேசம் இல்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஓய்வு பெற்ற ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கும் பிற ஏழைக் குழந்தைகளுக்கு கொடுக்கப்படுகிற சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். முன்பு ஒரு முறை ஆசிரியர்களை உயர்ந்த இடத்தில் வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகையால் அவர்களுடைய குழந்தைகளுக்கு தனிச் சலுகை அளிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிச் சலுகை பெற்றவர்கள் அப்படி உயர்ந்த இடத்திலே இருப்பவர்கள் என்று கருதப்படுவது அல்ல. உயர்ந்த இடத்திலே என்றால், சம உரிமையோடு உயர்ந்த வாழ்க்கை வாழவேண்டும் என்ற வகையிலே தான் இப்பொழுது கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தச் சலுகைகள் ராணுவத்தில் பணிபுரிபவர்களின் குழந்தைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Police colony (Nerkuppai)

* 252 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to Question No. 638 answered on 25th July 1962—

(*a*) whether the Government have received any complaint from the public of Nerkuppai village in January 1963 with regard to the high price paid to the Police colony site acquired by the Government; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes Sir.

(*b*) The final report from the District Revenue Officer, Ramanathapuram in this regard is awaited.

திரு. செ. மாதவன் : இந்தச் சபையில் அன்றைய முதல் அமைச்சர் அவர்கள் 12—3—1963-ல் இதுபற்றி விசாரணை நடத்தி

அந்த அறிக்கையை சபைக்குத் தெரிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்களே, இப்பொழுது காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அதைத் தான் நான் என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன். டிஸ்டிரிக்ட் ரெவின்யூ ஆபீஸரிடமிருந்து பதில் வரவேண்டும், பதில் வந்த பிற்பாடு அதைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : காலதாமதத்திற்கு . . .

MR. SPEAKER : The hon. Member should not interrupt in the middle. If he wants, he can put a separate question.

கனம் திரு. பூ கக்கன் : காலதாமதத்தைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி விவரம் சொல்லுகிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். சட்டசபை விதிப்படி கேள்வி நேரம் ஒரு மணி நேரம் தான் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஒரு மணி நேரத்திற்கு அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், கனம் சபாநாயகர் அவர்கள் அதைப்பற்றி சபைக்குத் தெரிவித்து, எவ்வளவு நேரம் அதிகமாக எடுத்துக்கொள்ளப்போகிறீர் என்பதைத் தெரிவித்து, அதன்படி அதிக நேரம் ஒதுக்குவது தான் வழக்கம். ஆகவே, ஒரு மணி நேரத்திற்கு மேல் எவ்வளவு நேரம் கொடுத்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

திரு. சா. கணேசன் : இப்பொழுது 25 நிமிடங்கள் கூடுதல் ஆகிவிட்டது. 12 மணிக்கு இந்தக் கேள்வியைக் கிளப்பியிருந்தால் பொருத்தமாக இருக்கும். அப்படி கிளப்பாத காரணத்தினால் கனம் சபாநாயகர் அதிக நேரம் அனுமதித்திருக்கிறீர்கள் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களும் உணர்ந்தே தான் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்று எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

கனம் சபாநாயகர் : அதற்குப் பிறகு அவரே 2, 3 கேள்விகள் போட்டிருக்கிறீர்கள். (சிரிப்பு).

The leaders of all parties have agreed that the question hour may be extended to one and a half hours. I am sorry I did not inform this to the House earlier.

திரு. சா. கணேசன் : குறிப்பிட்ட விஷயம் போலீஸ் காலனிக்கு நிலம் 'அக்வையர்' செய்தது பற்றியது. ரூபாய் 18,000-த்துச் சில்லரைக்கு வாங்கப்பட்டிருக்கிறது. அதே ஆண்டிலே அந்த நிலத்தை வாங்கியவர் ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர். அந்த நிலத்தை தன் பெயரிலே வாங்காமல் தன்னுடைய தாயார் பெயரிலே வாங்கி, ரூ. 3,000-க்கு வாங்கி ரூ. 18,000-க்கு மேல் விற்றிருக்கிறீர்கள் என்பது அப்பொழுதே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் 12—3—1963-ல் இதை விசாரணைக்கு விட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். விசாரணைக்கு அனுப்பியவுடன் இதை ஸாங்ஷன் செய்த ஆர்.டி.ஓ.வே இதைப் பார்த்துவிட்டு, கை விட்டு விட்டுப் போய் விட்டார் என்று நம்பத் தோன்றுகிறது. உண்மை என்னவோ

தெரியவில்லை. இது பற்றி மிக விரைவிலே விசாரணை நடத்தி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அதற்குப் பிறகு பக்கத்து நிலங்கள் ஆஸ்பத்திரிக்கும், பள்ளிக்கூடத்திற்கும் 'அக்வையர்' செய்யப்பட்டபொழுது ஏகர் ஒன்றுக்கு ரூ. 1,000 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவே அதிகமான விலை அந்தப் பகுதியில். சுமார் 2-1/4 ஏகர் நிலம் சுமார் ரூ. 18,500-க்கு வாங்கப்பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியரே அரசாங்கத்தை ஏமாற்றிய ஒரு பெரிய பாதகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கவனித்து மிக விரைவிலே நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் 1962-ல் ஜூன் மாதத்தில் இந்தக் கேள்வியைக் கிளப்பியிருக்கிறீர்கள். அதற்கு முன்பு பொது ஜனங்கள் இதுபற்றி ஒன்றும் புகார் செய்யவில்லை. 1963-ல் ஜனவரி மாதத்தில் பொது ஜனங்களிடமிருந்து மகஜர் வந்திருக்கிறது. அதற்குப் பிற்கு அதுபற்றி விசாரணை செய்து, பரிசீலனை நடந்து வருகிறது. டிஸ்டிரிக்ட் ரெவின்யூ ஆபீஸரிடமிருந்து முடிவான ரிப்போர்ட் எதிர்பார்க்கப்படுகிறது. யார் குற்றம் செய்தாலும் குற்றம் செய்தவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். தாசில்தார் மீது குற்றமா, ஆர்.டி.ஓ. மீது குற்றமா அல்லது டி. ஆர். ஓ. மீது குற்றமா என்று நன்றாகத் தெரிந்து கொண்டுதான் அரசாங்கம் முடிவு எடுக்கும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் காலனிக்கு நிலம் 1959-ம் ஆண்டில் ரூ. 18,469-க்கு அரசாங்கத்தினால் வாங்கப்பட்டிருக்கிறது. அதே ஆண்டில் அதே நிலத்தை வள்ளிக்கண்ணம்மாள் ரூ. 3,000-க்கு வாங்கியிருக்கிறீர்கள். அது சம்பந்தமான தஸ்தாவேஜி என்னிடம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் விரும்பினால், அதைத் தர இருக்கிறேன். அது பற்றி விசாரணை செய்து அதன் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே இந்த தஸ்தாவேஜைப் பார்த்துத்தான் டி.ஆர்.ஓ. ரிபோர்ட் அனுப்புவார்கள். அதுபற்றி அரசாங்கம் முடிவு எடுக்கும் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தி

*253. கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :
திரு. எம். வி. கரிவேங்கடம் : } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இம் மாநிலத்தில் இந்தியைப் பரப்ப சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர்நிலைப் பள்ளிகளில் IX, X, XI -ம் ஸ்டாண்டர்டுகளில் இந்தி மொழி கற்பிக்கப்படுகிறது. கல்லூரிகளில் இது ஓர் இரண்டாம் மொழியாகவும் உள்ளது.

சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் இந்தி பிரசாரக வித்யாலயங்களை நடத்தவும், திருச்சிராப்பள்ளியில் ராஷ்டிரபாஷா விசாரத் வித்தியாலயத்தை நடத்தவும், பயிற்சி பெறுபவர்கள் 60 பேர்களுக்குப் பயிற்சிக்குப் பணம் கொடுக்கவும், பகுதி நேர இந்தி ஆசிரியர்களை நியமிக்கவும், இந்தி சுருக்கெழுத்து, தட்டெழுத்து வகுப்புகள் நடத்தவும் தக்ஷிண பாரத இந்தி பிரசாரச் சபைக்கு அரசாங்கம் நிதி உதவி செய்கிறது.

Hindi is taught in Secondary Schools in Standards IX to XI. It is also a second language of study in Colleges. The Government have also been assisting the Dakshin Bharat Hindi Prachar Sabha towards the maintenance of the Hindi Pracharak Vidyalayas at Madras and Tiruchirappalli and a Rashtrabhasha Visharad Vidyalaya at Tiruchirappalli including payment of stipends to 60 trainees and for appointment of Part-time Hindi teachers and for running Hindi shorthand and typewriting classes.

12-30 p.m **திரு. சா. கணேசன்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இப்பொழுது சபை ஆரம்பித்து 1-1/2 மணி நேரம் ஆகிவிட்டதினால், கேள்வி நேரத்தைக் கொஞ்சம் நீட்டிக்கொள்வதற்கு சபையின் சம்மதத்தின் மீது கனம் சபாநாயகர் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER: I think the House has no objection to extend the question hour till the remaining questions are disposed of.

திரு. க. ர. நல்லசிவம்: உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எத்தனை சதவிகித மாணவர்கள் இந்தி கற்றுக் கொள்வதிலே ஆர்வம் காட்டி வருகிறார்கள் என்பதைச் சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: புதிய மந்திரி சபையில் நம்முடைய மந்திரிகளில் யார் யாருக்கு இந்தி பேச, எழுத, படிக்கத் தெரியும்? அந்தப் படிப்பில் அவர்களுடைய யோக்கியதாம்சங்கள் என்ன என்ற விவரத்தை கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்களே இங்கேயுள்ள மந்திரிகளிடம் கலந்து பேசினால், அதைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். (சிரிப்பு).

திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தியைத் தமிழகத்திலே பரப்புவதற்கு, இந்த அரசினர் எவ்வளவு செலவழித்திருக்கிறார்கள்? எவ்வளவு செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஹிந்தியைப் பரப்புவதற்கு என்று தனியாகப் பணம் ஒதுக்கப்படவில்லை. இதுவரையில் எவ்வளவு செலவாகியிருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கலாம்.

திரு. மு. கருணாநிதி: அஞ்சல் நிலையங்களில் இதுவரையிலும் முதலில் தமிழிலும், அடுத்து இந்தியிலும், மூன்றாவதாக ஆங்கிலத்திலும் எழுதி வந்தார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் முதலிலே இந்தியிலும், அடுத்து தமிழிலும் எழுதவேண்டுமென்று மத்திய சர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்தரவு மாநில சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? இது தேவையற்றது, தீதானது என்பதை மாநில சர்க்கார் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படி தகவல் ஒன்றும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. மேலும், மேலே இருக்கிறதா அல்லது கீழே இருக்கிறதா என்பதும் அவ்வளவு முக்கியமானதல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நம்முடைய அமைச்சர்கள் எல்லோரும் டில்லி செல்லுகிறார்கள். டில்லியில் இருப்பவர்களோடு பேசுவது இந்தியா அல்லது ஆங்கிலமா அல்லது தமிழா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தமிழ் தெரிந்தவர்களிடத்தில் தமிழில் பேசுகிறோம். ஆங்கிலம் தெரிந்தவர்களிடத்தில் ஆங்கிலத்தில் பேசுகிறோம். இரண்டும் தெரியாதவர்களிடத்திலே எங்களுக்குத் தெரிந்த ஹிந்தியிலே பேசுகிறோம். (சிரிப்பு).

திரு. மு. கருணாநிதி: இந்தியைப் பரப்புகின்ற முயற்சிகளிலே ஒன்றாக, இந்தி தேவையில்லை என்று கூறுகிறவர்கள் மீது அடக்குமுறைக் கொள்கையைக் கையாள வேண்டுமென்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு ஒன்றுமில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: நமது அண்டை மாநிலங்களாகிய கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் செகண்டரிப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக வைத்திருந்தும், நமது மாநிலத்தில் மட்டும் இஷ்ட பாடமாக வைத்திருப்பதன் நோக்கமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 'கட்டாயம்' என்று சொன்னாலேயே எதிர்ப்புகள் ஏற்படுகின்றன. அதனாலே, கட்டாயம் என்று இல்லாமலேயே, ஏராளமான இளைஞர்கள் இந்தியைப் படித்து வருகிறார்கள். 'கட்டாயம்' என்று சொன்னாலே எதிர்ப்பு வருகிறது. ஆகையால்தான், இந்த மாநிலத்தில் மட்டும் கட்டாயமில்லாமல் வைத்திருக்கிறோம்.

திரு. ர. ஜீவரத்னம்: நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு மாணவர்கள் இந்தி படிக்கிறார்கள், வெளியிலே எத்தனை பேர்கள் தனியாகப் படிக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப் பற்றி இங்கே ஒருமுறை விடை அளித்தேன். இப்பொழுது புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இல்லை. இந்த மாநிலத்தில் பரீட்சைக்குப் போன 52,000 மாணவர்களில் கட்டாயம் இல்லாமலேயே, 50,000 பேர்கள்

இந்தி படித்திருக்கிறார்கள். 2,000 பேர் ஸம்ஸ்கிருதம் எடுத்துப் படித்திருக்கிறார்கள். ஒரு சிலர் தெலுங்கு படித்திருக்கிறார்கள் என்றும் சொல்லி இருக்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : சட்டசபை அங்கத்தினர்களில் அநேகம் பேருக்கு இந்தி படிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருப்பதனால், சட்டசபைக் கூட்டம் நடக்கும்பொழுது, அவர்கள் இந்தி படிப்பதற்கு சர்க்கார் ஒரு ஆசிரியரை நியமிப்பார்களா? (சிரிப்பு).

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டசபையிலுள்ளவர்களுக்கு இந்தி கற்க வேண்டுமென்று ஆசை இருந்தால் அதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் சட்டசபைக் கூட்டம் நடக்கும்பொழுது மட்டும் படித்துவிட்டு, பிறகு விட்டுவிட்டால், படித்தது வீணாகப் போய்விடும். (சிரிப்பு).

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தியைத் தமிழகத்திலே பரப்புவதற்கு தமிழக அரசு முயற்சிப்பது போல, தமிழைப் பிற மாநிலங்களிலே பரப்புவதற்கு அந்தந்த அரசுகள் முயற்சி எடுத்திருக்கின்றனவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிற மாநிலங்களும், அங்குள்ள பல்கலைக் கழகங்களும் அதற்கான முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் ஓரளவு உதவி அளிக்கிறது. டில்லியைப் பொறுத்தவரையில், இந்திப் பிரசார சபையே, தமிழ் தெரியாதவர்களிடம் தமிழைப் பரப்புவதற்கு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தி பேசாத பகுதிகளில் மும்மொழிக் கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் மும்மொழிக் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதா? இந்தி பேசும் பகுதியிலே, இந்தி, ஆங்கிலம், இவற்றிற்கு மேலாக, இன்னொரு தென்னாட்டு மொழி சேர்க்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அகில இந்தியாவிலும் மும்மொழிக் கொள்கை எவ்வளவு தூரம் அனுசரிக்கப்பட்டு வருகிறது என்பதைப் பரிசீலனை செய்வதற்கு மத்திய அரசாங்கம் ஒரு குழு அமைத்தது. நான் கூட அதிலே அங்கத்தினராக இருந்தேன். அந்தக் குழு விவாதத்தின் போது, சில மாநிலங்களிலே சீராக இந்தக் கொள்கை நிறைவேற்றப்படவில்லை என்பதை உணர்ந்து, எல்லா மாநிலங்களிலும் சீராக நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்தி பேசுகின்ற மாநிலங்களிலே, தாய் மொழி இந்தி, அந்நிய மொழி ஆங்கிலம். அதோடுகூட வேறு ஒரு மொழி இருக்க வேண்டும். அந்த மொழி தென்னாட்டு மொழியாக இருக்கலாம், அல்லது குஜராத்தி அல்லது மாராத்தியாக இருக்கலாம். அங்கே சிலர் ஸம்ஸ்கிருதம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மூன்றாவது மொழி குஜராத்தி அல்லது மாராத்தி அல்லது ஒரு தென்னாட்டு மொழியாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி, அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டி-

ருக்கிறார்கள். மும்மொழிக் கொள்கையை நாம் எப்படி நிறைவேற்றி வருகிறோம் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர் இதைப்பற்றி நான் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கப்போகிறேன்.

ஜிப்சம்

***254 கேள்வி.—திரு. எஸ். ராமசாமி :
திரு. எஸ். மணி :** } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் எங்கெங்கு ஜிப்சம் கிடைக்கிறது?

(இ) அவற்றில் எங்கெங்கு உள்ளவற்றில் ஜிப்சம் எடுக்கப்பட்டு வருகிறது?

(உ) அரசினர் புறம்போக்குகளில் உள்ள ஜிப்சம் என்ன செய்யப்படுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) திருச்சி ஜில்லாவில் பெரம்பலூர், லால்குடி தாலுகாக்களில் சுமார் 22 சதுர மைல் பரப்பில் ஜிப்சம் கிடைக்கிறது. இது ஒதியம், அய்யனாவரம், தம்பக்குரிச்சி, குலக்காநத்தம், தேரணிபாளையம், சிறுகளப்பூர், பெருகளப்பூர், பெரிய குறுக்கை, தப்பை முதலிய இடங்களில் எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) புறம்போக்கு நிலங்களிலிருந்தும், பட்டா நிலங்களிலிருந்தும் எடுக்கப்படும் பெரும்பாலான ஜிப்சம் சிமெண்ட் தொழிற்சாலைக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

இவை சம்பந்தமான விவரங்களை அனுப்புவதற்கு திருச்சி கலெக்டரைக் கேட்டிருக்கிறோம். இன்னும் தகவல் கிடைக்கவில்லை.

MR. SPEAKER : Question No. 225 is postponed.

மாமல்லபுரம் துறைமுகம்

***256 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாமல்லபுரத்திற்கு அருகேயுள்ள கல்பாக்கம் கிராமத்தில் அணு மின்நிலையம் அமைக்க இருப்பதால், தூர்ந்துபோன மாமல்லபுரம் துறைமுகத்தைப் புதுப்பிக்க திட்டம் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH : No.

Procurement of Paddy.

* 257 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the target fixed by the Government for the current harvest season for the procurement of paddy from the millers;

(b) the details of the quantity actually procured in each district as on 1st June 1963; and

[18th November 1963

(c) the rates at which paddy was purchased?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) Paddy is not procured from the millers under the voluntary procurement scheme.

(b) & (c) Do not arise.

அரிசி கொள்முதல்

* 258 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அறுவடை காலத்தில் குருவை, சம்பா அரிசியை கொள்முதல் செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமென்றால், எந்த முறையில் கொள்முதல் செய்யப்படும் ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ), (இ) 1963-ல் சம்பா, குருவை அறுவடைகளின்போது இந்திய அரசாங்கத்துக்காக ஒரு லட்சம் மெட்ரிக் டன் அரிசி கொள்முதல் செய்ய இந்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. குருவை அறுவடையின்போது மில் அதிபர்களிடமிருந்து நிர்ப்பந்தமற்ற கொள்முதல் திட்டத்தின்கீழ் அரிசி கொள்முதல் செய்யப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி : இப்பொழுது அரிசியாகக் கொள்முதல் செய்யப்படுகின்ற காரணத்தினால், சர்க்கார் திட்டமிட்டபடி போதுமான அளவு கொள்முதல் செய்ய முடியவில்லை. நெல்லாகக் கொள்முதல் செய்தால், சர்க்கார் குறிப்பிட்ட அளவு பெற முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, இதை மாற்றும் நோக்கம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்பொழுது குருவை சீஸனில் அரிசியாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஹல்லருக்கு 10 டன் கொடுக்க வேண்டுமென்று, இது சம்பந்தப்பட்ட சங்கத்தைக் கலந்துகொண்டு முடிவு செய்தோம். அந்த முறையில் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

Sacrifice of buffaloes

• 259 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that buffaloes were killed in a savage manner on 24th January 1963 near Ootacamund during tribal ceremonies; and

(b) if so, the action proposed to be taken to ban such practices in future?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) A statement* is placed on the table of the House.

(அ) & (இ) இது குறித்து அறிக்கை ஒன்று சபையில் வைக்கப்பட்டுள்ளது.

* Printed as Appendix VI on pages 150-151 supra.

18th November 1963]

Compulsory Deposit Scheme

(5) பரிட்சை ஒன்றின் அடிப்படையில் டிமான்ஸ்ட்ரேஷன் மேஸ்திரிகளைப் பீல்ட்மென் பதவிகளுக்கு உயர்த்துவதற்கென பீல்ட்மென் பதவிகளில் 20 சதவிகித ஒதுக்குமுறையை நிறுத்திவிடவேண்டும். பரிட்சை எதுவும் இல்லாமலேயே டிமான்ஸ்ட்ரேஷன் மேஸ்திரிகள் பீல்ட்மென்களாகப் பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும்.	பரிட்சை எதையும் வைக்காமல் டிமான்ஸ்ட்ரேஷன் மேஸ்திரிகளைப் பீல்ட்மென்களாகப் பதவியில் உயர்த்துவது விரும்பத்தக்கதல்ல என்று கருதப்படுகிறது. எனினும், பதவி உயர்வுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக வாய்மொழிப் பரிட்சையிலும் எழுதவேண்டிய பரிட்சையிலும் தேர்வதற்கான மார்க்குகளை 100-க்கு 50 என்பதிலிருந்து 45 ஆகக் குறைத்துள்ளோம். 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ம் தேதி சங்கத்துக்கு ஒரு பதில் அனுப்பியுள்ளோம்.

Virudhunagar Municipality (Allegations)

127 Q.—SRI A. K. SUBBIAH: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருதுநகர் நகரசபை கணக்கர் அவர்களின்மீது லஞ்ச ஊழல் சம்பந்தமான புகார் ஏதேனும் வந்ததா ?

(இ) அதன்மீது விசாரணை செய்யப்பட்டதா ?

(உ) அதன் முடிவு என்ன ?

A.—

(a) } (b) } Yes Sir.

(c) The allegations were found baseless.

(அ) } (இ) } ஆம், ஐயா.

(உ) அந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரம் அற்றவை.

Minor Minerals (Quarrying)

128 Q.—SRI C. V. VELAPPAN: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான பெரிய பரப்பு உள்ள குன்றுகளில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் கல் உடைக்க வேண்டி அனுமதி கேட்டால் அதிகபட்சம் எவ்வளவு காலத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது ?

(இ) அனுமதி மூன்று மாதக்காலமாக இருந்தால் அதை ஆறுமாத காலமாக ஆக்கப்படுமா ?

A.—(a) and (b): Under the Madras Minor Mineral Concession Rules, 1959, permits are issued by the Deputy Tahsildars, Tahsildars, Revenue Divisional Officers and Collectors, only according to the value of the minerals sought to be removed. The following are the limits up to which these officers can issue permits for quarrying minor minerals :—

Deputy Tahsildar or Tahsildar	up to Rs. 25.
Revenue Divisional Officer	up to Rs. 100.
Collectors	up to Rs. 500.
The Director of Industries and Commerce.	above Rs. 500.

However, in respect of small quarries, permits are issued for a specific quantity of the mineral and the time stipulated will be generally the time required to quarry and remove the quantity specified. If excessive time is allowed the permit holder may abuse the permit and quarry more than the quantity specified.

(அ) & (இ) : 1959-ம் ஆண்டு சென்னை சிறுகனிப்பொருள் சலுகை விதிகளின்கீழ் தோண்டியெடுக்க அனுமதி கோரபடும் கனிப்பொருள் மதிப்பினையொட்டி அனுமதி சீட்டுகளை துணைத்தாசில்தார்கள், தாசில்தார்கள், ரெவின்யு டிவிஷனல் அதிகாரிகள், கலெக்டர்கள் மட்டுமே வழங்குகின்றனர். சிறு கனிப்பொருள்களை வெட்டியெடுப்பதற்கான அனுமதி சீட்டுகளை இந்த அதிகாரிகள் அடியிற்கண்ட வரையறைகள் வரை வழங்கலாம் :—

	ரூ.
துணைத் தாசில்தார் அல்லது தாசில்தார்	25 வரை.
ரெவின்யு டிவிஷனல் அதிகாரி	100 வரை.
கலெக்டர்	500 வரை.
தொழில் வர்த்தகத்துறை நெறியாளர்	500-க்கு மேற்பட்டு.

ஆயினும் சிறு சுரங்கங்களைப் பொறுத்தமட்டில் குறிப்பிட்ட அளவு கனிப்பொருள்களுக்காகவே அனுமதி வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட கனிபொருள்களை வெட்டி அகற்றுவதற்குச் சாதாரணமாகத் தேவைப்படும கால அளவே நிர்ணயக் கால அளவாகும். அதிகப்படியான கால அளவு அனுமதிக்கப்பட்டால் அனுமதிச் சீட்டு வைத்திருப்பவர் அனுமதிச் சீட்டினைத் தவறாகப் பயன்படுத்தி குறிப்பிட்ட அளவுக்கு மேல அதிக அளவுக்குக் கனிப்பொருள்களை வெட்டியெடுத்து விடுவார்.

[18th November 1963

Defence Fund (Collections)

129 *Q.*—SRI S. ARUMUGAM: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா :—

(அ) இம் மாநிலத்தில் தேசிய பாதுகாப்பு நிதிக்காக 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முடிய அரசினர் வசம் சேர்ந்த தொகை என்ன ?

(இ) மாவட்டவாரியாக வசூலிக்கப்பட்ட பாதுகாப்பு நிதியைப் பற்றிய பட்டியல் ஒன்று சபை முன்பு வைக்கப்படுமா ?

A.—(*a*) The total amount received by the Government under the National Defence Fund up to the end of August 1963 is Rs. 2,77,88,580–38 nP.

(*b*) A statement [a] containing the district wise collections is placed on the Table.

(அ) தேசியப் பாதுகாப்பு நிதிக்காக 1963 ஆகஸ்டு முடிய அரசினர் பெற்ற மொத்த தொகை ரூபாய் 2,77,88,580 நயா பைசா 38.

(இ) மாவட்ட வாரியாகக் கிடைத்த வசூல்கள் அடங்கிய அறிக்கை[a] ஒன்று சட்ட சபையில் வைக்கப்பட்டுள்ளது.

Public Sector Undertakings

130 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Honourable the Minister for Industries be pleased to place on the Table of the House a list of the Industries that are run by the Government with the names of the places where such industries are established, district wise ?

A.—In the Large and Medium Scale Sectors, it is proposed to start one Automatic Brick Kiln at Thirumazhisai near Poonamallee. As far as the Small Scale Sector is concerned, the Member is requested to refer to the booklet, "Industrial Development in Madras State—A Review", containing the particulars districtwise, which is being placed on the Table of the House *every year* at the time of moving the Industries Budget for vote.

பூந்தமல்லிக்கு அருகே திருமழிசையில் பெரிய நடுத்தர அளவுத் தொழில் பிரிவில் யந்திர செங்கற் சூளை ஒன்றை அமைக்க உத்தேசித்திருக்கிறது. சிறு ரகத் தொழில் பிரிவைப் பொறுத்தவரையில் தொழில்துறை வரவு செலவுத் திட்டத்தை பிரேரேபிக்கும்போது சட்டசபையில் ஆண்டுதோறும் வைக்கப்படும் "தமிழ் நாட்டில் தொழில் அபிவிருத்தி ஆய்வுரை" என்னும் சிறு நூலைப் பார்க்கும்படி கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். அதில் மாவட்டவாரியான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

Midday Meals Scheme

131 *Q.*—SRI MUNU ADHI: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1962-ம் ஆண்டு ஜூன் மாத ஆரம்பத்தில் இருந்த கணக்குப்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு பள்ளிகளில் (ஆரம்ப, உயர்துவக்க, உயர்நிலைப் பள்ளிகள் வாரியாக) மதிய உணவுத் திட்டம் அமலிலிருந்தது ?

(இ) 1962-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பிறகு புதியதாக மதிய உணவுத் திட்டத்தை அமுல் படுத்திய பள்ளிகள் எவ்வளவு—மாவட்ட ரீதியாக ?

A.—(*a*) and (*b*): A statement[b] is placed on the Table of the House.

(அ) & (இ): ஓர் அறிக்கை[b] சட்டசபை மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

[a] Printed as Appendix XIV on pages 165-166 supra.

[b] Printed as Appendix XV on pages 166-168 supra.

18th November 1963]

Education Department (Gazetted Officers)

132 *Q.*—SRI MUNU ADHI: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

1947-ல் இந்தியா சுதந்திரம் அடைந்தபொழுது தமிழ்நாடு கல்வி இலாகாவில் எத்தனை கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகள் இருந்தனர் ? இப்போது எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் (as on June 1932) ?

A.—In the composite Madras State there were 211 Gazetted Officers in the Education Department during 1947. Now, there are 245 Gazetted Offfcers in the Education Department in this State as on June 1962.

ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தில் 1947-ல் கல்வி இலாகாவில் கெஜட் பதிவு அதிகாரிகள் 211 பேர் இருந்தனர். இப்பொழுது (1962 ஜூன் வரையில்) இம் மாநிலக் கல்வி இலாகாவில் கெஜட் பதிவு அதிகாரிகள் 245 பேர் இருக்கின்றனர்.

Schools and Colleges (working hours)

133 *Q.*—SRI MUNU ADHI: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) அரசாங்கக் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் போதனை நேரத்தை மாற்றியமைக்க உத்தேசமுண்டா ?

(இ) தற்போது எத்தனை அரசாங்கக் கல்லூரிகள், அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளில் காலை 9 மணி முதல் வேலை துவக்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது?

A.—(*a*) No.

(*b*) No instructions have been issued by Government to change the working hours of Government Colleges and Government Schools.

(அ) இல்லை.

(இ) அரசாங்கக் கல்லூரிகளிலும், அரசாங்கப் பள்ளிகளிலும் வேலை நேரத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் உத்தரவிடவில்லை.

T.B. Sanatorium (Tambaram)

134 *Q.*—SRI MUNU ADHI: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தாம்பரம் காசநோய் மருத்துவ நிலையத்தில் (T. B. Sanatorium) கம்பவுண்டர்கள். இரவு நேரங்களில் டெலிபோன் இயக்குநர்களாகப் பணியாற்றுவதை அரசாங்கம் அறியுமா ?

(இ) அவ்வாறு வேலை செய்வதற்கு அவர்களுக்கு விசேஷ படி தரப்படுகிறதா ? எவ்வளவு ?

(உ) அவர்கள் எத்தனை மணி நேரம் வேலை செய்யவேண்டும் ?

A.—(*a*) Pharmacists posted on night duty are also attending to occasional telephone calls during nights.

(*b*) No special allowances is paid to the pharmacists for this purpose.

(*c*) The night duty pharmacists report for duty at 5–30 p.m. and leave the Sanatorium at 7–00 a.m. the next day.

(அ) இரவில் வேலைக்கு வரும் கம்பவுண்டர்களே இரவில் எப்போதோ ஒரு தடவை வரும் டெலிபோன்களையும் கவனித்துக் கொள்கின்றனர்.

(இ) இதற்காக கம்பவுண்டர்களுக்கு விசேஷ படி எதுவும் கொடுக்கப்படுவதில்லை.

(உ) இரவு நேர வேலைபார்க்கும் கம்பவுண்டர்கள் மாலை 5–30 மணிக்கு வேலைக்கு வந்து மறு நாள் காலை 7 மணிக்கு சானட்டோரியத்தை விட்டுச் செல்கின்றனர்.

[18th November 1963

Dindigul-Gudalore Railway Line

135 *Q.*—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Works be pleased to state whether the State Government have recommended to the Central Government to take up the work of opening of the new railway line, "Dindigul-Gudalore line" which was surveyed during the Pre-independence days and whether the Government are aware that the "Dindigul-Gudalore line" touches very important agricultural and commercial centres and serves many thickly populated places and deserves priority of recommendation?

A.—A resolution passed by the Periakulam Municipal Council in Madurai district for laying a new railway line from Dindigul to Gudalore during the Third Plan period was forwarded to the Government of India for consideration. The Government of India have intimated that this line has not been included in the Railways' Programme of construction for the Third Five-Year Plan and that due to limitation of funds, there is no prospect of this line being considered for construction in the near future.

திண்டுகல்லுக்கும் கூடலூருக்கும் இடையே ஒரு புதிய ரயில் பாதையை மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போட வேண்டுமென்ற தீர்மானத்தை மதுரை மாவட்டத்திலுள்ள பெரியகுளம் நகராட்சி மன்றம் நிறைவேற்றியது. அத் தீர்மானம் இந்திய அரசினர் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போடவிருக்கும் புதிய ரயில் பாதைகளில் இந்த ரயில் பாதை சேர்க்கப்படவில்லையென்றும், நிதித் தட்டுப்பாடு காரணமாக அண்மையில் இந்த ரயில் பாதையைப் போடுவது குறித்து ஆலோசிக்க வாய்ப்பில்லையென்றும் இந்திய அரசினர் அறிவித்துள்ளனர்.

Electricity Supply Pump Sets

136 *Q.*—SRI A. THANGAVELU: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1962-63-ல் திண்டிவனம் வட்டத்திலுள்ள விவசாயிகளிடமிருந்து பம்பு செட்டுக்கு மின்சாரம் கேட்டு எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?

(இ) எத்தனை பம்பு செட்டுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது ?

A.—(*a*) 967.

(*b*) 217.

(அ) 967.

(இ) 217.

Ex-estates (Compensation)

137 *Q.*—SRI MUNU ADHI: கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?—

1963 மார்ச்சு மாதம் முடிய, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் தமிழக அரசாங்கம் அளித்துள்ள ஜமீன் எஸ்டேட்டுகளுக்கான ஈட்டுத்தொகை (compensation) எவ்வளவு ?

18th November 1963]

A.—The particulars are furnished below :—

Amount of Compensation deposited up to 31st March 1963.

(1)	Ramanathapuram. (2)		Tirunelveli. (3)	
	RS.	NP.	RS.	NP.
Advance Compensation	40,94,535	47	17,05,290	00
Final Compensation	32,76,119	16	20,49,198	55
Total	73,70,654	63	37,54,488	55

புள்ளி விவரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன :—

1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ந்தேதி முடிய நஷ்ட ஈடு கொடுக்கப்பட்ட தொகை.

(1)	ராமநாதபுரம். (2)		திருநெல்வேலி. (3)	
	ரூ.	ந.பை.	ரூ.	ந.பை.
முன்னதாகக் கொடுக்கப்பட்ட நஷ்ட ஈடு.	40,94,535	47	17,05,290	00
முடிவாகக் கொடுக்கப்பட்ட நஷ்ட ஈடு.	32,76,119	16	20,49,198	55
மொத்தம்	73,70,654	63	37,54,488	55

Catering Establishments in City

138 *Q.*—SRI MUNU ADHI: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1961-62-ம் ஆண்டுகளில் **Madras Catering Establishments Act**-ன்படி எத்தனை சென்னை நகர ஹோட்டல்கள் மீது வழக்குத் தொடரப்பட்டன ? என்ன காரணங்களுக்காக ?

(இ) அவர்கள் மீது வழக்கு பதிய காரணமாக அமைந்தவை யாவை ?

(உ) எத்தனை ஹோட்டல் உரிமையாளர்கள் மீது குற்றம் ருசுப்படுத்தப்பட்டது ?

A.—A statement [a] is placed on the Table of the House.

சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

Parks and Playfields (list)

139 *Q.*—SRI MUNU ADHI: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட, தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள நகராட்சி மன்றங்களைச் சார்ந்த பூங்காக்கள், விளையாடுமிடங்கள், மற்றைய திறந்த வெளிகளின் பட்டியலை அரசாங்கம் வெளியிட்டுள்ளதா ?

[a] Printed as Appendix XVI on page 168–169 supra.

[18th November 1963

(இ) இல்லையெனில், அவ்வாறு வெளியிட உத்தேசமுண்டா ?

(உ) இது குறித்து எத்தனை நகராட்சி மன்றங்கள் இன்னும் தகவல் அனுப்பவில்லை ?

A.—(*a*) No.

(*b*) Yes.

(*c*) Two.

(அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) இரண்டு.

Prohibition Cases (Tambaram)

140 *Q.*—Sri MUNU ADHI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

1963-ல் தாம்பரம் ஊராட்சி மன்ற எல்லைக்குள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்கு சம்பந்தப்பட்ட வழக்குகள் எத்தனை ?

A.—Up to the end of August 1963, 240 cases.

ஆகஸ்டு 63 முடிய 240 வழக்குகள்.

Festivals (Collection of excess fees)

141 *Q.*—Sri MUNU ADHI : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் H.R. and C.E. நிர்வாகத்திலுள்ள எந்தெந்த கோவில்களில் விழாக் காலங்களில் அதிகப்படி கட்டணங்கள் சுவாமி தரிசனத்திற்கு வாங்கப்படுகின்றன ?

(இ) எந்த அளவு அதிகமாக வாங்கப்படுகிறது ?

(உ) இங்ஙனம் வசூலிக்கப்படும் தொகையில் அரசாங்கத்திற்குப் பங்கு கிடைக்கிறதா ?

A.—(*a*) and (*b*) : The particulars are given in the annexure[a].

(*c*) No share is being paid to the Government, however, the incomes from the fees, levied for dharsan of the deities during the festival seasons, are assessed for the contribution and Audit fees payable to the Hindu Religious and Charitable Endowment (Administration) Department under Section 92 of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959.

Tourist Centres (Publicity)

142 *Q.*—Sri MUNU ADHI : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தமிழ் நாட்டில் டூரிஸ்ட் சென்டர்களைப் பற்றி மற்றைய மாநிலங்களில் விளம்பரத்திற்காக 1961–62-ம் ஆண்டுகளில் அரசாங்கம் செலவிட்ட தொகை எவ்வளவு ?

(இ) இத்தகைய விளம்பரங்கள் இந்திய மாநிலங்களில் மட்டும் செய்யப்படுகிறதா அல்லது இதர நாடுகளிலும் விளம்பரப்படுத்தப் படுகின்றனவா ?

A.—(அ) தமிழ்நாட்டில் டூரிஸ்ட் சென்டர்களைப் பற்றி மற்றைய மாநிலங்களில் விளம்பரத்திற்காக 1961–62-ம் ஆண்டில் அரசாங்கம் செலவிட்ட தொகை ரூ. 4,372.00.

(இ) தமிழ்நாடு அரசாங்கத்தால் இத்தகைய விளம்பரங்கள் இந்திய மாநிலங்களில் மட்டுமே செய்யப்படுகின்றது.

[a] Printed as Appendix XVII on pages 169–170 supra.

18th November 1963]

Television sets for Schools

143 *Q.*—Sri MUNU ADHI : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் கல்விக்கு டெலிவிஷன் கருவிகளை பயன்படுத்த உத்தேச முண்டா ?

(இ) பரீட்சார்த்தமாக எங்கேனும் அமைக்கப்பட்டுள்ளதா ?

A.—(*a*) No, Sir.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) எழாது.

Highways and Rural Works—Transfer of Officials

144 *Q.*—Sri K. GOPALA KOUNDER : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) செஞ்சியில் 1961 டிசம்பர் மாதம் முதல் 1963 மார்ச்சு மாதம் வரை எத்தனை அசிஸ்டென்ட் இன்ஜினியர்கள் (Highways and Rural Works) மாற்றப்பட்டுள்ளார்கள் ?

(இ) அடிக்கடி மாற்ற விசேஷ காரணம் என்ன ?

A.—(*a*) Four Assistant Engineers (Highways and Rural Works) were transferred.

(*b*) Two Assistant Engineers (Highways and Rural Works) were transferred on administrative grounds ; one Assistant Engineer went on leave and the other Assistant Engineer was transferred at his own request for health reasons.

(அ) நெடுஞ்சாலை–கிராமப் பணிகள் துறையைச் சேர்ந்த நான்கு உதவி என்ஜினியர்கள் மாற்றலாகியுள்ளனர்.

(இ) நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு இரண்டு (நெடுஞ்சாலை–கிராமப்பணி) உதவி என்ஜினியர்கள் மாற்றலாகியுள்ளனர். ஒரு உதவி என்ஜினியர் லீவில் சென்றிருக்கிறார். மற்றொரு உதவி என்ஜினியர் உடல்நிலை காரணமாகத் தாமே கேட்டுக் கொண்டதன்பேரில் மாற்றப்பட்டார்.

Co-operative Labour Contract Societies

145 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Honourable the Minister for Food be pleased to state the number of Co-operative Labour Contract Societies that are functioning in the State, with the names of places districtwise ?

A.—The number of Co-operative Labour Contract Societies and the places where they are functioning are given below districtwise :—

District.	Number of societies.	Name of places where the societies are functioning.
(1)	(2)	(3)
Chingleput	4	Kollacheri, Tirukalikundram, Nanmangalam, Kariambedu.
South Arcot	3	Palanchanallur, Vadakumelur, Avalurpet.

District. (1)	Number of societies. (2)	Name of places where the societies are functioning. (3)
Madras	1	Madras City.
North Arcot	1	Tiruvannamalai.
Salem	6	Jarugu, R.C. Settipatti, Karuppur, Sittilingi, Kaveripuram, Dharmapuri.
Coimbatore	11	Avanashi, Mariapuram, Puliyamarathupalayam, Coimbatore (2), Kinathukadavu, Perianaickenpalayam, Kangeyan, Mulanur, Gobichettipalayam, Veerappanchatram.
Nilgiris	3	Kotagiri, Masinagudi, Thengumarahada.
Tiruchirappalli	6	Tiruchirappalli (2), Dalmiapuram, Navalpattu, Ariyalur, Lalgudi.
Thanjavur	4	Thanjavur, Kadiramangalam, Koradacheri, Kuttalam block.
Madurai	6	Madurai (3), Batlagundu, Palani, Uthamapalayam.
Ramanathapuram	11	Rajapalayam, Watrap, Sivakasi, Sathur, Srivilliputhur, Kundrakudi, Velanur, Manamadurai, Anamavali, Dhanushkodi, Paramakudi.
Tirunelveli	13	Ambasamudram, Kilapavoor, Valliyoor, Mukkudal, Shencottah, Ottapidaram, Perungulam, Sennammareddipatti, Vanaramutty, Sankarankoil, Veppankulam, Kumarappapatti, Veppalodai, Sathankulam.
Kanyakumari	7	Thuckalay, Puttalam, Colacheri, Punnakattuvilai, Puliyoorsalai, Thiruvattar, Nagercoil.

கூட்டுறவு தொழில் ஒப்பந்தச் சங்கங்களின் எண்ணிக்கையும் அவை வேலை செய்யும் இடங்களும் ஜில்லாவாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஜில்லா. (1)	சங்கங்களின் எண்ணிக்கை. (2)	சங்கங்கள் வேலை செய்யும் இடங்களின் பெயர்கள். (3)
செங்கற்பட்டு	4	கொல்லச்சேரி, திருக்கழுக்குன்றம், நான்மங்கலம், கரியாம்பேடு.
தென் ஆர்க்காடு ..	3	பழஞ்சாநல்லூர், வடக்கு மேலூர், அவலூர் பேட்டை.
சென்னை	1	சென்னை நகரம்.
வட ஆர்க்காடு	1	திருவண்ணாமலை.

ஜில்லா. (1)	சங்கங்களின் எண்ணிக்கை. (2)	சங்கங்கள் வேலை செய்யும் இடங்களின் பெயர்கள். (3)
சேலம்	6	ஜருகு, ஆர். சி. செட்டிபட்டி, கருப்பூர், சிட்டிலிங்கி, காவேரிபுரம், தர்மபுரி.
கோயம்புத்தூர் ..	11	அவிநாசி, மரியபுரம், புளியமரத்து பாளையம், கோயம்புத்தூர் (2), கிணத்துக்கடவு, பெரியநாய்க்கன் பாளையம், காங்கேயம், மூலனூர், கோபிசெட்டி பாளையம், வீரப்பன்சத்திரம்.
நீலகிரி	3	கோட்டகிரி, மாசினகுடி, தெங்குமாரகடா.
திருச்சிராப்பள்ளி	6	திருச்சிராப்பள்ளி (2), டால்மியாபுரம், நாவல்பட்டு, அரியலூர், லால்குடி.
தஞ்சாவூர்	4	தஞ்சாவூர், கதிராமங்கலம், கொரடாச்சேரி, குற்றாலம்.
மதுரை	6	மதுரை (3), வத்தலகுண்டு, பழனி, உத்தமபாளையம்.
ராமநாதபுரம்	11	ராஜபாளையம், வத்திராப்பு, சிவகாசி, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், குன்றக்குடி, வேலனூர், மானாமதுரை, ஆனமாவலி, தனுஷ்கோடி, பரமக்குடி.
திருநெல்வேலி	13	அம்பாசமுத்திரம், கீழப்பாவூர், வள்ளியூர், முக்கூடல், செங்கோட்டை, ஒட்டபிடாரம், பெருங்குளம், சென்னமரெட்டிபட்டி, வானரமுட்டி, சங்கரன்கோவில், வேப்பங்குளம், குமாரப்பட்டி, வேப்பலோடை, சாத்தான்குளம்.
கன்னியாகுமரி	7	தக்கலை, புத்தாலம், கோலச்சேரி, புன்னைக்காட்டுவிளை, புலியூர்சாலை, திருவட்டாறு, நாகர்கோவில்.

State Transport Staff (Supply of Shoes)

146 *Q.*—SRI M. S. MANI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இலாகாவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மிதியடி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது ?

A.—Shoes are supplied to the Traffic and Technical staff of the Madras State Transport Department once in two years.

சென்னை அரசாங்கப் பஸ் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த போக்குவரத்து, டெக்னிகல் பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மிதியடி வழங்கப்படுகிறது.

Kilpauk Medical College (Shifting of)

147 *Q.*—SRI M. S. MANI: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை கீழ்ப்பாக்கத்தில் இருக்கும் மருத்துவக் கல்லூரியை திருச்சிக்கு மாற்ற வேண்டுமென்று திருச்சிமாவட்ட மருத்துவர் சங்கம் அரசினருக்கு ஏதேனும் தீர்மானம் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் என்றால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

A.—(*a*) Yes.

(*b*) The Government have decided that the Kilpauk Medical College, Madras, may be shifted from Madras and located in the Tirunelveli district.

(அ) ஆம்.

(இ) சென்னை, கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரியை சென்னையிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாற்ற அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

Prisoners undergoing life sentence

148 Q.—SRI M. S. MANI: கனம் செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62-ல் தமிழ் நாட்டு சிறைச்சாலைகளில் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் எத்தனைபேர் இருந்தனர் ?

(இ) அவர்களில் தண்டனை காலம் முடிந்து விடுதலை செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(உ) அவர்களில் யாரையாவது அரசாங்கம் மன்னித்து விடுதலை செய்துள்ளதா ?

(எ) மன்னித்து விடுதலை செய்யப்பட்டவர்களில் அரசியல் கைதிகள் எவரேனும் உண்டா ?

A.—(அ) 2,487.

(இ) 143.

(உ) ஆம்.

(எ) இல்லை.

Prisoners died in jails

149 Q.—SRI P. MURUGAIYAN: கனம் செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-62 முடிய தமிழ் நாட்டில் தண்டிக்கப்பட்டு ஜெயிலில் வைக்கப் பட்டவர்களில் ஜெயிலிலே இறந்தவர் எத்தனை பேர் ?

A.—During 1961, forty-seven prisoners died within jails, and during 1962, fifty-four died including two women prisoners.

1961-ல் 47 கைதிகள் சிறைச்சாலைகளிலேயே மரணமடைந்தனர். 1962-ல் 2 பெண் கைதிகள் உட்பட 54 கைதிகள் சிறைச்சாலைகளில் மரணம் அடைந்தனர்.

Fuel Forests (Thanjavur)

150 Q.—SRI C. M. AMBIKAPATHY: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஜனங்கள் தஞ்சை தாலுக்காவில் உள்ள காடுகளில் இருந்து தலைசுமையாக எடுத்துவரும் விறகிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதா, எங்கே ?

A.—There are no forests in Thanjavur taluk. The question does not therefore arise.

தஞ்சாவூர் தாலுக்காவில் காடுகளில்லை. ஆதலால், இந்தக் கேள்விக்கிடமில்லை.

Cattle Diseases

151 Q.—SRI C. M. AMBIKAPATHY: கனம் உள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1962–ம் ஆண்டு கால் நடைகள் நோயால் இறந்து போனவை எவ்வளவு ?

A.—4,591.

Forest Guards

152 Q.—SRI C. M. AMBIKAPATHY: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காட்டு இலாக்காவின் கீழ் உள்ள மரங்கள் பிறரால் அழிக்கப்படாமல் இருக்க இரவு பகல் பாதுகாக்கப்படுகிறதா ?

(இ) அவ்வாறு இரவில் பாதுகாத்துவரும் (watchers) மற்றும் அது சம்பந்தமான அதிகாரிகளுக்குத் தற்காப்புச் சாதனங்கள் என்ன வழங்கப்பட்டிருக்கிறது?

A.—(a) Yes. The protection staff have to be on the vigil day and night to protect the forests in their charge.

(b) The Forest Guard is supplied with a hammer axe. The Forest Guard and the Reserve Watcher carry a serviceable bill-hook while on duty in the forests. Protection staff working in vulnerable areas are provided with Government muskets.

(அ) ஆம். காட்டுப் பாதுகாப்புப் பணியாளர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள காடுகளைப் பாதுகாக்க இரவு பகலாக விழிப்புடன் காவல் காத்து வரவேண்டும்.

(இ) பாரஸ்ட் கார்டுக்கு மழு போன்ற ஓர் ஆயுதம் (hammer axe) கொடுக்கப் படுகிறது. பாரஸ்ட் கார்டும், ரிசர்வ் வாட்சரும் காடுகளைச் சுற்றி வருகையில் வெட்டு அரிவாள் எடுத்துச் செல்கின்றனர். அபாயம் நிறைந்த பகுதிகளில் பணிபுரிபவர் களுக்கு அரசாங்கம் துப்பாக்கிகள் கொடுத்துள்ளது.

Forest Officers (Supply of Jeeps)

153 Q.—SRI C. M. AMBIKAPATHY: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எல்லா மாவட்ட காட்டிலாகா அதிகாரிகளுக்கும் 'Jeep' வண்டி அளிக்கப் பட்டுள்ளதா ?

A.—Yes.

ஆம்.

Cauvery Sugar Mills (Tiruchirappalli)

154 Q.—SRI M. S. MANI: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெட்டவாய்த்தலை காவேரி சர்க்கரை ஆலைத்தொழிலாளர்களின் 1960-61-ம் ஆண்டு போனஸ் கோரிக்கையின்மீது திருச்சி தொழில் சமரச அதிகாரி அனுப்பிவைத்த சமரச முறிவு அறிக்கை சர்க்காருக்கு எப்போது கிடைத்தது ?

(இ) அதன்மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

A.—(a) The conciliation report of the Labour Officer, Tiruchirappalli was received by the Government on 27th December 1962.

(b) The Government referred the issue of Bonus for 1960–61 to the Industrial Tribunal, Madras, for adjudication. Subsequently the parties came to a settlement and the Industrial Tribunal accepted the settlement and has passed an award accordingly.

(அ) திருச்சிராப்பள்ளி லேபர் ஆபீசரின் சமரச அறிக்கை 1962-ம் வருடம் டிசம்பர் மாதம் 27-ந் தேதியில் அரசாங்கத்திற்குக் கிடைத்தது.

[18th November 1963

(இ) 1960-61ம் ஆண்டுக்கு போனஸ் வழங்கும் பிரச்சினையை அரசாங்கம் சென்னை தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு அனுப்பியுள்ளது. அதன்பின்னர், கட்சிக்காரர்களிடையே சமரசம் ஏற்பட்டது. சமரச ஏற்பாட்டைத் தொழில் நடுவர் மன்றம் ஒப்புக்கொண்டு, அவ்வண்ணமே தீர்ப்பு வழங்கியுள்ளது.

South India Co-operative Spinning Mills Ltd., Pettai

155 *Q.*—SRI M. S. MANI : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், பேட்டை, தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலைத் தொழிலாளர்களின் 1959-60, 1960-61-ம் ஆண்டுகளின் போனஸ் பிரச்சினை சம்பந்தமாக அரசினருக்குத் தொழிற் சமரச அதிகாரியிடமிருந்து சமரச முறிவு அறிக்கை வந்துள்ளதா ?

(இ) அதன் மீது அரசினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

A.—(*a*) Yes.

(*b*) Subsequent to the receipt of the conciliation report a memorandum of settlement under section 12 (3) of the Industrial Disputes Act, 1947, has been reached between the management of the South India Co-operative Spinning Mills Ltd., Pettai and their workers according to which the parties have agreed to accept the findings of the Commissioner of Labour on the issues in the disputes as final and binding. The Commissioner of Labour will take further action to give effect to his findings. No further action is considered necessary by Government.

(அ) ஆம்.

(இ) சமரச அறிக்கை பெற்றுக்கொண்ட பின்னர், பேட்டை, தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் இடையே, 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஒரு சமரச உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. அதன்படி, தகராறிலுள்ள பிரச்சினைகளில் தொழில் கமிஷனருடைய தீர்ப்பு இறுதியானதென்றும் தங்களைக் கட்டுப்படுத்துமென்றும் ஏற்க அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். தொழில் கமிஷனர், தமது தீர்ப்பை அமல் செய்ய மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பார். அரசாங்கம் இது விஷயத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது அவசியமல்லவென்று கருதப்படுகிறது.

Government Boys' Hostel (Pudukkottai)

156 *Q.*—SRI P. MURUGAIYAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் உள்ள அரசினர் மாணவர் விடுதியில் (Government Boys' Hostel) 1963-ம் வருடம் பிப்ரவரி மாதம் 24-ந் தேதியில் அங்கு படித்துக் கொண்டிருந்த மாணவர் ஒருவர் இறந்தது உண்மையா ?

(இ) அந்த மாணவர் விடுதியில் உணவிற்காகப் பயன்படுத்தும் அரிசியில் குறை ஏதேனுமுண்டா ?

(உ) உணவுப் பண்டங்களில் ஏற்படும் குறைகளைப் போக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

A.—(*a*) Yes.

(*b*) No.

18th November 1963]

(*c*) The Director of Harijan Welfare has issued instructions to the Collectors to ensure that quality provisions for preparation of food are supplied to the Government Hostels under the control of the Harijan Welfare Department and to see that the general principles of hygiene are observed in the preparation and serving of food in the hostels.

(அ) உண்மை.

(இ) இல்லை.

(உ) ஹரிஜன நலத்துறையினர் நடத்தும் அரசாங்க ஹாஸ்டல்களுக்கு உணவு சமைப்பதற்கு அனுப்பப்படும் பொருள்கள் தரமானவையாக இருக்கின்றனவா, உணவு சமைப்பதிலும், பரிமாறுவதிலும் சுகாதாரமான முறைகள் கையாளப்படுகின்றனவா என்பவற்றைக் கலெக்டர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களை ஹரிஜன நலத்துறை டைரக்டர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

Temples (Pudukkottai)

157 *Q.*—SRI P. MURUGAIYAN : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள திருவரங்குளத்தில் உள்ள அரங்குளலிங்கப் பெரிய நாயகி அம்மன் கோவிலின் 1962–63-ம் வருட வருமானம் எவ்வளவு ?

(இ) அங்குள்ள கோவிலுக்குச் சொந்தமான நகைகளின் மதிப்பு என்ன ?

A.—(*a*) Rs. 14,280·95 nP. which comprises of the following items :—

(i) Rs 1,462·21 .. .. Income from Archanai.

(ii) Rs. 30·00 .. .. Miscellaneous income.

(iii) Rs. 12,788·74 .. Allotment out of the maintenance grant of Rs. 2·65 lakhs sanctioned by Government for the maintenance of all temples in Pudukkottai area.

(*b*) About Rs. 27,715.

158 *Q.*—SRI P. MURUGAIYAN : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடி வட்டம் வல்லத்திரா கோட்டையில் உள்ள தருமர் கோவிலுக்குச் சொந்தமான நகைகள் எத்தனை பவுன்கள் பெறும் ?

(இ) அவை எவ்வளவு மதிப்புள்ளது ?

(உ) இந்த நகைகள் யாருடைய பொறுப்பில் உள்ளது ?

A.—(*a*) and (*b*) The temple owns gold and silver jewels as detailed below :—

	Weight.	*Value.*
	TOLAS.	RS. NP.
Gold jewels	6– 8–0	680 00
Silver jewels	14–10–0	23 44
Total ..		703 44

(c) The jewels are under the custody of Sri Chinnaya Ambalam, a mirasdar of the locality, according to custom and usage, on behalf of the Pudukkottai Devasthanams authorities.

A.—(அ), (இ) கீழ்க்கண்ட விவரப்படி கோவிலுக்குத் தங்க, வெள்ளி நகைகள் இருக்கின்றன :—

	எடை. (தோலா)	மதிப்பு. ரூ. ந.பை.
தங்க நகைகள்	6- 8-0	680 00
வெள்ளி நகைகள்	14-10-0	23 44
மொத்தம் ..		703 44

(உ) இந்த நகைகள் இவ்வூர் மிராசுதார் திரு. சின்னையா அம்பலம் அவர்கள் பொறுப்பில் உள்ளன. உள்ளூர் வழக்கத்தையும் ஆசாரத்தையும் ஒட்டி இவர் இந்த நகைகளை புதுக்கோட்டை தேவஸ்தான அதிகாரிகள் சார்பில் வைத்து வருகிறார்.

Selection Grade Municipalities (Revenue Officers)

159 *Q.*—SRI M. S. MANI : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செலக்ஷன் கிரேடில் உள்ள நகராட்சி மன்றங்கள் எவை எவை ?

(இ) அவைகளில் பணியாற்றும் ரெவின்யூ ஆபீசர்களின் சம்பள விகிதம் என்ன?

A.—(a) (1) Coimbatore

(2) Tiruchirappalli and

(3) Salem.

(b) In Salem and Tiruchirappalli—

Rs. 200—5—240—10—270 and

In Coimbatore—

Rs. 250—15—400.

(அ) (1) கோயம்புத்தூர்—

(2) திருச்சிராப்பள்ளி.

(3) சேலம்.

(இ) சேலம், திருச்சிராப்பள்ளி—

ரூ. 200—5—240—10—270.

கோயம்புத்தூர்—

ரூ. 250—15—400.

Fishermen Co-operative Societies

160 *Q.*—SRI M. V. KARIVENGADAM : கனம் செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் எத்தனை கூட்டுறவு மீன்பிடிப்போர் சங்கங்கள் இருக்கின்றன மாவட்ட வாரியாக ?

A.—The number of Fishermen Co-operative Societies in Madras State, district-wise, is given below :—

District.	*Number of Fishermen Co-operative Societies.*
Madras	18
Chingleput	78
South Arcot	50
North Arcot	18
Thanjavur	52
Madurai	5
Tiruchirappalli	6
Salem	10
Coimbatore	7
Ramanathapuram	41
Tirunelveli	36
Kanyakumari	47
Total ..	368

நமது மாநிலத்திலுள்ள கூட்டுறவு மீன் பிடிப்போர் சங்கங்களின் எண்ணிக்கை மாவட்டவாரியாக, கீழே தரப்பட்டுள்ளது.

மாவட்டம்.	எண்ணிக்கை.
சென்னை	18
செங்கற்பட்டு	78
தென் ஆர்க்காடு	50
வட ஆர்க்காடு	18
தஞ்சாவூர்	52
மதுரை	5
திருச்சி	6
சேலம்	10
கோயம்புத்தூர்	7
ராமநாதபுரம்	41
திருநெல்வேலி	36
கன்னியாகுமரி	47
மொத்தம் ..	368

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]

III—ADJOURNMENT MOTION.

(1) Promulgation of Prohibitory Orders and Arrest of D.M.K. Partymen.

MR. SPEAKER: I have received notices of adjournment motions relating to the promulgation of prohibitary orders under Section 144, Criminal Procedure Code and under Section 41 of the City Police Act and the arrests of certain leaders and members of the Dravida Munnetra Kazhagam Party, from the following hon. Members:—

Sri V. R. Nedunchezhiyan.

Sri T. P. Alagamuthu.

Sri A. P. Dharmalingam and

Sri K. A. Mathialagan.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, சென்ற 12-ம் தேதியிலிருந்து . . .

MR. SPEAKER: Let the hon. the Leader of the Opposition confine his statement to the point as to how far the matter comes within the scope of an adjournment motion. Let him not go into details.

திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம், ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர வேண்டியதின் அவசியம் பற்றி மட்டும் சொல்லு கிறேன். இன்றைக்கு அடிப்படை உரிமை பறிக்கப்பட்டு இருக் கிறது. நான்கு, ஐந்து நாட்களாக சென்னை நகரத்திலும் இன்னும் பல மாவட்ட நகரங்களிலும், வேறு பல பகுதிகளிலும் 144 தடை யுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பேச்சு உரிமை பறிக்கப்பட்டிருக் கிறது. அது மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்த பலபேர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள், தடுப்பு காவல் சட்டத்தின் கீழ். அப்படி ஏற்பட்டிருக்கும் அத்தகைய நிலைமையை விளக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட நபர்கள் இந்தி திணிப்பு கண்ட னத்தையொட்டி அதிருப்தியைத் தெரிவிக்கும் முறையில் ஒரு எரிப்புப் போராட்டத்தை நடத்துவார்கள் என்று மட்டும் தெரிவித்திருந்தார்கள். அதுவும் சென்னையில் 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 17-ம் தேதியன்று மாலை 6 மணி அளவில் குறிப்பிட்ட வர்கள், அறிஞர் அண்ணாவும், அவரைச் சேர்ந்த 4 பேர்களும் எரிப்பு போராட்டத்திலே ஈடுபடுவார்கள் என்றும், வேறு யாரும் அந்தச் செயலில் ஈடுபடமாட்டார்கள் என்றும் திட்டவட்டமாக அறிவித்திருந்தார்கள். அதனைச் சாக்காக வைத்துக்கொண்டு 12-ம் தேதி நள்ளிரவிலிருந்து உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள், ஒரு மாதகாலத்திற்கு ஐந்து பேர்கள் சேரக்கூடாது என்றும், கூட்டங் கள் கூட்டக்கூடாது என்றும், கருத்துக்களை வெளியிலே தெரி விக்கக் கூடாது என்றும், அப்படித் தெரிவிக்க வேண்டுமானால் அது அனுமதியின் பேரில்தான் செய்யலாம் என்றும் உத்தரவு போடப்

பட்டு இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அனுமதி கேட்டால் அது மறுக்கப்பட்டு அடிப்படை உரிமை பறிக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பிட்டவர்கள் குறிப்பிட்ட இடத்தில் அதாவது சென்னையில் குறிப்பிட்ட செயலைச் செய்வார்கள், மற்றவர்கள் அந்த செயலில் ஈடுபடமாட்டார்கள் என்று திட்டவட்டமாக தெரி வித்திருந்தும் தடைகாவல் சட்டத்தின் பேரில் அந்த செயலில் ஈடுபடாத, முயற்சியை மேற்கொள்ளாத கழகத்தைச் சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நகரசபை, ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆகியோரும் மற்ற மாவட்டங்களிலும் பகுதிகளிலும் கைது செய்யப்பட்டு அடிப்படை உரிமை பறிக்கப்பட்டிருக்கிறார் கள். இந்த நிலைமை நாடெங்கும் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் பல நாட்களுக்கு கருத்துக்களை மக்களுக்கு தெரிவிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கருத்துக்களைத் தெரிவிக்க கூட்டங் களுக்கு அனுமதி கேட்டாலும் மறுக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் காரணத்தால், அதைப்பற்றிச் சபை விவாதித்து நல்லதொரு முடிவை ஆராய்ந்தறிய வேண்டும். இந்தக் காரணத்திற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதிக்க அவகாசம் கொடுக்க வேண்டும் என்று மதிப் பிற்குரிய அவைத்தலைவர் அவர்களை நாங்கள் கேட் கிறோம். சட்ட மன்றத்திலே விவாதத்தின் மூலம் ஏற்பட்டிருக்கிற நிலைகளை நாட்டு மக்களுக்கு அறிவித்து சீர்படுத்த முடியும். ஜன நாயக உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது, தேவையற்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, போலிசார் அத்துமீறி நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதனை தெளிவாக்க ஒத்தி வைப்பு தீர்மானத்திற்கு அவகாசம் கொடுக்க வேண்டும் என்று அவை தலைவர் அவர்களை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

* SRI K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I have given notice of the following adjournment motion:—

'That, under Rule 42 of the Madras Assembly Rules, the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance, viz., the serious situation arising out of the arrests of the D.M.K. Leader, Arignar Anna, M.P., and more than 500 prominent members of the Dravida Munnetra Kazhagam including Headquarters Secretaries, several Corporation Councillors and lawyers and the unjustified promulgation of prohibitory orders in Madras City, Madurai, Coimbatore, Tiruchirappalli, Thanjavur, Vellore and many other towns and areas all over the State in connection with the agitation against the imposition of Hindi.'

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அவசரமான பொது முக்கியத்துவம் பொருந்திய தீர்மானம் எப்படி மன்ற விதியின் கீழ் வருகிறது என்பதனை விளக்குவதை என் கடமையாக கருது கிறேன். இன்றைக்கு கொடுத்திருக்கிற தீர்மானத்தில் குறித்திருக் கும் சம்பவம், லட்சக்கணக்கான குடும்பங்களை அலைக்கழிக்கிற பிரச்னையைப் பற்றியது. நேற்றைய முன்தினம் மத்தியானம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் நாட்டின் ஒப்பற்ற தலைவரும், பல

[திரு. கே. ஏ. மதியழகன்] 18th November 1963]

லட்சக்கணக்கான மக்களின் வழிகாட்டியாகவும் இருக்கிற அறிஞர் அண்ணா அவர்களையும் இன்னும் அவருடன் நாலுபேர்களையும் வழி மறித்து கைது செய்து இருக்கிறார்கள். அதோடு தலைமை நிலையச் செயலாளர்கள், முன்னாள் மேயர், நகரசபை, ஊராட்சி மன்ற தலைவர்கள், பல வழக்கறிஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதோ "அபரிஹென்ஷனில்" ஐயப்பாட்டில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேபோல இன்றைக்கு சென்னை நகரத்திலும் இன்னும் கோவை, மதுரை, திருச்சி முதலிய நகரங்களிலும் பலபேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 144 தடையுத்தரவையும் பிரயோகம் செய்து இருக்கிறார்கள். இது ஒரு சாதாரண அன்றாட நிர்வாகத்தில் வருகிற ஒரு சம்பவம் என்று நாம் கருதிவிட முடியாது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் இந்தச் சம்பவங்களுக்குப் பின்னால் உள்ள கொள்கை, அந்தக் கொள்கையை மறைமுகமாக வற்புறுத்துகிற . . .

MR. SPEAKER : Let the hon. Member finish the point soon.

SRI K. A. MATHIALAGAN : I am finishing the point, Sir.

MR. SPEAKER : On the same point, the hon. Member can talk for two days. But he must tell me how the matter could be treated as an adjournment motion.

SRI K. A. MATHIALAGAN : Government is involved and the House has a right to express its opinion on the policy followed by Government. The House has got a right to exercise that power, that fundamental right.

MR. SPEAKER : That is after the motion is admitted. First the motion should be admitted and then the House could express its opinion.

திரு. கே. ஏ. மதியழகன் : அந்த ஏற்பாடுகள் தடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமை பறிக்கப்பட்டிருப்பதோடு அல்லாமல் எதிர்கால முதலமைச்சராக வரக்கூடிய ஒருவரை, 144 தடையுத்தரவு போட்டதோடு கூட, வருகிற வழியிலேயே கைது செய்திருக்கிறார்கள். இன்றைக்கு நம் ராஜ்யத்திலே அமைதி நிலவுகிறது என்றால் 144 தடை உத்தரவினால் அல்ல. சைதாப்பேட்டை சிறையில் இருக்கிற அந்த மாபெரும் தலைவர் ஒருவருடைய சுண்டு விரல் ஆணையினால் இன்றைக்கு அமைதி நிலவி வருகிறது என்பதை உணர்ந்து பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்னையில் இந்தச் சட்டமன்றம் கவனம் செலுத்த வேண்டும். இதைப்பற்றி விவாதிக்க வேண்டும், அதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்பதற்காக இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறேன். அரசாங்கம் இந்தப் பிரச்சனையை நேரிடையாகப் பேசி ஒழுங்கு செய்வதற்குத் தவறியிருக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் சட்டசபையில் முதல் நாள், முதலமைச்சராகக் கால் வைக்கும்போதே, 144 தடை

[திரு. கே. ஏ. மதியழகன்] [18th November 1963

உத்தரவைப் பிறப்பித்து அங்கும் இங்குமுள்ள நிரபராதிகளைக் கைது செய்து, எங்கும் நீல நிறப் போலீஸ் வான் சுற்றும்படியாகச் செய்து மக்களுக்குள்ள அடிப்படை உரிமைகளைக் கூடப் பறித்து இந்த பரிவாரங்களுடன் வந்திருக்கிறார்கள். பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சனையில் எந்தமாதிரியாக நடந்து கொள்ள வேண்டுமோ அந்தமாதிரியாக இந்த அரசாங்கம் நடக்கத் தவறியிருக்கிறது. சிறைச்சாலைக் கதவுகளைத் திறந்து வைத்து துருப்பிடித்த துப்பாக்கிகளை துடைத்து வைத்திருக்கிறது.

(The time-bell was rung)

* திரு. அ. பெ. தர்மலிங்கம் : சட்டசபைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புப் பிரேரணையை நாங்கள் எல்லாம் பெருமையோடும் பூரிப்போடும் ஆதரிக்கிறோம். மதிப்பிற்குரிய எங்கள் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களைக் குறிப்பிட்டபோது ஆளும் கட்சியைச் சேர்ந்த மெம்பர்கள் மிகச் சாதாரணமாக எண்ணிச் சிரித்தார்கள்.

கனம் சபாநாயகர் : அவர்கள் சிரித்ததைப்பற்றி ஒன்றும் கனம் அங்கத்தினர் அக்கறை காட்ட வேண்டாம். இந்தப் பிரேரணையின் முக்கியத்துவத்தைப்பற்றி தங்கள் கருத்து என்ன என்பதை மட்டும் சொன்னால் போதும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதைத்தான் குறிப்பிட நான் வருகின்றேன். இந்தப் பிரச்சனை மிகவும் பொது முக்கியத்துவம் வாய்ந்தது. நாட்டில் உள்ள அத்தனை பேர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட—ஒரு சிலர் இந்த மன்றத்திலே ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்—வெளியிலே அமைச்சர் உட்பட அனைவரும் ஒரு சிறப்புடைய தமிழ் மகன் என்று ஏற்றுக்கொள்கிற அறிஞர் அண்ணா அவர்களை கைது செய்திருப்பதானது மிகவும் வேதனைக்குரியது—திட்டவட்டமாக, தெளிவாக குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்டவர்கள் மட்டும் இன்ன காரியம் செய்யப் போகிறோம் என்று சர்க்காருக்குத் தெரிவித்திருந்த பிறகும்கூட ஏதோ காட்டுமிராண்டி தர்பாராக, நாட்டிலுள்ள அத்தனை பேர்களுக்கும் இடைஞ்சல் ஏற்படும் வகையில், துன்பம் உண்டாகும் வகையில் 144 தடையுத்தரவு விதித்திருப்பதானது மிகவும் அநீதியானது. இன்றைக்கு கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் கைது செய்யப்படவில்லை. அத்தனை பேர்களையும் பிடித்துச் சிறைக் கோட்டத்தில் அடைத்திருப்பதானது எந்த நாட்டிலும் இல்லாத கொடுமையாகும். சாதாரண பொதுமக்களைக்கூடப் பிடித்து வைத்திருக்கிறார்கள். வழக்கறிஞர்களைப் பிடித்து அடைத்திருக்கிறார்கள். கட்சியைப்பற்றித் தெரியாத பலரைப் பிடித்து அடைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருப்பவர்கள் ஏதோ ஒரு சிலர்தான் என்று எண்ணினாலும்கூட அதில் இருப்பவர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். முன்னாள் மேயர்கள் இருக்கிறார்கள்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [18th November 1963

கள். அதுவும் நகரசபைத் தேர்தல் வந்து கொண்டிருக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு கொடுமையானது எங்கும் நிலவுகிறது. மதிப்பிற்குரிய அண்ணா அவர்களையும் அவரோடு வந்த நான்கு பேர்களையும் கைது செய்து தனித் தனியாகப் பிரித்து எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது இன்னமும் தெரியாதது மட்டுமில்லை—அறிஞர் அண்ணா அவர்களை, நாட்டு மக்கள் அனைவரும் போற்றும் ஒரு மாபெரும் தலைவரை எங்கள் இதயத்திலே வைத்து வணங்கிவரும் அண்ணாவை ஒரு தனிக் கொட்டடையில் அடைத்து, அதுவும் அடிக்கின்ற மழை முழுவதும் அவர் மேல் அடிக்கவிட்டு, பின்னர் சிறையிலும் 'ஸி' வகுப்பில் தள்ளி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் இதை விடக் கொடுமை என்ன இருக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுவும் ஒரு சாதாரண போலீஸ் கமிஷனர் அவர்களை நடத்திய முறையைப்பற்றி அறியும்போது நாட்டு மக்களுடைய உள்ளம் கொதிக்கிறது. எங்கள் தலைவர் அண்ணா அவர்களுடைய ஆணைக்கு அடங்கி இன்று நாட்டில் அமைதி நிலவுகிறதே தவிர—இத்தனை கொடுமைகளையும் பொறுமையோடு நாட்டு மக்கள் சகித்துக்கொண்டிருக்கிறார்களே தவிர வேறு எதற்கும் இல்லை. இன்றைக்கு ஆயிரம் ஆயிரம் தொண்டர்கள் அவருடைய ஆணைக்கு அடங்கிக் கிடக்கிறார்கள். இதை ஏதோ ஒரு சாதாரணப் பிரச்சனையாகக் கருதிவிடாமல் உடனடியாக இந்தப் பிரச்சனையைப்பற்றி விவாதித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பிரேரணையை நான் முன்மொழிகிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்த அவசரப் பிரேரணை கட்சி சார்பாகக் கொண்டுவரப்படுகிறது என்று நான் நினைத்தேன். எதிர்க்கட்சியைச் சேர்ந்த மூன்று அங்கத்தினர்கள் தனித்தனியாக மூன்று அவசரப் பிரேரணைகளைப் பிரேரேபித்து வீராவேசத்தோடு பேசினார்கள். இந்தப் பிரேரணைகளை அனுமதிப்பதா இல்லையா என்பது தாங்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஆனால் பொதுவாக சில வார்த்தைகள் சொல்ல நான் முன் வந்திருக்கிறேன். பிரேரணையைப் பிரேரேபித்தவர்கள் அரசாங்கத்தைப்பற்றி என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொன்னார்கள். இன்னும் சொன்னால் என்ன வார்த்தைகள் வாயில் வந்ததோ அதையெல்லாம் சொன்னார்கள். குறிப்பாக அடிப்படை உரிமை பாதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அடிப்படை உரிமையை நாம் உணருகிறோம். அதை நாமும் பாதுகாக்கிறோம். அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவேண்டுமென்பதில் நாமும் மிகுந்த அக்கறை உள்ளவர்களாக இருக்கிறோம். அடிப்படை உரிமை என்பது எல்லோருக்கும் பொதுவாக வழங்கப்பட்டுள்ளது. அந்த உரிமைகள் எந்தவிதத்திலும் பறிக்கப்படக் கூடாது என்பதில் எல்லோருக்கும் அக்கறை உண்டு. அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே அப்படிச் செய்திருக்கிறோம். ஆனால் அதற்காக அடிப்படை உரிமை என்ற பெயரை வைத்துக்கொண்டு பிறருக்கோ, நாட்டுக்கோ இன்னல் விளைவிப்பது என்றால் எந்த

18th November 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

நாட்டிலும், எந்த அரசியல் சட்டத்தின் கீழும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதை அடிப்படையாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

போலீசார் எடுத்த நடவடிக்கைகளைப்பற்றிச் சொன்னார்கள். போலீசார் ஏன் நடவடிக்கை எடுத்தார்கள்? கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் தாம் பிரேரேபித்த பிரேரணையில் தி.மு.க. தலைவர் கனம் திரு. அண்ணாதுரை அவர்களைக் கைது செய்ததையும் கண்டித்துப் பேசினார்கள். அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்கள்? அவர்கள் கைது செய்யப்பட்டது தவறு என்று கனம் மதியழகன் அவர்கள் சொன்னார்கள். அதில் இருந்தே அவர்கள் கருத்து நன்றாகப் புலனாகிறது. திரு. அண்ணாதுரை அவர்கள் பல நாட்களாகவே பிரகடனம் செய்து வந்தார்கள். என்ன செய்யப் போவதாகச் சொன்னார்கள்? இந்தியைப் பற்றிப் பேசுவது மாத்திரம் அல்ல. இந்தி திணிக்கப்படுகிறது என்று சொல்லலாம். திணிக்கப்படவில்லை என்று சொல்கின்ற ஆற்றல், உரிமை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள ஒரு அத்தியாயத்தை பகிரங்கமாகக் கொளுத்தப் போகிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். அரசியல் அமைப்புச் சட்டம் புனிதமானது. அதை மாற்றலாம். மாற்ற வழி இருக்கிறது. மக்கள் சபை இருக்கிறது. பாராளுமன்றம் இருக்கிறது. அவரும் பாராளுமன்ற அங்கத்தினர்தாம். ஆனால் அதைவிட்டு பகிரங்கமாகக் கொளுத்துவது என்றால் அது நாட்டுக்குப் பெரிய அவமானமாகும். இந்த நாடும் அதை ஏற்காது. நாட்டு மக்களும் ஏற்கமாட்டார்கள். இது மிகமிகத் தவறு.

முன்பே இந்த மாதிரி அரசியல் சட்டத்தை எரிக்கும் முயற்சி 1-00 p.m. நடைபெற்றது. அதனைத் தடுப்பதற்கு 'common law' வைக் கொண்டே நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். இருந்தபோதிலும் இம்மாதிரி அரசியல் சட்டத்தையும், நமது நாட்டுக் கொடியையும் கொளுத்துகிறவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் வகையில், தண்டனை அளிக்கும் வகையில் இதற்கென்று பிரத்தியேகமாக ஒரு சட்டம் இருந்தால் நலம் என்று தோன்றியது. வேறு எந்த நாட்டிலாவது இந்த மாதிரிச் சட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. ஏன் அவ்வாறு ஒரு சட்டம் இல்லையென்று பார்த்தால், எந்த நாட்டிலும் அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொளுத்தும் பொதுமக்கள் இல்லையென்பதுதான். இந்த அவல நிலை நம்முடைய தமிழ் நாட்டில் மட்டுந்தான் இருக்கிறது என்பது புலப்பட்டது. ஆகவே, இதற்கென்று ஒரு சட்டம் கொண்டு வந்து அன்று நிறைவேற்றினோம்.

இப்போது, 'அரசியல் சட்டத்தைக் கொளுத்துவோம்' என்று சொல்லுகிறார்கள். அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது குற்றம்; அது சட்டத்தின்படி குற்றமாகும். 'நான் அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன், நீ நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாது' என்று சொல்வது எனக்குப் புரியவில்லை. வழக்கறிஞர்கள் 'அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது ஜீவாதார உரிமை'

என்று சொல்லலாம். அவர்கள் எவ்வளவு தூரம் வழக்கறிஞர்கள் ஆக இருக்க தகுதி பெற்றவர்கள் என்பது பற்றி 'Bar Council' தான் தீர்ப்பு அளிக்கவேண்டும். அரசியல் சட்டத்தைச் சாதாரணமாகவே அவமதிக்கக்கூடாது. 'அந்த அரசியல் சட்டத்தைப் பகிரங்கமாகக் கொளுத்துவேன்' என்று சொன்னால் போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியுமா? ஆகவே, போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். "யார் யார் கொளுத்தப் போகிறேன் என்று சொன்னார்களோ அவர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கலாம்" என்ற ஒரு வாதம் கூறப்பட்டது. ஆனால், தி.மு.க. தலைவர் கனம் அண்ணாத்துரை அவர்களே, திருவல்லிக்கேணி கூட்டத்தில் பேசும்போது, "அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு நாங்கள் கைது செய்யப்பட்டு விட்டால், யார் யார் அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டுமென்றும், வேறு காரியத்தில் இறங்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ, அவர்கள் இதை மீற வேண்டாம்; ஆனால் மற்றவர்கள் மீறலாம்" என்று கூறியிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது; கனம் அங்கத்தினர்களும் அதனை உணருவார்கள். (திரு. கே. ஏ. மதியழகன்-குறுக்கீடு) எங்களிடம் அந்தத் தகவல் வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல; நேற்று முன்தினம் நான் கோவையில் இருந்தேன். கோவையிலுள்ள தி.மு.க. தலைவர்கள், 'நாங்கள் சட்டத்தை மீறப்போகிறோம்; தடை உத்தரவு போட்டால் மீறப் போகிறோம்' என்று தடை உத்தரவு போடப்படுவதற்கு முன்பே கூறிக் கொண்டிருந்த தகவலும் தெரிய வந்தது. அரசியல் சட்டத்தைக் கொளுத்தப் போகிறோம்' என்று சொன்னால் அதைத் தவிர்க்க வேண்டும், அதற்கு எந்த விதத்திலும் இடம் கொடுக்கக் கூடாது என்ற முறையிலே நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. கோவையிலுள்ள தி.மு.க. தலைவர்கள் தடை உத்தரவு போடப்படுவதற்கு முன்பே 'மீறப் போகிறோம்' என்று சொல்லிக் கொண்டிருந்த காரணத்தால்தான் தடை உத்தரவு போடப்பட்டது. தடை உத்தரவு போடப்பட்டதோடு கூட நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்ற வகையில் சிலரை முன்னதாகவே கைது செய்து வைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. சென்ற வருஷம் ஜூலை மாதம் 19-ம் தேதி நடைபெற்ற சம்பவங்கள் நினைவிலே இருக்கின்றன; அந்தப் பாடம் இருக்கிறது. அம்மாதிரி மீண்டும் மக்கள் அவதிகளுக்கு உள்ளாகக் கூடாது என்பதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்வது போலீசாருடைய கடமையும், பொறுப்புமாகும். அந்த நோக்கத்தோடுதான் தடை உத்தரவு போட்டிருக்கிறார்கள்; சிலரைக் கைது செய்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று சொன்னாலும் அது போலீசாருடைய கடமையும் பொறுப்புமாகும். இந்த மாதிரி சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு கல்லடி செய்கிறவர்களும் மற்றவர்களும் மக்களுக்கு அவதியை உண்டாக்குகிறார்கள் என்பதை சென்ற ஆண்டு ஜூலை 19-ம் தேதியே பார்த்தோம். இப்போது சென்னை நகரைப் பொறுத்தவரை, என்னிடம் உள்ள தகவலின்படி, கைது செய்யப்பட்டவர்களில் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் 100-க்கு 40 சதவிகிதந்தான்.

மீதி 60 சதவிகிதம் ரௌடி லிஸ்டிலே இருப்பவர்கள். அவர்கள் எப்போதும் இந்த மாதிரி நிலைமைகளைப் பயன்படுத்திக்கொண்டு மக்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது போலீசாருக்குத் தெரியும். ஆகவே, முன் ஜாக்கிரதையாக இவர்களையெல்லாம் கைது செய்திருக்கிறார்கள்.

திரு. ப. உ. சண்முகம் : 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்' கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது சென்னை நகரில் உள்ளவர்களில் 100-க்கு 60 பேர் ரௌடி லிஸ்டில் இருப்பவர்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு பேசுவது . . . (மணி அடிக்கப்பட்டது).

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் காதைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

திரு. ப. உ. சண்முகம் : நீங்கள் சொன்னது அப்படித்தான் இருந்தது . . . .

MR. SPEAKER : The hon. Member should not address directly the Hon. Minister.

'நீங்கள் சொன்னது அப்படித்தான் இருந்தது' என்று சொன்னால் அது சபாநாயகரைக் குறிக்கும்.

திரு. முனு ஆதி: பொதுப்படையாக அப்படித்தான் பேசுகிறோம்.

MR. SPEAKER : I once again request hon. Members to keep order in the House and feel their responsibility. If everyone wants to speak and somebody is talking as if talking under a tree, then the rules of the House are violated. An hon. Member has raised a point of order. The Hon. Chief Minister was answering and the hon. Member, who had raised the point of order, was giving a reply to the Hon. Chief Minister, immediately in the middle. Hon. Members should not talk like that. All these things are not in conformity with the rules of the House. I request Hon. Members to keep order in the House. I now request the hon. Member Sri M. Karunanidhi to put his question.

திரு. மு. கருணாநிதி : அமைச்சர் அவர்கள் '40 சதவிகிதம், 60 சதவிகிதம்' என்ற கணக்கைச் சொன்னார்கள். இன்று சென்னை மத்திய சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறவர்களின் எண்ணிக்கை 280 பேர். அமைச்சர் அவர்கள் '60 சதவிகிதம் ரவுடிகள்' என்று சொல்லும் கணக்கு 280-க்கு உட்பட்டதா, அல்லது 280 பேரைத் தவிர மேற்கொண்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னை நகரைப் பொறுத்தமட்டில் எனக்கு வந்த தகவலை வைத்துக் கொண்டு சொன்னேன். சென்னை நகரில் கைது செய்யப்பட்டவர்களில் 100-க்கு 40 பேர் கழகத்தைச் சேர்ந்தவர்கள், 60 பேர் முன்பே போலீசாருடைய ஜாபிதாவிலே இருக்கிறவர்கள். அவர்கள் எப்போதும் ஒரு நிலைமை ஏற்பட்டால் அதனைப் பயன்படுத்திக் கொண்டு கல்

[திரு. எம். பக்தவத்சலம்] [18th November 1963

எதிர்த்து பலாத்காரத்திலே ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். அந்த மாதிரி நிலைமையை சென்ற ஆண்டு ஜூலை 19-ம் தேதி பார்த்தோம்.

'அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிக்கப் போகிறோம்' என்று சொன்னால் அது பெரிய குற்றம், மகத்தான குற்றம், துரோகக் குற்றம் ஆகும். 'அந்தக் குற்றத்தைச் செய்வேன்' என்று எவ்வளவு பெரியவர்கள் வந்தாலும் அதை அனுமதிக்க முடியாது. 'அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிக்கும் காரியத்தைச் செய்யாதீர்கள்' என்று முன்பே, பன்முறை தி.மு.க. தலைவரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். 'நீங்கள் சட்டமன்ற அங்கத்தினர்களாக இருக்கிறீர்கள், பாராளுமன்ற அங்கத்தினர்களாக இருக்கிறீர்கள்; சட்டபூர்வமாக எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்கு அவர்கள் இணங்கவில்லை. ஆகவே, இந்த நிலைமையில் போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது அவர்களுடைய பொறுப்பாகும். கடந்த ஆண்டு ஜூலை மாதம் 19-ம் தேதி முன்னதாகவே சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததன் காரணமாக நிரபராதிகள் அவதிகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அந்தப் பாடம் போலீசாருக்கு இருக்கிறது. போலீசார் அனாவசியமாக ஒருவரையும் கைது செய்யவில்லை. இப்போது கொடுக்கப்பட்டுள்ள அவசரப் பிரேரணையைப் பொறுத்தவரை சட்டசபை விதிகளில் உள்ள 50-வது விதியை எடுத்துக் கூற விரும்புகிறேன். 50-வது விதியிலே, 8-வது பிரிவில் . . .

(viii) The matter to be discussed must involve more than the ordinary administration of the law.

....more than the ordinary administration of the law '

(3) Every rule made under this Act shall, as soon as possible after it is made, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session, in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or both Housese agree that the

18th November 1963]

rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the vailabity of anything previously done under that rule.".

9. *Amendment of section* 14, *Madras Act III of* 1955.—In section 14 of the principal Act, for the words " alteration of any work ", the words " alteration of any irrigation or drainage work " shall be substituted.

10. *Addition of new sections* 15, 16 *and Schedule in Madras Act III of* 1955.—After section 14 of the principal Act, the following shall be added, namely :—

" 15. *Act deemed not to affect recovery in certain cases.*—Subject to the provisions of section 8, nothing contained in this Act shall be deemed to limit or otherwise affect the power of the Government to recover any money which any landholder of any land in the ayacut of any notified work may have agreed before the date of the commencement of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Act, 1963, or may agree after that date, to pay to the Government as a condition precedent to the execution of any such work.

16. *Works notified under certain rules.*—Notwithstanding anything contained in this Act or in the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Act, 1963, any work specified in the list of works published by the Collector of the district in the District Gazette before the date of the commencement of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Act, 1963, under rule 7 of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Rules, 1956, shall be deemed to be a notified work under this Act as amended by he Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Act, 1963, and the provisions of this Act, as amended by the said Act, shall have effect accordingly.

THE SCHEDULE.

(*See* section 4-A.)

Schedule of rates per acre.

NEW AYACUT.

	Wet zone. (1)		Intermediary zone. (2)		Irrigated dry zone. (3)	
	RS.	NP.	RS.	NP.	RS.	NP.
Block A	200	00	170	00	140	00
Block B	180	00	150	00	120	00
Block C	160	00	130	00	100	00
Block D	140	00	110	00	80	00

[18th November 1963

Provided that landholders of lands which were unirrigated immediately before the execution of the notified work and which are newly assured with the supply of water for two wet crops as a result of the execution of the said notified work shall pay betterment contribution at the rate of fifty rupees per acre in addition to the rates specified in this Schedule.

T. HANUMANTHAPPA,
Secretary.

Fort St. George,
Madras, 14th November 1963.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 19th November 1963.

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at nine of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

கிராமத் தொண்டர் படை.

* 226 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் முதல் நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிராமத் தொண்டர் படையினர், பத்தாயிரத்துக்கு அதிகமான மக்களைத் திரட்டி, ஒரு நாள் சிரமதானம் செய்ய வைத்தது உண்மையா?

(இ) அப்படியானால் எந்த ஊரில்?

(உ) அவர்கள் சிரமதானம் மூலம் எத்தனை ரூபாய் உழைப்பைக் கொடுத்தார்கள்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) தஞ்சாவூர் மாவட்டம், கோட்டூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியிலிருக்கும் 47 பஞ்சாயத்துக்களிலுமுள்ள 15,000 கிராமத் தொண்டர் படையினர் குலுவத்தூர் 7/6 மைலிலிருந்து இடைச்சி மூலை 11/6 மைல் வரை சாலையை அகலப்படுத்தும் பணியில் பங்கெடுத்துக் கொண்டனர் என்பது உண்மைதான்.

(உ) அவர்கள் அன்று செய்து முடித்த பணியின் மதிப்பு சுமார் ரூ. 21,630 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. (உழைப்பு வகையில் ரூ. 15,000, பண்டவகையில் ரூ. 2,880, தொண்டர் படையினருக்கு உணவு வகையில் ரூ. 3,750.)

(*a*) & (*b*) It is a fact that more than 15,000 able bodied men drawn from village volunteer force in all the 47 Panchayats of the Kottur Panchayat Union area in Thanjavur district participated in the task of widening the four mile road commencing from Kuluvathur (7/6) to Edachimoolai (11/6).

(*c*) The total value of the work turned out on the day is reported to be about Rs. 21,630 (Rs. 15,000 by way of labour, Rs. 2,880 by way of kind and Rs. 3,750 by way of meals for the volunteers).

[19th November 1963

திரு. ஆ. கு. சுப்பையா: மற்ற இடங்களிலும் இம்மாதிரியான முறையில் தொண்டர் படை மூலம் உழைப்பு தானம் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கனவே பொது மக்கள் பிரதிநிதிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோர்களுடைய ஒத்துழைப்பு மூலம் அங்குள்ள மக்களை சிரமதானம் செய்வதற்கு ஊக்குவித்தால், திட்டம் வெற்றிகரமாக நடக்குமா என்பதை சர்க்கார் நல்ல முறையில் கவனித்து, அம்மாதிரியான திட்டத்தை ஊக்குவிப்பதற்கு முயற்சி எடுக்கும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் தலைவர் அவர்களே, வேலை மதிப்பிற்கான ரூபாயை கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு செலவான தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: உழைப்பின் மதிப்பு ரூ. 15,000 போக, பண்ட வகையில் ரூ. 2,880-ம், தொண்டர்களுக்கு உணவு வகையில் ரூ. 3,750-ம்.

திரு. கரு. சீமைச்சாமி: மற்ற மாநிலங்களில் இந்தத் தொண்டர் படைக்கு துப்பாக்கிப் பயிற்சி, குதிரை ஏறும் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதே மாதிரி பயிற்சி நம் மாநிலத்திலும் அளிக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நமது மாநிலத்தில் ஹோம் கார்ட்ஸுக்குத்தான் அம்மாதிரி பயிற்சி அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மற்றபடி கிராமத் தொண்டர் படையினருக்கு அம்மாதிரி பயிற்சி அளிக்கப்படவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: உணவுக்காகவும், மற்ற செலவுகளுக்காகவும் ஆன தொகையை அந்த மக்களே ஏற்றுக் கொண்டார்களா? அல்லது அரசாங்கமோ, பஞ்சாயத்தோ அதற்காக ஏதாவது செலவு செய்ததா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சட்டமன்ற பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர்கள் சேர்ந்து வசதியுள்ள மக்களை அணுகி, அவர்களிடம் பணம் பெற்று செலவு செய்திருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மற்ற பஞ்சாயத்து யூனியன்களை உற்சாகப்படுத்தும் வகையில், ஊக்குவிக்கும் வகையில், இவ்வளவு பாராட்டுக்குரிய பணி செய்த பஞ்சாயத்து யூனியனை பாராட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பொதுவாக இம்மாதிரி நல்ல காரியங்களில் கிராமத் தொண்டர் படையினரை ஈடுபடுத்திய பஞ்சாயத்து யூனியன், அதுவும் முதல் முதலாக இந்த நல்ல காரியத்தைச் செய்த பஞ்சாயத்து யூனியன் பாராட்டுக்குரியதுதான். இதில் ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

19th November 1963]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: தஞ்சை ஜில்லாவில் மற்ற வட்டார வளர்ச்சிப் பகுதியிலும் இதே போன்ற பணிகள் செய்தார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி தகவல் எனக்கு இல்லை.

கிராம உத்தியோகஸ்தர்கள் (பயணப்படி).

* 233 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து வரி வசூல் சம்பந்தமாக அடிக்கடி கூட்டப்படும் கூட்டங்களுக்குப் போய்வர கிராம அதிகாரிகளுக்கு பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதா?

(இ) அப்படியானால், எவ்வளவு?

(உ) பஞ்சாயத்து வரியை வசூலிக்க கிராமத் தலைவர்களிடம் ஒப்படைத்த பிறகுதான் படி கொடுக்கப்படுகிறதா?

(எ) முன்பிருந்தே கொடுக்கப்படுகிறதென்றால் இப்போது அவர்களுக்கு அதிகமான வேலையும் அடிக்கடி ரெவின்யூ அதிகாரிகள் கூட்டுகின்ற கூட்டங்களுக்குப் போய்விடுவதால் அதற்கு அதிகப்படியாக பிரயாணப்படியும் இனிமேலாவது கொடுக்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) ஐந்து மைலுக்கு அப்பாலுள்ள கிராமங்களிலிருந்து வரும் கிராம அதிகாரிகளுக்கு பஸ் அல்லது ரயில் கட்டணமும், எட்டு மணி நேரத்திற்கு மேல் வெளியே இருந்தால், தினசரிப் படி ரூ. 1-25 ந.பை. விதம் கொடுக்கப்படுகிறது.

(உ) ஆம்.

(எ) எழவில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிராம முன்சீப்கள் தாங்களே நேரில் போகாமல் சிப்பந்திகளின் மூலம் வரிவசூலான தொகையை அனுப்பினால், அந்தத் தொகையை வாங்கிக்கொள்ள மறுப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி தகவல் இல்லை.

Allotment of funds to panchayats.

* 234 Q.—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) on what basis funds are allotted to panchayats through panchayat unions; and

(b) whether population is one of the factors taken into account?

THE HON. SRI S. M. A. MAJID: (a) & (b) A statement* is placed on the Table of the House.

* Printed as Appendix I on page 306–308.

திரு. வி. எஸ். எஸ். மணி: பஞ்சாயத்து யூனியன் நிதிகளை கிராம பஞ்சாயத்துக்கள் அனுபவிக்கக்கூடிய அளவில் டவுன் பஞ்சாயத்துக்கள் அனுகூலம் அடைவதில்லை. எனவே டவுன் பஞ்சாயத்துக்கள் தனியாக இயங்கும்படி நிதிகளை அலாட்மெண்டு செய்வதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: லோகல் செஸ்ஸிலேகூட 9-ல் 2 பங்கு டவுன் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்தது போக, பஞ்சாயத்து யூனியன் எலிமெண்டரி எஜுகேஷன் பண்டுக்கு 9-ல் 4 பங்கு கொடுத்துவிட்டு, மீதித் தொகையை வில்லேஜ் வாரியாகக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

Road (Pudur-Nallur).

* 255 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to form a road from Pudur to Nallur, via A. Mallapuram and Sukkampatty in Dharmapuri taluk, Salem district?

THE HON. SRI S. M. A. MAJID: Yes.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்த வேலை எப்பொழுது துவக்கப்படும் என்பதை அறியலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்த வேலை மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. மாரண்டஹள்ளி டவுன் பஞ்சாயத்தின் கீழ் ஒரு மைல் 5 பர்லாங்கு. கிட்டத்தட்ட 1964-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதியில் முடிவு பெறலாம். அம்மணிமல்லபுரம் பஞ்சாயத்துக்குக் கீழே 2 மைல் 1 பர்லாங் ரோடுக்கு ரூ. 9,300-க்கு எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. அது சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ரூ. 1,688 ஏற்கனவே செலவாகி விட்டது. சீக்கிரம் அந்த வேலை முடியும். பேலமாரண்டஹள்ளி பஞ்சாயத்தின் கீழ் 2 மைல் 5 பர்லாங் ரோடுக்கு இதுவரைக்கும் எஸ்டிமேட் சாங்ஷன் செய்யப்படவில்லை. கிராமத் தொண்டர் படையினரை உபயோகித்து அந்த வேலையை முடித்துக் கொள்ளலாம் என்று அந்தப் பஞ்சாயத்து கருதுவதாகத் தெரிகிறது.

தஞ்சை மாவட்டக் காடுகள்.

* 264 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவிலுள்ள காட்டிலாக்காவின் காடுகளிலிருந்து அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

(இ) சென்ற ஆண்டு எத்தனை புதிய மரங்கள் வைத்துப் பயிராக்கப்பட்டன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) தஞ்சாவூர் மாவட்டக் காடுகளில் விறகு மரத்தோப்புகள், காடுபடு சிறு பொருள்கள் ஆகியவற்றின் விற்பனை மூலம் 1962-63-ல் ரூ. 42,571 கிடைத்தது.

(இ) "ஆறு, கால்வாய், ஏரிக்கரை நெடுக மரம் வளர்த்தல்" திட்டத்தின்கீழ் இந்த மாவட்டத்தில் 1962-63-ல் 693 ஏக்கர்களில் தேக்கும், 21 ஏக்கர்களில் மூங்கிலும், 30 ஏக்கர்களில் கலப்பு யூகலிப்டஸ் மரங்களும் நடப்பட்டன. இவை தவிர, 72 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பில் சவுக்கும் 100 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பில் முந்திரியும் பயிரிடப்பட்டன.

திரு. ர. ஜீவரத்னம்: வட ஆற்காடு ஜில்லாவிலிருந்து காட்டிலாகாவிற்கு வருஷ வருமானம் எவ்வளவு கிடைக்கிறது என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பற்றியது. ஆகவே தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. எம். தண்டாயுதபாணி: தஞ்சை ஜில்லாவில் காட்டிலாகாவைச் சேர்ந்த பகுதிகளில், காடுகள் வளர்க்கப்படாத சாகுபடிக்குத் தகுதியுள்ள இடங்களில் கூட்டுறவு சங்க அடிப்படையில் சாகுபடி செய்வதற்கு மனுக்கோரினால், அது கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: காட்டு இலாகாவிற்குச் சொந்தமான இடங்களில் எல்லாம் மரங்கள் வைத்துப் பயிரிடும் திட்டம் தான் அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

திரு. அ. கு. சுப்பையா: காடுகள் எல்லாம் தனி நபர்களுக்கு ஏலம் விட்டு விற்பனை செய்யப்படுகின்றன. பஞ்சாயத்து யூனியன்களுக்கே காடுகளை ஏலம் விட்டால், அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்துக் கொண்டு, அதிலிருந்து வேலைகளில் ஈடுபட முடியும். தனி நபர்களுக்கு விற்பனை செய்வதை விட்டுவிட்டு, பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கமுடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: விறகு உண்டாக்கினதற்குப் பிறகு, தனி நபரிடத்தில் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறீர்களா? பஞ்சாயத்து யூனியன்களுக்கோ அல்லது பஞ்சாயத்து போர்டுகளுக்கோ சொந்தமான புறம்போக்கு நிலங்களை அவர்கள் சம்மதத்தின் பேரில் காட்டிலாகாவிற்குக் கொடுத்தால், மரம் நட்டுக் கொடுக்க முடியும்.

புலவர் கா. கோவிந்தன்: அமைச்சர் அவர்கள் பதிலில் பெரிய பரப்பளவில் மரங்கள் நடப்பட்டதாகச் சொன்னார்கள். இப்படி மரங்களை வைத்து விட்டு, தண்ணீர் வசதி இல்லாத காரணத்

தால், வைத்த மரங்கள் பட்டுப் போகின்றன. அவற்றிற்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு என்ன திட்டம் இருக்கிறது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: காடுகளில் எல்லாம் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதென்றால், அதிகமாகச் செலவாகும். இன்றைய தினம் செலவு அவ்வளவு இல்லை. மழை காலத்தில் கன்றுகளை நட்டு வைக்கிறோம். மழை இல்லாமல் போய்விட்டால், 100-க்கு 40 அல்லது 50 பட்டுப்போய் விடுகிறது.

திரு. கோ. சி. மணி: புதிதாக பயிராக்கப்பட்ட மரங்கள் என்ற இனத்தில், ஆலங்கிளைகள் வைத்துப் பயிராக்கப்படுகிறதா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: ஹை வேஸிலுள்ள ரஸ்தாக்களில் தான் அவைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். காட்டிலாக்காவினர் வைக்கவில்லை.

திரு. ர. ஜீவரத்னம்: வட ஆற்காட்டில் ஜவ்வாது மலைப்பகுதி போன்ற இடங்களில் தேக்கு, வேங்கை முதலிய மரங்கள் வைத்துப் பயிரிட முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: வட ஆற்காடு ஜில்லா என்பது மட்டுமல்ல. எல்லா ஜில்லாக்களிலுமே மரங்களை வைத்துப் பயிரிடுவதுதான் திட்டம்.

இயங்கும் பதிவு அலுவலகங்கள்

* 265 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பத்திரப் பதிவு அலுவலகங்களை அதிகரிப்பதற்குப் பதிலாக கிராமங்கள்தோறும் சென்று பத்திரம் பதிவு செய்ய Mobile Sub-Registrar-களை நியமிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. கோ. பூவராகன்: இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: பொது ஜனங்களின் சௌகரியத்தை முன்னிட்டு, பத்திரங்கள் பதிவு செய்ய, மொபைல் சப் ரிஜிஸ்தார்களை நியமிப்பது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. பாதுகாப்பு இல்லை. பண விரயம் அதிகமாகும். இன்னும் சில சங்கடங்கள் இருப்பதனால், மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு இல்லை என்று சொன்னார்கள். இப்பொழுது ஒவ்வொரு ஊரிலும் தொண்டர் படை இருக்கிறது. தொண்டர் படையைப் பாதுகாப்புக்கு வைத்துச் செய்ய முடியாதா?

கனம் திரு. கோ. பூவராகன்: அந்தப் பாதுகாப்பைச் சொல்லவில்லை. தொண்டர் படை இதைப் பாதுகாக்க முடியாது.

திரு. ஜே. மாதா கவுடர்: பத்திரப் பதிவு இலாகா என்று ஒன்று தனியாக இருப்பதை ஒழித்துவிட்டு, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் இருக்கின்ற காரணத்தினால, பஞ்சாயத்து யூனியனிலே இரண்டு குமாஸ்தாக்களைப் போட்டுவிட்டால் அந்த வேலையைச் செய்ய முடியுமே. இதை அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: இப்பொழுது நல்ல முறையில் நடக்கின்றது. பஞ்சாயத்து யூனியனிடம் கொடுப்பதாக உத்தேசம் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: பத்திரப் பதிவு நிலையங்களிலே ஸிம்பிள் மார்க்கேஜ் வாங்கக்கூடியவர்கள்கூட, டிக்ளரேஷன் கொடுக்கவேண்டுமென்று கோரப்படுகிறது. அதனால் சப் ரெஜிஸ்டிரார்களுக்கு அதிகமான வேலை இருப்பதால், அதை மாற்றுவதற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா?

கனம் திரு. கோ. பூவராகன்: மூலக் கேள்வி இயங்கும் பத்திரப் பதிவு நிலையத்தைப் பொருத்தது. ஏற்கனவே இந்தக் கேள்விக்கு பதில் அளித்திருக்கிறேன். தனியாகக் கேள்வி போட்டால், விடை அளிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: பல இடங்களிலிருந்து சப் ரெஜிஸ்டிரார் ஆபீசுகள் திறவ வேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே ஒரு ஸ்பெஸ்டு புரோகிராமாக வைத்து ஒரு வருடத்திற்கு இவ்வளவு ஆபீசுகள் திறக்கப்படுமென்று திட்டம் வகுக்கப்படுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: அவ்வப்போது எங்கெங்கிருந்து கோரிக்கைகள் வருகின்றனவோ, அவற்றைப் பரிசீலனை செய்து, ஆண்டுதோறும் சப்ரெஜிஸ்டிரார் ஆபீசுகள் திறந்து கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. சு. விரப்ப செட்டியார்: நகர பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளுக்குப் பத்திரப் பதிவு அதிகாரங்கள் கொடுக்கப்படலாமென்று 1959-ம் ஆண்டு சட்டத்தில் இருக்கிறது. இது வரையில் கொடுக்கப்படாததன் காரணம் என்ன?

கனம் திரு. கோ. பூவராகன்: இது இயங்கும் பத்திரப் பதிவு நிலையத்தைப் பொருத்தது. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

இரும்புத் தாது (வட ஆற்காடு மாவட்டம்)

* 266 கேள்வி.—திரு. ர. ஜீவரத்னம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, போளூர் தாலுகா, சேத்துப்பட்டு பிளாக்கில் இரும்புத் தாது கனிப்பொருள் படர்ந்து இருப்பதாக சர்க்காருக்குத் தகவல் கிடைத்ததா?

(இ) அப்படியானால், அந்தத் தகவல்மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தனர்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) & (இ) 1961-ம் ஆண்டில் இந்த இடம் ராஜ்ய பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்களால் பரிசோதிக்கப்பட்டதில் சேத்துப்பட்டு பிளாக்கில் அரும்பருக்கு அருகிலும், பரச்சேரி, நாச்சமலை கரப்பூண்டி குன்றுகளிலும் சுமார் 4 மிலியன் டன் மட்ட ரக இரும்புத் தாது கிடைப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அது உருக்கு ஆலை ஏற்படுத்துவதற்குப் போதிய அளவினதாக இல்லை.

திரு. ஈ. ஜீவரத்னம்: பெரிய அளவில் இல்லாமல் போனாலும் வட ஆற்காடு ஜில்லாவிலே எந்தவிதமான தொழிலும் இல்லாததால், சிறிய அளவில் கட்டுப்படியாகக் கூடிய வகையில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஏதாவது ஒரு தொழிற்சாலை வைக்க வேண்டுமென்று சொன்னால், சர்க்கார் எப்பொழுதுமே தயாராக இருக்கிறது. இரும்புத் தொழிற்சாலை வைப்பதற்குத்தான் வசதி இல்லை.

SRI M. S. SELVARAJAN: Was any investigation carried on in Kadayam area in Tiruneiveli district about the availability of iron ore and what was the result?

MR. SPEAKER: The main question relates to North Arcot district.

புலவர் கா. கோவிந்தன்: போளூர் மலைப் பகுதியிலே பொன் கிடைப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைப் பற்றி சர்க்கார் ஆராய்ச்சி செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனிக் கேள்வி போட வேண்டும்.

Package Scheme.

*267 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have received a copy of the resolution passed by the Tiruchirappalli North District Development Council on 22nd April 1963 requesting the Government to extend the Package Scheme to the Cauvery belt in Tiruchirappalli district:

(b) if so, the action taken thereon; and

(c) if the decision of the Government is in the negative, the reasons for the same?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes.

(b) & (c) The Collector of Tiruchirappalli was requested to inform the District Development Council as follows:—

"The Intensive Agricultural District Programme known as Package Programme is a scheme of Government of India that is being implemented by the State Government with the financial aid from the Ford Foundation and the Government of India. It is being worked in seven districts in India (of which Thanjavur is one) selected by the Government of India in various States. The extension of the scheme to other districts is a matter for the Government of India to consider."

The question of the State Government taking a decision in the matter does not arise.

(அ) ஆம்.

(இ) & (உ) திருச்சி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலுக்கு அடியிற்கண்டவாறு அறிவிக்கும்படி திருச்சிராப்பள்ளி மாவட்டக் கலெக்டரைக் கேட்டுள்ளோம்.

"பாக்கேஜ் திட்டம் எனப்படும் தீவிர விவசாய மாவட்டத் திட்டம் இந்திய அரசாங்கத் திட்டமாகும். போர்டு பவுண்டேஷனிலிருந்தும் (Ford Foundation) இந்திய அரசாங்கத்திடமிருந்தும் கிடைக்கும் நிதி உதவியுடன் மாநில அரசாங்கம் இத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றது. இந்தியாவில் 7 மாவட்டங்களில் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அவற்றை இந்திய அரசாங்கம் பல மாநிலங்களிலிருந்தும் தேர்தெடுத்தது. அந்த 7 மாவட்டங்களில் தஞ்சாவூர் மாவட்டமும் ஒன்றாகும். இதர மாவட்டங்களுக்கு இத் திட்டத்தை விஸ்தரிக்கும் பிரச்னை இந்திய அரசாங்கம் கவனிக்கவேண்டிய பிரச்னையாகும்."

இதில் மாநில அரசாங்கமும் முடிவு செய்வதற்கு இடமில்லை.

*268 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை பிளாக்குகளில் தீவிரச் சாகுபடி திட்டம் அமுலில் உள்ளது?

(இ) எத்தனை பஞ்சாயத்துக்களில் எவ்வளவு ஏக்கர் நிலம் சாகுபடியில் உள்ளது?

(உ) அதற்காக ஒதுக்கிய தொகை எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) 28 பிளாக்குகள்.

(இ) 431 பஞ்சாயத்துக்களில் (947 கிராமங்களில் 6,88,000 ஏக்கர் நிலம் சாகுபடியில் உள்ளது (தற்காலிக எண்கள்).

(உ) ரூபாய் 150 லட்சம்.

(a) Twenty-eight blocks.

(b) In 431 panchayats covering a total area of 6,88,000 acres in 917 villages (provisional figures).

(c) Rs. 150 lakhs

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், தஞ்சை ஜில்லாவிலேயே ஜில்லா பூராவிலும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க முடியாத காரணத்தால் காவிரி பாசனம் உள்ள இதர பகுதிகளில் விஸ்தரிக்க மத்திய சர்க்காருக்கு நம் மாநில சர்க்கார் சிபாரிசு செய்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: இது ஏற்கனவே அரசாங்கம் யோசித்ததுதான், ஆனால் எமர்ஜன்ஸி காரணமாக நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், இந்தத் திட்டத்தின் மூலமாக உற்பத்தி அதிகமாகி இருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே நன்று சாகுபடி செய்தவர்களுக்கு இன்னும் அதிகமான உற்பத்தி வரவில்லையே என்று நினைக்கலாம். ஆனால் சற்றுக் குறைவாக ஏற்கனவே சாகுபடி செய்தவர்களுக்கு கொஞ்சம் அதிகமான சாகுபடியும் கிடைத்திருக்கிறது. மொத்தத்தில் லாபம்தான் கிடைத்திருக்கிறது.

திரு. க. ர. நல்லசிவம்: இந்தத் தீவிர சாகுபடி திட்டத்தை ராஜ்யத்திலுள்ள, நீர்ப்பாசன வசதி உள்ள பிரதேசங்களில் விஸ்தரிக்க மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: ஒருசில டெல்டா பகுதிகளுக்கு விஸ்தரிக்க வேண்டும் என்பதுதான் எண்ணம். இருந்தாலும், நாட்டுக்கு சோதனை வந்ததால், எமர்ஜன்ஸி காரணமாக அதைப் பற்றி ஒரு முடிவு எடுக்க முடியவில்லை.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்ட தொகையையும், அதிக உற்பத்தியையும், கணக்குப் பார்த்தால் செலவு அதிகமாக இருக்கிறதா, அல்லது உற்பத்தி அதிகமாக இருக்கிறதா என்பதைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: சார், முன்பு நான் கொடுத்த பதிலிலே சொன்னது போல் இந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவு போர்ட் பவுண்டேஷன், மத்திய சர்க்கார் இவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மாநில சர்க்காருக்குச் செலவு அதிகம் இல்லை. ஒப்பிட்டுப் பார்த்தால் நமக்கு லாபம்தான் அதிகம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், இந்தத் தீவிர சாகுபடி திட்டத்தினுடைய முழுப் பலனையும் தஞ்சை ஜில்லா பெற முடியாததற்குக் காரணம் அங்கு வடிகால் வசதி இல்லாமல் இருப்பதுதான். ஆகவே இர்ரிகேஷன் இலாகாவிடம் சொல்லி அங்கு வேண்டிய வடிகால் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: சீக்கிரத்தில் கனம் முதலமைச்சர், பொதுப் பணித்துறை அமைச்சர், தொழில் அமைச்சர் முதலியவர்கள் தஞ்சையில் கூடி இந்தத் திட்டத்தைப் பற்றி விவசாய மக்களிடையே விசாரிக்கப் போகிறார்கள். அதன் பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் எமர்ஜன்ஸி காரணமாக மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க முடியவில்லை என்றார்கள். எமர்ஜன்ஸி காரணமாகத்தானே உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். ஆகவே எமர்ஜன்ஸியைக் குறித்து மற்ற மாவட்டங்களுக்கும் இதை விஸ்தரிக்க யோசனை செய்ய முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: உண்மையிலேயே விவசாயத் துறையில் எந்தச் செலவும் குறைக்கப்படவில்லை. அதிகமாகவே செலவு செய்யப்படுகிறது. தொழில் துறையிலும் செலவிடுவதில் குறைவு இல்லை. இருந்தாலும், இதர ஜில்லாக்களுக்கு விஸ்தரிப்பது குறித்து யோசனை செய்யப்படவில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: சபாநாயகர் அவர்களே, நெல் சாகுபடி அல்லாமல் பருத்தி, வேர்கடலை முதலிய பயிர்களுக்கும் அந்தந்த ஜில்லாக்களில் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்

சிமெண்டு தொழிற்சாலை, சாமல்பட்டி

* **269 கேள்வி.**—திரு. ம. கமலநாதன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி வட்டத்தில் சாமல்பட்டி இரயில்வே நிலையத்திற்கு அருகாமையில் கிடைக்கும் சுண்ணாம்பைக் கொண்டு ஒரு சிமிண்ட் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவ்வித உத்தேசமில்லை.

திரு. ம. கமலநாதன்: சார், அப்படித் தொழிற்சாலை வைக்காவிட்டாலும், அங்கு கிடைக்கும் சுண்ணாம்புக் கற்களை உபயோகிக்க ஏதாவது திட்டம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தப் பகுதியிலே கிடைக்கும் சுண்ணாம்பு, லைம் ஸ்டோன், தரம் குறைவானதாக இருப்பதால் அது சிமெண்டுக்குத் தகுதியில்லை. அகப்படுகின்ற அளவும் 7½ லட்சம் டன்தான். சாதாரணமாக ஒரு சிமெண்டுத் தொழிற்சாலைக்கு 1½ கோடி டன் சுண்ணாம்புக் கற்கள் கிடைத்தால்தான் தொழிற்சாலை அமைக்க முடியும். அதனால்தான் அங்கு வைக்க முடியவில்லை. வேறு ஏதாவது முறையில் உபயோகிக்க இப்பொழுது திட்டம் எதுவும் இல்லை.

[19th November 1963

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், சாமல்பட்டிக்கு அருகாமையில் சிமெண்டுத் தொழிற்சாலை வைக்காவிட்டாலும் நமக்கு இருக்கும் சிமெண்டு பற்றாக்குறையை உத்தேசித்து சிமெண்டு பாக்டரிகளை அதிகரிக்க என்ன உத்தேசம் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுது நம்முடைய ராஜ்யத்தில் 16 லட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்கிறோம். சென்ற மாதம் புதிதாக உற்பத்திக்கு வந்த சங்கரிதுர்கம் தொழிற்சாலையையும் சேர்த்தால் 16½ லட்சம் டன் உற்பத்தி செய்கிறோம். விஸ்தரிப்புத் திட்டங்களிலே கரூரில் 5 டன் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றும், ராமேஸ்வரத்தில் நாள் ஒன்றுக்கு 400 முதல் 600 வரை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையும் விஸ்தரிக்க இருக்கிறோம். இதைத்தவிர ராஜ்ய சர்க்கார் சுண்ணாம்புக்கற்கள் எங்கு எவ்வளவு கிடைக்கிறது என்று பரிசிலனை செய்கிறோம். அந்த பரிசிலனை முடிவு அடைந்த பிறகு புது தொழிற்சாலை வைப்பது பற்றி யோசிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், அரசாங்கத்தின் தேவையை பூர்த்தி செய்ய அரசாங்கமே சிமெண்டுத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக உத்தேசம் என்று முன்பு சொன்னீர்களே. அந்தத் திட்டம் என்ன ஆயிற்று?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த உத்தேசம் இப்பொழுதும் இருக்கிறது. ஆனால், போதுமான அளவு லைம் ஸ்டோன் கிடைத்தால்தான் வைக்க முடியும். இல்லாவிட்டால் முடியாது.

கம்பளி உற்பத்தி (உதகை)

*270 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கெட்டிக் கம்பளி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை உதகமண்டலத்தில் நிறுவும் உத்தேசமுண்டா?

(இ) ஆமென்றால், எப்போது?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No

(b) Does not arise.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தலைவர் அவர்களே, இப்பொழுது நீலகிரியில் உள்ள செம்மறியாட்டு மயிரை பங்களூரில் கொண்டு போய் அதை கம்பளியாக நெய்து மறுபடியும் ஊட்டியிலேயே நல்ல விலைக்கு விற்கிறார்கள். ஆகவே, தொழிற் துறையில் பிற்போக்காக உள்ள எங்கள் மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலையை எப்படியாவது ஏற்படுத்த வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: இது கேள்வியா?

19th November 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்படி ஒரு தொழிற்சாலை வைக்க யாராவது முன்வந்தால் சர்க்கார் வேண்டிய உதவி செய்யும்.

தொழிற்கல்லூரிகள்

*271 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(a) எஞ்சினீரிங் டிப்ளமா வைத்திருப்பவர்கள் இரண்டாண்டிற்கு எஞ்சினீரிங் கல்லூரிகளில் ஓய்வு நேரத்தில் படித்த பிறகு அவர்களை B.E. பரிட்சைக்கு அனுமதிக்கும் யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

(b) ஆம் எனில், அத் திட்டம் எப்போது அமுல் நடத்தப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The Government have constituted a committee to draw up a detailed scheme for conducting separate part-time classes in Engineering Colleges for the benefit of diploma holders of Industry with a view to enable them to appear for the final B.E. degree examination. The Committee's report is awaited. The University's concurrence would also be necessary before the scheme can be implemented.

*272 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எஞ்சினீரிங், மருத்துவப் படிப்பிற்காக, பி.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்களுக்கு படிப்பின் காலத்தைக் குறைத்து பயிற்சியளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதா?

(இ) அத்தகைய பயிற்சி இடங்கள் ஒவ்வொரு துறையிலும் எத்தனை?

(உ) எவ்வளவு காலப் பயிற்சி பெறவேண்டும்?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்:

(அ) எஞ்சினியரிங் படிப்பில் மாத்திரம் பி.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்களுக்குப் பயிற்சி காலம் குறைக்கப்பட்டிருக்கிறது.

(இ)—

	சிவில்.	மெக்கானிகல்.	எலக்ட்ரிகல்.	டெலிகம்யூனிகேஷன்.
(1) கிண்டி பொறியியல் கல்லூரி, சென்னை.	20	20	20	20
(2) அரசினர் பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர்.	20	20	..	..
(3) பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரி.	..	20	20	..
		மொத்தம்	..	160

(உ) மூன்றாண்டுகள்.

[19th November 1963

Mudumalai Sanctuary

9-30 a.m. *273 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the number of foreigners who visited Mudumalai Sanctuary during the years 1958–62;

(b) the income derived by way of admission fees from the visitors in the years 1958–62; and

(c) whether the Government have any proposal to provide more facilities to the visitors?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) to (c) A statement [a] is placed on the table of the House.

Sanctuary at Vedaranyam

*274 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to establish a sanctuary at Vedaranyam; and

(b) if so, the details thereof?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:

(அ) ஆம். தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் இருக்கும் கோடியக் காடு ஒதுக்கக் காட்டில் (வேதாரணியம்) வனவிலங்குச் சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் உள்ளது.

(இ) மேற்படி பகுதியிலுள்ள சில நிலங்களை கான் 'துறைக்கு மாற்றும் விஷயம் பரிசிலனையில் இருப்பதால், வனவிலங்குச் சரணாலயம் பற்றிய முழு விவரங்கள் முடிவு செய்யப்படவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: முதுமலை வனவிலங்கு சரணாலயத்தின் நடுவில் ஆதிவாசிகள் நடுக்காட்டில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அந்தக் காட்டுக்கு வெளியில் கொண்டு வந்து ரீ ஹாபிலிடேட் பண்ணவேண்டுமென்ற யோசனை இருக்கிறதே அதைப்பற்றி முடிவு ஏதாவது செய்யப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: தனியாகக் கேள்வி போடவேண்டும்.

Coconut cultivation

*275 Q.—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the nature of assistance given to persons growing coconut tree with a view to improve the coconut industry, (i) in the State, and (ii) in Madurai district; and

(b) the extent of lands under coconut cultivation in Madurai district?

[a] Printed as Appendix II on pages 303-310 infra.

19th November 1963]

THE HON. SRI P. KAKKAN: (a) & (b) A statement [a] is placed on the table of the House.

(அ) & (இ) சபையில் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. எஸ். எஸ். மணி: தென்னை மரத்திலுள்ள ஒவ்வொரு பாகமும் பயனுள்ளதாகும். அவற்றின் ஒவ்வொரு பாகத்தையும் கொண்டு சிறுசிறு தொழில் செய்ய வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய தொழில்களை அமைக்க திட்டங்கள் வகுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: தென்னை மரமும், பனை மரமும் எல்லா வகையிலும் பயன்படுகிறது என்பதை அரசாங்கம் நன்கு உணருகிறது. அதனால்தான் தென்னங் கன்றுகளை ஆங்காங்கே பயிரிட எல்லா ஏற்பாடுகளும் இப்போது செய்யப்பட்டு வருகிறது. இன்னும் தென்னை, பனை ஆகிய மரங்களின் பாகங்களைக் கொண்டு பல உப தொழில்களை குடிசைத் தொழில் மூலமாக ஏற்படுத்தியும் வருகிறது. இதனால் பல நன்மைகளை ஜனங்கள் அடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஒரு தென்னை நாற்று நடுவதற்கு ஏறக்குறைய 25 ரூபாய் வரை செலவு ஆகிறது என்கிற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினருக்குக் கிடைத்திருக்கிற தகவல் முற்றிலும் உண்மைக்கு விரோதமானது.

Rural dispensaries

*276 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have any scheme to solve the problem of dearth of qualified medical personnel to man rural dispensaries?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கிராம டிஸ்பென்சரிகளில் பணி புரியும் மருத்துவர்களுக்கு அனுமதிக்கப்படும் உதவித் தொகை விகிதங்களைத் திருத்தி அமைப்பது குறித்து அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: கிராமப்புறங்களில் டாக்டர்கள் போதாமல் இருப்பதற்குக் காரணம் அங்கு அவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதிகள், இன்னும் இதர வசதிகள் இல்லாமல் இருப்பதுதான். ஆகவே உடனடியாக கிராமப்புறங்களில் உள்ள டாக்டர்களுக்குப் போதுமான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தக் கேள்வி ரூரல் டிஸ்பென்சரியைப் பொறுத்தது. ரூரல் டிஸ்பென்சரி டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் வீடுகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

[a] Printed as Appendix III on pages 310–313 infra.

[19th November 1963

ஆனால் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களைப் பொறுத்த வரையில்தான் அவற்றில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு அரசாங்கம் வீடு வசதி, இனிலும் இதர வசதி செய்து தந்து கொண்டிருக்கிறார்கள்.

Industrial Estates

*277 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) how many Industrial Estates have been opened in this State and the total investment on them; and

(b) the steps taken to promote the sales of the products manufactured in these estates?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) So far nine Industrial Estates have been established in this State at a total cost of Rs. 192.97 lakhs.

(b) No special steps are taken by the Government for the promotion of the sales of the products manufactured by the industries in the Industrial Estates alone. The facilities for marketing available to small-scale industries will be afforded to the industries in the Industrial Estates also. The various facilities available for securing market for the products of small-scale industries are—

(i) establishment of sales emporia by the Government;

(ii) marketing service by the National Small Industries Corporation through their mobile sales vans;

(iii) registration of small-scale industries with the Director-General of Supplies and Disposals, Government of India, without the payment of the fee for application form; and

(iv) price preference over the prices quoted by large scale industries is shown in respect of purchases made by Government Departments. Local bodies have also been requested to extend similar price preference.

திரு. கே. மூக்கையா தேவர்: இம்மாதிரி தொழில்பேட்டைகளை தனியார் துறையில் ஆரம்பிக்க யாரேனும் அனுமதி கேட்டிருக்கிறார்களா? அப்படி இருந்தால் அவர்களுக்கு அனுமதி வழங்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியார் துறையில் தொழிற்பேட்டை ஆரம்பிக்க முடியாது. கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க விண்ணப்பம் வந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கவும் அனுமதி கொடுத்து வருகிறோம்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இலங்கையில் இருந்து நாடு திரும்பியவர்களுக்கு என்று திருநெல்வேலி ஜில்லாவில், திருச்செந்தூர், நாங்குநேரி ஆகிய இடங்களில் கூட்டுறவு முறையில்

19th November 1963]

தொழில் பேட்டை ஆரம்பிக்க அனுமதி வேண்டுமென்று கோரி விண்ணப்பம் வந்திருக்கிறதா? அவ்வாறு கோரிக்கை வந்திருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கூட்டுறவு துறையில் வைப்பதற்கு யார் முன் வந்தாலும் எந்தவித ஆட்சேபணையும் இல்லாமல் அனுமதி கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராய் இருக்கிறது. சர்க்காரின் செலவில் வைக்கவேண்டுமென்று சொன்னால்தான் அதைப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். அதுவும் நிதி நிலைமையைப் பொறுத்தது. நாங்குநேரியில் இருந்து இதுவரையில் அந்தமாதிரி கோரிக்கை வந்ததாகத் தெரியவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: தொழில்பேட்டை மாதிரி சிறுசிறு சர்வீஸ் சென்டர்களை ஆங்காங்கே ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது ஒவ்வொரு ப்ளாக்கிலும் கார்ப்பென்டரி, ஸ்மித்தி பயிற்சி கொடுக்கிறோம். சில இடங்களில் ஜெனரல் என்ஜினீரிங் வொர்க்ஷாப் வைத்து பயிற்சியும் அளிக்கிறோம். இதைத்தவிர வேறு கிடையாது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நல்ல விளம்பரம் தேடும் முறையில் சென்னையில் ஒரு கண்காட்சி சாலை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது கிண்டியில் இருக்கிற தொழிற்பேட்டையில் சொசைட்டியில் அங்கே உற்பத்தி செய்யப்படுகிற பண்டங்கள் ஒவ்வொன்றும் டிஸ்ப்ளே முறையில் வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அங்கே உற்பத்தியாகிற பண்டங்கள் உற்பத்தி ஆவதற்கு முன்னமேயே விற்றுக்கொண்டிருப்பதனால் கனம் எதிர்கட்சித் தலைவர் சொல்கிற அளவுக்கு முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: தொழிற்பேட்டையில் இருக்கக்கூடிய கட்டிடங்களில் கைத்தறி நெசவாளர்கள் அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கைத்தறித்தொழிலுக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. அவர்களுக்குத் தனியாகத் திட்டம் இருக்கிறது.

*278 கேள்வி.—திரு. கரு. சிமைச்சாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிவகெங்கையில் ஆரம்பிக்க இருக்கும் தொழிற்பேட்டை எப்போது ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சிவகெங்கையில் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் திட்டத்திற்கு 1963, மார்ச் மாதத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கான பூர்வாங்க வேலைகள்

இப்போது நடந்து வருகின்றன. 1964-ம் ஆண்டு இறுதிக்குள் மேற்படி தொழிற்பேட்டை செயல்படத் துவங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சுற்றுலா விடுதிகள்

*279 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எங்கெங்கு Tourist Home- கள் கட்டப் பட்டுள்ளன?

(இ) மேலும் எங்கெங்கு கட்ட உத்தேசம்?

(உ) இவைகள் எந்த அடிப்படையில் கட்டப்படுகின்றன?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) ஏற்கனவே மத்திய அரசாங்கத்துக்கீழ் மகாபலிபுரத்தில் உள்ள சுற்றுலா மாளிகையைத் தவிர, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் மத்திய அரசாங்கத்தாலும், குற்றாலம், நாகர்கோவில், மதுரை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசாங்கத்தாலும் சுற்றுலா மாளிகைகள் கட்டப் பட்டுள்ளன.

(இ) மகாபலிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, குற்றாலம் ஆகிய இடங்களில் கூடுதலாக ஒவ்வொரு சுற்றுலா மாளிகையும், கொடைக்கானல், காஞ்சிபுரம், ராமேஸ்வரம், ஒக்கேனக்கல், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, சுருளி ஆகிய இடங்களில் புதிதாக ஒவ்வொரு சுற்றுலா மாளிகையும் கட்ட உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

(உ) வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகள் மற்றும் யாத்ரீகர்களுடைய எண்ணிக்கை, அவர்களுடைய தேவைகள், ஏற்கனவே உள்ள வசதிகள் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு அவர்களைக் கவரும் இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்டப்படுகின்றன.

திரு. சா. கணேசன்: காரைக்குடி ஒரு முக்கியமான பகுதியாக இருப்பதினாலும் பல்வகை கல்லூரிகள், ஆராய்ச்சிக்கூடம் முதலியன விளங்குவதனாலும் பல ஆண்டுகளாக அங்கே சுற்றுலா மாளிகை அமைக்கப்படவேண்டுமென்ற விண்ணப்பம் வந்து கொண்டிருப்பதனாலும், அங்கே ஒரு சுற்றுலா மாளிகையை அரசாங்கம் கட்டித் தருமா? கட்டித்தரும் என்றால் எப்போது செயல்படத் தொடங்கும்.

கனம் திரு. கோ. பூவராகன்: அதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. முனு ஆதி: பெருவாரியாக நம் நாட்டில் ஏழை மக்களே அதிகமாக இருப்பதனால் இந்தச் சுற்றுலா மாளிகையில் அவர்கள் தங்க முடியாது போகிறது. காரணம் வாடகை அதிகமாக

இருப்பதுதான். ஆகவே வாடகைக் கட்டணத்தைக் குறைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன்: கனம் அங்கத்தினர் இந்தச் சுற்றுலா மாளிகைக்குச் சென்று தங்கியிருக்கமாட்டார் என்று நினைக்கிறேன். காரணம் இங்கெல்லாம் மிகக் குறைந்த கட்டணம் தான் வசூலிக்கப்படுகிறது. கட்டணம் அதிகமாக உள்ளது என்று இதுவரை எந்தத் தரப்பில் இருந்தும் புகார் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களின் தலை நகரத்திலும் சுற்றுலா மாளிகைகள் இருக்கவேண்டியதன் அவசியத்தை சர்க்கார் உணர்ந்து தலைநகரம்தோறும் ஏற்படுத்த திட்டம் வகுப்பார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: எங்கெங்கே கட்டவேண்டுமோ அங்கெல்லாம் கட்டி வருகிறோம். எத்தகைய இடங்களில் கட்டப் பட்டு வருகிறது என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அதில் சம்பந்தப்பட்டதாக இருந்தால் கவனிக்கப்படும்.

செயற்கை வைரத் தொழிலாளர்

*280 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போது வேலையிழந்துள்ள செயற்கை வைரத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புக்கள் கோரி விண்ணப்பித் துள்ளனரா?

(இ) எத்தனை (1) ஸ்தாபனங்கள் (2) தனியார்கள் விண்ணப் பித்துள்ளனர்?

(உ) சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஆம். வேலையிழந்துள்ள செயற்கை வைரத் தொழிலாளர்கள் பலர் வேலை வாய்ப்புகள் கோரி எம்ப்ளாய்மெண்ட் ஆபீசில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

(இ) ஐந்து ஸ்தாபனங்கள் வேலை வாய்ப்பு கோரி எம்ப்ளாய் மெண்ட் ஆபீசுக்கு எழுதியுள்ளன. 1,366 தொழிலாளர் எம்ப்ளாய் மெண்ட் ஆபீசில் தங்கள் பெயரைப் பதிவு செய்திருக்கிறார்கள்.

(உ) எம்ப்ளாய்மெண்ட் ஆபீசு 91 பேரை வேலைக்குச் சிபாரிசு செய்தது. ஆனால், ஒருவருக்கு மட்டும்தான் வேலை கிடைத்தது.

திரு. க. ர. நல்லசிவம்: செயற்கை வைரத் தொழிலாளர்களுக் கென திருச்சி, கோவை ஜில்லாக்களில் செயற்கை வைரத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு இருக்கின்றன. குறைந்தபட்சம் அதை மீண்டும் நடத்த சர்க்கார் ஏதாவது உதவி செய்ய முடியுமா?

[19th November 1963

கனம் திரு. எம் பக்தவத்சலம்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வை. சங்கரன்: சிபார்சு செய்யப்பட்ட 91 பேரில் ஒருவரைத் தவிர மற்றவர்களின் விண்ணப்பங்கள் தள்ளப்பட்டதற்கு காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதில் பெரும்பாலோர் படிப்பு இல்லாதவர்கள். அதுதான் முக்கிய காரணம். 25 வயதிற்குக் கீழ்பட்டவர்களில் 707 பேர்கள் இல்லிட்டரேட்ஸ். 25-ல் இருந்து 45 வயது வரை உள்ளவர்களில் 853 பேர்கள் இல்லிட்டரேட்ஸ். 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் 80 பேர்கள் இல்லிட்டரேட்ஸ். 'பர்ஸ்ட் பார்ம் டு தேர்ட் பார்ம்' பாஸ் செய்தவர்கள் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் 43 பேர்கள். 45 வயது வரை உள்ளவர்கள் 50 பேர்கள். படிப்பு மிகக் குறைவாக இருப்பதால்தான் இவர்களை இந்த வேலைகளுக்கு எடுத்துக் கொள்ள முடியவில்லை.

திரு. வை. சங்கரன் : பொதுவாக வைரத் தொழில், நகைத் தொழில் போன்றவைகளில் ஈடுபட்டவர்கள் அத்தொழில்களை பரம்பரையாக செய்து வருவதால் அதிகப் படிப்பு இல்லாதவர்களாக இருப்பதால் அரசாங்கம் அவர்களுக்கு படிப்பு சம்பந்தமான விதிகளைத் தளர்த்தி அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு வேலைக்குத் தகுதியான படிப்பு வேண்டும். படிப்பு விதிகளைத் தளர்த்துவதைவிட, அவர்களுக்கு தகுதியான வேலை ஏதாவது பார்த்துக் கொடுக்கலாம்.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்

* 281 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருத்தியமைக்கப்பட்ட புதிய கல்வித் திட்டப்படி ஹைஸ்கூல்களில் கீழ் வகுப்புகளில் 1963-64 கல்வியாண்டில், பழைய 1, 2, 3 பாரங்களுக்கு பதிலாக, இரண்டே வகுப்புகள் (VI and VII Standards) இருக்குமாதலால் அதன் காரணமாக ராஜ்யம் முழுவதிலும் பாதிக்கப்படும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு அரசாங்கம் என்ன வகையில் நிவாரணமளிக்க திட்டமிட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Under the Re-organization proposals given effect to from 1963–64, there will be three standards at the upper primary stage, viz., Standards VI, VII and VIII corresponding to the old Forms I, II and III, and not two standards only as assumed by the Member. Hence secondary grade teachers will not be affected by the re-organization.

19th November 1963]

* 282 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தற்போதுள்ள ஹைஸ்கூலில் உள்ள ஏழாம் வகுப்பு VII Standard-லும் மூன்றும் படிவத்திலும் (III Form) எலிமெண்டரி ஸ்கூலில் உள்ள ஏழாம் வகுப்பிலும் (VII Standard), எட்டாம் வகுப்பிலும் (VIII Standard), சீனியர் பேசிக் ஸ்கூலில் உள்ள எட்டாம் கிரேடிலும் (VIII Grade) உள்ள மாணவர்கள் அனைவரும் 1963-64 கல்வியாண்டில் ஹைஸ்கூலில் உள்ள புதிய எட்டாம் வகுப்பிற்கு (New VIII Standard now existing in high schools) வந்து சேருவதால் உண்டாகும் தகுதி பெற்ற ஆசிரியர்கள் பற்றுக்குறையை நிவர்த்திக்க என்ன திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Pupils promoted from Form III and Standard VIII of Higher Elementary and Senior Basic Schools are admitted into Standard IX of High Schools and not into Standard VIII, while pupils promoted from Standard VII are admitted into the new Standard VIII. Although new Standard VIII was opened in the current year, old Standard VIII of Higher Elementary and Senior Basic Schools and Form III of Secondary Schools were in existence during 1962–63. The secondary grade teachers employed for those standards are therefore available for new Standard VIII in the current year.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பயிற்சிபெற்ற செகண்டரி கிரேட், சீனியர் பேசிக் ஆசிரியர்கள் எந்த ஜில்லாவிலாவது பற்றுக்குறையாக இருப்பதாக அரசாங்கத்திற்கு தகவல் வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Directorate of the Employment Exchange

* 283 Q.—SRI K. B. PALANI: Will the Hon. the Chief Minister be pleased to state the procedure adopted by the Directorate of the Employment Exchange in cases of appointments made without any reference to them by Government offices?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதுபோன்ற விபரம் எம்ப்ளாய்மெண்ட் ஆபீசர் கவனத்திற்கு வந்ததும் எந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு வேலை கொடுக்கப்பட்டது என்று விசாரிக்கப்படுகிறது. அவ்வாறு செய்ததற்குத் தகுந்த காரணம் இல்லை என்று தெரிந்தால் உடனே அவ்வாறு வேலையில் அமர்த்தியவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு காலியான அந்த இடத்தைப் பூர்த்தி செய்ய எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் மூலமாக தகுந்த நபரைத் தேர்ந்து எடுக்கும்படி வேலை கொடுப்பவருக்கு உத்திரவிடப்படுகிறது.

[19th November 1963

* 284 Q.—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state the circumstances under which 'no objection' certificates are issued by the Employment Exchange to make recruitment from the open market and the life of such certificates?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: A certificate of non-availability of suitable applicants is issued to an employer by the Employment Exchange when suitable applicants are not available on its registers or in the registers of the Employment Exchanges in the neighbouring districts. On receipt of the certificate the employer is at liberty to select a suitable applicant from any other source. The period of validity of the certificate is three months.

எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் பதிவு எட்டிலோ அல்லது பக்கத்து மாவட்ட எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் பதிவு எடுகளிலோ தகுதி வாய்ந்த நபர் யாரும் இல்லை என்றால், அவ்வாறு ஒரு சர்ட்டிபிகேட் கொடுக்கப்படுகிறது. இந்த சர்ட்டிபிகேட் கிடைத்ததும் வேலை கொடுப்பவர் வேறு நபரை வேலைக்கு அமர்த்திக்கொள்ளலாம். இந்த சர்ட்டிபிகேட் மூன்று மாதம் வரை செல்லும்.

* 285 Q.—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether any Advisory Board for the Employment Exchange for the physically handicapped has been constituted for the State and the functions of the same?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: The Government have constituted an Advisory Committee for the Special Employment Office for the physically handicapped in Madras.

The functions of the Committee will be to advise the State Director of Employment and Training and the Employment Officer on problems affecting the employment of the handicapped in the Committee area.

தமிழ்நாட்டில் அங்கஹீனர்களுக்கான விசேஷ எம்ப்ளாய்மெண்ட் ஆபீசிற்கு ஆலோசனை கமிட்டி ஒன்றை அரசாங்கம் அமைத்திருக்கிறது.

கமிட்டியின் அலுவல் பகுதியில் உள்ள அங்கஹீனர்களுக்கு வேலை தேடித்தரும் பிரச்சனைகளில் மாநில எம்ப்ளாய்மெண்ட் டிரெயினிங் டைரக்டருக்கும் எம்ப்ளாய்மெண்ட் ஆபீசருக்கும் யோசனை கூறுவதே இக்கமிட்டியின் அலுவலாகும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: வேலை தேடித் தரும் ஸ்தாபனத்திற்குத் தெரிவிக்காமல் தகுதியுள்ள நபர்களை தகுதியுள்ள அந்த இடங்களுக்கு சில நிர்வாகங்கள் நியமித்ததற்குப் பிறகு தங்களை கேட்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி அவர்களை இன்னும் நிரந்தரமாக்காமல் இருக்கிறார்கள். அதுபற்றி சர்க்கார் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: குறிப்பாக எதாவது தகவல் அரசாங்கத்திற்கு கொடுத்தால் அதைக் கவனிக்கலாம்.

19th November 1963]

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினரால் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பிறகு வேலை தேடித்தரும் ஸ்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டு நீக்கப் பட்டுப் பிறகு வேலைத் தேடித் தரும் ஸ்தாபனத்தாரால் நியமிக்கப் பட்டவர்கள் இந்த ஆண்டு எவ்வளவு பேர்கள் என்று விவரத்தை சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்கும் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர்: தொழில் சொல்லிக் கொடுக்கக் கூடியதற்கு தனியாக ஒரு இலாகா இருக்கும்போது தொழில் தேடித் தருவதற்காக எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ச் இருப்பதை விட எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்சை தொழில் இலாகாவோடு இணைப்பதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு உத்தேசம் ஒன்று மில்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: அங்கஹீனர்களை கவர்ன்மெண்ட் பரல போன்ற இடங்களில் வேலைக்கு அமர்த்தலாம் என்று கமிட்டி சிபார்சு செய்திருப்பதை சர்க்கார் பின்பற்றுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்த அளவிற்கு அது பின்பற்றக் கூடுமோ அந்த அளவிற்கு பின்பற்றப்பட்டு வருகிறது.

Sri M. S. SELVARAJAN: Will the Government consider the possibility of having a special wing in all the Employment Exchanges for attending to the employment of the physically disabled people?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: I do not think that any special wing as suggested by the hon. Member is necessary.

Copyists and Amins (Nagercoil district)

* 286 Q.—Sri R. PONNAPPA NADAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the fixation of pay for copyists and amins in the Nagercoil District Court has been finalised by the Kerala Government;

(b) whether the Kerala and the Madras Accountant-Generals have approved it; and

(c) whether the arrears have been paid to the concerned persons?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) to (c) Yes.

Bye-election in Tiruvannamalai

* 287 Q.—Sri N. P. SENGOTTUVELU }
Sri P. U. SHANMUGAM } : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Ministers who toured in Tiruvannamalai Constituency during the recent bye-election;

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இவ்விதச் சாகுபடித் திட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் ஒரு ஏக்கரில் எவ்வளவு உற்பத்தியாகிறது? அதற்கான செலவு என்ன? தீவிர சாகுபடித் திட்டம் அமுலில் இல்லாத பகுதிகளில் ஒரு ஏக்கரில் எவ்வளவு நெல் உற்பத்தியாகிறது? அதற்கான செலவு என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் அந்த விவரத்தைக் கொடுக்க முடியும். இருந்தாலும் அகில இந்திய ரீதியில் உற்பத்தியின் சராசரியைப் பார்த்தால், 1960-61-இல் அகில இந்திய சராசரி உற்பத்தி 905 பவுண்டு. நம்முடைய மாகாணத்தில் சராசரி உற்பத்தி 1,345 பவுண்டு. 1961-62-இல் அகில இந்திய ரீதியில் 900 பவுண்டு, நம்முடைய மாகாணத்தில் 1,351 பவுண்டு; 1962-63-இல் அகில இந்திய ரீதியில் 821 பவுண்டு, நம்முடைய மாகாணத்தில் 1,356 பவுண்டு.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தியா பூராவும் உள்ள சராசரி உற்பத்தியைவிட நம்முடைய மாகாணத்தில் சராசரி அதிகமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாய உற்பத்தியின் இலக்கை நம்முடைய ராஜ்யம் எட்டிவிட்டதா, இல்லை குறைந்திருக்கிறதா? இது பற்றிக் கடந்த மூன்று வருஷத்தில் பரிசீலனை செய்யப்பட்டதா?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி கேட்டால் முழு விவரம் கொடுக்க முடியும்.

திரு. க. ர. நல்லசிவம் : இந்தப் பசலியில் நெல் சாகுபடியாகியிருக்கும் விஸ்தீரணத்தை விடக் கடந்த பசலியில் அதிகமாக சாகுபடியாகியிருக்கிறதா? இந்தப் பசலியில் சாகுபடி குறைந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தீவிர சாகுபடித் திட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் விவசாயிகளுக்கு என்னென்ன வகையில் உதவி செய்யப்படுகிறது?

கனம் திரு. பூ. கக்கன் : பாக்கேஜ் ஸ்கீம் ஏரியாவில் பல வகையிலே உதவி செய்கிறோம். அதி தீவிர சாகுபடிக்கு எடுக்க வேண்டிய தகுதிகள் :—

(1) Maximum irrigation facilities (assured water-supply);

(2) Minimum natural hazards such as floods, droughts, etc.

(3) Production of the main foodgrains consumed in the tract;

(4) The existence of well developed co-operatives and Panchayat Organisation;

(5) Maximum facilities for increasing agricultural production in a comparatively short time.

1961-62-இல் நம்முடைய மாநிலத்தில் செலவழிக்கப்பட்ட தொகைக்கு மத்திய சர்க்கார் 50%-ம், போர்டு பவுண்டேஷன் 50%-ம் கொடுக்கிறார்கள். (Staff for 1960-61).

Staff for subsequent years other than that for survey and evaluation. நம்முடைய அரசாங்கம் 25%, மத்திய அரசாங்கம் 25% போர்டு பவுண்டேஷன் 50%.

Staff for survey and evaluation முழுவதும் போர்டு பவுண்டேஷன் கொடுக்கிறார்கள்.

Research studies : போர்டு பவுண்டேஷன் 100%.

Transport : போர்டு பவுண்டேஷன் 100%.

Training : போர்டு பவுண்டேஷன் 100%.

Agricultural workshop : போர்டு பவுண்டேஷன் 100%.

Local work Programme : முழுத் தொகையும் நம்முடைய அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

Demonstration equipment : முழுத் தொகையும் நம்முடைய அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

MR. SPEAKER : The Hon. Minister can place the statement on the Table of the House, if necessary.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சர் அவர்கள் நெல் விளைச்சலைப் பொறுத்து அகில இந்திய புள்ளி விவரத்தை நம்முடைய மாநிலப் புள்ளி விவரத்தோடு ஒப்பிட்டு நம்முடைய மாநிலத்தில் விளைச்சல் அதிகமாக இருக்கிறது என்று கூறினார்கள். அகில இந்திய புள்ளி விவரத்தின்படி ஒரு ஏக்கருக்கு என்ன செலவாகிறது? நம்முடைய மாநிலத்தில் ஒரு ஏக்கருக்கு என்ன செலவாகிறது?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கூற முடியும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தீவிர சாகுபடித் திட்டம் அமலில் இருக்கும் பகுதிகளில் நெல் உற்பத்தி செய்வதற்கு முன்பாகவே நெல் விலையை நிர்ணயம் செய்து நெல் அறுவடை காலத்தில் அந்த விலையைவிட குறைந்தால் போர்டு பவுண்டேஷன் திட்டப்படி நெல்லை வாங்கவேண்டுமென்ற திட்டம் இருந்ததாகத் தெரிகிறது. அது ஏன் அந்தப் பகுதிகளில் அமல் செய்யப்படவில்லை?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவலும் என்னிடத்தில் இல்லை.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் ஒரு ஏக்கருக்கு மகசூலை அரிசிக் கணக்காகச் சொன்னார்கள். மகசூல் அரிசியாக வருமா என்பது சந்தேகம். மகசூல் நெல்லாகத்தான் இருக்க வேண்டும். எந்த இடத்திலும் அரிசி விளைவதில்லை. வருமானம்

என்னும்போது அரிசிக் கணக்காகச் சொல்லலாம். இப்போது அரிசியாகக் கணக்கிட்ட நிலைமையிலே நெல்லாக எந்த அளவுக்கு வந்தது என்ற கணக்கை அமைச்சர் அவர்கள் தருவாரா?

கனம் திரு. பூ. கக்கன்: நெல்லாகக் கணக்குக் கொடுக்கவேண்டு மென்றால் தனிக் கேள்வி போடவேண்டும். நெல்லில் இருந்து அரிசி வருகிறது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் இன்றைக்குத் தான் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன்: மகசூல் என்றால் விளைவு என்றுதான் அர்த்தம். ஒன்றும் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை.

திண்டிவனத்தில் நெல் விற்பனை

* 292 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனத்தில் கட்டுப்படுத்தப்பட்ட மார்க்கட்டுகளில் நெல் விற்பனை செய்யப்படுகின்றதா?

(இ) இல்லையெனில் அதற்குக் காரணமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நெல் வியாபாரம் 1933-ம் ஆண்டு சென்னை வணிகப் பயிர்கள் சந்தைச் சட்டத்தினால் முறைப்படுத்தப்படும் என அரசினர் 1962 அக்டோபரில் அறிவித்தனர். திண்டிவனம் சந்தைக் கூடத்தில், நெல் வியாபாரம் சுமுகமாக நடக்க போதிய வசதிகள் இல்லை என்று முறையிடப்பட்டது. இந்த வசதிகள் இப்போது செய்யப்பட்டுள்ளன. எனினும், நெல் வாணிபக் காலம் ஏறக்குறைய முடிவடைந்து விட்டதால், மேற்படி வசதிகள் சாகுபடியாளர்களுக்கோ சந்தைக் குழுவினருக்கோ இப்போது பயன்படா. எனவே, திண்டிவனம் சந்தையில் நெல் வியாபாரத்தை முறைப்படுத்தும் விஷயம் 1963-ம் ஆண்டு இறுதிவரையில் ஒத்திபோடப்பட்டுள்ளது.

திரு. ஆ. தங்கவேலு: திண்டிவனத்தில் நெல் மண்டி வைத்திருப்பவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக இந்த நெல் மார்க்கட் ஒத்தி வைக்கப்பட்டது என்பது உண்மையா?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அந்த விதமான தகவல் ஒன்றும் என்னிடத்தில் இல்லை.

பொறியியல் கல்லூரி (வட ஆற்காடு மாவட்டம்)

* 293 கேள்வி.—திரு. ஆர். ஜீவரத்தினம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் வடார்க்காடு ஜில்லாவில் இன்ஜினீரிங் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் இல்லை.

திரு. ஆர். ஜீவரத்தினம்: நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலாவது சேர்த்துக்கொள்ளப்படுமா? 10-00 கா.மு.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான்காவது திட்டம் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

சென்னை நகரம் 'ஏ' பிரிவாக்குதல்

* 249 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரை 'ஏ' பிரிவு நகரமாக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) சுற்றுப்புற இடங்களில் ஏதேனும் சென்னை நகரத்தோடு சேர்க்கப்பட்டிருக்கின்றதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Government of India, with whom the decision rests, have not yet classified Madras as 'A' Class city.

(b) No.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், இந்தப் பிரச்னை சம்பந்தமாக ஏற்கனவே கேட்டபோது, முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் 'ஏ' பிரிவாக ஆக்குவதற்கு தனிப்பட்ட முறையில் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் அது சீக்கிரத்தில் நிறைவேறும் என்றும் சொன்னார்கள். அப்படியிருந்த நிலைமையை விட்டு விடாமல், இப்போதைய முதலமைச்சர் அவர்கள் ஈடுபட்டு இடையிலே விட்டதை, தொடர்ந்து வேலை செய்து 'ஏ' பிரிவு நகராக மாற்றுவதற்கு வேண்டிய வழிவகை செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இடையிலே நின்றுவிடவில்லை. மேலும் அபிவிருத்தி அடைந்து கொண்டுதான் இருக்கிறது. சீக்கிரத்திலேயே ஆகலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: கடந்த மாதத்தில் தபால் ஊழியர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போது இந்நாள் முதலமைச்சர் அவர்கள் சென்னையை அடுத்துள்ள இடங்களை எல்லாம் தபால் வட்டங்களோடு சேர்க்கப்பட்டிருப்பதற்கு "பொருள்" இல்லாமல் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்விதம் குறிப்பிட்ட "பொருள்" என்ன என்பதை இப்போது சொல்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதில் ஒன்றும் விசேஷ பொருள் இல்லை.

MR. SPEAKER: I think the House has no objection to extend the question hour till we dispose of the remaining questions.

[19th November 1963

Agri-Horticultural Gardens

*295 Q.—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the conditions under which the Horticultural Society was given the site where the botanical gardens were situated previously;

(b) whether the Government are aware that the site is now being used for running a canteen and not as a botanical garden; and

(c) what action the Government have taken in the matter?

THE HON. SRI M. RAMAIAH: (a) The lands in R.S. Nos. 13 and 64 of Mylapore, Madras, were placed at the disposal of the Agri-Horticultural Society, Madras, for the specific purpose of Agri-Horticultural gardens, subject to the usual conditions and the special condition that the lands should be held by the Society so long as it continues to pursue the object of the institution.

(b) Yes.

(c) The matter is *subjudice*.

திரு. கே. மூக்கையாத் தேவர்: ஸார், இந்த இடம் அக்ரி-ஹார்ட்டி கல்சரல் சொஸைட்டிக்காக கொடுக்கப்பட்டது. அதன்படி இதில் என்ன ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன? இப்போது அந்த இடத்தை ஒரு ஹோட்டலுக்கு கொடுத்திருப்பதன் நோக்கம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: புகார்கள் பூராவும் கோர்ட்டின் முன்னால் இருப்பதினால் நான் பதில் சொல்ல தயாராக இல்லை.

திரு. சா. கணேசன்: கோர்ட் முன்னால் இந்த விஷயம் இருப்பதினால், அதற்குப் பாதகம் இல்லாத அளவில் சொல்லலாம். இதன் பேரில் அபிப்பிராயம் சொல்லுவதுதான் கோர்ட்டுக்கு விரோதமாக இருக்குமே தவிர தற்பொழுதுள்ள நிலைமையை தெரிவிப்பதில் கோர்ட்டுக்கு எந்தவிதமான பாதகமும் இருக்க மாட்டாது என்ற நினைப்பில் நான் சபாநாயகர் அவர்களின் அனுமதியோடு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: அபிப்பிராயமும் நிலைமையும் சேர்ந்து தான் வரும்.

திரு. சா. கணேசன்: அக்ரி-ஹார்டிகல்சரல் ஸொஸைட்டிக்கு கொடுத்த இந்த இடத்தில் சிற்றுண்டிசாலை நடைபெறுகின்றதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த விஷயம் பூராவும் கோர்ட்டில் இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: ஸார், இப்போது உணவு விடுதி நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் தொடர்ந்து மேலும் மேலும் அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஏதாவது ஸ்டே வாங்கி நிறுத்தப்படுமா?

19th November 1963]

கனம் திரு. வெ. ராமைய்யா: கோர்ட் முன்னால் இந்த விஷயம் இருக்கிறது. கோர்ட் என்ன முடிவு எடுக்கிறதோ அதன்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சா. கணேசன்: கோர்ட்டில் இருக்கின்ற இந்த விஷயத்தில் அரசாங்கம் வாதியாக இருந்து செயல்படுகிறதா, அல்லது பிரதி வாதியாக இருந்து செயல்படுகிறதா?

கனம் சபாநாயகர்: அல்லது வேறு ஏதாவது வகையில் செயல் படுகிறதா? . . .

கனம் திரு. வெ. ராமைய்யா: ஸொஸைட்டி தான் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறது.

திரு. கே. மூக்கையாத் தேவர்: ஸார், இந்த இடம் எந்த நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற வில்லை என்பதை அரசாங்கம் உணருகிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: கோர்ட் தான் இதில் முடிவு செய்ய வேண்டும். நான் எப்படி அபிப்பிராயம் சொல்ல முடியும்?

அனாதை இல்லங்கள் (சேலம் மாவட்டம்)

* 296 கேள்வி.—திரு. க. ச. நல்லசிவம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை அனாதை இல்லங்கள் சர்க்கார் உதவிபெற்று நடைபெறுகின்றன?

(இ) அவைகளில் என்னென்ன தொழில்கள் கற்றுக்கொடுக்கப் படுகின்றன?

(உ) இவைகளுக்காக சர்க்கார் கொடுக்கும் நிதி உதவி எவ்வளவு?

(எ) ராசிபுரத்தில் நடைபெறும் அனாதை இல்லத்தைப்பற்றி சர்க்காருக்கு ஏதாவது புகார் வந்துள்ளதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) 18 அனாதை இல்லங்கள்.

(இ) அனாதை இல்லங்களிலுள்ள பிள்ளைகள் அனைவரும் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் படிக்கிறார்கள். மரவனேரியிலுள்ள செயிண்ட் தெரசா அனாதை இல்லத்தில் நெசவு, தச்சுத் தொழில், புத்தகம் பைண்டு செய்தல் ஆகியவற்றில் தொழிற் பயிற்சி அளிக்கப் படுகின்றது.

(உ) சேலம் மாவட்டத்திலுள்ள அனாதை இல்லங்களுக்கு மானியமாக 1962-63-ல் ரூ. 1,02,149 அனுமதிக்கப்பட்டது.

(எ) மாவட்டக் கல்வி அதிகாரி 25—5—1963லும், 17—6—1963 லும் திடீரென பார்வையிட்டதின் மேல் நிர்வாகி என். எஸ். கிருஷ்ணன் அனாதை இல்லம் அது இருக்கவேண்டிய விலாசத்தில் செயலாற்றி வராததாகத் தெரிந்தது. கல்வித் துறை டைரக்டர் அந்த இல்ல நிர்வாகியின் மீது தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. சா. கணேசன் : ஸார், கேள்வி நேரம் முடிவடைந்து விட்டது. மேலும் கேள்வி நேரத்தை நீடித்துக்கொண்டிருப்பதற்கு சபையின் அனுமதியைப் பெற வேண்டாமா? . . .

(கேள்வி நேரம் முடிந்த உடனேயே கனம் சபாநாயகர் அவர்கள் தெரிவித்து, இதற்கான அனுமதியைப், பெற்றுக் கொண்டார் என்பதை பல அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள்.)

கனம் சபாநாயகர் : திரு. கணேசன் அவர்கள் சொல்லுவது என்னுடைய பாதுகாப்புக்காகத் தான். I thank the hon. Member very much because he wants that the Speaker should not be avaied later on.

திரு. க. ர. நல்லசிவம் : சேலம் ஜில்லாவில் புறம்போக்கு நிலங்கள் ஓரளவுக்கு இருப்பதினால் இந்த அருதை இல்லங்களி லுள்ளவர்களுக்கு விவசாயப் பயிற்சி கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரியான வேண்டு கோள் ஏதாவது வந்தால் அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

ஆலந்துறைப்பட்டு ஓடை (அணைகட்டுதல்)

* 297 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலூகாவிலே வேலூர் கிராமத்திலே ஆலந்துறைப்பட்டு ஓடையின் குறுக்கே அணைக்கட்டு கட்ட திட்டமுண்டா?

(இ) அதற்காக எவ்வளவு செலவாகும்?

(உ) அந்த வேலை எப்போது முடிவடையும்?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) உண்டு.

(இ) சுமார் ரூ. 2,62,500.

(உ) இந்த வேலைக்கான பிளான்கள், எஸ்டிமேட்)கள் சம்பந்தமாக (நீர்ப்பாசன) பிரதம என்ஜினீயர் தஞ்சாவூர் வட்டார ஸூப்ரண்டெண்டிங் என்ஜினீயரைக் கலந்து ஆலோசித்து வருகிறார். இதை முடிவாகத் தீர்மானித்து, இதற்கு அரசாங்க அனுமதி கிடைத்தவுடன் இவ்வேலையை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்வார்கள். வேலை எப்போது முடிவடையும் என்று இந்தக் கட்டத்தில் சொல்வதற்கில்லை.

(a) Yes.

(b) About Rs. 2,82,500

(c) The plans and estimates for the scheme are under consideration of the Chief Engineer (Irrigation) in consultation with the Superintending Engineer, Thanjavur Circle. As soon as the scheme is finalised and sanction of the Government is accorded, it will be taken up for execution. It is not possible to state at this stage, when the work will be completed.

நரம்புச் சிலந்தி வியாதி (தஞ்சை மாவட்டம்)

* 298 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த தாலூகாவில் எந்தெந்த கிராமங்களில் 'நரம்புச் சிலந்தி' வியாதி உள்ளது?

(இ) இந்த வியாதியைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், இந்த வியாதியைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த வியாதியை தடுப்பதற்கு ஸ்பெஷல் ஸ்டாஃப் போட்டு 1959 டிசம்பரிலிருந்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு குடிநீர் திட்டம் இதற்காக போடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் முழுவதுமாக நிறைவேற்றப்படுவது வரையிலும் இந்த வியாதியை அறவே ஒழிப்பது என்பது இயலாத காரியமாக தோன்றுகிறது.

Rural dispensaries

* 299 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) Whether it is a fact that restrictions have been imposed for the opening of Rural Dispensaries by the Panchayat Union Councils, in view of the emergency; and

(b) if so, whether there is any proposal to relax the order?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. விரப்பச் செட்டியார் : ரூரல் டிஸ்பென்ஸரி திறக்கக் கூடாது என்று உத்தரவு போடப்பட்டுள்ளது என்று சேலம் அபிவிருத்தி மண்டலக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அம்மாதிரி இல்லை என்றும் விவரம் தெரியவருகிறது. எது உண்மை என்பதை தெரிந்து கொள்ளலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரசாங்கத்திலிருந்து அம்மாதிரி எந்தவிதமான உத்தரவும் போகவில்லை.

Central Jail (Madurai)

* 300 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(a) whether it is a fact that the Government have granted permission for His Holiness Sri Sankaracharya of Kamakoti Peedam to visit the Central Jail at Madurai on 23rd June 1963;

[a] 313–315-ம் பக்கங்களில் நான்காவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[19th November 1963

(b) if so, the purpose for which he was permitted; and

(c) whether the Government have incurred any expenditure in this connection?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை. மதுரை மத்தியச் சிறை மேற்பார்வையாளர் அழைப்பின் பேரில் காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரி சுவாமிகள் 1963 ஜூன் 23-ம் தேதி, ஞாயிற்றுக் கிழமையன்று அந்தச் சிறைக்கு விஜயம் செய்தார். அவ்வாறு விஜயம் செய்வதை அனுமதிக்க சிறை மேற்பார்வையாளருக்கு அதிகாரம் உண்டு.

(இ) ஹிந்து மதத்தைச் சேர்ந்த கைதிகளுக்கு மத போதனையும் ஒழுக்கப் போதனையும் அளிப்பதே இந்த விஜயத்தின் நோக்கம்.

(உ) இல்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சிறையில் இருக்கும் எல்லா மதங்களையும் சேர்ந்த கைதிகளுக்கும் இது போன்ற பிரசார வசதி செய்து தரப்படுகிறதா?

கனம் திரு. கோ. பூவராகன் : மற்ற மதத்தினர் யாராவது சிறையில் இருக்கும் கைதிகளுக்கு இலவசமாக போதனை செய்ய வேண்டும் என்று கேட்டால் அப்போது அனுமதி கொடுக்கப்படுகிறது ஜில்லா சிறை அதிகாரியால்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மத போதனை அளிக்கப்படுவது வேறு விஷயம். சங்கராச்சாரியார் விசேஷமாக அழைக்கப்பட்டது வேறு விஷயம். நமது அரசாங்கமும் அரசாங்க இலாகாவும் மதச் சார்பு அற்றவை. அப்படி இருக்கும்போது சிறை அதிகாரி ஹிந்து மதத்தைச் சேர்ந்தவரை, அதிலும் ஒரு சாரரைச் சேர்ந்த ஒருவரை அழைக்கக் காரணம் என்ன? மற்ற மதத்தினர்களும் இந்த மாதிரி அழைக்கப்படுகின்றார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த பாதிரிமார்களும் சிறைக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள்; அவர்கள் போய் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த கைதிகளுக்கு போதனை செய்கிறார்கள். யாராக இருந்தாலும் ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் அந்த மதத்தைச் சார்ந்தவர்களுக்கு அறிவுரை வழங்கலாம். முன்பும் வேறு மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டு வந்திருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படியானால் மடாதிபதிகளை அடிக்கடி சிறைக்கு அனுப்பும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. கோ. பூவராகன் : இதில் மடாதிபதி விஷயம் ஒன்றும் இல்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்த நபரை அரசாங்க அதிகாரி சிறைக்கு அழைத்தார் என்று சொன்னார்கள். அது போன்ற விசேஷ

19th November 1963]

அழைப்பு கொடுத்து இது போன்ற மடாதிபதிகளை அழைக்க சட்டத்தில் இடம் இருக்கிறதா? அல்லது அந்த அதிகாரி தனிப்பட்ட முறையில் அழைத்தாரா?

கனம் திரு. கோ. பூவராகன் : அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. விரும்பினால் அழைத்து போதனை செய்யச் சொல்லலாம்.

Jails (religious discourses)

* 301 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state whether there is any proposal to arrange for the preaching of Bagavatgheetha, Bible and Qoran in Central Jail for the benefit of the convicts?

The Hon. Sri G. BHUVARAHAN : No.

இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், அரசாங்கம் இந்த மாதிரி ஏற்பாடுகள் செய்ய முன் வருமா?

கனம் திரு. கோ. பூவராகன் : அரசாங்கம் அவ்வாறு ஏற்பாடு செய்வதாக உத்தேசம் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், கோயம்புத்தூர் மத்திய சிறையில் நூல் நூற்பு பகுதி இருக்கிறது அல்லவா? அதில் தண்டனை அனுபவித்துவரும் மில் அதிபர் கிருஷ்ணன் அவர்கள் மில் பகுதியை கண்காணிக்க ஏற்பாடு செய்து அபிவிருத்தி செய்வதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?

கனம் திரு. கோ. பூவராகன்: கனம் அங்கத்தினர் கேள்வியிலிருந்து இந்தக் கேள்வி எழவில்லை. இதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : கைதிகள் சிறையிலிருந்து விடுபட்டபின் நல்வாழ்க்கைக்குத் திரும்ப என்ன ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருக்கிறது?

கனம் திரு கோ. பூவராகன் : அதற்காகத்தான் இது போன்ற ஒழுக்கத்தைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும், யார் யார் விரும்புகிறார்களோ அவர்களைக் கொண்டு போதனை செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

வாடகை—மோட்டார் டிரைவர்கள் (வேலை நிறுத்தம்)

* 302 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மோட்டார், ஆட்டோரிக்ஷா டிரைவர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவது பற்றி சர்க்காருக்கு அறிவித்துள்ளனரா?

(b) whether they were accompanied by any District Officers; and

(c) the T.A. and D.A. drawn by the Ministers and the District Officers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Seven Ministers including the then Chief Minister, Sir.

(b) None of them was accompanied by any District Officer.

(c) No Travelling Allowance or Daily Allowance was drawn by any of the Ministers. In view of the answer to clause (b) the question of the District Officers drawing such allowance does not arise.

(அ) முன்னாள் முதலமைச்சர் உட்பட ஏழு அமைச்சர்கள்.

(இ) அவர்களுடன் மாவட்ட அதிகாரி யாரும் போகவில்லை.

(உ) இந்த அமைச்சர்களில் யாரும் பயணப்படியோ, நாள் படியோ வாங்கவில்லை. (இ) பகுதியில் சொன்ன பதிலையொட்டி, மாவட்ட அதிகாரிகள் மேற்சொன்ன படிகளை வாங்கும் கேள்விக்கு இடமில்லை.

Ministers' Tour.

*288 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state the amount drawn by all the Ministers of Madras by way of travelling allowances and daily allowances in the month of June 1963?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In June 1963, the Ministers drew in all a sum of Rs. 5,302·00 as travelling allowance and a sum of Rs. 785·75 as daily allowance.

1963-ம் ஆண்டு ஜூன் மாதத்தில், அமைச்சர்கள் பயணப்படியாக மொத்தம் ரூ. 5,302.00-ம்; நாள்படியாக ரூ. 785.75-ம் பெற்றுள்ளனர்.

திரு. செ. மாதவன் : இந்த டி.ஏ. எந்தெந்த ஊர்களுக்கு செல்வதற்காக வாங்கப்பட்டது? ஜூன் மாதத்தில் திருவண்ணாமலை செல்வதற்காக அமைச்சர்கள் யாராவது டி.ஏ. பெற்றார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருவண்ணாமலை தேர்தல்போது சென்றவர்கள் பயணப்படி வாங்கவில்லையென்று முன்பே சொன்னேன். திருவண்ணாமலை தவிர மற்ற ஊர்களுக்கு போனதற்கு இந்த பயணப்படி.

திரு. கே. ஏ. மதியழகன் : வேலூர், போளூர், திருக்கோவிலூர் போனதாக அமைச்சர்கள் ஜூன் மாதத்தில் ஏதாவது பயணப்படி வாங்கியிருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய தகவல் என்னிடம் ஒன்றுமில்லை.

Road (Chettypetty-Pallar)

*289 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have taken steps for the formation of a road from Chettypetty to Pallar for the convenience of pilgrims going to Madheswaram temple (via) Kolathur in Salem district?

THE HON. SRI V. RAMAIAH : The road referred to by the Member forms part of the work of improvements to Mettur-Kolathur road and on to Mysore State limits (Salem district) leading to Madheswaram Temple. The question of taking up this scheme with grants from the Government of India under the Economic and Inter-State Importance Scheme is engaging the attention of the Government.

மருத்துவமனை (கெஜட் பதிவு பெறாத அலுவலர்கள்)

*290 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கெஜட் பதிவு பெறாத உத்தியோகஸ்தர்களுக்குத் தனியாக மருத்துவ மனை கட்டும் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

The matter is under consideration of the Government.

1963-ல் நெல் பயிரிடுதல்

*291 கேள்வி.—திரு. கரு. சிமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நம் மாநிலத்தில் எத்தனை ஏக்கர்களில் நெல் பயிரிடப்படுகிறது?

(இ) ஏக்கர் ஒன்றுக்கு சராசரி மகசூல் எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) பசலி வருடம் 1372-ல் (1962-63) நம் மாகாணத்தில் 6,031,000 ஏக்கர்களில் (2,441,000 எக்டேர்கள்) நெல் பயிரிடப்பட்டது.

(இ) ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 1,356 பவுண்டு அரிசி (ஒரு எக்டேருக்கு 1,520 கிலோகிராம்) 1962-63 ஆண்டில் மகசூல் ஆனது.

(a) The total acreage under paddy cultivation in the State during the fasli year 1372 (1962–63) is estimated at 6,031,000 acres (2,441,000 hectares).

(b) The average yield in terms of rice for the State for 1962-63 is estimated at 1,356 lb. per acre (1,520 kilograms per hectare).

[19th November 1963

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய திட்டக் கமிஷன் கொடுக்கக்கூடிய திட்டங்களைத்தான் பரிசிக்க இங்கே உள்ள குழுவுக்கு உரிமை உண்டா அல்லது இந்தக் குழுவே புதிய திட்டங்களை உருவாக்க உரிமை உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாநில அரசாங்கம் இந்த மாநிலத்துக்கு தேவையான திட்டங்கள், இருக்கக்கூடிய வருவாய் நிலை எல்லாவற்றையும் ஆராய்ந்து திட்டம் தயாரித்து அதைப் பின்னால் மத்தியக் குழு ஆராய்ந்து அது ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

Publicity for Plan Programmes

* 306 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether a team of experts visited this State from the Centre in connection with improving the publicity of the plan programmes: and

(*b*) details of their suggestions?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம் ஐயா.

(இ) இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு யூனியனில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் விஜயம் செய்த பிறகு, தனது அறிக்கையை இந்திய அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கும். அறிக்கையை இந்திய அரசாங்கம் பரிசீலனை செய்த பிறகு, அது இந்த மாநில அரசாங்கத்திற்குக் கிடைக்கும்.

நாசரெத் பாலிடெக்னிக்

* 307 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் தாலுகாவில் உள்ள நாசரெத் பாலிடெக்னிக்கை மூடுவதாக சர்க்காருக்கு தகவல் கிடைத்துள்ளதா ?

(இ) அதைத் தொடர்ந்து நடத்துமாறு கோரி திருச்செந்தூர் மக்கள் சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொண்டுள்ளார்களா ?

(உ) அதன்மீது எடுக்கபட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes.

(*c*) The Government have decided to close down the institution, as requested by the management. The students of the above polytechnic who have passed their first year course have been admitted for their second year course in the nearby polytechnics at Virudhunagar, Talavuthu, Nagercoil and Madurai. A Government Polytechnic has been started at Tuticorin in lieu of the above Polytechnic and admission has been started afresh with effect from this year.

19th November 1963]

திரு. எம். எஸ். செல்வராஜன் : நாசரேத்தில் ஏற்படுத்தப்பட்ட பாலிடெக்னிக்குக்கு சர்ச் ஆஃப் சவுத் இண்டியா இனமாகக் கொடுத்த கட்டடம், நிலம் எல்லாம் இப்போது யார் பொறுப்பில் இருக்கிறது ? அதில் அரசாங்க தரப்பில் வேறு ஏதேனும் செய்ய உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு தனியாக கேள்வி போடவேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், சர்க்கார் தரப்பில் ஆரம்பிக்கப்படுவதாக உத்தேசிக்கப்பட்ட பெண்கள் பாலிடெக்னிக்கை யாகிலும் அங்கு அமைக்க அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமாக உத்தேசம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : நாசரேத் பாலிடெக்னிக்கை மூடுவதற்கு சொல்லப்பட்டுள்ள காரணம் என்ன என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆரம்பிக்கும்போதே ஒழுங்காக ஆரம்பிக்கவில்லை. போதிய அளவு நிதி ஒதுக்கி அதைக் கொடுத்துத்தான் பாலிடெக்னிக்கை நடத்துவதாக வாக்குக் கொடுத்தார்கள். பின்னால், பண வசதி இல்லாத காரணத்தினால், நிதி வசதி இல்லை என்று சொல்லுவதாகத் தெரிகிறது.

திரு. அ. தியாகராஜன் : கனம் தலைவர் அவர்களே, நாசரத்தில் இருந்த பாலிடெக்னிக் எடுக்கப்பட்டதன் காரணமாக, மதுரையில் பாலிடெக்னிக் ஸ்கூல் நடத்துவதற்கு தனியார் ஒருவர் மனுச் செய்திருப்பதாகத் தெரிகிறது. அதற்கு அனுமதி கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் சபாநாயகர் : யாரோ ஒருவர் மனுச் செய்திருக்கிறாரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த வதந்திகளை எல்லாம் நம்பக் கூடாது. நாசரத்தில் பாலிடெக்னிக்கை எடுத்ததற்காக, தூத்துக்குடியில் ஒரு பாலிடெக்னிக் ஆரம்பித்து, அது வேலை செய்யவும் தொடங்கியாகிவிட்டது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அந்தப் பகுதியில் அந்த நிலத்தை உபயோகப்படுத்திக்கொண்டு இண்டஸ்டிரியல் எஸ்டேட் வைப்பது பற்றி பரிசீலிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : It is only a suggestion.

Technical Colleges (Admission of ladies)

* 308 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether ladies

[19th November 1963

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes. The Tamilnad Taxi and Auto Drivers' Union intimated that the workers employed in Taxi and Auto Industry would resort to a token strike on 25th July 1963.

(b) The Labour Officers I and II, Madras, explained to the Union the circumstances under which the Motor Transport Workers Act, 1961, could not immediately be extended to the transport undertakings employing less than five workers and advised the Union to avoid the strike. The proposed token strike did not materialise.

தூணகடவு அணைத் திட்டம்

*303 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பரம்பிக்குளத் திட்டத்தில் சேர்ந்த தூணக்கடவு அணைத் திட்டவேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH: The work was started on 1st July 1963.

Irrigational facilities from Kundah Waters

*304 Q.—SRI A. K. SUBBIAH: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there is any proposal to provide irrigational facilities from the surplus water of Kundah to the people of Avanashi, Sulur, Nambiyur, Tiruppur and Perundurai Constituencies;

(b) if so, whether any arrangements have been made so far; and

(c) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (a) to (c) The question of providing irrigational facilities to Avanashi and other areas is under consideration.

State Planning Board (Constitution of)

*305 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Government have refused to accept the proposal for the formation of a State Planning Board as suggested by the Central Planning Commission; and

(b) if so, the reasons therefor?

19th November 1963]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The Third Plan for this State was finalised only after full consultation with a Committee of this Legislature. The implementation of this Plan is being supervised by the State Development Committee which is a special Committee of the Cabinet. The existing arrangements for preparation of Plans and their implementation are found suitable and adequate. It has, therefore, been decided not to set up a separate State Planning Board for the present.

திரு. மீ. கலியாணசுந்தரம்: திட்டங்களைத் தயாரிக்கும்போது இந்தச் சபையில் இருக்கும் அங்கத்தினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் திட்டங்களை அமல் நடத்துவதைப் பரிசீலிக்கும்போது அம்மாதிரி சந்தர்ப்பம் அளிக்கும் வகையில், பொதுவாக இந்தச் சபையில் எடுத்துச் சொல்ல இருக்கக் கூடிய சந்தர்ப்பத்தைத் தவிர, தனியாக ஆலோசனைக் குழு கிடையாது. ஆகையால் மத்திய பிளானிங் கமிஷன் கூறியபடி ராஜ்ய அளவில் சட்ட சபை அங்கத்தினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை நியமிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்ட சபை உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கவேண்டும் என்று அவர்கள் ஆலோசனை கூறவில்லை. பொதுவாக மாநில ரீதியில் ஒரு திட்டக் கமிஷன் அமைக்கவேண்டும் என்று கூறினார்கள். திட்டத்தைத் தயாரிக்க மற்ற உறுப்பினர்களின் ஆலோசனை கோரப்படுகிறது. அதோடு மாவட்ட டெவலப்மெண்ட் கவுன்சில் இருக்கின்றன. அவர்கள் அப்போதைக்கப்போது திட்டங்களை நிறைவேற்றுவதைப் பற்றி ஆராய்ந்து யோசனை கூறுகின்றார்கள். இந்த மன்றத்திலும் யோசனை கூற சந்தர்ப்பங்கள் பல ஏற்படுகின்றன. ஆகவே அதற்கு தனியாக திட்டக் கமிஷன் அமைக்கவேண்டியது இல்லை என்பது இப்போதைய அரசாங்கத்தின் கருத்து.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, மத்திய திட்டக் கமிஷனால் திட்டப்படுகிற திட்டங்களை இங்கே உள்ள கமிட்டி பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் இந்த மாநிலங்களுக்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டுவதற்கு தனியாக ஒரு திட்டக் கமிஷன் போட்டு, அந்தத் திட்டக் கமிஷன் தரும் திட்டங்களை மத்திய சர்க்கார் திட்டக் கமிஷனுக்கு அனுப்பினால் வசதியாக இருக்கும் என்று யோசனை கூறியதா? அது பற்றி நம் அரசாங்கத்தின் கருத்து என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மத்திய அரசாங்கம் கூறியது, அங்கு மத்திய ரீதியில் திட்டக் கமிஷன் இருப்பது போல மாநில திட்டக் கமிஷன் அமைத்தால் நலம் என்று கூறினார்கள். ஆனால் இப்போது தனியான குழு இல்லாமலேயே கவனிக்கப்பட்டு வருகிறது. போதிய அளவில் கவனம் செலுத்தப்பட்டும் வருகிறது. ஆகையால் இது தேவையில்லை என்று இந்த அரசாங்கம் முடிவு செய்தது.

are eligible for admission in the Technical Colleges for taking the Degree Courses such as B.E. (Mechanical), B.E. (Civil) and diploma course such as L.A.E.?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. POINTS OF ORDER.

(1) WALK-OUT BY SOME OPPOSITION MEMBERS AFTER SPEAKER'S RULING.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர், ஸார், கனம் சபாநாயகர் அவர்களே நேற்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், வேறு சில உறுப்பினர்களும் சில அவசரப் பிரேரபணைகளைப் பிரேரேபிப்பதற்கு தங்களுடைய அனுமதியைக் கோரினார்கள். அவர்கள் அதைப்பற்றி விளக்கினார்கள் அவை அனுமதிக்கத் தகுந்தவை அல்ல என்று நான் விளக்கினேன். அதற்கு மேல் தாங்கள் சட்டமன்ற விதிகளின்படி அந்த அவசரப் பிரேரபணைகளை அனுமதிப்பதற்கில்லை, அனுமதி தர முடியாது என்று தீர்ப்புக் கூறினீர்கள். அதற்கப்புறம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களும், சுதந்திராக் கட்சி உறுப்பினர்களும் இதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையிலே சபையை விட்டு வெளியேறினார்கள். அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்கும் வகையிலே வெளியேறலாம், அல்லது பெரும்பாலானவர்களின் போக்கைக் கண்டிக்கும் வகையிலே அல்லது அதிருப்தி தெரிவிக்கும் வகையிலே வெளியேறலாம். ஆனால் தாங்கள் ஒரு தீர்ப்புக் கூறிய பிறகு, அதற்கு மேலே வெளியேறுவது என்றால், தங்களுடைய தீர்ப்பைக் கண்டிப்பது போலத் தான் அர்த்தமாகும். நேற்று அவர்கள் நடத்தையைக் கண்டிக்கும் வகையில் நான் இதைக் கூறவில்லை. இந்த மன்றம் சிறந்த ஒழுக்கப் பாடுகளையும், பண்பாடுகளையும் பின்பற்றி வருகிறது. மற்றவர்களெல்லாம் இதைப் பாராட்டுகிறார்கள். தவறுதலான 'பிரிஸிடெண்ட்ஸ்' ஏற்படக்கூடாது. எதிர்காலத்தில் இம்மாதிரி நடைபெறுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும். தாங்களும் இதைப்பற்றி சிந்திக்க வேண்டும். இம்மாதிரி சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக் கொடுத்தவுடன் அது தங்களுக்கு பிடிக்கவில்லை, தங்களுக்குத் திருப்தியில்லை, ஜனநாயகத்திற்கு முரண்பாடாக இருக்கிறது என்று சொல்லி வெளியேறுவது முறையல்ல என்பதை மீண்டும் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

***திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிக் கூறி, இந்த மன்றத்தினுடைய முதல் அமைச்சர் அவர்கள் அதை ஒரு ஒழுங்குப்

பிரச்சினையாக வைத்துள்ளார்கள். இதில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் தாங்கள் அவைத் தலைவர் அவர்கள் அளித்த தீர்ப்பை அவமதிக்கும் முறையிலே வெளி நடப்புச் செய்யவில்லை. நாங்கள் அளித்த தீர்ப்பின் காரணமாக எங்களுடைய கருத்துக்களையும், வேதனையையும் வருத்தத்தையும் எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பு இல்லை. அந்த நிலையை உணர்ந்து அரசாங்கத்தினுடைய போக்கினை கண்டிக்கிற முறையிலே எங்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்துவதற்காக வெளியேறுகிறோம் என்று கூறினோமே தவிர, தங்களுடைய தீர்ப்பை மீறி நடப்போம் அல்லது அதற்குக் கீழ்படிய மறுக்கின்றோம் என்று நாங்கள் சொல்லவில்லை. நாங்கள் வெளிநடப்புச் செய்ததை, அவைத் தலைவர் அவர்களை அவமதிக்கும் முறையில் நாங்கள் நடந்துகொண்டோம் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. அவைத்தலைவர் அவர்களுக்கு எத்தகைய மரியாதையும், மதிப்பும் கொடுக்கவேண்டுமோ, அவை அத்தனையையும் நாங்கள் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு, எதிர்த்து நின்று பேசுவதற்கு வாய்ப்பு இல்லாததினால், எங்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் எங்களுடைய குறைபாடுகளையும், வேதனையையும் எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பு இல்லாததன் காரணத்தினாலே, வெளி நடப்புச் செய்வதின் மூலம், அரசாங்கத்தைக் கண்டிக்கும் வகையிலே, போலீஸ் அடக்குமுறைப் போக்கைக் கண்டிக்கும் வகையிலே இருக்கட்டும் என்றுதான் வெளிநடப்புச் செய்தோம். தங்களை அவமதிக்கும் முறையிலோ அல்லது தங்களுடைய தீர்ப்பை அவமதிக்கும் முறையிலோ நாங்கள் வெளிநடப்புச் செய்யவில்லை. எங்கள் உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கே நாங்கள் வெளிநடப்புச் செய்தோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

SRI K. A. MATHIALAGAN : Sir, I rise on another point of order.

MR. SPEAKER : Let the point of order now raised be disposed of.

***திரு. சா. கணேசன்:** கனம் தலைவர் அவர்களே, நேற்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவிக்கும்பொழுது தாங்கள் மிக்க பரிவோடு குறுக்கிட்டு "என்னுடைய தீர்ப்பை ஆட்சேபிக்கிறீர்களா?" என்ற பொருள்பட கேட்டீர்கள். அப்பொழுதே நான் சொன்னேன். தங்களுடைய தீர்ப்பை ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை. தங்கள் தீர்ப்புக்கு எப்பொழுதும் கட்டுப்படுவோம், கட்டுப்பட்டு நடக்கிறோம் என்பதையும் புலப்படுத்தினேன். தங்கள் தீர்ப்பின் மீது நாங்கள் வெளிநடப்புச் செய்யவில்லை. அதை மறந்தோ அல்லது அதற்கு சிறிது அளவு கூட அவமரியாதைக் குறைவு காட்டவேண்டும் என்ற எண்ணத்தோடோ நாங்கள் அதைச் செய்யவில்லை. இம்மாதிரி எங்களுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு, அல்லது ஒருவர் செய்தது தவறு என்றே இருக்கட்டும்,

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [19th November 1963

என்று சொல்லி இருக்கலாம். ஆனால் அப்படிச் சொல்ல வில்லை. "எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காததினால் வெளியேறு கிறோம்" என்று சொன்னார்கள். எதனால் அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை? தங்களுடைய தீர்ப்பினால்தான் கிடைக்கவில்லை. ஆகவே நான் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்தை ஆதரிக்கிறேன்.

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, தலைவர் அவர்களுடைய தீர்ப்பைக் கேட்ட பிறகுதான்—இது ஒரு தர்ம சங்கடமான நிலை என்பதை யாரும் மறந்து விடப்படாது—அதைப் பற்றி விமர்சனம் செய்து பேசுவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறதா, இல்லையா என்பது புலப்படுகிறது. அதற்கு முன்னமேயே, கனம் முதல் அமைச்சருடைய அல்லது சம்பந்தப்பட்ட ஒரு கனம் அமைச்சருடைய பேச்சு முடிந்த உடனேயே, "அவர்கள் இப்படிப் பேசுகிறார்கள், ஆகவே அதைக் கண்டித்து வெளியேறுகிறோம்" என்று சொல்லிவிட்டு வெளியேறிவிட்டால், பிறகு சபாநாயகர் அவர்கள் அந்த ஒத்திவைப்புப் பிரேரணையையோ அல்லது வேறு வகையான வேண்டுகோளையோ ஏற்றுப் பேசலாம் என்று அனுமதி கொடுத்துவிட்டால், வெளியேறியவர்கள் அந்தத் தகவல் என்ன என்று தெரியாமல் தெரிந்து கொள்ள முடியாது. சபாநாயகர் உத்தரவு கொடுத்த பிறகுதான் நிலைமை என்ன என்பது புலப்படும். அப்படிப் புலப்படும்பொழுது, சபாநாயகர் தீர்ப்பை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறோம் என்பதை எப்படிப் புலப்படுத்து கிறோம்? கண்ணியமாக, பண்பாக, இந்த நிலை எங்களுக்கு வாய்ப்பு அற்றதாக ஆகிவிட்டது, அரசாங்கத்தினுடைய போக்கு பிடியாததாக இருக்கிறது, ஜனநாயகத்திற்கு ஒவ்வாததாக இருக்கிறது என்று வெளியேறுகிறோம். அது சபாநாயகரை எந்த விதத்திலும், உள்ளத்தினாலே கூட புண்படுத்தக் கூடிய ஒன்றாக அமையாது என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்து. நான் எழுந்து போகிறபொழுது இதை எடுத்துச் சொன்னேன். இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கவில்லை என்று சொல்லவில்லை. ரிகார்டிலே பதிவாகியிருக்கிறது. ஜனநாயக முறைக்கு விரோத மாக இருக்கிறது என்று சொன்னால், அது சபாநாயகரின் தீர்ப்புக்கு எதிரான கருத்தாக ஆகாது. ஆட்சி பீடத்தில் இருக்கிறவர்கள் வாய்ப்புக் கொடுக்கவில்லை என்பதைத்தான் சுட்டுமே அன்றி, வேறு எதையும் சுட்டாது என்பதைக் கூறிக்கொண்டு, இம்மாதிரியான நிலை ஏற்படும்பொழுது, இனிமேல் எப்படி நடந்துகொள்வது என்று வரம்பு கட்டுவது, அந்த நிலையிலே எப்படிச் செல்லுவது என்பதை . . . .

SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of order, Sir, An hon. Member can have only one chance, I think. But the hon. Member Sri Saw. Ganesan is having a second chance.

திரு. சா. கணேசன்: சபாநாயகர் அவர்களுடைய அனுமதி பெற்றுத்தான் நான் பேசுகிறேன். கனம் உறுப்பினரின் குறுக்கீடு சபாநாயகரின் அலுவலில் குறுக்கிடுவதாகும். இது சபாநாயக

19th November 1963] [திரு. சா. கணேசன்]

ருக்கே அவமதிப்பு என்று நான் சொல்ல வரவில்லை. (சிரிப்பு.) இம் மாதிரி விஷயங்களில் ஒரு வகை செய்து கொள்வது நல்லது என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அந்த முறையிலே, கட்சித் தலைவர்கள், ஆட்சித் தலைவர் இவர்களுக்குள் ஒரு வரம்பை ஏற்படுத்திக் கொள்வது பொருத்தமாக இருக்கும், சபையின் வருங்காலத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்கு ஒரு வழி கூறலாம். மனதிலே வருத்தம் அதிகமாக இருக்கிறது. குமுறுகிற வருத்தத் தைத் தெரிவிக்க முடியவில்லை என்றால், ஒரு வார்த்தை கூடப் பேசாமல் எழுந்து போய்விட்டால், ஆட்சேபணை இருக்காது. நீங்கள் தீர்ப்புக் கூறிய பிறகு, வாய்ப்புக் கிடைக்கவில்லை, ஆகவே எழுந்து போகிறோம் என்று சொல்வது, சபாநாயகரை அவமதித்ததாக ஆகும். ஒன்றும் கூறாமல் போனால் கூட ஆட்சேபணை இருக்காது.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, கனம் முதல்வர் அவர்கள் எடுத்துக் கூறியதைப் போல், பேசாமல் சென்றால், அதிக அவமரியாதையைத் தருமோ என்று நான் அஞ்சு கிறேன். எப்பொழுதும் கூட ஒவ்வொரு அங்கத்தினரும், அவைத் தலைவருக்கே வணக்கம் தெரிவித்துத் தனித் தனியாக அவையை விட்டுச் செல்லக் கூடிய உரிமை இருக்கிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம், ஒரு காரணத்தை வணக்கமாகத் தெரிவித்துவிட்டு, அதனையும் ஒரு நோக்கத்தைத் தெரிவித்துவிட்டுச் செல்வதானது, அதிக மரியாதை யையும், சிறப்பையும் தருவதாகும். அந்தக் காரணத்தினால், அது உணர்ச்சியை வெளிப்படுத்துகிற ஒன்றே தவிர, அவமதிப்பை வெளிப்படுத்துகிற ஒன்று அல்ல என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயக ஆட்சியில் சிறுபான்மையினருக்கு இந்த உரிமை தொடர்ந்து இருக்கிற காரணத்தினாலே, பாராளு மன்றத்திலும், வேறு சட்ட மன்றங்களிலும் நடைமுறை மரபாக ஆகாவிட்டாலும், கன்வென்ஷனாக இருந்து வருகிற காரணத்தினாலே, இந்த முறைக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKxR : I reserve my ruling.

(2) EX-CHIEF MINISTER'S FAILURE TO MAKE A STATEMENT ON HIS RESIGNATION.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, on a point of order. I most respectfully submit . . .

MR. SPEAKER : What is the book the hon. Member is having?

SRI K. A. MATHIALAGAN : Our Assembly Rules.

[19th November 1963

MR. SPEAKER : What specific rule is the hon. Member referring to?

SRI K. A. MATHIALAGAN : Rule 56 states as follows :—

(1) A Member who has resigned the office of Minister, may, with the consent of the Speaker, make a personal statement in explanation of his resignation.

தம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் கடந்த மாதத்தில் ராஜினாமா செய்தார்கள். அந்த விதியின்படி, அவர்கள் அவ்வாறு ராஜினாமா செய்ததை இந்த மன்றத்திற்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

MR. SPEAKER : The hon. Member may please read the rule again.

SRI K. A. MATHIALAGAN : According to the Hon. Chief Minister " may ", means " shall ".

MR. SPEAKER : I do not want the hon. Member to refer to anybody's interpretation. What is the hon. Member's view about it?

SRI K. A. MATHIALAGAN : I shall explain, Sir.

MR. SPEAKER : All right. Let the hon. Member explain.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மரபை ஒட்டித்தான் முன்னாள் இருந்த திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், முதலமைச்சர் என்ற காரணத்தினாலும், சபையை அவமதிப்பதாகும் என்ற காரணத்தினாலும், It amounts to contempt of the House and disrespect to the House என்ற காரணத்தினாலும், "may" என்பதற்கு 'shall' என்ற பொருள் கொண்டு விளக்கம் கொடுத்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : 'மே', 'ஷெல்' என்பதெல்லாம் இருக்கட்டும். சில இடங்களில் தான் 'மே' என்பது 'ஷெல்' ஆகும். கண்ணை மூடிக்கொண்டு படிக்கக் கூடாது. இப்பொழுதும் ஒரு கன்வென்ஷன் இருக்கிறது. அமைச்சர்கள் ராஜினாமா செய்தால், வேண்டுமானால் ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறார்கள். அப்படி இல்லை என்றால், ஸ்டேட்மெண்ட் கொடுக்காமல் இருக்கிறார்கள். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

MR. SPEAKER : There is no point of order in this.

III—ADJOURNMENT MOTIONS.

(1) DEATH OF A PERSON IN POLICE CUSTODY AT TIRUMANGALAM.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion to discuss a matter of urgent public importance, viz., the death of one Sri Mani, who was beaten to death while in police custody at the police station at Tirumangalam, Madurai district, on 8th August 1963. This

19th November 1963] [Mr. Speaker]

incident is said to have taken place on 8th August 1963. The House was in session from 6th to 17th August 1963. This matter has not been brought before the House then. This matter is already old.

SRI M. KALYANASUNDARAM : On the point of delay, I want to explain.

MR. SPEAKER : All right. The hon. Member may please explain.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் விரும்புவது போல சென்ற சட்டசபை கூட்டத்திலேயே இந்த விஷயத்தை ஏன் கொண்டுவரவில்லை என்பதற்கு காரணம் கூற விரும்புகிறேன். நான் அந்த தேதிகளில் சபைக்கு வர முடியவில்லை. அதையொரு காரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அப்பொழுதே கொண்டு வந்திருந்தாலும் அரசாங்கம் விசாரணை நடத்தப்போகிறார்கள், அதற்குள் அவசரப்பட்டு கொண்டு வந்து விட்டார்கள் என்று சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் அப்பொழுது கொண்டு வரவில்லை. இப்பொழுது நான் அவசரப் பிரேரணையாக கொண்டு வந்து இருப்பது அன்று நடந்த சம்பவத்தைப்பற்றி அல்ல. ஆனால் அரசாங்கம் விசாரணை நடத்த தவறிவிட்டது, இதுவரை எந்த ஏற்பாடும் செய்யவில்லை, எந்த உத்தரவும் இடவில்லை என்பதை சுட்டிக் காட்டத்தான்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தலைவர் அவர்களே, இது சமீபத்தில் நடந்த சம்பவம் அல்ல. அது மட்டுமல்லாமல் இது அவசர பிரேரணைக்கு உரிய ஒரு விஷயமும் அல்ல. அவசர கேள்வி கேட்கலாம். அல்லது கால் அட்டென்ஷன் நோட்டீஸ் 41-வது விதிப்படி கேட்கலாம்; அப்பொழுது என்ன நடந்தது என்பது பற்றி ஸ்டேட்மெண்ட் கொடுக்கலாம். ஆனால் இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I withhold consent.

(2) REFUSAL OF MANAGEMENTS OF SOME TEXTILE MILLS TO GIVE BONUS TO THEIR WORKERS.

MR. SPEAKER : I have also received notice of another adjournment motion from Sri M. S. Mani regarding the refusal of the managements of the Hasar Textiles, Pankaja Mills and Kathri Mills and Sudarsan Textiles to give bonus to their workers with a view to wreak vengeance on their workers and the declaring of a lock-out of the mills concerned and thus throwing out of employment 5,000 workers.

திரு. எம். எஸ். மணி : சபாநாயகர் அவர்களே, கோவை மாவட்டத்திலே நான்கு மில்கள் லாக்அவுட் செய்து இருக்கிறார்கள். அந்த நான்கு மில்களிலும் வேலை செய்யும் சுமார் 5,000 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் தவிக்கிறார்கள்.

ஆகவே, அந்த மில்களை திரும்பவும் திறப்பதற்கும் வேலையற்ற தொழிலாளர்களுக்கே திரும்ப வேலை வாய்ப்பு கிடைக்கவும் இந்த பிரரேரணையை விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயம் அவசரப் பிரரேரணைக்கு உரியது அல்ல என்பதை முதலிலேயே சொல்ல விரும்புகிறேன். ஆண்டு தோறும் போனஸ் விஷயம் கோவையில் பல மில்களிலே சமரசமாக தீர்க்கப்பட்டு வந்து இருக்கிறது. இந்த ஆண்டு சில மில்களில் சுமுகமான முடிவு ஏற்படவில்லை என்ற காரணத்தினால் இரு சாராரோடும் பேசி, தொழிலாளர்கள் தொழிலதிபர்கள் இவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு முடிவு ஏற்பட்டது. இருந்தாலும் சில தொழிலாளர்கள் கொஞ்சம் அதிகமாக கொடுங்கள் என்று தொந்தரவு கொடுத்தால் சமரசத்திற்கு முரணாக நடந்ததால் சிக்கல் ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அந்த விஷயம் தொழிலாளர் இலாகாவினால் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆகவே அந்த விஷயம் ஒரு அவசர பிரரேரணைக்கு உரியது அல்ல; அதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கூறக்கூடிய விஷயம் அல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The Industrial Disputes Act prescribes the procedure for settling industrial disputes. In the present case recourse could be had for settling the dispute to the various agencies prescribed under the Act. Before the matter could be dealt with by those agencies, there is no need to bring the matter to the notice of the House. Therefore, consent is withheld.

IV—PRIVILEGE MATTER.

SUB-EDITORIAL IN THE "DINAMANI"

MR. SPEAKER: Mr. M. Kalyanasundaram has given a notice of a matter of privilege. The matter relates to an editorial written in the Tamil Daily "Dinamani", dated the 25th October 1963.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, பத்திரிகையைப் பற்றி ஒரு உரிமைப்பிரச்னை கொண்டு வருவது என்பது அவ்வளவு உற்சாகம் அளிக்கும் விஷயம் அல்ல. இந்த விஷயத்தை நான் வருத்தத்தோடு தான் கொண்டு வந்து இருக்கிறேன். பத்திரிகைகளுக்கு, சுதந்திரம் இருக்கக்கூடாது, நம்முடைய சபையின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்யக்கூடாது என்று சொல்ல வரவில்லை. ஆனால் பத்திரிகையில் வருவதற்கு பதில் சொல்ல சந்தர்ப்பம் கிடையாது. அரைகுறை ஞானத்தை வைத்துக் கொண்டு எழுதப்படும் கருத்துக்களுக்கு ஒரு தெளிவு கூற வேண்டும், அதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும் என்று தங்களை இந்த பிரச்சனைக்கு தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தினமணி அக்டோபர் 25-ந் தேதி இதழில் ஒரு உப தலையங்கம் எழுதியிருக்கிறது. அது வழக்கறிஞர்கள் நடத்திய கருத்து அரங்கை அடிப்படையாகக் கொண்டது. சட்டத்தில் ஏற்படும் குறைபாடுகள் என்ன என்பது பற்றி கருத்தரங்கு நிகழ்த்தியிருக்கிறார்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதைக் குறித்து உப தலையங்கம் எழுதியிருக்கிறார்கள், "சட்டமும் மனித உரிமைகளும்" என்ற தலைப்பின்கீழ். "அவசர அவசரமாக மாறுதல்களை செய்தே தங்கள் அதிகாரமும் செல்வாக்கும் நீடிப்பதற்கு வழி செய்துகொள்ள அரசியல் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் விரும்புவதில் ராஜீய வகையில் தவறு இல்லாமல் இருக்கலாம்" ஆனால் போதிய ஆராய்ச்சியும் சிந்தனையும் இன்றி, காரிய காரண "விளக்கங்கள் இல்லாமல் செய்யும் மாறுதலின் விளைவுகள் தெளிவாகப் புலப்படாதவாறு சட்டம் இயற்றிவரும் போக்கு வலுத்து வருகிறது. அப்படி இயற்றப்படும் சட்டங்கள் தரும நியாய அடிப்படைகளுக்கு புறம்பாக அமையக்கூடும். தவிர போதிய பயிற்சி இல்லாதவர்கள் தயாரிக்கும் மசோதாக்கள் எண்ணற்ற விவகாரங்களுக்குக் காரணமாகிவிடலாம்." ஆகவே சபை அங்கத்தினர்கள் சிந்தனையற்றவர்கள், பொறுப்பற்றவர்கள் என்ற முறையில் எழுதியிருக்கிறது. ஒரு சட்டத்திற்கு பொறுப்பு அரசாங்கத்திற்கு அதிகமானது. இந்த சபையின் அங்கத்தினர்கள் பயிற்சியற்றவர்கள் என்று குறிப்பிடுவது சரியானதாகாது. உண்மையிலேயே ஒரு சட்டம் இயற்றுவதற்கு முன்னால் அது நன்றாக ஆராயப்படுகிறது. லா டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அங்கே நிபுணர்கள் இருக்கிறார்கள். எந்த வக்கீல்கள் இந்த கருத்தரங்கை நடத்தினார்களோ அவர்களைச் சார்ந்த வக்கீல்களே இந்த இலாகாவிலும் அமைகிறார்கள். திறமையாக பரிசீலனை செய்து உருவாக்குகிறார்கள். ஏதாவது தவறு என்றால் அது அமைப்பில் இருக்கும் குறைபாடாகத்தான் இருக்கும். நீதி மன்றங்களிலே குறைபாடுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு சட்டம் மசோதா நிலையில் இருக்கும்போது செலக்ட் கமிட்டி வழக்கறிஞர்களை கேட்டு எழுதுகிறது. ஆனால் அவர்கள் தக்க பதில் எழுதி அனுப்புவதில்லை. அந்த நிலையில் அவர்கள் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினால் அது உபயோகமாக இருக்கும். அதை விட்டு சட்டசபை அங்கத்தினர்கள் பயிற்சியற்றவர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லுவதை நான் ஆட்சேபிக்கிறேன். அரசாங்கக் கொள்கையில் உறுதியில்லாமல் சட்டம் கொண்டு வரலாம், அதனால் குறைகள் ஏற்படலாம். ஆகவே இந்த உரிமை பிரச்னையை சபை பரிசீலனை செய்து அல்லது உரிமை பிரச்னை குழுவிற்கு அனுப்பி பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தின் உரிமை பாதிக்கப்பட்டிருக்குமானால் அதன் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதிலிருந்து இந்த மன்றத்தைப்பற்றி குறிப்பாக

[திரு. எம். பக்தவத்சலம்] [19th November 1963

குறைவுபடுத்தி இருப்பதாக புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த மன்றத்தைப்பற்றியோ இதைச் சார்ந்த உறுப்பினர்களைப்பற்றியோ குறைவுபடுத்தியிந்தால் அது உரிமைப் பிரச்னையாகும். இந்த மன்றம் அந்த விஷயத்தை உரிமைப் பிரச்சனையாக எடுத்துக்கொண்டு ஆராயலாம். ஆனால் இப்போது கனம் அங்கத்தினர் படித்த உப தலையங்கத்தை நானும் முன்பு படித்தேன். அப்போது படித்தது நினைவில்லை. இப்போது இவர்கள் படித்துக் காட்டியதில் இருந்து ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக இயற்றப்படுகிற சட்டத்தைபற்றி அங்கு கூறப்பட்டிருக்கிறதே தவிர இந்த மன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தைப் பற்றியோ, இந்த மன்ற அங்கத்தினர்களைப் பற்றியோ குறிப்பிட்டிருப்பதாக நான் நினைக்கவில்லை. மசோதாவைத் தயாரிக்கின்றவர்கள் என்றால் செக்ரடேரியட்டில் இருக்கின்றவர்களைத்தான் அது குறிக்கும். அப்படி அவர்கள் உப தலையங்கத்தில் எழுதி இருக்கக்கூடிய விஷயம் தப்பு என்று நாமும் சந்தர்ப்பம் வரும்போது நன்றாக எடுத்துக் காட்ட முடியும். அவர்கள் கருத்து மிகவும் பிற்போக்கானது, விஷயத்தை நன்கு பரிசீலனை செய்து வெளியிடப்பட்டது அன்று எனவும் எடுத்துக் காட்ட முடியும். ஆனால் கனம் அங்கத்தினர் அதைப் படித்தவுடன் எனக்குத் தோன்றியது என்ன என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அது உரிமைப் பிரச்சனை ஆகாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அதைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The editorial does not contain any comments on the observations made in the Seminar. It only welcomes those observations. Even the observations do not contain any matter which amounts to a breach of privilege. The ideas expressed are that there is a tendency to enact legislation without proper study and without bestowing much thought. This is not directed against the Madras Legislature or its members. It is only a general observation and it should not be so interpreted as to apply particularly to Madras Legislature and its members. There is no imputation of *mala fides*. Even in various books we find such observations which are just general in character and they cannot be objected to. Parliamentary privilege should not be administered in a way which would fetter or discourage the free expression of opinion or criticism however prejudiced or exaggerated such opinion or criticism may be. The observations are not definite and there is also no *mala fides*. The matter does not involve a matter of privilege. No *prima facie* case has been made out.

V. CALLING ATTENTION TO DIFFICULTIES OF AGRICULTURISTS IN DHARMAPURI BLOCK IN GETTING LOANS.

SRI R. S. VEERAPPA CHETTIAR : Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, viz., hardship and difficulties experienced by

19th November 1963] [R. S. Veerappa Chettiar]

agriculturists in Dharmapuri Block area in getting loans for agricultural operations ever since the area has been brought under the Full Finance Scheme, etc.

* THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, the Full Finance Scheme was introduced in the Dharmapuri block with effect from 1st September 1962. There has been no report of hardship in getting loans by the ryots in the area, for agricultural operations. In fact, there is a steady increase in the issue of loans by the co-operative societies in this block. There are 22 village credit societies, one town bank and one land mortgage bank providing credit to the agriculturists of this block. During the year 1961–62, they issued loans to the extent of Rs. 7·33 lakhs. The loans issued during the year 1962–63 amounted to Rs. 12·21 lakhs. As early as 15th April 1963, the Dharmapuri Co-operative Supervising Union drew up a programme for the issue of loans by the village credit societies in its area, including the Dharmapuri block: and according to this programme, and the estimated issue of loans by the land mortgage bank and the town bank, the agricultural credit co-operatives will be issuing loans during 1963–64 to the extent of Rs. 16 lakhs, in this block. During the last four months in the current co-operative year, i.e., from 1st July to 31st October 1963, loans to the extent of Rs. 4·57 lakhs have been issued by them.

2. The loan applications of the societies are considered by the Supervising Union and the Central Bank very promptly. The average time taken for the sanction of a loan to a village credit society is only about 12 days. During 1962–63, i.e., from 1st July 1962 to 30th June 1963, the Salem Co-operative Central Bank received 63 loan applications for a sum of Rs. 9,69,638 from 19 agricultural credit societies in the Dharmapuri area. All these applications were sanctioned by the Central Bank and the loans sanctioned amounted to Rs. 9,35,508. The reduction of Rs. 34,130 was due to defective title deeds, default of sureties, etc. No loan application was rejected for want of funds.

The takkavi loans issued in the block for purposes such as purchase of lands, installation of pumpsets, etc., amounted to roughly Rs. 1·50 lakhs, per year, on an average. Against this, for the current year, the societies will be issuing medium-term and long-term loans alone to the extent of Rs. 5·00 lakhs out of the proposed Rs. 16 lakhs, thereby more than making up the gap caused by the stoppage of takkavi loans.

It is, therefore, not correct to say that the agriculturists in the Dharmapuri Block are facing hardship in getting loans for agricultural operations or that arrangements have not been made for the issue of loans by co-operatives.

VI—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS PRESERVATION OF PRIVATE FORESTS (AMENDMENT) BILL, 1963

* THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir, yesterday I moved the motion that the Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1963, be taken into consideration.

The Madras Preservation of Private Forests Act was enacted in the year 1946 with a view to preventing indiscriminate destruction of private forests (especially those in estates governed by the Madras Estates Land Act, 1908) and interference with customary and prescriptive rights therein. The Act, as it stands, now applies to forests situated in estates, as defined in the Madras Estates Land Act, 1908, and to areas exceeding 30 acres, which may be declared by the State Government to be forests for the purposes of the Act. The Act provides that no owner of any private forest shall, without the previous sanction of the District Collector, sell, mortgage, lease or otherwise alienate the whole or any portion of the forest and that no owner of any forest and no person claiming under him whether by virtue of a contract, licence or any other transaction entered into before or after the commencement of the Madras Preservation of Private Forests Act, or any other person, shall without the previous permission of the District Collector cut trees or do any act likely to denude the forest or diminish its utility as a forest except the removal of dead or fallen trees or any act done for the usual or customary domestic purposes or for making agricultural implements.

The Act was originally enacted as a temporary measure for a period of two years with effect from 3rd December 1946 and it has since then been continued for one or two years at a time. It was proposed to embody the essential provisions of the Madras Preservation of Private Forests Act in the Madras Forests Act, 1882, by amending it. It was, however, later on decided that separate, permanent and effective legislation should be undertaken in respect of private forests in this State. As a separate legislation regarding private forests did not materialise, when the Madras Preservation of Private Forests Act was due to expire last time, the life of the Act was extended up to and inclusive of 2nd December 1963.

The question of undertaking separate, permanent legislation regarding private forests is now under the active consideration of the Government in consultation with the Chief Conservator of Forests and the Board of Revenue (Land Revenue). It is not likely that this legislation will materialise before 2nd December 1963, the date on which the Madras Preservation of Private Forests Act is due to expire. The Government have, therefore, decided to extend the life of the original Act for a further period of two years beyond 2nd December 1963. The Bill accordingly provides for extension of life of the Act up to and inclusive of 2nd December 1965.

I request the House, Sir, to accept the motion.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1963, be taken into consideration."

SRI M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir, I have given notice of an amendment, but I do not propose to move it. I want to speak on the motion. 11-00 a.m.

கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்த திருத்தம், இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்பது. இப்போது அமைச்சர் அவர்கள் கோருவது, ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டத்தை இன்னும் இரண்டு வருஷ காலத்திற்கு நீடிக்க வேண்டுமென்பது. இந்த மாதிரி ஒவ்வொரு முறையும் இரண்டு வருஷத்திற்கு நீடிக்க வேண்டுமென்று சொல்லி இந்தச் சபை முன் வந்து கொண்டே இருக்கிறார்கள். இது அவசியமா? என்ன இடைஞ்சல் இருக்கிறது? இந்தச் சட்டம் ஆரம்பத்தில் அமைவதற்குக் காரணமே நாம் ஜமீன்தாரி முறையை ஒழிக்க எடுத்த நடவடிக்கைதான். அதைத் தொடர்ந்தே இதுவும் வந்திருக்கவேண்டும். பெரும்பாலும் பழைய ஜமீந்தார்கள் தங்களுக்குச் சொந்தமாகக் காடுகளை வைத்துக் கொண்டிருந்தார்கள். புதுக்கோட்டை மகாராஜாவுக்குப் 10.000 ஏக்கர் காட்டுப் பகுதி சொந்தமாக இருக்கிறது. இந்த முறையில் தனியாருக்குச் சொந்தமான காடுகள் இருக்கின்றன.

கனம் திரு. வெ. ராமையா: புதுக்கோட்டை மகாராஜாவுக்குச் சொந்தமாகக் காடுகள் கிடையாது. அந்தக் காட்டில் வேட்டையாடுவதற்குத்தான் அவருக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த மாதிரி, காடுகள் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய காரணம் என்ன? தற்போது நம்முடைய ராஜ்யத்தில் வன வளம் குறைந்து வருகிறது. அதுவும் மொழி வழி ராஜ்ய அமைப்புக்குப் பிறகு, மலபார், ஆந்திரா பிரிந்த பிறகு வன வளம் ரொம்பக் குறைவாக உள்ளது. வன வளத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு மரம் நடு விழா, வன அபிவிருத்தி போன்ற காரியங்களைச் செய்து கொண்டு வரும் நோக்கில் தனியார் வசம் இருக்கக்கூடிய பகுதிகளில் எந்த வித அபிவிருத்தியும் இல்லை. மரம் வெட்டக் கூடாது என்று சட்டம் இருக்கலாம். ஆனால் அதற்குக் காவல் எங்கே இருக்கிறது? யார் போய் ஒத்துக்குள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? தனியார் காடுகளில் மரம் வெட்டப்படாமல் இருக்கிறதா என்பதே சந்தேகம். அரசாங்கக் காடுகளிலேயே திருட்டுத்தனமாக மரம் வெட்டப்படுகிறது என்று பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதற்காக எத்தனையோ பாரஸ்ட் அதிகாரிகள் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள். திருட்டைத் தடுப்பதற்காகவே, ரோடுகளில்கூட லாரியில் விறகு போடக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. தனியாருக்குச் சொந்தமான காடுகளிலும் மரம் வெட்டாமல் இருக்கவேண்டுமென்று சட்டம் இருக்

அந்தத் தவறைக் கூட எடுத்துச் சொல்லுவதற்கு எங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லையே என்பதைச் சொல்லி, அப்படி வாய்ப்பு இல்லாமல் அரசாங்கம் எங்களுக்கு வழியை மறைக்கின்றதே என்று எங்கள் அதிருப்தியைக் காட்டுவதற்குத்தான். (குறுக்கீடு) அரசாங்கம் வழியை மறைக்கின்றதே என்றால், இந்தச் சபையிலே அல்ல, வெளியிலே 144 தடை உத்தரவு போட்டு எது, என்ன, எப்படி என்பதை எடுத்துச்சொல்லுவதற்கு வாய்ப்பு இல்லாதவாறு அரசாங்கம் தடை செய்கிறதே என்பதை புலப்படுத்துவதற்கு வேறு வழி எங்களுக்கு இல்லை. ஆனதினாலேதான் வெளி நடப்பு செய்தோம். சபையினுடைய கண்ணியத்திற்கும், கௌரவத்திற்கும் குறை வராத வகையிலே நாங்கள் நடப்போம். இப்படிப்பட்ட ஒரு நிலையிலே எப்படி நடக்க வேண்டும் என்று நமக்குள்ளேயே ஒரு வழிமுறையை, நெறி முறையை நாம் வகுத்துக் கொண்டுவிட்டால், அதன்படி நாம் எல்லோரும் இயங்கி, சேர்ந்து பணியாற்ற கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளவும் நான் விரும்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது கிளப்பியிருக்கும் ஒழுங்குப் பிரச்னையானது மிகவும் ஆழமாக சிந்திக்கவேண்டிய பிரச்னை என்று நான் கருதுகிறேன். இது நேற்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றியது மட்டுமல்ல. இதற்கு முன்பு நடந்தவை, இனி நடக்க இருப்பவை எல்லாவற்றிலும் எதிர்பார்க்கக்கூடிய ஒழுங்குப் பிரச்னையாக இருக்கிறது. இந்தச் சபையில் மட்டுமல்ல, நம்முடைய நாட்டிலே மட்டும் எடுத்துக் கொள்வோம், மற்ற நாடுகளுக்குப் போக வேண்டியதில்லை, இதர ராஜ்யங்களில், டெல்லியில் உள்ள பாராளுமன்றத்தில், நமக்கெல்லாம் தலைமை ஸ்தாபனமாக இருந்து வழிகாட்டியாக இருக்கக்கூடிய பாராளுமன்றத்தில், அங்கெல்லாம் கூட இம்மாதிரி நிகழ்ச்சி ஏற்படும்பொழுது, இம்மாதிரி சபாநாயகரின் தீர்ப்பை அவமதிப்பதாகக் கருதுவதில்லை. இதற்கு முன்பு கூட சில சந்தர்ப்பங்களில் நாங்கள் கூட இம்மாதிரி வெளிநடப்பு செய்ய நேர்ந்திருக்கிறது. அரசாங்கத்தின் கொள்கையை எதிர்த்தோ அல்லது மெஜாரிடியின் முடிவை எதிர்த்தோ வெளிநடப்பு செய்வது சபையில் சிறுபான்மையாக இருக்கக் கூடிய எதிர்க் கட்சிக்கு உள்ள வாய்ப்பு. அந்த அளவுக்கு முதல் அமைச்சர் அவர்கள் கூறியது சரி. ஆனால், அப்படிச் செய்வது சபாநாயகரின் தீர்ப்பை எதிர்ப்பது போலாகும் என்று சொல்லுவது முறையல்ல. இதுவரையில் நாங்கள் அம்மாதிரி செய்ததில்லை. அவர்களும் அம்மாதிரி செய்ததாகச் சொல்லவில்லை. எனக்கு இதில் ஒரு யோசனை தோன்றுகிறது. சபாநாயகர் தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்னால், முதல் அமைச்சர் சொல்லியதை எதிர்த்துக் கண்டிக்கும் வகையில் வெளியேறிவிடலாம். அதன் மூலம் நாம் இந்தச் பிரச்சனையை சமாளித்துவிடலாம். அப்படிச் செய்தால் தங்களுக்கு சங்கடமான நிலை ஏற்படலாம். நீங்கள்

தீர்ப்பு அளிப்பதற்கு முன்னால் வெளியேறுகிறோமே என்று நீங்கள் சொல்லக்கூடாது. இதை ஆழ்ந்து சிந்தித்து இதன் பேரில் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஒன்றை தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 'பிரைஸைடிங் ஆபீஸர்ஸ் கான்பெரென்ஸ்' ஒன்றில் இம்மாதிரி சபாநாயகர் அல்லது சபையின் தலைவர் ஒரு தீர்ப்பு கொடுத்தால், அதையொட்டி இம்மாதிரி 'வாக் அவுட்' செய்வது தவறு என்று கூட முடிவு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இதைத் தங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, நாகபுரியில் நடைபெற்ற சபாநாயகர்கள் மகாநாட்டில் இம்மாதிரி வெளிநடப்புச் செய்தால், சபாநாயகரை எதிர்த்து செய்யப்பட்டதாக கொள்ளக்கூடாது என்ற முறையில் முடிவு எடுக்கப்பட்டதாக நினைவு இருக்கிறது. அதையும் தாங்கள் மனதில் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய தலைவர்கள் குறிப்பிட்டதுபோல், பாராளுமன்றத்திலோ அல்லது மற்ற ராஜ்ய சட்டமன்றங்களிலோ இம்மாதிரி நடவடிக்கைகள் ஆட்சேபனைக்குரியவை என்ற கருத்து வெளியிடப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. சட்டமன்ற நடவடிக்கைகளில் நம்முடைய மாநிலம் முன்னால் நிற்கிறது என்று நாம் பெருமைப்பட்டுக்கொள்கிறோம். ஜனநாயக பண்பாட்டிற்கு விரிவான அர்த்தம் கொடுக்கக்கூடிய வகையில் நம் மனதை பண்படுத்திக்கொள்ளவேண்டும். நேற்றைய நடவடிக்கைகள் யாரையும் அவமதிக்கக்கூடிய நோக்கத்தோடு நடைபெறவில்லை. ஜனநாயகத்திற்கு ஒரு சிறு விலங்கைக்கூட போடக்கூடாது. ஜனநாயக முறைக்கு விரிவான அர்த்தம் கொடுக்கக்கூடிய வகையில் இந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் கூறியதை ஏற்றுக்கொள்ளுவது சரியானதாகாது என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: கனம் சபாநாயகர் அவர்களே, 10-30 a.m.
கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தை நான் ஆதரிக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்ற அங்கத்தினர்களும், திரு. சா. கணேசன் அவர்களும், தாங்கள் சபாநாயகர் அவர்களுடைய தீர்ப்பை ஆட்சேபித்து வெளியேறவில்லை என்று அழகாகப் பதில் சொன்னார்கள். ஆனால், தங்களுடைய தீர்ப்புக்குப் பிறகுதான் அவர்கள் வெளியேறினார்கள். வெளியேறும் பொழுது "எங்களுடைய தலைவர் திரு. அண்ணாதுரை கைது செய்யப்பட்டதைக் கண்டித்து வெளியேறுகிறோம், அல்லது 144 தடை உத்தரவு போட்டதைக் கண்டித்து வெளியேறுகிறோம்"

கிறது. சட்டம் இருப்பினும் தனிப்பட்டவர்கள் காடுகளில் மரம் வெட்டப்படாமல் உள்ள நிலைமை இல்லை. மரம் வெட்டப்படக் கூடாது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால் அவர்கள் அதிக மரங்களை நடவேண்டுமென்ற உற்சாகத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்த நிலைமையில் ஏன் இவ்வளவு பெரிய பரந்த பிரதேசத்தைத் தனியாரிடம் விட்டு வைத்திருக்க வேண்டும்? விவசாய நிலம் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருக்கலாம் என்பதற்கே உச்ச வரம்பு 30 ஏக்கர்தான் வைத்திருக்கலாம் என்று சட்டம் செய்திருக்கிறோம். அந்த மாதிரித் துணிவாகச் சட்டம் செய்திருக்கும்போது, இந்த மாதிரிக் காடுகள் தனிப்பட்டவர்கள் வசம் இருக்க வேண்டிய அவசியம் என்ன? ஆகவே, தனிப்பட்டவர்களிடம் உள்ள காடுகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு அபிவிருத்திக்கான திட்டம் போட வேண்டும். அதற்குத் துரிதமாக ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும். அவ்வாறு ஒரு சட்டம் கொண்டு வருவதை ஏன் இன்னும் இரண்டு வருஷங்களுக்கு நீடிக்க வேண்டும்? இந்தச் சட்டத்தை ஒரு வருஷத்திற்கு நீடித்துக் கொண்டால் போதாதா? அடுத்த டிசம்பர் மாதம் வரை இதனை நீடித்திருந்தால் நான் அதை ஆமோதித்திருப்பேன். இப்போது இரண்டு வருஷம் என்றிருப்பதால் ஆட்சேபிக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்கள். அவர்கள் இந்த இலாகாவின் பொறுப்பேற்றுக்கொண்டவுடன் இந்த இலாகாவிலே கவனம் செலுத்தி நல்ல காரியம் செய்தோம் என்ற முறையில் இந்தச் சட்டத்தை எவ்வளவு சீக்கிரம் கொண்டுவர வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் கொண்டுவர முன்வரவேண்டும். மெஜாரிட்டி இருக்கும் காரணத்தால் இரண்டு வருஷம் என்ற திருத்தத்தை நிறைவேற்றி விட்டாலும், ஒரு வருஷத்திற்குள் சட்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஏற்கனவே உள்ள 'மெயின் ஆக்ட்' மிக நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பூரணமாக சரிவர அமல் செய்யப்படாமல் இருக்கிறது. குறிப்பாக, மலைப் பிராந்தியங்களில் சரிவர அமல் நடத்தப்படவில்லை. கோடைக் கானல் மலைப் பிரதேசத்தில் நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் விஸ்தீர்ணமுள்ள காடுகளில் உள்ள மரங்களை எல்லாம் எதேச்சாதிகாரமாக, எந்த உரிமையும் இல்லாது அழித்துவிட்டு இன்று காய்கறி போன்றவற்றைப் பயிரிட்டு வருகிறார்கள். இதிலே ஒரு பெரிய பிரச்னை என்னவென்றால், இந்தக் காடுகள் ரெவின்யூ பாரஸ்டா அல்லது பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டின்கீழ் வரக்கூடிய பாரஸ்டா என்பதிலே சிக்கல் கிளப்பப்பட்டு அதைத் தீர்க்க கோர்ட் வரை கொண்டுபோய், அதிலே ஒரு முடிவு எடுக்க, நான்கு, ஐந்து ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. நாலைந்து ஆண்டுகளுக்குள் ஆக்கிரமிப்பு செய்த அவர்கள் அந்த நிலங்களில் காய்கறி, பழங்கள் முதலியவற்றைப் பயிரிட்டு ஆயிரக் கணக்காகச் சம்பாதித்து விடுகிறார்கள்.

அதோடு முதலில் வெட்டி காலி செய்த மரங்களையும் ஆயிரக் கணக்கில் விற்று பெருத்த அளவுக்குச் சம்பாதித்து விடுகிறார்கள். பல ஆண்டுகள் பல கோர்ட்டுகளில் அதைக்கொண்டே எதிர் வாதமும் ஆடமுடிகிறது. குறிப்பாகச் சொன்னால், இன்றைக்கு கோடைக்கானல் மலையில் 'ஆப்பிள் ரிசர்ச் ஸ்டேஷன்' ஆரம்பித்து இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள நூற்றுக் கணக்கான ஏக்கரைத் தனிப்பட்ட வியாபாரி ஒருவர் நான் சொல்லியிருப்பது போல் பல ஆண்டுகளாக எதேச்சாதிகாரமாக வைத்துக் கொண்டிருக்கிறார். இந்த மாதிரியான தனியார் ஆக்கிரமிப்பு பூரணமாகத் தடுக்கப்படவேண்டும். அந்த வகையிலே சட்டம் அமல்படுத்தப்பட வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, 'பாரஸ்ட்' என்கிற பெயருக்குக் கீழ் காடுகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற இடங்களில் எல்லாம் மிகப் பெரும் தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பல சந்தர்ப்பங்களில் உங்கள் மூலம் புலப்படுத்திக் கொண்டிருக்கிறேன். வெறும் பொட்டலாகக் கிடந்த இடங்களையெல்லாம் காடுகள் என்று சொல்லி 'பாரஸ்ட்' என்பதன்கீழ் கொண்டு வந்திருக்கிற குழப்பங்கள் நம்முடைய மாநிலத்திலே பெருவாரியாக ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் சிறப்பாக, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை பகுதிகளில் இந்தத் தகராறுகள் மிக நிரம்ப இருக்கின்றன என்பதை மறுபடியும் நான் புலப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மறுபடியும் ஒழுங்காக சர்வே செய்யப்பட்டு, உண்மையிலேயே காடுகள் என்றால் மரங்கள் வளர்ந்திருக்கும் பகுதிகளா அல்லது ஒன்றுமே விளையாத 'கிராவல் பூமியும்' காடுகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். 'கிராவல் பூமி'யையும் காடு என்று சொல்வது நமது பக்கத்திலே மரபாக இருக்கிறது என்பதை மறந்து விடப்படாது. இதையெல்லாம் கணித்து, செம்மைப்படுத்தி, எந்தப் பிராந்தியம் காடு, எந்தப் பிராந்தியம் காடு அல்லாத வெறும் பொட்டல் நிலம் என்பதை நிர்ணயம் செய்யவேண்டிய நிர்ப்பந்தமும், அவசியமும் அரசாங்கத்துக்கு உண்டு. ஆகவே, இவற்றையெல்லாம் செம்மையாகக் கணித்து, அளவோடு வரையறை செய்து, அதன் பிறகு அந்தக் காடுகளை எப்படிக் காக்க வேண்டும், வளர்க்க வேண்டும் அல்லது காடு அழிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் மீண்டும் காடுகளை உற்பத்தியாகும்படி செய்யவேண்டும் என்றெல்லாம் வழிவகை செய்யவேண்டும். ஆகவே, என்னைக் கேட்டால் இந்தக் காரியத்தைச் செய்ய இந்த இரண்டு வருஷம் கூடப் போதாது. அதை முழுவதும் அரசாங்கமே எடுத்துக் கொள்ளுவதா, இல்லையா என்பதையெல்லாம் பற்றி இப்போது சர்ச்சை செய்ய நான் விரும்பவில்லை. அதை எப்படி வேண்டுமென்றாலும் செய்யட்டும். இது காடு, இது காடல்ல என்ற சர்வேயை முடித்து அதற்கு வேண்டிய வழிமுறைகளை வகுக்கவே இரண்டு ஆண்டுகள் போதாது என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்து. காரியம் விரைவாகச் செய்யப்பட வேண்டும் என்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லை.

அதிகமான அளவில் நிலங்களை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பச்சைக்குமாச்சியைப் பொறுத்தவரையில் வெகுகாலமாக பயிரிடாமல் கிடக்கிற 20 ஏக்கர்கள் 30 ஏக்கர்கள் என்று ஏலக்காய் பயிரிடுபவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தனிப்பட்ட 1,000 ஏக்கர் நபர்களின் கையில் இருக்கும் காடுகளை எல்லாம் நல்லமுறையில், சரியானபடி அளந்து திட்டவட்டமாக நிர்ணயிக்கவேண்டும் என்பதை தங்கள் மூலமாக கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: கனம் சபாநாயகர் அவர்களே. நான் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவின்மீது பேசின அங்கத்தினர்கள் எல்லோருமே இந்த மசோதாவின்மீது என்னென்ன செய்யவேண்டும் என்பதை முக்கியமாக சொல்லிவிட்டார்கள். இப்போது கேட்டிருப்பது இரண்டு வருஷத்திற்கு நீடிக்கவேண்டும் என்பதுதான். இந்த மசோதாவின்மீது கனம் கலியாணசுந்தரம் அவர்கள் ஆரம்பத்திலேயே திருத்தத்தைப் பற்றி பேசும்போது சொல்லிவிட்டார்கள். இதிலுள்ள வாக்கியத்தவத்தை எடுத்துச் சொல்லி திருத்தத்தை வற்புறுத்தவில்லை என்பதையும் சொல்லிவிட்டார்கள். இந்த மசோதாவில் எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன என்பதினால்தான் இந்த 13 வருஷ காலமாக இந்தச் சட்டம் பெரிய அளவில் திருத்தி அமைக்கப்படாமல் இருந்து வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு வருட காலத்திற்குள் நல்லமுறையில் இதை திருத்தி அமைத்து மசோதாவைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்து ஆக்ட் ஏற்பட்டதின் காரணமாக பல புதிய பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. பல இடங்களில் காடுகள் பஞ்சாயத்து போர்டுக்கு சேர்ந்திருக்கின்றன. அதோடு மலைப்பிரதேசத்திலுள்ள இடங்களைப் பொறுத்தவரையில் இருந்து தனியாக பெயர் கொடுக்கப்பட்டுள்ளன. தனியார் துறையில் பல காடுகள் இருந்துவருகின்றன. மொத்தமாகப் பார்த்தால் காடுகளை அழிக்கக்கூடாது என்பதுதான் இந்த மசோதாவின் முக்கியமான நோக்கம். அதிலும் சலுகைகள் வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். மலைப்பிரதேசத்திலிருந்து வந்திருக்கும் கனம் அங்கத்தினர்கள் இருவர் இதைப்பற்றி வற்புறுத்திச் சொன்னார்கள். இதற்கென்று தனியாக உத்தரவை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இதற்கு அந்தந்த மாவட்ட கலெக்டர் பொறுப்பில் சில அதிகாரங்களை கொடுக்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் எண்ணம். இதற்கான எல்லா முயற்சிகளையும் சர்க்கார் மேற்கொள்ளும். இவ்விதம் எல்லா முயற்சிகளையும்

எடுத்துக்கொண்டு இந்த இரண்டு வருடங்களுக்குள் நல்லதொரு மசோதாவை கொண்டுவரலாம் என்ற நம்பிக்கையுடன் நான் இப்போது இதைக் கொண்டு வந்தேன். வேறு எந்தவிதமான நிலைமையும் இப்போது இல்லை. இன்னும் இரண்டு வருடங்களுக்குள் முழு மசோதாவையும் கொண்டு வரலாம் என்ற உறுதியைத் தான் நான் இப்போது தர விரும்புகிறேன். அந்த முறையில் இந்த மசோதாவை இன்னும் இரண்டு வருடங்களுக்கு நீடித்து கொடுக்க வேண்டும் என்று கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நிறைவேற்றி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1963, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Sir, I move—

"That the Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1963, be passed."

MR. SPEAKER: The question is—

"That the Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1963, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION AND PAYMENT OF FAIR RENT (EXTENSION TO ADDED TERRITORIES) BILL, 1963 (L.A. BILL NO. 23 OF 1963).

THE HON. SRI V. RAMAIAH: Sir, I beg to move—

"That the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963 (L.A. Bill No. 23 of 1963)* be taken into consideration."

Under the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act No. 56 of 1959) which was passed to implement the Pataskar Award, certain territories have been transferred from the State of Andhra Pradesh to the State of Madras, with effect from 1st April 1960. Those territories have been added to the Chingleput and the North Arcot districts of this State. In those territories, the Andhra Tenancy Act, 1956

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 16th August 1963.

[Sri V. Ramaiah] [19th November 1963

(Andhra Act XVIII of 1956) is in force. The present Bill seeks to repeal the Andhra Act in its application to the said territories and to extend the Madras Acts, with suitable modifications to those territories.

The provisions of the Andhra Act materially differ from those of Madras Acts.

The Andhra Act prescribes a minimum period of six years for a lease between a landlord and his cultivating tenant and, after the expiry of the lease period, it is open to the landlord to resume the land from the cultivating tenant without notice. Under Madras Act XXV of 1955, no cultivating tenant can be evicted, during the continuance of the Act, except for non-payment of rent, negligence resulting in injury to the land or the crop thereon, putting the land to non-agricultural use or wilful denial of the landlord's title to the land.

Regarding fair rent, the provisions in the Andhra Act are as follows :—

1. Crops other than commercial under Government irrigation source—50 per cent of gross produce.

2. Crops other than commercial under Government irrigation source with baling—28-1/3 per cent of gross produce.

3. Crops other than commercial on all other lands including unirrigable lands—45 per cent of gross produce.

4. Commercial crops—45 per cent of gross produce.

Under Madras Act XXIV of 1956, fair rent is as follows :—

1. Wet land—40 per cent of normal gross produce.

2. Wet land supplemented by lift of water by tenant—35 per cent of normal gross produce.

3. Other lands—33-1/3 per cent of normal gross produce.

Sugarcane, plantain, betelvine and other crops which do not give yield for two years or more are excluded from the purview of this Act.

With a view to achieve uniformity in the tenancy laws in force in this State, it is proposed to repeal the Andhra Act in the territories referred to and to extend the Madras Acts to those territories.

The alteration in the various dates occurring in the Bill are only consequential.

Sir, I request the House to accept the motion.

19th November 1963]

SRI S. MADHAVAN : On a point of order. The Hon. Minister has come forward with one Bill to amend two Acts, one Act relating to the year 1955 and other relating to the year 1956. These are two separate Acts but now one Bill is brought forward to amend those two Acts. Is it in order?

MR. SPEAKER : Why does the hon. Member say that it is out of order?

SRI S. MADHAVAN : Because as a Member of this House I find it difficult to give amendments to two Acts because the Cultivating Tenants' Protection Act deals with one subject and the other Act with a different subject.

MR. SPEAKER : But they deal with allied subjects.

SRI S. MADHAVAN : Tenants are protected under the Tenants Protection Act.

MR. SPEAKER : But they are given certain facilities under the other Act also. I don't think the point of order will stand.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :—

"That the Madras Cultivating Tenants' Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963 (L.A. Bill No. 23 of 1963) be referred to a Select Committee consisting of . . . Members of the Assembly."

SRI A. K. SUBBIAH : I second the amendment, Sir.

MR. SPEAKER : The motion and the amendment are before the House for discussion.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இது செலெக்ட் கமிட்டிக்கு விட வேண்டிய பிரச்னையா என்று அமைச்சர் அவர்களை கேட்கலாம். இப்போது அவர்கள் பிரசங்கத்தில் கொடுத்த விவரங்களெல்லாம் எனக்கு முன் கூட்டியே கிடைத்திருந்தால் செலெக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்றுகூட வற்புறுத்தியிருக்க மாட்டேன். இந்த ராஜ்யத்திலே எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான சட்டம் அமலாக்கப்படவேண்டும் என்பதிலே இரண்டுவித கருத்து இருக்க முடியாது. நம்முடைய ராஜ்யத்தோடு இணைக்கப்பட்ட இந்தப் பகுதிகளில் இதே சட்டங்களை அமல் நடத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஏற்கெனவே அங்கு அமல் நடத்தப்படுகிற சட்டத்தின் தன்மை என்ன, அதில் உள்ள சலுகைகள் என்னென்ன, அவைகள் இதை விடச் சிறந்தவையா என்பதை அறிந்துகொள்ள நான் இலாகாவை அணுகிக் கேட்டிருந்தேன், நம்முடைய சட்ட சபைக் காரியாலயம் மூலமாக அதற்குள்ள விவரங்களைக் கொடுத்தால் என்ன? அதில் என்ன ரகசியம் இருக்கிறது? இப்போது இங்கே அமைச்சர் அவர்களே

நிலையில் நாங்கள் அனுமதி கொடுக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டிருப்பதால் தேயிலை உற்பத்தி இந்த நாட்டில், குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் தேயிலை உற்பத்தி செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். தேயிலை உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்று ஒரு புறம் கூறி விட்டு மறுபுறம் தேயிலை உற்பத்தி செய்யவேண்டிய இடங்களை அதற்கு பயன்படுத்தக் கூடாது, காடுகள்தான் வைக்கவேண்டும் என்று சொன்னால் இரண்டிற்கும் முரண்பாடு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவை ஏற்ற பிறகு நல்ல சீர்திருத்தம் செய்திருப்பதற்காக, நீலகிரி மாவட்டத்தில் உள்ள குறைகளை கேட்டு தெரிந்து கொண்டிருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆக, இதை நல்லமுறையில் பரிசீலனை செய்து அதிகாரிகளையும், பொதுமக்களையும், அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளையும் வைத்துக் கொண்டு இதற்கு ஒரு முடிவு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதா நீடிப்பை நான் ஆட்சேபிக்கக் கூடியவனாயிருக்கிறேன். முக்கியமாக இந்தச் சட்டத்தில் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிகவும் விசித்திரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக ஒன்று சொல்கிறேன். தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தில் ஒரு சர்வே நம்பரில் ஆயிரம் ஏக்கர் இருக்கிறது என்று வைத்துக் கொண்டால் அதில் 500 ஏக்கர் தேயிலைத்தோட்டம் இருக்கிறது, மீதி 500 ஏக்கர் தரிசு நிலமாக இருக்கிறது. அந்த சர்வே நம்பர் பூராவையும், தரிசு நிலத்தையும், 500 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தையும் இந்தத் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்து கெஸட் நோட்டிபிக்கேஷன் செய்து தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். தேயிலை தோட்டத்தை மேலும் விஸ்தரிப்பதிலும், ஏற்கெனவே உள்ள தேயிலைத் தோட்டங்களை எப்படி பாதுகாப்பது என்பதிலும் தேயிலைத் தோட்ட அதிபர்களிடையே ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கூடலூர் வட்டாரத்தில், மரங்கள் இருந்தால்தான் காடு என்று சொல்கிறார்கள். கூடலூர் பிராந்தியத்தில் இருக்கிற பூமிகள் புல் பூண்டு முளைத்த தரிசு நிலங்களாக இருக்கின்றன. அதை அரசாங்கம் எடுத்துக் கொண்டு பாதுகாக்க இப்போது சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இதில் இன்னும் விசித்திரமான நிலை என்னவென்றால் ஒரு ஏக்கருக்கு ஒரு ரூபாய் காம்பன்சேஷன் சொந்தக்காரர்களுக்கு கொடுத்து விட்டு அதை அரசாங்கம் எடுத்து பராமரித்து நல்ல பாரஸ்டாக்கி திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்

கிறார்கள். ஒரு ரூபாய் ஒரு வருடத்திற்கு ஒரு ஏக்கருக்கு கொடுப்பது நியாயமா என்பதை அமைச்சர் அவர்கள் ஆலோசித்துப் பார்த்து இந்தச் சட்டத்தில் உடனடியாக என்னென்ன திருத்தங்கள் வேண்டியிருக்கிறதோ, திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறியது போல் டிசம்பருக்குள் என்னென்ன திருத்தங்கள் வேண்டியிருக்கிறதோ, அத்தனை திருத்தங்களையும் கொண்டு வந்து நல்ல சட்டமாக இதை அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இன்று கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதா இச்சட்டத்தின் ஆயுள் காலத்தை மேலும் இரண்டு ஆண்டிற்கு நீடிப்பதாக இருந்தாலும் அப்பிரச்சனையில் எவ்வளவோ சங்கடங்கள் இருக்கின்றன என்பதை புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. மலைப் பகுதியிலிருந்து வரும் பிரதிநிதிகள், காட்டை அழிக்காவிட்டால் எங்களுக்கு பிழைப்பு இல்லை என்று கூறினார்கள். நாட்டின் பொருளாதாரத்திற்கும்கூட தேயிலை, காப்பி அவசியம் மறுக்க முடியாது. இந்நிலையில் மலைப் பிராந்தியத்தில் இருப்பவர்களின் பிரச்னை இருக்க, எதிர் கட்சித் தலைவர் சா. கணேசன் அவர்கள் சொன்ன மாதிரி வரண்ட பிரதேசங்களில் உள்ள காடுகளும் ஒரு பிரச்னையாக காட்சி அளிக்கிறது. நகரத்தில் காட்டை எல்லாம் மனிதர்கள் அழித்து வீடாக மாற்றி விடுகிறார்கள். அந்தப் பிரச்னை இங்கு கிடையாது. மற்ற அங்கத்தினர்கள் கூறியதுபோல் வல்லுனர்கள் குழு போட்டு எங்கெங்கே எந்தெந்த இடங்களில் காடுகளை வளர்க்கலாம் என்று ஆராய்ச்சி செய்து அதோடு எந்தெந்த வகையில் அவற்றை வளர்த்தால் நாட்டின் பொருளாதாரத்திற்கு நலமாக இருக்குமென்று சிந்திப்பது சிறந்ததாக இருக்கும், அது அவசியமும் கூட என்று சொன்னால் அது மிகையாகாது. குறிப்பாக மலைப்பகுதிகளைப் பார்க்கும் போது மலைஜாதியினருக்கு காட்டை அழித்துத்தான் உருளைக்கிழங்கு, தேயிலை, வாழை இவைகளை பயிரிட்டுத்தான் அவர்கள் வாழ வேண்டியிருக்கிறது. வெறும் காட்டை வைத்துக்கொண்டு அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது. சில இடங்களில் நிலமில்லாத சிலர் ரெவின்யூ பாரஸ்டுகளை முதலாவது சட்ட பூர்வமாக வாங்கி அனுபவித்துக்கொண்டு பின்னால் ஐந்து ஏக்கர்கள், பத்து ஏக்கர்கள் என்று தங்களுக்கே அஸைன்மெட் செய்து கொள்ளக்கூடிய வகையில் வாக்குகள் நடத்திக் கொண்டிருப்பதையும் நாம் காணாமல் இல்லை. இதையெல்லாம் தவிர்க்கவேண்டுமென்றால் ரஷ்யாவில் இருப்பது போல் ஒவ்வொரு ஊரிலும் அதைச் சுற்றி வனத்தை வளர்த்து "ஃபாரஸ்ட் பெல்ட்" என்ற முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும். நம் நாட்டைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனை சுற்

ஆனால், வரையறை போட்டுவிட்டால், அந்தக் காலத்திற்குள்ளே முடியாவிட்டால் சட்டசபைக்கு மீண்டும் கொண்டுவந்து புனருத்தாரணம்-மீண்டும் உயிர் கொடுக்கும்-நிர்ப்பந்தம் ஏற்படும். அது சபையினுடைய நேரத்தையும், காலத்தையும் விரயம் செய்வதாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆகவே, எது எது காடுகள் என்று நிர்ணயிக்க, வேண்டிய வழிவகைகளை உடனடியாக மேற்கொள்ள அதற்கு அனுமதி கொடுத்து அந்த முறையை விரிவாகக் கையாளும்படியாக ஊக்கி காரியங்களை எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க வழி செய்யவேண்டும்.

இந்தக் காடு என்பது வெறும் மரப் பிரச்னை மட்டும் அல்ல என்பதை நாம் மறந்து விடப்படாது. இது விவசாயத்தின் அடிப்படை. காட்டின் காரணமாகத்தான் மழை பெய்கிறது. அந்த மழையினால்தான் (விவசாயம் நடைபெற்று பயிர் விளைகிறது. அதன் மூலமாகத்தான் நாம் வாழ்கிறோம் என்பதை நாம் மறந்து விடப்படாது. இவையெல்லாம் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன. விவசாயம், காடு, நீர்நிலை இவை எல்லாம் ஒரே துறையின்கீழ் இருக்குமானால் மிக நல்லது. ஆனால் பல்வேறு காரணங்களினால் அவை வெவ்வேறு துறைகளாக அமைக்கப்பட்டிருந்தாலும் அனைத்தும் ஒன்றாக இருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து நாம் காரியங்கள் செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்கு வேண்டிய காலத்தை எடுத்துக்கொண்டு, ஆனால் மிக விரைவாக அதை முன்னேற்றுவிப்பதற்கு அரசாங்கம் முயலவேண்டும், செயல்பட வேண்டுமென்று கூறி இதை எவ்வளவு விரைவாக்க முடியுமோ அவ்வளவு விரைவாக்க வேண்டும். காலத்தை ஆட்சேபிப்பது. தேவையில்லாதது. பொருத்தமில்லாதது என்றும் கூட நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு மேலே நான் வேறு ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. இதை மிக விரைவில் செயலாற்றி இந்த ரீ சர்வே செய்வதை உடனடியாக தொடங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த தனிப்பட்டவர்களுடைய காட்டுத் திருத்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். அதே நேரத்தில் இதை இரண்டு ஆண்டு காலத்திற்கு நீடிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்த தனிப்பட்டவர்கள் காட்டுப் பிரச்னையும், மலைப்பிரதேசத்தில் உள்ள காடுகள் வளர்ப்பு பாதுகாப்பு பிரச்னை இரண்டிலும் என் மாவட்டத்தில்தான் பல சிக்கல்கள், இன்னல்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. நீலகிரியில் கூடலூர் வட்டாரத்தில் இரண்டு பிரிவுகளாக தனிப்பட்டவர்களின் காடுச் சட்டம் இருக்கிறது. உதகை வட்டாரத்தைப் பொறுத்தவரையில் அது மலைப் பிராந்திய மரம் வெட்டும் சட்டத்தின்கீழ் வருகிறது. இரண்டு பிரிவுகளாக பிரிந்திருக்கக்கூடிய நிலையில் அமைச்சர் அவர்களின் முன்

னுரையில் டிசம்பர் மாதத்தில் மலைப் பிரதேச மரங்கள் பற்றிய சட்டம் வர இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நன்கு பரிசீலிக்க வேண்டும். இதுபற்றி, செலக்ட் கமிட்டிகூட பரிசீலிக்க வேண்டும் என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கூடலூர் வட்டாரத்தைப் பொறுத்தவரையில் இன்று அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்த மசோதாவின்படி அங்குள்ள விவசாய மக்கள் விவசாயம் செய்வதற்கே முடியாத ஒரு பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக, ப்ளெயின்ஸில் உள்ள அங்கத்தினர்களானாலும் சரி வேறு யாரானாலும் சரி, மரங்கள் அதிகமாக இருக்க வேண்டும், அதை வெட்டக் கூடாது என்ற மனப்பான்மையில் பேசுவது எங்களுக்குத் தெரியும். சர்க்கார் கருத்தும்கூட அது. அதிகமாக மரங்கள் வளர்க்க வேண்டும், நம் மாநிலத்தில் காடுகள் குறைவாக இருப்பதால் தான் மழை குறைந்து விட்டதென்று சொல்கிறார்கள். மழையைப் பொறுத்த வரை நான் அதில் வேறுபாடு சொல்வதற்கில்லை. அதே நேரத்தில் ஒரு மாவட்டத்திலுள்ள அத்தனை பூமிகளும், குறிப்பாக ஒரு தாலுக்காவில் உள்ள அத்தனை பூமிகளும் இந்தச் சட்டத்தின் கீழ் வருகிறது என்று சொல்லும்போது அந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் குடியிருக்க முடியுமா என்பதையே பரிசீலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் முன்னுரையில் சொன்னதுபோல், அக்ரிகல்ச்ரல் இம்ப்ளிமென்ட்டுக்குக் கூட மரத்தை வெட்டக் கூடாது என்று சொல்லும்போது விவசாயத்திற்கு கொடுவாய்க்கு காம்பு செய்யவேண்டுமென்றால் கூட அடுத்த வெளி ஜில்லாவிற்குச் சென்று காம்பு வாங்கிப் போடக் கூடிய நிலை ஏற்படுகிறது. ஒரு காம்பிற்குக் கூட வெட்டக்கூடாது என்ற நிலையில் சட்டம் ஏற்படுகிறது. முப்பது ஏக்கருக்கு மேல் என்று அமைச்சர் அவர்கள் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை எப்படிக் குறிப்பிட்டார்கள் என்பது பற்றி விளக்குமாறு அமைச்சர் அவர்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு வட்டாரமே இச்சட்டத்தின் கீழ் வருகிறது. நான் கூடலூரைப் பற்றி குறிப்பிடுகிறேன். முப்பது ஏக்கருக்கு மேல் என்றால் அந்த ஜில்லாவிற்கு பொருந்துமா, பொருந்தாதா என்பது பற்றி அமைச்சர் அவர்கள் அவர்களது முடிவுரையில் கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றை மட்டும் குறிப்பிட்டு விட்டு முடித்துக் கொள்கிறேன். தேயிலை, காப்பி போன்றவை பயிர் செய்ய பாரஸ்டை, டி பாரஸ்ட் செய்ய அனுமதி கொடுக்கலாம். ஏனெனில் காப்பி, தேயிலை போன்றவை அதிகமாக வளர்க்க வேண்டுமென்ற நோக்கம் இருக்கிறது. இம்மன்றத்தில் ஏற்கெனவே ஒரு சட்டம் செய்தோம். அந்நிலையில் தேயிலை, காப்பி உற்பத்தி செய்ய என்று தேயிலை போர்டாரிடம் விண்ணப்பித்து உத்தரவு வாங்கி அவர்களிடமிருந்து லோன் வாங்கி, அவர்கள் சலுகைகளைப் பெற்ற பிறகு பாரஸ்டை, டி பாரஸ்ட் செய்ய முடியாத

படித்தார்கள். இந்த விவரங்களை நான் கேட்டபோது கொடுத்திருக்கலாம். இதற்குமுன் இந்தக் கஷ்டம் இருந்ததில்லை. அங்கத்தினர்கள் வேண்டிய விவரங்களை சம்பந்தப்பட்ட இலாகாவை அணுகி இது வரையில் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறோம் சட்ட சபை இலாகா மூலமாக. இதுதான் முதல் தடவையாக கொடுக்க முடியாது, அல்லது கைவசம் இல்லை என்ற ஏதோ ஒரு காரணத்தினால் நான் கோரிய விவரங்களைப் பெறவும் இல்லை, அதை உபயோகப்படுத்த முடியவும் இல்லை. அதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விசாரிக்கவேண்டும் என்று நான் முதலில் கூறிக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இந்தச் சட்டங்களை நம் ராஜ்யத்தில் அமல் நடத்தும் முறையிலே பல பலஹீனங்கள் இருக்கின்றன. இந்தச் சட்டங்களின் மூலம் பலன் அடைவதைக் காட்டிலும் அதிகமாக சாகுபடி செய்யும் விவசாயிகள் உபத்திரவம் பெறுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் சட்டத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகள் என்பதை நான் பல முறை இந்தச் சபையில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். உயர் நீதி மன்றத்திற்குப் போன வழக்குகளில் பெரும்பாலானவை விவசாயிகளுக்கு பாதகமாக முடிந்திருக்கின்றன. எங்கு விவசாயிகள் ஸ்தாபனம் பலமாக இருந்து கட்டுப்பாடாக இருக்கிறதோ, அந்தக் கட்டுப்பாட்டின் மூலம் சலுகை அனுபவிக்கிறார்களோ அங்குதான் அவர்களுக்கு சாதகமாக இருக்கிறது. பெரும்பாலான பகுதிகளில் வழக்குகளில் ஈடுபடுத்தி, நீதி மன்றங்களுக்குக் கொண்டுபோய், தாசில்தார் ஆபீசிலிருந்து ஹைகோர்ட் வரையில் இழுக்க அடித்து, சட்டத்தின் பலன் விவசாயிகளுக்குக் கிடைக்க முடியாமல் செய்கிறார்கள். இதில் முக்கியமான பலஹீனம், சிவில் கோர்ட்டுக்குப் போனால், முன்சீப் கோர்ட்டுக்குப் போனால், குத்தகை விவசாயி அல்ல என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு விவசாயிக்கு ஏற்பட்டு விடுகிறது. சட்டத்தில் இருக்கக்கூடிய பலஹீனம் இது. குத்தகை விவசாயி என்று வாக்குமூலம் கொடுத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று இருக்குமானால் இந்த சங்கடம் ஏற்படாது. அந்தத் திருத்தம் அவசியம் என்று பல முறை சுட்டிக் காட்டியிருக்கிறேன். அந்தத் திருத்தம் நியாயம் என்பதை ஏற்றுக் கொண்டு கையர்-யாட்டுவார அவசரச் சட்டம் பிரேரேபித்த காலத்தில், இதே மாதிரி திருத்தம் சேர்க்கப்பட்டிருந்தது. என்ன காரணமோ தெரியவில்லை, விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடாது என்றோ என்னமோ, பிறகு இந்தப் பாதுகாப்பு இல்லை. நியாய வாரச் சட்டம் ஆகட்டும், நில வெளியேற்றத்திலிருந்து பாதுகாப்புக் கொடுக்கும் சட்டமாகட்டும், அதன் பலன் கிடைப்பது துர்லபமாக ஆகி விடுகிறது. இதைப் பற்றி நான் முன்பே எடுத்துக் காட்டியிருக்கிறேன். குத்தகை சாகுபடியாளரை, கூலிக்கு வேலை செய்ததாக முச்சலிக்கா பெற்றுக் கொண்டு, அதை முன்சீப் கோர்ட்டில் சிவில் வியாஜ்யத்தில் தாக்கல் செய்து வெளியேற்றிருக்கிறார்கள். உயர் நீதி மன்றத்திற்கும்

போய் விவசாயிகளுக்கு விரோதமாகப் போயிருக்கிறது என்ற சம்பவங்களை சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இதே அமைச்சர் முன்பு வாக்களித்தார்கள். இரண்டு சட்டங்களையும் ஒன்றாக இணைத்து என்னென்ன திருத்தங்கள் வேண்டும் என்று பார்த்து அப்போது கொண்டுவரலாம் என்கிற ஆலோசனை அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்த விதத்தில் இரண்டு சட்டங்களையும் திருத்தி அவைகளை சாசுவதமாக சட்டப் புத்தகத்தில் ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில வெளியேற்றத்தைத் தடுக்கும் சட்டம் இரண்டு வருஷங்களுக்குத்தான் இருக்கப் போகின்றது. அதன் பிறகு சங்கடம் வரும். இந்த இரண்டு வருஷத்தை பயன்படுத்திக்கொண்டு நிரந்தரச் சட்டத்தை நம் சட்டப் புத்தகத்தில் இடம் பெறச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி பலஹீனங்களைப் போக்க நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்தியாவது நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு சட்டங்களிலும் அதிகாரத்தை ஆர்.டி.ஓ.-வுக்கும் தாசில்தாருக்கும் கொடுத்ததன் நோக்கம் என்ன? . . . . .

MR. SPEAKER: The hon. Member is telling about loopholes in the main Act.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதே லூப்ஹோல்ஸ் அங்கும் இருக்குமல்லவா? அங்கும் இந்தச் சங்கடங்கள் இருக்கக் கூடாது என்றுதான் நான் இதைச் சொல்லுகிறேன்.

MR. SPEAKER: The hon. Member can bring a concrete proposal to amend the main Act.

கனம் திரு. வெ. ராமையா: இந்த ஆக்ட் நீடிப்பதாக இருந்தால் அதையெல்லாம் கவனிக்கலாம். எக்ஸிஸ்டிங் ஆக்ட்டை அந்த டெரிடரிஸுக்கு எக்ஸ்டெண்ட் பண்ணுகிறோம். செலெக்ட் கமிட்டி வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதை எப்படி பரிசீலனை செய்ய முடியும் என்று தெரியவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்தத் திருத்தங்களையெல்லாம் சொல்லிக்கொள்ளுவதற்குத்தான் நான் இப்பொழுது பேசுகிறேன். இந்த சட்டத்தை அப்படியே இந்தப் பகுதிகளுக்கு விஸ்தரித்தால் விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படும். விவசாயிகளுக்கு என்ன நன்மைகள் ஏற்படவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் விரும்புகிறார்களோ . . . . .

MR. SPEAKER: As I have said before, the hon. Member can bring a concrete proposal to amend the main Act.

SRI M. KALYANASUNDARAM: I am only making suggestion.

MR. SPEAKER : The object of the Bill is restricted to simply extending the Act to the Added Territories.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மசோதாவை விஸ்தரிக்கவேண்டு மென்பதை நான் ஆதரிக்கிறேன். ஆனால், இந்தத் திருத்தங்கள் அவசியம்.

MR. SPEAKER : That must be brought in the form of an amending Bill.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு இந்த யோசனைகளைச் சொல்லிக்கொள்ள விரும்பினேன். யோசனைகளைச் சொல்லி முடித்தாகிவிட்டது. இனி மேல் நான் நிறுத்திக் கொள்கிறேன். இதுவரைக்கும் நீங்கள் பொறுத்திருந்ததற்கு நன்றி.

SRI A. P. DHARMALINGAM rose.

MR. SPEAKER : Is the hon. Member going to speak now or when his amendment is taken up?

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் இப்பொழுதே பேசுகிறேன். சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டு காலத்திற்கு இந்த சட்டத்தை நீடிக்க வேண்டுமென்று . . . .

கனம் திரு. வெ. ராமையா: அப்படியில்லை.

கனம் சபாநாயகர்: இந்தச் சட்டம் நம் ராஜ்யத்தோடு புதிதாக சேர்ந்திருக்கிற பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படுகிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நமக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடங்கள் அவர்களுக்கு ஏற்படாமல் இருக்கட்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். இந்த சட்டங்கள் விவசாயிகளின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அனுபவத்தில் பார்த்தால் விவசாயிகளுக்கு பலன் நிச்சயம் கிடைக்கவில்லை என்று சொல்லவேண்டிய நிலைமையில் தான் இருக்கிறோம். இதை எடுத்து விவசாயிகள் வழக்கு மன்றங்களுக்கு செல்லக்கூடிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் இப்படி வழக்கு மன்றங்களில் ஏறி இறங்கும் நிலைமை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல நான் முன் வந்திருக்கிறேன்.

MR. SPEAKER : That is why I suggested to the hon. Member Sri M. Kalyanasundaram that he should bring in an amending Bill. The hon. Member must bring concrete proposals which would enable the tenants to get all facilities.

கனம் திரு. வெ. ராமையா: அப்படிச் சொல்லக்கூடிய கருத்துக்களைச் சொல்லுவதற்கு இந்த மசோதாவின் விவாதத்தின் போது சந்தர்ப்பம் இல்லை. இப்பொழுது நம்முடன் சேர்ந்திருக்கிற ஒரு பகுதியில் ஆந்திரா ஆக்ட் அமுலில் இருக்கிறது. ஆந்திரா

ஆக்டை விட நம்முடைய ஆக்ட் நல்லது என்பது நான் கொடுத்த விவரங்களிலிருந்து தெரியவரும். ஆந்திரா ஆக்டினால் கிடைக்கக்கூடிய நன்மையைவிட, 'ஆடட் டெரிடரீஸுக்கு' இந்த மசோதாவினால் அதிகமான நன்மை கிடைக்கும். ஆகவே, இதைப்பற்றி குறை சொல்லுவதற்கு என்ன இருக்கிறது?

கனம் சபாநாயகர்: இந்த சட்டத்தை எக்ஸ்டெண்டு செய்வதற்குத்தான் இப்பொழுது பில் வந்திருக்கிறது. திருத்துவதற்கு இப்பொழுது பில் கொண்டு வரப்படவில்லை. சட்டத்தை திருத்துவது என்றால் அதற்கு வேறு மசோதா கொண்டுவரப்படவேண்டும். அம்மாதிரி திருத்தங்கள் வேண்டுமென்றால் அதற்கான மசோதாவை கனம் அங்கத்தினர் கொண்டுவரவேண்டும், அல்லது மற்றவர்கள் யாராவது கொண்டு வரவேண்டும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: என்னுடைய அமெண்டுமெண்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்பொழுது நான் பேசிக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: இப்பொழுது இந்தச் சட்டத்தை ஆந்திரப் பிரதேசத்திலிருந்து நம் பகுதிக்கு வந்து சேர்ந்திருக்கக்கூடிய சில பகுதிகளுக்கு விஸ்தரிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த சட்டத்தில் இருக்கிற சில இடற்பாடுகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: இப்பொழுது சபை முன்பு இருக்கிற மசோதா வேறு. இந்த சட்டத்தைக் திருத்துவதற்கு இப்பொழுது மசோதா கொண்டுவரப்படவில்லை. இப்பொழுது இந்த சட்டத்தை சில பகுதிகளுக்கு விஸ்தரிப்பதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துக்கொள்கிறாரா, இல்லையா?

திரு. கோ. சி. மணி: இந்த சட்டத்தை விஸ்தரிப்பதை ஒத்துக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: அவ்வளவு தான். அதற்கு மேலே ஒரிரண்டு வார்த்தைகள் வேண்டுமென்றால் சொல்லலாம்.

திரு. கோ. சி. மணி: இந்தச் சட்டம் விஸ்தரிக்கப்படுவதை ஆதரித்து, எப்படியாவது இதிலுள்ள குறைகளை நீக்கி, விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளுக்கு நல்லது செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

* திரு. செ. மாதவன்: கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தினுடைய கருத்து மிகக் குறுகிய அளவிலே இருக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய தலைவர்கள் எடுத்துக் கூறியதுபோல இரண்டு சட்டங்களையும் ஒன்றாகக் கொண்டுவந்திருக்கக்கூடிய காரணத்தினாலே, மூன்றாவது பில்லிற்கு கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்

[திரு. செ. மாதவன்] [19th November 1963

தத்திலே, 'டெனன்ட்' என்ற வார்த்தையின் டெபினேஷனுக்கு 'ஏஏ' என்ற திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். 'டெனன்டு' என்ற வார்த்தைக்கு அது திருத்தமாக அமைந்திருப்பதினாலே, அந்தத் திருத்தத்திற்கு ஒரு திருத்தம் கொடுக்க அங்கத்துக்கு உரிமை உண்டு என்ற முறையில், நானும் அதைப்பற்றி பேச விரும்புகிறேன். 'டெனன்டு' என்ற வார்த்தைக்கு 'ஸப் லெஸீ' என்றும் பொருள் கொள்ளவேண்டும்....

MR. SPEAKER : This point can be taken up when the clause is discussed.

SRI S. MADHAVAN : I have not given any amendment.

MR. SPEAKER : The hon. Member Sri Dharmalingam has given an amendment to that clause. I will give an opportunity to the hon. Member to speak after that amendment is moved.

கனம் திரு. வெ. ராமையா: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போகவேண்டிய அவசியமில்லை என்பதை கனம் அங்கத்தினர் திரு. மீ. கலியாணசுந்தரம் அவர்களே சொல்லிவிட்டார்கள். அவர்கள் சில விவரங்களைக் கோரியிருக்கிறார்கள். அவை அவருக்குக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று நான் தெரிந்துகொண்டு அவர்களுக்குச் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறேன். இந்த விவரங்களையெல்லாம் அவர்களுக்கு முன்கூட்டியே சொல்லியிருக்கும் பட்சத்தில், இப்பொழுது நடந்திருக்கும் விவாதமே நடந்திருக்காது என்று தான் நான் நினைக்கிறேன். முன்பு இயற்றப்பட்ட ஒரு சட்டத்தைப்பற்றி இப்பொழுது ஒரு சர்ச்சையை, விவாதத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய ஆக்டினால் போதிய பலன் கிடைக்கவில்லை என்று கருத்துப்பட பல அங்கத்தினர்கள் பேசினார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய சட்டத்தை புதியதாக நம்மோடு சேர்ந்திருக்கக்கூடிய ஒரு சிறு பகுதிக்கு விஸ்தரிக்கிறோம். அப்படி விஸ்தரிக்கும்போது, அங்கு இப்பொழுது நடைமுறையில் இருக்கக்கூடிய ஆந்திரா ஆக்டை ரிபீல் செய்ய இருக்கிறோம். இரண்டு சட்டங்களையும் பார்க்கும்பொழுது, இப்பொழுது அந்தப் பகுதியில் நடைமுறையில் இருக்கக்கூடிய சட்டத்தைவிட, இப்பொழுது நாம் விஸ்தரிக்கும் சட்டம் விவசாயிகளுக்கு நன்மை செய்வதாக இருக்கும் என்பதை நான் கொடுத்த விவரங்களிலிருந்து கனம் அங்கத்தினர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள். நம்மோடு இணைந்த பகுதிகளுக்கு ஒரு நல்ல சட்டத்தை விஸ்தரிக்க எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது என்பது தான் என்னுடைய கருத்து. ஆகையால், இந்த மசோதாவை எந்தவிதமான திருத்தமும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் மீண்டும் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

The amendment was by leave withdrawn.

19th November 1963]

MR. SPEAKER : The question is—

"That the Madras Cultivating Tenants' Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963 (L.A. Bill No. 23 of 1963), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. SPEAKER : The question is—

"That clause 3 do stand part of the Bill."

SRI A. P. DHARMALINGAM : Sir, I move the following amendment :—

"For the existing sub-clause (i) in clause (3), *substitute* the following and make the consequential changes :—

(*a*) 'added territories' means the territories specified in the Second Schedule to the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act 56 of 1959).

(*aa*) 'cultivating tenant' in relation to any land means a person who carries on personal cultivation on such land, under a tenancy agreement, express or implied, and includes—

(i) any sub-lessee under the lessee of the tenancy agreement;

(ii) any such person who continues in possession of the land after the determination of the tenancy agreement; and

(iii) the heirs of such person, but does not include a mere intermediary or his heirs."

SRI S. MURUGAIYAN : Sir, I second the amendment.

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் இந்தத் திருத்தம் கொடுத்ததற்குக் காரணம் என்னவென்றால், இப்பொழுது இயற்றப்பட்டிருக்கிற சட்டங்களினால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் திருத்தம் மிக மிக அவசியம் என்பதை வலியுறுத்தி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய திருத்தத்தில், உள்குத்தகைதாரர்கள் எல்லோரையும் குத்தகைதாரர்களாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். இப்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள குத்தகைச் சட்டங்கள் மூலம்—நியாய வாரச் சட்டமாக இருந்தாலும் சரி, அதற்கு முன்னால் கொண்டுவரப்பட்ட தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டமாக இருந்தாலும் சரி—விவசாயிகள் சரியான பலனை அடைய முடியவில்லை என்பதைத்தான்

சட்டத்தின் அமைப்பு, டெனன்டு என்பதன் விளக்கத்தின் மூலமாக எல்லா குத்தகைதாரர்களுக்கும் நன்மை அளிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஆனால் அதற்கு மாறாக நம் உயர்நீதிமன்ற தீர்ப்புகள் அமைந்திருக்கின்றன. அரசாங்கத்தின் நோக்கத்தை ஒதுக்கி வைப்பதாக இருக்கின்றன. ஆகவே இந்த திருத்தத்தின் மூலமாக உள்குத்தகைதாரர்களும் சட்டத்தின் நன்மையை அடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு நாட்டிலே அதிகமாக உட்குத்தகைக்காரர்களே இருக்கிறார்கள் என்பதை கவனத்தில் கொண்டு, இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு சப்லெஸியும் லெஸி ஆவான் என்று செய்து விவசாயிகளுக்கு நன்மை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் கடைசியில் பேசும்போது இந்த திருத்தத்தில் இருக்கக்கூடிய சங்கடத்தை உணர்ந்து பேசினார்கள். இந்த சந்தர்ப்பத்தில் பொது டெபனிஷனை மாற்றி அமைக்க வகையில்லை. அது பொது ஆக்டை கட்டுப்படுத்தாது. இன்றைக்கு இந்த சட்டத்தை புதிதாக வந்த பகுதிக்கு விஸ்தரிப்பு செய்கிறோம். அங்கத்தினர்கள் சப்லெஸிகளும் இருக்கக்கூடிய சங்கடங்களைபற்றி சொன்னார்கள். அவற்றைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து இது சம்பந்தமாக என்ன செய்ய வேண்டும் என்று அரசாங்கம் கவனிக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு இந்த திருத்தத்திற்கு இடம் இல்லை, திராவிட முன்னேற்ற கழகத்தைச்சேர்ந்த திரு. தர்மலிங்கம் அவர்கள் திருத்தத்திற்கு திரு. மாதவன் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள் என்பதால் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. செ. மாதவன்: ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், சார். கனம் அமைச்சர் அவர்கள் சப்லெஸிக்கும் இந்த சட்டம் பொருந்தும் என்று ஒப்புக் கொள்ளுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: அமைச்சர் அவர்கள் பிறகு அனுதாபத்தோடு கவனிக்கிறேன் என்று சொல்லுவதால் என் திருத்தத்தை நான் வலியுறுத்த விரும்பவில்லை.

MR. SPEAKER: What is the technical point? Can the hon. Member amend the original Act by an amendment to this amending Act?

The amendment was, by leave, withdrawn.

Clause 3 was put and carried.

Clause 4 was put and carried.

Clause 5.

MR. SPEAKER: The question is—

"That clause 5 do stand part of the Bill."

***திரு. செ. மாதவன்:** கனம் தலைவர் அவர்களே, இந்த ஐந்தாவது பிரிவிலே, 2-வது பிரிவு ஆந்திர சட்ட மன்றம் இயற்றிய ஒரு சட்டத்தை ரிபீல் செய்கின்ற அளவில் இருக்கிறது. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் 245-வது பிரிவுப்படி நம்முடைய மாநிலத்திற்குரிய சட்டத்தை இயற்றிக்கொள்ள நமக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொரு மாநிலத்தில் இயற்றப்பட்ட சட்டத்தை இந்த மன்றம் ரிபீல் செய்வதற்கு உரிமை இருக்கிறதா என்பதைப்பற்றி நான் அமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் பெற விரும்புகிறேன். காரணம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் 245-ஆவது பிரிவில் "The legislature of a State may make laws for the whole or any part of the State" என்று நமக்குச் சட்டமியற்ற உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்குத்தான் சட்டமியற்றலாம் என்று இருக்கிறதே தவிர ரிபீல் செய்வதற்கு உரிமை இல்லை. அப்படிச் செய்கின்ற அளவில் இந்தப் பிரிவு அமைந்திருப்பதால் இது அரசியல் அமைப்புச் சட்டப்படி செல்லுமா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஒரு சிறந்த வக்கீல். நடைமுறையில் இருக்கக்கூடிய சட்டத்தைத்தான் ரிபீல் செய்கிறோம். ஆந்திரப் பகுதியில் இருக்கக்கூடிய சட்டத்தை ரிபீல் செய்ய முடியாது. இங்கு இருக்கக்கூடிய—நமது எல்லைக்குள் இருக்கிற ஒரு பகுதிக்குத்தான் ரிபீல் செய்கிறோம். இதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

Clause 5 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, I move—

"That the Madras Cultivating Tenants' Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963 (L.A. Bill No. 23 of 1963), be passed."

MR. SPEAKER: The question is—

"That the Madras Cultivating Tenants' Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963 (L.A. Bill No. 23 of 1963), be passed."

The motion was put and carried and the Bill was passed.

நிலும் இவ்வாறு ஒரு பாரஸ்ட் பெல்ட் ஏற்படுத்த முடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக யோசித்துப்பார்ப்பது நல்லது என்று நினைக்கிறேன். அதோடு இந்த பாரஸ்டுகளை நல்லமுறையில் பாதுகாத்துக் கொள்ளுகின்ற முறையில் நிலமில்லாத ஏழைகளுக்கு (லான்ட்லெஸ்) ஐந்து ஏக்கர்கள் பத்து ஏக்கர்கள் என்று கொடுத்து அதில் காப்பி, தேயிலை, உருளைக்கிழங்கு இவைகளை பயிர் செய்வதற்கும் வசதி செய்து கொடுத்தால், அவர்களுக்கு பிழைப்பும் நடக்கும். அதோடு நல்லமுறையில் காடுகளை உற்பத்தி செய்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். தனி நபர்களுக்கு காடுகள் இருக்கின்ற முறையை எடுத்துக் கொண்டால், இதற்கும் ஓர் உச்ச வரம்பு ஏற்படுத்த வேண்டியதுதான். நிலத்திற்கு உச்சவரம்பை நாம் கொண்டு வந்து விட்டோம். அதே போன்று வருமானத்திற்கும் உச்ச வரம்பு கொண்டு வர வேண்டியதுதான். அந்த முறையில் தனியார் துறையில் அதிகமான அளவில் காடுகள் இருப்பதும் நல்லதல்ல. அப்படி பெருவாரியாக் இருக்கும் காடுகளை தனியார்களிடமிருந்து எடுத்துக்கொண்டு அரசாங்கமே அவற்றை பராமரித்து வந்தால் மிகவும் நல்லதாக இருக்கும். இப்போதுள்ள நிலைமையை எடுத்துக் கொண்டால், காடுகளை வைத்துக்கொண்டிருக்கும் தனியார்களுக்கும் உற்சாகம் இல்லை. இம்மாதிரியான வனங்களை எடுத்துக்கொண்டு அரசாங்கமே பராமரித்து வரலாம். அதோடு நல்லமுறையில் காடுகளை பராமரித்து வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்றால், அகில இந்திய அடிப்படையிலோ, அந்தந்த மாகாண அடிப்படையிலோ நல்லமுறையில் யார் காடுகளை வைத்திருக்கின்றார்களோ அவர்களுக்கு பரிசு கொடுப்பதற்கான ஒரு திட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அவ்விதம் ஏதாவது ஒரு திட்டத்தை அமைத்தால் காடுகளை வைத்திருக்கின்றவர்களுக்கு நல்லமுறையில் காடுகளை பாதுகாத்துக்கொள்வதில் உற்சாகம் ஏற்படும். இந்தச் சட்டம் 1946-லிருந்து 1963 வரை இரண்டு இரண்டு வருடங்களுக்காக நீடித்துக் கொண்டு வருகின்றோமென்றால் இதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பது தெரிய வருகிறது. ஆகவே இனிமேலாவது நீடித்துக்கொண்டு போகாமல் அரசாங்கம் துரிதமாக கவனித்து இந்த இரண்டு ஆண்டிற்குள்ளாவது நல்லமுறையில் இந்தச் சட்டத்தை திருத்தி அமைத்து, மேலும் ஆயுட்காலத்தை நீடித்துக் கேட்காமல், நல்லதொரு சட்டத்தை இந்த மன்றத்தில் கொண்டு வர வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. மா. இராசாங்கம்:** மன்றத் தலைவர் அவர்களே, தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தை மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு நீடிக்க வேண்டும் என்று கேட்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் நான் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். மலைப்பகுதிகளில் சிலருக்கு ஆயிரக்கணக்

கான ஏக்கர் அளவில் தனிப்பட்ட முறையில் காடுகள் இருக்கின்றன. சில நேரங்களில் மலைச் சரிவு ஏற்படும் போது, இவர்களுடைய உண்மையான அளவுக்கல்கள் எல்லாம் மறைந்து போய் குட்டுகளை எல்லாம் காணாமல் தள்ளி போடுகின்ற நிலைமை ஏற்படுகிறது. இதை யாரும் சர்வே செய்து திட்டவட்டமாக சொல்வதில்லை. மலைச்சரிவு ஏற்படும் போது அவர்கள் நினைத்த அளவுக்கு குட்டுகளை போட்டுக்கொள்கிறார்கள். மதிப்பிற்குரிய [illegible] அவர்கள் சொல்லியது போல், திட்டவட்டமாக அளந்து கொடுத்திருக்க வேண்டும். சங்க காலத்தில் புலவர்களுக்கு நம் முன்னோர் அரசர்கள் கண்ணுக்கெட்டிய மட்டும் நிலங்கள் கொடுப்பதை நாம் கேட்டிருக்கிறோம். அந்த முறையில் இப்போது பெரியகுளம் தாலுகாவில் பச்சைகுமாச்சி பகுதியில் கண்ணுக்கெட்டிய அளவுக்கு காடுகளை தனியார்கள் வளர்த்துக்கொண்டே போகிறார்கள். இருபது, முப்பது ஆண்டுகளாக சிலருக்கு எந்த அளவுக்கு காடுகள் இருக்கின்றன என்பதே தெரியாமல் இருக்கிறது. இன்றைக்கு இந்த இடத்தில் என்று குத்துமதிப்பாகத் தான் சொல்ல முடியுமே தவிர குறிப்பாக இந்த அளவுக்கு என்று சொல்வதற்கான வாய்ப்பு இப்போதில்லை. நாம் பார்த்திருக்கிறோம் . . . .

அடிக்கடி . . பாராமல் கெட்டது பாடம்,
பழகாமல் கெட்டது உறவு,
நடக்காமல் கெட்டது பாதை.

கேளாமல் கெட்டது கடன், ... அது போல் அளக்காமல் கெட்டது எல்லை. எல்லையின் தொல்லை நமக்கு தெரியாதது இல்லை. இவைகளை எல்லாம் நாம் நல்ல முறையில் அடிக்கடி அளந்து நிர்ணயிக்க வேண்டும். மேலும் ஃபாரஸ்ட் டிப்பார்ட்மென்டில் இருப்பவர்கள் இம்மாதிரிப்பட்ட பெரிய புள்ளிகள், பெரிய கைகள் இவர்களிடம் போய் அளந்து கேட்பதற்கு பயந்து நடுங்கி, ஒன்றுமே கேட்காமல், வெறுமனே போய் பார்த்துவிட்டு எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது என்று சொல்லிவிட்டு, பேசாமல் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள். இதன் காரணமாக தனியார்கள் அவர்கள் நினைத்த அளவுக்கு குட்டுக்கு குட்டு கல்போட்டு விடுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றுகின்ற முறையில் சரியானபடி அளந்து சரிகட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, ஏலக்காய் பயிரிடுவதைப் பொறுத்தவரையில், ஏலக்காய் பயிரிடுபவர்களுக்குக் கூடுதலாக காடுகள் கொடுக்கப்பட வேண்டும். ஏலக்காய் பயிரிடுவதற்குக் கொடுப்பதால் மரங்களுக்கு எந்த விதமான கெடுதலும் வருவதில்லை. மேலும் மரங்கள் இருந்தால்தான் ஏலக்காய் பயிரிட முடியும். தேயிலை தோட்டங்களுக்கு கொடுத்தால் மரங்களை அழித்துவிட வேண்டிய நியதி ஏற்படும். ஆகவே, தனியார் காடுகளை நல்ல முறையில் வைத்திருப்பதற்கு வசதியாக, ஏலக்காய் பயிரிடுபவர்களுக்கு

(3) THE MADRAS URBAN LAND TAX BILL, 1963 (L.A. BILL NO. 2 OF 1963) AS AMENDED BY THE SELECTION COMMITTEE.

MR. SPEAKER : The next item is the Madras Urban Land Tax Bill, 1963.

* திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இந்த அர்பன் லாண்ட் டாக்ஸ் மசோதாவைக் கொண்டு வருவதற்கு இந்த மன்றத்திற்கு உரிமை இருக்கிறதா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. காரணம் இந்த ரிப்போர்ட்டைப் படித்தபோது—செக்ஷன் 3-ஆவதுபடி தனி நபர் சொத்தின் மதிப்பை நிர்ணயித்து வரி விதிக்க இடம் ஏற்படுகிறது. இது தனி மனிதனின் அசெட் மீது விதிக்கின்ற வரி. அரசியல் அமைப்பு 216-ஆவது பிரிவுப்படி ஏழாவது பகுதி ஷெட்யூலில் எந்த எந்த இனங்களின் மீது மாநில அரசாங்கத்திற்கு வரி விதிக்க உரிமை இருக்கிறது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தனிநபர் சொத்துக்களின் மீது வரி விதிக்கின்ற உரிமை யூனியன் அரசாங்கத்திடமேதான் விடப்பட்டிருக்கிறது. பாராளுமன்றம்தான் இந்த வரியை விதிக்க முடியும் என்று இருக்கிற காரணத்தினால் இந்தச் சட்டப்படி தனி நபர் சொத்தின்மீது வரி விதிக்க இந்த மாநில அரசாங்கம் சட்டம் இயற்றினால் அது செல்லுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத்திற்கு இத்தகைய ஒரு சட்டத்தை இயற்றும் அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பதை 'இந்தச் சட்டமன்றமே முடிவு செய்வதில்லை. இந்தச் சட்ட மன்றத்தில் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தை கோர்ட் பரிசீலனை செய்து இந்தச் சட்டமன்றத்திற்கு அத்தகைய ஒரு சட்டத்தை இயற்ற அதிகாரம் இல்லையென்று தீர்ப்புக் கொடுக்கலாம். அப்புறம் அதன் மீது முடிவு செய்ய முடியும். இந்தச் சட்டமன்றம் ஒரு கோர்ட் இல்லை. மேலும் நாம் இப்போது இந்தச் சட்டத்தை இங்கே இயற்றினாலும் இது மத்திய அரசாங்கத்தின் சம்மதத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அவர்களுடைய அனுமதிக்கு அனுப்பி வைக்கப்படுகிற போது ஏதாவது குறைபாடுகள் இருந்தாலும் நீங்கிவிடும். ஆகவே இப்போது எவ்வித சட்டப் பிரச்னையும் எழவில்லையென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Now the Hon. Minister for Works can move the Bill.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I move—

"That the Madras Urban Land Tax Bill, 1963 (L.A. Bill No. 2 of 1963), as amended by the Select Committee be taken into consideration."

Sir, in moving the motion for the consideration of the Madras Urban Land Tax Bill, 1963, I wish to refer to the important changes made in the Bill by the Select Committee.

According to sub-clause (2) of clause 1 of the Bill as introduced, the provisions of the Bill should come into force on the 1st day of July 1962, and that the Government may, by notification, extend the provisions of the Bill to any other municipal town or any township or any area specified in the notification and within to kilometres of the City of Madras or such municipal town or township. The Government may also by notification cancel any such notification extending the provisions of the Bill to any area. The Committee decided that no retrospective effect should be given to the Bill. The Act will, therefore, come into force with effect from 1st July 1963. Provision has also been made for the prior approval by the Legislative Assembly of the notification for extending and for cancelling the provisions of the Act to any area other than Madras City.

There are certain lands in the City of Madras covered by *shrotriem* grants where the *kudivaram* right is held by one person and *melvaram* right by another person. As such, where the *kudivaram* and *melvaram* rights are held by different persons, the intention is that the kudivaramdar is not to be taken as occupier but is to be deemed as the owner. Therefore, the kudivaramdar has been excluded from the definition of the term "occupier". The definition of the term "owner" in clause 2 of the Bill has also been amplified so as to include a mortgagee in possession and a person entitled to *kudivaram* in respect of any inam land.

The question was raised whether in lieu of the urban land tax, the quit rent should not be increased. It was, however, considered that the quit rent now levied on urban lands was not levied on scientific basis as the varying values of the lands were not taken into consideration. Hence, there was no other basis for levying this tax except the market value. However, as a further concession, the rate of tax has been reduced from 0·5 per cent to 0·4 per cent of the market value of the urban land in a sub-zone. In determining the market value, it has been decided to take into account only the average market value as against the predominant value of those lands.

The Committee considered that the three-Member Tribunal was not necessary. Provision has, therefore, been made for the Tribunal to be manned by a single Judicial Officer not below the rank of a Sub-Judge and for the constitution of more than one Tribunal, if necessary.

Sub-clause (3) of clause 6 of the original Bill provided that the extent of a sub-zone should not be less than 20 grounds. The above minimum was fixed because investigation revealed that the lowest extent within which it could be presumed that there was uniformity in value would be 20 grounds. The Committee considered that the extent of sub-zone need not be fixed. As the classification of a sub-zone was only introduced for determining the market value, it was left to the Assistant Commissioner to prescribe the limit according to the circumstances of each area.

நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாதென்ற சட்டம் என்ன ஆயிற்று. அவர்கள் மீது வழக்கும் போட்டார்கள். ஏற்கனவே அவர்கள் தாசில்தாருக்கு ஒரு குத்தகை சீட்டும், நிலச்சுவான் தாருக்கு ஒரு குத்தகை சீட்டும் கொடுத்து, தங்களிடம் ஒரு குத்தகை சீட்டு வைத்து இருந்தாலும்கூட அவர்கள் விவசாயிகள் இல்லை என்று, சட்டத்தில் உள்ள ஓட்டை, உடைசல்களை தங்களுக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு வழக்குப் போட்டார்கள். கணக்குப்பிள்ளை அக்கம்பக்கம் நிலக்காரர்மூலம் நிரூபிக்கலாம் என்று சொன்னாலும்கூட ஒரு சில இடங்களிலே அவர்கள் அடங்கல் கணக்குகளை காட்டினாலும் ஒத்துக்கொள்வதில்லை. வேண்டாதவர்களாயிருந்தால் அடங்கல் கணக்குகளைக் காட்டுவது இல்லை. அதனால் தாங்கள்தான் விவசாயம் செய்கிறோம் என்று நிரூபிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே உள்குத்தகைதாரர்களையெல்லாம் குத்தகைதாரர்களாக ஆக்கவேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். பரம்பரையாக பல்லாண்டு காலமாக சாகுபடி செய்து வந்தவர்கள் முன்பெல்லாம் குத்தகைச் சீட்டுகள் இல்லாமல்கூட சாகுபடி செய்து வந்தார்கள். அந்தக் காலத்திலே இம்மாதிரி சட்டங்கள் கிடையாது. "கண்டுமுதலில் கொஞ்சம் தள்ளிக் கொடுங்கள், சரியாக விளையவில்லை" என்று விவசாயி சொன்னால், நல்ல மிராசுதாரராய் இருந்தால் அதற்கு ஒப்புக் கொண்டு, பிறகு விளைந்தால் சேர்ந்து வாங்கக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால் சட்டம் வந்தபிறகு குத்தகைச்சீட்டு எழுதிக் கொடுத்தாலும் நிலக்காரர்கள் வாங்க மறுக்கும் நிலைமை இருக்கிறது. இதனால்தான் பரம்பரையாக சாகுபடி செய்கிறவர்கள், தாங்கள்தான் சாகுபடி செய்து வருகிறோம் என்று நிரூபிக்க முடியவில்லை. அதனால்தான் நிலக்காரர்களே நிரூபிக்க வேண்டுமென்று சொல்கிறேன். இப்பொழுது நான் கொடுத்திருக்கிற திருத்தம் என்னவென்றால் உள்குத்தகைதாரர்களை "குத்தகைதாரர்கள்" என்ற பட்டியலில் சேர்க்கவேண்டும் என்பதுதான். எதை வைத்துக் கொண்டு விவசாயிகள் தாங்கள் தான் சாகுபடி செய்தோம் என்பதை நிரூபிக்க முடியும்? அந்த வயலில் உழுத உழவு மாட்டை ஓட்டிக் கொண்டு வருவார்களா? அல்லது உழுத கலப்பையைக்காட்டி இந்த வயலிலே இந்த கலப்பையால்தான் உழுதேன் என்று சொல்ல முடியுமா? மணியக்காரர்களை வைத்துக் கொண்டு நிரூபிக்கலாம் என்று சொன்னாலும்கூட சில இடங்களிலே முடியவில்லை. ஆகவே உள்குத்தகைதாரர்கள் எல்லோரையும் குத்தகைதாரர்களாக ஆக்க வேண்டும் என்கிற என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, நண்பர் தர்மலிங்கம் அவர்கள் கொண்டுவந்து இருக்கிற இந்த திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உள்குத்தகைதாரர்களுக்கு இந்த பாதுகாப்புச் சட்டத்திலே பாதுகாப்பு அளிக்கப்படாமல் இருப்பதனால் ஏற்பட்டிருக்கின்ற நிலைமையை அவர்கள் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்த மன்றத்திலே இது சம்பந்தமாக ஒரு வினா எழுப்பியபோது, கனம் அமைச்சர் அவர்கள், உள்குத்தகைதாரர்கள் என்ற பெயரில் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் எத்தனைபேர் என்று கேட்டதற்கு, ஏறத்தாழ 3,000-க்கு மேற்பட்டவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

இதற்கு முன்னாலேயே இந்த மன்றத்திலே பல சட்டங்கள் இயற்றப்பட்டு இருக்கின்றன. அவைகளுக்கு விதிகளும் இயற்றப்பட்டு இருக்கின்றன. உச்ச வரம்பு சட்டத்திற்கும் பொதுச் சொத்து பற்றிய சட்டத்திற்கும் விதிகள் இயற்றி இருக்கிறோம். இதில் எல்லாம் உட்குத்தகைக்காரர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள், பாதுகாப்பு அளிக்கிறோம் என்று உறுதி தந்து இருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் உட்குத்தகைக்காரர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். 1955-ல் கொண்டுவரப்பட்ட விவசாயிகள் பாதுகாப்பு சட்டத்தின் இரண்டாவது பிரிவின்படி உழவர்கள் யார் என்று உயர்நீதி மன்றம் விளக்கம் தந்து இருக்கிறது. உழவன் என்பவன் என்ன பயிரிடலாம்? எத்தனை ஆட்கள் வைத்திருக்கலாம் என்பதனை பொருத்ததேயன்றி அவனே வயலில் இறங்கி சாகுபடி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவனை உழவன் என்று ஏற்றுக் கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும். உழவன் என்பதற்கு உண்மையான விளக்கம் காணவேண்டும். 1950-ல் அரசாங்கம் நிறுவிய ஒரு குழு தங்கள் அறிக்கையை 1956-57-ல் கொடுத்தது. அந்த அறிக்கையிலே யார் உழவன் என்பதற்கான விளக்கம் சுருக்கமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. எவனுடைய வருவாயின் பெரும்பகுதி விவசாயக் கூலியாக அமைந்திருக்கிறதோ அவனே உழவன் என்று கொள்ளப்படும். அப்படி உழவுத் தொழில்மூலம் பெருவாரியான கூலி அடைபவன்தான் உழவன் என்று கொள்ளப்பட வேண்டும். ஆனால் இந்த விளக்கப்படி விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் அமுலாக்கப்படவில்லை. இன்றைக்கு ஒப்பந்தம் இல்லாத விவசாயி வெளியேற்றப்படும் அவல நிலைதான் இருக்கிறது. ஆகவே உட்குத்தகைதாரர்களுக்கும் சாகுபடிதாரர் என்ற நிலைமை அளிக்கப்பட வேண்டும். அரசாங்க குழுவே வெளியிட்ட அறிக்கைப்படி இவர்களும் உழவர்கள்தான். அந்த முறையில் இந்த திருத்தத்தை ஆதரித்து என் வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

12-00 noon.

***திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்த மூன்றாவது பிரிவுக்கு கொடுத்திருக்கும் திருத்தத்தை டெக்னிகல் பாயிண்டில் தள்ளிவிடலாம் என்று அமைச்சர் அவர்கள் யோசிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். டெனன்ட் என்ற டெபனிஷனை முழுவதும் மாற்றவில்லை என்றாலும் எழுத்தை மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பை பயன் படுத்திக்கொண்டு சப் டெனியையும் வெளியாக கருத அநுதாபத்துடன் இந்த திருத்தத்தை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

Provision has been made in clause 10 of the Bill for allowing 45 days' time for preferring objection to the draft settlement scheme from the date of publication of such scheme in the *Fort St. George Gazette*. A new clause has also been added providing for a revision from the decision of the Assistant Commissioner to the Board of Revenue in regard to delimitation of any zone or sub-zone and such revision should be restricted to the delimitation of boundaries of any zone, or sub-zone and cannot be on market value in respect of which only an appeal lies to the Tribunal.

Clause 22 of the original Bill provided for the levy of penalty for default in payment of urban land tax. It was pointed out that in respect of property tax, levied by the Corporation no penalty was prescribed for default in payment. Accordingly, clause 22 has been deleted and necessary modifications embodied in clause 21 of the Bill.

It was pointed out that, in respect of lands owned by institutions, letting out lands being governed by the City Tenants' Protection Act, the institutions are collecting a nominal rent and that the liability to pay urban land tax should in such cases be placed on the occupier. Accordingly, a new provision has been added in the Bill enabling the owner of the land to pass on the urban land tax to the tenant in case the amount of the urban land tax payable in respect of any land under the Bill is in excess of the annual rent payable in respect of such land or building thereon. The Courts have been empowered on application from the owner to add to the annual rent an amount not exceeding the urban land tax payable under the Bill.

It was also considered that concession to the owner-occupied buildings should be embodied in the Bill itself. Accordingly, provision has been made in the new clause 32 of the Bill to the effect that, if any building is occupied wholly by the owner for his residential purpose and where such owner makes an application to the officer within a specified period, the tax, subject to such rules as may be specified, may be reduced by 25 per cent of the amount of urban land tax payable on the urband land on which the building has been constructed and on the urban land appurtenant to such building.

Clause 33 of the original Bill has also been modified so that any urban land appurtenant to a hospital, or used for public purposes without collecting rent, or on which many building used for purposes of schools, colleges or universities has been constructed or appurtenant to such building will be exempted from the provisions of this Bill. Government can also exempt by notification any urban land belonging to any school, colleges or university even though not built upon and not an appurtenance.

I may state in this connection that one hon. Member of this House has put in a dissenting minute. He considers that it is unconstitutional to levy tax based on the temporary enhanced value

of the land over and above the ground rent. He also considers that the Government have no authority to alter the arrangement whereby quit rent is levied in respect of the lands within the City limits. The Government are already advised that the legislation is not inconsistent with the provisions of the Constitution. So I commend the motion for the acceptance of the House.

MR. SPEAKER : Is the hon. Member Sri M. Kalyanasundaram moving his two amendments?

SRI M. KALYANASUNDARAM : Sir, I am not moving my amendment proposing the postponement of the consideration of the Bill by six months. I move my other amendment :—

"That the Madras Urban Land Tax Bill, 1963 (L.A. Bill No. 2 of 1963), as amended by the Select Committee, be recommitted with instructions—

(1) to suggest suitable amendment for exempting owners of urban land using for personal residence who are not assessed to sales tax or income-tax;

(2) to suggest suitable amendments for safeguarding the revenue through property-tax of the Local Bodies, like Corporation of Madras, Municipalities, etc.; and

(3) to suggest necessary amendments for safeguarding the interests of low-income and middle-income groups, wage-earners, from increased house-rent by the landlords taking advantage of the new tax."

SRI A. K. SUBBIAH : I second the amendment, Sir.

SRI K. A. MATHIALAGAN : Sir, I move the following amendment standing in my name :—

"That the Madras Urban Land Tax Bill, 1963 (L.A. Bill No. 2 of 1963) as amended by the Select Committee be recommitted with instructions—

(1) to suggest suitable amendment for exempting—

(*a*) lands occupied by buildings and used by the owners thereof for their own residence, no portion is let out or used for any other purpose;

(*b*) where the extent of such lands or where a person owns more than one plot, falling under this clause and the aggregate area of such lands does not exceed 1½ grounds;

(2) to suggest suitable amendment for mitigating the hardship on the poorer section of the people by levying the tax at a slab rate ranging from 0·1 per centum to 0·5 per centum of the market value with due regard to the extent of each holding and the purpose for which it is used;

(3) to suggest necessary amendment for safeguarding the interests of owners in underdeveloped areas and slums; and

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [19th November 1963

எடுத்துக் காட்ட விரும்புகிறேன். தஞ்சைப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்காக இருந்தபோதிலுங்கூட, அது அந்த மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டது. 60 : 40 என்ற விகிதாசாரத்தில் இருந்தது. அதன்படி 60 பங்கு நிலச்சுவான்தாருக்கும், 40 பங்கு விவசாயிக்கும் என்றிருந்தது. 1955-ல் அதை மாற்றி, 60.40 என்ற நியாய வாரச் சட்டத்தை இந்த சர்க்கார் அவசரம் அவசரமாகக் கொண்டு வந்தார்கள். விவசாயிக்கு 60 பங்கும் மிராசுதாரருக்கு 40 பங்கும் என்ற திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். 60:40 சட்டம் வேண்டாமென்று கூறவில்லை. ஆனால் நடைமுறையில் பார்த்தால் ஒருபொழுதும் விவசாயி 60 பங்கு பெற முடியவில்லை. நிலச்சுவான்தார்களுக்கு 60 பங்கும், விவசாயிகளுக்கு 40 பங்கும் இருந்தகாலத்தில், களம் முதலான நெல்லில் அறுவடைக் கூலி, சுதந்திரக் கூலி எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, மீதி இருப்பதை 60 : 40 என்ற விகிதாசாரத்தில் பிரித்துக் கொள்ளும் நிலைமை இருந்தது. இப்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள நியாய வாரச் சட்டத்தில் 60 பங்கு விவசாயிக்கு, 40 பங்கு நிலச்சுவான்தாருக்கு என்று சொன்னாலுங்கூட, களம் முதலில் 60 பங்கை விவசாயி எடுத்துக் கொண்டு, மீதி 40 பங்கை நிலச்சுவான்தாருக்கு கொடுத்து விடுகிறான். அவன் எடுத்துக் கொண்ட 60 பங்கில் இருந்துதான் அறுவடைக்கூலி, களைக்கூலி எல்லாவற்றையும் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே 60 பங்கும் நேரடியாக விவசாயிகளுக்குப் போய்ச் சேருவது இல்லை. முன்பு இந்தச்சட்டங்கள் எல்லாம் இல்லாத காலத்தில் குத்தகை நெல்லை அளந்துவிட்டு, காணிக்கட்டு என்ற அடிப்படையில் ஒரு காணிக்கு 4 அல்லது 5 வைக்கோல் கட்டை நிலச்சுவான்தாருக்கு கொடுத்துவிட்டு பாக்கி வைக்கோல் பூராவையும் விவசாயிகளே எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது. உளுந்து, பயிறு இவைகள் சாகுபடி செய்தால் ஒரு காணிக்கு குறுணி, முக்குறுணி என்ற அளவிலே கொடுத்துவிட்டு, விளைகின்ற பயிரை விவசாயிகளே எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால் இப்போது அதிலேயும் பங்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டால், இப்பொழுது நியாயவாரச் சட்டம் இருந்தபோதிலுங்கூட, விவசாயிகளுக்கு 60 பங்கு கிடைக்கவில்லையென்பது நன்கு புலப்படும்.

அடுத்தபடியாக, விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்ற சட்டம் இருந்தபோதிலும் பல இடங்களிலே விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் அந்த விவசாயி உயர்நீதி மன்றம் வரையிலும் போய், அவன் தான் விவசாயம் செய்ததாக நிரூபிக்க முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. எந்த விவசாயியை எடுத்துக் கொண்டாலும் அவன் மேல் கோர்ட்டுகளுக்கு போக முடியாத நிலைமையில்தான் இருக்கிறான். நிலச்சுவான்தார்தான், சம்பந்தப்பட்ட ஒரு விவசாயி நிலத்தை உழவில்லையென்று நிரூபிக்கும் வகையில் சட்டம் இருக்கவேண்டுமே தவிர, விவசாயி அதை நிரூபிக்கவேண்டும் என்று சொன்னால் அவனால் அவ்வாறு நிரூபிக்க முடியாது. ஆகவே ஏதோ ரூ. 400 அல்லது 500 என்று வாங்கிக் கொண்டு மேலே வழக்காட முடியாத நிலையில் இருப்பதனால், அப்படியே விட்டு விடுகிறான். நான் இதைப்பற்றி முன்பே இந்தச் சபையில் குறிப்பிட்டிருக்கிறேன். விவசாயிகளுக்கு உயர்நீதி மன்றம் வரையிலும்போய் வழக்காடுவதற்கு அரசாங்கமே வக்கீல்களை நியமித்துக் கொடுத்தால் நலமாக இருக்குமென்று சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

19th November 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

விவசாயிகள் நலனுக்காகப் போடப்படும் சட்டங்கள் அவர்களுக்குப் பயன்படவில்லை என்பதற்குக் காரணம் இப்பொழுது பப்ளிக் டிரஸ்ட் சட்டம் கொண்டுவரப் பட்டபோதிலும், அதிலே உள்குத்தகைதாரர்கள் எல்லாம் கல்டிவேடிங் டெனன்ட்ஸ்களாக கருதப்பட வேண்டும் என்ற விதி இருந்தாலுங்கூட, விவசாயிகளுக்கு சாதகம் இல்லாத வகையிலே மற்ற நிலச்சுவான்தார்களும், டிரஸ்ட் சொத்தின் சொந்தக்காரர்களும் தங்களுக்கு அனுகூலமாக சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய பகுதியிலே பல விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நான் கனம் அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அரசாங்கத்திற்கும் விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறோம். உள்குத்தகைதாரர்களை கல்டிவேடிங் டெனன்ட்ஸ்களாக ஆக்கிவிடலாம் என்று பப்ளிக் டிரஸ்ட் ஆக்டில் சொல்லப்பட்ட போதிலும், அவ்வாறு ஆக்கப்படவில்லை. லால்குடி வட்டத்திலே சாத்தமங்கலம், மணக்கால், கோப்பாளி, தொங்கல என்ற பகுதிகளிலே ஏழை விவசாயிகள் ஒரு அன்னதானச் சத்திரத்திற்குச் சொந்தமான நிலத்தை சாகுபடி செய்து வந்தார்கள். அப்பொழுது கோர்ட்டில் தாவா இருந்த காரணத்தால் சர்க்கார் ஒரு ரிசீவரை நியமித்தார்கள். அந்த ரிசீவர் கோர்ட்டிலேயே ஏலம் போடுவது வழக்கம். இரண்டு அல்லது மூன்று பேர் அந்த நிலத்தை ஏலத்தில் எடுத்து, உள்குத்தகைதாரர்களான ஏழை எளியவர்களுக்கு விடுவது வழக்கமாக இருந்தது. ஏலதார் அதிக தொகைக்கு எடுத்தால் அதையும் ஏழை விவசாயிதான் கொடுக்கவேண்டும். தற்போது ஒரு விவசாயி 5 ஏக்கருக்கு மேல் குத்தகை சாகுபடி செய்யக்கூடாது என்று சட்டம் கொண்டு வந்ததனால், விவசாயிகளுக்கு நேரடியாக நிலத்தை அடைக்கின்ற முறையை ரிசீவர் மேற்கொண்டார். இதனால் ஏற்கனவே 20 அல்லது 30 ஆண்டுகளாக விவசாயம் செய்துவந்த விவசாயிக்குக் கொடுக்காமல் வேறு சில விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அவ்வாறு 20 அல்லது 30 ஆண்டுகள் விவசாயம் செய்துவந்த விவசாயிகள் "நீங்கள் கேட்கிற குத்தகையை கொடுத்து விடுகிறோம், எங்களுக்கே நிலத்தை குத்தகைக்குக் கொடுங்கள்" என்று கேட்டதற்கு, "முடியாது" என்று சொல்லிவிட்டார்கள். உழுதவனை

ஸோன், சப்-ஸோன் என்று பியக்க முடிவு செய்திருக்கிறார்கள். அப்படிப் பிரிப்பது நலமாக இருக்குமா? பிரிக்கும்போது ஆபீசர்கள் தக்க முறையில் செய்வார்களா? அதில் சிக்கல்கள் வரும் என்ற சந்தேகம் எனக்கு விட்டபாடில்லை. அதை பொறுக்குக் கமிட்டியிலும் கூறினேன். ரெஸிடென்ஷியல் ஏரியா, நான் ரெஸிடென்ஷியல் ஏரியா என்று இரண்டு வகையாக மட்டும் பிரித்து அதை பெருக்கவேண்டுமென்றால் பத்து எம்.எல்.ஏ. தொகுதி போன்று பத்து ஸோன்களாக வைத்து அதன் மூலம் வரி போட முயற்சித்தால் சிறந்ததாக இருக்கும். 100 ஸோன், 150 சப் ஸோன் என்று வைத்தால் அதைப் பிரிக்கக் கூடிய அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கும்போது அவர்கள் அதில் தவறு செய்து விட்டால் அதன் கஷ்டங்களுக்கு நாம்தான் ஆளாக வேண்டிவரும். இந்த வரி காரணமாக லீஸ் அண்ட் ரென்ட் கண்ட்ரோல் ஆக்ட் படி மேல் தளத்தில் உள்ளவர்களும் அடித்தளத்தில் உள்ளவர்களும் பாதிக்கப்படுவார்கள். லீஸ் அண்ட் ரென்ட் கண்ட்ரோல் ஆக்டில் 250 ரூபாய் ஒரு நபர் வாடகை கொடுக்கும்போது இச்சட்டம் அமலாகாது என்று இருக்கிறது. வியாபார ஸ்தலமாக இருந்தால் 400 ரூபாய் வாடகை கொடுக்கப் பட்டால் இச்சட்டம் அமலாகாது என்று கூறப்பட்டிருக்கிறது இந்த மசோதா மூலம் 230 ரூபாய் வாடகை கொடுக்கிறார்கள் என்றால் இந்த அர்பன் லான்ட் டாக்ஸையும் சேர்த்து போட்டால் 250 ரூபாய் வந்து விட்டால் அந்த வீடு அந்தச் சட்டத்தின் அடிப் படையில் வராது. அதிலிருந்து விலக்கப்பட்டு விடும். அதனால் பல வீடுகள் அரசாங்கத்தின் கட்டுப்பாடு இல்லாமல் மற்றவர்களுக்கு போய் விடும். அதன் மூலம் பல தவறுகள் ஏற்படும். ஆகவே இந்தப் பிரிவு ரென்ட் கண்ட்ரோல் ஆக்டின் கீழ் சேர்க்கப் படக்கூடாது. அதற்கென்று தனியாக இப்போது திருத்தம் கொண்டு வந்து தக்க மாற்றம் செய்வது வரவேற்கத்தக்கதாக இருக்கும். அதே போன்று அடித்தளத்தில் இருக்கும் மக்கள் இப்போது 15 ரூபாய், 20 ரூபாய் என்று வாடகை கொடுத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் .4 சதவிகிதம் என்று வரி போட்டு விட்டால், அதை சாக்காக வைத்துக்கொண்டு வீட்டுச் சொந்தக் காரர்கள் வீட்டு வாடகையை கூட்டுவதற்கு காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் வரி போடுவதினால் வீட்டுச் சொந்தக்காரர்கள் தங்கள் கையிலிருந்து கொடுக்கப்போவதில்லை. வாடகைக்கு இருப்பவர்களிடமிருந்து தான் வாங்கிக் கொடுக்கப்போகிறார்கள். ஆகவே அடித்தளத்திலிருக்கின்ற மக்களுக்கு எந்தவிதமான பாதகமும் விளையாமல் இருக்கும்படியான நிலைமையில் ஏதாவது ஒரு பாதுகாப்பை 31-வது கிளாஸில் சேர்த்துக்கொள்ளலாம். முதலாவது இருந்த மசோதாவிலிருந்து பல திருத்தங்கள் இதில் செய்திருப்பது பாராட்டத் தக்கது என்றாலும் அடித்தளத்தில் இருக்கின்றவர்களுக்கு இது பாதகமாக அமையக் கூடாது என்பதை அரசாங்கம் நன்றாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதோடு முக்கியமாக வரியை கொடுக்காவிட்டால் "பெனல்டி" கொடுக்க வேண்டும் என்று இருந்ததை இப்போது மாற்றியிருக்

கிறார்கள். உண்மையிலேயே இது மிகவும் வரவேற்கத்தக்கது. இருக்கிற வரியையும் தண்ட வரியையும் சேர்த்துக் கட்டக்கூடிய நிலைமை இல்லாதவாறு செய்திருக்கிறார்கள். இதுமிகவும் பாராட்டத்தக்கது. மேலும் மூன்று பேர் கொண்ட டிரிப்யூனல் என்றிருந்ததை இப்போது ஒருவர் போதும் என்று ஆக்கியிருப்பதும் வரவேற்கக் கூடியதே. இதனால் வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கும் என்ற நிலைமை இல்லாமல் ஏதோ இதன் மூலம் சர்க்காருக்கு ஓரளவுக்கு வரி வந்து சேர்ந்தது என்று சொல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே இப்போது இருப்பதை சிறிதளவு அங்காங்கு சிறு சிறு திருத்தங்களை செய்து கொண்டு வந்து, நகர்ப்புறங்களில் இருக்கின்ற மக்கள் இதன் கஷ்டத்தை உணராத அளவுக்கு கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வரவேண்டுமென்றால், மூன்று வீடுகள் ஐந்து வீடுகள் உடையவர்கள் என்று கணக்கிட்டு, .1 சத விகிதம், .2 சத விகிதம் .3 சத விகிதம் என்று ஸ்லாப் ஸிஸ்டம் போட்டு நிர்ணயித்தால் மிகவும் வரவேற்கத் கூடியதாக இருக்கும். மக்களும் இதிலுள்ள கஷ்டத்தை உணர மாட்டார்கள்.

மேலும், செலக்ட் கமிட்டியில், முதினால் அப்பீல் செய்து கொள்வதற்கு 30 நாட்கள் என்றிருந்ததை இப்போது 40 நாட்களாக உயர்த்தியிருக்கிறார்கள். இதையும் 60 நாட்கள் என்று உயர்த்தினால் வசதியாக இருக்கும். 30, 45, 60 என்றுதான் நாட்கள் கொடுத்திருப்பார்கள். ரிவிஷனுக்கு 90 நாட்கள் கொடுப்பது வழக்கம். ஆகவே இதிலும் 60 என்று வைத்தால் நன்றாக இருக்கும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

அதோடு, இதிலிருந்து கிடைக்கும் பணத்தைக் கொண்டு நாட்டு மக்களுக்கு செலவழிக்கவேண்டியதை செலவு செய்ய வேண்டும். அவ்விதம் செலவு செய்தால் நலமாக இருக்கும். இதன் மூலம் வருகின்ற பணத்தை முனிசிபாலிட்டிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் யோசனை சொன்னார்கள். ஆனால் பல இடங்களில் முனிசிபாலிட்டிகள், கார்ப்பரேஷன் மூலமாக பணம் பாழாக்கப்படுகிறது. நம்முடைய கார்ப்பரேஷனை எடுத்துக்கொண்டால், பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து ரோடுகளை போடுகிறார்கள். அதன் பின்னால் குழாய்களை போடுவதற்காக கடப்பாரையைக்கொண்டு இடித்துத் தள்ளுகிறார்கள். ரோடுகளைப் போடும்போதே இந்தக் குழாய்களைப் போட்டிருந்தால் இம்மாதிரியாக தோண்ட வேண்டிய நிலைமை ஏற்படாது. பூந்தமல்லி ரோட்டில் பெரிய பெரிய குழிகளாக தோண்டி போட்டிருக்கிறார்கள். கேட்டால், டிப்பார்ட்மென்டுகளுக்கிடையில் lack of Co-ordination என்று சொல்லுகிறார்கள். இந்த விதத்தில் கார்ப்பரேஷன் மூலமாக பணம் பாழாக்கப்படுகிறது. ஆகவே இந்தப் பணத்தை உடனடியாக முனிசிபாலிட்டிகளிடத்திலோ அல்லது கார்ப்பரேஷனிடமோ கொடுத்துவிடாமல் நல்லமுறையில்

பவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பது ஒரு பிரச்னை. ஆனால் வாடகை செலுத்தக்கூடியவர்கள் மீது சுமத்தி விட்டு சொந்தக்காரர்கள் தப்பித்துக் கொள்ளும் வசதியை செய்து கொடுப்பது அபாயகரமானது. எப்படி விற்பனை வரி கடைசியாக வாங்குபவர்கள் மீது விழுகிறதோ அதேபோன்று இந்த வரி வாடகைக்கு இருப்பவர்களின் மீது சுமத்தும் ஆபத்தை வைத்திருப்பது நியாயமற்றது. அதைத் திருத்தவேண்டுமென்று யோசனை கொடுத்திருக்கிறேன். இத்திருத்தங்களை அந்தந்தப் பிரிவுகளில் செய்யக்கூடாதா என்று சொல்லலாம். அதற்கு மறுபடியும் செலக்ட் கமிட்டிக்கு போக வேண்டுமா என்று கேட்கலாம். இத்திருத்தங்களை தக்கபடி செய்யக்கூடிய முறையில் இம்மசோதா அமையவில்லை. தக்க முறையில் தக்க திருத்தங்களை செய்யவேண்டுமென்றுதான் திரும்பவும் இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கூறியிருக்கிறேன். செலக்ட் கமிட்டிக்கு மறுபடியும் விடுவதானால் காலதாமதமாகுமே, ஒத்தி போட வேண்டியிருக்குமே என்று சந்தேகிக்க வேண்டியதில்லை. மூன்று தினங்களுக்குள்ளாகவே அதே செலக்ட் கமிட்டி கூடி இது பற்றி மறு பரிசீலனை செய்து இத்திருத்தங்களை கொண்டு வந்து இச்சபை கலைவதற்குள், 23-ம் தேதிக்குள்ளாக இதை நிறைவேற்றிவிட முடியும். ஆகவே இதுபற்றி யோசிக்கவேண்டும். 31-வது பிரிவு மிக அபாயகரமானது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதுதான் என் மூன்றாவது திருத்தத்தின் நோக்கம். இரண்டாவது திருத்தம் அரசாங்கம் கவனிக்கவேண்டியது. நகர மன்றங்கள், கார்ப்பரேஷன் போன்றவர்கள் வரி விதிக்கும் ஒரு கட்டுப்பாடு இதில் இருக்கிறது. வீட்டு வரி வசூலிக்கப்படுகிறது. நிலம், கட்டிட அமைப்பு இரண்டு அம்சங்களும் சேர்ந்து வீட்டு வரி இருக்கிறது. நிலத்தின் மதிப்பை தனியாகப் பிரித்து வரி விதிக்கும்போது நாலு வருடத்திற்கு ஒரு முறை முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் வரியை பரிசீலனை செய்து உயர்த்தலாம் என்ற அதிகாரம் இப்போது இருக்கிறது. அதற்கு ஓரளவு இதனால் குந்தகம் ஏற்படும். அவர்கள் வருமானத்தை ஓரளவு இது குறைக்கும். அவர்கள் இஷ்டம்போல் உயர்த்த முடியாது. அப்படி உயர்த்தினால் இந்த வரியும் சேர்ந்து வரிப்பளு அதிகரிக்கும் காரணத்தினால் மக்களிடம் எதிர்ப்பு ஏற்படும். ஆகவே நகர சபைகளுக்கும், சென்னை கார்ப்பரேஷனுக்கும் இதனால் சங்கடம் ஏற்படும். இதனால் நகரசபைகளுக்கு பாதகம் ஏற்பட்டால் அவர்களுக்கு அதை ஈடு செய்ய என்ன வசதி செய்யலாம் இந்த வரியிலிருந்து என்பதை யோசிக்கவேண்டும். நில வரியில் உள்ள வருமானத்தை பூராவும் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கியிருப்பது போல் இந்த வருமானம் பூராவையும் சம்பந்தப்பட்ட நகர மன்றங்களுக்கு, அல்லது கார்ப்பரேஷனுக்கு கொடுப்பதாக இருந்தால், வசூல் செய்வது அரசாங்கமாக இருந்தாலும், இந்த வரியின் நியாயத்தை பொது மக்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களது ஆதரவைத் திரட்ட சாதகமாக இருக்கும். கார்ப்பரேஷன், முனிசிபாலிட்டிகள் எல்லாம் வசதிகள் செய்து கொடுக்க பணம் இல்லாவிடில் அரசாங்கத்தினிடம் வந்து கேட்கிறார்கள். இந்த வரியில் கிடைக்கும் வருமானம் பூராவும் சம்பந்தப்பட்ட முனிசி

பாலிட்டி அல்லது கார்ப்பரேஷனுக்கு கொடுக்கப்படும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டால் மக்களிடம் இந்த வரியின் நியாயத்தை எடுத்துச் சொல்ல சாதகமாக இருக்கும். ஆகவே தான் இந்த மூன்று அம்சங்களையும் திருத்தவேண்டுமென்று செலக்ட் கமிட்டிக்கு மறுபடியும் இது போக வேண்டும் என்ற யோசனையைக் கூறியிருக்கிறேன். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதராஸ் அர்பன் லாண்ட் டாக்ஸ் மசோதா குறித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். நான் பொறுக்குக் கமிட்டியில் ஒரு அங்கத்தினராக இருந்தபோதிலும் ஒரு சில கருத்துக்களை கூறவிரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த மட்டில் நன்கு யோசித்துப் பார்த்துத்தான் சில திருத்தங்களை செலக்ட் கமிட்டி ஏற்று முடிந்த வரையில் ஒரு நல்ல மசோதாவாக கொண்டு வரவேண்டுமென்று முயற்சித்து இருப்பதை யாரும் மறுக்க முடியாது. நகர்ப்புறங்களில் நிலத்தின் விலை திடீரென்று ஏறி இருப்பதால், அன் ஏர்ண்ட் இன்கம்மில் வரி போடுவது தவறு அல்ல என்றுதான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. நகர்ப்புறங்களில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரு க்ரவுண்டு 5,000, 6,000 ரூபாய் என்று விற்றது இன்று 10,000, 18,000 ரூபாய்க்கு குறைந்து கிடைப்பதில்லை. ஆக திடீரென்று விலை மூன்று, நான்கு பங்கு ஏறியிருக்கிறது. ஆகவே இந்த வரியைப் போட்டு மக்களின் நலனுக்காக செலவழிப்பது சிறந்தது என்ற முறையில்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த வகையில் .5 சதவிகிதம் என்று போட்டு சராசரி மார்க்கட் வால்யூவில் .4 சதவிகிதம் என்று செலக்ட் கமிட்டி திருத்தியிருக்கிறது. சட்டசபையில் அங்கத்தினர்கள் அதை இன்னும் குறைத்தால் சிறந்ததாக இருக்கும். அப்படி இல்லாவிடில் ஸ்லாப் ஸிஸ்டம் வைப்பது சிறந்தது. ஒன்றிரண்டு வீடுகள் இருந்தால் .1 சதவிகிதம் என்று வைத்து கொஞ்சங்கொஞ்சமாக 25 வீடுகள் வைத்திருப்பவர்களுக்கு 4 சதவிகிதம் வரை போடக் கூடிய ஒரு திருத்தத்தைப் பார்த்தேன். அதைக் கொண்டு வந்திருப்பது பாராட்டத் தக்கது. பெரிய பங்களாக்கள் வைத்திருப்பவர்களுக்கு வேண்டுமென்றால் இந்த வரி போடுவதில் அர்த்தமுண்டு. என் தொகுதியில் 1 கிரவுண்ட், 1½ கிரவுண்ட்டில் வீடு கட்டிக் கொண்டிருக்கிற நடுத்தர மக்கள் இருக்கிறார்கள். அந்த லோயர் மிடில் க்ளாஸினரின் நிலையை சற்று புனராலோசனை செய்வது போற்றத்தக்கது. 1½ கிரவுண்ட், 2 கிரவுண்டில் வீடு கட்டப்பட்டு அதில் அதன் சொந்தக்காரரே குடியிருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு இந்த வரி இல்லாமல் சலுகை காட்டுவது போற்றத்தக்கதாக இருக்கும். இப்போதுள்ள மசோதாப்படி ஓனர் ஆக்குபெண்ட்ஸ்க்கு 25 சதவிகிதம் குறைவாக வரி போட்டிருக்கிறார்கள். ஒரு வீடு வைத்துக் கொண்டு அதைக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள் பலர். அவர்களுக்கு வரி விலக்கு கொடுக்க முடியுமா என்று யோசித்துப் பார்ப்பது போற்றத்தக்கதாக இருக்கும். அடுத்தபடியாக, நகர்ப்புறத்தில்

யோசித்துப் பார்த்து சாதாரண மக்களுக்கு பயன்படும் வகையில் செலவு செய்வது மிகவும் போற்றத்தக்கதாய் இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் நகர்புற நிலங்களின் மீது வரி வசூலிக்கும் இந்த மசோதாவின் மீது, இதை மீண்டும் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்ற திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன். அதற்கான காரணங்களை ஏற்கெனவே இதன் மீது பேசிய அங்கத்தினர்களில் சிலர் குறிப்பிட்டார்கள். இந்த மசோதாவை எதிர்க்க வேண்டுமென்றோ, அல்லது தள்ளி போட வேண்டுமென்றோ உள்ள எண்ணமில்லாத வகையில் மீண்டும் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினால் இதில் இன்னும் சில நல்ல திருத்தங்களை செய்ய முடியும் என்ற எண்ணத்தினால்தான் இத் திருத்தத்தை கொடுத்துள்ளேன். இந்த மசோதாவை முதலில் அறிமுகப் படுத்திய நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இப்படிப்பட்ட மசோதாக்களை கொண்டுவரவேண்டும் என்று ஆதரித்துப் பேசினோம் என்பதை கனம் உதவி சபாநாயகர் அவர்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களுக்கு கவனப்படுத்த விரும்புகிறேன். அப்படியிருப்பினும் மீண்டும் இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டிருப்பதின் காரணம், கனம் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும் எதிர்க்கட்சியைச் சார்ந்த திருமதி அனந்தநாயகி அவர்களும் . . . (கனம் திரு. வெ. ராமையா: அவர்கள் எதிர்க்கட்சியை சேர்ந்தவர் அல்ல . . .) உங்களுக்கு எதிர்கட்சியாக இல்லாவிட்டாலும், எங்களுடைய கட்சிக்கு எதிர்கட்சியாக இருந்து வருகிறார். இவர்கள் எல்லோரும் ஏன் பொறுக்குக் கமிட்டிக்குத் திரும்பவும் அனுப்பவேண்டும் என்ற கருத்தையே எடுத்துக் கூறினார்கள்? ஒன்றரை கிரௌண்ட் அளவுக்கு. குடியிருப்புக்கு இருந்தால் அந்த இடத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்கிற முக்கியமான ஒரு அம்சத்தை நான் எனது திருத்தங்களில் ஒன்றாக கொடுத்திருக்கிறேன். இரண்டாவது, இதில் பொறுக்குக் கமிட்டிக்குப் போய் வந்து பல நல்ல திருத்தங்கள் வந்திருந்தபோதிலும் கூட, சாதாரண மக்களுக்கு வாடகை இப்போது இருப்பதைவிட அதிகமாக்கப்படும் ஒரு பெரிய அபாயத்தை இது கொண்டு வரும் என்று நான் அச்சப்படுகிறேன். இந்த மசோதாவை அறிமுகப்படுத்திய நேரத்தில் "புலி வேட்டைக்குப் போய் பூனை வேட்டையாக முடிந்துவிடக்கூடாது" என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூறியதை நான் இப்போது ஞாபகமூட்ட விரும்புகிறேன். இதனால் பாதிக்கப்படுபவர்களுக்குப் பயந்து பல நல்ல திருத்தங்களை செய்யாமல் இருந்தால் இப்படிப்பட்ட ஒரு மசோதாவை நிறைவேற்றியும் எந்தவிதமான பயனும் இல்லாமல் போய் விடக்கூடும் என்று நான் கருதுகிறேன். சாதாரண ஏழை மக்களுக்கு இதனால் எந்தவிதமான பாதகமும்

ஏற்படாத வகையில் நான் நான்கு அம்சங்கள் கொண்ட திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்களும் இதைப்பற்றி நன்கு விளக்கியிருக்கிறார்கள். ஒன்றரை கிரெண்ட் குடியிருப்புக்காக வைத்திருக்கின்றவர்களுக்கு நிச்சயமாக இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டிய அவசியமிருக்கிறது. இதே போல் பொதுவாக எல்லாவற்றிற்கும் .5 சதவிகிதம் என்றிருந்ததை இப்போது .4 சதவிகிதம் என்று குறைத்திருக்கிறார்கள். இருப்பினும் குடியிருப்பு என்பது தனிமுறையாகும். குடியிருப்புக்கு ஒன்றரை கிரௌண்டுக்கு மேல் இருந்தால் .1 சதவிகிதம் என்றும் குடியிருப்போடு தொழில்துறைக்கும் சேர்த்து இருந்தால் .3 சதவிகிதம் என்றும், தொழில்துறையில் வர்த்தகத்திற்காக இருந்தால் .5 சதவிகிதம் என்றும் ஸ்லாப் முறையில் நிர்ணயிக்கவேண்டும். இப்படியில்லாமல் ஒரே மாதிரியாக இருப்பது அவசியமில்லை. இவ்விதம் அமைப்பதாக இருந்தால் கிழே இருக்கின்றவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வாய்ப்பு இருக்கிறது என்பதையும் என் திருத்தத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். அதைப் போல லோன், சப்-லோன் இவைகளை அமைப்பதிலும், சேரிவாழ் மக்கள் இருக்கின்ற பகுதிகளை அதாவது ஸ்லம் ஏரியாக்களை தனியாகவும், அபிவிருத்தி அடையாத சில "பாக்கட்" பகுதிகளை தனியாகவும் கணக்கிட வேண்டும். இப்பகுதியிலுள்ளவர்களுக்கு தனியாக கட்டணம் விதிக்க முடியாவிட்டாலும், அவர்களுக்கு கன்ஸெஷன் கொடுக்கிற வகையில் ஏதாவது வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் என்னுடைய திருத்தத்தில் கேட்டிருக்கிறேன். இந்தத் திருத்தங்கள் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஏன் இதிலேயே செய்யக்கூடாது என்றால், இந்த வரியினால் உள்ள பலனையும் அடையவேண்டும்; அதற்கான வாய்ப்புகள் இருந்தாலும், சாதாரண குடியிருப்புகளுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் ஆபத்தான விவரங்கள் பொறுக்கு கமிட்டியின் முடிவுக்குப் பிறகும் இருக்கிற காரணத்தினால் மீண்டும் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இந்த நேரத்தில் சென்னை நகரத்தைப்பற்றி மட்டும் எடுத்துக் கொண்டாலும், இந்தத் திருத்தங்களை கனம் அங்கத்தினர் அம்மையார் கூட, பொறுக்குக் கமிட்டியில் இருந்தவர்கள்கூட சொன்னார்கள், 1½ கிரவுண்டுக்கு விதிவிலக்கு வேண்டும், ஸ்லாப் லிஸ்டம் வேண்டும் என்று சொல்லும் போது, பொறுக்கு கமிட்டியில் இருந்தவர்களுக்குக்கூட மீண்டும் அவர்களே இதை புனராலோசனை செய்கிற காரணத்தினால் மீண்டும் இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று சொல்லிக் கொள்கிற நேரத்தில், இந்த மாதிரி சென்னை போன்ற நகரங்களில் உள்ள நிலங்களுக்கு கிராக்கி ஏற்படுவதன் காரணமே, நகர சபைகள் செய்திருக்கிற அபிவிருத்திகள், வேறு குடிதண்ணீர் வசதிகள், மற்ற காரியங்கள் என்ற காரணத்தினால், இதிலிருந்து வருகிற பணத்தை அவர்களுக்கே கொடுக்கவேண்டுமென்று ஏற்கெனவேயே வற்புறுத்தியிருக்கிறோம். இதனால் வருகிற வரி வருமானத்தை நகர சபைக்கும் மற்றவைகளுக்கும் கொடுக்கும்

(4) to suggest necessary amendment for protecting the interests of the poorer class from enhanced house rent by the landlords.

SRI S. MURUGAIYAN : Sir, I second the amendment.

MR. SPEAKER : The motion and the amendments are before the House for discussion.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நிலத்தின் மதிப்பின் மீது வரி விதிக்கக் கூடிய கோட்பாடுகளை நான் ஆதரிக்கிறேன். அதாவது சென்னை நகரத்திலும், பின்னர் இன்னும் இதர நகரங்களிலும் நில மதிப்பின் மீது விதிக்கக் கூடிய இந்த வரிக் கோட்பாடு சம்பந்தப்பட்ட மட்டில் ஆட்சேபிக்கக்கூடியது அல்ல. முதலிலே, இந்த வரி அளவு எவ்வளவு இருக்கிறது என்று பார்த்தால், வருஷம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கு நான்கு ரூபாய் வரி விதிக்கிறார்கள். அதுவும் சொந்த வீட்டிலேயே குடியிருப்பவர்களுக்கு 'வருஷம் ஒன்றுக்கு மூன்று, ரூபாய்தான் வசூலிக்கப்படும் என்று இருக்கிறது. இது ஒரு பெரிய பளுவான வரி என்று கருதுவதற்கில்லை. சென்னை நகரம் போன்ற பெரிய நகரங்களில் நிலத்தினுடைய மதிப்பு வெகு வேகமாக உயர்ந்து கொண்டே வருகிறது. ஐநூறு ரூபாய், ஆயிரம் ரூபாய்க்கு ஒரு மனை இருந்தது இன்று பதினைந்தாயிரம், இருபதாயிரம் என்று விற்கிறது. இந்த மாதிரி விலை உயருவதற்கு அந்த மனைக்குச் சொந்தக்காரர்கள் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் மிகக் குறைவாகவேதான் இருக்கும். அரசாங்கத்தினுடைய விஸ்தரிப்புத் திட்டத்தினாலும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினால் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியினாலும் இந்த அளவுக்கு நிலத்தினுடைய மதிப்பு உயர்ந்து வருகிறது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இந்தமாதிரி நிலத்தின் மதிப்பு உயர்ந்து வரக்கூடியதன் பலனை மட்டும் தனிப்பட்டவர்கள் அனுபவிக்கலாம், அதற்கான வரி கோருவது தப்பு என்று சொல்வது எவ்வாறு நியாயம் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த வரி போடுவது இப்போது ஏற்பட்ட யோசனையினாலோ, இந்த அரசாங்கத்தினாலோ, ஐந்தாண்டுத் திட்டங்கள் வந்த பிறகோ ஏற்பட்டதல்ல. 1938-வது வருஷத்திலேயே இந்த மாதிரி நகரப்புற நிலங்களுக்கு நிலத்தின் மதிப்பின் பேரில் வரி போடலாம் என்ற யோசனை அன்று முதலமைச்சராக இருந்த ராஜாஜியால் ஏற்பட்டது. அந்த மந்திரிசபை ராஜினாமா செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் இந்த வரி அப்போது கொண்டு வரப்படவில்லை. ஆகவே, இந்த யோசனை புதிய யோசனைஅல்ல. இந்த வரி ஆட்சேபிக்கக் கூடியதுமல்ல. இந்த வரியின் அஸ்திவாரமாக இருக்கக் கூடிய கோட்பாட்டை நான் ஒத்துக்கொள்கிறேன். இந்த வரியை விதிப்பதனால் யாருக்கும் பாதகம் ஏற்பட்டு விடாது

அதைக் கொடுக்கக் கூடியவர்கள்தான், சக்தியுடையவர்கள் தான் கொடுக்கப் போகிறார்கள். ஆகவே, இதை நான் ஆதரிக்கிறேன். அதே சமயத்திலே இதை விஸ்தரிக்கும்போது ஜாக்கிரதையாக விஸ்தரிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 'அரசாங்கம் ஒரு உத்தரவின் மூலம் விஸ்தரிக்காது, அந்த உத்தரவை சபை முன் வைத்து சபையின் அங்கீகாரம் பெற்று பிறகுதான் மற்ற நகரங்களுக்கு விஸ்தரிக்கப்படும்' என்ற திருத்தத்தை செலக்ட் கமிட்டி செய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

இப்போது சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் வரி விதிக்கப்பட இருக்கிறது. இதிலே சில சந்தர்ப்பத்தில் பாதகம் ஏற்பட இடம் இருக்கிறது. அதற்கான பாதுகாப்பைப் பற்றிக் கவனித்த காரணத்தால் மறுபடியும் செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்ற திருத்தத்தைக் கொடுக்க நேர்ந்துள்ளது. நான் இந்தக் கொள்கையை ஆதரிக்கக்கூடியவன். இந்த வரியை ஆதரிக்கக் கூடிய நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருப்பதன் நோக்கத்தைக் கவனிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பத்து ஏக்கர் விஸ்தீரணத்தில் நடுவிலே ஒரு பங்களாவைக் கட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த வரியிலிருந்து விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. விற்பனை வரி செலுத்தாத, வருமான வரி செலுத்தாத ஒரு நபர் தன் சொந்த உபயோகத்துக்கு வீடு வைத்திருந்தால், மனை இருந்தால், அத்தகையவர்களுக்கு இந்த வரியிலிருந்து விதி விலக்குக் கொடுக்கவேண்டுமென்ற யோசனையைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் முக்கியமானது. இந்த மசோதாவினுடைய 31-வது பிரிவில் addition of urban land tax to rent in certain cases என்கிற பகுதியை எடுத்துப் பார்த்தால், நகரக் குடியிருப்பு மனைப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலமும் சரி, வாடகைக் கட்டுப்பாடுச் சட்டத்தின் மூலமும் சரி, பாதுகாப்பை இது ஓரளவு பாதிக்கிறது. இந்த வரி அளவிற்கு குடியிருப்பு மனை மீது செலுத்தும் வாடகையை உயர்த்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே, இப்போதைய வாடகையை உயர்த்த வசதி இருக்கிறது. ஆகவே, வாடகைக்கு விட்டிருக்கும் வீடுகளுக்கெல்லாம் நிச்சயமாக வாடகை உயர்த்தப்படும். அதற்குள்ள வசதி சட்டப்படி செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவு ரொம்ப அபாயகரமானது. குடியிருப்பு சம்பந்தப்பட்டமட்டில் நியாயம் இருக்கிறது. குடியிருப்பு மனைச் சட்டத்தின்படி வெளியேற்ற முடியாது. வெளியேற்றும் நிலைமை ஏற்பட்டால் விலைக்கு வாங்கிக்கொள்ளும் சந்தர்ப்பம் இருக்கிறது. குடியிருப்பு மனையை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள் இந்த வரியைச் சேர்த்துச் செலுத்தவேண்டுமென்று சொல்வதிலே ஒரு நியாயம் இருக்கிறது.

வாடகைக் கட்டுப்பாடுச் சட்டம் மூலம் இருக்கும் பாதுகாப்பைக்கூட இந்தப் பிரிவு ரத்து செய்து விடும். இச்சட்டம் அமலுக்கு வந்தால் பல வீடுகளின் வாடகை உயரும் அபாயம் இருக்கிறது. சொந்த உபயோகத்திற்காக மனைகளை வைத்திருப் 12-30 p.m.

வாய்ப்பு இருக்குமானால் இன்னும் அபிவிருத்தி செய்வதற்கும், இன்னும் மற்ற அபிவிருத்தி அடையாத இடங்களுக்கு நன்மைகள் செய்ய வாய்ப்பு இருக்கும். நான் முன்பு பேசும் நேரத்திலேயே கூட, குறிப்பாக சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் 17 லட்சம் பேர்கள் இருக்கின்ற இடத்தில் 3 லட்சம் பேர்கள் சேரிகளில் இருக்கிறார்கள், இது அரசாங்கத்திற்கு ஒரு அறைகூவல், இந்த சட்ட மன்றத்திற்கு ஒரு அறைகூவல், இந்த நாட்டில் ஜனநாயக சோஷலிஸம் என்று பேசுகிறோம், இந்த அறைகூவலைச் சமாளிக்க இதற்கே பயன்படுத்தலாம் என்று எடுத்துச் சொன்னேன்.

சர்க்காரிலிருந்து நல்ல பலன்களைப் பெறுகிறவர்கள் வர்த்தகர்கள். தொழிலதிபர்கள் லாபம் பெறுகிறார்கள். சர்க்கார் செய்யக்கூடிய பெரிய செலவினங்களால் பலனை அடையக் கூடியவர்கள் அவர்கள். இந்த நிலையில் ஏழை எளியவர்களை அவதிக்கு உள்ளாக்காமல், சாதாரண நிலையில் உள்ள, குறைந்த அளவுள்ள இடங்களுக்கு விதிவிலக்கு அளிக்கிற வகையிலும், ஏழை எளியோருக்கு அவதி நீங்குகிற முறையிலும், இந்த நிலையில் உயர் மட்டத்தில் இருக்கிறவர்களுக்கு அதிக வரி போட்டாலும் போடலாம், அதோடு ஸ்லாப் ஸிஸ்டம் அனுஷ்டிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிற நேரத்தில், முன்பே மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸ் பற்றி பேசியிருக்கிறேன், நகரமன்றம் போன்றவைகளுக்கு, சென்னை மட்டுமல்ல, எல்லா நகர மன்றங்களும் இதில் வருகிற காரணத்தினால், அவைகளுக்கு உதவுகிற வாய்ப்பும் வசதியும் செய்து தரவும், நகரத்தில் இருக்கிற பிற்போக்குப் பகுதிகளும், கீழ்த்தரமாக, நம் எல்லோருக்கும் அறைகூவல் ஆகவும் உள்ள 6 பேர்களுக்கு ஒருவர் நாகரிகமற்ற முறையில் கீழ்த்தரமாக இருக்கக் கூடியவர்களை நல்ல நிலைக்குக் கொண்டு வரவும், எவ்வளவு தான் ஜெய்ப்பூரில் தீர்மானம் நிறைவேற்றினாலும், இதுதான் கொள்கை என்று பிரகடனப் படுத்தினாலும், ஜனநாயக சோஷலிஸம், டெமொக்ராட்டிக் சோஷலிஸம்தான் லட்சியம் என்று சொன்னாலும், அந்த லட்சியம் பொருளற்ற எழுத்துக் கூட்டங்களாகவும், அர்த்தமற்ற சொல் வடிவங்களாகவும் இல்லாத வகையில், நல்ல முறையில் வரியை பெறச் செய்யவேணடுமென்று கேட்டுக்கொண்டு, இதை மீண்டும் பொறுக்குக் கமிட்டிக்கு திருப்பி அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மசோதாவை மறுமுறை செம்மையாக உருவாக்கி ஏழை எளியவர்களை மீட்டு, கொடுக்கக்கூடியவர்களிடமிருந்து வரியைப் பெறவேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வை. சங்கரன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நகரப்புற நிலங்களுக்கு வரி விதிக்கும் இந்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவானது பொறுக்குக் கமிட்டிக்கு போய் வந்த பிறகு நல்ல பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது தவிர, எப்போது அமலுக்கு வரும் என்பது 1962 ஜூலை என்று இருந்தது கூட நல்ல முறையாக ஜூலை 1963 என்று பின்னாலே அது செலக்ட் கமிட்டிக்கு வந்த பிறகு மாற்றி அமைக்கப்பட்டது. அதே போன்று பின்னாலே, இதர நகரப் புறங்களுக்கு, முனிஸிபாலிட்டிகளுக்கு விஸ்தரிக்கும் போது, விஸ்தரிப்பதானாலும், கான்சல் செய்வதானாலும் சட்ட மன்றத்தின் முன்னால் வைத்து அனுமதி பெறவேண்டுமென்று அந்தத் திருத்தமும் மேற்கொண்டு செய்யப்பட்டது. அது தவிர இன்னும் சில திருத்தங்களில் முக்கியமாக இன்னொரு திருத்தம் செய்யப்பட்டது. சப்-ஸோன் என்பதை முன்னால் 20 கிரவுண்டுக்குக் குறையாமல் இருக்கவேண்டும் என்று இருந்தது. பின்னால் நல்ல பரிசீலனைக்குப் பிறகு அது எடுக்கப்பட்டுவிட்டது. கனம் அனந்தநாயகி அம்மையார் கூட அதைப்பற்றி இப்போது ஆட்சேபித்தார்கள். செலக்ட் கமிட்டி நடந்தபோது இந்த விஷயம் பூர்ணமாக விவாதிக்கப்பட்டது. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமானால், மவுண்ட் ரோடு பகுதியை எடுத்துக்கொண்டால் அபட்டிங் தி மவுண்ட் ரோடு என்று பார்க்கும்போது அதிக விலை இருக்கும் அங்கே உள்ளே நிலங்களுக்கும் கட்டடங்களுக்கும். அந்த ரோட்டை விட்டு 100 அடி தள்ளி உள்ளே இருக்கும் கட்டடமனைகளை எடுத்துக்கொண்டால் 10-ல் ஒரு பங்கு மதிப்புகூட இருக்காது. அதனால் பெரிய ஸோன் வைப்பதால் நடைமுறையில் பல இக்கட்டான கஷ்டங்கள் வரும் என்று அந்தந்த சந்தர்ப்பத்தில் அந்தந்த இடத்திற்குத் தக்கவாறு குறைந்த அல்லது அதிக அளவில் அமைத்துக்கொள்ள வசதியாக 20 என்பதை எடுத்துவிட்டார்கள். இப்போது கனம் அம்மையார் சொல்வது போல விசாலமான சப்-ஸோன் வைப்பதால் விலை மதிப்பீடு செய்வதில் நியாயமற்ற நிலை ஏற்படும் என்பதால் 20-க்குக் குறையாகவும் வைத்துக்கொள்ள அதிகாரிகளுக்கு இடம் அளிக்கும் வகையில் இருக்கிறது.

இன்னொன்று சொல்லிக்கொள்ள நினைக்கிறேன். கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் 31-வது செக்ஷன் சம்பந்தப்பட்ட மட்டில் அபாயம் ஏற்படும் என்று கவலை தெரிவித்தார்கள். அதிலே எந்தவிதமான அபாயமோ அல்லது கவலை தெரிவிக்கும் நிலையோ இல்லை. அம்மாதிரி இருக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்று கூடத் தோன்றவில்லை. உண்மையான தாத்பர்யமாக உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டு பார்த்தால் நிவாரணம்கூட இருக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. சுமார் 5,000 ரூபாய் பெருமான நிலத்தில் இருக்கக்கூடிய விட்டையோ அல்லது நிலத்தையோ வாடகைக்கு விட்டிருந்தால் அதற்கு வரும் நில வரி 20 ரூபாய் ஆகிறது. இந்த 31-வது செக்ஷன்படி பார்த்தால் அந்த நிலத்தை வாடகைக்கு விட்டிருக்கும்போது அதன் மூலம் கிடைக்கும் வருமானம் வருஷத்துக்கு 20-க்குக் குறைவாக இருந்தால் நில வரியை மேற்கொண்டு சேர்த்துக்கொள்ளலாம் என்று

[19th November 1963

APPENDIX I

[*Vide* Answer to Starred Question No. 234 on page 214].

Regarding funds allotted to Panchayats through Panchayat Union.

Clause (a) Village Panchayats.—The accounts of the Village Panchayats are maintained by the concerned Panchayat Union and for this purpose a fund called 'the Village Panchayats Consolidated Fund' has been opened in every Panchayat Union. The various items of revenues credited by the Panchayat Union into the Village Panchayat Consolidated Fund are the following :-

(1) Proportionate share of the Local Cess under section 115 (4) (c) of the Madras Panchayats Act, 1958.

(2) Proportionate share of the Duty on transfers of Property under section 124 (3) a) of the above Act.

(3) Magisterial fines.

(4) Licence fees.

(5) Proportionate share of the Entertainment Tax.

(6) Village House Tax Matching Grant under section 32 of the Madras Panchayats Act, 1958.

(7) Various development grants.

(8) Various taxes collected on behalf of the Panchayats by the land revenue staff under section 126 of the above Act

2. The basis on which the main sources of income of Panchayats is distributed is as follows :

Local Cess.—Out of the proceeds of Local cess of 45 nP. on land revenue, a percentage fixed by the Panchayat Union Council shall be credited to the Village Panchayat fund. The percentage shall be so fixed as to secure as nearly as may be that the total income derived by all panchayats in the Panchayat Union does not fall short of an amount calculated at 20 nP. for each individual of the villlage population in the Panchayat Union This amount is adjusted in instalments by the Panchayat Union Commissioner out of the local cess proceeds adjusted to the credit of the Union every month on the basis of anticipated collections.

House tax, Profession tax and Vehicle tax.—Those are collected in two half-yearly instalments by the village officers and remitted into the Panchayat Union cash chest to the credit of the Panchayat.

Duty on transfers of property.—This is adjusted to the credit of the Panchayat on the basis of Land Revenue, on receipt of the sanction issued by the Registration Department by the Panchayat Union Commissioner.

Entertainments Tax.—is adjusted to the credit of the Panchayat on the basis of the sanction issued by the Commercial Tax authorities.

19th November 1963]

House-tax matching grant.—Is sanctioned by the Revenue Divisional Officer every half-year on the basis of audited figures house-tax collected in the preceeding half-year.

Development rates levied under section 119 (3) *of the Act.*—These are to be collected along with the land revenue by village head man and remitted into the Panchayat Union cash chest.

Licence fees in respect of dangerous and offensive trades are collected by the Union and thereafter credited to the Panchayat. In respect of licence fees payable on encroachments they are to be collected by the village headman.

Town Panchayats.—In respect of Town Panchayats, the Local cess paid to them is 2/9th of the Local Cess collected within their area. The amount of stamp duty surcharge collected in any Panchayat town is transferred by the Panchayat Unions to the Town Panchayat. No house-tax matching grant is paid to town panchayats. The accounts of the Town Panchayats are kept as personal deposit accounts with the Treasury and do not form part of the accounts of the Panchayat Union.

Clause (b).—Population is taken into account for fixing the devolution of Local Cess as noted above.

பகுதி.—(அ) கிராமப் பஞ்சாயத்துக்கள்.—*கிராமப் பஞ்சாயத்துக்களின் கணக்குகளை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள் வைத்து வருகின்றன. இது காரியத்துக்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் கிராமப் பஞ்சாயத்துக்கள் தொகு நிதி ஒன்று வைத்து வரப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதிக்கு பஞ்சாயத்து யூனியன் கீழ்க்கண்ட வரவினங்களை வரவு வைக்கின்றது :—*

(1) 1958-ம் *ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின்* 115 (4) (c) *பிரிவின்கீழ் விதிக்கப்படும் லோகல் செஸ்ஸில் வீதாசாரப் பங்கு.*

(2) *மேற்படி சட்டத்தின்* 124 (3) (*a*) *பிரிவின்படிச் சொத்துக்கள் மாற்றப்படுவதன் மீது விதிக்கும் தீர்வையில் வீதாசாரப் பங்கு.*

(3) *மாஜிஸ்ட்ரேட் விதிக்கும் அபராதங்கள்.*

(4) *லைசென்ஸ் கட்டணங்கள்.*

(5) *தமாஷா வரியில் வீதாசாரப் பங்கு.*

(6) 1958-ம் *ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின்* 132 *வது பிரிவின்கீழ் கிராமத்தில் வசூலாகும் வீட்டு வரிக்குச் சமமான மானியம்.*

(7) *பல்வேறு அபிவிருத்தி மானியங்கள்.*

(8) *மேற்படி சட்டத்தின்* 126-*வது பிரிவின்கீழ் நிலவரிப் பணியாளர்கள் பஞ்சாயத்துக்கள் சார்பில் வசூலிக்கும் பல்வேறு வரிகள்.*

பஞ்சாயத்துக்களின் முக்கிய நிதி ஆதாரங்கள் எந்த அடிப்படையில் விநியோகிக்கப்படுகின்றன ?

லோகல் செஸ் (Local Cess).—*நிலவரியில் ரூபாய்க்கு* 45 *நயா பைசா வீதம் லோகல் செஸ் வசூலிக்கப்படுகிறது. அதில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நிச்சயிக்கும் குறிப்பிட்ட ஒரு சதவீதம் கிராமப் பஞ்சாயத்து நிதிக்கு வரவு வைக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியனிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களும் பெறும் மொத்த வருமானத்தில், பஞ்சாயத்து யூனியனிலுள்ள கிராம மக்கள் தொகையில் ஒவ்வொருவருக்கும்* 20 *நயா பைசா வீதப்படி கணக்கிடும் ஒரு தொகைக்குக் குறையாத வகையில் மேற்படி சதவீதம் நிச்சயிக்கப்பட வேண்டும். இந்தத் தொகையை, உத்தேச வசூல் அடிப்படை*

any, appurtenant to a building but does not include any land which is registered as wet in the revenue accounts of the Government and used for the cultivation of wet crops."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மனைகளுக்கு வரி விதிப்பு ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் அரசினர் இந்த வரிவிதிப்பு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகையினால் தான், சாகுபடி நிலங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சாகுபடி நிலம் என்று குறிப்பிடும்பொழுது 'வெட் லாண்ட்ஸ்', அதாவது 'வெட்' என்ற பதத்தை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் நஞ்சை நிலங்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பது புலனாகிறது. ஆனால், நகர்புறங்களில் உள்ள நிலங்களில் நஞ்சை நிலம் மட்டும் தான் சாகுபடிக்கு என்று இருந்து வருகிறது என்பது உண்மை அல்ல. நகர்புற எல்லையில் உள்ள நிலங்களில் புஞ்சை சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் பெரும் பகுதி இருந்து வருகின்றன என்பதைத்தான் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆகவே, கீழ்க்கண்ட திருத்தத்தை சபை பரிசீலனை செய்து முடிவு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். 12-வது சப்-கிளாசில்'

"urban land" means any land which is used or capable of being used as a building-site and includes garden, grounds, if any, appurtenant to a building but does not include any land which is registered as wet or dry in the revenue account of the Government and used exclusively for the cultivation of wet crops or dry crops.

என்ற திருத்தத்தை அமைத்துக்கொண்டால் சாகுபடி நிலங்களை பாதிக்கக்கூடிய வகையில் இந்த மசோதா அமையாது என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அநேகமாக நகர்புற நிலங்களில், நஞ்சை நிலங்களில் நஞ்சை தானியங்கள் சாகுபடி செய்வது நடந்துகொண்டிருக்கிறது. அதனால்தான் அவைகளுக்கு மாத்திரம் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. புஞ்சை நிலங்கள் அப்படியே மனை நிலங்களாக ஆக்கப்படுவதற்கு லாயக்கு உள்ள நிலங்கள் என்பதினாலும், அரசாங்க ரிகார்டில் 'டிரை லாண்ட்ஸ்' என்று கூறப்பட்ட நிலங்கள் அநேகமாக மனைகளாக பயன்படக் கூடிய நிலைமையில் உள்ளவை நகர்புற எல்லையில் இருக்கக்கூடிய நிலங்கள் என்ற கருத்தைக்கொண்டு தான், 'டிரை லாண்ட்ஸ்' என்பது விடப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். சாதாரணமாக சாகுபடி செய்யக்கூடிய நிலங்களில், 'டிரை லாண்ட்ஸ்' என்பதிலே தோட்டக்கால் வைத்து சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள், தோப்புகள் வைத்து சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஆனால், அவைகளையெல்லாம் இந்த மசோதாவிற்கு உட்படுத்தி இந்த வரி விதிப்பிற்கு உள்ளாக்குவதற்கு எனக்கு யாதொரு ஆட்சேபனையும் கிடையாது. இந்தக் கிளாஸில் அதற்கு ஏற்கனவே நன்றாக விளக்கம் கொடுக்கப் பட்டிருக்கிறது. and includes garden, grounds, if any, appurtenant

to a building', என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 'ட்ரை லாண்ட்ஸ்' என்று சேர்த்துக்கொள்வதிலே எந்த விதமான பாதகமும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, 'வெட் ஆர் டிரை' என்பதையும் இந்த ஸப்-கிளாஸில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அர்பன் லாண்டு டாக்ஸ் அநேக நகரங்களுக்கு அமுலாக்கப்பட இருக்கிறது தெரிந்ததே. நகர்புறங்களில் உள்ள நிலங்களுக்கு இப்பொழுது நகராட்சி சட்டத்தின்கீழ் வேகண்டு லாண்டு டாக்ஸ் என்ற ஒரு வரிவிதிப்பு இருந்துகொண்டிருக்கிறது. வேகண்டு லாண்டு டாக்ஸ், அக்ரிகல்சரல் லாண்டு டாக்ஸ், ஹவுஸ் டாக்ஸ் என்ற மூன்று பிரிவுகளின் கீழ் இப்பொழுது வரி விதிப்பு இருந்துகொண்டிருக்கிறது. இந்த மசோதாவின் முக்கியமான கருத்தின்படி, வேகண்டு லாண்டு டாக்ஸ் என்று கூறி நகராட்சி மன்றங்களில் இப்பொழுது வரி விதித்துக்கொண்டிருக்கிறார்கள். வேகண்டு லாண்டு, அதாவது மனைகளுக்கு லாயக்காக உள்ள இடங்களுக்கு, அங்குள்ள மனைகளின் தற்கால விலைமதிப்பை மதிப்பிட்டு, அந்த மதிப்பீட்டின் பேரில் ஒரு பெர்ஸெண்டேஜ் போட்டு, இப்பொழுது அந்த வரியை நிர்ணயம் செய்து வசூலித்து வருகிறார்கள். இப்பொழுது அர்பன் லாண்டு டாக்ஸ் அந்த நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமானால், அந்த நகர்ப்புறங்களில் புஞ்சை நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள், அதாவது வேகண்டு லாண்டாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் இரண்டு வரி கொடுக்கக் கூடிய நிலைமையில் அமைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இருந்தாலும் கூட, இன்றைய கால நிலையில் நகர்புறங்களில் இருக்கக்கூடிய மனைகள் அதிக விலையை பெறக்கூடிய நிலையில் இருந்து, அதன் மூலம் அதன் சொந்தக் காரர்கள் லாபத்தையும், பயனையும் அடையக்கூடிய நிலைமையில் இருப்பதினால், அதில் ஒரு பகுதியை அரசினருக்கு வரியாக செலுத்துவது நியாயமற்றது என்று சொல்லுவதற்கில்லை என்ற முறையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது. அந்த முறையில் அது ஓரளவுக்கு வரவேற்கக்கூடியது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய திருத்தத்தை இந்தச் சபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow. The House then adjourned. 1-10 p.m.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other papers.

* 82. *The Madras Cattle-disease (Amendment) Bill*, 1963.

* Circulated to Members on 18th November 1963.

(2) முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் ரூ. 1,25,000 செலவில் (40 படுக்கைகள்) இருபது அறைகளையுடைய படுக்கைக்கூடம் ஒன்றைக் கட்டுதல்.

(3) முதுமலை வனவிலங்கு சரணாலயத்திற்கு அந்நிய நாட்டு உல்லாசப் பிரயாணிகளும் மற்றவர்களும் அதிகமாக வருவதால், அவர்களுடைய வசதிக்காக ரூ. 22,500 செலவில் வில்லீஸ் ஜீப் வண்டி ஒன்றை அல்லது 20 நபர்களை ஏற்றிச் செல்லக்கூடிய உல்லாசப் பயண வண்டி ஒன்றைப் புதிதாக வாங்குதல்.

APPENDIX III

[*Vide* Answer to Starred Question No. 275 on page 555 supra.]

Question : (*a*) the nature of assistance given to persons growing coconut tree with a view to improve the coconut industry, (i) the State and (ii) in Madurai district ; and

(*b*) the extent of lands under coconut cultivation in Madurai district.

Answer : (*a*) *and* (*b*). A Statement is placed on the table of the House.

STATEMENT

Clause (*a*)—Nature of assitance given to persons growing coconut trees with a vew to improve coconut industry. (1) in the State and (2) in Madurai district.

Serial number.	*Name of the scheme.*	*Nature of assistance given* — *in the State.*	*Nature of assistance given* — *in Madurai district.*
(1)	(2)	(3)	(4)
1	Comprehensive coconut Nursery Scheme.	Thirteen nurseries are functioning in the State for raising quality seedlings for distribution to coconut growers at 65 nP. per seeding.	The nursery at Sholavandan is distributing 22,500 seedlings.
2	Increasing the production of coconut by intensive propaganda.	With a view to increasing production of coconut 176 cultural demonstration plots and 20 manurial plots are set up at the lands of coconut growers.	13 manurial demonstration plots are conducted each year.
3	Extension of irrigation facilities through bore wells and filter point wells.	Extension of facilities under the existing bore well scheme and filter points scheme to coconut growers without any limit.	The facility afforded in column 3 is applicable to the growers in Madurai district.

Serial number.	*Name of the scheme.*	*Nature of assistance given.* — *in the State.*	*Nature of assistance given.* — *in Madurai district.*
(1)	(2)	(3)	(4)
	Plant protection measures.	Sprayers, dusters, Pesticides and fungicides are sold to growers at 50 per cent concessional rate subject to a limit of Rs. 100 per article.	The facility afforded in Column 3 will be applicable to Madurai district.
	Distribution of fertilisers.	Straight fertilisers and standard mixtures are available to sale at standard rates. Besides Revenue Department is sanctioning short term loans under the Intensive Manuring Scheme for purchase of fertilisers for coconut crop at Rs. 100 per acre per individual subject to a maximum of Rs. 400 per individual.	The facility afforded in Column 3 will be applicable to Madurai district.
	Establishment of Parasite Breeding Centres.	Five Parasite breeding centres are functioning at Nagercoil, Udumalpet, Coimbatore, Pattukottai and Gudiyatham. The parasites (Bethylids and Eulophids) will be multiplied in the laboratories and released in the pest affected areas.	Do.
	Scheme of holding coconut mother palm competition.	With a view to encourage the coconut growers in maintaining their garden wells, and in growing good high yielding trees, a coconut mother palm competition is held in all districts except the Nilgiris. Prizes at block, taluk and State level are distributed to the highest number of mother palms owned by an individual. Besides a sum of Rs. 2 is given for each mother palm which satisfies conditions prescribed.	Do.
	Making available research and technical information.	The Agriculture Department guides and helps the coconut growers for development of coconut cultivation.	Do.

Clause (*b*)—Extent of lands under coconut cultivation in the State and in Madurai District.

The area under coconut in Madras State for 1961–62 is estimated to be of the order of 137,000 acres and in Madurai district, 9,448 acres.

Name of the villages infested with Guineaworm disease in Thanjavur taluk.

1. Achampatti.
2. Ayanapuram.
3. Arambundampatti.
4. Avarampatti.
5. Ayaswamypatti.
6. Chanurapatti.
7. Bhemanpatti.
8. Chennampatti.
9. Chitrakudi.
10. Kallupatti.
11. Keelathiruvilapatti.
12. Kosuvapatti.
13. Kuruvadipatti.
14. Kariyapatti.
15. Kariyampatti.
16. Kurumbundi.
17. Kathattipatti.
18. Muniyamkulapatti.
19. Marunakkudi.
20. Mappillai Naickanpatti.
21. Malayapatti.
22. Muthandpatti.
23. Muthuveerakkandiyanpatti.
24. Mathuram Pudukottai.
25. Mettupatti.
26. Nodiyur.
27. Nathanadipatti.
28. Nattani.
29. Nandavanampatti.
30. Nandampatti.
31. Palayapatti South.
32. Palayapatti North.
33. Pudupatti.
34. Pudukudi South.
35. Pudukudi North.
36. Savariyapatti.
37. Solagampatti.
38. Sellappanpettai.
39. Sengipatti.
40. Thachankurichi.
41. Tirumalaisamudram.
42. Tiruvenkadampatti.
43. Usilampatti.
44. Viralipatti.
45. Vallam.
46. Vallampudur.
47. Vanniyampatti.

(b) The following control measures are being carried out in the infested villages:—

1. Regular and periodical chemical treatment of drinking water sources (to control the cyclops, the intermediary host).

2. External application of 3 per cent phenol to the affected parts of Guineaworm patients and bandaging the affected part with cotton and bandage. This will alleviate the pain and irritation and hasten the extraction of the worm easily. It will also prevent secondary infection.

3. Intensive health education of villages at the village tank site regarding the spread of the disease and prevention of guineaworm disease by using water strained through a double fold of cloth, using boiled water or water from chemically treated water sources. The patients are also advised not to get into the water sources and infect them. Sufficient number of posters, leaflets and pamphlets are distributed to the villagers.

(அ) நரம்புச் சிலந்தி வியாதி தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் தாலூகாக்களைச் சேர்ந்த அடியிற்கண்ட 64 கிராமங்களில் பரவியுள்ளன :—

ஒரத்தநாடு தாலூகாவில் நரம்புச் சிலந்தி வியாதியால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் பெயர்கள்.

1. அரவப்பட்டி
2. அரியானிப்பட்டி
3. கடாரம்பட்டி
4. கோமாபுரம்
5. முதுகுளம்
6. மங்கனூர்

ஒரத்தநாடு தாலூகாவில் நரம்புச் சிலந்தி வியாதியால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் பெயர்கள்—தொடர்ச்சி.

7. மஞ்சள்பேட்டை
8. மெய்கிடிப்பட்டி
9. மோகனூர்
10. புதுநகர்
11. பனங்குளம்
12. புதுப்பட்டி
13. பழைய கந்தர்வக்கோட்டை
14. துரிசிப்பட்டி
15. வடுகப்பட்டு
16. வாண்டாம்பட்டி
17. வீரடிப்பட்டி

தஞ்சாவூர் தாலூகாவில் நரம்புச் சிலந்தி வியாதியால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் பெயர்கள் :

1. ஆச்சம்பட்டி
2. ஐயனாபுரம்
3. அரம்புண்டம்பட்டி
4. ஆவாரம்பட்டி
5. அய்யாசாமிப்பட்டி
6. சானூரப்பட்டி
7. பீமன்பட்டி
8. சென்னம்பட்டி
9. சித்திரகுடி
10. கல்லுப்பட்டி
11. கீழத்திருவிழாப்பட்டி
12. கோசுவப்பட்டி
13. குருவாடிப்பட்டி
14. காயப்பட்டி
15. கரியம்பட்டி
16. குரும்பூண்டி
17. காதட்டிப்பட்டி
18. முனியங்குளப்பட்டி
19. மருதக்குடி
20. மாப்பிள்ளை நாய்க்கன்பட்டி
21. மலையப்பட்டி
22. முத்தாண்டிப்பட்டி
23. முத்துவீரக்கண்டியன்பட்டி
24. மதுரம் புதுக்கோட்டை
25. மேட்டுப்பட்டி
26. நோடியூர்
27. நாதனடிப்பட்டி
28. நாட்டாணி
29. நந்தவனப்பட்டி
30. நந்தம்பட்டி
31. பாலையப்பட்டி தெற்கு
32. பாலையப்பட்டி வடக்கு
33. புதுப்பட்டி
34. புதுக்குடி தெற்கு
35. புதுக்குடி வடக்கு
36. சவரியாப்பட்டி
37. சோழகம்பட்டி
38. செல்லப்பன் பேட்டை
39. செங்கிப்பட்டி
40. தச்சன்குறிச்சி
41. திருமலை சமுத்திரம்
42. திருவேங்கடம்பட்டி
43. உசிலம்பட்டி
44. விராலிப்பட்டி
45. வல்லம்
46. வல்லம்புதூர்
47. வன்னியம்பட்டி.

(இ) நரம்புச் சிலந்தி வியாதியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் கீழ்க்கண்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

1. குடி தண்ணீர் ஆதாரங்களில் ரசாயனப் பொருள்களை குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை கலந்து சுத்தப்படுத்தல்.

2. நரம்புச் சிலந்தி வியாதி கண்டுள்ளவர்களின் பாதிக்கப்பட்ட உறுப்புக்களில் 3 சத விகிதம் பினாயில் வெளிப்புறமாகத் தடவுதலும், பாதிக்கப்பட்ட உறுப்புக்களை பஞ்சாலும் பாண்டேஜாலும் மூடுதலும் இதனால் வலியும் நமைச்சலும் குறைந்து, நோய்க்கிருமி எளிதில் வெளி வந்துவிடும். இரண்டாவது முறையாக நோய் உண்டாவது தடுக்கப்படும்.

3. நரம்புச் சிலந்தி நோய் பரவுவது சம்பந்தமாகவும் அதைத் தடுப்பதற்கான வழிகளும் ஏரிக்கரைகளுக்கருகிலுள்ள கிராமவாசிகளுக்கு தீவிரமாக அறிவிக்கப்பட்டு வருகின்றது. இந்நோய் பரவுவதனின்றும் பாதுகாப்பு பெறவேண்டுமானால், இரண்டாக மடித்த துணி மூலம் தண்ணீரை வடிகட்டி உபயோகிக்க வேண்டுமென்றும், கொதிக்கவைத்த நீரை அல்லது ரசாயனப் பொருள்கள் கலந்த நீர் ஆதாரங்களிலிருந்து எடுத்த நீரை உபயோகிக்கவேண்டும் என்றும் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நோயாளிகள் ஏரி, குளங்களுக்குச்சென்று அவற்றைத் தொடாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். போதிய அளவுக்கு சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் சிறு வெளியீடுகளும் கிராமவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன.

யில் யூனியனின் கணக்கில் ஒவ்வொரு மாதமும் சரிக்கட்டப்படும் லோகல் செஸ்ஸிலிருந்து பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் தவணையில் சரிக்கட்டுவார்.

வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரி.—இவ் வரிகளை கிராம அதிகாரிகள் அரையாண்டுக்கு ஒருமுறை வசூலித்து அந்தந்தப் பஞ்சாயத்தின் கணக்கில் பஞ்சாயத்து யூனியன் கஜானாவில் செலுத்திவிடுகிறார்கள்.

சொத்து மாற்றத்தின் மீது தீர்வை.—இது பத்திரப்பதிவுத் துறையிலிருந்து கொடுக்கப்படும் அனுமதியைப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் பெற்றுக்கொண்டு நில வரி அடிப்படையில் பஞ்சாயத்தின் கணக்கிற்குச் சரிக்கட்டப்படுகிறது.

தமாஷா வரி.—இது வர்த்தக வரி அதிகாரிகள் கொடுக்கும் அனுமதியின் அடிப்படையில் பஞ்சாயத்தின் கணக்கிற்குச் சரிக்கட்டப்படும்.

வீட்டு வரிக்குச் சமமான மானியம்.—முந்திய அரையாண்டில் வசூலிக்கப்பட்ட வீட்டு வரி சம்பந்தமாக தணிக்கை செய்துள்ள கணக்குகளின் அடிப்படையில் இது ஒவ்வொரு அரையாண்டிலும் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியால் அனுமதிக்கப்படுகிறது.

மேற்படி சட்டத்தின் 119 (3) பிரிவின்படி விதிக்கப்படும் அபிவிருத்தி வரிகள்.—இவ் வரிகளை கிராம முனிசிப் நிலவரியுடன் வசூல் செய்து பஞ்சாயத்து யூனியன் கஜானாவில் செலுத்தவேண்டும்.

அபாயகரமான தீங்கு விளைவிக்கிற தொழில்கள் சம்பந்தமாக விதிக்கப்படும் லைசென்சுக் கட்டணங்கள் யூனியனால் வசூலிக்கப்பட்டு பின்னர் பஞ்சாயத்துக்கு வரவு வைக்கப்படுகின்றன. நில ஆக்கிரமிப்புகளுக்காகச் செலுத்தப்படும் லைசென்சுக் கட்டணங்களை கிராம முனிசிப் வசூலிக்க வேண்டும்.

நகரப் பஞ்சாயத்துக்கள்.—நகரப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளுள் வசூலிக்கப்படும் லோகல் செஸ்ஸில் 2/9 பாகம் அவைகளுக்குச் செலுத்தப்படுகிறது. யாதொரு நகரப் பஞ்சாயத்தில் வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை சர்சார்ஜ் பஞ்சாயத்து யூனியன்களால் நகரப் பஞ்சாயத்துக்கு மாற்றப்படுகிறது. வீட்டு வரிக்குச் சமமான மானியம் எதையும் நகரப் பஞ்சாயத்துக்களுக்குச் செலுத்துவதில்லை. நகரப் பஞ்சாயத்துக்களின் கணக்குகள் சொந்த டிபாசிட் கணக்குகளாக கஜானாக்களில் வைத்து வரப்படுகின்றன. அவை பஞ்சாயத்து யூனியன் கணக்குகளின் ஒரு பகுதியாக வைத்து வரப்படுவதில்லை.

பகுதி (இ).—மேலே கூறியபடி லோகல் செஸ்ஸின் பங்கை நிச்சயிக்கும் போது மக்கட் தொகை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

APPENDIX II

[*Vide* Answer to Starred Question No. 273 on page 224 *supra*.]

(*a*)—

1958	.. ..	42
1959	.. ..	34
1960-61	.. ..	506
1961-62	.. ..	348
1962-63 (upto December 1962)	..	149
Total	..	1,079

(*b*)—

		RS.
1958	.. ..	2,030 00
1959	.. ..	1,684 00
1960-61	.. .. ..	4,056 25
1961-62	.. .. ..	7,910 50
1962-63 (upto December 1962)	..	8,017 12
Total	..	23,706 87

(*c*) Yes; the following proposals are under the consideration of the Government:—

(1) formation of a net work of roads covering a distance of 100 miles 2 furlongs in the Mudumalai Wild Life Sanctuary connecting the existing roads, opening the remoter areas to the visitors where there is concentration of wildlife and improving the exsiting roads at a cost of Rs. 7 lakhs.

(2) construction of a dormitory containing twenty rooms (40 beds) with modern amenities at a cost of Rs. 1,25,000 in the Mudumalai wild life Sanctuary.

(3) Purchase of one new willys Four-wheel-driven Station wagon at a cost of Rs. 22,500 or a van to carry 20 persons to meet the growing demand from the foreign tourists and others or Mudumalai Wild Life Sanctuary.

(அ)

1958	.. ..	42 பேர்
1959	.. ..	34 பேர்
1960-61	.. ..	506 பேர்
1961-62	.. ..	318 பேர்
1962-63 (1962 டிசம்பர் முடிய)	.. ..	149 பேர்
மொத்தம்	..	1,079 பேர்

(ஆ)

		ரூ.
1958	.. ..	2,030·00
1959	.. ..	1,684·00
1960-61	.. ..	4,05 ·25
1961-62	.. ..	7,910·50
1962-63 (1962 டிசம்பர் முடிய)	.. ..	8,017·12
மொத்தம்	..	23,706·87

(உ) அடியிற்கண்ட திட்டங்களைப் பற்றி அரசாங்கம் யோசித்து வருகிறது.—

(1) முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் இப்போதுள்ள சாலைகளை இணைத்து 100 மைல் 2 பர்லாங் தூரத்திற்குப் புதிய சாலைகள் அமைத்தல், வனவிலங்குகள் அதிகமாக உள்ள பகுதிகளை சென்று பார்ப்பதற்கு வேண்டிய சாலை வசதி செய்தல், ரூ. 7 லட்சம் செலவில் இப்போதுள்ள சாலைகளை அபிவிருத்தி செய்தல்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தப் பிரச்னைகள் இல்லாமலேயே நமக்கு ஏலத்தில் ஏராளமான தொகை வந்து கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால், இதைப் பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை.

தமிழில் பாடப் புத்தகங்கள்

*** 310 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பயிற்சி மொழியாகத் தமிழை மேற்கொண்டிருக்கும் திட்டத்திற்கு ஊக்கம் ஊட்டும் வகையில் பாட நூல்கள் தமிழில் வெளியிடுவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட திட்டங்கள் யாவை ?

(இ) அதன் பயனாய் எவ்வளவு நூல்கள் வெளிவந்துள்ளன ?

(உ) அதற்காக செலவிட்ட தொகை எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) பாடப் புத்தகங்களையும் பொதுப் புத்தகங்களையும் தமிழில் வெளியிடுவதற்காக 1962 ஏப்ரலில் அரசாங்கம் தமிழ் வெளியீட்டுக் கழகத்தை அமைத்தது. அதன் செலவு முழுவதையும் மாநில அரசாங்கமே கொடுத்து வருகிறது.

(இ) 57.

(உ) ரூபாய் 1,73,680.

(*a*) The Bureau of Tamil Publications, functioning from April 1962, has been set up by this Government for the publication of both text books and general books in Tamil. It is financed entirely by the State Government.

(*b*) 57.

(*c*) Rs. 1,73,680.

திரு. கே. ஏ. மதியழகன் : சட்டசபை விதிகள் 40-வது விதியின் கீழ், "கேள்வி நேரத்தின்போது சபாநாயகரைக் கேட்டுக்கொள் வதன் மேல் சபாநாயகர், தமக்குப் பொருத்தமாகத் தோன்றினால், பிரஸ்தாப தினத்தன்று ஒரு கேள்விக்கு விஷயமாக இருந்திருக்கிற அவசர முக்கியத்துவம் வாய்ந்த யாதொரு விஷயத்தைப் பற்றி ஓர் அங்கத்தினர் விவாதம் எழுப்பக் கூடியவராயிருக்கும் பொருட்டு, அந்த தினத்துக்குரிய அலுவல் முடிவடைந்த பிறகு அல்லது சபாநாயகர் நிச்சயிக்கக்கூடிய வேறு யாதொரு தினத்தன்று அரை மணி நேரம் அனுமதிக்கலாம்" என்று இருக்கிறது. தமிழைப் போதனை மொழியாக கல்லூரிகளில் புகுத்துவது சம்பந்தமாக, சர்க்கார் "பாடப் புத்தகங்கள் இல்லை, பாடப் புத்தகங்கள் இல்லை" என்று சொல்லிவருவதனாலும், உப கேள்விகள் மூலம் பரிபூரணமான தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியாது என்பதாலும், அருள் கூர்ந்து அரை மணி நேர விவாதத்தை அனுமதிக்குமாறு கனம் சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இது ரொம்பவும் விசித்திரமாக இருக்கிறது. இந்த மன்றத்திலே எத்தனையோ முறைகள் கேள்விகள் கேட்கப்பட்டு, போதிய விளக்கம் ஏற்படவில்லை என்றால், அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று வேண்டிக்கொள்வார்கள். விடை அளித்த விஷயம் வேறு. இப்பொழுது கேள்வி கேட்கப்பட்ட விஷயம் வேறு. கனம் அங்கத்தினர் போதனை மொழியைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். ஆகவே இது ஒழுங்கற்றது என்று பாயின்ட் ஆப் ஆர்டரை நான் எழுப்புகிறேன். இது முறையற்றது.

SRI K. A. MATHIALAGAN rose.

MR. SPEAKER : I don't allow. The hon. Member ought to have given me notice, in case he wanted an half-hour discussion on this question. In putting a supplementary, the hon. Member is going on reading the rules.

SRI K. A. MATHIALAGAN : It involves the policy of Government.

புலவர் கா. கோவிந்தன் : ஒவ்வொரு தலைப்பிலும் எத்தனை நூல்கள் வெளி வந்திருக்கின்றன ? அந்த நூல்களின் ஆசிரியர்கள் யார் என்ற விவரங்களைத் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால், விடை அளிக்கலாம்.

திரு. முனு ஆதி : தமிழ்ப் பாடப்புத்தகங்களை அரசினரே வெளியிடுவது போல, இன்னும் இதரப் புத்தகங்களை அரசாங்கமே ஏற்று அச்சடித்து வெளியிட்டால், நன்றாக இருக்கும். மாவட்டங்களில் பல சிக்கல்கள் இருப்பதால், இதை அரசாங்கமே ஏற்று நடத்த முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அளித்த விடையில் பாடப் புத்தகங்கள் மட்டுமல்ல, பொதுப் புத்தகங்களையும் தமிழில் அந்தக் குழு வெளியிடுகிறது என்று சொன்னேன். அந்த வகையில் பொதுப் புத்தகங்களையும் வெளியிட்டுக்கொண்டு வருகிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த நூல்களை வெளியிடுகின்ற வகையில், ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் கொடுத்து இந்தப் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றனவா அல்லது நூல்களின் தரத்தைக் கொண்டு, விலை மதிப்பைக் குறித்து, அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புத்தகங்களை எழுதுவதற்கு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அது முழு நேர வேலை யல்ல. அவர்களுக்கு அதற்காக ஊதியம் கொடுக்கப்படுகிறது. எவ்வாறு ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை இந்தக் குழு நிர்ணயித்திருக்கிறது. அந்த விதிகளின்படி ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது.

(அ) தமிழ்நாடு மாநிலத்திலும் (2) மதுரை ஜில்லாவிலும் தென்னை தொழிலபிவிருத்தியை உத்தேசித்து தென்னை வளர்க்கும் நபர்களுக்குக் கொடுக்கப்படும் உதவி.

தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும்.	தமிழ்நாடு மாநிலத்தில் கொடுக்கப்படும் உதவி.	மதுரை ஜில்லாவில் கொடுக்கப்படும் உதவி.
(1)	(2)	(3)
1 தென்னம்பிள்ளைப் பண்ணை ஒருங்கிணைந்த திட்டம்.	நல்ல தரமான தென்னம்பிள்ளைகளை வளர்த்து தென்னம்பிள்ளை ஒன்று 65 நயா பைசாவாக தென்னை வளர்ப்போர்க்கு வழங்க 13 பண்ணைகள் உள்ளன.	சோழவந்தானில் உள்ள பண்ணை 22,500 தென்னம்பிள்ளைகள் வழங்கிவருகிறது.
2 தீவிரப் பிரசாரம் மூலம் தென்னை உற்பத்தி அதிகரிப்பு.	தென்னை உற்பத்தி அதிகரிப்பை உத்தேசித்து, 176 செயல்முறை விளக்க நிலங்களும் 20 உரமுள்ள நிலங்களும் தென்னை வளர்ப்போருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.	ஆண்டுதோறும் 13 உரமுள்ள செயல்முறை நிலங்களில் தென்னை வளர்க்கப்படுகிறது.
3 துளைக் கிணறுகள், வடிமுனைக் கிணறுகள்மூலம் பாசன வசதி விஸ்தரிப்பு.	துளைக்கிணறு, வடிமுனைக் கிணறு திட்டங்களின் கீழ் தென்னை வளர்ப்போருக்கு வரையறையின்றி வசதிகளை விஸ்தரித்தல்.	மதுரை ஜில்லா தென்னை வளர்ப்போருக்கு 3-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சலுகைகள் கொடுக்கப்படும்.
4 பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.	சாகுபடியாளர்களுக்கு ஒவ்வொருவருக்காகவும் ரூ. 100 வரை கொடுக்கப்படுவதற்கு உட்பட்டு, பாதி விலையில் சகாயமாக தெளிப்பான்கள், தூவைப்பான்கள், பூச்சி மருந்து, காளான் ஒழிப்பு மருந்து முதலியவை வழங்கப்படும்.	3-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சலுகை மதுரை ஜில்லாவுக்கும் பயன்படும்.
5 ரசாயன உரம் வினியோகித்தல்.	குறிப்பிட்ட நிலையான வீதங்களில் ரசாயன உரங்களும் ஸ்டாண்டர்டு கலவை உரங்களும் கிடைக்கின்றன. தீவிர உரத்திட்டத்தின்கீழ் தென்னைப் பயிருக்கு ரசாயன உரம் வாங்குவதற்கு நபர் ஒவ்வொருவருக்கும் ஏக்கரா ரூ. 100 ஆக ரூ. 400-க்கு மேற்படாமல் குறுகிய காலக் கடனும் ரெவின்யூத் துறையினர் வழங்குகின்றனர்.	
6 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள்.	நாகர்கோயில், உடன்குடி, கோயம்புத்தூர், பட்டுக்கோட்டை, குடியாத்தம் ஆகிய இடங்களில் முறையே ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம் உள்ளது. பரிசோதனைக் கூடங்களில் ஒட்டுண்ணிகளைப் (பீதைலிட்ஸ், யூல்பைரஸ்) பெருக்கி பயிர்ப் பூச்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விடுகின்றனர்.	
7 தென்னை மரக் காப்புப் போட்டித் திட்டம்.	தென்னை வளர்ப்போர் தங்கள் தோட்டம், கிணறு இவற்றைப் பராமரிக்கவும், பெருவாரியான பலனைத் தரும் மரங்களை வளர்க்கவும், தென்னை மரக் காப்புப் போட்டி ஒன்றை நீலகிரி ஜில்லா நீங்கலாக ஏனைய ஜில்லாக்களில் நடத்தப்படுகிறது. அதிகபட்சம் எண்ணிக்கையுள்ள தென்னை மரங்களை வைத்து வரும் ஒவ்வொரு நபருக்கும் வட்டாரம், தாலுகா, மாநில அளவில் பரிசுகள் கொடுக்கப்படும். இத்துடன் நிர்ணயித்துள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிற தென்னை மரம் ஒவ்வொன்றுக்காகவும் ரூ. 2 கொடுக்கப்படும்.	3-வது பத்தியில் குறிப்பிடுள்ள சலுகை மதுரை ஜில்லாவுக்கும் பயன்படும்.
8 ஆராய்ச்சி, தொழில் நுட்ப இயல் தகவல்கள் கிடைக்கச் செய்தல்.	தென்னை வளர்ப்பதற்கு விவசாயத் துறையினர் வழிகாட்டி உதவி செய்கின்றனர்.	ஷை

பகுதி (ஆ)—இம் மாநிலத்திலும் மதுரை ஜில்லாவிலும் தென்னை வளர்க்கப்படும் நிலப் பரப்பளவு.

1931–62-ல் தமிழ் நாட்டில் தென்னை வளர்க்கப்படும் நிலப் பரப்பளவு 137,000 ஏக்கர் எனவும், மதுரை ஜில்லாவில் 9,148 ஏக்கர் எனவும் மதிப்பிடப்படுகிறது.

APPENDIX IV.

[*Vide*—Answer to starred question No. 298 on page 243 supra.]

(*a*) Guineaworm disease is prevalent in the following 64 villages in the Orathanad and Thanjavur taluks of Thanjavur district :—

Name of the villages infested with Guineaworm disease in Orathanad taluk.

1. Aravampatti.
2. Ariyanipatti.
3. Kadarampatti.
4. Komapuram.
5. Mudukulam.
6. Manganoor.
7. Manjalpatti.
8. Meikadipatti.
9. Moharoor.
10. Pudunagar.
11. Panakulam.
12. Pudupatti.
13. Palayakandarvakottai.
14. Thurucipatti.
15. Vadhuhapatti.
16. Vandampatti.
17. Veeradipatti.

ஷாப்பு அமைக்கப்பட்டது; ஆசிரியர்கள் விடுமுறை காலத்தில் இங்கே மவுண்ட் ரோடில் உள்ள அரசாங்கக் கல்லூரியில் கூடினார்கள். 50 பேர்களுக்கு மேல் இருக்கும், சரியாக நினைவு இல்லை, அரசாங்க கல்லூரிகளிலிருந்தும், மற்ற தனிப்பட்டோர் கல்லூரிகளிலிருந்தும் ஆசிரியர்கள் வந்திருந்தார்கள், அவர்களெல்லாம் 1 மாதம், 1½ மாதம் கூடி ஒத்துழைத்து புத்தகங்கள் எழுதி வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, ஆகவே எழுத போதிய ஆசிரியர்கள் வருவதில்லை என்று சொல்ல முடியாது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: முதல் அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து 57 புத்தகங்கள் வெளியிட ரூபாய் 1,73,000 செலவாகியிருக்கிறது என்று தெரிகிறது. இந்த பெரும் செலவு எப்படி ஏற்பட்டது என்று விளக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: புத்தகங்கள் 1,000 காபிகள் அல்லது 2,000 காபிகள்கூட வெளியிட வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். புத்தகங்கள் வெளியிட ஊதியம் தவிர அச்சுக்கு என்றும், காகிதத்திற்கு என்றும், இதற்கெல்லாம் செலவாகிறது.

புலவர் கா. கோவிந்தன்: இத்தகைய புத்தகங்களை தனிப்பட்ட புத்தக நிலையங்கள் வெளியிட்டால் அவர்களுக்கு நிறைய சன்மானம் கொடுக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு வெளியிட தனியார் நிறுவனங்கள் முன்வந்தால் அது பரிசீலனை செய்யப்படும்.

திருமதி சி. குழந்தையம்மாள்: தலைவர் அவர்களே, ஆங்கில மொழி புத்தகங்களை மொழிப்பெயர்ப்பதோடு ஜெர்மனி, ஃபிரென்ச் மொழிகளிலிருந்தும் மொழிபெயர்க்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆங்கிலம் அல்லாத வேறு மொழியாக இருந்தாலும், உடனேயே ஆங்கிலத்தில் அவை மொழிபெயர்க்கப்படுகின்றன. ஆகவே, நாம் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்துக் கொள்ளலாம். அதில் சிரமம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: கல்லூரிகளில் தமிழில் பயிற்சி கொடுத்தால், பயிற்சிக்குப் பிறகு நம் மாணவர்களுக்கு நம் மாநிலத்தைத் தவிர, இதர இடங்களில் வேலை வாய்ப்பு இருக்காது. ஆகவே, இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். அதைப்பற்றி அரசாங்கம் யோசித்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதெல்லாம் மாணவர்கள் பரிசிலனை செய்து முடிவு செய்ய வேண்டும்.

Roads (Tiruchirappalli district)

* 311 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Works be pleased to state the action taken by the Government on the resolution of District Development Council,

Tiruchirappalli North, passed at its meeting on 22nd April 1963, recommending the widening and improvement to the under-mentioned State Highways:—

(1) Tiruchi-Salem Road (via) Musiri and Thottiyam; and

(2) Tiruchi-Karur Road?

THE HON. SRI V. RAMAIAH: The matter is under consideration of the Government.

ஒன்றிப்புத் துவக்கப்பள்ளிகள்

* **312 கேள்வி.—திரு. ம. கமலநாதன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிப்பு ஆளுகையில் உள்ள துவக்கப் பள்ளிகளை அரசினரே ஏற்று நடத்தவேண்டும் என்று தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியிலிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆமென்றால், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஆம். வந்துள்ளது.

(இ) இவ்விஷயத்தில் நடவடிக்கை எடுப்பது அவசியமில்லையெனக் கருதப்பட்டது. ஏனெனில், ஆரம்பப் பள்ளிகள் விஷயமாய் தனிப்பட்ட நிர்வாகிகளுக்கு மானியம் கொடுப்பது உட்பட, ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்துவது, பராமரிப்பது, விஸ்தரிப்பது, அபிவிருத்தி செய்வது விஷயமாய் பஞ்சாயத்து யூனியன் தேவைகளை நிறைவேற்ற தன் நிதி வசதிக்குள் நியாயமான அளவுக்கு நிதி ஒதுக்குவது ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் சட்டபூர்வமான கடமையாகும்.

(*a*) Yes.

(*b*) No action was considered necessary in the matter because it is the statutory duty of a Panchayat Union Council within the limits of its funds, to make reasonable provision for carrying out the requirements of the Panchayat Union in respect of the opening and maintenance and expansion or improvement of elementary schools, including the payment of grants to private managements in respect of elementary schools.

புலவர் கா. கோவிந்தன்: இந்த தொடக்கப் பள்ளிகளை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன, விண்ணப்பத்தில் என்ன காரணம் கொடுக்கப் பட்டிருந்தது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விண்ணப்பத்தில் என்ன காரணம் கூறியிருந்தார்கள் என்று நினைவு இல்லை. ஆனால் பொதுவாக ஆசிரியர்களுக்கு சங்கடங்கள் இருக்கின்றன என்பது ஒரு காரணம், அரசாங்கமே ஏற்றுக்கொள்ளலாம் என்பதற்கு மேலும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் தங்களுக்கு ஏற்படும் சங்கடங்களைச் சொல்லுகிறார்கள்.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 20th November 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at nine of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

சந்தனமரங்கள் சாகுபடி

** 309 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

சந்தன மரங்கள் பயிராவதற்குத் தக்க மண்வளம் நமது மாநிலத்தில் எங்கெங்கு உள்ளது என்பதுபற்றி ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கிறதா? விவரமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: *சந்தன மரங்கள் பயிராவதற்கு ஏற்ற நிலங்கள் எங்கெங்கு உள்ளன என்பது பற்றி நமது மாநிலத்தில் ஏற்கெனவே ஆராய்ச்சி நடத்தப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தின் வடபகுதி, தென் ஆற்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள மலைப் பகுதிகள், சேலம் மாவட்டம் முழுவதும், திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய இடங் களில் சில பகுதிகள் சந்தன மரங்கள் பயிராவதற்கு ஏற்றவை யாகும்.*

திரு. ஆ. கு. சுப்பையா: *இப்பொழுது சந்தன மரங்கள் எந்தெந்த மாவட்டங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன?*

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: *சுயமாக உற்பத்தியாவதுதான் சிறப்பாக வரும். கோவை மாவட்டத்தில் இந்த மரங்களைப் பயிரிடுவதற்குச் சில முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்.*

திரு. கே. பொன்னையன்: *சந்தன மரங்கள் நம்முடைய ராஜ்யத் தில் ஏராளமாக இருக்கின்றன. அண்டை ராஜ்யமான மைசூரில் சந்தன எண்ணை பாக்டரி வைத்து, அதை விற்பதன்மூலம் வருடா வருடம் ரூபாய் ஐம்பது லட்சம் அல்லது அறுபது லட்சம் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் அப்படி ஒரு பாக்டரியை ஏன் வைக்கக் கூடாது? இதை அரசாங்கம் பரிசீலிக்குமா?*

இருக்கிறது. நடைமுறையில் 5,000 ரூபாய் பெறும் இடத்தை காலி இடமாக அல்லது 10,000 ரூபாய் அல்லது 15,000 ரூபாய் உள்ள கட்டடமாக இருந்தால் 20 ரூபாய்க்குக் குறைவாக வாடகைக்கு விட்டிருப்பார்கள் என்று நினைக்க முடியாது. இதனால் ஏதோ ஏற்பட்டுவிடும், வரியினால் வாடகை அதிகப்பட்டு விடும் என்ற வாதத்திற்கு உண்மையிலேயே இடம் இல்லை. 20 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் நில வரியை மேற்கொண்டு சேர்த்துக் கொள்ளலாம் என்று இந்தப் பிரிவில் இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் அத்தகைய நிலை வரவே வராது. ஆகையால் அது பற்றி எந்த வித கவலைக்கும் இடம் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பொறுக்குக் கமிட்டியில் நான் அங்கத்தினராக இருந்தேன். துரதிருஷ்டவசமாக முடிவுகள் எடுத்த கூட்டத்திற்கு வரமுடியாத நிலையில் இருந்தேன். எங்கள் ஊரில் ராஷ்ட்ரபதி வந்த காரணத்தினால் அந்த நேரத்தில் அங்கு இருக்க வேண்டியிருந்தது. ஆகையால் என்னுடைய யோசனைகளை அந்தக் கூட்டத்தில் சொல்லிக்கொள்ள முடியாதிருந்த காரணத்தினால் அவைகளை தற்போது சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதிலே வரி .4 என்று போட்டிருப்பதை .25 என்று இருந்தால் நலமாக இருக்கும். சகட்டுமேனிக்கு .25 என்று இருந்தால் எல்லோருக்கும் வசதியாக இருக்கும். அதோடு சாதாரணமாக ஏழை என்று எடுக்கும்போது வீட்டுச்சொந்தக்காரராக இருந்தாலும், நிலச்சுவாந்தாராக இருந்தாலும், குறைந்த அளவில் நிலம் வைத்திருக்கக் கூடியவர்களுக்கு கஷ்டம் இருக்கிறது. 'அவர்களை பாதிக்காத அளவில் .25 என்று இருந்தால் நலமாக இருக்கும். ஆகையால் அதை மாற்றவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அது தவிர இன்னொரு பாயிண்டு. செலக்ட் கமிட்டியிலேயே இது 1-00 p.m. பற்றி விவாதிக்கப்பட்டது. ஆனால், கடைசியாக அதுபற்றி ஒன்றும் வரக்காணோம். அதாவது, சில தொழிற்சாலைகளில் ஒரு பகுதி நிலத்தை காலி இடமாக வைப்பது மிகவும் அவசியமாகிறது. உதாரணமாக, பெரிய ரைஸ் மில்லை எடுத்துக்கொண்டால், அல்லது சேலத்தில் ஜவ்வரிசி தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால், காயப்போடுவதற்கென்று தனியாக இடம் ஒதுக்க வேண்டியிருக்கிறது. வீட்டடி நிலமாக இருந்தாலும் அதை கட்டிடம் கட்டுவதற்கு நிரந்தரமாக உபயோகப்படுத்தமுடியாத நிலை இருக்கிறது. ஒரு விசாலமான இடம், ஒரு பரந்த இடம் எப்பொழுதுமே காலியாக வைத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அத்தகைய தொழிற்சாலைகளுக்கு அந்தக் காலி இடத்தை நிரந்தரமாக கட்டிடம் கட்டுவதற்கு உபயோகப்படுத்த முடியாது. அம்மாதிரி தொழிற்சாலைகளில் காலியாக உள்ள 'அபர்டினன்ட்' நிலங்களுக்கு இந்த வரி விதிப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படாமல் இருப்பது, அந்தத் தொழிலுக்கு பாதகமான நிலைமையை ஏற்படுத்தும். அந்தத் தொழிலினுடைய வருமானம் அதனால் பாதிக்கப்படும். ஆகவே, அந்த நிலங்களுக்கும் விதிவிலக்கு

அளிக்கப்படவேண்டும். பொறுக்குக் கமிட்டியில் அதுபற்றி பேசப்பட்டது. எக்ஸெம்ப்ஷன் கிளாஸ் வரும்பொழுது கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது அந்த எக்ஸெம்ப்ஷன் கிளாஸில் இது வரக் காணோம்.

கனம் திரு. வெ. ராமைய்யா: இது பற்றி ஆலோசிக்கப்பட்டு கைவிடப்பட்டுவிட்டது.

திரு. வை. சங்கரன்: அது கைவிடப்பட்டிருந்தாலும், இப்பொழுது அதை எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் அப்படிப்பட்ட தொழில்களுக்கு அதனால் பாதகம் ஏற்படும் என்று தோன்றுகிறது. நிரந்தரமாக அந்தக் காலி நிலத்தில் கட்டடம் ஒன்றும் கட்ட முடியாது. அந்த நிலைமையில் அவைகளும் விதிவிலக்கு அளிப்பதற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான விஷயம். 'ஹோல்லி ஆகுபைடு பை தி ஓனர்' என்று இருக்கிறது. நிலச்சுவான்தார் முழுவதும் அதை சொந்த உபயோகத்திற்கு வைத்திருந்தால் 25 சதவிகிதம் நிவாரணம் கிடைக்கும் என்று இருக்கிறது. ஒருசில இடங்களில் ஒரு சிறிய பகுதியை வீட்டுச் சொந்தக்காரர் வாடகைக்கு விட்டிருக்கலாம். மற்ற பெரும் பகுதியை சொந்தக்காரரே 'அகுபை' செய்துகொண்டிருக்கலாம். எந்த அளவுக்கு நிலச்சுவான்தார் சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொண்டிருக்கிறாரோ அந்த அளவுக்கு அவருக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் மசோதா அமையவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பகுதி வாடகைக்குக் கொடுத்தாலும், அவருக்கு நிவாரணம் ஒன்றும் கிடைக்காது என்ற முறையில் மசோதா இருக்கக்கூடாது என்று நினைக்கிறேன். இம்மாதிரி ஒரு சில திருத்தங்களைச் செய்தால் இது நல்ல முறையில் அமையும் என்று கூறிக்கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. சண்முகம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, சபை முன்பு கொண்டுவரப்பட்டிருக்கும் நகர நிலங்களின் மீது வரி விதிப்புத் திட்டத்தைக் கொண்ட மசோதாவானது ஓரளவுக்கு அரசினருக்கு நிதியை அளிக்கக்கூடியதாக இருந்தாலும் கூட, இந்த மசோதாவிலே சில குறைபாடுகள் இன்னும் திருத்தப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்கள் சில திருத்தங்களை சபைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மசோதாவின் 13-வது பக்கத்திலே 12-வது ஸப்-கிளாஸிலே 'அர்பன் லாண்டு' என்பதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"urban land" means any land which is used or is capable of being used as a building site and includes garden, grounds, if

சரி செய்யப்பட்டது. 1—4—1963-இல் இருந்து 11—4—1963 வரை தான் இந்தச் சங்கடம் இருந்தது. அந்த நாளிலும் நோயாளிகளுக்கு ரொட்டியும் பாலும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களைப் பட்டினி போடவில்லை. நோயாளிகள் அப்படிப் பட்டினியாக இருந்தார்கள் என்றால் கனம் மெம்பர் அவர்கள் ஏப்ரல் மாதத்திலேயே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டியது அவருடைய பொறுப்பு. இப்போது உப கேள்விகள் போடுவதில் பயன் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை இடைப்பட்ட 11 நாட்களுக்கு எந்த வகையில் ரொட்டியும் பாலும் கொடுக்கப் பட்டன என்பதை அறியலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : வெளியிலிருந்து (ஓப்பன் மார்க்கட்) வாங்கிக் கொடுத்தார்கள்.

அரசாங்கப் போக்குவரத்துத் துறை

* **314 கேள்வி.—திருமதி ஏ. கிருஷ்ணவேணி :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை நகரத்தில் அரசாங்க பஸ்கள் விடுவதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

* 315 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a member of the travelling public made a complaint during February 1963 to the Director of State Transport alleging re-issue of used tickets by the staff;

(*b*) if so, the details of the allegation;

(*c*) whether any enquiry was conducted in the matter; and

(*d*) if so, the results of the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A complaint was made on telephone to the Deputy Accounts Officer of the Madras State Transport Department alleging re-issue of used tickets. The identity of the complainant could not be established on verification.

(*b*) The complainant stated on the telephone that he had been issued certain tickets which were sold to him in the previous week.

(*c*) Yes.

(*d*) The conductor who was responsible for the re-issue of used tickets was prosecuted and he has been sentenced to undergo rigorous imprisonment for a period of three months. The conductor was dismissed from service with effect from 18th February 1963.

* 316 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any machine has been purchased for the use of the State Transport Department for use in the preparation of the pay-bills;

(*b*) the cost of the machine and the total expenditure incurred so far in respect of the maintenance of the machine; and

(*c*) the approximate amount of clerical labour saved as a result of the use of the machine?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes. A Bradma machine has been purchased.

(*b*) The total cost of the machine is Rs. 25,904·80 and the maintenance cost so far incurred is Rs. 185 per mensem approximately.

(*c*) The approximate amount of clerical labour now saved in terms of cost is Rs. 1,980 per annum.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இப்போது அந்த இயந்திரம் உபயோகத்தில் இருந்து வருகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது இப்போது உபயோகத்தில் இருந்து வருகிறது. அதிலே அச்சாக்கப்பட்ட ஒரு பகுதியைக்கூட நான் கொண்டு வந்திருக்கிறேன்.

* **317 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள மின்ட் பஸ் நிலையத்தை அங்கிருந்து மாற்ற உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no such proposal.

திரு. அ. ராகவ ரெட்டி : மின்ட் பஸ் ஸ்டாண்ட் தற்போது மாற்றப்பட்டுள்ள இடத்தில் ஒரே நாற்றம் அடிக்கிறது. அதை மாற்றியமைக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் இது சம்பந்தமாக ஒரு கடிதம் எழுதினால் இலாகா அதைப் பரிசீலிக்கும்.

* 318 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Director of State Transport has received any report in June 1963 that as a consequence of the State buses not going to the Secretariat much inconvenience has been caused to the public; and

(*b*) the steps taken by the Government in this regard?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The buses which are scheduled to touch Secretariat during peak hours continue to do so. Buses of routes 21-B and 21-K touch Secretariat between 9 a.m. to 11 a.m. and between 5 p.m. and 7 p.m. The buses of route 21-N touch Secretariat at all hours of the day.

*319 கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலுகாவில் சர்க்கார் நெடுந்தூர பஸ் (Express Bus) நிற்கும் இடங்களில் பிரயாணிகள் வசதிக்காக 'பாசஞ்சர் ஷெட், குடிதண்ணீர் முதலிய வசதிகள் செய்து கொடுக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : The only important station in Vridhachalam taluk for long distance express buses of the State Transport Department is Neyveli. The authorities of the Neyveli Lignite Corporation have promised to provide necessary facilities for the State Transport buses at Neyveli. Drinking water facilities will be provided as and when bus stands are constructed in the mofussil. In the long distance buses themselves water cans with drinking water are provided.

* 320 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal for the printing of time-tables of Madras City buses and making them available to the public for sale, for their guidance?

THE HON. SRI R. VENKATARAMAN : The City bus guides have been printed and are available to the public on sale.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார் : சார், நேற்று எனக்கும் ஒரு பிரதி கிடைத்தது. அதற்குக் கனம் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Is it a supplementary question?

THE HON. SRI R. VENKATARAMAN : I do not object to it.

MR. SPEAKER : But I object.

திரு. மா. இராசாங்கம் : நகர பஸ் கண்டக்டர்கள் டிக்கட் கொடுக்கும்போது சில்லரை கொடுப்பதிலே அதிக நேரம் ஆவதால் இடைவெளியில் பஸ்ஸை நிறுத்தி வைக்க நேரிடுகிறது. சில்லரை இல்லையென்ற காரணத்தால் இடையிலே பிரயாணிகளைக்கூட இறக்கி விட்டு விடுகிறார்கள். இதனால் அடிக்கடி தகராறு விளைகிறது. இதைத் தவிர்க்க பிரயாணிகள் முன்பே சில்லரை மாற்றிக் கொள்ளுவதற்காக பஸ் புறப்படும் இடங்களில் ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தப் பிரச்னையை இரண்டு விதத்தில் தீர்க்கலாம். ஒன்று பிரயாணிகள் எந்த அளவுக்குக் கட்டணம் செலுத்த வேண்டுமோ அந்தச் சில்லரையை முன்னதாகவே சேகரித்துக் கொண்டு வருவது. மேல் நாடுகளில் அப்படித்தான் செய்கிறார்கள். அங்கு டிக்கட் கொடுப்பதில்லை. கட்டணம் 15 செண்ட் என்றால் அதைப் பெட்டியில் போட்டு விட்டு உள்ளே போய்விடுவார்கள். இரண்டாவதாக, ஐந்து நயா பைசா ஸ்டேஜாக மாற்றியமைத்தால் 3, 2, 1 நயா பைசா என்ற சில்லறை இல்லாமல் சுலபமாகச் சில்லறை கொடுக்க முடியும். அதைச் சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : கால அட்டவணைப் புத்தகம் என்ன விலைக்கு எந்த எந்த இடத்தில் கிடைக்கும் என்பதைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்ய அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த டிபார்ட்மெண்ட் ரொம்ப சிக்கனமாக நடத்தப்படுகிறது. ஆகையால் விளம்பரம் செய்ய உத்தேசமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, எம்.எல்.ஏ.-க்களுக்காக விடப்படும் அரசாங்க பஸ் ஹாஸ்டலை விட்டு வந்த பிறகு டிக்கட் கொடுப்பதாக வசூல் செய்வதற்காக வெளியே நிறுத்தி விடுகிறார்கள். அது மனதுக்கு ரொம்பக் கவலையாக இருக்கிறது. பதின்மூன்று நயா பைசா வீதம் போகவர 26 ந. பை. வசூல் செய்கிறார்கள். இந்த 26 நயா பைசாவை பிரயாணப்படியிலேயே பிடித்துக் கொண்டால்கூடப் பரவாயில்லை. அல்லது இந்தக் கட்டணத்தை வாங்காமல் இனாமாகவே பஸ் விட அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தச் செலவை 'லெஜிஸ்லேச்சர் டிபார்ட்மெண்ட்' ஏற்றுக் கொள்வதாக இருந்தால் அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் 9-30 a.m.
அவர்கள் பதில் கூறும்போது வெளிநாடுகளில் டிக்கெட் இல்லாமல் பிரயாணிகளே ஒரு பெட்டியில் காசைப் போட்டுவிட்டு ஏறுகிறார்கள் என்று சொன்னார்கள். அதுமாதிரி சென்னை நகரில் ஏதாவது ஒரு ரூட்டில் பரீட்சார்த்தமாக இந்த முறையை ஏற்படுத்த முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுமாதிரி செய்தால் முதலில் ஒரு கண்டக்டருடைய வேலை போய்விடும். அது சம்பந்தமாகக் கிளர்ச்சி ஏற்படும். அதைச் சுலபமாகச் செய்ய முடியாது. சட்டசபை அங்கத்தினர் சம்பந்தமாக இப்போது கட்டணம் இல்லாமல் பஸ் விடும் யோசனையை எதிர்த்துக்கொண்டிருக்கிறோம். டிக்கெட் இல்லாமல் கனம் அங்கத்தினர்களே காசைப் போட்டுவிட்டு ஏறும் முறையை இங்கே பரிசீலிக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்லமாட்டார் என்று நினைக்கிறேன். (சிரிப்பு).

* 321 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of bus-stands constructed by the State Transport Department in mufassal with the names of places where such bus-stands have been and are being constructed; and

(b) the estimated cost for each bus-stand?

The Hon. Sri R. VENKATARAMAN: (a) and (b).

Bus Stands already constructed or under construction.

	Cost.
	RS.
(1) Tiruchirappalli (completed)	1,00,000
(2) Coimbatore (in progress)	1,22,800
(3) Krishnagiri (in progress)	90,000
(4) Vellore (nearing completion)	58,000

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : கவர்மெண்டு டிரான்ஸ்போர்ட் பஸ் ஸ்டாண்டு கட்டுவதனால், அதை லோகல்பாடி பராமரிக்க வேண்டியிருக்குமாதலால் அதற்காக ஏதேனும் தனியாக பணம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்கிறேன்.

திரு. வை. சங்கரன் : நீண்டதூரம் பஸ் ரூட்டுகளை சர்க்கார் ஏற்றுக்கொண்டு நடத்தி வருகிறபோது—மதுரை அந்த ரூட்டுகளின் நடுவில் ஒரு பெரிய ஜங்ஷனாக இருக்கிறது. ஆகவே திருச்சி போல மதுரையிலும் தனியாக ஒரு சர்க்கார் பஸ் நிலையம் அமைக்க சர்க்கார் முடிவு எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மதுரையில் பஸ் நிலையம் கட்ட இரண்டு லட்சம் சாங்ஷனாகி அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : உதகமண்டலத்தில் பஸ்களை நிறுத்த அங்கே ஒரு பஸ் ஸ்டாண்டு கட்ட உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒவ்வொரு இடமாக எந்த எந்த இடத்தில் பஸ் ஸ்டாண்டு கட்டப்படும் என்று கேட்டு பதிலளிப்பதற்குப் பதிலாக, எந்த எந்த இடங்களில் கட்டும் உத்தேசம் இருக்கிறது என்று ஒரேயடியாகச் சொல்லிவிடுகிறேன்; சேலம், ஈரோடு, ராமநாதபுரம் மதுரை, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் கட்டுவதாக உத்தேசம்.

* 322 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குரோம்பேட்டையிலுள்ள அரசாங்க பஸ் கட்டும் தொழிற்சாலையில் மற்ற மாநிலங்களுக்காகவும் பஸ்கள் கட்டப்படுகின்றனவா?

(இ) இதனால் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. முனு ஆதி : நம்முடைய டிரான்ஸ்போர்ட் பஸ்களுக்குரிய பாடி இந்தத் தொழிற்சாலையிலேயே கட்டப்படுகிறதா? அல்லது வெளியில் கட்ட காண்டிராக்ட்டுக்கு விடப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய கப்பாசிடிக்கு எவ்வளவு தூரம் இங்கேயே கட்டிக்கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் இங்கேயே கட்டிக்கொள்கிறோம். கப்பாசிடிக்கு அதிகமாகக் கட்டவேண்டியிருந்தால் அந்தவிதத்தில் வெளியிடங்களிலும் கட்டுகிறோம்.

National Water-supply and Sanitation Committee (Report)

* 323 Q.—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Central Government have sent to the State Government the Report of the National Water-supply and Sanitation Committee for the implementation of the recommendations of the Committee; and

(b) if so, the action taken thereon?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (a) Yes.

(b) The recommendations of the Committee are under consideration.

Water scarcity in Vellore

* 324 Q.—Sri K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Vellore Municipal Council has submitted a memorandum regarding the water scarcity in Vellore; and

(b) if so, the action taken thereon?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (a) Yes.

(b) Action has been taken to expedite the completion of the water-supply scheme for Vellore and the scheme is nearing completion.

மாதாந்திரத் தேவைகளை பள்ளித் துணை ஆய்வாளர் காரியாலயங்களிலிருந்து எடுத்துச் செல்லுகின்றனர். அதற்கான செலவு தன் உதவித்தொகைகளிலிருந்து செய்யப்படுகின்றது.

(*a*) *to* (*c*) : The CARE commodities are sent from the Madras Port up to the Offices of the Deputy Inspectors of Schools at Government cost. The Secretaries of the Midday Meal Committees transport their monthly requirements from the offices of the Deputy Inspectors and meet the cost of transport from the local contribution.

திரு. முனு ஆதி : பஞ்சாயத்துக்களில் இருந்து இந்த இரண்டு பைசா கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். சில பஞ்சாயத்துகளுக்கு வருமானம் போதவில்லை. அவர்களால் இந்த இரண்டு பைசாவைக் கூடக் கொடுக்க முடியவில்லை. அத்தகைய பஞ்சாயத்து போர்டுகளுக்கு உதவ அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்துக்கள் 2 நயா பைசா கொடுக்கவேண்டுமென்பது சிபார்சு. அது கட்டாயம் இல்லை. அரசாங்கம் ஆறு பைசா அளவுக்குக் கொடுக்கிறது. பஞ்சாயத்துக்கள் இரண்டு நயா பைசா அல்லது அதற்கு மேலும் வசூல் செய்து கொடுக்க வேண்டும். இந்த இரண்டு நயா பைசா அளவுக்காவது வசூலித்துக்கொடுக்க பஞ்சாயத்து போர்டு அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. முனு ஆதி : 'கேர்' ஸ்தாபனத்தால் அளிக்கிற உணவுப் பண்டங்களை ஜூனியர் இன்ஸ்பெக்டர் ஆபீசிலிருந்து தங்கள் செலவிலேயே ஆசிரியர்கள் எடுத்து வந்து பள்ளியில் சேர்க்கிறார்கள். அந்தச் செலவை ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே இப்படி ஆசிரியர்கள் பாதிக்கப்படாமல் இருக்க எவ்விதச் செலவும் இல்லாமல் அதைப் பள்ளியில் சேர்க்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்துக்கள் இதில் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு 'கேர்' ஸ்தாபனத்தார் அளிக்கும் பண்டங்களை பள்ளிக்கு எடுத்து வரும் செலவை ஆசிரியர்கள் தலைமீது போடக்கூடாது. பஞ்சாயத்துக்களே அக்கறை எடுத்துக்கொண்டு அந்தப் பண்டங்களை எடுத்துவர வழி செய்ய வேண்டும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இந்த இரண்டு நயா பைசா போதும் என்று சர்க்கார் கருதுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு பகுதிதான் பஞ்சாயத்து கொடுக்கிறது. ஆறு நயா பைசா அரசாங்கம் கொடுக்கிறது. இரண்டு நயா பைசா அல்லது அதற்கு மேல் அவர்கள் வசூலிக்க வேண்டும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : 'கேர்' நிலையத்தின் சார்பாக அளிக்கப்படுகிற உணவுப்பொருள்களில் எது ஏராளமானது என்று கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் புள்ளிவிவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. க. தா. பெருமாள் ராஜு : பஞ்சாயத்துகளுக்குப் புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதே, அந்த வருவாய் அனைத்தையும் மதிய உணவுத் திட்டத்திற்குச் செலவிட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்துகளுக்கு என்ன என்ன வருவாய் இருக்கிறதோ அதிலிருந்துதான் இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. புறம்போக்கு நிலங்களின் வருவாய் போதவில்லையென்றாலும், வேறு வகையிலாவது இந்த மதிய உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த அவர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மதிய உணவுக்குப் பதிலாக அநேக பள்ளிக்கூடங்களில் இட்டிலி கொடுக்கிறார்கள். இதையும் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவு என்று சர்க்கார் கருதுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினருக்கு இட்டிலி உணவுக்குப் புறம்பானதாக இருக்கலாம். ஆனால் இட்டிலியும் நல்ல உணவுதான்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மதிய உணவுத் திட்டத்தின்கீழ் அநேகமாக பள்ளி ஆசிரியர்கள்தான் நன்கொடை வசூலிக்க வேண்டியதாக இருக்கிறது. அதைப் போக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குக் காரணம் பஞ்சாயத்துகள் மதிய உணவுத் திட்டத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளாததுதான். ஆசிரியர்களுக்குத் தங்கள் குழந்தைகள் பட்டினி கிடப்பது, அதைப் பார்த்துக்கொண்டிருப்பது என்பது முடியவில்லையாதலால் நன்கொடை வசூலுக்குப் போகவேண்டி இருக்கிறது. அதைத் தவிர்க்க பஞ்சாயத்துகளே தான் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

*** 330 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பள்ளிகளில் பவுடர் பால் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறபோது சிலருக்கு ஒத்துவராமல் உடல் கோளாறு ஏற்படுகிறது என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பவுடர் பாலினால் பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது என்று எந்த விதமான அறிக்கையும் சர்க்காருக்கு வரவில்லை.

The Government have not received any report to the effect that the re-constituted milk affects the health of school children.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்தப் பாடப் புத்தகங்களுக்காக ரூபாய் 1,73,000-க்கு மேல் செலவாகியிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1963-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்தே எல்லாக் கல்லூரிகளிலும் தமிழிலேயே பயிற்சி அளிக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த சர்க்கார் ஒப்புக்கொண்டுள்ளது. அதை ஏன் அமலுக்குக் கொண்டு வரவில்லை என்று கேட்கும்பொழுது, "பாடப் புத்தகங்கள் இல்லை" என்ற விசித்திரமான பதிலைச் சொல்லுகிறார்கள். பாடப் புத்தகங்கள் தயாரிப்பதிலே சிரத்தை குறைவாக இருக்கிறது. இப்பொழுது இதைப் பற்றிக் கேட்டால் "சம்பந்தம் இல்லை" என்று சொல்லுகிறார்கள்.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினருடைய கேள்வி என்ன?

திரு. கே. ஏ. மதியழகன்: இப்படிச் சொல்லுவதானது இதிலே போதுமான அக்கறை காட்டுவது ஆகுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் அளிக்கின்ற விளக்கம் ஒன்றும் விசித்திரமானதாக இல்லை. அங்கத்தினருடைய கேள்விதான் விசித்திரமாக இருக்கிறது. புத்தகங்கள் எழுதப்படுகின்றன. சிலவற்றை மொழி பெயர்க்கிறார்கள். சினிமாப் படங்கள் காட்டுவதுபோல், புத்தகங்களைக் காட்ட முடியாது. கடையிலே போய் வாங்கக்கூடிய பொருள் அல்ல. போதிய கவனம் வேண்டியிருக்கிறது. எவ்வளவு அதிகமான புத்தகங்கள் எழுத முடியுமோ, அவ்வளவு எழுதப்பட்டு வருகின்றன. அதற்கு மேலும் வேகப்படுத்த வேண்டுமென்று சொன்னால், தரமான புத்தகங்கள் கிடைக்காது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதுவரை எழுதப்பட்ட பாடப் புத்தகங்களில் எத்தனை மொழி பெயர்ப்பு? எத்தனை சுயமாக எழுதப்பட்டவை?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சில புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அதற்கு அந்நியச் செலவாணிகூட வேண்டியிருந்தது. மத்திய அரசாங்கத்துக்கு எழுதினோம். அதுவும் கிடைத்திருக்கிறது. இது பற்றிய முழு விவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இதுவரையில் கொண்டுவரப்பட்ட புத்தகங்கள் தமிழைப் பாடப் பயிற்சி ஆக்குகிற முயற்சிக்குப் போதுமான அளவில் அமைந்திருக்கின்றனவா? இன்னும் எவ்வளவு புத்தகங்கள் வெளியிட்டால் போதுமானவையாக இருக்கும்? ஆண்டுதோறும் எவ்வளவு புத்தகங்களைக் கொண்டு வருவதற்கு அரசினர் திட்டமிட்டுள்ளனர்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் ரூபாய் 10 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. இன்னும் வெளி நாடுகளிலிருந்து வரும் புத்தகங்கள் சில மொழி பெயர்க்கப்பட வேண்டும். மேலும் விஞ்ஞானப் புத்தகங்கள் இருக்கின்றன. எவ்வளவு அதிகமாகப்

புத்தகங்களை மொழி பெயர்த்தோ அல்லது எழுதி வெளியிட முடியுமோ, அதிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரையில், குறிப்பிட்ட பாடப் புத்தகங்கள் என்று சொல்லுவதற்கு இல்லை. அவர்கள் பல புத்தகங்களைப் படிக்க வேண்டும். ஆகவே இந்த வேலை எப்பொழுது முடியும் என்று சொல்லுவதற்கு இல்லை. மேலும், வேறு மொழிகளில் புதுப் புதுப் புத்தகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இதிலே எப்பொழுது முடிவு ஏற்படும் என்று பார்க்காமல், எவ்வளவு அதிகமாகப் புத்தகங்களை வெளியிட முடியுமோ, அதிலே இந்தக் குழு கவனம் செலுத்தி வருகிறது. மற்றவர்களும் புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: சார், இப்பொழுது எழுதுகிற புத்தகங்களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் குறைவாக இருப்பதால்தான் இம்மாதிரியான புத்தகங்கள் அதிகமாக வெளிவருவதில்லை என்று தெரிவதால் அந்த ஊதியத்தை ரூ. 10,000; 20,000 என்ற வகையில் கொடுத்து இந்தக் கொள்கைப் பிரச்னையை அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படிப் புகார் ஒன்றும் வரவில்லை. இதற்காக உள்ள குழுவில் பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யோசனை கூறுகிறார்கள். சில மாதங்களுக்கு முன்புகூட ஊதியத்தை மாற்றி அமைத்து இருக்கிறது. ஆகவே, அம்மாதிரியான புகார் அரசாங்கத்துக்கோ, அந்தக் குழுவுக்கோ வரவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், கல்லூரிகளில் இன்றைக்கு தமிழ் மொழி பயிற்சிக்கு மாணவர்கள் அதிகம் வருவதில்லை என்ற காரணத்தினால் இந்த தமிழ் போதனை மொழியை உயர்நிலைப் பள்ளியோடு நிறுத்திக் கொண்டு அதற்கான தமிழ் புத்தகங்களை மட்டும் வெளியிட்டு கல்லூரிகளில் தமிழை சொல்லிக் கொடுக்காமல் இருக்க யோசனை செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த யோசனையை ஏற்றுக் கொள்ள முடியாது. புத்தகங்கள் வெளியிடுவது என்ற பிரச்னையில் மாணவர்கள் உபயோகிக்கக்கூடிய பெருமளவுக்கு புத்தகங்கள் வெளியிடவேண்டும். அதைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதுதான் சர்க்காரின் அவா.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வெளிவந்திருக்கின்ற புத்தகங்கள் அதிகமான அளவு வராததற்குக் காரணம் அதிகமான ஆசிரியர்கள் முன்வரவில்லை என்பதா அல்லது ஒதுக்கப்பட்ட தொகை குறைவா? தொகை குறைவு என்றால், அதை அதிகப்படுத்த முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தொகை குறைவு இல்லை, ரூபாய் 10 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்புகூட, கோடை காலத்தில் என்று நினைக்கிறேன், ஒரு ஓர்க்

[20th November 1963

*** 331 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரிசன இலாகா பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கும் காண்ட்ராக்டர்களுக்கு மாதா மாதம் கொடுக்கும் தொகை பட்டுவாடா செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : நமது மாநிலத்தில் ஹரிஜன நலப்பள்ளிகளில் மதிய உணவுக் காண்டிராக்டர்களுக்கு தொகை செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதாக இதுவரையில் புகார் எதுவும் வரவில்லை. தற்போதைய நடைமுறைப்படி ஹரிஜன நலப் பள்ளிகளின் மதிய உணவுக் காண்டிராக்டர்கள் மாதந்தோறும் தங்களுக்குச் சேரவேண்டிய தொகைக்கான பில்லுகளை அடுத்த மாதம் முதல் வாரத்தில் தலைமையாசிரியர்கள் மூலமாக மாவட்ட நல அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். அந்த பில்லுகளை மாவட்ட நல அதிகாரிகள் சரிபார்த்து, சரியென்று தெரிகிற பில்லுகளை மாதத்தில் முதல் வாரத்தில் அல்லது 15-ம் தேதிக்குள்ளாக தொகை செலுத்தப்படுவதற்காக அனுமதிக்கின்றனர்.

ஒரு மாதத்தின் மதிய உணவு பில்லுகளை அடுத்த மாதம் 7-ம் தேதிக்குள் காண்டிராக்டர்கள் அனுப்பி வைக்கவேண்டும் என்றும் அந்த மாதம் 15-ம் தேதியன்றோ அதற்கு முன்போ தவறாமல் அவர்களுக்குத் தொகை வழங்கிவிட வேண்டும் என்றும் ஹரிஜன நலத் துறை நெறியாளர் இம் மாநில மாவட்ட அதிகாரிகள் அனைவருக்கும் மதுரையில் கள்ளர் சீர்திருத்த திட்டத் துணைக் கலெக்டருக்கும் ஆணை பிறப்பித்துள்ளார்.

No complaints have so far been received regarding delays in the payments made to Midday Meals contractors in Harijan Welfare Schools in the State. According to the existing procedure Mid-day Meals contractors of Harijan Welfare Schools send their monthly claims to the District Welfare Officers through the Headmasters in the first week of the month succeeding the month to which the bills relate. The bills are checked by the District Welfare Officers and claims which are found to be correct are passed for payment during the first week or before the 15th of the month at the latest.

The Director of Harijan Welfare, Madras, has issued instructions to all District Welfare Officers in the State and to the Deputy Collector, Kallar Reclamation, Madurai to see that the Midday Meals bills relating to a particular month are obtained before the 7th of the succeeding month and payment made on or before the 15th of that month without fail.

திரு. முனு ஆதி: ஹரிஜன நல பள்ளிகளில் மதிய உணவிற்காக 15 புதுக்காசுகளும் இதரப் பள்ளிகளில் மதிய உணவிற்காக 10 காசுகளும் கொடுக்கப்படுகிறதே, இந்த வித்தியாசத்திற்கு காரணம் என்ன ?

20th November 1963]

கனம் திரு. பூ. கக்கன் : இதர பாடசாலை மாணவர்களுக்கு கல்வி இலாகா மூலம் கொடுக்கிறார்கள். ஹரிஜன நலப் பள்ளிகளில் ஹரிஜன இலாகா மூலம் கொடுக்கிறார்கள். சமுதாயத்தில் அவர்கள் மிகவும் பின்தங்கியவர்களாக இருப்பதால் அவர்களுக்கு இந்த தொகை கொடுக்கப்படுகிறது.

திரு. கே. மூக்கையா தேவர் : மதுரையில் உள்ள கள்ளர் சீர்திருத்த இலாகாவில் மதிய உணவிற்காக உள்ள பில்களை சரி பார்த்து உடனடியாகப் போட தாமதமாவதற்குக் காரணம் ஸ்டாப் குறைவாக இருப்பதுதான். எனக்கு இது நேரடியாகத் தெரியும். ரொம்பத் தாமதமாகிறது. ஆகவே அதிகப்படியாக ஸ்டாப் போட அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கலெக்டருக்கு இதுபற்றி எழுதினால் கவனிக்கப்படும்.

திரு. மு. பொ. வடிவேல் : பஞ்சாயத்து யூனியன்களினால் பல புதுப் பள்ளிகள் மலைப்பிரதேசத்தில் நிர்வகிக்கப்படுகின்றன. ஹரிஜன நல பள்ளி மாணவர்களுக்கு கொடுப்பது போலவே இவர்களுக்கும் இந்த இலாகா மூலம் மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே அப்பேர்ப்பட்ட பஞ்சாயத்து யூனியன் ஸ்கூல்களில் உள்ள ஹரிஜன மாணவர்களுக்கு இந்த சலுகை காட்டப்பட்டு வந்தது. சாப்பாடு போடும்போது அதிகமான பேர்கள் வந்து விடுகிறார்கள். எல்லாப் பாடசாலைகளிலும் உள்ள மாணவர்களுக்கு இப்படி போடுவது என்றால் நிதி குறைவாகப் போய்விடும். ஆகவேதான் ஹரிஜன நலப் பள்ளிகளிலும், பின்தங்கிய மாணவர்களுக்காக ஹரிஜன நல இலாகாவால் நடத்தப்படும் பள்ளிகளிலும் 15 நயா பைசா விதம் போட முடிவு செய்திருக்கிறோம். பின்னர் நிதி நிலை சரியானால் எங்கு ஹரிஜன மாணவர்கள் கூடுதலாக இருக்கிறார்களோ அதுபற்றி கவனிக்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஹரிஜன நல இலாகா மூலம் நடத்தப்படும் கம்யூனிட்டி சென்டரில் குழந்தைகள் பள்ளி வைத்து நடத்தப்படுகிறது. சர்க்கார் விடுமுறை நாட்களில் கூட அங்கு மதிய உணவு கொடுக்கும் காரணத்தினால் விடுமுறை நாட்களில் கூட பிள்ளைகளை வரவழைக்கிறார்கள். அவர்களுக்கு விடுமுறை அளிக்க என்ன வசதி செய்யப்பட்டிருக்கிறது ? இதுபற்றி பரிசீலிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கம்யூனிட்டி சென்டர்களில் அங்குள்ள ஏழை குழந்தைகளுக்கு பால் கஞ்சி போன்றவை கொடுத்து வருகிறார்கள். விடுமுறை நாட்களில் குழந்தைகள் வீட்டிற்குப் போய் விடுவார்கள்.

திரு. ஆர். நாராயணன் : சில பஞ்சாயத்து தலைவர்கள் சில பள்ளிகளில் மதிய உணவு போட்டு வராமல் இருக்கிறார்கள். சில பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் நடைபெறாமல் இருக்கிறது. அது பற்றி அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

Ayyankottai village (inclusion in panchayats)

*325 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Local Administrotion be pleased to state—

(a) whether it is a fact that Ayyankottai village of Ayyanpalayam firka, Madurai district, has not yet been merged with any of the panchayats; and

(b) whether there is any proposal to form separate panchayat board for this village?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் :

(அ) ஆம்

(இ) இல்லை.

மதிய உணவுத் திட்டம்

*326 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவு கொடுப்பதை காண்டிராக்ட்டு விடுவதில் சர்க்கார் அனுசரிக்கும் நடைமுறைக் கொள்கை என்ன ?

(இ) ஒருவருக்கு மூன்றாண்டுகள் வரைதான் காண்டிராட்டு விடவேண்டும் என்று உத்தரவு ஏதேனும் உள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) கண்டிராக்டர்கள் மூலம் உணவு வழங்கக்கூடாது என அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

(இ) கேள்வி எழாது.

(a) The Government have ordered that the supply of Midday Meals should not be made through contractors.

(b) Does not arise.

*327 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போதுள்ள மதிய உணவுத் திட்டத்தை அமுல் நடத்தும் பள்ளிகளுக்கு அந்த வட்டார பஞ்சாயத்து சபைகள் குறைந்தது 2 ந. பை. பிரதி மாணவனுக்கு நாளொன்றுக்கு என்ற அடிப்படையில் நன்கொடை ஒதுக்குதல் வேண்டும் என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், சில பஞ்சாயத்துக்களில் 3 ந.பை. 4 ந.பை.-வும் சிலவற்றில் 2 ந.பை. மட்டுமே கொடுக்கப்பட்டு வருவதை அரசாங்கம் அறியுமா ?

(உ) இத்தகைய மாறுபாடுகளை நீக்க அரசாங்கம் எடுக்க உத்தேசித்துள்ள திட்டமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ), (இ) & (உ) பஞ்சாயத்துக்கள் மதிய உணவுத் திட்டத்திற்கென ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு சாப்பாட்டுக்கு 2 நயா பைசா வீதம் பஞ்சாயத்து நிதிகளிலிருந்து

உதவியளிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது. 2 நயா பைசாவுக்கு மேல் உதவியளிக்க விரும்பும் பஞ்சாயத்துக்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு உதவி செய்யலாம். இத்திட்டம் சம்பந்தமாக பஞ்சாயத்துக்கள் வழங்கும் உதவித் தொகை விதங்கள் வித்தியாசப்படுவதற்கு இதுதான் காரணம். இது சம்பந்தமான உத்தரவுகளைத் திருத்தும் உத்தேசம் இல்லை.

(a) *to* (c): The Government have allowed Panchayats to contribute at the rate of 2 nP. per meal per child towards the midday meal scheme, from their resources. The Panchayats which desire to contribute a larger share than 2 nP. are free to do so subject to certain conditions. Hence the variation in the rates of contributions of Panchayats towards the scheme. There is no proposal to revise the orders in the matter.

*328 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடியின் காரணமாக பள்ளி ஆசிரிய, ஆசிரியைகள் மதிய உணவுத்திட்டத்திற்கு நன்கொடை வசூலிக்க இயலாமலிருப்பது அரசாங்கம் அறியுமா ?

(இ) ஆம் எனில், அவ்வாறு நன்கொடையாக வசூலிக்க வேண்டிய தொகையை அரசாங்கமே தேசிய நெருக்கடி தீரும்வரை அளிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) மதிய உணவு திட்டத்திற்கான நன்கொடை மதிய உணவு குழுக்கள்தான் வசூலிக்க வேண்டுமே அன்றி பள்ளி ஆசிரியர்கள் அல்ல.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(a) The Midday Meal Committees and not the teachers are expected to collect donations for the midday meal scheme.

(b) Does not arise.

*329 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—.

(அ) மதிய உணவு திட்டத்தின்கீழ், வழங்கப்பெறும் CARE பொருள்களை அந்த வட்டத்திலுள்ள பள்ளிகளுக்கு அரசாங்கமே தன் செலவில் அனுப்பி வைக்கிறதா ?

(இ) இல்லையெனில் அதனை எடுத்துச் செல்ல ஆகும் செலவிற்கு பொறுப்பு யார் ?

(உ) பள்ளிகளின் பொறுப்பெனில், அங்ஙனம் ஆகும் செலவுத் தொகை எந்தக் கணக்கில் சேர்க்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ), (இ) (உ) 'கேர்' பொருள்கள் சென்னைத் துறைமுகத்திலிருந்து பள்ளித் துணை ஆய்வாளர் காரியாலயங்கள் வரை அரசாங்க செலவில் அனுப்பப்படுகிறது. மதிய உணவுக் குழுக்களின் செயலாளர்கள் அவர்களுக்கு வேண்டிய

அரிசன நலப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு மாதாந்திர சம்பளம், பிரயாணப்படி இவைகள் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. இதை தவிர்க்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: எங்கும் காலதாமதம் ஏற்படக் கூடாது என்று அரிஜன நல இலாகா டைரக்டர் அவர்கள் எல்லா ஜில்லா அதிகாரிகளுக்கும் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அனுப்பியிருக்கிறார்கள். குறிப்பாக எந்த இடத்திலாவது காலதாமதம் ஆகிறது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், தனியாக லேபர் பள்ளிகள் என்று வைத்திருக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா? இதையும் பஞ்சாயத்து யூனியனுக்கே கொடுத்துவிட அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: இப்போது கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. பிற்பட்ட வகுப்பினர்களுக்கு தனிச் சலுகைகள் காட்டவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவ்விதம் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

அரிசன மாணவ, மாணவியர்களுக்கு தங்கும் விடுதிகள்

* 333 **கேள்வி—திரு. க. ர. நல்லசிவம்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் அரிசன மாணவ மாணவியருக்காக தங்கும் விடுதிகள் எங்கெங்கு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது?

(இ) இதற்குச் செலவிடப்படும் உத்தேச தொகை எவ்வளவு?

(உ) அரிசனங்களில் எல்லா பிரிவினருக்கும் இதில் இடம் கொடுக்கப்படுமா?

(எ) ஒவ்வொரு பிரிவினருக்கும் எவ்வளவு இடங்கள் ஒதுக்கப்படும்?

THE HON. SRI P. KAKKAN : (a) Proposals for the construction of Government Boys Hostels at Tiruvannamalai in North Arcot district and at Ootacamund in the Nilgiris district are under the consideration of the Government.

(b) The probable expenditure for the construction of buildings for the Government Boys Hostel, Tiruvannamalai is estimated at Rs. 1.50 lakhs. The plans and estimates for the construction of Government Boys Hostel at Ootacamund have not yet been received by the Government.

(c) Yes. Seventy-five per cent of the total strength is reserved for scheduled castes in the hostels mainly intended for Harijan pupils.

(d) No separate percentage of seats is allotted for each sect among scheduled castes for admission in the Government Hostels in the State.

திரு. க. ர. நல்லசிவம்: அரிசனங்களில் கல்வித்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் அருந்ததியர் என்ற ஒரு வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு விசேஷமாக ஏதாவது சலுகைகள் கொடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: இவர்களுக்கென்று தனியாக எந்த சலுகையும் காட்டுவதற்கில்லை. ஏழை குழந்தைகளுக்குப் பொதுவாக என்னென்ன சலுகைகள் காண்பிக்கப்படுகிறதோ அவைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

அடிநிலத் தண்ணீர் வளம்

* 334 **கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த மாநிலத்தின் அடிநிலத்தில் உள்ள தண்ணீர் வளம் பற்றி மாவட்டவாரியாக சர்வே செய்ய மாநில சர்க்கார் நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளனரா?

(இ) அப்படியானால், விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) : Reports received by Government from many districts showed that the subsoil water table has been gradually going down due to the increasing number of deep wells and the installation of pumpsets. The need for a scientific survey of groundwater resources in this State was therefore felt and accordingly a scheme for the groundwater exploration and survey in this State was sanctioned, involving a recurring expenditure of Rs. 7.75 lakhs and a non-recurring expenditure of Rs. 5.71 lakhs. The scheme is being implemented by the Director of Industries and Commerce. In view of the difficulties involved in securing the necessary technical personnel and the required foreign exchange for the purchase of drills, the scheme is in a preliminary stage.

திரு. க. ர. நல்லசிவம்: இது சம்பந்தமாக கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, வேண்டிய அளவுக்கு டெக்னிகல் அறிவு பெற்றவர்கள் இந்தத் துறையில் இல்லாததின் காரணமாக போதிய அளவுக்கு வேலை நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அதை தவிர்க்கின்றவகையில் இந்த ராஜ்யம் விவசாயத்திற்கு மிகவும் முக்கியம் வாய்ந்த ராஜ்யம் என்று கருதி, அடித்தளத்திலுள்ள தண்ணீரை கண்டுபிடிக்கின்ற வழிக்கு, விசேஷமாக இங்கிருந்து இந்தத் துறையில் வேலை செய்கின்றவர்களில் சிலரை வெளி நாடுகளுக்கு அனுப்பி பயிற்சி கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஜியாலஜிக்கல் சர்வே பயிற்சி அவ்வளவு சுலபமாகக் கொடுக்க முடியாது. நீண்ட நாள் அனுபவம் தேவை. இப்போது ஸ்டேட் ஜியாலஜிக்கல்

டிப்பார்ட்மெண்டில் வேண்டிய அளவுக்கு ஆட்களை தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். இதற்கான பயிற்சியும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். தேவைப்படும் ஆட்கள் சீக்கிரமாகவே கிடைப்பார்கள் என்று நம்பலாம்.

திரு. க. ர. நல்லசிவம் : குறைந்தபட்சம் அடித்தண்ணீரை கண்டுபிடிக்க விவசாயிகளுக்கு ஆதரவாக அரசாங்கத்திலிருந்து ஏதாவது சாதனங்கள் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I am concerned only with the ground water survey. The question may be put to the Minister for agriculture.

திட்டக்குடி ஆண்கள் மருத்துவ நிலையம்

* 335 **கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் வட்டம், திட்டக்குடி சர்க்கார் ஆண்கள் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும்படி 1962-ல் பொதுமக்கள் கொடுத்த மகஜரின்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அத்தகைய மகஜர் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஆயினும், அந்த ஆஸ்பத்திரிக்கு அபிவிருத்திகள் செய்ய வேண்டும் என்று திரு. எஸ். கருப்பையா என்பவரிடமிருந்து முறையீடு ஒன்று வந்துள்ளது. அதைப் பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

No such mahazar has been received by the Government. A representation was, however, received from one Sri S. Karuppiah for carrying out improvements to the hospital and this is under consideration.

Employees of former Travancore-Cochin State

* 336 Q.—SRI R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the services of all the Work Establishment personnel in the Public Works Department who have been transferred from the ex-Travancore-Cochin State have been regularized; and

(b) whether they are placed on a par with their counterparts in Madras State Service in respect of pay and allowances?

THE HON. SRI V. RAMAIAH : (a) It is presumed that the M.L.A. refers to the integration of services of the work-charged establishment personnel allotted to this State from the former Travancore-Cochin State. Orders have since been issued integrating the services of the work-charged establishment personnel allotted to this State from the former Travancore-Cochin State.

(b) The allottees will be given the Madras scales of pay for the equated posts in this State or the ex-Travancore-Cochin scales of pay applicable to them immediately before 1st November 1956, whichever is advantageous to them.

மயிலாப்பூரில் மத்திய அரசாங்கத்திற்குக் கட்டிடங்கள்

* 337 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மயிலாப்பூர் தொகுதிக்குள் எதாயினும் புதிய கட்டிடங்கள் எழுப்ப இடம் ஏற்பாடு செய்து தரும்படி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்களா?

THE HON. SRI V. RAMAIAH : Yes.

கூட்டுறவு ஸ்தாபன வழக்குகள்

* 338 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவு ஸ்தாபனங்களில் உள்ள வழக்குகளை சிவில் கோர்ட்டுகளுக்கு மாற்ற விதிகள் திருத்தப்படுமா?

(இ) வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன?

கனம் திரு. த. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தப்பட்ட ஆரம்ப வழக்குகளைப் பொறுத்தவரையில் சர்க்கார் பரிசீலனையில் அவ்வித கோரிக்கை ஒன்றுமில்லை. கூடிய சீக்கிரம் அமுலுக்கு வரவிருக்கும் 1961-ம் வருஷத்திய கூட்டுறவு சங்கங்களைப்பற்றிய சட்டத்தின் 96-வது பிரிவின்படி ரிஜிஸ்தரார் செய்யும் சில முடிவுகள், உத்தரவுகளின் மேலும் மற்றும் மத்தியஸ்தர்கள் செய்யும் சில தீர்ப்புகளின்மேலும் சப்ஆர்டினேட் ஜட்ஜின் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு நீதித் துறை அதிகாரியைக் கொண்ட கூட்டுறவு நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யலாம்.

(இ) வடாற்காடு மாவட்டத்தில் 30-6-1963 அன்று பைசல் ஆகாமல் விசாரணையில் இருந்த கூட்டுறவுச் சங்க வழக்குகளின் எண்ணிக்கை ஆயிரத்து அறுநூற்று எண்பத்தொன்று (1681).

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது கூட்டுறவு ரெஜிஸ்டிரார் அவர்கள் மூலமாக விசாரித்து தீர்க்கும் வழக்குகளில் பெரும்பாலும் நியாயம் கிடைக்கவில்லை. எனவே இவ்வழக்குகள் எல்லாம் சிவில் கோர்ட்டுக்கு விடப்பட்டு விசாரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போதுள்ள முறையிலே காலதாமதம் ஆகிறது என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. வழக்குகளை சீக்கிரமாக முடிக்க

வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ரெஜிஸ்டிரார் விசாரிப்பதாக இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுடைய தீர்ப்புக்குமேல் அப்பீல் செய்து கொள்வதற்கு வேறு வழிகள் இருக்கின்றன.

Paramakudi Panchayat

* 339 Q.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any representation was made to the Minister by the Paramakudi Panchayat in Ramanathapuram district for upgrading it as a Municipality; and

(b) if so, the action taken thereon?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்;

(இ) இவ்விஷயம் சர்க்காரின் பரிசீலனையில் இருக்கின்றது.

உபரி பால் பவுடர் (தஞ்சாவூர்)

* 340 **கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் அரண்மனைக் கட்டிடத்தில் 'பால் பவுடர் உபரியாக வைக்கப்பட்டுள்ளதா ?

(இ) அப்படி வைக்கப்பட்டிருக்கும் பால் பவுடரின் மதிப்பு எவ்வளவு ?

(உ) அந்த பவுடர் விநியோகம் செய்யப்படாமல் இருப்பதற்கான காரணம் யாது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) உபயோகிப்பதற்கேற்ற பால் பவுடர் தஞ்சாவூர் அரண்மனையில் வைத்திருக்கப்படவில்லை. கெட்டுப்போன பால் பவுடர் மட்டுமே இப்போது அங்கு வைக்கப்பட்டுள்ளது.

(இ) இந்தப் பால் பவுடர் 1961-ல் இலவசமாக வழங்கப்பட்டது.

(உ) நாள்பட்டுப் போனதால் பால் பவுடர் கெட்டுவிட்டது. அது உபயோகத்திற்கு ஏற்றதல்லவென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Milk Pasteurisation Plants

* 341 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state the number of Milk Pasteurisation Plants in the State under the management of the Co-operative institutions, and under private sector with the names of their location?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : There are four pasteurisation plants in the State under Co-operative and private management established by :—

(i) The Madras Co-operative Milk Supply Union with a Chilling Station at Singaperumalkoil;

(ii) The Kodaikanal Co-operative Milk Supply Union;

(iii) The Coimbatore Co-operative Milk Supply Union with a Chilling Station at Sultanpet; and

(iv) The Nilgiris Dairy Farm at Erode, which is privately owned.

Mr. SPEAKER : It is now 10 o'clock. I think the House has no objection to extend the question hour till we dispose of the remaining questions. 10–00 a.m.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இத்தகைய ப்ளான்டுகளுக்கு அரசினரிடமிருந்து ஏதாவது மான்யம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இது அந்தந்த சொஸைட்டிகளைச் சேர்ந்ததும், அரசாங்க உதவியும் கொண்டுதான் ஏற்பாடு செய்திருக்கிறது.

செங்கற்பட்டு நகராட்சி

* 342 **கேள்வி—திரு. செ. கொ. விசுவநாதன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகராட்சியை இரண்டாந்தர நகராட்சியாக மாற்ற வேண்டும் எனக் கேட்டு அந் நகராட்சியிடமிருந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந்ததா ?

(இ) அப்படியானால், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை ஐயா;

(இ) வினா எழாது.

திரு. செ. கொ. விசுவநாதன் : நகர சபையின் தகுதி நிர்ணயிக்கப்படுவது மக்கள் தொகையின் அடிப்படையிலா அல்லது வருமானத்தின் அடிப்படையிலா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வருமான அடிப்படையிலும் மக்கள் தொகை அடிப்படையிலும் சேர்ந்துதான்.

Madras Dairy and Milk Project

* 343 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the steps taken to reduce the loss incurred by the Madras Dairy Milk Project; and

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், பஞ்சாயத்து யூனியன்களுக்கு இருக்கக்கூடிய ஒருசில அதிகாரங்களை எடுத்துவிடலாம் என்பது என் சொந்த அபிப்பிராயம் என்றாலும், பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வது என்பது சரியாகாது. ஆசிரியர்களிடம் இருந்து பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மீது புகார்கள் வந்திருக்கின்றன. குறைந்தபட்சம் ஆசிரியர்களை மாற்றுவது போன்ற விஷயங்களில் இது சம்பந்தப்பட்ட கல்வி இலாகா அதிகாரிகளைக் கலந்துக் கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உத்தரவுகள் இருக்கின்றன. எவ்வளவு தூரம் அவை அனுஷ்டிக்கப்படுகின்றன என்பதுதான் முக்கியம். அதெல்லாம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன்: அமைச்சரவர்கள் கூறிய பதிலில் "சங்கடங்கள் இருப்பதால் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்" என்று சொன்னார்கள். சங்கடங்கள் என்ன என்பதை தெளிவாகச் சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சங்கடங்களில் முக்கியமானது, கனம் கலியாணசுந்தரம் கூறியது.

திரு. கரு. சீமைச்சாமி: பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களை ஆண்டு முடிவில் ஜெனரல் டிரான்ஸ்பர் செய்கிறார்கள். அப்படி மாற்றும்போது பொதுவாக பஞ்சாயத்து யூனியன்' தலைவர்கள் மேல் அவர்கள் புகார் கூறுவது அரசாங்கத்திற்கு தெரியுமா?

MR. SPEAKER: The question is too general.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்களே ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர். குறிப்பான விஷயங்கள் ஏதாவது இருந்தால் தெரிவிக்கலாம்.

அரசாங்க மருத்துவமனை (விருத்தாசலம்)

*313 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் அரசாங்க மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் ரேஷன் கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில் எத்தனை நாளாக, என்ன காரணத்தினால் கொடுக்கப்படவில்லை?

(உ) அது சம்பந்தப்பட்ட டெண்டர் எப்போது பெறப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இந்த கேள்விக்கு இடமில்லை.

(உ) 11—4—1963 அன்று.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சார், நடைபெறும் ஆண்டில் ஏப்ரல் மாதம் இருபத்திநாலாம் தேதிவரை கண்ட்ராக்டருடைய டெண்டர் பரிசிலனை செய்யப்பட்டு முடிவு கூறப்படாத காரணத்தினால், 36 நோயாளிகளுக்கு உணவு தரப்படவில்லை என்பது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: முழுவதிலும் பொய் . . .

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். . .

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: உண்மைக்கு மாறானது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். . .

MR. SPEAKER: Let the Hon. Minister's answer be finished. Then the hon. Member can raise a point of order.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினருக்கு கிடைத்திருக்கக்கூடிய தகவல் உண்மைக்கு மாறானது (சிரிப்பு) 1—4—1963 லிருந்து 11—4—1963 வரை பேஷண்ட்டுகளுக்கு பாலும் ரொட்டியும் ஆகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காரணம் டெண்டர்கள் 'கால்பார்' பண்ணி கடைசி தேதிவரை டெண்டர்கள் வராமல் அதன் பிறகு வந்து மெட்ரிக் யூனிட்டில் விலை நிர்ணயிக்க முடியாமல் மெடிகல் ஆபிஸர் ஜில்லா மருத்துவ அதிகாரியோடு கடிதப்போக்குவரத்து செய்து கரஸ்பாண்டென்ஸில் கொஞ்சம் டிலே ஆகி விட்டது. ஆனால் அதன் காரணமாக பேஷண்டுகளை பட்டினி போட்டார்கள் என்பது தவறு.

திரு. முனு ஆதி: பிப்ரவரி மாதத்திலேயே டெண்டர்கள் வரவழைக்கப்பட்டு ஏப்ரல் 21-ஆம் தேதி வரை அங்கீகரிக்காமல் இருந்தது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கனவே சொன்னது போல் பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் டெண்டர்கள் வந்தன. அவற்றைப் பரிசீலனை செய்த பிறகு 'மெட்ரிக்யூனிட்' காரணமாக விலை நிர்ணயம் செய்வதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டதுதான் தாமதத்திற்குக் காரணம்

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சார், ஏப்ரல் மாதத்தில் எந்த நாளிலாவது உணவு கொடுக்கப்படாமல் இருந்ததா என்று கேட்டதற்கு, டெண்டர்கள் வராததால் அந்த நிலைமை இருந்தது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் எத்தனை நாட்களுக்கு உணவு கொடுக்கப்படாமல் இருந்தது.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: டெண்டர்கள் வரவில்லை என்று சொல்லவில்லை. வந்த டெண்டர்களை ஸ்க்ரூடினைஸ் செய்த பிறகு மெட்ரிக் யூனிட் காரணமாக விலை நிர்ணயம் செய்வதிலே கொஞ்சம் சங்கடம் ஏற்பட்டது. சீஃப் மெடிகல் ஆபிசர் பிறகு ஜில்லா மருத்துவ அதிகாரிக்குத் தகவல் கொடுத்து அது பின்னர்

கனம் திரு. பூ. கக்கன்: அது சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்களுக்கு கேள்வி போட வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: வெல்பேர் பாடசாலைகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களும், யூனியன் பாடசாலைகளில் படிக்கிற தாழ்த்தப்பட்ட மாணவர்களும் ஒன்றுக இருந்தும் கூட மதிய உணவில் வித்தியாசம் இருக்கிறது, ஏன் இந்த பாரபட்சம் காட்டப்படுகிறது என்று கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: வித்தியாசம் காட்டப்படாமல் இருக்க லட்சக்கணக்கில் ரூபாய் வேண்டியிருக்கிறது. அதற்குக் காரணம், நிதிநிலைதான்.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்: சேர்வராயன்மலையில் படிக்கிற ஓராசிரியர் பள்ளி மாணவர்களுக்கு ஸ்லேட், புத்தகம், பென், நோட் போன்றவை இலவசமாக கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: ஹரிஜன நலத் துறையிலிருந்து நடத்தப்பட்டால் ஸ்லேட், நோட் எல்லாம் இலவசமாக வாங்கிக் கொடுக்கப்படும்.

திரு. தா. சின்னசாமி: ஷெட்யூல்டு காஸ்ட், பாக்வேர்ட் கம்யூனிட்டி என்று கூறி ஏழை மாணவர்களுக்கு சர்க்கார் உதவி அளிக்கிறது. ஆகவே எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் ஒரே விதத்தில் ஹரிஜன நலத் துறையிலிருந்து மதிய உணவு அளித்தால் நல்ல முறையில் இருக்குமென்று நினைக்கிறேன். பாக்வேர்ட் கம்யூனிட்டி மாணவர்கள் ஷெட்யூல்டு காஸ்ட் மாணவர்களுக்கு கம்மியில்லை. ஆகவே, ஷெட்யூல்டு காஸ்ட் மாணவர்களுக்கும், பாக்வேர்ட் கம்யூனிட்டி மாணவர்களுக்கும் ஒரே விதமாக மதிய உணவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அரசாங்கத்தின் கொள்கை என்னவென்றால் ஹரிஜன நல பாடசாலைகளில் படிக்கிற மாணவர்கள் பாக்வேர்ட் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஹரிஜன மாணவர்களாக இருந்தாலும்சரி சமத்துவமாகத்தான் சாப்பாடு போடப்படுகிறது.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் (ஹரிஜனநல இலாகா)

* 332 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் ஹரிஜனநல இலாகாவின்கீழ் நடைபெறும் ஆரம்பப்பள்ளிகளில் (**Labour Schools**) பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளிக்கவேண்டிய சம்பள உயர்வு, ஐந்து ஆறு ஆண்டு காலமாகவே கொடுக்கப்படவில்லை என்பதும், அதனுல் அப்பள்ளிகளில் பணிபுரிய ஆசிரியர்கள் முன் வருவதில்லை என்பதும், அதனுல் அப்பள்ளிகள் போதிய ஆசிரியர்கள் இல்லாமலே நடைபெறுகின்றன என்பதும் உண்மையா?

கனம் திரு. பூ. கக்கன்: ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு பாக்கி பற்றிய 1955-60-ம் ஆண்டுகளுக்குரிய 40 மனுக்கள் இன்னும் பைசல் செய்யப்படவில்லை. இவை தவிர, இதே கால அளவில் சம்பள பாக்கி சம்பந்தமான 121 கேசுகள் முன் தணிக்கைக்காக ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் எடுத்துக்காட்டியுள்ள குறைபாடுகள் நீக்கப்படுவதற்காக அவை தணிக்கைத் துறையாலும் ஹரிஜன நலத் துறை நெறியாளராலும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. இந்தக் கேசுகளை இயன்ற விரைவில் பைசல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஹரிஜனநலத்துறை நடத்தும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்ற காரணத்தை முன்னிட்டு அப்பள்ளிகளில் பணிபுரிவதற்கு ஆசிரியர்கள் தயங்குவதாகக் கூறுவது உண்மையல்ல. இது காரணமாக, இப்பள்ளிகள் போதிய ஆசிரியர்கள் இல்லாமலேயே நடைபெறுகின்றன என்ற புகாரும் சரியல்ல.

Claims in respect of forty cases of arrears of increments of teachers relating to the years 1955–60 remain to be attended to, besides another 121 cases of arrears relating to the same period which were already presented for pre-audit and which have been returned by the Audit, and the Director of Harijan Welfare for rectification of defects pointed out. Arrangements are being made to dispose of these cases as expeditiously as possible.

It is not a fact that teachers are reluctant to take up employment in the schools run by the Harijan Welfare Department on the ground that there is delay in the sanction of increments. The allegation that schools are run short of adequate staff because of this is also not correct.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, இப்பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு சம்பள விகிதங்களை நிர்ணயிப்பதிலும் சம்பளம் அனுமதித்துக் கொடுப்பதிலும் காலதாமதம் ஆகிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இந்த நிலைமை இருப்பதற்கு காரணம், தங்களுடைய ஆபீசில் போதிய பணியாளர்கள் இல்லை என்பதுதான் என்று வேலூர் கலெக்டர் அவர்கள் தெரிவித்திருக்கிறுர்கள். ஆகவே இந்த காலதாமதத்தை போக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக ஏதாவது வழிவகை செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: வட ஆற்காடு மாவட்ட கலெக்டர் அவர்கள் போதிய ஸ்டாஃப் இல்லை என்றும், அப்பர் டிவிஷன் கிளார்க் வேண்டும் என்றும் கேட்டிருந்தார்கள். அதன்படி அப்பர் டிவிஷன் கிளார்க் ஸாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் இருப்பது போலவே திருச்சி மாவட்டத்திலும் உள்ள

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை. நமது மாநிலத்தில் மாவட்ட ஹரிஜன நலக் குழுக்கள் ஏற்கனவே பணியாற்றி வருகின்றன. அவை கலெக்டர்களுக்கு ஹரிஜன நலம் பற்றி ஆலோசனை கூறுகின்றன.

(a) No Sir.

(b) Does not arise. But it may be mentioned that District Harijan Welfare Committees are already functioning in this State and they advise the Collectors on the welfare of Harijans.

Land Mortgage Banks

*349 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to reduce the period from 23 years to 12 years for encumbrance certificate for taking loans in the Primary Land Mortgage Banks?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: ஆம். மத்திய நில அடைமான பாங்க் இதைக் குறித்து யோசித்து வருகிறது.

*350 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that certain percentage has been fixed for the issue of loans in Primary Co-operative Land Mortgage Banks; and

(b) if so, the percentage fixed for the discharge of prior debts, and for the land improvement loans?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) ஆரம்ப நில அடைமான பாங்குகள் முந்திய கடன்களைக் கொடுத்துத் தீர்க்க 30 சதவிகிதக் கடன்களும் நில அபிவிருத்திக் காரியங்களுக்காக 70 சதவிகிதக் கடன்களும் கொடுக்க வேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார். நில அடைமான பாங்குகள் முன் கடன்களைத் தீர்க்க நிறுவப்பட்டது. அதில் 30 சதவிகிதம் கொடுத்தால் முன் கடன் தீர்க்கப் போதவில்லை. ஆகையால் அதை உயர்த்தவேண்டுமென்று அரசாங்கம் கருதுமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: நில அடைமான பாங்குகளின் நோக்கமே நிலத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்படவேண்டும் என்பது தான். அந்த முறையிலே தான் இந்த முடிவு செய்யப்பட்டது. 30 சதவிகிதம், 70 சதவிகிதம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

District Development Councils (Tiruchirappalli)

*351 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have enquired into the reason for the boycot of the meetings of the District Development Councils of Tiruchirappalli North and South scheduled from 28th June 1963, by a large number of members;

(b) the amount of expenditure incurred due to the adjournment of these meetings;

(c) whether any report was received from the Collector-in-charge regarding the adjournment of the meetings; and

(d) if so, the details of the report?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட சிற்றுண்டிக்கு ரூ. 38 செலவாகியது. அரசாங்கச் சார்பற்ற அங்கத்தினர்களுக்குப் பயணப்படியாக இதுவரை ரூ. 358.24 அளிக்கப்பட்டது.

(உ) ஆம்.

(ஊ) 28—6—1963-ல் நடப்பதாக இருந்த திருச்சிராப்பள்ளி தெற்கு, வடக்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்களின் கூட்டங்கள், கூட்டத்திற்கு வேண்டிய நிர்ணயச் சிற்றெண் இல்லாத காரணத்தால் 29—7—1963-க்கு ஒத்தி வைக்கப்பட்டதாக திருச்சிராப்பள்ளி கலெக்டர் தெரிவித்திருக்கிறார்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அங்கத்தினர்கள் இந்தக் கூட்டத்தை பகிஷ்கரித்ததற்கான காரணங்களைப் பற்றி கலெக்டர் அவர்கள் ஏதாவது தகவல் கொடுத்திருக்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பகிஷ்கரித்ததாக தகவல் இல்லை. நான்கு காரணங்கள் அளித்திருக்கிறார்கள். உடல் நிலை சரியாக இல்லாதது, சொந்த வேலை, திருவண்ணாமலை உபதேர்தலுக்காகச் சென்றிருந்தது, மதுரையில் அதே தேதிக்கு சமீபத்தில் மகா கும்பாபிஷேகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் அதற்கு சில அங்கத்தினர்கள் சென்றிருந்தது ஆகியவை காரணங்கள் என்று கொடுத்திருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த சம்பவம் நடந்த சமயத்தில் நான் வெளியிலே இல்லை. ஜெயிலில் இருந்தேன். நான் பத்திரிகையில் பார்த்த செய்தி கூட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வரவில்லையா என்று அறிய விரும்புகிறேன். பாடபுத்தகங்கள் நிர்ணயிப்பது சம்பந்தமாக கலெக்டருக்கும் அங்கத்தினர்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கூட்டத்தை அங்கத்தினர்கள் பகிஷ்காரம் செய்தார்கள் என்பது உண்மையா?

(b) the amount of loss or profit anticipated for the year 1962–63?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) சென்னை பால் பண்ணைத் திட்டத்தினால் இதற்கு முந்திய ஆண்டுகளில் நஷ்டம் ஏற்பட்டதற்கான முக்கிய காரணங்கள்—பாலைப் பதப்படுத்துவதற்கான வசதிகள் இல்லாததால் பால் அடிக்கடி கெட்டுப் போயிற்று. ஓரளவு பால், நெய், பாலடைக்கட்டி போன்ற உப பொருள்களாக மாற்றப்பட்டு வந்தது. இது தவிர, மூலதனத் தொகைக்கு 5½ சதவீத வட்டி ஒதுக்கப்பட்டதாலும் நஷ்டம் அதிகமாயிற்று. மாதவரம் காலனியில் மத்திய பால் பண்ணை நிலையம் 28-1-1963 முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. நாளொன்றுக்கு 75,000 லிட்டர் வரை பால் பதப்படுத்துவதற்கான வசதிகள் இந்த நிலயத்தில் உள்ளன. இதனால் பால் கெட்டுப்போவதும் உப பொருள்களாக மாற்றும் அவசியமும் வெகுவாகக் குறைந்து விட்டன. பால் தயாரிப்பை அதிகப்படுத்துவதன் மூலமாகவும், கிராமச் சங்கங்களிலிருந்து பாலைச் சேகரிப்பதன் மூலமாகவும் பாலின் மொத்த உற்பத்தி அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது. பால் உற்பத்தி அளவு அதிகரித்திருந்தாலும், மேல் செலவுகள் கூடவே அதிகரிப்பதில்லை. நஷ்டத்தைக் குறைத்து, லாபநஷ்டமின்றி இத்திட்டத்தை நடத்துவதற்கு பால் விற்பனை விலையை அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது. எனவே, இதுவரையில் ஏற்பட்ட நஷ்டத்தை நாளடைவில் அடைத்து விடலாம் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது.

(இ) 1962-63-ம் ஆண்டுக்கான கணக்குகள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எனவே, கனம் அங்கத்தினர் கேட்ட தகவலைத் தர இயலாது.

திரு. கே. டி. கோசல்ராம்: 1962-63-க்கு முன்னால் உள்ள வருஷத்தில் எவ்வளவு ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? இப்போது கிராமாந்தர கூட்டுறவு சங்கங்களிலிருந்து அவர்களுக்கு சரியான முறையில் பால் கிடைக்கவில்லை என்றும் அந்தப் பாலை வாங்க முடியாத நிலையிலும் இருக்கிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: கிராமாந்தரங்களிலிருந்து முடிந்த வரையில் கிடைக்கும் பாலை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் சொன்னது போல இந்த நிலையம் புதிதாக பால் பதன நிலையம் ஏற்பட்ட பிறகு எடுத்தும் கொண்டிருக்கிறோம். நஷ்டத்தைப் பொறுத்த வரையில் வரக் கூடிய காலத்தில் நஷ்டம் இருக்கமுடியாது என்று எண்ணுகிறோம். கேட்ட ஆண்டில் எவ்வளவு நஷ்டம் இருந்தது என்பது பற்றிய கணக்கு இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கே. டி. கோசல்ராம்: இந்த கூட்டுறவு சொஸைட்டிக்கு எஸ்டிமேட்ஸ் கமிட்டி அங்கத்தினர்கள் விஜயம் செய்தபோது வருஷத்திற்கு 60,000 ரூபாய் நஷ்டம் இருப்பதாகச் சொல்லப் பட்டது. இம்மாதிரி நஷ்டத்தை சரி செய்வதற்காக எந்த விதத் திட்டமும் இப்போதைய நிலையில் இல்லாததால் இந்தக் கூட்டுறவு சங்கத்தை நமது மாதவரம் ப்ராஜெக்டுடன் சேர்க்க அரசாங்கம் சிந்திக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இது மாதவரத்தைப் பற்றித்தான். மாதவரத்தைப் பற்றித்தான் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறேன் . . . .

திரு. கே. டி. கோசல்ராம்: நான் ஐயனாவரம் சொஸைடியைப் பற்றி என்று நினைத்துவிட்டேன்.

சேலம் கூட்டுறவு மத்திய பாங்க்

* 344 **கேள்வி—திரு. ம. கமலநாதன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதியில் 44-ம் என் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி சேலத்தில் இருக்கும் சேலம் மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் இப்போது எந்த நிலையிலுள்ளது?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இந்த திட்டத்தை சர்க்கார் தற்காலிகமாக ஒத்திப் போட்டிருக்கிறார்கள்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஒத்திப் போட்ட காரணத்தை அறியலாமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: ஜில்லாவை இரண்டாகப் பிரித்ததற்குப் பிறகுதான் இந்த யோசனை.

Houses for Harijans

* 315 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to give up the construction of houses for Harijans and other Scheduled Communities; and

(b) if so, what are the alternative schemes for providing houses for them?

THE HON. SRI P. KAKKAN: (a) No.

(b) Does not arise. It may however be stated that the Director of Harijan Welfare submitted proposals for integrating the Rural Housing Scheme of the Co-operative Department with the Harijan Housing Scheme with a view to enable the Harijan to join the Housing Co-operative Societies and to build fairly durable houses at a cost of Rs. 2,500 each. It was decided to take up this question after the present National Emergency is over.

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை. எனினும் ஹரிஜனங்கள் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து வீடு ஒன்று ரூ. 2,500 செலவில் நல்ல வீடுகளைக் கட்டிக்கொள்ள வசதி செய்யும்

MR. SPEAKER: A question cannot be based on a Newspaper report.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவதுபோல் எந்தவிதமான தகவலும் என்னிடம் இல்லை.

Consumers' Co-operative Societies

* 352 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to open Consumer Co-operatives for Plantation and Industrial Workers; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (*a*) & (*b*) Government have sanctioned a scheme for the organisation of Consumers' Co-operative Stores for the industrial workers in this State with the co-operation of the employers. For the present, Stores will be organised in industrial establishments and plantations employing two hundred and fifty (250) or more workers. About one hundred and fifty (150) stores will be organised—one hundred (100) for industrial establishments and fifty (50) for plantations.

According to this Scheme the management concerned will give to each Store a contribution of Rupees two thousand and five hundred (Rs. 2,500) towards share capital, an interest-free loan of Rupees ten thousand (Rs. 10,000) towards Working Capital and a monthly subsidy of Rupees two hundred (Rs. 200) towards establishment charges.

The District Co-operative Supply and Marketing Societies to which the Stores will be affiliated, will make bulk purchases on behalf of the Stores and supply their requirements.

திரு. மு. பொ. வடிவேல்: புதியதாக பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் திறக்கக்கூடாது என்று துணைப் பதிவாளருக்கு ஏதேனும் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: புதியதாகத் திறக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் திட்டமே தவிர, கூடாது என்று யாருக்கும் உத்தரவு அனுப்பப்படவில்லை.

Erskine Hospital

* 353 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether some patients were affected due to administration of sub-standard medicines in the Erskine Hospital at Madurai during March 1963;

(*b*) if so, the details thereof;

(*c*) whether the Government have taken action against the firm which supplied those medicines; and

(*d*) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) No.

(*b*) to (*d*) Do not arise.

MR. SPEAKER: Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF ORDER

WALK-OUT BY SOME OPPOSITION MEMBERS AFTER SPEAKER'S RULING —*cont.*

MR. SPEAKER: Hon. Members are aware of the point of order raised by the Hon. Leader of the House yesterday. The point raised was whether the walk-out staged by some Opposition Members after the Speaker had given his ruling on an adjournment motion was not tantamount to showing disrespect to the Chair and set up a bad precedent. The ruling was reserved.

Walk-out has been recognised in India as a form of Parliamentary protest. Walk-out is of various kinds. Members may walk-out silently without making any statement. They may walk-out protesting against the attitude of the Government on a certain matter or against the ruling given by the Speaker. We are now concerned with the walk-out as a protest against the ruling of the Speaker. Speaker is the custodian of the privileges of the House and also represents the dignity of the House. When he gives a ruling it must be obeyed and it should not be protested. Even if the ruling of the Speaker is wrong, the Members should obey the ruling. If they are not pleased with the ruling, they can adopt other methods prescribed in the rules. No question of protest will, therefore, arise on the Speaker's ruling. A walk-out in protest against the Speaker's ruling is surely an unbecoming way of making a protest. In the present case the walk-out was staged immediately after the Speaker gave his ruling on the adjournment motion raised by Sri V. R. Nedunchezhiyan and three others. The Leader of the Opposition stated among other things that an opportunity to discuss the matter was denied and as a protest, he was walking out. As the Speaker did not give his consent there was no opportunity to discuss the matter. So, the protest could be construed only as a protest against the ruling of the Speaker.

But yesterday, the Leader of the Opposition stated that the protest was against the attitude of the Government and not aimed at the Speaker's ruling. I accept the clarification. I am also glad that Leaders of all parties have accepted that walk-outs against the Speaker's ruling are not in order and I hope and trust that

this will be followed in future and a good precedent set up. After the explanation of the Leader of the Opposition, there is nothing left for me to give a ruling.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸ்பீக்கர்ஸ் ரூலிங்கை 'அப்ரிஷியேட்' பண்ணலாமா, பண்ணக்கூடாதா?

கனம் சபாநாயகர்: சும்மாயிருந்தால் போதும்.

III.—CALLING ATTENTION TO ARREARS OF LAND REVENUE IN THE SIVAGANGA ZAMIN AREA

* **திரு. செ. மாதவன்:** கனம் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை ஜமீன் பிராந்தியத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டு அதற்குப் பின் செட்டில்மெண்டு செய்து நிலத்தின் தரத்தை நிர்ணயித்த காலம் வரை இந்த இடையிட்ட பசலிகளில் விவசாயிகளிடமிருந்து உயர்தர ரயத்துவாரி வரி விகிதத்தில் விதித்ததினால் வரிபாக்கி அதிகமாகச் சேர்ந்துக்கொண்டு வந்தது. செட்டில்மெண்டுபடி நிலவரி குறைந்துவிட்டது. அதிகபட்சம் வரி போட்டதினால் ஏற்பட்ட பாக்கிகளை விவசாயிகள் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இதை நிவர்த்திக்க செட்டில்மெண்டில் நிர்ணயிக்கப்பட்ட நிலவரியையே அரசாங்கம் அந்த கிராமங்களை எடுத்துக்கொண்ட தேதியிலிருந்து கிராம மக்களிடம் வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்னும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, before 1947, the rates of rent prevailing in estate areas in the Madras State were abnormally high when compared to the rates of assessment prevailing in the adjoining ryotwari areas. As a preliminary measure to the abolition of the Zamindari system, the Government decided to scale down the high rates of rent in the estate areas approximately to the level of those prevailing in the adjoining ryotwari areas. With a view to achieve this object on a rough and ready method, the Government enacted the Madras Estates Land (Reduction of Rent) Act, 1947. Under this Act, the rents levied by the landholder were scaled down to bring them in line with the Government assessment collected in the adjoining ryotwari villages. The rates of reduced rent thus determined were not based on any detailed classification of soils and irrigation sources. In cases where rents were payable in grain, the reduced rent was also specified in terms of grain. But, where the commuted cash value of the reduced rate of grain rent exceeded the highest ryotwari assessment payable on lands of the same class in the district, the latter (i.e. the highest ryotwari rate of assessment of the district) was fixed as reduced rent payable. Subsequently, the Government considered that even this highest rate of assessment of the district was a hardship. They, therefore, decided that in such cases, the highest rate of assessment on ryotwari lands of the same description in the taluk in which the land in question was situated should

be fixed as the reduced rate of rent. Thus, all efforts were made to see that the ryots in the estate areas paid assessment approximately at the level prevailing in the adjoining areas. But, these rates are subject to revision at the time of settlement during which the rates are fixed on a scientific basis taking into consideration soil classification and nature of irrigation sources. Sometimes, the rates fixed under the Rent Reduction Act may be higher than the settlement rates and in some cases they may be even lower. Under the Scheme of the Madras Estates Abolition Act, after the estates are taken over and till settlement is introduced, the land revenue collectable is at the reduced rates fixed under the Rent Reduction Act.

The hon. Member has made the following assertion :—

(1) In the whole of the Sivaganga zamin area, the land revenue payable under section 23 of the Estates Abolition Act was fixed at the highest ryotwari rate;

(2) as a result of this, large arrears of land revenue under section 23 have accumulated and the ryots are not able to pay them; and

(3) the rates of land revenue fixed at settlement and collected from the fasli in which settlement was introduced, are much lower than the section 23 assessment.

He has also requested that the land revenue should be collected at the settlement rates with effect from the notified date.

The Rent Reduction Act was introduced in Sivaganga Zamindari with effect from fasli 1357 (1947-48). This estate was taken over under the Estates Abolition Act on 7—9—1949. Before this estate was taken over, there were both cash and grain rents prevailing in this area. Under the provisions of the Rent Reduction Act, the rates of rent were scaled down approximately to the level of the assessments prevailing in the adjoining ryotwari areas. In cases, where grain rent was prevailing, the reduced rates were also fixed in terms of grain. But, where the commuted cash value of the reduced grain rent exceeded the highest rate of the ryotwari assessment payable on similar lands in the *district*, the highest ryotwari rate of the district was fixed as reduced rent. As already stated by me earlier, even this highest ryotwari rate of the *district* was further scaled down to the highest ryotwari rate of the *taluk* in which the lands were situated. Thus, it will be observed that, in grain rent cases, the rates were reduced thrice, i.e., firstly proportionate fraction, secondly the highest ryotwari rate of the *district*, and thirdly to the highest ryotwari rate of the *taluk*. Only these rates were collected as land revenue under section 23 of the Madras Estates Abolition Act till settlement was introduced on a scientific basis.

Settlement was introduced in various portions of the Sivaganga estate in three stages, i.e., in fasli 1367 in Aruppukottai, Paramakudi and Sivaganga taluks and in fasli 1368 in Tiruvadanai taluk

[Sri S. M. A. Majid] [20th November 1963

Now that the bye-elections to the Parliament and State Legislatures are being held, it is considered that the ordinary elections to the City Corporation and the Municipal Councils may also be held now.

The present strength of the Municipal Councils has been notified by the Government under section 7 of the Madras District Municipalities Act, 1920, with reference to the population according to the 1951 census. Final population figures according to the 1961 census of Municipalities are now available, but it will take some time to refix the strength of the Municipal Councils with reference to the 1961 census figures of population. The strength already fixed may have to be increased in several cases and if they are increased, the wards will have to be revised. This will take a long time to be done after observing the formalities prescribed in the Act. As it is not desirable to postpone the elections further, it is proposed to conduct the elections on the basis of the existing strength and wards. It is proposed to take power to specify by notification the date on which the term of the Councillors of any municipal authority as a whole which has been extended by section 3 of the Extension of Term of Office Act shall expire and also the date on which the newly elected Councillors may come into office. It is also proposed to take power to extend or reduce the term of office of the newly elected Members by such period to be specified not exceeding one year in the aggregate.

The Bill now before the House provides for all the above formalities.

I, therefore, move that the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963, be taken into consideration.

Mr. SPEAKER: Motion moved—

'That the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963, be taken into consideration.'

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய ஆட்சேபணையின் பலன் எதுவாக இருந்தாலும் சரி, அங்கத்தினர்களுடைய கருத்துக்களை இந்த சபையின் முதல்வர் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். இன்றைய நிகழ்ச்சிக் குறிப்பில் கடைசியில்தான் இந்த மசோதா சேர்க்கப்பட்டிருக்கிறது. அர்பன் லாண்டு டாக்ஸ் மசோதா நிறைவேறின பிறகு, பெட்டர்மென்ட் லெவி டாக்ஸ் மசோதா எடுத்துக் கொள்ளப்படுமென்று நினைத்தோம்.

Mr. SPEAKER: I made it clear.

Sri M. KALYANASUNDARAM: I did not object to it.

20th November 1963]

Mr. SPEAKER: The point is this. If there is any matter coming as the last item in the agenda and if it is to be taken up earlier . . . . 10-30 a.m.

Sri M. KALYANASUNDARAM: The House has got powers to do so.

Mr. SPEAKER: It must be brought to the House by means of a motion and that motion must be carried first. Is it not?

Sri M. KALYANASUNDARAM: Yes.

Mr. SPEAKER: If anybody had raised an objection, then I would not have put the motion to the vote of the House. That motion had been put to vote and carried. Therefore that matter is over. Even assuming that some of our hon. Members were not aware of what was going on here, the motion had been gone through. We have passed the motion and we have now taken up the Bill.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இப்பொழுது அது நிறைவேற்றி இருக்கக்கூடாது என்று சொல்வதானல் அதையே ரீ-ஓபன் பண்ண வேண்டுமென்று வரதாயிருக்கலாம். நான் அப்பொழுதே சொல்லியிருக்க வேண்டும். இரண்டு செகண்டுகள் மிஸ் பண்ணி விட்டேன் . . . .

Mr. SPEAKER: The hon. Member had shown his protest also.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒத்துக்கொள்ளுகிறேன். காலையில் இங்கே அதிகாரிகளைப் பார்த்து உடனேயே சந்தேகப்பட்டேன். ஆனால் அவர்கள் தவறுதலாக வந்து இருக்கலாம் என்று நினைத்தேன். கடைசியில் எடுத்தது தான்தான். அது போகட்டும். ஆனல் அமென்டுமென்டுகள் கொடுக்கவாவது அனுமதி கொடுக்க வேண்டும்.

Mr. SPEAKER: Officers are expected to be here whenever items relating to their department are in the agenda.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இப்பொழுது அமென்ட்மென்டுகளை ஓரலாக மூவ் செய்ய அனுமதி கொடுக்கவேண்டும். இந்த மசோதா நாளைக்கோ அல்லது மற்ற நாளோதான் வரும். அர்பன் லாண்ட் டாக்ஸ் பில்லுக்குப் பிறகுதான் இது எடுக்கப்படும் என்று இருந்தோம். யாராவது அமென்ட்மென்ட் கொடுத்திருக்கிறார்களா? ஒருவரும் கொடுக்கவில்லை. இது முக்கியமான தேர்தல் பற்றிய விஷயம் . . .

Mr. SPEAKER: It is not correct to say that no amendments have been given. Amendments have been given. The hon. Member Sri V. Krishnamoorthi has given notice of a number of amendments. If the hon. Member has not given notice of amendments it is nobody's fault.

பொருட்டுக் கூட்டுறவுத் துறையின் கிராம வீட்டு வசதித் திட்டத்தையும் ஹரிஜன நலத்துறையின் வீட்டு வசதித் திட்டத்தையும் ஒன்றாகச் சேர்த்து நிறைவேற்றுவதற்கான திட்டங்களை ஹரிஜன நலத்துறை டைரக்டர் அனுப்பியுள்ளார். தற்போதைய தேசிய நெருக்கடி நிலை தீர்ந்த பிறகு இப்பிரச்சனையை எடுத்துக்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: 2,500 ரூபாய் வரைக்கும் கொடுக்கக்கூடிய தொகையில் எந்த அளவுக்குக் கடன், எந்த அளவுக்கு மான்யம்? ஹரிஜனங்கள் பெரும்பாலானவர்கள் 2,500 ரூபாய் கொடுக்க முடியாத காரணத்தினால் இது கடனாகக் கொடுக்கப்படுமா அல்லது மான்யமாகக் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: ஷேர் காப்பிட்டலைப் பொறுத்த வரையில் பாதியை கடனாக அரசாங்கம் கொடுக்கும். பாதியை அவர்களே போடவேண்டும்.

தமிழாசிரியர்கள் (உயர் துவக்கப் பள்ளிகள்)

* 346 கேள்வி—திரு. முனு. ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களைச் சார்ந்த உயர் துவக்கப்பள்ளிகளில் கட்டாயமாக வித்துவான் அல்லது புலவர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக்கொண்டே தமிழ் போதிக்கச் செய்தல் வேண்டும் என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதா? விவரமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எல்லா வகையான நிர்வாகங்களிலும் உள்ள உயர் துவக்கப் பள்ளிகளில் VI, VII, VIII ஸ்டாண்டர்டுகளில், மொத்தமாகப் பார்க்கும்போது நான்கு பிரிவுகள் அல்லது அதற்குமேல் இருந்தால், தமிழ்ப் பண்டிதர்களைக் கொண்டே தமிழ் கற்பிக்க வேண்டுமென அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

The Government have ordered that in higher elementary schools under all kinds of managements, having four or more sections in standards VI to VIII taken together, Tamil should be taught only by a Tamil Pandit.

திரு. முனு. ஆதி: தலைவர் அவர்களே, சில உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களையே வைத்துக் கொண்டு நடத்துகிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறதா? அப்படியானால் அதன் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்பு அவ்வாறு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இருந்தார்கள். ஆனால் இப்போது நான் கூறிய விடையின்படி, 4 பிரிவுகளுக்கு மேல் இருந்தால் தமிழ்ப் பண்டிதர் வைக்கவேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

திரு. மா. இராசாங்கம்: கேரள மாநிலத்தில் தமிழ் உபாத்தியாயர்கள் கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அவர்களை இங்கிருந்து அனுப்பி வைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தமிழ் ஆசிரியர்களை நாம் கட்டாயப்படுத்தி அனுப்ப முடியாது. அவர்களாகப் போகத் தயாராக இருக்கவேண்டும்.

Working of Forest Department in Tirunelveli district

* 347 Q.—SRI R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any contract was given for the extraction and transportation of timber from Survey Nos. 2693/2 and 2691/2 of Darsanamcope village in Azhagiapandiapuram range of Tirunelveli South Division;

(b) if so, the rate of contract and the extent of profit derived by the Government; and

(c) whether there has been delay or loss in the work and if so who was responsible for it?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) Yes. An agreement was executed by one, Sri P. Mani Raj, Rajapalayam, for extraction and transport of 4,609 trees (61,100 c.ft.) (Royal trees) from the Survey numbers in question.

(b) & (c) The rate for the extraction and transport of timber is Rs. 0.95 per cubic foot. The contractor could not continue the work of extraction and transport of timber as per agreement executed by him because the whole matter is now pending before the High Court, Madras.

SRI R. PONNAPPA NADAR: Will the Government take steps to expedite the case?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: ஹைகோர்ட்டில் செய்த முடிவின் மீது அப்பீலுக்குப் போக இருக்கிறோம். ஆகையால் இப்போது அது முடியாது.

ஷெட்யூல் வகுப்பினருக்கான மாவட்டக் கமிட்டிகள்

*348 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஷெட்யூல்டு வகுப்பினர்களின் குறைகளைக் கவனிக்க மாவட்ட கமிட்டிகளை நியமிக்கும்படி மாநில சர்க்காரை மத்திய சர்க்கார் உத்தரவிட்டுள்ளார்களா?

(இ) அப்படியானால், மாநில சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இது தேர்தல் சம்பந்தமானது. இதில் அங்கத்தினர்களுக்கு வேண்டிய அவகாசம் கொடுக்காமல் செய்வது சரியாகாது. முன்னதாகவே கட்சித் தலைவர்களையாவது கலந்து கொண்டு இருக்க வேண்டும்.

MR. SPEAKER : We have gone through a process. The hon. Member himself had admitted that he had been a little inattentive.

திரு. மீ. கலியாணசுந்தரம் : All right, we shall proceed. இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். தேர்தல் நடத்தக்கூடாது, தேர்தல் வேண்டாம் என்று கூறவில்லை. சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்பதற்காக எதிர்க்கவில்லை. மசோதாவை நோக்கத்தின் அடிப்படையில் எதிர்க்கிறேன். பழைய ஜனத்தொகை அடிப்படையில், பழைய வார்டு பிரிவுகள் அடிப்படையில் நடத்த வேண்டும் என்று சொல்வதை ஆட்சேபிக்கிறேன். தேர்தல்களை ஒத்திப் போட வேண்டும் என்பது நோக்கம் அல்ல. திருத்தங்களை துரிதமாகச் செய்து அப்படி திருத்திய அடிப்படையில் சற்று காலதாமதம் ஆனாலும் தேர்தல்களை நடத்தலாம். 1951-ம் வருட ஜனத்தொகை அடிப்படையில் வார்டுகள் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. இன்றைக்கு இருக்கும் நிலையில் ஏற்றத் தாழ்வுகள் அதிகமாக இருக்கின்றன. ஒவ்வொரு வார்டுகளில் 400, 500 ஓட்டுகளும் மற்றவைகளில் பல ஆயிரக்கணக்காகவும் இப்படி மூன்று மடங்கு, நான்கு மடங்கு ஏற்றத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களிலும் பழைய கௌன்சிலர்களின் எண்ணிக்கையே இருக்கிறது. சென்னை நகரத்தில் 100 டிவிஷன்களாக ஆக்கி சட்டம் கொண்டு வந்தோம். அதே மாதிரி நகரசபைகளின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவது பற்றி வாக்குறுதி கொடுத்து, ஒயிட் பேப்பர் வெளியிட்டு விவாதித்த பிறகு இன்றைக்கு தேர்தல்களை பழைய அடிப்படையிலேயே செய்வோம் என்று திருத்தம் கொண்டு வரக் காரணம் என்ன? இந்த அவசரத்திற்கு என்ன காரணம் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. திருத்தியமைக்க இன்னும் ஒரு வருஷ காலம் ஆகும் என்றாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. சாதாரணமாக புதிய நகரசபைகள் நவம்பர் 1-ந் தேதி வரவேண்டும். ஆகவே இன்றிலிருந்து துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால், அடுத்த செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் தேர்தல் வைத்துக் கொள்ளலாம். ஒரு வருஷ அவகாசம் கொடுக்கலாம். அவசரப்பட்டு அதிகாரத்தை எடுத்துக் கொண்டு தேர்தலை நடத்தியாக வேண்டும் என்பதற்காக விளக்கத்தை அமைச்சர் அவர்களும் தம் உரையில் சொல்லவில்லை.

இதனால் வரக்கூடிய இன்னொரு விளைவையும் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு பழைய அடிப்படையில் தேர்தல் நடத்துகிறோம். அதன் பிரகாரம் தேர்ந்து எடுக்கப்பட்ட சபைகள் தொடர்ந்து மூன்று வருஷத்திற்கு நீடிக்கும். 1967-வது வருஷத்தில் தான் அடுத்த தேர்தல். 1951-வது வருஷ ஜனத்தொகை அடிப்

படையில் நிறுவப்படும் சபைகள் சரியான பிரதிநிதித்துவம் அற்ற சபைகளாக இருக்கும். இப்பொழுதே நகர அபிவிருத்தி தடைப்பட்டிருக்கிறது. கிராமங்கள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. ஆனால், நகர முன்னேற்றம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது கிட்டத்தட்ட 60 நகரங்கள் சம்பந்தப்பட்ட இந்த முக்கியமான பிரச்னையை அவசரப்பட்டு செய்யக்கூடாது என்று இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்.

*திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த திருத்தம் அடுத்த ஆண்டு முதல் நகர மன்றங்களுக்கு தேர்தல் நடத்த அதிகாரம் கோருகிற திருத்தமாக இருக்கிறது. இது அவசரகால பிரகடனத்தை உத்தேசித்து தள்ளிப்போடப்பட்டு இருக்கிறது என்று முன்னே சொன்னார்கள். அப்படிச் சொன்னாலும் பார்லிமெண்டிற்கும் வேறு சட்ட மன்றங்களுக்கும் உப தேர்தல்கள் தள்ளிப்போடப்படவில்லை. நம் மாநிலத்தைப் பொறுத்தமட்டில் திருவண்ணாமலை, நாங்குநேரி, போடி முதலிய இடங்களிலெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. அதே போல வட மாநிலங்களிலும் அம்ரோஹா, பருகாபாத் முதலிய இடங்களில் இடைத் தேர்தல்கள் நடந்தன. கடந்த நிதி நிலை அறிக்கை விவாதத்தின்போது அமைச்சர் அவர்களை இந்த நகரசபைத் தேர்தல்கள் எப்பொழுது நடக்கும் என்று கேட்டபோது நம் நகர சபை அமைச்சர் அவர்கள், அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள்.

கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாக எதைச் சொன்னாலும் பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லுவதும், அப்புறம் திடீரென்று இப்போது கொண்டுவந்துள்ள மசோதாவைப் போலக் கொண்டு வந்து செய்வதும் சரியானதாக இருக்காது. குறிப்பாக இந்த மசோதாவைப் பற்றியே நான் உங்களுக்கு ஒரு விஷயத்தை நினைவுபடுத்திச் சொல்ல விரும்புகிறேன். அந்த மார்ச் மாத சட்டசபைத் தொடரில் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல் சம்பந்தமாகக் கேள்வி கேட்ட நேரத்திலே கனம் மந்திரி அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தச் சமயம் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற திரு. பக்தவத்சலம் அவர்கள் குறுக்கிட்டு, "நாங்கள் இந்த வார்டுகளை எல்லாம் திருத்தி அமைக்கப் போகிறோம். இப்போதுள்ள மக்கள் தொகைப்படி. அதனால் தான் இது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்" என்று சொன்னார்கள். இப்படி அவர்கள் சொல்லி ஆறு மாதம் ஆகிறது. இப்போதுள்ள ஜன சங்கியைப்படி வார்டுகளைத் திருத்தி அமைப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளாமல் 1951-ஆம் ஆண்டு இருந்த மக்கள் தொகைப்படி இப்போது தேர்தலை இரண்டு மாதத்தில் நடத்துவதற்கு ஒரு மசோதா கொண்டு வருகிறோம் என்றால் இந்த விசித்திரப் போக்குக்கு என்ன பெயரிட்டு அழைப்பது என்று தெரியாமல் நான் இருக்கிறேன்.

காரணத்தால்தான் வார்டுகளைப் பிரிக்காமலே அரசாங்கம் தேர்தலை நடத்த முன்வந்திருக்கிறது என்று பொதுமக்கள் சந்தேகிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பழைய காலத்தில் நாடக நோட்டீஸில் 'ஆட்ட காலத்தை அனுசரித்து மானேஜர் இஷ்டம் போல் புரோகிராம் மாற்றப்படும்' என்று போடுவார்கள். அதே போன்று அரசாங்கத்துக்கு இங்கே மெஜாரிட்டி பலம் இருக்கின்ற காரணத்தால் இந்த மாதிரி உரிமையைப் பாதிக்கக்கூடிய மசோதாக்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். இதனால் பிரஜா உரிமை பாதிக்கப்படுகிறது. நாம் விரைவில் தேர்தலை நடத்த வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பாதிக்கப்படுகிறவர்கள் தங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்று வழக்கு மன்றங்களில் ரிட் பெட்டிஷன் போட்டால் தேர்தலை விரைவில் நடத்தக்கூடிய சூழ்நிலை பாதிக்கப்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். ஆகவே அரசாங்கம் மீண்டும் புனராலோசனை செய்து, தற்போதைய ஜனத்தொகைப் பிரகாரம் வார்டுகளை விரைவில் பிரித்து தேர்தல்களை நடத்தவேண்டுமென்று கூறி, இந்த மசோதாவை எதிர்க்கிறேன் என்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். சம்பங்கி:** மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதா, எங்கள் கட்சி உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியது போல் உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது. எங்களுடைய நோக்கம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நோக்கம் விரைவில் தேர்தலை நடத்த வேண்டுமென்பதுதான். ஆயினும் 1951-வது வருஷத்திலிருந்து கடந்த 10 ஆண்டுகளில் ஜனத்தொகை உயர்ந்திருப்பதன் காரணமாக அதற்குத் தக்கபடி வார்டுகள் பிரிக்கப்பட்டு நகர மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தி இருக்கவேண்டும். அதைச் செய்யாது பழைய ஜனத்தொகைக் கணக்குப்படியே இன்று தேர்தல் நடத்தவேண்டுமென்று சொல்வது மக்களுடைய ஜீவாதார உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது. நான் சார்ந்திருக்கின்ற ஆம்பூர் நகர மன்றத்தினர், ஓவர் ஹெட் டாங்கைக் கவனித்துக் கொள்ள 35 ரூபாய்க்கு ஒருவரை வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக சர்க்காரிடத்தில் அனுமதி கேட்டிருந்தது. அவசர நிலைமைக் காரணத்தைக் காட்டி அரசாங்கம் அதனை நிராகரித்துவிட்டது. நண்பர் மதியழகன் குறிப்பிட்டது போல் முன்பு தேர்தலை நடத்த அவசர நிலைமையைக் காரணமாகக் காட்டினார்கள். (மணி அடிக்கப்பட்டது.)

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை வரவேற்கமுடியாமல் இருப்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டிலேயே உள்ளாட்சி மன்றங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும், முனிசிபாலிடிகளுக்கும் நடைபெற இருந்த தேர்தலை ஒத்தி வைக்கவேண்டு

மென்பதாக எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்துகொண்டு அரசாங்கத் தரப்பிலிருந்து சட்டம் கொண்டு வரப்பட்டது. எமர்ஜென்சி காரணமாக, யுத்தம் காரணமாக தேர்தலை ஒத்தி வைக்கவேண்டுமென்று சட்டம் இருக்கிறதே தவிர, முனிசிபாலிடிகள், மற்ற இடங்களில் வார்டுகளைப் பிரிக்கக்கூடாது, அரசாங்க சிப்பந்திகளாக இருக்கிறவர்கள் இந்த வேலைகளை மேற்கொள்ளக்கூடாது என்ற விதி அதிலே இல்லை. தேர்தல் விரைவில் நடைபெற வேண்டுமென்பதை நாங்கள் ஆதரிக்கின்றபோதிலும், அவசர கோலத்தில் அன்றித் தெரிவித்தாற் போன்று 1951-ம் ஆண்டு ஜனத்தொகை விகிதத்தின் அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறவேண்டுமென்று அரசாங்கம் சொல்வதன் நோக்கம் என்ன என்று உங்கள் மூலமாக அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன்.

பல உப-தேர்தல்களின் முடிவுகளும், திருச்செங்கோடுகளும், திருவண்ணாமலைகளும்தான் அமைச்சரவைக்கு இந்த ஒரு 11-00 a.m. எழுச்சியை உண்டு பண்ணியதோ என்று கேட்க நான் விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கவுன்சிலர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தலைவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மற்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் 144 தடை உத்தரவு பிறப்பித்துகொண்டு வரப்படுகிறது. இந்த சமயம் பார்த்துத்தான் பொது தேர்தல் வருகிறது இந்த சமயம் பார்த்துத்தான் முனிசிபல் தேர்தல்கள், நகரசபைத் தேர்தல்கள் நடக்கவேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தில்தான். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களை கைது செய்து உள்ளே வைத்து விட்டு தேர்தல் நடத்தவேண்டும், அதுவும் அவசர அவசரமாக இருக்கிற வார்டுகளில் தேர்தலை நடத்தவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. 1950-ம் ஆண்டு முறைப்படி இப்போது எதற்காக நடைபெற வேண்டும்? 1964-ல் நடைபெறப் போகிற தேர்தலை 1950-ம் ஆண்டு ஜனத்தொகை விகிதத்தில் எதற்காக நடத்தவேண்டும்? கனம் அமைச்சர் அவர்கள் பன்முறை இந்த மன்றத்தில் கூறியிருக்கிறார்கள். டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடி ஆக்டை நாங்கள் மாற்றி யமைக்கிறோம். அந்தச் சட்டத்தை திருத்துகிற வேலை சட்டத் துறையினரிடம் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொல்கிறார்கள். நான் தங்கள் மூலம் அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். திருத்தியமைக்கப் போகிற சட்டத்தை ஏன் இதுவரையில் வெளியில் கொண்டு வரவில்லை? எவ்வளவு ஆண்டு காலத்திற்கு அது இன்னும் தாமதமாகும். சட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பிறகு இப்படி ஒரு தேர்தல் நடத்தியிருந்தால் கூட அதை நாங்கள் வரவேற்றிருக்க முடியும். ஒரு தேர்தலை நடத்தி விட்டு அத்தேர்தலில் கவுன்சிலர்கள், முனிசிபல் அங்கத்தினர்கள் இவர்களெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு புதிய ஒரு சட்டத்தைக் கொண்டு போய் அவர்கள் தலையில் கட்டத்தான்

and in fasli 1368-69 in Tirupattur taluk. Prior to rent reduction, the demand in Sivaganga estate was 39.40 lakhs. After rent reduction, the demand was only 18.31 lakhs. There was thus a decrease of 54 per cent as a result of rent reduction. After settlement was introduced, the demand in this area was only 13.18 lakhs. It will be seen that the net demand was again decreased consequent on introduction of settlement. When compared to the rates prevailing before the estate was taken over, the rates fixed under Rent Reduction Act were certainly more favourable to the ryots. At the settlement, these rates have been further reduced. It is not everywhere that the settlement rates are lower than the section 23 rates. There are many areas where they are higher. The Government do not propose to collect higher rates fixed at the settlement in such cases also.

If the settlement rates are to be collected with retrospective effect from the notified date, it would cause a great deal of administrative difficulty in revising the collection accounts, apart from the inconvenience caused to the ryots who were paying at lower rates before settlement. Such a revision is, therefore, uncalled for.

IV.—GOVERNMENT MOTION

(1) CHANGE IN THE ORDER OF BUSINESS

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, the Minister for Local Administration has to move a Bill under Item III but he has to participate in a conference of Municipal Chairmen. Therefore, I move—

'That Item III (4)—The Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963, under 'Government Bills' in to-day's Agenda be taken up immediately before Item II.'

MR. SPEAKER : The question is—

'That Item III (4)—The Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963, under 'Government Bills' in to-day's Agenda be taken up immediately before Item II'.

The motion was put and carried.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த மாதிரி திடீரென்று அஜென்டாவை மாற்றும்பொழுது, கட்சித் தலைவர்களையாவது கலந்து கொண்டு செய்திருந்தால் நன்றாக இருக்கும். இன்று அர்பன் லாண்டு டாக்ஸ் மசோதாவின் மீது விவாதம் நடைபெறும் என்று எதிர்பார்த்துத்தான் நாங்கள் எல்லோரும் வந்திருக்கிறோம். நேற்று முந்தைய நாள் பிசினஸ் அட்வைசரி கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அஜென்டாவிற்குத் தகுந்தபடி நாங்கள் தயார் செய்து கொண்டு வரவேண்டியிருக்கிறது. அர்பன் லாண்டு டாக்ஸ் மசோதாவிற்குப் பிறகு பெட்டர்மெண்ட் லெவி மசோதா

வர இருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மசோதா நாளையோ அல்லது அதற்கு அடுத்த நாளோ வருமென்று நினைத்தோம். இது ஒரு முக்கியமான மசோதா. அவசரப்பட்டு பாஸ் பண்ண வேண்டிய அவசியமில்லை. நோட்டீஸ் கொடுக்காமல், அஜென்டாவை மாற்றுவது சரியாகுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்றைக்கு அஜென்டாவில் போடப்பட்டிருக்கிறது. அதனால் இன்றைக்கு வரக் கூடுமென்று கனம் அங்கத்தினர்கள் எதிர்பார்த்திருக்கலாம். கேள்வி நேரமே 25 நிமிஷம் அதிகமாகப் போய்விட்டது. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் வேறு ஒரு கூட்டத்திற்குப் போக வேண்டியிருப்பதால், முதலிலே இந்த மசோதாவை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பிரேரேபித்தேன்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் உடனேயே ஆட்சேபணையைத் தெரிவித்திருக்கலாம். கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த பிரேரணை வோட்டுக்கு விடப்பட்டு, சபை ஏற்றுக்கொண்டு விட்டது. இனிமேல் அதைப் பற்றிப் பேசி என்ன பிரயோசனம் ?

திரு. மீ. கலியாணசுந்தரம் : சபையிலே எவ்வளவோ அங்கத்தினர்கள் இருக்கிறார்களே, யாராவது இதை எழுப்புவார்களா என்று எதிர்பார்த்தேன்.

கனம் சபாநாயகர் : விஷயம் முடிந்த பிறகு எழுந்திருந்து பேசுவதில் என்ன பிரயோசனம் ?

The hon. Member should have raised it immediately.

Now, the Hon. Minister for Local Administration can move the Bill.

V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS MUNICIPAL AUTHORITIES (TERM OF OFFICE AND ELECTION OF COUNCILLORS) BILL, 1963.

THE HON. SRI S. M. A. MAJID : Mr. Speaker, Sir, I beg to introduce the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963 and move

'That the Bill be taken into consideration'.

Hon. Members are aware that consequent on the declaration of a state of emergency by the President on a Proclamation issued on 26th October 1962, the Election Commission, India, decided not to hold bye-elections both to the Parliament and State Legislatures. In consonance with the spirit of the steps taken by the Centre, an Act called The Madras Local Authorities (Extension of Term of Office of Members) Act, 1962 (Madras Act 12 of 1962) was enacted postponing the elections to the Local Authorities and also extending the term of office of the existing members of the Local Authorities for the period of emergency and six months thereafter.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 11th November 1963.

தான் சுட்டிக்காட்ட விரும்பினேன். இப்போது தேர்தலை ஒத்திப் போடுகிறோம், வார்டுகளைச் சரியான முறையில் பிரித்து அமைப்பதற்காக என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது என்ன சொல்வார்கள்? கனம் மதியழகன் போன்றோர்கள் தேர்தலுக்குப் பயந்துகொண்டுதான் தேர்தலை ஒத்திவைத்துவிட்டார்கள் என்று சொல்லக்கூடும். இந்த நிலையில் சர்க்காருடைய நிலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னால் ஏன் நடத்துவது என்று கேட்பது, தேர்தலை ஒத்திப்போடுவது என்று சொன்னால் எதற்காகத் தேர்தலை ஒத்திப்போடவேண்டுமென்று கேட்பது சரி ஆகாது. முன்பு தேசிய நெருக்கடி காரணமாக எப்போது தேர்தலை நடத்துவது என்பதுகூடச் சிந்தித்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஒத்திப் போடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்போது நெருக்கடி நிலை இல்லை என்று சொல்ல முடியாவிட்டாலும் கொஞ்சம் தணிந்திருப்பதால் தேர்தலை நடத்திவிடலாம் என்று அரசாங்கம் முன்வரும் போது—வார்டுகளைப் பிரித்து அமைக்காமல் நடத்த முற்படக் கூடாது என்று சொல்வது சரியானதாக ஆகாது. முன்பு அமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலேயே வார்டுகளைத் திருத்தி அமைத்த பின் தேர்தலை நடத்த இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதை மறுக்கவில்லை. இப்போதும் வார்டுகளைத் திருத்தி அமைத்த பின்புதான் தேர்தலை நடத்தவேண்டுமென்று சொன்னால் இன்னும் குறைந்தது 1½ அல்லது இரண்டு ஆண்டுகள் காத்திருக்கும்படி ஆகும். ஆகவேதான் அப்படிக் காத்திராமல் இப்போதே நடத்திவிடலாம் என்று அரசாங்கம் முன் வருகிறபோது அதை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பது சரியாகாது.

தற்போது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வரும் முனிசிபல் தேர்தல்களைக்கூட ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று செய்துவிட்டால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சட்டசபைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல்களை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்துவது போல் நகரசபைத் தேர்தல்கள், பஞ்சாயத்துத் தேர்தல்கள் ஆகியவற்றையும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று செய்துவிட்டால் ஒரே சீராக ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தக்கூடிய நிலைமை ஏற்படும். தற்போது சென்னை கார்ப்பொரேஷன் தேர்தலைப் பொறுத்தவரையில் பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்திற்குள்ளாக முடித்துவிட இருக்கிறோம். கார்ப்பொரேஷனில் மேயர் தேர்தல் இந்த மாதம் வருகிறது. இப்போது ஜாதி முறைப்படி மேயர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இப்போது தேர்ந்தெடுக்கப்படும் ஜாதியைச் சேர்ந்தவரே மார்ச் மாதத்தில் புதிய தேர்தல்கள் முடிந்த பின்னரும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுவாரா என்பது பற்றி நிச்சயமாக ஒன்றும் இல்லை.

MR. SPEAKER: That is only a convention. It is not necessary to refer to it here.

திரு. ஜே. மாதா கவுடர்: 'கன்வென்ஷன்' படி இப்போது தேர்ந்தெடுக்கும்போது அதே ஜாதியைச் சேர்ந்தவர் மூன்று மாத காலத்திற்குப் பிறகும் தேர்ந்தெடுக்கப்படுவாரா . . .

MR. SPEAKER: What has the Legislature to do with that?

திரு. ஜே. மாதா கவுடர்: கன்வென்ஷன்படி தேர்ந்தெடுப்பதை கார்ப்பொரேஷனுக்கே விட்டு விடலாமா, அல்லது இன்ன முறையில் தான் தேர்ந்தெடுக்கவேண்டுமென்பதற்குச் சட்டம் செய்ய வேண்டுமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, நல்ல முறையில் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. பொ. வடிவேல்: மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1920-ம் வருஷத்தில் இயற்றப்பட்ட ஜில்லா முனிசிபல் ஆக்டில் 7-வது ஷரத்து மிக முக்கியமானதாகும். இந்த நேரத்தில் தேர்தல் நடத்தக்கூடாது என்பதல்ல எங்களுடைய குறிக்கோள். ஏழாவது ஷரத்தின் அடிப்படையில் நகர மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையும் வார்டுகளும் பிரிக்கப்பட்டு அந்த முறையில் 43 ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. அதிலே எந்த விதமான இடைஞ்சலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இருபதாயிரம் ஜனத்தொகை வரை 16 உறுப்பினர்கள், இருபதாயிரத்திலிருந்து முப்பதாயிரம் வரை 20 உறுப்பினர்கள், முப்பதாயிரத்திலிருந்து நாற்பதாயிரம் வரை 24 உறுப்பினர்கள், நாற்பதாயிரத்திலிருந்து ஐம்பதாயிரம் வரை 28 உறுப்பினர்கள், ஐம்பதாயிரத்திலிருந்து ஒரு லட்சம் வரை 32 உறுப்பினர்கள், ஒரு லட்சத்துக்கு மேல் இருந்தால் 36 உறுப்பினர்கள் என்று 7-வது ஷரத்து கூறுகிறது. அப்படி இருக்கும்போது 1951-ம் ஆண்டு சென்ஸஸ்படிதான் இப்போது தேர்தல் நடத்தப்படுகிறது என்று சொன்னால், கடந்த பத்தாண்டுக் காலமாக ஜனத்தொகை அதிகரித்திருப்பதன் காரணமாக, 7-வது ஷரத்து இந்த மசோதாவினால் பாதிக்கப்படுகிறது என்றுதான் கூறவேண்டும். ஏற்கனவே அளிக்கப்பட்ட உரிமை பாதிக்கப்படுகிறது. மக்களுடைய பிரஜா உரிமை பாதிக்கப்படுகிறது. இது அரசியல் சட்டத்திற்குக் கூட முரணானது என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது கூட, இருக்கக்கூடிய முனிசிபல் சபைகளைக் கலைத்து விட்டு, ஸ்பெஷல் ஆபீஸர்களைப் போட்டு வார்டுகளைப் பிரிக்க ஏற்பாடு செய்து, பிப்ரவரி மாதத்தில் தேர்தலை நடத்தி விடலாம். என்னுடைய வாணியம்பாடி தொகுதியைப் பொறுத்தமட்டில் 1951-ம் வருஷ ஜனத்தொகைக் கணக்குப்படி ஜனத்தொகை 38 ஆயிரம். அப்போதைய மெம்பர்கள் எண்ணிக்கை 24. தற்போது, 1961-ம் ஆண்டுக் கணக்குப்படி ஜனத்தொகை 41 ஆயிரம். ஆகவே, இப்போது 28 சீட் வரவேண்டும். நான்கு பேர் வரக்கூடிய உரிமை இந்த மசோதாவினால் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சிக்கு மெஜாரிட்டி பலம் வராது என்ற சந்தேகம் இருக்கிற

வேண்டாமா என்று பார்க்கவேண்டும். புதிய சட்டத்தை நிறைவேற்றிய பிறகு அச்சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்தியிருந்தால் மிக நன்றாகயிருக்கும். அதைத் தவிர்த்து விட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்களையெல்லாம் கைது செய்து விட்டு ஒரு திருப்பம் ஏற்பட்டிருக்கிறது, ஆளும் கட்சிக்கு சாதகமாக நாட்டு மக்களிடையே ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்று தவறான கண்கள் கொண்டு பார்ப்பதன் காரணமாகத்தான் திடீரென்று முனிசிபல் தேர்தல்கள், கார்ப்பரேஷன் தேர்தல்கள் இவற்றை நடத்த அரசாங்கத் தரப்பில் முன்வந்திருக்கிறார்கள் என்று சந்தேகிக்கவேண்டியவனாக இருக்கிறேன். பஞ்சாயத்து தேர்தல்கள் பற்றி நான் பல அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறேன். முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் தேர்தல்களை நடத்துகிற சமயத்தில் பஞ்சாயத்து தேர்தல்களையும் ஏன் நடத்தக்கூடாது? ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு யூனியனிலும் 30, 40 பஞ்சாயத்துக்கள் இருக்கலாம். அந்த ஆபீசர்களுக்கு ஒரு உத்தரவு போட்டுவிட்டால் 1 அல்லது 1½ மாதத்திற்குள்ளாக அந்த அந்த யூனியன்களிலுள்ள பஞ்சாயத்து தேர்தல்களை அவர்கள் நடத்திவிடுவார்கள். அதில் ஒன்றும் சிரமம் இருக்காது. இந்த அரசாங்கம் ஒவ்வொரு தேர்தலாக வைத்துக் கொண்டு, கார்ப்பரேஷன் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்ப்போம், முனிசிபாலிட்டிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்ப்போம், ஊராட்சி மன்றங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்ப்போம் என்ற அரசியல் நோக்கோடுதான் இந்தச் சட்டத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர . . . .

(மணி அடிக்கப்பட்டது.)

SRI V. KRISHNAMOORTHY: One more minute, Sir.

MR. SPEAKER: I request the hon. Member to resume his seat.

SRI V. KRISHNAMOORTHY: One more minute, Sir.

MR. SPEAKER: No more time will be allowed.

SRI V. KRISHNAMOORTHY: I am very sorry, Sir.

*திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை எல்லாம் கைது செய்து விட்டு அதற்குப் பிறகு தேர்தல்களை நடத்த சர்க்கார் முயன்று வருகிறது என்று சொன்னார். அவர்களே போராட்டத்தை ஆரம்பித்து வைத்து விட்டு பின்னர் கைது செய்கிறார்களே என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. மேயர் தேர்தல் வரப் போகிறது, நகரசபைத் தேர்தல்கள் வரப்போகிறது என்று அவர்கள் அவர்களது போராட்டத்தை சிறிது ஒத்தி வைத்திருக்கலாம்.

அப்படியின்றி, போராட்டத்தை ஆரம்பித்து விட்டு எங்களை ஏன் கைது செய்திருக்கிறீர்கள், ஏன் இப்போது தேர்தல்களை வைக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஒரு கட்சிக்காக பொது விஷயம் காத்திருக்க முடியாது. தனிப்பட்ட கட்சிகள் தங்கள் விஷயங்களை வேண்டுமானால் ஒத்தி வைத்துக் கொள்ளலாம். பொதுத் தேர்தல்களை நாட்டின் எந்த ஒரு காரியத்தையும் ஒரு கட்சியின் சௌகரியத்திற்காக ஒத்தி வைத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்வது பொருந்தாது. நகரசபைத் தேர்தல் வர இருக்கிறது. பொதுவாக நகரங்களில் நடக்கும் தேர்தல்களில் இம்பர்சனேஷன் சகஜமாக இருக்கிறது. மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களில் இந்த இம்பர்சனேஷன் நடப்பதைத் தடுப்பதற்கு போதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுள்ள நடவடிக்கைகள் போதாது. இம்பர்சனேஷனைத் தடுக்க என்னென்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டுமோ அத்தனையையும் சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேர்தலுக்கு முன் நாள் இரவில் பக்கத்து கிராமங்களிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து இம்பர்ஸனேட் செய்யும் வழக்கம் நகரங்களில் இருப்பதைப் பார்க்கிறோம். அதைத் தடுப்பதற்கு போதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படவேண்டும். பின்னர், தேர்தல் அதிகாரிகள், இம்பர்சனேட் செய்யும்போது அதை சாலஞ்ச் செய்தால் பெரும்பாலும் ஆட்களை வைத்துக் கொள்வது கிடையாது. அதை லேட்டாக மதித்து, மாலை ஆனதும் விட்டு விடுகிறார்கள். ஆகவே சாலஞ்ச் செய்யப்பட்டவர்களை நிறுத்தி வைத்திருந்து அவர்களை போலீசிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அப்படி ஒரு சிலரை பிடித்துக் கொடுத்தால் இம்பர்சனேட் செய்வது ஓரளவு குறைந்து விடும். வேலை நெருக்கடி காரணமாக அப்படிப்பட்டவர்களை விட்டுவிடும் நிலை அதிகாரிகளுக்கு ஏற்படுகிறது. ஆகவே அப்படிச் செய்யாது நல்லமுறையில் நடவடிக்கை எடுக்க எலக்ஷன் ஆபீசர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டும். பின்னர், நகரங்களில் தேர்தல் நடக்கும்போது பப்ளிக் லட்ரீன்ஸ், பப்ளிக் பார்க்குகள் போன்றயிடங்கள் பூராவுமாக களங்கப்படுத்தப் படுகிறது. அதை அடியோடு நிறுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதில் பெரிது பெரிதாக ஆள் உயரத்திற்கு எழுத்துக்களை எழுதிவிடுகிறார்கள். பிரசங்கங்களுக்கு பப்ளிக் ப்ளாட்பார்ம்ஸ் இருக்கிறது. அதில் எழுத்துக்களை ஒரு ஆள் உயரம், 1½ ஆள் உயரத்திற்கு எழுதி விடுகிறார்கள். அதை நிறுத்த வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.) அஜெண்டாவில் இருக்கிற கிரமப்படி ஐடெம்களை எடுத்துக்கொள்ளாமல், கடைசி ஐயிடெத்திலுள்ள மசோதாவை எடுத்துக்கொண்டதால், அதைப் படித்து, பரிசீலித்துப் போவதற்கு அங்கத்தினர்களுக்குப் போதிய அவகாசம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அவையில் உள்ள அங்கத்தினர்களின் சௌகரியத்தைப் பார்த்து இம்மாதிரி இனி மேலாவது நடக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: அதைத்தான் விசித்திரப் போக்கு என்று கனம் அங்கத்தினர் பெயரிட்டு அழைக்கிறார்களே.

திரு. கே. ஏ. மதியழகன்: கம்யூனிஸ்டுக் கட்சி மெம்பர் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களைப் பற்றிச் சொன்னார்கள். எனக்கும் மதுரையைப் பற்றி அநுபவம் இருக்கிறது, கோயம்புத்தூரைப் பற்றிய அநுபவம் இருக்கிறது. கனம் வடிவேல் அவர்கள்கூடப் பேசிக்கொண்டிருந்தார்கள். வாணியம்பாடியில் உள்ள ஜனத்தொகை கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட மிக அதிகமாகப் பெருகியிருக்கிறது. இப்படித்தான் ஒவ்வொரு நகரமும் ஜனத்தொகையில் பெருகியிருக்கின்றது. இருந்தும் இன்றைக்கு 1951-ஆம் ஆண்டு வோட்டர் லிஸ்டை வைத்துக்கொண்டே தேர்தலை நடத்திவிடுவது என்றால்—1951-ஆம் ஆண்டு எட்டு வயதாக இருந்தவர்களுடைய வயது இன்றைக்கு 21 வயதாக ஆகி அவர்களும் வோட்டுப்போடும் உரிமையைப் பெற்றிருப்பார்களே, அவர்கள் அத்தனை பேர்களுக்கும் இப்போது வோட்டு இல்லாமல்தானே போகும்? அரசாங்கம் நினைத்திருந்தால் கடந்த ஆறுமாத காலத்திலே இப்போதுள்ள மக்கள் தொகைப்படி வார்டுகளைத் திருத்தி அமைத்திருக்க முடியாதா? அல்லது திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னது போல வார்டுகளைத் திருத்தி அமைக்கும் வேலையை இப்போது மேற்கொண்டு இன்னும் ஐந்தாறு மாதங்கள் தேர்தல் தள்ளிப் போனாலும்கூடப் பரவாயில்லை—வார்டுகளைத் திருத்தி அமைத்துக் கொண்ட பிற்பாடு இந்தத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வரக்கூடாதா என்றுதான் கேட்க விரும்புகிறேன். நிகழ்ச்சி நிரலில் பின்னாக இருந்த இந்த மசோதாவை அவசரம் அவசரமாக முன்னதாகக் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டிய அவசியம்தான் என்ன என்று கேட்க விரும்புகிறேன். அதற்கு ஸ்தல ஸ்தாபன இலாகா அமைச்சர் அவர்கள் கொடுக்கிற காரணம் சரியானதாக இல்லை. தேசிய நெருக்கடியின் காரணமாக முன்பு தேர்தலை ஒத்தி வைத்தார்கள் என்றால் இப்போதும் தேசிய நெருக்கடி நீங்கவில்லை. தேசிய நெருக்கடியின் பயம் தணிந்தாற்போல் இருக்கிறதே தவிர, தேசிய நெருக்கடி முற்றிலும் நீங்கிவிட்டதாகச் சொல்ல முடியாது. ஆகவே இன்றைக்கும்கூட வார்டுகளைத் திருத்தி அமைக்கிற வரைக்கும், இப்போதுள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய ஆயத்தங்களை எல்லாம் செய்து முடிக்கிற வரைக்கும் தேர்தலைச் சில மாதங்கள் தள்ளி வைக்கலாம். அப்படியின்றி—முன்பு தேர்தலை நடத்தாததற்குக் காரணம் வார்டுகளைத் திருத்தி அமைத்து நடத்தப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, இப்போது 1959-ம் வருட அடிப்படையிலேயே உடனடியாகத் தேர்தலை நடத்தி விடவேண்டுமென்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவைக் கொண்டுவருவதானது கோமாளித்தனமானதாகத்தான் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். நெருக்கடி நெருக்கடி என்று சொன்னீர்களே, அந்த நெருக்கடியாவது இப்போது தீர்ந்துவிட்டதா? அப்படியானது சொல்

லுங்கள். அப்படியின்றி இப்போதே தேர்தலை நடத்திவிடவேண்டும், பழைய அடிப்படையிலேயே என்று சொல்வது மிகவும் தவறானது, இப்படிச் செய்வது நல்ல சம்பிரதாயமும் ஆகாது. மரபும் ஆகாது. பல விசித்திரங்களைச் சந்தித்துக் கொண்டு வருகிற இந்த மாநிலம் பல புதிய நெருக்கடிகள் தோற்றுவிக்கப்பட்டுக்கொண்டு வருகிற இந்த மாநிலம் நல்லதொரு நிர்வாக அமைப்பைப் பரவலாக இழந்துபோகும்படியாகத்தான் இந்தத் தேர்தல் செய்யும். ஆகவே வார்டுகளை இப்போதுள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் திருத்தி அமைப்பதற்கு முன்னதாக நகரசபைத் தேர்தலை நடத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஸ்தல ஸ்தாபனத் தேர்தலை இப்போது நடத்த வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி எதிர்க்கட்சியில் உள்ளவர்களிடத்திலேயே அரசியல் வேறுபாடு இருந்தாலும்—ஓர் ஒற்றுமை இருக்கும் என்ற கருத்துக்கு மாறாக முரண்பாடே காணப்படுகிறது என்பதை நாம் உணருகிறோம்.

குறிப்பாக, கனம் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும் போது தேர்தலைப் பல மாதங்களுக்கு ஒத்தி வைத்தாலும் பரவாயில்லை, வார்டுகளை இப்போதுள்ள ஜனசங்கியின் அடிப்படையில் திருத்தி அமைத்த பிற்பாடே தேர்தலைப் பற்றி எண்ணவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் கனம் மதியழகன் அவர்கள் அந்தக் கருத்தில் இருந்து முரண்பட்டார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நான் கனம் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்ன கருத்துக்கு முரண்பாடாக எதுவும் சொல்லவில்லை. இப்போதுள்ள ஜனசங்கியின் அடிப்படையில் வார்டுகளைத் திருத்தி அமைக்கும் காரியங்களை இந்தச் சர்க்கார் உடனடியாக மேற்கொள்வார்களேயானால் இந்த வருடத்திலேயேகூடத் தேர்தலை நடத்திவிட முடியும் என்றுதான் சொன்னேன்.

கனம் சபாநாயகர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகுமா? அவர் முரண்பாடு இருக்கிறது என்றால் எப்படி முரண்பாடு இருக்கிறது என்று சொல்லட்டுமே. அதற்குள் முரண்பாடு இல்லை என்பதற்கு இப்படிப் பேசவேண்டுமா?

திரு. ஜே. மாதா கவுடர்: அவர்கள் வார்டுகளைத் திருத்தி அமைத்த பிற்பாடுதான் தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்ல, இவர்கள் வார்டுகளைத் திருத்தி அமைக்கிற வேலையோடு இரண்டு மூன்று மாதங்களில் தேர்தலையும் நடத்திவிட வேண்டும் என்றே சொன்னார்கள். தேர்தலை ஒத்திப்போட இவர்கள் சம்மதிக்கவில்லை. இப்படி ஒரு முரண்பாடு இருக்கிறது என்பதைத்

நஷ்டமும் இல்லை என்று கருதி, அரசாங்கம் எங்கள் கருத்தைச் செவி சாய்த்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை எதிர்கட்சி அங்கத்தினர்கள், எதிர்த்துப் பேசும் போது குறிப்பாக 1951-ம் ஆண்டு ஜனத்தொகை கணக்கை வைத்துக்கொண்டு 1963-ல் தேர்தல் நடத்தலாமா என்று கேட்டார்கள். அது தான் அவர்களுடைய முக்கியமான ஆட்சேபணையாக இருந்தது என்று நான் நினைக்கிறேன். ஆனால் பொதுவாக எதிர்கட்சி அங்கத்தினர்கள் குறை சொல்லும்போது, ஜனநாயகத்தை அரசாங்கம் கொல்லுகிறது, தேர்தலை ஒத்திப்போடுவதற்கு பயப்படுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் எதிர்கட்சிக்காரர்கள் இப்போது தேர்தல் என்று சொன்னவுடனேயே ஏன் இவ்விதம் பயப்படுகிறார்கள் என்பது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் ஒன்றை கனம் அமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தி சொல்ல வேண்டும். 1951-ம் வருஷத்திய ஜனத்தொகை கணக்கு 1953-ம் வருஷத்தில் தான் நிர்ணயம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. அதற்கு முன்னதாக 1952-ம் தேர்தல் நடத்தப்பட்டது. அதற்கு முந்திய ஜனத்தொகை கணக்கை வைத்துத்தான் தேர்தல் நடந்தது. 1953-ல் வெளிவந்த ஜனத்தொகை கணக்கை வைத்துத் தான் 1957-ல் தேர்தல் நடந்தது. அதன் பின்னால் இதே கணக்கை வைத்துத்தான் 1962-லும் தேர்தல் நடந்தது. 1961-ல் சென்ஸஸ் கணக்கு எடுத்திருக்கிறார்கள். அதனுடைய முடிவான கணக்கு அரசாங்கத்திற்கு வந்தாய்விட்டதா இல்லையா என்று நமக்கு தெரியவில்லை. அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கிறதோ இல்லையோ பொதுமக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆகவே இப்போது முன்னால் இருந்த ஜனத்தொகை கணக்குத்தான் நம்மிடம் இருக் என்று தெரியாது. மேலும் வோட்டர்கள் லிஸ்டுகள் சரியாக இறது. புதிதாக தயாரிக்கப்படுகிற கணக்கு எப்போது கிடைக்கும் இல்லை. இதையெல்லாம் சரிபடுத்த வேண்டும். இப்போதுள்ள லிஸ்டை வைத்துக்கொண்டு எப்படி தேர்தல் நடத்துவது என்று கனம் அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். (சில கனம் அங்கத்தினர்கள் : அன்பழகன் அவர்கள் இங்கு அங்கத்தினராக இல்லை.) அன்பழகன் அல்ல, மதியழகன் அவர்கள் சொன்னார்கள். இரண்டு பெயர்களும் அழகாகத்தான் இருக்கிறது . . . அதன் காரணமாகத் தான் மாற்றி சொல்லிவிட்டேன் . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினரை சப்ஜெக்டிலிருந்து டீவியேட் பண்ணப் பார்க்கிறார்கள். அவர் மசோதாவின் மீது பேசலாம்.

திரு. கே. டி. கோசல்ராம் : இவர்கள் சொல்லுகிறபடி வாக்காளர் பட்டியலை இரண்டு மாதங்களுக்குள் திருத்தி தயாரிப்பது என்பது முடியக்கூடிய காரியமல்ல. இரண்டு மாதங்களுக்குள் மனிதபிரயத்தனத்திற்குள் நடக்கக்கூடியதா என்று தெரியவில்லை.

சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. கணேசன் அவர்கள் ஜனநாயகம், தேர்தல், முதலாளித்துவம் இவைகளைப்பற்றியெல்லாம் பேசினார்கள். இவற்றில் எந்த அளவுக்கு அவர்களுடைய கட்சிக்கு நம்பிக்கையிருக்கிறது என்பது தெரியவில்லை. ஸ்பெஷல் ஆபீஸரை போடலாம் என்று ஆலோசனையும் சொன்னார்கள். ஜனப் பிரதிநிதிகளின் பேரில் நம்பிக்கை இல்லாமல் அப்படி சொன்னார்களா என்றும் எனக்கு தெரியவில்லை. இன்னும் சில எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், எங்களை உள்ளே (ஜெயிலில்) போட்டுவிட்டு தேர்தலை நடத்தலாம் என்று எண்ணுகிறார்கள் என்று சொன்னார்கள். உண்மையில் அரசியல் நடத்துவது என்று சொன்னால், இவர்கள் கூறியிருந்தது போன்று கொளுத்திவிட்டுவிட்டு அதன் பின்னால் மூன்று வருடங்கள் உள்ளே போடுவார்கள். (குறுக்கீடு) இங்குள்ள ஆட்சி நடத்துவது எல்லாம் 15 நாட்களுக்கு பிடித்து வைத்துவிட்டு விட்டுவிடுவதுதான் எல்லாம் 15 நாட்களுக்குத் தான். இதிலிருந்து (எதிர்க்கட்சிக்காரர்களை) உள்ளே போட்டுவிட்டு அவசரம் அவசரமாக தேர்தலை நடத்தவேண்டும் என்ற நோக்கம் சர்க்காருக்கும் கொஞ்சம்கூட இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்று பிடிப்பது. நாளை விடுவது. இதுதான் நடந்துக்கொண்டிருக்கிறது. பதினைந்து நாட்களுக்கு மேல் வைத்திருப்பதே இல்லை. இந்த நிலையில் இவர்களை உள்ளே போட்டு தேர்தலை நடத்தப்பார்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு சரியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தடுப்புக்காவல் சட்டத்தின்படி நாட்டின் நன்மைக்காக பிடித்து வைக்கிறார்கள் . .

MR. SPEAKER : Let the hon. Member speak on this Bill.

திரு. கே. டி. கோசல்ராம் : அவர்கள் இதைப்பற்றி பேசியதால் தான் இதற்கு பதில் சொல்லவேண்டியிருந்தது. ஆகவே இப்போதுள்ள வோட்டர் லிஸ்டை வைத்துக்கொண்டு எப்படி தேர்தல் நடத்துவது என்று சொல்வதைவிட எங்களுக்கு தேர்தலில் நம்பிக்கை இல்லை என்று சொல்லிவிடலாம். ஆனால் ஒன்றை மட்டும் நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஆளும் கட்சிக்கு மக்களிடத்தில் செல்வாக்கு வந்துவிட்டது. அரசாங்கத்தின்மீது என்னவெல்லாம் குறைகளை சொன்னாலும் ஆளும் கட்சிக்கு செல்வாக்கு வந்துவிட்டது என்பதை புரிந்துதான் இவ்விதம் பேசுகிறார்கள் என்று எண்ணுகிறேன். அரசாங்கத்திலிருந்து ஸ்பெஷல் ஆபீஸரை வேண்டுமென்றால் வைத்துக்கொள்ளுங்கள் என்று நண்பர் திரு. கணேசன் அவர்கள் சொன்னார்கள். அவர்களிடமே அதிகாரத்தை பத்து மாதங்களுக்கு கொடுத்துவிடலாம் என்றும் சொன்னார்கள். அதே நேரத்தில் முனிசிபாலிட்டிகளில் கிடைக்கின்ற பணத்தில் முக்கால் பங்கும் அதிகாரிகளே எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்றும் சொன்னார்கள். இவ்விதம் அவர்கள் சொல்லுவது ஒன்றுக்குப் பின் ஒன்று முரணாக இருக்கிறது. அதோடு சென்ஸஸ் ரிப்போர்ட் எப்போது வரும் என்பதையும் தெரிந்து கொள்ளாமல் தேர்தலை சுமார் பத்து மாத காலத்திற்கு அல்லது ஒரு வருட காலத்திற்கு ஒத்தி போடலாம் என்று சொல்லுவதும் முன்னுக்குப்

பின் முரணாக இருக்கிறது. இப்போது தேர்தலை நடத்தலாம் என்று சொல்லும்போது, ஜனநாயகமே பறிபோகிறது என்று சொல்கிறார்கள். முன்னால் இதற்கான தேர்தலை சிறிது காலத்திற்கு தள்ளி வைக்கவேண்டும் என்று சொன்னபோதும் ஜனநாயகம் பறிபோய்விட்டது என்று சொன்னார்கள். இதை எப்படி புரிந்துகொள்வது என்று தெரியவில்லை.

கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் சொன்ன மாதிரி இதிலே ஆள் மாராட்டம் செய்யக்கூடிய விஷயங்களைப் பார்க்கிறோம். ஒரு இடத்தில் லாரியில் ஆட்களை கொண்டு விடுவதைப் பார்க்கிறோம். அதைப்பற்றி கனம் அங்கத்தினர் கணேசன் அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஆள் மாராட்டம் செய்யும் விஷயத்தில் அரசாங்கம் கடுமையாக இருந்து, ஆள் மாராட்டம் செய்து ஓட்டு சேகரித்து வெற்றி பெறுவது, தேர்தல் நடத்துவது என்பதை அரசாங்கம் அனுமதித்தால் ஜனநாயகம் செத்து மடிந்து விடும் என்று சொல்லிக்கொண்டு, எதிர் கட்சி அங்கத்தினர்கள் தேர்தலை ஒத்தி வைக்கவேண்டும் என்று சொல்லுவது அர்த்தமற்றது என்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நகராண்மைக் கழகத்திற்கும் முனிசிபாலிட்டிகளுக்கும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவை முழு மனதோடு ஆதரித்து, துரிதமாகத் தேர்தலை நடத்தவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். நெருக்கடியின் காரணமாகத்தான் நடக்க வேண்டிய தேர்தலை 6 மாத காலம் ஒத்திப் போட்டோம். இப்போது நெருக்கடி நேரத்தில் இந்தத் தேர்தல்களுக்கு என்ன அவசரம் என்று எதிர் கட்சி அங்கத்தினர்கள் கேட்கிறார்கள். நெருக்கடி இருந்தாலும் பரவாயில்லை என்று நெருக்கடி நேரத்திலேயே சட்ட சபை உப தேர்தல்களையெல்லாம் நடத்தினோம். காரணம் ஜனநாயகத்திற்கு எவ்வளவு ஊறு விளைவிக்காமல் இருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு ஜனநாயகத்திற்கு நல்லது என்பதற்காகத்தான். நெருக்கடி நேரத்திலேயேகூட திருவண்ணாமலையில் உப தேர்தலை நடத்தினோம். சட்ட சபைக்கான தேர்தல்களையே நடத்தியபோது நகராண்மைக் கழகத்திற்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் தேர்தல்களுக்கு என்ன அவசரம் என்று அவர்கள் கூறுகிறார்கள் என்றால், நகராண்மைக் கழகத்தில் அல்லது முனிசிபாலிட்டியில் அங்கம் வகித்தால் அப்படி சொல்லியிருக்கமாட்டார்ககள். முன்பு 6 மாதம் நீடித்தபோது ஏன் தேர்தலை நடத்தவில்லை என்று மக்கள் உணர்ச்சி அடைந்தார்கள். அப்போதைக்கப்போது தேர்தல்களை நடத்தினால்தான் மக்களாட்சியில் மக்களுக்கு உணர்ச்சி இருந்துகொண்டிருக்கும். தேர்தல் இல்லாவிட்டால் மக்கள் எண்ணம் என்ன என்பது தெரியாமல் போகலாம். அதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போய் விடும். அப்போதைக்கப்போது தேர்தல் நடத்தினால்தான் மக்களாட்சியில் சுறுசுறுப்பு ஏற்பட்டு, மக்களாட்சியில் நம்பிக்கை இருக்கிறது என்ற உணர்ச்சியைப் பெற முடியும். அந்த வகையில்

6 மாதம் ஒத்திப்போட்ட தேர்தல்களை 1964-ம் ஆண்டு முதலிலேயே கொண்டுவரவேண்டும் என்று அரசாங்கம் விரும்பப்பட்டால், அரசாங்கம் ஜனநாயகத்தில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறது என்று எடுத்துக்காட்டுகிறது. உண்மையில் எதிர் கட்சிக்காரர்கள் தேர்தல் வேண்டாமென்று சொல்லும்போது, அவர்கள் ஆட்சி பீடத்திற்கு ஒருவேளை வந்தால் தேர்தலே நடத்த மாட்டார்கள் போல் இருக்கிறதே என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஜனநாயத்துக்கு முக்கிய தேவையான தேர்தலைப்பற்றி ஆளும் கட்சி கொஞ்ச நஞ்சம் அச்சப்படவேண்டுமேதவிர எதிர் கட்சிகள் அதை வரவேற்கவேண்டும். அதை விட்டு எதிர் கட்சிக்காரர்கள் தேர்தல் வேண்டாமென்று சொல்லும்போது, அவர்களுக்கு மக்கள் முன்னே சென்று ஓட்டுப் பெறும் நம்பிக்கை குறைந்து விட்டது என்று நான் நினைக்கிறேன். தேர்தல் நடத்துவது மிக மிக அவசியம். ஏன் இப்போது எடுக்கப்பட்ட ஜனத்தொகையை வைத்து வார்டு பிரிக்கக் கூடாது என்று கேட்டார்கள். மக்கள் தொகை எடுக்கிறோம் என்று தேர்தலை ஒத்திப் போடுவது கிடையாது. அடுத்து வருகிற தேர்தலை வேண்டுமானால் இப்போது எடுக்கப்பட்டுள்ள மக்கள் தொகை அடிப்படையில் நடத்திக் கொள்வது நல்லதேயொழிய, அதற்காக தேர்தலை நிறுத்தி வைத்துக்கொண்டு, அது வரட்டும், வரட்டும் என்று எதிர்பார்த்திருப்பது நல்லதல்ல.

அடுத்தபடியாக, குறிப்பாக சென்னை நகராண்மைக் கழகத்தை எடுத்துக்கொண்டால் இங்கே இதற்கு முன்னால் 50 டிவிஷன்கள் இருந்தன. அப்போது நல்ல அரசியல் ரீதியில் கட்சிகள் தேர்தலில் ஈடுபட முடிந்தது. கொள்கை அடிப்படையில் நகராண்மைக் கழகத்திலே தேர்தலில் கட்சிகள் ஈடுபட்டு நிர்வாகத்தை நடத்த வாய்ப்பு இருந்தது அதை 100 ஆகச் செய்து, சிறு சிறு வார்டு எலெக்ஷன் மாதிரி வைத்து 10, 15 வோட்டிலே, திருட்டு வோட்டு போட்டு ஜெயிக்கும் வாய்ப்பை அதிகரித்து விட்டோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நூறு என்பதை 50 ஆகக் குறைப்பது நல்லதா என்பதை சிந்திக்க வேண்டும். ஐம்பது என்று இருக்கும்போது பெரிய பெரிய டிவிஷன்களாக இருந்து நல்ல முறையில் கண்காணிக்க வாய்ப்பு இருந்தது. அரசியல் ரீதியில், கொள்கை அடிப்படையில், கட்சிகள் நிறுத்தினால் எந்தக் கட்சிக்கு ஆதரவு கொடுப்பது என்று சிந்தித்து, சீர்தூக்கி, பொறுக்கியெடுக்க வாய்ப்பு இருந்தது. சிறு சிறு வார்டுகளாக இருப்பதால் பணத்தைக் கொடுத்தோ, பயமுறுத்தியோ, பொய் வோட்டு திருட்டு வோட்டு போட்டோ 10-15 வோட்டில் நல்ல அபேட்சகர்கள்கூட தோற்கடிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. நகராண்மைக் கழகத்தைப் பொறுத்த வரையில் மீண்டும் 50 இடங்களாக இருந்தால் கட்சி அடிப்படையில், கொள்கை அடிப்படையில் அமைக்க முடியும். அதனால் நல்ல நிர்வாகம் நடக்கும்.

கடைசியாக ஒரே ஒரு வேண்டுகோள். பொய் வோட்டு, திருட்டு வோட்டு போடுகிறவர்களை . . . . .

படையிலே ஒரு மாதத்திற்கு முன்பாகவே அசெம்பிளி கூடுகின்ற நேரத்தில் இந்த மகாநாட்டையும் சேர்த்து வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்து, அதை முதல் அமைச்சர் அவர்கள் இனாகுரேட் செய்வது, நான் அதற்கு தலைமை தாங்குவது என்று ஏற்றுக் கொண்டோம். 20, 21 தேதிகளில் 9½ மணிக்கு ஆரம்பிக்க வேண்டும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிறகு கேள்வி நேரம் முடிந்த பிறகு அதில் கலந்து கொள்ளலாம் என்று அந்த மகாநாடு 10½ மணிக்கு தள்ளி வைக்கப்பட்டது. நான் அங்கே மகாநாட்டில் கலந்து கொண்டு இரண்டு நாட்களுக்கு இருந்து விட்டால் இந்த மசோதா இந்த ஸெஷனில் பாஸாகாமல் போய் விடக் கூடாது என்ற எண்ணத்தில்தான் முதல் அமைச்சர் அவர்களிடம் சொல்லி கனம் சபாநாயகர் மூலமாக இந்த மசோதாவை முதலில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். இதுதான் உண்மையான நிலை என்பதை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாகப் பார்த்தால், 1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இப்பொழுது இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் நகராட்சி மன்றங்களுக்கும், மாநகராட்சி மன்றத்திற்கும் தேர்தல்கள் நடந்து பதவிக்கு வந்தார்கள். 1962-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அவர்கள் பதவிக்கு வந்து கிட்டத்தட்ட 3 வருடங்கள் மாதத்தில் அவர்கள் பதவிக்கு வந்து கிட்டத்தட்ட 3 வருடங்கள் 8 மாதங்கள் ஆகிவிட்டன. இப்பொழுது எமெர்ஜென்ஸி காரணமாக அந்தத் தேர்தல்களை ஒத்திப்போட்டதினால், மேலும் ஒரு வருடம் சென்றுவிட்டது. மூன்று ஆண்டு காலத்திற்குத்தான் பதவியில் இருக்க வேண்டியவர்களுக்கு இப்பொழுது 4½ ஆண்டு காலம் ஆகிவிட்டது. இனியும் தேர்தலை ஒத்திப்போட்டால் 5 வருட காலம் ஆகிவிடும். அப்படிச் செய்வது ஜனநாயகத்திற்கு நல்ல வழியாகாது என்பதை கருத்தில்கொண்டுதான் நாங்கள் சீக்கிரம் தேர்தலை நடத்துவது என்று முடிவு செய்தோம். தேர்தலை நடத்தாமல் இருந்தாலும், தேர்தலை பின்னால் தள்ளிப்போட்டுக் கொண்டே போகிறார்கள் என்று சொல்லக்கூடும் என்பதையும் கருத்தில் கொண்டு, அமைச்சர் அவையில் கலந்து ஆலோசித்து தேர்தலை சீக்கிரம் நடத்தவேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். அவசரக்கோலமாக தேர்தல்களை நடத்துகிறோம் என்று சொல்லுவது விசித்திரமான வாதமாக இருக்கிறது.

கனம் அங்கத்தினர் மதியழகன் பேசும்பொழுது, கொஞ்சம் அதிகமாகவே பேசினார்கள். பொறுப்பைத் தட்டிக் கழிப்பது, கோமாளித்தனம் போன்ற வார்த்தைகளை உபயோகித்தார்கள். இவைகள் பார்லிமெண்டரி வார்த்தைகளாக எனக்குத் தோன்றவில்லை. நான் எனது நண்பர் கனம் திரு. வெங்கட்டராமன் அவர்களிடம் இதுபற்றி சொன்னேன். "அவைகளைப்பற்றி ஏன் பேசப்போகிறீர்கள்" என்று கேட்டார்கள். ஆனால் அதைக் குறிப்பிடாமல் விட்டுவிடக்கூடிய மனப்பான்மை எனக்கு இல்லை.

எந்தக் கருத்தையும் அழுத்தமாக, ஆதாரத்துடன் கனம் அங்கத்தினர்கள் பேசுவதை நான் வரவேற்கிறேன். ஆனால் இதுபோன்ற வார்த்தைகளை உபயோகிப்பது சரியல்ல.

பிறகு ஜன சங்கியைப்பற்றி பேசினார்கள். 1951-ம் ஆண்டு ஜன சங்கியை ஆதாரமாகக் கொண்டு ஏன் அவசரமாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டார்கள். 1951-ம் வருட ஜன சங்கியை அடிப்படையில்தான் 1957-வது வருடத்திய பொதுத் தேர்தல்களை நடத்தினோம். 1962-வது வருடத்திய பொதுத் தேர்தல்களையும் நடத்தினோம். சமீபத்தில் நடந்த திருவண்ணாமலை உப-தேர்தலையும், மதுரை, நெல்லை மாவட்டங்களில் நடந்த உப-தேர்தல்களையும் நடத்தினோம். 1961-வது வருடத்திய ஃபைனல் சென்ஸஸ் ஃபிகர்கள் 1963, மே மாதத்தில்தான் வெளியிடப்பட்டன. எல்லாம் முன்பே முடிந்து விட்டது என்று திரு. கருணாநிதி அவர்கள் சொன்னார்கள். அவர் குறிப்பிட்டது பிரிலிமினரி ரிப்போர்ட் ஆக இருக்குமென்று நினைக்கிறேன்.

ஜனநாயகத்திலே எல்லோருக்கும் நம்பிக்கை இருக்க வேண்டியதுதான். அவசரம் அவசரமாகத் தேர்தல்களை நடத்தக் கூடாது, ஆர அமர யோசித்து நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளை வீட்டுக்கு அனுப்பி விட்டு, ஆபீசர்களை வைத்து நடத்தலாம் என்று திரு. சா. கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள யாரும் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். பொது ஜனப் பிரதிநிதிகளை விட்டுவிட்டு, ஆபீசர்களை வைத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்று சொன்னால், அது ஜனநாயகத்தில் பற்று இருப்பதாக ஆகாது. தேர்தல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று சர்க்காருக்கு நோக்கம் கிடையாது, நெருக்கடி காலத்தில் தேர்தல்களை நடத்தக் கூடாது என்று முதலில் நினைத்தோம். பிறகு பாராளுமன்ற, சட்டமன்ற உப-தேர்தல்களை நடத்தும்பொழுது, ஏன் நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களை மட்டும் நடத்தக்கூடாது என்று சிந்தனை செய்து ஒரு முடிவுக்கு வந்துள்ளோம். ஆகவே நல்ல எண்ணத்துடன்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்துள்ளோம்.

இன்னொரு விஷயத்தைப் பற்றியும் பல அங்கத்தினர்கள் கேட்டார்கள். ஜில்லா முனிசிபாலிட்டி சட்டம், 43-வது பிரிவின்படி முதலிலே கவுன்சிலின் ஸ்ட்ரெங்த்தை ரிபிக்ஸ் பண்ணி கவுன்சிலின் அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டும். 1961-வது ஜன்சங்கியைப் பிரகாரம் நோட்டிஃபை பண்ணவேண்டும். பிறகு முனிசிபல் கவுன்சிலை ரீடிஸ்டிரிபியூஷன் செய்து, அபிப்பிராயத்தை சர்க்காருக்கு அனுப்பவேண்டும். கடைசியில் பப்ளிகேஷன் செய்ய வேண்டும். இம்மாதிரி பல பிரச்னைகள் இருப்பதால், ஒரு வருடத்திலிருந்து, ஒரு வருடம் ஆறு மாதம் வரை ஆகலாம். இவ்வளவு காலத்திற்குப் பிறகும், இன்னும் 5 வருடங்கள் கொடுப்பது என்றால், அது ஜனநாயகத்திற்கு உகந்ததாக இருக்காது. ஜனநாயகத்தை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன்தான்,

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது சபை முன் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். காரணம், தேர்தல் கூடாது என்பதல்ல. 1951-ம் ஆண்டு ஜனத்தொகை அடிப்படையில் 1965-66 வரையில் பிரதிநிதித்துவம் இருக்கலாம் என்ற ஒரு நிலை அமையுமானால் அது நியாயமாக இருக்காது என்ற ஒன்றுதான் முதல் காரணம். வார்டுகளை எல்லாம் ஒழுங்குபடுத்தி, வாக்காளர் பட்டியல்களை எல்லாம் சரி பார்த்துச் செய்வது என்றால் காலதாமதமாகும் என்று சொல்வது சரி. நான் கொஞ்சம் கூட ஆகும் என்பது உண்மையே. அந்தக் காரியத்தை இவ்வளவு காலமாக செய்திருக்கலாம். ஏன் செய்யவில்லை என்பதற்கு காரணம் சொல்லவே இல்லை ஆட்சியாளர்கள். அதைச் செய்திருந்தால் இப்போது சுலபமாக இருக்கும். அப்படிச் செய்யாதிருக்கிற நிலையிலே இப்பொழுதே எப்படியாவது தேர்தலை நடத்தி விடலாம் என்று சொல்வது நியாயமாக இருக்கமாட்டாது. அது மட்டுமல்ல. முனிசிபல் நிர்வாகங்களைப் பார்க்கிறபோது பலவித மனச் சங்கடங்கள்—எந்தக் கட்சியாக இருந்தாலும்—ஏற்படுகிறது. பல விதத் தவறுகள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் ஒழுங்கு செய்ய வேண்டுமென்றால் முனிசிபாலிட்டியை கலைத்து விட்டு ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டு ஆறு அல்லது பத்து மாதம் நிர்வாகம் நடத்துங்கள் என்று சொல்லி எல்லாச் சங்கடங்களையும் நீக்கி விடக்கூடிய முறையில், வரி வசூலிலிருந்து காரியங்கள் அனைத்தையும் செம்மைப்படுத்தி, பழைய பாக்கி இல்லாமல் செய்து, புதுத் தேர்தலைத் தொடங்கி புதிதாக வரும் பிரதிநிதிகளிடம் அதை ஒப்படைப்பது மிகப்பொருத்தமாயிருக்கும். இப்போது முனிசிபாலிட்டி செலவுகளைப் பார்த்தால் பயங்கரமாக இருக்கிறது. அக்காரணத்தால் முனிசிபாலிட்டிகளே வேண்டாம் என்று நான் சொல்வேனானால் யாரும் அதை மறுக்க முடியாது. 'தோட்டத்தில் பாதி கிணறு' என்று சொல்வோம். இந்த விஷயத்தில் 'தோட்டத்தில் முக்கால், முக்காலுக்கும் மேல் கிணறு' என்ற நிலைதான் இதில் இருக்கிறது. வசூலிக்கப்படுகிற வரிகளில் 80 சதவிகிதத்துக்கு மேல் சம்பளமாகப் போகிறது. தெருவில் வீட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறவர்கள் வரி கொடுத்து அது யார் யாருக்கோ சம்பளமாகப் போனால் எதற்காக வரி கொடுப்பது என்பது புரியவில்லை. பல முனிசிபாலிட்டிகளுக்கு ரோடுகளையோ சுகாதாரத்தையோ நல்லமுறையில் ஆக்க முடியவில்லை. கிடைக்கின்ற வருமானத்தில் 100-க்கு 80 பங்கு அதிகாரிகளின் சம்பளமாக போகிறது என்று நம்முடைய தஸ்தாவேஜுகள் புலப்படுத்துகின்றன. இந்த வகையில் இருக்கக்கூடிய நிலையை செம்மைப் படுத்துவதற்கு வழிவகை காணவேண்டும். அதற்கு ஓராண்டு காலத்திற்கு அல்லது ஆறு மாத காலத்திற்கு ஒரு ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு என்ன செய்யவேண்டும், என்னென்ன வழி முறைகளை வகுக்கவேண்டும், இப்போது சுற்றளவு எவ்வளவு இருக்கிறது, ஜனத்தொகை எந்த அளவுக்கு மாறியிருக்கிறது என்பதையெல்லாம் ஆலோசித்துப் பார்க்கலாம். அதற்குமேல் சில

இடங்களில் மக்கள் எண்ணிக்கை பெருகியிருக்கின்றன. சில நகரங்களில் குறைந்தும் இருக்கின்றன. இதற்குத் தகுந்தபடி நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையும் மாறுதல் அடைய வேண்டும். மேலும் இங்கு சில நண்பர்கள் எதிர்கட்சியிலுள்ளவர்கள் எல்லாம் இந்த மசோதாவின் மீது ஒரே மனதாக பேசவில்லை என்று சொன்னார்கள், இதைப்பற்றி ஆளும்கட்சியிலுள்ளவர்கள் ஏன் கவலைப்படவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. அப்படியே எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் எல்லாம் ஒரே மனதாக சொல்லிவிட்டால் ஆளும்கட்சி அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறதா என்று நான் சவால் விடலாமா என்று கூட தோன்றுகிறது. . . .

கனம் சபாநாயகர்: அவர்கள் அப்படிச் சொன்னதைப் பற்றி கனம் அங்கத்தினர் ஏன் இப்போது கவலைப்படுகிறார்கள்.

திரு. சா. கணேசன்: இப்படி விஷயத்தை விட்டுவிட்டு ஆட்களைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கக்கூடாது என்பதைத்தான் நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். மேலும் கனம் அங்கத்தினர் ஒருவர், "தேர்தல் காலத்தில் பித்தலாட்டத்தனமாக வோட்டுப் பதிவுகள் நடைபெறுகின்றன" என்று குறிப்பிட்டார். இதை நிச்சயமாகத் தடுக்கவேண்டும். "அவ்விதமாக வோட்டுக்கள் போடுவதற்கு கிராமங்களிலிருந்து ஆட்களை அழைத்துக்கொண்டு வருகிறார்கள்" என்று கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். அது மிகவும் உண்மை. ஆகவே அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு ஒன்று செய்யலாம். அதாவது பஞ்சாயத்து தேர்தலையும் முனிசிபல் தேர்தலையும் சம காலத்தில் அதாவது ஒரே காலத்தில் வைத்துவிட்டால், பெரிய அளவுக்கு அந்தச் செய்கையை தவிர்க்க முடியும். முழு அளவுக்கும் இம்மாதிரிப்பட்ட தவறுதல்களை உலகம் உள்ள மட்டும் தவிர்த்துவிட முடியாது. முயன்றால் பெரிய அளவுக்கு நீக்கலாம். இப்போதுள்ள முறைப்படி ஏதோ கையில் மை வைக்கிறோம். அதனால் பூரண வெற்றியில்லாவிட்டாலும் பலன் உண்டு. நான் சொல்லுகிற கருத்தில், மதுரையில் தேர்தல் நடக்கிறது என்றால், திருமங்கலத்திலும் தேர்தல் நடக்கும். அதோடு நடுவிலுள்ள இடங்களிலும் பஞ்சாயத்து தேர்தல் நடக்க வேண்டும். அப்படியிருந்தால் பக்கத்து ஊர்களிலிருந்து ஆட்களை கொண்டுவர முடியாது. அதற்கு அங்கங்கே உள்ள உள்ளூர் ஆட்கள் விடமாட்டார்கள். இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும். ஆகவே இவற்றையெல்லாம் ஆலோசித்து நல்லமுறையில் அமைப்பதற்கு இன்னும் ஆறு மாத காலமோ அல்லது பத்து மாத காலமோ காலதாமதம் செய்வதால் ஒன்றும் குடிமுழுகிவிடாது. இதை இப்போதைக்கு ஒத்திவைக்க இணங்குவதால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான சிரமமும் இல்லை. இவ்விதம் ஒத்தி வைப்பது தேசத்திற்கும் நம்முடைய மாகாணத்திற்கும் நன்மைதான் ஏற்படும். இதை மனதில் கொண்டு, தம் பக்கத்திலிருந்து கொண்டு வந்த தீர்மானத்தை ஒத்தி வைப்பதா என்று கருதாமல், ஒத்தி வைப்பதினால் எந்தவிதமான

MR. SPEAKER: So the hon. Member's amendments are for the purpose of amending the provisions of the Panchayat Act and the provisions of the Madras Municipal Authorities Bill.

* THE HON. SRI R. VENKATARAMAN: I shall explain the position, Sir. The Bill before the House seeks to amend only the terms of office and election of Councillors to Madras City Corporation and Municipalities in the State of Madras. The amendments given notice of by the hon. Member Sri V. Krishnamoorthy relate to Panchayat Act. Therefore they will be clearly out of order because they are not amendments to the present Bill, we are discussing. Since the matter is one of constitution and procedure I think the Hon. Speaker may rule that these amendments of the hon. Member Sri V. Krishnamoorthy are out of order for the purpose of the Bill which is at present before the House.

MR. SPEAKER: I rule that the amendments given notice of by the hon. Member Sri V. Krishnamoorthy are out of order.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. SPEAKER: The question is—

"That Clause 3 do stand part of the Bill."

THE HON. SRI S. M. A. MAJID: Sir, I move the following amendment:—

To clause 3, add the following sub-clause at the end, namely:—

(f) after the date on which the newly elected councillors of the council under the Corporation Act come into office under clause (b),—

(i) the election of Mayor, Deputy Mayor, members of the Corporation accounts committee (other than the Mayor) and members of the licence appeals committee shall be held at the first meeting of the council;

(ii) the election of chairman of the central committee or the Corporation accounts committee or the licence appeals committee shall be held at the first meeting of such committee;

(iii) the election of chairman of a circle committee and the election of one of its members to the central committee shall be held at the first meeting of such circle committee.".

MR. SPEAKER: The amendments to Clause 3 given notice of by Sri V. Krishnamoorthy are ruled out of order.

The amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clause 4.

MR. SPEAKER: The question is—

"That Clause 4 do stand part of the Bill."

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் முக்கியமான அம்சம் 4-வது பிரிவுதான். 4-வது பிரிவிலே இருக்கக்கூடிய இலட்சியத்தை அடைவதுதான் இந்த மசோதாவைக் கொண்டுவந்ததன் நோக்கம். இல்லை என்றால், இந்த மசோதா வந்திருக்காது. இந்தப் பகுதி, ஜில்லா முனிசிபாட்டி சட்டத்தின் 7-வது பிரிவையே திருத்தக் கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு முனிசிபாலிடியினுடைய கவுன்சிலர்கள் எண்ணிக்கையும் ஜனத்தொகை அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே "லாஸ்ட் சென்ஸஸ்" என்று இருக்கிறது. இப்பொழுது அது லாஸ்ட் சென்ஸஸ் அல்ல, அதற்கு முந்திய சென்ஸஸ் என்று ஆகும். அப்படி இவ்வளவு அவசரப்பட்டு இந்த திருத்தத்தை செய்யவேண்டிய அவசியம் என்ன என்று புரியவில்லை. கார்ப்பொரேஷன் பற்றிகூட சர்க்கார் நினைக்கவில்லை போல் இருக்கிறது. அதற்கும் ஒரு திருத்தம் இப்பொழுதுதான் கொடுத்திருக்கிறார்கள். கார்ப்பொரேஷன் தேர்தல் கூட கண் முன்னால் இல்லை. டிபார்ட்மெண்டில் இதை ஆற அமர பார்த்திருந்தால் இந்த தவறு வந்து இருக்காது. டிபார்ட்மெண்ட் ஒரு வகையில் வேலை செய்து இருக்கிறது; வேறு ஏதோ காரணமாக சர்க்கார் அவசரமாக ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். சென்ஸஸ் கணக்கை எடுத்துக் கொண்டாலும் அரசாங்கத்திற்கு விசேஷ காலதாமதம் இல்லாமல் கிடைக்கக்கூடியதுதான். இங்கே என்னிடம் சென்ஸஸ் இந்தியா, பேப்பர் 1 என்பது 61-வது வருஷ சென்ஸஸ்படி இறுதி பாப்புலேஷன் கணக்கு. இந்த புத்தகம் நமது லெஜிஸ்லேச்சர் லைப்ரரிக்கு—அந்த முத்திரை இருக்கிறது—நவம்பர் மாதம் இரண்டாம் தேதி 1962-ம் வருஷம் வந்து இருக்கிறது. ஆகவே 62 நவம்பரிலேயே 61-வது வருஷ சென்ஸஸ்படி ஜனத்தொகை என்ன என்பது அரசாங்கத்தின் கைக்கு வந்துவிட்டது. நான் நினைக்கிறேன், டிபார்ட்மெண்டில் எமர்ஜன்ஸி காரணமாக தேர்தல் ஒத்திப் போடலாம் என்று இருந்திருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது தேர்தல் வரும் என்பதை எதிர்பார்க்கவில்லை என்று ஊகிக்கிறேன். என் ஊகம் சரியோ, தப்போ தெரியாது. ஆனால் தேர்தல் உடனடியாக நடத்தவேண்டும் என்பதை கட்சிக்கு ஏற்படும் லாப நஷ்டத்தை எண்ணிச் சொல்லவில்லை. தாற்காலிகமாக ஏற்படும் சௌகரியம் அசௌகரியம் பற்றி கவலையில்லை. ஆனால் இந்த மாதிரி 51-வது வருஷ ஜனத்தொகை அடிப்படையில் தேர்தல் நடத்துவது ஒவ்வொரு நகரசபையும் சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்காது என்பதுதான். மூன்று வருஷ காலத்திற்கு அமையக் கூடிய நகரசபைகள் மக்கள் பிரதிநிதித்துவம் பெற்றதாக உருவாகக்கூடிய நோக்கம் இருக்கவேண்டும். தேர்தலைக்கண்டு பயப்படவில்லை; உடனடியாக ஏதோ அனுகூலத்தை அடைய

இந்தத் தேர்தல்களைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே இந்த மசோதாவை இந்த சபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் அமைச்சர் அவர்கள் ஜனநாயகத்திற்கு உகந்ததாக இருக்காது, மேலும் 4, 5 வருடங்கள் ஆகிவிடும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் புது ஜன சங்கியையின் அடிப்படையில் வார்டுகள் பிரிப்பதில் சர்க்கார் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. அதைப் பற்றி அவர்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 1963, மே மாதத்தில்தான் ஃபைனல் ஃபிகர்கள் அறிவிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் எப்படி வார்டுகளைப்\பிரிக்க முடியும் என்று தெரியவில்லை. ஆகவே வார்டுகளைப் பிரிப்பதற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை, அதற்கு இன்னும் காலதாமதம் ஆகும், அதனால் தேர்தல்களை நடத்தி விடலாமென்று முடிவு செய்தோம்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Municipal Authorities (Term of office and Election of Councillors) Bill, 1963, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER: The question is—

"That Clause 2 do stand part of the Bill."

SRI V. KRISHNAMOORTHY: Sir, I have given notice of the following amendments:—

1. Delete definition (3) and re-number definitions (4), (5) and (6) as definitions (3), (4) and (5) and add the following as definition (6) in clause 2 after definition (5) so re-numbered—

"(6) 'Local authority' means—

(i) The Municipal Corporation of Madras, or

(ii) a municipal council, or

(iii) a panchayat, or

(iv) a panchayat union council."

2. Add the following as definition (7) and re-number existing definitions (7) and (8) as definitions (8) and (9)—

"(7) 'member' means a councillor of a municipal authority or a member of a panchayat or of a panchayat union council as the case may be."

3. Add the following as definition (10)—

"(10) 'Panchayat Act' means the 'Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958)'."

கனம் சபாநாயகர் அவர்களே, நான் பேசுகின்றபொழுது இந்த முனிசிபாலிட்டிகளின் தேர்தல்களோடு, பஞ்சாயத்துத் தேர்தல்களையும் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவில்லை. ஏற்கனவே நடைபெற இருந்த தேர்தல்களை எல்லாம், சென்ற ஆண்டு நிறைவேற்றிய சட்டத்தின் மூலமாக ஒத்தி வைத்திருந்தோம். இந்த ஆண்டிலேயே பஞ்சாயத்துத் தேர்தல்களையும் நடத்தவேண்டுமென்று ஒரு திருத்தத்தை கொண்டுவந்து விட்டால், உடனடியாக இரண்டு, மூன்று மாதங்களில் முடியாவிட்டாலும், ஆறு மாத காலத்திற்குப் பிறகாவது நடத்துவதற்குச் சாதகமாக இருக்கும். இல்லை என்றால், வேறு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டியதாக இருக்கும். ஆகவே நான், முனிசிபல் கார்ப்பொரேஷன் அல்லது முனிசிபல் கவுன்சில் என்ற வார்த்தைகளுக்குப் பின்னர், 'பஞ்சாயத்து' அல்லது 'பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்' என்ற வார்த்தைகளைச் சேர்க்க வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். நான் கொடுத்திருக்கும் திருத்தங்களை எல்லாம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமென்று நம்புகிறேன்.

MR. SPEAKER: I want to know from the hon. Member Sri V. Krishnamoorthy whether his amendments are for amending the Panchayat Act or the Madras Municipal Authorities Bill.

SRI V. KRISHNAMOORTHY: I am moving amendments even to alter the short title of the present Bill.

MR. SPEAKER: That is, the hon. Member wants to include in this Bill all provisions relating to Panchayats and Panchayat Union Councils.

SRI V. KRISHNAMOORTHY: This House has passed an enactment last year to postpone the elections. So I want that Government should accept my amendment suggesting that Government should hold elections to Panchayats also along with Municipalities and the Madras City Corporation. That is the purport of my amendment to several clauses.

MR. SPEAKER: So the hon. Member's amendments do not relate to amending the provisions of the Madras Municipal Authorities Bill.

SRI V. KRISHNAMOORTHY: I have also suggested that the short title itself might be changed as the Madras Local Authorities (Term of Office and Election of Members) Act, 1963".

திரு. ரா. ப. அழகமுத்து : கனம் அங்கத்தினர் 'பொய்' என்ற வார்த்தையை . . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் பொய் வோட்டு, திருட்டு வோட்டு என்றுதான் சொன்னார்கள். மற்ற அங்கத்தினர்கள் பொய் சொல்லுகிறார்கள் என்று சொல்லவில்லை. 'பொய்' என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே துள்ளி எழுந்துவிடக் கூடாது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : It is only a general remark.

அத்தகைய தவறான முறையில் தங்கள் ஓட்டு உரிமையைப் பயன்படுத்துகிறவர்களை சாலையில் பிடித்து, போலீஸ் ஸ்டேஷனில் மரியாதையாக உட்கார வைத்து மாலையில் வீட்டுக்கு அனுப்பி விடாமல் பல மாதங்கள், பல வருஷங்கள், அல்லது ஓர் இரவாவது சிறைக்கு அனுப்பினால் விலை மதிக்க முடியாத உரிமையை சாதாரணமாகப் பயன்படுத்தக் கூடாது என்ற மனப்பான்மை இருக்கும். இத்தகைய புரட்சிகரமான முறையில் நகராண்மைக் கழகத் தேர்தல் நடத்தப்படுமானால் பின்னால் வரும் சட்ட சபை தேர்தலுக்கு உதவும். அத்தகைய கண்காணிப்போடு நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. மு. கருணாநிதி :** கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நகர சபை தேர்தல்களை விரைவிலே நடத்தவேண்டுமென்று வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தினையொட்டி என்னுடைய கருத்துக்களை நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

1951-ம் ஆண்டு இருக்கிற நிலைகளை வைத்து, இந்த நகர சபை தேர்தல்களை நடத்துவது சரி அல்ல என்கின்ற வாதத்தை எதிர்க்கட்சியிலே இருக்கிற எல்லா கனம் உறுப்பினர்களும் இங்கே மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தேர்தல்களை நடத்துவதா, நடத்துவது இல்லையா என்கிற பிரச்னை எழுகிற நேரத்தில், தேர்தல் தேவையில்லை என்றோ, அல்லது தேர்தல் இப்போது நடத்த வேண்டாம் என்றோ, அந்தப் பிரச்னையில் நாங்கள் யாரும் மாறுபாடான கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்பவில்லை. தேர்தலை இப்போது நடத்துவதற்கு இந்த அரசினர் முன் வருவது ஒன்றே, நெருக்கடி நிலை அவ்வளவு மோசமாக நாட்டில் இல்லை என்பதை எடுத்துக்காட்டுகிற தன்மையில் அமைந்திருக்கிறது என்பதனை நான் மறுக்க விரும்பவில்லை. நெருக்கடி நிலை, நெருக்கடி நிலை என்று எல்லா சூழ்நிலைக்கும் அந்த வார்த்தையைப் பயன்படுத்துகிற அரசினர், நெருக்கடி நிலை எதிர்பார்க்கிற அளவுக்கு, அல்லது சொல்லுகிற அளவுக்கு இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிற அளவிலேதான் இந்தத் தேர்தலை அவசரமாக நடத்துவதற்கு முன் வந்திருக்கிறார்கள். தேர்தலை நடத்துவதா இல்லையா என்கிற அடிப்படை கேள்வியைவிட, நடத்துகிற தேர்தல் செம்மையான முறையில் நடைபெறவேண்டுமா, வேண்டாமா என்கிற அந்தப்

பிரச்னைக்கு முதல் இடம் தரவேண்டும். 1961-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கைத் தயாரித்து வைத்து விட்டு, 1961-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இந்திய மக்கள் தொகைக் கணக்கை நம் நூல் நிலையத்தில் 1962-ம் ஆண்டு, நவம்பர் திங்களில் கொண்டு வந்து பொருத்தி வைத்து விட்டு, இத்தனை காலமாக அந்த மக்கள் தொகை அடிப்படையில் நகர சபைகளிலே தொகுதிகளைப் பிரிக்கவோ, அல்லது தேர்தல்களுக்கான காரியங்களில் ஈடுபடவோ, அத்தகைய காரியங்களில் கவனம் செலுத்தாமல் இருந்துவிட்டு, 1961-ம் ஆண்டு மக்கள் தொகையை கையில் வைத்துக்கொண்டு 1951-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் பிரிக்கப்பட்ட வார்டு கணக்கிலேயேதான் தேர்தல் நடத்துவோம் என்று சொல்வது 20 வயது நிரம்பிய வாலிபனுக்கு புதிதாக தைக்கப்பட்ட சட்டையை பெட்டியில் பத்திரமாக வைத்து விட்டு, 10-வது வயதில் தைக்கப்பட்ட சட்டையை இப்போது மாட்டிவிட்டு, அப்படி மாட்டப்பட்ட சட்டையும் கிழிந்து, சதையும் பிதுங்கி, அவஸ்தைப் படும் பரிதாபக் காட்சியைத்தான் ஜனநாயக உலகத்திற்குக் காட்டிக்கொண்டிருக்கிறோம் என்று கூற விரும்புகிறேன். 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கில் பிரிக்கப்பட்ட அந்த வார்டுகள் இன்றைய தினம் 1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கில் சிந்தித்துப் பார்த்தால் எந்த அளவுக்கு இன்னும் விரிவு அடையவும், ஒவ்வொரு நகரத்திலும் அத்தகைய டிவிஷன்கள், வார்டுகள் அதிகம் ஆகவும், ஜனநாயகம் பரவலாகவும் ஆக்கப்படுகிற சூழ்நிலை என்பதையும் அத்தகைய சூழ்நிலையை இன்றைய தினம் புறக்கணிக்கிறோம் என்பதையும் யாரும் மறந்து விடலாகாது. இன்றைய பல நகரங்களில் இருக்கிற ஆணையாளர்கள் அந்தந்த 11-30 a.m. வார்டுகளை இப்பொழுது எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் பிரித்து வைத்திருக்கிறார்கள் என்ற செய்தியையும் நாம் அறியாமல் இல்லை. அந்த சூழ்நிலையைக்கூட பயன்படுத்திக் கொள்ளாமல் 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில்தான் இந்தத் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லுவது முறையல்ல. நடைபெறுகிற காரியம் செம்மையாக நடைபெற வேண்டும் என்ற காரணத்தினால், அவகாசம் கொடுத்தாவது 1961-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தேர்தல்களை நடத்துங்கள் என்று நாங்கள் கூறுகிறோமே தவிர, ஏதோ ஆளும் கட்சிக்கு திடீரென்று அபாரமான செல்வாக்கு வளர்ந்துவிட்டது, ஆகவே எதிர்க்கட்சிகள் நகரசபை தேர்தலில் முறியடிக்கப்படும் என்கின்ற அச்சத்தினால் இப்படி சொல்லப்படுகின்றது என்ற வாதத்தை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மதுரை நகராட்சி மன்றம் மாநகராட்சி மன்றமாகும் என்ற சந்தோஷகரமான செய்தி இந்தச் சபையில் தெரிவிக்கப்பட்டது மேடையிலே அதை அமைச்சர்கள் சிலரே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மக்கள் தங்களுடைய நகரம் மாநகரமாக பாவிக்கப்பட்டு, மாநகராட்சி மன்றம் உருவாகும் என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், உடனே அது இப்பொழுது மாநகராட்சி மன்றமாகாது, நாங்கள் அந்த பழைய

வேண்டுமா, வேண்டாமா என்பதல்ல பிரச்னை. இது சட்டப்படி தவறு. நியாயப்படி தவறு. பிப்ரவரி மாதத்திலேயே நடத்த வேண்டுமென்றால் ஆட்சேபணை இல்லை. ஆனால் ஏன் இந்த ஒரு வருஷ காலமாக நடவடிக்கை எடுக்கவில்லை. இலாகா தூங்கிக் கொண்டு இருந்ததா? ஒரு வருஷம் தாமதம் ஆனது இன்னும் ஒரு வருஷம் ஆனால் என்ன கெட்டு விடும். புதிய ஜனத்தொகை அடிப்படையில் தேர்தல்கள் நடத்தி நகரசபைகள் நிருவப்பட்டால் நலமாக இருக்கும். அப்படி வலுவுள்ள, சரியான பிரதிநிதித்துவம் உள்ள நகரசபைகளாக அமையவேண்டும் என்ற நோக்கத்தில் தான் சொல்லுகிறேன். தேர்தலை ஒத்திப்போட வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்லவில்லை. ஆகவே இந்த பிரிவு மிகவும் தவறானது. இது மூல சட்டத்தின் ஏழாவது பிரிவை திருத்துகிறது. அதை நான் எதிர்க்கிறேன். அதுவும் இது இடைக் காலத்திருத்தம், ஒரு டார்மூக்கு . . . இப்படி குறுக்கு வழியில் சட்டம் கொண்டு வருவது சரியாகாது, பிரதிநிதித்துவம் அற்ற சபைகளை ஏற்படுத்தும். ஆகவே இந்த பிரிவை நான் ஆட்சேபிக்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவினுடைய 4-வது பிரிவு பற்றி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மிக்க தெளிவுபட கூறியிருக்கிறார்கள். 51-வது ஆண்டு மக்கள் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து தேர்தல் நடத்த வேண்டிய இன்றியமையாத நிலைமை இப்பொழுது ஏற்படவில்லை. புதிதாக ஜனத்தொகை அடிப்படையில் வழிவகை செய்ய அதிகமான காலம் தேவைப்படும் என்றால் அதை ஒத்துக்கொள்ளவேண்டும். 62-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கான வாக்காளர்கள் பட்டியல் இருக்கின்றன. செய்யவேண்டிய வேலை சுலபமானது. மக்கள் தொகையை வைத்துக்கொண்டு வட்டங்கள் அதாவது டிவிஷன்கள் பிரித்து தேர்தல் நடத்தவேண்டும். அதற்கு அதிக நாட்கள், திங்கள்கள் தேவையில்லை. எல்லாப் பிரிவுகள் பற்றியும், ஆங்காங்குள்ள மக்கள் எண்ணிக்கைப் பற்றியும் அங்கேயுள்ள சிறந்த ஆணையாளர்கள், தெளிவான அறிவுள்ளவர்கள், கணக்கு கொடுத்து மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்ற நகராட்சி மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை நிர்ணயிப்பதில் உதவி செய்ய முடியும். காலமும் அதிகமாக ஆகாது. வேண்டிய உத்தியோகஸ்தர்களைப் போட்டு வார்டுகளை மக்கள் எண்ணிக்கைக்கு தக்கவாறு, 30-லிருந்து 35-ஆகவோ, அல்லது 25-லிருந்து 30-ஆகவோ மாற்றி நகராட்சி மன்றத்திற்கு தேர்தல் நடத்தலாம். இதனைப் பல நாட்களுக்கு முன்னாலேயே செய்து இருக்கலாம். இது பற்றிக் கேட்கப்பட்ட போதெல்லாம் அரசாங்கம் இதை பரிசீலித்துக் கொண்டு வருவதாக விடை கொடுக்கப்பட்டு வந்து இருக்கிறது. இப்பொழுதும்
12-00 noon அதிக காலதாமதம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. இது திருப்தியற்ற தேர்தல் என்று சொல்லுகிறோமே தவிர தேர்தல் வேண்டாம் என்ற கருத்துப்பட சொல்லவில்லை. குறைபாடுகளோடு கூடிய தேர்தலை நடத்தவேண்டாம், இந்தக் குறைபாடுகளை மிகக் குறைவான காலத்தில் விரைவாகவே சீர்திருத்திக்

கொள்ள முடியும். அந்த அடிப்படையில் இந்தத் தேர்தலை நடத்தினால் ஜனநாயகம் முழுத் தன்மையோடு இயங்க இயலும். மேலும் கனம் உறுப்பினர் கருணாநிதி அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல் இரட்டை உறுப்பினர் தொகுதியாக இருந்ததைப் பாராளு மன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் மாற்றியிருக்கிறோம். அந்த ஜனநாயக ஒழுங்குக்கு உட்பட்டு—நகரசபைத் தேர்தலிலும் இரட்டை மெம்பர் தொகுதிகளையும் ஓர் உறுப்பினர் தொகுதியாக ஏற்படுத்த வழிவகை ஏற்படும். பிப்பரவரி மாதத்தில் தேர்தல் நடக்கவேண்டும் என்பது—மார்ச்சு மாதத்தில் நடந்தாலும் சரி, அல்லது ஒரு திங்கள் தள்ளிப் போனாலும் சரி அதற்குள்ளாக இந்த வார்டுகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதில் முயற்சி செய்வதுதான் நல்லது. இதற்கு அதிகச் சிரமம் கூடத் தேவையில்லை. விசாரித்து அறிந்ததில் அங்கங்கே உள்ள நகரசபை ஆணையர்கள் டிவிஷன்களைக் கூடப் பிரித்து வைத்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். எனவே இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு இதை திருத்தி அமைக்கப்பட்ட முறையில் தேர்தலை நடத்துவதுதான் ஜனநாயகம் ஆகும். அது முழுத் தன்மையும் கொண்டதாகவும் இருக்க முடியும். அப்படிச் செய்யவேண்டுமென்று இந்த அரசினரைக் கேட்டுக் கொண்டு இப்போதுள்ள பிரிவோடு கொண்டுவரப்படுகிற இந்த மசோதா திருப்திகரமானதாக இல்லையென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, முதன்முதலாக கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொன்னார்கள். 1962-ம் வருஷ முதலிலேயே சென்சஸ் ரிப்போர்ட் வந்துவிட்டது. அதை இங்குள்ள புத்தகாலயத்தில் வைத்துவிட்டு "சென்சஸ் ரிப்போர்ட் கிடைக்கவில்லை. ஆகவே வார்டுகளைப் பிரிக்கும் வேலையை மேற்கொள்ள முடியவில்லை" என்று சொன்னது தவறு என்று குறிப்பிட்டார்கள். (திரு. கலியாணசுந்தரம் குறுக்கிட்டார்கள்.) அதைத்தான் நானும் சொல்கிறேன். புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை, அதனால் வார்டுகளைத் திருத்தி அமைக்கும் வேலையை மேற்கொள்ள முடியாது போய்விட்டது' என்று சொன்ன வாதம் சரி இல்லை என்று பொருள்பட அவர்கள் பேசினார்கள்.

ஜனத்தொகை தயாரிப்பதிலே—முதலில் ப்ரிலிமினரி ரிப்போர்ட் தயாரிப்பார்கள். இரண்டாவது மொத்த ஜனத்தொகை தயாரிப்பார்கள். மூன்றாவது அந்த ஜனத்தொகையை—பிற்பட்ட வகுப்பு இவ்வளவு, ஷெட்யூல் காஸ்ட் இவ்வளவு ஷெட்யூல் ட்ரைப்ஸ் இவ்வளவு என்று பிரித்து கடைசியாக ஒரு ரிப்போர்ட் தயாரிப்பார்கள். ஷெட்யூல் காஸ்ட், ஷெட்யூல் ட்ரைப்ஸ் என்ற அடிப்படையில் சென்சஸ் ரிப்போர்ட் தயாரிக்கப்பட்ட பின்தான் எந்தப் பிரிவினையையும் செய்ய முடியும். அது சட்டசபைத் தொகுதியாக இருந்தாலும் சரி, பாராளுமன்றத் தொகுதியாக இருந்தாலும் சரி, நகரசபைத் தேர்தல் வார்டாக இருந்தாலும் சரி அப்புறம் தான் வார்டுகளைப்

வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொண்டுவிட்டால் இந்தத் தேர்தலை பழைய லிஸ்ட் பிரகாரம் தான் நடத்த வேண்டியிருக்கும். புதிய முறையில் நடத்துவது என்றால் ஒன்றரை ஆண்டு, இரண்டாண்டு தள்ளிப்போய்விடும். அவ்வளவு காலம் தள்ளிப் போனாலும் சரி, வார்டுகளை எல்லாம் புதிய ஜனசங்கியின்படி திருத்தி அமைத்த பிற்பாடே தேர்தல் நடத்தவேண்டுமென்று இந்த மன்றம் சொன்னால் பரவாயில்லை. ஏற்கனவேயே இரண்டாண்டுகளுக்குமேல் தேர்தலைத் தள்ளிவைத்து விட்டோம். இனியும் தள்ளுவது சரியாகாது, ஆகவே தேர்தலை—பழைய அடிப்படையில் தான் என்றாலும் பரவாயில்லை—தேர்தலை நடத்திவிட வேண்டுமென்று அரசாங்கம் கருதிற்று.

MR. SPEAKER : Is the hon. Member. Sri V. Krishnamoorthy moving his amendment?

SRI V. KRISHNAMOORTHY : Sir, I have given an amendment to amend the Short Title itself.

MR. SPEAKER : I have seen that already. I want to know whether the hon. Member is moving his amendment.

SRI V. KRISHNAMOORTHY : I want a clarification on that, Sir.

MR. SPEAKER : The amendment given notice of by the hon. Member Sri V. Krishnamoorthy is out of order.

The question is—

"That clause 4 do stand part of the Bill."

Clause 4 was put and declared carried.

A poll was demanded and the House divided thus :—

Ayes—

1. Sri K. Parthasarathy.
2. Sri M. Alagiriswamy.
3. Sri C. M. Ambikapathi.
4. Sri L. Anandan.
5. Sri S. Angamuthu Naicker.
6. Sri K. S. Ardhanareeswara Gounder.
7. Sri P. Appavoo.
8. Sri A. Appavoo Thevar.
9. Sri A. Arumugam.
10. Sri R. Arumugam.
11. Sri V. S. Arunachalam.
12. Sri A. M. P. S. Balagangadharan.
13. Sri V. Bashyam Reddi.
14. Sri G. E. Chinnadurai.
15. Hon. Sri M. Bhaktavatsalam.
16. Hon. Sri P. Kakkan.
17. Hon. Sri V. Ramaiah.
18. Sri P. Ramachandran.

Ayes—cont.

19. Sri R. Krishnaswamy Naidu.
20. Sri A. S. Dhankshinamoorthy Gounder
21. Sri A. Doraiswamy.
22. Sri T. P. Elumalai.
23. Sri Gomathisankara Dikshithar.
24. Sri P. Jayaraj.
25. Sri R. Jeevarathnam.
26. Sri T. Kadambavanasundaram.
27. Sri T. M. Kaliannan.
28. Sri T. Karcha Gowder.
29. Sri C. Kothandarama Bagavathar.
30. Sri K. M. Krishnaswami.
31. Sri R. Krishnaswami Gopalar.
32. Sri M. Kulandaiswami Gounder.
33. Sri T. Manavalan.
34. Sri M. Maruthanayagam Pillai.
35. Sri M. Mayandi Nadar.
36. Sri P. K. Muthuvelappa Gounder.
37. Hon. Sri N. Nallasenapathi Sarkarai Manradiar.
38. Hon. Sri G. Bhuvarahan.
39. Hon. Sri S. M. A. Majeed.
40. Srimathi T. N. Anandanayaki.
41. Srimathi A. Suares.
42. Srimathi C. Kolandai Ammal.
43. Srimathi P. K. R. Lakshmikantham.
44. Srimathi A. S. Ponnammal.
45. Srimathi R. Krishnaveni.
46. Srimathi Lakshminarasamma.
47. Srimathi Rajathi Kunchithapatham.
48. Srimathi Parvathi Arjunan
49. Srimathi N. K. Ranganayaki.
50. Kumari D. Sulochana.
51. Sri K. Narayanaswamy Pillai.
52. Sri G. Narayanaswamy Naidu.
53. Sri K. P. Palaniswamy.
54. Sri K. N. Palaniswamy Gounder.
55. Sri G. D. Perumal Raju.
56. Sri R. Ponnappa Nadar.
57. Sri S. Ponnuswamy.
58. Sri R. Rajagopalaswami Naicker.
59. Sri B. Rajagopal Naidu.
60. Sri P. Rajagopal.
61. Sri G. Rajaram.
62. Sri A. Ramachandra Raver.
63. Sri A. L. Ramakrishna Naidu.
64. Sri N. Ramaswamy Udayar.
65. Sri S. Sadasivam.
66. Sri B. Parameswaran.
67. Sri R. V. Swaminathan.

Ayes—cont.

68. Sri K. T. Kosalram.
69. Dr. B. Natarajan.
70. Sri S. Sangili.
71. Sri V. Sankaran.
72. Sri P. R. Srinivasa Padayachi.
73. Sri M. S. Selvarajan.
74. Sri R. Sengaliappan.
75. Sri N. Shanmugasundaram.
76. Sri SV. SM. Sivaraman Ambalam
77. Sri O. Srinivasa Reddiar.
78. Sri C. Srinivasan.
79. Sri A. R. Subbiah Mudaliar.
80. Sri R. Subramaniam.
81. Sri K. S. Subramania Gounder.
82. Sri K. B. Palani.
83. Sri R. Thangavelu.
84. Sri M. D. Thiagaraja Pillai
85. Sri P. Urkavalan.
86. Sri A. P. C. Veerabahu.
87. Sri O. Venkatasubba Reddy.
88. Sri M. Williams.

Noes—

1. Sri K. R. Nallasivam.
2. Sri V. R. Nedunchezhiyan.
3. Sri M. Karunanidhi.
4. Sri K. A. Mathialagan.
5. Sri Saw. Ganesan.
6. Sri M. Kalyanasundaram.
7. Sri A. P. Dharmalingam.
8. Sri A. K. Subbiah.
9. Sri M. Rajangam.
10. Sri Kanchi Manimozhiar.
11. Sri KR. RM. Kariamanicka Ambalam.
12. Sri M. Shanmugam.
13. Sri N. Rajangam.
14. Sri V. Arunachalam.
15. Sri N. Chinnamunisamy Chetty.
16. Srimathi Manonmani Ammal.
17. Sri S. Madhavan.
18. Sri T. P. Alagamuthu.
19. Sri S. Mani.
20. Sri A. Thiagarajan.
21. Sri P. Murugaiyan.
22. Sri A. Duravarasan.
23. Sri V. R. Periannan.
24. Sri C. G. Viswanathan.
25. Sri S. Muthulingam.
26. Pulavar K. Govindan.

Noes—cont.

27. Sri C. V. Velappan.
28. Sri C. Manickam.
29. Sri T. Chinnasamy.
30. Sri M. R. Krishnamurthy.
31. Sri A. Thangavelu.
32. Sri S. Murugaiyan.
33. Sri P. U. Shanmugam.
34. Srimathi Jagadhambal Velayudham.
35. Sri M. S. Mani.
36. Sri K. Thirupathy.
37. Sri C. K. Chinnaraji.
38. Sri M. P. Vadivelu.
39. Sri N. P. Sengottuvelu.
40. Sri M. V. Karivengadam.
41. Sri A. G. Balakrishnan.
42. Sri S. Ramaswamy.
43. Sri V. Krishnamurthy.
44. Sri S. J. Ramaswamy.
45. Sri R. Sampangi.

Neutral—

1. Sri A. Swamidhas.
2. Sri R. S. Veerappa Chettiar.

Ayes—88.

Noes—45.

Neutral—2.

Clause 4 was put and carried.

Clauses 5 and 6 were put and carried.

Clause 1 *and the Preamble.*

MR. SPEAKER : The question is—

'That clause 1 and the Preamble do stand part of the Bill.'

SRI V. KRISHNAMOORTHY : Mr. Speaker, Sir, the Chair has already given a ruling and I am not contesting it. I have given notice of an amendment to amend the Short Title of the Bill itself. I want a clarification from the Chair as to whether this House has got any right to amend the title itself or not.

MR. SPEAKER : In amending the name of a Bill, a new matter, which is outside the scope of the present Bill cannot be put into it. Therefore, I rule this also out of order.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI S. M. A. MAJID : Mr. Speaker, Sir, I move—

'That the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963 as amended, be passed.'

[Sri P. Kakkan] [20th November 1963

were elected by the Legislative Assembly under clause (*a*) of sub-section (7) of Section 8 of the Madras Land Improvement Schemes Act, 1959 (Madras Act 31 of 1959), as members of the Madras Land Improvement Board to fill the casual vacancies in the office of the Members of the Board constituted by the Government in their Order Ms. No. 3946, Food and Agriculture, dated the 2nd December 1960.

And whereas the term of office of the members referred to in clause (*f*) of sub-section (2) of the said section expires on the 1st December 1963, by efflux of time, under clause (*a*) of sub-section (5) of the said section;

Now therefore, in pursuance of clause (*f*) of sub-section (2) of section 8 of the Madras Land Improvement Schemes Act, 1959 (Madras Act 31 of 1959), this House do proceed, on a date to be fixed by the Honourable Speaker to elect three members of the Legislative Assembly to be the members of the said Board."

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இம்மாதிரிப்பட்ட அரசாங்க தீர்மானங்கள் வரும்போது, அங்கத்தினர்களுக்கு தீர்மானத்தினுடைய நகலை அனுப்பிவிட்டு நிகழ்ச்சிநிரலில் சேர்த்தால் நல்லதாக இருக்கும். இந்தத் தீர்மானம் கொண்டு வரப்போவதாக இப்போது அஜெண்டாவில் இருக்கிறது. அஜெண்டாவை ஸர்குலேட் பண்ணினார்கள். ஆனால் தீர்மானத்தை ஸர்குலேட் செய்யவில்லை. அஜெண்டா வந்த பின்னால் தான் தீர்மானம் வரப்போகிறது என்பதை நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. அஜெண்டாவில் சேர்ப்பதற்கு முன்னால் தீர்மானம் ஸர்குலேட் செய்யப்பட வேண்டும். இனிமேலாவது இம்மாதிரி நிகழக்கூடாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Was it circulated? Anyhow, I will look into it.

The motion was put and carried.

MR. SPEAKER: I have to announce to the House that in accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 11 a.m. on the 21st November 1963, as the time within which nomination papers of candidates for the election to the Madras Land Improvement Board should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 3 p.m. on the 21st November 1963. I also fix 11 a.m., on the 22nd November 1963 as the last hour and date for the withdrawal of candidature.

20th November 1963]

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, viz., three, a poll will be taken on the 23rd November 1963 between the hours of 10 a.m. and 1 p.m.

V.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS URBAN LAND TAX BILL, 1963 (L.A. BILL NO. 2 OF 1963), AS AMENDED BY THE SELECT COMMITTEE—*cont.*

MR. SPEAKER: Now the discussion on the Madras Urban Land Tax Bill, 1963, will be continued. The hon. Member, Sri Saw Ganesan will now speak.

* **திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, நகர்ப்புற நிலவரி மசோதா பொறுக்கும் கமிட்டியின் சிபாரிசுகளோடு இங்கு வந்திருக்கிறது. அதில் நான் ஒரு உறுப்பினன் என்ற முறையில் என்னுடைய மறுப்புக் குறிப்பையும் கொடுத்திருக்கிறேன். அதிலும் பல விவரங்கள், காரணங்கள் இவைகளையும் கூறியிருக்கிறேன். இந்த விதியின் பிரகாரம் ஒரு சொத்தின் தற்கால மதிப்பை அடிப்படையாகக் கொண்டு அதன்மீது வரி விதிக்கின்ற அதிகாரத்தை அரசாங்கம் பெறுகிறது. இந்த நகர்ப்புற நிலங்களுக்கு முதன் முதலில் வரி போட்டது சென்னையில்தான். பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் முதன்முதலில் இந்த நாடு முழுவதிலும் போட்ட பல வரிகளில் முதலாவது இந்த க்விட் ரெண்ட் என்பது தான். பழைய நூல்களிலிருந்து—குறிப்பாக— "The Manual of Administration of the Madras Presidency" என்கிற நூலிலிருந்து, இந்த உண்மைகள் எல்லாம் நமக்குத் தெரியவருகிறது. அப்போது க்விட் ரெண்டும் துப்புரவு **Secavanging Tax,** வரியும் சேர்த்து விதிக்கப் பட்டது. பின்னால் இந்த வரி இரண்டாகப் பிரிக்கப்பட்டு க்விட் ரெண்டை (ஈஸ்ட் இந்தியா கம்பெனியும்) கிழக்கிந்திய கம்பெனியும், மற்றொரு பகுதியை கார்ப்பரேஷன் அல்லது நகரசபையும் பெற்றது. பின்னால் நகரசபையே இந்த வரியை விதிக்கலாம் என்று அனுமதி கொடுத்துவிட்டு க்விட் ரெண்ட் மட்டும் இருந்தது. பிற்காலத்தில் அதுவே சென்னையில் காணிவரி, மனைவரி என்ற பெயர்களைப் பெற்று இருந்து வருகிறது. இவற்றையெல்லாம் நாம் மனத்திலே கொள்ள வேண்டும். இப்போது விதிக்கின்ற வரி ஒரு சொத்தின் தற்கால மதிப்பு என்னவாக இருக்கிறது என்று பார்த்து வரி விதிப்பதாக அமைகிறது. மதிப்பு என்பது வருமானமாக அமைய மாட்டாது. ஒரு ரூபாய்க்கு வாங்கிய ஒரு பொருள் என்னிடத்தில் இருப்பதாக வைத்துக் கொண்டால், அது பிற ஒருவரிடமிருந்து எப்பொழுது ரூபாய் பத்துக்கு மதிப்பை பெறுவதுடன் ரூபாய் பத்துக்குக் கை மாறுகிறதோ அப்போது தான் அது வருமானமாக உரு எடுக்கும். ஒரு பொருள் பிறருக்கு விற்ற பிறகுதான் வருமானம் என்ற வடிவத்தை கொள்ளும். எனவே அந்த வகையில் பார்க்கும்போது எந்த ஒரு பொருளும் எந்தத் தொகைக்கு வாங்கப்பெற்றதோ அந்தத் தொகையின்

மதிப்பையுடையதாகவே இருக்கும். அதுவல்லாமல் ஒரு பொருள் விற்கப்படாமல் தங்கள் கையில் இருக்கும்போதே பிறருடைய மதிப்பை வருமானமாக மதிப்பிடுவது பொருளாதார அடிப்படையில் பொருத்தமாக அமைய மாட்டாது என்பதை முதன் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக என்னுடைய பாட்டன் மதுரைக்காரராக இருந்தார் என்று வைத்துக்கொள்வோம்—இப்போது இந்தச் சட்டம் மதுரைக்குத் தான் பொருந்துவதாக இருப்பதால் மதுரைக்காரராக இருந்தார் என்று எடுத்துக்கொள்வோம்--என்னுடைய பாட்டன் ஏதோ இங்கு ஒரு தொழில் செய்து பிழைத்துக் கொண்டிருந்தார். அதன் மூலமாக சுமார் 1,000 ரூபாய் அளவிற்கு முத்தியாலுப்பேட்டையில் ஒரு வீட்டை வாங்கியிருந்தார். அதன் பிறகு அவருடைய மக்கள் அந்த வீட்டை தாங்களே அனுபவித்துக்கொண்டு வந்தார்கள். இன்னும் விற்கப்படவில்லை. அதே வழியில் வந்த நான் இங்கு ஏதோ தையல் தொழில் செய்தோ அல்லது ஏதோ கிளார்க் உத்யோகம் பார்த்துக்கொண்டோ அதே வீட்டில் இருந்து வருகிறேன். இப்போதுள்ள மார்க்கட் நிலவரப்படி அந்த வீட்டுக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை மதிப்பிடுகிறார்கள். ஆனால் நான் அந்த வீட்டை வாடகைக்கு விடவில்லை, விற்கவும் இல்லை. நானே இருந்து வருகிறேன். எனது பாட்டன் அன்றிருந்த நிலையில், 20 ரூபாய் 50 ரூபாய் என்று சேர்த்து அப்போதுள்ள நிலையில் வீட்டை வாங்கினார். அப்போது அவருக்கு அந்த வீட்டுக்கு 1,000 ரூபாய் தான் ஆனது.

ஒரு கிரவுண்டு அப்போது 25 ரூபாய்க்கு அல்லது 50 ரூபாய்க்கு வாங்கிய நிலம் இப்போது 5,000 ரூபாய் அல்லது 10,000 ரூபாய் அல்லது 20,000 ரூபாய் மதிக்கப்படுகிறது, அல்லது மதிக்கப்படக் கூடும், சுற்றியுள்ள விலை நிலவரம் அப்படி இருக்கிறது என்று சொல்லி, அதற்கு வரி விதிப்பதானால், அந்த வீட்டில் ஒரு தையல் கடை போட்டுக் கொண்டு அல்லது கிளார்க்காக வாழுகிற ஒருவர் அந்த வீட்டில் இருந்துகொண்டிருப்பாரானால், அவருடைய பொறுப்பு எவ்வளவுக்கு உயர்ந்து விடும் என்பதை மறந்து விடப்படாது.

அதே மாதிரி நான் பிற ஜில்லாக்களுக்கு, பிற நகரங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படக்கூடும். எனவே இதனால் ஏற்படக் கூடிய துன்பம் எல்லோருக்கும் வளரக்கூடியதாக இருக்கும். இது நியாயமும் தர்மமுமாகாது. சட்டசம்மதமானதுமல்ல. முன்னைய ஆட்சியின் வாக்குறுதிகளைத் துடைத்தெறிவதுமாகும். அதற்கு நல்ல ஒரு உதாரணம் குறிப்பிட வேண்டுமானால், அந்த மான்யுவலிலேயே பச்சையாக இதைச் சொல்லியிருக்கிறார்கள்—

'It is however, permanent, not liable to be modified periodically and is payable in arrears in one payment and not in instalments.'

எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி முன்பு இப்படியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இப்போது புதிய சட்டத்தின் மூலமாக அது மாற்றப்படலாம். மாற்றப்பட்டாலும், மாற்றுவதற்கு உரிமை இருக்கிறது என்று அரசாங்கம் வாதாடலாம், உரிமை இருந்தாலும், எந்த அடிப்படையில் முன் இந்த வரி போடப்பட்டது என்பதை மறந்துவிடப்படாது.

அதையும் விட்டு வேறு ஒரு வகையில் பார்த்தால் இப்போது ஒரு வீட்டுக்கு வாடகையின் மதிப்பு அல்லது நிலத்தின் மதிப்பு, சுற்றுப்புறச் சூழ்நிலையின் பேருமான மதிப்பு கூடியிருக்கிறது என்று சொல்லி 500 ரூபாய், அல்லது 100 ரூபாய் அல்லது 50 ரூபாய் வரி என்று போட்டால், ஒருவர் பல வீடுகள் வைத்துக் கொண்டிருக்கலாம், அப்போது அவைகளில் குடியிருப்பவர்கள் நூற்றுக்கணக்கானவர்களாக இருக்கலாம், அது அவர்கள் தலையில் தான் திரும்ப வந்து சேரும். லீஸ் அன்ட் ரென்ட் கன்ட்ரோல் ஆக்ட் இருக்கிறதே, அதிலே இந்த விபரம் சுத்தமாகப் போடப் பட்டிருக்கிறது 6-வது விதியிலே—

"6. *Increase over rent in certain cases.*—Where the amount of the taxes and cesses payable (including any new tax or cess which has become payable) by the landlord in respect of any building to a local authority for any half-year commencing on the 1st April 1950, or any later date exceeds the amount of the taxes and cesses payable in respect thereof to the same or any other local authority for the half-year ending on the 30th day of September 1946, or for the first complete half-year after the date on which the building was first let, whichever is later, the landlord shall be entitled to claim such excess from the tenant in addition to the rent payable for the building under this Act."

இதை மனதிலே பதித்துக்கொள்ள வேண்டும்.

அதற்கு மேலே இதிலேயும் விட்டு விட்டால் குறை ஏற்பட்டு விடுமோ என்று சொல்லி இங்கே 31-வது க்ளாஸிலே இது தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. அந்த போர்ஷனை மாத்திரம் படிக்கிறேன்—

"The Court, authority, or officer empowered to fix the rent under any of the said Acts, may, on application from the owner, add to the annual rent aforesaid, an amount not exceeding the urban land tax payable under this Act."

என்று இப்படி எல்லாம் வழிவகை செய்து விட்டதாலே என்ன வரி விதித்தாலும் அது இறுதியிலே குடியிருப்பவர் தலையில் தான் வந்து விடியும். முடிவில் என்ன நிலைமை ஏற்படும் என்றால், "இஞ்சி லாபம் மஞ்சியிலே" என்று சொல்லுவார்கள்; அதன்படி பார்த்தால் இப்படி வரி போடுவதால் வீட்டு வாடகை அதிகரித்து விடும். அதில் குடியிருக்கக் கூடிய ஊழியர்கள் வாடகையெல்லாம் கூடி விட்டது. சம்ப

பிரித்து அமைக்க முடியும். நான் கூறிய இந்த வரிசையில் இரண்டாவதாகத் தயாரிக்கப்படுகிற மொத்த ஜனத்தொகை சென்ஸஸ் ரிப்போர்ட் தான் 1962-ம் வருஷம் நமக்குக் கிடைத்தது. திடீரென்று பிரித்து ஒரு பக்கத்தைப் படிக்கிறேன், பாருங்கள். இந்தப் பக்கத்தில் பண்ணுருட்டி வருகிறது. மொத்த ஜனத்தொகை 18,854. ஆண்கள் 9,491. பெண்கள் 9,263. அதிகபட்சம் 4,170. இந்த விவரத்தைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. இதை வைத்து வார்டுகளைப் பிரிக்க முடியாது. ஏனென்றால் ஷெட்யூல் காஸ்ட், ஷெட்யூல் ட்ரைப்ஸ் எத்தனை என்று பிரித்த பிற்பாடுதான் எந்த எந்த வார்டுகளை எப்படிப் பிரிக்கலாம் என்பதை ஆலோசிக்க முடியும். அந்தவிதமான அறிக்கை 1963-ம் வருஷம் மே மாதம் தான் கிடைத்தது என்று சொன்னேன். அதனால்தான் சர்க்காரிலேயே அந்த அறிக்கையை வைத்துக்கொண்டு வீண் காலதாமதம் செய்வதாகச் சொல்வது சரியல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அப்படியானால் மக்கள் சபைத் தொகுதிக்கும், சட்டசபைத் தொகுதிக்கும் முன்னதாகக் கிடைத்ததா, அவற்றைப் பிரிக்க?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எல்லா விவரங்களும் மே மாதத்தில்தான் கிடைத்தது. அதற்குப் பிறகுதான் தொகுதிகளைப் பிரிக்க முடியும். இன்னும் இதுபற்றி கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கொண்டு விளக்கவேண்டுமென்றால் விளக்குகிறேன். ராஜ்யம் பூராவுக்குமாக என்றால் எத்தனை ஷெட்யூல் காஸ்ட், ஷெட்யூல் ட்ரைப்ஸ் பாபுலேஷன் இருக்கிறது என்று மொத்தமாகப் பார்த்து மொத்தமாக சீட் அலாட் செய்யலாம். ஆனால் நகரசபைத் தேர்தல் சம்பந்தமாக ஒவ்வொரு வார்டும் பிரிக்கப்படவேண்டும் என்கிறபோது அந்த விவரம் போதாது. தனித்தனியாக ஒவ்வொரு நகரம் சம்பந்தப்பட்ட வரையில் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கை தேவைப்படுகிறது. இந்த அறிக்கை நமக்கு மே மாதம்தான் வந்தது. மொத்தமாக இருக்கிற எண்ணிக்கையை வைத்துக்கொண்டு மொத்தமான சீட்டைத் தான் நிர்ணயிக்க முடியும். அந்தமாதிரி இந்த வார்டுகள் சம்பந்தமாகச் செய்ய முடியாது.

திரு. சா. கணேசன்: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். நம்முடைய மாநிலத்தில் சுமார் 60 நகரங்கள் இருக்கின்றன. அதில் ஷெட்யூல் காஸ்ட் இருக்கிற பகுதி இரண்டு அல்லது மூன்று வார்டுதான். அப்படி எந்த எந்த வார்டுகளில் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து அதைப் பிரித்துவிடுவது மிகவும் சுலபம். அதுவும் முதலில் வார்டுகளில் தயாரிக்கப்படுகிற விவரங்கள்தான் மாநில அரசாங்கத்திற்கு வருகிறது. மாநில அரசாங்கத்திற்கு வந்த புள்ளிவிவரங்கள்தான் டெல்லிக்குச் செல்கிறது. ஆகவே டெல்லி அறிக்கை வரவில்லை என்று சொல்வதைக் காட்டிலும், வார்டுகளில் தயாரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களைக் கொண்டு வார்டுகளைப் பிரித்திருக்க முடியாதா என்ற விஞ்ஞாபனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சென்சஸ் ரிப்போர்ட் என்று அபிஷியலாக அறிக்கை வருகிற வரையிலும் ஒன்றும் செய்ய முடியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: ஒரு விளக்கம் பெற விழைகிறேன். தனித்தனியாக எடுத்திருக்கிற எண்ணிக்கையைக் கூட்டித்தான் மொத்தமாகக் கூற முடியும். ஆகவே மொத்தமாகக் கூட்டிச் சொல்வதற்கு முன் தனித்தனியாக எடுக்கப்பட்ட எண்ணிக்கை அந்த அந்த நகரத்திலேயே வேண்டுமென்றால் கிடைக்காதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதைத்தான் நான் முன்பு சொன்னேன். அந்த விவரங்கள் எல்லாம் இருந்தாலும் கூட அதிகார பூர்வமான ரிப்போர்ட் கிடைத்தவுடன் தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். அவ்விதமான அறிக்கை நமக்கு மே மாதத்தில் தான் கிடைத்தது. ஆகவேதான் 1962-ஆம் வருஷமே வந்துவிட்டதே, அதைக் கையில் வைத்துக் கொண்டு அந்த அறிக்கை வரவில்லையென்று சொன்னார்கள் என்கிற குற்றச்சாட்டு சரியில்லையென்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: பாராளுமன்ற, சட்ட சபைத் தொகுதிகள் பிரிப்பது சம்பந்தமாக—ஒதுக்கப்பட்ட தொகுதிகள், ரிசர்வ் தொகுதிகள் என்று பிரிப்பது முதலில் வந்த அறிக்கையைக் கொண்டு முடியுமானால் இது ஏன் முடியாது . . . .

கனம் சபாநாயகர்: அதுபற்றித்தான் முதலில் சொன்னாரே, மொத்தமாகப் பிரிக்கலாம், தனித்தனியாகப் பிரிக்க முடியாது என்பதாக.

திரு. இரா. நெடுஞ்செழியன்: மே மாதத்தில் புள்ளிவிவரம் கிடைத்ததாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மே மாதத்தில் அறிக்கை கிடைத்தது என்று கொண்டாலும் மே மாதத்திற்கும் இந்த நவம்பர் மாதத்தில் இடையேயுள்ள மாதங்களில் நகரசபைகளின் வார்டுகளைத் திருத்தி அமைக்க வாய்ப்பு இல்லையா?

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்போது கனம் அங்கத்தினர் தம்முடைய வாதத்தை மாற்றிக் கொண்டுவிட்டார்கள். முதலில் அவர்கள் சொன்ன வாதத்தின் அடிப்படையில்—அவர்கள் சொன்ன குற்றச்சாட்டு சரியில்லை என்றுதான் எடுத்துக் காட்டினேன்.

இரண்டாவதாக சட்ட பூர்வமான பிரச்னை ஒன்றை திரு. கலியாணசுந்தரம் அவர்கள் எழுப்பினார்கள். டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டி ஆக்ட்டுக்கு மாறாக இந்தச் சட்டத்திலே போட்டிருப்பது சரியா என்றார்கள். அந்தச் சட்டத்தில் கண்டிருப்பதை மாற்றுவதற்காகத்தான் இந்தச் சட்டத்திலேயே not withstanding anything contained in the District Municipalities Act." என்று போட்டிருக்கிறோம். இன்றைக்குத் தேர்தலை நடத்த

ளத்தை உயர்த்துங்கள் என்று இங்கே வந்து நிற்பார்கள். மேலும் இதை அமல் நடத்த, வரியை வசூல் செய்ய என்று போடப்பட்ட உத்தியோகஸ்தர்கள் சம்பளம் எல்லாம் கணக்கிட்டால் நிகரலாபமாக அல்ல நஷ்டமாக நம்மைச் சேரும்.

அதற்கும் அதிகமாக கணிப்போமானால், சென்னை போன்ற நகரங்களில் வீடு கட்டும்போது காலியிடம் விடுவது கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது, டவுன் ப்ளானிங் ஆக்ட் மூலமாக. சென்னை நகரத்திலே ஒரு சிறிய, ஒருவர் வாழுகிற ஒரு குடித்தன வீடு கட்டவேண்டுமானால் ஒரு எக்கர் நிலம் இருக்கவேண்டும் என்று சொல்லி டவுன் ப்ளானிங் ஸ்கீமிலே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அத்தகைய நிலைமை சவுத் மைலாப்பூர் டவுன் ப்ளானிங் ஸ்கீமில் கூட இருக்கிறது. அதிலே ("எ ட்வெல்லிங் ஹவுஸ்" என்று சொல்லப்படும் குடியிருப்பு வீடு கட்டும் மனையின் விஸ்தீரணமாக ஒரு எக்கராவது இருக்கவேண்டும் என்று போட்டிருக்கிறது. ஒரு ட்வெல்லிங் ஹவுஸ் என்றால் ஒரு சமயற்கட்டு, ஒரு சாப்பாட்டுக் கட்டு, ஒரு வரவேற்புக் கூடம் கூடியதுதான் என்று வரையறை செய்கிறது. லெட்ரீன் வேண்டுமானால் இரண்டு அல்லது மூன்று இருக்கலாம். இப்படி வரையறை செய்யப்பட்டு அதற்குட்பட்டதுதான் ஒரு ட்வெல்லிங் ஹவுஸ் என்று நிர்பந்தப்பட்டிருக்கிறது. கட்டாயப்படுத்தப்பட்டு, ஒரு எக்கரில் ஒரு வீடுதான் கட்டவேண்டும் என்ற சட்டத்திற்கு கட்டுப்பட்டு கட்டிய பிறகு வீடு, நிலம் எல்லாம் ஒரு எக்கர் இருக்கிறது என்று அந்த நிலத்திற்கு வரி விதிக்கிறேன் என்று சொல்வது தர்மமாக இராது, நியாயமாக இராது.

இன்றைன்று. நிலத்திற்கு மதிப்பு எல்லாம் எப்படி ஏறியது? நல்லவர்கள், கற்றவர்கள், நாகரிகமாக இருக்கிறவர்கள், சுத்தமாக இருக்கிறவர்கள், சுகாதாரமாக இருக்கிறவர்கள் குடியேறி தாங்கள் இருக்கும் இடத்தை வசதியாக, அழகாக, பொலிவாக, ஏன் மணமாகக் கூட, மலர்த் தோட்டங்களுடன் வைத்து இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதியில் மற்றவர்கள் குடியேற விரும்புகிறார்கள். அந்த முறையில் சுத்தமாக இருந்த காரணத்தினால் அதற்கு மவுசு வந்தது. அதன் காரணமாக விலையும் கொஞ்சம் ஏறியிருக்கலாம். இப்போது அதற்கு அதிகமான வரி கொடுக்கவேண்டுமென்று சொன்னால் என்ன அர்த்தம்? "நீ ஏன் கற்றவனாக இருந்தாய்?, ஏன் நல்லவனாக இருந்தாய்?, ஏன் சுகாதாரமுள்ளவனாக இருந்தாய்?, ஆகவே, இது உனக்கு தண்டனை" என்று சொல்லுவது போல் அமைகிறதா? இல்லையா? நல்லதனத்திற்கும், கற்றமைக்கும், சுகாதார நிலையோடு வாழ்வதற்கும் தண்டனை விதிப்பது என்றால் யாரிடம் முறையிடுவது? ஆண்டவனிடம் தான் முறையிடவேண்டும். (சிரிப்பு) இதை நாம் நன்றாக மனத்திலே கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மதிப்பு கூடியது யாரால் ஏற்பட்டது என்பதையும் மறந்து விடுவதற்கில்லை. நிலத்திற்கு மதிப்பு கூடிற்று என்றால் வேறு யாரும் செய்யவில்லை. சூழ்நிலையும், அவர்களுடைய ஒழுக்கமும், அவர்களுடைய பண்பாடும், நாகரீகமும் அந்தப் பகுதிக்கு மதிப்பை உயர்த்தியது; அரசாங்கமோ அல்லது மற்றவர்களோ உயர்த்தி விடவில்லை. அப்படி இருக்கும்போது வரி விதிக்கவேண்டும், அல்லது விதிக்கலாம் என்று அனுமதிப்பது பொருத்தமாக இராது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆயிரம் ரூபாய்க்கு 4 ரூபாய் வரி என்று, அவ்வளவு அதிகமாகக் கூட இல்லை என்று பொருள்படும்படி கனம் உறுப்பினர் கலியாணசுந்தரம் பேசினார்கள். (திரு. மீ. கலியாணசுந்தரம் குறுக்கிட்டு) நெல்லுக்கு இறைத்த நீர் தான் புல்லுக்கும் பொசியும் என்பதை மறந்து விடப்படாது. மிகப் பெரியவர்கள், லட்சாதிபதிகள், கோடீசுவரர்கள் இருந்தால் அவர்களுக்கு நன்றாக வரி போடுங்கள், ஆட்சேபிக்கவில்லை, யாராக இருந்தாலும் சரி. ஏழைகள், வீட்டைத் தவிர கதியில்லை என்று வீட்டிலே குடியிருப்பவர்களுக்கு, எதிர்பாராத வகையில் மவுண்ட் ரோடுக்குப் பக்கத்தில் அல்லது மண்ணடிக்குப் பக்கத்தில்—அந்தக் காலத்தில் மண்ணடிக்கு ப்ளாக் டவுன் என்று தான் பெயர் இருந்தது—அத்தகைய ப்ளாக் டவுனில் அல்லது கறுப்பர் பகுதியில் வாழ்ந்து விட்டார் என்பதற்காக தண்டனை கொடுப்பது நியாயமாக இருக்காது, தர்மமாக இருக்காது. நான்கு சத விகிதம் தான் என்று சொன்னாலும் அன்றைக்கு 25 ரூபாய்க்கு வாங்கியது இன்றைக்கு 1,000 ரூபாயாக மதிக்கப்படுகிறது என்பதை மறந்து விடப்படாது. இந்தக் கணக்கில் பார்க்கும்போது, இங்கே நம் செக்ரெட்டேரியட்டில் அல்லது வேறு தொழில் துறையில் சாதாரண நிலையில் இருக்கிற ஒரு மனிதன் இருக்கிறான். அப்படி இருப்பவர்கள் 150 ரூபாய் சம்பளம் வாங்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அத்தகைய ஒரு வீட்டில் இருக்கிறார்கள் என்பதற்காக, எதிர்பாராத வகையில் 40,000 ரூபாய் அல்லது 20,000 ரூபாய் மதிப்புக்கு வந்து விட்டது, மவுண்டு ரோடுக்கு அல்லது மண்ணடிக்குப் பக்கத்தில் ஒரு சந்தில் இருப்பதால். ரூபாய் 40,000, 20,000 என்று வைத்துக்கொண்டால், 40 × 4 ரூபாய் 160; அல்லது 20 × 4 ரூபாய் 80 டாக்ஸ் கட்டவேண்டும், ரூபாய் 50 சம்பளக்காரர். எல்லா இடங்களிலும் இப்படித்தான் என்று சொல்லவில்லை. இதற்கு மாறுபட்ட நிலையாகவும் இருக்கலாம். இதை நாம் மனத்திலே கொள்ளவேண்டும். இதுமாதிரி இருக்கும்பொழுது ஒன்றை நாம் உறுதியாக வைத்துவிடலாம். பெரிய மாட மாளிகைக்காரர்களுக்கு என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், அவைகளைக்கூட விட்டுவிடலாம். ஆனால், சாதாரணமாக, வாடகைக்கு விடாத நிலையில்; தானே குடியிருக்கிற எந்த வீடும் இதற்கு விலக்கு என்று

MR. SPEAKER: Motion moved—

'That the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963, as amended, be passed.'

* **திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா நிறைவேற்றப் பெற்றுவிட்டது. இந்த நிலையில் விரைவிலே தேர்தல்கள் நடைபெற வேண்டும். தேர்தல்கள் செம்மையாகவும், திறமையாகவும் நடைபெற ஆட்சியில் உள்ளவர்கள் நிறைந்த அக்கறை காட்டுவார்கள், காட்ட வேண்டுமென்பது என் வேண்டுகோள். எங்கும் சுமுகமான சூழ்நிலையும், எல்லோருக்கும் சம சந்தர்ப்பமும், வாய்ப்பும் அமைவதும் இப்போதுள்ள கெடுபிடி நிலைமைகளை எல்லாம் மாற்றி, 144 போன்றவற்றையெல்லாம் நீக்கி எல்லாக் கட்சிகளும், எல்லா நபர்களும் போட்டியிட பரிபூரண சுதந்திரத்தைக் கொடுக்கக்கூடிய நிலையில் தேர்தல்கள் நேர்மையாகவும், செம்மையாகவும் நல்ல சூழ்நிலையில் அமையவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் . . . .

(**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஆண்டவனை பிரார்த்திக்கிறேன்.)

ஆண்டவனை பிரார்த்திப்பது எனக்குத் தெரியும். அதைச் செய்ய இதுதானா இடம்? என் பிரார்த்தனை அறையில் இருந்துகொண்டு நான் ஆண்டவனைப் பிரார்த்திக்க முடியும். இந்த அதிகாரிகளைப் பிரார்த்திக்க இருக்கிறேன். இந்நாட்டிலே நல்ல ஜனநாயக நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். ஜனநாயகத்திற்கு வியாக்கியானம் செய்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். அதற்கு பதில் சொல்ல நான் தயாராயில்லை. பரிபூர்ணமாக சமத்துவம், சம சந்தர்ப்பம், உரிமை என்ற நிலை அமைவதற்கு அரசாங்கம் முழுக்க முழுக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் மூலம் நான் வேண்டிக் கொள்கிறேன். அந்தச் சூழ்நிலை அமைய ஆளும் கட்சியினருக்கு எவ்வளவு அக்கறை உண்டோ அவ்வளவு அக்கறையை எதிர்ப்புறத்தில் உள்ள, எதிர்க் கட்சிகளில் உள்ள நாங்களும் காட்டுகிறோம். அது நிறைவேற சகல உதவிகளையும் நாங்களும் மனப்பூர்வமாக அளிப்போம் என்று எதிர்க்கட்சியினரின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இது நிறைவேறிவிட்ட நிலையிலும் சில திருத்தங்கள் கூட செய்யவேண்டிய அவசியம் ஏற்படலாம். சில இரட்டை உறுப்பினர் தொகுதிகளில் பெண்கள் வருகிறார்கள். சிலவற்றில் ஹரிஜனங்கள் வருகிறார்கள். இன்றைய அரசியல் நெறியும் விதியும் அமைக்கப்பட்டிருக்கிற நிலையில் பெண்களுக்கு என்று தனித் தொகுதி ஒதுக்கப்படவில்லை. முனிசிபாலிட்டியிலோ ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் செம்மைப்படுத்த வேண்டும். இந்த மசோதாவில் அதைக் காணோம். அதை எப்படி அமைக்கவேண்டுமென்று கவனிக்க வேண்டும். சட்டம் நிறைவேறி விட்டதால் அந்தப் பொறுப்பு இல்லை என்று ஆட்சித் துறையில் உள்ளவர்கள் நினைக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அதையும் கவனிக்க வேண்டுமென்று கூறி எங்கும் சுமுகமான சூழ்நிலை அமைய எல்லா வழிவகைகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்தில் நான் பேசுவதால் இந்த மசோதாவை நான் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம் அல்ல. மெஜாரிட்டி பலத்தால் இந்த சபையில் இந்த சட்டம் நிறைவேறினாலும் கூட எங்கள் கருத்துக்களை சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் இந்த சமயத்தில் நான் நிற்கிறேன். ஒரு விசேஷ அதிகாரத்தைப் பெற்று பத்து ஆண்டுகளுக்கு முந்திய அடிப்படையில் தேர்தலை நடத்துகிறீர்கள். ஒரு விஷயத்தையாவது கவனிக்கவேண்டும். தேர்தல் நடத்துவதற்கு முன்பு எல்லா நகரங்களிலும் ஓட்டர் பதிவித்து பொதுவான சந்தர்ப்பம் கொடுத்து, விட்டுப் போனவர்கள், தவறிப் போனவர்கள், பொய் வோட்டு பதிவு செய்தவர்கள், இவற்றையெல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டும். பொய் வோட்டு போடுவதில் எந்தக் கட்சி குறைவு, எந்தக் கட்சி அதிகம் என்று இருக்கிறதே, அப்படி எல்லாக் கட்சிகளும் அதில் ஈடுபடுகிறார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம். கட்சிக்கொள்கை எடுபடாமல் போனாலும் இருக்கலாம். அபேட்சகர் எப்படியாவது தான் ஜெயிக்கவேண்டுமென்று நினைக்கிறார். தேர்தலில் ஊழல்களுக்கு இடம் அளிக்காத வகையில் எந்த அளவு ஜனநாயக அடிப்படையில் நடத்த வேண்டுமோ அந்த வகையில் அதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தேர்தலும் பொது தேர்தல் போன்று 12 30 p.m கருதி எல்லா கட்சிகளும் [illegible]. மாகாண ரீதியாக இருந்தாலும் [illegible]. அதையும் பொதுத் தேர்தல் நேரத்தில் எந்த விதமான ஊழல்களுக்கும் இடம் பெறாத அளவுக்கு ஓர் உடன்பாடு ஏற்படுத்தி [illegible] என்பதைப் பற்றி பரிசீலித்துப் பார்த்து தேர்தல் சுமுகமாக நடைபெற்றது என்கிற சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

'That the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963 as amended, be passed.'

The motion was put and carried and the Bill as amended was passed.

IV.—GOVERNMENT MOTION.—*cont.*

(2) ELECTION TO THE MADRAS LAND IMPROVEMENT BOARD

THE HON. SRI P. KAKKAN: Mr. Speaker, Sir, I move—

"Whereas the following members,

(i) Sri A. Ramachandra Rayar, M.L.A.

(ii) Sri A. P. Dharmalingam, M.L.A.

(iii) Sri M. D. Thiagaraja Pillai, M.L.A.

ஆக்கிவிடவேண்டும். கிட்டத்தட்ட நம்முடைய மதிப்புக் கணக்கை வைத்து, ரூபாய் 40,000, 50,000 இப்படியிருக்கிற மதிப்புக்கு உட்பட்ட வீடுகள்—ரூபாய் 40,000; என்பது பெரிய தொகையாகத் தெரியலாம், ஆனால், சாதாரணமாக சென்னையில் ஒரு 'வி' டைப் வீடு ரூபாய் 40,000 ஆகிறது, கிரௌண்டையும் சேர்த்து, கட்டிடத்தையும் சேர்த்து, பிட்டிங்ஸ் வகையறுக்களையும் சேர்த்துப்பார்த்தால். அந்த ஒரு அடிப்படையை வைத்துக்கொண்டு, இந்த மதிப்புக்குட்பட்ட இடங்கள் எல்லாவற்றிற்கும் வரி விலக்கு என்று போடுவது பொருத்தமாகவும், நியாயமாகவும் இருக்கும். ரூபாய் 50,000 மதிப்புக்கு உட்பட்ட இடங்களுக்கு இந்த வரியிலிருந்து விதி விலக்கு, அதற்கு மேற்பட்ட இடங்களுக்கெல்லாம் வரி என்று சொல்லிவிடலாம். அதற்காக வாடகைக்கு குடியிருப்பவர்களெல்லாம் ஏழைகள் என்பதில்லை, சில இடங்களில் குடியிருப்பவர்கள் ஏழைகளே தவிர, கடைத்தெருவில் வாடகைக்கு விடப்பட்ட இடங்களில் வாடகைக்கு குடியிருப்பவர்கள் பெரிய கோடீசுவரர்களாக இருப்பார்கள். உடைமைக்காரர்கள் ஏதோ கைம்பெண்ணாக இருக்கலாம், கால் உடைந்தவனாக இருக்கலாம், கை உடைந்தவனாக இருக்கலாம். துக்கானி கடையாக இருக்கும், அதிலிருந்து வருகிற வாடகையை வைத்துக்கொண்டு ஜீவனம் நடத்துபவராக இருக்கலாம், ஆகவே, மவுண்டு ரோடில் வாடகைக்கு இருப்பவர்கள் எல்லாம் அநேகமாகப் பணக்காரர்களாக இருப்பார்கள், வீட்டுக்கு உடையவர்களில் ஏழைகளாக இருப்பார்கள், பலர். எல்லோரும் எங்கும் ஓரே மாதிரி இருப்பார்கள் என்பது அல்ல. இதையெல்லாம் மனத்தில் கொள்ள வேண்டும். குடியிருப்பவர்கள் எல்லாம் ஏழைகள் என்றும் சொல்ல முடியாது. குடியிருப்பவர்கள் எல்லாம் பணக்காரர்கள் என்றும் சொல்ல முடியாது. வாழ்க்கைக்காக குடியிருப்பவர்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பார்கள், தொழிலுக்காக குடியிருப்பவர்கள் பெரும்பாலும் பணக்காரர்களாக இருப்பார்கள். அந்த அடிப்படையை மறந்துவிடக்கூடாது. இதை மனத்திலே கொண்டு வரிவிதிப்புகளை நாம் செய்ய வேண்டும். அந்த நிலையில் இந்த மசோதா அமையவில்லை. ஆனதினாலே, நான் இதை அழுத்தமாக எதிர்க்கிறேன் என்று புலப்படுத்திக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, நகர நிலவரி மசோதா கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டு, பல உறுப்பினர்கள் அதன் மீது தங்களுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எடுத்துக்கூறிய கருத்துக்களைத் தொகுத்து, மீண்டும் வலியுறுத்துகிற வகையில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த நகர நிலவரி மசோதா புதியதாகக் கொண்டுவரப்படுகிறது. இந்த வரி புதியதாக போடப்படுகிறது. நகரத்தில் உள்ள நிலத்தின்மீது இந்த வரி புதியதாக போடப்படுவதன் காரணமாக, வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. அரசினர் செய்கின்ற பணிகளின் காரணமாகவும், நகராட்சி மன்றங்கள் ஆங்காங்கு செய்கின்ற பணிகளின் காரணமாகவும், நகர்ப்புறங்களிலுள்ள நிலங்களில் மதிப்பு உயர்கிறது என்பது ஓரளவுக்கு உண்மைதான். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் தெரிவித்தது போல, அந்தந்தப் பகுதியில் வாழ்கின்றவர்கள் பொலிவுற வைத்திருப்பதன் காரணமாகவும், அவற்றைப் பொருத்தும், அந்த மதிப்பு உயர்கிறது என்பதும் உண்மைதான். நகர்ப்புறங்களைப் பொறுத்த வரையிலும், மதிப்பு வளர்கிறது. அப்படி வளர்கின்ற மதிப்பின் காரணமாக, அதிலே வாழ்கின்றவர்களுடைய நிலையும், அவர்களுடைய வருமானமும் எந்தெந்த வகையிலே உயர்கின்றன என்று கண்டறிந்து, இன்னின்ன வகைகளிலே நகர்ப்புறங்களில் நிலங்கள் இருப்பதன் காரணமாக அவர்களுக்கு வருமானம் உயர்கிறது, ஆகவே அந்த வருமானத்தின் பேரில் வரி போடுவதன் மூலம் ஓரளவுக்கு வருமானத்தை அரசு எதிர்பார்க்கிறது என்று கூறினால், அது ஓரளவுக்கு நியாயமாக இருக்க முடியும்.

ஒருவன் 10 ஆண்டு காலத்திற்கு முன்னாலே நகர்ப்புறத்தில் ஒரு நிலத்தை ரூபாய் 300-க்கு வாங்கி, அதனுடைய சூழ்நிலையின் காரணமாகவோ, அல்லது தொழில் துறைகள், மற்றவைகள் வளருவதன் காரணமாகவோ நகரத்திற்கு அதிகமாக மக்கள் விரும்பி வந்து சேருவதன் காரணமாகவோ மக்களுக்கு செய்து தரப்படுகின்ற பணிகளின் காரணமாகவோ, அந்த நிலத்தினுடைய விலை உயர்ந்து 10 ஆண்டுக்கு முன் ரூபாய் 300 ஆக இருந்தது, ரூபாய் 3,000-க்கு மாறக்கூடும். ஒருவர் ரூபாய் 300-க்கு வாங்கி ரூபாய் 3,000-க்கு விற்கும்பொழுது அவர் அதிகமான லாபத்தைப் பெறுகிறார். அந்த லாபத்தின் மீது ஒரு வரியை விதித்து நாம் வாங்குவது நல்லது என்று சொல்லும்பொழுது, அது நியாயமாகப்படும். ரூபாய் 300-க்கு வாங்கி அவனே அந்த இடத்தில் தொடர்ந்து பல ஆண்டு காலமாக குடியிருந்தால், அந்த நிலத்தைப் பொறுத்து அவனுடைய வாழ்க்கை வருமானம் பெருகுவதற்கு எந்த வகையும் ஏற்படாது. எனவே, நகர் புறங்களில் நிலம் வைத்திருப்பதன் காரணமாக வருமானம் உயர்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்றால், அந்த வாய்ப்பு ஏற்படுகின்ற நிலையில் வரி போட்டு அதன் மூலம் ரூபாய் 300-க்கு வாங்கி, ரூபாய் 3,000-க்கு விற்பதன் காரணமாக 10 ஆண்டு காலத்தில் ரூபாய் 2,700 ஒருவனுக்கு வருமானம் மிகும்பொழுது, அதில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் போட்டு, அதன் மூலம் அரசு வருமானம் பெற முயலுகிறது என்றால், அதில் ஓரளவுக்கு நியாயம் இருக்க முடியும். எனவே, நிலத்திற்கு என்று பொதுவாக வரி போட்டுவிட்டு, அதிலே வாழ்கின்றவர்களுடைய தரத்தையும் நிலைமையையும், அவர்கள் பெறுகின்ற வருமானத்தையும், கணக்கில் எடுத்துக்

மற்றொரு முக்கியமான கேள்வியை கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எழுப்பியிருக்கிறார்கள். அவர்கள் 31-வது ஷரத்தைக் குறித்து பேசும்போது சொன்னார்கள். அவருடைய நினைவு பூராவும் ஏதோ இந்த ஷரத்தின் அடிப்படையில் வாடகைக்கு குடியிருப்பவர்கள் பேரில் இந்த வரிச்சுமையை சுமத்தி விடுவார்களோ என்ற அச்சத்தை தெரிவித்தார்கள். விவரமாகச் சொல்லுகிறேன். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த வரி வாடகைக்கு குடியிருப்பவர்கள்மீது விழக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் முடிவு. அதே நேரத்திலே பல ஸ்தாபனங்கள் பல சட்டங்களின் காரணமாக தங்களுக்கு கிடைக்கக்கூடிய நில வருமானத்தை மாற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்தப் பிரச்னையை பொறுக்கு கமிட்டியின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். அதன்பேரில் ஏற்பட்ட முடிவை விவரமாக சபைக்கு சொல்ல கடமைப்பட்டு இருப்பதால் இந்த "நோட்டை" படிக்க விரும்புகிறேன்—

"The Bill has been drafted on the general consideration that land value has gone up and that as a result the land owners have benefited or have property worth several times their original value. There are, however, a number of cases where land belonging to temples, wakfs, trust properties, etc., had been leased out for low rent years ago. I have a statement giving a few examples of this kind. The statement gives the area of the various cases of free holds and exempted categories of lands. The rents in all these cases are nominal. In most of the cases cited the buildings have been put up by the occupants themselves long time ago. There are also cases of buildings put up long ago on trust, etc., properties and rented out on very nominal rents. The proposed urban land tax is 0.4 per cent on the average market value (i.e., Rs. 40 on every Rs. 10,000). The owners of the superstructures put up on the various lands mentioned in the statement are protected by the provisions of the Madras City Tenants Protection Act, 1921. The proposed rates of urban land tax will be very harsh on the owners of the sites where the rents are much lower than the income derived by them."

இத்தகைய ஒரு கஷ்டம் குடியிருப்பவர்களுக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் ஒரு ஷரத்தைச் சேர்த்திருக்கிறோம். அதாவது வாடகையோடு இந்த வரியை உயர்த்தக் கூடாது. ஆகவே, தனிப்பட்ட முறையில் இந்த வரியைக் கொண்டுபோய் வாடகையோடு இணைத்துவிடக்கூடிய முயற்சி நடந்தால் அதை அரசாங்கம் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். ஆகவே, இதுபற்றி கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் கவலைப்பட வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் நான் இப்போது கூறியதற்கும் மேலாக ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால்—நிறைய திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன—ஷரத்து வாரியாக மசோதா பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, ஒவ்வொரு திருத்தமாக விவாதத்திற்கு வரும்போது தக்க விளக்கத்தைக் கொடுக்கிறேன்.

ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் மேலும் சபையின் நேரத்தை எடுத்துக் கொள்ளாமல் இந்த மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மட்டும் கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: மார்க்கெட் வால்யூ நிர்ணயிக்கும் விஷயத்தில்—குறைந்த பட்சம், அதிக பட்சம் என்று மட்டும்தான் போட்டிருக்கிறோம். விதிகளிலாவது இன்னும் விவரமாகப் போடவேண்டுமென்ற கருத்து பொறுக்குக் கமிட்டியில் இருந்தது. ஆகவே, மூன்று வருஷ சராசரி என்ற அடிப்படையிலாவது அதைப் போட கனம் அமைச்சர் அவர்கள் முயல வேண்டுமென்று இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: அந்த ஷரத்து வரும்போது பரிசீலனை செய்யலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: நகர்ப்புறங்களில் இருக்கும் நிலத்தின் மதிப்பு உயர்வதற்கு, நகராட்சி மன்றங்கள் எடுத்துக் கொள்கிற திட்டங்களே காரணமாக இருப்பதால், இந்தச் சட்டத்தின் மூலமாக வரக்கூடிய வரிப்பணத்தில் இத்தனை சதவிகிதம் அந்த அந்த நகரங்களில் அமைகின்ற நகராட்சி மன்றங்களுக்குப் போகும் என்பதாகவே இந்த மசோதாவில் வழிவகை செய்யப்படுமா? இல்லையென்றால் அத்தகைய ஒரு ஏற்பாட்டைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: நகர சபைக்குத் தேவையான உதவிகளை அரசாங்கம் அவ்வப்போது அவர்களுக்கு அளித்து வருகிறது. இந்த வரிப் பணத்தில் இருந்துதான் கொடுக்கவேண்டுமென்பதில்லை. இந்த வரிப்பணத்தில் இத்தனை சதம் என்று நாம் ஒதுக்குவோமானால் அதன்மூலம் கிடைக்கக்கூடிய பணத்தைவிட அதிகமாகவேதான் உதவிக்கொண்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர் ஏற்றுக் கொள்வார். ஆகவே, அத்தகைய ஒரு ஏற்பாட்டிற்கு அவசியம் இல்லையென்று சொல்ல விரும்புகிறேன்.

The amendment of Sri M. Kalyanasundaram was put and lost.

SRI K. A. MATHIALAGAN: Sir, I am pressing my amendment.

MR. SPEAKER: The question is—

"That the Madras Urban Land Tax Bill, 1963 (L.A. Bill No. 2 of 1963), as amended by the Select Committee, be recommitted with instructions:—

(1) to suggest suitable amendment for exempting

(a) lands occupied by buildings and used by the owner thereof for their own residence, no portion is let out or used for any other purpose;

கொள்ளாமல், விட்டுவிடுவோமானால், இந்த வரி பல ஏழை எளியவர்களை பாதிக்கக் கூடியதாக அமையும் என்பது திண்ணம். அதை மனத்திலே வைத்துக்கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு அரசு முற்படுதல் வேண்டும்.

மேலும், இந்த மசோதா முதல் முறையாகக் கொண்டு வரப்படுவதால், குறைபாடுகள் இல்லாத அளவுக்கு இதை நிறைவேற்றும் பொறுப்பை, இதனால் உடனடியாக மக்களுக்கு சில பல சங்கடங்கள் ஏற்படாத வகையில் நிறைவேற்றும் பொறுப்பை அரசினர் மேற்கொள்ளவேண்டும். இந்த முறையில் இந்த மசோதாவைக் கொண்டுவருகிற பொழுது, சாதாரணமாக இப்பொழுதே வருமானத்தை விட, செலவினம் அதிகமாக ஆகின்ற அளவிற்குத்தான் பல்வேறு ஏழை எளிய மக்கள், சாதாரண பாட்டாளி, தொழிலாளிகளின் குடும்பங்கள் இருக்கின்றன என்பதை மனதிலே கொள்ளவேண்டும். அவர்களுடைய வருவாயை வைத்துக்கொண்டு செலவினத்தை ஈடுகட்ட முடியாத நிலைமையில், இந்தப் புது வரி அவர்களை பாதிக்காத அளவுக்கு பாதுகாத்துக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த அடிப்படையிலே பார்க்கிற பொழுது, நிலத்தை வைத்திருப்பவர்களுக்கு அதில் பெரிய தொழிற்சாலையை நிறுவுவதன் மூலம் பெரிய வருமானம் வருகிறது என்றோ, அல்லது மாநகராட்சி, அரசினர் பணிகளின் காரணமாக பெரிய வருமானம் வருகிறது என்றோ கருதுகிற அளவில் அவர்களுக்கு வரி போடுவதிலேயும் நியாயம் இருக்கிறது. ஆனால் எந்த வருமானமும் இல்லாமல், அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிற கூலியை வைத்தே அந்த வீட்டில் அவர்கள் தொடர்ந்து வாழவேண்டிய நிலைமையில் இருக்கிறபொழுது, சம்பளத்தை வைத்துக்கொண்டே வாழவேண்டும் என்ற நிலைமையில் இருக்கும்பொழுது, அவர்கள் மீது புதியதாக வரிச் சுமையை ஏற்றுகிற அளவுக்கு இந்த வரி போய் சேரக் கூடாது. அப்படிப்பட்ட நிலைமையில் கூலியை நம்பி வாழ்கின்றவர்களுக்கும், ஒரு குறிப்பிட்ட சம்பளத்தை நம்பி வாழ்கின்றவர்களுக்கும், அப்படி வாழ்க்கையை நடத்துகிறவர்களுக்கும், அதாவது அந்த நிலத்தைப் பொருத்து வருமானத்தை பெறாதவர்களுக்கும் விதி விலக்கு அளிக்கின்ற வகையில் குறைந்தது 1½ கிரௌண்டு வைத்திருப்பவர்களுக்கு, விற்பனை வரி செலுத்தாதவர்களுக்கு, அல்லது வருமான வரி செலுத்தக் கூடிய அளவில் தொழில் நடத்தாதவர்களுக்கு, அப்படிப்பட்டவர்களுக்கு இருக்கிற நிலங்களை வரி இல்லாத நிலங்கள் என்று அவற்றை ஒதுக்கித்தருகிற அளவிற்கு இந்த மசோதாவில் இடம் ஏற்படுத்தித்தரவேண்டும். இல்லையென்றால், ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற அளவுக்கு, அவர்கள் மீது சுமை ஏறுகின்ற அளவுக்குச் சாதாரணமாக தங்களுக்கு என்று ஒரு இடத்தை வைத்துக் கொண்டு, அதில் வீடு கட்டிக்கொண்டு இருப்பவர்களுக்கு, வாழ்கிறவர்களுக்குப் பாதகம் ஏற்படக்கூடிய நிலைமை உண்டாகும். தாங்களே சொந்தமாக உபயோகப்படுத்துகின்றவர்

களுக்கு, வேறு தொழிலிலோ அல்லது வணிபத்திலோ ஈடுபடுத்தாமல் தம்முடைய சொந்த உபயோகத்திற்கே வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, 25 சதவிகிதம் வரி குறைக்கப்படலாம் என்று இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது பொதுவாக ஒரு சிலருக்கு வேண்டுமானால் பொருந்தும். சாதாரணமாக ஏழை எளிய மக்களுக்குப் பொருத்தமாக இருக்காது. அந்த முறையில் யார் யாருக்கு வரியே இல்லாத அளவுக்குச் செய்யவேண்டும் என்று கணக்கெடுத்து, அவர்களுக்கு வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க மேலும் ஸ்லாப் ஸிஸ்டம் என்ற முறையில், ஸோன்களை பிரித்து 1 சதவிகிதம், 2 சதவிகிதம், 3 சதவிகிதம், 4 சதவிகிதம் என்ற அளவுக்கு உயர்த்தக்கூடிய முறையில், ஸ்லாப் ஸிஸ்டத்தை புகுத்தக்கூடிய முறையில் சிலருக்கு சலுகைகள் ஏற்படுத்த முடியுமா என்பதையும் ஆராயவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரணமாக ஏழை எளிய என்ற இடங்களில், சிறு சிறு வீடுகள் வைத்துக் கொண்டு, தனக்கு வருகின்ற கூலியை வைத்துக்கொண்டு, ஒரு சிலர் வாழ்கிறார்கள். இம்மாதிரி 1-00 p.m.
நிலத்திற்கு வரி போடுவதன் மூலமாக அப்படிப்பட்டவர்களும் வரி செலுத்த வேண்டிய அதிகத்திற்கு உள்ளாவார்களேயானால், பல வகைகளிலே கூலி உயர வேண்டுமென்று போராடிக்கொண்டிருப்பவர்கள், இந்த வரியைச் செலுத்த முடியாத நிலைக்கு ஆளாவார்கள். எனவே, சேரி வாழ் மக்களுக்கென்று சொந்தமாக நிலம் இருக்குமானால், அந்த நிலத்திற்கு வரி இல்லை என்று விதி விலக்கு அளிக்க முன்வர வேண்டும். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்தது போல, இந்தப் புது வரி போடுவதன் மூலமாக, வாடகை வருமானம் பெறுகிறவர்கள், இந்த வரியைச் செலுத்தலாம் என்ற நோக்கத்தோடு செய்தாலும், அதை வாடகைக்காரர்கள் மீது ஏற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடுவார்கள். அதேதான் நடைமுறையில் வழக்கமாக இருந்து வருகிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன வழி வகைகளை அமைச்சரவை மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

சிறு சிறு நிலங்கள் வைத்துக்கொண்டு, இந்த வரியைக் கட்ட முடியாதவர்களுக்குச் சலுகை அளிக்கக் கூடிய வகையில் இந்த மசோதாவில் இடமில்லை. அதற்கு இடம் ஏற்படுத்தித் தருவதற்கு அரசினர் முயற்சி செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட வரியின் மூலம் வருமானம் பெற வேண்டும் என்று எண்ணுகிற காரணத்தினாலே, அதை உயர்த்துவதற்கான வகையில் பின்னர் முயற்சிகள் எடுக்கப்படலாம். இதனுடைய சங்கடமான போக்குகள் எப்படி இருக்கும் என்று தெரியாத நிலையில், இதை எல்லோருக்கும் புகுத்துகின்ற நிலைமையில், எல்லோருக்கும் நிலத்தினுடைய அடிப்படையில்

(b) where the extent of such lands or where a person owns more than one plot, falling under this clause and the aggregate area of such lands does not exceed 1½ grounds;

(2) to suggest suitable amendment for mitigating the hardship on the poorer section of the people by levying the tax at a slab rate ranging from 0.1 per centum to 0.5 per centum of the market value with due regard to the extent of each holding and the purpose for which it is used;

(3) to suggest necessary amendment for safeguarding the interests of owners in underdeveloped areas and slums; and

(4) to suggest necessary amendment for protecting the interests of the poorer class from enhanced house rent by the landlords.

The amendment was put and declared lost. A poll was demanded.

MR. SPEAKER: As the division will take place now, I request hon. Members to occupy their respective seats. No hon. Member should enter the House until the division is over.

The House divided thus:—

Ayes—

Sri V. R. Nedunchezhiyan
" M. Karunanidhi
" K. A. Mathialagan
" Saw. Ganesan
" M. Kalyanasundaram
" A. P. Dharmalingam
" M. Rajangam
" Kanchi Manimozhiar
" M. Shanmugam
" N. Rajangam
" V. Arunachalam

Srimathi Manonmani Ammal

Sri S. Madhavan
" T. P. Alagamuthu
" S. Mani
" A. Thiagarajan
" P. Murugaiyan
" A. Duraiyarasan
" V. R. Periannan
" C. G. Viswanathan
" S. Muthulingam

Pulavar K. Govindan

Sri C. V. Velappan
" C. Manickam
" T. Chinnasamy
" M. R. Krishnamurthy
" A. Thangavelu
" Munu Adhi
" S. Murugaiyan
" P. U. Shanmugam

Srimathi Jagadambal Velayudham

Sri K. S. Mani
" K. Thirupathy
" C. K. Chinnaraji
" M. P. Vadivelu
" N. P. Sengottuvelu

Sri M. V. Karivengadam
" A. G. Balakrishnan
" S. Ramaswamy
" V. Krishnamurthy
" S. J. Ramaswamy
" R. Sampangi

Noes—

Sri K. Parthasarathy
" M. Alagiriswamy
" C. M. Ambikapathi
" L. Anandan
" S. Angamuthu Naiker
" A. Appavoo Thevar
" A. Arumugam
" A. M. P. S. Balagangadharan
" V. Bashyam Reddi

The Hon Sri M. Bhaktavatsalam
" Sri P Kakkan
" Sri V. Ramaiah

Sri P. Ramachandran
" R. Krishnaswamy Naidu
" A. S. Dhakshinamoorthy Gounder
" V. Ellamma Naidu
" T. P. Elumalai
" T. Kadambavana Sundaram
" T. Karcha Gowder
" C. Kothandarama Bhagavathar.
" K. M. Krishnaswami
" T. Manavalan
" M. Maruthanayakam Pillai
" M. P. Muthukaruppannaswamy Gounder.
" P. K. Muthuvelappa Gounder

The Hon. Sri N. Nallasenapathi Sarkarai Manradiar.

Srimathi T. N. Anandanayaki

Noes—cont.

Srimathi C. Kolandai Ammal
" P. K. R. Lakshmikantham
" Rajathi Kunchithapatham
" R. Parvathi Arjunan
" N. K. Ranganayaki

Kumari. D. Sulochana

Sri K. P. Palanisamy
" G. D. Perumal Raju
" R. Ponnappa Nadar.
" R. Rajagopalswamy Naicker

Sri P. Rajagopal
" A. Ramachandra Rayar
" A. L. Ramakrishna Naidu
" N. S. Ramalingam

Sri N. Ramaswamy Udayar
" K. T. Kosalram
" B. Natarajan
" V. Sankaran
" P. R. Srinivasa Padayachi
" M. S. Selvarajan
" R. Sengaliappan
" N. Shanmugasundaram
" SV. SM. Sivaraman Ambalam
" O. Srinivasa Reddiar
" R. Subramaniam
" M. D. Thiagaraja Pillai
" A. P. C. Veerabahu.
" O. Venkatasubba Reddi
" M. William

Ayes 42; Noes 56; Neutral *nil*.

The amendment was put and lost.

MR. SPEAKER: The question is—

"That the Madras Urban Land Tax Bill, 1963 (L.A. Bill No. 2 of 1963), as amended by the Select Committee, be taken into consideration." 1-30 p.m.

The motion was put and carried.

MR. SPEAKER: The House will now adjourn and meet again at 9.00 a.m. tomorrow.

The House then adjourned.

VI.—PAPERS PLACED ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notification and other papers.

*82 *The Madras Cattle disease (Amendment) Bill*, 1963.

---

* Circulated to Members on 18th November 1963.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 21st November 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள்

*354 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தமிழ் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 80, 100-ம் நம்பர் உயர்ந்த ரக நூல்கள் மொத்த உற்பத்தியில் எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) தனியார் துறைக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) 1963, ஜனவரியிலிருந்து 1963 ஆகஸ்டு மாதம் வரையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 80-ம் நெம்பர் நூலில் 536 பேல்களும் 100-ம் நம்பர் நூலில் 840 பேல்களும் ஒதுக்கப்பட்டன.

(இ) 1963 ஜனவரியிலிருந்து 1963 ஆகஸ்டு மாதம் முடிய கூட்டுறவுச் சங்கங்களைச் சேராத நெசவாளர்களுக்கு, 80-ம் நம்பர் நூலில் 435 பேல்களும் 100-ம் நம்பர் நூலில் 602 பேல்களும் ஒதுக்கப்பட்டன.

திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்கப்படும் 100, 80-ம் நம்பர் நூல்கள் சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்குப் போதிய அளவுக்குக் காணுமல் இருக்கின்றது. ஆகவே அவர்களுக்கு நூல் சப்ளை செய்யும் எம்போரியங்கள் வெளியிலிருந்து இந்த நம்பர் நூலை வாங்கிக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கின்றனவா? ஆம் என்ருல் சங்கங்களின் முழு தேவைகளுக்கான நூல்கள் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்படிப்பட்ட எம்போரியங்களுக்கு போதிய அளவுக்கு சப்ளை செய்வதற்கு நூல் கிடைப்பதில்லை என்று ஸ்டேட் ஹான்ட்லூம் சொஸைட்டி சர்டிபிகேட் கொடுத்தால், எம்போரியங்கள் வெளியிலிருந்து நூலை வாங்கிக் கொள்ளலாம். அதுதான் இப்போதுள்ள விதி.

(இ) இல்லையென்றால், இனியாவது ஊசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) & (b) A pilot scheme for the immunisation of pre-school children against whooping cough, diphtheria and tetanus is being implemented in the primary health centres at Velliyur and Tirukkalukundram of Chingleput district. Mass immunisation of pre-school children will be taken up as a state wide programme as soon as the results of the pilot scheme are evaluated.

திரு. கரு. சிமைச்சாமி: கனம் தலைவர் அவர்களே, இந்த சிறு குழந்தை வியாதியான கக்குவான் இருமலுக்குத் தக்க மருந்தே இல்லை என்று டாக்டர்கள் எல்லாம் சொல்லுகின்றார்கள். இந்த வியாதி வந்துவிட்டால் குழந்தைகள் மூன்று மாதங்கள் செத்துத் தான் பிழைக்கின்றன. ஆகவே இந்த விஞ்ஞான உலகத்தில் இதைத் தடுப்பதற்கான தக்க மருந்து ஒன்றைக் கண்டுபிடிக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், இந்த கக்குவான் இருமல் நோய் வந்தால் மூன்று மாதம் நீடிக்கும் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். தமிழ் மருந்துகளில் கூட, இந்த நோய் மூன்று பிறை இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தடுக்கின்ற முறையில் ப்ரி—ஸ்கூல்—குழந்தைகளுக்கு எல்லாம் ட்ரிப்பிள்—வாக்ஸைன் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த விஞ்ஞான நோக்கில் இந்த வியாதியை ஓரளவுக்குப் பெருகாமல் தடுப்பதற்கான மருந்துகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இருந்தாலும் மூன்று மாதங்கள வரை நோய்க்குக் காலாவதி உண்டு என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த நோயைத் தடுத்துவிட முடியாது என்பதும் டாக்டர்களின் அபிப்பிராயம்.

புலவர் கா. கோவிந்தன்: இந்தக் கக்குவான் இருமல் நோயைத் தடுப்பதற்கான மருந்தை அதிக விலை கொடுத்து சாதாரண மக்கள் வாங்க முடியாமல் இருப்பதினால், எல்லோரும் அம்மை குத்திக் கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்தம் இருப்பது போல், இதற்கான தடுப்பு மருந்தையும் குத்திக்கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: நான் முன்னால் சொன்ன மூலக்கேள்வியின் பதிலே அது தான்.

Poet Bharathi (Birth day celebrations)

* 359 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state when a final decision would be taken regarding the celebration of the birthday of Poet Bharathi on 11th December each year in future?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no such proposal, Sir.

Exemption from sales-tax

* 360 Q.—SRI M. KAMALANATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to exempt Co-operative Milk Supply Unions from payment of sales-tax?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இல்லை.

* 361 Q—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether sales-tax is collected from the Co-operative Marketing Societies which arrange for the sale of the produce of ryots; and

(b) whether the Government propose to exempt the collection of sales-tax from them?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The liability of the Co-operative Marketing Societies to pay sales-tax depends upon the manner in which it acts.

(b) No.

* 362 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தயாரிக்கப்படும் தலையணை உறைகளை Finished goods ஆக பாவித்து விற்பனை வரி விதிக்கப்படுவது உண்மையா?

(இ) அப்படியானால் அதை விற்பனை வரியிலிருந்து விதி விலக்களிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes.

(b) No.

திரு. து. ப. அழகமுத்து: கைத்தறித் துணிகளை அதிகமாக விற்பனை செய்யவேண்டும் என்ற நோக்கத்தில், கைத்தறித் தலையணை துணிகளுக்கு விற்பனை வரி இல்லாமல் ஆக்குவதற்காக அரசாங்கம் இதைப்பற்றி மீண்டும் புனராலோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நல்லமுறையில் ஆலோசனை செய்துதான் இப்போது கைத்தறித் தலையணைத் துணிகளுக்கு ஒரு சதவிகிதத்தில் விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, மற்ற இடங்களுக்கு இந்தத் துணிகளை ஏற்றுமதி செய்யும்போதும் ஒரு சதவிகிதம்தான் விற்பனைவரி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

வைக்காமல், அதன் மேலே வாழ்கின்றவர்களின் தரத்தை, நிலையைப் பொறுத்து, அவர்களுக்கு விலக்கு அளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்து, செலுத்தக்கூடிய வாய்ப்பு உடையவர்களுக்கு இந்த வரிச் சுமை போய்ச் சேரும்படி செய்ய வேண்டும். இந்த மசோதாவைத் திருத்தி அமைக்கும் வகையில் அமைச்சரவை கவனம் செலுத்தவேண்டுமென்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினமும், இப்பொழுதும் நடந்த பொது விவாதத்திற்குப் பதில் சொல்லக்கூடிய முறையிலே, கனம் அங்கத்தினர்கள் எழுப்பியுள்ள சில பொதுவான விஷயங்களுக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, சுதந்திராக் கட்சி அங்கத்தினர்களைத்தவிர, மற்றவர்கள் எல்லோரும் இந்தப் புது வரியை கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பொது ஆட்சேபம் எதுவுமில்லை. இந்த மசோதாவிலே கண்டு இருக்கக் கூடிய வரி விதிப்பை இந்த மன்றத்திலே சாங்கோபாங்கமாக விவாதம் செய்து இருக்கிறோம். ஏற்கனவே கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த சபையிலே நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த போதும், இந்த மசோதாவில் வந்து இருக்கக்கூடிய வரி விதிப்பை அவர்கள் விமர்சனம் செய்யும்போதும், இது சம்பந்தமாக நாம் பேசியிருக்கிறோம். அதோடுமட்டுமல்லாமல், இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பும்போதும் இந்தப் புது வரி சம்பந்தமாக நாம் பேசியிருக்கிறோம். இதற்கெல்லாம் பிறகு பொறுக்கு கமிட்டியினர் இந்தச் சபையிலே நடந்த விவாதத்தை மனதில் கொண்டு, அதோடு கனம் எதிர்க்கட்சித் தலைவர் கூறியதுபோல, இது ஒரு புதிய வரி என்ற முறையிலே, இதில் இருக்கக்கூடிய பலவிதமான கஷ்டங்களையெல்லாம் தெரிந்து, அதற்கு ஏற்ற வகையிலே தகுந்த முடிவுகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, பொறுக்குக் கமிட்டியும் இதை அனுதாபமாகக் கவனித்து முடிவுகள் செய்திருப்பது நான் சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து நன்கு புலப்படும். ஆகவே, இந்த வரி விதிப்பை ஏற்றுக் கொண்டதற்கு பிறகு ஒவ்வொரு பிரிவுக்கும் பல திருத்தங்களை கனம் அங்கத்தினர்கள் கொடுத்து இருக்கிறார்கள். இந்த வரி விதிப்பைப்பற்றி தங்களுடைய டிஸெண்டிங் மினிட்டில் தெரிவித்ததோடு அல்லாமல், சற்று முன்பு பேசிய கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய பொது எதிர்ப்பை தெரிவித்துக் கொண்டு அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால் இந்த வரி விதிப்பு ஏதோ ஒரு பொருந்தாத காரியம் என்று சொல்வதாகத் தெரிகிறது. ஆனால், மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் எடுத்திருக்கக்கூடிய முடிவை அப்படியே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. கடைசியாகப் பேசி முடித்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் பார்த்தால், ஒரு சொத்தின் மதிப்பு உயருவதற்குக் காரணம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் கொண்டிருக்கக்கூடிய கருத்தின் அடிப்படையில் இல்லை என்பது தெரியவரும். அதைவிட அரசாங்கத்தின் திட்டங்களும்,

இன்னும் பொது ஸ்தாபனங்கள் செய்யக்கூடிய முன்னேற்றகரமான வேலைகளினால்தான் சொத்தின் மதிப்பு உயருகிறது என்பதை எல்லா நிபுணர்களுமே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

குறிப்பாக, இந்த வரி விதிப்பு உடனடியாக சென்னை நகரிலே அமலுக்கு வர இருக்கும்போது, சென்னை நகரிலே ஏற்பட்டிருக்கும் நிலையை நாம் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் அங்கத்தினர் பா. கணேசன் அவர்கள் ஏதோ படித்தவர்கள், வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் இருக்கக்கூடியவர்கள் வாழும் பகுதிகளில்தான் சொத்தின் மதிப்பு கொஞ்சம் உயர்ந்திருக்கிறது என்றும், மற்றப்படி ஏழை எளியவர்கள் வாழக்கூடிய பகுதிகளில் சொத்தின் மதிப்பு குறைந்திருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். சென்னை நகரை பொறுத்தவரையில் சொகுசாக வாழக்கூடியவர்கள் வசிக்கும் சில பகுதிகளைத் தவிர வாணிபம் செய்யும் இடங்களின் மதிப்பு சமீப காலத்தில் அசாதாரணமாக உயர்ந்திருக்கிறது என்பது தெரியவரும். ஏதோ உல்லாசமாக வாழக்கூடிய ஒரு சிலர் அடையாற்றிலும், இன்னும் சில பகுதிகளிலும் வாழ்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டாலும், மவுண்ட்ரோடு பகுதி, சைனா பஜார் பகுதி இதுபோன்ற இடங்களில் நிலத்தின் மதிப்பு நிச்சயமாக பெரும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ள முடியும். இதற்கு அரசாங்கம் காரணம் இல்லை என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, எப்படித்தான் இந்தக் கருத்தை திரும்பத் திரும்ப திரு. பா. கணேசன் அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சென்னை நகரைப் பொறுத்தவரையில் இந்த நகரத்திலுள்ள நிலத்தின் மதிப்பு உயர்ந்ததற்குக் காரணம் இது சென்னை ராஜ்யத்தின் தலைநகரமாக இருக்கிறது என்று பத்து வருஷங்களுக்கு முன்பு எல்லோரும் நினைத்தார்கள். அன்றைக்கு ஆந்திரப் பகுதி, கேரளப் பகுதி, முதலிய பகுதிகள் சேர்ந்து இருந்த காரணத்தினால்தான் இந்த நகரத்திலுள்ள நிலத்தின் மதிப்பு உயர்ந்து வருகிறது என்று நினைத்தார்கள். அதற்குப் பிறகு ஆந்திரப் பகுதி, கேரளப் பகுதி பிரிந்துபோன பிறகு சொத்தின் மதிப்பு வீழ்ந்துவிடுமோ என்ற நினைப்பும் இருந்தது. ஆனால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவு அடைந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கும் பொழுது, ஆந்திர, கேரளப் பகுதிகள் பிரிந்துபோன பிறகும் கூட சென்னை நகரத்திலுள்ள சொத்தின் மதிப்பு அதிகமான அளவிற்கு உயர்ந்து இருக்கிறது என்பதை சந்தேகத்திற்கு இடம் இன்றி எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். தொழில் ரீதியாகப் பார்த்தால், சென்னை நகரம் பெரும் அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. நம் முன்னர் இருக்கக்கூடிய கேள்வி இது தான். ஒரு தனிப்பட்ட நிலச் சொந்தக்காரருடைய முயற்சியின்றி நிலத்தின் மதிப்பு பெருகும்பொழுது, அதற்கு முக்கிய காரணமாக அரசாங்கத்துடைய திட்ட வேலைகளாக அமைந்திருக்கும்பொழுது, அந்த மாதிரி மதிப்பு உயர்ந்த இருப்பிலே அரசாங்கம் ஒரு பங்கு கேட்பதில் என்ன தவறு என்பதுதான்

திரு. தா. ப. அழகமுத்து: வெளியில் வாங்கும்போது அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே கட்டுப்பாடு விலைக்கு நூலைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த நூலுக்குப் பற்றாக் குறை இருப்பதினால் கட்டுப்பாடு விலையில் வெளியில் வாங்கிக்கொள்வதற்குச் சிறிது கஷ்டம் இருக்கிறது. ஓரளவுக்கு கட்டுப்பாடு விலையில் வாங்குவதற்காகத்தான் வாலன்டரி டிஸ்ட்ரிப்யூஷன் ஸிஸ்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : வெளி மாகாணங்களுக்கு 80-ம் நம்பர், 100-ம் நம்பர் நூல் ஏற்றுமதியாகிக் கொண்டிருப்பதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : இப்போது ஏற்றுமதியாகிக் கொண்டிருப்பதைத் தடுக்க முடியாது.

நூல், கைத்தறித் துணி மீது வரிகள்

***355 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) நூலுக்கும் கைத்தறி துணிக்கும் என்னென்ன வரிகள் மத்திய சர்க்காராலும் ராஜ்ய சார்க்காராலும் புதிதாக போடப் பட்டுள்ளன ?

(இ) எந்த அளவுக்கு போடப்பட்டுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) நூலுக்கும் கைத்தறித் துணிக்கும் எந்தப் புதிய வரியும் மத்திய சர்க்காராலும் ராஜ்ய சர்க்காராலும் விதிக்கப்படவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

குறைந்த நில விவசாயிகள்

***356 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

'1963-ம் நம் மாநிலத்தில் ஐந்து ஏக்கருக்குக் குறைந்த நிலம் வைத்திருப்பவர்களும் வாரத்திற்குப் பயிரிடும் விவசாயிகளும் எத்தனை பேர் இருக்கிறார்கள் ?

THE HON. SRI V. RAMAIAH : The information required is not available. The gathering of it will involve a lot of time and labour which will not be commensurate with the purpose to be served.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் தலைவர் அவர்களே, இதற்கான இன்ஃபர்மேஷன் சரியாகக் கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தியாவில் ஒரு மனிதனுடைய சராசரி ஒரு நாள் வருமானம் 3 அணா, 6 அணா என்றெல்லாம் டாக்டர் லோகியா அவர்களும், அமைச்சர் திரு. நந்தா அவர்களும் பார்லி மெண்டில் கூறியிருக்கிறார்கள் . . . .

MR. SPEAKER : Let the hon. Member put a supplementary question relating to the main question.

பார்லிமெண்டில் என்ன சொன்னார்கள் என்பதைப்பற்றிக் கவலையில்லை. இப்போது இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு இன்பர்மேஷன் கிடைப்பதற்கு ஏதாவது வழியிருக்கிறது என்றால் அதைப்பற்றிக் கேளுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : பார்லிமெண்டில் இவ்விதம் சொல்லியிருக்கிறார்கள் . . .

MR. SPEAKER : Question No. 357.

மாதர் சங்க கட்டிடம் (சத்தியமங்கலம்)

***357 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) செஞ்சி தாலூகா சத்தியமங்கலம் கிராமத்தில் மாதர் சங்கத்திற்காகக் கட்டிடம் கட்ட ஆரம்பித்து நின்றிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதன் காரணமென்ன ?

(இ) 1963-64 நிதி ஆண்டிலாவது அதைக் கட்டி முடிக்க உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) தெரியும். அக் கட்டிடம் தனியார் ஒருவரின் நிதி ஆதார வசதிகளைக் கொண்டே, அவரால் கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

(இ) ஆதலால், இக்கேள்வி எழுவதற்கு இடமில்லை.

திரு. கு. கோபால கவுண்டர் : சத்தியமங்கலம் கிராமம் ஒரு குக்கிராமமாக இருக்கின்ற காரணத்தினாலும், இங்கு சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ், உயர்நிலைப் பள்ளி, பிரைமரி ஹெல்த் சென்டர்; போலீஸ் நிலையம் இவைகளெல்லாம் இருக்கின்ற காரணத்தால், இந்த இடங்களுக்கு வருகின்ற அதிகாரிகள் தங்குவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இதற்கான கட்டிடத்தை சீக்கிரத்திலேயே கட்டிக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தக் கேள்வி மாதர் சங்கத்திற்காகக் கட்டப்படும் கட்டிடத்தைப் பற்றியது. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது போல் ரெஸ்ட் ஹோம் பற்றியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கக்குவான் தடுப்பு ஊசி

***358 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிறு குழந்தைகளுக்கு கக்குவான் இருமல் நோய் வாராமல் தடுக்கும் தடுப்பு ஊசிகள் இப்போது போடப்பட்டு வருகின்றனவா ?

(அ) இல்லை. ஆனால், கனம் அங்கத்தினர் திரு. எஸ். மாதவன் 25-7-1963-ல் தனக்கு வந்த மகஜர் ஒன்றை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளார். மதுரையிலுள்ள வக்கீல்கள் சிலர் அந்த மனுவில் கையெழுத்திட்டு அதைக் கனம் அங்கத்தினருக்கு அனுப்பியுள்ளனர். மதுரை பி-1 போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் மீது அந்த மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

(இ) சப்-இன்ஸ்பெக்டர் மீது தொடரப்பட்டுள்ள தனிப்பட்ட இந்த வழக்கில் அவருக்கு அரசாங்க உதவி அளிப்பதற்காக மதுரை கலெக்டர் அனுமதி அளித்துள்ளார்.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, அந்த மனு மீது விசாரணை நடத்தப்பட்டதா? சப்-இன்ஸ்பெக்டர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. பூ. கக்கன் : அது விசாரணை செய்யப்பட்டது. அந்த வக்கீல் கொடுத்த கேஸும், சப்-இன்ஸ்பெக்டர் கொடுத்த கேஸும், இரண்டுமே தள்ளுபடி செய்யப்பட்டு ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மதுரை வழக்கறிஞர் சங்கம் முழுவதும் ஏகோபித்த கருத்தை அரசாங்கத்திற்கு தெரிவித்ததா? அது பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் ஏதாவது கிடைத்ததா?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் வக்கீல் சங்கத்திலிருந்து அனுப்பவில்லை. வக்கீல் சங்கத்திலிருந்து அங்கத்தினருக்கு அனுப்பியதை, அங்கத்தினர் அரசாங்கத்திற்கு அனுப்பியதுதான் அரசாங்கத்திற்குக் கிடைத்த தகவல்.

திரு. கே. மூக்கையா தேவர் : வக்கில்மீது போடப்பட்ட கேஸின் விவரம் என்ன? அதைப் பற்றி அமைச்சர் தெரிவிப்பாரா?

கனம் திரு. பூ. கக்கன் : மதுரை ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் திக்விஜயத் திருவிழாவின் போது கிழக்கு மாசி வீதியும் வடக்கு மாசி வீதியும் சந்திக்கும் இடத்தில் கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. இச் சமயம் இவர் பெண்கள் இடத்தில் தகாத முறையில் நடந்திருக்கிறார். அந்த இடத்திற்கு கான்ஸ்டபிள் போய் அவரைப் பிடித்து அம்மாதிரி செய்வது நல்லதல்ல என்று சொல்லியிருக்கிறார். அந்த நேரத்தில் அவர் என்னுடைய கண்ணாடி கீழே விழுந்து விட்டது அதைத் தேடிக்கொண்டிருந்தேன் என்று சொல்லியிருக்கிறார். அந்த சமயத்தில் சப்-இன்ஸ்பெக்டர் அவரை கைது செய்து போலீஸாரிடம் ஒப்படைத்து ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போயிருக்கிறார். ஸ்டேஷனுக்குப் போகிற வரையிலும்கூட அவர் ஒரு வக்கீல் என்று சொல்லவில்லை. தகாத முறையில் நடந்து கொண்டதைப் பற்றி கண்டித்திருக்கிறார்கள்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, தகாத முறையில் நடந்துகொண்டார் என்பதற்கு என்ன சாட்சியம் இருக்கிறது? போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றவுடனே சப்-இன்ஸ்பெக்டர் சாமிராவ் தகாத முறையில் நடந்துகொண்டார் என்று குற்றப் பத்திரிகையில் எழுதவில்லை. ஆனால் நான் டி.எஸ்.பி.யிடம் சென்று இம்மாதிரி சப்-இன்ஸ்பெக்டர் நடந்து கொண்டிருக்கிறார், அது பற்றி விசாரணை செய்யவேண்டுமென்று சொன்னவுடனே அடுத்த நாள் காலையில் சாமிராவ் பெண்ணிடம் தகாத முறையில் நடந்துகொண்டார் என்று பத்திரிகையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : At about 10-45 p.m. Sub-Inspector of D-1 Police Station noticed a common crowd and found an individual, viz., Sri Sami Rao behaving in a disorderly manner.

MR. SPEAKER : Has the Hon. Minister got any information about the point raised by the hon. Member Srimathi P. K. R. Lakshmikantham?

கனம் திரு. பூ. கக்கன் : இருக்கிறது. கனம் அங்கத்தினர் சூபரின்டென்டெண்ட் ஆஃப் போலீஸிடம் சொல்லியிருக்கிறார். அதன் பிறகு 9-ம் தேதி சாமிராவ் அவர்கள் தனியாகக் கேஸ் போட்டுவிட்டார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த இருவர் குற்றச்சாட்டுகளும் விசாரிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டன என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். விசாரணை செய்தது யார்? இந்த வழக்கில் ஈடுபட்டுள்ள சப்-இன்ஸ்பெக்டர், வழக்கறிஞர் ஆகியோரின் வாக்குமூலங்களைக் கேட்டு அதன் பிறகு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதா?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், போலீசார் ஒரு தனி நபரைத் தொந்தரவு செய்தாலோ அல்லது அடித்தாலோ உடனே ஒரு ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் விசாரிக்கவேண்டும் என்கிற போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் 157-வது விதியின்படி ஏன் நடக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : Was it brought before the concerned authorities? It is now said that something wrong has been done against women.

SRI M. KALYANASUNDARAM : May I know what are the contents of the complaint made by the Advocate against the Sub-Inspector of Police?

கனம் சபாநாயகர் : யாருக்கு அவர் கம்ப்ளெயின்ட் கொடுத்தார்?

கனம் திரு. பூ. கக்கன் : அவர் சொன்னது, 'போலீஸ் ஸ்டேஷனில் என்னை வைத்து மரியாதை இல்லாமல் நடத்தி விட்டார்கள், அடித்து விட்டார்கள்' என்பது தான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : யாருக்கு கம்ப்ளெயிண்ட் கொடுத்தார்கள்?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லாததால் தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. வை. சங்கரன் : பாதிக்கப்பட்டவர் ஒரு பொறுப்புள்ள கௌரவம் வாய்ந்த வழக்கறிஞர். அவருடைய மனைவி கூட எம். எஸ்ஸி. படித்தவர் . . .

MR. SPEAKER : That question has no relevancy.

திரு. வை. சங்கரன் : I am coming to the question. அப்படியிருந்தும் கூட சப்-இன்ஸ்பெக்டர் அடித்து விட்டது கடுமையான குற்றமாகக் கருதக் கூடும் என்று கவுண்டர்-கேஸாகப் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுவது வாஸ்தவம்தானா? அந்த விவரம் சர்க்காருக்கு தெரியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : கவுண்டர்-கேஸாகப் போட்டிருக்கமாட்டார்கள். ஏனென்றால் சட்டத்தை நிலை நிறுத்தும் அதிகாரிகள் இம்மாதிரி கவுண்டர்-கேஸ் போட்டிருக்கமாட்டார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொறுப்புள்ளவர்களும் தவறு செய்கிறார்கள். தவறு செய்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு வேண்டியிருக்கிறது. அதையும் கனம் அங்கத்தினர்கள் யாவரும் மனதில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரங்களைப் போதுமான அளவுக்கு இப்போது கொடுக்க முடியாத காரணத்தினால், கனம் அமைச்சர் அவர்கள் இது பற்றி விரிவான முறையில், ஒரு அறிக்கையை இந்தத் தொடர் கூட்டத்திலேயே சபைக்குச் சமர்ப்பிப்பாரா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : வைக்கிறேன்.

* 366 Q.—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that the local M.L.A. of Madurai City was assaulted by the Police while he was going to attend a Committee meeting in connection with the Meenakshi Temple Kumbabishekam in the month of June 1963; and

(b) if so, the action taken in the matter?

THE HON. SRI P. KAKKAN : (a) No Sir.

(b) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

SRI K. CHEEMAICHAMY rose.

MR. SPEAKER : I was looking at the hon. Member for half-a minute. The hon. Member must be quick. There are a large number of questions to be answered.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொன்னார்கள். அப்படித் தாக்கப்பட்ட கனம் அங்கத்தினர் திரு வை. சங்கரன் அவர்கள் இந்தச் சபையில் இருக்கிறார்கள். சம்பவம் நடந்த தினத்தன்று மதுரை அம்மன் கோவில் போலீஸ் ஸ்டேஷனில் 'இம்மாதிரி நான் போலீஸாரால் அவமரியாதையாகப் பேசப்பட்டேன்' என்று புகார் எழுதிக்கொண்டிருக்கும்பொழுது, டவுன் ஏ.எஸ்.பி. அவர்களிடம் வந்து விசாரித்து எழுத்து மூலம் புகார் ஏதாவது வாங்கினார் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. வை. சங்கரன் எழுத்து மூலமாக எந்தவிதமான ரிப்போர்ட்டும் தன்னை அஸால்ட் பண்ணியதாக கொடுக்கவில்லை என்று தெரிகிறது. அவர்கள் எந்த விதமான கேஸும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதால், விஷயம் 'க்ளோஸ்' செய்யப்பட்டது.

திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு பெர்ஸனல் க்ளாரிபிகேஷன். நான் அன்றிரவே ஏ.எஸ்.பி-யிடம் ரிட்டன் கம்ப்ளெயிண்ட் கொடுத்திருக்கிறேன். அவர் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதி மொழி கூறினார். நான் டி.எஸ்.பி., டிஸ்டிரிக்ட் கலெக்டர், ஏ.எஸ்.பி. எல்லோரிடமும் நேரிடையாகப் பேசியிருக்கிறேன். தகுந்த நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். 'எம்.எல்.ஏ.-யாக இருந்தால் எனக்கென்ன?' என்று அவமரியாதையாகப் பேசினார் என்று ரிட்டன் கம்ப்ளெயிண்ட் கொடுத்திருக்கிறேன். அப்படியிருக்கும்பொழுது . . .

MR. SPEAKER : There is no need for exhibiting emotion here.

SRI V. KRISHNAMOORTHY : On a point of order, Sir. The hon. Member stated that he had given a complaint stating that he was assaulted. But the hon. Minister states that it is not a correct statement. I want to know whether the information given by the hon. Member is true or the information given by the Hon. Minister is true.

MR. SPEAKER : There is no point of order in this. Does the Hon. Minister want to say anything in this regard ?

THE HON. SRI P. KAKKAN : The Deputy Inspector-General of Police, Southern Range, reported that Sri V. Sankaran desired that no further action need be taken in the matter and so

இப்பொழுது எழுந்துள்ள கேள்வி. இதை பல நிபுணர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய கொள்கை காரணமாக, திட்டங்கள் காரணமாக நிலத்தின் மதிப்பு உயரும்போது அதில் இருந்து நாட்டினுடைய வளர்ச்சிக்காக, மக்களுடைய முன்னேற்றத்திற்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அப்படி உயர்ந்திருக்கக்கூடிய மதிப்பிலிருந்து ஒரு சதவிகிதத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்வதில் குற்றம் இல்லை, அது அவசியமும்கூட என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தப் புது வரியினால் பாதகம் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இதையெல்லாம் நன்கு பரிசிலனை செய்து பொறுக்கு கமிட்டியினர் ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஏராளமான சொத்துக்கள் படைத்தவர்களைப் பொறுத்த வரையில், வரி விதிப்பு கொஞ்சம் அதிகமாக இருந்தாலும்கூட ஆட்சேபணை இருப்பதற்கு இடம் இல்லை. ஆனால் அதே நேரத்திலே யாருக்கும் பாதகம் வரக்கூடாது என்ற பொது முறையிலே வரி விதிக்கப்பட வேண்டும். அதே நேரத்திலே வரியும் மிக குறைந்த அளவில் விதிக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்தது. ஆரம்பத்தில் மசோதாவில் ரூ. 1,000-க்கு ரூ. 5 என்றுதான் வரி போட்டிருந்தது. இந்த நிலத்திலிருந்து வரி அந்த அடிப்படையில் வசூலிக்க வேண்டும் என்று போட்டிருந்தோம். ஆனால் பொறுக்குக கமிட்டியில் அதை பரிசிலனை செய்யும்போது கனம் அங்கத்தினர்கள் அதை இன்னும் மறு பரிசிலனை செய்யவேண்டுமென்று வற்புறுத்தின நேரத்தில் கமிட்டியில் ரூ. 1,000-க்கு ரூ. 4 என்ற வகையில் (குறுக்கீடு) வரி விதிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள், சபை ஏதேனும் விசேஷ சலுகை கேட்டால் கொடுக்குமா என்று. இதையே சபையிலேயே தெரிவிக்கக்கூடிய முறையில் அமைக்கலாம் என்று நினைத்தேன். ஆனால், கனம் முதலமைச்சர் அவர்கள் சபையின் பிரதிநிதிகள் பொறுக்கு கமிட்டியில் இருக்கும்போது, அவர்கள் சாங்கோபாங்கமாக பரிசிலனை செய்யும்போது அதை செலக்ட் கமிட்டியிலேயே தீர்மானித்து விடலாம் என்ற கருத்தை தெரிவித்தார்கள். ஆகவேதான் .4 சதவிகிதம் என்று ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். .4 சதவிகிதம் என்று சொல்லும்போது. இந்த வரி முதல் தடவையாக வருவதால் இது யாருக்கும், குறிப்பாக கஷ்டப்படுபவர்களை கஷ்டப்படுத்தி விடுமோ என்று நினைப்பவர்களுக்கு கஷ்டம் வரக்கூடாது என்ற நிலையில் வைத்திருக்கிறோம். இப்படி .4 சதவிகிதம் என்று வைப்பதால் பெரும் அளவு அரசாங்கத்தின் வருமானம் குறைந்திருக்கிறது. இருந்தாலும் ஆரம்ப காலத்தில் யாருக்கும் கஷ்டம் வரக்கூடாது என்ற வகையில் பொறுக்குக் கமிட்டியில் அனுதாபத்தோடு தீர்மானித்திருக்கிறார்கள்.

ஒரு சாரார் கூறுகிறார்கள், "இந்த அர்பன் லாண்ட் டாக்ஸை என்பதையே விட்டுவிட்டு குவிட்ரெண்ட் முறையையே கொஞ்சம் அதிகப்படுத்திவிடக்கூடாதா?" என்று எனது முக உரையிலேயே நான் சொன்னேன். குவிட்ரெண்டை பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கும் முறை ஒரு சயின்டிபிக் முறையில் அமை

யாத வரியாக இருக்கிறது. பரிசீலனை செய்து ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த அர்பன் லாண்ட் டாக்ஸ்தான் சிறந்த முறையாக இப்பொழுது இருக்கும் நிலையில் படுகிறது. இதனால் யாருக்கும் தொந்தரவு வராது.

இன்னொரு கருத்து தெரிவிக்கப்பட்டது, செலக்ட் கமிட்டியிலும் இங்கேயும், 1½ கிரவுண்டு அல்லது இரண்டு அல்லது மூன்று கிரவுண்டு அல்லது சுதந்திரா கட்சித் தலைவர் கூறியதுபோல, மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளாத, ஒரு ஏகர் கட்டிடத்திற்கு விலக்கு கொடுக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

திரு. சா. கணேசன்: மன்னிக்க வேண்டும். டவுன் பிளானிங் ஸ்கீமிலே ஒரு வீடு கட்டுவதற்கு ஒரு ஏக்கர் நிலம்தான் என்று கட்டுப்பாடு இருப்பதால் இந்த வரி விதிப்பால் கஷ்டங்கள் ஏற்படும் என்பதற்காக சொன்னேன். அதிலேயும் விளக்கம் சொன்னேன், ரூ. 50 ஆயிரத்துக்குட்பட்ட மதிப்புள்ள வீடுகளைப்பற்றி யோசிக்க வேண்டுமென்று சொல்லுகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: நமக்கு முன்னிருக்கும் பிரச்னை வீடுகளுக்கு வரி நிர்ணயிப்பது அல்ல. ஒரு ஏக்கரில் வீடு கட்டியிருந்தால் அதை விட்டுவிட வேண்டும் என்று சொன்னதுபோல் பட்டது. வாதத்திற்காக மட்டுமல்ல, 1½ கிரவுண்ட் என்று சொல்லும்போது அது எந்த இடத்தில் என்று பார்க்க வேண்டும். எப்படி இந்த சட்டத்திலிருந்து விலக்கு கொடுப்பது என்று பார்க்கும்போது அதிகப்படியான வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக சைனா பஜாரில் உள்ள 1½ கிரவுண்ட் எத்தனை ஆயிரம் பெறும் (குறுக்கீடு) என்று கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். எத்தனை லட்சம் என்று கேட்கிறார்கள். சைனாபஜாரிலும், ரெஸிடென்ஷியல் வார்டர்ஸ் இருக்கின்றன. இங்கே 16 கிலோ மீட்டர் என்று எல்லை போட்டிருக்கிறோம். அந்த எல்லையின் கடைசியில் 1½ கிரவுண்ட் இருந்தால், அது அடையார் பகுதியாக இருந்தால் அந்த சொந்தக்காரரை ஏழை என்பதா இல்லையா? ஆகவே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் சொல்லியதுபோல இந்த ஸ்லாப் ஸிஸ்டம் முறையை ஓர் அளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த மசோதாவிலே பார்த்தால் ஜோன் ஆக பிரித்திருக்கிறோம். அடுத்த பகுதியை சப்ஜோனாக பிரிக்கிறோம். பொறுக்கு கமிட்டியில் சப்ஜோனுடைய குறைந்தபட்ச எல்லையை அகற்றிவிட வேண்டும் என்று முடிவு எடுத்தோம். அது யாருக்கும் அதிகம் பாதகம் ஏற்படாமல் எல்லையை நிர்ணயம் செய்ய அதிகாரம் வேண்டும் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அப்பொழுதுதான் நடுத்தர மக்களுக்கு, ஏழை இருக்கும் மக்களுக்கு, பாதுகாப்பு கொடுக்க முடியும். 1½ கிரவுண்ட், 3 கிரவுண்ட் என்று சொல்லும்போது சமமான ஒரே சந்தர்ப்பத்தை அல்லது ஒரே வசதியை எல்லா மக்களுக்கும் கொடுக்க முடியாது. கனம் அங்கத்தினர் மதியழகனும் மற்றவர்களும் மறு பரிசீலனை செய்து பார்த்தால் புரியும். இந்த முறையை சட்டத்திலிருந்து விட்டுவிட வேண்டும் என்று சொல்லுவது பொருத்தமானது அல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

[21st November 1963

he closed the matter by assuring the M.L.A. that no offence had been meant to him. He had also reported that it was unfortunate that some inconvenience had been caused to the M.L.A.

MR. SPEAKER : The Government will make further enquiries in the matter.

Question No. 368.

Taxis

* 368 *Q*.—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how many big, medium and baby taxis and auto-rickshaws are now running in Madras City up to 30th June 1963; and

(*b*) why no licences for the running of more auto-rickshaws have been given?

THE HON. SRI R. VENKATARAMAN :

(*a*) (i) Big Taxis	37
(ii) Medium Taxis	50
(iii) Baby Taxis	1,470
(iv) Auto-rickshaws	220

(*b*) The Regional Transport Authority, Madras has stopped issue of fresh permits for the running of auto-rickshaws in Madras City for the following reasons :—

(1) The three wheeler is not a safe type of passenger vehicle due to its capacity to take sharp turns;

(2) The auto-rickshaw produces much noise and emits large smoke when starting and while in motion and causes annoyance to the passengers and to the public; and

(3) The auto-rickshaw is not able to clear the automatic light points quickly and thus hampers free flow of traffic on main roads.

திரு. கரு. சீமைச்சாமி : இப்பொழுது 367-வது கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லையே?

கனம் சபாநாயகர் : 368-வது கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார். 367-வது கேள்வியை ஒருவரும் போடவில்லையே.

SRI V. KRISHNAMOORTHY : Unless the Speaker calls the number of the question, we may not know it.

MR. SPEAKER : I saw that the concerned hon. Member was not here. Anyhow, I will take up the question afterwards. Does the hon. Member. Sri K. Mookiah Thevar want to put any supplementary question?

SRI K. MOOKIAH THEVAR : Next question may also be taken up, Sir.

21st November 1963]

* 369 *Q*.—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that licences have been granted to run fleets of taxis in the City;

(*b*) the reasons that have prompted the Government to grant such licences; and

(*c*) whether such licences are proposed to be issued to auto-rickshaws also and, if not, why?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The scheme has been formulated to provide for an efficient and un-interrupted taxi service in Madras City.

(*c*) No. The Member is referred to the answer given with reference to Clause (*b*) of the starred question No. 368 separately tabled by him.

திரு. கே. மூக்கையா தேவர் : இரவு நேரங்களில் டாக்ஸிகளை ஓடவிடுவதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா? அது சம்பந்தமாக எந்தக் கம்பெனிக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 24 மணி நேரமும் ஷிப்டு ஸிஸ்டம் வைத்து டாக்சி ஓட்டுவதாக இருந்தால், அவர்களுக்கு ஃப்ளீட் ஆப் டாக்சீஸ் ஓட்டுவதற்கு லைசென்ஸ் வழங்குவதாக சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே சென்னை நகரத்தில் 220 ஆட்டோரிக்ஷாக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்வளவோடு இந்த எண்ணிக்கையை நிறுத்துவதற்கு எண்ணமா? அல்லது இந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசினருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிற ஆட்டோரிக்ஷாக்கள் பழையதாகப் போனவுடன், புதியதாக லைசென்ஸ் வழங்கப்படமாட்டாது. கொஞ்சம் கொஞ்சமாக சென்னையிலிருந்து ஆட்டோரிக்ஷாக்கள் நீக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் இம்மாதிரி டாக்ஸீஸ் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. க. ர. நல்லசிவம் : ஆட்டோரிக்ஷாவை விட்டுவிடக்கூடியவர்களுக்கு பெர்மிட் கொடுப்பதில் ஏதாவது முதல் சலுகை கொடுக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது சர்க்கார் வகுத்துக்கொண்டிருக்கிற கொள்கையின்படி, ஒரு ஃப்ளீட் ஆப் டாக்ஸீஸ் 50, 40 என்று வைத்து, டெலிபோன் வசதி செய்து,

இண்டர் கம்யூனிகேஷன், அதாவது ஒரு வண்டியிலிருந்து மற்றொரு வண்டிக்கு அல்லது ஒரு வண்டியிலிருந்து அவர்களுடைய ஹெட் ஆபீஸிற்கு பேசக்கூடிய வயர்லெஸ் வசதி, மற்றவைகளெல்லாம் செய்து யார் டாக்ஸி நடத்துவதற்கு முன்வந்தாலும், அவர்களுக்கு அதிகமாக சலுகை கொடுப்பது என்பது முடிவு. ஓனர் டிரைவராக இருந்தால் அவர்களுக்குக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

திரு. கே. மூக்கையா தேவர் : இருக்கிற வசதியோடு குறைந்த கட்டணத்தில் ஆடோரிக்ஷாவில் ஏழை மக்கள் போவதற்கு வசதியாக இருக்கிறது. இப்பொழுது இருக்கிற ஆட்டோரிக்ஷாக்கள் ரொம்ப ஆபத்தாக இருக்குமானால் டெல்லி போன்ற மற்ற இடங்களில் இருப்பதுபோல் பெரிய வீல் போட்டு, 2, 3 பேர்கள் ஏறிக்கொள்வதற்கு வசதியான ஆடோரிக்ஷாக்கள் ஓடும்படி செய்வதற்கு அரசினருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டெல்லியில் ஆடோரிக்ஷாக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக நீக்குவதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். அந்த வண்டிகள் பழையதாகப் போனவுடன் நிறுத்தி விடுவார்கள். பம்பாயில் நீக்கிவிட்டார்கள். இதனால் டிராபிக் ஆக்ஸிடென்ட்ஸ் அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே, இதை நீடித்து நடத்துவதற்கு உத்தேசமில்லை.

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி ஃப்ளீட் டாக்ஸிகளுக்கு லைசென்ஸ் வழங்குவதற்கு முடிவு செய்திருப்பதன் முக்கிய நோக்கம், ஏற்கெனவே இருக்கிற டாக்ஸிகாரர்கள் அடிக்கடி ஸ்ட்ரைக் செய்கிறார்கள், அதனால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன: ஆகவே அதற்கு மாற்று முறையாக இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள் என்ற வதந்தி இருக்கிறதே? அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வதந்திகள் எத்தனையோ கிளம்புகின்றன. ஆனால், எபிஷியண்டு ஸர்வீஸ் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த முறை அனுஷ்டிக்கப்படுகிறது.

Political sufferers

• 367 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount of lump-sum cash grants, land grants and life pensions under the scheme for relief and rehabilitation of political sufferers in Madras State in 1962–63; and

(*b*) the basis of distribution of these amounts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A total sum of Rs. 13,800 was granted as financial assistance from the Union Home Minister's Discretionary Grant to 40 political sufferers in Madras State during 1962-63. There are no schemes for assignment of land to political sufferers and for the grant of life pension.

(*b*) Financial assistance is granted by the Government of India from the Union Home Minister's Discretionary Grant. The grant is recommended taking into account the period of imprisonment undergone by the Political Sufferer during the freedom struggle and his present financial position.

SRI M. S. SELVARAJAN : Are the Government aware that the disposal of applications for grant of financial aid to political sufferers is much delayed? If so, what is the reason for the same? Will any speedy action be taken in this regard?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may inform the hon. Member that there was no avoidable delay. If the application is received, it has to be verified whether the applicant comes under the category of political sufferer and whether he deserves any gratuity or aid.

திரு. கரு. சீமைச்சாமி : கட்சி மாறிய அரசியல் தியாகிகளுக்கும் இந்தச் சலுகை உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்சி மாறிய அரசியல் தியாகிகளுக்குச் சலுகை கொடுப்பதற்குத் தடை ஒன்றுமில்லை இந்த விதிகளின்படி.

திரு. ஜே. மாதா கவுடர் : அரசியல் தியாகிகள் எல்லோருக்கும் நிலம் கொடுத்து உதவவேண்டும் என்பது தான் ஆரம்பத்தில் சர்க்கார் கொள்கையாக இருந்தது. பாதிப் பேர்களுக்கு நிலம் கொடுத்த பிறகு, ராஜாஜி மந்திரி சபையினால் இது நிறுத்தப்பட்டு விட்டது. பாதிப் பேர்கள் உண்மையாகவே தியாகிகளாக இருக்கும் காரணத்தினால், அவர்களுக்கு நிலம் கொடுப்பது பற்றி சர்க்கார் மறு பரிசீலனை செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 11 ஆண்டுகளுக்கு முன்பு முடிவு செய்யப்பட்ட விஷயத்தை மீண்டும் எடுத்துக்கொள்வதாக இல்லை. அப்படி எடுத்துக்கொண்டாலும், கொடுப்பதற்கு நிலம் இல்லை.

தேசீய பாதுகாப்பு நிதி

• *370 கேள்வி.—திரு. முனு. ஆதி :* கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா— 9–30 a.m.

தேசீய பாதுகாப்பு நிதிக்கு தமிழ்நாடு அரசாங்க ஊழியர்கள் அவர்களது மாத சம்பளத்தில் ஒரு நாள் ஊதியத்தை அளித்துவிட வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டனரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Sir.

திரு. முனு. ஆதி : அப்படி ஏதேனும் புகார் வந்திருக்கிறதா? இப்பொழுதும் பாதுகாப்பு நிதிக்கு வசூல் செய்து கொண்டிருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி ஒன்றும் புகார் வரவில்லை.

பெரியம்மை (நீலகிரி மாவட்டம்)

*363 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லா கூடலூர் தாலூகாவில் 1963-ல் ஜனவரி முதல் ஜூலை மாதம் வரை எத்தனை பேர் பெரியம்மையால் பாதிக்கப்பட்டனர்?

(இ) இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) 74.

(இ) 14.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஸார், இந்த அம்மை நோய் கண்ட ஆதிவாசிகளைக் குளிர்ப் பிரதேசமான நீலகிரியில் கம்பளிகூடக் கொடுக்காமல் வெளியில் வைத்த காரணத்தினால்தான் இவர்களில் சிலர் இறந்தார்கள் என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சாதாரணமாக அம்மை நோய் வந்தால் போர்த்த மாட்டார்கள். அதுவும் கம்பளியைக் கொண்டு போர்த்தினால் இன்னும் உஷ்ணம் அதிகமாகப் போய் விடும் என்று கம்பளி போட்டு போர்த்தாமல் இருந்திருக்கலாம். இறந்த நபர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது அந்தக் காரணத்தினால் இறந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

திரு. ஜே. மாதா கவுடர்: அம்மை நோய் ஏற்பட்ட ஆதிவாசிகளை எந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் சிகிச்சை செய்தார்கள்? காட்டில் ஷெட்டுகளைப் போட்டு அங்கு வைத்து சிகிச்சை செய்தார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கூடலூரிலிருந்து ஒரு மைலுக்கு அப்பால் ஷெட்டுகளைப் போட்டு அங்கு பேஷெண்டுகளை வைத்து சிகிச்சை செய்தார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர்: அவர்களை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று தகுந்த சிகிச்சை செய்யாததற்குக் காரணம் என்ன? இதற்குப் பொறுப்பாளி யார்? அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அம்மை நோய் வந்திருக்கிறது என்று தெரிந்தவுடனேயே டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீஸர், டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர் எல்லோரும் அந்த இடத்திற்கு மொபைல் வானில் வந்து எல்லா சிகிச்சையையும் உடனடியாகவே செய்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தகவல் கிடைத்த உடனேயே செய்திருக்கிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஆதிவாசிகள் மிகவும் நெருக்கமாக இருந்து, மிகவும் அசுத்தமாக இருக்கிற காரணத்தினால்தான்

விரைவாக நோய் பரவி விடுகிறது. இதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஏதாவது வழி கண்டுபிடிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அந்தந்தத் தொகுதியில் இருக்கிற கனம் அங்கத்தினர்கள் அவர்களுக்கு சுகாதார முறையை எல்லாம் பிரசாரம் செய்து கொண்டு வந்தால் நலமாக இருக்கும்.

நில உச்சவரம்பு சட்டம்

*364 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் ரெவின்யூ டிவிஷனில் நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் சுமார் எவ்வளவு ஏக்கர் நிலம் பிரித்துக் கொடுப்பதற்கு கிடைக்க வருகின்றது?

(இ) இந்தப் பிரிவில் உள்ள சிப்பந்திகளுக்காக இதுவரை எவ்வளவு செலவாகியுள்ளது?

கனம் திரு. வெ. ராமையா: (அ) சுமார் 966.56 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள்.

(இ) ஜூலை மாதம் முடிய ரூ. 12,536.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த நிலங்களில் எவ்வளவு நிலங்கள் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன என்று கனம் அமைச்சர் சொல்லுவாரா?

கனம் திரு. வெ. ராமையா: அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாக ஒரு கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Complaint against conduct of Police

*365 Q.—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have received any representation from the Advocates' Association of Madurai regarding the ill-treatment of an advocate by a Police Sub-Inspector on 8th May 1963; and

(b) whether the Government have granted State aid to that Sub-Inspector to defend a case against him?

The Hon. Sri P. KAKKAN: (a) No Sir. But the Honourable member Sri S. Madhavan has forwarded to Government on 25—7—1963 a mahajar petition addressed to him and signed by some of the Advocates of Madurai containing allegation against the Sub-Inspector of Police, B-1 Police station, Madurai.

(b) The Collector of Madurai has sanctioned State aid to the Sub-Inspector of Police in the Private case against him.

பிள்ளை பிடிப்போர் கோஷ்டி

*371 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை, வேலூர் முதலான இடங்களில் சிறு குழந்தைகளையும் சிறுவர்களையும் பிடிப்போர் (கோஷ்டியினர்) உலவி வருவதாகத் தகவல் ஏதேனும் சர்க்காருக்குக் கிடைத்ததா?

(இ) இந்தக் கோஷ்டியை பிடிக்க சர்க்கார் எடுத்துள்ள ஏற்பாடுகள் என்ன?

(உ) இதன் பயனாக (1) கைது செய்யப்பட்டவர், (2) மீட்கப்பட்ட சிறுவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) & (*c*) Two persons were arrested during February 1963 at Vellore, North Arcot, in connection with kidnapping of children. The cases against them are pending trial in the Court. Two children were rescued. No case of kidnapping of children was reported from the City.

திரு. க. ர. நல்லசிவம்: இந்த மாதிரி பிள்ளை பிடிப்பவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களா அல்லது பிற பகுதிகளைச் சேர்ந்தவர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்களின் பெயரைப் பார்த்தால் தமிழ் நாட்டுப் பெயராக இல்லை.

தனிநபர் வருமானம் (உச்சவரம்பு)

*372 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டதுபோல் தனி நபர்கள் வருமானத்திற்கும் உச்சவரம்பு நிர்ணயிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

திரு. இரா. நாராயணன்: இந்த ஜனநாயக ஆட்சியிலே தனி நபர்களின் வருமானத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயிக்காமல் இருப்பது சரியல்ல என்பதை அரசாங்கம் உணருகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தனி நபர்கள் உழைத்து அவர்கள் ஆற்றலின் மூலமாக வருமானத்தைப் பெருக்கிக் கொண்டால், அதற்கு தடை விதிப்பது சரியல்ல. ஆகவேதான் அத்தகைய யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: நிலத்திற்கு உச்ச வரம்பு வைத்திருக்கிறோம். நிலத்திற்கு உச்ச வரம்பு வரப்போகிறது என்று தெரிந்ததும், முன்னதாகவே பெரிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் தங்கள் நிலத்தைப் பணமாக மாற்றி, பெரிய தொழில்களிலே மூலதனம் போட்டிருக்கிறார்கள். சோஷலிஸத்தைக் கடைப்பிடிக்கும் இந்த சர்க்கார் எல்லாத் துறைகளிலும் இருக்கிற தனிப்பட்டவர்களின் வருமானத்தைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதிகமாக நிலத்தை வைத்துக் கொண்டிருந்தவர்கள் நிலத்தை விற்றதினாலே நிலம் எங்கேயும் போய் விடவில்லை. வேறு கைக்கு மாறி இருக்கிறது. அதனால் விவசாயம் நல்ல முறையில் நடக்கும். அதனால் கிடைத்த பணத்தைத் தொழில் வளர்ச்சிக்காகப் போடுவதையும் அரசாங்கம் வரவேற்கின்றது. அப்படி மூலதனம் போட்டு, தொழில் அதிபர்களாகிச் சம்பாதித்தால் அதிலிருந்து எப்படி நாம் பெரும் பகுதியைப் பெற முடியும் என்பதும் தெரியும். அந்த வகையிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

Higher Studies in Engineering

*373 Q.—SRI K. B. PALANI: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to offer extra payment to Post-Graduate students in Highways Engineering Service; and

(*b*) If so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) The proposal is still under consideration and the details have not yet been finalised.

Highways Research Department

*374 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) what is the nature of the work done by the Officer in charge of the administration of the Highways Research Station; and

(b) what are the qualifications required for that post?

THE HON. SRI V. RAMAIAH: (a) The Director of the Highways Research Station is in charge of applied Research on Highway Engineering and Traffic Engineering. His chief function is providing expert knowledge to the field Engineers of the department in charge of various structural construction works and road works.

(*b*) The post is in the grade of Superintending Engineer and no special qualifications are prescribed for the post.

திரு. கே. மூக்கையா தேவர்: இந்த ஆராய்ச்சி நிலையம் குறிப்பாக நிபுணத்துவத்தை அதிகரிப்பதற்காக வைக்கப்பட்டிருக்

கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன் மூலமாக என்னென்ன கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: அதனுடைய ரிசல்ட்டைப் பொறுத்தவரையில்: இந்த நிலையம் சென்னை நகரத்திற்கே பெரும் உதவியாக இருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பாலங்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய அமைப்பு முறையிலே அமையாத காரணத்தினால், ஹெவி டிராபிக் எடுத்துக் கொள்ள முடியுமா என்ற சந்தேகம் இருந்தது. இந்த நிலையம் அதை நன்கு பரிசீலனை செய்து, சுமார் 50 அல்லது 100 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பாலங்களாக இருந்தாலும், இப்பொழுது இருக்கக் கூடிய லோடு பாக்டருக்குப் போதுமான உதவி தரும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அந்த முடிவுப்படி பார்த்தால் சென்னை ராஜ்யத்திற்கே பல கோடி ரூபாய் லாபமாக இருக்கும். இந்த உதவியை அகில இந்தியாவுக்கும் கொடுப்பதனால், நமது தேசத் திற்கே ஒரு பெரிய லாபமாக இருக்கிறது. இந்த நிலையம் நமது ராஜ்யத்தில் அமைந்திருக்கிறது. இன்னும் பல ஆராய்ச்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதைப் போய்ப் பார்க்கக் கூடிய நிபுணர்கள் அத்தனை பேரும் இது நிச்சயமாக சென்னை ராஜ்யத் திற்கும், அகில இந்தியாவுக்கும் பேருதவியாக இருக்கிறது, இன் னும் இதை விரிவு படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

* 375 Q.—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether any Central grant is being given to the Highways Research Station at Madras; and

(b) if so, the details thereof?

The Hon. Sri V. RAMAIAH: (a) Yes.

(b) Rs. 5,000 for 1957–58, Rs. 13,500 for 1958–59 and Rs. 15,000 for each of the four years from 1959–60 to 1962–63.

* 376 Q.—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) how many officers of the Highways Research Station at Madras have been kept in Madras City for more than five years; and

(b) why the usual practice of transferring officers after a certain period has not been followed in their cases?

The Hon. Sri V. RAMAIAH: (a) Two officers, viz., the Director and the Assistant Engineer of the Highways Research Station have been kept in the same posts for more than five years.

(b) The policy of periodical transfer will not apply in the case of the Director who is in the grade of Superintending Engineers. Further, continuity of service is essential for efficient research work in the Station. The Assistant Engineer has completed 5 years of service on 23—5—1963. The question of

continuing him for another year for administrative reasons is under consideration.

Highways Department

* 377 Q.—Sri K. B. PALANI: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the number of officers above the rank of the Executive Engineers in the Highways Department who were given extension of service or re-employed during 1962–63 and 1963–64; and

(b) the number of Assistant Engineers who were reverted during 1962-63?

கனம் திரு. வெ. ராமையா: (அ) 1962-63 ஓர் அதிகாரி, 1963-64 ஓர் அதிகாரி.

(இ) ஒருவருமில்லை.

தேசிய சேமிப்புத் திட்டம்

* 378 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தேசிய சேமிப்புத் திட்டத்துக்கென உள்ள மாநில ஆலோசனை போர்டின் அங்கத்தினர்கள் யார்?

(இ) கடந்த ஓராண்டில் அந்தப்போர்டு ஆற்றிய பணிகள் யாவை?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) A list[a] of the members of the Madras State Advisory Board for National Savings is placed on the table of the House.

(b) The Advisory Board has met four times and discussed ways and means of promoting Small Savings.

Apart from attending the meetings of the State Advisory Board the members associate themselves with the savings movement in their respective areas and maintain contact with the authorised agents, Officials of National Savings Organisation and other State and Central Officials. The members assist in the conduct of meetings for Small Savings, enrolment of agents, group discussions, and formation of savings groups and publicity, etc. Each member has been allotted a definite area for this purpose. The Vice-Chairman of the Advisory Board tours the whole State. In the course of her tours she visits industrial undertakings, Commercial Concerns, Government and other offices and seeks to get Pay Roll Savings Groups formed in these institutions and offices.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தச் சேமிப்புத் திட்டத்திற்கு எதிர்க்கட்சியைச் சார்ந்த ஒருவரைத் துணைத் தலைவராகப் போட் டிருக்கிறார்கள். அந்தப் பெருந்தன்மையை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் இந்த நான்-அபிஷியல் உறுப்பினர்களாக இருக் கிறவர்களில் பல எம்.எல்.ஏ-க்கள் காங்கிரஸ்காரர்களாக இருக்

[a] Printed as Appendix I on pages 526–527.

கிறுர்களே தவிர, எதிர்க்கட்சியினருக்கு போதுமான இடம் கூட இல்லை. அந்தப் பெருந்தன்மையை இந்த விஷயத்திலும் காட்டுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த போர்டை மாற்றி அமைக்கும் போது, மேலும் அங்கத்தினர்களை நியமிக்கும்போது, ஒத்துழைக்கக் கூடிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களை, இதிலே அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்வது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தும்.

முதியோர் பென்ஷன்

*379 கேள்வி.—திரு. எஸ். ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் வட்டவாரியாக முதியோர் உதவித் தொகை கோரிவந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) எத்தனை பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The number of applications for old age pension received in each taluk in Tiruchirappalli district up to 1st July 1963 and the number of pensions sanctioned is as follows:—

Name of Taluk	Total number of applications for old age pension received up to 1st July 1963.	Total number of pensions sanctioned up to 1st July 1963.
Tiruchirappalli	3,843	681
Lalgudi	1,739	368
Musiri	2,511	491
Perambalur	1,035	265
Jayankondan	1,803	275
Kulitalai	1,392	230
Karur	2,505	385
Alangudy	1,586	309
Kulathur	786	270
Tirumayam	1,676	452
Total	18,876	3,726

*380 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதியோர் உதவித்தொகை பெற புகைப்படம் எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏதாவது புது உத்திரவு பிறப்பித்திருக்கிறதா ?

THE HON. SRI B. BHAKTAVATSALAM: Yes, Sir.

திரு. ஆ. தங்கவேலு: சார், முதியோர் உதவித் தொகை வாங்குபவர்கள் ஆதரவற்றவர்கள். அவர்களால் புகைப்படம் எடுத்துக் கொடுக்க சாத்தியமாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முதல் மாதம் பென்ஷன் வாங்கின பிறகு புகைப்படம் கொடுக்கவேண்டும் என்று விதி இருக்கிறது. புகைப்படம் இல்லாவிட்டால் சரியான மனிதர்தானு என்று கண்டு பிடிப்பதில் சிரமம் இருக்கும். ஆகவே தான் புகைப்படம் எடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அவர்கள் முதல் மாதம் பென்ஷன் வாங்கின பிறகு புகைப்படம் எடுக்கலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித்தொகை பெற தகுதிபடைத்த முதியோர் அத்தனைப்பேருக்கும் இந்த உதவி வழங்கப்படுகிறதா? அல்லது மாவட்ட வாரியாக இவ்வளவு பேருக்குத்தான் கொடுக்க வாய்ப்பு வசதி இருக்கின்றன என்று ஏதாவது உத்தரவு இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: யார் யார் தகுதியுள்ளவர்களோ, எத்தனை பேராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் பென்ஷன் வழங்க வேண்டும் என்றுதான் உத்தரவு. அதற்கு வரம்பு இல்லை. இப்பொழுதே பென்ஷன் தொகை ரூ. 1,30,00,000 ஆகி இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து: சார், திருச்சி மாவட்டத்திலே சிலருக்கு இந்த உதவித் தொகை முன்னுல் கொடுக்கப்பட்டு இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது. காரணம் கேட்டபோது—அவர் ஒரு பட்சவாதவியாதிக்காரர்—மனு செய்து கொண்டு கேட்டதற்கு சர்க்காருடைய பதில் என்னவென்ருல் "பிச்சை எடுத்து சாப்பிடுபவராக உமது முதல் விண்ணப்பத்தின்மீது விசாரணையின்போது கூறியிருக்கிறீர். ஆகையால் நீர் பிச்சை எடுக்கும் தொழிலைச் செய்பவராகக் கருதி...".

MR. SPEAKER: The question is very long!

திரு. து. ப. அழகமுத்து: ". . . . உங்களுக்கு உதவித்தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது" என்று சொல்லியிருக்கிருர்கள். சர்க்கார் பிச்சை எடுப்பதை ஒரு தொழில் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பென்ஷன் கொடுக்கும் விதிப்படி பிச்சை எடுப்பவர்களுக்கு அந்த பென்ஷன் கிடையாது.

திரு. க. ர. நல்லசிவம்: இந்த வேலையை தாலுகாவிலுள்ள பழைய அதிகாரிகளே கவனிக்கிருர்களா, அல்லது இதற்கென புது அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிருர்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்கென பிரத்யேகமாக அதிகாரிகள் இல்லை.

திரு. மு. பொ. வடிவேல்: சார், சில நேரங்களில் இந்த பென்ஷன் மாதா மாதம் வருவதில்லை. 2, 3 மாதம் கழித்து வருகிறது. இதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதில் கால தாமதம் ஏற்பட்டு இருக்கலாம்.

திரு. எம். எஸ். மணி: சார், பல முதியோர்கள் விஷயத்தில் இந்த பென்ஷன் சலுகை நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நிறுத்தப்பட்ட முதியோர்களுக்கு அது பற்றி அறிவிப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு விடையளிக்க என்னிடம் தகவல் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : சார், தகுதியிருந்தும் கணவன் மனைவி இருவர் இருந்தால், கணவனுக்கு கொடுத்தால் மனைவிக்கு இல்லை, மனைவிக்கு கொடுத்தால் கணவனுக்கு இல்லை என விதி மாற்றியமைக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு அமைத்த விதிகள் அப்படியே இருக்கின்றன. அந்த விதிகளின்படி யார் யாருக்குக் கொடுக்க முடியுமோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : முதியோர்கள் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துக்கொண்டு அதன் மூலம் வசதிகளைக் கேட்டால் அதை அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பென்ஷனர்கள் சங்கம் இருக்கிறது. அவர்களுக்குப் புதிதாக யாராவது தலைவர் முன் வந்து சங்கம் அமைத்து அதனால் தங்களுக்கும் அனுகூலமா என்று அவர்களே கவனிக்க வேண்டும். (சிரிப்பு)

திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : சில முதியோர்களுக்கு முதலிலேயே பரிசீலனை செய்யப்பட்டு உதவி கொடுக்கப்பட்டிருந்தும், பிற்பாடு மறுபரிசீலனை செய்து கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதல் பரிசீலனையில் சில தகவல் தெரியாமல் போயிருக்கலாம். அதற்காகத்தான் புனர்ப் பரிசீலனை செய்கிறார்கள்.

மணியார்டர் மூலமாக பென்ஷன்

*** 381 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குறைந்த அளவு பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு பென்ஷன் வாங்க போக்குவரவு செலவும் சங்கடமும் அதிகம் ஏற்படுவதால் 50 ரூபாய்க்குக் குறைந்த பென்ஷன் தொகை வாங்குகிறவர்களுக்கு மணியார்டர் மூலம் தொகை அனுப்ப உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்படாத பென்ஷன் தொகையை மணியார்டர் மூலம் அனுப்புவதற்குத் தற்போதைய விதிகளில் ஏற்கனவே அனுமதியிருக்கிறது. ஆனால், பென்ஷனர் பென்ஷன் தொகையைத் தமது செலவில் மணியார்டர் மூலம் அனுப்பும்படி எழுதிக்கொடுக்க வேண்டும்.

பென்ஷன்

*** 382 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதியோர் பெறும் உதவித் தொகை ரூ. 20-ஐவிட, அரசாங்கத்தில் 30 வருடம் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களின் பென்ஷன் தொகை குறைவாக கிடைப்பதால் ரூ. 20-க்கு குறைந்து

வாங்குபவர்களின் பென்ஷன் தொகையை சராசரி ரூ. 20 ஆக உயர்த்த அரசாங்கம் உடனடியாக முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter is under the consideration of the Government.

திரு. ஆ. தங்கவேலு : சார், எவ்வளவு சீக்கிரத்தில் முடிவு ஆகும் என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எப்பொழுது முடிவு ஆகும் என்று குறிப்பாகக் கூறுவதற்கு இப்பொழுது சாத்தியம் இல்லை. அது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது. ரூபாய் 20-க்குக் குறைந்த பென்ஷன் வாங்குபவர்கள், முதியோர், பென்ஷனுக்கு என்ன என்ன நிபந்தனைக்கு உட்படுகிறார்களோ, அவைகளுக்கு உட்பட்டால் அதே அளவு கொடுப்பதா என்பது யோசனையில் இருக்கிறது.

Temporary State-wide permits for lorries

* 383 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the mode of issue of temporary State-wide permits to lorries is not uniform in all the districts. and

(*b*) if so, the reasons for the disparity ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சேலம் ஜில்லாவில் இந்த மாதிரி வித்தியாசம் காட்டப்படுவதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முன்பு இருந்த வித்தியாசங்களை நீக்கி இப்பொழுது உத்தரவு போட்டாகிவிட்டது. இப்பொழுது ஒன்றும் தடையில்லை.

மறைந்த அண்ணாமலைப் பிள்ளைக்கு நினைவுச் சின்னம்

*** 384 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மறைந்துபோன மாவீரர், உயர்திரு. அண்ணாமலைப் பிள்ளை அவர்களுக்கு சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : சார், இந்த மன்றத்திலே முன்பு பேச்சு எழுந்தபோது முன்னாள் முதலமைச்சர் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப் போவதாகச் சொன்னார்கள். இப்பொழுது 'இல்லை' என்று சொல்லக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : முன்னாள் முதலமைச்சர் அப்படிச் சொன்னதாக எனக்கு நினைவு இல்லை. திருவண்ணாமலையிலே அண்ணாமலைப் பிள்ளைக்கு ஞாபக சின்னம் வைக்க கனம் அங்கத்தினர் போன்றவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டால் பொது மக்களுடைய ஆதரவு நிறைய இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. மா. இ. ராசாங்கம் : தலைவர் அவர்களே, பாடுபட்டு பாரதத்திற்கு சுதந்திரம் தேடித்தந்த விடுதலை வீரர்களிலே முன்னணியில் நிற்கத்தக்க பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் வைக்க லட்சக்கணக்கான மக்கள் . . . .

MR. SPEAKER: The question does not arise.

திரு. எஸ். முருகையன் : திருவண்ணாமலையில் அண்ணாமலைப் பிள்ளையின் உருவச் சிலையை வைப்பது குறித்து, அந்த நகரசபை தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருந்தும் சர்க்காரிலிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அந்தக் கேள்வி என் சகா ஸ்தல ஸ்தாபன அமைச்சருக்குப் போட வேண்டும்.

Paramakudi Panchayat

* 385 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the details of the scheme submitted by the Paramakudi Panchayat for the improvement of the drainage in Paramakudi Town;

(*b*) the amount of loan or grant requested for by the Panchayat from the Government; and

(*c*) the decision of the Government on this proposal?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) பரமக்குடி பஞ்சாயத்துப் பகுதியில் பாதாளக் கழிவு நீர்க்கால் கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கடந்த மே மாதத்தில் அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

(இ) கடனோ மானியமோ கேட்கப்படவில்லை.

(உ) மூன்றாவது திட்ட வேலைகளில் அடங்காத புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆகும் முழுச் செலவும் சம்பந்தப்பட்ட ஸ்தல ஸ்தாபனமே ஏற்றுக்கொள்வதாயிருந்தால் அதை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று பஞ்சாயத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளை (சேலம் மாவட்டம்)

* 386 *கேள்வி.*—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர்-காவேரிபுரம் பகுதிகளில் "மம்மட்டியான்" என்ற கொள்ளைக்காரனால் பொதுமக்களுக்கு தொல்லைகள் ஏற்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) எத்தனைக் குற்றங்கள் அரசாங்கத்தின் பார்வைக்கு வந்தன ?

(உ) அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

(எ) அந்த நபரை பிடிக்க அரசாங்கம் முயற்சி செய்ததா ? விவரமென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) (எ) இது குறித்து அறிக்கை[a] ஒன்று சபையில் வைக்கப்பட்டுள்ளது.

Transport Commissioner.

* 387 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to appoint a separate Transport Commissioner in the place of a Board Member?

THE HON. SRI R. VENKATARAMAN: No.

Collection of Motor Vehicles Tax

* 388 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have appointed additional staff in the Transport Department subsequent to the recent enhancement of Motor Vehicles Tax in 1962; for the collection of arrears of tax;

(*b*) the number and category of such posts;

(*c*) the amount spent on the additional establishment up to December 1962; and

(*d*) the number of cases detected in the year 1962 and the amount realised in those cases?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) A statement [b] is placed on the Table of the House.

(*c*) Rs. 19,898–53 nP.

(*d*) 271 cases involving a sum of Rs. 57,703–96 nP.

திரு. செ. மாதவன் : சார், இந்த வகையில் செலவழித்த தொகைக்கும் கண்டு பிடிக்கப்பட்ட தொகைக்கும் வேறுபாடாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விசேஷ அதிகாரிகள் போட்டு அண்டர் பேமெண்ட் இருந்தாலும் டாக்ஸ் கொடுக்காமல் இருந்தாலும் கண்டு பிடிக்கப்படுகின்றன. இந்தக் குறுகிய காலத்திலேயே ரூ. 57,000 வருமானம் என்று சொன்னேன். வருஷங்கள் போகப்போகத்தான் அது எவ்வளவு என்று பார்க்க முடியும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதைப் பர்மனென்ட் ஸ்டாபாக மாற்றிவிட்டார்களா ? அல்லது அப்படிச் செய்ய உத்தேசமாவது உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப்பற்றி இப்போது ஒன்றும் முடிவு எடுக்கவில்லை.

---

a Printed as Appendix II on page 528.
b Printed as Appendix III on page 529.

பாரவண்டி ஏற்றிச்செல்லும் எடை

389 **கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் பாரம் ஏற்றிச்செல்லும் மாட்டுவண்டிகளில் ஏற்றிச் செல்வதற்கான அதிக பட்ச எடையின் அளவு குறிப்பிட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில் இவ்வளவு எடைச்சுமைதான் ஏற்றுதல் வேண்டுமென திட்டமிடும் உத்தேசமுண்டா ?

***கனம் திரு. பூ. கக்கன் :** (அ) உரிய அளவுக்கு மேற்பட்ட பாரம் இருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக அடியிற் கண்ட அம்சங்களைக் கவனிக்க வேண்டுமென அரசாங்கம் விதித்துள்ளது :—*

(1) ஒரு பிராணி சுமந்து செல்லக்கூடிய உயர்ந்த அளவு பாரம் சாதாரணமாய் அதன் எடையில் பாதியாகும்.

(2) பாரவண்டிச் சக்கரம் இரும்புப் பட்டையுடன் இருந்தால், ஒரு பிராணி இழுத்துச் செல்லக்கூடிய உயர்ந்த அளவு பாரம் சாதாரணமாய் அதன் எடையைப்போல் இரு மடங்காகும். ரப்பர் பட்டையுள்ள சக்கரமாயிருந்தால் அப் பிராணி தன் எடையைப் போல் நான்கு மடங்கு பாரம் இழுத்துச் செல்ல முடியும்.

(3) அந்தந்த சாலையின் தன்மைக் கேற்ப மேலே (1) (2) பாராக்களில் கூறியுள்ள உயர்ந்த பட்ச பார அளவை மாற்றிக் கொள்ளவேண்டும்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

***புலவர் கா. கோவிந்தன் :** மாடுகள் இழுக்கும் வண்டிகளின் பாரம்பற்றிய விதிமுறைகளைச் சொன்னார்கள். மனிதன் இழுக்கின்ற பார வண்டிகளைப் பற்றிய விதிமுறைகள் ஏதேனும் இருக்கிறதா ? சென்னையில் இப்படி மனிதன் பார வண்டிகளை இழுத்துக்கொண்டிருப்பதை அறவே நீக்க வழிவகைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.*

***கனம். திரு. பூ. கக்கன் :** இது மாடு இழுக்கின்ற வண்டியைப் பற்றிய கேள்வி. மனிதன் இழுக்கின்ற வண்டியைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் அதற்குத் தனியாகப் பதில் சொல்கிறேன்.*

***திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இந்த விதிமுறைகள் சென்னை நகரத்திற்கு மட்டுமா ? வெளியிலும் இது அனுசரிக்கப்படுகிறதா ?*

***கனம் திரு. பூ. கக்கன் :** அநேகமாக இந்த விதி மாநிலம் பூராவுக்கும் என்றுதான் நினைக்கிறேன்.*

390 **கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

சென்னையிலிருந்து திருச்சி செல்லும் கார்டு ரெயில்வே லைனில், மாத்தூருக்கும் பெண்ணாடத்திற்கும் இடையில் ஒரு புது

புதிய ரயில் நிலையம்

ரயில் நிலையத்தை நிறுவ, மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்துள்ளதா ?

***கனம் திரு. வெ. ராமையா :** இல்லை.*

***திரு. இரா. நாராயணன் :** மாத்தூருக்கும், பெண்ணாடத்திற்கும் இடையில் இரண்டு வெள்ளாறுகள் போவதனால் போக்குவரத்து வசதியின்றி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த ஐந்து வருஷங்களாக இந்தக் கோரிக்கையை மக்கள் போட்டு வந்தும் ஒன்றும் நடக்கவில்லை. இனிமேலாவது மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லி இந்த வசதியை ஏற்படுத்திக்கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?*

***கனம் திரு. வெ. ராமையா :** இனிமேல் இதைப்பற்றி உதவி செய்யவேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் இதுபற்றிய விவரத்தை அரசாங்கத்திற்கு எடுத்து எழுதி அனுப்பினால் அதைக் கவனித்து அரசாங்கம் ஆவன செய்யும்.*

Legislative Council (Teachers' Constituency)

*391 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Secondary Grade Teachers in the Elementary Schools are not entitled to exercise their franchise for the election of members to the Legislative Council representing Teachers' Constituency; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(b) There is no provision in the Election Law.

***திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** செகண்டரி கிரேட் உபாத்தியாயர்கள், உயர்நிலைப் பள்ளி, ஆரம்பப்பள்ளி உபாத்தியாயர்கள் ஆகியவர்களின் பணிகள் ஒன்றே ஆதலால் ஆரம்பப் பள்ளியில் பணியாற்றி வரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் வோட்டுரிமை கொடுக்க அரசாங்கம் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கத்தைப் பொருத்த வரையிலும் இப்போது இருக்கிற சட்டத்தை மாற்றுவதாக இல்லை.*

392 **கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

ஆரம்பப்பள்ளி ஆசிரிய, ஆசிரியைகளையும், ஆசிரியர் தொகுதிக்கான வாக்காளர்களாக பதிவுபெறச் செய்யும் உத்தேசமுண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No.

திரு. சி. வே. வேலப்பன் : தலைவர் அவர்களே சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப் பிரிக்கிற போது எந்த எந்த இடங்களை மாவட்டத் தலைநகராக வைக்க உத்தேசம் உண்டு என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : என்னிடத்தில் இப்போது அந்தத் தகவல் இல்லையென்றாலும் நினைவில் வைத்துச் சொல்கிறேன். ஒரு பகுதிக்கு சேலம் தலைநகரம். மற்றொரு பகுதிக்கு கிருஷ்ணகிரி தலைநகரமாக இருக்கும்.

Small-pox Vaccine

* 395 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Russian Small-pox Vaccine produces more severe re-action; and

(*b*) whether the Government have issued any instructions regarding its use?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இந்த அம்மைப் பால் குத்தியதால் சிலருக்குக் கடுமையான விளைவுகள் ஏற்பட்டதாகத் தெரிந்தது. ஆனால் எதிர்பாராத விளைவு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

(இ) அரசாங்கம் பிரத்யேக உத்தரவு எதையும் பிறப்பிக்கவில்லை.

திரு. செ. மாதவன் : இந்த அம்மைப்பாலை ஒரு குறிப்பிட்ட வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குக் குத்தக் கூடாது என்று உத்தரவிட்டது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரி உத்தரவு ஒன்றும் பிறப்பிக்கப்படவில்லை. இரண்டு அல்லது மூன்று முறை குத்துவதனால் குழந்தைகளிடத்தில் விளைவு அதிகமாக இருக்கக் கூடும் என்ற காரணத்தினால் ஒருமுறை குத்தினால் போதும் என்று தான் சொல்லப்பட்டது.

நூல் நூற்பு யூனிட்டுகள்

* 396 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் இம்மாநிலத்தில் எங்கெங்கு 32 கதிரியக்கங் கொண்ட யூனிட்டுகள் (32 spindle spinning units) கூட்டுறவுத் துறையில் நிறுவ உத்தேசம் ?

(இ) அங்ஙனம் நிறுவ வகுக்கப்பட்டுள்ள விதி முறைகள் யாவை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 32 கதிர்கள் கொண்ட நூற்பு ஆலை ஒன்றை 1963-ல் நிறுவும் உத்தேசம் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Substitute for cement

* 397 *Q.*—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any substitute for cement has been found out by the Highways Research Station;

(*b*) the details thereof; and

(*c*) whether any steps are being taken to produce this substitute on a large scale for the use of the public?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) No.

(*b*) & (*c*) Do not arise.

திரு. கே. மூக்கையா தேவர் : கனம் அமைச்சர் அவர்கள் மதுரையில் வந்து பேசிய கூட்டத்தில் சிமிண்டுக்குப் பதிலாக மாற்றுப் பொருள் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் நிபுணர்கள் இறங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அது சம்பந்தமாக ஏதேனும் ஆராய்ச்சியாவது இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கமாட்டார் என்று நினைக்கிறேன். வீடு கட்டுவதற்குப் பல பொருள்களை நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். சிமிண்டு இல்லாமல் சுண்ணாம்பு, இன்னும் இதர பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி நடப்பதாகக் குறிப்பிட்டேனே தவிர சிமிண்டுக்கு வேறு பொருளைக் கண்டு பிடிக்க முடியும் என்று நான் சொல்லியிருக்க முடியாது. நிபுணர்களும் அப்படிக் கருதவில்லை.

Ten Commandments (Central Government)

* 398 *Q.*—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Cheif Minister be pleased to state—

(*a*) whether the attention of the State Government has been drawn to the ten commandments issued by the Central Government to Government officials;

(*b*) if so, the details thereof;

(*c*) whether these commandments are to be applied to the All-India Personnel working in Madras State; and

(*d*) whether the Central Government have advised the Madras Government to follow suit and if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) to (*d*) Do not arise.

(a) இல்லை.

(b) to (d) கேள்விக்கு இடமில்லை.

பச்சைமலையில் சந்தனமரம் சாகுபடி

* 399 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962, 1963-ல் திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சை மலையில் உற்பத்தியாகும் சந்தன மரங்களின் மூலமாக சர்க்காருக்கு எவ்வளவு வருமானம் கிடைத்தது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: 1961-62, 1962-63-ல் வருமானம் முறையே ரூ. 9,140.99, ரூ. 55,510.76 ஆகும்.

சலவைத் தொழிலாளர்கள்

* 400 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சலவைத் தொழிலாளர்களின் வேலை நிலைபற்றி விசாரிக்க அமர்த்தப்பட்ட விசேஷ அதிகாரியின் அறிக்கை அரசாங்கத்திற்கு கிடைத்ததா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) ஆம்.

(இ) சபைமுன் ஓர் அறிக்கை * வைக்கப்பட்டிருக்கிறது.

10-00 a.m. MR. SPEAKER: I think the House has no objection to extend the question hour till we dispose of the remaining questions.

திரு. எம். எஸ். மணி: ஸார், ஆறு ஆண்டுகளுக்கு முன்னாலே சென்னையில் சலவைத் தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு முறையில் ஒரு பவர் லாண்டரி ஆரம்பிக்கும் திட்டம் இருந்தது. அது எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதை அமைப்பதற்குச் சரியான இடம் தேர்ந்தெடுக்க முடியவில்லை. ஓரிரண்டு இடங்களை முதலிலே தேர்ந்தெடுத்தோம். அதற்கு அப்ஜெக்ஷன் வந்து அந்த இடத்தில் வைக்க முடியாமல் போய்விட்டது. இப்பொழுது வேறு இடம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இடம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அங்கு பவர் லாண்டரி ஆரம்பிக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: ஸார், அடையாறு அருகிலுள்ள ஊரூர் குப்பத்தில் இருக்கின்ற நீர்துறை சலவைக்கு மிகவும் உயர்ந்தது என்று கருதப்படுகிறது. ஆகவே அந்த இடத்தில் சலவையாளர் காலனி ஒன்று ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த இடத்தில் தற்போது பெரிய டவுன்ஷிப் வந்துவிட்ட காரணத்தினால் சலவையாளர் காலனியை அந்த இடத்தில் வைக்க முடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்த விசேஷ அதிகாரியின் சிபாரிசின்படி அரசாங்கத்தின் உதவி பெற்று எந்தெந்த முனிசிபாலிடிகளில் நவீன முறையில் தோபிகானக்கள் அமைக்கப்பட்டுள்ளன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதற்கு என் சக அமைச்சர் அவர்களிடம் கேள்வி போட வேண்டும்.

* Printed as Appendix IV on page 530-538.

திரு. எம். எஸ். மணி: ஸார், சலவைத் தொழிலாளர்களிடமிருந்து கூட்டுறவு முறையில் பவர் லாண்டரி அமைப்பதற்குப் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டது எவ்வளவு? அந்தத் தொகை யாரிடம் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தத் தொகை எல்லாம் ஒழுங்காகத்தான் இருக்கிறது. வேறு விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

Nurses (students)

* 401 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the pupil-nurses in receipt of stipends were being put to great inconvenience and hardship due to the extraordinary delay in disbursement in some of the nurses training centres in Madras City; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) & (b). There have been no cases of extraordinary delay in disbursement of stipends to pupil-nurses. However, short delays have unavoidably occurred on occasions due to delays in transmission of the last pay certificates of trainees from one institutions to another or on account of time taken in sanctioning new stipends, etc.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், எந்த மாதத்தில் இந்தப் பயிற்சி நிலையங்களிலே நர்சுகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்? எந்த மாதத்தில் ஸ்டைபண்டு கொடுக்கப்பட்டது என்பதைக் கூற முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

மருத்துவ சேவகிப் பயிற்சி

* 402 கேள்வி.—திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவ சேவகி (Maternity Assistants) பயிற்சி பெறுபவர்களைத் தேர்ந்து எடுப்பது, மாவட்டங்களில் இல்லாமல், சென்னையில் வைத்து நடத்துவது ஏன்?

(இ) அந்தந்த மாவட்டங்களிலுள்ள மருத்துவ அதிகாரிகளே இந்த தேர்வு செய்வதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) & (b) The training course for Maternity Assistants has now been replaced by the training course for Auxilliary Nurse Mid-wives. Candidates for admission to the training course for Maternity Assistants were being selected by Committees of the respective training institutions only both in the city and in the districts. Selection of candidates to the training course for Auxiliary Nurse Mid-wives is also similarly done by a Committee at each training centre.

திரு. முனு. ஆதி: ஜனதிபதி அவர்களே ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றார்கள். ஆகவே இனிமேலாவது ஆசிரியருக்கு என்று தனித் தொகுதி ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆசிரியர்களுக்குத் தனித் தொகுதி ஏற்படுத்தினால்தான் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததாக ஆகும் என்று எண்ணக்கூடாது. இது இல்லாமலே ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பங்ஷனல் ரெப்ரசென்டேஷன் என்று வேறு யாருக்கும் இல்லை. ஆசிரியர்களுக்குத்தான் இருக்கிறது. இதுகூட இருக்கவேண்டுமா வேண்டாமா என்ற யோசனை இருந்து வருகிறது.

கார் விபத்து (கடலூர்)

*393 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் 1963, ஏப்ரல் மாதக் கடைசி வாரத்தில் பிருந்தாவன் ஹோட்டலுக்கு அருகில் ஒரு இளைஞர் காரில் சிக்கி மரணமடைந்தார் என்பது உண்மையா ?

(இ) அப்படியானால், அந்தக் கார் யாருடையது, அதில் இருந்த அதிகாரி யார் ?

(உ) எவ்வாறு இந்த விபத்து ஏற்பட்டது ?

(எ) அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்; உண்மை.

(இ) இந்தக் கார் திருச்சியைச் சேர்ந்த ஸ்ரீ நாகநாத ஐயர் என்பவருடையது. விபத்து நடந்த சமயம் காரில் தென்ஆர்க்காடு மாவட்டக் கலெக்டரின் தனி உதவியாளர் இருந்தார்.

(உ) 28-4-1963-ல் கடலூர் பிருந்தாவன் ஹோட்டலிலிருந்து மேற்படி கார் வந்து கொண்டிருந்தபோது காரின் வேகம் திடீரென்று அதிகரித்தது. கார் பஸ் ரோடை நெருங்கும்போது, டிரைவர் காரை இடப்பக்கமாக திருப்பினார். அப்போது கார் அவர் கட்டுக்கு மீறி அங்கே சைக்கிளில் சென்று கொண்டிருந்த குசைராஜ் என்பவர் மீது ஏறிவிட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்களின் காரணமாக அவர் உயிர் இழந்தார்.

(எ) அந்த் டிரைவர் மீது தென் ஆர்க்காடு ஜில்லா மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த டிரைவர் சட்டப்படியான டிரைவிங் லைசென்ஸ் இல்லாமல் காரை ஓட்டியதற்காக மாஜிஸ்ட்ரேட்டு அவருக்கு 25 ரூபாய் அபராத தண்டனை விதித்தார். ஆனால் இந்திய தண்டனைச் சட்டத்தின் 304-எ பிரிவின்படிக்கான குற்றச்சாட்டிலிருந்து டிரைவர் விடுவிக்கப்பட்டார்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த விபத்து நடைபெறுவதற்கு முன்பாக பிருந்தாவனம் ஹோட்டலில் அந்த மாவட்டத்தில் இருந்து ஆர்.டி.ஓ. மாற்றலாகிப் போகிறார் என்பதற்காக அதிகாரி

கள் எல்லாம் ஒன்றுகூடி அளிக்கப்பட்ட விருந்துபசாரம் நடந்தது என்பது உண்மையா ? விபத்து அந்த ஹோட்டலில் இருந்து 25 கஜ தூரத்திற்குள் நடந்திருக்கிறது. அந்த இருபத்தைந்து கஜத்திற்குள் காரின் வேகம் எப்படி அதிகரித்தது ? அந்தக் காரில் இருந்தவர்கள் குடிபோதையில் இருந்தார்கள் என்று சொல்வது உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தமாதிரித் தகவல் என்னிடத்தில் ஒன்றும் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: அந்தக் கார் விபத்தில் சிக்கிய இளைஞன் உடனே ஸ்தலத்தில் மாண்டு இருக்கிறான். அந்தக் காரில் இருந்தவர்கள் அத்தனைபேரும் அதிகாரிகள். அப்படி இருந்தாலும் அந்தக் கார் டிரைவர் குற்றவாளியல்ல என்று ....

MR. SPEAKER: The Court has decided that he be acquitted. That is the answer of the Hon. Minister. The hon. Member cannot ask for anything more than that.

சேலம் மாவட்டத்தை இரு பிரிவுகளாக்குதல்

*394 கேள்வி.—**திரு. முனு. ஆதி:** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தை இரு பிரிவுகளாக்கும் திட்டம் பற்றி திட்டம் வகுக்க நியமிக்கப்பெற்ற விசேஷ அதிகாரியிடமிருந்து அறிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில் எப்போதிலிருந்து இத்திட்டம் அமுல்படுத்தப்படும் ?

(உ) இதே போன்று வேறு ஏதேனும் மாவட்டங்களையும் இரண்டாகப் பிரிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH: (அ) Yes, Sir.

(இ) The Government have ordered that the bifurcation of Salem district should be deferred for the duration of the Emergency.

(உ) Does not arise.

திரு. முனு. ஆதி: இந்த மாவட்டங்களை நிலப்பரப்பின் அடிப்படையில் பிரிக்க உத்தேசமா ? அல்லது மக்கள் தொகையைக் கருத்தில் வைத்துப் பிரிக்க உத்தேசமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: இதைப் பலமுறைகள் பரிசீலனை செய்து சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்ற முடிவை எடுத்தோம். அதற்குத் தகுந்த முறையில் ஒரு அதிகாரியை நியமனம் செய்து அந்த மாவட்டத்தைப் பிரிக்கக்கூடிய வேலை அவர்கள் பார்த்து முடிவு செய்யும்படி செய்தோம். ஆனால் கனம் அங்கத்தினர் நன்றாக உணர்ந்திருப்பார்கள். தேசீய நெருக்கடியினால் இந்த மாவட்டத்தைக் கூட இரண்டாகப் பிரிக்கும் வேலையை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : *மருத்துவ சேவகிப் பயிற்சிக்கு மிகவும் ஏழை எளிய பெண்கள் முன் வருகிறார்கள். அவர்களை தேர்ந்தெடுப்பது சென்னையில் இருப்பதால் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அவர்கள் சென்னைக்கு வருவதன் காரணமாக அதிக செலவுக்குள்ளாகிறார்கள். ஆகவே அந்தந்த மாவட்டத்திலேயே மருத்துவ அதிகாரிகளைக் கொண்டு இந்த செலெக்ஷனைச் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?*

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *இந்த மாதிரி ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் சென்னைக்கு வந்துதான் செலெக்ஷன் ஆக வேண்டும் என்ற நிலை இல்லை. ஜில்லா மருத்துவ அதிகாரியே செலெக்ஷன் செய்கிறார். கனம் அங்கத்தினருடைய இன்பர்மேஷன் சரி அல்ல.*

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : *ஸார், நெல்லை மாவட்டத்தில் மருத்துவ அதிகாரிகள் நேரில் என்னிடம் கூறியதை வைத்துத் தான் சொல்கிறேன். ஆகவே அதற்கு அமைச்சர் அவர்கள் தக்க பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.*

கனம் சபாநாயகர் : *அவர்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேளுங்களேன். (சிரிப்பு)*

(பதில் இல்லை)

Master Plan for Madras City

* 403 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any Master Plan has been prepared by the Town Planning Department for Madras City;

(*b*) if so, the details thereof;

(*c*) whether it is a fact that the year 1924 has been taken as the basis for the preparation of the new plan;

(*d*) if so, the reasons therefor; and

(*e*) whether the Government are aware that after 1924 lot of buildings have been built in Madras City?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *(அ) சென்னை நகரத்துக்கும் நகர்ப்பகுதிக்கும் "மாஸ்டர் பிளான்" ஒன்றை டவுன் பிளானிங் இலாகா தயாரித்து வருகிறது.*

(இ) சென்னை மாநகர் நகரப்பகுதிக்கு மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதற்காக மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் திட்டம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் நிலையில், சென்னை மாநகர்ப் பகுதிக்குத் தோராயமான அபிவிருத்தித்திட்டம் ஒன்றைத் தயாரித்து, முடிவில் விரிவாக மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்கு ஆரம்ப நிலையில் தேவைப்படும் பணியாளர்களை அமர்த்திக் கொள்ளவும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்காக பூர்வாங்கப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. 1967-ம் ஆண்டு இறுதிக்குள் மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) இல்லை. 1964-ம் ஆண்டில் தயாரிக்கப்படவிருக்கும் தரைப்படத்துடன் தற்போதுள்ள தரைப்படத்தையும் வைத்து 'மாஸ்டர் பிளான்' தயாரிக்கப்படும்.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. மூக்கையா தேவர் : *ஸார், இந்தப் பிளானைத் தயாரிப்பதற்கு வெளிநாட்டுக்காரர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது உண்மையா ?*

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *அந்தத் தகவல் என்னிடம் இல்லை.*

திரு. இராம. அரங்கண்ணல் : *ஸார், மாஸ்டர் பிளான் தயாரிக்கும்போது அரசாங்கமே எல்லா முடிவுகளையும் செய்து விடுமா, அல்லது மக்கள் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு அவர்களுடைய கருத்தையும் கேட்குமா ?*

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *இந்தப் பிளானைத் தயாரிப்பது 'டெக்னிகல் மாட்டர்'. பொதுமக்களுக்கு எவ்வளவு சௌகரியங்கள் செய்யவேண்டுமோ, அந்த வகையில் 'டெக்னிகல் பர்ஸானல்களே' செய்வார்கள்.*

Residential houses (Madras City)

* 404 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that residential houses have been converted into non-residential places in Madras City from 1957; and

(*b*) what steps the Government propose to take to prevent this in view of the shortage of houses in the City of Madras.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) With the increase of business and commerce, a certain amount of conversion of residential premises into non-residential premises might have taken place.

(*b*) Conversion of a residential building located in a shopping area or an industrial area is not prohibited and cannot be prevented. Such conversion in an area reserved as residential under the Madras Public Health Act is also not prohibited so long as the building so converted is not utilised for running a dangerous and offensive trade or for working power driven machinery other than for approved cottage industries. In a Town Planning Scheme area conversion of residential premises into non-residential is totally prohibited; however shops of specified sorts are allowed in a particular pattern and are expressly

provided in the scheme itself. With the implementation of the Master Plan for the city, it is expected some control over such conversions will be possible.

Residential areas in Madras City

*405 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) which are residential and non-residential areas in Madras City; and

(b) the details of the classifications?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) & (b) A statement showing the zoning of areas and the details of classification is placed in the Legislature Secretariat Library.

திரு. கே. மூக்கையா தேவர்: ஸார், குடியிருப்புப் பகுதிகளில், வாடகைக்காக ஆசைப்பட்டு அநேகம் பேர் கடைகளை வைத்து விடுகிறார்கள். அதனால் நெருக்கடி ஏற்பட்டு சுகாதார நிலைமை பாதிக்கப்படுகிறது. ஆகவே குடியிருப்புப் பகுதிகளில் இனி மேலாவது கடைகள் ஏற்படாமல் இருக்க விதி செய்யப்படுமா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: My answer to the main question would cover the supplementary question put by the hon. Member.

காகிதத் தொழிற்சாலைகள்

*406 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நாட்டில் எங்கெங்கு காகிதத் தொழிற்சாலைகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

(இ) இவ்வாறு அனுமதி வழங்கப்பெற்ற தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள் அருகில் அமைந்திருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதா?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) During 1963 three licences have been granted to set up paper mills one at Pettavaithalai in Tiruchirappalli district another at Nambivayal in Thanjavur district and the third in the same district.

(இ) There is no such stipulation in the industrial licence.

பிளாஸ்டிக் தொழிற்சாலை

*407 கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆலங்குடி தாலுகாவில் உள்ள ஆதனக்கோட்டை, பாப்பான் விடுதி, வல்லத்திராகோட்டை, திருவரங்குளம் போன்ற பகுதியில் முந்திரி அதிகமாக விளைகின்ற காரணத்தினால் அங்கு ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இல்லை.

அருணா சர்க்கரை ஆலை

*408 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டம் பெண்ணாடத்தில் உள்ள அருணா சர்க்கரை ஆலைக்கு லைசென்ஸ் எப்போது கொடுக்கப்பட்டது?

(இ) அந்தக் கம்பெனியில் Madras State Industrial Finance Corporation எவ்வளவு பணம் முதலீடு போட்டிருக்கின்றது?

(உ) மேற்படி ஆலைக்காக அரசாங்கம் பண உதவி செய்துள்ளதா?

(எ) ஆண்டுகள் பல ஆகியும் சர்க்கரை ஆலை ஆரம்பிக்காததால் அதற்கு கொடுத்த லைசென்சை ரத்து செய்ய உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் லைசென்ஸ் வழங்கப்பட்டது.

(இ) Madras Industrial Investment Corpora ion பிரஸ்தாப சர்க்கரை ஆலையில் ரூ. 7,50,000 முதலீடு செய்துள்ளது.

(உ) & (எ) இல்லை.

Drinking water scheme for Rasipuram

*409 Q.—SRI N. P. SENGOTTUVELU: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to change the route for laying the pipe line to bring drinking water to Rasipuram from Panamarathupatti; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No.

(b) Does not arise.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: பைப் லைன் அமைக்கும் பாதையை மாற்றியமைக்க வேண்டுமென்ற காரணத்தால்தான் வேலை தாமதப்படுகிறது என்று அங்குள்ள அதிகாரிகள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் பதிலில் 'இல்லை' என்று கூறியிருக்கிறார்கள். இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அந்த மாதிரி மாற்றியமைப்பதற்கு எந்த விதமான 'ப்ரொபோசலும்' கிடையாது.

குடிநீர் திட்டம் (விருத்தாசலம் பிர்க்கா)

*410 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் பிர்க்கா, ஊமங்கலம் பிர்க்கா இவைகளிலுள்ள மேட்டுப்பாங்கான கிராமங்களுக்கு குடி-தண்ணீர் சப்ளை செய்ய திட்டமுண்டா?

(இ) அப்படியானுல், அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(உ) என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Yes. 30 overhead tanks are proposed to be constructed in the regions of Virudhachalam and Oomangalam Firkas.

(b) Each of the Panchayat Union concerned will have a total provision of Rs. 4 lakhs which has to be utilised on both link roads formation and rural water supply works.

(c) A sum of Rs. 1,51,000 and Rs. 2,19,000 have been spent so far in Virudhachalam Block and Kammapuram Block respectively for this purpose for the last two years.

*411 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் பிர்க்கா, ஊமங்கலம் பிர்க்காவில் குடிதண்ணீர் சப்ளைக்காக எத்தனை ஓவர்ஹெட் டாங்குகள் கட்டப்படும் ? எப்போது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Thirty overhead tanks will be constructed. Period and time of construction of overhead tanks depend on the availability of potable water and the successful working of power drills.

கம்போஸ்டு உரம் (திண்டிவனம்)

*412 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகராட்சியில் கம்போஸ்டு உரம் தயார் செய்தது கையாடல் செய்திருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், எத்தனை டன் உரம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது ?

(உ) இதுவரை யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) கையிருப்பு உரத்தில் குறைவு கண்டு பிடிக்கப்பட்டது.

(இ) 385 டன்கள்.

(உ) இல்லை.

திரு. ஆ. தங்கவேலு: கையாடல் செய்யப்பட்ட உரம் 385 டன் அளவுக்கு இருந்தும் இதுவரை அது சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: உரம் கையாடல் செய்யப்பட்டது என்று சொல்ல முடியாது. 1951-ம் ஆண்டு வரை ஒரே சானிடரி இன்ஸ்பெக்டர் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. அடுத்த சானிடரி இன்ஸ்பெக்டர் சார்ஜ் எடுக்கும்போது உரத்தின் அளவு குறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதுபற்றி ரிப்போர்ட் செய்ததின் பேரில் உரம் குறைந்த அளவுக்கு உண்டான தொகை ரூ. 770-ம் முனிசிபல் பண்டில் செலுத்தி விட்டார்கள். அதற்கு மேலே நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணையில் இருக்கிறது.

நகராட்சி ஆணையாளர் (திண்டிவனம்)

*413 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகராட்சி ஆணையாளர் மீது லஞ்ச ஊழல் முதலிய குற்றம்சாட்டி, பொதுமக்கள், நகரமன்ற உறுப்பினர்கள், நகர மன்ற சிப்பந்திகள் ஆகியோரிடமிருந்து அரசாங்கத்திற்கு புகார் வந்திருக்கிறதா ?

(இ) ஆமெனில், இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம், ஐயா.

(இ) மேற்படி புகார்கள் விசாரணையிலிருக்கின்றன.

திரு. ஆ. தங்கவேலு: திண்டிவனம் நகராட்சி ஆணையாளர் மீது விசாரணை நடந்து கொண்டிருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் கூறினர்கள். ஆனால் விசாரணையில் இருக்கும் அந்த நகராட்சி ஆணையாளர் திண்டிவனம் மூன்றுவது கிரேடு முனிசிபாலிடியிலிருந்து குடியாத்தம் இரண்டாவது கிரேடு முனிசிபாலிடிக்குப் பிரமோஷனில் அனுப்பப்பட்டிருக்கிறர். இது லஞ்ச ஊழல் செய்பவர்களுக்குத்தான் பிரமோஷன் கிடைக்கிறது என்ற தவருன எண்ணத்தை அதிகாரிகள் மத்தியில் உண்டாக்காதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அவர் மீது விசாரணை முடிவுற்று குற்றச்சாட்டுகள் அத்தனையும் நிரூபிக்கப்பட்டால்தான் குற்றவாளியாவார். அதற்கு முன்னுல் ஏற்படக்கூடிய பிரமோஷனைத் தடுக்க முடியாது.

திரு. செ. மாதவன்: அவர் மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தால் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்திலேயே பிரமோஷன் கொடுத்ததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பிரமோஷன் கொடுப்பது தனியாக சீனியாரிடியைக் கவனித்துக் கொடுக்கவேண்டிய சமாசாரம். அவர் மீது உள்ள குற்றச்சாட்டுக்கு எலக்டோரல் ஆபீசர் மூலமாக விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இரண்டையும் சம்பந்தப்படுத்தக்கூடாது.

குறைந்த விலைக்கு மக்களுக்குக் கொடுப்பதாகச் சொன்னபடி நடக்காமல் வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிறார்கள் என்று மில் சொந்தக்காரர்கள் சர்க்கார் மீது சுமத்திய குற்றச்சாட்டு உண்மையா?

கனம் சபாநாயகர்: யாருக்கு வாக்குறுதி கொடுத்தார்கள்? யார் குற்றம் சாட்டுகிறார்கள்?

திரு. அ. ப. அழகமுத்து: வியாபாரிகள் குற்றஞ்சாட்டினார்கள்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அப்படி ஒன்றும் இல்லை.

Registered documents

* 418 Q.—Sri N. P. SENGOTTUVELU: Will the Hon. the Minister for Information be pleased to state whether there is any proposal to issue typed Certified copies of Registered Documents in the Registration Offices as the copies of the documents issued at present are not generally legible?

கனம் திரு. கோ. பூவராகன்: இல்லை.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—PRIVILEGE MATTER.

Mr. SPEAKER: Privilege matters given notice of by the hon. Members Sri Rama Arangannal and Sri S. Madhavan will be taken up tomorrow.

III.—ADJOURNMENT MOTIONS.

Mr. SPEAKER: With regard to the adjournment motions given notice of by Pulavar K. Govindan and Sri K. A. Mathialagan, I withhold my consent.

IV.—CALLING ATTENTION TO NON-AVAILABILITY OF SCHOLARSHIP FORMS FOR SCHOOL-GOING CHILDREN OF POLITICAL SUFFERERS AND CEYLON REPATRIATES.

Sri M. S. SELVARAJAN: Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance, viz., the suffering of hundreds of school-going children of political sufferers and Ceylon repatriates due to non-availability of scholarship forms.

* The Hon. Sri M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, under the scheme of scholarships to the children of political sufferers, notifications are published every year, giving the details of the scheme and inviting applications from eligible students studying in high schools and colleges through the head of the institutions for the award of fresh as well as for the renewal of scholarships.

The specimen copies of application forms for applying for fresh scholarships and renewals are published in the notification. The printed forms of applications are not supplied every year to the institutions. The heads of educational institutions make their own arrangements for the supply of application forms to the eligible students studying in their institutions.

During the current academic year, the notification inviting applications for the award of scholarships under the scheme was published in the *Fort St. George Gazette* in the first week of August 1963. The Director of Public Instruction has issued instructions to the Inspecting Officers to communicate the gazette notification to the heads of all high schools in their jurisdiction. He has also instructed the heads of institutions that the printed forms of application are not available in his office and that applications can be made on typed and manuscript forms. The question of delay or difficulty in getting the application forms, therefore, will not arise.

The Government have also sanctioned a scheme for the award of boarding charges to the children of Ceylon repatriates studying in schools and colleges on the pattern of boarding grants to Scheduled Castes and Backward Classes by the Harijan Welfare Department. The form of application under this scheme has been prescribed only recently and the Collectors of all districts have been instructed to print locally the required number of forms. There will, therefore, be no difficulty for the students to get the application forms in time.

V.—POINT OF INFORMATION—ARREST OF SOME MEMBERS.

* திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, நம்முடைய சபையின் 245-வது விதிப்படி சட்ட மன்ற உறுப்பினர்கள் யாராவது கைது செய்யப்பட்டால் உடனே இந்த சபைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தின் உறுப்பினர் திரு. சிராமுலு அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது பற்றி நேற்றோ அல்லது இன்று வரையிலோ கைது செய்யப்பட்டிருப்பதைப்பற்றியோ அதனுடைய காரணங்களைப் பற்றியோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை. நேற்றும் சட்ட மன்றம் நடைபெற்றது. இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுவரையிலும் இச்செய்தி கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையா . . .

Mr. SPEAKER: That is the privilege matter that the hon. Member has raised.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. சிராமுலு அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்ற விவரம் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: All the hon. Members want to give an impression that they have raised this point to-day. I am not in a position to give any information now. The arrest was made only yesterday. We shall see whether the report comes to me to-day in the Tapal. I can give the information only tomorrow.

VI.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1959-60—PRESENTATION.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I rise to present the statement of Demands for grants for excess expenditure in the year 1959–60. The actual expenditure is found to be in excess of the final sanctioned appropriation under certain grants. The total of the excesses of expenditure under voted grants which is now sought to be covered by legislative approval is about Rs. 1.8 crores against a total final appropriation of about Rs. 155.5 crores. The Explanatory note and the Annexure appended to the statement of demands give in full the reasons for the excess in each case. The Public Accounts Committee constituted for the year 1961–62 at its meetings held during the course of the year, examined the reasons for the excesses. In paragraph 13 of its report for the year 1959–60 presented in December 1961 the Public Accounts Committee has recommended that the Demands for Grants to cover excess expenditure over the final sanctioned appropriation under each grant might be presented to the Legislative Assembly. The statement of Demands for grants for excess expenditure for the year 1959–60 is accordingly presented now.

I commend for the acceptance of the House the statement of Demands for grants for excess expenditure in the year 1959–60.

VII.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1960–61—PRESENTATION.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I rise to present the statement of Demands for grants for excess expenditure in the year 1960–61. The actual expenditure is found to be in excess of the final sanctioned appropriation under certain grants. The total of the excesses of expenditure under voted grants which is now sought to be covered by legislative approval is about Rs. 61 lakhs against a total final appropriation of over Rs. 150 crores. The Explanatory note and the Annexure appended to the statement of demands give in full the reasons for the excess in each case. The Public Accounts Committee constituted for the year 1962–63 at its meetings held during the course of the year examined the reasons for the excesses and has recommended in its Report published in May 1963 that demands for grants to cover the excess expenditure over the final sanctioned appropriation under each grant might be presented to the Legislative Assembly.

I commend for the acceptance of the House the statement of Demands for grants for excess expenditure in the year 1960–61.

VIII.—POINT OF ORDER—WITHHOLDING OF CONSENT FOR AN ADJOURNMENT MOTION.

SRI K. A. MATHIALAGAN: On a point of order, Sir. The withholding of the consent of the Chair to the notice of my adjournment motion relating to the strike of the students of the Pachaiyappas and Veterinary Colleges, has not been communicated to me. 10-30 a.m.

MR. SPEAKER: It will be communicated to the hon. Member. Now I communicate it to the hon. Member. Let the hon. Member please resume his seat.

IX.—NON-OFFICIAL RESOLUTIONS.

(1) APPOINTMENT OF A COMMITTEE TO ENQUIRE INTO THE WORKING OF THE GOVERNMENT TRANSPORT.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"This House recommends to the Government to appoint a Committee consisting of Members of the Assembly to enquire into the working conditions of Government City Bus Transport and to suggest ways and means for ensuring efficiency and economy."

திரு. மு. கருணாநிதி: இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

SRI M. KALYANASUNDARAM: Mr. Speaker, Sir, I move the following amendment:—

"*Add* the following at the end:—

'and for improving the service condition of the workers'."

The amendment was duly seconded.

MR. SPEAKER: The resolution and the amendment are before the House for discussion.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை நகர அரசாங்க பஸ் போக்குவரத்து சம்பந்தமாய், சட்டசபை உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமிக்க இந்தச் சபை பரிந்துரைக்கிறது என்று இங்கு நான் முன்மொழிந்திருக்கிற தீர்மானம் வழக்கமாக சட்ட மன்றத்தில் கமிட்டிகள் போடவேண்டுமென்று சொல்லுகிற வகையில் நான் இதை ஏதோ ஒரு சம்பிரதாயமாக அதிகார பூர்வமற்ற நாளில் . . . .

MR. SPEAKER: There are five resolutions. Do the hon. Members want to limit the time for each resolution or do they want to take as much time as possible for some resolutions and leave out the others? I want to know the opinion of the House on this matter.

[21st November 1963

Sri V. R. NEDUNCHEZHIYAN : Sir, the third resolution is not going to be moved.

Sri K. A. MATHIALAGAN : Time can be allotted for my resolution. This is our day (non-official day).

Mr. SPEAKER : I just want to know the opinion of the House.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would suggest that the time may be prescribed for each resolution and for the resolutions that have to be taken up now, time may be allotted in agreement with the leaders of parties.

Mr. SPEAKER : Can we have one hour for each resolution?

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒவ்வொரு திர்மானத்திற்கும் ஒரு மணி நேரம் இருக்கலாம்.

Sri K. A. MATHIALAGAN : I have no objection to the allotment of one hour for each resolution.

Mr. SPEAKER : If hon. Members agree, I will also agree.

திரு. மீ. கலியாணசுந்தரம் : என்னுடைய யோசனை ஒவ்வொரு தீர்மானத்திற்கும் ஒவ்வொரு மணி ஒதுக்கினால் அநேகமாக எல்லாத் தீர்மானங்களும் எடுத்துக் கொள்ளப்படலாம். அதன் பிறகு பிரதான எதிர்க்கட்சி என்ன சொல்லுகிறதோ அதன்படி வைத்துக் கொள்ளுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒரு தீர்மானத்திற்கு ஒரு மணி நேரம் ஒதுக்குவது என்று ஒதுக்கலாம். இதில் மிச்சப்படுகிற நேரத்தை பின்னால் வரும் தீர்மானத்திற்கு வேண்டுமானால் கொடுக்கலாம்.

கனம் சபாநாயகர் : மூன்று மணி நேரம் தான் இருக்கிறது. அதே நேரத்தில் நான்கு தீர்மானங்கள் இருக்கின்றன.

Sri V. R. NEDUNCHEZHIYAN : We can allot one hour for each resolution.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எந்த இடத்தில் இருக்கிறோமோ அப்போது அப்படியே அட்ஜர்ன் செய்யலாம்.

Mr. SPEAKER : That is always there.

Sri K. A. MATHIALAGAN : Sir, I may be allowed 15 minutes.

Mr. SPEAKER : All right.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தத் தீர்மானத்தை நான் முன் மொழிந்திருப்பதற்கான காரணத்தையும் முக்கியத்துவத்தையும் பார்க்கும்போது வேறு என்றும் இல்லாத அளவுக்கு இன்றைய

21st November 1963] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

தினம் மிக அதிக முக்கியத்துவம் பொருந்தியிருக்கிறது என்பதை நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும் கண்டிப்பாக ஒத்துக் கொள்வார்கள். அதாவது இந்த சர்க்கார் நிறுவனமாக இருக்கிற இந்த நிறுவனத்தைப் பற்றி ஏதாவது யோசனை சொல்லுவது என்று தீர்மானமாக இருக்கிறது. நம் தொழில் அமைச்சர் போல டில்லியில் தொழில் அமைச்சராக இருக்கிற திரு. நித்தியானந்த கனுங்கோ அவர்கள் சர்க்கார் துறையில் இருக்கிற எல்லா நிறுவனங்களுக்கும் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் 15 பேர்கள் கொண்டு, மேற்பார்வையிட குழு நியமிக்கவேண்டும் என்று—அதிகாரபூர்வமற்ற தீர்மானம் அல்ல—சர்க்கார் சார்பில் டில்லியில் மக்கள் சபை நிறைவேற்றியிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். இந்தத் தீர்மானத்தை உண்மையில் கொண்டுவருகிற நேரத்தில், நான் ஆரம்பத்திலே சொன்னது போல இன்றைக்கு நாம் எல்லோரும், எல்லாக் கட்சிகளும் ஒரு கொள்கையாக ஒத்துக்கொண்டிருக்கிறோம். சம தர்மத்தை அமைப்பது, சோஷலிஸத்தை அமைப்பது, அதுவும் ஜனநாயக சோஷலிஸம் அமைப்பது என்று ஜெய்ப்பூரில் கூடிய போது ஆளும் கட்சியாக இருக்கிற கட்சியின் மாநாட்டுத் தீர்மானப்படி கூட, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முற்படும் நிலையில் கூட, நாம் எல்லோரும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களெல்லோரும் பல கோடி ரூபாய் புழங்குகிற நிறுவனங்களில் இருக்கிற குறைபாடுகளை நீக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அந்த வகையில் இந்தத் தீர்மானத்தை இன்றைய தினம் நம் தொழில் அமைச்சர் ஏற்றுக்கொள்வார்கள், இதனை எதிர்த்துப் பேச மாட்டார்கள், அது மட்டுமல்லாமல் இன்னும் அதிகாரம் கொடுத்து, அவைகளை நிர்வகிக்க சட்டசபை அங்கத்தினர்களுக்கு உரிமை அளிக்க திருத்தம் கூடக் கொடுப்பார் என்று எண்ணுகிறேன். நான் இந்தத் தீர்மானத்தில் யோசனை செய்கிறத் என்று தான் கூறியிருக்கிறேன். சர்க்கார் நிறுவனங்களை நிர்வகிக்க பொறுப்புகளைக் கொடுத்து அங்கு இருக்கிற தொழில் அமைச்சர் வழிகாட்டியிருக்கிறார். இப்போது இந்தத் தீர்மானத்திற்கு ஏன் முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது என்று நான் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். இன்றைக்கு சிக்கனமாகவும், திறம்படவும் என்று நான் சொல்லுகிற நேரத்தில் நாம் ஒத்துக்கொண்டு தான் ஆகவேண்டும். சிக்கனமாக நடைபெறவில்லை, திறம்பட நடைபெறவில்லை என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கடுமையாகச் சொல்லுகிறார்கள் என்று யாரும் கொள்ளத் தேவையில்லை. இங்கே இருக்கக்கூடிய சென்னை சர்க்கார் பஸ் நிறுவனத்தில் 6 கோடி ரூபாய் அல்லது 7 கோடி ரூபாய் மூலதனம் இன்றைக்கு போடப்பட்டிருக்கிறது. வருஷம் ஒன்றுக்கு ஏறக்குறைய கணக்குப் பார்த்தால் 2 கோடி ரூபாய் அல்லது 3 கோடி ரூபாய் வருவாயாகவும் வருகிறது. 7 கோடி ரூபாய் அளவுக்கு நம் சர்க்கார்ப் பணத்தை மூலதனமிட்டு, டிக்கெட் மூலமாக 3 கோடி ரூபாய் நகர மக்கள் கொடுக்கும் ஸ்தாபனத்தில் என்ன லாபம் வந்திருக்கிறது என்று பார்த்தால்,

மோட்டார் விபத்துக்கள்

* 414 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் 1962-63-ல் நடைபெற்ற மோட்டார் விபத்துக்கள் எத்தனை ?

(இ) அவ்விபத்துக்களில் மாண்டவர்கள் எத்தனைபேர் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 7,914.

(இ) 841.

திரு. செ. கோ. விஸ்வநாதன் : விபத்துக்களைத் தடுக்க சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ? விபத்துக்கள் அதிகமாக ஏற்படக்காரணம் காலையில் 8 மணிக்கெல்லாம் லாரிகள் வந்து சேர வேண்டுமென்பதாலா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விபத்தைத் தடுப்பதற்காக என்று 17 இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறோம். அது அச்சடிக்கப்பட்டு நம்முடைய சபையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. விபத்துக்கள் சாதாரணமாகத் தவிர்க்க முடியாதது. தற்போது பெரிய அளவு விபத்துக்கள் ஏற்படுவதாகச் சொல்ல முடியாது. விபத்துக்கள் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம், 'ஸ்ட்ரே கேட்டில்' 'ஸ்ட்ரே டாக்ஸ்' குறுக்கே ஓடும்போது அதைத் தவிர்ப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிதான். இது நம்முடைய நாட்டினுடைய நிலைமையை ஒட்டி இருக்கிறது.

லாரி விபத்துக்கள்

* 415 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962 ஜனவரி முதல் டிசம்பர் வரை தமிழ் நாட்டில் ஏற்பட்ட லாரி விபத்துக்கள் எத்தனை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 2,688.

திரு. ஆ. தங்கவேலு : கனம் தலைவர் அவர்களே, 1961-ம் ஆண்டைவிட, 1962-ம் ஆண்டில் லாரி விபத்து அதிகமா ? குறைவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த மாதிரி விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் லாரிகளை ஓட்டும் வேகமாகும். தற்போது அரசாங்க பஸ்கள் 30 மைல் வேகத்திற்கு மேல் செல்லக் கூடாது என்று 'சீல்' செய்திருப்பதுபோல் லாரிகளுக்கும் செய்ய முன் வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த யோசனை சற்றேறக்குறைய கடந்த பத்தாண்டுகளாகப் பரிசீலிக்கப்பட்டு வந்திருக்கிறது. சில சமயங்களில் விபத்தைத் தடுக்க வேகமாகவும் ஓட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி 'சீல்' செய்து விட்டாலும் விபத்து ஏற்படும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகையால்தான் இந்த 'சீல்' செய்யப்படவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : விபத்தில் பாதிக்கப்பட்டவருடைய குடும்பத்திற்குச் சர்க்கார் உதவி செய்கிறதா ? அல்லது விபத்தை உண்டாக்கியவரிடம் இருந்து உதவி பெறப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கென்று தனியாக ஒரு சட்டம் இருக்கிறது. அதன் பிரகாரம் காம்பென்சேஷன் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : மோட்டார் விபத்துக்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக இறக்கின்றவர்கள் தொகை அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் மோட்டார் சட்டத்தைத் திருத்தி குறைந்தபட்ச தண்டனையை அதிகமாக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விபத்துக்கள் ஏற்படுவதெல்லாம் தனிப்பட்ட ஒருவருடைய தவறினால்தான் என்று நினைப்பது சரியல்ல. தவிர்க்க முடியாதபடி விபத்துக்கள் ஏற்படும்போதெல்லாம் யார் மீது குற்றம் இருந்தாலும் சரி, மோட்டார் ஓட்டுபவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சொன்னால் போக்குவரத்து வளர்ச்சியடைய முடியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, லாரிகளின் மூலமாக ஏற்படும் விபத்துக்களுக்குக் காரணம் லாரி டிரைவர்களுடைய தூக்கமின்மையும், நீண்ட தொலைவு, 300, 400 மைல்களுக்கு மேல் ஒரே டிரைவரே ஓட்டிச் செல்ல வேண்டிய நிலைமையுந்தான் என்று சொல்லப்படுகிறது. இதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு தொழிலாளி எத்தனை மணி நேரம் ஓட்டவேண்டும் என்பதற்கெல்லாம் சட்டம் இருக்கிறது. அதை மீறி ஓட்டுகிறார்கள் என்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளையெல்லாம் அவர்கள் தங்களுடைய சங்கங்களின் மூலமாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இதற்கு என்று சர்க்கார் இன்ஸ்பெக்டரைப் போட்டுக் கண்காணிக்க முடியாது.

Bridge across South Pennaiar

* 416 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the public of Arasampatty village in Krishnagiri taluk have requested the Government for the construction of a bridge across the South Pannaiar near Arasampatty village in the Arasampatty-Thattarahally road, originally called as Barur-Avathuvady road in Salem district: and

6 பஸ்கள் என் வீட்டிற்கு முன்னால் நின்று கொண்டிருக்கின்றன. தினசரி பராமரிப்பு, வாரக்கணக்கில் பராமரிப்பு, மாதக்கணக்கில் பராமரிப்பு சரியான முறையில் செய்யப்படவில்லை.

" In a well-run organisation there should never be more than one-twelfth of the fleet off the road for annual and half-yearly overhauls at any one time."

என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன சமாதானம் சர்க்கார் சொல்லுகிறார்களோ சொல்லட்டும். 'இதெல்லாம் பழைய பஸ்கள், நாங்கள் அவைகளை மாற்றி விட்டோம்' என்று சொல்லலாம். ஆனால், அப்படியும் 'ப்ரேக் டவுன்ஸ்' குறைந்திருக்கிறதா என்றால், இல்லை. 1962-வது வருஷத்திய தணிக்கை அறிக்கையின்படி 'ப்ரேக் டவுன்ஸ்' குறையவில்லை. 400 பஸ்கள் இருக்கின்றன, 200 பஸ்கள் தான் ஓடுகின்றன. இது யாருக்கு நஷ்டம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்படியா சொல்லியிருக்கிறது அந்த அறிக்கையில்?

The hon. Member may please read it.

SRI K. A. MATHIALAGAN : I will read it. Because I am rushing, I could not read it. If the Hon. Deputy Speaker could extend the time, I shall read it.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, the hon. Member can have any amount of time. But let us not have wrong facts.

SRI K. A. MATHIALAGAN : I will read from the report of Sri R. Krishnaswami Naidu, Chairman of the Estimates Committee and President of Tamilnad Congress Committee :

" Only about half of the breakdowns are attended to and the vehicles returned to the line. Even this number of 35 to 50 vehicles will be put on the line only after a delay of an hour or two or even more. Thus, on an average only about 260 to 280 vehicles are available for a schedule of about 350 buses out of a fleet strength of 450 buses. In a well run organisation there should never be more than one-twelfth of the fleet off the road for annual and half-yealy overhauls at any one time. Allowing for accidents and unforeseen breakdowns up to 20 vehicles per day, there should be 390 vehicles available for schedule duty for a fleet strength of 450 vehicles. The breakdowns should be attended to in the most speedy manner possible and the vehicles put back on the road within the shortest time. The reason given for the large number of breakdowns and for not putting even the required number of buses on the schedule is that the vehicles are all overaged and that most of them ought to have been replaced long ago."

1960-ல் சொல்லியிருப்பதற்கும், 1962-ம் ஆண்டுக்கும் ஏதாவது மாறுதல் இருக்கிறதா என்றால், இல்லை 'ப்ரேக் டவுன்ஸ்'-ல்

மாறுதல் இல்லை.— தணிக்கை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பேஜ் நம்பர் 68, ஆடிட் ரிபோர்டு 1962-ம் ஆண்டு:

" The number of breakdowns per ten thousand miles was 19.5 compared to 20.7 during 1959–60 and 25.4 in 1958–59. Though all the old vehicles which had completed their life had been eliminated during 1960–61 and 150 new vehicles had been added to the fleet the number of breakdowns per 10,000 miles did not come down significantly."

150 பஸ்கள் புதியதாக வந்த பிறகும் கூட ப்ரேக் டவுன்ஸ் குறையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். காரணம், சரியான பராமரிப்பு இல்லை. பொதுச் சொத்துத் தானே, எத்தனையோ கோடி ரூபாய் போடப்பட்டிருக்கிறது, தெருவிலே கிடப்பது தானே என்ற நிலைமை இருக்கக்கூடாது. பொதுமக்கள் பிரதிநிதி என்ற முறையில் நான் இதைச் சொல்லுகிறேன். அவர்கள் எப்படி 50 லட்சம் வாக்காளர்களுக்கு உரிமை கொண்டாடுகிறார்களோ, நாங்கள் 35 லட்சம் வாக்காளர்களுக்கு உரிமை கொண்டாடுகிறோம். அவர்கள் பிரதிநிதி என்ற முறையில் தான் இப்படி ஒரு கமிட்டி போட்டு இதைக் கண்காணிக்கவேண்டும் என்று சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக 'பீக் ஹவர் ப்ராப்லம்' இருக்கிறது. நெடுங்காலமாக அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். காலை 8½ மணியிலிருந்து 11 மணி வரையில் பாரிஸ் கார்னரில் பஸ்களைப் பார்த்தால் ஒரே சந்தைக் கடை மாதிரி இருக்கிறது. முன்பு ஒரு தடவை க்யூவைப்பற்றி சொன்னேன். ஒரு பஸ் ஸ்டாப்பில் இருக்கிறது, ஒரு பஸ் ஸ்டாப்பில் இல்லை என்று சொன்னேன். 'அப்படியெல்லாம் இல்லை' என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். நான் வீட்டுக்குப் போய்ப் பார்த்தால் பிரபல 'மெயில்' பத்திரிகையில் இதைப் போட்டோ எடுத்துப் போட்டிருக்கிறார்கள். நாம் பார்க்கிறோம், ஹைகோர்ட்டு பக்கத்தில், மவுண்டு ரோடு பக்கத்தில், மைலாப்பூர் பகுதியில், இங்கெல்லாம் 'பீக் ஹவர் ப்ராப்லம்' இருக்கத்தான் செய்கிறது. வேறு நாட்டில் இப்படித் தான் இருக்கிறது என்று சொல்லுவார்கள். அங்கெல்லாம் இந்தப் பிரச்னையை சமாளித்திருக்கிறார்கள். ஏன் ட்ரெய்லர் பஸ்கள் போடக்கூடாது? பெரிய லேலண்டு பஸ்கள் ஏன் போடக்கூடாது. ஏன் பீக் ஹவர் நேரத்தில் இந்தப் பஸ்களை இதற்கு உபயோகப்படுத்திக்கொண்டு, மற்ற சமயங்களில் 30 மைல் நீளமுள்ள காஞ்சிபுரம் போன்ற ரூட்களை எடுத்துக்கொள்ளக்கூடாது? நகரப் பிரதிநிதி என்ற முறையில் சொல்லுகிறேன். இந்தப் பிரச்னையை நாம் சமாளித்தாகவேண்டும். ஏழை எளிய மக்களுக்கு என்ன கார் இருக்கிறதா? அவர்கள் நடந்துதானே போகவேண்டும், பஸ் இல்லாவிட்டால்? அவர்களுக்குப் பஸ்களைத் தவிர வேறு போக்குவரத்திற்கு என்ன வாய்ப்பு இருக்கிறது? அந்த பீக் ஹவரில் தங்கள் தங்கள் வேலை இடங்களுக்குப் போகவேண்டியவர்கள், துறைமுகத்திற்குப் போகவேண்டியவர்கள், கோர்ட்டுகளுக்கு

இது சிக்கனமாக நடைபெறவில்லை என்பது மட்டுமல்ல, விரயமாகவும், ஊதாரித்தனமாகவும் போய்க்கொண்டிருக்கிறது. 15 ஆண்டுகளுக்கு முன்னரே தேசிய மயமாக்கப்பட்டும் கூட கோடிக்கணக்கான ரூபாய் இருக்கும் ஸ்தாபனம் இந்த நாட்டின் யஜமானர்கள் பேரால்—தொழில் அமைச்சர் அவர்கள் வேறு ஒரு இடத்தில் குறிப்பிட்டார்கள், இன்றைக்கு இந்த பஸ்களுக்கு யஜமானர்கள் பொதுமக்கள், அவர்களுடைய பணத்தைக் கொண்டு இது நடைபெறுகிறது, நான் சாதாரண மானேஜிங் டைரக்டர் என்று—அந்த முறையில் யஜமானர்கள் சார்பில், அவர்களுடைய சேவகர்களான, பணியாளர்களான நாங்கள், ஏதோ எதிர்கட்சிக்காரர்கள் கொண்டு வந்தது என்று காரணம் காட்டாமல், சாதாரணமாக சமாதானம் சொல்லாமல், இதற்கான யோசனைகளை நாங்கள் சொல்லக்கூடிய முறையில் இந்தத் தீர்மானத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட அறிக்கையில் இதற்கான சமாதானம் சொல்லியிருப்பதைச் சொல்லி நானே விளக்காமல், 1963-வது ஆண்டின் தணிக்கை அறிக்கையில் சில விவரங்கள் இருக்கின்றன, அந்த விவரத்தைச் சொல்லியே நான் மேலே போகலாம் என்று கருதுகிறேன். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்தப் பக்கத்திலே ?) பக்கம் 103. 1960-ம் வருஷத்திலே 470 பஸ்கள் இருந்தன. 1961-ல் 595 பஸ்களாக அதிகமாயிற்று. 1961-62-ல் 660 பஸ்களாக அது மாறிற்று. 1960-ல் 470 இருந்தது 1962-ல் 660 ஆக இருக்கிறது. ஆனால் லாபம் எவ்வளவு ? இவ்வளவு பெரிய, 3 கோடி ரூபாய் வரும் இடத்தில், 7 கோடி ரூபாய் மூலதனம் இருக்கும் இடத்தில் என்ன லாபம் வந்திருக்கிறது என்று பார்த்தால் 1960-ம் வருஷத்தில் 17 லட்சம் ரூபாய், 1961-வது ஆண்டில் ரூ. 16 லட்சம்,1961-62-ல் ரூ. 11 லட்சம். முதல் வருஷத்திலிருந்து 125 பஸ்கள் அதிகமாகியிருக்கின்றன. இரண்டாவது ஆண்டில் 65 பஸ்கள் அதிகமாகியிருக்கின்றன. ஆனால், லாபம் ரூ. 17 லட்சத்திலிருந்து குறைந்திருக்கிறது. இந்த நிறுவனத்தில் கோடிக்கணக்கான ரூபாய் புழங்கப்படுகிறது. நாம் பஸ் முதலாளிகளைப்பற்றி அறிவோம். முதலில் ஒரு பஸ் வைத்துக்கொண்டிருப்பவர்கள், 10-15 வருஷங்களில் 5 பஸ்கள், 6 பஸ்கள், 100 பஸ்கள், 200 பஸ்கள் என்று அதிகமான பஸ்களுக்குச் சொந்தக்காரர்களாகி மாநிலத்தில் அரசியல் சூழ்நிலையிலே கொந்தளிப்பு ஏற்படும்படி செய்யக்கூடிய அளவுக்கு எவ்வளவோ வசதி படைத்தவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனால், கோடிக்கணக்கான ரூபாய்கள் போட்டும் நமக்கு இவ்வளவுதான் லாபம் வருகிறது. இப்பொழுது தணிக்கைக் குழு கூட ஒரு எச்சரிக்கை செய்துவிட்டிருக்கிறார்கள் :

"Although in 1961–62 there was an increase of 65 vehicles and a reduction in the cost per mile, the net profit was lower by Rs. 2·63 lakhs than in 1960–61. The profits have also been declining year by year for these three years. It has been explained by the Department that this is due to non-revision of fares during these years and increased cost in production."

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆபரேடிங் காஸ்ட் . . .

திரு. கே. ஏ. மதியழகன் : ஆபரேடிங் காஸ்ட் கூட பார்த்தால் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. 1960-ல் ரூ. 1.34 லட்சம், 1961-ல் ரூ. 1.38 லட்சம். மறுபடியும் கீழே குறைந்துதான் இருக்கிறது. ஆடிட் ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. லாபம் வாராததற்குச் சமாதானம் பஸ் கட்டணத்தை மாற்றவில்லை என்று சொல்லுகிறார்கள். புதியதாக கட்டணம் போடவேண்டும் என்ற காரணத்திற்காகவோ என்னவோ ? கோடிக்கணக்கான ரூபாய் போடப்பட்டிருக்கிற நிறுவனத்தில் இந்த லாபம் சரிதானா என்ற கேள்வியை ஆதாரமாக ஆக்கித்தான் நான் இதிலே நுழைகிறேன். இப்படி முக்கியமான நிலைமைகளைப் பற்றி இப்பொழுதுதான் சொல்லுகிறோம் என்பது அர்த்தம் அல்ல. 15 வருஷங்களாக இவ்வளவு பெரிய நிறுவனத்தில் பலமாதிரியான காரியங்கள் நடக்கின்றன. அவைகளை நாம் நிரூபித்தாகவேண்டும். அம்மாதிரி செய்வதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இதை யாரும் ஒத்துக்கொள்வார்கள். சிக்கனம் வேண்டுமானால் விவரம் சொல்லுவதற்கு நமக்குத் தெரியாமல் இருக்கலாமே தவிர, இதைச் செய்ய வேண்டியது நம்முடைய கடமை, இதை நாம் தான் கண்காணித்தாக வேண்டும். இதிலே நாம் அதிகாரம் கேட்கவேண்டும். நாம் எம்.எல்.ஏ.க்கள், கோடிக்கணக்கான ரூபாய் இதிலே போடப்பட்டிருக்கிறதே என்ற வகையில் தான் நாம் இதைக் கண்காணித்தாக வேண்டும்.

இதிலே பல முக்கியமான பிரச்னைகள் இருக்கின்றன. சென்னை நகரத்தில் 17 லட்சம் 20 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். பெரிய பணக்காரர்கள் கார்களிலே போகலாம். சாதாரண நடைபாதசாரிகள் போக, மீதிப் பேர்கள் இந்தப் போக்குவரத்தை நம்பித் தான் இருக்கவேண்டியிருக்கிறது. 10 வருஷங்களாக சரியாக நடைபெறாமல் இருக்கிறது. எவ்வளவோ ப்ரேக் டவுன்கள் ஆகியிருக்கின்றன. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கிருஷ்ணசுவாமி நாயுடு எஸ்டிமேட் கமிட்டியின் தலைவராக இருந்த பொழுது 1960-ம் வருஷத்தில் எஸ்டிமேட் கமிட்டி ஒரு அறிக்கையில் இதைப்பற்றிக் கண்டித்து எழுதியிருக்கிறார்கள். நான் கூடச் சொல்லவேண்டியதில்லை அதைப்பற்றியெல்லாம். அவர்களே ரொம்பவும் கண்டித்திருக்கிறார்கள். கடுமையாக எச்சரித்துக் கூட இருக்கிறார்கள். வேறு இடங்களில் இருக்கிற 'ப்ரேக் டவுன்களை' விட இங்கே அதிகமாக இருக்கிறது என்று நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் :

"As regards maintenance, the Committee is not satisfied as to the operational efficiency and feels that there is much scope for improvement."

என்று சொல்லி பல ஆதாரங்கள் கொடுத்திருக்கிறார்கள். பம்பாயில் இவ்வளவு பஸ்கள் ஓடுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். நான் தினந்தோறும் பார்க்கிறேன். மவுண்டு ரோடில்

போகவேண்டியவர்கள், வர்த்தகாலயங்களுக்குப் போகவேண்டியவர்கள், பள்ளிக்கூடங்களுக்குப் போகவேண்டியவர்கள் ரொம்பவும் கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். 7, 8 வருஷங்களாக இப்படித் தான் நிலைமை இருக்கிறது. ட்ரெய்லர் பஸ்கள் ஏன் போடக்கூடாது? ரோடுகளை ஏன் அகலப்படுத்தக்கூடாது? கேட்டால் ரோடுகள் இல்லை என்று சொல்லுவார்கள். ஏன் மோட்டார் வெஹிகிள்ஸ் டாக்ஸேஷனில் வருகிற பணத்திலிருந்து ரூ. 50 லட்சத்தை கார்ப்பரேஷனுக்குக் கொடுத்து ரோடு போடச் சொல்லக்கூடாது? லண்டன் நகரத்தில் இது போன்ற பிரச்னை இருக்கிறது என்றாலும், அதையெல்லாம் அவர்கள் சமாளித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். 15 வருஷங்கள் ஆகிவிட்டன. நிலைமை இப்படித்தான் இருக்கிறது.

இண்டர்மீடியட் ஸ்டாப்களில் நிற்பவர்களுக்கு மிகவும் திண்டாட்டம் தான். நடுவில் நிற்பவர்களுக்குப் பெரிய கஷ்டம். அவர்களுக்குப் பஸ்களில் இடமே அகப்படுவதில்லை. அமைச்சர்களாய் இருப்பவர்களுக்குப் பரவாயில்லை. கார்களில் போய்விட்டு திறப்புவிழா நடத்திவிட்டு வந்துவிடுவார்கள். யாராவது ஒருவர், காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டு சைனா பஜாருக்குச் சாமான் வாங்குவதற்குச் சென்றால், மாலையில் தான் திரும்பி வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் சாதாரண ஏழை மக்களுக்கு எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது என்பதைச் சர்க்கார் உணர வேண்டும்.

அடுத்தபடியாக, டிரைவர்களும், கண்டக்டர்களும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி எனது நண்பர் திரு. கருணாநிதி அவர்கள் பேசிய பொழுது, அமைச்சர் அவர்கள் கோபித்துக் கொண்டார்கள். எல்லாக் கண்டக்டர்களும் சரியாக நடந்து கொள்ளுகிறார்கள் என்று சொல்லிவிடமுடியாது. அவர்களுடைய வறுமை நிலை, சம்பளக் குறைவு, எல்லாவற்றையும் நாம் மறந்து விடக் கூடாது. அந்தக் கோபத்தை அவர்கள் பஸ் பிரயாணிகள் மீது காட்டுகிறார்கள். டி.வி.எஸ். போன்ற நிறுவனங்கள் எவ்வளவோ பண்புடனும், நல்ல முறையிலும் அவர்களை நடத்தி வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்குப் போதுமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இவ்வளவு தான் லாபம் கிடைக்கிறது என்று சொன்னால், அதைப் பெரிய பஸ் முதலாளிகள் பார்த்தால், கைகொட்டி நகைப்பார்கள். இப்படிப்பட்ட நிறுவனமும் இருக்கிறதா என்று கேட்பார்கள். இதை நான் சொல்லும்பொழுது, பஸ் கட்டணத்தை உயர்த்தப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். அதுவல்ல பரிகாரம். ஓட்டை உடைசல் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். யாரையும் நான் குற்றம் சாட்டவில்லை. சோஷலிஸத்தைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் பேசுகிறார்கள். "காகிதப்பூ மணக்காது, காங்கிரஸ் சோஷலிஸம் இனிக்காது" என்று எங்களுடைய தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள். நேற்று காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடத்தி "டெமாக்ரடிக்

சோஷலிஸத்தை" எப்படி அமல் நடத்துவது என்பதைப் பற்றி பேசி இருக்கிறார்கள். இவ்வளவு கோடிக்கணக்கான பணத்தை விழுங்கிவிட்டு, அதன் நிர்வாகத்தில் நமக்குப் பொறுப்பில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற என் போன்ற உறுப்பினர்களுக்கு இதிலே அக்கறை இருக்கிறது. இன்று நடுத்தர மக்களும், மாதச் சம்பளம் வாங்குவோரும் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மஹலாநோபிஸ் கமிட்டி கூட 'Salaried people' -ன் வருமானம்தான் ஏறவில்லை என்று கூறியிருக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும், அதனால் ஏற்பட்ட அதிக வருமானம் எங்கே போயிற்று? ஆகவே, ஏழை எளியவர்களைப் பாதிக்கக் கூடிய வகையில் பஸ் கட்டணங்களை மேலும் உயர்த்தக் கூடாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

நான் இந்த மாதிரி வாசகங்களைச் சொல்லும்பொழுது, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையின் காரணமாக நான் இவ்வாறு பேசுகிறேன் என்று சொல்லுவார்கள். சட்ட மன்றத்தின் நியாயமும், மரியாதையும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க் கட்சிப் பிரதிநிதிகளுக்கு இந்த சர்க்காரால் சரிவரக் கொடுக்கப்படவில்லை. கோட்டை நாற்காலி தங்களுக்கு சதமானது என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். வாழ்வே சதமில்லை என்றால், கோட்டை நாற்காலி மட்டும் எப்படி சதமாக இருக்க முடியும்?

மேலும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர் எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் தலைவர் என்ற முறையில் அந்த ரிப்போர்ட்டை சமர்ப்பித்திருக்கிறார் அவரைப்பற்றி ஏன் அடிக்கடி கனம் அங்கத்தினர் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி தலைவர் என்று பேச வேண்டும்?

திரு. கே. ஏ. மதியழகன் : அடையாளத்திற்காகச் சொல்லுகிறேன். அவரும் இந்தச் சபையின் உறுப்பினர் தான். அவரும் வாக்காளர்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே கடைசியாகச் சொல்லப்பட்டிருக்கும் சில வார்த்தைகளைச் சொல்லி விட்டு, என்னுடைய உரையை முடிக்கலாமென்று கருதுகிறேன். 1960-ம் வருடத்தில் கொடுத்த இந்த அறிக்கையிலே, கடைசியில் கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார்கள் :

"Paper orders are useless unless they are carried out and constantly supervised. Charts and instructions are also useless unless they are scrupulously followed in full, and the result constantly watched. In these words the Ladden Committee reported in 1949 and still the state of affairs seems to be not much different from what it was then."

1949-ல் நியமித்த லேடன் கமிட்டி அறிக்கை கொடுத்து 11 வருஷங்களுக்குப் பிறகும் கூட அதே நிலைமை தான் நீடிக்கிறது. மேலும் இந்தக் கமிட்டி சொல்லியிருக்கிறது :

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) 22—3—1963-ல் அரசம்பட்டி கிராமவாசிகள் சேலம் கலெக்டரிடம் பல முறையீடுகளைச் செய்து கொண்டபோது, அரசம்பட்டி கிராமத்திற்கருகில் பாரூர்-ஆவத்த வாடி சாலையில் தென்பெண்ணையாற்றின் குறுக்காக மூழ்கு பாலம் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

(இ) சேலம் கலெக்டர் இது விஷயமாக கிருஷ்ணகிரி (நெடுஞ் சாலைகள்-கிராமப்பணிகள்) டிவிஷனல் எஞ்சினியரைக் கலந்தாலோசித்தார். அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் எதிலும் மேற்படி பால வேலை சேர்க்கப்படவில்லை என்று டிவிஷனல் எஞ்சினியர் அறிவித்தார். இதை கலெக்டர் அரசம்பட்டி கிராமப் பஞ்சாயத்துத் தலைவருக்கும் தெரிவித்திருக்கிறார்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தப் பாலத்தைக் கட்டுவது பற்றிப் பரிசீலித்து அதைக் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இதை நான்காவது திட்ட காலத்தில்தான் பரிசீலிக்க வேண்டும்.

அரிசிக் கொள்முதல்

*417 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசி மில்காரர்கள் சர்க்காருக்கு தங்கள் கொள்முதலில் 10 சதவீதம் கொடுத்து வந்ததை நிறுத்தி விட்டார்கள் என்பது உண்மையா?

(இ) அப்படியானால், சர்க்கார் தங்கள் இலக்கை எப்படி பூர்த்தி செய்யப்போகிறது?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) இல்லை.

(இ) 1—10—1963 முதல் 31—12—1963 வரை உள்ள கால அளவில் பிரத்தியேக ஏற்பாட்டின்படி அரசாங்கத்திற்கு அரிசி சப்ளை செய்ய அரிசி மில்காரர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். கொள்முதல் செய்ய உத்தேசித்துள்ள ஒரு லட்சம் டன் அரிசியில் 70,000 டன் அரிசி இந்த ஆண்டு இறுதிக்குள் கொள்முதல் செய்யப்பட்டு விடும்.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்த 10 சதவீதம் கொள்முதல் செய்தால் சர்க்காருடைய குறியீட்டு எண் எட்டிவிடுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இந்த மூன்று மாதத்திற்குக் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். இதைக்கொண்டு பார்த்தால் 20,000 டன் வரும்.

திரு எம். தண்டாயுதபாணி : சர்க்கார் மேற்கொண்ட இந்தக் கொள்முதல் திட்டத்தினால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்ற நிலையை உணர்ந்து கொள்முதல் திட்டத்தை மாற்றும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அரிசி மில்காரர்கள் பிரியப்பட்டு சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள். ஆகையால் விலைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தமாதிரி கொள்முதல் செய்யும் அரிசியை என்ன விலைக்கு வாங்கவேண்டுமென்ற விவரம் மத்திய அரசாங்கத்திலிருந்து வந்திருக்கிறதா? அப்படியானால் அதன் விவரமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மத்திய சர்க்காரிலிருந்து விலை நிர்ணயிக்கப்பட்டு இந்த அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. என்ன விலை என்ற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, அரசாங்கம் மில்காரர்களிடமிருந்து அரிசியைக் கொள்முதல் செய்து கொள்வது என்ற திட்டம் வந்ததின் பின்னால், பலர் நெல்லாகவே விற்றுவிட்டார்கள். ஆகவே அரசாங்கத்தினுடைய கொள்முதல் குறிக்கோள் நிறைவேறியதாக சொல்ல முடியாது. ஆகவே அரிசியையும் நெல்லையும் சேர்த்து மில்காரர்களிடம் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது அரிசி மட்டும்தான் வாங்குவது என்று ஏற்பாடாகியிருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : மில்காரர்களிடத்தில் கொள்முதல் செய்வதைவிட விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்வது நியாயமாக இருக்கும். காரணம் அறுவடை காலத்தில் விவசாயிகள் குறைந்த விலையில் அதாவது 17 ரூபாய் 10 காசுக்கு விற்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இப்போது அதே நெல்லுக்கு 23 ரூபாய் என்று விலை இருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும்படியான அளவில், நேரடியாக சர்க்காரே விவசாயிகளிடத்திலிருந்து நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதில் பல சிரமங்கள் இருப்பதாகத் தெரிவதினால்தான் மில்காரர்களிடமிருந்து வாங்குவது என்று ஏற்பாடாகியுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : மில் சொந்தக்காரர்கள் சர்க்காருக்குக் கொடுத்து வந்த அரிசியை இடையிலே நிறுத்தியிருந்தார்கள். அப்போது குறைந்த விலைக்கு கொள்முதல் செய்த அரிசியை

" The Committee feels confident that there is much scope for improving the services economically. If the recommendations made by the Committee are put into effect it would not only improve the service to the public but also improve the revenue."

"ரெவின்யூ" என்ற வார்த்தைக்குக் கீழே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதிகமாக லாபம் வரவில்லை என்று சொல்லக் கூடும். பொது மக்களுக்கு நன்மை ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், சர்க்காருக்கு வருமானமும் வரும் என்று கமிட்டி சொல்லி இருக்கிறது. நாம் ஒத்துக்கொண்டிருக்கிற சம தர்மம் தழைக்க வேண்டுமானால், இந்தத் தீர்மானத்தை அரசாங்கத்தின் மீது கண்டனம் தெரிவிக்கும் ஒரு தீர்மானம் என்று கருதாமல், அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொது மக்களின் பிரதிநிதிகளாக நாம் இங்கே வந்திருக்கிறோம். நமக்கு அதிகாரம் இருக்கிறது. பொறுப்பு இருக்கிறது. ரூ. 3 கோடி தெருவிலே போடப் பட்டிருக்கிறது. வீணாகிக் கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் தங்களைக் குறை சொல்லுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நாம் பொறுப்பு எடுத்துக் கொண்டால் தான் இந்த நிறுவனங்கள் எல்லாம் சீர்படும். நமது மாநிலத்தின் தலைநகரத்தில் இந்த நெருக்கடி நேரத்தில் அத்தியாவசியமான ஒரு சர்வீஸ் பாழ்பட்டுக் கிடக்கிறது, ஏராளமான பணம் வீணாகி வருகிறது, இதை எல்லாம் சீர்படுத்த வேண்டுமானால் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய கட்சியின் செயலாளர் கொடுத்திருக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தின் நோக்கம் அரசாங்கத்தைக் குறை கூறுவதோ அல்லது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இலாகா நல்ல முறையில் நடைபெறவில்லை என்று குற்றம் சாட்டுவதோ அல்ல என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன். பக்கத்திலே இருக்கிற மாநிலங்களில் நடைபெறுகிற டிரான்ஸ்போர்ட்டை விட ஓரளவு திறம்பட்ட முறையிலே நம்முடைய மாநிலத்திலே செயல் படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என்றுலும் எப்படி பயிர் செய்பவன், பயிர் நன்றாக வளர வேண்டுமென்று நினைத்து, அதற்கு வேண்டிய தண்ணீரும், உரமும் போட்டு, களை
11-00 a.m. களை எடுப்பானோ, அதே முறையில் நம்முடைய அரசாங்கத்தின் இலாகாவாகச் செயல்படுகிற இந்த டிரான்ஸ்போர்ட் இலாகா மேலும் நல்ல முறையில் நடைபெற வேண்டும், நல்ல லாபம் பெற வேண்டும், திறம்பட செயல்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, சோஷலிஸத்தை எதிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடோ அல்லது சர்க்கார் நடத்துகிற பஸ்களை எல்லாம் தனிப்பட்டவர்களுக்கே கொடுத்து விடவேண்டுமென்ற எண்ணத்தோடு,

இந்த தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சர்கார் நடத்துகிற தொழிலிலும், தனிபபட்டவர்கள் நடத்துகின்ற தொழிலிலும் கிடைக்கின்ற லாபத்தைப் பற்றி எல்லாம் இன்று பல இடங்களிலே பரவலாகப் பேசப்படுகிறது. சர்க்கார் நடத்துகின்ற பஸ் ஸ்தாபனத்தையும், தனிப்பட்ட முதலாளிகள் நடத்துகின்ற பஸ் ஸ்தாபனங்களையும் ஒன்றோடொன்று சீர்தூக்கிப் பார்த்தால், எந்தெந்த இடங்களிலே தவறுகள் இருக்கின்றன, குறைபாடுகள் இருக்கின்றன என்பதை ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். தனிப்பட்ட பஸ் முதலாளிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு லாபம் அதிகமாக வருகிறது என்று பொதுவாகப் பேசப்படுகிறது. தனிப்பட்டவர்கள் 5 அல்லது 10 பஸ்கள் வைத்தோ, அதற்கு மேற்பட்ட பஸ்கள் வைத்தோ நடத்துகிறார்கள். அரசாங்கம் அதிகமான பஸ்களை வைத்து நடத்துகிறார்களே, தனிப்பட்டவர்களும் நடத்துகிறார்களே, இரண்டும் ஒரு தொழில் தானே, ஆகவே இரண்டையும் ஒத்துப் பார்க்க வேண்டியது இந்த சபையின் கடமையாகும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். குறைபாடுகளைக் களைய வேண்டியது அரசாங்கத்தின் கடமை ஆகும். அதைச் சுட்டிக் காட்டுவதற்குத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். அரசாங்க இலாகாவிற்குப் பணம் கொடுப்பதற்கு நாம் இருக்கிறோம். இந்த ஸ்தாபனத்திற்கு நம் சபையின் மூலம் 11-00 a.m.
நாம் பணம் ஒதுக்குகிறோம். ஆனால் தனிப்பட்டவர்கள் தங்கள் பஸ்களை ஓட்ட மார்வாரிகளிடமும், மற்றவர்களிடமும் இரண்டு வட்டி மூன்று வட்டிக்குப் பணம் வாங்குகிறார்கள். ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவது என்றாலும் அரசாங்கத்திற்கு ஒரு விலையாகவும், அவர்களுக்கு ஒரு விலையாகவும் இருக்கிறது. அரசாங்க பஸ்களைப் பொறுத்தவரையில், நான் ஏற்கனவே நிதி ஒதுக்கு மசோதாவில் பேசும்பொழுது கூறியது போல், அரசாங்கம் இன்கம்டாக்ஸ் செலுத்துவது கிடையாது. ஆனால் தனிப்பட்டவர்கள் இன்கம் டாக்ஸ் கட்டுகிறார்கள். அவர்கள் அதிக வட்டிக்குப் பணம் வாங்குகிறார்கள், அதிகமான செலவு செய்கிறார்கள். இன்கம் டாக்ஸ் செலுத்துகிறார்கள். இருந்தும் ஆண்டு ஒன்றுக்கு ஐயாயிரம் பத்தாயிரம் வரை ஒரு பஸ்ஸுக்கு லாபம் காட்டுகிறார்கள். அரசாங்க பஸ்களிலே ஓவர் லோட் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் தனியார் பஸ்களிலே அது இல்லை. அதே சமயத்தில் அரசாங்க பஸ்கள் ஏ கிளாஸ், பி கிளாஸ் ரோடுகளில் தான் செல்லுகின்றன. ஆனால் தனிப்பட்டவர்களுடைய பஸ்கள், ஏ கிளாஸ், பி கிளாஸ் ரோடுகளிலும், சி கிளாஸ் ரோடுகளிலும் கூட ஓடுகின்றன. பல சலுகைகளையும் சௌகரியங்களையும் அடைந்திருக்கிற அரசாங்க பஸ்களில் எப்படி வருமானம் குறைகிறது, லாபம் எங்கே போகிறது என்று ஆராய்ந்து அறிய வேண்டியது அவசியமாகிறது. அதே சமயத்தில் பல சங்கடங்களுக்கு உள்ளாகி இருக்கிற தனிப்பட்டவர்கள் லாபம் அடைய முடிகிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல அங்கத்தினர்கள் பஸ் வைத்து நடத்தும் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தெரியும்

இருக்கிறது. ஆகவே தான் அதைக் கமிட்டி போட்டு வெளிப்படுத்த வேண்டாமென்று அப்படியே மெழுகிப்பூசுகிறார்கள் ஆளும் கட்சிக் காரர்கள் என்று வெகு அழகாக எடுத்துப் பேசுவதற்கும் இது பயன்படுமே அல்லாது வேறு ஒன்றுக்கும் பயன் படாது. காரணம் என்ன? சர்க்கார் நடத்துகிற நிறுவனங்கள் எல்லாவற்றையும் பரிசிலனை செய்து அதிலுள்ள குறைபாடுகள், அதிலுள்ள ஓட்டைகள் என்ன என்பதை ஆராய்ந்து, அவற்றை சர்க்கார் எவ்வாறு நிவர்த்தி செய்யவேண்டும் என்பதற்கான வழிவகைகளை கூறுவதற்கும், நமக்குக் கிடைக்கவேண்டிய லாபம் எவ்வாறு விரயம் ஆகிறது அவற்றை எவ்வாறு தடுக்கலாம் என்று கூறுவதற்கும் தான் எஸ்டிமேட்ஸ் கமிட்டி இருக்கிறது. எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் சட்டசபை உறுப்பினர்கள், மேல்சபை உறுப்பினர்கள் ஆகியவர்கள் தான் இருக்கிறார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஒருவேளை இந்த ஆண்டு கனம் திரு. மதியழகன் அவர்கள் வராமல் இருந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி ஒவ்வொரு ஆண்டும் பலபல தொழில் நிறுவனங்களைச் சென்று பார்வை இட்டு அவற்றிலுள்ள குறைபாடுகள் என்ன என்பவற்றை எல்லாம்கூடச் சேர்த்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அத்தகைய ஒரு அறிக்கையைத் தான் கனம் திரு. மதியழகன் அவர்கள்—இப்போது தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருப்பவர், எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் தலைவராக இருந்தபோது சமர்ப்பித்த அறிக்கையை வைத்துக்கொண்டுதான்—அங்கங்கே படித்துக் காட்டி 'தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரே குறிப்பிட்டிருக்கிறார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரே குறிப்பிட்டிருக்கிறார்' என்று சொன்னார்கள். அப்படிக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று யாரும் மறுக்கவில்லை. இருக்கக்கூடிய குறைபாடுகளை எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காகத்தானே எஸ்டிமேட்ஸ் கமிட்டியை நியமித்து இருக்கிறோம்? அந்தக் கமிட்டி தன்னுடைய கடமையைச் சரிவர செய்து கொண்டு இருக்கிற பொழுது, இந்த மன்றத்தின் மூலமாகவே அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டு வருகிற காரணத்தினாலே மற்றொரு கமிட்டி போடவேண்டிய அவசியம் என்ன? மற்றொரு கமிட்டி போடுவது அவசியம் என்று சொல்லுகிறபோது அதன் உறுப்பினர்கள் இந்த சட்டமன்ற உறுப்பினர்களாகவே இருக்கவேண்டுமென்று சொல்கிறார்களே தவிர வேறு நிபுணர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று கூடச் சொல்லவில்லை. சட்டசபை அங்கத்தினர்கள் இருபது முப்பது அங்கத்தினர்களைக் கொண்ட எஸ்டிமேட்ஸ் கமிட்டியைத் தான் அமைத்து இருக்கிறோமே. அப்படி இருக்க மற்றும் ஒரு நான்கு, அல்லது ஐந்து அல்லது பத்து பேர்கள் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டுவிடுவதினால் என்ன ஒரு விளைவு ஏற்பட்டு விடப் போகிறது என்பது எனக்குப் புரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது, சென்னை நகரத்தில் ஓடக்கூடிய பஸ்களில் லாபம் குறைவாகத்தான் இருக்கிறது; எக்ஸ்பிரஸ் பஸ்களில்தான்

லாபம் என்று சொன்னார்கள். இது ஒன்றும் புதிது அல்ல. எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டிலும் சரி, ஆடிட் ரிப்போர்ட்டிலும் சரி இதைத்தான் சொல்கிறார்கள். இன்றைக்குத் தனியார் நடத்தக் கூடிய பஸ்களாக இருந்தாலும் சரி, சர்க்கார் நடத்தக்கூடிய பஸ்களாக இருந்தாலும் சரி ஷார்ட் ரூட்டில் ஓடக்கூடிய பஸ்களில் லாபம் இல்லை. இன்றைய தினம் ஷார்ட் ரூட்டுகளில் பஸ் விடுவதற்குத் தனிப்பட்ட முதலாளிகளுக்கு பர்மிட் வழங்கினால் அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதே இல்லை. ஷார்ட் ரூட்டில் நஷ்டம் தான் ஏற்படுகிறது. லாங் ரூட்டில் தான் லாபம் ஏற்படுகிறது, ஷார்ட் ரூட்களில் ஏன் நஷ்டம் வருகிறது எனபதற்கான காரணம் நமக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்ல முடியாது. ஒரு இடத்தை விட்டு பஸ் கிளம்பினால் 20 கெஜத்திற்குள் மற்றொரு பஸ் ஸ்டாப் வந்து விடுகிறது. இப்படி பஸ்களை நிறுத்தி நிறுத்தி ஓட்டுவதினால் எத்தனை பெட்ரோல் செலவு, டீஸல் ஆயில் செலவு, லாங் ரூட்டில் போனால் எவ்வளவு மிச்சம் கிடைக்கும் என்பது ஒரு வண்டியை வைத்து பராமரிக்கின்ற எல்லோருக்கும் தெரியும். அரசாங்கம் பஸ்களை ஏற்று நடத்துவது லாபம் சம்பாதிக்கிற ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் சென்னை நகரத்தில் உள்ள மக்களுக்கு இன்னும் அதிக வசதி செய்து தரவேண்டுமென்று நாம் மக்களுடைய பிரதிநிதியாகச் சொல்லவேண்டுமே தவிர, 1960-ம் வருஷம் 17 லட்சம் ரூபாய் லாபம் வந்தது, 1961-ம் வருஷம் அது 11 லட்சமாகக் குறைந்துவிட்டது, இப்படி லாபம் குறையலாமா? என்று கேட்பதோ, லாபம் குறைந்து வருவதினால் இதில் ஏதோ ஓட்டை உடைசல் இருக்கிறது என்று பேசுவதோ சரியல்ல. ஆண்டுக்கு ஆண்டு லாபம் பெருகிக்கொண்டே இருக்கவேண்டும் என்று சொல்வதற்கு சர்க்கார் என்ன வட்டிக் கடை வைத்து நடத்துகிறார்களா? அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய லாபத்தின் அளவு கொஞ்சம் குறைந்தாலும் கூட மக்களுக்கு வசதி அதிகரிக்க வேண்டும். அந்தத் தொழில் ஸ்தாபனத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுடைய நலன்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவேண்டும், என்பதுதான் நம்முடைய குறிக்கோளாக இருக்கவேண்டும். அதைவிட்டு நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது இதே ரூட்டில் தனிப்பட்ட ஒரு முதலாளிக்கும் பர்மிட் கொடுத்துப் பாருங்கள், இந்த இரண்டு துறையினர் பஸ்களும் ஓடட்டும், அப்போது சர்க்கார் நடத்தும் பஸ்ஸின் லாபத்தையும், தனியார் நடத்தும் பஸ்ஸின் லாபத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம் என்று சொன்னார்கள். ஏதோ கிராமத்தில் ஒரு கோழிக்கும் இன்னொரு கோழிக்கும் சண்டை விடுவார்கள். எந்தக் கோழி ஜெயிக்கிறது, எந்த ஊர் கோழி வென்றது என்று ஒன்றோடு ஒன்று மோதவிட்டுப் பார்ப்பார்கள். அப்படி இந்த பஸ் போக்குவரத்துத் துறையில் அரசாங்க பஸ்ஸோடு தனியார் துறை பஸ்ஸையும் மோதவிட்டு பார்க்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் சொல்வது சரியான யோசனை ஆகாது. நாம் செய்கின்ற காரியங்கள் விளையாட்டுக் காரியங்கள் அல்ல. தனியார் துறையாக

அதில் உள்ள சிரமங்கள். அவர்களும் இன்கம் டாக்ஸ் கொடுக்கிறார்கள். அவர்களும் 3 அல்லது 4 வட்டிக்குப் பணம் வாங்குகிறார்கள். தொழிலாளிகளுக்குப் போனஸ் கொடுத்து அவர்களால் திறம்பட்ட வேலை செய்ய முடிகிறது. 825 பஸ்களை வைத்து நடத்தும் ஒரு இலாகாவில் என்ன குறைபாடுகள் இருக்கின்றன, ஏன் எபிஷியன்டாக வேலை செய்ய முடியவில்லை என்பதையெல்லாம் ஒரு கமிட்டி அமைத்துப் பரிசிலனை செய்து இலாகாவில் ஓட்டை உடைசல் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும்.

டிக்கெட்டு கொடுப்பதில் கள்ள டிக்கெட்டுகள் வழங்கப்படுவதாகப் புகார்கள் வருகின்றன. கொடுக்கப்பட்ட டிக்கெட்டுகள் மீண்டும் உபயோகிக்கப்படுகின்றன என்று புகார் வருகிறது. இவைகளையெல்லாம் அலசிப்பார்த்துக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதுதான் நோக்கம். அரசாங்கம் நடத்தும் நெடுந்தூர பஸ்கள் நல்ல முறையில் நடைபெறுகின்றன. ஆனால் தொழிலாளிகளுடைய நிலையைப் பார்த்தால் மிகவும் சங்கடமாக இருக்கிறது. நாகைக்குச் செல்லுகிற ஒரு பஸ்ஸை எடுத்துக் கொண்டால், அதை ஓட்டிச் செல்லும் டிரைவரே மீண்டும் இங்கே திரும்பி வர வேண்டியிருக்கிறது. இங்கே இருந்து 9 மணி அல்லது 10 மணி நேரம் ஓட்டிச் சென்று விட்டு அதே டிரைவர் திரும்பி ஓட்டி வர வேண்டிய நிலையில் இருக்கிறார். ஆனால் தனிப்பட்டவர்களிடம் வேலை செய்யும் டிரைவர்கள் ஒன்றுவிட்டு ஒரு நாளைக்குத்தான் வேலை செய்கிறார்கள். அங்கே அவர்களுக்கு சம்பளமும் அதிகம்; போனஸும் அதிகம். இங்கே அரசாங்க இலாகாவிற்கு டிரைவர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. நம் அரசாங்க பஸ் ஸ்தாபனத்திற்கு டிரைவர்கள் வர மாட்டேன் என்கிறார்கள். நாமே டிரைவிங் ஸ்கூல் நடத்துகிறோம். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களைச் சேர்க்கிறோம் என்று பத்திரிகையில் விளம்பரம் செய்கிறோம். பிறகு கத்துக்குட்டி டிரைவர்களைக் கொண்டு டிரைவர் பஞ்சத்தைப் போக்க முயலுகிறோம். ஆனால் தனிப்பட்டவர்களிடம் அந்த நிலை இல்லை. எனக்குத் தெரியும் சில கம்பெனிகள் சர்க்காரில் கொடுக்கும் சம்பளத்தைவிட 1½ மடங்கு, 2 மடங்கு அதிகமான சம்பளம் கொடுக்கிறார்கள்.. அதே போல சர்க்கார் இலாகாவில் இவர்கள் 30 நாள் என்று வேலை செய்கிறார்கள். ஆனால் தனிப்பட்டவர்களிடம் 15 நாட்களுக்குத்தான் வேலை செய்கிறார்கள். ஒன்று விட்டு ஒரு நாள் வேலை செய்கிறார்கள் ஓவர் டைம் செய்தால் 1½ அல்லது 2 மடங்கு சம்பளம் கொடுக்கிறார்கள். எங்காவது ஆக்ஸிடெண்ட் ஏற்பட்டால், கோர்ட்டில் வழக்கு போட்டால் முதலாளிகளே கோர்ட்டிலே வழக்கு நடத்துகிறார்கள். அபராதம் விதிக்கப்பட்டால் அபராதத்தையும் கட்டுகிறார்கள். ஆனால் அரசாங்க இலாகாவில் ஓடும் வண்டியில் ஆக்ஸிடெண்ட் ஏற்பட்டால் அந்தத் தொழிலாளி தன் சம்பளத்திலிருந்தே அபராதத்தைக் கட்ட வேண்டும். அவர்களும் வேண்டும் என்றே செய்வது கிடையாது. எதிர்பட்டு ஆக்ஸிடென்ட் ஏற்பட்டு வருகிறது. அப்பாவி டிரைவர்கள் அதற்கு ஆளாகிறார்கள்.

நம் அரசாங்கம் சோஷலிசத்தைப்பற்றி மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. தொழிலில் தொழிலாளிகளுக்கு பங்கு வேண்டும், மில்களில் பங்கு வேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். நாம் நடத்தும் இந்த இலாகாவிலே வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு லாபத்திலே ஒரு பங்கு அல்லது அதிக வருமானம் என்றால் அதில் அவர்களுக்கு ஒரு பங்கு என்று செய்யவில்லை. டிரைவர், கண்டக்டர்கள் அதிகமாக லாபத்தை தேடித் தந்தால் அதில் ஓர் அளவு பங்கு அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று இருந்தால் இலாகா நல்ல முறையிலே செயல்பட வழிவகை இருக்கும். வருமானத்திலிருந்து ஓர் அளவு தொழிலாளிகளுக்குப் பங்கு கொடுக்க வேண்டும் என்பதை அரசாங்கம் ஒப்புக் கொண்டால், தனிப்பட்டவர்களும் அதை ஒப்புக் கொள்வார்கள். நாம் சொல்லும் கொள்கையை நாமே கடைப்பிடிக்கவில்லை என்றால் மற்றவர்கள் எப்படி பின்பற்றுவார்கள். இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் சட்டம் இருக்கிறது என்றால், அதை டி. வி. எஸ். அல்லது எஸ்.ஆர்.வி.எஸ். முதலாளிகள் அமல் நடத்த வேண்டும் என்றால், அவர்கள் சர்க்காரில் அமல் நடத்துகிறார்களா என்று பார்ப்பார்கள். ஆகவே லாபத்தில் தொழிலாளிகளுக்குப் பங்கு கொடுக்க வேண்டுமென்றால், அதை அரசாங்கம் முதலில் கடைப் பிடிக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் மற்றவர்களும் நல்லதொரு முடிவு எடுப்பார்கள்.

சென்னை பஸ்களில் வருமானம் குறைவு என்று சொல்லுகிறார்கள். காரணம் என்ன? ஒரு நேரத்தில் தான் இந்த பஸ்களில் போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. காலையிலே மயிலாப்பூர், மாம்பலம் முதலிய இடங்களில் இருந்து பாரீஸ் காரர்னருக்கு அதிகமான பாஸஞ்சர்கள் வருகிறார்கள். அதே போல மாலையில் மாம்பலம் மைலாப்பூர் முதலிய இடங்களிலிருந்து பாரீஸ் கார்னருக்கு வரும் பஸ்கள் காலியாக வருகின்றன. இதனால் தான் லாபம் குறைவாக இருக்கிறது. எந்த ரூட்டுகளில் சர்க்காருக்கு சம்பாத்தியம் குறைவாக இருக்கிறது என்று கருதுகிறார்களோ அப்படிப்பட்ட ரூட்டுகளை சில காலத்திற்குத் தனிப்பட்டவர்களிடம் விட்டு அவர்கள் எப்படிச் செய்கிறார்கள் என்று பார்க்கலாம். அவர்களால் எப்படி எபிஷெண்டாக நடத்த முடிகிறது என்பதை பார்க்கலாம். எக்ஸ்பெரிமெண்டாக ஒரு வருஷத்திற்கு விட்டு அவர்கள் எப்படி நடத்துகிறார்கள், என்ன வருமானம் அடைகிறார்கள் என்பதைப் பார்க்கலாம். அரசாங்க இலாகாவில் செலவழிக்கப்படும் பணம் மக்களுடைய பணம், மக்கள் கொடுக்கும் வரிப்பணத்திலிருந்து செலவு செய்கிறோம். மக்களுடைய பணத்தை பாதுகாக்க வேண்டியது அமைச்சருடைய கடமை, இந்த சபையினுடைய கடமை. அந்த முறையில் இந்த இலாகாவில் லாபம் வருகிறதா என்று பார்க்க, இதை இன்னும் லாபகரமாக இயக்க என்ன வழி வகைகள் என்று கண்டறிய ஒரு கமிட்டியை நிறுவ வேண்டும் என்று கோருகிறோம். தனிப்பட்டவர்கள் அடையும் லாப அளவுக்கு சர்க்கார் இலாகாவிலும்

இருந்தாலும் சரி, அரசாங்கத் துறையாக இருந்தாலும் சரி, ஒரு பஸ் என்றால் எவ்வளவு விலை? ஒரு பஸ் வாங்குவதற்கு நம்முடைய நாட்டு மூலதனம் வெளிநாட்டுக்கு எவ்வளவு செல்கிறது என்றெல்லாம் தெரியாமல் பேசுவது சரியாகாது. எத்தனை லட்சம் ரூபாய் அன்னிய நாட்டுச் செலாவணி நமக்கு வேண்டியிருக்கிறது? இவை எல்லாம் பாரதநாட்டின் பணம் என்கிற சிந்தனை நமக்கு வேண்டும். ஆகவே கனம் அங்கத்தினர் சொன்னதுபோல்—ஒன்றொடொன்று மோதவிட்டு இரண்டும் குட்டிச்சுவராகும்படியான் காரியத்தில் நாம் இறங்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நான் மோதவிடவேண்டும் என்று சொல்லவில்லை. பரிட்சார்த்தமாக—நமக்கு நஷ்டம் வருகிறது என்று சொல்கிற ஒரு ரூட்டில் தனியாருடைய பஸ் ஒன்றை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஓடச் செய்து அதில் லாபம் வந்ததா, வந்தது என்றால் எவ்வளவு, நமக்கு லாபம் வந்ததா, வந்தது என்றால் எவ்வளவு என்று ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் சொன்னேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் அங்கத்தினர் இப்போது என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. சென்ற கூட்டத்தொடரில் அவர்கள் நம் மாநிலத்தில் உள்ள பஸ்கள் எல்லாவற்றையுமே தேசியமாக்கவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசினார்கள். இப்போது தனியார்களுக்குக் கொடுத்துப் பாருங்கள் என்று சொல்கிறார். முன்பு எல்லா பஸ்களையுமே தேசியமாக்கவேண்டுமென்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இன்றைக்கு உங்களுக்கு பஸ் துறையில் நஷ்டம் வருகிறதே, தனியார் துறைக்கு விட்டுவிடுங்கள் என்று சொன்னால்—அவர்களால்தான் இப்படி ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துக்களை ஒன்றோடொன்று மோதவிட முடியும்.

ஆகையால் நான் என்ன சொல்கிறேன் என்றால் சர்க்கார் எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும் சரி அதனால் பொதுமக்களுக்கு அதிக நன்மை இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். தனியார் துறையில் இருந்தபோது பொதுமக்கள் அடைந்த நன்மையைவிட இப்போது அதிகமான நன்மையைப் பொதுமக்கள் பெறுவதற்கு இன்னும் என்ன என்ன வசதிகளை எல்லாம் செய்யவேண்டும் என்று பார்க்கவேண்டும். சர்க்கார் தொழில் நிறுவனங்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு—தனியார்த் துறையில் வேலை செய்த போது கிடைத்த அனுகூலங்களைவிட இப்போது அதிகமான அனுகூலங்கள் கிடைக்கின்றதா என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால், என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும், இப்போது பொதுமக்கள் மட்டும் அதிக வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. தொழிலாளர்களும் கூட அதிகமான வசதிகளைப் பெற்று இருக்கிறார்கள். ஏதோ கத்துக்குட்டிகளை வைத்துக் கொண்டு பஸ்களை ஓட்டுவதாக கனம் திரு. கிருஷ்ணமூர்த்தி வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் எனக்குத் தெரியும் —தனியார் கம்பெனியில் வேலை செய்துகொண்டிருந்த பல நூற்றுக்

கணக்கான டிரைவர்கள் இன்றையதினம் அரசாங்க டிரான்ஸ்போர்ட்டில் சேர விண்ணப்பங்கள் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். விண்ணப்பங்கள் குவிந்து கிடக்கின்றன. காரணம் என்ன? தனியார் துறையில் வேலை செய்வதைவிட அரசாங்கத் துறையில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு அதிக வசதிகள், சலுகைகள் தரப்படுகின்றன என்பதை எல்லோரும் உணர்வார்கள். ஆகவே தான் இன்றைக்கு நான் சொல்ல விரும்புகிறேன், திரும்பவும் நஷ்டமுள்ள ரூட்டுகளை தனியார்களுக்கே விட்டுவிடலாமென்று சொல்லும் யோசனை சரியானதாக இருக்காது. இன்னும் நமக்கு அதிக லாபம் வேண்டும் என்றால் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய வசதிகளைக் குறைக்கலாம். அல்லது பொது மக்களுக்குக் கட்டணத்தை உயர்த்தலாம். இப்படியெல்லாம் செய்தாவது லாபத்தை உயர்த்தவேண்டும் என்பது என்றைக்கும் நம்முடைய கொள்கையாக இருக்கக்கூடாது. பொதுமக்களுக்கு நன்மை ஏற்படும் வகையில், தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படும் வகையில், பொதுமக்களுக்கு கட்டணத்தை உயர்த்தாத முறையில் செம்மையான முறையில் அரசாங்க பஸ்கள் இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது என்றால் இந்த முறைதான் விசேஷமானது.

கனம் அமைச்சர் அவர்களிடத்தில் நம்பிக்கை வைக்கிறேன் என்றால் வைக்கிற நம்பிக்கையை அரைகுறையாக வைப்பானேன்? முழுமையாக வைக்க வேண்டும். மற்ற மாநிலங்களில் நடக்கக் கூடிய பஸ் போக்குவாத்து இலாகா நிர்வாகத்தைவிட நம்முடைய மாநிலத்தில் தான் திறம்பட நடக்கிறது என்று சொன்னால்—அப்புறம் அங்கே ஓட்டை, இங்கே ஓட்டை, இதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி வேண்டும் என்றெல்லாம் சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அதுவும் நான் முன்பே சொன்னதுபோல எஸ்டிமேட் கமிட்டி ஒன்று இருக்கும்போது மீண்டும் சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்வது சரியாக் இராது. அதற்குத் தேவையும் இல்லை. நம்முடைய நேரமும், காலமும் வீணாக விரயமாகத்தான் போகும். ஆகவே அதற்கு அவசியம் இல்லையென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நான் முன்பு சொன்னது போல திராவிட முன்னேற்றக் கழகம் பஸ்களைத் தேசியமாக்கும் கொள்கையில் கொஞ்சம் கூட மாறுபடவில்லை. பரிட்சார்த்தமாக நம்முடைய நன்மையை உத்தேசித்து, நம்முடைய பஸ்களை லாபகரமாக ஓட்டுவதற்கு தனியாருடைய அனுபவத்தைப் பெற முயற்சி செய்து இதை அபிவிருத்தி செய்யலாம் என்றுதான் குறிப்பிட்டேன். தேசியமாக்கும் கொள்கையை இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் விடவில்லை. கனம் அங்கத்தினர் தம்முடைய தவறைத் திருத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தில் கோரி இருக்கிறபடி ஒரு கமிட்டியை அனுமதிக்கவேண்டுமென்பதற்கு ஏன் இவ்வளவு ஆட்சேபனை

இருக்கவேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. எஸ்டிமேட் கமிட்டியினுடைய கடமை வேறு. இதில் யோசனை சொல்லியிருக்கக் கூடிய கமிட்டியின் நோக்கம், கடமை வேறு. எஸ்டிமேட் கமிட்டி நிரந்தரமாக இருக்கவேண்டியது. ஒவ்வொரு ஆண்டிலும் வெவ்வேறு துறைகளை எடுத்துக்கொண்டு விரிவாகப் பரிசீலனை செய்து நிர்வாகத்தில் இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டது. இங்கே கூறி இருப்பது, ஓரளவு சரியான கருத்தை வெளியிட வில்லை என்றாலும் ஒவ்வோர் அரசாங்க நிறுவனத்திற்கும் ஒவ்வொரு கண்காணிப்பு கமிட்டி இருக்கவேண்டுமென்ற கொள்கை பார்லிமெண்டில் கூட வற்புறுத்தப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டு கமிட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன—அதே போல இங்கும் சர்க்காருடைய பஸ் நிறுவன கண்காணிப்புக்காக ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டும் என்பதில் ஆட்சேபனை இருப்பதற்கு இடமில்லை. இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு அத்தகைய ஒரு கமிட்டியை அமைப்பது மிகவும் உபயோகமாகத்தான் இருக்கும் என்று நான் நம்புகிறேன். அரசாங்க பஸ் நிறுவனத்தை நாம் குறை கூறுகிறபோது ஒரு விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்பது என்னுடைய நோக்கம். நாம் குறை சொல்வது எல்லாம் தனியார் துறைக்குப் பாராட்டு தெரிவிப்பதற்கு அல்ல. தனியார் துறையில் இருந்தால் இது இன்னும் திறமையாக இருக்கும் என்று சொல்வதற்காக அல்ல. இதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து இந்த நிறுவனம் ஜனங்களுக்குத் திறம்பட சேவை செய்யவேண்டும் என்பதுதான் என் சம்பந்தப்பட்ட மட்டில் நான் கொண்டுள்ள குறிக்கோள். இந்த அடிப்படையிலேயே இந்த நிறுவனத்திலுள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். இப்போது குறிப்பாக சென்னை நகரத்தில், அரசாங்கம் நடத்துகின்ற பஸ் நிறுவனத்தைக் குறை கூறுகிறபோது இதைத் தனியார் துறைக்கு மாற்றிவிடவேண்டுமென்ற நோக்கம் இல்லை. இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்களுக்கும் அது நோக்கமாக இருக்க முடியாது. அத்தகைய நோக்கம் தங்களுக்கு இல்லை என்பதை அந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தவரும் சரி, ஆதரித்தவர்களும் சரி, சொல்லிவிட்டார்கள். அந்த நிறுவனத்திலுள்ள குறைபாடுகளைக் களைய வேண்டுமென்ற ஆர்வத்தில் தவறான கருத்து தோன்றும்படி ஏதாவது சொல்லி இருக்கலாம். அவ்வளவுதான். சர்க்கார் பஸ் நிறுவனம் சம்பந்தப்பட்ட வரையில் பொதுமக்களுக்கு வசதி அதிகரிக்கவேண்டும். கட்டணம் குறைவாக இருக்கவேண்டும். அந்த நிறுவனத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் அதிகமாக இருக்கவேண்டும். போனஸ் வசதிகள் இருக்கவேண்டும். வேலை நேரம், விடுமுறை ஆகியவற்றிலும் அதிக வசதி இருக்க வேண்டும்.

நகரத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அரசாங்கம் போக்கு
1-30 a.m. வரத்தை நடத்துவதால் இருக்கக்கூடிய கஷ்டம் அல்ல அது என்பதை மனதில் கொள்ளவேண்டும். தனியார் நடத்தினால் கூட இந்தக் கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். அரசாங்கம் நடத்து

வதால் சில ரூட்கள் லாபமா, நஷ்டமா என்பதைப் பார்க்காமலே மக்களுடைய வசதியை முன்னிட்டு பஸ்களை விட்டு வருகிறார்கள். அரசாங்கம் நடத்துவதால்தான் திறமையாக நடத்த முடியவில்லை, லாபம் அதிகமாகக் கிடைக்கவில்லை, ஊழல் இருக்கிறது என்ற தவறான எண்ணத்தைப் பரப்புவது மிகவும் ஆபத்தானது. அப்பேர்ப்பட்ட எண்ணத்துடன் சில பத்திரிகைகள் திட்டமிட்டே பிரசாரம் செய்து வருகின்றன. அந்த முறையில் தலையங்கம் எழுதுகிறார்கள், 'ஆசிரியர்களுக்குக் கடிதங்கள்' பகுதியில் அந்த மாதிரிக் கடிதங்களைப் பிரசுரிக்கிறார்கள். இங்கு விவாதம் நடந்தது அந்த மாதிரி அபிப்பிராயத்துடன் அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரை, ஒரு அடிப்படைப் பிரச்னை இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சென்னை நகரத்தைப் பொறுத்த வரை இன்றைக்கு இருப்பது போல் இரண்டு பங்கு பஸ்களை விட்டால் கூட மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா என்பதை யோசிக்க வேண்டும். சென்னையைப் பொறுத்தவரையில் சாலைகளில் மிகுந்த சங்கடங்கள் இருக்கின்றன. சாலையை அபிவிருத்தி செய்யாமல் துரிதப் போக்குவரத்தை நடத்த முடியாது. 'மொபஸல்' பஸ் ஒரு நாளைக்குச் சராசரி 250 மைல் போகிறது என்றால் சென்னையில் அவ்வளவு மைல் போக முடியாது. இங்கு பஸ் ஸ்பீட் எடுத்துப் புறப்பட்ட இரண்டு நிமிஷங்களுக்குள் குறுகலான சாலைகளின் காரணமாக வேகத்தைக் குறைக்கவேண்டியிருக்கிறது ; நடுவில் எத்தனையோ ஸ்டாப்புகளில் நிற்கவேண்டியிருக்கிறது. ஆகவே, சென்னை நகரில் குறுகலான சாலைகளில் பஸ்களை விட வேண்டியிருப்பதால் சாலை அபிவிருத்தியைச் செய்யாமல் பஸ்களின் எண்ணிக்கையை மட்டும் அதிகப்படுத்திப் போக்குவரத்தைத் துரிதப்படுத்த முடியாது என்பதை உணர்ந்து இந்தப் பிரச்னையிலே அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து இலாகாவிலே தொழிலாளர்கள் அனாவசியமான கஷ்டத்துக்கு உள்ளாகிறார்கள். கண்டக்டர்களுக்குக் கெட்ட பெயர் ஏற்படவேண்டுமென்ற நோக்கத்தோடே சில சந்தர்ப்பங்களில் காரியங்கள் நடந்துவிடுகின்றன. பொதுமக்களும், தொழிலாளர்களுடன் நல்ல முறையில் ஒத்துழைத்தால்தான் நல்ல நிலைமை ஏற்பட முடியும். தொழிலாளர்களும் சேவை செய்கிறோம் என்ற மனப்பான்மையில் பணி புரிய வேண்டும். மந்திரி நல்ல அறிவாளியாக, திறமையுடையவராக மட்டும் இருந்தால் நல்ல முறையில் நடத்தி விட முடியாது. உபயோகப்படுத்தும் பொதுமக்களுக்கும் பொதுச் சொத்து என்ற எண்ணம் இருக்கவேண்டும்; பணி புரியும் தொழிலாளர்களுக்கும் பொதுச் சொத்தில் அக்கறை இருக்கவேண்டும். பொதுமக்கள் அரசாங்கத்தின்மீது இருக்கும் ஆத்திரத்தைக் கண்டக்டர் மேல் காட்டி விடுகிறார்கள் மந்திரி

மேல் இருக்கும் கோபத்தைக் கண்டக்டர் மேலும், அதிகாரிகள் மேலும் காட்டி என்ன பயன்? கண்டக்டர்களும் பொதுமக்களுடன் பழகும்போது பண்புடனும், மரியாதையுடனும் பழகவேண்டும் என்பதை அவசியம் வலியுறுத்த வேண்டும். அதற்காக அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. டிரைவர்கள், கண்டக்டர்கள் ஆகியவர்களுக்குப் பயிற்சி கொடுக்க ஆறு மாத கோர்ஸ் ஆரம்பித்தால் கூட பரவாயில்லை. மெகானிகல் இலாகா சம்பந்தப்பட்டு மட்டுமல்லாது, பண்போடு ஜனங்களிடத்தில் எப்படிப் பழகுவது, விபத்துக்கள் ஏற்பட்டால், பிரேக்டவுன் ஏற்பட்டால் எப்படி நடந்து கொள்வது என்பது எல்லாவற்றுக்கும் பயிற்சி கொடுக்கவேண்டும். நம்முடைய சோஷலிச லட்சியம், திட்டங்கள் ஆகியவை பற்றியும் அவர்கள் உணரச் செய்ய வேண்டும். தாங்கள் வெறும் கூலிப்பட்டாளம் அல்ல, சேவா உணர்ச்சியுடன் பணி புரிகிறோம் என்ற உணர்வை அவர்களுக்கு ஊட்டவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எம். எஸ். மணி:** கனம் சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சிச் செயலாளர் மதியழகன் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று அரசாங்கத்தால் சென்னை நகரில் நடத்தப்படுகிற போக்குவரத்துத் துறைக்கு மூலதனமாக சுமார் 7 கோடி ரூபாய் போட்டிருக்கிறார்கள் அதிலிருந்து 1963-ம் ஆண்டில் நமக்கும் கிடைத்த லாபம் 11 லட்சம் என்று சொல்லப்படுகிறது. அதற்கு முந்திய ஆண்டுகளில் 500 பஸ்களை நடத்திக் கொண்டிருந்தபோது 28 லட்சம் ரூபாய்க்குக் கூடுதலாகவே லாபம் பெற்றோம். இன்றைய தினம் அந்த லாபம் குறைவதற்குக் காரணம் என்ன? நிர்வாகத்திலே என்ன ஊழல் ஏற்பட்டிருக்கிறது? அவர்களுக்கு என்ன சிரமம் ஏற்பட்டிருக்கிறது? இது பற்றியெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் ஒரு கமிட்டியை அமைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை கொண்டுவந்திருக்கிறார்கள்.

இன்றைய தினம் ரயில்வே நிர்வாகத்தை மத்திய சர்க்கார் நடத்துகிறது. ரயில்வே நிர்வாகம் செம்மையாக நடைபெறவேண்டுமென்பதற்காகவும், அதிலே பலர் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்பவர்களைத் தடுப்பது பற்றி ஆலோசிக்கவும், அடிக்கடி ரயில் விபத்து ஏற்படாமல் இருக்கவேண்டுமென்பது பற்றி யோசிக்கவும் இன்றைய தினம் மத்திய சர்க்கார் ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறார்கள். பல அங்கத்தினர்களுடைய யோசனையை ரயில்வே நிர்வாகம் கேட்கிறது. அவ்வாறு கேட்டு சீர்திருத்திக் கொள்ள ரயில்வே நிர்வாகம் முயலுகிறது. அவ்வாறு சீர்திருத்திக் கொள்வதன் காரணமாக ரயில்வே இலாகாவிலே நல்ல லாபம் கிடைக்கிறது. அதைப் போலவே இன்றையதினம் கூட்டுறவு ஸ்தாபனங்களிலே தனியாக அதிகாரிகள் இருந்தாலும் கூட, அங்கே ஒரு

கமிட்டி செயல்படுகிறது. தனிப்பட்ட அதிகாரிகள் தவறு செய்யாமல் பார்த்துக் கொள்ள கமிட்டியும், கமிட்டி தவறு செய்யாமல் பார்த்துக் கொள்ள அதிகாரியும் என்ற நிலைமையில் இன்றைய தினம் கூட்டுறவு முறையிலே கமிட்டி செயல்பட்டு வருகிறது. போலீஸ் இலாகாவை எடுத்துக் கொண்டாலும் 'உஷார்' கமிட்டி என்ற ஒரு கமிட்டி ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இருக்கிறது. அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற 10 பேர்கள் அதிலே இடம் பெறுகிறார்கள். எங்கே திருட்டு நடக்கிறது, எங்கே கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள் போன்ற விவரங்களைக் கொடுத்து போலீசாருக்குத் துணையாக அந்தக் கமிட்டி இருக்கிறது. இந்த முறையில் லாபம் பெற, நன்மை பெற கமிட்டிகளை அமைக்கிறோம். அதே போன்றே சட்ட மன்றத்திலும் பல குழுக்களை அமைத்துக் காரியங்களைச் செய்து வருகிறோம்.

பஸ் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கவேண்டுமென்று சொல்வதன் நோக்கம், ஒன்று பொதுமக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்; இரண்டாவது தனியாருக்குக் கிடைக்கக் கூடிய அளவுக்கு லாபம் அரசாங்கத்துக்குக் கிடைத்தால் அதைக் கொண்டு மேலும் பல தொழில்களை ஆரம்பித்து மக்களுக்கு வசதிகளைச் செய்யலாம் என்பதற்காகத்தான். ஏழு கோடி ரூபாய் மூலதனம் போட்டு வருமானம் இல்லாமல் இருக்க வேண்டுமென்பதற்காக தேசியமயமாக்கவேண்டுமென்று சொல்லவில்லை. தேசிய மயமாக்கியிருக்கும் பஸ் போக்குவரத்துத் துறையிலே உள்ள குறைகள் என்னென்ன, அதை எப்படிப் போக்குவது, லாபத்தை எவ்வாறு அதிகரிப்பது போன்ற விஷயங்களில் ஆலோசனை கூறவேண்டுமென்ற வகையிலேதான் ஒரு கமிட்டி அமைக்கவேண்டுமென்ற இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. ஏற்கனவே இருந்த அட்வைசரி கமிட்டியையும் கலைத்திருக்கிறார்கள். ஆகவே, இப்போது ஒரு கமிட்டியைப் போட்டால் நல்ல முறையில் செயல்பட முடியும் என்று கூற விரும்புகிறேன்.

தற்போது அரசாங்க பஸ்களைப் பொறுத்தவரை விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. மக்கள் தொகைப் பெருக்கம் விபத்துக்குக் காரணமாகக் கூறப்பட்டாலும் விபத்துக்களைக் குறைக்க நாம் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு ஒரு கமிட்டி இருந்தால் டைரக்டருக்கும், தொழில் அமைச்சர் அவர்களுக்கும் வசதியாக இருக்கும்.

பொதுவாக, போக்குவரத்துத் துறையிலே உள்ள தொழிலாளர்களுக்குப் பல குறைபாடுகள் இருக்கின்றன. திருச்சியிலிருந்து நான் 16-ம் தேதியன்று அரசாங்க பஸ்ஸில் வந்தேன். அந்த பஸ்ஸை ஓட்டிவந்த டிரைவரின் சிரமத்தைச் சொல்ல விரும்புகிறேன். அந்த பஸ்ஸிலே ஹாரன் அடிக்கவில்லை. பஸ்ஸிலே உட்கார்ந்திருந்தவர்கள் சர்க்கார் பஸ்ஸைப் பற்றிக் குறை கூறிக் கொண்டிருந்தார்கள். நான் எதிர்க்கட்சியைச் சார்ந்தவனாயினும் அவர்களுக்குப் பதில் சொல்லுகிற வகையில் அன்று மழை பெய்து

கொண்டிருந்தபடியால், மழைத் தண்ணீர் ஹாரனில் தங்கியிருப்பதன் காரணமாக ஹாரன் அடிக்காமல் இருக்கிறது என்று சொன்னேன். அதைப் பற்றி அந்த டிரைவரை விசாரித்தபோது, 'நான்கு நாட்களாக ஹாரன் அடிக்கவில்லை; அது பற்றி ரிப்போர்ட் கொடுக்கப்பட்டும் இதுவரை சரி செய்யப்படவில்லை, என்று பதில் சொன்னார். இதைப் பற்றி நான் டைரக்டருக்குக் கடிதம் எழுதினால் அந்தத் தொழிலாளியின் வேலை போய்விடும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, ஒரு கமிட்டி இருந்தால் இதையெல்லாம் உடனடியாக நிவர்த்திக்க முடியும். முதல் முதலாக அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்ஸை வெள்ளோட்டம் விடும்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏறி உட்கார்ந்து பார்த்தார்கள். நாங்களும் பார்த்தோம். அமெரிக்காவில் பார்த்து விட்டு வந்து அந்த முறையில் இங்கும் ஏற்படுத்தியிருப்பது நல்ல முறையில் இருக்கிறது என்று பாராட்டினோம். இன்றையதினம் எக்ஸ்பிரஸ் பஸ்களை எடுத்துக் கொண்டால், அவற்றில் பலவும் பிரேக்டௌன்-ஆகி இருப்பதைப் பார்த்து நான் உண்மையிலேயே வேதனைப்படுகிறேன். காரணம், மெயின்டனன்ஸ் சரியாக இல்லை என்பது தெரியவருகிறது. கண்டக்டர்களோ அல்லது டிரைவர்களோ இருக்கின்ற தவறுகளை ரிப்போர்ட் செய்கிறார்கள். அதன்படி உடனடியாக ரிப்பேர் செய்து விட்டால் பஸ்கள் குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியும். ஆனால் இன்றையதினம் நிலைமை அப்படியில்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இதில் வேலை செய்கின்ற தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், எட்டு மணி நேர வேலை என்று எல்லோரும் சொல்லிக்கொள்கிறோம். சாதாரணமாக எக்ஸ்பிரஸ் பஸ்ஸிலுள்ள தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் பத்து மணி நேரம் வரை வேலை செய்கிறார்கள் சாப்பாட்டுக்காக அரை மணி நேரம் ஒதுக்குகிறார்கள் என்று சொன்னால் அதையும் வேலையில் சேர்த்துக்கொள்வதில்லை. தனியார் துறையை எடுத்துக்கொண்டால் ஒரு பஸ்ஸை எடுத்த நேரத்திலிருந்து திரும்பவும் பஸ்ஸை ஷெட்டில் விடுவது வரையிலும் சாப்பாட்டிற்கு கொடுக்கின்ற நேரத்தையும் சேர்த்துத்தான் எட்டுமணி நேரம் என்று கணக்கிடுகிறார்கள். அதற்கு மேல் வேலை செய்திருந்தால் ஓவர் டைம் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டை எடுத்துக்கொண்டால் இந்த நிலைமை இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்த இலாகாவில் ஏராளமாக செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். ஒரே வண்டியில் மூன்று பேர்கள் வருகிறார்கள். மூன்று இன்ஸ்பெக்டர்களும் செக் செய்து விட்டு வேறு வேலையில்லாததின் காரணமாக வண்டியில் உட்கார்ந்து கொண்டு சும்மா அரட்டையடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளைப்பற்றிக் கேவலமாகவும் பேசுகிறார்கள். இவற்றையெல்லாம் கேட்பதற்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. சாதாரணமாக பத்து வண்டிகள் ஓடினால் ஒரு செக்கிங் இன்ஸ்பெக்டர் இருப்பார். ஆனால் ஒரே வண்டியில் மூன்று இன்ஸ்பெக்டர்கள். இருக்க வேண்டிய தேவையில்லை. திருச்சி எக்ஸ்பிரஸ் வண்டியை எடுத்துக் கொண்டாலும்

வேறுள்ள எக்ஸ்பிரஸ் வண்டிகளை எடுத்துக்கொண்டாலும், திருச்சியிலேயே பெரும்பாலான டிக்கட்டுகளை ரிசர்வ் செய்து விடுகிறார்கள். வழியில் ஒன்றோ இரண்டோ டிக்கட்டுகளைத்தான் கண்டக்டர்கள் கொடுக்கிறார்கள். இதை செக் செய்வதற்கு மூன்று பேர்கள் எதற்காக வண்டியில் ஏற வேண்டும் என்று தெரியவில்லை. இதைப் பற்றி இன்னும் சொல்லவேண்டுமானால் நான் கோயம்புத்தூரிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ் மூலமாக வரும்போது கரூர் வரையிலும் ஒரு செக்கிங் இன்ஸ்பெக்டர் சரியான முறையில் செக் செய்ய முடியவில்லை. காரணம், அனுபவம் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலைமையில் முன்னூருக்கும் அதிகமான இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இங்கு சென்னையில் கண்டக்டர்கள் முக்கியமான நேரத்தில் கீழேயிருந்து டிக்கட் கொடுக்கிறார்கள். சில நேரங்களில் வண்டிகளிலும் டிக்கட் கொடுக்கிறார்கள். இப்போதுள்ள முறைப்படி 7 ந.பை., 13 ந.பை. என்றெல்லாம் டிக்கட்டுகள் இருப்பதால் சில்லறைத் தகராறுகள் வருகின்றன. இதன் காரணமாகக் காலதாமதம் ஆகிறது. ஆகவே, ஐந்து ந.பை., பத்து ந.பை என்ற அளவில் டிக்கட்டுகளை வைத்துவிட்டால் இந்தத் தகராறுகளைத் தீர்க்க முடியும், அதே நேரத்தில் கண்டக்டர்கள் சுலபமாக வேலை செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரிப்பட்ட குறைகளை எல்லாம் இதற்கென்று ஒரு கமிட்டியிருந்தால் தான், அதன் மூலமாக எடுத்துச் சொல்லி இந்த இலாகா திறம்பட நடைபெறுவதற்கு உதவி செய்ய முடியும். இக்கமிட்டி மூலம் இம்மாதிரிப்பட்ட பல குறைகளை நிவர்த்திக்கலாம், அதன் மூலம் இந்தத் துறையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களும் திருப்தியுடன் வேலை செய்வார்கள்.

அதோடு, இந்தத் துறையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு இந்த பஸ் நம்முடைய பஸ், நம்முடைய அரசாங்கத்தின் பஸ் என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும். அந்த எண்ணம் உள்ளபடியே இன்று தொழிலாளர்களிடத்தில் இல்லை என்பதை நாம் காணமுடிகிறது. காரணம், தனியார் துறையில் நடத்துகின்ற பஸ் போக்குவரத்தை எடுத்துக் கொண்டால் அவர்களுக்குப் பல சலுகைகள் கிடைக்கின்றன என்ற எண்ணம் வந்துவிடுகிறது. அரசாங்கத் துறையிலுள்ள பஸ் போக்குவரத்தை எடுத்துக்கொண்டால் தனியார்களுக்குக் கிடைக்கின்ற வருமானத்தை விடக் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. அதோடு இதில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற கஷ்டங்களை எடுத்துக் கொண்டால் பத்து, பதினைந்து வருடங்கள் வேலை செய்துவிட்டு ஒரு நாள் தங்களுடைய கணக்கில் 10 ந.பை. குறைந்துபோய்விட்டது என்றால் அதில் ஏதோ குற்றம் கண்டு பிடித்து டிஸ்மிஸ் செய்துவிடுகிறார்கள். 150 ரூபாய், 200 ரூபாய் தினசரி வசூல் செய்து விட்டுக் கணக்குக் கொடுக்கும்போது ஏதாவது

சம்பாதிக்கிறது வருகிறது என்று மக்களிடம் சொன்னால் தான் மக்கள் திருப்தியடைவார்கள். நேற்றைக்கு முன்தினம்கூட நான் பத்திரிகையில் பார்த்தேன். விமான விஷயமாக அறுபத்தாறு, அறுபத்தேழு லட்சம் ரூபாய் ஜே. ஆர். டி. டாடா அவர்கள் அளித்ததாகப் பத்திரிகையில் படம் கூடப்போட்டு பிரசுரமாகி இருந்தது. அப்படி அவர்களுக்கு எல்லாம் அதிகமான லாபம் வரக்கூடிய நிலையில் அரசாங்கம் நடத்துகிற பஸ் நிறுவனத்தில் லாபம் போதுமானதாக வரவில்லையென்று சொன்னால் மக்களுக்கு அரசாங்கத்தின்பேரில் இருக்கிற நம்பிக்கை, அரசாங்கம் நடத்து கின்ற தொழில் இலாகாவின் பேரில் இருக்கிற நம்பிக்கை, அரசாங்கம் நடத்துகிற தொழில்களின் பேரில் இருக்கிற நம்பிக்கைதான் அடியோடு குலைய நேரிடும். சோஷலிஸக் கொள்கையை எதிர்க் கின்ற சுதந்திராக் கட்சி உறுப்பினர்களுக்கு—அரசாங்கம் எந்தத் தொழிலை ஏற்று நடத்தினாலும் இப்படித்தான் இருக்கும் என்று குறைபாடுகளை எடுத்துச் சுட்டி—சோஷலிஸக் கொள்கையையே தாக்க சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே தான் நான் சொல்கிறேன். இவ்விலாகாவில் இருக்கிற சிறுசிறு குறைகளை எல்லாம் நீக்கு வதற்கு நாங்கள் சொல்வது போல பத்து அல்லது ஐந்து பேர்களை —இந்த மாமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களில் இருந்தே பொறுக்கி ஒரு கமிட்டியை அமைத்தால் அந்தக் கமிட்டி இவ் விஷயத்தை நன்றாக ஆராய்ந்து பார்க்க சந்தர்ப்பம் ஏற்படும். எந்த எந்த முறையில் இவ்விலாகாவைச் சீர்படுத்தி அமைக்கலாம், ஸ்பேர் பார்ட்ஸ்கள் வாங்குவதில் ஊழல் இல்லாமல் இருக்கிறதா, வாங்குகிற ஸ்பார் பார்ட்சுகள் எல்லாம் ஒழுங்காக மாற்றி அமைக்கப்படுகிறதா, ஸ்பேர் பார்ட்ஸ்கள் வாங்கினதாகக் கணக்கை எழுதிவிட்டு, பழைய சாமான்களே மாட்டப்படாமல் இருக்கிறதா, வாங்கிய புது சாமான்கள் சரியான முறையில் பாதுகாக்கப் படுகிறதா, மொத்த வசூல் சரியானதாக இருக்கிறதா, வசூலான பணம் கஜானாவுக்குப் போய்ச் சேருகிறதா என்றெல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும். நாங்கள் இப்போது அதைப்பற்றி விவரங்களைத் தனித்தனியாகச் சேகரித்து வருகிறோம். சென்னையில் இருந்து நாகப்பட்டினத்திற்கு ஒரு பஸ் போகிறது என்றால் போகும்போது என்ன வசூல், வரும்போது என்ன வசூல் மொத்தமாக 750 ரூபாய் கிடைக்கிறது என்றால் ஆகும் செலவு என்ன, சேதாரம் என்ன என்றெல்லாம் ஆராய்ந்து கேட்டுத் தெரிந்துகொள்கிறோம் என்றாலும் ஒரு கமிட்டியை இதற் கென்றே நிறுவி ஆராய்ந்து, ஓட்டை ஒடிசல்களை, குறைபாடுகளை நீக்க அரசாங்கம் முன்வந்தால் சென்னை அரசாங்க பஸ் நிறுவனம் சிறந்ததொரு ஸ்தாபனமாக வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படும். லாபம் இல்லாத ஷார்ட் ரூட்டுகளை வேண்டுமானால் தனியார்களுக்கே விட்டுவிட்டு நீண்டதூர பஸ்களை அரசாங்கம் விடுவதற்கு பரிசீலனை செய்யலாம். அரசாங்கத்தின் பணம் பொதுமக்களுடைய பணமாத லால் இந்தப் பணம் சரியானமுறையில் செலவிட நாம் வழிவகை எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே தான் நால் வர் அல்லது ஐவர் அல்லது பதின்மர் கொண்ட ஒரு கமிட்டியை

அமைக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதைக்கொண்டுவந்ததனாலே கனம் அமைச்ச ரிடத்தில் நம்பிக்கை இல்லையென்று அர்த்தமாகாது. அவர்கள் நம் மாநிலத்தில் தொழில்கள் வளரவேண்டும் என்பதற்காக எடுத்துக் கொள்கிற முயற்சிகளைப் பாராட்டுகிறோம். இருந்தாலும் அவர்க ளோடு நாங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும், அரசாங்கம் எடுத் துக்கொள்கிற தொழில் நிறுவனங்கள் செம்மையாகத்தான் நடை பெற வேண்டும் என்கிற நோக்கத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர இந்த இலாகா வையே அழித்துவிடவேண்டுமென்பது நோக்கம் அல்ல. அரசாங்கம் பஸ்களை எடுத்துக்கொண்ட கொள்கையைக் கைவிடச் செய்யவேண்டுமென்பதற்காகவும் அல்ல என்பதை நான் தெரிவித் துக்கொள்கிறேன். மேலும் மேலும் இந்த அரசாங்கத்தின் கொள்கைகள் சோஷலிஸப் பாதையில் செல்லவேண்டுமென்றால் எடுத்துக்கொண்ட தொழில்கள் நல்லமுறையில் லாபகரமானதாக நடைபெறச்செய்யவேண்டுமென்ற அடிப்படையில் கொண்டுவரப் பட்டுள்ள தீர்மானத்தை வழிமொழிந்து, திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கொடுத்த திருத்தத்தை ஆதரித்து என் பேச்சினை இத்தோடு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் உப-சபாநாயகர் அவர்களே, எதிர்க் கட்சி அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த தீர்மானமானது அவசியம் அற்றது என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு சர்க்கார் நடத்துகிற பஸ் போக்குவரத்தைப் பொறுத்த வரையில் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் பேசியதெல்லாம் சென்னை நகரத்தைப் பற்றிய விஷயமாகவேதான் இருந்தது. சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் மனதில் வைத்து அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அவருடைய 'தீர்மானத்தில், 'இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய பஸ்கள் எல்லாம்' என்று இருக்கிறது. அவர் சொன்னது சென்னை நகரத்தைப் பற்றித்தான் மாவட்டங் களைப் பற்றி அவருக்கு அக்கறை இல்லை, அவர் சென்னை நகர வாசியானதால் மாவட்டங்களைப்பற்றிக் கொஞ்சங்கூட அக்கறை இல்லாமல் பேசுகிறார் என்று தான் நினைக்க வேண்டி இருக்கிறது. பஸ்களுடைய நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் அது எவ்வாறு நடைபெறுகிறது, அதில் உள்ள குறைபாடுகள் என்ன என்பதை யெல்லாம் சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்திப் பரிசீலனை செய்யவேண்டும். பரிசீலனை செய்து அது பற்றிய விவரங்களை அந்தக் கமிட்டி இந்தச் சபையில் சமர்ப்பிக்க வேண்டும், அல்லது சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் சொல்லும்போது வெளியில் இருப்பவர் களுக்கு அது நியாயம்தான் என்றுகூடப்படும். அவர்கள் என்ன ஒரு கமிட்டியைத் தானே போடச் சொல்கிறார்கள், அதை ஏன் சர்க்கார் வேண்டாம் என்று சொல்லுகிறது, வேண்டாமென்று சொல்வதினாலே அதில் ஏதோ ஓட்டை உடைசல் இருக்கும்போல்

பல தொழில்களிலும் ஈடுபட முடியும். இதற்கெல்லாம் மூல காரண மாக இதில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குத் தனியார் துறையில் கொடுப்பது போன்ற பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், சில பஸ்கள் லாபம் இல்லாமலே ஓடுகின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் பட்ஜெட் கூட்டத்தில் சொல்லியிருக் கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை போன்ற பகுதிகளை எடுத்துக்கொண்டால் அங்கு நடைபெறும் டௌன் பஸ் போக்கு வரத்தை எடுத்துக்கொண்டால் நாள் ஒன்றுக்கு 175 ரூபாய் முதல் 200 ரூபாய்வரை கிடைக்கிறது. இதில் மெயின்டனென்ஸ், கண்டக்டர்கள், டிரைவர்கள் இவர்களது சம்பளம் மற்றுமுள்ள இதர செலவுகள் இவைகளுக்கெல்லாம் 125 ரூபாய் ஆகலாம். அதற்கு மேல் காலணா செலவாகாது. இதன் படி எடுத்துக்கொண்டாலும் நாள் ஒன்றுக்கு 75 ரூபாய் கிடைக் கிறது. ஆங்கேயே இந்த நிலைமை என்றால், சென்னையை எடுத்துக் கொண்டால், 50 பேர்கள் 60 பேர்கள் ஏறக்கூடிய பஸ்களில் 80 பேர்கள், 90 பேர்கள் ஏறுகிறார்கள். அப்படியானால் நஷ்டமேற் படுவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? முக்கியமாக வண்டிகள் நான்கு மணி நேரம், மூன்று மணி நேரம் சும்மா நிற்கிறது. அவ்விதம் சும்மா நிற்காமல் இருக்க அமைச்சர் அவர் கள் கவனம் செலுத்த வேண்டும். இதற்கான உதவிகளை கனம் அமைச்சர் அவர்களும், டைரக்டர் அவர்களும் செய்து கொடுப்ப தற்கும், இதற்கான பல யோசனைகளைக் கூறுவதற்கும் இங்கே ஒரு குழு இருந்தால் நல்லது, அப்படிப்பட்ட ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும் என்று தான் இந்த தீர்மானம் கோருகிறது. இங்கே பெரிய பஸ் கம்பெனிகளை நடத்துகிறவர்கள் இருக்கிறார் கள். பஸ் தொழிலாளர்களுடைய குறைகளைக் கேட்டுச் சொல்லக் கூடிய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் கமிட்டி யில் நியமித்து தக்க ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே இப்பேர்ப்பட்ட ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும் என்று கேட்டு எங்களுடைய கட்சி செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்னை ராஜ்ய போக்குவரத்து இலாகா சம்பந்தமாக இது இரண்டாவது விவாதம். முதலாவது விவாதம் பட்ஜெட்டிலே நடந்தது. இரண்டாவது விவாதம் அதே முறையிலே இப்போது நடக்கிறது. பட்ஜெட் விவாதத்திலே என்ன சொன்னார்களோ அதைத்தான் இப்போது திருப்பிச் சொன்னார்கள். பட்ஜெட்டிலே நான் என்ன சொன்னேனோ அதைச் சொல்லியே, திரும்பவும் அதே பழைய பல்லவியைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக் கிறது. சட்ட சபையில் விவாதம் என்று சொன்னால் நான் சொன்ன வாதங்களில் இருக்கிற குறைபாடுகளை, அதில் தவறுகள்

என்ன இருக்கின்றன என்று எடுத்துக்காட்டி ஓரிரண்டு எடுத்துச் சொன்னால் கூட நல்ல முறையில் நாங்கள் நிர்வாகத்தை நடத்த உதவியாக இருக்கும். மேற்கொண்டு சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதன் மூலமாக, அத்தகைய விவாதத்தின் மூலமாக பயன் கிடைப்பதில்லை.

இப்போது என்ன கூறப்பட்டது? பட்ஜெட் விவாதத்தின்போது சொன்னதே தான் திரும்பச் சொல்லப்பட்டது. குறைபாடு என்ன? 'இந்த இலாகா நஷ்டத்தில் ஓடுகிறது, லாபம் அதிகமாக சம்பாதிக்கவில்லை' என்று சொல்லப்பட்டது. இதற்கு நான் பட்ஜெட் விவாதத்தின்போது கணக்குக் கொடுத்தேன். இந்த இலாகாவின் காப்பிட்டல் சார்ஜ் 7 கோடி ரூபாய் அல்ல; 4 கோடி யே 98 லட்சம் ரூபாய் தான்—5 கோடி ரூபாய் என்று வைத்துக் கொள்ளலாம். லாபம் இது வரையிலும் சம்பாதித்து 1 கோடியே 72 லட்சம் ரூபாய், சென்னை ராஜ்ய சர்க்காருக்கு அதனுடைய நிதிக்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம். வட்டி கொடுத்தது போக, லாபமாக 1 கோடியே 72 லட்சம் ரூபாய் நாம் ராஜ்ய சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறோம். அதைத் தவிர இன்றைக்கு நம்மிடத்தில் 820 பஸ்கள் இருக்கின்றன. அந்த 820 பஸ்களின் மதிப்பு ஏறக் குறைய 3 கோடி ரூபாய்—டெப்ரிஸியேஷன் போட்டு. அதை 2½ கோடி ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் சரி. எங்களிடத் தில் இருக்கிற நிதிகளைப் பார்த்தால் டெப்ரிஸியேஷன் ரிஸர்வ் 2 கோடியே 32 லட்சம் ரூபாய், டெவலப்மெண்ட் ஃபண்ட் 16 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய், பாஸஞ்சர் அமினிட்டீஸ் ஃபண்ட் 2 லட்சம் ரூபாய், ஹவுஸிங் ஃபண்ட் 2 லட்சம் ரூபாய், ஆக இந்தத் துறையிலேயே நாம் 2 கோடியே 54 லட்சம் ரூபாய் வைத்திருக் கிறோம். ஆக, இதைப் பார்த்து, 5 கோடி ரூபாய் மூலதனத்தில், 1¾ கோடி ரூபாய் சர்க்காருக்கு நிதி கொடுத்து, 5¼ சதவிகிதம் வீதம் இன்டரெஸ்ட் கொடுத்து, இவ்வளவு நிதிகள் வைத்திருக் கிறோம் என்று சொல்லும்போது இந்த நிறுவனம் லாபமாக ஓட வில்லை என்று யாரும் சொல்ல முடியாது. தனியாருடன் ஒப்பிட் டுப் பார்க்கும்போது என்ன சொல்லுகிறார்கள் என்றால், நிகர வருமானம் என்று கொடுக்கிறோமே அதை எடுத்துக்கொள்கிறார் கள். நான் முன்பு சொன்ன மாதிரி பல நிதிகள் போட்டிருக் கிறோம்; தனியார்கள் அம்மாதிரி நிதிகளைப் போடுவதில்லை. எந்தத் தனியார் டெவலப்மெண்ட் ஃபண்ட் வைத்திருக்கிறார்? எந்தத் தனியார் நாங்கள் போட்டிருப்பது போல 5 வருஷத்தில் 'ஸ்ட்ரைட் லைன் டெப்ரிசியேஷன்' முறையில் முதல் பூராவையும் டெப்ரி ஸியேட் செய்து விடுகிறார்? இன்கம்-டாக்ஸ் விதிகள் பிரகாரம் 7 வருஷங்களுக்குப் பிறகு கூட மதிப்பு இருக்கும். டெப்ரிஸியேஷன் ஃபண்ட் குறைவாக இருக்கும். எங்கள் கணக்குப் பிரகாரம், ஸ்ட்ரைட் லைன் டெப்ரிஸியேஷன் முறையில் பூராவும் டெப்ரிஸியேட் ஆகிவிடுகிறது. ஆகையால் டெப்ரிஸியேஷனுக்குத் தனியார் ஒதுக்குவதை விட நிதி ஒதுக்குவது அதிகமானது. தனியார் ஒதுக்காத ஃபண்டுகள், டெவலப்மெண்ட் ஃபண்ட், பாஸஞ்சர்

அமினிட்டீஸ் ஃபண்ட், ஹவுஸிங் ஃபண்ட் என்று எல்லா ஃபண்டுகளுக்கும் நிதி ஒதுக்குகிறோம். 20 லட்சத்தை சேர்த்து மேற்கொண்டு 11 லட்சம் சேர்த்தால் இது சரியாக இருக்கிறதா இல்லையா என்று கண்டுபிடிக்கலாம்.

அடுத்தாற்போல, 1962-ம் வருஷத்திய தணிக்கை அறிக்கையிலே அவர்கள் காரணத்தை கொடுத்திருக்கிறார்கள். எதனால் இது குறைந்திருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். 1946-ம் வருஷம் நாம் என்ன பஸ் கட்டணம் இந்த சென்னை நகரத்தில் வைத்தோமோ, அதே கட்டணம் இன்றைய வரையில், 1963-ம் வருஷம் வரையில் இருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது. 1946-ம் வருஷம், 17 ஆண்டுகளுக்கு முன் நிலவிய கட்டணம் இன்றைக்கும் அமுலில் இருக்கிறது. இந்த 17 ஆண்டுகளில் செலவு அதிகரிக்கவில்லை என்று யாராவது சொல்ல முடியுமா? இதில் என்ன என்ன நாம் அதிக செலவினங்கள் செய்திருக்கிறோம் என்று தெரியும். பே கமிஷன் சிபாரிசுகளை அமல் நடத்தியதன் மூலமாக 15 சதவிகிதம் செலவு அதிகரித்தது. கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் 103-வது பக்கத்தை திருப்பிப் பார்த்தால் 1960-ம் வருஷம் 1.81 லட்சம் ஆன செலவு, 1960-61-ல் 2.27 லட்சமாகவும், 1961-62-ல் 2.80 லட்சம் ஆகவும் உயர்ந்திருக்கிறது என்று தெரியும். செலவு அதிகமாகாமல் நஷ்டம் ஆகிக்கொண்டிருக்கிறதா என்றால் இல்லை. செலவு அதிகமாக ஏன் ஏற்பட்டது என்றால் வரிகள் மூலமாக ஏற்பட்டது; அடுத்தபடியாக தொழிலாளர்கள் நலன்களைச் செய்ததால் ஏற்பட்டது; ஸ்பேர் பார்ட்ஸ் விலை ஏறியதால் ஏற்பட்டது. இவ்வளவும் அதிகரித்து லாபம் இருக்கிறது என்றால், லாபத்தில் ஓடுகிறது என்றால், இந்த விவரங்களைச் சொல்லியும் நஷ்டத்தில் ஓடுகிறது என்று சொல்லக் கூடிய எதிர் கட்சி அங்கத்தினர்களையும், மற்றும் இப்படிக் கூறுகிறவர்களையும் எப்படி நம்பச் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை.

எஃபிஷென்ஸியை எடுத்துக் கொள்வோமானால், இங்கே குறைகள் சொல்லப்பட்டவை 1960-ம் வருஷத்திய அல்லது 1959-ம் வருஷத்திய நிலையை எடுத்துக் கொண்டு சொல்லப்பட்டது. இன்றைய நிலையை எடுத்துச் சொல்லப்படவில்லை. எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் என்றால் 1959-ம் வருஷத்தில் என்ன நிலை இருந்ததோ அதையொட்டி 1960-ம் வருஷத்தில் அது எழுதப்பட்டது. 1958-59-ம் வருஷத்திய நிலை மோசமாக இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அதை யாரும் மறுக்கவில்லை. இன்றைய நிலை என்ன என்று நான் அச்சுப் போட்டுக் கொடுத்திருக்கின்றேன். 1962-63-ம் வருஷத்திய விவரப்படி, அந்தப் புள்ளி விவரங்களை எடுத்துப் பேசியிருந்தால் உபயோகமாக இருந்திருக்கும். 1958-59-ம் வருஷத்திய நிலைமையை எடுத்து விவாதம் செய்தால் அது பயனற்றதாகத் தான் இருக்கும். 1958-59-ல் எத்தனை வண்டிகள் ரோட்டில் இருந்தன என்பதற்குப் புள்ளிவிவரங்களைப் பார்த்தால் 70.6 சதவிகிதம் வண்டிகள் ஓடின. 1959-60-ல் 70 சத

விகிதம் வண்டிகள் ஓடின; 1960-61-ல் 70.8 சதவிகிதம், 1961-62-ல் 78.4 சதவிகிதம் வண்டிகள் ஓடின. 1962-63-ல் 82.7 சதவிகிதம் வண்டிகள் ரோட்டில் ஓடின. இன்றைய நிலை என்ன என்று கேட்டால் 88 சதவிகிதம் வண்டிகள் ரோட்டில் போய்க்கொண்டிருக்கின்றன. ஏதாவது வழியில் ஒரு வண்டி நிற்பதைப் பார்த்து, சர்க்கார் பஸ்கள் நின்று விட்டன என்று சொன்னால் அந்த வாதம் சரியான வாதம் அல்ல. யார் பஸ் சர்விஸ் நடத்தினாலும் ஏதாவது ஒரு வண்டி நிற்கத்தான் செய்யும். ஒன்றைப் பார்த்து ஆயிரம் வண்டியும் நிற்கின்றன என்று சொல்லுவது லாஜிக் என்று சொல்ல மாட்டார்கள். அதைத் தான் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, சென்னையில் இருக்கிற நிலைமையைச் சற்றுப் பரிசீலனை செய்ய வேண்டும். சென்னை நகரத்தில், கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னது போல, ஒரு கஷ்டம் இருக்கிறது. எல்லாம் யூனி-டைரக்ஷனல் ட்ராஃபிக்காக இருக்கிறது. காலையில் எல்லோரும் பாரிஸ் கார்னர் போக வேண்டும். போகும் பஸ்களில் கூட்டம் இருக்கிறது. திரும்ப வரும் வண்டிகள் வேக்கன்ட். அதே போல சாயங்காலம் பாரிஸ் கார்னரிலிருந்து போகும் வண்டிகளில் கூட்டம் இருக்கிறது; ஆனால் பாரிஸ் கார்னருக்கு வரும் வண்டிகளிலே கூட்டம் இருப்பதில்லை. இந்த மாதிரி சங்கடமான நிலைமை இருக்கிறது. இரண்டு வழியிலும் வரவேண்டிய வருமானம் வருவதில்லை. பொதுவாக உலகத்தில் எந்த இடத்தில் பார்த்தாலும் பீக் அவர் ட்ராஃபிக்கை சுலபமாகச் சமாளிக்க முடியவில்லை என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். போன மாதம் நான் ஜப்பானுக்குப் போனபோது அங்கு பார்த்தேன் அங்கு (பீக் அவர்) நெருக்கடி நேரத்தில் மக்களை ரயிலில் ஏற்ற (புஷ்ஷர்ஸ்) என்று வைத்திருக்கிறார்கள். புஷ்ஷர்ஸ் என்று ப்ளாட்ஃபாரத்தில் நின்றுகொண்டு மக்களை மெதுவாக உள்ளே செலுத்தி எவ்வளவு அதிகமாக அதிலே அனுப்ப முடியுமோ அந்த அளவுக்கு அனுப்பும் முறையில் செய்கிறார்கள். சென்னை நகரத்தில் தான் இந்த நெருக்கடி இருக்கிறது; நம்மால் தான் இதைச் சமாளிக்க முடியவில்லை என்று நினைப்பது சரியல்ல. எந்த நகரமாக இருந்தாலும் பீக் அவரில் நெருக்கடி இருக்கத் தான் செய்யும். ஆனால் இந்த நெருக்கடியை நாம் சமாளிக்க முடியும். அதே நேரத்தில் லாபம் வரவில்லை என்று யாரும் சொல்லாமல் இருந்தால் இதைச் சமாளிக்க முடியும்.

இப்பொழுது போடப்பட்டிருக்கிற 600 வண்டிகளை 2,000 வண்டி- **12-10 noon.**
களாக சென்னை நகரத்தில் அதிகரித்துப் போட்டுவிட்டால், இந்த பீக் அவர் பிராப்ளத்தை நாம் சமாளித்து விடலாம். ஆனால், அந்த 2,000 வண்டிகளும் ஒரு நாளைக்கு 4 மணி நேரம் தான் வேலை செய்யும். 8 மணி நேரத்திற்கு எந்த விதமான வருவாயும் இருக்காது. 8 மணி நேரத்திற்கு வருவாயே இல்லாவிட்டால் என்ன நஷ்டம் வரும் என்பதைக் கனம் அங்கத்தினர்களே கணக்குப் போட்டுப் பார்த்துக்கொள்ளலாம். நெருக்கடி எல்லா நகரங்களிலும் தான் இருக்கிறது. அதை சமாளிப்பதற்கு நான்

பத்து ந.பை. குறைந்து போய் விட்டது என்றால், அதை சம்பளத்தில் பிடித்துக்கொள்ளவோ அல்லது வேறு ஏதாவது வழியில் அதை வசூலாக்கிக் கொள்ளவோ செய்து கொள்ளலாம். அப்படியில்லாமல் டிஸ்மிஸ் செய்துவிடுகிறார்கள். இதன் காரணமாக இந்த இலாகாவிற்கு வருவதற்கே கண்டக்டர்கள் பயப்படுகிறார்கள். அதே நேரத்தில் வருமானம் அதிகம் வருகிறது, அல்லது லாபம் அதிகம் வருகிறது என்றால் அதன் மூலமாக போனஸ் அதிகமாகக் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் தனியார் துறையில் வேலை செய்கிறார்கள். இந்த இலாகாவை எடுத்துக்கொண்டால், 60 ரூபாய்க்கு மேல் போனஸ் கொடுத்தது உண்டா என்பதைக் கனம் அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அட்டன்டென்ஸ் போனஸ், வேறு வகையில் கொடுக்கப்படுகிற போனஸ் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் இந்த 60 ரூபாய் கிடைக்கிறது. இந்த அறுபது ரூபாய்க்கு மேல் போனஸாக யாருக்கும் கிடைக்கவில்லை. தனியார்த் துறையை எடுத்துக்கொண்டால் ஐந்து மாதச் சம்பளம், ஆறு மாதச் சம்பளம் வரை போனஸாகக் கிடைக்கிறது. அதே நேரத்தில் இந்த இலாகாவில் ஒழுங்காக வேலை செய்தால்—ஒரு நாள் கூட லீவ் எடுக்காமல் இருந்தால் 60 ரூபாய் தான் போனஸ் கிடைக்கும். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் எடுத்துக்கூறுவதற்குக் கமிட்டி மிகவும் அவசியம். இம்மாதிரிப்பட்ட ஒரு கமிட்டி இருந்தால், தொழிலாளர்களுக்கிடையில் இருக்கின்ற குறைகளையும், பொதுமக்களிடத்தில் இருக்கின்ற கருத்துக்களையும் எடுத்துச்சொல்லி, விவாதித்து இன்னும் மக்களின் வசதிகளுக்காக என்னென்ன செய்யலாம், என்னென்ன முறையில் புது பஸ்களை போடலாம், என்னென்ன முறையில் ஆல்ட்டரேஷன் செய்யலாம் என்பதைப்பற்றி முடிவு எடுக்க முடியும்.

சென்னையிலுள்ள பஸ் போக்குவரத்தை எடுத்துக்கொண்டால், எப்போதும் 10, 15 வண்டிகள் ரோட்டோரத்தில் நின்று கொண்டிருக்கின்றன. ரிலீஃப் செய்து போகிறவர்களும், அடுத்த டியூட்டியில் வருகிறவர்களும் வரும் வரையில் இந்த வண்டிகள் எல்லாம் ரோடுகளில் நிற்கின்றன. தனியார் துறையைப் போன்று முன் கூட்டியே தக்க கவனம் செலுத்தினால் இவ்விதம் வண்டிகளை சும்மா நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படாது. வண்டிகள் சும்மா நின்றால் அந்த நேர அளவுக்கு நமக்குத்தான் நஷ்டம். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டை எடுத்துக்கொண்டால், பாரிஸ் கார்னரிலுள்ள சந்தில் எப்போதும் ஏழெட்டு பஸ்கள் நின்று கொண்டிருக்கின்றன. அதோடு நாள் ஒன்றுக்கு கணக்கிட்டுப் பார்த்தால் 30 முதல் 40 பஸ்கள் வரை பிரேக்டௌன் ஆகிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை உடனடியாக ரிப்பேர் செய்வதற்குரிய சாமான்கள் இல்லையா, அல்லது ரிப்பேர் செய்வதற்கான தொழிலாளர்கள் இல்லையா, அல்லது திறமையான வொர்க்ஷாப் இல்லையா, அல்லது முறையாகக் கவனிப்பார் இல்லையா என்று தெரியவில்லை. முக்கியமாக இதில் மேல் அதிகாரிகள் தக்க கவனம் செலுத்துவதில்லை

தெரிகிறது. கீழேயுள்ளவர்கள் பஸ்ஸிலுள்ள குறைகளைப் பற்றி ரிப்போர்ட் செய்தால், அவைகளைப்பற்றி உடனடியாக கவனித்துப் பார்த்து அவைகளில் எதைச் செய்திருக்கிறோம், இந்தக் குற்றம் ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதையெல்லாம் மேல் அதிகாரிகள் கவனிக்கவேண்டும். இப்போதுள்ள நிலைமையை எடுத்துக்கொண்டால் கீழேயுள்ளவர்கள் ரிப்போர்ட்டுகள் கேட்பாரற்றுக் கிடக்கின்ற நிலைமை தான் இருக்கிறது. அதே நேரத்தில் யாருக்காவது சலுகை கொடுக்கவேண்டும் என்று மேல் அதிகாரிகள் நினைக்கிறார்கள். நேற்றைய தினம் ஆறு, ஏழு பேர்கள் கண்டக்டர்கள் பயிற்சிக்காக திருச்சியிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்கசி எம்.எஸ்.என்.எஸ். கம்பெனி போன்ற சில கம்பெனிகளில் கண்டக்டர்களாக இருந்து வேலை செய்து வந்தவர்கள். அவர்களுக்கு இங்கே பரீட்சை நடத்தப்படுகிறது. இவ்விதம் பரீட்சை வைப்பதில் மூன்று பேர்கள் தேர்வு பெறுகிறார்கள். இவர்களுக்கு மட்டும் வேலை கொடுக்கிறார்கள். மற்றவர்களுக்கு வேலையில்லை. இவர்கள் எல்லாம் ஆறு வருடம், ஏழு வருடம் கண்டக்டர்களாக வேலை செய்தவர்கள். இவர்கள் நல்ல முறையில் டிக்கட் கொடுக்கிறார்களா, நல்ல முறையில் வண்டியில் நடந்து கொள்ளுகிறார்களா என்பதைத்தான் பரிட்சையாகத்தான் பார்க்க வேண்டும். அதல்லாமல் ஏதோ ஆங்கிலத்தில் கேள்வியைக் கொடுத்து அதற்குப் பதில் சொல்லவேண்டும் என்று சொன்னால், மூன்றாம் ஃபாரம் வரை படித்த இந்த கண்டக்டர்கள் என்ன எழுத முடியும்? ஆகவே இம்மாதிரிப்பட்ட விஷயத்திலும் கவனம் செலுத்தவேண்டும். இதற்கெல்லாம் கமிட்டி இருந்தால் தான் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், நம்முடைய சர்க்கார் வண்டிகளுக்கு எல்லாம் 75 ஆயிரம் ருபாய், 80 ஆயிரம் ருபாய் செலவு செய்து கொண்டு வருகிறோம். மைசூர் அரசாங்கத்தை எடுத்துக்கொண்டாலும் கூட, அவர்களுடைய வண்டிகளை எல்லாம் விட நம் வண்டிகள் மிகவும் அழகாகவும், கம்பீரமாகவும் இருக்கின்றன. இப்படிப்பட்ட வண்டிகளில் ஒன்றிலாவது ஸ்பீடா மீட்டர் கிடையாது. பல வண்டிகளில் நல்ல முறையில் ஹார்ன் கிடையாது. எல்க்ட்ரிக் ஹார்ன் இரண்டு இருக்கவேண்டும் என்று இருந்தாலும் கூட, அவை எங்கு போகிறது என்று யாருக்கும் தெரியாது. வண்டி வெளியில் போகும்போது முன்னால் இரண்டு டயர்களும் பின்னால் நான்கு டயர்களும் ஆறு டயர்கள் இருக்கும். ஆனால் திரும்பி வரும்போது அவைகள் சரியாக இருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும். டயர்கள் ஆறு என்று எண்ணிக்கைக்கு இருக்கும். ஆனால் புதிய டயர்களுக்குப் பதிலாக பழைய டயர்களாக இருக்கும். யார் யாரோ கையாடல்கள் நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட ஊழல்கள் அதிகமாக இருப்பதினால் தான் லாபம் நமக்கு அதிகமாகக் கிடைப்பதில்லை. லாபம் அதிகமாகக் கிடைத்தால் இன்னும் பஸ்களை அதிகப்படுத்த முடியும். மக்களுக்கும் வசதி செய்து கொடுக்க முடியும். அதன் மூலமாக வேறு

பொழுதெல்லாம் வந்து பார்த்து தீர்த்துக்கொண்டு செல்லுகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையும் இப்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தின்மீது நமது தொழில் அமைச்சர் அவர்கள் பேசியதைப் பார்க்கும்பொழுது, பேசிய விதத்தில் இனிமை இருந்ததே தவிர, அவர்களால் மறுத்துக் கூறுகிற அளவுக்கு நிலைமை இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சபையின் எஸ்டிமேட்ஸ் கமிட்டி இன்னொரு தடவை இதைப் பரிசீலனை செய்யலாமென்று அவர்கள் சொன்னார்கள். இந்த நிறுவனத்திலே குறைபாடுகள் இல்லை, என்னுடைய கோரிக்கையில் நியாயமில்லை என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்களுக்கு இருக்கிற வக்கீல் திறமையினாலும், சாதுர்யத்தினாலும், பல நாட்டு அனுபவங்கள் இருப்பதனாலும், ஏற்கனவே சொன்னதைத்தான் சொன்னார்களே தவிர, எழுப்பியிருக்கிற பிரச்னைகளுக்குச் சரியான முறையில் பதில் சொல்லவில்லை. ரூ. 6 கோடி மூலதனம் போடவில்லை, தேய்மான நிதிக்கு இவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம், வேறு இனங்களுக்கு இவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம் என்றெல்லாம் கணக்குக் கொடுத்தார்கள். வெளித் தோற்றத்திற்குத்தான் நன்றாக இருக்கிறது. ரூ. 4 கோடி மூலதனம் என்று வைத்துக்கொண்டாலும், ரூ. 10 லட்சம் அதிக லாபம் என்று சொல்ல முடியாது. அவர்களுடைய வாதத்தின்படி மூலதனம் போட்டது ரூ. 3 கோடியே, 92 லட்சம். நமக்குத் தரப்படும் புள்ளி விவரங்கள் ஒரு வருஷத்திற்குப் பிறகுதான் கிடைக்கின்றன.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த மாதிரிப் புத்தகத்தை வருடா வருடம் அச்சடித்துக் கொடுக்கிறோம். அதிலே லேட்டஸ்ட் ஃபிகர்கள் அடங்கியுள்ளன.

திரு. கே. ஏ. மதியழகன் : ரூ. 5 கோடி மூலதனமாகத்தான் இருக்கிறது. தேய்மான நிதி இவைகள் எல்லாம் சேர்ந்திருக்கிறதே தவிர, ஏதோ கோடிக்கணக்கான ரூபாய் ஒரு வருஷத்திலே லாபம் பெற்றிருக்கிறார்கள் என்று நம்மை ஏமாற்றுகிற அளவில், அவருடைய வாதம் அமையவில்லை. இன்னும் அழுத்தமாகச் சொல்லப்போனால் ஆடிட் ரிபோர்ட்டிலே கூட கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

Percentage of profit should be related to capital at the commencement of the year.

"அதற்காக வட்டிக் கடை வைப்பதா" என்று திரு. மாதா கவுடர் அவர்கள் கேட்டார்கள். வட்டிக் கடையிலேகூட எவ்வளவு லாபம் வருகின்றது என்று பார்க்கிறார்கள். 1960-ம் வருடத்தில் நாம் போட்ட மூலதனத்தில் 7.5 சதவீதம் லாபம் வந்திருக்கிறது. 1961-ல் 5.1 சதவீதம் கிடைத்திருக்கிறது. 1962-ல் 3.5 சதவீதம் கிடைத்திருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் மீண்டும் அதே தவறையே செய்கிறார்கள். 5.1 சதவீதம் என்று சொன்னால், நாங்கள் அதிகமாக டெப்ரிசியேஷன் போட்டிருக்கிறோம். டெவலப்மெண்ட் நிதிக்கு ரூ. 16 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். கட்டட நிதிக்கு ஒதுக்கியிருக்கிறோம். லாபத்திலிருந்து இவற்றைக் கழித்துக்கொள்கிறோம். அதை எல்லாம் சேர்த்து தனியார் போடுகிற மாதிரி கணக்குப் போட்டால், லாபம் அதிகமாக இருக்கும்.

திரு. கே. ஏ. மதியழகன் : சென்ற மூன்று வருடத்திலே லாபம் படிப்படியாகக் குறைந்திருக்கிறது. 3.5 சதவீதத்திற்கு ஏன் குறைந்திருக்கிறது? பாசஞ்சர் அமெனிடீஸ் பண்டுக்கு ரூ. 2 லட்சம், காம்பென்சேஷன் ரிசர்வ் பண்டுக்கு ரூ. 1,000, ஆக்ஸிடென்ட் ரிசர்வ் பண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய்; இப்படித்தான் கழித்திருக்கிறார்கள். ஏதோ கோடிக்கணக்கான பணத்தை இவைகளுக்காக ஒதுக்கிடவில்லை. அப்படியிருந்தும் 3.5 சதவீதம்தான் லாபம் என்று சொன்னால், பொதுமக்களின் பணம் எவ்வாறு விரயமாகிறது என்பது தெரியவரும். இரண்டு வருஷம் கழித்து இதைக் கமிட்டி பரிசீலிக்கலாம் என்று சொன்னார்கள். 1960-ம் ஆண்டு அறிக்கையிலே திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்?

"Paper orders are useless unless they are carried out and constantly supervised. Charts and instructions are also useless unless they are scrupulously followed in full, and the results constantly watched." In these words the Ladden Committee reported in 1949 and still the state of affairs seems to be not much different from what it was then. The Committee feels confident that there is much scope for improving the services economically. If the recommendations made by the Committee are put into effect it would not only improve the service to the public but also improve the revenue.

1949-ல் லேடன் கமிட்டி கொடுத்த அறிக்கைமீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 1960-ல் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கொடுத்த அறிக்கைமீதும் ஒன்றும் செய்யப்படவில்லை. ஏறத்தாழ 65 சிபாரிசுகளை கமிட்டியினர் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு காங்கிரஸ் சட்டசபை கட்சியினர்கூட டெமாக்ரடிக் சோஷலிஸத்தைப் பரப்பப்போகிறோம் என்று சொல்லிக்கொள்ளும் இந்த நேரத்தில் இந்த மதிப்பீட்டுக்குழு செய்த 65 சிபாரிசுகளில் எத்தனை சிபாரிசுகளைச் சர்க்கார் அமல் நடத்தியிருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சட்டசபையிலே எஸ்டிமேட்ஸ் கமிட்டி செய்திருக்கின்ற சிபாரிசுகள் என்னென்ன அமல் ஆக்கப்பட்டிருக்கின்றன என்பது கனம் அங்கத்தினர்களுக்கு அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்திருந்தால் விஷயம் தெரிந்திருக்கும்.

அன்று செய்தது தவறு என்று இப்பொழுது சொல்லுவதன் மூலம், அவ்வாறு ஒவ்வொரு முறையும் சொல்லிக்கொண்டிருப்பதன் மூலம், அவர் முடிவே எடுக்காத நிலைமைக்குக் கொண்டுவந்து விடும் சர்க்கார் நிர்வாகத்தில் உள்ள தணிக்கை வேறு, தனியார் நிர்வாகத்தில் உள்ள தணிக்கை வேறு. சாதாரணமாக கம்பெனி ஆடிட்டில் செலவு செய்யப்பட்டதற்கு வௌசர் காண்பித்தால் போதும். சர்க்கார் ஆடிட்டில் அப்படி இல்லை. செலவு செய்யப்படுவது மாத்திரம் அல்ல; அது முறைப்படி செலவு செய்யப்பட்டதா, விதிகளின்படி செலவு செய்யப்பட்டதா, நியாயமாகச் செலவு செய்யப்பட்டதா என்றெல்லாம் பல கேள்விகள் தேடி வரும். தனியார் துறையில் ஏதாவது திடீரென்று ஒரு ஸ்பேர் பார்ட் வேண்டுமென்றால், உடனே சென்று ஒன்றுக்கு 10 விலை கொடுத்து வாங்கிப்போட்டு உடனே வண்டியை ஓட்ட முடியும். ஆனால், சர்க்கார் துறையிலே அப்படிச் செய்ய முடியாது. அதற்கான விதிகள் இருக்கின்றன. டெண்டர் கோரவேண்டும். பரிசீலனை செய்ய வேண்டும், விதிகளின்படி நடக்கவேண்டும். விதிகளை அனுஷ்டிக்கவேண்டுமென்று சொல்லுவதிலேயே சில குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே தான் இந்த நிர்வாகத்தை நடத்துகிற அளவிலே நாம் எவ்வளவு குறைவாக குறுக்கீடுகள் செய்கிறோமோ, எவ்வளவு அதிகமான பொறுப்பை நாம் நிர்வாகத்தை நடத்துகிறவர்களுக்குக் கொடுக்கிறோமோ, அவ்வளவுக்கு நல்லது. அப்படிக் கொடுத்து, அதனுடைய இறுதியான நிலைமையை, அதாவது எபிஷியன்ஸி நன்றாக இருக்கிறதா, லாபகாரமாக ஓட்டுகிறார்களா, ஜனங்களுக்கு நன்மை செய்கிறார்களா, என்பதை மாத்திரம் நாம் பரிசீலனை செய்யக்கூடிய அளவுக்கு அந்த இடத்தில் மாத்திரம் கண்காணிக்கக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து. அந்தக் கருத்தைத் தான் நான் சபையின் முன்னால் வைத்திருக்கிறேன். ஆகவே, இதற்கு சட்டசபை அங்கத்தினர்கள் கொண்ட ஒரு குழு அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். அப்படி ஒரு குழுவை ஏற்படுத்தினாலும், இந்த பஸ் டிரான்ஸ்போர்ட்டில் தினம் தினம், நாளுக்கு நாள் செய்யவேண்டிய வேலைகள் எல்லாவற்றையும் கண்காணிக்க முடியாது. இதை எஸ்டிமேட்ஸ் கமிட்டி அடுத்த வருஷம் எடுத்து பரிசீலனை செய்யலாம் என்று சொல்லிக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன்.

அட்வைஸரி கமிட்டி என்று சொன்னார்கள். இப்பொழுது மூன்று கமிட்டிகள் இருக்கின்றன. ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் சம்பந்தமான எல்லாவிதமான பிரச்னைகளும் அந்தக் கமிட்டியில் விவாதிக்கப்படுகின்றன. ஒரு ரூட் வேண்டுமா, வேண்டாமா, பஸ் ஸ்டாப் எந்த இடத்தில் போடுகிறது, பஸ்களை எங்கு நிறுத்த வேண்டும் என்ற விஷயங்களெல்லாம் விவாதிக்கப்படுகின்றன. பிறகு, ஒரு டெக்னிகல் கமிட்டி ஒன்று போட்டிருக்கிறோம். அதிலே உயர்ந்த என்ஜினியர்கள், ரிடையர்டு சீப் என்ஜினியர் போன்றவர்

கள் அங்கம் வகிக்கின்றார்கள். அவர்கள் பார்த்து நம்முடைய வொர்க்ஷாப் எப்படி நடக்கிறது, வொர்க்ஷாப்பில் இன்னும் என்னென்ன செய்ய முடியும், இன்னும் விஸ்தரிக்க முடியுமா என்ற விஷயங்களையெல்லாம் அந்தக் கமிட்டி விவாதிக்கிறது. அதே போல் பாசிஞ்சர் அமினிடிஸ் பண்டுக்கு என்று தனிக் கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டி பாசெஞ்சர்களுக்கு என்னென்ன அமினிடீஸ் வேண்டும் என்பதுபற்றி ஆலோசனை கூறுகிறது. அது போல கன்யாகுமரியிலும் ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். இந்தக் கமிட்டிகள் இந்த வேலைகள் எல்லாவற்றையும் பார்த்து ஆலோசனை கூறுகின்றன. ஆகவே, மற்றொரு கமிட்டி இதற்காக அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: ஆன் எ பாயிண்டு ஆப் இன்பர்மேஷன், மிஸ்டர் டெபுடி ஸ்பீகர். ரூ. 2 லட்சம் 'வொர்கர்ஸின் ஹவுஸிங்'காக ஒதுக்கியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது மிகவும் போற்றத்தக்கது. ஆனால், அந்த அளவுக்கு வீடுகள் கட்டித் தரப்படவில்லை. திரு. வி. க. நகரில் கொஞ்சம் கட்டப்பட்ட வீடுகளுக்கும் ரூ. 10 வாடகையை ரூ. 20-ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதனால் தொழிலாளர்கள் மிகவும் குறைப்பட்டுக்கொள்ளுகிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது பரிகாரம் தேடுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பணத்தால் வீடு கட்டிவிட முடியாது. சிமெண்டினாலும் இரும்பினாலும் தான் வீடு கட்ட முடியும். அவைகளெல்லாம் பற்றாக்குறையாக இருப்பதன் காரணத்தினாலே, சுலபமாக உடனடியாக வீடுகள் கட்ட முடியவில்லை (சிரிப்பு). திரு. வி. க. நகரில் கட்டப்பட்ட வீடுகள் இந்த நிதியிலிருந்து கட்டப்படவில்லையாதலால் அவர்களுக்கு அந்த வீடுகளைக் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை. அதாவது மத்திய சர்க்கார் 'ஸப்ஸிடைஸ்டு இண்டஸ்டிரியல் ஹவுஸிங் ஸ்கீம்' பிரகாரம் தனியார் துறையிலே இருக்கும் தொழிலாளர்களுக்குத் தான் அந்த வீடுகள் கொடுக்கப்படவேண்டும். டிரான்ஸ்போர்ட்டும், ஹவுஸிங்-ம் என்னிடத்திலே இருப்பதால், மத்திய சர்க்காருக்கு எழுதி கொஞ்ச காலத்திற்காவது இதை அனுமதிக்கவேண்டும் என்று சொல்லி, நாங்கள் அனுமதி வாங்கினோம். ஆகவே, முழு வாடகையும் அவர்கள் கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்லுகிறார்கள். அது சம்பந்தமாக புகார் வந்திருக்கிறது. யூனியன்களைச் சேர்ந்தவர்களோடு இதைப்பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்தத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எப்பொழுது வேண்டுமானாலும் என்னை வந்து பார்க்கிறார்கள். பத்து பிரச்னைகள் சேர்ந்த பிறகு என்னை வந்து பார்ப்பது என்பது கிடையாது. அவ்வப்பொழுது பிரச்னை ஏற்படும்

ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். 1,000 பாஸெஞ்சர்களுக்கு ஒரு பஸ் என்ற விகிதத்தில் நம்முடைய பஸ்களின் எண்ணிக்கையை அமைய வேண்டும் என்று சொல்லி, பஸ்களினுடைய எண்ணிக்கையை வெகுவேகமாக அதிகரித்துக்கொண்டு போகிறோம். அந்த விதமாகப் பார்த்தால் 1961-ம் ஆண்டில் 595 பஸ்கள் இருந்தன. இன்றைக்கு 825 பஸ்கள் இருக்கின்றன. சிடிக்கு மாத்திரம் எடுத்துக்கொண்டால் 744 பஸ்கள் இருக்கின்றன. சிடி, ஸபர்ப்ஸ் இரண்டையும் சேர்த்து, அதாவது காஞ்சிபுரம் போன்ற சில ரூட்களையும் சேர்த்து 744 பஸ்கள் இருக்கின்றன. ஆகவே தான், பஸ்களின் எண்ணிக்கையை எவ்வளவு தூரம் அதிகரிக்கவேண்டும் என்பது எந்த அளவுக்கு அது லாபகரமாக இருக்கும் என்பதைப் பார்த்துத்தான் அதைச் செய்யவேண்டுமே தவிர, 'அன்எகனமிக்காக' எந்த சந்தர்ப்பத்தில் போகிறதோ அந்த சந்தர்ப்பத்தில் அதை அதிகரிப்பது சரியல்ல.

அடுத்தாற்போல் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தனியார் துறையோடு ஒப்பிட்டுப்பார்த்து சில கருத்துக்களைச் சொன்னார்கள். நான் முன்பு பதில் சொன்னதே அவர்களுக்குப் போதும். தனியார் துறையில் இல்லாத சில நிதிகளெல்லாம் நாம் வைத்திருக்கிறோம். டெப்ரிஸியேஷன் போன்ற நிதிகளுக்குத் தனியார் துறையைவிட நாம் அதிகப்படியான தொகையை ஒதுக்குகிறோம். அதற்குமேல் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. மூன்றாவது மனிதன் சண்டையை நான் வாங்கிக்கொள்வதற்குத் தயாராக இல்லை. ஏனென்றால், அவர்கள் பார்த்து தனியார் துறை நல்லது என்று சொல்ல, நான் அப்படி என்ன நல்லது என்று சொல்ல, அதன் மூலம் மூன்றாவது மனிதர் சண்டையை வாங்கிக்கொள்வதற்கு நான் தயாராக இல்லை. எங்களைப் பொருத்தவரையிலும், எங்களுடைய நிர்வாகத்தில் இன்றைக்குக் குறை இல்லாமல், தவறு இல்லாமல் நடக்கிறது என்பதைத்தான் சொல்ல முடியும். தனியார்த் துறையோடு ஒப்பிட்டுப்பேசுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

இதற்கு ஒரு குழு வேண்டுமா, வேண்டாமா என்பது நான் அடுத்த பிரச்னை. இந்த சட்டசபை அங்கத்தினர்கள் கொண்ட ஒரு குழு இருந்தால், அவர்கள் எப்படி டைர் மாற்றப்பட்டிருக்கிறதா என்று பார்க்க முடியும், ஸ்பார் பார்ட்ஸ் திருடப்பட்டிருக்கிறதா என்று பார்க்க முடியும்? பார்க்க முடியாது. நிர்வாகத்தில் இருப்பவர்கள் தான் அதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்காகத் தான் தனிக்கை என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். ஸூபர்வைஸர்ஸ் இருக்கிறார்கள். ஓரளவுக்கு அதிகமாக நாம் ஸூபர்வைஸர்ஸ் வைத்திருக்கிறோம் என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், ஸூபர்வைசர்கள் இல்லாவிட்டால் கலெக்ஷன் போய்விடும். பல இடங்களில் ஒரு பஸ்ஸை செக் செய்வதன் மூலம் தான், இதர ராஜ்யங்களில் நடக்கின்ற ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்களை விட, நமக்கு வருவாய்

அதிகமாக வருகிறது என்பதை இதர ராஜ்யங்களில் நடக்கின்ற மற்ற ஸ்டேட்டிரான்ஸ்போர்ட் குழுக்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவரவர்கள் கடமையை ஒழுங்காகச் செய்தால் இது தேவையில்லை. மறுபடியும் ஜப்பான் நாட்டு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஜப்பானில் ஸூபர்வைஸர்களே கிடையாது. எந்த பாக்டரிக்குப் போனாலும் சரி, எந்தத் தொழிற்சாலைக்குப் போனாலும் சரி, எங்கே போனாலும் சரி, ஸூபர்வைஸர்ஸ் கிடையாது, அவரவர்களுக்கு இட்ட வேலையை அவரவர்கள் ஒழுங்காகச் செய்துகொண்டு போகிறார்கள். கடிகாரம் வேலை செய்வதுபோல் அவர்கள் வேலைகளைச் செய்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்குக் கடமை உணர்ச்சி இருக்கிறது. நமக்கும் அந்தக் கடமை உணர்ச்சி வளரவேண்டும். கடமை உணர்ச்சி வளர, வளரத்தான் இந்தக் குறை தீரும். சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டி போட்டுவிட்டால், ஏதோ 4 இடங்களில் பஸ்கள் நின்றுவிட்டன, 10 இடங்களில் டைர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, ஸ்பேர் பார்ட்ஸ் சம்பந்தமாகத் தவறு என்பதை எல்லாம் ஆராய்ந்து, அதை செய்துவிட முடியாது. அதை நிறுத்தவும் முடியாது, அதை கண்காணிக்கவும் முடியாது. என்னுடைய தாழ்மையான ஆலோசனை என்ன என்று சொன்னால், 1960-ம் ஆண்டில் எஸ்டிமேட்ஸ் கமிட்டி இதைப் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறார்கள். 1964-65-ம் எஸ்டிமேட்ஸ் கமிட்டி இதைப் பரிசீலனை செய்யலாம். அவர்கள் அப்படி பரிசீலனை செய்து இதிலே என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று சொன்னால், எப்படி 1960-ம் ஆண்டில் எஸ்டிமேட்ஸ் கமிட்டி சொன்ன குறைபாடுகளை நிவர்த்தி செய்து இந்த இலாகாவில் சீர்திருத்தம் செய்தோமோ, அதே மாதிரி இப்பொழும் செய்வதற்கு தயாராக இருக்கிறோம்.

பொதுவாக எனக்கு ஒன்று தோன்றுகிறது. சர்க்கார் துறையிலே நடத்துகிற தொழில்கள் எல்லாவற்றையும் பற்றி நாம் அடிக்கடி கிரிடிஸைஸ் செய்வதன் மூலம், கண்டிப்பதன் மூலமாக, அடிக்கடி அதைப்பற்றி சட்டசபை, பார்லிமென்ட் முதலிய இடங்களில் பேசுவதன் மூலம், இந்த இலாகாவை நடத்தி நிர்வகிக்கின்ற தலைமை அதிகாரி டைரக்டர் போன்றவர்களுக்கு அவர்களுடைய 'எபிஷியன்ஸி' குறைந்துவிடுகிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். காரணம் என்னவென்று சொன்னால், ஏதாவது ஒரு நிர்வாகத்தின் பொறுப்பிலே இருப்பவர்கள், அந்தப் பொறுப்பை அவர்கள் நிறைவேற்றும்பொழுது, ஒரு முடிவு எடுத்துத்தான் தீரவேண்டும். ஒரு டெஸிஷன் எடுத்துத்தான் தீர வேண்டும். அந்த முடிவு சரியாக இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம், ஆனால் அவர்கள் ஏதாவது ஒரு முடிவு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இலாகாவின் தலைமை அதிகாரி நேர்மையாக ஒரு முடிவு எடுத்துக்கொண்டால், அந்த இலாகாவினுடைய தலைமை அதிகாரிக்கு நான் எப்பொழுதும் பக்கபலமாக இருந்து அவர்கள் செய்கின்ற முடிவுக்கு ஆதரவு கொடுக்கிறேன். ஏனென்றால், பின்னால் நமக்கு கிடைக்கிற அனுபவத்தையொட்டி, அவர்

திரு. கே. ஏ. மதியழகன் : படித்து விட்டுத்தான் நான் சொல்லுகிறேன். படிக்காமல் பேசுகிறேன் என்று கனம் அமைச்சர் அவர்கள் நினைக்கவேண்டாம். 'பீக் அவர்' சம்பந்தமாக, 'ஓவர் லோட்' சம்பந்தமாக, ஸ்பேர் பார்ட்ஸ் சம்பந்தமாக நாங்கள் பல தடவைகளில் பேசியிருக்கிறோம். அதற்கு எல்லாம் நல்ல முறையில் சமாதானம் சொல்ல முடியவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கோருகிற தீர்மானத்தில் கண்டபடி ஒரு கமிட்டியை நியமிப்பதற்கு ஏன் தயக்கம் காட்ட வேண்டும் என்பது எனக்கு புரியவில்லை. நியாயத்திற்குத்தான் நாங்கள் இதைக் கேட்கிறோம். மக்களுடைய குரலைத்தான் இந்த மன்றத்திலே எடுத்துச்சொல்லுகிறோம். இந்த நிறுவனங்களிலே சர்க்காருக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அவ்வளவு பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பதனுல்தான் இந்தப் பிரச்னைகளை எழுப்புகிறோம். எதற்காக நாங்கள் இங்கே உறுப்பினர்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்டு வந்தோம்? யார் வாக்கு கொடுத்தார்களோ அவர்களுடைய நலனிலே அக்கறை காட்டுவதற்காகத்தான் இங்கே வந்துள்ளோம். மேலும் உறுதிமொழி குழுவின் சிபாரிசுகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்று ஹிந்து பத்திரிகைகூட எழுதியிருக்கிறது. இப்படியெல்லாம் இருந்தால் எதற்காக நாம் கமிட்டி போடுகிறோம்? நமது முதலமைச்சர் அவர்கள் சட்டசபை மரபுகளிலும், பார்லிமெண்டரி ஜனநாயகத்திலும் அதிகக் கவலை கொண்டுள்ளவராக இருக்கிருர்கள். அவர் முதலமைச்சரானதிலிருந்து சட்டசபை அந்தஸ்தையும் கௌரவத்தையும் உயர்த்துவதற்குப் பாடுபட்டு வருகிருர். நான் எற்கெனவே குறிப்பிட்டது போல இந்த சட்டமன்றத்திலே கொடுக்கப்பட்ட 500-க்கும் மேற்பட்ட உறுதிமொழிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று ஹிந்து பத்திரிகையே சொல்லியிருக்கிறது. ஜனநாயக மரபுகளுக்கு இது உகந்ததா என்று நான் கேட்கிறேன். இன்றைக்கும் ஏன் நான் சொல்லும் கமிட்டியை நியமிக்கக்கூடாது என்பதற்குச் சரியான முறையிலே கனம் அமைச்சர் அவர்களால் விவாதம் செய்ய முடியவில்லை. ஏதோ சில சமாதானங்கள் சொன்னுர்கள். ஜனநாயக சோஷலிசம், ஜெய்ப்பூர் சோஷலிசம் என்று பேசப்படுகிறதேதவிர, நடைமுறையில் என்ன நடக்கிறது? தனியார் துறைக்கு தங்கள் ஆதரவை கொடுத்துவிட்டு, இங்கு வேறு பாஷையிலே பேசுகிருர்கள். ஆகவே இரட்டை வேடம் போடுகிருர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திரு. நித்தியானந்தனுங்கோ சொன்னதைப்போல இதற்கு ஒரு கமிட்டி நியமிக்கலாம் என்று தொழிலமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்று நான் எதிர்ப்பார்த்தேன். இன்றைக்கு அவர்கள் கூறும் பதில் எல்லாம் '1967-ல் பார்க்கிறோம்', என்பதாகத்தான் இருக்கிறது. மக்கள் குரல் அன்றைக்குப் பதில் அளிக்கும் என்று கூறி முடிப்பதற்கு முன்னுல் கட்சிச் சார்பு இல்லாமல் அங்கத்தினர்கள் எல்லோரும் என் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is :—

Add the following at the end.

"and for improving the service conditions of the workers"

The amendment was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"This House recommends to the Government to appoint a Committee consisting of Members of the Assembly to enquire into the working conditions of Government City Bus Transport and to suggest ways and means for ensuring efficiency and economy"

The resolution was put and lost.

(2) DECLARATION OF 'TIRUVALLUVAR DAY' AS A PUBLIC HOLIDAY UNDER THE NEGOTIABLE INSTRUMENTS ACT.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே "பத்திரங்கள் பரிமாற்றச் சட்டத்தின் கீழ், "திருவள்ளுவர் நாள்" என்று ஒரு நாளைப் பொது விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டுமென இச்சபை அரசினருக்குப் பரிந்துரைக்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

MR. DEPUTY SPEAKER : Resolution moved—

That this Assembly recommends to the Government that a day as 'Tiruvalluvar Day' may be notified as a public holiday under the Negotiable Instruments Act.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது நான் ஒரு நீண்ட பேச்சை நிகழ்த்த விரும்பவில்லை. காரணம் இந்தத் தீர்மானத்திற்கு இந்தச் சபையில் இரண்டு விதக் கருத்துக்கள் கூறப்படும் என்று நான் நினைக்கவில்லை. மன்றத்திலுள்ள எல்லா உறுப்பினர்களும் ஒருமுகமாக இதற்கு ஒப்புதல் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை இருப்பதால் என்னுடைய சில கருத்துக்களை மட்டும் கூற விரும்புகிறேன்.

இப்பொழுது நடைமுறையிலே 15, 16 நாட்கள் அரசாங்கப் பொது விடுமுறை நாட்களாக இருக்கின்றன. அவற்றில் ஒரு சில அரசியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை; வேறு சில சமுதாய நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன. தீபாவளி, மிலாடிநபி, கிருஸ்துமஸ் போன்ற நாட்கள் சமுதாய அடிப்படையில் வந்தவை. காந்தியார் நினைவு நாள், குடியரசு தினம், சுதந்திர நாள் முதலியவை அரசியலை அடிப்படையாகக் கொண்ட நாட்களாக இருக்கின்றன. சமயங்கள் எல்லாம் ஒரு காலத்தில் மக்களை நல்ல நிலைக்குக்

கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்ட நாட்களாகும். அதேபோல அரசியலில்கூட மக்களை மக்களாக்க வேண்டும் என்று பாடுபட்ட நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் நாட்கள். இப்பொழுது இருக்கின்ற விடுமுறை நாட்களோடு சம்பந்தப்பட்ட சமுதாய நிகழ்ச்சிகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது அந்த நிகழ்ச்சிகளெல்லாம் நிகழ்ந்தனவா, அவற்றை இன்றைக்கு அனைவரும் ஒப்புக்கொள்கிறார்களா என்ற கேள்விக்குச் சரியான பதில் கிடைத்துவிடாது. திபாவளியை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள். கிருஸ்துமஸை ஒப்புக் கொள்ளாதவர்கள் உண்டு. காந்தியாரைப் பெரும் தலைவராக ஒப்புக் கொண்டாலும், காந்தீயக் கொள்கையே அரசியலுக்கு ஒரே வழி என்பதில் கருத்து மாறுபாடு இருக்கிறது. ஆகவே இந்த விடுமுறை நாட்களோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு நடந்தவைதாம்.

திருவள்ளுவர் நாள் என்று ஒரு நாளைக் குறிப்பிட்டுப் பொது விடுமுறையாக ஆக்க வேண்டும் என்று நினைக்கும் நேரத்தில் சமயங்கள் மக்களை மக்களாக நல் வழியில் நடத்த கொண்டாடிய நாட்களையும் அவற்றோடு ஒன்றிய கருத்துக்களையும் நினைக்க வேண்டியிருக்கிறது. வள்ளுவர், உலக மக்களையே மக்களாக்க அரிய திருக்குறளை அளித்தார்கள். அது ஒரு சமுதாயத்தை மட்டும் சார்ந்தது அல்ல. உலக சமுதாயத்திற்கே பொதுவானது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். ஒவ்வொருவரும் வள்ளுவர் 'என்னுடைய சமுதாயத்தவர்': 'என்னுடைய சமுதாயத்தவர்': என்று போட்டியிடுகிறார்கள். வள்ளுவருடைய அரசியல் கருத்துக்களும், பொருளாதாரக் கருத்துக்களும், சமுதாயக் கருத்துக்களும் உலகத்திலே எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலையில் வள்ளுவரைப் பெற்றெடுத்த நாடு நம்முடைய நாடு என்று பெருமைப்படக்கூடிய நிலையில் இருக்கிறோம். இதையே தான் பாரதியாரும் சொன்னார்கள்.

> "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட
> தமிழ் நாடு"

அப்படிப்பட்ட வள்ளுவரை உலகத்துக்கு ஈந்த தமிழகத்திலே மக்களின் பிரதிநிதிகளாக இந்த மன்றத்திலே வீற்றிருக்கும் அத்தனைபேரும், வள்ளுவருக்கென ஒரு நாளை ஒதுக்கி, அதை அரசாங்க விடுமுறை நாளாக ஆக்கிய புகழை இந்தத் தலைமுறையில் நாம் செய்தோம் என்ற பெருமை எதிர்காலத்தில் இருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்; இந்தத் தீர்மானத்தை மன்றத்திலே ஒருமுகமாக ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் கருத்துக்களை முடிக்கிறேன்.

*திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அருமையான தீர்மானத்தை

ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லலாம் என்று கருதுகிறேன். திருவள்ளுவர் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு மட்டுமின்றி, ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு மட்டுமின்றி, எல்லோராலும் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு உத்தமர் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆகவே, அவருடைய தினமாக ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்றையதினம் சர்க்கார் பொது விடுமுறை தினமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முறையில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற நேரம் மிகமிக அருமையான, முக்கியமான நேரம் என்று கருதுகிறேன். இதுவரையிலே தமிழகத்து முதலமைச்சர்களாயிருந்தவர்கள், வெவ்வேறு பகுதிகளைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். இப்பொழுது முதலமைச்சர் இடத்தை அலங்கரிப்பவர் திருவள்ளுவர் பிறந்த, அவருக்கு ஒரே கோவிலைக் கொண்டுள்ள மயிலாப்பூரைச் சார்ந்தவர்கள்; அங்கே வாழ்கிறவர்கள். ஆகவே அவர்களுடைய பதவி காலத்தில் திருவள்ளுவர் தினத்தை விடுமுறை நாளாகப் பிரகடனம் செய்தால் அது அவருக்கும், அவர் சார்ந்து இருக்கும் மயிலைக்கும் ஒரு நல்ல பெயரைத் தேடிக் கொடுக்கும் என்று கருதுகிறேன்.

137883

இன்றைக்குப் பல தினங்களை நம் சர்க்கார் கொண்டாடுகிறது. உதாரணமாக உத்தமர் காந்தியடிகள் மறைந்த தினத்தை 'சர்வோதய தினம்' என்று கொண்டாடுகிறோம். நேரு அவர்கள் பிறந்த நாளை 'குழந்தைகள் தினம்' என்று வைத்துக் கொண்டாடுகிறோம் (கனம் திரு. எம். பக்தவத்சலம்: அன்று விடுமுறை அல்ல) விடுமுறை அல்ல என்று சொல்லுகிறார். ஆனாலும் அந்தத் தினத்தைக் கொண்டாடுகிறோம். அதேபோல் முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் பிறந்த நாளை 'பஞ்சாயத்து தினம்' என்று கொண்டாட வேண்டும் என்ற கட்டளைகள் போடுகிறோம்.

அதேபோல திருவள்ளுவருடைய தினத்தை நாம் அனுஷ்டிக்க வேண்டுமென்று விரும்புவதற்குக் காரணம் திருவள்ளுவர் காட்டிய உயர்ந்த நெறி, உயர்ந்த பண்புகள் நாடெங்கிலும் பரவ வேண்டும் என்பதுதான். என்ன காரணத்தினாலோ தெரியவில்லை. கடந்த ஓர் ஆண்டு காலமாக தமிழகத்தில் எதைக் கண்டாலும் எரிச்சல் அடைகிற சுபாவம் வாலிபர்களுக்கு மத்தியில் இல்லை—வயது முதிர்ந்தவர்களிடத்தில் ஏற்பட்டு வருகிறது. அந்த எரிச்சலும் அரசியல் காரணத்தினால் மிகமிக அதிகமாக ஏற்பட்டு வருகிறது. தமிழ்நாடு என்றைக்கும் அன்பு நெறியிலேயே சென்ற நாடு, அன்பே தெய்வம் என்று வழிபட்ட நாடு என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அன்பு நெறியை, அன்பு வழியை நிலைநாட்ட வேண்டிய நிலை மாறி—அரசியல் மாச்சரியங்களினால் அதற்கு மாறுபட்ட வழியில் எப்படியாவது இன்னவர்தான் வாழ வேண்டும், இன்ன கட்சிதான் வாழவேண்டுமென்ற ஒரு குறுகிய குணம் வளர்ந்து அதன் அடிப்படையில் எரிச்சல் வளர்ந்து 12-30 p.m.

என்று சொல்லப்பட்டது. இந்த மாமன்றத்தில் உத்தமர் காந்தியின் படமும், திரு. இராசகோபாலாசாரியாரின் படமும் மாட்டப்பட்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகின்றன. எத்தனையோ அரசியல் கட்சிக்காரர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களும் இருந்திருக்கிறார்கள். இங்கே காந்தி படம் இல்லையா, இராசாசி படம் இல்லையா, படேல் படத்தை மாட்டவேண்டும் என்றோ அல்லது வேறு ஒரு கட்சித்தலைவர் படத்தை மாட்ட வேண்டுமென்றோ இதுவரை ஒரு உரிமைப் பிரச்னையைக் கிளப்பவில்லை. ஆகவே இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்படுகிற இந்த நேரத்தில் இந்தத் தீர்மானம் இந்த சபையில் ஏகமனதாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு பேசிக்கொண்டிருக்கிற நான் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த மன்றத்தில் காந்தியார் படத்தைப் போல, இராஜகோபாலாசாரியார் படத்தைப் போல, திருவள்ளுவர் படமும் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டு, இந்த மன்றத்தை அலங்கரிக்க வேண்டும் என்று நான் அவர்களை மிகமிகப் பணிவன்புடன், தமிழ் உணர்ச்சியுடன் அவர்களைக் கேட்டுக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

“திருவள்ளுவருடைய நாள் என்று எந்த நாளை அனுஷ்டிப்பது? அதிலே புலவர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கிறதே” என்ற காரணத்தைக் காட்டி அந்த முறையில் தட்டிக் கழிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயலலாம். விடுதலைப் போராட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்ட நேரத்தில் வெள்ளைக்காரன் அப்படித்தான் ஒரு காரணத்தைக் காட்டி, “உங்களுக்குள் ஒற்றுமை இல்லையே. நீங்கள் ஒற்றுமையாக வந்தால் சுயராஜ்யம் தந்துவிடுகிறேன்” என்று சொல்லி தட்டிக் கழித்து வந்தான் என்பதை காங்கிரஸ் கட்சி அமைச்சர்களே பல மேடைகளில் பேசி கேலி செய்தது உண்டு அப்படி “புலவர்களே, நீங்கள் எல்லாம் ஒற்றுமையாக, ஒருமுகப்பட்டு திருவள்ளுவர் தினம் என்று எந்த நாளைக் குறிப்பிடலாம் என்று சொல்லுங்கள். அதற்குப் பிறகு அந்த நாளை அரசாங்கம் விடுமுறை தினமாக அனுஷ்டிப்பது பற்றி பரிசீலனை செய்யும்” என்று சமாதானம் சொல்வதிலே கனம் முதல் அமைச்சர் அவர்கள் கைதேர்ந்தவர்கள் என்று நாம் உணர்ந்திருக்கிறோம். அத்தகைய சமாதானத்தை முதல் அமைச்சர் அவர்கள் தமக்கு கேடயமாக ஆக்கிக் கொள்ளலாம். புலவர் குழுவைக் கூட்டியோ அல்லது புலவர்களுடைய ஒருமுகப்பட்ட கருத்தைத் தெரிந்துக்கொண்டோ ஒரு நாளைக் குறிப்பிடுவது என்பது இயலாத காரியமானால், புலவர்களுக்குள் ஒருமனப்பட்ட கருத்து வராவிட்டாலும் புலவர்கள் ஒன்று கூடிய நாளையே திருவள்ளுவருடைய நாளாகக் குறிப்பிட்டு அதை அரசாங்க விடுமுறை தினமாக அனுஷ்டிக்கலாம்; அல்லது அந்த வம்பே வேண்டாம் என்று இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிற இந்த நாளையே திருவள்ளுவருடைய நாள், இதுவே விடுமுறை நாளாக அனுஷ்டிக்கப்படவேண்டும் என்று தீர்மானம் செய்யலாம். இன்னும்

கொஞ்சம் சுவையாகச் சொல்லப் போனால்—திருவள்ளுவருடைய நாளாக, விடுமுறை தினமாக விடுவதற்கு ஏற்ற நாள் முதல் அமைச்சர் அவர்கள் பதவியேற்ற நாள். அந்த நாளையேகூட திருவள்ளுவருடைய நாளாகக் கொண்டாடலாம். ஆகவே திருவள்ளுவருடைய நாள் என்று ஒரு தினத்தை விடுமுறை நாளாக வைத்துக் கொண்டாடுவதற்கு, எந்த நாளை அப்படி அனுஷ்டிப்பது என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறதே என்று மயங்காமல், புலவர்களிடையே ஒற்றுமை இல்லையே என்று ஏங்காமல்—அதன் காரணமாக இந்தப் பிரச்னையைத் தட்டிக் கழிக்காமல், சமாதானம் சொல்லி இந்தத் தீர்மானத்தை ஏற்காமல் விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டுப் பிரிவினையைக் கைவிட்ட நாளையேகூட கொண்டாடலாம் என்று கனம் அங்கத்தினர் கருதவில்லையா?

திரு. மு. கருணாநிதி: இந்த உறுதியை கனம் அங்கத்தினரிடமிருந்து நான் எதிர்பார்க்கவில்லை. இந்த உறுதியை கனம் அமைச்சர் அவர்கள் தருவார்களானால் அதுபற்றி யோசிக்கத் தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் திருவள்ளுவர் கூறிய குறளுக்கு ஏற்ற இலக்கணம் பொருந்தியவர். சுருக்கமாகச் சொல்லப்போனால் திருவள்ளுவர், ஒரு ஆட்சியாளரிடத்தில் மூன்று குணங்கள் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும் என்று வரையறுக்கிறார்.

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு

என்று வள்ளுவர் கூறினார். அந்த மூன்றும் முழுக்க முழுக்க கைவரப்பெற்ற ஒருவரை இந்தத் தமிழகம் தவம் கிடந்து முதல் அமைச்சராகப் பெற்றிருக்கிறது என்று தயங்காமல் கூறலாம். திரு. பக்தவத்சலம் அவர்கள், தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகிய இந்த மூன்று குணங்களும் நிரம்பப் பெற்ற முதல் அமைச்சராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வயதான காலத்திலும் இப்படிப்பட்ட முதிய பருவத்திலும் அவர்கள் உற்சாகம் குன்றாமல் ஓடியாடி வள்ளுவர் யாத்த குறளுக்கு ஏற்றபடி தூங்காமல் பணியாற்றி வருகிறார்கள். கல்வியைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டியதில்லை. நிரம்பக் கற்றவர். நன்றாகக் கற்றுத் தெளிந்தவர். அதுபற்றி எடுத்துச் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். துணிவுடைமை என்று எடுத்துக் கொண்டால், டெல்லி சர்க்காரிடத்திலே சென்று நம்முடைய உரிமைகளுக்காகப் போராடுவதில் வேண்டுமானால் கொஞ்சம் குறைச்சலாக இருப்பார்களே தவிர, எதிர்க்கட்சிக்காரர்களை மிரட்டுவதில் அவர்களுக்கு

[திரு. இராம. அரங்கண்ணல்] [21st November 1963

வருவதைக் காண்கிரும். என்னைப் பொருத்தவரையில் இந்த மாச்சரியங்கள் மறைந்து எல்லோரையும் ஓர் நிலையில் கருத வேண்டிய அன்பு பண்பு வளரவேண்டும் என்பதுதான். அதுவும் இந்தக் கொள்கை இன்றையதினம் நம் மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்த அரசியல்வாதிகள் பின்பற்ற வேண்டிய ஒன்ருகும். அந்த ஒரு காரணத்தினுலேயே திருவள்ளுவர் நாளை அன்பு தினமாகக் கொண்டாட—பகைவனுக்கும் அருள்வாய் என்ற மொழிப்படி, யார் யார் நம்முடைய பகைவர்கள் என்று கருதுகிருேமோ அவர்களுக்குக்கூட இன்றைய தினத்தில் ஒரு நல்லது செய்ய வேண்டும் என்ற ஒரு மனப்பண்பை, ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு நடமாடும் தெய்வமாகக் கொண்டு, நடமாடுகிற தெய்வத்திற்கு பூசை செய்கிற தினமாக இன்றைய தினத்தை ஏற்படுத்தலாம் என்பது என்னுடைய கருத்தாகும். இப்படிப்பட்ட நல்ல மரபுகள், நல்ல பண்புகள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் காலத்தில் நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்தத் தீர்மானத்தை வலியுறுத்துகிருேம். நமது முதல் அமைச்சர் திருக்குறளிடத்திலே வைத்திருக்கிற மதிப்பை நான் நன்ருக உணர்வேன். அவர்களது முயற்சியின் காரணமாக ஒரு கோயிலார் திருக்குறள், ஆங்கில மொழி பெயர்ப்பு ஒன்று வெளியிட்டிருக்கின்ருர்கள். மேலும் திருவள்ளுவர் கோயிலை ஒட்டி ஒரு மண்டபம் சிறப்பான முறையில் அமைவதற்கு வேண்டிய பணியிலும் இறங்கியிருக்கிருர்கள். அதில் மிக்க ஆர்வமும் காட்டி வருகிருர்கள். அந்த வகையில் மேலும் அவருடைய புகழைப் பெருக்கித்தரும் வகையில்தான் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதானது அமையும். என்றைக்கும் பிறக்கின்ற மனிதன் இறக்கத்தான் போகிருன். இறவாத புகழை என்றும் அவர் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் அவரே எழுந்திருந்து இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை நான் முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, என் கட்சியைச் சார்ந்த புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் பேசத்தொடங்கும்போது திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம் இந்த மன்றத்தில் எல்லா கட்சிகளினுடைய பெரும்பான்மையான ஆதரவோடு நிறைவேற இருக்கின்ற நம்பிக்கையோடு பேசிக்கொண்டு இருக்கிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி இந்த மன்றத்திலே எதிர்க்கட்சியினரைப்பற்றிச் சுட்டிக் காட்டுகிற நேரத்திலே, நீங்கள் கொண்டு வருகிற நல்ல திட்டங்களை நாங்கள் வேண்டாமென்ரு சொல்கிருேம்? நீங்கள் சொல்கிற நல்ல கொள்கைகளை நிறைவேற்ற முடியாது என்ரு மறுக்கிருேம்?" என மிகத் தெளிவாக எதிர்க்கட்சியினரைப் பார்த்து கேட்டு இருக்கிருர்கள். ஆகவே, அவர்களுக்கு முழுக்க முழுக்க உடன்பாடான,

21st November 1963] [திரு. மு. கருணாநிதி]

எள்ளளவு வேறுபாடும் தெரிவிக்காத தீர்மானம் இப்போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினுல் நிச்சயமாக இந்த நன்னுளில் இந்தத் தீர்மானம் நிறைவேறி இந்த நன்னுளே தமிழகத்தின புனித நாளாகப்போகிறது என்ற நம்பிக்கையோடு நான், பேசிக்கொண்டிருக்கிறேன்.

திருவள்ளுவருடைய நினைவை விடுமுறை நாளாக ஆக்க வேண்டும் என்ற கருத்துக்குச் சொந்தக்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் என்று நான் எடுத்துக் கூற விரும்பவில்லை. அப்படிப்பட்ட நல்ல கருத்தை காங்கிரஸ் இயக்கத்தில் உள்ளவர்களும் கூடப் பரப்பி வந்திருக்கிருர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்னும் குறிப்பாக அடையாளமாகச் சொல்ல வேண்டுமென்ருல் காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்கள் தமிழக மக்களின் பிரதிநிதியாக பாராளுமன்றம் சென்று அங்கே டில்லி அமைச்சராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றபோது அஞ்சல் தலையின் மீது திருவள்ளுவருடைய உருவத்தைப் பொறிக்க வேண்டுமென்ற கருத்தினுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து அதைச் செயல் படுத்தியும் வைத்திருக்கிருர்கள் என்பதை என்றென்றும் நாம் நினைவில் கொள்ளவேண்டும், அந்த நல்ல செயலை நாம் மறந்துவிடுவதற்கு இல்லை. அந்த அடிப்படையில் மேலும் நம்பிக்கையோடு இந்தத் தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேறும் என்ற கருத்தோடு நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

இந்த மாமன்றத்தில் திருவள்ளுவருடைய நாள் ஒன்றினை அரசாங்கத்தார் குறித்து அதை விடுமுறையாக ஆக்கவேண்டும் என்ற தீர்மானம் விவாதிக்கப்படுகிற இந்த நேரத்தில் நான் மற்ருென்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். கடந்த சட்ட மன்றத்தில் ஒரு நாள் விவாதத்தின்போது திருவள்ளுவர் படம் ஒன்றினை இந்த மாமன்றத்தில் வைக்கவேண்டுமென்ற கருத்தை நான் வெளியிட்டேன். அந்தப் படத்தை நானே வாங்கித்தருவதாக இருந்தால், என்னுடைய அன்பளிப்பாக தருவதாக இருந்தால், அதை இந்த மன்றத்தில் வைப்பதற்கு ஆட்சேபனை இல்லை என மறைந்த மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ண ராவ் அவர்கள் தெரிவித்தார்கள். திருவள்ளுவர் படத்தை அன்பளிப்பாக தருவதற்கு நான் இசைந்தபோது அந்தப் படத்தை இந்த மாமன்றத்தில் வைக்கும் பிரச்னை பற்றி அவர்கள் ஆராய்ந்தபோது ஒரு கருத்தை வெளியிட்டார்கள். இந்த மன்றத்திற்குள் அந்தப் படத்தை மாட்டுவது என்பது இயலாது, இந்த மன்றத்தை ஒட்டி வெளியில் இருக்கிற தாழ்வாரத்தில்தான் மாட்ட முடியும் என்று சொல்லிவிட்டார்கள். அதற்கான காரணத்தை நான் கேட்ட நேரத்தில், இப்போது நான் திருவள்ளுவர் படத்தை இந்த மண்டபத்துக்குள் வைத்தால் பின்னர் வேறு ஒருவர் கம்பரின் படம் வைக்கவேண்டுமென்று சொல்கிருர், இன்னொருவர் காளமேகத்தின் படத்தை வைக்க வேண்டுமென்று சொல்கிருர். இப்படி அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்றபடி உரிமைப் பிரச்னையை எழுப்புவார்கள்

நாட்டுக்கு ஆற்றிய பணியையும், அவர் கொண்ட சிறப்பான கருத்துக்களையும் நாம் நினைவு படுத்திக்கொள்ளுவதோடு அல்லாது, வருகின்ற இளைய சமுதாயத்தினருக்கும் எடுத்துச் சொல்லி, நாட்டுப் பணியில் உயர்ந்த லட்சிய அடிப்படையில் அவர்கள் வாழ்வு அமைய வகை செய்கிறோமோ அப்படித்தான் வள்ளுவர் தினத்தைக் கொண்டாடுவது என்றால் அன்றையதினம் அவருடைய உயர்ந்த கருத்துக்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி மக்களுடைய சிந்தனை, செயல் எல்லாம் அவர் காட்டிய நெறியில் செல்ல வழி ஏற்படுத்த முடியும். ஆகவேதான் வள்ளுவர் தினம் என்று ஒரு நாளைக் குறித்து, அதை விடுமுறையாக விடுத்துக் கொண்டாடுவது மிகவும் அவசியம்.

வள்ளுவர் எல்லா மதத்திற்கும், எல்லா மொழி பேசுகின்ற சமயத்தினருக்கும் நீதியைப் புகட்டியிருக்கிறார்கள் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். இன்றைக்கு ருஷ்ய நாட்டிலும் கூட ருஷ்ய மொழியில் திருக்குறளை மொழி பெயர்க்கிறார்கள். வள்ளுவரை தமிழ்நாடு மட்டும் அல்ல, உலகமே நினைவு கொள்வதற்குரிய காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்று நாலடிகளாலான நாலடியாரும், இரண்டு அடிகளாலான திருக்குறளும்—மேற்கோள்கள் எடுத்துச் சொல்கிறவர்களுக்குக் கூட உறுதி வாய்ந்த சொல்லாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய அருமையான உயர்ந்த கருத்துக்களை மக்களுக்கு ஒரு நூல் வடிவில் ஆக்கித் தந்த திருவள்ளுவருடைய நாளைக் கொண்டாடி அன்றையதினம் அவர் காட்டிய நெறியில் உயர்ந்த பண்புகளை நினைத்துப் பார்ப்பது மிகவும் அவசியம்தான். அதுவும் இந்தக் காலத்தில் அது மிகவும் அவசியமானது என்று நான் கருதுகிறேன். நண்பர் திரு. மு. கருணாநிதி அவர்சளே, அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டு ஒரு நாள் விடுமுறை அளிப்பது என்று ஒத்துக்கொண்டுவிட்டால் ஏற்கனவேயே விடுமுறையாக அளிக்கப்பட்டுள்ள இரண்டாம் சனிக்கிழமையை அந்த மாதத்தில் வேலை நாளாக ஆக்கி இதற்கு ஈடு செய்து கொள்ளலாம் என்றுகூடச் சொன்னார்கள். இவ்வாறு ஏதாவது ஒரு ஏற்பாட்டை வகுத்துக் கொண்டு இந்த மாதிரியாக திருவள்ளுவருடைய நாளைக் கொண்டாட இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணை சபாநாயகர் அவர்களே, இப்போது சபைமுன் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டதீர்மானம் வள்ளுவரைப் பற்றியது. முதலாவதாக இந்தத் தீர்மானம் விவாதிக்கப்பட்ட முறையை நான் வரவேற்கிறேன். இந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும், வள்ளுவரைப் பற்றிச் சிறிது சிந்தனை செய்யக்கூடிய வாய்ப்பை இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் அளித்திருக்

கிறார். அவர்களுக்கு நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

வள்ளுவரின் அருமை பெருமைகளைப் பற்றிப் பலரும் எடுத்துக் கூறினார்கள். அது எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதுதான். வள்ளுவரைப் பற்றி வேறு கருத்து யாருக்கும் இருக்க முடியாது. வள்ளுவருடைய வழிகளை எல்லோரும் ஏகமனதாகப் பின்பற்றிக் கொண்டு வருகிறோம் என்று கூறியதை நான் வரவேற்கிறேன்; ஏற்றுக் கொள்கிறேன். இந்தத் திர்மானத்தைப் பிரேரேபித்த கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள், மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளை விடுமுறையாகக் கொண்டாடுவதை ஒப்பிட்டுக் கூறினார்கள். அவ்வாறு ஒப்பிட்டுக் கூறவேண்டிய அவசியம் இல்லையென்றுதான் நான் கூறுவேன். 'காந்தியடிகள் நாளை அரசியல் ரீதியில் கொடாடுகிறோம்; அவருடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாதவர்களும் இருக்கிறார்கள்' என்று புலவர் கோவிந்தன் அவர்கள் கூறினார்கள். ஒன்றை நான் மறுக்கிறேன். காந்தியடிகள் நாளைக் கொண்டாடுவது அரசியல் ரீதியில் அல்ல. காந்தியடிகள் இந்த நாட்டு மக்களை மட்டுமல்லாது உலக மக்கள் எல்லோரையும் உய்விக்க வந்த மகான். அவர் சிறந்த வழிகாட்டி. நாம் சீரிய வாழ்க்கை வாழ சிறந்ததொரு பாதையை அமைத்துக் கொடுத்திருக்கிறார். ஆகவேதான் காந்தியடிகள் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். அதை ஒரு விடுமுறை நாளாகக் கொண்டாடுகிறோம். 'காந்தியடிகள் சொன்னதை எல்லாம் நாம் ஏற்றுக் கொள்வதில்லை' என்ற வாதத்தைப் புலவர் கோவிந்தன் அவர்கள் கிளப்பினார்கள். அதை நான் மறுக்கவில்லை. குறள் ஆசிரியர் சொல்வதை எல்லாம் நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று சொன்னால் அது சரியா? வாதத்திற்காக எடுத்துக் கொள்வோம். குறளாசிரியர் புலால் மறுத்தலைப் பற்றிச் சொல்லுகிறார். நாம் எல்லோரும் அதை ஏற்றுக் கொள்ளுகிறோமா? ஏற்றுக் கொள்வதில்லை. அதனை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களுக்குக் கூட வள்ளுவரிடத்தில் மதிப்பு ஒன்றும் குறையவில்லை. வள்ளுவர் உலக மக்களுக்கெல்லாம் நல்வழி காட்டியவர்; நம்முடைய வாழ்க்கையைச் செம்மையாக நடத்த வள்ளுவர் கூறியதை எடுத்துப் பார்த்தாலே போதும், வேறு எதுவும் வேண்டாம். நல்வாழ்க்கைக்கு வழி வகுத்துக் கொடுத்தவர் வள்ளுவர் என்பதை உணருகிறோம்; பாராட்டுகிறோம். அதனை உலகம் உணருகிறது, பாராட்டுகிறது. கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறியது போல, குறளை ரஷ்ய மொழியிலே மொழி பெயர்த்திருக்கிறார்கள். மேலும் பல மொழிகளில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். குறளின் அருமையை உணர்ந்திருக்கிறார்கள். இதற்கு ஈடான நூல் வேறு எதுவும் இல்லை என்பதை உணர்ந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது என்பதை உணருகிறோம். இந்த மாதிரிப் பெரியவர்களைப் பாராட்டுவதோடு, கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறியது போல், அந்தப் பெரியார்கள் கூறிய வழி என்ன என்பதை அறிந்து அதைப் பின்பற்றப் பார்க்க

முறை கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பெரியாருடைய பெருமையைப்பற்றி மக்களுக்கு ஓர் உணர்வு ஏற்படும். செய்தித் தாள்களும் இந்நாளைக் கொண்டாட முன்வரும். ஆகவே இவையெல்லாம் அரசினர் விடுமுறை நாள் என்று அறிவிப்பதன் மூலமாக ஏற்படும் பலன்கள் எனக் கொள்ளலாம். இந்நாளை எல்லோரும் கொண்டாட வேண்டும். அரசினர் விடுமுறை கொடுப்பதன் காரணமாக நாங்கள் சொன்ன கருத்துக்களை ஊக்குவிக்கும் முறையில் முதல்வர் அவர்கள் திருவள்ளுவர் நாளைக் கொண்டாட வேண்டியது தான் என்கிற கருத்தினைத் தெளிவுபடக் கூறினார்கள். அந்த விடுமுறையை சாதாரணமாக இதற்கென்று ஒரு நாளை விடுமுறை நாளாகக் கொடுப்பதில் ஆட்சேபணை ஒன்றும் இல்லை என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள். அலுவலகத்தில் இருப்பவர்களும் இதை ஒத்துக்கொள்ளவேண்டும் என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள். அலுவலகத்திலுள்ள அதிகாரிகள் இதை ஒத்துக் கொள்வார்கள், அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற உறுதியான நம்பிக்கை இருப்பதால், இது எளிதாக ஈடேறும் என்று நான் கருதுகிறேன். திருவள்ளுவர் நாளைக் கொண்டாட வேண்டும் என்பதில் எங்கிருந்தும் மறுப்புரை இருக்க நியாயமில்லை. இந்த நிலையில் திருவள்ளுவர் படத்தை இந்த மன்றத்தில் திறந்து வைப்பதற்கும், இதற்கான வாய்ப்பைக் கூடிய சிக்கிரமே ஏற்படுத்துவதற்கும், இத் தீர்மானத்தின்மீது கூறப்பட்ட கருத்துக்களை எல்லாம் மனமார ஏற்றுச் செயல்புரிவதற்கும் அரசினர் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இத்தீர்மானத்தில் கருத்துக்களை முதல்வர் அவர்கள் ஒத்துக் கொண்டிருப்பதன் காரணமாக, இந்தத் தீர்மானம் வற்புறுத்தப்படாமல் இருக்கும் என்பதை எங்கள் கட்சியின் சார்பாக மன்றத்தில் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர நேர்ந்த இந்த நாளை, நான் என் வாழ்க்கையிலேயே ஒரு சிறந்த நாளாகக் கருதுகின்றேன். எதிர்க்கட்சிக்காரர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆளும் கட்சியிலுள்ளவர்கள் முழுவதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், ஏறக்குறைய ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன் என்கின்ற பெருமை எனக்கிருக்கிறது. நான் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்து பேசுகின்ற நேரத்தில் காந்தியார் பிறந்த நாளைப்பற்றிக் குறிப்பிட்ட கருத்து, காந்தியாருக்கு எந்தவிதமான இழுக்கும் கற்பிக்கும் நோக்கத்துடன் கூறின கருத்து அல்ல. எப்படிச் சில சமயத்தினர் மற்ற சமயத்தினவர்களுடைய கருத்துக்களை ஒப்புக்கொள்வதில்லையோ அது போன்று காந்தியாருடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள், காந்தியார் நாளைப்பற்றி மாறுபட்ட கருத்தைச் சொல்லக்கூடும் என்பதைத்தான் சொன்னேனே தவிர, காந்தியார் நாளைக் கொண்டாடுவதில் தவறு இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. வள்ளுவர் எல்லா சமயத்தினராலும், எல்லா அரசியல் கட்சியினராலும் போற்றப்படும் அளவுக்கு உயர்ந்த கருத்துக்கள் கொண்டவராக இருக்கிறார் என்பதை எடுத்துக் கூறினேனே தவிர, காந்தியாருக்கு இழுக்கு ஏற்படுத்துவதாக நான் கூறவில்லை என்பதை முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் கொண்டுவந்த இத்தீர்மானத்தின்மீது முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களையும், எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்துக்களையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய தீர்மானம் முழு அளவில் இப்போது நிறைவேறவில்லை என்றாலும், சீக்கிரத்திலேயே முழு அளவில் உருப்பெறும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. சிறு பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர் காலையில் சண்டை போடுவார்கள். பின்னால் மாலையில் இருவருக்கும் பேச வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். ஆனால் யார் முதலாவது பெயரைக் கூப்பிடுவது என்கின்ற மான உணர்வு மாணவர்களுக்கே உண்டாகிவிடுகிறது. அந்த முறையில் பொறுப்பிலிருக்கின்ற நம்மிடையே, எதிர்க் கட்சியினர் எவ்வளவுதான் நல்ல தீர்மானமாகக் கொண்டு வந்தாலும், அதை எப்படி ஏற்றுக்கொள்வது என்கின்ற நிலைமை இருக்குமானால், அந்த நிலைமைக்கு நான் இடமளிக்காமல், இந்தத் தீர்மானத்தை—வள்ளுவர் நாளுக்கு விடுமுறை நாள் கொடுக்கும் இத்தீர்மானத்தை—நாளைக்கே ஆளும் கட்சியிலிருந்தே கொண்டுவந்து நிறைவேற்றட்டும் என்று கூறி, அதற்கான வாய்ப்பை அளிக்கின்ற என்னுடைய இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The resolution was, by leave, withdrawn.

X.—ANNOUNCEMENT.

ARREST OF A MEMBER.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Hon. Speaker has received intimation from the Inspector-General of Police at 10-40 a.m. and from the Superintendent of Police, Salem, at 10-48 a.m. to-day about the arrest of Sri P. V. Sriramulu, representing the Krishnagiri constituency under Section 151, Criminal Procedure Code, at 16.00 hours on the 20th November 1963.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், ஸார், இது தபால் மூலம் வந்திருக்கிறதா, அல்லது தந்தி மூலம் தகவல் கிடைத்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் நான் பிரிவிலெஜ் மோஷன் கொடுத்தது 10-27 மணிக்கு ஆகும். அதற்குப் பிறகு எப்போது கிடைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER : At about midnight from Salem by telegram.

யோசனையை நான் ஏற்றுக் கொள்ளக்கூடும். வள்ளுவர் நாளுக்கு விடுமுறை விடவேண்டுமென்று அவர்கள் சொன்னதைக்கூட ஏற்றுக் கொள்ளக்கூடும். அவர்கள் ரொம்ப தாராள மனத்துடன் விட்டுக் கொடுக்கும் தன்மையுடன் 'ஒன்று இது, அல்லது அது, அல்லது இது, என்று பலவிதமாகச் சொன்னார்கள். அப்படிச் சொன்னதிலே, 'நான் பதவி ஏற்ற நாளைத் திருவள்ளுவர் நாளாக வைத்துக் கொள்ளலாம்' என்று சொன்னார்கள். உடனடியாக நான் அதை ஏற்றுக் கொள்ளுகிறேன். இதை நான் அரசாங்கத்தின் சார்பில் சொல்லுகிறேன். நான் பதவி ஏற்ற நாளை வள்ளுவர் நாளாக வைத்துக் கொள்ளலாம். நான் பதவி ஏற்ற நாள் அக்டோபர் மாதம் 2-ம் தேதி. அது காந்தி பிறந்த நாள், அது மிகவும் பொருத்தமான நாள் திருவள்ளுவர் நாளாகக் கொண்டாடுவதற்கு மிகவும் பொருத்தமான நாள். வேறு ஏதாவது ஒரு சனிக்கிழமையை திருவள்ளுவர் நாளாக வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. இதைவிட மிகவும் பொருத்தமான
1-00 p.m. நாள் காந்தி பிறந்த நாள், திருவள்ளுவர் நாளாகக் கொண்டாடுவதற்கு மிகவும் சாலச் சிறந்த நாள் என்று சொல்லலாம். அந்த முறையில் நான் பதவி ஏற்ற நாளை திருவள்ளுவர் நாளாகக் கொண்டாடலாம், எனக்கு அதில் ஆட்சேபணை ஒன்றும் இருக்க முடியாது. ஏதோ விடுமுறை கொடுக்கவேண்டுமென்றால், பள்ளிக்கூட பிள்ளைகள் வேண்டுமென்றால் லீவு கிடைக்கிறது என்று மகிழ்ச்சியடைவார்கள். ஏதோ மந்திரி வருகிறார், அதற்காக விடுமுறை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் பள்ளிப் பிள்ளைகள் வேண்டுமானால் உற்சாகம் அடையலாம், கையைத் தட்டலாம். நாம் எல்லோரும் அப்படியல்ல. மிகவும் பொறுப்பானவர்கள். திருவள்ளுவரை நாம் ஒருபொழுதும் மறக்கக்கூடாது. ஒரு நாள் மட்டும் கொண்டாடி வாண வேடிக்கை எல்லாம் வைத்துவிட்டால் போதாது. வாணவேடிக்கை செய்வதால் வெறும் புகை தான் கிளம்பும். சினிமாவில் பார்த்தால்கூட ஓரளவுக்கு மனதில் பதியும், வெறும் வாண வேடிக்கையில் எந்தவிதமான பயனும் இராது. வெறும் புகை தான் ஏறும். (குறுக்கீடு) காந்தி பிறந்த நாளை நாம் வருடக் கணக்காகக் கொண்டாடி வருகிறோம் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் அறிவார்கள். திருவள்ளுவரைப் பொறுத்த மட்டில் அவருடைய அருமை பெருமைகளைப்பற்றி நாம் எல்லோரும் உணர வேண்டும். திருவள்ளுவர் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருந்திருக்கிறார். எல்லாவிதமான வாழ்க்கைக்கும் வழிகாட்டியாக இருந்திருக்கிறார். அவருடைய கொள்கைகளில் நாம் எல்லோரும் சிந்தனையைச் செலுத்தவேண்டும். இருந்தாலும், இதற்கென்று, திருவள்ளுவர் நாளென்று தனியாக ஒரு விடுமுறை கொடுக்கவேண்டியது அவசியமில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். எந்த நாளைத் 'திருவள்ளுவர் நாள்' என்று வைத்துக் கொள்வது என்பதில் சர்ச்சை வரலாம். திருவள்ளுவர் உருவம் இதுதான் என்பதிலேயே சர்ச்சைகள் வருகின்றன. சர்ச்சை எப்போதும்தான் வரும். ஆனால் நாம் எல்லோரும்

ஒன்று சேர்ந்து ஒரு முடிவு எடுத்துவிட்டால் அதில் எல்லாம் முடிந்துவிடும். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே கருத்தை ஒப்புக்கொண்டு இதுதான் திருவள்ளுவர் உருவம் என்று சொல்லிவிட்டால், அதையே இந்த மன்றத்தில் வைப்பதற்கு முற்படலாம், அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் விடுமுறை கொடுக்கவேண்டும் என்பது கொள்கை அளவில் சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு பெரியாரின் நினைவைக் கொண்டாட வேண்டியதுதான், அதற்காக விடுமுறை நாள் மூலமாகத்தான் கொண்டாட வேண்டும் என்று கூறுகிற கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அந்த வகையில் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாததற்கு நான் வருந்துகிறேன். ஆகவே இந்தத் தீர்மானத்தையும் வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. கோவிந்தன் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை யொட்டிக் கூறப்பட்ட கருத்துக்களை இந்த அவையினுடைய முதல்வர் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியிலிருந்து தரப்படுகின்ற கருத்துக்களுக்கு ஆதரவு தருகிற வகையில், அவை முதல்வர் அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக அவை முதல்வர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையிலே இருக்கின்ற அத்துணைச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சார்பிலும் திருவள்ளுவர் படத்தை இந்த மன்றத்தில் திறந்து வைக்கலாம் என்றும், புதிதாக வேறு மண்டபத்திற்கு சட்டமன்றம் போவதாக இருந்தாலும், அதிலும் திருவள்ளுவர் படத்தை வைக்கலாம் என்றும் கனம் முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் கூறியதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். அதோடு அதை நிறைவேற்றி வைக்கின்ற வகையில் வேண்டிய ஆக்கம் செய்து தர வேண்டும் என்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக இந்த மன்றத்திலுள்ள எல்லா உறுப்பினர்களும், சட்டமன்றத் தலைவர் அவர்களும் வேண்டிய ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்றும், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் காலத்திலேயே இதை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திருவள்ளுவர் நாளாக ஒரு நாளை விடுமுறையாகக் கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றிக் கருத்து தெரிவிக்கும் நேரத்தில், ஒரு இரண்டாவது சனிக்கிழமையை விடுமுறையாகக் கொடுப்பதில் தனக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லையென்றும், அதை வேண்டுமானால் உடனடியாக ஏற்றுக்கொள்ளலாம் என்றும் முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்விதம் தனியாக விடுமுறை நாள் விடப்படுமானால், அந்நாள் அரசினரால் விடுமுறையாகக் கொண்டாடப்படுமானால், அந்நாளுக்கு ஒரு பெருமை இருக்கும். அதோடு விடுமுறை நாள் எதற்காக விடப்பட்டிருக்கிறதோ, யாருக்காக விடு

நினைக்கிறேன். ஒவ்வொரு நாளும், ஒவ்வொருவர் வாழ்க்கை அனுபவமும் அதை எடுத்துக் காட்டுகிறது. இதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதில் எதனால் தயக்கம் இருக்கிறது அரசாங்கத்தில் என்பதைத்தான் எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. விலைவாசி உயர்வைப் பற்றி—ரிசர்வ் பாங்க் நம் தேசப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் ஸ்தாபனம்—அந்த ரிசர்வ் பாங்க் ஸ்தாபனம் ஆண்டு அறிக்கையில் எவ்வளவு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று பாருங்கள். 1962-63-ம் ஆண்டில் உபயோகப் பண்டங்கள் விலைவாசி 7.3 சத விகிதம் உயர்ந்திருக்கிறது மொத்தமாக. அதில் அவர்கள் சொல்லுவது—கடந்த 2, 3 வருஷங்களாக விலைவாசி உயர்வு சற்று குறைந்ததாக இருந்தது, தீவிரமாக உயரவில்லை. 1962-63-ல் உயர்ந்திருப்பது பயங்கரமாக இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலும் எந்தப் பொருள் சம்பந்தப்பட்ட வரையில் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிடுகிறார்களென்றால்—

'All the constituent groups contributed to the rise in the general price index over the year but the major contribution was from food articles which went up by 7.3 per cent. The increase in this group was mainly in the prices of rice, pulses, sugar and gur which rose by 14.1 per cent, 5.7 per cent, 4.8 per cent and 38 per cent, respectively '.

உணவுப் பண்டத்தின் விலை மட்டும் இந்த வருஷத்தில் எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பதற்கு புள்ளிவிவரம் இது. மொத்தத்தில் 7.3 சதவிகிதம் இருந்தாலும், அரிசி விலை மட்டும் 16.1 சதவிகிதம் இந்த ஒரு வருஷத்தில் உயர்ந்திருக்கிறது. பருப்பு வகையில் 5.7 சதவிகிதம் அதாவது கிட்டத்தட்ட 6 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். விறகு—குடும்பத்திற்கு, தொழிலாளர்களுக்கு, நடுத்தர வர்க்கத்தினருக்கு அவசியமான விறகு 21.2 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நமது வாழ்க்கையை நடத்துவதற்கு எதெல்லாம் அவசியமோ அதெல்லாம் அதிகமாக உயர்ந்திருக்கிறது. மற்ற உபயோகப் பொருள்கள், துணி, சோப் எல்லாம் அதற்குத் தகுந்த மாதிரி உயர்ந்திருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்து சராசரி பார்க்கும்போது 7.3 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ரிப்போர்ட்டிலே குறிப்பிடுகிறார்கள்—

'That prices have continued to rise despite these measures highlights the seriousness of the problem and emphasises once again the need for every efforts to maintain a reasonable degree of financial stability while reinforcing the measures for defence and development.'

பாதுகாப்பு, தேச வளர்ச்சி இந்த இரண்டையும் உத்தேசித்து விலைவாசியைச் சம நிலையில் வைத்திருக்க வேண்டிய அவசியத்தை

வலியுறுத்துகிறது. விலைவாசி ஏற்றமானது பயங்கரமாக, அபாயகரமாக ஏறுகிறது என்று ரிசர்வ் பாங்க் சுட்டிக் காட்டுகிறது. அவர்கள் சுட்டித் தான் காட்ட முடியும். அவர்களுக்குப் பூர்ண அதிகாரம் கிடையாது. அவர்கள் யோசனை சொல்லத் தான் முடியும். அதை நிறைவேற்றும் உரிமை மத்திய பார்லிமெண்டிடமும், அரசாங்கத்திடமும், சட்ட சபைகளிடமும் தான் இருக்கிறது. இவைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்? விலைவாசியை ஒரே நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லிக் கொண்டு ஏற்றிக்கொண்டு போவதில் அர்த்தம் இல்லை என்று சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது. முக்கியமாக, பதுக்கலைத் தடுக்கவேண்டும் என்று சொன்னால், அது எப்படி நடைபெறுகிறது, அதனுடைய பொருளாதாரம் என்ன என்று பார்க்கவேண்டும். வியாபாரிகள் பதுக்க பண வசதி செய்து கொடுப்பது யார்? அவர்களிடம் அவ்வளவு பண வசதி இருக்கிறதா? அவர்களுக்குப் பண வசதி கொடுப்பது பாங்குகள் மூலம். இன்னொன்று என்ன? அரசாங்க வரியை ஏமாற்றி இரண்டு கணக்கு வைத்து, கள்ளத்தனமாகப் பணம் வைத்திருக்கிறார்கள். நல்ல நோட்டுகளை, கள்ளத்தனமாகக் கணக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். அது ஒரு அபாயம் என்று மத்திய அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஹோர்டிங் ஏற்படும் வகையில் உணவுப் பண்டங்களின் பேரில் பாங்குகள் அட்வான்ஸ் கொடுப்பது அதிகமாக ஆகியிருக்கிறது. இன்னொன்று, கள்ளத்தனமாகப் பணத்தைச் சேர்த்திருக்கிறார்கள். சாதாரண மக்கள் அல்ல. சாதாரண மக்களிடத்தில் எங்கே பணம் இருக்கிறது? யார் வருமான வரி, விற்பனை வரி செலுத்துகிறார்களோ அவர்கள் இரண்டு விதமான கணக்குகளை எழுதி வரியைக் கொடுக்காமல் ஏமாற்றிக் கள்ளத்தனமாகப் பணத்தை சேர்த்து வைத்திருக்கிறார்கள். உழைக்கக் கூடிய மக்கள், நடுத்தர வர்க்கத்தினர் இந்த மாதிரி கணக்கு எழுதி, வரியை ஏமாற்ற வசதி கிடையாது. நாம் வாங்கக் கூடிய பொருள் மீது வரியைப் போட்டு வசூல் செய்து விடுகிறார்கள். பெரிய முதலாளிகளுக்கு, வியாபாரிகளுக்கு, இப்பேர்ப்பட்டவர்களுக்குத் தான் இந்த வசதி இருக்கிறது. ஓரளவுக்கு நிதி அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்ட மாதிரி சினிமா தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு இந்த வசதி இருக்கிறது. இதைத் தேசத்திற்கு ஏற்பட்ட பீடையாக, சமூகத் துரோகமான காரியம் என்று கருதி நடவடிக்கை எடுக்காமல் சோஷலிஸம் பற்றியும், ஜனநாயகத்தைப் பற்றியும் பேசுவதில் அர்த்தம் இல்லாமல் போய்விடும். அதிலெல்லாம் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படாது என்று அமைச்சருக்கும் ஆளும் கட்சிக்கும் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். நேற்றைய தினம் அவர்கள் ஜெய்ப்பூர் தீர்மானத்தைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள். அவர்கள் அதை விவாதித்து அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதாகப் பத்திரிகைச் செய்தி வெளிவந்திருப்பதைப் பார்த்து நான் சந்தோஷம் அடைகிறேன்.

வேண்டும். ஆனால், அதற்கு என்று ஒரு நாள் விடுமுறையாக விட்டு வள்ளுவருடைய நாளைக் கொண்டாடினால்தான் அவருடைய அருமை பெருமைகளை உணர்ந்து கொள்ள முடியும் என்று சொல்வது அவ்வளவு சரியானது அல்ல. அவ்வாறு விடுமுறை விட வேண்டுமென்று கூறினால், அந்த முறையில் இன்னும் பல பெரியார்களை நினைவுபடுத்தும் வகையில் விடுமுறை விட வேண்டிய நிலைமை ஏற்படும். இன்னும் எவ்வளவோ பெரியார்கள் இருக்கிறார்கள். புத்தரை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு விழாவிலே நான் கலந்து கொண்டபோது, புத்தர் பிறந்தநாளை விடுமுறையாக விட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த முக்கியமான அங்கத்தினர் ஒருவர் என்னிடம் கூறினார். வள்ளுவன் விழா, கம்பன் விழா என்ற முறையிலே ஒன்றோடொன்று ஒப்பிடக் கூடியது அல்ல. கம்பன் சிறந்த ஒரு கவிஞன், ஒப்புயர்வற்ற கவிஞன் என்ற காரணத்தால் ஏன் கம்பன் திருநாள் கொண்டாடக் கூடாது என்று கேட்கலாம். ஆனால் கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள் கூறியது போல் அது வாதமல்ல. கம்பனுக்கு, பாரதிக்கு விடுமுறை இல்லாமல் குறள் ஆசிரியருக்கு மட்டும் திரு நாள் கொண்டாட விடுமுறை விடுவதா என்று கேட்பதற்கில்லை. வள்ளுவர் அநாதிதான்; ஆனால் விடுமுறை விட்டுத்தான் வள்ளுவருடைய அருமை பெருமைகளைக் கொண்டாட வேண்டுமென்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

கனம் அங்கதினர் திராவிட முன்னேற்றக் கழகத் துணை தலைவர் அவர்கள், இந்த மன்றத்தின் உள்ளே வள்ளுவருடைய உருவப் படத்தை வைப்பது பற்றி எடுத்துக் கூறினார்கள். இந்த மன்றத்தின் உள்ளே வள்ளுவருடைய உருவப் படத்தை வைப்பதிலே ஏதோ ஆட்சேபணை இருந்ததாகக் கூறினார்கள். இந்த மன்றத்தின் உள்ளே வள்ளுவருடைய உருவப்படத்தை வைப்பதிலே ஆட்சேபத்திற்கு இடம் ஒன்றும் இல்லையென்றுதான் நான் உணருகிறேன். முன்பு நான், 'கனம் தி.மு.க. துணைத் தலைவர் அவர்கள் வள்ளுவருடைய உருவப்படத்தை அளித்தால் ஏற்றுக்கொள்ளப்படும்' என்று கூறினேன். அவ்வாறு ஒருவர் அளிப்பதற்குப் பதிலாக இந்த மன்றம் அந்த உருவப் படத்தை அளிக்கட்டும். இந்த மன்ற அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து, எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உருவப்படத்தைத் தயாரித்துத் தருவார்களேயானால், தகுந்தவர்களைக் கொண்டு வள்ளுவருடைய உருவப்படத்தை இந்த மன்றத்தினுள்ளே திறந்து வைக்கலாம், புதிய மண்டபம் கட்டிப் போனாலும் அங்கும் திருவள்ளுவர் காட்சி அளிக்கவேண்டுமென்ற முறையிலே அவருடைய உருவப்படத்தை வைக்கலாம். (ஆரவாரம்) திருவள்ளுவர் இந்த மன்றத்திலே காட்சியளிப்பது நமக்குப் பெரிய நலனை விளைவிக்கும். நாம் மிக உயர்ந்த பொறுப்பை வகிக்கிறோம்; மக்களுக்குத் தொண்டு புரிகிறோம். இந்த மன்றத்திலே ஒரு விஷயத்தைப் பற்றி கருத்தைத் தெரிவிக்கும்போதெல்லாம் வள்ளுவரைப் பார்த்து, வள்ளுவருடைய உபதேசங்களை மனதில் கொண்டு சீரிய வகையில் தொண்டாற்றும் பெரிய வாய்ப்புக் கிடைக்கும் என்பதில்

ஐயமில்லை. இன்னொன்றும்கூடக் கூறுவேன்; இந்த மன்றத்திலேயே ஒரு நாளை வள்ளுவர் நாள் என்றுகூடக் கொண்டாடலாம். விடுமுறை விட்டால் வீட்டிலே போய் சீட்டாடிக் கொண்டிருப்பார்கள், அல்லது சினிமாவுக்குப் போவார்கள். இந்த மன்றத்திலே வள்ளுவர் நாள் என்று வைத்து அன்று வள்ளுவரைப் பற்றியும் அவர் கூறிய கருத்துக்களை எவ்வளவு தூரம் பின்பற்றுகிறோம், இன்னும் எவ்வளவு தூரம் பின்பற்ற வேண்டும் என்பது பற்றியெல்லாம் விவாதிக்கலாம். அரசியல் துறையிலே, சர்க்கார் துறையிலே, கல்வித் துறையிலே இன்னும் மற்றப் பல துறைகளிலே அவர்கள் என்ன வழி காட்டியிருக்கிறார்கள், அந்த வழி முறைகளை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பது பற்றியெல்லாம் பேசலாம். அது பற்றியெல்லாம் முன்னாலேயே தயார் செய்யாமலே பேசக்கூடிய புலவர்கள், அறிஞர்கள் இருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்களுக்கு அந்த அளவுக்கு வள்ளுவரைப் பற்றி எடுத்துக் கூற முடியாவிட்டாலும் வள்ளுவரைப் பற்றிச் சிந்தனை செலுத்த முடியும். இந்த மன்றத்தைச் சார்ந்த வகையில் 'வள்ளுவர் வகுப்பு' ஒன்று வைத்து நடத்துவதுகூட நல்லது என்ற கருத்தையும் நான் கூற விரும்புகிறேன். இங்குள்ள ஒரு சிலர் வள்ளுவரைப் பற்றி நன்றாக உணர்ந்தவர்களாக இருக்கலாம். எங்களைப் போன்றவர்களுக்கு அவ்வளவு தூரம் தெரியாது. ஆகவே, சிறந்த ஒரு ஆசிரியரைக் கொண்டு வாரந்தோறும் வள்ளுவர் வகுப்பை வைத்து நடத்தலாம்.

தி.மு.க. துணைத் தலைவர் அவர்கள் இன்னொரு யோசனையையும் கூறினார்கள். இரண்டாவது சனிக்கிழமையை விடுமுறையாக விடுவதைக்கூட எடுத்து விட்டு அந்த சனிக்கிழமையை வள்ளுவர் நாளாகக் கொண்டாடலாம் என்று சொன்னார்கள். ஏற்கனவே உள்ள விடுமுறையை வள்ளுவர் நாள் என்று அனுபவிப்பதிலே ஆட்சேபத்திற்கு ஒன்றும் இடம் இல்லை. நான் அதை உடனடியாக ஏற்றுக் கொள்ளக்கூடும். ஆனால், ஏற்கனவே இருக்கக்கூடிய ஒரு விடுமுறையைத் தவிர்த்து அந்த விடுமுறைக்குப் பதிலாக வேறு ஒரு நாளைக் கொண்டாடுவது என்றால் அதற்கு மற்றவர்கள், முக்கியமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோருடைய அங்கீகாரமும் வேண்டும். கனம் தி.மு.க. துணைத் தலைவர் அவர்கள் என்னிடம் ரொம்பப் பரிவாகப் பேசினார்கள். கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் கூறியதுபோல், என்னிடமிருந்து ஏதோ ஒன்றைப் பெறவேண்டுமென்ற குறுகிய நோக்கத்தோடு அவர்கள் பேசவில்லை. உண்மையில், மனப்பூர்வமாகப் பேசினார்கள் என்று நான் ஏற்றுக் கொள்கிறேன். எனக்கு அவ்வளவு பிடிவாதமும் இல்லை. அதைக் கனம் திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது தீர்மானத்தைப் பிரேரேபித்த கனம் அங்கத்தினர் அவர்களுடைய வேண்டுகோளை அப்படியே ஏற்றுக் கொண்டு தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருந்தாலும், அதற்கு விளக்கம் அளித்த தி.மு.க. துணைத் தலைவர் அவர்களுடைய

திரு. மு. கருணாநிதி : சட்ட மன்ற உறுப்பினர் திரு. கமலநாதன் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அந்தத் தகவலும் கனம் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

MR. DEPUTY SPEAKER : If information is received, it will be communicated to the House.

SRI K. A. MATHIALAGAN rose . . .

MR. DEPUTY SPEAKER : No discussion will be allowed.

IX.—NON-OFFICIAL RESOLUTIONS—*cont.*

(3) APPOINTMENT OF A COMMITTEE TO SECURE REDUCTION OF PRICES OF ESSENTIAL ARTICLES OF LIFE, TO PREVENT HOARDING, SPECULATION AND BLACKMARKETING AND TO ARREST THE GROWING MENACE OF ADULTERATION.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன். பிரேரேபித்து நான் பேசிய பிறகு 1-30 மணிக்கு இருக்கக் கூடிய இடத்தில் நிறுத்திவிட்டு அடுத்த நான்-அஃபிஷியல் கூட்டத்தில் அதை முடித்துக்கொள்ளலாம் என்பது என்னுடைய யோசனை. அல்லது நான் 10 நிமிஷம் பேசிய பிறகு அட்ஜர்ன் பண்ணினாலும் சரி. பாக்கியை நான் அடுத்த கூட்டத்தில் பேசிக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த விஷயம் என்றைக்கும் பழசு ஆகப் போவதில்லை.

Sir, I move—

'This House resolves to recommend to the Government that a Committee of enquiry be appointed for enquiry and report on the measures to be taken by the Government to secure reduction of prices of essential articles of life, to prevent hoarding, speculation and blackmarketing and to arrest the growing menace of adulteration.'

SRI K. R. NALLASIVAM : Sir, I second it.

(திரு. ஆர். வி. சுவாமிநாதன் குறுக்கீடு.)

MR. DEPUTY SPEAKER : Resolution moved—

'This House resolves to recommend to the Government that a committee of enquiry be appointed for enquiry and report on the measures to be taken by the Government to secure reduction of prices of essential articles of life, to prevent hoarding, speculation and blackmarketing and to arrest the growing menace of adulteration.'

திரு. மீ. கலியாணசுந்தரம் : விலைவாசி குறையவேண்டும் என்பது கட்சி பிரச்னை அல்ல. அது உண்மையான தேசியப் பிரச்னை. இதைக் கனம் அங்கத்தினர் திரு. ஆர். வி. சுவாமி

நாதன் அவர்களே ஆதரித்திருக்கலாம். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி போட்ட தீர்மானமேயொழிய நான் புதிதாக ஒன்றும் கொண்டு வந்து விடவில்லை.

MR. DEPUTY SPEAKER : There should be no discussion across the table. The hon. Member should address the Chair.

திரு. மீ. கலியாணசுந்தரம், நான் உங்கள் மூலமாகத்தான் சொல்லுகிறேன். அவர்களிடத்தில் 'நீங்கள்' என்று பேசவில்லையே.

இந்தத் தீர்மானத்தை, நான் இதிலே இருக்கக் கூடிய சிக்கல்களை, கஷ்டங்களை எல்லாம் உணர்ந்தே பிரேரேபிக்கிறேன். இதிலே நம் ராஜ்ய சர்க்கார் பொறுப்பு என்ன, எந்த அளவுக்கு சாத்தியம், எந்த அளவுக்கு சாத்தியம் இல்லை என்பதை உணர்ந்துதான் பேசுகிறேன். இது ஒரு ராஜ்யத்தில் மட்டும் எவ்வளவு தீவிரமாக நடவடிக்கை எடுத்தாலும் சமாளிக்கக் கூடிய பிரச்னை என்று நான் கருதவில்லை. இருப்பினும், மத்திய அரசாங்கத்திற்கும், திட்டக் கமிஷனுக்கும், தேசீய அபிவிருத்திக் கவுன்ஸிலுக்கும், முதல் அமைச்சர் மாநாடுகளுக்கும் யோசனைகளாக இங்கு நடைபெறும் விவாதம் இருக்கவேண்டும் என்று இந்தத் தீர்மானத்தை இந்தச் சபையில் பிரேரேபித்து எனது கருத்துக்களைப் பேச விரும்புகிறேன்.

இதில் இருக்கிற முக்கிய அம்சங்களைக் கவனிக்கவேண்டும். ஒன்று விலைவாசி ஜனங்கள் வாங்கும் சக்திக்குத் தகுந்த மாதிரி குறையவேண்டும். அது ஒரே நிலையில் இருக்கவேண்டும். அப்படி இருக்கவேண்டுமானால் அதை அடைய முடியாத முறையில் இருக்கக் கூடியது என்ன? பதுக்கலைத் (ஹோர்டிங்) தடை செய்ய வேண்டும். மலிவு விலையில் வாங்கி அதிக விலையில் விற்க வேண்டும் என்று பதுக்கி வைக்கிறார்களே (ஸ்பெகுலேஷன்), அதைத் தடுக்கவேண்டும். விலையை நிர்ணயித்துக் கட்டுப்பாடு ஏற்படுத்தினால் கள்ள மார்க்கெட் ஏற்படுகிறதே, அதைத் தடை செய்ய வேண்டும். இவைகளைப் போலே இன்னும் பயங்கரமான ஆபத்து, கலப்படம். கலப்படம் இல்லாத பொருளே இல்லை என்று அநேகமாகச் சொல்லலாம். நாம் கொள்ளும் உணவுப் பண்டம், மருந்துகள் எல்லாவற்றிலுமே கலப்படம் பரவியிருக்கிறது என்பதை அரசாங்கத்தினுடைய பல அறிக்கைகளிலிருந்தே புரிந்துகொள்ளலாம். ஆகவே இந்தத் தீர்மானம் மிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன். இதில் எல்லோரும் கருத்துக்களைச் சொல்லி, இதை ஏகோபித்து நிறைவேற்றவேண்டும், வோட்டுக்குக்கூட விடக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

விலைவாசி உயர்வைப் பற்றி தேசம் பூராவும் இருக்கக் கூடிய நிலைமையை நான் கூறவேண்டுமென்ற அவசியம்கூட இல்லை. மேற்கோள் காட்டவேண்டுமென்ற அவசியம் கூட இல்லை என்று

ஜெய்பூரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இனிமேல் அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டு அங்கே தீர்மானமாக நிறைவேற்றப்படும் என்பதிலே எனக்கு நம்பிக்கை உண்டு. காங்கிரஸ்காரர்களே அது மாதிரி சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இது கூட இன்னும் தீவிரமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறவர்கள் காங்கிரஸிலேயே தோன்றியிருக்கிறார்கள். விலைவாசியை ஒரே நிலையில் வைக்கவேண்டும், ஜனநாயக வழியிலே சோஷலிஸத்தை நோக்கிப் போகவேண்டும் என்பதை அநேகமாக நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும், சுதந்திரா கட்சியைத் தவிர, ஒத்துக் கொள்வார்கள். கம்யூனிஸ்டு கட்சியும் ஜனநாயக முறையில் சோஷலிஸத்தை அமுலாக்க வேண்டுமென்று தான் விரும்புகிறது. ராணுவப் புரட்சி மூலமோ அல்லது உள்நாட்டுச் சண்டை மூலமோ சோஷலிஸத்தை அமைக்கவேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சி சொல்லவில்லை. கம்யூனிஸ்டு கட்சி தெளிவாகச் சொல்லியிருக்கிறது என்னவென்றால், பார்லிமெண்டரி முறை மூலம், ஜனநாயக முறைப்படி, சட்டங்களை இயற்றுவதன் மூலம் சோஷலிஸம் அமையவேண்டும் என்பது தான், மிகத் தீவிரமான சோஷலிஸம் வேண்டும் என்று சொல்லுகிற கம்யூனிஸ்டு கட்சியும் கூட. ஜனநாயகத்தின் மூலம் அமைவது சோஷலிஸமா, இல்லையா என்பது விவாதத்திற்குரிய பிரச்னை இல்லை. சோஷலிஸம் வேண்டுமா, வேண்டாமா என்பது தான் விவாதத்திற்குரிய பிரச்னை. சோஷலிஸம் மூலமாக என்ன செய்ய முடியும் என்பதை முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். மனிதனுக்குத் தேவையான, ஜனங்களுக்குத் தேவையான உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு, கல்வி இவை நான்கும் கிடைக்கவேண்டும். சோஷலிஸம் பற்றி மார்க்ஸ் என்ன சொன்னார், லெனின் என்ன சொன்னார் என்பது பிரச்னை அல்ல. நாட்டிலே பிறந்த அத்தனை மக்களுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு, கல்வி இவைகளை நாம் அளிக்கவேண்டியது மிகவும் அவசியம். இவைகளை அளிக்காவிட்டால், ஜனநாயகம் இருக்கிறது என்று சொல்லுவதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டும். விலைவாசி ஒரே நிலையில் இருந்தால்தான் அமைதியாக உற்பத்தி நடக்க முடியும். பெரும்பாலான தொழிற் சச்சரவுகள் எதனால் ஏற்படுகின்றன? பஞ்சப்படி போதாது என்ற காரணத்தினாலும், போனஸ் போதாது என்ற காரணத்தினாலும், சம்பளம் போதாது என்ற காரணத்தினாலும் தொழிற் சச்சரவுகள் ஏற்படுகின்றன. தொழிலில் அமைதி குன்றுகிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்களும் திறமையுடன் அமைதியாக வேலை செய்யவேண்டுமென்று சொன்னால், விலைவாசி ஒரே நிலையில் இருக்க வேண்டுமென்பது ரொம்ப முக்கியம். சில நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். நமது உணவு அமைச்சர் கையிலேயே கூட்டுறவு இலாகாவும் இருக்கிறது. கூட்டுறவு பண்டகச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுப் பண்டகச்

சாலைகள் அமைப்பதன் மூலம் ஓரளவுக்குக் கொள்முதல் செய்து, பொது மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கொடுக்கிறார்கள் என்பது உண்மை. அவை எங்கே நன்றாக இயங்குகின்றதோ, தன்னலமற்ற ஊழியர்கள் எங்கே வேலை செய்கின்றார்களோ அங்கெல்லாம் கூட்டுறவு பண்டகசாலைகளில் வெளியிலே மார்க்கெட்டில் கிடைப்பதை விட பண்டங்களின் விலை கொஞ்சம் குறைவாக இருக்கிறது. ஆனால், பெரும்பாலான இடங்களில் மார்க்கெட் விலையை விட அதிகமாக இருக்கிறது. இப்பொழுதிருக்கிற கொள்முதல் திட்டத்தைப்பற்றி ஒரு கேள்விக்கு இன்று காலையில் முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். 7,000 டன் கொள்முதல் செய்யலாம் என்று எதிர்பார்க்கிறோம் என்று சொன்னார்கள். ஒரு லட்சம் டன் கொள்முதல் செய்வதில் வெற்றி அடைந்தால் கூட எனக்குச் சந்தோஷம் தான். கொள்முதல் திட்டத்திலிருந்து என்ன நன்மைகள் என்று பார்க்கப்போனால், விவசாயிகளுக்கு நன்மை கிடையாது, பண்டங்களை உபயோகப்படுத்தக் கூடியவர்களுக்கும் நன்மை கிடையாது. மில்காரர்கள் அரசாங்கத்திற்கு 10 டன் கொடுத்துவிட்டு, மக்களுக்கு விற்கக்கூடிய அரிசியில் அந்த விலை வித்தியாசத்தை வைத்து விற்பனை செய்து சரிக்கட்டி விடுகிறார்கள். அதனால் மலிவான விலைக்கு அரிசி கிடைத்துவிடுகிறது என்று சொல்லுவது சரியல்ல. மில்லர்கள் சப்ளை செய்யும் அரிசி ஸாம்பிள்களை . . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நியாய விலைக் கடைகளுக்கு அரசாங்கம் சப்ளை செய்கிறது. நியாயவிலைக் கடைகளில் குறைவான விலைக்கு அரிசி கிடைக்கவேண்டுமென்றுதான் அரசாங்கம் ப்ரொக்யூர்மெண்டு செய்கிறது. அப்படி ப்ரொக்யூர்மெண்டு செய்வதில் ஒரு பாதகமும் இல்லாமல் இருக்கவேண்டும். முக்கியமாக, அதனால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படக்கூடாது, தொல்லைகள் ஏற்படக்கூடாது. சட்டபூர்வமாக விலையை நிர்ணயம் செய்து லெவி ஸிஸ்டம் வைத்தால் அதுவும் தொல்லை அளிக்கும். அத்தகைய ஒரு கண்ட்ரோல் இல்லாமல் இருக்கட்டும், விலை நிர்ணயம் செய்யாமல் இருக்கலாம் என்ற வகையில் தான் இப்பொழுது கவனம் செலுத்தப்படுகிறது. இது திருப்திகரமாக இல்லை என்றால், கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விவாதத்தின்போதோ அல்லது பின்னரோ உருப்படியான யோசனைகளைச் சொன்னால், அவைபற்றி அரசாங்கம் கவனம் செலுத்தலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : என்ன யோசனைகள் என்பதை நான் எழுத்து மூலம் வேண்டுமானாலும் கொடுக்கிறேன். இதுபற்றி ஒரு மெமோராண்டம் அமைச்சர் அவர்களிடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால், இப்பொழுது கொள்முதல் திட்டத்தில் இருக்கிற கஷ்டங்களைப்பற்றி காலையிலே கேள்வி நேரத்திலே ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் உறுப்பினர் திரு. தண்டாயுதபாணிப் பிள்ளை அவர்களே எடுத்துச் சொன்னார்கள். விவசாயி

[திரு. மு. கருணாநிதி] [21st November 1963

இருக்கிற துணிவுடைமை வேறு யாருக்கும் கிடையாது என்பது நிச்சயமாகத் தெரியும். தூங்காமை, கல்வி, துணிவுடைமை என்று இந்த மூன்று அழகான குணங்களையும் பெற்றிருக்கிற நமது முதல் அமைச்சர் அவர்களுடைய காலத்திலேயே இந்தத் திருவள்ளுவருடைய நாளை விடுமுறை நாளாகக் கொண்டாடுவதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் எதிர்கால சந்ததிகள் அவர்களை என்றென்றும் வாழ்த்தத் தயாராய் இருப்பார்கள். நான் இன்னும் ஒரு உண்மையை இந்தச் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன். மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை தினமாக விட்டு வருகிறோம். ஒரு திங்களில், ஒரு இரண்டாம் சனிக்கிழமையைக் கூட திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் கொண்டாட விடுமுறை தினம் என்று அறிவிக்கலாம்--இரண்டாம் சனிக்கிழமையன்று என அமையாது திங்கள் கிழமை, அல்லது செவ்வாய்க்கிழமை என்று வருமானால் அந்த திங்களில்—இரண்டாம் சனிக்கிழமையை வேலைநாளாகக் கொண்டுவிட்டு--திருவள்ளுவருடைய நினைவு நாள் என்று குறிக்கப்பட்ட தினம் என்று வருகிறதோ அன்றைக்கு விடுமுறை அளிக்க அரசாங்கம் முன்வரலாம். திருவள்ளுவருடைய தினத்தை நவம்பர் மாதம் கொண்டாடுவது என்றால்—நவம்பர் மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை விடுவதற்கு பதிலாக அந்தத் திங்களில் திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் குறித்த தினத்திற்கு விடுமுறை அளிக்கும் படியாக இந்தத் தீர்மானத்தின் மூலம் அமைத்துக்கொள்ளலாம்.

தம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய வாழ்க்கையில் எத்தனையோ கனவுகளைக் கண்டிருப்பார்கள். அந்தக் கனவுகள் நனவாகிக்கொண்டு வருவதையும் கண்டிருப்பார்கள். காரணம் சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்து நாட்டுப் பணி செய்து வருகிற முதுபெரும் தலைவர் ஆவர். அதில் ஐயம் இல்லை. அது போல விடுதலை பெற்ற இந்த நாட்டில் சிலபல ஆண்டுகளாகவே அவர் தொடர்ந்து பொறுப்பான பதவிகளில் இருந்து வருகிறார்கள். எல்லோருக்கும் ஓர் ஆசை இருந்து வந்தது. அவர் எப்போது முதல் அமைச்சராக வருவார் என்கிற அந்த ஆசையும் கூட இப்போது நிறைவேறி இருக்கிறது. அவருக்கும் நன்றாகத் தெரியும்; ஒருவர் எத்தனைதான் உயர்ந்த உயர்ந்த பொறுப்புமிக்க பதவிகளை வகித்தாலும்கூட அந்தப் பதவிகளே அவருக்குப் பெயரை நிரந்தரமாக அளிப்பது இல்லை. எதிர்காலத்தில், மனிதனது கல்லறையின் மீது பொறிக்கப்படுவது அவனது சிறப்பான சாதனைகளே. அவைதான் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களாக மிளிரும். ஒருவர் வகித்த பதவிகளையே அவருக்குப் புகழாகச் சூட்டுவதில்லை. ஆகவே நமது முதல் அமைச்சர் அவர்களுடைய சாதனையாக பொன்னெழுத்துக்களில் என்றென்றும் பொறிக்கப்படத்தக்க புகழாக அமைய இருக்கும் ஒரு காரியத்தைச் செய்யும் ஒரு சந்தர்ப்பத்தைத்தான் புலவர் கோவிந்தன் அவர்கள் நமது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தம் தீர்மானத்தின் மூலம் தந்திருக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை

DECLARATION OF 'TIRUVALLUVAR DAY' AS A PUBLIC HOLIDAY UNDER THE NEGOTIABLE INSTRUMENTS ACT

21st November 1963] [திரு. மு. கருணாநிதி]

ஏற்றுக்கொண்டு, திருவள்ளுவர் நாள் என்று ஒரு தினத்தைக் குறிப்பிட்டு விடுமுறை அளித்து, அந்தத் தினத்தில் மக்கள் திருவள்ளுவரை நினைந்து விழா எடுக்கச் சந்தர்ப்பம் அளித்தால்—அந்த விழாவில் திறப்புரையாளர் முதல் அத்தனைபேரும்—இந்த நாள் திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்று தம்முடைய முகவுரையாக, சிறப்புரையாகச் சொல்லி திரு. பக்தவத்சலம் அவர்களுக்குச் சிறப்புப் பாயிரம் பாடத் தவற மாட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு அரிய சந்தர்ப்பத்தை ஒரு எதிர்க்கட்சி இதுவரையிலும் எந்த முதல் அமைச்சருக்கும் தரவில்லை. இப்படிப்பட்ட பொன்னான சந்தர்ப்பம், மற்ற சந்தர்ப்பங்கள் அவரை நாடி வந்தது போலவே, அவரை நாடி வந்திருக்கிறது. நாங்கள் அதை அவருக்கு அளித்திருக்கிறோம். நல்ல சமயம் இதை நழுவ விடாதீர்கள் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. கருணாநிதி அவர்கள் தங்களுடைய தீர்மானத்திற்கு ஆதரவு திரட்டும் வகையில் இந்தச் சபையில் அத்தீர்மானம் ஏகோபித்து நிறைவேறும் என்று எதிர்பார்த்து முதல் அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு தூரம் மனம் இளகும்படி சொல்ல முடியுமோ, மனதில் பதியும்படி சொல்ல முடியுமோ அவ்வளவு தூரம் நயந்தும், புகழ்ந்தும் சொல்லிவிட்டார்கள். அதிலே நண்பர் திரு. கருணாநிதியின் சாகசத்திற்கு நமது முதல் அமைச்சர் அவர்கள் சளைத்தவர் அல்ல, ஏமாந்தவரும் அல்ல. அவர்கள் சொன்னார்களே, துணிவுடைமை என்று--அந்தத் துணிவுடைமை அவர்களிடத்தில் இருக்கிறது என்று இந்த விஷயத்தில் அவர்கள் காட்டுவார்கள் என்று நினைக்கிறேன். இப்போதே அவர்கள் என்ன பதில் சொல்வார்கள் என்று எனக்குத் தெரியும். "பெரியவர்களுடைய நாளைக் கொண்டாடத்தான் வேண்டும். பெரியவர்களுடைய நாளைக் கொண்டாட அவர்கள் என்ன என்ன கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்களோ அந்த அடிப்படையில் உழைப்பதற்கு உறுதி கொள்ள வேண்டும். அதற்கு விடுமுறை என்னதற்கு? அதுவும் பெரியவர்களுடைய நாளை ஒருநாள் கொண்டாடினால் போதுமா? வருஷம் பூராவும் கொண்டாட வேண்டும். மூச்சு விடுகின்ற ஒவ்வொரு கணமும் உயர்ந்த பெரியவர்களை நினைத்துக் கொண்டுதான் செயல்படவேண்டும் விடுமுறை கொடுத்து அந்த நாளைக் கொண்டாடவேண்டும் என்பது இல்லை" என்றெல்லாம் மிக நயமாகத் திறமையாகப் பதில் அளித்துவிடக்கூடிய ஆற்றல் பெற்றவர் நமது முதல் அமைச்சர் அவர்கள். (கனம் திரு. வெ. ராமையா: உங்கள் கருத்து என்ன?) அதைத்தான் சொல்ல வருகிறேன். கொஞ்சம் பொறுமையாக இருந்தால் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன்.

வள்ளுவருடைய நினைவு தினமாக ஒரு நாளைக் கொண்டாடுவது மிகவும் அவசியமாகும். எப்படி காந்தியின் நினைவு நாளைக் கொண்டாடுகிறோம் என்றால் அன்றைய தினம் அந்த உத்தமர் இந்

APPENDIX I.

[*Vide* answer to starred question No. 378 on page 433.]

The list of the members of the Madras State Advisory Board for National Savings.

Chairman.

Sri G. BHUVARAHAN, Minister for Information and Publicity.

Vice-Chairman.

Dr. (Kumari) S. *Vijayalakshmi.*

Secretary.

Regional Director, National Savings.

Official Members.

1 Postmaster-General, Madras-2.

2 Director of Information and Publicity, Government of Madras.

3 Joint Secretary to Government, Finance Department, Government of Madras.

Non-Official Members.

1 Sri Ramaswami Naidu, I.N.T.U.C., Coimbatore.

2 Sri G. Venkataraman, M.L.A., Salem.

3 Sri P. Ramachandran, M.L.A., North Arcot.

4 Sri K. B. Palani, M.L.A., Thanjavur.

5 Sri M. Kalyanasundaram, M.L.A., Tiruchirappalli.

6 Sri R. Krishnaswami Naidu, M.L.A., Ramanathapuram.

7 Srimathi T. N. Anandanayaki, M.L.A., Madras.

8 Sri K. Gurumoorthi, Care of Messrs. Simpson and Company Workers' Union, No. 72, Harris Road, Madras-2.

9 Sri H. C. Kothari, No. 3, Rutland Gate, Madras-6.

10 Srimathi P. K. R. Lakshmikantham, M.L.A., Madurai.

11 Srimathi Indira Ramadurai, Madras.

Co-opted Members.

1 Sri M. N. K. Chari, Chairman, Panchayat Union, Poonamallee.

2 Sri M. K. Dakshinamurthy, Chairman, Panchayat Union, Kumarakshi.

3 Sri A. R. Subbiah Mudaliar, Chairman, Panchayat Union, Kadayanallur.

தமிழ்நாடு நேசிய சேமிப்பு ஆலோசனைச் சபையின் அங்கத்தினர் பட்டியல்:—

தலைவர்.

திரு. கோ. பூவராகன், செய்தித்துறை அமைச்சர்.

துணைத் தலைவர்.

டாக்டர் (குமாரி) விஜயலட்சுமி.

செயலாளர்.

பிராந்திய நெறியாளர், தேசீய சேமிப்புத் துறை.

அரசாங்கச் சார்புள்ள அங்கத்தினர்கள்.

1 தபால்த் துறைத் தலைமை அதிகாரி (போஸ்ட்மாஸ்டர்-ஜெனரல்), சென்னை-2.

2 தமிழ்நாடு அரசாங்கச் செய்திந் துறை நெறியாளர்.

3 நிதித் துறை இணைச் செயலாளர், தமிழ்நாடு அரசாங்கம்.

அரசாங்கச் சார்பற்ற அங்கத்தினர்கள்.

1 திரு. ராமசுவாமி நாயுடு, இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ், கோயம்புத்தூர்.

2 திரு. G. வெங்கட்ராமன், எம்.எல்.ஏ., சேலம்.

3 திரு. P. ராமச்சந்திரன், எம்.எல்.ஏ., வட ஆர்க்காடு.

4 திரு. K. B. பழனி, எம்.எல்.ஏ., தஞ்சாவூர்.

5 திரு. M. கலியாணசுந்தரம், எம்.எல்.ஏ., திருச்சிராப்பள்ளி.

6 திரு. R. கிருஷ்ணசாமி நாயுடு, எம்.எல்.ஏ., ராமநாதபுரம்.

7 திருமதி T. N. அனந்தநாயகி, எம்.எல்.ஏ., சென்னை.

8 திரு. K. குருமூர்த்தி, மெசர்ஸ் சிம்ப்சன் அண்டு கம்பெனி தொழிலாளர் யூனியன், 72, ஹாரிஸ் ரோடு, சென்னை-2.

9 திரு. H. C. கோத்தாரி, 3, ரட்லண்டு கேட், சென்னை-6.

10 திருமதி P. K. R. லக்ஷ்மிகாந்தம், எம்.எல்.ஏ., மதுரை.

11 திருமதி இந்திரா ராமதுரை, சென்னை.

சேர்த்துக்கொண்ட அங்கத்தினர்கள்

1 திரு. M. N. K. சாரி, தலைவர், பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியன்.

2 திரு. M. K. தட்சிணாமூர்த்தி, தலைவர், குமராட்சி பஞ்சாயத்து யூனியன்.

3 திரு. A. R. சுப்பையா முதலியார், தலைவர், கடயநல்லூர் பஞ்சாயத்து யூனியன்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [21st November 1963

குறை முக்கியமான காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அப்படிச்சொல்ல முடியாது. நான் இந்தக் கட்டத்தோடு நிறுத்திக் கொள்கிறேன். பிறகு தொடர்ந்து பேசுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member may continue his speech on the next non-official day.

1-30 p.m. The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.

XI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 254. *Notification issued with G.O. Ms. No. 2225, Health, dated 13th September 1963 directing that such of the provisions of Chapters I to VIII and X to XV of the Madras Public Health Act, 1939 (Madras Act III of 1939) shall apply in the Courtallam Township area under the Courtallam Township Act, 1954. [Laid on the Table of the House under section 6 (2) of the Courtallam Township Act, 1954 (Madras Act XV of 1954).]*

* 255. *Notification issued with G.O. No. 1613, Revenue, dated 30th April 1963 amending Rules 35 (1), 35 (2), 35 (3) and 36 (2) of the Madras General Sales Tax Rules, 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959).]*

* 256. *Notification issued with G.O. No. 2222, Revenue, dated 15th July 1963 amending Rule 35 (1) of the Madras General Sales Tax Rules, 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959).]*

257. *Notification issued with G.O. Ms. No. 2937, Food and Agriculture, dated 4th October 1963 regarding opening of regulated markets at Chengam, Cheyyar and Vaniyambadi in North Arcot district for the purchase and sale of groundnut. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]*

258. *Notification issued by the Collector of Coimbatore in his Ref. No. 34427/63-D4, dated 27th July 1957 regarding the removal of Sri S. Rangaswami Gounder, President, No. 15, Velampalayam*

Panchayat, Palladam taluk, Coimbatore district from the office of the President of the said panchayat with immediate effect. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

B. Reports, Notifications and other papers.

† 83. *The Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963.*

† 84. *The Madras Sugarcane Cess (Validation) Bill, 1963.*

* Placed on the table of the House on 20th November 1963.

† Circulated to Members on 16th November 1963.

Appendix II.

[Vide answer to starred question No. 386 on page 439].

(*a*) Yes Sir.

(*b*) 6.

(*c*) Vigorous action is being taken to apprehend the accused 'Mammattian' and his associates.

(*d*) Yes Sir.

(i) On 1st May 1960 a special party went to the reserve forest in Mettur limits to arrest Mammattian and his gang. On seeing the Police, the gang fired at the Police. Two of the members of the gang, Kannupian and Govindan, were killed when the Police opened fire in self-defence. The gang and Mammattian escaped in the forest with the loss of two men and two guns and ammunition.

(ii) There was an encounter between a Police party and the armed gangsters under Mammattian on 8th July 1963 morning in the reserve forest in Mettur limits, in which Sub-Inspector Sri Myilswami was injured by the gun fire of a gangster Lakshmanan who paid for it with his life when a Police constable shot at him in self-defence. Two members of the gang, Jogi and Krishna Poosari with guns and ammunition were arrested while the leader "Mammattian" managed to escape into the forest.

Further efforts are being made to arrest Mammattian and his associates.

(அ) தெரியும்.

(இ) 6.

(உ) எதிரி மம்மட்டியானேயும் அவனது சகாக்களேயும் கைது செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(எ) முயற்சி செய்தது.

(1) 1960-ம் வருஷம் மே மாதம் முதல் தேதியில் ஒரு விசேஷப் படை மம்மட்டியானேயும் அவனது கூட்டத்தாரையும் கைது செய்ய மேட்டூர் எல்லேகளிலுள்ள ரிசர்வ் காட்டிற்குச் சென்றது. போலீஸைக் கண்டவுடன், அக்கூட்டத்தார் போலீஸை நோக்கிச் சுட்டனர். அக் கூட்டத்தைச் சேர்ந்த கண்ணுப்பையனும் கோவிந்தனும் போலீசார் தற்காப்புக்காகச் சுட்டபோது மாண்டனர். இரண்டு துப்பாக்கிகளேயும், ரவைகளேயும் போட்டுவிட்டு அவர்களும் மம்மட்டியானும் காட்டிற்குள் தப்பி ஓடிவிட்டனர்.

(2) 1963-ம் வருஷம் ஜூலே மாதம் எட்டாம் தேதியில் காலே ஒரு போலீஸ் படைக்கும் ஆயுதம் தாங்கிய மம்மட்டியான் கூட்டத்தினருக்கும் மேட்டூர் எல்லேகளில் உள்ள ரிசர்வ் காட்டில் சண்டை நடந்தது, அதில் சப்-இன்ஸ்பெக்டர் திரு. மயில்சாமி என்பவர் கொள்ளேக்காரனின் துப்பாக்கிக் குண்டால் காயமடைந்தார். அதே சமயம் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் தற்காப்புக்காகச் சுட்டபோது கொள்ளேக் கூட்டத்தைச் சேர்ந்த லட்சுமணன் என்பவன் மாண்டுவிட்டான். அக் கூட்டத்தைச் சேர்ந்த ஜோகியும் கிருஷ்ணபூசாரியும் துப்பாக்கிகளுடனும் ரவைகளுடனும் கைது செய்யப்பட்டனர். ஆனல், கூட்டத்தின் தலேவனை மம்மட்டியான் காட்டிற்குள் தப்பி ஓடிவிட்டான்.

மம்மட்டியானேயும் அவன் சகாக்களேயும் கைது செய்ய மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Appendix III.

[Vide Answer to starred question No. 388 on page 439.]

Category. (1)	*Number of posts.* (2)
Assistant Transport Commissioner	1
Joint Regional Transport Officers	5
Motor Vehicles Inspectors	2
Assistant Motor Vehicles Inspectors	7
Superintendents	14
Upper Division Clerks	28
Lower Division Clerks	15
Steno-typist	1
Peons	9

பதவியின் வகை. (1)	பதவிகளின் எண்ணிக்கை. (2)
போக்குவரத்து உதவிஆணையாளர்	1
வட்டாரப் போக்குவரத்து இணை அதிகாரிகள்	5
மோட்டார் வண்டிகள் மேற்பார்வையாளர்கள்	2
மோட்டார் வண்டிகள் உதவி மேற்பார்வையாளர்கள் ..	7
கண்காணிப்பாளர்கள்	14
மேல்பிரிவு எழுத்தர்கள்	28
கீழ்ப்பிரிவு எழுத்தர்கள்	15
சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர்	1
ஏவலர்கள்	9

APPENDIX IV.

[Vide answer to starred question No. 400 on page 446.]

Recommendation of the special officer.	Action taken by the Government.
(1)	(2)
1. Establishments of fully equipped dhobikhanas by municipalities and provision of dhobikhanas at central points by panchayats.	The Government have accepted this recommendation of the Special Officer. As the Government are already giving loans to local bodies to construct dhobikhanas on modern lines, the local authorities. viz., municipalities and panchayats, in the areas concerned, will be availing themselves of the loan for provision of dhobikhanas.
2. *Welfare*—	
(i) Provision of gloves and gum boots for use in all dhobikhanas.	(i) The Government have accepted the recommendation. The local bodies like the Corporation of Madras which maintain dhobikhanas will be persuaded to consider provision of gloves and gum boots in the dhobikhanas, as an experimental measure for the use of the washermen. Under the scheme of supply of tools and implements to technically trained persons, dhobies belonging to Scheduled Castes are supplied free of charge, tools and appliances. It may be possible to purchase and supply appliances such as gum boots, gloves, etc., to dhobies belonging to Scheduled Castes. The

	Director of Harijan Welfare has therefore been requested to implement this suggestion, wherever possible.
(ii) Security of employment—public institutions like hospitals, etc., not to discharge or dismiss washermen without reasonable cause or observing the elementary principles of natural justice.	(ii) In the circumstances in which the washermen industry is now carried on and as a large number of washermen are self-employed, it is considered difficult to provide security of service.
3. (i) Supply of washing soda, blue, bleaching powder, etc., through co-operative societies;	(i) The Madras State Co-operative Supply and Marketing Society has taken up the agency from the State Trading Corporation for the distribution of washing soda, etc., and is supplying materials to all washermen's associations. Under the existing orders of Government the said society may retain a minimum stock of soda ash and ultramarine blue equal to 150 per cent of the monthly average off take of the washermen's associations and dispose of the remaining stocks in the open market.
(ii) Washermen should be permitted to remove deposits of alkaline mud from Government poramboke lands on production of a certificate of calling from the village officers, without auctioning the rights as at present.	(ii) This suggestion has been remitted to the Board of Revenue for implementation.
4. The loan now given by Harijan Welfare Department may be increased and granted to each needy family or the Government may purchase implements and supply them to washermen treating their cost as interest-free loan recoverable in easy instalments; and	The recommendation in respect of organisation of Co-operative societies and provision of loan, etc., is already being implemented by Government. The suggestions contained in the recommendation have

களுக்கு அதனால் நன்மை இல்லை. விலை குறைவாக சர்க்காருக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. மில்லர்கள் விவசாயிகளிடம் மலிவாகக் கொள்முதல் பண்ணி, அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய 10 டன்களைக் கொடுத்துவிட்டு, மிச்சம் 90 டன்களை அதிக விலைக்கு விற்கக்கூடிய நிலை இருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கும் நன்மை இல்லை. உபயோகப்படுத்துகிற பொது மக்களுக்கும் சாதகம் இல்லை.

நான் அரிசி ஸ்டாக் எப்படி இருக்கிறது என்பது பற்றி ஒரு கேள்வி போட்டிருக்கிறேன். ஸாம்பிள்களை நம்முடைய அசெம்பளி லைப்ரரியில் வையுங்கள் என்று கேட்டிருக்கிறேன். திருச்சி, தஞ்சை போன்ற இடங்களிலெல்லாம் மில்லர்களிடமிருந்து கொள்முதல் செய்த அரிசியின் சாம்பிள் எப்படியிருக்கிறது என்று பார்க்கலாம். எடை அதிகமாகக் காட்டவேண்டுமென்று அரிசியை மூன்று தரம் ஊறவைத்து, நாசம் செய்து, அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து நாசப்படுத்திக் கொடுக்கிறார்கள். அந்த அரிசியை 3 மாதம், 4 மாதம் வைத்திருந்தால், அது பழுதாய்ப் போய்விடுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அப்படிக் கொடுக்கக் கூடியவர்கள் காங்கிரஸ் கட்சியிலேகூட இருக்கலாம். சோஷலிஸம் பற்றி காங்கிரஸ்காரர்கள் பேசுகிறார்கள். அப்படிக் கொடுக்கக்கூடிய மில் முதலாளிகள் சிலர் காங்கிரஸுக்குள்ளேயே இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களாக இருப்பவர்கள் நல்ல அரிசியாகக் கொடுக்க முன்வந்து மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்கிறார்களா என்று பார்த்தால், அது தான் அபூர்வமாக இருக்கிறது. வியாபாரியாக இருக்கக் கூடிய அமைப்பு முறையில் அப்படியிருக்கிறது. தனிப்பட்டவர்களை மட்டும் நான் தாக்குவதாக நினைக்கவேண்டாம். அவர்களும் மற்றவர்களோடு போட்டி போடவேண்டியதாக இருக்கிறது. அந்த விஷ சக்கரத்தில் சிக்கிக்கொண்டு கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்று நினைக்கிறேன் அரசாங்கத்தின் கொள்முதல் நோக்கம் நிறைவேறுவதாக இல்லை இப்பொழுது இருக்கக்கூடிய அமைப்பில் எப்படிக் கொள்முதல் பண்ணலாம், லெவி ஸிஸ்டம் மூலம் நடத்தலாமா என்பதையெல்லாம் யோசிக்கவேண்டும். உடனே விவசாயிகளிடமிருந்து கொள்முதல் பண்ணவேண்டுமென்று கலியாணசுந்தரம் சொல்லிவிட்டார் என்று சொல்லுவதில் பிரயோசனமில்லை. விவசாயிகளுக்குக்கொள்முதல் என்றால் யுத்தகாலத்துக் கொள்முதலின் ஆபத்து தான் ஞாபகத்திற்கு வருகிறது. கொள்முதல் செய்வதில் யாருக்கும் பாதகம் ஏற்படக்கூடாது. கொள்முதல் எப்படிச் செய்யவேண்டுமென்றால், ஏழை விவசாயிகளை, நடுத்தர விவசாயிகளைப் பாதிக்காத வகையிலே, யாரிடம் உற்பத்தி அதிகமாக இருக்கிறதோ அவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டும். அதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மிகவும் முக்கியமான பிரச்னை விவசாய உற்பத்தி. விவசாய உற்பத்தி மிகவும் பின்தங்கிக்கொண்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்களை விட நமது ராஜ்யத்தில் ஒரு ஏகருக்கு சராசரி விளைச்சல் அதிகமாக இருக்கலாம். ஆனால், மொத்தத்தில் உற்பத்தி செய்வது பின்தங்கிக்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சரியானபடி கொள்முதல் செய்து, விநியோகத்தில் கோளாறு இல்லாமற்படிக்கு எல்லோருக்கும் சமமாகப் போய்சேருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலே பொது ஜனங்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும். நான் சட்டசபை லைப்ரரியில் ஸாம்பிள்களை வைக்கச் சொன்னது, கொள்முதல் அதிகாரிகளை ஏளனம் செய்வதற்காக அல்ல. நாட்டினுடைய நிலைமையைப் பொது ஜனங்கள் அதன் மூலம் அறிய வேண்டும் என்பது தான் நோக்கம். இது விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கினால் தான், வியாபாரிகள், மில்லர்கள் ஒழுங்காக நடந்துகொள்வார்கள். எல்லோருக்கும் நீதி போதிக்கவேண்டும். பொதுஜன அபிப்பிராயத்தின் மூலம் தான் நீதியைப் போதிக்க முடியும். அதனால் தான் லைப்ரரியில் அந்த ஸாம்பிள்களைக் கொண்டு வந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி பலர் அபிப்பிராயம் சொல்லுகிறபொழுது, வியாபாரிகளுக்கு அது ஒரு படிப்பினையாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, ஸ்பெகுலேஷன், பிளாக் மார்க்கெட் இதெல்லாம் நடக்கிறது. இதெல்லாம் சுதந்திரா கட்சி சாக்காக வைத்துக் கொள்வதற்கு நல்ல வசதி செய்துகொடுக்கிறது. விலைவாசியை நிர்ணயிக்கிறார்கள், ஆகையினால் பிளாக் மார்க்கெட்டிற்குப் போகிறது என்று சொல்லி, விநியோகத்தில் அரசாங்கம் குறுக்கிடுகிறார்கள் என்றெல்லாம் சொல்லுவதற்கு வசதி இருக்கக் கூடாது. குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவர்கள் அதைச் சாக்காக வைத்துக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்தக்கூடாது. பற்றாக்குறை இருப்பது ஒரு காரணம். நமக்கு ஜனங்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்ற ஆவல் இருக்கிறது. ஆகையினால் இன்னும் அதிகமாக வேண்டியவைகளைப் பார்த்துச் செய்ய வேண்டுமென்பது தான் எண்ணம். சோஷலிஸம் என்றால் 'மெடீரியல் நீட்ஸ்'. அதாவது வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களையெல்லாம் அதிகமாகக் கொடுப்பது தான். சோஷலிஸம் என்றால் அதைக் கட்டுப்படுத்துவது அல்ல. முறையாகக் கொடுப்பது, படிப்படியாகக் கொடுப்பது என்பது தான் அர்த்தம். வாழ்க்கைத்தரம் பின்னால் போகக்கூடாது. முன்னால் போக வேண்டும். அதற்கு உத்தரவாதம் இல்லை, இன்றைக்கு இருக்கக் கூடிய முறையில், சர்க்கரையை எடுத்துக்கொண்டால், பற்றாக்

விசேஷ அதிகாரியின் சிபாரிசுகள் (1)	அரசினர் எடுத்துள்ள நடவடிக்கைகள். (2)
(2) இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் ஒதுக்கப்படவேண்டும்.	(2) வகுப்பு அடிப்படையில் அரசாங்க உத்தியோகங்களை ஒதுக்குவது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதால், இந்த வகுப்பிற்கென்று தனியாக எந்த உத்தியோகமும் ஒதுக்க முடியாது.
11. ஷெட்யூல்டு வகுப்பினருக்கான மாநிலப் பட்டியலில் இந்த வகுப்பையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.	இந்த வகுப்பு, தீண்டாமை என்னும் சமூகக் கேட்டினால் பாதிக்கப்படவில்லையாதலால், ஷெட்யூல்டு வகுப்பினர் பட்டியலில் இந்த வகுப்பைச் சேர்த்துக்கொள்வதில்லையென இந்திய அரசினர் ஏற்கனவே முடிவு செய்துள்ளனர்.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 22nd November 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at nine of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Divisional Inspector of Schools

* 419 *Q.*—SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM (on behalf of Srimathi T. N. ANANDANAYAKI) : Will the Hon. the Chief Minister be pleased to state what is the jurisdiction of one Divisional Inspector of Schools and the number of schools under him usually ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The jurisdiction of a Divisional Inspector of Schools is fixed on the basis of geographical contiguity of educational districts and the total number of elementary and secondary schools which may be conveniently grouped in the division. The Divisions are not formed on the basis of equal number of schools in a Division.

திரு. வி. எஸ். எஸ். மணி : கழக உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களை நியமிப்பது, மாற்றல் செய்வது போன்ற அதிகாரங்கள் டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்பொழுது ஆரம்பப் பள்ளிகள் எல்லாம் பஞ்சாயத்து கூட்டு மன்றத்திலே இருப்பது போல, உயர்நிலைப் பள்ளிகள் ஜில்லா போர்டு நிர்வாகத்தில் இருந்ததைப்போன்று ஒரு கமிட்டியை நியமித்து அந்த நிர்வாகத்தில் உயர்நிலைப்பள்ளிகளைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு உத்தேசமில்லை. இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகள் எவ்வாறு கண்காணிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Students' behaviour in Medical College, Thanjavur

* 420 *Q.*—SRI C. M. AMBIKAPATHI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government know about the ragging of new students in the Thanjavur Medical College Hostel;

Recommendation of the Special Officer. (1)	Action taken by the Government. (2)
4. Organisation of washermen into Service Co-operatives and the Handloom Co-operative Societies and Weavers Co-operative Societies may be required to entrust their washing work to co-operative laundries.	been remitted to the Registrar of Co-operative Societies for necessary action.
5. Employment of children.	Children in the age group of 6 to 11 will be enrolled in schools under the compulsory education scheme now in force throughout the State. The employment of children in this industry would thus cease automatically.
6. Educational facilities available to children of Harijan community should be made available to the children of Washermen community, etc.	The Community of Vannan (Agsao, Ekali, Madivala, Rajaka, Rajakula and Veluthadan) is included in the list of Backward Classes. Consequently, pupils belonging to this community and converts therefrom are granted fee concessions even now on a par with Harijans, viz., full fee concession at all stages of education and exemption from payment of special fees. Regarding admission to educational institutions, the pupils of this community are treated as belonging to "other Backward Classes". In view of this and in view of the present policy that *status quo* should be maintained in the award of community concession, it is considered that no further action is necessary.
7. *Housing and Transport*—Grants for construction of houses, similar to those granted to Harijans, may be given to washermen and they may be persuaded to organize Co-operative Societies for securing	The Commissioner of Labour has reported that steps may be taken to persuade the wahermen to organize themselves into Co-operative Societies and seek the assistance of the Co-operative Department for

assistance from Co-operative Department and for purchase of transport vehicles.	improving their conditions of living through the construction of tenements for themselves and for securing financial assistance for purchasing transport vehicles. The Government have accepted the suggestion of the Commissioner of Labour and have remitted it to the Registrar of Co-operative Societies for necessary action.
8. *Wages—The workers should be provided with adequate wages.*	The suggestion of the Commissioner of Labour to examine the question whether this industry may be included in the schedule of employments under the Minimum Wages Act has been accepted. The Commissioner of Labour will take further action on this recommendation and send a report to Government in due course.
10. (i) Officers of Revenue and Police Departments may be required during their village visits to enquire into the welfare of the washermen and their relationship with the village society and make a report of any special incidents of ill-treatment or discrimination in this regard.	The Government have agreed that the officers of the Revenue and Police Departments can exercise a beneficial influence in bettering the lot of washermen in the social sphere and contribute to the self-confidence of this community, and that the Gramasevaks should be instructed to endeavour to remove social disabilities of the washermen, if any, exist. Necessary instructions are being issued separately by the concerned departments.
(ii) Reservation of appointments to members of this community.	(ii) As reservation on the basis of communities will be *ultra vires* the Constitution, no separate reservation can be made in favour of the community.
11. Inclusion of the community in the State list of Scheduled Castes.	The Government of India have already decided not to include this community in the list of Scheduled Castes, as it does not suffer from the stigma of untouchability.

(*b*) if so, the details thereof;

(*c*) whether the Government have called for any report from the Principal, Collector or Director of Medical Services; and

(*d*) if the Government have received any report, what action the Government propose to take on it?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இது குறித்த செய்தி பத்திரிகைகளில் வந்தது அரசாங்கத்துக்குத் தெரியும்.

(இ) 1963-ம் வருஷம் ஜூலை மாதம் 26-ம் தேதியில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியில் மேல் வகுப்பு மாணவர்களில் சிலர் கல்லூரியில் புதிதாகச் சேர்ந்தவர்களைக் குறும்பு செய்து வம்பு கொடுத்ததாகத் தெரிகிறது. ஆனால் பத்திரிகையில் கூறிய அளவுக்கு வம்பு நடந்ததாகத் தெரியவில்லை.

(உ) ஆம்.

(எ) இத்தகைய வம்பு தும்புகளை எதிர்த்துக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று எல்லாக் கல்லூரித் தலைமை அதிகாரிகளுக்கும் கண்டிப்பான உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : கல்லூரிகளில் குறும்புத் தனம் செய்த மாணவர்கள் அல்லது மாணவிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : என்னுடைய பதிலிலேயே தெரிவித்தேன். அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, அரசினர் விடுத்த அறிவிப்புக்கு அந்த மருத்துவக் கல்லூரி முதல்வர் என்ன பதில் தந்திருக்கிறார் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : May I be permitted to answer in English, Sir?

MR. SPEAKER : Yes.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The Principal made necessary enquiries in this matter and reported that the candidate against whom the complaint was made, was not used to co-educational institutions. That being so, she agreed that there was not such ragging as was published in the papers. The parent of the girl was sent for and they all accepted that ragging, as published in the papers, was not done and apologies to the Principal by the parents was also made.

SRI V. S. S. MANI : Will the Government take drastic steps to put a stop to the nasty practice of ragging among women Medicos in the Women Medical College Hostels?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : We did not receive any complaint from the Women Medical Students

Hostels about this ragging. If any such thing is brought to the notice of Government, certainly it will be given the best of attention.

திரு. செ. கோ. விஸ்வநாதன் : சாதாரணமாக மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியிலும், மற்ற கல்லூரிகளின் விடுதிகளிலும் ஒவ்வொரு வருடமும் இம்மாதிரிக் குழப்பங்களும், சச்சரவுகளும் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ? அதைப் போக்குவதற்கு மாணவர்களே கூட்டுறவு முறையில் அந்த விடுதிகளை நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவ்வாறு கூட்டுறவு முறையில் நடத்துவதினாலேயே 'ராகிங்' குறைந்து விடும் என்று சொல்வதற்கு இல்லை.

கனம் சபாநாயகர் : கூட்டுறவு முறையில் 'ராகிங்' நடத்த வேண்டுமா ? (சிரிப்பு).

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சில சமயங்களில் விளையாட்டு வினையாகிவிடுகிறது. மற்றப்படி ஸீரியஸாக ராகிங் நடக்கவில்லை.

திரு. சி. பொன்னுசாமி : இந்த முறை மேல் நாடுகளில்தான் கையாளப்பட்டு வருகிறது. நம் நாட்டு மாணவர்களுக்கு உகந்ததல்ல என்பதனால், அம்மாதிரி மாணவர்கள் நடந்து கொள்ளக் கூடாது என்று உத்தரவு அனுப்பப் பட்டிருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இவைகள் எல்லாம் தப்பு என்று தெரிந்து அரசாங்கம் கடுமையான உத்தரவு பிறப்பித்திருக்கிறது. மாணவர்கள் தவறான முறையில் நடந்து கொண்டால், உடனடியாக அவர்களுடைய பெயர்களை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தி அவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த மாதிரி 'ராகிங்' எல்லாக் கல்லூரிகளிலும் நடப்பது வழக்கமாக இருக்கிறது. குறிப்பாக மெடிகல் கல்லூரிகளிலும் ஆர்ட்ஸ் காலேஜ்களிலும் நடக்கிறது . . .

கனம் சபாநாயகர் : எந்த மாதிரி 'ராகிங்' என்பதுதான் இப்பொழுது கேள்வி. 'நாஸ்டி ராகிங்' கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : ராகிங் என்று சொன்னால் சில சமயங்களில் சாக்கடையில்கூட மாணவர்களைத் தூக்கிப் போடுகிறார்கள். இது மாணவர்களின் உரிமையைப் பறிக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இம்மாதிரி தவறு செய்வது, 'நாஸ்டி ராகிங்' செய்வது என்றால், அது ஒருவருடைய உரிமை என்று கூற முடியாது. (சிரிப்பு).

[22nd November 1963

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த சம்பவத்தில் ஆண் மாணவர்கள் பெண் மாணவிகள் பேரில் ராகிங் நடத்தியதாகவும், அது பத்திரிகையில் போட்ட பின்னர் மாணவிகளின் தாய் தந்தையர் தங்களுடைய பெண்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அந்த பிரின்ஸிபால் அதை மூடி மறைப்பதற்காக அத்தகைய ஸ்டேட்மெண்டை வாங்கினரா என்று அமைச்சர் விளக்க முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மாணவிகளை மூடி மறைப்பதற்காக அம்மாதிரி ஸ்டேட்மெண்ட் வாங்கவில்லை. என்க்வயரிக்குப் பிறகு மாணவியோ, அவர்களுடைய தாய் தந்தையரோ கூறியதன் பேரில் அவர்களாக வந்து பத்திரிகையில் வெளிவந்த அளவு 'ராகிங்' நடக்கவில்லை என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்தார்கள்.

MR. SPEAKER: Probably she was not prepared for an enquiry.

மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு.

* 421 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரி, எஞ்சினீரிங் கல்லூரி ஆகியவற்றில் சேருவதற்காக Nativity Certificate அந்தந்த மாவட்டத்தில் குடி இல்லாதவர் சிலர் வாங்கியதாக அரசாங்கத்திற்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) இந்த இரண்டு கல்லூரிப் படிப்புக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து பிரசுரம் செய்வதற்கு முன்பாக போலீஸ்C.I.D. மூலமாக அவ்வித Nativity Certificate பரிசீலிக்கப்படும் உத்தேசமுண்டா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) An anonymous petition and a telegram alleging production of false nativity certificates were received by the Selection Committee in respect of admissions to Medical Colleges.

(*b*) No.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஸார், இந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கவேண்டுமென்ற காரணத்தினுல் பிற மாநிலங்களிலிருந்து மாணவர்கள் நம் மாநில நேடிவிடி ஸர்டிபிகேட் வாங்கும் முயற்சியில் ஈடுபடுகிருர்கள். இம்மாதிரி தவறுகள் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்ட தொகுதியிலிருக்கும் சட்டமன்ற உறுப்பினரிடமும் சர்டிபிகேட் வாங்கவேண்டும் என்று விதி போட முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அம்மாதிரியாக அரசாங்கத்திடம் திட்டமில்லை.

* 422 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government are aware that in 1963–64 the students applying

22nd November 1963]

for admission to Medical Colleges used nativity certificates as if they belonged to Salem district though they actually belonged to other districts and thus were able to get admission?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் சேர சேலம் ஜில்லா நேடிவிடி ஸர்டிபிகேட் வாங்கி, 30 ஸீட்கள் வரை வேறு ஜில்லாக்காரர்கள் கொண்டு போனதாகவும், கிருஷ்ணகிரி லேடி டாக்டருக்கு ஒரு ஸீட் கிடைத்ததாகவும் அரசாங்கத்திற்குத் தகவல் வந்ததா? வந்திருந்தால், என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அம்மாதிரியான தகவல் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஒரே ஒரு காண்டிடேட் ஆந்திராவிலிருந்து வந்தார். He belongs to the Reddi community அவரும் ஆந்திரா நேடிவிடி சர்டிபிகேட்தான் கொடுத்தார். ஃபால்ஸ் சர்டிபிகேட் எதுவும் கொடுக்கவில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கிருஷ்ணகிரி லேடி டாக்டர் ஒரு சீட் வாங்கியிருக்கிருர் என்று சொல்கிறேன். அரசாங்கம் அதன் பேரில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் அந்தத் தகவலை டீடெயிலாகக் கொடுத்தால் கவனிக்கப்படும்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, ஒரு டெபுடி ரெஜிஸ்ட்டிரார் 13 ஆண்டு காலமாக சென்னையிலேயே உத்தியோகம் செய்திருந்தும் சேலம் என்று போட்டு தன் மகனை மருத்துவக் கல்லூரியில் சேர்த்திருக்கிருர் என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஒருவர் சென்னையிலேயே உத்தியோகம் செய்திருந்தாலும்கூட, நேடிவ் டிஸ்ட்ரிக்ட் சேலமாக இருந்து இருக்கலாம். ஒரு ஜில்லாக்காரர் வேறு இடங்களில் உத்தியோகம் செய்வதால் அவருடைய நேடிவிடி போய் விடாது.

மருத்துவப் படிப்பு.

* 423 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவத் துறையில் மூன்றுண்டுப் பயிற்சிக்குப் பிறகு L.M.P. போன்றதொரு டிப்ளமா கொடுப்பதற்காக அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

(இ) இல்லையெனில் கிராமப் புறங்களில் டாக்டர்கள் பற்றுக் குறையை எவ்வாறு நீர்க்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

விசேஷ அதிகாரியின் சிபாரிசுகள். (1)	அரசினர் எடுத்துள்ள நடவடிக்கைகள். (2)
1. சகல வசதிகளுடன் கூடிய தோபிகானுக்களை நகராட்சிகள் ஏற்படுத்த வேண்டும். பஞ்சாயத்துக்கள் கேந்திர இடங்களில் தோபிகானுக்களை ஏற்படுத்த வேண்டும்.	விசேஷ அதிகாரியின் இந்தச் சிபாரிசை அரசினர் ஏற்றுக் கொண்டனர். நவீன முறையில் தோபிகானுக்களை நிறுவுவதற்கு அரசினர் தல அதிகார சபைகளுக்கு ஏற்கெனவே கடன்கள் வழங்கிவருகிறார்கள். நகராட்சிகள் பஞ்சாயத்துக்கள் போன்ற தல அதிகார சபைகள் சம்பந்தப்பட்ட பகுதிகளில் தோபிகானுக்களை ஏற்படுத்துவதற்கு இவ்வகைக் கடனைப் பயன்படுத்திக்கொள்ளும்.
2. சலவையாளர்களின் நலன்.— (1) எல்லா தோபிகானுக்களிலும் சலவையாளர்களின் உபயோகத்துக்காக கையுறைகளும், பிரத்தியேக பூட்சுகளும் வழங்கவேண்டும்.	(1) இந்தச் சிபாரிசை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. தோபிகானுக்களை வைத்து நடத்தும் சென்னை மாநகராட்சி போன்ற தல அதிகார சபைகள் சலவையாளர்களின் உபயோகத்திற்காகக் கையுறைகளையும், பிரத்தியேக பூட்சுகளையும் பரீட்சார்த்தமாய் வழங்குவதுபற்றி யோசிக்கும்படிக் கேட்கப்படும். தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்குக் கைக் கருவிகளும் உபகரணங்களும் வழங்கும் திட்டத்தின்கீழ் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்த சலவையாளர்களுக்கு வேண்டிய கருவிகளும் உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்த சலவையாளர்களுக்குப் பிரத்தியேக பூட்சுகள், கையுறைகள் போன்ற கருவிகளை வாங்கிக் கொடுக்க முடியும். எனவே இயன்ற போதெல்லாம் இந்தக் கருத்தை நிறைவேற்றும்படி ஹரிசன நலத் துறை டைரக்டர் கேட்கப்பட்டுள்ளார்.
(2) வேலை நீடிக்கும் என்கிற உறுதி மருத்துவமனைகள் போன்ற அரசாங்க நிலையங்கள் நியாயமான காரண	(2) சலவைத் தொழில் தற்போது பெருகிவரும் நிலையிலும் பெரும்பாலான சலவையாளர்கள் சுயமாகத் தொழில்

மின்றி அல்லது நீதி வழங்குவதற்குரிய அடிப்படைக் கோட்பாடுகளைப் பின்பற்றாமல் சலவையாளர்களை வேலையிலிருந்து எடுக்கவோ, நீக்கவோ கூடாது.	நடத்துகின்ற சூழ்நிலையிலும் வேலை நீடிக்கும் என்கிற உறுதி அளித்தல் எளிதானதாகக் கருதப்படவில்லை.
3. (1) சலவைச் சோடா, நீலம், சலவை மருந்து முதலியவற்றைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்குதல்.	(1) சென்னை மாநிலக் கூட்டுறவு, விநியோக, விற்பனை சங்கம், மாநில வர்த்தகக் கார்ப்பரேஷனிடமிருந்து சலவைச் சோடா முதலியவற்றை விநியோகிக்க ஏஜென்சி எடுத்துள்ளது: எல்லா சலவையாளர்கள் சங்கங்களுக்கும் கருவிகளை வழங்கி வருகிறது. தற்போதுள்ள அரசாங்க ஆணையின்படி மேற்சொன்ன சென்னை மாநிலக் கூட்டுறவு விநியோக, விற்பனைச் சங்கம் சோடா உப்பையும் நீலத்தையும் சலவைத் தொழிலாளர் சங்கம் மாதந்தோறும் வாங்கிக்கொண்டு செல்கிற சரக்கின் சராசரியைப்போல குறைந்த பட்சம் 150 சத வீத சரக்கு இருப்பை வைத்துக்கொண்டு, எஞ்சிய இருப்பை மார்க்கெட்டில் விற்றுவிடலாம்.
(2) கிராம அதிகாரிகளிடமிருந்து பெற்ற சான்றிதழ் ஒன்றைக் கொடுப்பதின்பேரில் அரசாங்கப் புறம்போக்கு நிலங்களிலிருந்து உவர் மண் படிவங்களை எடுத்துக்கொள்வதற்குச் சலவையாளர்கள் அனுமதிக்கப்படவேண்டும். தற்போது உள்ளதுபோல் அந்த உரிமைகள் ஏலம் விடப்படக்கூடாது.	(2) இந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்காக ரெவின்யூ போர்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
4. ஹரிஜன நலத் துறை தற்போது அளிக்கும் கடன் தொகையை உயர்த்தலாம். தேவைப்படும் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் கடனுதவி அளிக்கப்படலாம்; அல்லது அரசாங்கம் சலவையாளர்க்கு வேண்டிய கருவி வாங்கிக் கொடுக்கலாம். அவற்றின் விலையை வட்டியில்லாக் கடனாகக் கருதி, சுலபமான தவணைகளில் வசூலிக்கலாம்.	கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கடன் வசதி அளிப்பது பற்றிய சிபாரிசை அரசாங்கம் ஏற்கனவே நிறைவேற்றி வருகிறது. இந்த சிபாரிசில் கண்டுள்ள கருத்துக்கள் அவசியமான

(இ) கிராமப் பகுதிகளில் உள்ள அரசாங்க மனைகளில் பணியாற்ற **G.C.I.M., D.M. and S.** டிப்ளொமா பெற்றவர்கள் நியமிக்கப்படுகின்றனர். 1963-64-ல் 500-க்குப் மேற்பட்ட மாணவர்கள் ஹவுஸ் சர்ஜன் தேர்வை முடித்த பிறகு கிராமப் பகுதிகளிலும் பணியாற்ற போதிய டாக்டர்கள் கிடைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இப்பொழுது நாட்டிலே டாக்டர்கள் இல்லாமல் பல ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டிருக்கின்றன என்று அரசாங்கத்திலிருந்துகூட சொல்லுகிறார்கள். இந்த டாக்டர் பற்றாக்குறையைப் போக்க முன்பு இருந்த எல்.எம்.பி. முறையை மீண்டும் அமுல் செய்ய அரசாங்கம் முன் வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: டாக்டர்கள் இல்லாத காரணத்தால் ஆஸ்பத்திரிகள் மூடப்படவில்லை. ரூரல் டிஸ்பென்ஸரிகள் பொறுத்த மட்டில் பை-பார்டைட், ட்ரை-பார்டைட் அக்ரிமெண்டுகள் செய்யப்படுகின்றன. பை-பார்டைட் அக்ரிமெண்ட்படி டாக்டர்களுக்கு சம்பளம் பஞ்சாயத்து யூனியன் கொடுக்கிறது. ட்ரை-பார்டைட் ஒப்பந்தப்படி டாக்டருக்கு சம்பளம் அரசாங்கம் கொடுக்கிறது. பஞ்சாயத்துக்கு கொடுக்க முடியவில்லை என்றால் ரூரல் டிஸ்பென்ஸரி மூடப்படுகிறது. ஆகவே டாக்டர் இல்லாத காரணத்தால் ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுவிட்டன என்பது சரியல்ல.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்த டாக்டர்கள் பற்றாக்குறையைத் தவிர்க்க முன்பு எல்.ஐ.எம். படித்த டாக்டர்கள் இருக்கிறார்கள், அவர்களை சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலைக்கு அமர்த்துவது இல்லை. இப்பொழுது சர்க்கார் அதை அனுமதிக்க என்ன கஷ்டம் இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: குறிப்பாக லைஸன்ஷியேட்டுகளை எடுப்பதில்லை என்று ஒரு பாலிஸியை அடாப்ட் பண்ணச் சொல்லி யூனிவர்சிடியும் கூறி இருக்கிறார்கள். ஆனால் ரூரல் டிஸ்பென்ஸரிக்கு மட்டும் அவர்களை எடுக்கிறோம்.

* 424 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have taken a final decision on the proposal to revive the College of Indian Medicine; and

(*b*) if so, what are the details of the proposal as finalised?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (*a*) & (*b*): The Government have decided to impart instruction in Indian Systems of Medicine at a College proposed to be opened in the Tirunelveli district.

(அ & இ) திருநெல்வேலி மாவட்டத்தில் ஆரம்பிக்கவிருக்கும் ஒரு கல்லூரியில் இந்திய மருத்துவ முறைகளைப் போதனை செய்வதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

Sri V. S. S. MANI: May I know, Sir, whether the Government have taken any steps to investigate the efficacy of the system of Homeopathy treatment and to recognise the system?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: Yes, Sir. The matter is under the consideration of the Government.

* 425 *Q.*—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the State Government have reserved ten per cent of the seats in Post Graduate Medical Education Classes in the various Medical Colleges for students coming from other States; and

(*b*) if so, the number of seats reserved in those colleges?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தென் பிராந்திய சுகாதார அமைச்சர்கள் மகாநாடு சமீபத்தில் நடந்ததா? அதிலே இது போன்ற சீட்கள் பற்றிய முடிவு எடுக்கப்பட்டதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்பொழுது நடந்த மகாநாட்டில் அப்படி ஒரு முடிவும் எடுக்கவில்லை. முன்பே எடுத்த முடிவு, 10 சதவிகிதம் அல்ல, 50 : 50 என்ற ரேஷியோவில் மாணவர்கள் போஸ்ட்கிராஜுவேட் படிப்புக்கு எடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அப்படி அவுட்சைட் ஸ்டேட்டிலிருந்து சேர்க்கப்படுகிறவர்கள் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா செலக்ட் செய்து அனுப்புகிறவர்கள்.

* 426 —*Q.*—Sri RAMA. ARANGANNAL: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) how many students are selected to the M.B.B.S. course for the current year;

(*b*) whether the communal Government Order was adopted and if so, to place the details on the floor of the House; and

(*c*) whether any preference was given to those children born out of inter-caste marriage? How many?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) 695.

(இ) இல்லை.

(உ) இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், கலப்புத் திருமணம் செய்து கொண்ட ஒருவர், அவர் என் நண்பர், ஒரு பிராமணர்......

கனம் சபாநாயகர்: நிறையக் கேள்விகள் இருக்கின்றன; நாளையோடு சட்டசபைக் கூட்டம் முடிவடைகிறது. கேள்விகளைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

* 429 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் செங்கற்பட்டில் தனியார் துறையில் மருத்துவக் கல்லூரி அமைக்க அனுமதி கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) எழாது.

(a) No.

(b) Does not arise.

நகரசபை பொருட்காட்சி (சேலம்).

* 430 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி முதல் சேலம் நகரத்தில் மாரியம்மன் பண்டிகையை முன்னிட்டு பொருட்காட்சி நடத்த அந்நகராட்சிக்கு அனுமதி வழங்காததற்குக் காரணமென்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சேலம் நகராட்சி மன்றத்திற்கு 1963-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி முதல் பொருட்காட்சி நடத்த அனுமதி மறுக்கப்படவில்லை.

சுங்கவரி வசூல்

* 431 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் ராமநாதபுரம் ஜில்லா திருப்புவனம் வைகை ஆற்றில் கட்டப்பட்ட பாலத்திலிருந்து டோல்கேட் வரி வசூல் செய்வது சம்பந்தமாகவும் டோல்கேட் வரி வசூல் செய்யும் திட்டத்தையே நமது மாகாணம் பூராவும் ரத்து செய்யும்படியும் திருப்புவனம் பஞ்சாயத்து யூனியன் தலைவரிடமிருந்து ஏதாவது விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் என்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. வெ. ராமையா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், நான் கேட்ட கேள்விக்கு இல்லை என்று பதில் சொன்னார்கள். அரசாங்கத்திடம் இருந்து எனக்குப் பதில் வந்திருக்கிறது. மதுரைக்கு அருகில் கட்டப்பட்டுள்ள

பாலத்திற்கு 'டோல் கேட்டு' அமைத்து வரி வசூல் செய்ததை நிறுத்தி விடவேண்டுமென்று மதுரை நகரசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பி உள்ளது. அதற்கு இணங்க அந்த வரி வசூல் செய்வது நிறுத்தப்பட்டது. அது போலவே திருப்புவனத்திற்கு அருகில் உள்ள பாலத்திற்கும், நம் மாநிலத்தில் உள்ள மற்ற இதர பாலங்களுக்கும் 'டோல் கேட்டு' அமைத்து வரி வசூலிப்பதை அரசாங்கம் நிறுத்த உத்தரவு செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையா: மூலக் கேள்வி திருப்புவனம் பாலத்தைப் பொறுத்தது. அதைப்பற்றி விவரம் கேட்டு இருக்கிறார்கள். அதைப்போல் ஒரு கோரிக்கை வரவில்லை என்று நான் சொன்னேன். தெரிந்துதான் பதில் சொல்லி இருக்கிறேன். மேலும் ஏதாவது விவரம் வேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் அது பரிசீலனை செய்யப்படும்.

வெள்ளைக் களிமண் (செங்கம் தாலுக்கா)

* 432 கேள்வி.—திரு. ஆர். ஜீவரத்தினம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா செங்கம் தாலுகா தென்முடியனூர் கிராமத்தில் வெள்ளைக் களிமண் கிடைப்பதாகச் சர்க்காருக்குத் தகவல் வந்திருக்கிறதா?

(இ) அப்படியானால் அந்தத் தகவல் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) இல்லை.

(இ) வினா எழாது.

Arts Colleges

* 433 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Arts Colleges permitted to be opened during the current year under private management; and

(b) the total number of seats for P.U.C. available in all the colleges at the beginning of the educational year?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) The University has granted affiliation to four new colleges opened under private management with Pre-University Course.

(b) 27,813.

(அ) தனியார் நிர்வாகத்தின்கீழ் பி.யு.சி. வகுப்புடன் திறக்கப்பட்ட நான்கு புதிய கல்லூரிகளுக்குப் பல்கலைக் கழகம் அனுமதியளித்துள்ளது.

(இ) 27,813.

திரு. இராம. அரங்கண்ணல் : இது ஒரு முக்கியமான கேள்வி சார்.

கனம் சபாநாயகர் : சரி, கேளுங்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : அவர் கீழ் ஜாதி என்று கருதப் படுகிற ஒரு பெண்ணை மணந்து கொண்டார். அவர்களுக்குப் பிறந்த குழந்தைக்கு ஜாதியைக் குறிப்பிட வேண்டியிருந்த போது தந்தையின் ஜாதி குறிப்பிட நேர்ந்தது அதுதான் சட்டம். அதனுல் அவர்களால் அரசாங்கத்தில் கொடுக்கும் எந்த சலுகையும் பெற முடியவில்லை. ஆகவே, எந்த மாதிரியான கலப்புத் திருமணமாக இருந்தாலும் சலுகைகள் தர சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No special preference will be shown to the children of the inter-caste married people.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், சாதி ஒழிப்பு சோஷலிஸ சமுதாய அடிப்படையில் ஒரு அம்சமாக அமைந்து இருப்பதினுல் இத்தகையவர்களுடைய குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்க சர்க்கார் புனர் பரிசீலனை செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்குத் தனிக் கேள்வி தேவை.

MR. SPEAKER : Question No. 427.

SRI K. A. MATHIALAGAN : One more supplementary question, Sir.

MR. SPEAKER : About 60 questions have to be answered. If only 30 questions are to be answered and the rest to be left out, I can allow more supplementary questions.

SRI K. A. MATHIALAGAN : It is an important question.

MR. SPEAKER : All right.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இந்த ஆண்டில் மொத்தம் 600 சொச்சம் பேர்கள்தான் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறுர் கள் என்று தெரிகிறது. மொத்தம் எத்தனை பேர்கள் விண்ணப் பித்துக் கொண்டார்கள் ......

MR. SPEAKER : The question does not arise. It is not relevant to the main question.

SRI K. A. MATHIALAGAN : It is relevant.

MR. SPEAKER : How?

SRI K. A. MATHIALAGAN : Sir, the first part of the main question is as follows :—

"How many students are selected to the M.B.B.S. course for the current year'?

My supplementary question relates to the total number of applicants and the percentage . . . .

MR. SPEAKER : Does the hon. Member mean the communal Government Order?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I will answer the next question.

MR. SPEAKER : Question No. 427.

* 427 கேள்வி.—திரு· கி· நாராயணசாமி பிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். பரிட்சை எழுதிய பெண்கள், ஆண்கள் எத்தனை பேர் ?

(இ) பரீட்சையில் தேர்வு பெற்றவர்களில் ஆண்கள், பெண்கள் எத்தனை பேர் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :

(a) 501 men and 144 women.

(b) 299 men and 85 women.

* 428 கேள்வி.—திரு· கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவப் படிப்பிலிலே பட்டம் பெருத மற்ற பி.எஸ்.சி. பட்டதாரிகளுக்காக அரசாங்க மருத்துவக் கல்லூரி களில் எம்.எஸ்.ஸி. வகுப்பு ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ?

(இ) மருத்துவ விரிவுரையாளர்கள் அல்லாமல் மற்ற விரிவுரையாளர்களை நியமிக்கும் உத்தேசமுண்டா ?

(உ) அத்தகைய விரிவுரையாளர்களின் பதவிகள் கெஜட் பதிவு பெற்றவையாக இருக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) மருத்துவப் பட்டம் பெருத விஞ்ஞானப் பட்டதாரிகளுக்காக சென்னை மருத்துவக் கல்லூரியில் 1963 ஜுலை முதல் எம்.எஸ்.சி. வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ) & (உ) மருத்துவப்பட்டம் பெருத இந்தப் பட்டதாரி களை மருத்துவக் கல்லூரிகளில் என்ன பதவிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதை இப்போதே சொல்வதற்கில்லை.

(a) M.Sc. courses for non-medical graduates have been started in the Madras Medical College, Madras, with effect from July 1963.

(b) & (c) It is too early to say in what capacity these non-medical personnel would be absorbed in the teaching line.

Government Arts College, Pudukkottai

* 434 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of students who sought admission for Pre-University Course in the Government College at Pudukkottai for the current year.

(*b*) the number of students admitted; and

(*c*) the sanctioned number of seats in that college for this year in the Pre-University class?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Three hundred and sixty-four.

(*b*) Two hundred and forty-eight.

(*c*) Three hundred and twenty.

பி.யு.சி. தேர்வு

* 435 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் நமது மாநிலத்தில் பி.யூ.ஸி. பரீட்சை எழுதிய மாணவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் ஆண்கள், பெண்கள் எத்தனை பேர்?

(உ) பி.யூ.ஸி. பரீட்சையில் தேர்வு பெற்றவர்களில் ஆண்கள், பெண்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM;

(*a*) 37,374.

(*b*) Men : 31,128; Women : 6,246.

(*c*) Men : 13,180; Women : 3,548.

கிராம வேலைகள் திட்டம்

* 436 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் Planning Commission உதவியுடன் சென்னை மாநிலத்தில் Rural Works Programme துவக்கப்படவிருக்கின்றதா?

(இ) அது சம்பந்தமான குறிப்புகள் சபை முன் வைக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) அவசியமான குறிப்புகள்[a] சபையின் முன் வைக்கப்பட்டு இருக்கின்றன.

[a] 650–654-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

குடிநீர்த்தொட்டி (வேந்தன்பட்டி)

* 437 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் வேந்தன்பட்டிக் கிராமத்தில் மேல்தள குடி நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் தேதி அடிக்கல் நாட்டப்பட்டதா?

(இ) அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆம்.

(இ) அதே கிராமத்தில் தகுந்த இன்னொரு இடத்தில் உயர்நிலை நீர்த் தொட்டி கட்டப்பட்டு வருகிறது.

வெளிநாட்டு மாணவர் விடுதி

* 438 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெளிநாடுகளிலிருந்து தமிழ் நாட்டில் கல்வி பயில வரும் மாணவ மாணவிகள் தங்க தனி விடுதி கட்டும் திட்டம் உண்டா?

(இ) ஆமெனில் எங்கு எவ்வளவு பொருள் செலவில்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise :

நெய்வேலிக்குச் சாலை

* 439 கேள்வி—திரு. கி. நாராயணசாமிப் பிள்ளை : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெய்வேலி தொழில் வளப் பகுதிக்கு கனரக இயந்திரங்களைக் கொண்டு போவதற்காக கடலூர், விருத்தாசலம், உளுந்தூர்பேட்டை ரோட்டை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) அந்தத் திட்ட வேலை என்ன நிலையில் உள்ளது?

கனம் திரு. வெ. ராமையா : (அ) & (இ) சபையில் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

* 440 கேள்வி—திரு. கி. நாராயணசாமிப் பிள்ளை : கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெய்வேலிக்கும் உளுந்தூர்பேட்டைக்கும் குறுக்கே விருத்தாசலம் வராமல் புதிய சாலை அமைக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

[a] 655-658-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் இரண்டு விதமாக உதவி செய்யப்படுகிறது. ஒரு விபத்து ஏற்பட்டால் வொர்க்கர்ஸ் காம்பென்சேஷன் ஆக்ட் படி அந்தத் தொழிலாளிக்குக் கொடுக்கப்படவேண்டிய நஷ்ட ஈட்டைக் கொடுக்கிறோம். அதற்குமேல் எக்ஸ்கிரேஷியாவாக மின்சார போர்டார் விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடியாக 100 ரூபாய் கொடுக்கிறார்கள். எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்கிற விவரம் இங்கே இல்லை.

ஆசிரியர்கள் (மாற்றல்)

* 445 **கேள்வி—திரு. ப. உ. சண்முகம் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு திருவண்ணாமலை, கீழ்ப்பெண்ணாத்தூர் பஞ்சாயத்துக்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் திடீரென்று பெருவாரியாக மாற்றப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) அப்படியானால், காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) 39 transfers of teachers in the Panchayat Unions were effected during July 1963, some at the request of the teachers and some for administrative reasons, as there was no general transfer of teachers in the Panchayat Union since the date of its inception in October 1961.

9-30 a.m. **திரு. ப. உ. சண்முகம் :** திருவண்ணாமலை இடைத்தேர்தல் முடிந்ததற்குப் பிறகு திருவண்ணாமலையில் இருக்கிற ஆசிரியர்களைப் பழிவாங்கும் நோக்கத்தோடு மாற்றப்பட்டு வருவதாக ஏதேனும் புகார் அரசாங்கத்திற்கு வந்தது உண்டா ? வந்திருந்தால் அதன்மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய தகவல் ஒன்றும் என்னிடத்தில் இல்லை.

திரு. கே. டி. கோசல்ராம் : கனம் அங்கத்தினர் பழிவாங்கும் நோக்கத்தோடு என்று குறிப்பிடுகிறதனாலே ஆசிரியர்கள் சர்க்கார் விதித்துள்ள விதிமுறைகளையும் மீறி கடந்த இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்காக வேலை செய்தார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றியும் இப்போது என்னிடம் தகவல் இல்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : திருவண்ணாமலைப் பகுதியில் இருக்கிற ஆசிரியர்கள் பலபேர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவே வேலை செய்தார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி வேலை

செய்தார்கள் என்று தெரிந்தால் உடனடியாக அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களை வீட்டுக்கே அனுப்பி வைப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்கு அது தெரியாது. புகார் வந்தால் அது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : ஆசிரியர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேலை செய்தார்கள் என்ற புகார் வந்தால் தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறதா ? அல்லது காங்கிரஸ் கட்சிக்கும் வேலை செய்தார்கள் என்ற புகார் வந்தால் அதன்பேரிலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நியாயமான முறையில் ஆசிரியர்கள் மீது எத்தகைய புகார் வந்தாலும் அது கவனிக்கப்படும்.

திரு. ப. உ. சண்முகம் : பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும் காலத்தில் ஆசிரியர்கள் மாற்றப்படாமல், இடைக்காலத்தில் ஆசிரியர்களை மிகப் பெருவாரியாக மாற்றுவதற்கு வேறு என்ன காரணம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காரணங்கள் எதுவும் இல்லாமல் யாரையும் மாற்றுவது இல்லையென்று முன்பும் சொன்னேன்.

Tanks (Ramanathapuram)

* 446 Q.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any scheme to improve the storing capacity of the big tank in Ramanathapuram?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

உரத் தொழிற்சாலை

* 447 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அருகே உரத் தொழிற்சாலை ஒன்று நிறுவ உரத் தொழில் கார்ப்பரேஷன் சர்க்காரை அனுமதி கோரியதா ?

(இ) ஆமென்றால், சர்க்கார் அளித்த பதில் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) : The Fertilizer Corporation of India requested this Government to suggest suitable sites near Madras for locating a fertilizer factory. Accordingly two sites have been suggested and the decision of the Corporation is awaited.

கீழப்பழூர் கிராமத்தில் மின்சாரம்

* 441 கேள்வி—திரு. எஸ். ராமசாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம் கீழப்பழூர் அரிசன தெருவிற்கு மின்விளக்கு போடுவதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணமென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தேசிய நெருக்கடி காரணமாக, கீழப்பழூர் பஞ்சாயத்தில் ஹரிஜனத் தெருவுக்கு மின் விளக்கு விஸ்தரிக்கும் வேலை மற்ற வேலைகளுடன் தென் சென்னை மின்சார சப்ளை கார்ப்பொரேஷன் லிமிடெட் ஸ்தாபனத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது. 1963-64-ம் ஆண்டுக்குரிய தன் வேலைத் திட்டத்தில் இவ்வேலையைச் சேர்த்துக் கொள்வது குறித்து இக் கார்ப்பொரேஷன் இப்போது ஆலோசித்து வருகிறது.

மின்விசை போர்டு

* 442 கேள்வி— திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மின்சார போர்டிற்கு ஆண்டுதோறும் தேவைப்படும் **L.T. Transformers** எத்தனை?

(இ) 1963-ல் **Transformers** இல்லாமல் வேலை தாமதப்படுத்தப் பட்டுள்ளது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(உ) அரசாங்கம் மின்சார போர்டின் நிர்வாகத்தில் ஒரு **Transformer Factory** ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) சுமார் 1,500.

(இ) இல்லை.

(உ) இல்லை.

(*a*) About 1,500.

(*b*) No.

(*c*) No.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஸார், இந்த மின்சார விஸ்தரிப்பு செய்வதில் கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படாமல், டிரான்ஸ்பார்மர் இல்லாமல் காலதாமதம் ஆவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? குறிப்பாக என்னுடைய கிராமத்தில் மட்டும் 17 இடங்களில், டிரான்ஸ்பார்மர் இல்லாமல் வேலை நடக்காமல் இருக்கிறது. ஆகவே நமது மின்சார போர்டுக்கு வேண்டிய டிரான்ஸ்பார்மர்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: காலதாமதம் ஆவதாக நான் ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், கடந்த ஆறு மாதங்களுக்குள்ளாக 993 கிராமங்களுக்கு மின் விளக்கு வசதி

கொடுக்கப்பட்டிருக்கிறது. காலதாமதம் ஆவதாக இருந்தால் கிட்டத்தட்ட 1,000 கிராமங்களுக்கு ஆறு மாதத்திற்குள்ளாக இந்த வசதி செய்து இருக்க முடியாது. கனம் அங்கத்தினர் சொல்கிற இடத்தில் காலதாமதம் ஆகிறது என்றால், ப்ரயாரிடி பிரகாரம் தான் அந்த வேலைகளை செய்து வருகிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர்: டிரான்ஸ்பார்மர் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறதா? அல்லது நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறதா? வெளிநாடுகளில் இருந்து தான் இறக்குமதி செய்யப்படுகிறது என்றால் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வழிவகைகள் மேற்கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது நான் கைந்து டிரான்ஸ்பார்மர் பாக்டரிகள் நம் ராஜ்யத்திலேயே இருக்கின்றன.

* 443 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute Local Advisory Committees for the Electricity Board for each district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பொதுமக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லிக்கொள்வதற்கு மாவட்ட ரீதியில் மின்சாரக் கமிட்டி என்று ஏற்படுத்தினால் பொதுமக்களுக்கு மிகவும் சௌகர்யமாக இருக்கும் என்று தோன்றுவதனால் அரசாங்கம் அதை அமைக்க ஆலோசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மின்சார பட்ஜெட் விவாதத்தின் போது இதே கேள்விக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். அதே பதிலைத்தான் இப்போதும் சொல்ல விரும்புகிறேன். இப்போது ஜில்லாக்களில் டெவலெப்மெண்டு கவுன்சில் இருக்கிறது. மின்சாரம் சம்பந்தமாகவும் அதில் பிரச்சனைகளை விவாதிக்க இடம் இருக்கிறது. ஆகவே தனியாகக் குழு தேவையில்லை.

* 444 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether any monetary help is given to the families of the employees of the Electricity Department who meet with accidents and die during the discharge of their duties?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: 1962 ஆம் ஆண்டில் எத்தனை குடும்பங்களுக்கு இந்தமாதிரி பண உதவி செய்யப் பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

Nurseries

* 448 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the procedure followed by the Government in the selection of private nurseries for approval;

(*b*) whether there is any proposal for the recognition of Private Nurseries in the year 1963–64; and

(*c*) if so, the number thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The private nurseries which apply for recognition in the prescribed form are inspected by the Assistant Horticulturist, Fruit Development Scheme, Coimbatore. The Horticulturist and Associate Professor of Horticulture, Coimbatore forwards the report of the Assistant Horticulturist to the Director of Agriculture along with his specific recommendations. The Director of Agriculture selects the private nurseries for according recognition and forwards the list to the Government for approval.

(*b*) & (*c*) The Government have approved Thirty-one nurseries proposed by the Director of Agriculture as recognised private nurseries for the supply of fruit plants under the Fruit Development Schemes during 1963–64.

சிமெண்ட் பர்மிட்

*** 449 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிமெண்ட் பர்மிட் வழங்கும் முறைகளில் ஒழுங்கீனங்கள் நடைபெறுவதாக சர்க்காருக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(இ) அந்தப் புகாரின் மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) : There are no specific complaints about issue of cement permit or in the matter of distribution of cement. But owing to general shortage of cement, some difficulties are bound to be experienced. Viewed as a whole, cement control is working satisfactorily.

திரு. செ. கோ. விசுவநாதன் : பர்மிட் இன்றி சிமெண்டு வைத்திருப்பவர்கள் மீது எத்தனை வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பர்மிட் இல்லாமல் சிமெண்டு வியாபாரம் செய்ய முடியாது. அப்படி வியாபாரம் செய்வதாக ஏதேனும் தகவல் கிடைத்தால் அதைக் கனம் அங்கத்தினர் அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால் அதை விசாரித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

பூமிதான இயக்கம்

*** 450 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பூமிதான இயக்கத்திற்கு நம் மாநிலத்தில் 1962-ம் ஆண்டு முடிய கிடைத்துள்ள நஞ்சை, புஞ்சை நிலங்கள் எவ்வளவு?

(இ) தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் உள்ள பகுதிகளில் இந்த நிலத்தை சாகுபடி செய்து வருவோர்க்கு அரசாங்கக் கடன் உதவி மற்றச் சலுகைகள் வழங்கப்படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) நன்செய் 3,247 ஏகரா, புன்செய் 45,527 ஏகரா.

(இ) ஆம்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த நிலங்கள் எல்லாம் சாகுபடியில் இருக்கிறதா அல்லது தரிசாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. பூ. கக்கன் : பெரும்பகுதி சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ம. அம்பிகாபதி : அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களையும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது என்பது உண்மையா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கத்திற்குரிய புறம்போக்கு நிலங்களாக அவை இருந்தால் அதையும் அவர்கள் கேட்டால் உபயோகப்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

சாலைகளின் பெயரை மாற்றுதல்

*** 451 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் உள்ள சில சாலைகளுக்கு புதிய பெயர்கள் கொடுக்க வேண்டுமென்று கோரி சென்னை நகரசபை தீர்மானம் அரசினருக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசினர் என்ன நடவடிக்கை எடுத்தனர்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) இவ்விஷயம் சென்னை மாநகராட்சி ஆணையாளருடன் கடிதத் தொடர்பில் உள்ளது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, யார் யாருடைய பெயரை எந்த எந்த ரோடுகளுக்கு வைக்கவேண்டுமென்று அரசாங்கத்திற்கு யோசனை வந்ததா? அதுபற்றி அரசாங்கம் ஏதாவது முடிவு கூறியிருக்கிறதா?

விசேஷ அதிகாரியின் சிபாரிசுகள். (1)	அரசினர் எடுத்துள்ள நடவடிக்கைகள். (2)
9. சலவையாளர்களைச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களாக அமைத்து, கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை தங்களுடைய சலவை வேலைகளைக் கூட்டுறவு லாண்டரிகளுக்கு ஒப்படைக்க வேண்டும்.	நடவடிக்கை எடுப்பதற்கென கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.
5. சிறுவர்களை வேலைக்கமர்த்திக் கொள்வது—	6 முதல் 11 வயதுள்ள சிறுவர்கள் இம் மாநிலத்தில் தற்போது அமலிலுள்ள கட்டாயக் கல்வி திட்டத்தின்கீழ் பள்ளிகளில் சேர்க்கப்படுவர். எனவே, இந்தத் தொழிலில் சிறுவர்களை வேலைக்கமர்த்தும் பிரச்சினை தானே நின்றுவிடும்.
6. ஹரிஜன குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் கல்விச் சலுகைகள் சலவையாளர் வகுப்பு போன்ற வகுப்புகளைச் சேர்ந்த பிற குழந்தைகளுக்கும் கிடைக்க வேண்டும்.	வண்ணார் வகுப்பு (அகசா, ஏகாலி, மடியாலா, ராஜகா, ரஜகுல, வேலுததாடன்) பின்னிலை வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன்படி இந்த வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள், அந்த வகுப்பிற்கு மாறியவர்கள் ஆகியோருக்கு ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்படுவதுபோல் இப்போதும் பள்ளிச் சம்பளச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அதாவது, கல்வி பயிலும் எல்லா நிலைகளிலும் முழுச் சம்பளச் சலுகையும் விசேஷ சம்பளம் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கும் கொடுக்கப்படுகிறது. கல்வி நிலையங்களில் சேர்த்துக்கொள்வது சம்பந்தமாய் இந்த வகுப்பு மாணவர்கள் "மற்ற பின்னிலை வகுப்பினராகக் கருதப்படுவர். இதைக் கருதியும், எப்போதும் போலவே வகுப்பு வாரிச் சலுகை கொடுப்பதை நீடிக்க வேண்டுமென்கிற தற்போதைய கொள்கையைக் கருதியும் இது சம்பந்தமாய் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

7. வீட்டு வசதியும் போக்குவரத்தும்— ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல் சலவையாளர் கட்டும் வீடுகள் கட்டுவதற்கு மானியங்கள் வழங்கப்பட வேண்டும். கூட்டுறவுத் துறையிடமிருந்து உதவி பெறுவதற்கும் போக்குவரத்து வண்டிகள் வாங்குவதற்காகவும் சங்கங்களை அமைக்கும்படி அவர்களைத் தூண்ட வேண்டும்.	சலவைத் தொழிலாளர்கள் தங்களுக்குள் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துத் தங்களுக்கு வேண்டிய வீடுகளைக் கட்டித் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ளவும், தங்களுக்கு வேண்டிய போக்குவரத்து வண்டிகளை வாங்கவும் நிதி உதவி அளிக்கும்படிக் கூட்டுறவுத் துறையைக் கேட்கும் பொருட்டு அவர்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேரும்படித் தூண்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொழில் துறைக் கமிஷனர் அறிவித்துள்ளார். இந்த ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ளக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.
8. கூலி— தொழிலாளிகளுக்குப் போதிய கூலி கொடுக்க வகை செய்ய வேண்டும்.	குறைந்த அளவுக் கூலிச் சட்டத்தின்படியுள்ள தொழில் அட்டவணையில் இந்தத் தொழிலையும் சேர்த்துக் கொள்வது பற்றித் தொழில் துறைக் கமிஷனர் தெரிவித்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த சிபார்சின் பேரில் கமிஷனர் மேலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு அரசாங்கத்திற்கு அறிக்கை ஒன்றை அனுப்பிவைப்பார்.
10. (1) ரெவின்யு, போலீஸ் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று பார்வையிடும்போது சலவைத் தொழிலாளர்களின் நலன்கள் பற்றியும் கிராம மக்களுக்கும் அவர்களுக்குமுள்ள தொடர்பு பற்றியும் விசாரிக்க வேண்டும். அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்ட அல்லது வேற்றுமை காட்டப்பட்ட விசேஷ சம்பவங்கள் எவையேனுமிருந்தால் அவற்றைப்பற்றி அறிக்கை அனுப்பவேண்டும்.	சலவைத் தொழிலாளர் நலனைச் சமுதாயத்தில் அபிவிருத்தி செய்யவும், அந்த வகுப்பினருக்குத் தன்னம்பிக்கை ஏற்படச் செய்யவும் ரெவின்யூ, போலீஸ் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் தங்களால் இயன்றதைச் செய்யலாம் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. சலவைத் தொழிலாளர்களுக்கு சமுதாய இழுக்குகள் இருந்தால் அவற்றைப் போக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கிராம சேவக்குகளுக்கு அறிவிக்கவேண்டும். சம்பந்தப்பட்ட துறையினர் தனித்தனியே இதற்கு வேண்டிய உத்தரவுகளைப் பிறப்பித்து வருகின்றனர்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஒரு தனிப்பட்ட இடத்திற்கு மட்டும் அல்ல. இவ்வாறு பெயர் மாற்றவேண்டுமென்று 17 தெருக்கள் குறிப்பிடப்பட்டு, பதினேழு பெயர்களை அனுப்பியிருந்தார்கள். இது கார்ப்பரேஷன் கவுன்சில் செய்து அனுப்பிய தீர்மானம். அவற்றில் சில மாறுதல்களைச் செய்யலாமா, இதுபற்றி மீட்டும் பரிசீலனை செய்து அனுப்புங்கள் என்று அரசாங்கம் அதை அவர்களுக்கே அனுப்பியிருக்கிறது. இப்போது முடிவாக அவர்கள் பதில் வரும் வரையில் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: பாங்குவிடிங் ஹாலை ராஜாஜி ஹால் என்றும் ஆரன்மூர் அரண்மனையைத் தமிழகம் என்றும் இந்த அரசாங்கம் மாற்றி இருக்கையில் கார்ப்பரேஷன் இந்நகரில் உள்ள பெயர்களை மாற்றவேண்டும் என்று யோசனை தெரிவித்தபோது, அதில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணாவின் பெயர் இருந்த காரணத்தினாலேயே அதைத் திரும்பவும் யோசனை செய்யுங்கள் என்று அரசாங்கம் திருப்பி அனுப்பிவிட்டார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அந்தப் பதினேழு பெயர்களில் அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரே இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: மைலாப்பூரில் உள்ள எட்வர்ட் எலியட்ஸ் ரோட்டுக்கு நமது குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பெயரை வைக்க வேண்டும் என்றும், நகரசபைக்கு லட்சம் ரூபாய் வழங்கிய சிவாஜி கணேசன் பெயரை பெசண்ட் ரோடுக்குச் சூட்டவேண்டும் என்றும் இது போல நல்லது செய்கின்றவர்களுடைய பெயரை நம் நகர வீதிகளுக்குச் சூட்டவேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டது. இப்படி நல்லவர்களுடைய பெயரை நிரந்தரமாக விளங்கும்படி சூட்டுவது நல்லது அல்லவா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் அங்கத்தினர் கூறிய பெயர்கள் இந்த 17 பெயர்களில் வரவில்லை. இது விஷயம் கார்ப்பரேஷனிடம் இருந்து தகவல் வந்தவுடன் முடிவு செய்யப்படும்.

கனம் சபாநாயகர்: நம் நகரத்தில் எத்தனை ரோடுகள் இருக்கின்றனவோ அத்தனை நல்லவர்கள்தான் இருக்கிறார்களா?

பாடப் புத்தகங்கள்

* 452 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பள்ளிக்கூட பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு சீக்கிரமாக கிடைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A list of approved books is published every year in the *Fort St. George Gazette.* At the time of publication of the list, the concerned publishers are requested to supply in time sufficient number of copies of the books and also to have on stock a sufficient number of copies.

With a view to make nationalised text-books available to the students easily and in time, the agents are required according to a clause in the agreement entered into with them, to open sub-depots in each taluk by themselves or through sub-agents under their control. Similarly the agent, Madras city has to open ten sub-depots in the City. The books are also being printed according to a time schedule so that sufficient number may be available when the schools re-open after the summer vacation.

திரு. கரு. சீமைச்சாமி: பல ஏற்பாடுகள் செய்திருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாடப் புத்தகங்கள் பள்ளிக்கூடம் திறந்து இரண்டு மாதத்திற்குள்கூடக் கிடைப்பது இல்லை. ஆகவே ஏப்ரல் மாதமே பாடப் புத்தகங்களை அச்சிட்டு விநியோகம் செய்ய உத்தரவிட முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பு சொன்னதுபோல இந்த விஷயம் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது.

பள்ளிக்கூடத் துவக்க ஆண்டு

* 453 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடத் துவக்க ஆண்டினை ஜனவரியில் துவக்குவதற்கு யோசனை ஏதாகிலும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இது சம்பந்தமாகக் கல்வி நிபுணர்கள் அரசாங்கத்திற்குக் கருத்துக்கள் கூறியிருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) No. In respect of colleges, a suggestion was received and communicated to the two universities for necessary action.

S.S.L.C. Examinations

* 454 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have got any proposal to reform the examination system to reduce the failures in the Secondary School Leaving Examinations; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) Does not arise.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, சென்ட்ரல் அட்வைசரி போர்டில் இருந்து இந்தத் தேர்வு முறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு யோசனை கூறப்பட்டிருக்கிறதா? அந்த யோசனையின் மீது அரசாங்கத்தின் கருத்து என்ன?

Police lathi-charge (Tiruvannamalai)

* 464 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there was lathi-charge by the Police at Tiruvannamalai on 30th June 1963;

(*b*) if so, the circumstances that led to it; and

(*c*) whether any enquiry was conducted thereon and the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No.

(*b*) & (*c*): Do not arise.

அரசினர் கலைக் கல்லூரிகள் (பொறுக்குக் குழு)

* 465 *கேள்வி.*—திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் சேலம் கலைக் கல்லூரி, சென்னை கலைக் கல்லூரி ஆகியவைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள பொறுக்குக் குழு அமைக்கப்பட்டனவா?

(இ) ஆமெனில், அக்குழுவின் அங்கத்தினர்கள், தலைவர் யார் யார்?

(உ) எந்த அடிப்படையில் அவர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) The composition of the Selection Committee is treated as "Confidential" and it is not in the public interest to disclose the names of individual members.

(*c*) Prominent and responsible persons of the place in which the College is situated are appointed on the Selection Committee.

Stenographers (scale of pay)

* 466 *Q.*—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Madras Secretariat Association to upgrade the scale of pay of Stenographers on a par with that of Upper Division Clerks; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) The question does not arise

திரு. கே. மூக்கையாத் தேவர்: தற்போது சுருக்கெழுத்தாளர்கள் கடைசிவரை சுருக்கெழுத்தாளர்களாகவே இருந்து ரிடையர் ஆக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குப் புரொமோஷன் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. மூக்கையாத் தேவர்: சுருக்கெழுத்தாளர்களுக்கு மத்திய சர்க்காரில் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கிறார்கள். 'பே கமிஷன்' மூலம் அவர்களுக்கு இந்த அளவு சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு நம்முடைய மாநில சர்க்காரில் பணியாற்றும் சுருக்கெழுத்தாளர்களுக்கும் சம்பள உயர்வு கொடுக்க முன் வருவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 'பே கமிஷன்' முடிவு செய்து நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதத்தை அப்போதைக்கப்போது மீண்டும் மீண்டும் பரிசிலனை செய்து மாற்றமுடியாது.

நாடோடிக் குறவர்களுக்குக் குடியிருப்பு வசதி

* 467 *கேள்வி.*—திரு. முனு ஆதி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நாடோடிக் குறவர்களுக்கென எங்கு எவ்வளவு பொருட்செலவில் குடியிருப்பு வசதி (Colony) அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது?

(இ) மேலும் ஏற்படுத்தித்தர உத்தேசமுண்டா? ஆமெனில் எங்கு?

(உ) அதற்கான திட்டமென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

அரிசன நல அதிகாரிகள் நியமனம் (தெ. ஆ. மாவட்டம்)

* 468 *கேள்வி.*—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டு அரிசன நல மாவட்ட அதிகாரிகளை நியமிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: இல்லை.

ஆசிரியர்கள் (பஞ்சாயத்து யூனியன்)

* 469 *கேள்வி.*—திரு. இரா. நாராயணன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெவ்வேறு யூனியன்களில் வேலை செய்யும் ஆசிரியர்கள் தங்கள் சொந்த யூனியன்களுக்கு அல்லது அவர்கள் விரும்பும்

[a] 658–659-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்வு முறைகளை எப்படி மாற்றி அமைப்பது என்று யோசனை எதுவும் கூறப்படவில்லை. ஆனால் தேர்வுகளில் அதிகம் பேர் தேறாமல் போய்விடுவது தவிர்க்கப் படவேண்டியது. இதனால் விரயம் தவிர்க்கப்படும். இதைப் பொது வாகக் கவனித்து விரயத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்யவேண்டு மென்பது மத்திய அரசாங்கத்தின் கருத்து. அதுவே இந்த மாநில அரசாங்கத்தின் கருத்துமாகும்.

திரு. இராம. அரங்கண்ணல் : எஸ். எஸ். எல். ஸி. தேர்வில் மூன்று தடவை தேர்வு அடையாவிட்டால் பிறகு அந்த மாணவன் பரிட்சை எழுதக்கூடாது என்ற விதி இருக்கிறதா? அது மாற்றப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. செ. மாதவன் : இந்த மாநில கல்வி இயக்குநர் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வருஷக் கடைசியில் தேர்வு நடத்துவது என்று மட்டும் கூடாது, மாதந்தோறும் பரிட்சை நடத்தி, இந்தப் பரிட்சை களின் சராசரியைக் கொண்டு ஒரு மாணவனை ப்ரமோஷன் செய்ய வேண்டும் என்பதாக ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா? அது அரசாங்கத்தின் ஆணை பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது கூட எஸ்.எஸ்.எல்.ஸி. பப்ளிக் பரிட்சையைத் தவிர, மற்ற வகுப்புகள் சம்பந்தப்பட்ட வரை க்வார்டர்லி, ஹாப் எர்லி என்று பரிட்சை நடத்தித்தான் பொதுவாகத் தேர்வு கொடுக்கிற வழக்கம் இருக் கிறது. இந்த ஏற்பாடு எல்லாம் கீழ் வகுப்புகள் சம்பந்தப்பட்ட வரைதான்.

ஆசிரியர்கள் பிராவிடெண்ட் பண்டு

** 455 கேள்வி.—திரு. முனு ஆதி :* கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போதுள்ள தேசிய நெருக்கடியின் காரணமாக பஞ்சாயத்து யூனியன்களில் வேலை செய்யும் ஆசிரியர்களிடமிருந்து அதிகப்படி பிராவிடெண்ட் பண்டு வசூலிக்கப்படுவனவற்றிற்கு வழக்கமான முறைப்படி அரசாங்கமும் தன் பங்குத் தொகையை அதிகப்படுத்தி செலுத்துகிறதா?

(இ) இவ்விதம் அதிகப்படியாக வசூலிப்பது தேசிய நெருக்கடி தீரும் வரைதானா அல்லது நிரந்தரமாக இனி இவ்விதமே வசூலிக்கப்படவேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *(அ) இல்லை.*

(இ) இவ்விதம் அதிகப்படியாக வசூலிப்பது தேசீய நெருக்கடி தீர்ந்த மாதத்திலிருந்து ஒரு வருடம் வரையில்தான் நடக்கும்.

(a) No.

(b) Deductions at the enhanced rates in the contribution to Provident Fund will be made till the expiry of one year from the month of cessation of the present emergency.

வெளிநாடு சென்ற மாணவர்கள்

** 456 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு தொழில் நுணுக்கப் பயிற்சி பெற எத்தனை மாணவர்கள் அனுப்பப்பட்டனர்?

(இ) எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு எந்தெந்த நாட்டிற்கு அனுப்பப்பட்டனர்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *(அ) இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை ஒருவருமில்லை. பிற மாநிலங்களைப் பற்றிய விவரங்கள் இந்த சர்க்காரிடம் இல்லை.*

(இ) வினாவிற்கு இடமில்லை.

Panchayat Union Council Employees

* 457 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that service conditions and the rules have not yet been framed in respect of Panchayat Union Council employees; and

(b) if so, the reasons for the delay?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : *(அ) & (இ) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களில் பணியாற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் ஊழிய நிபந்தனைகளை முறைப்படுத்த, 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் இருபத்தெட்டு விதித் தொகுப்புகளை வெளியிட வேண்டியிருக்கிறது. இவற்றில் 7 விதித் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. மசோதா விதித் தொகுப்பு ஒன்று செயின் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியாகியுள்ளது. அது நாளடைவில் உறுதி செய்யப்படும். ஆறு விதித் தொகுப்புகள், லோகல் பண்டு அக்கவுண்ட்ஸ் எக்சாமினருக்கும், மருத்துவத் துறை டைரக்டருக்கும் அவர்களது கருத்துக்களைத் தெரிவிக்கும் படி அனுப்பப்பட்டுள்ளன. ஒன்பது விதித் தொகுப்புகள் செகரட்டேரியட்டிலுள்ள மற்றத்துறைகளைக் கலந்து கவனமாக ஆராயப்பட்டு வருகின்றன. எஞ்சிய விதிகள் கவனமாக ஆராயப் பட்டு, நாளடைவில் வெளியிடப்படும். இதற்கிடையில், புதிய விதிகள் இயற்றப்படாத பதவிகளுக்கு 1920-ம் ஆண்டு சென்னை ஜில்லா போர்டுகள் சட்டத்தின் கீழ் அந்தந்தப் பதவிகளுக்கென வெளியாகியுள்ள ஊழிய விதிகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் களில் பணியாற்றும் நபர்களுக்கும் பொருந்தும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : *விதிகள் இயற்றப்படாமல் இருப்பதால் அவர்களுடைய வருஷாந்திர உயர்வும் மற்றவையும் பாதிக்கப்படுமா?*

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. செ. மாதவன் : அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு சர்விஸ் புக்ஸ் சப்ளை செய்யாத காரணத்தால்தான் இந்தக் கால தாமதம் ஏற்பட்டது என்பது உண்மையா? உடனடியாக, பஞ்சாயத்து யூனியன்களில் வேலை பார்க்கும் எல்லா அலுவலர்களுக்கும் சர்விஸ் புக் 'ஓப்பன்' பண்ண சர்க்கார் உத்தரவிடுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் அவர்கள் இது பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

கால்நடை மருத்துவ மனைகள்

*458 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவமனைகள் எந்த அடிப்படையில் திறக்கப்படுகின்றன?

(இ) 1963-ல் திறக்கப்படவிருக்கும் மருத்துவமனைகள் எத்தனை ஜில்லாவாரியாக?

THE HON. SRI P. KAKKAN: (a) Veterinary Dispensaries are being opened in Taluk and Block Headquarters. In other places, they are opened depending upon the local demand, cattle population, disease position, availability of land, buildings, staff etc., preference being given to Panchayat Unions which have no dispensary within a radius of 5 miles and where the Unions come forward to donate lands, construct buildings or make any other contribution.

(b) Thirty dispensaries and the district-wise particulars are :—

South Arcot District—4.
North Arcot District—2.
Thanjavur District—1.
Madurai District—4.
Ramanathapuram District—3.
Tirunelveli District—5.
Tiruchirappalli District—3.
Salem District—4.
Coimbatore District—4.

சிமெண்டு ரோடுகள் (இராமநாதபுரம் மாவட்டம்)

*459 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சிமெண்ட் ரோடுகள் போடப்பட்டுள்ளனவா?

(இ) ஆமென்றால், எத்தனை மைல்கள்?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) 23 miles 5 furlongs.

ஆசிரியர் குடியிருப்பு

*460 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்கள், பள்ளிக்கு ஒரு மைல் சுற்றுப்புறத்திற்குள்ளேயே குடியிருக்கவேண்டும் என அரசாங்கம் உத்தரவு இட்டுள்ளதா?

(இ) இதேபோன்று அரசாங்க அலுவல்களில் ஈடுபட்டுள்ளவர்களையும் குடியிருக்க உத்தரவு இடப்பட்டுள்ளதா?

(உ) இல்லையெனில், ஆசிரியர்கள் மட்டும் வற்புறுத்தப்படக் காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) According to existing rules and instructions teachers are ordinarily expected to reside at the place of duty or within a mile from the school.

(b) Ordinarily all Government servants are also required to reside at the Headquarter stations prescribed for them.

(c) Does not arise.

திரு. முனு ஆதி : ஆசிரியர்கள் கிராமப் புறங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது, அங்கு அவர்களுக்கு வீட்டு வசதி இல்லாமல் இருப்பதன் காரணமாக அங்கேயே போய்க் குடியேற முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, ஆசிரியர்கள் வேலை பார்க்கும் இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்திற்குள் இருக்கவேண்டுமென்ற விதியைத் தளர்த்த அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இருக்கும் விதிகளைத் தளர்த்துவது முறையல்ல. ஆயினும், ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் சீக்கிரத்தில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட இருக்கிறது.

Illicit cutting of trees

*461 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the illicit cutting of live trees in Bettamugalalum Bennihalli and Kandenahally unreserved forest in Dharmapuri taluk; and

(b) if so, the action taken to prevent such illicit cutting of trees?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம் ; தெரியும்.

(இ) கள்ளத்தனமாய் மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்க கிராம அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்குமாறு சேலம் கலெக்டர் கேட்டுக் கொள்ளப்

பட்டிருக்கிறர் ; கள்ளத்தனமாய் மரங்கள் வெட்டி எடுத்துச் செல்வதைப் பரிசீலனை செய்யக் காட்டிலாகா ஊழியர்களுக்கு எச்சரிக்கை செய்யும்படி (வடக்கு) சேலம் ஜில்லாக் காட்டு அதிகாரிக்கு உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது புதிய பஞ்சாயத்துச் சட்டப்படி இந்த மரங்கள் எல்லாம் பஞ்சாயத்துக்கே உரிமை உள்ளவையாக ஆகிவிட்டன. ஏற்கெனவே உள்ள சட்டப்படி இவை ரெவின்யூ டிப்பார்ட்மெண்டுக்குச் சொந்தமானது. ஆகவே, புறம்போக்கு மரங்களை அல்லது சர்க்காருக்குச் சொந்தமான மரங்களை வெட்டுவதைத் தடுக்க பஞ்சாயத்துக்களுக்கு என்ன ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ள கிராமங்களைப் பொறுத்த கேள்வி இது. கனம் அங்கத்தினருடைய கேள்விக்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தப் பகுதிகளில் எவ்வளவுடன் மரங்கள் இதுவரை இந்த மாதிரி வெட்டப்பட்டிருக்கின்றன என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எந்த அளவு என்ற தகவல் இல்லை, வெட்டப்பட்ட மரங்களின் உத்தேச மதிப்பு சற்றேறக்குறைய 12,000 ரூபாய்.

கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை

*** 462 கேள்வி.—திரு. முனு. ஆதி :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை ஆகியவைகள் அமைக்க அரசாங்கம் உதவித் தொகை அளித்து வருகிறதா ?

(இ) அப்படியானல் எவ்வளவு தொகை எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அதேபோன்று ஆட்டுப் பண்ணை அமைக்க உதவும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : (a) No.

(b) Does not arise.

(c) No.

திரு. முனு. ஆதி : இப்படிப்பட்ட பண்ணைகளை நடத்துவதற்குத் தனியார் முன் வந்தால் அவர்களுக்கு உதவி செய்வது பற்றி அரசினர் பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : சில இடங்களில் அவ்வாறு முன் வந்திருக்கிறர்கள். அவர்களுக்கு அரசாங்கம் ஒத்தாசை செய்கிறது.

கட்டாயக் கல்வி

*** 463 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கட்டாயக் கல்வி அமுலில் உள்ள பகுதிகளிலுள்ள வயது வந்த சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்பாதிருக்கும் பெற்றோர்கள் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

(இ) அப்பகுதிகளில் வயது வந்த எல்லாக் குழந்தைகளுமே பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனரா என்பது எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Although the Elementary Education Act and the Rules framed thereunder provide for punitive action against the defaulting persons, experience has shown that incentives like midday meals, books, slates and free clothing and persuasion yield better results than legal action. Therefore, a persuasive approach has been adopted and punitive action has not been resorted to against the defaulting parents.

(b) Every school is required to maintain a census register containing the details of each child of school age whether at school or otherwise. In Panchayat Union areas, the Panchayat (Social Education) Committees and in Non-Panchayat Union areas, the attendance committees, will watch the non-attendance of the children at school.

திரு. சி. ம. அம்பிகாபதி : 9, 10, 11 வயதுள்ள குழந்தைகள் பள்ளியில் சேருவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு சேராமல் இருக்கிறர்கள். அவர்களுக்கு எந்த முறையில் கல்வி போதிப்பது என்பது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆறு முதல் பதினேரு வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டாய ஆரம்பக் கல்வி சொல்லிக் கொடுக்கவேண்டுமென்ற திட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பிள்ளைகள் பள்ளிக்கு வரத் தயங்குகிறர்கள் என்றல் ஸ்தலத்தில் இருக்கிறவர்கள் அவர்களைப் பள்ளிக்குச் செல்லும்படி செய்யும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஆறு வயது முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளில் 90 சதவிகிதத்தினரை இந்த ஆண்டுக்குள் பள்ளிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் 100-க்கு 90 விகிதத்தினரை பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும்படி செய்து விடலாம் என்று எதிர்பார்க்கிறது.

வேறு யூனியன்களுக்குச் செல்ல விரும்பினால் இரண்டு யூனியன் கவுன்சில்களின் ஒப்புதல் பெறவேண்டும் என்ற நிலை உள்ளது உண்மையா ?

(இ) இம்மாதிரி வரும் மனுக்களை உடனே பரிசீலனை செய்து உத்தரவு கொடுக்க கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes Sir.

(b) The Collectors are already empowered to transfer teachers from one Panchayat Union to another for administrative reasons. But when the Panchayat Unions concerned agree, the transfers can be effected without reference to the Collectors.

திரு. இரா. நாராயணன்: மாவட்ட ஆட்சி மன்ற காலத்தில், சில ஆசிரியர்கள் தங்களுடைய சொந்தப் பகுதியிலிருந்து அதிக தொலைவிலிருந்து வருகிறவர்கள் தங்களை மாற்றவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தால் அதன் மீது தீர்மானம் நிறைவேற்றி அனுப்புவதற்குப் பஞ்சாயத்து யூனியனில் காலதாமதம் செய்கிறார்கள். அதை முன்னிட்டு பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பிரத்தியேகமான உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்காகப் பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தனியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

Legislative Assembly Hall (Air-Conditioning of)

* 470 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to air-condition the Legislative Assembly Hall?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: நான் கேட்டிருப்பது ஒருவருக்கு மட்டும் பயன்படவேண்டும் என்று அல்ல. எல்லோருக்கும் வசதியாக இருக்கவேண்டும் என்று தான் கேட்டிருக்கிறேன். ஆகவே, இது பற்றி சர்க்கார் ஆலோசிக்க முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் கடுமையான கோடைக்காலம் என்பது கிடையாது. மே, ஜூன் இம்மாதங்களில்தான் வெயில் சற்றுக் கூடுதலாக இருக்கும். அப்போது சட்டசபை கூடுவது கிடையாது. அதோடு புதிதாக சட்டசபைக் கட்டிடம் கட்டவேண்டும் என்ற உத்தேசமிருக்கிறது. ஆகவே, இப்போதைய கட்டிடத்தில் ஏர்-கண்டிஷன் செய்யவேண்டியது அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

களர் நிலங்களைச் சீர்படுத்தல்

* 471 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

களர் நிலங்களை உயர்நிலமாக்க விவசாயத் துறையினர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன்: தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இத்தகைய திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. சி. ம. அம்பிகாபதி: இம்மாதிரிப்பட்ட களர் நிலங்கள் தஞ்சை மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன. ஆகவே இந்தத் திட்டத்தை தஞ்சை ஜில்லாவிற்கும் விஸ்தரிக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன்: தென்னாற்காடு மாவட்டத்தில் இப்போது இந்தத் திட்டம் நடத்தப்படுகிறது. இதில் வெற்றி ஏற்படுமானால், இந்தத் திட்டத்தை தஞ்சை ஜில்லாவிற்கும் விஸ்தரிப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. க. ர. நல்லசிவம்: களர் நிலங்களை சீர்திருத்துவது சம்பந்தமான திட்டத்தின் விவரங்கள் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன்: இந்தத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு 50 சதமானம் கடனாகவும், 50 சதமானம் ஸப்ஸிடியாகவும் உதவி செய்ய அரசாங்க திட்டமிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: களர் நிலத்தை பக்குவப்படுத்துவதற்கு கரைகள் போடுவது, ஓடைகள் ஏற்படுத்துவது இம்மாதிரிப்பட்ட வேலைகளோடு நின்றுவிடுவதால் பிரயோசனமில்லை. ஆகவே நிரந்தரமான நடவடிக்கை எடுக்க சர்க்காரில் என்ன திட்டமிருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: இவை மட்டுமல்ல, நல்ல விதைகள் ஜிப்சம் கொடுப்பது போன்ற திட்டமும் இருக்கிறது.

பீடித் தொழிலாளர் நிலை

* 472 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு பீடி ஏற்றுமதி செய்து வந்ததை இலங்கை அரசாங்கம் தடைசெய்தது தமிழகத்தில் பீடித்தொழில் பாதிக்கப்பட்டு இருப்பதால் ஏராளமான பீடித் தொழிலாளர்கள் வேலையின்றி கஷ்டப்படுவது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

*477 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உயர்நிலைப்பள்ளிகள் இருக்கும் ஊர்களிலும், பஞ்சாயத்து யூனியன் அமைந்திருக்கும் ஊர்களிலும் நூல் நிலையம் அமைக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Under Rule 45 (4) (b) of the Madras Public Libraries Act, 1948, branch libraries can be opened by the Local Library Authorities in localities having a population of 5,000 and over. It is left to the Local Library Authority to select the places subject to the over all approval of the Director of Public Libraries.

Tour Programme of Officers

*478 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are in receipt of a representation from Sri R. S. Veerappa Chettiar, M.L.A., regarding the communication of the Tour Programmes of District Officials to the Members of Legislatures in their districts; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) Orders have been issued in G.O. Ms. No. 36, Legislative Assembly, dated 8th August 1963, that District Officials should communicate their tour programmes to Members of the Legislature in their respective Districts.

10-00 a.m.

அரசாங்க ரப்பர் கண்ணாடி தொழிற்சாலைகள்

*479 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ரப்பர், கண்ணாடி தொழிற்சாலைகள் எத்தனை இடங்களில் உள்ளன?

(இ) அவைகளில் என்னென்ன வகையான பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன?

(உ) வெளி வாணிபத் தொடர்பு ஏதேனும் இருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The Government are establishing a factory for the manufacture of Scientific and Laboratory glassware and table blown glass apparatus at the Industrial Estate, Guindy. A training centre for training 10 candidates in table blown glass apparatus is already functioning in the same place. In addition to this, a Centre for training 15 artisans every year in bangle and bead making is functioning at

Madurai and a Centre for training 15 candidates in artistic glass has been established at Madurai. There is no Government Rubber Factory in the State.

(b) The factory at Guindy is at present manufacturing table blown apparatus like burettes, pipettes, condensers, test tubes, etc.

(c) No foreign trade is done in respect of the items manufactured in the unit.

திரு. சி. ம. அம்பிகாபதி: கும்பகோணத்தில் துவக்கப்பட்ட கண்ணாடித் தொழிற்சாலையில் உற்பத்தி ஆக்கப்பட்ட கண்ணாடி சாமான்கள் நல்ல விலைக்கு விற்பனையாகவில்லை, சாமான்கள் தேங்கி இருக்கிறது என்று சொல்லுகிறார்களே, அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தவிதமான புகார் என்னிடத்தில் வரவில்லை. அப்படி ஏதாவது இருக்குமானால் கனம் அங்கத்தினர் அதைப் பற்றி எனக்கு எழுதி அனுப்பலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I think the House has no objection to extend the question hour till we dispose of the remaining questions.

வனஸ்பதி தொழிற்சாலை (விழுப்புரம்)

*480 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விழுப்புரத்தில் அமைந்துள்ள சென்னை வனஸ்பதி தொழிற்சாலைக்கு உயர்ரக (High Tension) மின்சக்தி வழங்கப்பட்டு மீண்டும் வேலை தொடங்கிவிட்டதா?

(இ) 1962 ஏப்ரலில் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையை மேற்படி கம்பெனியார் செலுத்தி விட்டனரா?

(உ) அவர்களுக்கு தொழிற்சாலை தொடங்க அரசாங்கம் அளித்த கடன் தொகை எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The company reported in May last that the Madras State Electricity Board had sanctioned its High Tension permit application for extending supply to its factory for a load of 900 KVA. The Company was granted time till 31st October 1963 to commence production.

(b) Yes.

(c) Rs. 10 lakhs.

போலீஸ் நிலையம் (வேப்பூர்)

*481 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் வேப்பூர் கிராமத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் திறப்புவிழா நடத்தப்பட்டதா?

திரு. ஆ. கு. சுப்பையா : இதில் சேர்ந்துள்ள ஆண்கள் எத்தனை பேர்கள்? பெண்கள் எத்தனை பேர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் இப்போது என்னிடமில்லை.

பிரசவ விடுமுறை (மருத்துவ அத்தாட்சி)

* 474 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களில் பணி புரியும் மணமான பெண்களும், ஆசிரியைகளும் பிரசவத்திற்கான விடுமுறையில் செல்லும்போதும், பின்னர் வேலையில் மீண்டும் சேரும்போதும் மருத்துவ அத்தாட்சி கேட்கப்படுகிறதா?

(இ) ஆமெனில், அவ்வாறு வற்புறுத்தப்படுவதன் அவசியமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) The question does not arise.

திரு. முனு ஆதி : இப்படியில்லை என்று சர்க்கார் சொன்ன போதிலும், இதன் காரணமாக சம்பளம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்பதை சர்க்கார் அறியுமா? ஆகவே பிரசவத்திற்காக மருத்துவ சர்டிபிகேட் தேவையில்லை என்பதை சர்க்கார் உணருகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரசவத்திற்காக போகின்றவர்களுக்கு சர்டிபிகேட் அவசியமில்லை.

கலைக்கல்லூரி (அரியலூர்)

* 475 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் அரியலூரில் ஒரு கலைக் கல்லூரியை நிறுவ உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. இரா. நாராயணன் : ஸார், அரியலூர் வட்டாரத்தில் சுற்றியுள்ள இடங்களில் எல்லாம் 40 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே சர்க்கார் அங்கு ஒரு கலைக்கல்லூரியை ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்குமா? இல்லையென்றால் இனிமேலாவது அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் இதை மேற்கொள்வதற்கான உத்தேசம் இப்போதில்லை என்று சொன்னேன். அங்குள்ள மக்கள் கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று முன்வந்தால், அதற்கு அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி பரிசிலிக்கும்.

அரசாங்க நூல் நிலையங்கள்

* 476 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தமிழகத்தில் உள்ள அரசாங்க நூல் நிலையங்களின் எண்ணிக்கை என்ன?

(இ) எதிர்கட்சி நடத்தும் பத்திரிகைகள், அரசாங்க நூல் நிலையங்களில் இடம் பெறக்கூடாது என்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறதா?

(உ) அரசாங்கம் நடத்தும் பல நூல் நிலையங்களில் எதிர்க்கட்சியினர் நடத்தும் பத்திரிகைகள் காணப்படாததன் காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Total number of Branch Libraries (including the District and Firka Central Libraries) in the State as on 1st July 1963 is 658.

(இ) No, Sir.

(உ) The discretion in the matter of purchase of dailies and periodicals for the libraries maintained by them is with the Local Library Authorities under the Madras Public Library Act, 1948 and Government have no information on this point.

திரு. செ. கோ. விசுவநாதன் : சாதாரணமாக செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள நூல் நிலையங்களில் எல்லாம் எதிர்க்கட்சியைச் சார்ந்த பத்திரிகைகள் இல்லை என்பதை சர்க்கார் உணருமா? அப்படியென்றால் எதிர்க்கட்சியைச் சார்ந்த பத்திரிகைகளையும் வரவழைப்பதற்காக அரசாங்கம் சிபாரிசு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரியாது. மேலும் சிபாரிசு செய்வது என்பதும் முறையல்ல.

திரு. வி. எஸ். எஸ். மணி : லோக்கல் லைப்ரரி அத்தாரிட்டி நூல் நிலையங்களில் பெரும்பான்மையான மக்கள் வாசிக்கக்கூடிய செய்தித் தாள்கள் இன்னின்ன வேண்டும் என்று கோருகிறார்களோ அவைகளை அந்த நூல் நிலையங்களில் வைக்கும்படி ஒரு ஸ்டான்டிங் ஆர்டர் போடுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : லோக்கல் லைப்ரரி அத்தாரிட்டி என்ன பத்திரிகைகள் போடவேண்டும் என்று முடிவு செய்வார்கள். இதையும் வோட்டு எடுத்து முடிவு எடுக்கவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய விஷயமல்ல.

(இ) ஆமெனில், இப்போது அது இயங்கி வராததற்குக் காரணமென்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. நாராயணன் : தலைவர் அவர்களே, வேப்பூர் பஞ்சாயத்து யூனியனில் டிஸ்ட்ரிக்ட் சூபரின்டென்டெண்ட் அவர்கள் வந்து போலீஸ் ஸ்டேஷன் திறப்பு விழா செய்தார்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறது. ஆனால் அது இயங்கி வரவில்லை. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. வேப்பூரில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்று, 15 மைல் சுற்றளவில் போலீஸ் ஸ்டேஷன் இல்லாததால் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி திருச்சி சூபரின்டெண்டெண்டு ஆஃப் போலீஸ் சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிறார். ஆனால் நாட்டில் இருக்கும் நெருக்கடி காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

State Housing Board

* 482 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the Housing Board refuses to give the details of the cost of Low Income and Middle Income Group houses to the owners;

(*b*) whether any representation has been received by the Government in the matter; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

"That the Government be granted an additional sum not exceeding Rs. 30,704 under Demand XIII—Administration of Justice.".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XV—POLICE

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum not exceeding Rs. 8,37,549 under Demand XV—Police."

The Demand was put and carried and the Grant was made.

[திரு. வெ. ராமையா] [22nd November 1963

நடுத்தர இனத்தைச் சேர்ந்தவர்களும் அதிகம் பாதிக்கப்படாத வகையில், விலை மதிப்பு இல்லாத நிலத்திற்கு நன்மை ஏற்படும் வகையில் 'ஸோனை' ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த விதிவிலக்கு அவசியம் இல்லையென்று கருதுகிறேன். ஆகவே, அவருடைய திருத்தங்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

The amendments were put and lost.

Clause 3 was put and carried.

Clause 4 to 26 were put and carried.

Clause 27.

MR. SPEAKER: The question is—

"That clause 27 do stand part of the Bill."

SRI S. MADHAVAN: Sir, I move the following amendment:—

'Add the following proviso, after sub-clause (4):—

"Provided that the tax cannot be collected both from the transfer and the transferee."'

SRI T. P. ALAGAMUTHU: Sir, I second the amendment.

MR. SPEAKER: The clause and the amendment are before the House for discussion.

* SRI S. MADHAVAN: Sir, Clause 27 deals with obligation of transferor and transferee to give notice of transfer. In sub-clause (4) it is stated—

'Every person who makes a transfer as aforesaid, without giving such notice to the Urban Land Tax Officer shall (in addition to any other liability which he may incur through such neglect), continue liable for the payment of the urban land tax assessed on the urban land transferred, until he gives notice or until the transfer shall have been recorded in the revenue registers, but nothing in this section shall be held to affect the liability of the transferee for the payment of the said tax.'

If the transferor has not given notice of the transfer, he is liable to pay the Urban Land tax and at the same time, the transferee is also made liable to pay the urban land tax. So I have moved an amendment to add a proviso to this sub-clause. According to the sub-clause the primary liability will be on the transferor. If he gives notice of the transfer to the Government or the concerned authorities, then his liability will go. But the last sentence in sub-clause (4) is somewhat doubtful. It is stated—

'but nothing in this section shall be held to affect the liability of the transferee for the payment of the said tax'.

THE MADRAS URBAN LAND TAX BILL, 1963 (L.A. BILL NO. 2 OF 1963) AS AMENDED BY SELECT COMMITTEE

22nd November 1963]

According to the clause, both the transferor and the trnsferee are made liable to pay the tax. The transferee is not relieved from his liability to pay the tax for his site, if he has not given notice. So, it is somewhat confusing and to remove that confusion, I have moved an amendment to add a proviso to the sub-clause. The Government or the concerned authorities have no right to collect the tax both from the transferor and the transferee.

MR. SPEAKER: The question of both the persons paying the tax would not arise. Only one has to pay it.

SRI S. MADHAVAN: According to the clause, the Government are entitled to collect the tax from both the transferor and the transferee.

MR. SPEAKER: The tav is a charge on the land and not on the man who is getting it. Therefore, when the land goes, it goes with the charge also.

SRI S. MADHAVAN: That is the answer that I can expect. But it is better to include a proviso so that the tax may not be collected both from the transferor and the transfree. If this proviso is there, then the confusion will also go. That is my view.

THE HON. SRI V. RAMAIAH: Sir, as the Hon. Speaker himself has explained, there is no confusion at all. Further, without this proviso, is certain that collection will not be made from both the transferor and the transferee. It will be done from only one and there is no confusion at all. So, I do not accept the amendment.

The amendment was by leave withdrawn.

Clause 27 was put and carried.

Clauses 28 to 30 were put and carried.

Clause 31.

MR. SPEAKER: The question is—

'That clause 31 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN: Sir, I move the following amendment:—

'Add the following proviso to sub-clause (1) of clause 31:—

"Provided that the owner is not entitled to collect the increased excess rent fixed under this clause from the tenant who is occupying before the commencement of this Act."'

SRI T. P. ALAGAMUTHU: Sir, I second the amendment.

MR. SPEAKER: The clause and the amendment are before the House for discussion.

*திரு. செ. மாதவன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவு பற்றி ஏற்கனவே இந்த சட்டமன்றத்தில் விவாதத்தின் மீது பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதற்கு கனம்

SRI S. MADHAVAN : Sir, I move the following amendments :—

" Add the following proviso to clause 3 :—

" Provided that no tax can be levied and collected from a person owning urban land not more than ten cents."

' In clause 3, substitute the figures " 0·2 " for the figures " 0·4 ".'

The amendments were duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

* **திரு. செ. மாதவன் :** *தலைவர் அவர்களே, இந்த மூன்றாவது பிரிவுப்படி 'அர்பன் லாண்ட் டாக்ஸை' மக்கள்மீது விதிப்பதற்கு சர்க்காருக்கு உரிமை தரப்பட்டிருக்கிறது. இதிலே வரி விகிதம் 0.4 சதவிகிதம் என்று போடப்பட்டிருக்கிறது.' இதைக் குறைக்க வேண்டுமென்று சட்ட மன்ற அங்கத்தினர்கள் பலரும் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக வாவது அமைச்சர் அவர்கள் இன்னும் கொஞ்சம் இந்த விகிதத்தைக் குறைக்க முயற்சிப்பார்கள் என்ற நோக்கத்திலேதான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலிலே இந்த வரி விகிதத்தைக் குறைப்பதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். 0.2 சதவிகிதம் என்று ஆக்க வேண்டுமென்று நாங்கள் கொண்டு வந்திருக்கிற காரணத்தால் தான் குறைப்பதற்கில்லை என்று பதில் சொல்லிவிட்டார்களோ என்று எனக்குச் சந்தேகமாய் இருக்கிறது. ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சர்க்காராவது ஒரு திருத்தம் கொண்டு வந்து அதனைக் குறைக்கலாம் என்ற கருத்தை நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.*

இதே பிரிவுக்கு இன்னொரு முக்கியமான திருத்தத்தையும் நான் கொடுத்திருக்கிறேன். திருத்தத்தின் அடிப்படையைப்பற்றி இந்த மன்றத்திலே பல அங்கத்தினர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இந்த வரி தனி மனிதனுடைய சொத்தின்மீது போடப்பட்டிருக்கும் வரியாகும். தனி மனிதனைப் பாதிக்கும் வரியாகும். அதோடுகூட 'ரிட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட்' வரக்கூடிய நிலை ஏற்படலாம் என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, சாதாரண நடுத்தர வகுப்பினரைப் பாதிக்காத அளவிற்கு இது திருத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேயே இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனி நபர் தன்னுடைய சொந்த உபயோகத்திற்குக் குறைந்த இடம் வைத்திருந்தாலும்கூட அதற்கும் இந்த வரி வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது பற்றிச் சொன்னால் உடனே அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு ஒரு கன்செஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பதில் தருவார்கள். அந்த கன்செஷன்' கொடுத்திருந்தாலும்கூட ஒரு குறிப்பிட்ட அளவு தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு என்று வைத்திருப்பவர்களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்ற

கருத்து, இன்றைக்கு அல்ல, 1955-ம் ஆண்டுக்கு முன்னாலிருந்தே வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே, அந்தக் கருத்தை அடிப்படையாகக்கொண்டு என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டு, குறைந்த அளவு 10 செண்டுகள் தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு என்று வைத்திருப்பவர்களுக்கு வரியிலிருந்து விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்ற வகையில் அவர்கள் இந்த வரி விதிப்புக்கு உட்படமாட்டார்கள் என்ற திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதனை ஏற்று நடுத்தர மக்களும் ஏழை மக்களும் தங்களுடைய சொந்த உபயோகத்திற்கு வைத்திருக்கும் நிலத்திற்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. சண்முகம் : *தலைவர் அவர்கள், நகரப்புற நிலயங்களின் மீது வரி விதிக்கப்பட்டிருக்கும் இந்த மசோதாவின் இரண்டாவது பிரிவின்மீது நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதில் 'அர்பன் லாண்ட் டாக்ஸ்' . . . . .*

THE HON. SRI V. RAMAIAH : Clause 2 has already been passed.

MR. SPEAKER : When clause 2 was passed, the hon. Member was not in his seat. Now the hon. Member can speak on clause 3.

கனம் திரு. வெ. ராமையா : *கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவிலே இது ஒரு முக்கியமான பிரிவு. இதைக் குறித்துப் பல முறை இந்த மன்றத்திலே பேசியிருக்கிறோம். அதோடு மட்டுமல்லாமல் பொறுக்குக்கமிட்டியிலும் இதில் இருக்கக்கூடிய பிரச்னைகள், சங்கடங்கள் ஆகியவை குறித்து பேசி முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆரம்பத்தில் மசோதாவை அறிமுகம் செய்யும்போது இந்த வரி விகிதம் 0.5 சத விகிதம் என்று தீர்மானம் செய்திருந்தோம். ஆனால், இந்த வரி முறை புதிதாக இருக்கும் காரணத்தால், ஆரம்பக் கட்டத்தில் அதிகக் கஷ்டங்கள் வந்துவிடக்கூடாது என்பதற்காக, நன்றாக, தீர்க்கமாகப் பரிசீலனை செய்து 0.5 சத விகிதம் என்ற விகிதத்தை 0.4 சத விகிதம் என்ற விகிதமாகக் குறைத்திருக்கிறோம். இதை மேலும் குறைக்கவேண்டுமென்று சொன்னால், நாம் எந்த ஒரு நோக்கத்தோடு இந்த வரியைக்கொண்டு வந்திருக்கிறோமோ அந்த நோக்கம் ஈடேறாது என்பதை அரசாங்கம் உணருகிறது. ஆகையால் மேலும் இந்த வரியைக் குறைப்பதற்கு இயலாது என்பதைச் சபைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.*

மற்றொரு கருத்து, 10 செண்டுக்கு எக்ஸெம்ப்ஷன் கொடுக்க வேண்டும் என்பது. இதை எவ்வாறு நிர்ணயம் செய்வது என்பதிலே பெரிய கஷ்டம் இருக்கிறது என்று நேற்று பொது விவாதத்தின்போதே கூறினேன். பத்து சென்ட் என்றால், அதன் விலை இடத்திற்கு இடம் வித்தியாசமாக இருக்கிறது. ஆகவே, அதிலே டிஸ்க்ரிமினேஷன் ஏற்படும். அதன் காரணமாகத்தான் 'ஸோன்', 'சப்-ஸோன்' என்று நிர்ணயம் செய்து சாதாரண

அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் அது போன்ற ஒரு நிலை ஏற்படாது என்று சொன்னார்கள். சட்டப்படி ஏன் ஏற்படாது என்பது எனக்குப் புரியவில்லை. ஆதலால்தான் இதற்கும் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன் இதில் 'Addition of urban land tax to rent in certain cases' என்று சொல்லியிருக்கிறது. வாடகை வசூலிப்பவர்கள் குடியிருப்பவர்களுக்கு வாடகையை கூட்டுவதற்கு, திமையை விளைவிப்பதற்கு இந்தச் சட்டம் உதவிகரமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டிவிடுவதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஏற்கனவே வாடகையைக் கூட்டுவதற்கு வழிகள் இருக்கும்போது இதிலும் இந்தப் பிரிவை ஏன் சேர்க்க வேண்டும் என்று புரியவில்லை. இந்த செக்ஷன் எதற்காக போடப்பட்டது, போடாவிட்டால் என்ன ஏற்பட்டுவிடும் என்பதை சிந்தித்துப்பார்க்கவேண்டும். இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் 1960-ம் ஆண்டு சட்டப்படி வாடகையை அதிகமாக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் ரெண்ட் கண்ட்ரோல் ஆக்டில் 4-வது பிரிவில் ஒரு லாண்ட் லார்ட் குடியிருப்பவரிடத்தில் வாடகையைக் கூடுதலாக்கி வசூலிக்கின்ற அதிகாரம் அந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு நீதி மன்றத்திற்குச் சென்று ரெண்ட் கண்ட்ரோல் சட்டப்படி முறையிடவும், என்னென்ன காரணங்களுக்காக வாடகையை உயர்த்தவேண்டும் என்று சொல்லி வாடகையை நிர்ணயித்து பெறுவதற்கு வீட்டுச்சொந்தக்காரர்களுக்கு 1960-வது ஆண்டு சாட்டப்பட்ட உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வாடகையை உயர்த்திக்கொள்வதற்கு இந்தப் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. வாடகையை உயர்த்திக்கொள்வதற்கு ஏற்கனவே ஒரு சட்டத்தில் உரிமை இருக்கும்போது, இப்போது ஏன் இதிலும் அதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டும் என்கின்ற குற்றச்சாட்டைத்தான் நான் இப்போது அரசாங்கத்தின் முன் வைக்க விரும்புகிறேன். இந்த வாய்ப்பை இந்தப்பிரிவின் மூலமாக ஏன் கொடுக்கவேண்டும். 1960-ல் எந்தெந்த காரணங்களினால் வாடகையை உயர்த்தவேண்டும் என்று கேட்பதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இயற்கையாகவே இம்மாதிரி ஒரு உரிமை இருக்கின்ற நேரத்தில் மேலும் இந்தப் பிரிவின் மூலமாக வாடகையை உயர்த்துவதற்கான வாய்ப்பை வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு ஏன் கொடுக்கவேண்டும்? அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை கொடுத்தால் என்ன ஆகும். இந்தச் சட்டத்தின்படி அஸெடின் மீதுதான் அதனுடைய மதிப்பை வைத்து வரியை போடப்போகின்றோம். முன்னுள்ள சட்டத்திலேயே பல காரணங்களை சொல்லி வரியை உயர்த்த நீதி மன்றத்திற்குப் போகலாம் என்று ஒரு வாய்ப்பு இருக்கிறது. அது போதாமல் இப்போது இடத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டது, ஆகவே வாடகையை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்கின்ற உரிமையை நாமாக ஏன் இப்போது வலிந்து கொடுக்கவேண்டும் என்பதை கனம்

அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் என்ன பாதகம் ஏற்பட்டு விடும்? நாமே ஏன் வீட்டில் குடியிருப்பவர்களுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும்? இதற்கு அவசியம் என்ன என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். நான் முதலில் இந்த பிரிவு முழுவதையுமே எடுத்து விடவேண்டுமென்று திருத்தம் கொடுப்பதாயிருந்தேன். ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் அதை ஆதரிக்க மாட்டார்கள் என்ற காரணத்தினால் கொண்டு வரவில்லை. அதற்கு மாறாக இப்போது இன்னொரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்கெனவே குடியிருப்பவர்கள் விஷயத்தில், இந்தச் சட்டம் வருவதற்கு முன்னே குடியிருப்பவர்கள் விஷயத்தில் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி வாடகையை உயர்த்தாமல் இருக்க, வாடகையை உயர்த்துவதைத் தடுக்க இந்தச்சட்டத்தில் இடம் இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் குடியிருப்பவர்களிடமிருந்து அதிக வாடகை வசூலிக்க மார்கம் ஏற்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்து இந்த ஒரு திருத்தத்தையாவது ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி டி. என் அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஷரத்தின் முக்கியத்துவத்தை கனம் அமைச்சர் அவர்கள் மிக விரிவாகவும், மிகத் தெளிவாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார். அதற்குப் பிறகு கூட இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், இன்றைக்கு சென்னையிலேயே எடுத்துக் கொண்டால் அநேக நிலங்கள் கோவில்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன அல்லது அற நிலையங்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. சில சமயங்களில் வீடுகள் கூட கோயில்களுக்கோ அல்லது அற நிலயங்களுக்கோ சொந்தமாக இருக்கின்றன. நிலங்களை எடுத்துக்கொண்டால் கிரவுண்டு ஒன்றுக்கு 1 ரூபாய் அல்லது 2 ரூபாய் கோவிலுக்குக் கொடுத்து விட்டு உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். வீடுகளை எடுத்துக்கொண்டால் கூட பல வீடுகள், தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான வீடுகள் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அர்பன் லாண்ட் டாக்ஸ் அடிப்படையில் வரி போட்டால் அற நிலையங்கள் பாதிக்கப்படும் என்று நானும் ஒரு கோவில் தர்மகர்த்தா என்ற காரணத்தினால் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை, 8 கிரவுண்ட அல்லது 9 கிரவுண்ட் என்று வைத்துக் கொண்டிருந்தாலும் வாடகையாக ஒரு கிரவுண்டுக்கு ½ ரூபாய் வீதம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் கூட ஒழுங்காகக் கொடுப்பதில்லை. ஆசாமிகள் என்றால் இதற்கு சும்மா விடமாட்டார்கள். சாமி என்ற காரணத்தினால் அந்த மாதிரி நிலை இருக்கிறது. அதனால் கோவில்களின் நிர்வாகத்தை நடத்துவதே கஷ்டமாக இருக்கிறது. கற்பூரம், மற்ற ஆராதனை பொருள்களின் விலையெல்லாம் ஏறிவிட்டது. ஆனால் அவர்கள்

பழைய வாடகையைத் தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நிர்வாகமே பாதிக்கப்பட்டிருக்கும்போது, இப்போது வரியையும் போட்டு, அந்த வரியையும் கோவிலிலிருந்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் கையிலிருந்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால் எப்படிக் கொடுக்க முடியும். அப்படிப்பட்ட அற நிலையச் சொத்துக்களுக்காகவும், கோவில் சொத்துக்களுக்காகவும் தான் நல்ல முறையில் திட்டமிட்டுத் தான் போட்டிருக்கிறார்கள்—

"Where in any case the amount of the urban land tax payable in respect of any land under this Act is in excess of the amount of annual rent payable in respect of such land or the building".

என்று போட்டிருக்கிறார்கள். இதனால் வருஷ வருமானத்தைக் காட்டிலும், அன்யுவல் ரெண்டைக் காட்டிலும் அதிகமாக அர்பன் லாண்ட் டாக்ஸ் இருந்தால், அதைச் சேர்த்துக்கொள்ள, அது கூட "On application from the owner to the Court, authority or Officers" அதாவது வரக் கூடிய வருமானம் குறைவாக இருந்தால், அதற்கு மேல்-வரி போட்டால், யார் கையிலிருந்து கட்டுவது? அப்போது அதை கோர்ட்டுக்குப் போட்டு, அவர்களுடைய உத்தரவின் பேரில் வாடகையோடு சேர்த்துக்கொள்ளுங்கள் என்று இந்த ஷரத்து போட்டிருக்கிறதேயொழிய, இதனால் குடியிருப்பவர்கள் பாதிக்கப்பட்டு விடுவார்கள் என்று சாதாரணமாகச் சொல்லுவது தவறு. கனம் அமைச்சர் அவர்கள் வீட்டுச் சொந்தக்காரர்கள் இதனால் உயர்த்தாமல் பாதுகாப்பு அளிப்பதாகவும், கட்டாயமாகப் பார்த்துக் கொள்கிறேன் என்றும் இங்கே கூறியிருக்கிறார்கள். அற நிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களை, வீடுகள் கூட நாமினல் ரெண்டுக்கு, பெரிய பெரிய சத்திரங்கள், வீடுகள் எல்லாம் எடுத்துக்கொண்டு வாடகை கொடுத்துக்கொண்டு வருகிறார்கள் கோவில் சொத்து என்ற காரணத்தினால். இப்படிப்பட்ட நிலையில் வரி வேறு வந்து பாதிக்காத அளவுக்கு இந்த ஷரத்து அவசியம். இந்த அரசாங்கம் நன்றாகச் சிந்தித்து இதைக் கொண்டு வந்ததற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் வேறு வகையில் பாதிக்காத அளவுக்கு கண்காணிப்பு வேண்டும். அதைப் பற்றி அந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவரவேண்டும். எதிர் கட்சி அங்கத்தினர்கள் அந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதில் ஆர்வம் காட்டினால் அது பாராட்டத் தக்கது. இப்போது எதிர் கட்சியினர் கொடுத்துள்ள திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் அற நிலையங்கள் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. இந்த ஷரத்தைக் கொண்டு வந்ததற்காக கனம் அமைச்சர் அவர்களைப் பாராட்டி, எதிர்கட்சியினர் கொடுத்துள்ள திருத்தத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவின் அர்த்தத்தை உதாரணத்தின் மூலமாக முன்னாலேயே விளக்கினேன். உதாரணமாக ஒரு நிலத்தின் மதிப்பு 5,000 ரூபா

யாக இருந்தால் 20 ரூபாய் வரியாக, அர்பன் லாண்ட் டாக்ஸாக வருஷத்துக்கு கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படி டாக்ஸ் வரும்போது, அந்த நிலச்சுவான்தார் அந்த நிலத்தையோ அல்லது அதில் அந்த நிலத்தில் 10,000 ரூபாய் மதிப்புள்ள கட்டடம் இருந்தால் அந்தக் கட்டடத்தையோ வாடகைக்கு விட்டிருந்தாலும், இரண்டிலே எப்படி இருந்தாலும் அதிலிருந்து கிடைக்கும்படியான வருஷ வாடகையானது 20 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் மேற்கொண்டு 20 ரூபாயைச் சேர்த்துக்கொள்ள அதிகாரிகளிடம் அணுகி அவர்கள் உத்தரவின் பேரில் சேர்த்துக் கொள்ள முடியும் என்று இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி நிலைமையே ஏற்பட இடமில்லை. உண்மையிலேயே இந்தப் பிரிவினால் நிலச்சுவான்தார் எவருக்கும் அனுகூலம் கிடைக்கும் என்று சொல்லுவதற்கில்லை. ஏனென்றால் 5,000 ரூபாய் மதிப்புள்ள நிலத்தை வருஷத்துக்கு 20 ரூபாய்க்குக் குறைவாக வாடகைக்கு விட்டிருக்கப் போவதில்லை. ஏதோ ஒரு அனுகூலம் செய்வது போலக் கொடுத்திருக்கிறது அவ்வளவு தான். மாதத்திற்கு வாடகை 2 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால்தான் இம்மாதிரி நிலை இருக்க முடியும். ஆனால் கோவில் நிலங்களை தேவஸ்தானங்கள் வருஷத்துக்கு 1 ரூபாய் அல்லது 2 ரூபாய்க்கு விட்டிருக்கிறார்கள். 90 வருஷ லீஸ் அல்லது 100 வருஷ லீஸ் என்று நிலங்களை குத்தகைக்காரர்கள் கட்டடங்கள் கட்டி அனுபவித்துக்கொள்ள விட்டிருக்கும்படியான நிலைமையில் கோவில் நிலங்கள் அல்லது கட்டடங்கள் விஷயத்தில் இதைக் கூட்டும் நிலைமை இருக்கிறது. உதாரணமாக சென்னையில் அலமேலு மங்காபுரத்தில் க்விட ரெண்ட்டாக வருடத்திற்கு 2 ரூபாய் அல்லது 3 ரூபாய் கொடுத்துக்கொண்டு கோவிலுக்குச் சொந்தமான மனை இடங்களில் வீடுகள் கட்டி குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். இதனுடைய எஃபெக்ட் என்னவென்றால், மேற்கொண்டு 10 அல்லது 20 ரூபாய் கோவில் கட்டவேண்டுமென்றால், குடியிருப்பவர்கள் கட்டும் நிலைமை ஏற்படலாம். எக்ஸெம்ப்ஷன் க்ளாஸிலே "ரெண்ட் பை டெம்பிள்ஸ்" அல்லது "ரெண்ட் பை ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷன்ஸ்" என்று போட்டால் நலமாக இருக்கும். அதில் "யூஸ்ட்" என்று போட்டிருக்கிறது. கோவில் காரியங்களுக்கு உபயோகப்படுத்தினால் என்று இருக்கிறது. அதற்கு பதில் "ரெண்ட் பை" என்று இருந்தால் நலமாக இருக்கும். any urban land set apart for public worship and is actually so used" என்ற முறையில் அந்த மாதிரி வொர்ஷிப்புக்கு யூஸ் பண்ணினால் எக்ஸெம்ப்ஷன் என்று இருக்கிறது. நான் சொன்ன மாதிரி திருத்தி அமைத்து விட்டால் அந்த கஷ்டம் தீர்ந்து விடும். ஆகையால் இதற்கு தி.மு.க. அங்கத்தினர் கொடுத்திருக்கும் எந்தத் திருத்தமும் தேவையில்லை. இதனால் எந்த வித அனுகூலமோ அல்லது பிரதிகூலமோ இருக்கப் போவதில்லை. இப்படியே இருந்து விடலாம். திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

[22nd November 1963

கனம் திரு. வெ. ராமையா : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்னை குறித்து கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு திருமதி அனந்தநாயகி அவர்கள் நல்ல முறையில் விவரமாக பதில் சொல்லியிருக்கிறார். இது குறித்து பொறுக்குக் கமிட்டியிலே பொது விவாதத்திற்கு பதில் சொல்லும் போது இதற்கான காரணங்களை எடுத்துக் கூறியிருக்கிறேன். கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது, பொறுக்குக் கமிட்டி எந்த அளவுக்கு நுணுக்கமாகப் பரிசிலனை செய்திருக்கிறது என்பதற்கு இந்தப் பிரிவை இந்த மசோதாவில் சேர்த்திருப்பதே ஆதாரமாக இருக்கிறது எடுத்துக் காட்டாக இருக்கிறது என்பது தான். இந்தப் பிரிவினால் வாடகைக்கு விட்டிருப்பவர்க்ள் கொள்ளை லாபம் அடிப்பார்கள் என்பதற்கு ஆதாரமே கிடையாது. வாடகை கட்டுப்பாடு சட்டத்தைப் பார்த்தால், இந்த வரியை வாடகை கொடுப்பவர்கள் மீது அவர்கள் சுமத்த முடியாது என்பது தெரியும். அதே சமயத்தில் இங்கு விவரமாகக் கூறப்பட்ட கருத்துக்களை கவனித்துப் பார்த்தால் சில
11-30 a.m. ஸ்தாபனங்களுக்கு இந்த வரி உண்மையிலேயே பளுவாக இருக்கும். அவர்கள் பெறக்கூடிய வாடகையைவிட இந்த வரி அதிகமாக இருக்கும். அதை அவர்கள் தலையிலே சுமத்துவதானால், பல ஸ்தாபனங்கள் ஸ்தம்பித்துப்போய்விடும். அல்லது, அவர்கள் நிலத்தை வைத்துக்கொள்ளாமல் விற்றுவிடக்கூடிய நிலை ஏற்படக் கூடும். அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கக் கூடிய முறையில் தான் இந்தக் கிளாஸைத் திருத்தியிருக்கிறோம். ஆகையால், இதைப் பயன்படுத்திக் கொண்டு தனிப்பட்டவர்கள் வாடகைக்கு குடியிருப்பவர்கள் மீது இந்த வரியை சுமத்தும் முறையில் வாடகையை அதிகரிக்க முடியாது என்பதை திரும்பவும் சொல்லிக் கொண்டு, இந்தத் திருத்தத்தை வலியுறுத்தவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. மாதவன் : அமைச்சர் அவர்கள் அம்மையார் கூறியதை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பேசும்போது தேவஸ்தானத்தைப்பற்றி மட்டும் பேசினார்கள். அதற்கான காரணத்தை அவர்களே சொல்லிவிட்டார்கள். ஆனால், இந்தப் பிரிவு, எல்லோரையும் பாதிக்கக்கூடிய பிரிவு. அப்படிப்பட்ட பிரிவு ஏன் வேண்டுமென்று தான் நான் கேட்கிறேன். தேவஸ்தானங்களுக்கு எக்ஸெம்ப்ஷன் கொடுப்பதுபற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. அமைச்சர் அவர்கள் இந்தப் பிரிவை வைத்து வாடகையை உயர்த்த முடியாது, நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சட்ட மன்றத்திலே சொல்லுகிறார்கள். ஆனால், அதற்கு சட்டத்தில் என்ன இடம் இருக்கிறது? இந்த சட்டத்திலே உயர்த்துவதற்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. என்னுடைய வாதம் என்னவென்றால், ஏற்கனவே உள்ள சட்டத்தில் நிலைமை மாறுபடுமானால், அந்த நிலைமையை வைத்தே வாடகையை உயர்த்துவதற்கு இடம் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நான் ஏற்றுமல் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறுவதற்கு அமைச்சர் அவர்களுக்கு எந்த

22nd November 1963] [திரு. செ. மாதவன்]

சட்டம் உரிமையைத் தருகிறது என்ற விளக்கத்தை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் உறுப்பினர் சட்டம் படித்தவர், அவருக்கு சட்டம் தெரியும். வீட்டு வாடகைச் சட்டப்படி வாடகையை உயர்த்துவதற்கு நிச்சயம் இது இடம் கொடுக்காது. அம்மையார் குறிப்பிட்டதுபோல் சில தர்ம ஸ்தாபனங்கள், தெய்வாலயங்கள், சில பொது ஸ்தாபனங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத் தான் இந்தக் கிளாஸ் திருத்தப்பட்டிருக்கிறது. நான் முன்பே பதில் சொல்லும் போது இதையெல்லாம் பற்றி விவரமாகச் சொல்லியிருக்கிறேன். இம்மாதிரி நல்ல ஸ்தாபனங்கள் சட்டத்திற்கு கட்டுப்படும்பொழுது பாதிக்கப்படக்கூடாது என்று தான் இந்தத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறதே ஒழிய, இந்தத் திருத்தத்தை மனதில் கொண்டு, திருத்தத்தை அடிப்படையாக வைத்து, மற்றவர்கள் பயன்படுத்திக்கொண்டு வாடகையை உயர்த்துவார்கள் என்ற அச்சம் ஏற்படுவதற்கு காரணம் இல்லை. ஏனென்றால், இந்தப் பிரிவைப் பார்த்தால், வாடகைக்குக் குடியிருப்பவர்கள் மீது இந்த வரியைச் சுமத்த வேண்டுமென்றாலும், அந்த முடிவை கோர்ட்டு தான் செய்ய வேண்டும், தனிப்பட்டவர்கள் செய்ய முடியாது. ஆகவே, அந்தப் பாதுகாப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The amendment was put and lost.

Clause 31 was put and carried.

Clause 32.

MR. SPEAKER : The question is : "That Clause 32 do stand part of the Bill."

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move the following amendment :—

"In Clause 32, in line 8, for the words "twenty-five per-centum" substitute the words "fifty per centum".

SRI S. MADHAVAN : Sir, I second the amendment.

MR. SPEAKER : The Clause and the amendment are before the House for discussion.

திரு. து. ப. அழகமுத்து : சொந்தமாகக் குடியிருக்கும் வீட்டிற்கு, அவர்களுடைய வேண்டுகோளின்பேரில் 25 சதவிகிதம் வரியிலிருந்து விலக்கு அளிப்பதாகக் கூறுகிறது இந்தப் பிரிவு. நான் 50 சதவிகிதம் வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். சொந்தக் குடியிருப்பு வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு 50 சதவிகிதம் வரிச் சலுகை அளித்தால், அவர்கள் வரியை தாங்கக்

[திரு. து. ப. அழகமுத்து] [22nd November 1963

கூடிய நிலையில் இருக்கும். ஆகவே, அந்த அளவில் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் முதல் பகுதி ஓரளவுக்கு வரவேற்கத்தக்கது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்கம் டாக்ஸ், ஸேல்ஸ் டாக்ஸ் கொடுக்காதவர்களுக்கு, அவர்கள் சொந்தமாக உபயோகப்படுத்துகிற வீட்டுக்கு வரி இல்லாமல் ஒரு சலுகை கொடுப்பது வரவேற்கத்தக்கதுதான். குறிப்பாக, சென்னையைப் பொறுத்தமட்டில், ஒரே வீட்டை வைத்துக் கொண்டு அந்த வீட்டில் வருகிற வாடகையை வைத்தே பிழைக்க வேண்டிய நிலைமையிலே பல விதவைகள், அல்லது ஊதியம் பெறக் கூடிய ஆண்களே இல்லாத குடும்பங்கள் பல நகரத்தில் இருக்கின்றன. இதுபற்றி பொறுக்குக் கமிட்டியிலேயே கூறப்பட்டது. அப்பொழுது அரசாங்கத்தின் மனது இளகவில்லை. இப்பொழுது அரசாங்கத்தின் மனது இளகுமென்று நினைக்கிறேன். இன்கம் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் கொடுக்காவதர்கள் வீட்டுச் சொந்தக்காரர்களாக இருப்பார்களேயானால் . . . .

SRI S. MADHAVAN : On a point of order, Sir, That amendment relating to exemption of house-owners *not* assessed to income-tax, etc., is not before the House now.

கனம் சபாநாயகர் : அதை ஒரு காரணமாகச் சொல்லுகிறார்கள். எக்ஸெம்ஷன் கேட்கவில்லை. The hon. Member Sri S. Madhavan may please allow the hon. Member Srimathi T. N. Ananthanayaki to continue her speech.

SRIMATHI T. N. ANANTHANAYAKI : I am only speaking on the amendment.

அந்த முறையில் வருமானவரி, ஸேல்ஸ் டாக்ஸ் கொடுக்காத கைம்பெண்கள், அனாதைகள், வீட்டிலிருந்து கிடைக்கக்கூடிய வாடகை வருமானத்தை வைத்துக்கொண்டே பிழைப்பை நடத்த வேண்டியவர்களாக இருக்கக்கூடியவர்கள் என்று சொன்னால், அப்படிப் பட்டவர்களுக்கு வரியிலிருந்து விதிவிலக்கு கொடுப்பதுபற்றி அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி விலக்கு அளிக்க முன்வந்தால் என்னைப் போன்ற நகரப் பிரதிநிதிகளுக்கு மகிழ்ச்சி ஏற்படும். அதோடு கூட அவர்களுக்கும் இது ஒரு பளுவாக இராமல், ஓரளவுக்கு சலுகை கொடுத்தார்கள் என்ற எண்ணமும் அவர்களுக்குத் தோன்றும். இந்த வரியின் காரணமாக. . . .

MR. SPEAKER : What is it that the hon. Member is suggesting?

SRIMATHI T. N. ANANTHANAYAKI : I want to suggest that the Government may bring forward a new amendment. Even now if the Government change their mind and come forward

22nd November 1963] [Srimathi T. N. Ananthanayaki]

with the amendment, it will be a great relief to the residents of Madras and they would welcome it, especially widows who solely depend upon the income from the house for their living. So once again I appeal to the Hon. Minister to consider this problem and give the necessary relief.

திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, நான் 32-வது பிரிவைப்பற்றி பொதுவாகப் பேச விரும்புகிறேன். இந்தப் பிரிவில்

"Where any building is occupied wholly by the owner or residential purposes only and where such owner makes an application to the officer specified . . . . ."

அப்பொழுது 25 சதவிகிதம் கன்ஸெஷன் கொடுக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு சிறு போர்ஷனை மாத்திரம் வாடகைக்கு விட்டுவிட்டு, பாக்கி 80, 90 சதவிகிதம் போர்ஷனை தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொண்டிருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கும்பொழுது, ஒரு சிறு பகுதி வாடகைக்கு விடப்பட்டிருப்பதால், அந்த வீட்டுச் சொந்தக்காரருக்கு அந்த அனுகூலம் கிடைக்காது. 'wholly or partly' என்று திருத்தினால் அப்படிப்பட்டவர்களுக்கு வசதியாக இருக்கும். வாடகைக்கு விட்ட போர்ஷன் போக, சொந்தக்காரர் தன்வசமுள்ள பகுதிபோக மீதி போர்ஷனுக்கு மட்டும் அந்தக் கன்ஸெஷன் கொடுக்கும்படியாக அரசாங்கமே ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

"Where any building is occupied wholly or partly by the owner for residential purposes only and where such owner makes an application to the officer specified. . . ."

என்று இருக்கவேண்டும். ஒரு சிறிய போர்ஷனை வாடகைக்கு விட்டிருந்தாலும் கூட பாக்கி போர்ஷனை ஓனரே ஆகுபை பண்ணிக்கொண்டிருந்தால் அவர்களுக்கு அந்த அளவுக்கு இந்த கன்ஸெஷன் கிடைப்பதற்கு 'ஹோல்லி ஆர் பார்ட்லி' என்ற திருத்தத்தை சர்க்காரே முன்வந்து கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I am not in a position to accept the amendment. As stated early by me, I may point out that due to pressure of hon. Members like Srimathi Anandanayaki we have shown concession of 25 per cent as far as owner occupation is concerned if the entire building is occupied by owners. So I do not think I will be in a position to accept any further concession. So I do not accept the amendment moved by the hon. Member Sri Madhavan.

The amendment was put and lost.

Clause 32 was put and carried.

Clauses 33 and 34 were put and carried.

Clause 35.

MR. SPEAKER : The question is—

"That Clause 35 do stand part of the Bill."

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment :—

"In sub-clause (d) of clause 35 insert the following words after the words "primarily maintained" and before the words "by the Government" :—

"or for which grants are provided."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த பிரிவு விதி விலக்கைப் பற்றியது. இதில் யாரும் ஆட்சேபணை சொல்ல முடியாது. இருந்தபோதிலும் இதிலே வருகின்ற (d) பிரிவைக் குறித்து எனக்கொரு சந்தேகம் தோன்றுகிறது. இந்தப் பிரிவிலே அரசாங்கத்தினால் நடத்தப்படுகிற மருத்துவ விடுதிகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் "hospitals primarily maintained by the Government" என்று போடப்பட்டிருக்கிறது. "பிரைமரிலி" என்ற வார்த்தைக்கு இந்தச் சட்டத்திலே விளக்கம் இல்லை. சாதாரண விளக்கம் இதற்கு பொருந்தும் என்று சொல்லலாம். நம்முடைய நாட்டில் அரசாங்கம் நடத்துகிற மருத்துவ விடுதிகளை தவிர தனிப்பட்டவர்கள் ஏராளமான விடுதிகளை நடத்துகிறார்கள். அவற்றிற்கு அரசாங்கம் மானியம் வழங்குகிறது. ஆகவே அரசாங்கம் மானியம் கொடுக்கக்கூடிய மருத்துவ விடுதிகளுக்கு இந்த விதி விலக்கு பொருந்தும் என்று ஒரு விளக்கம் இருந்தால் அது நல்லதாக இருக்கும் என்று கருதித்தான், நான் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். திருத்தத்திலே "primarily maintained or for which grants are provided by the Government" என்று இருக்கிற காரணத்தால், அதை ஏற்றுக் கொண்டால் அது ஒரு நல்ல விளக்கமாக அமையும். அரசாங்கத்தினுடைய மானியம் பெறக்கூடிய மருத்துவ விடுதிகளும் பொது மக்களுக்கு சேவை செய்கின்றன. ஆகவே இந்த விளக்கத்தைச் சேர்த்தால் அவைகளுக்கும் இந்த வரிவிதிப்பிலிருந்து விதி விலக்கு கிடைக்கும் என்று நான் கருதுகிறேன். என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அந்த மாதிரியான மருத்துவ விடுதிகளுக்கு இந்த விதி விலக்கு உண்டா இல்லையா என்பதை தெளிவு படுத்தும்படிகேட்டுக் கொள்ளுகிறேன்.

SRIMATHI T. N. ANATHANAYAKI : Sri, I would like to say that Clause 35 (d) states that the following land would be exempted, viz :—

"any urban land on which hospitals primarily maintained by the Government, any local authority or such other authority specified by the Government."

Therefore the amendment that is brought forward by the hon. Member Sri Madhavan is already covered by the above explanation. So it is not necessary. It is superflous. This amendment need not therefore be there.

THE HON. SRI V. RAMAIAH : I am sure the mover will be satisfied with the reply given by the hon. lady Member.

SRI S. MADHAVAN : If the Hon. Minister can give that undertaking, the Government can notify the authority.

MR. SPEAKER : The Hon. Minister cannot give any undertaking. It is already in the sub-clause. Therefore, no question of giving any undertaking arises here.

திரு. செ. மாதவன் : இந்தப் பிரிவிலே "or such other authority specified by the Government" என்று இருக்கிறது. தனிப்பட்டவர்கள் நடத்தும் மருத்துவ விடுதிகளை இது குறிக்குமா? அல்லது அரசாங்க அதிகாரிகளைக் குறிக்குமா?

MR. SPEAKER : The Government have got the discretion to specify the authority.

திரு. செ. மாதவன் : என்னுடைய சந்தேகம் என்னவென்றால் தனிப்பட்டவர்கள் நடத்துகிற மருத்துவ விடுதிகளை இந்த பிரிவிற்குள் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறதா?

THE HON. SRI V. RAMAIAH : This has been amply explained both by the lawyer member and the Hon. Speaker (Laughter).

MR. SPEAKER : I only clarified the position. After all it is the Minister's responsibility.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I take the responsibility. I do not think, I should make any further statement on this. Every case can be covered by the explanation and the Government have got the discretion to do it.

The amendment was by leave withdrawn.

Clause 35 was put and carried.

Clauses 36 to 49 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : I move that—

"That the Madras Urban Land Tax Bill, 1963 (L.A. Bill No. 2 of 1963) be passed."

MR. SPEAKER : The question is—

"That the Madras Urban Land Tax Bill, 1963 (L.A. Bill No. 2 of 1963) be passed."

The motion was put and carried and the Bill was passed.

[22nd November 1963

(4) THE MADRAS IRRIGATION (LEVY OF BETTERMENT CONTRIBUTION) AMENDMENT BILL, 1963 (L.A. BILL NO. 19 OF 1963) AS AMENDED BY THE SELECT COMMITTEE.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move that—

"the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 (L.A. Bill No. 19 of 1963) as amended by the Select Committee, be taken into consideration."

I may recall that earlier while introducing the Bill and moving the motion for referring it to a Select Committee, I pointed out that the preliminary work involved in determining the betterment contribution in accordance with the principle and procedure laid down in the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act, 1955 and the Rules made thereunder was considerable and complicated with the result that it was found not possible to finalise the fixation of betterment contribution even in respect of a single work in the State. It was also stated that it was for this reason that Government brought forward the Amendment Bill which seeks to revise and simplify the procedure for determining the betterment contribution. The salient features of the Bill as introduced were also mentioned. I do not therefore, consider it necessary now to cover once again what has been already stated earlier. I shall now confine myself to the important changes in the Bill made by the Select Committee.

The Select Committee scrutinised the Bill clause-by-clause. The Committee felt that the provisions contained in the Bill did not make it clear that the levy of betterment contribution would be made only if an irrigation or drainage work was improved and that no betterment contribution would be levied if an irrigation or drainage work was merely repaired or restored to its proper condition. Item (iii) in clause 2 of the Bill, which defines the term "improved old ayacut", has been suitably amplified and a proviso to Explanation I has also been added. It has been made clear that the ayacut of an irrigation or drainage work which has been merely repaired or restored to its original condition will not be treated as "improved old ayacut" and consequently no betterment contribution is leviable in respect of the lands in that ayacut, whatever be the cost of repair or restoration.

Section 3 of the Principal Act empowers the Government to levy betterment contribution in respect of works executed on or after 1st January 1947. In order to retain this power, item (v) in clause 2 of the Bill, which defines the term "notified work", has been suitably amplified.

According to the provisions contained in sub-section (1) of new section 3, in clause 3 of the Bill, a "new ayacut" in a notified work may be classified into one or more of the following zones:—

(i) wet zone;

(ii) intermediary zone; and

(iii) irrigated dry zone.

22nd November 1963] [Sri V. Ramaiah]

The lands to be included in each of these three zones are specified in sub-sections (2), (3) and (4) respectively of new section 3. It was observed that sub-sections (2) and (3) relating to wet zone and intermediary zone, respectively refer to one wet crop in a fasli year and that similarly sub-sections (3) and (4) relating to intermediary zone and irrigated dry zone, respectively refer to one irrigated dry crop in a fasli year. To make it clear that the land which falls under intermediary zone should not fall under a wet zone or on irrigated dry zone, sub-sections (3) and (4) have been suitably revised.

New Sections 4-A and 4-B, in clause 3 of the Bill as introduced earlier provided that no betterment contribution should be levied on lands in the new ayacut under a notified work, the cost of which did not exceed Rs. 25,000 and on lands in the *improved old ayacut* under a notified work the cost of which did not exceed Rs. 50,000. It was suggested in the Select Committee that these monetary limits could be increased. Accordingly, the monetary limits in both the cases have been raised to one lakh of rupees Amended new sections 4-A and 4-B (1) have been suggested for the purpose. No irrigation or drainage work will now be liable for the levy of betterment contribution if the cost of the work does not exceed Rs. 1 lakh.

New section 4-B in clause 3 of the Bill deals with the levy of betterment contribution on lands in the improved old ayacut. According to sub-section (2), the levy is based on the net expenditure on the notified work, which is ascertained by deducting from the gross expenditure on such work twenty times the annual increase in revenue from all the lands comprised in the improved old ayacut. The net expenditure is apportioned on all the lands comprised in the improved old ayacut. And according to sub-section (3), the betterment contribution will be one-third of the net expenditure per acre, subject to a maximum of Rs. 50 per acre. A point was considered, whether for arriving at the annual increase in revenue, the increase in revenue from the improved old ayacut alone should be taken into account as provided in the Bill or whether the increase in revenue from the new ayacut also should be taken into account. It was felt that the annual increase in revenue referred to in sub-section (2), should take into account the increase in revenue from the new ayacut also and that the whole increase, taking into account both the improved old and new ayacuts should be multiplied twenty times for the purpose of deducting the amount from the gross expenditure to arrive at the net expenditure. Sub-section (2) of new section 4-B has been suitably amplified for the purpose.

Two new Explanations have also been added to sub-section (2) of new section 4-B, defining the expression "annual increase in revenue.". In Explanation I, it has been made clear that the annual increase in revenue includes the additial assessment or additional water-cess under the Madras Additional Assessment and

[Sri V. Ramaiah] [22nd November 1963

Additional Water Cess Act, 1963. In Explanation II, the principle for determining the annual increase in revenue in the case of estates abolished under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, inam estate abolished under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, minor inams abolished under the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, and leasehold villages abolished under the Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, has been prescribed . Two provisos have also been added to Explanation II to make it clear that the land revenue referred to in clauses (i) to (iv) of the Explanation is less than the rate of ryotwari assessment referred to in those clauses and has been determined before the execution of the notified work and that the notified work itself was executed after the abolition of the estate, inam estate, minor inam or a lease-hold village as the case may be, and before effecting the ryotwari settlement. The amendment to section 7 (1) of the Principal Act, proposed in clause 5 of the Bill, provides for the payment of betterment contribution in annual instalments. The annual instalment per acre will be Rs. 10 or one-twentieth of the total amount of contribution payable by a landholder, whichever is higher. It was pointed out that small landholders would find it difficult to pay Rs. 10 along with the usual kist. It was therefore, suggested that provision might be made for the payment of Rs. 5 as the annual instalment of betterment contribution retaining at the same time, the total period of payment of the entire contribution as not exceeding twenty years. The clause has been suitably amended. The annual instalment of betterment contribution payable by a landholder will be five rupees or one-twentieth of the total amount of contribution payable by him, whichever is higher.

New section 16 in clause 10 of the Bill, provides that the works already notified under rule 7 of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Rules, 1956, shall be deemed to be notified works for the purposes of the Principal Act as proposed to be amended. This section has been slightly amplified to make it clear that the retrospective operations of the provisions contained in the Bill to work already notified is not affected by sub-clause (2) of clause 1 of the Bill, which states that the Amendment Act shall come into force on such date as the Government may, by notification, appoint.

The schedule to the Bill specifies the rates of betterment contribution payable by landholders of lands in a new ayacut. The wording of the proviso to the Schedule has been changed to make it clear that the additional contribution at the rate of Rs. 50 per acre is payable only by landholders of lands which were unirrigated before the execution of the notified work and which are assured with the supply of water for two wet crops as a result of the execution of the notified work.

22nd November 1963] [Sri V. Ramaiah]

Some of the Members of the Committee have given minutes of dissent. They have stated that in principle, the levy of betterment contribution is not justified. The levy of betterment contribution in respect of lands which are benefited by the construction expansion or alteration by the Government of any irrigation or drainage work has already been accepted in principle by the House when the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act, 1955, was enacted. Therefore, the point raised by the dissenting Members does not arise at this stage.

It has also been pointed out in the minutes that no distinction has been made in the Bill between the works executed in a perennial river system and the works executed in other rain-fed areas. The levy of betterment contribution under the provisions contained in the Bill is dependent on—

(a) whether the lands are benefited by the execution of the notified work within the meaning of sub-clause (5-A) in item (iv) of clause 2 of the Bill; and

(b) whether the lands are significantly benefited by the execution of the notified work within the meaning of sub-clause (3-A) in item (iii) of clause 2 of the Bill. There is, therefore, no discrimination or injustice in regard to the levy of betterment contribution under the provisions contained in the Bill.

Another point which has been raised in this connection, is that the revenue from the lands under works executed in a perennial river system will always be higher than the revenue from the lands under works executed in other areas and consequently the net expenditure calculated under new section 4-B (2) will be less in the case of the former and more in the case of the latter and that the basis adopted "will not render justice to all". New section 4-B (2) provides for ascertaining the net expenditure by deducting from the gross expenditure on a notified work, twenty times the annual increase in revenue from the lands in the improved old ayacut and in the new ayacut. This in principle, is equivalent to adopting a criterion that if the annual increase in revenue is 5 per cent or more, there would be no betterment levy on the lands comprised in the improved old ayacut. There is no injustice involved in this principle. The basis is thus very fair.

The hon. Members have suggested in the dissenting minutes that in ex-zamin areas, the levy of betterment contribution may be limited to works executed only after 1st January 1963. According to the provisions in the Bill as amended by the Select Committee, 12-00 noon.
there will be no levy of betterment contribution if any existing irrigation or drainage work has been merely repaired or restored to its original state. When it is a question of improvement, it is reasonable that the lands benefited should be subjected to the levy of betterment contribution without creating any distinction on the ground that the works improved are in ex-zamin areas. Any special treatment in the case of works executed in ex-zamin areas will amount to discrimination.

[Sri V. Ramaiah] [22nd November 1963

The members have also suggested that the period of two years specified in the proviso in Clause 5 of the Bill for the payment of the entire amount of contribution with a rebate should be raised to five years. There is no need to alter this period as it represents the period provided for in the Principal Act.

Under the provisions contained in the Principal Act, contribution becomes payable on expiry of two years after the date of completion of the execution of the notified work. It has been suggested in the dissenting minutes that this period may be raised to 5 years since it takes many years for the ryots to bring their lands under irrigation. New Section 4-C, in Clause 3 of the Bill empowers the authorised officer to postpone the inclusion of any land in the ayacut of a notified work on the ground that such land requires expensive lowering of the level or on such other ground as may be prescribed. Levy of betterment contribution in respect of such lands is to be made after the expiry of the period of postponement. In respect of lands included in the ayacut of a notified work, which are not fit for irrigation on the date of such inclusion for such reasons as may be prescribed, betterment contribution is to be levied from the fasli in which the lands are brought under irrigation. In view of these provisions there is no need to increase the period of two years provided for in the Act.

In conclusion, I wish to point oot that the Bill as amended by the Select Committee fixes liability for levy of betterment contribution only if the cost of the work exceeds one lakh of rupees. The Principal Act however provided for the levy of betterment contribution if the cost of the work exceeded Rs. 25,000.

I request the House, Sir, to accept the motion.

MR. SPEAKER: Motion moved.

"That the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 (L.A. Bill No. 19 of 1963), as amended by the Select Committee, be taken into consideration."

திரு. அ. பெ. தர்மலிங்கம்: தகுதி மிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை புதிய வரி விதிப்பு மசோதா என்று சொன்னால் அதை அவர்கள் மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மசோதா . . . . .

கனம் திரு. வெ. ராமையா: இது ஒன்றும் புதிய வரி விதிப்பு மசோதா இல்லை. முன்னாலே இருக்கக் கூடிய மசோதாவிற்குத் திருத்த மசோதா தான்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: வரியை அதிகப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதா என்று அவர்கள் விளக்கம் கூறுவதைப் பார்த்தவுடனே வெட்டப்பட இருக்கிற ஆட்டிற்கு மாலை போட்டு, மஞ்சள் நீர் விடுவதைப்போலத்தான், அமைச்சர்

22nd November 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

அவர்களுடைய முகவுரையைக் கவனித்த நேரத்திலே எந்த அளவுக்கு பொதுமக்கள் பாதிக்கப்பட இருக்கிறார்கள் என்று உணர்ந்தேன்.

கனம் சபாநாயகர்: ரொம்பப் பேருக்குத் தெரியாது கனம் அங்கத்தினர் சொன்ன உபமானம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே விவசாயிகள் பல வரிகளை மறைமுகமாகவும் நேர்முகமாகவும் கொடுத்து வருகிறார்கள் அவர்களுக்கு இருக்கின்ற வரிப்பளு மிகவும் அதிகமானது. இது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இப்போது கொண்டுவந்திருக்கிற இந்த வரியையே 1955-ல் கொண்டு வந்து விட வேண்டும் என்று ஒருதடவை முயற்சி எடுக்கப்பட்டபோது கீழ் பவானி ஆயக்கட்டை சேர்ந்த விவசாயிகள் ஒரு போராட்டமே நடத்தினார்கள் என்று கருதுகிறேன். அதன் காரணமாகத்தான் இந்த மசோதா இத்தனை காலம் கொண்டுவரப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது என்றும் நினைக்கிறேன். இருந்தும் இப்போது 1963-ல் இந்த மசோதாவை நமது அமைச்சர் அவை, நம்முடைய சர்க்கார் கொண்டுவருவதற்குக் காரணம் என்ன. நம்முடைய விவசாயிகளின் நிலை உயர்ந்து விட்டது என்று கருதுகிறார்களா, விவசாயிகளுடைய பொருளாதாரம் சீர்பட்டிருக்கிறது என்று கருதுகிறார்களா? அப்படி எல்லாம் இல்லாதபோது இந்த மசோதா கொண்டுவரப்படுவதானது வெளியாருடைய நிர்பந்த இதிலிருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். மத்திய சர்க்காரோ திட்டக்கமிஷனோ தான் இந்த வரியைக் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறார்கள் என்று தெரிகிறது. "நீங்கள் விவசாயிகளுக்கு சலுகை காட்டிக்கொண்டிருக்கிறீர்கள், நிச்சயமாக இந்த வரியை விதித்துத்தான் ஆகவேண்டும்" என்று வற்புறுத்தப்பட்டதின் பேரில்தான் இநத மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நிச்சயமாகக் கருதுகிறோம். அமைச்சர் அவர்கள் பதில் கூறி விடலாம், "இப்போது நாட்டில் இருக்கிற பெரும்பாலான விவசாயிகள் இந்த லெவியைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள், நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் லெவியைப் போடுங்கள், ஆனால் எப்படியாவது எங்கள் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கும் திட்டத்தை நிறைவேற்றி கொடுக்கத்தான் வேண்டும் என்று சொல்கிறார்கள்" எனச் சொல்லிவிட முடியும். அணை கட்டுவதினால் தங்கள் பகுதி நல்ல வளம் பெறும், பாசனவசதியைப் பெறும், நமக்கு அதிகம் லாபம் வரும்போது இந்த லெவியைக் கொடுக்க என்ன கஷ்டம் இருக்கப் போகிறது என்று அவர்கள் நினைத்து ஆரம்ப காலத்தில் சொல்லலாம் ஆனால் எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி அந்த திட்டம் பூர்த்தி ஆன பிறகு மக்கள் தங்களுக்கெல்லாம் என்ன லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்களோ, அது பெரும்பாலான வகையில் கிடைக்காமல் போய்விடுகிறது என்று சொல்ல முடியும். ஆகவே அந்த சமயத்தில் அவர்கள் இந்த வரியைக் கட்டுவது என்றால் மிகவும் அவதிக்கு உள்ளாக நேரிடும். அவர்கள் லெவி கட்டுவதற்கு ஒத்துக் கொண்ட காரணத்தினால்

தானே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிறோம் என்று சொன்னாலும், விவசாயிகளை, கஷ்டப்படுத்துகின்ற, துன்பப்படுத்துகின்ற ஒரு வரியை அரசாங்கம் விதிக்க நினைக்கக் கூடாது. ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகக் கூடிய திட்டங்களுக்கு மட்டும் தானே வரி போடப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். சர்க்காரைப் பொறுத்தவரையில் ஒரு லட்சம் ரூபாய் என்பது மிகச் சாதாரண தொகை ஆகும். ஒரு லட்சத்திற்கு என்று சர்க்கார் போடுகின்ற திட்டங்கள் எல்லாம், அது பூர்த்தி அடைந்த தறுவாயில், முடிவடைந்த தருணத்தில், நான்கு லட்சம், ஐந்து லட்சத்திற்குமேல் செலவாகி விட்டது என்று சொன்னால் யாரும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. பண்டங்களின் விலையும், வாழ்க்கைச் செலவும், நாளுககு நாள் அதிகரித்துக் கொண்டே போகிற இந்தக் காலத்தில், ஒரு கால்வாயை செப்பனிடுவது என்றால் கூட ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகிவிடும். ஆகவே ஒரு லட்சம் ரூபாய்க்கு செலவிடப்படுகிற திட்டங்களுக்குத்தானே இந்த வரி என்று சொல்வது சரியாகாது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த வரியினால் அநேகமாக எல்லா விவசாயிகளுமே பாதிக்கும்படி நேரிடும. இன்றைக்கு அவர்களுக்கு இருக்கின்ற வரிப்பளு மிக அதிகமானது. நில வரி, தண்ணீர்த்தீர்வை வரி இன்னும் பஞ்சாயத்து செஸ் போன்றவைகள் எல்லாம் ஏற்கனவே இருக்கின்றன. ஒன்றிரண்டு பஞ்சாயத்து யூனியன்களில் 100 பர்சென்ட் கூட பஞ்சாயத்து செஸ் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு சர்க்கார் கடன் கொடுக்கிறார்கள் என்று நம்பி, கடனை வாங்கி நிலச்சீர்திருத்தத்திற்காக செலவிட்டவர்களும் இருக்கிறார்கள். உழவு மாடு வாங்க கடன் வாங்கியவர்களும் இருக்கிறார்கள். கிணறுவெட்ட கடன் வாங்கியவர்களும் இருக்கிறார்கள். வாங்கிய கடன்களை திருப்பிக் கட்ட முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிற அவர்களுடைய சொத்துக்களையும், மாடுகளையும், வேறு சிறு சி[று] பொருள்களையும் கூட அதிகாரிகள் ஜப்தி செய்துகொண்டிருக்கிற நிலைமை நாட்டில் இருப்பதை கனம் அமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஏன் என்றால் பல இடங்களில் பல விவசாயிகள் இன்றைக்கு தங்களுடைய நிலத்தில் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்த முடியாத காரணத்தினால் வாங்கிய கடனை கொடுக்க முடியாமல் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள், இதை உணர்ந்தும் உணராமல், விவசாயிகளே கொடுக்கிறேன் என்று சொன்ன வரிதானே இது என்று அவர்கள் மீது இந்த வரியை சுமத்துவது மிகவும் அநீதியானது. இந்த வரி விதிப்பானது மேலும் அவர்களுடைய வரிச்சுமையை அதிகப்படுத்துவதற்கு பயனுள்ளதாக இருக்குமே தவிர அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு பயனுள்ளதாக இருக்காது என்பது என்னுடைய கருத்து. நம்முடைய திட்டங்களை நிறைவேற்றவும் பயனுள்ளதாக இருக்குமென்று நான் கருதவில்லை. அதோடு கூட திட்டங்களை நாம் நிறைவேற்றும் போது ஒரு ஆயக்கட்டிற்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று சொல்கிறீர்களோ அந்த அளவு தண்ணீரை கொடுப்பதற்கு சர்க்கார் உத்திர

வாதம் கொடுக்குமா என்றால் நிச்சயமாக இல்லை. பருவ மழை தவறி விட்டது, அதனால் அணைக்கட்டில் போதுமான தண்ணீர் இல்லை, ஆகவே அடுத்த போகத்தை சாகுபடி செய்யாதீர்கள், என்று உத்திரவு இடுவதற்காகவே அமைச்சர்களும் அதிகாரிகளும் கூடிக்கூடி ஆலோசிக்கிறார்களே தவிர, குறிப்பிட்ட அளவுக்கும் மேலாக நாங்கள் தண்ணீர் விடுகிறோம் நீங்கள் இதுவரை ஒரு போகமாக நட்டதை இரு போகமாக்கிக் கொள்ளுங்கள் என்று உத்திரவு இடக்காணோம். வானம் பொழியவில்லை, நாங்கள் என்ன செய்வோம் என்று கையைத்தான் விரிக்கிறார்கள். ஆகவே தான் நாங்கள் சொல்லுகிறோம் வானம் பொழியுது, பூமி விளையுது, உங்களுக்கு எதற்காக காணிக்கை என்று கேட்டார்களே அதைப் போல வரி வேண்டாமென்று சொல்ல வில்லை என்றாலும், விவசாயிகளின் மீது இதுவரை போடப்பட்டிருக்கிற வரிகளே போதும், இனிமேலாவது புதிய வரிகள் எதுவும் அவர்கள் தலை மீது சுமத்தாதீர்கள் என்று வேண்டிக் கொள்கிறோம். அதுமட்டுமல்ல, ஒரு புதிய திட்டம் வருகிறது என்றால் அந்தத் திட்டத்தினால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் உடனடியாகப் பயன் அடைவதில்லை. ஒரு கால்வாய்த் திட்டம் அமுலுக்கு வந்தால் அந்தக் கால்வாயினால் பாசன வசதி பெறுகின்ற நிலங்கள் பயன் அளிப்பதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளாவது ஆகின்றன. அந்தக் கால்வாயை நம்பி ஏழை விவசாயி மக்கள் கடனை வாங்கி நிலத்தைப் பயன்படுத்துவதற்காகவும் செலவிட்ட பிறகு அந்தக் கடனை திருப்பிக் கொடுப்பதற்குகூட முடியாமல் திண்டாடுகின்ற நிலையில் இந்த வரிப்பளுவும் சேர்ந்தால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக நேரிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வாங்கிய கடனும் வரக் கூடிய வரியுமே அவர்கள் தங்கள் நிலத்தை விற்று விட்டு ஓடக்கூடிய நிலையை உண்டாக்கும். ஆகவேதான் அப்படி இந்த வரியைக் கொண்டு வருவது என்று அரசாங்கம் தீர்மானித்து விட்டாலும் கூட ஒரு பாசனத்திட்டம் அமுலுக்கு வந்த 10 அல்லது 15 ஆண்டு காலத்திற்குப் பிறகு இந்த வரியை விதிப்பது என்று சொன்னாலும் அதை ஓரளவு அவர்கள் சௌகரியமாகக் கருதக் கூடும். எனவே அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் பேசும்போது பொறுக்குக் குழுவில் சொல்லப்பட்டிருக்கிற ஆட்சேபணையைக் கூட தெரிவித்தார்கள். அவர்கள் சொல்லி இருக்கும்படியான கருத்துக்களையும் ஏற்று அதற்குத் தகுந்த மாற்றங்கள் இந்த மசோதாவில் கொண்டுவரப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்:** பெருமை மிக்க சட்ட மன்றத் தலைவர் அவர்களே, விவசாய திட்டங்களை நிறைவேற்றுகிறபோது அந்தத் திட்டங்களின் மூலம் பலன் அடைந்த நிலங்களுக்கு அபிவிருத்தி வரி விதிப்பது சம்பந்தமாகப் பொறுக்குக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, மராமத்து இலாகா அமைச்சர் அவர்களால் இந்தச் சபையின் அங்கீகாரத்துக்குப் பிரேரித்திருக்கிற இந்த மசோதாவை நான் முழு

மனதுடன் வரவேற்கிறேன். இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவின்கீழ் கீழ்ப் பவானி ஆயக்கட்டு பகுதிகளின் நிலைமை என்ன என்பது சரிவர விளங்கவில்லையாயினும் பொதுவாக இந்த மசோதா எல்லோராலும் வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும் என்று கருதுகிறேன். அதற்குக் காரணம்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை

என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறுகிறார். அவர் கூறிய கருத்தின் அடிப்படையில்தான் ஜனநாயக சோஷலிஸம் அல்லது சமதர்மத்தை ஏற்றுக்கொண்டுள்ள நாம் இந்த மசோதாவை ஆதரிக்க கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய செல்வத்தை நாமே தான் பகிர்ந்து கொள்ள வேண்டும். நம்முடைய கடமை—அரசாங்கம் பொது நிதியில் இருந்து நம்முடைய பிராந்தியம் வளம் பெற ஒரு திட்டத்தை நிறைவேற்றும்போது, அந்தத் திட்டத்தினால் கிடைக்கிற வளப்பத்தைப் பகுத்துண்ண வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய லாபத்தில் ஒரு பகுதியை மீட்டும் சர்க்காருக்குக் கொடுத்து வேறு ஒரு பகுதியை வளப்படுத்தும் திட்டத்தை மேற்கொள்ள வசதி செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். இது இந்த மாநில குடிமக்களுடைய கடமையாகும். அதேசமயம் வள்ளுவப் பெருந்தகையார் அரசியலாரின் கடமை என்ன என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு

என்று கூறுகிறார். இவை ஆட்சியின் கடமை என்று உறுதியாகச் சொல்கிறார். வரியாக மக்களிடம் இருந்து பணத்தை ஈட்டல் அரசாங்கத்தின் கடமை. வரியைச் சுமையாக மக்கள் கருதாத வண்ணம் அவர்களுடைய செல்வ வளம் பெருகக்கூடிய திட்டங்களை முதலில் இயற்றி, வரி மூலம் பணத்தை ஈட்டி, அதைக் காத்து —விரயமாகாதபடி காத்து மக்களுடைய நன்மைக்காகவே அந்தப் பணத்தைப் பிரித்துச் செலவிடுதல் ஒரு அரசினுடைய கடமை என்று வற்புறுத்துகிறார்.

ஆகவேதான் இந்த மசோதாவைக் கொண்டுவந்த அரசாங்கத்தைக் குறை கூறவும் முடியாது. இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டியதும் இந்த நாட்டுக் குடிமக்களுடைய கடமையாகவும் ஆகிறது என்று முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா வள்ளுவர் வகுத்த குறள் நெறித் தத்துவம் உள்ளடங்கியதாக இருப்பதனால் நான் இதை வரவேற்கிறேன்.

இம்மாதிரி அணைக்கட்டு திட்டங்களை எல்லாம், நீர்ப்பாசனத் திட்டங்களை எல்லாம் ஒரு அரசு ஏற்று நடத்துவது தான் கடமை என்பதாகப் பழங்காலத்தில் பாண்டிய மன்னரிடம் ஒரு புலவர் கூறியதாக சங்க இலக்கியத்தில் ஒரு பாட்டு உண்டு. குறிப்பாக புறநானூற்றில்

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
என்று வரும் பாடலில்

வித்தி வான் நோக்கும் புன்புலம் கண்அகன்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே

என்பதில் தம் கருத்தின் இறுதியாகச் சொல்கிறார். மேட்டுப்பாங்கான நிலத்தை அரசன் கொண்டு பயனில்லை. மழை நீர் தேங்கும் பள்ளங்கள் அதிகமுடைய நாட்டில்தான் வளம் இருக்கும் என்றும், அதனால் ஆட்சிக்கு வருவாய் கிடைக்கும் என்றும் அந்தப் புலவர், "குளந்தொட்டு வளம் பெருக்கு" என அரசனுக்கு அறிவுரை வழங்கியதாக இருக்கிறது. அந்த வகையில் நாம் பார்ப்போமானால் பழங்காலத் தமிழ் மக்களுடைய பண்பாட்டுக்கு ஏற்ப பழங்காலத் தமிழ் மக்கள் வாழ்ந்த சமதர்ம குறிக்கோள் கொண்ட அரிய பண்பினைக்கு ஏற்பவே இப்போதும் அரசாங்கம் அங்கங்கே பலபல . நீர்த் திட்டங்களை, பாசனத் திட்டங்களை எடுத்து நிறைவேற்றி அதிக வரியும் விதிக்க முன் வருகிறது. ஆகவேதான் அந்த ஒருவகையிலும் இந்த மசோதாவை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக கீழ்பவானி ஆயக்கட்டின் நிலைமை என்ன என்பதைப்பற்றியும் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் சொன்னார்கள். முன்பே கீழ்பவானி திட்டப் பகுதியில் உள்ள விவசாயிகள் கிளர்ச்சி செய்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தக் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்பதை இந்த நேரத்தில் அறிவித்துக்கொள்ள ஆசைபடுகிறேன்.

காரணம் அப்போது இருந்த நிலைமை அப்படி. அபிவிருத்தி வரி என்பதற்காக ஏக்கருக்கு கிட்டத்தட்ட 700 ரூபாயிலிருந்து 1,300 ரூபாய் வரை ஏதோ கணக்குப்போட்டார்கள். நிச்சயமாக அந்த வரி விதிக்கப்படுமானால்—அந்த அளவுக்கு வருமானால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று கருதினோம். அதற்காக நாங்கள் ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டி அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்திக்கொண்டோம். கனம் அமைச்சரிடமும் நேரில் வந்து சொன்னோம். இப்போது அமைச்சராக இருக்கிற கனம் மன்றாடியார்கூட அப்போது எங்களோடு அந்த தூது கோஷ்டியில் வந்தார். ஆனால் இவர் அப்போது அமைச்சராக இல்லை. நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து வந்து உள்ள நிலைமையை விளக்கினோம். கனம் அமைச்சர் அவர்களும் எங்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். வரி போடுகின்றபோது சரியாகக் கவனித்துப் போடுகிறோம் என்று வாக்களித்தார்கள். அந்த நிலைமையில்தான் இன்றைக்கு அந்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படாத நிலைமையில் இந்த மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

பொறுக்குக் குழு கூட்டத்தில் ஏதோ ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் போது கனம் மராமத்து இலாக்கா அமைச்சர் அவர்கள் கீழ்பவானி ஆயக்கட்டுப் பகுதியானது ஒருபோக நஞ்சை நிலம் என்ற பிரிவின்கீழ் வரும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் உறுதியாகக் கூறியிருப்பதை, நான் மிகமிக உற்சாகத்தோடு வரவேற்கிறேன். அந்த உறுதி நிலையானதாக ஆக்கப்பட வேண்டும். அதைத்தான் நான் வற்புறுத்த விரும்புகிறேன். அப்படி இருக்கும்போது சென்ற ஆண்டிலே புதிதாக நெல் பயிரிட்ட விவசாயிகளுக்குத் தண்டத் தீர்வை ஏன் வந்தது என்பதை இலாகாவில் உள்ளவர்களைக் கொண்டு பரிசீலனை செய்து அவர்களுக்கு விமோசனம் செய்வார்களேயானால் அது வரவேற்கத் தக்கதாக அமையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதன்றியும் இப்போதுள்ள பாசனமுறையை ஊர்ஜிதம் செய்துவிட வேண்டும்.

மேலும் இப்போது இந்த வரி விதிப்புக்காக நிலங்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட இருக்கின்றன. அந்த நான்கு வகையிலே இந்தக் கீழ்பவானி பாசனப் பகுதிகள் எதன்கீழ் வரும் என்று தெளிவு படுத்த வேண்டும். காரணம் தமிழ் இலக்கணத்தில் திணை மயக்கம் என்று சொல்வார்களே, அப்படி கீழ்பவானி பாசனப் பகுதிகள் ஒவ்வொரு விதமாகப் பார்க்கும்போது இந்த மூன்று பிரிவுகளின்கீழும் வரக்கூடிய திணை மயக்கமுடைய பகுதியாக இருக்கின்றது. அதனால்தான் பின்னால் ஏதாவது குழப்பம் வருமோ என்று அஞ்சுகிறேன். அப்படி வரும்போது—விளைவு லஞ்ச நிலைமைதான் வளர வழியேற்படும். அதைத் தவிர்க்க இன்றையதினமே முன்பின் எப்படி இருந்தாலும் ஒரு முறையின் கீழ் அதைக் கொண்டுவந்துவிட வேண்டும். ஒரு முறையின்கீழ் ஏ.பி.ஸி.டி. என்று பிரிக்கப்பட்டுள்ள நான்கு இடங்களில் கடைசி இனமாக அதை நிர்ணயித்து ஏக்கருக்கு 130 ரூபாய்க்கு மேல் மேல் போகாதபடி வரியை நிர்ணயித்துவிடவேண்டுமென்று நான் மிகவும் தாழ்மையுடன் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி வருமேயானால் ஒரு ஏக்கருக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஆறு ரூபாய் செலுத்தவேண்டி வரும். ஏற்கனவே ஒரு போக நஞ்சை என்ற தலைப்பின்கீழ் நாங்கள் ஒரு ஏக்கருக்கு ஆண்டு ஒன்றுக்குச் செலுத்துவதானது சுமார் 23 ரூபாய் ஆகும். அதனுடன இந்த ஆறு ரூபாயும் சேர்ந்தால் 29 ரூபாய் ஆகிறது. இது மொத்தமாக 27 ரூபாய்க்கு மேல் போகாமல் பார்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும். வள்ளுவர் கூறுகிறார்—

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்" என்று..

வண்டியில் ஏற்றுவது மயிர்பீலி என்றாலும்கூட அதுவும் அளவுக்கு அதிகமானால், சகடத்தின் அச்சு முறிந்துவிடும் என்று சொல்லுகிறார். அந்த முறையில், அதிக அளவிலே வரி அமையா

வண்ணம் அமைச்சர் அவர்கள் தக்க சமயத்தில் பரிகாரம் தேடிக் கொடுப்பார்கள் என்று நாங்கள் மிகவும் நம்பிக் கொண்டிருக்கிறோம்.

அடுத்தாற்போல், நான்கு இனம் என்பதிலே, முதல் பிரிவுக்கு 200 ரூபாயிலிருந்து கடைசி இனத்திற்கு 140 ரூபாய் என்று உள்ள நிலையை இப்படியே விட்டு விட்டால் அதிகாரிகளினால் குழப்பம் ஏற்பட்டு மக்களிடத்திலும் பெரும் குழப்பம் பிரதிபலிக்கும் என்ற வகையிலே இருக்கின்றமையால் அதற்குக் கண்டிப்பாக ஒரு வழிவகை செய்து கொடுப்பதும் சென்ற ஆண்டிலே போடப்பட்டுள்ள தண்டத் தீர்வையை ரத்து செய்து அதை விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுப்பதும் சர்க்காருடைய பெரும் கடமை அமையும் என்று கூறிக்கொண்டு இந்த மசோதாவை நான் மிக உற்சாகத்துடன் வரவேற்கிறேன் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. SPEAKER: I am sorry I have not mentioned about the amendments given notice of by hon. Members Sri C. Chiranjeevulu Naidu and Sri M. Kalyanasundaram. The hon. Members are not here. The amendments have not been moved.

*திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சபாநாயகர் அவர்களே, நில அபிவிருத்தித் திருத்த மசோதாவை ஆட்சேபித்து சில வார்த்தைகள் சொல்வதற்கு விரும்புகிறேன். பொதுவாகவே விவசாயிகள் மீது பல முறைகளில் வரி போடப்படுகிறது. எல்லா நேரங்களிலும் விவசாயிகள்மீது வரி விதித்து அவர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு விவசாய அபிவிருத்திக்காக இந்த மாதிரி நீர்ப்பாசன வசதிகளையும் இதர வசதிகளையும் செய்து கொடுக்க முன் வரும் அதே சமயத்தில் அதற்கு அபிவிருத்தி வரி போட்டு வசூல் செய்து விடுகிறார்கள். இந்த மாதிரி வரி வசூல் செய்ய விவசாயிகளைத்தான் ஏமாந்தவர்களாக அரசாங்கம் கருதுகிறது. வரியைக் கொடுக்காமல் பல முதலாளிகள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அந்த வரியை வசூல் செய்ய எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை என்பது ஒரு புறம் இருக்க, விவசாயிகளிடமிருந்து அநியாயமான முறையில் இந்த மாதிரி வரி வசூல் செய்கிறார்கள். இந்த வரியை விதிக்க வேண்டுமென்ற நிலை ஏற்படுமானால் சிறு விவசாயிகளுக்கு விதிவிலக்காவது இருக்கவேண்டும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இன்றையதினம் நிறைவேற்றப்பட்ட இந்தத் திட்டத்தினால் பலன் அடைந்தாலும் அடையாவிட்டாலும் இரண்டு ஆண்டுக்கு மேல் தொகையைக் வசூலிக்க வேண்டுமென்று சொல்லி இருப்பதானது விவசாயிகளுக்குப் பெரிய நஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதாகும். உதாரணமாக, விவசாயிகள் அதன் பலனை அனுபவிக்க வேண்டுமென்று சொன்னால் சுமார் 10 வருஷமாவது ஆகக்கூடிய நிலைமைதான் ஏற்படும். ஆகவே, திட்டம் முடிந்த உடனேயே அவர்களிடமிருந்து வரி வசூலிப்பதானது சரியாக இருக்க

முடியாது. தயவு செய்து ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் வைத்துள்ள சிறு விவசாயிகளுக்கு இந்த வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. மாதா கவுடர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நில அபிவிருத்தி திருத்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். குறிப்பாக நாட்டில் இருக்கக் கூடிய எல்லா நிலங்களுக்கும் நில வரியை நாம் போட்டிருக்கிறோம். பஞ்சாயத்து யூனியனிலே நிலவரி நூற்றுக்கு நூறு சதவிகிதம் போட்டு விட்டார்களே, மறுபடியும் அபிவிருத்தி வரி என்று போட்டால் விவசாயிகள் தாங்குவார்களா என்று எதிர்க் கட்சி நண்பர்கள் பேசுவதிலே அர்த்தம் இல்லை. பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளுக்காக பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கக் கூடிய மக்கள் நிலம் வைத்திருக்கக் கூடியவர்கள் அந்த வரிக்கு ஈடாக 100 சதவிகிதம் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். அந்த விகிதம் 10 சதவிகிதமோ, 100 சதவிகிதமோ, அந்தப் பொறுப்பைப் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அந்த வரியைச் சர்க்கார் விதிக்கவில்லை. மக்கள் எல்லோரும் கட்டும் வரிப்பணத்தில் இருந்து கோடிக்கணக்கான ரூபாயைச் செலவழித்து பாசனத் திட்டங்களை நிறைவேற்றுகிறோம். அந்தத் திட்டத்தினால் பலன் அடையக் கூடியவர்களுக்கு வரி விதிப்பது சரியாகாது என்று சொல்வார்களானால் அது மிக மிகப் பொருத்தமற்றது, அர்த்தமற்றது என்றுதான் சொல்ல முடியும். சர்க்கார் நியாயமான முறையிலே எதற்கு வரி போட்டாலும், எதிர்த் தரப்பில் உள்ளவர்கள் 'சர்க்கார் வரி போட்டு விட்டார்கள்' என்று சொல்வது சர்வசாதாரணம். இவ்வாறு அவர்கள் சொல்வதற்குத் தனி முக்கியத்துவம் இருக்கிறது என்று நினைத்து விடக்கூடாது. அவர்கள் எப்போதாவது போட்டிருக்கக் கூடிய வரி சரி என்று சொல்லியிருக்கிறார்களா என்று பார்த்தால் ஒரு நாளும் அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை.

இப்போது ஒரு அணைக்கட்டு கட்டி இருக்கக் கூடிய பகுதியில் அணை கட்டுவதற்கு முன்பு அங்கு நிலத்தின் மதிப்பு எவ்வளவு இருந்தது என்று பார்த்தால் சாதாரணமாக ஒரு ஏக்கர் நிலம், 50 ரூபாய், 100 ரூபாய் என்று இருக்கும். அணைத் திட்டம் முடிந்த பிறகு பார்த்தால் அந்தப் பகுதியில் நிலத்தின் மதிப்பு 10,000 ரூபாய் வரை உயர்ந்து விடுகிறது. ஆனால் நிலவரி அன்றைக்கு இருந்ததைவிட இன்றைக்கு எத்தனை மடங்கு உயர்ந்திருக்கிறது?
12-31 p.m. இதைக் கவனித்துப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் தெரியும். விவசாயிகள் யாரும் இந்த வரியைக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. அரசியல் ரீதியிலே எதிர்க் கட்சிக்காரர்கள் பேசுவது அர்த்தமற்றது. அமைச்சர் அவர்கள் தண்ணீர் கொடுக்கமுடியும் என்று உறுதி கொடுப்பாரா என்று கேட்கிறார்கள். மழை பெய்தால்தானே அணையிலே தண்ணீர் தேங்க முடியும். அப்போதுதானே தண்ணீர் கொடுக்கமுடியும். மழை

பெய்யாமலே தண்ணீர் கொடுக்க அமைச்சர் வருணபகவான் அல்ல என்று கூறிக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது விவாதத்திற்கு பதில் சொல்ல எழுந்திருக்கவில்லை. இப்போது நடந்துகொண்டிருக்கும் விவாதத்தைப் பார்த்தால் அதிக நேரம் நடந்துகொண்டு போகும் என்று நினைக்கிறேன். இதை தொடர்ந்து நடத்துவதற்கு முன்னால் ஒரு கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். இதில் முன்னால் பேசிய அங்கத்தினர்கள் ஒரு புதிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கம் ஏதோ ஒரு புதிய வரியை கொண்டு வந்து அதற்காக ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்காக இப்போது மசோதா கொண்டுவருவதாக நினைத்து பேசுகின்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரையில் கொள்கை அளவில் இந்த வரி விதிக்கப்படுவதை இந்தச் சட்டமன்றம் ஏற்றுக் கொண்டுவிட்டது. இதை நடைமுறையில் கொண்டு வருவதில் சில சிக்கல்கள் இருந்தன. அதை நீக்குவதற்காகத்தான் இப்போது இந்த திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே வரி போடலாமா, போடக்கூடாதா என்கின்ற பிரச்னை இப்போது வருவதற்கு இடமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

*** திரு. செ. மாதவன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் விவாதத்தில் குறுக்கிட்டு, வரி போடக்கூடிய தத்துவத்தைப் பற்றி இப்போது பேசலாமா என்று கேட்டார்கள். நான் தங்களுக்குக் கூறிக்கொள்வதெல்லாம், இப்போது கொண்டு வரக்கூடிய சட்டத்திலே வரி போடலாமா, போடக் கூடாதா என்று விவாதிப்பதோடு, இந்த வரி யாருக்குப் போடப் பட்டது, எதற்காகப் போடப்பட்டது, எப்படி போடப்பட்டது என்கின்ற விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. ஆகவேதான் தத்துவ ரீதியாக வரி போடுவது நியாயம்தானா என்கின்ற பிரச்னையை நாங்கள் கிளப்புகிறோம். இந்தச் சர்க்கார் விவசாயிகளுக்கு நன்மை செய்யப்போகிறது, என்று சொல்லிவிட்டு' அதன் காரணமாக விவசாயிகள் பயன் பெறப்போகிறார்கள், ஆகவே அதிலுள்ள ஒரு பகுதியாக வரி போடுவதற்கு உத்தேசித்துள்ளோம் என்று சொல்வது சரியல்ல என்ற குற்றச் சாட்டைத்தான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

இது போன்ற வரிகள் மத்திய சர்க்காரால், போட்டாக வேண்டும் என்று மாநில சர்க்காரை வற்புறுத்தப்பட்டு வருகிறது. திட்டக்குழு சொல்கின்ற அடிப்படையை வைத்துக்கொண்டு எப்படியும் வரி போட்டாக வேண்டும் என்று மத்திய சர்க்கார் மாநில சர்க்காரை விரட்டிக்கொண்டிருக்கிறது. அந்த காரணத்தினாலும் மத்திய சர்க்காருக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற காரணத்தினாலும், இவ்வளவு காலம் இந்த சட்டத்தை ஒத்தி வைத்துவிட்டு, இப்போது இந்த மசோதாவை அவசரம் அவசரமாக கொண்டு வருகிறார்கள் என்பதை சொல்லிக்

கொள்ள ஆசைப் படுகிறேன். இந்தச் சட்டம் கொண்டு வர வேண்டியதின் அவசியத்தைப்பற்றி பேசும்போது அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். விவசாயப் பெரு மக்களுக்கு புதிதாக பல திட்டங்களை கொண்டு வரும்போது, திட்டங்களின் மூலமாக விவசாயிகள் நன்மை பெறுகிறார்கள். அரசாங்கம் விவசாயிகளுக்காக பணம் செலவு செய்கின்றது. ஆகவே, செலவு செய்த பணத்தில் ஒரு பகுதியை விவசாயிகளிடமிருந்து திருப்பி பெறுவதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள சொன்னார்கள். 1955-ம் ஆண்டு இதற்கான பிரின்ஸிபிள் ஆக்டை இந்த சட்டமன்றத்தில் எடுத்துக் கொண்ட நேரத்தில் அப்போது ரெவின்யூ அமைச்சராக இருந்த அமைச்சர் அவர்கள் பல கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். அதாவது பல நிலங்களுக்கும் சர்க்கார் போடக் கூடிய திட்டத்தின் காரணமாக நிலங்களின் மதிப்பு உயருகின்ற காரணத்தினால் வரி வாங்குவதற்கு நியாயம் இருக்கிறது என்று கூறினார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் கூற விரும்புவது மக்களுக்கு நன்மை செய்கின்ற அரசாங்கம் அதற்காக ஓரளவுக்கு வரி வாங்குகின்றது அதன் மூலமாக நிர்வாகத்தை நடத்துகின்றோம் இவ்விதமாகத்தான் திட்டங்களைப் போடுகின்றோம் என்றும் தங்களுடைய தேர்தல் அறிக்கையில் அரசாங்கம் சொல்லியிருந்தது. விவசாயிகளிடமிருந்து ஏற்கனவே பல வரிகள் வாங்கப்பட்டன. வரி போடாதீர்கள் வரி போடாதீர்கள் என்று பேசத்தான் எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தெரியும் என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள் இந்த வாதம் பழைய வாதம். பொதுவாக வரி போடுகின்ற ஒரு சட்டம்தான் இப்போது சட்டமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு நன்மை செய்யும்போது, என்னென்ன காரணங்களைக் கொண்டு நன்மை செய்யப்போகின்றோம் என்று அரசாங்கம் தெளிவாக சொல்லவேண்டும். ஏற்கனவே விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பு இருந்தால்தான் இந்த நாடு வாழ முடியும். ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் வள்ளுவருடையவும், புறநானூற்றினுடையவும் மேற்கோள்களை எல்லாம்கூட காட்டினார்கள். ஆனால் விவசாயிகளைப் பற்றி வள்ளுவர் என்ன கூறியிருக்கிறார் என்பதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் பார்க்கத் தவறிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்த சமுதாயத்திற்கே அச்சாணி போன்றிருப்பவர்கள் விவசாயிகள்தான் என்று வள்ளுவர் சொல்லியிருப்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் பார்க்க மறந்துவிட்டார்களோ என்று ஐயப்படுகிறேன். இந்த வரி விவசாயிகளை பாதிக்கக்கூடிய வகையில் எதற்காக போட வேண்டும், அந்த முறையில் எதற்காக இந்த மசோதா அமைய வேண்டும், அதற்கென்ன அவசியம் இப்போது வந்துவிட்டது என்பதைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டும். அதை விட்டு இந்த வரி போடும்போது, சர்க்காருடைய நோக்கம் என்ன, சர்க்காருடைய தத்துவம் என்ன என்று பார்க்கும்போது விவசாயிகளுக்கென்று சில லட்சக்கணக்கான ரூபாய்களை செலவழிக்

கின்றோம். அதன் மூலமாக விவசாயிகள் பயன் அடைகிறார்கள், ஆகவே அதிலிருந்து ஒரு பகுதியை வரியாக ஏன் வாங்கக்கூடாது என்கின்ற வாதம்தான் சர்க்காருடைய தத்துவ வாதமாக இருக்கின்றது. இப்படிப்பட்ட "லாஜிக்கல் கன்க்ளூஷன்" எந்த சர்க்காரால் எடுத்து வைக்க முடியும் என்று கேட்டால், அந்நியர்கள் நம்மை ஆண்டுகொண்டிருந்த போது, நம்மிடம் வரிகளை வசூலிக்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட வாதத்தை சொன்னார்கள். அந்நியர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் இந்த நாட்டு மக்களுடைய வரிப்பணத்திலிருந்து ஒரு பகுதியை எங்கள் நாட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும், ஆகவேதான் நாங்கள் இந் நாட்டு மக்களுக்கு செலவு செய்கின்ற பணத்தின் மூலம் கிடைக்கின்ற வருமானத்திலிருந்து ஒரு பகுதியை வரியாக வசூல் செய்து எங்கள் நாட்டுக்கு கொண்டு செல்லுகின்றோம் என்று சொன்னார்கள். இது அந்நியருடைய ஆட்சியில் இருக்கலாம். இத்தகைய வாதத்தை 1865-ம் ஆண்டு சொன்னார்கள் அப்போதிருந்த அந்நிய ஆட்சிக்காரர்கள். நாங்கள் விவசாயிகளுக்கு புதிய திட்டங்களை போடுகிறோம், அதற்காக நாங்கள் செலவு செய்கின்றோம், அதன் மூலமாக விவசாயிகள் பயன் பெறுகிறார்கள் அந்தப் பயன் மூலமாக கிடைக்கின்ற வருமானத்திலிருந்து ஒரு பகுதியை பெற்றுக் கொள்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு என்று 1865-ம் ஆண்டு இம்மாதிரிப்பட்ட சட்டம் கொண்டு வந்த நேரத்தில் தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தினுடைய ப்ரியாம்பிளில், "Expendtture out of Government funds" சர்க்காருடைய பணத்திலிருந்து செலவு செய்யப்படுகின்றது எதற்காக "Construction and improvements of works, irrigation and drainage" விவசாயிகளுக்காக புதிய திட்டங்களை உருவாக்குகின்றோம், சர்க்காருடைய பணத்தை செலவு செய்து இத்திட்டங்களை உருவாக்குகின்றோம் . . . இவ்விதம் செலவு செய்ததற்கு வெள்ளைக்காரர் "fit return on all cases may be made to Government" இவ்விதம் செலவு செய்த பணத்திற்காக ஒரு பகுதியை ரிட்டர்னாகை அரசாங்கத்திற்கு வரியாக கொடுக்கவேண்டும் என்று அன்றைக்கு ஆட்சியிலிருந்த வெள்ளைக்காரர்கள் சொன்னார்கள். அன்றைக்கு சொல்லப்பட்ட இந்த வாதத்தை இப்போது நம்முடைய சர்க்கார் சொல்வது நியாயம்தான் என்று இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றார்களா என்று கேட்கின்றேன். அப்படி ஏற்றுக்கொள்வது என்றால் அதற்காக நான் வெட்கப்படுகிறேன் என்று சொல்வதைத் தவிர வேறு என்ன கூற முடியும்? பொதுவாக இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையே தவறு. இதனுடைய பிரின்ஸிபிள் தவறாக அமைந்திருக்கிறது. அதே போலத்தான் எங்களுடைய கருத்தை முன்கூட்டி அறிந்து இன்னொரு வாதத்தையும் அமைச்சர் அவர்கள் எடுத்து வைத்தார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக வரி வசூலிக்கின்ற நேரத்தில் நாட்டிலுள்ள ஒரு பகுதி மக்களுக்கு வேறு, இன்னொரு பகுதி மக்களுக்கு வேறு என்று இருக்கக்கூடாது என்று கருதி

தான் ஒரே மாதிரியாக போடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்னவென்றால், மக்கள் சர்க்காருடைய திட்டத்தினால் பயன் அடைந்திருக்கிறார்கள். அந்த பயனிலிருந்து ஒரு பகுதியை சர்க்கார் வரியாக வசூல் செய்து கொள்ள அனுமதி வேண்டும். இந்த வாதம் சரியானதுதானா என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

சாதாரணமாக, பெரனியல் ரிவர் பெட், ரெய்ன் பெட் என்றெல்லாம் சொல்வது போல், நிச்சயமாக தண்ணீர் வரும் என்று நம்பிக்கையுள்ள பகுதி, மழையையே நம்பியிருக்கின்ற சில பகுதிகள் என்றெல்லாம் இருக்கின்றன. வானத்தையே எதிர்பார்த்து வாழக்கூடிய பகுதிகளும் நம் நாட்டில் இருக்கத்தான் செய்கின்றன. என்னுடைய பகுதியை பொறுத்தமட்டில், எங்களுடைய ராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பகுதியும் அன்றாடம் வானத்தைப் பார்த்தபடியே வாழவேண்டியிருக்கிறது. வானம் பெய்தால்தான் எங்கள் வாழ்வு வளரும் என்ற நிலைமையில் தான் அங்குள்ள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இதன் மூலம் எப்படி பயன் கிடைக்கும், அவர்களும் வரி கொடுப்பது சரி என்கிற முறையில் சிலர் வாதிக்க முற்பட்டார்கள். அவர்களும் எப்படி இதன் கீழ் வரி கொடுப்பது சரியாகும்? மக்களுக்கு என்று லட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து பல திட்டங்களை தருகிறார்கள், அதற்காக நன்றி செலுத்துகின்றேன். ஆனால் நான் குறிப்பிட்டது போன்ற பகுதியிலுள்ள மக்கள் இத்திட்டங்களினால் எப்படி பயன் பெறுவார்கள். மழை பெய்தால் தானே, மந்திரிகள் உறுதிமொழி கொடுக்க முடியும் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். அப்படியிருக்கும்போது மழையே இல்லாத பகுதியிலுள்ள மக்கள், வானத்தையே பார்த்துக்கொண்டு வாழ்நாட்களை கழித்துக்கொண்டிருக்கும் மக்கள் எப்படி பயன் பெறுவார்கள். ஆகவே அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கக்கூடாதா? அப்படி விதிவிலக்கு கொடுக்கக்கூடாதா என்று கேட்டால், கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்கள், விதிவிலக்கு என்று கொடுத்துவிட்டால், டிஸ்கிரிமினேஷன் என்று இந்தச் சட்டத்தை உயர்நீதி மன்றம் தள்ளிவிடும் என்று. டிஸ்கிரிமினேஷன் செய்யக்கூடிய எத்தனையோ சட்டங்களை இந்த மன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நான் முக்கியமாக குறிப்பிட விரும்புவது, மக்களுடைய நன்மையைக் கருதி, அவர்களுக்கு கிடைக்கின்ற நன்மையிலிருந்து தான் வரி வசூல் செய்கிறோம் என்றால், மழையே பெய்யாத சில பகுதிகள் இருக்கின்றனவே, அவற்றிற்கு ஏன் விதிவிலக்கு கொடுக்கக்கூடாது, அதைப்பற்றி ஏன் சிந்திக்க அரசாங்கம் மறுக்கின்றது, அப்பகுதிகளுக்கு விதிவிலக்கு கொடுத்தால் என்ன தவறு ஏற்பட்டுவிடும்?

ஈரோடு பகுதியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் அவர்கள் உள்ளதை அப்பட்டமாக சொன்னார்கள். நாங்கள் இந்த மசோதாவை எதிர்த்து கிளர்ச்சி செய்யவேண்டும் என்றிருந்தோம், எங்கள் கோரிக்கைக்கு பின்னால் அரசாங்கம் சில மாறுதல்களை

செய்தார்கள், ஆகவே இப்போது நாங்கள் ஆதரிக்கின்றோம் என்று உள்ளதை அப்படியே கூறினார்கள். இது எந்த எண்ணத்தை உத்தேசித்து சொல்லப்பட்ட கருத்து என்பதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதே நலத்தை உத்தேசித்து நான் இங்கே சொல்லுகிறேன். இந்தத் திட்டங்கள் மூலமாக நிச்சயம் பயனடைய மாட்டார்கள் என்று யாராவது ஒரு பகுதியினர் கருதினால் அந்தப் பகுதி மக்களுக்கு ஏன் வரி விலக்கு அளிக்கக்கூடாது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்னொரு தத்துவத்தை கனம் அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். பழைய ஜமீன் பிரதேசங்களுக்கு ஏன் விலக்குக் கொடுக்கக்கூடாது என்ற அந்தப் பிரச்னையைக் கிளப்பினார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். அவர்கள் கூறிய பதில் எல்லாம், அப்படி ஒரு சூழ்நிலை உருவாக்குவது பாகுபாடாக ஏற்படாதா என்று கேட்டார்கள். அதற்கு நான் கூறுவதெல்லாம் ஜமீன் ஒழிப்புப் பிராந்தியங்களில் 1948-ம் ஆண்டுக்குப் பின்னாலே தான் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நன்மை செய்ய சர்க்கார் முற்பட்டது. அந்தச் சட்டத்திலே அப்படிப்பட்ட வேலைகளுக்கென்று ஜமீந்தார்களுக்குக் கொடுக்கும் பணத்தில் ஒரு அளவுக்கு பிடித்துக் கூட இருக்கிறார்கள் அதற்குக் கூறக்கூடிய காரணம், ஏற்கெனவே ஜமீந்தார்கள் வரி வசூலித்தார்கள், ஆனால் விவசாய மக்களுக்கு நீர்ப்பாசனத் திட்டங்களை விரிவாக்கி நல்ல முறையில் செய்ய முற்படவில்லை என்ற குற்றச் சாட்டை அரசாங்கம் பல முறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் தான் ஜமீன் பிராந்தியங்களை எடுத்துக் கொண்டு நாங்கள் விவசாய மக்களுக்கு நன்மை செய்கிறோம் என்று அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் ஒரு காலத்தில் சொல்லப்பட்டது. ஆகையால் தான் அந்த அடிப்படையில் ஜமீன் பிராந்தியங்களுக்கு முழுவதற்கும் விலக்கு அளிக்க அவர்களுக்கு எண்ணம் ஏற்படாவிட்டாலும், 1947-ம் ஆண்டுக்குப் பின்னால் ஏற்படுத்தப்பட்ட நோட்டிஃபைட் வொர்க்ஸ் என்று கொடுத்திருக்கிறது, அதற்கு பதில் அந்தத் திட்டங்கள் 1948-க்குப் பின்னால் தான் ஜமீன்கள் எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், 10—15 ஆண்டு காலம் கொடுத்து, அதற்குப் பின்னால், 1963-ம் ஆண்டு என்று நாங்கள் கொடுத்திருக்கிறோம், எங்கள் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை, இருந்த போதிலும் ஜமீன் பிராந்தியங்களுக்கு 10—15 ஆண்டு இடைவெளி கொடுக்கக் கூடாதா, அப்படிக் கொடுத்தால் என்ன தீங்கு ஏற்பட்டு விடும் என்று அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் விளைவு என்ன ஆகும் என்றால், இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற சட்டம் "ரட்ராஸ்ப்பெக்டிவ் எஃபெக்ட்" கொடுக்கக் கூடிய முறையில், இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் திட்டங்கள் உருவாகியிருந்தாலும் அந்தத் திட்டங்களுக்கும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கும் நிலைமை ஏற்படுகிறது. ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? அந்த விவசாயிகள்,

1947-ம் ஆண்டில் திட்டங்கள் வந்திருக்கிறது, அதற்கு இப்போது வரி போடுவார்கள் என்று எண்ணியிருக்க முடியுமா? இந்த மாதிரி முன்னாலே திட்டம் ஏற்பட்டிருந்தபோதிலும் அவர்களுக்கு வரி விதிக்கும் சூழ்நிலையை ஏன் ஏற்படுத்தவேண்டுமென்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரி போடும்போது எப்படி போடவேண்டுமென்று கூறினார்கள். எப்படி கால்குலேட் செய்வது என்று கூறினார்கள். அதற்கென்று ஒரு பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவுகூட மக்களுக்கு நியாயம் செய்யும் அளவில் இல்லை என்று கூற விரும்புகிறேன். காரணம் என்ன என்றால் குறிப்பிட்ட திட்டத்தில் 1 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்ட திட்டத்தை எடுத்துக்கொண்டால் திட்டத்தினால் பயன் அடையும் பகுதிகளை எடுத்துக்கொள்கிறார்கள். ஆயக்கட்டில் இருக்கும் அதிக பட்ச வருமானத்தை, திட்டத்திற்குப் பின்னால் எவ்வளவு அதிகமாக சர்க்காருக்குக் கிடைக்கிறதோ அந்த வருமானத்தை 20 மடங்காக ஆக்கி கழித்து அதை வரியாகப் போடுகிறோம் என்று கூறினார்கள். இந்தத் தத்துவத்தை கொஞ்சம் சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒரு பகுதியிலே ஆற்றுப் பாசனம் இருக்கலாம். குறிப்பாக, காவிரி, வைகை, பெரியாறு பகுதியிலே அங்குள்ள வரி விகிதம் அதிகம். அதாவது வரி விதம் அதிகமாக இருந்தால் அந்தப் பகுதியில் வரக் கூடிய வருமானம் அதிகமாக இருக்கும். முன்னாலே கூறியது போல ஆற்றுப் பாசனம் இல்லாத பகுதிகளுக்கு 20 மடங்கு கணக்கிடும்போது மற்ற பகுதிகளை விட குறைந்து இருக்கும். அதனால் பாதிக்கப்படுவார்கள், அதனால் வரி அதிகம் ஆகும் என்று எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். ஆகையால்தான் அந்தப் பகுதிகளுக்கு, ஆற்றுப் பாசனம் இல்லாத பகுதிகளுக்காவது ரெவின்யூ நிர்ணயிக்கும்போது அந்தப் பகுதி முழு ரெவின்யூவை, மொத்த ரெவின்யூவை எடுத்துக்கொண்டு 20 மடங்கைக் கழித்து செய்தால் நிச்சயம் மக்கள் சுபிட்சம் அடைவார்கள் என்று கூறி, இப்படிப்பட்ட சட்டம் நாட்டு மக்களுக்குத் தேவையில்லை, விவசாய மக்களுக்குத் தீமை செய்யும் முறையில் கொண்டுவரப்பட்டது என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப் பிரேரேபித்து, விளக்கி கனம் அமைச்சர் அவர்கள் கூறிய போதிலும் மசோதா பற்றிய அடிப்படைக் கருத்துக்களை இப்போது பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆகவே தான் நான் நிலைமையை விளக்கி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் பொறுக்குக் கமிட்டியிலும் அங்கத்தினராக இருந்து அந்த விவாதத்திலெல்லாம் கலந்து கொண்டார். விவாதத்தில் கலந்துகொண்டார் என்றால் பொறுக்குக் கமிட்டி முடிவை அப்படியே ஏற்றுக்கொண்டார் என்று கூறவில்லை. பொறுக்குக் கமிட்டியிலிருந்தபோது இந்த மசோதா பற்றிய நிலைமையை நன்றாக உணர்ந்திருப்பார்கள். அதோடு கூட அவர் ஒரு

வழக்கறிஞர் என்பதை மறக்க முடியாது. அதனால்தான் மீண்டும் அடிப்படை கருத்துக்களைப் பற்றி தனது கருத்துக்களைத் திரும்பத் திரும்ப பேச முற்பட்டிருக்கிறார். கனம் அமைச்சர் விளக்கியது போல இது முன்பே இருக்கின்ற ஒரு சட்டம். இன்றைக்கு புதிதாகக் கொண்டுவரவில்லை. அபிவிருத்தி வரி என்று புதிதாக விதிப்பது என்று இப்போது முடிவு செய்து இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. நீண்ட காலத்திற்கு முன்பே சட்டம் ஏற்பட்டது. அதை நிறைவேற்றுவதில் திருத்தம் வேண்டுமென்று அரசாங்கம் உணர்ந்து பரிசீலனை செய்து, திருத்தங்கள் செய்யக் கூடிய மசோதாவைத்தான் இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது. இந்தத் திருத்த மசோதாவை பொறுக்குக் கமிட்டி பரிசீலனை செய்து, திருத்தங்களைச் செய்து, இப்போது விவாதத்திலே இருக்கிறது. 15 ஆண்டுகள் அல்லது 16 ஆண்டுகளுக்கு முன்பே நாம் புதிதாக நீர்ப்பாசனத் திட்டம் அல்லது நீர்ப்பாசனத் திட்டத்தை அபிவிருத்தி செய்வது என்று சொன்னால் அபிவிருத்தி வரி போடுவது என்பது நியாயமானது என்று விளக்கப்பட்டு அந்தந்த நீர்ப்பாசன வசதிகளில் அக்கறையுள்ள விவசாயிகள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் எனக்குத் தெரிந்ததைக் கொண்டு இந்த மன்றத்திலே கூற விரும்புகிறேன். அப்போது இருந்த நிலை என்ன என்றால் நல்ல திட்டங்கள், அதிகமாகப் பலன் அளிக்கும் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டன, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில். ஆனால் விவசாயிகள் நலத்தையொட்டி, தேவையையொட்டி வேறு பல திட்டங்கள் வேண்டியிருந்தன. இதற்கு முன் பிரிட்டிஷ் ஆட்சியின் போக்கைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சில நீர்ப்பாசனத் திட்டங்கள்தான் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அப்போது அவர்கள் கையாண்டு வந்த கொள்கை ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்றினால் அதிலே ஒரு தொழில் வகையிலே லாப நஷ்டக் கணக்குப் பார்த்து எவ்வளவு தூரம் லாபம் கிட்டும், எவ்வளவு தூரம் வட்டிக்கு கட்டும், வட்டி கட்டுவதோடு எவ்வளவு லாபம் கிட்டும் என்று பார்த்து எடுத்துக்கொள்வது என்ற கொள்கை அப்போது அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. பிரிட்டிஷ் காலத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறவர்கள் கனம் அங்கத்தினர் அவர்கள். பிரிட்டிஷ் ஆட்சியைப் பற்றி கூட சொல்ல முடியாது. அவர்கள் வரியைப் போட்டு ஆட்சியை நடத்துவதற்குச் செலவழித்ததை விட்டு மிச்சத்தை அவர்கள் விட்டுக்குக் கொண்டு போய் விட்டார்கள், அவர்கள் நாட்டுக்குக் கொண்டு போய் விட்டார்கள் என்று கூற முடியாது. ஆனால் இப்போது நடைபெறும் ஆட்சியில், ஜனநாயக ஆட்சியில் வரி விதிக்கப்படுகிறது, வருவாய் சேகரிக்கப்படுகிறது என்றால் வருவாய் மக்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்ய செலவு செய்யப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் வெட்கப்படுகிறேன் என்று சொன்னார். அவர் வெட்கப்படுவதற்கு எவ்வளவோ உண்டு. நான் அதற்குக் குறுக்கே வரவில்லை. வெட்கப்படலாம்—ஆனால் இந்த மசோதாவைப் பற்றியோ, திருத்தத்தைப் பற்றியோ, அல்லது

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd November 1963

அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற போக்கைப் பற்றியோ என்ன இருக்கிறது வெட்கப்பட? 15—16 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கொள்கை தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட திட்டங்களில் அக்கறை கொண்ட விவசாயிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் கண்டதை விளக்கிக் கூறி விவசாயிகள் அதை ஏற்றுக்கொண்டதைக் குறிப்பிட்டேன். அதனுடைய அடிப்படைக் கொள்கை என்னவென்றால், புதிதாக ஒரு நீர்ப்பாசன வசதி அளிக்கிறோம் அல்லது வசதியை அதிகப்படுத்துகிறோம். நம்முடைய நாட்டிலே நிலம் வைத்துக்கொண்டு இருக்கிறவர்கள், நிலச் சொந்தக்காரர்கள் ஒரு சிலர்தான். நிலம் இல்லாதவர்கள் தான் பல பேர். நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களுக்கு நாம் நீர்ப் பாசன வசதி அளித்தால், அவர்கள் பலன் அடைகிறார்கள். அவர்கள் பலன் அடைவதுமட்டுமல்ல, நல்ல முறையில் விவசாய உற்பத்தியை பெருக்குவதுமட்டுமல்ல, அவர்களுடைய சொத்து இருக்கிறதே அந்த சொத்தின் மதிப்பு உயருகிறது, ஏராளமாக உயருகிறது. அப்படி நாம் செலவு செய்கிறோமென்றால், நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்கு செலவு செய்கிறோம் என்றால், பொது மக்களுடைய வரிப்பணத்திலிருந்து செலவு செய்கிறோம். அவர்களிடமிருந்து வாங்கி, அவர்களுக்கே செலவு செய்கிறோம் என்பதில்லை. நிலம் உள்ளவர்கள், நிலம் இல்லாதவர்கள் எல்லோரும் தான் வரி கொடுக்கிறார்கள். எல்லோரும் கொடுக்கிற வரிப்பணத்தைக் கொண்டுதான், எல்லோரிடமிருந்து கிடைக்கின்ற வருவாயைக்கொண்டு தான், அதை வைத்துக் கொண்டுதான், குறிப்பிட்ட சில நிலங்களுக்காக நாம் செலவு செய்கிறோம் என்றால் நீர்ப்பாசன திட்டத்திற்கு மட்டும் செலவு செய்கிறோம், அல்லது குறிப்பிட்ட திட்டத்திற்கு மட்டும் செலவு செய்கிறோம் என்பது மட்டுமல்ல, நாட்டின் செல்வ நிலையும் இன்றியமையாதது என்பதை அரசாங்கம் உணராமல் இல்லை. முன்பெல்லாம் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வட்டி கட்டுமா, 100-க்கு 4 விதம் வட்டி கட்டுமா, 5 விதம் கட்டுமா, 6 - விதம் கட்டுமா என்று கணக்குப் பார்த்தார்கள். ஆனால், இன்றைக்கு நாம் ஒரு டன் அரிசி அதிகமாக உற்பத்தியானாலும், அதற்கு ரூபாய் 2,000 வரையிலே செலவு செய்து நீர்ப்பாசன திட்டத்தை நிறைவேற்றலாம் என்ற ஒரு கணக்கு வைத்திருக்கிறோம். ஆனால், செலவு அதோடு நிற்கவில்லை. ரூபாய் 3,000 செலவாகிறது; ரூபாய் 4,000 செலவாகிறது. அதற்கு மேலே கூட போகிறது. நீர்ப்பாசன வசதி இல்லாமல் மக்கள் அவதிப்படுகிற ஒரு ஸ்தலத்திலே நாம் எவ்வளவு செலவழிக்கிறோமோ, அதற்கு நேராக முழுவதும் பலன் கிடைக்காவிட்டாலும் அந்த விவசாயிகளுக்கு பலன் கிடைக்கிறதா, அந்த விவசாயிகளின் செழிப்பு அதிகப்படுகிறதா, அதுவே நமக்கு கிடைக்கிற லாபம் என்ற அந்த கொள்கையைத்தான் ஜனநாயக சர்க்கார் அனுஷ்டித்துக்கொண்டு வருகிறது. செலவை எப்படிக் கணக்குப் பார்க்கிறோம் என்றால், உண்மையில் விவசாயிகள் கோரிய பலன் கிடைக்கிறதா, விவசாயிகளுக்கு உருப்படியான பலன் கிடைக்கிறதா, அந்த நிலங்களுக்கு அந்தத் திட்டம் பலன் அளிக்குமா என்றுமட்டும்

22nd November 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

பார்த்து, அதையே அளவுகோலாக வைத்துக்கொண்டு, தாராளமாக அதிகமாகவே செலவு செய்து பல நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். தங்கள் தங்கள் நிலத்தைப் பொறுத்தமட்டில், தங்களுக்கு நீர்ப்பாசன வசதி இல்லை என்றால் அவதிப்படுகிறார்கள். 'எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யுங்கள், எங்களுக்கு பலன் வேண்டும், நாங்கள் எங்கள் நிலத்தில் விவசாயம் செய்யவேண்டும்' என்று நிலச் சொந்தக்காரர்கள் குறிப்பிடுகிறார்கள். அதுவும் தமிழ் நாட்டில் நிலம் குறைவாக இருக்கிறது. எப்படியாவது அதிகமாக செலவு செய்து சாகுபடியைப் பெருக்கவேண்டும் என்பது நான் பொதுவான கருத்து. அந்தத் தொகையை நாம் செலவு செய்கிறோமென்றால், பொது மக்களுடைய பணத்திலிருந்து நாம் செலவு செய்து, குறிப்பிட்ட ஒரு சிலர் அதன் மூலம் விசேஷ பலன் அடைகிறார்கள், அது ஜமீனாக இருந்தாலும் சரி. ஜமீன் ஒழிப்பின் போது நஷ்ட ஈடு கொடுத்தோம், வரியைக் குறைத்தோம், ஜமீன் கிராமங்களுக்கு அதிக வரி இருந்ததைக் குறைத்தோம். அது வேறு விஷயம். இன்றைக்கு நிலைமை என்னவென்றால், ஜமீன் பிராந்திய நிலத்திற்கு என்ன மதிப்பு, என்ன வருமானம் வருகிறது என்று பார்த்து திட்டத்தை நிறைவேற்றுகிறோம். அந்தத் திட்டம் நிறைவேறுவதில் எவ்வளவு தூரம் மதிப்பு உயருகிறது. எவ்வளவு பலன் அதிகப்படுகிறது, 'அப்படி அதிகரிப்பதில் ஒரு பகுதி நீங்கள் கொடுங்கள்' என்று நாங்கள் கேட்கிறோம், ஜமீன் அல்லாத பிராந்தியமாக இருந்தாலும் சரி, ஜமீன் பிராந்தியமாக இருந்தாலும் சரி, பெரிய திட்டமாக இருந்தாலும் சரி, சிறிய திட்டமாக இருந்தாலும் சரி. கீழ் பவானித் திட்டம் முன்பு நிறைவேற்றப்பட்டது, 15 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுதே அங்கிருக்கிற விவசாய மக்கள் ஒப்புக்கொண்டார்கள். மற்ற ஸ்தலங்களிலும் குறிப்பிட்ட ஒரு திட்டம் வேண்டுமென்று கணக்குப் போடுகிறோம். ஏகர் ஒன்றுக்கு ரூபாய் 5,000 கூட ஆகிறது, ஒரு ஏகருக்கு சராசரி கணக்கு. எவ்வளவு ஏகர் சாகுபடிக்குக் கொண்டுவர முடியும், எவ்வளவு ஏகருக்கு தண்ணீர் கிடைக்கும் என்று பார்க்கிறோம், அதற்கு செலவாகிறது எத்தனையோ கோடி ரூபாய், எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய். அரசாங்கத்தின் கணக்கு ஒரு ஏகருக்கு ரூபாய் 1,000 என்று போட்டபிறகு, ஒரு ஏகருக்கு ரூபாய் 2,000 ஆகிறது, ரூபாய் 5,000 ஆகிறது, அந்தத் திட்டங்களைக் கூட நிறைவேற்றவேண்டியிருக்கிறது. அதற்கு அதிகமாக செலவு ஆகிறது. பதினைந்து ஆண்டுகளாகவே நடைபெறுகிறது. ஒரு திட்டம் வகுக்கும்பொழுது, 'அதனால் எவ்வளவு பலன் ஏற்படும், அபிவிருத்தி வரி நாங்கள் தாராளமாகக் கொடுக்கிறோம்', என்று இதுவரைக்கும் எத்தனையோ ஜில்லாக்களிலுள்ள மக்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆந்திரா பகுதி நமது ராஜ்யத்தோடு சேர்ந்திருந்தபொழுது, கேரளா பகுதி நம்மோடு சேர்ந்திருந்தபொழுது, மக்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். தமிழ்நாடு பூராவும் கேட்டிருக்கிறோம். எத்தனையோ மக்கள் சொல்லியிருக்கிறார்கள்

படுகிறது. அதே சமயத்தில் கிளாஸ் 4-பி-யைப் பார்க்கும்பொழுது, 'இம்ப்ரூவ்டு ஓல்டு அயக்கட்டாக' இருந்தாலும், 'ரிப்பாஸ், ரெஸ்டோரேஷன் டு ஒரிஜனல் ஸ்டேட்' என்ற முறையில் மற்றபடி பழுது பார்க்கப்பட்டிருந்தாலும், ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டிருந்தால், அதற்கு வரி விதிப்போம் என்று கூறியிருக்கிறார்கள். இதை அரசாங்கம் சற்று சிந்தித்துப் பார்ப்பது அவசியம். புதியதாக நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு வேண்டுமானால் வரி போடுவதில் பொருள் உண்டு. ஆனால், பழைய திட்டங்களை பழுதுபார்த்தால், அதிலே ஏதாவது முன்னேற்றம் செய்தால், உதாரணமாக 'எர்த்தன் டாம்' கட்டினால், அல்லது ஒரு காலத்தில் அணை கட்டுகிறோம், அதை இப்பொழுது 'மேஸனாடாக' மாற்றுகிறோம், கல், சுண்ணாம்பு வைத்து கட்டுகிறோம் என்றால்; அதற்காக வரி போடுவது நியாயமாக இருக்குமா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பழைய திட்டங்களுக்கு பழுது பார்த்தோமானால், அல்லது அதை அபிவிருத்தி செய்தாலும், அதன்மூலம் கொஞ்சம் அதிகப்படியான புலன் கிட்டினாலும் அதற்கு வரி போடாமல், புதிய திட்டங்களுக்கு மட்டும் அபிவிருத்தி வரி போடுவதென்றால், அது பற்றி யாரும் குறை கூறுவதற்கு வாய்ப்பு இருக்காது. அரசாங்கம் சற்று இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பழைய திட்டங்களை பழுது பார்ப்பதன் மூலம், உண்மையில் விவசாயிகள் ஓரளவுக்கு அபிவிருத்தி கண்டாலும் கூட, அவர்களுக்கு வரி போடாமல் இருந்தால், அது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். விவசாய

1.00 p.m. முன்னேற்றத்திற்காக நாம் பல கோடி ரூபாய் செலவழித்து வருகிறோம். விவசாயிகளுக்கு எல்லாவித சலுகைகளையும் கொடுக்க வேண்டும் என்ற ஆக்கத்தோடும், ஊக்கத்தோடும் உழைக்கின்ற நாம், பழைய ஆயக்கட்டுகளை ரிப்பேர் செய்தால், அதற்கு வரி வாங்கவேண்டும் என்று நினைப்பது சரியாக இருக்காது. அதிலிருந்து வருமானம் பெறவேண்டும் என்று நினைக்கக்கூடாது. ஆகவே, அதை விட்டுவிடுவதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான்காவது பிரிவிலே, புதிய ஆயக்கட்டுகளைப் பொறுத்த வரையில் ஒரு லட்சம் ரூபாய் என்று வரம்பு கட்டியிருக்கிறார்கள். இப்பொழுது பணத்திற்கு மதிப்புக் குறைவாக இருக்கிறது. கெட்டிக்கார அதிகாரிகளாய் இருந்தால், ரூ. 70,000 அல்லது ரூ. 80,000 ஆகக்கூடிய எஸ்டிமேட்டுகளை எல்லாம், இன்னும் 20,000 சேர்த்தால் சர்க்காருக்கு வரி கிடைக்குமே என்று நினைத்து, ஒரு லட்சத்திற்குக் கொண்டுவந்து விட்டுவிடுவார்கள். ஆகவே, ஒரு லட்சம் என்று நிர்ணயித்திருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. சென்னை நகரில் ஒரு பெரிய பங்களாக் கட்ட வேண்டுமென்றாலே, ரூபாய் இரண்டு அல்லது மூன்று லட்சம் ஆகிவிடுகிறது. எனவே இரண்டு லட்சத்திற்கு மேலே செலவழித்தால், அதற்கு வரி விதிக்கலாமென்று நினைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். இன்னும், "Improved old ayacut", "repaired ayacut" இவைகளுக்கு சரியான விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை.

அவற்றிற்கான விளக்கங்களை விரிவு படுத்தி, தெளிவு படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். அவற்றின்மீது வரி போடாவிட்டால் விளக்கம் தேவையில்லை. ஆனால் வரி போடவேண்டும் என்ற முடிவுக்கு சர்க்கார் வந்தால், எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கங்கள் இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, 5-வது பிரிவிலே, ஒரு ஏக்கருக்கு ரூ. 5 அல்லது செலுத்தவேண்டிய காண்டிரிப்யூஷனில் 20-ல் ஒரு பங்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது, "Whichever is higher" என்று போட்டிருக்கிறார்கள். ஷெட்யூலில் கொடுக்கப்பட்டுள்ள கடைசிக் கட்டத்திலுள்ளவர்களுக்கு வேண்டுமானால், அதாவது ரூ. 80 கட்டுகிறார்களே, அவர்களுக்கு வேண்டுமானால் சாதகமாக இருக்கும். ஆனால் அதற்கு மேலே உள்ள கட்டத்தில் இருப்பவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 5 என்று விதித்தால்தான் சாலச் சிறந்ததாக இருக்கும், "Whichever is higher" என்று போடாமல், "Whichever is lower" என்று போட்டால் இதை விவசாயிகள் வரவேற்பார்கள். கஷ்டப்படாமல் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அதே பிரிவில் ப்ரொவிசோவில் "இரண்டு வருடங்கள்" என்றிருப்பதை, ஐந்து வருஷங்களாக உயர்த்தினால்கூட நன்றாக இருக்கும். விவசாயிகளுக்கு சிறு சிறு சலுகைகளைச் செய்து கொடுத்து, அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று நாம் நினைக்கிறபடியால் இம்மாதிரி சிறு சிறு சலுகைகள் செய்து கொடுப்பதில் அரசாங்கம் தயக்கம் காட்டக் கூடாது.

பழைய சட்டத்தில் 20 சதவிகிதம் ரிபேட் கொடுத்திருந்தார்கள். இப்பொழுது 7-வது பிரிவிலே, "Rebate at such rate as may be prescribed" என்று போட்டிருக்கிறார்கள். "நாங்கள் இனிமேல் கடன் வாங்கும்பொழுது அதை சிந்தித்துப் பார்த்து ரிபேட்டை நிர்ணயிப்போம்" என்று சர்க்கார் சொல்லுகிறார்கள். பழைய சட்டத்தில் உள்ள ரிபேட்டை நிர்ணயம் செய்வதே பொருத்தமாக இருக்கும்.

இன்னும் சில குறைபாடுகள் இருக்கின்றன. சில இடங்களிலே சில வார்த்தைகள்கூட கடினமாக இருக்கின்றன. "More adequa'e supply" என்று போட்டிருக்கிறார்கள். Adequate என்றாலும், அதே பொருள் வந்துவிடும். இப்படி வார்த்தைக் கோளாறுகளை எல்லாம் பார்த்து, விவசாயிகளுக்கு சங்கடம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜமீன் ஏரியாக்களில் உள்ள விவசாயிகளைப் பற்றி நாம் சிந்திக்கவில்லை. நாம் இப்பொழுது ஜமீன் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளோம். 1948-க்குப் பிறகு அந்த ஏரியாக்கள் நமக்கு வந்திருக்கின்றன என்ற காரணத்தினாலே, அங்கே செய்யப்படுகிற வேலைகளுக்கு தனிச் சலுகை காட்டவேண்டியது விரும்பத்தக்கது. அதைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். ஜமீன் பகுதிகளிலே "நெக்லக்டட்" ஏரியாக்களில் நாம் ஏதாவது புதிய வேலைகளைச் செய்திருந்தால், அந்த வேலைகளுக்கு வரி வாங்காமல்

ஓரளவுக்கு விதி விலக்கு அளிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். அதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

“பணம் இல்லை, பணம் இல்லை” என்று வேலைகளை ஒத்திப் போடாமல், நாமும் ஓரளவு பணம் போட்டு, விவசாயிகளிடமிருந்தும் ஓரளவு பணம் வாங்கி, இந்த வேலைகளைச் செய்து கொடுக்கும்பொழுது, விவசாயிகளும் அதைக் கொடுப்பதற்குத் தயாராய் இருப்பார்கள். ஆனால் அப்படித் திரும்ப வாங்கும் பொழுது சரியாகக் கணக்கிட்டு வாங்க வேண்டும். இப்பொழுது கட்டப்பட்டிருக்கும் புதிய பாலங்களுக்கு கட்டணம் வாங்குகிறோம். செலவழித்ததை விட மூன்று மடங்கு அதிகமாக வாங்கி விட்டார்கள் என்று பொது மக்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அதிகமாக வாங்கிவிடக் கூடாது. கனம் அமைச்சர் அவர்களும், ‘One-third of the expenditure would be recovered’ என்று சொன்னார்கள். ஆகவே அந்த அளவுக்குத்தான் அபிவிருத்தி வரி வாங்குகிறோம், அதற்கு அதிகமாக வாங்கவில்லை என்று விளம்பரம் செய்யவேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். நான் இந்த மசோதாவை புரிந்துகொண்ட வரையில், எற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்ட நிலங்களுக்கு அபிவிருத்தி வரி விதித்து வாங்குவதிலே ஏற்பட்டிருந்த சிக்கல்களை நீக்கி முறையாகவும் எவ்வளவு சுலபமாகவும் விவசாயிகள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், அதிகாரிகளும் புரிந்து கொண்டு சுலபமாக வசூலிக்கக்கூடிய வகையில் “Just to facilitate collection” என்ற முறையில் இந்த மசோதா வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். விவசாயிகள் அபிவிருத்தி வேலைகள் செய்து கொடுத்தால் அதற்கான உதவித் தொகையை கொடுப்பதற்கு தயாராய் இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். மொத்தமாக உதவித் தொகை கொடுப்பதற்கு பதிலாக வருடா வருடம் வரியோடு இதற்காக ஒரு தொகையைச் சேர்த்து வசூல் செய்து கொண்டால் விவசாயிகளுக்கு சௌகரியமாக இருக்கும் என்ற அடிப்படையிலே, விவசாயிகள் ஒப்புக்கொண்ட கொள்கையை சுலபமாக அமல் செய்யும் வகையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன்.

இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு விடப்பட்டு அந்தக் கமிட்டியினர் சில மாறுதல்களை செய்துள்ளார்கள். குறிப்பாக அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய ஆயக்கட்டுகளை சில ஸோன்களாக பிரித்திருக்கிறார்கள். பழைய ஆயக்கட்டில் உள்ள நிலங்களில் இருந்தும், புதிதாக பாசனம் பெற்றுள்ள நிலத்திலிருந்தும் வரக்கூடிய வருவாயைச் சேர்த்து, மொத்தச் செலவிலிருந்து அப்படி வரக்கூடிய வருவாயைக் கழித்து, மீதி இருப்பதிலே மூன்றில் ஒரு பங்கை அபிவிருத்தி வரியாகப் பெறுவது என்பது தான் இந்த மசோதாவின் நோக்கம். அப்படி வரி வாங்கும் பொழுதுகூட ஒரு ஏக்கருக்கு அதிக பட்சமாக 50 ரூபாய்க்கு

மேல் போகக்கூடாது என்றும், குறைந்தபட்சம் ரூ. 5 என்றும் நிர்ணயித்திருக்கிறார்கள். மேலும் 20 தவணைகளில் இதை வசூல் செய்யலாம் என்றும் வழிவகை செய்திருக்கிறார்கள். ஆகவே இந்த மசோதாவிலே ஆட்சேபணை செய்வதற்கு அதிகமாக இடம் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

ஆனால் நான் பெற வேண்டிய சில விளக்கங்கள் இருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபரணி திரத்தை எடுத்துக் கொண்டால், அதிலே இரண்டு விதமாக இருக்கிறது. புதிதாக ஒரு குளத்தையோ அல்லது ஒரு வாய்க்காலையோ வெட்டி புஞ்சை நிலத்தை நஞ்சையாக மாற்றுவதற்கு திட்டம் போட்டால், அந்தத் திட்டத்திற்காக உள்ள அபிவிருத்தி வரியை, அப்படி அபிவிருத்தி அடைந்துள்ள நிலத்தைப் பெற்றவர்கள் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அது தவிர ஏற்கனவேயுள்ள நஞ்சையின்மீது புஞ்சை பயிர் செய்தோ அல்லது புஞ்சை மீது நஞ்சை பயிர் செய்தோ இருக்கக்கூடிய சில நிலங்களுக்கு தண்டத் தீர்வை வாங்கும் முறை இருக்கிறது. இன்றைய தினம் அரசாங்கம் மேற்கொண்டுள்ள திட்டத்தின் காரணமாக, சில இடங்களில் ஏற்கெனவே இருக்கக்கூடிய தாய்க்குளம்—அதாவது கீழே உள்ள பத்து அல்லது பன்னிரண்டு குளங்களுக்கு பாசன வசதி செய்து கொடுப்பதற்கு உதவி செய்யக்கூடிய தாய்க்குளம்—இருக்கும்பொழுது, இப்பொழுது அதை மாற்றி நேராக கீழே இருக்கக்கூடிய குளங்களுக்கு போய்ச்சேரும் வகையில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். அது போன்ற நிலையிலே இந்த அபிவிருத்தி வரி எந்த அளவுக்கு கீழே இருப்பவர்களுக்கும் சுலபமான முறையில் அமையும் என்பதை பரிசீலிக்கவேண்டும். அணைக்கட்டுக்கள், பெரிய கால்வாய்கள் இருக்கின்றன. தாம்பரபரணி ஸிஸ்டத்தில் 9 பெரிய கால்வாய்கள் இருக்கின்றன என்பது என் நினைப்பு. அவைகளில் ரி-மாடல் செய்ய வேண்டும் என்று ஒரு திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். கீழே இருக்கக்கூடிய நிலங்களில் புஞ்சையில் நஞ்சையோ, ஒரு போகத்தில் இரண்டு போகமோ பயிர் செய்தால் அவர்களுக்கு இந்தச் சுமை எந்த அளவுக்கு பொருந்தும் என்று பார்க்க வேண்டும். [To stabilise the existing ayacut of Thambaraparni of 85.000 acres.] என்ற கொள்கையின் அடிப்படையில் அபிவிருத்தி வேலைகள் கணக்கிடப்படுமா என்று பரிசீலிக்க வேண்டும். ஏற்கனவே தண்டத் தீர்வை, அடிஷனல் சர்சார்ஜ் என்றெல்லாம் கொடுத்து வந்த விவசாயிகளின் மனதில் இது ஒரு சுமையாக அமையுமோ என்ற பயம் தவிர்க்கப்பட வேண்டும். ஆகவே எந்த அளவுக்கு ஜாக்கிரதையாக பரிசீலனை செய்ய முடியுமோ அந்த அளவுக்கு சுலபமான வழியில் கணக்குகளை செய்ய வேண்டும். ஒரு விஷயத்தை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். நான் நினைக்கிறேன், ஏற்கனவே வாட்டர் ரேட்டுகள் செலுத்திக் கொண்டேயிருப்பவர்கள், அபிவிருத்தித் தீர்வை செலுத்த ஆரம்பித்ததிலிருந்து நிச்சயமாக அவர்கள் செலுத்திக்கொண்டு வந்த தண்டத் தீர்வைகள் நீங்கி விடும் என்று கருதுகிறேன். நான்

யாரும் தடங்கல் சொல்லவில்லை. நாம் விளக்கிக்கூறும்பொழுது விவசாயிகள் ஒப்புக்கொள்கிறார்கள். 'நாங்கள் கொடுக்கிறோம், சீக்கிரம் திட்டத்தை நிறைவேற்றிக்கொடுங்கள்' என்று கூறுவார்கள். சோஷலிஸம் பற்றி எல்லோரும் பேசுகிறோம். சோஷலிஸம் வேண்டாம் என்று சொல்லக்கூடிய துணிவு யாருக்கும் இல்லை. சோஷலிஸம் பற்றி பேசுகிறோம். ஆனால், இன்றைக்கு பொது மக்களுடைய வரிப்பணத்தைக் கொண்டு நாம் அதிகமாக செலவு செய்து, அதனால் பொதுவாக நாட்டிற்கு பலன் என்பது ஒரு புறம் இருக்க, குறிப்பாக நிலச்சொந்தக்காரர்கள் விசேஷ பலன் அடைகிறார்கள், அவர்களிடம் ஒரு பகுதி கேட்கிறோம், ஒரு சிறு பகுதி கேட்கிறோம், 'அதை நீங்கள் கொடுங்கள்' என்று சொன்னால் கொடுக்கிறார்கள். அதன் மூலம் மேலும் அதிகச் செலவு செய்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றக்கூடும். அதனால்தான் நாம் கேட்கிறோம். அதுதான் இந்த மசோதாவின் அடிப்படை, பொதுவாக அபிவிருத்தி வரி விதிப்பதின் அடிப்படை. இதற்கு முன்பு ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை திருத்த வேண்டுமென்ற காரணத்திற்காக, இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட வகையில் இந்தத் திருத்தம் வேண்டும், அந்தத் திருத்தம் வேண்டுமென்றால், அதைக் கொண்டுவரலாம். அதைவிட்டுவிட்டு, இந்த வரிவிதிப்புக்கே அடிப்படை ஆட்சேபணைக் கிளப்பி, இந்த அபிவிருத்தி வரி போடுவதே தவறு என்று சொல்லுவதை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளாது, நிலைமை நன்றாக உணரப்பட்டிருக்கும் என்று நான் நினைக்கிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் நிலைமையை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். 'எப்படியாவது திட்டத்தைக் கொண்டு வாருங்கள், அபிவிருத்தி வரி நியாயமாகப் போடுங்கள், நாங்கள் கொடுக்கிறோம்' என்று எல்லோரும் சொல்லுகிறார்கள் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன அபிவிருத்தி வரி மசோதா பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு விவசாயம் பற்றி அதிகம் தெரியாவிட்டாலும், ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக இந்த மசோதாவை எதிர்த்துப்பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர் இது வெட்கப்பட வேண்டிய ஒரு மசோதா, மக்கள் ஆட்சியிலே இப்படி வரி விதிக்கும் ஒரு மசோதாவைக் கொண்டுவரலாமா என்றெல்லாம் மிக உருக்கமாகப் பேசினார்கள். அன்றைக்கு இருந்த நிலைமையையும், இன்றைக்கு இருக்கிற நிலைமையையும் மிகத் தெளிவாக, விரிவாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆங்கில ஆட்சியிலே 'ரெம்யூனரேடிவ் ப்ராஜக்ட்ஸ்', அதாவது எந்தத் திட்டத்தின் மூலம் 4% வட்டி கட்டுமோ அந்தத் திட்டத்தை மட்டும் எடுத்து நடத்துவோம் என்று அவர்கள் அந்தத் திட்டங்

களிலே மட்டும் அக்கரை காட்டினார்கள். ஆனால், சுதந்திரம் கிடைத்த பின்னர், இந்த நாடு செழிக்க வேண்டும, விவசாயம் வளர வேண்டும், வறுமையைப் போக்கவேண்டும், வேளாண்மை பெருக வேண்டும் என்ற குறிக்கோளோடு, பல ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி சிறந்த முறையில் வேலை செய்துவருகிறோம். நம்முடைய ஆட்சியில் அப்படி நடக்கிறது. ஆங்கில ஆட்சியில் வட்டிக்கு கட்டினால்தான் திட்டங்களை எடுப்போம், வட்டிக்கு கட்டாவிட்டால் அந்தத் திட்டங்களை எடுக்கமாட்டோம் என்ற நிலை இருந்தது. இப்பொழுது நம்முடைய நாட்டில் அந்த நிலை இல்லை. அப்படியிருந்தால் அரசாங்கத்தைக் குறை கூறுவதில் பொருள் உண்டு, அர்த்தம் உண்டு. ஆங்கில ஆட்சியில் நடந்த மாதிரி இப்பொழுது செய்யப்படவில்லை. கட்டுபடியாகக்கூடிய திட்டமாக இருந்தால்தான் நாங்கள் தொடுவோம், இல்லாவிட்டால் தொட மாட்டோம் என்று ஆங்லேய ஆட்சி நடந்தபொழுது சொல்லப் பட்டது. இப்பொழுதும் அதே நிலைமை இருந்தால், அப்படி நடந்தால் அதைப்பற்றி குறை கூறுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. இப்பொழுது நாம் அந்த முறையில் செய்யவில்லை. நீர்ப் பாசன வசதி செய்துகொடுத்து, விவசாயிகளுக்கு அதன் மூலம் நீர்ப்பாசன வசதியை விஸ்தரித்துக்கொடுத்து, அவர்கள் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இப்பொழுது அரசாங்கம் வேலை செய்துகொண்டு வருகிறது. நீர்ப்பாசன வசதி அவர்களுக்கு கிட்டுவதினாலே அவர்கள் அதன் மூலம் பயன் அடைகிறார்கள், அப்படி பயன் அடைகிறவர்களுக்கு வரி போடுவதிலே தவறு ஒன்றுமில்லை என்பதைத்தான் யாரும் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். அந்த வகையிலே நீர்ப்பாசன அபிவிருத்தி வரி மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே இன்னும் சில திருத்தங்கள் வேண்டும், அப்படித் திருத்தங்கள் செய்து அதன் மூலம் மக்களுக்கு இதைக் காட்டிலும், அதிகமாக சலுகை கிடைக்கக்கூடிய அளவுக்கு, பலனைத் தரக்கூடிய அளவுக்கு முயற்சிப்போம் என்று சொன்னால், அது வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீர்ப்பாசன வரி மசோதாவிலே புதியதாக செய்யப்படுகிற வேலைகளுக்கு 'இம்ப்ரூவ்டு ஓல்ட் அயகட்ஸ்'—பழைய அயக்கட்டு களை நல்ல முறையிலே நாம் பழுதுபார்த்து முன்னேற்றம் அடையச் செய்வோமானால், அதற்கு நாம வரி போடலாம் என்ற அளவுக்கு கூறப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் 'இம்ப்ரூவ்டு ஓல்டு அயக் கட்ஸ்' என்பதற்கு விளக்கத்தைப் பார்க்கும்பொழுது, என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால்—

"..... but does not include the ayacut of any existing irrigation or drainage work which has been merely repaired or restored to its original state after decay or injury".

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏதாவது பழைய நீர்ப்பாசனத் திட்டம் பழுது பார்க்கப்பட்டிருந்தால், அல்லது திருத்தப்பட்டு ஒரிஜினல் நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தால், அதை 'இம்ப்ரூவ்டு அயக்கட்டு' என்று சொல்லமாட்டோம் என்று கூறப்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [22nd November 1963

நினைப்பது உண்மையானால் இது அந்த விவசாயிகளுக்கு ஒரு சந்தோஷ செய்தியாகக்கூட வரலாம். ஆகவே அதைப் பரிசீலித்து விளக்கம் கொடுப்பது நல்லது. இந்த மசோதா சம்பந்தமாக வந்த விளக்கங்கள் பத்திரிகைகளில்கூட போதுமான தெளிவோடு வரவில்லை. ஆகவே விவசாயிகள் மனதில் ஏற்பட்டிருக்கக்கூடிய பயத்தை நிச்சயமாக நீக்க வேண்டும். மணிமுத்தாறு திட்டம் ஒரு \ ஏழெட்டு ஆண்டுகளுக்கு இடையில் வந்தது. அந்த திட்டத்தின் கீழே போடப்பட்டிருக்கிற முறையையும் கவனிக்க வேண்டும். முன்னால் இருக்கிற ஒரு திட்டத்தின்கீழ் வசூலிக்கப் பட்ட தொகை அதிகமாக இருந்தால் அதை திரும்ப கணக்கில் எடுத்துக்கொள்வதை அனுஷ்டிக்க வேண்டும். ஏற்கனவே கொடுத்திருக்கக்கூடிய தீர்வையின் கீழ் அதிகமாக வசூல் செய்திருந்தால் அதை திரும்பக் கொடுக்கவும் அல்லது புதுத் தீர்வையில் வரவு வைக்கவோ வழி உண்டு என்பதை தெளிவு படுத்தி பத்திரிகைகளிலும், அரசாங்கமும் விவசாயிகளுக்கு தெரியப் படுத்தினால் மிக்க நலமாக இருக்கும். அப்பொழுது இந்த மசோதா ஒரு சிக்கல் தீர்க்கும் மசோதாவாக அமையும். அந்த நிலையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

***புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, இந்த அபிவிருத்தி வரியைப்பற்றி இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேரும் பேசிய பேச்சுக்களை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் எல்லோரும் ஒருமித்த கருத்தையே கூறியிருக்கிறார்கள் என்பதை அறிய முடியும். ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் இந்த வரியை வரவேற்கிறேன், வரவேற்கிறேன் என்று கூறிவிட்டு, இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டு இதை எதிர்க்கும் தொனியை அவர்கள் பேச்சில்கூட கேட்கிறோம். இந்த வரி நிலத் தீர்வை உயர்ந்து, தண்ணீர் தீர்வை உயர்ந்த அளவில் வாங்கும் நேரத்தில் வந்திருக்கிறது. என்னுடைய தரப்பில் இருந்து திரு. மாதவன் அவர்கள் கூறியது போல விவசாயிகளுக்கு மேலும் மேலும் வரியை உயர்த்துவது நியாயமா என்று பார்க்க வேண்டும். ஒரு பக்கம் சர்க்கார் வரி போடுகிறது. அங்கே பஞ்சாயத்திலே வரி போடுகிறார்கள். இங்கிருந்து சென்னை சட்ட சபை வரி போடுகிறது. மேலும் மத்திய சர்க்கார் வரி போடுகிறது. ஆனால் இந்த வரிகளையெல்லாம் செலுத்துகிறவன் விவசாயி ஒருவன்தான் என்பதை உணர வேண்டும். அந்த ஒருவனிடமிருந்தே பல துறைகளிலும் வரி வரி என்று வாங்குவது முறையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சர்க்காரின் கடமை விவசாயிக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பது. அப்படி செய்து கொடுத்து விட்டு, வசதி கொடுத்திருக்கிறேன் எனக்கு வரி கொடுங்கள் என்பது சரியா? ஈரோட்டுப் பெரியார் இங்கே சொன்ன அத்தனை பாட்டுக்களும் வரி கூடாது என்பதற்குப் பொருந்தக்கூடிய பாட்டுக்களே ஆகும். "குளம் தொட்டு வளம் பெருக்கி" என்பது போல் நீர்வளம்

22nd November 1963] [புலவர் கா. கோவிந்தன்]

கடமையை செய்து விட்டு, செய்து விட்டேன், காசு கொடுங்கள் என்று கேட்பது முறை அல்ல. இதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். வரி என்று சொல்லும்போது, முன்னேகூட சொல்லியிருக்கிறேன், ஒரு நிலத்திலே பயிரை வளர்த்து முறையாக அறுவடை செய்தால ஒரு யானைக்கு ஒரு வருஷத்திற்கு வேண்டிய உணவைக் காண முடியும. அவ்வாறு இல்லாமல் வேலி வேலியாகப் பயிர் செய்து விட்டு பயிரின் நடுவே யானையை இஷ்டம்போல் விட்டுவிட்டால் அதன் வாய் புகும் பயிரைக் காட்டிலும் அதன் காலிலபட்டு அழியும் பயிரே அதிகமாம். அதேபோல சர்க்கார் முறையாக எவ்வளவு வரி வேண்டுமானாலும் வாங்கலாம், வாங்கும் முறையை உணர்ந்து வரி வாங்க வேண்டும். பஞ்சாயத்து ஒரு வரி, பாராளுமன்றம் ஒரு வரி, இங்கே நாம் ஒரு வரி என்று இப்படி வரி, வரி, வரி என்று வாங்கிக் கொண்டே போனால் இந்த சர்க்காரும் வாழ முடியாது, இந்த சர்க்காரின் கீழே வாழும் மக்களும் வாழ மாட்டார்கள்.

இந்த தீர்வை பழைய ஆயக்கட்டின் மீதும் அபிவிருத்தி வரி என்று வருகிறது. இது இரண்டு வகையில் வருகிறது. பழைய ஆயக்கட்டில் அபிவிருத்தி செய்யவேண்டிய நிலைமை ஏன் வந்தது? ஒரு அணைக்கட்டு, கால்வாய், ஏரி என்று வைத்து அதன் கீழ் இவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்று சொன்னால் அவ்வளவு ஆயக்கட்டுக்கும் தண்ணீர் தருகிறேன் என்று அரசு உறுதி அளிக்கிறது. ஒரு கால்வாயின் கீழே ஆயிரம் ஏக்கரா பாசனம் என்றால் அதற்கு பூரா தண்ணீரையும் அளிக்கிறேன் என்று உறுதி கொடுத்திருக்கிறது என்று அர்த்தம். அந்த உறுதி இப்பொழுது தளர்த்தப்படுகிறது. இது குடிமராமத்துத் துறையின்கீழ் செய்வதா அல்லது பொதுப் பணித் துறையின்கீழ் செய்வதா என்ற ஐயத்தின் காரணமாக, அந்தக் கால்வாய்கள் பற்பல ஆண்டுகள் கை வைக்கப்படாமல் இருந்து விட்டதினால் ஒரு ஆயக்கட்டிலே 100 ஏக்கரா நிலம் என்றால் 75 ஏக்கரா பயிர் ஏறும். இருபத்தைந்து ஏக்கராவுக்குத் தான் தண்ணீர் வராது; அது தரிசாகும். அது தவிர ஒரு போகம் தண்ணீர் தருகிறோம் என்று சொல்லிவிட்டு பயிர் கதிர் வாங்கும் நேரத்தில் அந்தத் தண்ணீரையும் கொடுப்பது இடையாது. காரணம் ஏரியில் தண்ணீர் இல்லாமல் போய்விடுவதுதான். இப்படி பல ஆண்டுகளாக கால்வாய்கள், ஏரிகள் செப்பனிடப்படாமல் தூர்ந்துபோய் கிடக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் பழைய ஆயக்கட்டுகளை சீர்திருத்துவதற்கு லட்சத்திற்கும் மேல் செலவு ஆகிவிட்டது என்று சொல்லி வரி விதிப்பது நியாயமா என்று அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுவும் எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய ஆயக்கட்டுகள் பல பல ஆண்டுகளாக செப்பனிடப்படாமல் கிடந்தவை. எந்த ஒரு ஆயக்கட்டில் கை வைத்தாலும் இரண்டு லட்சத்திற்கு மேல் செலவு செய்தால்தான் அதை ஒழுங்குபடுத்த முடியும். சர்க்கார் செய்யவேண்டிய காரியத்தை செய்யாமல் விட்டுவிட்டு தங்கள்

[புலவர் கா. கோவிந்தன்] [22nd November 1963

தவற்றுக்கு மக்கள் தண்டனை அடைய வேண்டுமென்று சொல்வது நியாயம் அற்றது. புதிய அணைக்கட்டு கட்டினோம், புதிய ஆயக் கட்டுகள் வந்தன என்று சொல்லி அந்த நிலங்களுக்கு வரிபோடுவது நியாயமாக இருக்கும். ஆனால் பழைய ஆயக்கட்டுகளை, பழைய கால்வாய்களை செப்பனிட்டுவிட்டு, அந்த நிலங்களுக்கும் வரி போடுகிறோம் என்று சொல்வது முறையாகாது என்பதை இந்தச் சர்க்காருக்கு எடுத்துக் கூறி என் கருத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா இப்போது நடைமுறையில் இருக்கக்கூடிய மசோதாவுக்கு ஒரு திருத்தம். ஆகையால் இந்தக் கொள்கை சம்பந்தப்பட்டவரையில் நான் புதிதாக இதற்கு பதில் சொல்லுவதற்கு இஷ்டப்படவில்லை. கனம் முதல் அமைச்சர் அவர்கள் அந்த பழைய மசோதாவை உருவாக்கும்போது அதில் இருக்கக்கூடிய பல பிரச்சனைகளை பார்த்துவந்த காரணத்தினால் அது பற்றிய விவரங்களைச் சொன்னார்கள். மேலும் இந்தப் புதிய மசோதாவில் இருக்கக்கூடிய அமைப்புகளை அவர்களே எடுத்துச்சொன்ன பிறகு அதுபற்றி நான் மேலும் கூறுவதற்கு விரும்பவில்லை.

இருந்தாலும் இந்த மசோதாவில் பேசும்போது ஒருசில அங்கத்தினர்கள் இந்த லெவி முறையைப் பலமாக எதிர்த்துத் தங்கள் கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் எந்தத் தொகுதியை, எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பார்த்தால் இதைப்பற்றி அவர்கள் ஒன்றுமே நன்கு புரிந்து கொள்ளாதவர்கள் என்று தெரியும். அவர்கள் பார்த்த பகுதிகள் எல்லாம் பாசன வசதி எங்களுக்குச் செய்து கொடுங்கள் என்று கேட்கின்ற பகுதிகள் அல்ல. குறிப்பாக விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. தர்மலிங்கம் அவர்கள், பாசனம் என்று சொன்னால் ஏதோ காவேரித் தண்ணீரை மடையை வெட்டி வயலில் பாய்ச்சுவது, லஸ்கர் துணை இருந்தால் போதும், வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சிவிடலாம் என்று எண்ணக்கூடிய பகுதியைச் சேர்ந்தவர்கள். பாசனத் திட்டங்களின் அருமையை நிச்சயமாக அவர்கள் நன்கு உணர்ந்து இருக்க முடியாது. ஆகவேதான் இந்த மசோதாவின் அமைப்பையே உணர்ந்து கொள்ளாமல் இந்தத் திருத்த மசோதாவின் காரணமாக விவசாயிகள்மீது மேலும் ஒரு வரியை இப்போது அரசாங்கம் சுமத்துகிறது என்ற அளவில் குற்றச்சாட்டை அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்கள்.

அவர்கள் தம்முடைய விவாதத்தில் குறிப்பிட்ட விஷயங்களை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் பொருத்தமில்லாத ஒரு லெவியை அரசாங்கம் விவசாயிகளின் மீது போடுவதாகத்தான் இந்த விஷயம் தெரியாதவர்கள் நிச்சயமாக நினைப்பார்கள். ஆனால் இந்த வரி அல்லது லெவியின் சரித்திரத்தைப் பார்த்தோமானால் கனம் அங்கத்தினர் திரு. மாதவன் சொன்னது போல வெட்கப்படக்கூடியது ஒன்றும் இல்லை. பாசன

22nd November 1963] [திரு. வெ. ராமைய்யா]

வசதிகள் பெறவேண்டுமென்று எங்கே பார்த்தாலும் ஆர்வம் படைத்த விவசாயிகள் கேட்கும்போது உண்மையிலேயே இந்த லெவியை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிற மக்களுக்கு அவர்கள் கேட்கிற பாசன வசதியை செய்துகொடுக்கக்கூடிய அவசியம் இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டுவிடுகிறது. உண்மையிலேயே இந்த லெவி முறையை ஏற்றுக்கொண்டவர்கள் நம் மாநில விவசாய மக்கள் தான் என்றாலும் இதில் இருக்கக்கூடிய அனுகூலங்களை உணர்ந்தே மற்ற மாநிலங்களில் உள்ள விவசாயிகளும்கூட இந்த "லெவியைக் கொடுக்கிறோம், எங்களுக்கு இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றிக்கொடுங்கள்" என்று கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழ்நாடு வழிகாட்டினது காரணமாக அகில இந்தியா பூராவுமே இன்றைக்கு இந்த லெவி முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இது ஏதோ அரசாங்கம் விவசாயிகளுக்குக் கஷ்டத்தை உண்டுபண்ணுவதற்காகக் கொண்டுவரப்படுவதாக நினைக்கக்கூடாது. உண்மையில் இதன் சரித்திரத்தைப் பார்த்தால் இந்த முறையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்படி சொன்னவர்கள் விவசாயிகள் தான். அதுதான் இந்த மசோதாவின் சரித்திரமே. நாடு சுதந்திரம் அடைந்த பிற்பாடு எப்படியேனும் இந்த நாடு வளம்பெறத்தக்க நடவடிக்கைகள் எல்லாவற்றையும் மேற்கொண்டாகவேண்டும், என்ற கருத்துடைய மக்கள் அரசாங்கமாக ஒரு திட்டத்தை எடுத்து நிறைவேற்றுவது என்றால் காலதாமதமாகலாம், அந்தத் திட்டத்தினால் லாபம் இருக்குமா என்று பார்க்கலாம், அப்படியின்றி தாங்களே திட்டத்திற்கு ஆகும் ஒரு செலவை லெவி முறைப்படி கொடுக்க ஒப்புக்கொண்டால் துரிதமாக தங்கள் திட்டத்தை அவர்கள் ஏற்று நடத்த முடியும் என்று கருதி இந்த மாதிரியாகச் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்தினார்கள். விவசாயிகள் திட்டத்திற்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை லெவியாகத் தாங்கள் கொடுக்கிறோம் என்று உத்தரவாதம் கொடுத்ததன் காரணமாகத்தான் பல திட்டங்களை நம்மால் ஏற்று நடத்த முடிந்தது. திட்டத்திற்குப் பணம் தேவைப்பட்டபோது மக்களே மனமுவந்து திட்டத்திற்கு வேண்டிய நிதியையும் திரட்டினார்கள். கடனாகவும் பணம் கொடுக்க முன் வந்தார்கள்.

குறிப்பாக அமராவதி திட்டம் பற்றி கனம் அங்கத்தினர் 1-30
களுக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது. மக்கள் p.m.
தாங்களாகவே அதற்கு மிக அதிகமான பொருள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவேதான் நான் வலியுறுத்திச் சொல்ல முடியும். இந்த மசோதா விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய மசோதா இல்லை. விவசாயிகளே கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர்கள் கேட்ட திட்டத்தைப் பூர்த்தி செய்துகொடுத்துவிட்டு, அவர்கள் தாங்கள் தருகிறோம் என்று உத்தரவாதம் கொடுத்த பணத்தைத்தான் இருபது ஆண்டுகளில் எவ்வாறு வசூல் செய்வது என்பதற்காக வகுக்கப்பட்ட மசோதாவாகும்.

இது விவசாயிகளுடைய முழு ஆதரவையும்பெற்ற சட்டம் என்று சொன்னால் அதில் வியப்பு இல்லை. திரு. மாதவன் அவர்கள் உண்மையைப் புரிந்துகொள்ளாமல் ஒரு புது வியாக்யானமே கொடுத்தார்கள்.

ஒரு புது நீர்ப்பாசனத் திட்டம் அமைகிறது என்றால் அதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத்தான் நன்மை ஏற்படுகிறது. ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இப்போது நம்முடைய அரசாங்க திட்ட வேலைகளில் மிகவும் முக்கியமானது பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக மதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அந்தத் திட்டத்திற்காக அரசாங்கம் கிட்டத்தட்ட 40 அல்லது 45 லட்சம் ரூபாய் செலவிட வேண்டும். பொதுவாக மொத்தமாக இந்தத் திட்டம் விவசாயத்திற்குப் பயன்படும் என்றாலும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குத்தான் அதிக நன்மை ஏற்படுகிறது. அந்த குறிப்பிட்ட திட்டப் பகுதியில் உள்ள நிலங்களின் மதிப்புத்தான் உயருகிறது. இதில் எந்தவிதமான சந்தேகமும் யாருக்கும் இருக்க முடியாது. ஆகையால்தான் அந்தப் பகுதி மக்களை—நாம் அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பதனால், அவர்களுடைய நிலத்தில் கிடைக்கும் பயனை இந்தத் திட்டத்தின் மூலம் பல மடங்கு பெருகச் செய்வதனால் அவர்கள் தங்கள் லாபத்தில் ஒரு பகுதியை லெவியாகக் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள். அவர்களுக்கே தெரிகிறது. தங்களுடைய உழைப்பு, செலவு எதுவும் இல்லாமல் நானூறு, ஐநூறு ரூபாய் பொருமான தங்கள் நிலங்கள் ஐயாயிரம், ஆறாயிரம் என்று மதிப்பு உயர்ந்துவிட்டதை அவர்களே உணருகிறார்கள். ஆகவே அவர்களே சம்மதித்து உத்தரவாதம் கொடுத்ததன்பேரில் இந்த மசோதா வருகிறதே தவிர கனம் மாதவன் அவர்கள் சொன்னது போல இதில் வெட்கப்பட ஒன்றுமே இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ ஒரு ஆஸ்பத்திரி, ஒரு பள்ளிக்கூடம் என்று ஏற்படுத்துவது போன்றதல்ல ஒரு அபிவிருத்தித் திட்டத்தை ஒரு பிராந்தியத்தில் அமைப்பது என்பது. அந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவை மாநிலம் பூராவும் உள்ள விவசாயிகளிடமிருந்து லெவி முறையில் வசூல் செய்துகொள்ளலாம் என்பதும் முடியாத காரியம். காரணம் ஒரு குறிப்பிட்ட பாசனத் திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதிலும் உள்ள நிலத்தின் மதிப்பு உயர்வதில்லை. குறிப்பாக தர்மலிங்கம் அவர்களுக்கு நான் ஒரு விஷயத்தைத் தெரிவிக்க முடியும். புதுக்கோட்டைப் பகுதியைப் பற்றி அவருக்குத் தெரியாது என்றே வைத்துக் கொள்வோம். அதற்குப் பக்கத்தில் உள்ள ஒரு பகுதியைப்பற்றி அவர்களுக்குத் தெரிந்தே இருந்திருக்கும். அதுதான் கட்டளைக் கால்வாய்ப் பகுதி. சில ஆண்டுகளுக்கு முன்னால் ஏக்கர் 300 ரூபாய்க்குக் கூட அந்தப் பகுதியில் உள்ள நிலத்தை

யாரும் வாங்க விரும்பமாட்டார்கள். ஆனால் இன்றையதினம் அந்தப் பகுதியில் அதாவது மூன்று வருஷ காலத்திற்குள்ளே மூவாயிரம், நாலாயிரம் கொடுத்தால் கூட பூமி கிடைப்பதில்லை. நான் சொல்வதன் உண்மையை பூரணமாகப் புரிந்துகொள்ளவேண்டுமானால் அந்தப் பகுதிக்கு அடுத்தாற்போல இருக்கிற புதுக்கோட்டைப் பகுதியில் இப்போதும் கூட ஏக்கர் 300, 400-க்கு வாங்கலாம். இந்த நிலைமை எதனால் ஏற்பட்டது என்பதை அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருமக்கள் உணரவில்லையா? அரசாங்கம் அமைத்துக் கொடுத்த பாசனத் திட்டத்தின் மூலமாகத்தான் தங்கள் பகுதியில் உள்ள நிலங்கள் நல்ல வளமும், மதிப்பும் பெற்றிருக்கின்றன என்பதை அவர்கள் உணர்ந்து தான் இந்த லெவியைக் கொண்டு தாங்களே மனமுவந்து உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள்.

இந்த மசோதா வருவதற்கு சற்று முன்னால் நாம் அர்பன் லாண்ட் டாக்ஸ் மசோதாவைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தோம். இதே தத்துவ அடிப்படையில் தான் அந்த மசோதாவும் வந்தது. இவ்வளவு நேரிடையாக அது அமையாவிட்டாலும் அந்தப் புதிய வரியைக் கொண்டு வருவதற்கு நாம் என்ன காரணம் சொன்னோம்? அரசாங்க அபிவிருத்தி வேலைகள், நகராட்சி மன்ற அபிவிருத்தி வேலைகள் ஆகியவற்றின் மூலமாக நிலங்களின் மதிப்பு உயருகிறது. ஆகவே அந்த நிலக்காரர்கள் தங்களுக்குக் கிடைத்த லாபத்தில் ஒரு சிறிய தொகையை அரசாங்கத்திற்குக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்று சொன்னோம். அந்த வரியாவது வருஷா வருஷம் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டிய வரி. ஆனால் இந்த வரி ஒரே முறை தான் நிர்ணயிக்கப்படுகிறது. அந்தத் தொகையைக் கூட அவர்கள் இருபது ஆண்டுகளில் கட்டலாம் என்று வைத்திருக்கிறோம். ஒரு வருஷத்திற்கு 5 ரூபாய்க்கு மேல் போகாதவாறு அது அமைக்கப்படும் என்றும் வரையறுத்திருக்கிறோம் . . . ஆகவே கனம் மாதவன் அவர்கள் குறிப்பிட்டது போல வெட்கப்படக்கூடிய முறையில் எதுவும் நாம் கொண்டுவரவில்லை.

இன்னும் குறிப்பாக வெள்ளையன் காலத்தில் எத்தனை பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்று பாருங்கள். எந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்வதாக இருந்தாலும் அப்போது அந்தத் திட்டத்தினால் லாபம் உண்டா என்றே பார்த்தார்கள். லாப நஷ்டக் கணக்கைப் பார்த்துச் செய்கிறது என்றபோது அவர்கள் ஒரே ஒரு திட்டத்தை மட்டும் தான் தென்னிந்தியாவில் என் இந்தியாவிலேயே அவர்கள் காலத்தில் எடுத்து நிறைவேற்றினார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆனால் பாரதம் சுதந்திரம் பெற்ற பிறகு தான் லாப நஷ்டக் கணக்கைப் பார்க்காமல் எல்லாத் திட்டங்களையும் எடுத்து நிறைவேற்றவேண்டும், லாபம் இருக்கிறதோ இல்லையோ எல்லாப் பகுதி மக்களும் வளம்பெறத் தக்க

வகையில் எல்லாப் பகுதிகளிலும் ஒவ்வொரு திட்டமாவது அமையவேண்டும் என்ற கொள்கையை நாம் மேற்கொண்டோம். இப்போது அமுலாக்கப்பட்டுள்ள திட்டங்கள் எல்லாவற்றையும் எடுத்துப் பார்க்கலாம். அநேகமாக எல்லாத் திட்டங்களும் 1947-க்குப் பிறகுதான் நிறைவேற்றப்பட்டவை. ஆகவே தான் இந்த நாட்டு விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த லெவி முறையை மன மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் 1955-லேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அமுலுக்குக் கொண்டுவரவில்லை. ஆனால் யாரோ வற்புறுத்தியதன் காரணமாகத்தான் இப்போது இதை அவசரம் அவசரமாகக் கொண்டுவருகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி யாரும் வற்புறுத்தவில்லை. யாருடைய வற்புறுத்தலுக்காகவும் இதைக்கொண்டுவரவில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் நம் மாநிலத்தில் பல திட்டங்கள் போடப்பட வேண்டியதாக இருக்கிறதனால் இதுவரையிலும் போடப்பட்டுள்ள திட்டங்களில் நன்மை அடைந்த மக்களிடத்தில் அவர்கள் முன்பே ஒத்துக்கொண்டதுபோல அவர்களுடைய பகுதிக்கு அமைக்கப்பட்ட திட்டச் செலவில் ஒரு பகுதியை லெவியாக வசூல் செய்ய ஆரம்பிக்கவேண்டும் என்றுதான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. விவசாயிகள் தாராளமாகக் கொடுத்து வரக்கூடிய இந்தப் பணத்தை முறைப்படுத்தி ஒழுங்காக வாங்கவேண்டுமென்ற முறையிலேதான் இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. 'அர்பன் லாண்ட் டாக்ஸை' ஏற்றுக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்த பிறகு பாசன திட்டத்திற்காக அரசாங்கம் பொருள் செலவு செய்வதற்கு லெவி போடுவதிலே குற்றம் கண்டு பிடிக்க முடியும் என்றால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இது நடைமுறையில் வரும்போது சில சிக்கல்கள் இருந்தன என்பது பற்றி என்னுடைய முன்னுரையிலே விவரமாகச் சொல்லியிருக்கிறேன். இருக்கக் கூடிய ஒரு பாசன வசதியை மீண்டும் சீர்படுத்த அரசாங்கம் திட்டத்தை உருவாக்கி நடத்தினால் அதனால் ஏற்படக்கூடிய செலவுகளுக்கும் இந்த லெவி முறை வருமோ என்ற சந்தேகம் வேண்டாம் என்பதை நான் பொறுக்குக் கமிட்டியிலேயே தெளிவுபடுத்தியிருப்பதோடு மட்டுமல்லாது என்னுடைய ஆரம்ப உரையிலும் சொல்லியிருக்கிறேன். ரிப்பேருக்காக, மெயின்டனன்சுக்காக எவ்வளவு லட்சம் ரூபாய், கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்தாலும் இந்த லெவி முறை கிடையாது. ஆகவே, அந்தச் சந்தேகம் எந்த ஒரு கனம் அங்கத்தினருக்கும் வேண்டியதில்லை. விவசாயிகளுக்கும் வேண்டியதில்லை. ஆனால் மணிமுத்தாறு திட்டம் அல்லது லோயர்பவானி திட்டம், பரம்பிக்குளம்-ஆளியாறு போன்ற பெரிய திட்டங்களும், அல்லது ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட நடுத்தரத் திட்டங்களும் புதிதாக அமைந்தால் அந்த எல்லையில் இருக்கும் விவசாயிகள் இந்த 'பெட்டர்மெண்ட் லெவி' கொடுக்க

வேண்டியிருக்கும். இருக்கக் கூடிய பாசன வசதியை முறைப் படுத்திக் கொடுக்க, சீர்படுத்திக் கொடுக்க எந்த விதமான லெவியும் கிடையாது என்று உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று, மண் அணையைக் கல் அணையாக மாற்றினால் அதிலே என்ன அபிவிருத்தி இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் கேட்டார்கள். இதே கேள்வியைக் கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் இங்கே கேட்கவில்லை பொறுக்குக் கமிட்டியிலே கேட்டார்கள். அப்போதே நான் அதற்கு விளக்கம் அளித்த காரணத்தினால் இப்போது அது பற்றிப் பேசவில்லை என்று நினைக்கிறேன். இராமநாதபுரம் பகுதி, புதுக்கோட்டை பகுதி, தஞ்சாவூர் ஜில்லாவில் அறந்தாங்கி பகுதியில் இருக்கக் கூடிய விவசாயிகள் மண் அணை கல் அணையாக மாறுவதாலே எவ்வளவு லாபம் இருக்கிறது என்பதை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அவ்வாறு மண் அணையைக் கல் அணையாகக் கட்டிக் கொடுத்தால் அவர்கள் அதற்காக 'பெட்டர்மென்ட் லெவி' கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். மண் அணையாக இருந்தால் கொஞ்சம் பெருவெள்ளம் வரும்போது அடித்துக் கொண்டு போய்விடும். அதனால் விவசாயிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, 'மேஸனரி டாம்' ஆகக் கட்டிக்கொடுத்தால் அவர்கள தாராளமாக 'பெட்டர்மெண்ட் லெவி' கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். 'மேஸனரி டாம்' கட்டுகிறோம் என்றால் அது ரிப்பேர் அல்ல, அடிப்படையிலிருந்தே சுவற்றை 'இம்ப்ரூவ்' செய்ய வேண்டியிருக்கிறது.

நான் ஆரம்பத்தில் சொன்னது போல் இது ஒரு திருத்த மசோதாவாக இருக்கும் காரணத்தால் அடிப்படைத் தத்துவத்திற்குள்ளே போகவேண்டாம் என்று நினைத்தேன். ஆயினும் அடிப்படைத் தத்துவத்தைக் கனம் அங்கத்தினர்கள் வலியுறுத்திப் பேசிய காரணத்தால் நான் அதைப் பற்றி விளக்க வேண்டி ஏற்பட்டது. இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் 1955-ஆம் வருஷம் ஏற்றுக் கொண்டிருக்கும் சட்டத்தின் நடைமுறையில் இருக்கக் கூடிய சில சிக்கல்களைப் பொறுத்து அவற்றை நீக்கும் முறையில்தான் அமைந்திருக்கிறது. இதனைப் பிரிவு பிரிவாக எடுக்கும்போது ஏதேனும் விளக்கவேண்டுமென்றால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. P. DHARMALINGAM: On a point of clarification, Sir . . . . .

Mr. DEPUTY SPEAKER: The hon. Member should not make another speech by way of asking for clarification.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய பிர்க்கா

அமைச்சர் அவர்கள் அடிக்கடி வந்து பார்க்கின்ற பகுதி லால்குடி பிர்காத்தான். இன்னும் மூன்று பிர்காக்களில், புள்ளம்பாடி, கரியமாணிக்கம் பிர்கா . . . . . (மணி அடிக்கப்பட்டது).

திரு. செ. மாதவன்: கனம் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், ஜீவநதிபகுதியில் இருக்கும் விவசாயிகள் பற்றியும், காட்டாறுக்கும் இடையில் உள்ள பகுதி விவசாயிகளைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்க இங்கே ஆரம்பித்தார்கள். ஆனால் அதைப் பாதியிலேயே விட்டு விட்டார்கள். கனம் முதலமைச்சர் அவர்களும் அதைப் பற்றிச் சொல்லாமல் விட்டு விட்டார்கள். அப்படியானால் நான் சொன்ன இந்த வேறுபாட்டை ஏற்றுக் கொள்கிறார்களா? அவர்கள் இந்த வரியால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்களா?

கனம் திரு. வெ. ராமையா: இப்போது விதிக்கப்பட்டிருக்கும் இந்த 'லெவி'யினால் பெரிய பாசனத் திட்டப் பகுதியில் உள்ளவர்கள் எவ்வளவு நன்மை அடைவார்களோ அந்த அளவு பலனைக் காட்டாறு பகுதியில் உள்ளவர்கள் அடையாவிட்டாலும் கூட, நிச்சயமாக மண் அணை கல் அணையாக மாறும்போது அந்த விவசாயிகளுக்கும் நன்மை ஏற்படும் என்பதைக் கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். இதனைத் திருப்பத்தூர் தாலூகாவில் இருக்கும் அத்தனை விவசாயிகளும் உணருகிறார்கள். பாலாற்றில் மண் அணையால் ஏற்படும் கஷ்டங்களை உணர்ந்த விவசாயிகள் 'மேஸனரி டாம்' கட்டிக் கொடுக்கவேண்டுமென்றும், அதற்கான 'லெவி' கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 (L.A. Bill No. 19 of 1963), as amended by the Select Committee be taken into consideration."

The motion was put and carried.

1-49 p.m. MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.

X.—PAPERS PLACED ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

259. *Notification issued with G.O. Ms. No. 4284, Industries, Labour and Co-operation (Co-operation), dated 30th August 1963 regarding "The Madras Co-operative Societies Rules, 1963". [Laid on the Table of the House under Section 119 (4), of the Madras Co-operative Societies Act, 1961 (Madras Act 53 of 1961).]*

260. *Notification issued with G.O. Ms. No. 3095, Home, dated 27th September 1963 amending Rule 5 of the Madras Motor Vehicles Rules, 1940, as subsequently amended, in so far as it relates to the authorisation to drive public service vehicles. [Laid on the Table of the House under Section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

B. Reports, notifications and other papers.

* 85 *Speech of the Hon. Chief Minister while presenting the Demands for Grants for Excess Expenditure in the year 1959–60 to the Assembly on 21st November 1963 (English and Tamil).*

* 86 *Speech of the Hon. Chief Minister while presenting the Demands for Grants for Excess Expenditure in the year 1960-61 to the Assembly on 21st November 1963 (English and Tamil).*

* 87 *Introductory Memorandum to the Statement of Demands for Grants for Excess Expenditure in the year 1959–60 (English and Tamil).*

* 88 *Notice of Demands for Grants for Excess Expenditure in the year 1959–60 (English and Tamil).*

* 89 *Introductory memorandum to the statement of Demands for Grants for Excess Expenditure in the year 1960-61 (English and Tamil).*

* 90 *Notice of Demands for Grants for Excess Expenditure in the year 1960–61 (English and Tamil).*

91. *Notification issued with G.O. Ms. No. 4658, Industries, Labour and Co-operation (Labour), dated 25th September 1963 amending Rule 51 under Schedule XVI of rule 95 of the Madras Factories Rules, 1950, as subsequently amended, the same having been previously published as required by section 115 of the Factories Act, 1948 (Central Act LXIII of 1948).*

* Placed on the Table of the House on 21st November 1963.

[22nd November 1963

APPENDIX I

[*Vide* Answer to starred question No. 436 on page 550.]

STATEMENT.

Names of Blocks selected for implementation of the Rural Works Programme during 1963-64.

Name of the district.	Name of the Block.
1 North Arcot	Chengam Pudupalayam Thandrampattu
2 South Arcot	Thyagadurgam Kallakurichi Sankarapuram Rishivandiyam
3 Chingleput	Poondi Uthukottai
4 Coimbatore	Bhavanisagar Talavadi Nambiyur
5 Kanyakumari	Munchira
6 Madurai	Thoppampatti Oddanchatram Palani
7 The Nilgiris	Ootacamund
8 Ramanathapuram ..	Mandapam Ramanathapuram Thiruppullani Mudukulathur Kadaladi Kamuthi
9 Salem ..	Harur Morappur Pappireddipatti
10 Thanjavur	Arantangi Avadayarkoil
11 Thiruchirappalli	Annavasal Viralimalai Keeranur
12 Tirunelveli	Ottapidaram Pudur Vilathikulam Kayathar

22nd November 1963]

THE PROGRAMME AND MEMORANDUM OF INSTRUCTIONS.

1. *Object*: The main aims of the programme for utilisation of manpower available in rural areas during the agricultural slack seasons are that works should become available to all who are willing to work and secondly all available manpower should be utilised to the greatest extent possible for increasing the community assets. In the context of the need to increase agricultural production, schemes which tend to increase productivity of land should receive priority. The programme should be implemented during the slack season period of May-June 1963 and November 1963, March 1964.

2. *Location*: The thirty-five blocks selected are among the backward Blocks of the State with a marked degree of unemployment and under-employment and with a pressing need to provide employment opportunities during the slack season.

3. *Selection of villages in each Block*: The Panchayat Union Council concerned should select the villages in its area where the programme will be implemented. In making the selection the Panchayat Union Council should ensure that the villages are contiguous, that there is an adequate number of labourers who are willing to work at the wage rate specified below, that there is scope for taking up works of community interest or of agricultural benefit; and that the Panchayat concerned is agreeable to execute the scheme under proper supervision. The list of villages should be finalised by the Panchayat Union Council on the basis of above factors. Each Panchayat so selected should pass a resolution agreeing to abide by the various conditions of the programme.

4. *Preparation and approval of programme for each village*: After the list of villages is approved by the Panchayat Union Council, the Panchayat Union Commissioner will settle the exact period during which the programme will be taken up in individual village in relation to the agricultural practice and local exigencies. This should be done in consultation with the Panchayat President and the local villagers.

5. The detailed works programme should lay down the items of work to be done and the period allotted to each. It will be drawn up by the Panchayat Union Commissioner and in consultation with the block level technical staff. In some of the works, there may be a technical component such as, for instance, the fixing up of a sluice in a minor irrigation tank. In such cases, the technical part may be done by the department and its execution co-ordinated to the non-technical or earth work part of the programme.

6. The detailed works so drawn should be placed before a general meeting at which the President and members of the Panchayat, the Gramasevak, the Panchayat Union Commissioner, the concerned member of the Block Technical Staff and all the members of the

[22nd November 1963

labour force will be present. Any revision suggested by the consensus of opinion at the meeting will be incorporated in the detailed programme and the programme suitably revised. The programme thus finalised will be taken as approved and final.

7. *Items of work*: The items of work to be taken up in the village concerned will be settled with reference to the felt needs of the village and what is capable of achievement during the period. Works which will create fresh community assets or lead to better exploitation and maintenance of existing assets will be taken up. In more specific terms the scope of the programme will include :—

(*a*) *Minor Irrigation*: This will comprise (i) the each work required to improve village irrigation tanks by deepening and by increasing their storage capacity, by desilting of tank beds and strengthening of tank bunds; (ii) the formation of small tanks either for regulating the supply of water to fields or for stabilising and the improving the water tank which will help supply position in the neighbouring irrigation wells; and (iii) the removal of silt weeds, etc., from channels supplying water to tanks or effecting drainage from the fields.

(*b*) *Construction of Community Irrigation Works*: These wells will be large sized irrigation wells capable of supplying water to the adjoining lands either public lands or private lands. In the case of the former category of lands, the Panchayat may raise plantation with the help of the irrigational facilities created. In the case of the latter category of lands, the Panchayat may regulate the distribution of water to private fields and fix and levy a charge thereof.

(*c*) *Panchayat Plantation*: Plantations are being raised by the Panchayats on public lands vsted in or entrusted to them, for fuel, fruit fodder and manuring purposes. Under this programme large size deep pits can be dug for planting seedlings in the village. Wells can be dug in these plantations. Live fences can also be put up.

(*d*) *Formation of village roads*: The formation of village roads and cart tracks can be taken up. Roads already laid can also be maintained.

(*e*) Digging of irrigation channels;

(*f*) Kudimaramath;

(*g*) Soil Conservation which may be taken up on the same basis as Panchayat Soil Conservation Scheme;

(*h*) Other schemes which will help increasing agricultural production.

8. *Execution and supervision of the programme*: The main responsibility for the supervision of the programme will be on the President and Members of the Panchayat and the Gramasevak of the concerned circle. They will exercise a daily watch on the progress of the work. The Panchayat Union Commissioner and the Extension Officers, chiefly and Union Engineer, the Education Extension Officer and the Extension Officer for Agriculture should

22nd November 1963]

frequently visit the villages where the works are being executed and ensure that the quality of work done is satisfactory. The Collector, the Revenue Divisional Officer, the Divisional Engineer, the District Agricultural Officer and the Assistant Engineer should also visit the villages as often as possible and give proper guidance in the implementation of the programme.

9. The technical responsibility for the execution of the works will rest on the Union Engineer, the Union Overseer wherever he is functioning and the Assistant Engineer (Highways and Rural Works). Though the works to be undertaken are of simple type, it is essential that proper estimates are prepared by the Overseer or the Union Engineer as the case may be depending on the value of the works in each case in accordance with the existing instruction in the matter. These technical officers should supervise the works during the day-to-day execution and check-measure them according to their existing powers and ensure that the quality of work turned out is satisfactory.

10. *Mode of execution*: In the rural works programme the intention is that the available manpower in the village should be utilised for productive purpose. It is, therefore, a programme including the whole community. Therefore, the work should *not be let* on tender to contractors. The Panchayat should consider it an institutional responsibility to provide employment to labour for creating community assets. Therefore, the work should be executed by the Panchayat Departmentally. The Panchayat should keep the registers for the purpose, including the cash register, the Bill Book, the Nominal Muster Roll, etc. The Extension Officer (Panchayat) and the Gramasevak of the concerned circle should guide the Panchayat President in maintaining these accounts and registers properly.

Wages and incentive.

11. *Wages and incentive*: The Rural Works Programme is designated mainly to provide employment to unutilised rural manpower during the agricultural slack season. In the process it is expected that community assets will be created or agricultural production will be increased, which finally benefit the community as a whole. Some inducement is still necessary to make the latter respond to a sense of collective responsibility. During the first series of project a wage of 12 annas per labourer per day was fixed to be partly paid in cash and partly utilised for providing a square meal to the labourer. This system generally succeeded in drawing a number of labourers to the scheme, who at the same time, appreciated ' community participation ' involved in the scheme. In the second series of projects only soil conservation works were taken up. As soil conservation was finally meant to benefit individual labourers, the system of payment of less than market wage was not adopted and was substituted by a scheme of beneficiaries sharing the cost of work. This question has been carefully examined with respect to the works to be taken up under the current series of

projects. In view of the recent increase in agricultural wages. it has been decided that the *wage of Rupee one per day* per labourer should be paid. This rate should not be exceeded in a village. The wage may be paid wholly in cash. If it is possible to arrange for provision of meals, part of the wage may be used in preparation and provision of meal. The discretion to institute this system of part payment of cash and provision of meal is left to the Panchayat Union Council concerned.

12. *Public contribution*: It will be seen that that in many Blocks market wage rate for agricultural labourer even during the slack season may be more than the rate permitted to be paid under the Rural Works Programme. The underlying objective is that the whole programme should be organised on the principle of 'Shramdan' with a view to appealing to the sense of collective responsibility of the villages. The payment of less than market wage rate provides for the element of public contribution which is expected in similar programmes. At the same time it is still desirable to expect an element of public contribution also for the work. In other words the value of work finally turned out should be more than the Government scheme of the work.

13. *Payment of wages*: It is necessary to make arrangements for the prompt payment and measurement of the work. Funds for the payment of cash wages and the supply of midday meals will be placed in advance at the disposal of the Panchayat President for one month at a time. He will utilise the funds to disburse the wages on a daily or weekly basis. Since the detailed works programme has been drawn up on the basis of a realistic out-turn, the fulfilment of each work in the allotted time will itself constitute a check-measurement. However, it would be necessary to have a periodical assessment of the pace of the work at the time of payment of wages. This will be done by the Panchayat President in consultation if necessary, with the concerned technical officer attached to the block.

14. *Cost of the programme*: The Planning Commission have allotted a sum of Rs. 29.75 lakhs for current as well as previous year's programme. Expenditure in each Block on this programme during the year 1963–64 should be restricted to Rs. 1 lakh. As the programme will be taken up in 15 select villages in each Block payment on work taken up in each village should not exceed Rs. 6,000. In each village where the work is taken up, it is desirable that a set of tools and implements is made available by the Panchayat. A sum not exceeding Rs. 500 per village may be utilised for the purpose. The tools and implements should be of the common type used by the labourer like the pich-axe, shovels and basket. The tools and implements should be kept in the custody of the Panchayat concerned. They should be brought to account in the Register of stock maintained by the Panchayat.

15. *Accounting Procedure*: Necessary instructions will be **issued separately.**

APPENDIX II

[*Vide* Answer to Starred Question No. 439 on page 551.]

A.—(*a*) The amount allotted for 1962-63 is Rs. 5,37,000.

(*b*) The details are furnished below:—

	Name of work. (1)	*Stage.* (2)
1	Reconstructing the damaged culverts at M. 28/6 of Cuddalore—Vridhachalam Road.	Work completed except hand rails.
2	Reconstructing the damaged culverts at M. 30/3 of Cuddalore—Vridhachalam Road.	Do.
3	Reconstructing the damaged culverts at M. 31/1 of Cuddalore—Vridhachalam Road.	Do.
4	Reconstructing the damaged culverts at M. 8/2 of Vridhachalam—Ulundurpet Road.	Work completed except graveling approach road to be done.
5	Improving the bridge and culverts and in miles 21-27 of Cuddalore—Vridhachalam Road.	Four culverts at M. 24/3, 24/6, 26/2 (2 Nos.) completed—deck slab for 23/2 to be taken up.
6	Reconstructing the weak culverts and bridges in M. 27—38 of Cuddalore—Vridachalam Road.	Work order issued.
7	Improvements to bridges and culverts and bridges in M. 27—38 of Cuddalore—Vridhachalam Road.	Decks for 27/7 completed. Deck to be laid for at M. 28/1 and 28/3.
8	Reconstructing the weak culverts and bridges in M. 38—51 of Cuddalore—Vridhachalam Road.	Work order issued.
9	Reconstructing the weak culverts and bridges in M. 51–73 of Cuddalore—Vridhachalam Road.	Work in progress.
10	Reconstructing the culverts and bridges in M. 56/6, 59/4, 61/6, 64/5 and 72/7 of Cuddalore—Vridhachalam Road.	Work order issued.
11	Construction of bridge at M. 62/1 and culvert in M. 65/5 of Cuddalore—Vridhachalam Road.	Do.
12	Reconstructing the weak culverts and bridges in M. 0-13/3 of Cuddalore—Vridhachalam Road.	Concrete for culvert at Mile 2/2 is completed.
13	Widening the existing B.T. to 22′ width in M. 25–30 of Cuddalore—Vridhachalam Road.	Collection of materials completed. Boring commenced in M. 27/1-8.
14	Widening the existing B. T. to 22′ width in M. 30—34 of Cuddalore—Vridhachalam Road.	Blacktop in M. 33/1—8 is completed.
15	Widening the existing B.T. to 22′ width in M. 34–38 of Cuddalore—Vridhachalam Road.	Blacktop completed.
16	Providing B. T. to 22′ width in M. 0—5 of Vridhachalam—Ulundurpet Road.	Water bound macadam completed.
17	Providing B.T. to 22′ width in M. 5—10 of Vridhachalam—Ulundurpet Road.	Water bound and blacktop completed in M. 9/1-8.

வேலையின் பெயர்.	நிலை.
(1)	(2)
19 விருத்தாசலம்–உளுந்தூர் பேட்டை சாலையின் 3/1 மைலில் உடைந்து விட்ட கல்வெர்ட்டிற்குப் பதிலாக உள்ள பாலத்தைப் புதுப்பித்தல.	வேலை முடிந்து விட்டது.
20 விருத்தாசலம் வழியாகச் செல்லும் கடலூர்–சேலம் சாலையின் 4/2—7/4 மைலிலுள்ள பலமற்ற கல்வெர்ட்டுகளைப் புதுப்பித்தல்.	டெண்டர் பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.
21 விருத்தாசலம் வழியாகச் செல்லும் கடலூர்–சேலம் சாலையின் 8/0 ; 13/0 மைலிலுள்ள பலமற்ற கல்வெர்ட்டுகளைப் புதுப்பித்தல்.	ஷை
22 விருத்தாசலம் வழியாகச் செல்லும் கடலூர்–சேலம் சாலையின் 14/3-19/0 மைலிலுள்ள பலமற்ற கல்வெர்ட்டுகளைப் புதுப்பித்தல்.	ஷை
23 விருத்தாசலம் வழியாகச் செல்லும் கடலூர்–சேலம் சாலையின் 4/2—21/4 மைலிலுள்ள கல்வெர்ட்டுகளுக்கு அபிவிருத்திகள் செய்தல்.	ஷை
24 விருத்தாசலம் வழியாகச் செல்லும் கடலூர்–சேலம் சாலையின் 13/1, 11/4 மைலிலுள்ள பலமற்ற கல்வெர்ட்டுகளைப் புதுப்பித்தல்.	ஷை
25 விருத்தாசலம் வழியாகச் செல்லும் கடலூர்–சேலம் சாலையின் 20/2, 20/7 மைலிலுள்ள பலமற்ற கல்வெர்ட்டுகளைப் புதுப்பித்தல்.	ஷை

APPENDIX III

[*Vide* Answer to Starred Question No. 467 on page 567.]

Statement showing the places where colonies have been formed so far, for Narikoravars in the State, and the expenditure therefor.

District.	Location of the Colony.	Expenditure.
(1)	(2)	(3)
		RS.
Salem ..	.. Ammapalayam ..	18,750
Tiruchirappalli ..	Thuvagudi	4,500
	Poolambadi	8,250
	Karai	4,500
	Manickanpuram ..	4,500

District.	Location of the Colony.	Expenditure.
(1)	(2)	(3)
3 South Arcot ..	Kammapuram ..	29,250
4 North Arcot ..	Thenpallipet ..	21,000
	Kattamadura ..	15,000
5 Chingleput ..	Vayalur	20,000
	O.akadu	7,000
6 Thanjavur ..	Pamini	16,500
7 Madurai ..	Vilathur	7,700
	Total ..	1,56,950

தமிழ் நாட்டில் நாடோடிக் குறவர்களுக்குக் காலனி கட்டிக் கொடுத்துள்ள இடங்களையும் ஆன பொருட் செலவையும் காட்டுகிற அறிக்கை

மாவட்டம்.	காலனி கட்டியுள்ள இடம்.	செலவு.
(1)	(2)	(3)
		ரூ.
1. சேலம்	அம்மாபாளையம்	18,750
2. திருச்சிராப்பள்ளி ..	தூவக்குடி	4,500
	புல்லம்பாடி	8,250
	காரை	4,500
	மணிக்கண்புரம்	4,500
3. தென் ஆற்காடு ..	கம்மாபுரம்	29,250
4. வட ஆற்காடு ..	தென்பள்ளிப்பட்டு ..	21,000
..	கட்டா மதுரை	15,000
5. செங்கற்பட்டு	வயலூர்	20,000
	ஒரக்காடு	7,000
6. தஞ்சாவூர்	பாமினி	16,500
7. மதுரை	விளத்தூர்	7,700
	மொத்தம் ..	1,56,905

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 23rd November 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Deputy Speaker (THE HON. SRI K. PARTHASARATHY) in the Chair.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

I.—CONDOLENCE RESOLUTIONS *RE*: THE DEMISE OF MR. J. F. KENNEDY, PRESIDENT OF THE UNITED STATES OF AMERICA AND FIVE TOP-RANKING INDIAN MILITARY OFFICERS.

MR. DEPUTY SPEAKER: "It is my painful duty to inform the House of the shocking news we had this morning of the brutal assassination of President Kennedy of the United States of America and also of the Air Crash in which five high-ranking Army and Air Force Officers were killed."

"I request the Hon. the Leader of the House to move the Condolence Resolution."

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Deputy Speaker, Sir, I move—

"That this House is deeply shocked and is grieved at the assassination of Mr. John F. Kennedy, President, United States of America, who has given a bold lead towards the establishment of peace in the world and in tackling the racial problem in the United States and expresses its profound sorrow at the irreparable loss sustained by the world and the United States of America in particular and offers its heartfelt condolences to Mrs. Kennedy, the Government and the people of the United States of America."

I also move—

"That this House expresses its profound sorrow at the Air Crash tragedy in which five top-ranking Army and Air Force Officers were killed and offers its heartfelt condolences to the members of the bereaved families."

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நேற்றிரவு ஒரு மணிக்கு நாமெல்லாம் திடுக்கிடக்கூடிய ஒரு செய்தி கிடைத்தது. அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்திதான் நம்மையெல்லாம் ஆழ்ந்த துக்கத்தில் வைத்தது. உலகத்தையே இச்செய்தி திடுக்கிடச் செய்திருக்கும். நிறவெறியின் காரணமாகக் கொல்லப்பட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அவர் டெக்ஸில் போயிருந்தார். இனவெறி கொண்டிருக்கும் மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்வதற்காக அவர் துணிவோடு, பெரும் நம்பிக்கையோடு அந்த இடத்தில் (ஓப்பன்) திறந்த காரில் போகும்போது அவர் சுடப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார் என்ற செய்தி நம்மையெல்லாம் திடுக்கிடச் செய்திருக்கிறது.

[22nd November 1963

	Name of work.	Stage.
	(1)	(2)
18	Providing B.T. to 22' width in M. 10—13/5 of Vridhachalam—Ulundurpet Road.	Water bound macadam completed in M. 11/1—8, 12/1—13/3. Boring and gravel mixing completed one side in M. 10/1—8.
19	Reconstructing the bridge in place of collapsed culvert at M. 3/1 of Vridhachalam—Ulundurpet Road.	Work completed.
20	Reconstructing the weak culverts in M. 4/2—7/4 of Cuddalore—Salem Road via Vridhachalam.	Tender being settled.
21	Reconstructing the weak culverts in M. 8/0—13/0 Cuddalore—Salem Road via Vridhachalam.	Do.
22	Reconstructing weak culverts in M. 14/3—19/0 of Cuddalore—Salem Road via Vridhachalam.	Do.
23	Improvements to culverts at M. 4/2—21/4 of Cuddalore—Salem Road via Vridhachalam.	Do.
24	Reconstructing the weak culvert at M. 13/1 and 14/1 of Cuddalore—Salem Road via Vridhachalam.	Do.
25	Reconstructing the weak culverts at M. 20/2 and 20/7 of Cuddalore—Salem Road via Vridhachalam.	Do.

பதில்—(அ). 1962-63-க்காக ரூ. 5,37,000 ஒதுக்கப்பட்டது.

(இ) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	வேலையின் பெயர்.	நிலை.
	(1)	(2)
1	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 28/6 மைலில் பழுதடைந்த கல்வெர்டுகளைப் புதுப்பித்தல்.	கைப்பிடிக் கம்பிகள் தவிர மற்ற வேலை முடிந்துவிட்டது.
2	ஷை 30/3 மைலில்	ஷை
3	ஷை 31/1 மைலில்	ஷை
4	விருத்தாசலம்—உளுந்தூர்பேட்டை சாலையின் 8/2 மைலில் பழுதடைந்த கல்வெர்டுகளை புதுப்பித்தல்.	கைப்பிடிக் கம்பிகள் தவிர மற்ற வேலை முடிந்துவிட்டது. அணுகு சாலைக்கு சரளைக் கற்கள் போடும் வேலை நடக்க வேண்டியுள்ளது.
5	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 21—27 மைலில் உள்ள பாலத்திற்கும் கல்வெர்டுகளுக்கும் அபிவிருத்திகள் செய்தல்.	24/3, 24/6, 26/2 மைலில் உள்ள நான்கு கல்வெர்டுகள் (2 நம்பர்கள்) பூர்த்தி செய்யப்பட்டன. 23/3-க்கான டெக் ஸ்லாப் போடும் வேலை இனிமேல் எடுத்துக் கொள்ளப்படும்.
6	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 27—38 மைலில் பலமற்ற கல்வெர்டுகளையும் பாலங்களையும் புதுப்பித்தல்.	வேலை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

22nd November 1963]

	வேலையின் பெயர்.	நிலை.
	(1)	(2)
	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 27—38 மைலில் உள்ள பாலங்களுக்கும் கல்வெர்டுகளுக்கும் அபிவிருத்திகள் செய்தல்.	27/7-க்கான டெக்குகள் முடிந்து விட்டன. 28/1, 28/3 மைலில் டெக் போட வேண்டியுள்ளது.
8	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 38—51 மைலில் உள்ள பலமற்ற கல்வெர்டுகளையும் பாலங்களையும் புதுப்பித்தல்.	வேலை ஆணை பிறப்பிக்கப்பட்டது.
9	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 51—73 மைலில்.	வேலை நடந்தேறி வருகிறது.
10	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 5 /6, 59/4, 61/5, 64/5, 72/7 மைலில் உள்ள கல்வெர்டுகளையும் பாலங்களையும் புதுப்பித்தல்.	வேலை ஆணை பிறப்பிக்கப்பட்டது.
11	கடலூர்—விருத்தாசலம் சாலையில் 62/1 மைலில் உள்ள பாலத்தையும் 65/6-ல் உள்ள கல்வெர்டையும் புதுப்பித்தல்.	ஷை
12	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 0—3/3 மைலில் உள்ள பலமற்ற கல்வெர்டுகளையும் பாலங்களையும் புதுப்பித்தல்.	2/3 மைலிலுள்ள கல்வெர்டுக்கான கான்க்ரீட் வேலை முடிந்துவிட்டது.
13	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 25—30 மைலில் தற்போதுள்ள தார் போடப்பட்ட பாதையை 22 அடிக்கு அகலப்படுத்துதல்.	சாமான்களைச் சேகரிக்கும் வேலை முடிந்துவிட்டது. 27/1-8 மைலில் துளை போடும் வேலை துவங்கியுள்ளது.
14	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 30—34 மைலில் தற்போதுள்ள தார் போடப்பட்ட பாதையை 22 அடிக்கு அகலப்படுத்துதல்.	33/1 மைலில் தார் போடும் வேலை முடிந்து விட்டது.
15	கடலூர்—விருத்தாசலம் சாலையின் 34—38 மைலில் தற்போதுள்ள தார் போடப்பட்ட பாதையை 22 அடிக்கு அகலப்படுத்துதல்.	தார் போடும் வேலை முடிந்து விட்டது.
16	விருத்தாசலம்-உளுந்தூர் பேட்டை சாலையின் 0-5 மைலில் 22 அடி அகலத்திற்கு தார் போடுதல்.	தண்ணீர் ஊற்றி உறுதிப்படுத்தும் வேலை (water bound macadam) முடிந்துவிட்டது.
17	விருத்தாசலம்-உளுந்தூர் பேட்டை சாலையின் 5-10 மைலில் 22 அடி அகலத்துக்குத் தார் போடுதல்.	தண்ணீர் ஊற்றி உறுதிப்படுத்தும் மெக்காடம் சாலை வேலை (water bound macadam) முடிந்துவிட்டது; 9/1—8 மைலில் தார் போடும் வேலை முடிந்து விட்டது.
18	விருத்தாசலம்—உளுந்தூர் பேட்டை சாலையின் 10—13/5 மைலில் 22 அடி அகலத்துக்குத் தார் போடுதல்.	11/1—8, 12/1-13/3 மைலில் தண்ணீர் ஊற்றி உறுதிப்படுத்தும் வேலை மெக்காடம் சாலை வேலை முடிவடைந்துவிட்டது. 10/1—5 மைலில் ஒரு பக்கத்தில் குடைவு வேலையும், சரளைக்கல் கலக்கும் வேலையும் முடிவடைந்து விட்டன.

அவர் துணிவோடு சென்றார் என்று சொன்னேன். நான் அமெரிக்கா சென்றிருந்தபோது கேள்விப்பட்டேன்—இவர் நிறவெறியை அகற்ற வேண்டும் என்று உறுதியாக நிற்கிறாரே, வரக்கூடிய தேர்தலில் இவருக்கு வோட்டு கிடைக்காதே என்று சிலர் பேசிக் கொண்டிருந்ததை நான் கேள்விப்பட்டேன். நிறவெறியை, இனவெறியை அகற்ற வேண்டுமென்று அவர் உறுதியாகப் பாடுபட்டார். அதற்காகவே அவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். எந்த இனவெறியின் காரணமாக நம்முடைய ஒப்பற்ற தலைவர் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்களோ, எந்த இனவெறியின் காரணமாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப் பட்டாரோ, அதே இனவெறியின் காரணமாக இப்போது அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்கள் சுடப்பட்டு பலியாகியிருக்கிறார்கள். உலகத்தில் அமைதியை நிலைநாட்ட அனைவரும் முற்படவேண்டும் என்று நம்முடைய ஒப்பற்ற தலைவர், நமது பிரதம மந்திரி அவர்கள் உலகத்திற்கு எடுத்துக் கூறினார்கள். அதை ஏற்றுக்கொண்டு அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பெரிதும் பாடுபடுகின்ற வகையில் இன்றைக்கு உலகத்தில் இரு பெரும் தலைவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். அவர்கள்தான் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்கள், ருஷ்ய ஜனாதிபதி குருஷ்சேவ் அவர்கள். இந்த இரண்டு பெருந்தலைவர்களில் கென்னடி அவர்கள் இன்று நம்மிடையே இருந்து மறைந்தது உலகத்திற்கே பெரியதொரு நஷ்டமாகும். உலகத்திலேயே பெரிய நாடுகளுக்குள்ளே க்ஷாத்திரம் வளர்ந்து கொண்டிருக்கிறது. கென்னடி அவர்களின் முயற்சியால் அந்த டென்ஷன் பெரும் அளவுக்குக் குறைந்துகொண்டு வருகிறது. இவ்வாறு சிறந்த சேவையைத் தன்னுடைய நாட்டுக்கு மட்டுமல்லாமல், உலகத்திற்கே செய்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய மறைவு அவர்கள் நாட்டுக்குமட்டும் அல்ல, உலகத்திற்கே பெரியதொரு நஷ்டம். இப்படிப்பட்ட தலைவர் ஒருவர் இனவெறிக்குப் பலியாகியிருக்கிறார் என்பதை நினைக்கும்போது ஒரு பக்கத்தில் ஆழ்ந்த வருத்தம் ஏற்படுகிறது. மற்றொரு பக்கத்தில் உலகத்திற்கே இன்று பெரியதொரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இந்த மன்றம் உணருகிறது. அமெரிக்க மக்களுக்கு இது ஈடு செய்ய முடியாத ஒரு நஷ்டம். அந்த அமெரிக்க மக்களுக்கும், அமெரிக்க அரசாங்கத்திற்கும், முக்கியமாக கென்னடி அவர்களுடைய மனைவியாருக்கும் இந்த மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிற தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும் என்று நான் எண்ணுகிறேன். அதேமாதிரி நேற்று நம்மை எல்லாம் ஆழ்த்திய இன்னொரு செய்தி கிடைத்தது. நம்முடைய முதல்தரமான படைவீரர்கள், ஜெனரல்கள் ஹெலிகாப்டரில் சென்று கொண்டிருந்தார்கள். துரதிருஷ்டவசமாக அதில் ஒரு விபத்து ஏற்பட்டதின் காரணமாக அவர்கள் எல்லாம் இறந்துவிட்டார்கள் என்ற செய்தி இந்திய மக்களை எல்லாம் கலக்கியிருக்கிறது. நேற்று இது மக்கள் சபையில் பிரஸ்தாவிக்கப்பட்டிருக்

கிறது. இந்தச் செய்தி நம்மை பெரிதும் துக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறது. அதற்காகவும் இந்த மன்றம் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்ற முறையில் நான் இங்கே கொண்டு வந்திருக்கும் அனுதாபத் தீர்மானத்தையும் இந்த மன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இரண்டு அனுதாபத் தீர்மானங்களையும் ஆதரிக்கின்ற முறையில் எதிர்க் கட்சிகளின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இரண்டு துக்கச் செய்திகள் நேற்றும் இன்றும் நமக்கு எட்டியிருக்கின்றன. அதற்கான விளக்கங்களை நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் தெரிவித்தார்கள். அகில உலகத்திலேயே பெரும்பகுதி மக்களின் நல்ல பாராட்டுக்களைப் பெற்றிருந்த அமெரிக்கக் குடியரசின் தலைவர் கென்னடி அவர்கள் சுட்டுக் கொலை செய்யப் பட்டார் என்ற செய்தியைக் கேட்டு இந்த நாட்டு மக்கள் அனைவரும் திடுக்கிட்டனர். இச்செய்தி பெரும் துயரத்தையும் வருத்தத்தையும் தந்திருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். உலகத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும், அமைதியைக் காப்பாற்றவும், பின்தங்கிய நாடுகள் முன்னேற்றம் அடைவதற்காக உதவி செய்யவும், அவர் பாடுபட்டுக் கொண்டிருந்தார். முக்கியமாக சீன-இந்தியப் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற முறையில் ஜனநாயக நாடுகளினுடைய உரிமையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தியாவுக்கு கென்னடி அவர்கள் பெரும் உதவி செய்தார்கள் என்பதை என்றைக்கும் யாரும் மறக்க முடியாது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தது போல் உலகத்திலேயே இன்று இரண்டு பெரிய அணிகளாக இருக்கின்ற அமெரிக்கா, ரஷ்யா போன்ற இரு நாடுகளின் தலைவர்களாக இருக்கின்ற குருஷ்சேவ், கென்னடி இவ்விரு தலைவர்களும் ஒன்றுகூடிப் பேசி உடன்பாடு செய்து அமைதியான வாழ்வுக்கு வழிதேடுகிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப்படும்பொழுதெல்லாம், அதனை உலகத்திலுள்ளோர் அத்தனைபேரும் போற்றி, பாராட்டி, வரவேற்று மகிழ்ந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு அமைதி ஏற்பட வேண்டும் என்று கென்னடி அவர்கள் முழு கவனம் செலுத்தி வந்தார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களில் ஒருவராக இருந்த கென்னடி அவர்கள் எளிமையும், இனிமையும், ஊக்கமும், விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் கொண்டவர் என்று அவரோடு பழகியவர்கள் மூலம் அறிந்து கொள்கிறோம். இனவெறியை எந்தவிதத்திலும் போக்கிவிடலாம் என்று தன்னம்பிக்கையுடன், இனவெறி தாண்டவமாடிய ஒரு இடத்திற்கு வந்த இடத்தில் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார்: கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல், நிறவெறியின் காரணமாக மக்களிடத்திலே தோன்றும்

வன்முறைச் செயல்களை அழித்து, மக்களிடத்தில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு வாழ்ந்த ஆப்ரகாம் லிங்கன் வழியில் கென்னடி அவர்களும் முயற்சி எடுத்துவருகிறார்கள் என்று கேள்விப்பட்டு நாம் எல்லோரும் மகிழ்ந்தோம். நிறவெறியை அகற்றி, நீக்ரோக்களும் வெள்ளைக்காரர்களும் ஒன்றாக வாழவேண்டும் என்று முயற்சி செய்த ஆப்ரகாம் லிங்கனைத் தொலைத்துவிட்டால், இந்த முயற்சி நின்றுவிடும் என்று நினைத்து ஆப்ரகாம் லிங்கனை எத்தகைய கயவன் சுட்டுக் கொலை செய்தானே, அதைப் போலவே அதே எண்ணத்திற்காகப் பாடுபட்டுவந்த கென்னடி அவர்களையும் சுட்டுக்கொல்ல மீண்டும் ஒரு கயவன் முன் வந்திருக்கின்றான். இந்தச் செயலை ஜனநாயக நாடுகள் அத்தனையும் ஒதுக்கித் தள்ளும், கண்டிக்கும் என்பதில் நமக்கு ஐயமில்லை. உலகில் இன்று நல்ல நாகரிக நிலைமையிலேயும், நல்ல உயர்ந்த பண்பாட்டிலேயும் அரசியல் நிலைமை வளர்ந்து வரவேண்டுமென்று எண்ணுகின்ற நிலையில், வன்முறையில் நம்பிக்கை கொண்டு, அரசியலில் சில கயவர்கள் உலவுகிறார்களே என்று எண்ணும்போது நாம் மிகவும் வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தச் செய்தி மிகுந்த துக்கத்தையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தருகின்ற செய்தியாக அமைந்திருக்கிறது. வன்முறையைக் களைந்து எறிய வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுக் கடைசியில் அந்த வன்முறைக்கே பலி கொடுக்கப்பட்டவர்கள் பலர். அந்தப் பட்டியலில் பார்த்தால், ஆப்பிரகாம் லிங்கன், அண்ணல் காந்தியடிகள், கென்னடி போன்ற பல பேர்கள் இந்த வன்முறையின் கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்தப் பாடத்தை அடிப்படையாகக் கொண்டாவது வன்முறையை அறவே ஒழிக்கவேண்டும் என்ற நம்பிக்கையை இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டினர் கொள்வார்களாக. ஜனநாயகத்தைப் போற்றிவளர்த்த அரும் பெரும் தலைவர், அமெரிக்க குடியரசுத் தலைவர் மறைந்தது ஆழ்ந்த துக்கத்தைத் தரும் செய்தியாகும். அவரது இழப்பினால் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் தலைவனை இழந்து நிற்கும் உலக மக்களுக்கும் தலைவனை இழந்து நிற்கும் அமெரிக்க மக்களுக்கும் நாமும் நம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தையொட்டி, எதிர்க் கட்சிகள் அனைவரின் சார்பில் கென்னடி அவர்களைப் போற்றிப் பாராட்டி வாழ்த்தி வந்த அமெரிக்க மக்கள் அனைவருக்கும், அவரது முயற்சியில் நம்பிக்கை கொண்டு போற்றி வந்த உலக மக்கள் அத்தனை பேருக்கும், நாம் ஆழ்ந்த அனுதாபத்தை இந்த மன்றத்தின் மூலமாகச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதைப் போன்றே, இந்திய போர்ப்படையில் அரும்பணியாற்றிக் கொண்டு முன்னணியில் இருந்தவர்கள் ஐந்து பேர்கள் எதிர்பாராது இறந்தார்கள் என்பதும் மீளா துக்கத்தைத் தருவதாகும். இந்த ஐந்து பேர்களும் ஒரே விமானத்தில் சென்று இப்படிப்பட்ட

எதிர்பாராத இழப்பைத் தேடிக் கொண்டார்களே என்று வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுவும் நமக்கு மிகுந்த துக்கத்தைத் தருகிறது. அதுவும் பாதுகாப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்தியாவுக்கு, போர்ப் படையில் உயர்ந்த நிலையில் உள்ள தலைவர்களாக இருந்தவர்கள் இறந்தது மிகுந்த நஷ்டத்தைத் தருவதாகும். அவர்களுடைய குடும்பங்கள், நண்பர்கள் எல்லோருக்கும் நம் ஆழ்ந்த அனுதாபத்தை இந்த இரண்டு அனுதாபத் தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலமாகத் தெரிவிப்போமாக. இந்த மன்றம் தன் இரங்கும் தன்மையை வெளிப்படுத்துவதோடு, அவர்களை இழந்து வருந்தும் அத்தனை பேருக்கும் அனுதாபம் தெரிவித்து, அந்த முறையில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த இரண்டு அனுதாபத் தீர்மானங்களையும் எதிர் கட்சிகளின் சார்பாக ஆதரிக்கிறேன் என்று கூறி முடிக்கிறேன்.

கனம் உதவி சபாநாயகர் : கனம் முதல் அமைச்சர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் தெரிவித்த அனுதாப உணர்ச்சிகளோடு நானும் என்னுடைய அனுதாப உணர்ச்சிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சபையில் உள்ள அங்கத்தினர்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் அதிகமான துயர உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இன்று நாம் கேட்ட செய்தி எல்லோரையும் திடுக்கிட வைக்கும். சாதாரணமாக இயற்கையாக பதவியில் இருப்பவர்கள் மரணம் எய்தினால், அவர்கள் ஆற்றிய பெரும் காரியங்களைக் குறிப்பிட்டு நாம் வருந்தப்படுவது உண்டு. ஜனாதிபதி கென்னடி அவர்கள் தாம் ஆற்றிய நல்ல காரியங்களுக்காக அவர்கள் புரிந்த துணிகரச் செயல்களுக்காகப் பழி வாங்கப்பட்டு, கோரமாகத் தாக்கப்பட்டு மரணம் அடைந்தார் என்று கேட்கும்போது நமக்குப் பெரிய அதிர்ச்சியும் ஒரு சோதனையாகக் கருதக்கூடிய ஒரு நிலைமையாகக்கூட எடுத்துக்கொள்ளக் கூடும். இன உணர்ச்சியைத் தூண்டி விட்டு, இன வெறியைத் தூண்டி விட்டு, மக்கள் உள்ளங்களை கொதிப்பு அடையச் செய்தால், பாதிக்கப்படுகிறவர்கள் எந்த அளவுக்குச் செல்வார்கள் என்பதற்கு இது ஒரு படிப்பினையாக இருக்கக் கூடும் என்றே நான் கருதுகிறேன். இந்த முறையிலே தன்னை எதிர் நோக்கியுள்ள ஆபத்தினை நன்றாகத் தெரிந்திருந்தும் சில ஆண்டுகளுக்கு முன் அவர் கொல்லப்படுவார் என்று எச்சரிக்கப்பட்டு இருந்தும் துணிந்து தன் கடமையினின்றும் வழுவாமல், நியாயம் என்று பட்டதைச் செய்து வந்தவருக்கு, துணிகரமாக காரியங்களைச் செய்து வந்தவருக்கு இந்த கோரமான முடிவு ஏற்பட்டிருக்கிறது. கடமையினின்றும் தவறாத வீரராக, தீரராக, அமெரிக்க ஜனாதிபதி கென்னடி திகழ்ந்திருக்கிறார். அவரது இழப்பு உலகத்திற்கே ஒரு பெருத்த நஷ்டம் ஆகும். அது மட்டுமல்ல, தலைவனை இழந்து நிற்கும் அமெரிக்க மக்களுக்கு, இது பெரும் சோதனை ஆகும்.

[கனம் உதவி சபாநாயகர்] [23rd November 1963

அந்த மக்களுக்கும், அவரது இளம் வயது உடைய மனைவியாருக்கும் இந்தச் சபையின் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதிலே நானும் கலந்து கொள்கிறேன்.

அனைவரும் திடுக்கிடத்தக்கதாக இன்னொரு சோக நிகழ்ச்சி நடந்தது. பெரும் தலைவர்கள், ராணுவத் தலைவர்கள், இன்றியமையாத தலைவர்கள், அவர்களுடைய சேவை இன்றியமையாததாக இருக்கும் இந்த நேரத்தில், அவர்களை இழந்தது நம் நாட்டிற்குப் பெரிய இழப்பு ஆகும். அவர்களுடைய குடும்பத்தாருக்கும் இந்தச் சபையின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வது நம் கடமையாகும்.

இந்த இரு அனுதாபத் தீர்மானங்களை நிறைவேற்றுகிற வகையில் கனம் அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் இடத்தில் மௌனமாக இரண்டு நிமிடங்கள் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

The resolutions were carried *nem. con*,. all the Members standing in silence for two minutes.

கனம் உதவி சபாநாயகர் : மறைந்த அமெரிக்க ஜனாதிபதி அவர்களின் ஞாபகார்த்தமாக, அவர்கள் மறைவுக்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கும் வகையில், சபை நடவடிக்கைகள் 9-30 மணி வரையில் ஒத்தி வைக்கப்படுகிறது.

The House then adjourned.

The House re-assembled at half past nine of the Clock.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மாணாக்கர் வேலை நிறுத்தம்.

*4. குறுகிய கால கேள்வி.—திரு. சா. கணேசன் : திரு. இரா. நெடுஞ்செழியன் : { கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பச்சையப்பன் கல்லூரி மாணாக்கர்கள் கல்லூரிக்குச் செல்லாது 'வேலை நிறுத்தம்' செய்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணமென்ன ?

(உ) அது குறித்து அரசினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It has been reported that the inmates of the Pachaiyappa's College hostel resented the increase in the room-rent and service charges made by the Board of Management and abstained

from classes to attract the attention of the Board of Management which met on 19—11—1963. The other students of the College joined the inmates of the hostel and abstained from their classes.

(*c*) The institution is a private one. The Government do not interfere in the administration of private institutions.

திரு. சா. கணேசன் : ஹாஸ்டல் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், சமீப காலத்தில் எத்தனை தரம் எந்த விகிதத்தில் திரும்பத் திரும்ப அந்த ஹாஸ்டல் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு ரூம் வாடகை மாதம் ரூ. 7 ஆக இருந்தது ; புது பிளாக்குக்கு ரூ. 10 ஆக இருந்தது. அது பின்னாலே மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால், ஹாஸ்டலில் வசிக்கின்ற மாணவர்கள் சில கோரிக்கைகளைத் தெரிவித்தார்கள்.

1. Provision of steel cots for the rooms in the first and second floors.

2. Four hundred stainless steel tumblers for the mess.

3. Electrical grinders for the mess.

இந்த மூன்றும் வேண்டுமென்று கேட்டார்கள். அந்த வசதிகள் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு மேலே ஹாஸ்டல் நிர்வாகிகள் வாடகையை அதிகப்படுத்தியிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, விடுதியின் கட்டணம் திடீரென்று உயர்த்தப்பட்டிருப்பதின் காரணத்தினாலே, அதைக் குறைப்பதற்கு நிர்வாகிகள் இணங்காத காரணத்தினாலே, மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள், அரசாங்கம் அந்தத் தனியார் நிர்வாகத்தின் உள்துறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கில்லை என்று கூறினார்கள். மாணவர்கள், நிர்வாகிகள் என்று இரண்டு பகுதிகளாகப் பிரிந்திருந்தாலும், அந்தக் கல்லூரியில் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருப்பதாலும், இந்த நிலையில் அவர்களிடையே சமாதானம் ஏற்படுவதற்கு அவர்களை ஒரு உடன்படிக்கைக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருப்பதால், அரசினர் அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹாஸ்டலில் வசிக்கின்றவர்களுக்கு வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால் ஹாஸ்டலுக்குப் போகாமல் வேலை நிறுத்தம் செய்யலாம். அதற்கு வேலை நிறுத்தம் என்ற பெயரோ அல்லது வேறு என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். ஹாஸ்டலுக்கு வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதற்காக வகுப்புகளுக்கு வருவதில்லை என்று சொல்லுவதோ, அல்லது ஹாஸ்டலில் வசிக்காத மாணவர்களும் அவர்களுடன் சேர்ந்து வகுப்புகளுக்கு வராமல் இருப்பதோ முறையற்ற தனம். பின்னால் வாடகையை ஒரு ரூபாய்

குறைத்துக்கூட இருக்கிறார்கள் ஹாஸ்டல் நிர்வாகிகள். அதையெல்லாம் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லி மாணவர்கள் இப்படி நடந்துகொண்டிருப்பது முறையற்றது. ஆனால், மாணவர்களின் தலைவர்களோ அல்லது நிர்வாகிகளோ இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அப்பொழுது அரசாங்கம் அதில் ஏதாவது தலையிடமுடியுமா, எந்த அளவுக்கு தலையிட முடியும் என்பதையெல்லாம் பரிசிலனை செய்யலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : மாணவர்கள் ஸ்டிரைக் தொடர்ந்து நடப்பதால், நிர்வாகிகள் ஹாஸ்டலை மூடிவிடுவதாக சர்க்காருக்கோ அல்லது மாணவர்களுக்கோ ஏதாவது தெரிவித்திருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி அரசாங்கத்திற்கு ஒன்றுந் தகவல் இல்லை.

திரு. சா. கணேசன் : சில ஆண்டுகளுக்கு முன்பு ,வாடகையும், நிர்வாகச் செலவும் சேர்ந்து, 'ஹாஸ்டல் ரெண்ட், அட்மினிஸ்ட்ரேடிவ் சார்ஜஸ்' இரண்டும் சேர்ந்து ரூ. 12 ஆக இருந்தது. சென்ற ஆண்டிலே அதற்குப் பின்னால் ரூ. 17-ஆக ஆக்கினார்கள். இப்பொழுது ரூ. 22-ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, சில ஆண்டுகளுக்குள்ளாக ரூ. 12-ஆக இருந்தது, ரூ. 22-ஆக உயர்ந்திருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் என்னிடம் இல்லை. ஆனால் இதையெல்லாம் பற்றி மாணவர்களும், ஹாஸ்டல் நிர்வாகிகளும் சேர்ந்து கலந்து பேசி ஏதாவது முடிவுக்கு வர வேண்டியதுதான். அதற்காகத் திடீரென்று வகுப்புகளுக்குப் போவதில்லை என்று வேலை நிறுத்தம் செய்வது சரியல்ல.

திரு. மு. கருணாநிதி : ஏனைய கல்லூரிகளில் இருப்பதைவிட மிக மோசமான சுகாதார நிலை பச்சையப்பன் கல்லூரி ஹாஸ்டலில் இருப்பதாகவும், போதுமான அளவுக்குக் குளிக்கும் இடங்களும் போதுமான அளவுக்குக் கழிவு இடங்களும் இல்லை என்ற குறைபாடுகள், சாப்பாட்டு இடம் கூட மழைத் தண்ணீர் தேங்கியிருப்பதுபோன்ற சூழ்நிலையில் இடம் இருக்கிறது என்ற நிலைமைகள் இருக்கின்றன, வாடகையை வாங்கிக்கொண்டு மாணவர்களுக்கு வேண்டிய முக்கியமான வசதிகள் செய்துதரப்படவில்லை என்கின்ற குறைபாடுகள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. அந்த நிலைமையில் நிர்வாகிகள் வாடகையை அதிகப்படுத்தியிருப்பது தவறான செயலாகும் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட குறைகள் ஹாஸ்டல் நிர்வாகிகளிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்பது பற்றி என்னிடம் தகவல் இல்லை. மாணவர்கள் கோரிக்கை நான்கு. நான் முன்பு கூறியதுபோல

1. Provision of steel cots for the rooms with first and second floors.

2. Four hundred stainless steel tumblers for the mess.

3. Electrical grinders for the mess.

இந்த மூன்று கோரிக்கைகளையும் நிர்வாகிகள் ஒப்புக்கொண்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். நான்காவது கோரிக்கை இந்த மூன்று வசதிகளையும் செய்துதர வேண்டும். Room rent and establishment charges to be fixed as in previous years' முன்பு இருந்தபடியே வாடகை இருக்க வேண்டும், அதை அதிகப்படுத்தக் கூடாது என்பதுதான். இந்த மூன்று வசதிகளையும் செய்து கொடுத்துவிட்டு நிர்வாகிகள் வாடகையை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். பின்னால் அந்த வாடகையில் ஒரு ரூபாயைக்கூட குறைத்திருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் இந்த நிருவாகத்தில் சர்க்காருக்குப் பொறுப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால், இப்படி மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்திருப்பது, பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளியிலிருந்து வந்திருக்கிறார்கள், அவர்களுடைய பெற்றோர்களுக்குக் கவலைதரக்கூடிய விஷயம். மாணவர்கள் மத்தியிலும் அமைதியை இழக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இந்தக் கல்லூரி இருக்கிறது. ஆகவே அங்குள்ள மக்களின் பிரதிநிதி என்ற முறையில் நான் முதல் அமைச்சர் அவர்களை 'நீங்கள் இருசாராரையும் கூப்பிட்டு அவர்களிடையே சமாதானம் செய்து வையுங்கள்' என்று கேட்டுக் கொள்கிறேன் . . . .

MR. DEPUTY SPEAKER : It is not a question.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆகவே, அந்த வகையில் அவர்கள் இருவரையும் அழைத்து, சர்க்காருக்கும் அதில் ஒரு பொறுப்பு இருக்கிறது; பல மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், பெற்றோர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களிடையே சமாதானம் செய்துவைப்பதற்கு முயற்சி எடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தவிர்க்கக்கூடாத காரணம் இருந்தால் அன்றி, இம்மாதிரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வது, வகுப்புக்குப் போகாமல் இருப்பது சரியல்ல. கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதியில் இந்தக் கல்லூரி இருப்பதினால், மாணவர்களைக் கொஞ்சம் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆகையினால் நான் கூறுவது என்னவென்றால், அவர்கள் முதலிலே இந்த மாணவர்கள் தலைவர்களை அழைத்துப் பேசிவிட்டு, சில மாணவர்களை என்னிடம் அழைத்துக்கொண்டு வந்தால் நானும் கலந்து பேசுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன முறைப்படி பச்சையப்பன் கல்லூரியில் நேற்று இரவு 9 மணிக்கு மாணவர்கள் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு அவர்களுடைய கோரிக்கைகளை நான் கேட்டிருக்கிறேன். அவர்களை அழைத்து

வருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்களும் அதேபோல நிர்வாகத்தினரை அழைத்து வந்தால், இன்றைக்கேகூட அதைப்பற்றி முடிவு செய்யலாம்

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலில் கனம் அங்கத்தினர் மாணவர்களை அழைத்துக் கொண்டு வரலாம். அவர்களோடு கலந்து பேசலாம் அதற்கப்புறம் நிர்வாகிகளை அழைத்துப் பேசலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, விடுதி நிர்வாகிகளுக்கும், விடுதியிலே வாழ்கின்ற மாணவர்களுக்கும் இடையே உறவுமுறை கெட்டிருக்கிறது. ஆகவே, இருவரும் ஒருவரை ஒருவர் சமாதானப்படுத்த முடியாத ஒரு நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, இடையிலே நடுவர் ஒருவர் இருந்து இதைத் தீர்த்தால் ஒழிய இது சுமுகமாக முடிவுறுவதற்கு வழி ஏற்படாது. எனவே, கல்வி அமைச்சர் என்ற முறையில் அவரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒரு கல்வித் துறை அதிகாரியோ ஒருவர் நடுவராக இருந்து, இருவர்களுடைய குறைபாடுகளையும் கேட்டு, அதன் மூலம் சமாதானம் ஏற்படுத்துவதற்கு ஒரு வழிவகுக்கும் முறையை மேற்கொள்ளுவது நலம் என்று நான் கருதுவதால் அம்மாதிரி செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமைச்சரோ அல்லது அதிகாரியோ இதில் தலையிடுவதைவிட, அந்தத் தொகுதியில் இருக்கிற கனம் அங்கத்தினர் அவர்கள் இதில் தலையிட்டு சமரசம் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அப்படி ஒருவேளை அவரால் முடியாதுபோனால், நான் என்னால் இயன்ற உதவி செய்கிறேன்.

திரு. சா. கணேசன் : மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்ல மறுக்கும் நிலை ஏற்படுவதிலிருந்து ஒன்று நமக்குப் புலனாகிறது. நிர்வாகிகளுக்கும், மாணவர்களுக்கும் இடையிலே இந்தவிதமான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, அதன் மூலம் ஸ்டிரைக் ஏற்படாமல் இருப்பதற்கு வசதியாக பொதுவாக எல்லாக் கல்லூரிகளுக்கும் இந்தத் தொத்து நோய் பரவாமல் இருப்பதற்காக, அரசாங்கம் இதற்கு ஒரு உச்சவரம்பு ஒன்றை ஏற்படுத்த, ஹாஸ்டல் கட்டணம் இவ்வளவுதான் இருக்கவேண்டும் என்று முடிவு செய்ய, அரசாங்கம் ஆலோசிக்குமா, அப்படிச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு உச்சவரம்பு ஏற்படுத்துவது சாத்தியம் அல்ல. ஏனென்றால் கட்டிடம் சமீப காலத்தில் கட்டப்பட்ட கட்டிடமாக இருக்கலாம், மாணவர்கள் தேவை ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு விதமாக இருக்கலாம், அல்லது பழைய கட்டிடமாக இருக்கலாம். எவ்வளவு தூரம் வாடகை கொடுக்கலாம் என்பது இவைகளையெல்லாம் பொருத்திருக்கிறது. நான் என்ஜினியரிங் கல்லூரி ஹாஸ்டல், மெடிகல் கல்லூரி ஹாஸ்டலைப் பார்த்திருக்கிறேன். கலைக் கல்லூரி ஹாஸ்டல் இருக்கிறது.

அங்கெல்லாம் வெவ்வேறு விதமாக இருக்கிறது. வாடகையும் வெவ்வேறு விதமாக இருக்கிறது. ஆகையினால், இதற்கு உச்சவரம்பு கட்டுவது சாத்தியமல்ல.

திரு. மு. கருணாநிதி : பச்சையப்பன் கல்லூரியின் முதல்வர் இது பற்றி அமைச்சர் அவர்களுக்கு அறிவிப்பு செய்தாரா? சமாதானத்துக்கான முயற்சிகளை மேற்கொண்டாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரியின் சார்பாக யாரும் என்னிடம் வரவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகப் போராட்டம்

***தனி. உறுப்பினர் கேள்வி எண் 1 : திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்டுள்ள இந்தித் திணிப்புக் கண்டன அறப்போராட்டத்தையொட்டி, நகரச்சட்டம் 41-வது பிரிவின் கீழும், கி.பு.கோ. 144 பிரிவின் கீழும் எந்த எந்த ஊர்களில் தடையுத்தரவு எவ்வளவு காலத்திற்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது ?

(இ) கி.பு.கோ. 151-வது பிரிவின் கீழ்க் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் மொத்தம் எத்தனை பேர் மாவட்டவாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) An order under Section 41 of the City Police Act has been promulgated, to be in force in Madras City, for a period of one month from the midnight of 12/13th November 1963. Information[a] regarding the places where orders under Section 144, Criminal Procedure Code have been promulgated is placed on the table of the House.

(*b*) 770 persons have so far been arrested under Section 151, Criminal Procedure Code as follows :—

Madras City	280
North Arcot	80
South Arcot	1
Coimbatore	212
Madurai	13
Salem	71
Thanjavur	71
Tiruchirappalli	17
Ramanathapuram	25

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த 144 தடை உத்தரவு பிறப்பிப்பதற்கு அரசினர் கொண்டுள்ள காரணங்கள் என்ன ? முன் கூட்டியே இவ்வளவு பேர் கைது செய்யப்பட்டிருப்பதற்கு அரசினர் கொண்டுள்ள காரணம் என்ன ?

[a] Printed as Appendix I on page 777 infra.

[23rd November 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பே காரணங்களை விளக்கி இருக்கிறேன். சென்ற 17-ம் தேதி, தி.மு. கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் 4 பேர்களைச் சேர்த்துக்கொண்டு, கடற்கரையில் பகிரங்கமாக அரசியல் அமைப்புச் சட்டத்திலே ஒரு அத்தியாயத்தைக் கொளுத்தப் போவதாகத் தெரிவித்தும், பல நாட்களாகவே அவ்வாறு பிரகடனம் செய்துகொண்டுமிருந்தார். அன்று கொளுத்த முடியாமல் போய்விட்டால், நான் மறுபடியும் கொளுத்துவேன், எப்படியாகிலும் கொளுத்தியே தீருவேன் என்று சொல்லி இருந்தார். அந்தக் குற்றம் நடைபெறுகிற வரையில் காத்துக் கொண்டிருந்தால், அமைதிக்குப் பங்கம் ஏற்படும், நிரபராதிகள் பாதிக்கப்படுவர். மேலும், அதை ஒட்டி கூட்டங்கள் நடத்தப் போவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அப்படி கூட்டங்கள் நடத்துவதாக இருந்தாலும், ஹிந்தித் திணிப்பை எதிர்த்துமட்டும் கூட்டம் என்று நினைக்க முடியாது. அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொளுத்துவதும் அதிலே சம்பந்தப் பட்டிருக்கிறது. இது சம்பந்தமான கூட்டங்களை அனுமதிப்பது முறையல்ல என்பது அரசாங்கத்தின் கருத்து. அதோடு, குறிப்பிட்டவர்கள் இந்தக் காரியத்திலே ஈடுபடுவார்கள் என்று தெரிவித்துவிட்டு, தடை ஏற்பட்டால் அவர்கள் மீறவேண்டியதில்லை. மற்றவர்கள் மீறலாம் என்ற நிலைமை இருந்தது. அதைத் தவிர்க்க வேண்டியது மற்றொரு காரணம். மேலும், இன்றைக்கும் நாளைக்கும் தமிழ் நாடு எங்கும் கண்டனக் கூட்டங்கள் நடைபெறும் என்றிருந்தது. இது வெறும் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் மட்டுமல்ல, அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிப்பதும் அதிலே இணைக்கப்பட்டிருந்தது. இத்தகைய கண்டனக் கூட்டங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பது மற்றொரு காரணம். அதனால் தான் 144-வது செக்ஷன் படியோ அல்லது வேறு செக்ஷன் படியோ தடை உத்தரவு போடப்பட்டது. ஏற்கெனவே நடைபெற்ற அனுபவமும் நமக்கு இருக்கிறது. சென்ற வருடம் ஜூலை மாதத்தில் தி.மு. கழகத்தினர் நடத்திய போராட்டத்தின் அனுபவத்தைக் குறிப்பிடுகிறேன். எனக்கு ஞாபகம் இருக்கிறது, அப்பொழுது என் முன்கூட்டியே சர்க்கார் அரெஸ்ட் செய்யவில்லை என்று எதிர்க்கட்சியில் இருக்கிற அங்கத்தினர்களே இந்த மன்றத்தில் கூறினார்கள். ஆகவே அமைதியை நிலைநாட்டவும், குற்றம் செய்யாமல் தடுப்பதற்கும், குற்றம் செய்வதாகக் கங்கணம் கட்டிக்கொண்டு இருப்பவர்களைப் பார்த்துக் கொண்டிராமல், அவர்கள் அப்படிக் குற்றம் செய்வதற்கு இடம் கொடுக்காமல் இருப்பதற்கும் இத்தகைய காரணங்களுக்காக தடை உத்தரவு போடப்பட்டது. அதை ஒட்டி அரெஸ்டும் செய்யப்பட்டது.

திரு. செ. மாதவன்: திருச்சி நகரிலும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த துறையூரிலும், தடை உத்தரவு இருந்தும், காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தையும் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கக்கூடிய இன்னொரு கட்சிக் கூட்டத்தையும் போடுவதற்கு சர்க்கார் அனுமதித்துவிட்டு, தி.மு. கழகக் கூட்டத்தை மட்டும் தடை செய்வது முறையா? அப்படி அனுமதித்தது ஜனநாயகத்திற்கு உகந்ததா?

23rd November 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எல்லாவற்றிற்கும் ஜனநாயகம் இருக்கிறது. ஒரு கட்சிக்கு மட்டும் அனுமதி என்பதல்ல. பொதுவாகத் தடை உத்தரவு போடப்பட்டது. வேறு கட்சிகள் கூட்டம் போடுவதை அனுமதித்திருந்தால், அதிலே தப்பு ஒன்றுமில்லை. ஏனென்றால் தி.மு. கட்சி ஒன்றுதான் அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிப்பதை அடிப்படையாகக் கொண்டது. தடை உத்தரவு போடுவதற்கு முன்பே சில கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையிலே, பரிசீலனை செய்யப்பட்டு ஒரு சில கூட்டங்களுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது. நான் பேச வேண்டிய ஒரு கூட்டம் தடை உத்தரவு போட்டதனால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. நாளைக்கு நான் திருச்சி செல்வதாக இருந்தேன். அங்கே நடைபெற இருந்த ஒரு கூட்டமும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: அமைச்சர் அவர்கள் கொடுத்த கணக்கில், நேற்று இரவு கடலூர்ப் பகுதியிலும், ராமநாதபுரம் மாவட்டத்திலும் கைது செய்யப்பட்ட கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை சேர்க்கப்பட்டுள்ளதா? குறிப்பிட்டவர்கள், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட இடத்தில்தான் மீறுவார்கள் என்று பத்திரிகைகளிலே அறிவித்திருந்தும் கூட, எல்லோரையும் கைது செய்வதற்குக் காரணம் என்ன? அத்தனை பேரும் தடை உத்தரவை மீறுவார்கள் என்று அரசாங்கம் கருதியதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் அளித்த விடை நேற்று தயாரிக்கப்பட்டது. நேற்று இரவு விஷயம் தெரியாது. அது இதிலே சேர்க்கப்பட்டிருக்காது. யார் யார் தடையை மீறுவார்கள் என்பது தி.மு. கழகத்தின் தலைவர்களுக்குத் தெரியும். அந்த ஸ்தாபனத்திற்குத் தெரியும். அரசாங்கத்திற்குத் தெரியாது. யார் யார் பெயர் குறிப்பிட்டிருக்கிறார்களோ, அவர்களைத் தவிர மற்றவர்களும் மீறலாம் என்றால், யார் யார் மீறக் கூடும் என்று போலீசாருக்குத் தெரிகிறதோ அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது போலீசாரின் கடமையாகும்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: சென்னை நகரில் 17-ம் தேதி நடைபெறும் எரிப்புப் போராட்டத்தில் 5 பேர்கள் மட்டுமே கலந்து கொள்வார்கள் என்று திட்டவட்டமாக அறிவிக்கப் பட்டிருந்தும், மற்றைய மாவட்டங்களிலும் 144-வது செக்ஷன் கீழ் தடை உத்தரவு போட்டுத் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அநேகம் பேரைக் கைது செய்வதற்கு என்ன காரணம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எரிப்புப் போராட்டம் 17-ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. அன்றைக்கு நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிற வேறு சில இடங்களில் எரிப்புப் போராட்ட இயக்கம் நடக்குமென்று அரசாங்கத்திற்குப் புலன் கிடைத்திருக்கிறது. எரிப்புப் போராட்டத்தை இந்தக் கட்சியினர் கைவிடுகின்ற வரையில், ஹிந்தி எதிர்ப்புக்காக எந்தக் கூட்டம் போட்டாலும், அதிலே இந்த எரிப்புப் போராட்டமும் இணைந்திருக்கும் என்று அரசாங்கம் கருதி, தடை உத்தரவு போடப்பட்டது.

திரு. மு. கருணாநிதி : பெரியார் அவர்கள் அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதாக அறிவித்தபொழுது, அரசினர் தடை உத்தரவு போட்டார்களா? இப்பொழுது போடப்பட்ட தடைச் சட்டத்தை இன்னும் எவ்வளவு காலத்திற்கு நீடிப்பதாக உத்தேசம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்பொழுதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு, பலர் சிறைக்குச் சென்றார்கள். பெரியார் மீதும் கேஸ் போடப்பட்டு, அவர் சிறைக்கு அனுப்பப்பட்டது கனம் அங்கத்தினருக்கும் தெரியும். இந்தத் தடை உத்தரவை அரசாங்கம் அனாவசியமாக நீடிக்காது. இன்றைக்கும், நாளைக்கும் கண்டனக் கூட்டங்கள் நடக்குமென்று சொன்னார்கள். அதைப் பார்த்துக் கொண்டு, 25-ம் தேதி நிலைமையை அறிந்து, எவ்வளவு தூரம் தடை உத்தரவைத் தளர்த்த முடியுமோ, அவ்வாறு தளர்த்தலாம் என்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், இந்த பிரிவினை தடை சட்டம் காரணமாக லட்சியத்தையே கைவிட்டு செல்வாக்கை இழந்து விட்டதால், மீண்டும் செல்வாக்கைப் பெற இந்த ஹிந்தி எதிர்ப்பும், எரிப்புப் போராட்டமும் ஒரு அரசியல் "ஸ்டண்ட்" ஆக செய்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கத்தினர் அபிப்பிராயம் அது.

திரு. கே. ஏ. மதியழகன் : சார், இந்த தடையுத்தரவு அமுலுக்கு வந்த பிறகு, சென்னையில் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி சார்பில் பிரதமர் பிறந்த தினக் கொண்டாட்டத்திற்கு அனுமதி கொடுத்ததற்கும், அதே மாதிரி 2, 3 நாட்களுக்கு முன்பு திருச்சியில் முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜர் கலந்து கொள்ள இருந்த கூட்டத்திற்கும் விதிவிலக்கு கொடுத்ததற்கும் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னை நகரிலே பிரதமர் பிறந்த தினத்தை ஒட்டி ஒரு பிரம்மாண்டமான ஊர்வலம் நடத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்து வைத்திருந்தார்கள். அது கைவிடப்பட்டது ஜில்லா காங்கிரஸ் கமிட்டியாருக்கு மிக்க வருத்தம். முன்னதாகவே கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அனுமதியும் கொடுத்திருந்தார்கள். அதேபோல்தான் திருச்சியிலும் முன்னதாகவே அனுமதி கொடுக்கப்பட்டு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

திரு. எம். எஸ். மணி : சார், இந்த 144 தடையுத்தரவு திருச்சியில் நேற்று போடப்பட்டு இருக்கிறது. முன்பே 21-ந் தேதிக்கு கூட்டம் நடத்த அனுமதி கேட்கப்பட்டிருந்தால் அரசாங்கம் கொடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த 23, 24 ந் தேதி கண்டனக் கூட்டம் நடைபெறும், இரண்டு நாட்களிலும் அனுமதி நிச்சயமாகக் கிடையாது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தடையுத்தரவு போட்டது முற்றிலும் சரி. அமைதிக்குப் பங்கம் வரக்கூடாது. அறிஞர் அண்ணாதுரை 'எரிக்கப்போகிறேன்' என்று திருப்பித் திருப்பி பேசியதால் அது ஆட்சேபிக்கத்தக்கது என்று அதை தடை செய்யாமலில் தடை போடப்பட்டது.

Some Members rose............

MR. DEPUTY SPEAKER: I have allowed fifteen minutes for this question. We will take up the next question.

ஆரம்ப மருத்துவ மனை (திருச்சி மாவட்டம்)

*484 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திருச்சி மாவட்டம் முசிரி வட்டத்திலுள்ள டி. புதூர் ஆரம்ப மருத்துவ மனை கட்டுவதற்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு? அதில் மக்கள் பங்குத் தொகை எவ்வளவு?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: டி. புதூரில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் எஸ்டிமேட் தொகை ரூ. 67,000. பொருள் வகையிலும் உழைப்பின் மூலமும் பொதுமக்கள் அளித்த பங்குத்தொகை ரூ. 15,000. ரூ. 7,000 மதிப் புள்ள நிலமும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

The estimated cost of construction of building for the Primary Health Centre at T. Puthur was Rs. 67,000. The public contribution was Rs. 15,000 in kind and labour. Seven acres of land valued at Rs. 7,000 was also given as gift.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, புதூரில் புதிய தாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் இப்பொழுது அந்த மருத்துவ மனை நடக்காமல் வாடகைக் கட்டடத்தில் நடப்பதாகத் தெரிகிறது. அப்படி வைக்கக் காரணம் என்ன? கட்டடம் கட்டிய பிறகு அங்கே ஆஸ்பத்திரி எவ்வளவு காலம் நடைபெற்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், இந்தக் கட்டடம் 11—3—1960-ல் பூர்த்தியாகி ஹாண்ட் ஓவர் செய்தார்கள். அதற்குப் பிறகு மே 1962 வரை அந்தக் கட்டடத்திலே பிரைமரி ஹெல்த் சென்டர் இருந்தது. அதன் பிறகு வந்த புயல், மழை, காற்று இவை காரணமாக அந்தக் கட்டடம் பழுதுபட்டு கிராக் விட்ட காரணத்தால் வேறு கட்டடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதற்கு முன்பு கேட்கப்பட்ட தடையுத்தரவு பற்றிய கேள்விக்கு இன்னும் திருப்தி கரமாக பதில்கள் வேண்டியிருப்பதால் தாங்கள் தயவுசெய்து இங்கே தடையுத்தரவு போடாமல் கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தக் கேள்வி பாஸ் ஆகி அடுத்த கேள்விக்கு அமைச்சர் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது அதைப் பற்றிக் கிளப்ப இடமே இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்தப் பக்கத்திலே இருக்கிற உறுப்பினர்கள் உப கேள்விகள் போட அடிக்கடி கையைத் தூக்கி இருந்தாலும் கனம் உதவி சபாநாயகர் அவர்கள் இங்கே பார்க்காத காரணத்தால் நாங்கள் கேள்விகள் கேட்க முடியவில்லை. ஆகவே இந்தக் கேள்விக்கு மேலும் அரைமணி நேரம் ஒதுக்கி விவாதம் நடத்த சபை முதல்வர் ஒப்புக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 10-00 மு.ப.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இன்றைக்கு இந்த கேள்விகள் எல்லாம் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் சப்ளிமெண்டரி கேள்விகள் வேண்டியதில்லை. அப்படியே ப்ரொஸிடிங்ஸில் என்டர் பண்ணி விடலாம் என்று அங்கத்தினர்கள் ஒப்புக் கொண்டால், இன்னும் அரை மணி நேரத்திற்கு அந்தக் கேள்வியைப் பற்றியே பதில் சொல்லலாம். ஆனால் அது ஒரு நல்ல ப்ரிஸிடெண்ட் ஆக இருக்காது.

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறிய ஒழுங்குப் பிரச்னை சரியானதல்ல. இங்கே சேரில் இருப்பவர் கண்ணில் பட்டிருந்தால் அங்கத்தினர் கேள்வி கேட்க அனுமதிக்கப்பட்டிருப்பார். வேண்டும் என்றே அனுமதிக்கப்பட வில்லை என்று நினைப்பது சரியல்ல. ஆகவே அவர் எழுப்பியது ஒரு ஒழுங்குப்பிரச்னை ஆகாது.

சித்த வைத்தியச் சாலைகள்

*485 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) Sidha Dispensary என்பதை Modern Medicine என்று மாற்றும்போது அங்கே வேலை செய்துவரும் டாக்டர்களுக் குள்ள தகுதி என்ன?

(இ) சித்தா டிஸ்பென்சரியில் வேலை செய்யத் தகுதி பெற்றவர் களையே Modern Medicine டிஸ்பென்சரியில் வேலை செய்ய அரசாங் கம் அனுமதிக்குமா?

(உ) சித்தா டிஸ்பென்சரி மாடர்ன் டிஸ்பென்சரியாக மாற்றப் பட்ட நகராட்சிகள் தமிழ்நாட்டிலே எங்கே எப்போது ஆரம்பிக்கப் பட்டது?

(எ) நகராட்சி Siddha Dispensary -களில் பணியாற்றும் L.I.M. டாக்டர்களுக்குக் கீழ் உதவி புரியும் Pharmacist களை Modern Medicine Dispensary ஆக மாற்றிய பிறகும் தொடர்ந்து வேலை செய்யலாமா? அல்லது வேறு பயிற்சிகள் கொடுக்கப்பட்ட பிறகுதான் பணியாற்ற வேண்டும் என்ற விதி யுள்ளதா?

[23rd November 1963

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) G.C.I.M., L.I.M. போன்ற கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ள 'A' வகுப்பு மருத்துவர்கள் முறையான மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப் படுகின்றனர். 'A' வகுப்பு மருத்துவர்கள் கிடைக்காமற்போனால், சில கிராம சித்த வைத்திய மருந்துசாலைகளில் B&C வகுப்பு மருத்துவர்கள் மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர்.

(இ) சித்த வைத்திய மருத்துவச்சாலைகளில் பணிபுரிபவர்கள் தேவையான கல்வித் தகுதியைப் பெற்றிருந்தால், அந்த மருத்துவச் சாலைகள் இங்கிலீஷ் வைத்திய மருந்துச்சாலைகளாக மாற்றப்பட்ட
10-00 a.m. பிறகுகூடத் தொடர்ந்து வேலையிலிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

(உ) திருவாரூர் முனிசிபல் கவுன்சில் விஜயபுரத்திலும் கொடிக்கால்பாளையத்திலும் நடத்தும் முனிசிபல் சித்த வைத்திய மருந்துச்சாலைகளை இங்கிலீஷ் வைத்திய மருந்துசாலைகளாக மாற்ற முறையே 1960-லும், 1963-லும் அனுமதி வழங்கப்பட்டது.

(எ) அங்குள்ள பார்மசிஸ்டுகள் இங்கிலீஷ் வைத்திய மருந்துச் சாலைகளில் பணியாற்றத் தகுதி பெற்றவர்களாக இருந்தால், அவ்வாறு மாற்றப்பட்ட இங்கிலீஷ் வைத்திய மருந்துச்சாலையில் அவர்கள் தொடர்ந்து பணியாற்றலாம்.

திரு. சி. ம. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, திருவாரூரில் இருந்த சித்த வைத்திய டிஸ்பென்சரியை, மாடர்ன் வைத்திய டிஸ்பென்சரியா மாற்றியபொழுது அங்கிருந்த எல்.ஐ.எம். டாக்டர்களுக்கு மூன்று மாத பயிற்சி அளித்து மீண்டும் அதே ஆஸ்பத்திரியில் வேலை செய்கிறார்கள். அதுபோல அங்கிருந்த சித்த வைத்திய பார்மஸிஸ்ட்டுகளுக்கும் மாடர்ன் வைத்திய முறையில் பயிற்சி கொடுத்து அவர்களை அங்கேயே வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவ்வாறு பயிற்சி சித்த வைத்திய டாக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டது போல், பார்மஸிஸ்ட்டுகளுக்குக் கொடுப்பது முடியாது.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், ஒரு ஆண்டுக்கு முன்பாக சித்த வைத்தியத் தேர்வு நடைபெற்றது. அதன் முடிவு இன்னும் அறிவிக்கப்படவில்லை. எப்பொழுது வெளியிடப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கூடிய சீக்கிரத்தில் வெளியிடப்படும் என அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டம்

*486 **கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

இப்போது தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பணி புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை என்ன ?

23rd November 1963]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Particulars of staff employed in this State under the National Malaria Eradication Programme are as follows :—

Gazetted	31
Non-Gazetted including Mazdoors ...	7,912

திரு. மு. சண்முகம் : சார், தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகை எவ்வளவு? நம் அரசாங்கத்தில் இருந்து எவ்வளவு செலவிடப்படுகிறது? மத்திய அரசாங்கத்தில் இருந்து எவ்வளவு கொடுக்கப்படுகிறது? அமெரிக்க அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்படும் தொகை எவ்வளவு என அறிய விரும்புகிறேன் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், ஏற்கனவே 1954-55-ல் ஒதுக்கப்பட்ட தொகை . . . .

MR. DEPUTY SPEAKER : Questions 487 and 488 may also be answered now as they relate to the same subject.

*487 **கேள்வி.—திரு. எஸ். ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அமெரிக்க சர்க்காரால் மலேரியா ஒழிப்பிற்காக கொடுக்கப்பட்ட தொகையில் நம் மாநிலத்திற்கு கிடைத்த பங்குத் தொகை எவ்வளவு ?

(இ) 1962-63-ல் இம் மாநிலத்தில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 1962-63-ல் U.S.A.I.D. (T.C.M.) -ல் இருந்து வண்டிகள், மருந்துகள், மற்ற சாதனங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை இலவசமாகப் பெற்ற வகையில் நமது மாநிலத்திற்குக் கிடைத்த உதவியின் தோராய மதிப்பு ரூ. 16,53 லட்சமாகும்.

(இ) இத்திட்டத்திற்காக 1962-63-ல் செய்த தோராய செலவு ரூ. 105·03 லட்சம் ஆகும்.

*488 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the pupils of an elementary school at Tiruchirappalli were affected by taking anti-malaria pills distributed to them under the National Malaria Eradication Programme in June 1963; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சபையில் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

---

[a] 778-ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. செ. மாதவன் : ஸார், அமைச்சர் அவர்கள் தந்து இருக்கிற இந்த அறிக்கையில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட மலேரியா தடுப்பு மாத்திரையினால் தீமை விளைந்தது என்றும் மற்ற வேறொரு மாத்திரை கொடுக்க உத்திரவு இட்டு இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. முதல் மாத்திரையின் தரம் என்ன? அது எந்த நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டது? அதனால் தீமை விளைகிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு எப்போது தெரிய வந்தது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், மலேரியாவின் தடுப்பு மாத்திரைகள் எல்லாமே குவினேயின் பிராடக்ஸ்கள் தான் முதலில் கொடுக்கப்பட்ட 'காமோகுவின்' மாத்திரை சிலருடைய சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளாமல் ஜுரம், வாந்தி உண்டுபண்ணியதால், அவர்களுக்கு அந்த மாத்திரைக்குப் பதிலாக 'குளோரோகுவின்' என்ற மாத்திரையைக் கொடுக்கும்படி உத்தரவு இடப்பட்டது. மாத்திரையில் ஒன்றும் கோளாறு இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஸார், இந்த மலேரியா ஒழிப்புத் திட்டத்தை இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நடத்துவதாக உத்தேசம்? இப்போது இந்தத் திட்டத்தை எந்தெந்த முறைகளிலே கையாண்டு வருகிறார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மலேரியா ஒழிப்புத் திட்டம் அநேகமாக கடைசி கட்டத்தில் தான் இருக்கிறது. 1964-ம் ஆண்டுக்குள் முடிந்து விடும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், National Malaria Eradication Programme என்ற இந்த மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பணியாற்றுகின்ற ஊழியர்கள் 10 மைல், 20 மைல் நடந்து போக வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்குப் பயணப்படியும் கொடுக்கப்படுவதில்லை. வொர்க்கர்ஸ் அலவன்ஸும் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுடைய வேலையும் இன்னும் நிரந்தரம் ஆக்கப்படவில்லை. அவர்களுக்கு எப்போது விமோசனம் இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், இந்த மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் வேலை செய்யும் ஊழியர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படும் சம்பளத்தை விட அதிகமாகக் கொடுக்க முடியாது. அவர்களுடைய உத்தியோகத்தை நிரந்தரமாக்கும் விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

சிறு தொழில்கள் (ராமநாதபுரம்)

*489 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறிய கைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்காக (Small-Scale Industries) கிழக்கு இராமநாதபுரம் வட்டத்தில் சர்வே செய்யப்பட்டதா?

(இ) ஆமென்றால், அங்கே என்ன தொழில்கள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A Techno Economic Survey of Madras State was conducted during 1958-60 by the National Council of Applied Economic Research which assessed the potentialities of the entire State. The Economic Investigation Team attached to the Small Industries Service Institute, Madras also conducted a Small Scale Industries Area Survey of the Ramanathapuram district as a whole.

(b) The purpose of the surveys was to indicate the scope and potential for the development of existing and new industries for the benefit of the industrial entrepreneurs. The Government are providing necessary assistance in the nature of loan, technical guidance service facilities, etc.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, காரைக்குடியில் நடந்த 'இண்டஸ்ட்ரியல் ஸெமினாரில்' கிழக்கு ராமநாதபுரத்தில் இன்னின்னத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இருப்பதாகச் சொன்னார்களே அந்தத் தொழில்களை ஏற்படுத்தும் யோசனை எந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்ட்ராமன் : அவர்கள் ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

Vadamavali Anicut

*490 Q.—SRI A. P. DHARMALINGAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the foundation stone for Vadamavali Anicut in Thirupathur taluk, Ramanathapuram district, was laid in July 1963;

(b) the amount spent for that function; and

(c) the department which arranged that function?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) Rs. 200.

(c) the function was arranged by the Revenue Department (the Collector of Ramanathapuram district.)

திரு. எம். எல். மணி : தலைவர் அவர்களே, அந்த விழாவிற்கு அந்த மாவட்டக் கலெக்டர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த விழாவிற்கான அழைப்பில் அந்தத் தொகுதியில் தோற்றுப் போன மாஜி எம்.எல்.ஏ. பெயர் அச்சிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரை அழைக்காததன் காரணம் என்ன?

[23rd November 1963

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தொகுதி அங்கத்தினரை அழைக்காததற்கு மந்திரி அவர்கள் பொறுப்பாளி அல்ல. யார் யாரைக் கூப்பிட வேண்டுமோ அவர்களை எல்லாம் கலெக்டர் அவர்களே கூப்பிடுகிறார்கள்.

தமிழாசிரியர் பயிற்சி

*** 491 கேள்வி—புலவர் கா. கோவிந்தன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இம் மாநிலத்தில் எந்தெந்த ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் தமிழாசிரியர் பயிற்சிக்கு வசதி செய்யப்பட்டுள்ளது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பின்வரும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தமிழாசிரியர் பயிற்சிக்கு வசதி செய்யப் பட்டுள்ளது:—

1. சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.
2. குமாரபாளையம் அரசாங்கப் பயிற்சிக் கல்லூரி.
3. வேலூர் அரசாங்கப் பயிற்சிக் கல்லூரி.

புதுக்கோட்டை அரசாங்கப் பயிற்சிக் கல்லூரியிலும் தமிழாசிரியர் பயிற்சிக்கு வசதி செய்ய அரசாங்கம் அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது.

Pandits' Training Courses are conducted in the following Training Colleges:—

(1) Teachers' College, Saidapet.
(2) Government Training College, Komarapalayam.
(3) Government Training College, Vellore.

The Government have recently sanctioned the starting of this course in the Government Training College, Pudukottai, also.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, முதல்நிலை தமிழாசிரியர் ஆகப் பணியாற்ற ஆசிரியர் பயிற்சி மட்டும் இருந்தால் போதுமா? வேறு ஏதாவது தகுதிகளும் அங்கே வேண்டப் படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப் பற்றி தனிக் கேள்வி தேவை.

Adulteration of food

*492 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the details regarding adulteration of foodstuffs harmful to the public health, prevailing in the State; and

(b) the measures already taken and proposed to be taken for preventing such adulterations?

23rd November 1963]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) & (b) A statement [a] is placed on the table of the House.

கிராமசேவக் பயிற்சி

*** 493 கேள்வி—திரு. ம. கமலநாதன்:** கனம் முதல் நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் இம் மாநிலத்தில் எத்தனை பேருக்கு எங்கெங்கு கிராம சேவக் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 844 நபர்களுக்கு கீழ் சொல்லப் பட்ட பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது:—

பயிற்சி நிலையம், ஆடுதுறை	63
,, சத்தியவிஜயநகரம்	116
,, பட்டுக்கோட்டை	117
,, கிருஷ்ணகிரி	119
,, டி. கல்லுப்பட்டி	120
,, கோவில்பட்டி	118
,, பவானிசாகர்	191
	844

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, இந்த கிராம சேவக் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் அதிகமாக மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் அங்கத்தினர் மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கூறுவது சரியல்ல. நான் ஜில்லாவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை வாசித்து விடுகிறேன்—

செங்கல்பட்டு	18
வட ஆற்காடு	104
தென் ஆற்காடு	60
திருச்சி	127
தஞ்சாவூர்	73
சேலம்	109
மதுரை	65
ராமநாதபுரம்	90
திருநெல்வேலி	110
கன்னியாகுமரி	51
நீலகிரி	7
கோயம்புத்தூர்	27
சென்னை	3

[a] Printed as Appendix III on pages 778-780.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது கிராம சேவக் என்று அழைக்கப்படுகிற சொல் என்ன மொழி? தனித் தமிழ் இல்லை. அதைத் தனித் தமிழில் அழைப்பதற்கு என்ன தடை?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பெயரை கிராம மக்கள் எல்லாம் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளில் பயிற்சி பெற்ற கிராம சேவக்குகளில் மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே அதிகமாக இருக்கிறார்கள். சேலம் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் குறைவாக இருக்கிறார்கள்? இவ்வாறு கிராம சேவக்குகளைத் தேர்ந்தெடுக்கும்போது பின் தங்கிய சேலம் மாவட்டத்திற்கு இனியாவது அதிகப் பங்கு கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்? ... ...

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நான் மாவட்ட ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை வாசிக்கும்போது மதுரை 65, ராமநாதபுரம் 90, சேலம் 109 என்று சொன்னேன். ஏற்கனவே சேலம் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதிகமாகத்தான் இருக்கிறார்கள்.

திரு. க. ர. நல்லசிவம் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் ஜில்லாவில், 27 கிராம சேவக்குகள் தேர்ந்தெடுப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை அவ்வளவு தானா? அல்லது அதிகப் பேர்கள் விண்ணப்பத்திருக்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : விண்ணப்பம் போட்டவர்களில் தகுதி உள்ளவர்களைத் தான் நான் சொன்னேன்.

Social Welfare Workers

* 494 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the functions of the Social Welfare Workers working in the panchayat union councils ? ..

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது குறித்து சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இந்த கிராம நல ஊழியர்களின் பணியைப் பற்றி ஒருவருக்கும் சரியாகத் தெரியவில்லை. அதனால்தான் அவர்களும் சரியாகப் பணி செய்ய முடியாமல் இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா?

[a] 780-781-ம் பக்கங்களில் நான்காவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எல்லா கிராம சேவக்குகளும் சரியாக வேலை செய்யவில்லை என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அங்கத்தினர் தன்னுடைய பகுதியிலே ஏதாவது தனிப்பட்ட ஒரு கிராம சேவக் சரியாக வேலை செய்யவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, சென்ற பட்ஜட் கூட்டத்திலேயே, திருவண்ணாமலை, தாிஞ்சாபுரம் என்ற இடத்தில் உள்ள கிராம சேவக் வியாபாரியாகவும் இருக்கிறார் என்பதைச் சொன்னேன். இது வரையில் எந்த விதமான நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்பட வில்லை. அரசாங்கத்தின் சம்பளத்தை வாங்கிக் கொண்டு இவ்வாறு வியாபாரியாகவும் இருக்கலாமா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதைப் பற்றிய தகவல் எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கலாம்.

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் (நியமனம்)

* 495 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வட்டார வளர்ச்சி அதிகாரிகள்—பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் பதவிகளுக்காக கீழ்க்கண்ட முறைகளில் நியமனங்கள் செய்யப்படுகின்றன :—

(i) வேறு யாதொரு வகுப்பு அல்லது சேவையிலிருந்து மாற்றம் மூலம்.

(ii) சமூகக் கல்வி அமைப்பாளர்கள் தரத்திலிருந்து பதவி உயர்வு மூலம்.

(iii) தாசில்தார்களையும், செக்ரடேரியட் சூப்பரின்டென்டுகளையும், ரெவின்யூ போர்டு சூப்பரின்டென்டுகளையும் ஓராண்டுக்குக் குறையாமல் நியமித்தனுப்புவதன் மூலம்; டெபுடி கலெக்டர்களின் அங்கீகாரப் பட்டியலில் சேர்க்கப் பெறுவதற்கான தகுதியை மேலே குறிப்பிட்டவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களாக ரெவின்யூ இலாக்காவில் வேலை செய்து வந்தவர்களைப் போடுவதினால் கஷ்டம் ஏற்படுகிறது. அவர்கள் ரெவின்யூ இலாக்காவில் எவ்வாறு தர்பார் நடத்தினார்களோ அது போலவே கிராம ராஜ்ய அமைப்பாகிய பஞ்சாயத்து யூனியன்களிலும் தர்பார் நடத்துகிறார்கள். ஆகவே பஞ்சாயத்து இயக்கங்களில் அனுபவப்பட்டவர்களை பி.டி.ஓ.க்களாகப் போடுவார்களா?

[23rd November 1963

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அனுபவப்பட்டவர்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். ரெவின்யூ இலாக்காவில் இருந்துவந்தவர்கள் தான் தர்பார் நடத்துகிறார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் தாசில்தாராக பணியாற்றியவர்களுக்கே உத்தியோக உயர்வு கொடுப்பது என்று உத்திரவு இருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா ?

THE HON. SRI S. M. A. MAJID : As this proposal involves dislocation of work in the Panchayat Unions it has been suggested that the training may be given only to such of those persons who have to be actually appointed as Deputy Collector and that they may continue as Panchayat Union Commissioners till they are actually promoted as Deputy Collectors.

திரு. ஆ. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் வேலை செய்யும் மானேஜர்களுக்கு பி.டி.ஓ. பிரமோஷன் கொடுப்பதில் முதல் சலுகை கொடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இப்போதுள்ள விதிகளின்படி கொடுக்க முடியாது என நினைக்கிறேன்.

Panchayat administration

* 496 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to group three or four panchayats together and to appoint executive officers for effective administration of Class II panchayats ?

THE HON. SRI S. M. A. MAJID : No.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு பஞ்சாயத்து அலுவல்கள் பல இருப்பதினால் பஞ்சாயத்து நிர்வாகம் திறம்பட நடைபெறவேண்டி இந்தமாதிரி ஏற்பாடு செய்தால் நல்ல முறையில் நடக்கும் என்பது என் அபிப்பிராயம். அதைப் பற்றி சிந்தித்து இதற்கு ஆவன செய்ய அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நான்கு, ஐந்து பஞ்சாயத்துக்களுக்குச் சேர்த்து ஒரு எக்ஸிகூடிவ் ஆபீஸரை நியமிக்க வேண்டும் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுடைய அபிப்பிராயம். நடைமுறையில் இவ்வாறு செய்வது சரியாக இருக்காது. இரண்டாவது, திருப்திகரமாக எல்லாப் பஞ்சாயத்துப் பிரசிடெண்டுகளுக்கும் நல்ல முறையில் நிர்வாகத் திறனை அவரால் காட்ட முடியும் என்ற நம்பிக்கை இல்லை. ஆகவே இந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

23rd November 1963]

நகரப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் (ஊதியம்)

* 497 கேள்வி.—திரு. எஸ். முத்துலிங்கம் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபல் கமிஷனர்களின் சம்பளத்திற்குத் தகுந்தவாறு நகர பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்த அரசினருக்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், கிராம சேவக்குகளையே பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்போவதாக ஒரு பிரபோஸல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : உண்மைதான். அது பரிசீலனையில் இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட இரண்டு லட்சம், மூன்று லட்சம் அளவுக்கு வரி வசூல் செய்யக் கூடிய ஊராட்சி மன்றங்களுக்கு நிர்வாக அதிகாரிகளாக இருப்பவர்களுடைய சம்பளம் மிகக்குறைந்த அளவில் இருப்பதினால்தான் லஞ்சப் புகார்கள் பிறக்க இடம் ஏற்படுகிறது. ஆகவே இருக்கக்கூடிய நிலைமையை ஒட்டி அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : லஞ்சம் என்பது சம்பளத்தைப் பொறுத்தது அல்ல. மக்களுடைய பண்பைப் பொறுத்தது. இப்போது இருக்கக்கூடிய முதல் கிரேட் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு 125—5—175 என்ற விகிதத்திலும், இரண்டாவது கிரேட் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு 90—4—110—3—140 என்ற விகிதத்திலும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. செலக்ஷன் கிரேட் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு 60 ரூபாய் ஸ்பெஷல் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

கடலூர் முனிசிபல் கவுன்சில்

* 498 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் முனிசிபல் அங்கத்தினர்கள் எத்தனை பேர் ராஜிநாமா செய்திருக்கின்றனர் ?

(ஆ) அவர்கள் ராஜிநாமா செய்ததற்குக் காரணம் என்ன ?

(இ) இப்போது நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (ஆ) 1920-ம் வருடத்திய சென்னை ஆரம்பக்கல்வி சட்டத்தின் கீழ் வாடகை மதிப்பு நிர்ணயிக்கப்பட்ட எல்லாக் கட்டிடங்களுக்கும், நிலங்களுக்கும்,

[23rd November 1963

1—4—1963-ம் தேதியிலிருந்து கல்வி வரி 5 சதவிகிதம் விதிக்கப்பட வேண்டும் என்ற அரசாங்க ஆணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகத்தான் கடலூர் நகர மன்ற உறுப்பினர் இருபத்துமூவர் ராஜிநாமா செய்துள்ளனர்.

(உ) நகராட்சி மன்றம், அதன் தலைவர், நிர்வாக அதிகாரி ஆகியோரின் அதிகாரங்களைச் செயல்படுத்தவும், பொறுப்புக்களை நடத்தவும், அலுவல்களை நிறைவேற்றவும் கடலூர் நகராட்சி நிர்வாக அதிகாரியே விசேஷ அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Guinea-worm disease (Singampunari Panchayat)

* 499 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the District Development Council of Ramanathapuram district regarding the eradication of the guinea-worm disease prevalent in Singampunari Panchayat Union; and

(*b*) if so, whether the Government have any scheme for the supply of protected water for that area ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *(அ) ஆம்.*

(இ) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ராட்டினக் கிணறுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் தான் இந்த வியாதி அதிகமாக இருப்பதாக அரசாங்கத்திற்கு ஏதேனும் தகவல் கிடைத்திருக்கிறதா? அரசாங்கம் இதில் தலையிட்டு அந்த வியாதிக்கு ஏதேனும் பாதுகாப்பு நடவடிக்கை செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *இந்த வியாதியை ஒழிக்க தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் 1.72 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையிலே குடி தண்ணீர் திட்டத்தை அரசாங்கம் ஏற்று செய்ய முடியாது. பஞ்சாயத்து கவுன்ஸில் பண்டு, லோகல் ஒர்க்ஸ் பண்டில் இருந்தும் தான் செலவு செய்ய வேண்டுமென்று அவர்கள் கொடுத்த ரெப்ரஸென்டேஷனுக்கு தகவல் கொடுத்திருக்கிறோம்.*

திருச்சி அரசாங்க மருத்துவ மனை (குழந்தை மரணம்)

* *500 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) திருச்சி அரசாங்க மருத்துவ மனையில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் தேதியன்று ராசலெட்சுமி என்ற நான்கு வயதுப் பெண் குழந்தை இறந்துபோனது குறித்து ஏதேனும் புகார் வந்துள்ளதா?

23rd November 1963]

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) The child, while being operated upon, died on 20th February 1963 due to cardiac arrest. Necessary intimation was sent to the Police, who held an inquest on the body on the same day and the body was handed over to the relatives. Subsequently on 21—3—1963, the father of the child complained about the death and wanted true copies of the hospital records connected with the case. The records being confidential, they could not be furnished to him. The Government are satisfied that the death was not due to negligence or want of professional skill.

திரு. எம். எஸ். மணி : ஸார், இந்தக் குழந்தை நாற்காலியில் இருந்து விழுந்ததால் எலும்பு முறிந்து விட்டதா என்பதை எக்ஸ்ரே எடுத்துப் பார்ப்பதற்காக பொது மருத்துவ மனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கே போதுமான பயிற்சி இல்லாத டாக்டர் ஒருவர் அக்குழந்தையை 'அனிஸ்த்தீஷியா' என்ற மயக்க மருந்தை அதிகமாகக் கொடுத்து குழந்தை மூச்சு திணறும்படியாகச் செய்ததினால் தான் அந்தக் குழந்தை இறந்து விட்டது என்பது உண்மையா? இதுபற்றி சென்னையில் இருந்து வந்திருந்தபோது மந்திரி அவர்களிடம் சொன்னேர்களே. அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *போதுமான பயிற்சி பெறாத டாக்டர் மருந்து கொடுத்தார் என்று சொல்லுவது தவறு. அவர் மிகவும் அனுபவமுள்ள டாக்டர் தான். பல ஆபரேஷன்களுக்கு கூட இருந்து உதவி வந்தவர். இந்த சம்பவம் நடக்கும் போது ஏ.டி.எம்.ஓ. அருகில் இருந்திருக்கிறார். அந்தக் குழந்தையை அழைத்துக் கொண்டு போனவுடன் எக்ஸ்ரே எடுத்து எலும்பு முறிந்து இருப்பதைக் கண்டுபிடித்து அதை ஒழுங்கு செய்வதற்காகவே ஆபரேஷன் தியேடருக்கு எடுத்துச் சென்றார்கள். தியேடரில் மயக்க மருந்து கொடுத்து ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்து பிளாஸ்டரை செட் பண்ணின பிறகு தான் திடீரென்று 'கார்டியோக் பெயிலியூரினால்' குழந்தை இறந்ததே தவிர, போதுமான பயிற்சி இல்லாத டாக்டரின் தவறினால் இறந்தது என்று சொல்லுவது சரி அல்ல.*

Kodambakkam over-bridge

* 501 *Q.*—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state the estimated cost for the construction of the Kodambakkam overbridge near Madras City?

The Hon. Sri V. RAMAIAH : The estimated cost of construction of approaches to the overbridge is Rs. 39 lakhs. This expenditure will be shared equally by the Government and the State

[23rd November 1963

Housing Board. Apart from this, the Railways will be constructing at their cost the portion of the bridge structure within the railway limits, the cost of which is estimated at Rs. 3.6 lakhs.

சென்னை நகரில் போக்குவரத்து நெருக்கடி

*502 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் போக்கு வரவு நெருக்கடியைத் தவிர்க்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?

(இ) சென்னை மவுண்ட் ரோடில் ஆறு வழிப் பாதை சரிவர இயங்கவில்லை என்பதை அரசாங்கம் அறியுமா?

(உ) இந்த முறைக்குப் பதில் வேறு ஏதும் புதுமுறை காணப் பட்டதா?

(எ) இதுபற்றி அரசாங்கம் புனராலோசனை செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A statement [a] is placed on the Table of the House.

(b) The six-lane system in Mount Road is functioning satisfactorily.

(c) & (d) Do not arise.

புதுக்கோட்டைப் பகுதியில் சுண்ணாம்புப் படிவங்கள்

*503 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள ஆணைக்கோட்டையில் சுண்ணாம்புக் கற்கள் கிடைப்பதால் அப் பகுதியில் தனியார்களுக்குக் கடனாகவோ அல்லது மானியமாகவோ பணம் கொடுத்து அத் தொழிலை அபிவிருத்தி செய்து அப் பகுதியில் சுண்ணாம்புப் பற்றாக் குறையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : Applications for grant of mining lease or prospecting licence for limestone from the private sector are considered on merits in consultation with the Collectors of the Districts concerned and the Director of Industries and Commerce. Lime manufacturing industry is eligible for aid under the provision of the Madras State aid to Industries Act.

ஏரியைப் புதுப்பித்தல் (திருச்செங்கோடு வட்டம்)

*504 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பாப்பம் பாளையம் கிராமத்தில் உள்ள ஏரியைப் புதுப்பிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

[a] Printed as Appendix V on pages 781-785 infra.

23rd November 1963]

(இ) இதன் மூலம் எத்தனை ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும்?

THE HON. SRI P. KAKKAN : (a) The Government have sanctioned an estimate amounting to Rs. 1.07 lakhs for the restoration of the tank under Special Minor Irrigation Programme.

(b) 126.36 acres of dry lands.

Document writers

*505 Q.—SRI S. NANJUNDA ROW,
SRI R. S. VEERAPPA CHETTIAR : } Will the Hon. the Minister for Information be pleased to state—

(a) whether there is any proposal to introduce a system of issuing licence for the document writers; and

(b) whether there is any proposal to prescribe a minimum qualification for the new document writers to enable them to get a licence?

THE HON. SRI G. BHUVARAHAN : (a) & (b) The system of licensing Document writers is in force in the Shencottah taluk of Tirunelveli district and Kanyakumari district and also at the areas transferred to this State from the Andhra Pradesh. The question of introducing this system of licensing Document writers in the rest of this State and prescribing a minimum qualification for the Document writers is under the consideration of the Government.

(அ) & (இ) பத்திரம் எழுதுபவர்களுக்கு லைசென்ஸ் வழங்கும் முறை திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை தாலூகாவிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும். ஆந்திரப் பிரதேசத்திலிருந்து இம் மாநிலத்திற்கு மாற்றலாகியுள்ள பகுதிகளிலும் அமலிலுள்ளது. பத்திரம் எழுதுபவர்களுக்கு லைசென்ஸ் வழங்கும் முறையை இம் மாநிலத்தின் எஞ்சிய பகுதிகளில் அமலுக்குக்கொண்டு வருவது பற்றியும், பத்திரம் எழுதுபவர்களுக்குக் குறைந்தபட்சத் தகுதியை நிர்ணயிப்பது பற்றியும் அரசாங்கம் யோசித்து வருகிறது.

SRI S. NANJUNDA ROW : In view of the unemployment among the educated youths, will the Government consider the possibility of fixing S.S.L.C. as the minimum qualification for the Document writers?

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, the matter is under the consideration of the Government.

[23rd November 1963

மங்களூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் (விருத்தாசலம் தாலுகா)

*506 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டத்திலுள்ள மங்களூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடத்திற்கு மாத வாடகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

(இ) அப் பஞ்சாயத்திற்காகச் சொந்தக் கட்டிடம் கட்ட உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திட்டகுடியில், மங்களூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்திற்காக மாதந்தோறும் ரூ. 150 வாடகையாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

(இ) அங்கே கட்டிடம் கட்டும் உத்தேசம் எதுவும் இப்போது இல்லை.

வெலிங்டன் நீர்த்தேக்கம்

*507 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகா கீழச்செருவாயில் உள்ள வெலிங்டன் ரிசர்வாயருக்கு மேற்கே உள்ள கொரக்கவாடி கிராமத்தில் வெள்ளாற்றில் வெள்ளம் வரும் காலத்தில் அதிகப்படியான நீரைத் தேக்கிவைக்கவும் அந்த உபரித் தண்ணீரை வெலிங்டன் ரிசர்வாயரில் தண்ணீர் குறையும்போது சப்ளை செய்யவும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) அப்படியானால், அது எப்போது நிறைவேற்றப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) To improve the storage position in the Willingdon Reservoir, the following proposals were considered and dropped for the reasons stated against them :—

(1) *Widening existing Main Supply Channel from Toludur Regulator* : By this proposal, a maximum of about 84 to 100 M.C. ft. could be made available for diversion and it would be sufficient to irrigate only 500 acres. The scheme would cost Rs. 12 lakhs which was very high for the benefit to be achieved.

(2) *Formation of a Reservoir across Vellar near Korukkavadi village limits about 8 miles above Toludur Regulator* : The proposal would cost about Rs. 60 lakhs and it was considered prohibitive. Besides, 829 acres of cultivable land would have to be acquired (for irrigating 1,500 acres), and about 1,100 families would have to be rehabilitated.

23rd November 1963]

கோயில் தர்மகர்த்தாக்கள் (அமைச்சர்கள்)

*508 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எந்தெந்தக் கோயில்களில் எந்தெந்த அமைச்சர்கள் தர்மகர்த்தாக்களாக இப்பொழுது இருக்கின்றனர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Minister is now functioning as a trustee of any religious institution in this State.

அரிகதா காலட்சேபம்

*509 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல், திரு. செ. மாதவன், திரு. பி. மூக்கையா தேவர் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் அரிகதா காலட்சேபத்தைக் கற்றுக்கொடுக்க அறநிலையப் பாதுகாப்பு நிலையத்தின் உதவியோடு தமிழகத்தில் எத்தனை பள்ளிகள் எங்கெங்கே துவக்கப்படவிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : One school has been opened at Thanjavur to give training in Harikathakalakshepam.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, அறநிலையப் பாதுகாப்பை ஒட்டி இந்தப் பயிற்சிக் கூடங்களிலே கொடுக்கும் பயிற்சி நேரத்தில் பிரசாரம் முழுவதும் சமயமாகவே இருக்க வேண்டும். அதிலே அரசியல் கலக்கக் கூடாது என்ற நோக்கத்தை மனத்தில் வைத்து பயிற்சி அளிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எது அரசியல் என்பதை முதலிலே நிர்ணயம் செய்யவேண்டும். அரசியல் விஷயங்கள் சமயப் பிரசாரத்திலும் இருக்கின்றன. இதற்கு ஒரு நிர்ணயமான விதி விதிப்பது சரியல்ல.

கோவில் நிலங்கள் (குத்தகைக்கு விடுதல்)

*510 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயில், மடங்கள், போன்றவைகளுக்கு சொந்தமாக உள்ள சாகுபடி நிலங்கள் தனியாருக்குக் குத்தகை விடுவதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தவிர்க்க எல்லா இடங்களிலும் கூட்டுறவுப் பண்ணைதான் துவக்கவேண்டும் என்று அரசாங்கம் கண்டிப்பான யோசனையை அறநிலையப் பாதுகாப்பு நிர்வாகிகளுக்குத் தெரிவித்திருக்கிறதா?

[23rd November 1963

(இ) வேறு நல்ல வழிகள் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have been advocating the formation of Tenants Co-operative Farming Societies. The Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961, which came into force on 2nd October 1962 requires that the lands held by the Maths or temples under pannai cultivation in excess of 20 standard acres or the lands reverting under section 7 of the Act or the lands resumed under section 19 of the Act shall be leased out :—

(1) to a Co-operative Farming Society; or

(2) to any person who is already a cultivating tenant; or

(3) to any person who is not already a cultivating tenant but who executes an agreement to contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land leased out to him.

(b) No other proposal is under the consideration of the Government.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் (நன்கொடை)

*511 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963, பிப்ரவரி மாதம் கனம் சுகாதார அமைச்சர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சுவாமி வழிபாட்டிற்குச் சென்ற போது அங்கு டி. வி. எஸ். ஸ்தாபனத்தாரால் அமைச்சரிடம் வழங்கப்பட்ட தொகை மீனாட்சி அம்மன் உண்டியலுடன் சேர்க்கப் பட்டதா? அல்லது பாதுகாப்பு நிதிக்குக் கொடுக்கப்பட்டதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The donation was made for the renovation of Sri Meenakshiamman temple, Madurai and it was handed over by the Minister (Public Health) to Sri P. T. Rajan, Chairman of the Temple Renovation Committee.

மண்வள சோதனைக் கூடங்கள்

*512 கேள்வி.—திரு. எஸ். ராமசாமி : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1963-ல் நம் மாநிலத்தில் எங்கெங்கு மண்வள ஆராய்ச்சி நடைபெறுகிறது?

(இ) இதற்காக 1961-62, 1962-63-ல் (i) ஒதுக்கப்பட்ட (ii) செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

23rd November 1963]

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இம் மாநிலத்தில் விவசாயத் துறையின் கீழ் இப்போது மண்வளச் சோதனைக் கூடங்கள் மூன்று இருக்கின்றன. கோயம்புத்தூரில் ஒன்று, ஆடுதுறையில் மற்றொன்று, கோவில்பட்டியில் மூன்றாவது. இவை தவிர, வடபாதி மங்கலத்தில் திரு ஆரூரான் சர்க்கரை ஆலை லிமிடெட் நிறுவியுள்ள மண்வளச் சோதனைக் கூடமும் இருக்கிறது.

(இ)

		ஆண்டு.	ஒதுக்கிய மானியம் (பட்ஜெட் மதிப்பீடு). (1)	செலவு. (2)
			ரூ.	ரூ.
1 கோயம்புத்தூர்	..	1961–62	24,830	22,200
		1962–63	27,200	24,210
2 ஆடுதுறை	..	1961–62	47,850	27,980·97
		1962–63	34,350	32,834·77
3 கோவில்பட்டி	..	1963 எப்ரலில்தான் செயல்படத் தொடங்கியது எனவே புள்ளி விவரங்கள் கொடுக்கப்படவில்லை.		

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் மண் வளத்தை சரிவரத் தெரியாமல் அதிகமான அளவுக்கு அம்மோனியம் சல்பேட்டையும், நைட்ரேட்டையும் விவசாயிகள் நிலத்தில் போட்டு விடுகிறபடியால் மகசூல் பாதிக்கப் படுகிறது என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதைப் போக்க தமிழ் நாடு எங்கிலும் மண்வளப் பரிசோதனைக் கூடங்களை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : தற்போது நான்கு இடங்களிலே மண் வளப் பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இந்த அரசாங்கம் விவசாயிகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டிருக்கிறது. ஆகவே, மேலும் மேலும் எங்கெங்கு மண் வளப் பரிசோதனைக் கூடங்களை ஏற்படுத்த வேண்டுமோ அந்த வகையிலே அரசாங்கம் கவனம் செலுத்தும்.

நில ஆராய்ச்சி அறிக்கை

*513 கேள்வி.—திரு. ந. ப. செங்கோட்டுவேலு : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டைப் பொருந்த நில ஆராய்ச்சி அறிக்கை ஒன்று மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை, ஐயா.

[23rd November 1963

கம்போஸ்ட் உர உற்பத்தி (கடன் உதவி)

*514 கேள்வி.—திரு. ப. உ. சண்முகம் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் கீழ்பென்னாத்தூர் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த எத்தனை ஊராட்சி மன்றங்களுக்கு "கம்போஸ்ட் உரம்" தயாரிக்க கடன் உதவி கொடுக்கப்பட்டது?

(இ) அவைகளால் தயாரிக்கப்பட்ட உரத்தின் மதிப்பு எவ்வளவு?

THE HON. SRI P. KAKKAN : (a) Nil.

(b) Nil.

வேளாங்கன்னித் திருவிழா

*515 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் நாகை தாலுகாவில் சமீபத்தில் நடந்த வேளாங்கன்னித் திருவிழாவின்போது தொத்து நோய் மற்றும் இதர வியாதிகளால் பாதிக்கப்பட்டவர்கள், மரணமடைந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) தடுப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) நாகப்பட்டினம் தாலுகாவில் 14-9-63 தேதியோடு முடிவடைந்த வாரத்தில் 56 பேருக்குக் காலரா கண்டு 7 பேர் இறந்துபோனார்கள்.

(இ) இதர பகுதிகளுக்கும் காலரா பரவாதபடி தகுந்த ஏற்பாடுகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

10-30 a.m. திரு. ஆ. கு. சுப்பையா : இந்த காலரா வியாதி வேளாங்கன்னி கோவிலில் நடைபெறும் திருவிழாவிற்கு வெளி மாகாணங்களிலிருந்து வந்தவர்களிடமிருந்து தான் பரவியது என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நமது நகரத்தைப் பொறுத்தவரையில் வெளி மாகாணங்களிலிருந்து வருகின்றவர்களினால் தான் இந்த வியாதி பரவுகின்றது என்று சொல்ல முடியும். வேளாங்கன்னியில் 'பில்க்ரிமேஜ்'-க்காக அனேகம் பேர்கள் வருகின்றார்கள். இதன் காரணமாகவும் வியாதி பரவும்.

MR. DEPUTY SPEAKER : As there are a large number of questions to be answered and to-day being the last day, I think the House has no objection to extend the question hour till we dispose of the remaining Questions.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I suggest that supplementary questions need not be put for all the questions unless there are important questions. Either they may be printed in the Official Proceedings or they may be answered but there may be no supplementary questions. Otherwise, it will take more than half an hour.

23rd November 1963]

MR. DEPUTY SPEAKER : I will do that.

காலரா நோய் (திண்டிவனம் வட்டம்)

*516 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் திண்டிவனம் வட்டம் கூச்சிக்கொளத்தூரில் காலராவினால் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் திண்டிவனம் அரசாங்க மருத்துவ மனையில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(உ) மேற்படி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட காலரா கண்ட பெண்கள் உடல்நலம் சரியாவதற்கு முன்பே லேடி டாக்டரால் வெளியே அனுப்பப்பட்டது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 3.

(இ) 4.

(உ) இல்லை.

திரு. ஆ. தங்கவேலு : கனம் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவர்கள் அனேகம் பேர்கள் பெண்களாக இருப்பதால், அந்த மருத்துவ மனையில் இருந்த லேடி டாக்டரின் கவனக்குறைவினாலும், சரியான முறையில் சிகிச்சை செய்யப்படாததினாலும் தான் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இனிமேலாவது லேடி டாக்டர் சரியானபடி சிகிச்சை செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எச்சரிக்கை செய்யுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இங்கு அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் பூரணமாக குணமடைந்துதான் போயிருக்கிறார்கள். இதற்கான சிகிச்சையும் நல்ல முறையில்தான் செய்திருக்கிறார்கள். எபிடாமிஜிக்கல் வான் மூலமாக மருந்துகள் கொண்டு போய் சிகிச்சை செய்திருக்கிறார்கள். அங்கு ஏற்பட்ட நோயை தக்க முறையில் சிகிச்சை செய்திருக்கிறார்கள். ஆகவே லேடி டாக்டர் பேரில் எந்தக் குறையும் சொல்வதற்கில்லை.

Village works (grants)

*517 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to allot funds to the Panchayat Union Councils under 'Local Roads Grants' and 'Village Works Grant' taking into consideration (i) their area and (ii) the number of Panchayats they have under their control?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், தற்போது ஜனத்தொகை அடிப்படையில் நிதி ஒதுக்கப்படுகிறது. சில பஞ்சாயத்துகளில் விஸ்தீர்ணம் குறைவாகவும், சில பஞ்சாயத்துகளில் விஸ்தீர்ணம் கூடுதலாகவும் இருக்கின்றன. ஆதலால் ஜனத்தொகையின் அடிப்படையில் ஒதுக்கப்படும் நிதி போதிய அளவுக்கு பயன்படுவதில்லை. ஆகவே ஜனத்தொகையை கணக்கிடாமல், விஸ்தீர்ணத்தின் அடிப்படையில் உதவி அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நாம் இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்தியில் இருக்கிறோம். இந்தச் சமயத்தில் மாறுதல் செய்வது உசிதம் அல்ல.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மகாநாட்டிலும், மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலும் இப்படிப்பட்ட முறையில் அதாவது மக்கள் தொகையை அடிப்படையாக வைத்துக்கொண்டு உதவி செய்வது போதாது என்று விவாதித்திருக்கிறார்கள். மேலும் அரசாங்கம் ஒதுக்குகின்ற வில்லேஜ் வொர்க்ஸ் கிராண்டிலிருந்து தொகை மிகுந்தால் அதை எடுத்துக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பாதியளவுக்கு நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே இந்தப் பணத்தை டைவர்ஷன் செய்வதற்கு பஞ்சாயத்து யூனியனுக்கு தனியாக ஏதாவது அதிகாரம் கொடுக்கப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இப்போது அம்மாதிரி அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை.

Kanapattom lands (abolition of special rights)

* 518 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to bring in a legislation for the abolition of special rights on Kanapattom lands in the Kanyakumari district on the lines of the Kerala Act; and

(*b*) whether there is any proposal to enact legislation abolishing Thiruppuvarom and Monuiom Karam on lands in the Kanyakumari district?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) : Proposals for the abolition of Janmikaram payment, the tenure of Sripandaravagai lands and Thiruppuvarom are under the active consideration of the Government and the necessary legislation is expected to be undertaken shortly.

மைக்கா

* 519 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், புலிவலம் காட்டில் மைக்கா கிடைப்பது சர்க்காருக்கு தெரியுமா?

(இ) அப்படியானால் அதுபற்றி பரிசிலனை செய்யப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

* 520 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware that (occurrence) of Mica was found while digging a well in Valliyur village in Nanguneri taluk in Tirunelveli district; and

(*b*) if so, whether further investigation has been taken up in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No Sir.

(*b*) Does not arise.

பிச்சையெடுப்பு ஒழிப்பு

* 521 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா தலைநகரங்களில் உலவும் பிச்சைக்காரர்களை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) பொதுவாக பிச்சை எடுப்பதைக் குற்றமாக்கச் சட்டம் கொண்டு வர உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) சென்னை 1945-ம் ஆண்டு பிச்சைத் தடுப்புச் சட்டத்தின் ஷரத்துக்கள் பெரும்பாலான ஜில்லாத் தலைநகரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அப் பகுதிகளிலே, பொது இடங்களில் பிச்சை எடுக்கும் நபர்களை நீதி மன்றத்தார் தண்டித்து விசேஷ (பிறகாப்பு இல்லங்கள்) விடுதியில் அல்லது பணிமனைகளில் சேர்ப்பிக்கின்றனர்.

(இ) சென்னை 1945-ம் ஆண்டு பிச்சைத் தடுப்புச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ள இடங்களில் அச்சட்டத்தின் 3-வது பிரிவுப்படி, பொது இடங்களில் பிச்சை எடுப்பது ஏற்கனவே குற்றமாகக் கருதப்படுகிறது. மேற்படி குற்றத்திற்கு 50 ரூபாய் அபராதம் அல்லது ஒரு மாதம் வரை காவல் தண்டனை விதிக்கப்படுகிறது.

[23rd November 1963

* 522 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Madras Government were approached by any other State Government for an exchange of beggars on a reciprocal basis; and

(*b*) if so, whether there is any proposal to take over the Tamilnad Beggars who are found in other States ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) அம்மாதிரி உத்தேசம் இதுவரை இல்லை.

விளையாட்டுகளுக்கு அரசாங்க உதவி

* 523 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கால்பந்து, ஹாக்கி போன்ற விளையாட்டுகளுக்கு அரசாங்கம் உதவி செய்கிறதா?

(இ) ஆமென்றால் என்ன உதவிகள் கொடுக்கப்படுகின்றன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Financial assistance is given through the Madras State Sports Council to State Associations for participation of State teams in National and International Championships; conduct of coaching schemes; staging of National Championships; staging international matches or athletic meets and the purchase of equipment, acquisition and improvement of playgrounds and purchase of kit by outstanding players and athleties.

Compulsory Deposit Scheme

* 524 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether final instructions have been received from the Central Government regarding the scheme of Compulsory Deposit Scheme applicable to those who pay land revenue; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The Government of India have since given up the Compulsory Deposit Scheme relating to Land Revenue Payers.

(*b*) Does not arise.

* 525 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார் கொண்டுவந்துள்ள கட்டாய சேமிப்புத் திட்டத்தைக் கைவிடுமாறு மத்திய சர்க்காருக்கு சென்னை மாநில சர்க்கார் யோசனை கூறியுள்ளதா?

(இ) குறைந்தபட்சம் விவசாயிகளுக்காவது இத்திட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்குமாறு யோசனை கூறப்பட்டுள்ளதா ?

23rd November 1963]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, Sir. The State Government suggested to the Government of India to give up the scheme in respect of agriculturists.

பாஸ்பேட் படிவங்கள்

* 526 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் **rock phosphate** படிவங்கள் கிடைப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்துள்ளதா?

(இ) அப்படியானால், அவற்றினைப் பயன்படுத்தும் உத்தேசமுண்டா?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. During the field season 1960–61, the Geological Survey of India have investigated the areas in South Arcot, Tiruchirappalli and Pondicherry for rock phosphates. The mineral is reported to occur over an area of 154 square miles in Tiruchirappalli district. The probable reserves of the mineral is estimated to be about 1,27,000 metric tons. But the phosphatic nodules occurring alone are not workable economically even at shallow depth.

Package Scheme (Groundnuts)

* 527 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to introduce " Package Scheme " for increasing the groundnut produce in the South Arcot district?

The Hon. Sri P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

இரும்புத் தாது

* 528 **கேள்வி.**—திரு. எம். எஸ். மணி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா, முசிறி தாலுக்காவில் துறையூரை அடுத்துள்ள பச்சை மலையில் இரும்பு கிடைப்பதாக அரசாங்கத்திற்கு ஏதேனும் தகவல் வந்துள்ளதா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) : Yes Sir. During the field season 1941–42, the area near the south margin of Pachaimalai Hill was investigated by the Geological Survey of India for iron ore deposits along with other areas in Salem and Tiruchirappalli districts. The approximate reserves of iron ore in the area is reported to be of the order of 11 million tons for a depth of 100 feet. The iron ores contain about 35 to 38 per cent of iron.

---

[a] **Printed as Appendix VI on pages 785–799 infra.**

[23rd November 1963

Employment Exchanges

* 529 *Q.*—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have made it compulsory that all vacancies in Government offices are to be filled through the Employment Exchanges and the details thereof; and

(*b*) whether penalties are imposed for violations of orders and if so, the details of such violations and the action taken by Government during 1962–63?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The Government have made it obligatory that all vacancies in the Government offices should be filled calling for lists of applicants from the Employment Exchanges, in respect of posts in subordinate services, other than those which should be filled in consultation with the Madras Public Service Commission or on the results of a competitive examination and those in the Police Subordinate Services.

(*b*) Where direct appointments are resorted to in violation of rules, the appointing authorities are asked to terminate the services of the incumbents so appointed and notify the resultant vacancies to the Employment Exchanges for nominating suitable applicants to choose from. The violations are also being examined and administratively dealt with.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்

* 530 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் B. T. Shortened Course நடத்தப்படுகிறது?

(இ) ஆண்டுக்கு இரு பிரிவுகளாக நடத்தப்படுகிறதா?

(உ) 1960-61, 1962-63 ஆண்டுகளில் இந்த குறுகிய ஆசிரியர் பயிற்சி வகுப்பில் சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எத்தனை மாணவ மாணவியர் சேர்த்துக்கொள்ளப் பட்டனர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The shortened B.T. Courses are conducted in—

(i) Teachers' College, Saidapet; and
(ii) Government Training College, Pudukkottai.

(*b*) Yes.

(*c*):

Year.		Course.		Number admitted. Men.	Women.
1960–61	..	I Course	..	29	5
		II Course	..	27	10
1961–62	.	I Course	..	26	11
		II Course	..	23	17
1962–63	.	I Course	..	28	11
		II Course	..	16	12

23rd November 1963]

* 531 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எந்த அடிப்படையில் மாணவர்கள் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில் Shortened B.T. வகுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்?

(இ) வயது வரம்பு ஏதேனும் உண்டா?

(உ) மாணவர்களைத் தேர்ந்தெடுக்க குழு நியமிக்கப்பட்டுள்ளதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) to (*c*): University Degree holders who possess T.S.L.C. of Secondary Grade and have got experience as teachers for three years in a recognized school and are below 50 years are eligible for admission to the Shortened B.T. Course. Sixteen per cent of seats are reserved for Scheduled Castes and Scheduled Tribes and 25 per cent for Backward Classes. The selection is made jointly by the Principals of the Teachers' College, Saidapet, and the Government Training College, Pudukkottai.

ஆங்கிலப் போதனைக்குப் பயிற்சி

* 532 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல்லாவரத்தில் நடைபெறும் 4, 5 வகுப்புகளுக்கு ஆங்கிலம் போதிக்க பயிற்சி அளிக்கப்படும் வகுப்புக்களுக்காக (for Madras English language courses conducted at Pallavaram) அரசாங்கச் செலவு என்ன?

(இ) British Council ஏற்படுத்திய இத்திட்டத்திற்கு ஆகும் செலவில் மேற்படி கவுன்சிலும் பங்கு ஏற்றுக்கொள்கிறதா?

(உ) அப்படியானால் எவ்வளவு? எவ்வகை செலவினங்களுக்காக?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The expenditure incurred towards running the Madras English Language Teaching Campaign Courses at Pallavaram is as follows:—

		RS. nP.
1959–60	... ...	28,060·15
1960–61	... ...	1,72,151·58
1961–62	... ...	1,07,653.44
1962–63	... ...	1,12,418·97
	Total ..	4,20,284·14

(*b*) & (*c*) This is not a scheme of the British Council. The Compaign has been organized by this Government with the technical assistance of the British Council. The British Council does not share the expenditure on this scheme. But it has spared free of charge the services of the Council's Education Officer. The Council has also provided the services of three British experts whose basic salaries and house allowances are paid by Government, but whose

[23rd November 1963

other allowances are paid by the Council. The Council has also lent a large quantity of books and certain equipment to the Campaign.

***533** கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நான்காவது, ஐந்தாவது வகுப்புகளுக்கு ஆங்கிலம் போதிக்கும் முறை கற்றுத்தர நடத்தப்பெறும் Madras English Language Teaching Campaign Course வகுப்புக்களுக்கான ஜூனியர் ஆபீசர்களையும் பாடம் நடத்தத் தகுதியான ஆசிரியர்களையும் தேர்ந்தெடுப்பது யார்?

(இ) எந்த அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Junior Officers of the Madras English Language Teaching Campaign were selected by the Senior Officers of the Campaign, including the Education Officer of the British Council and the Deputy Director of Public Instruction (Training), with the assistance of other persons where found necessary. The tutors for the Secondary courses of the Campaign are graduate teachers from local schools selected by the District Educational Officers.

(b) The selection was made on the basis of suitability for the special type of work involved in the Campaign and with reference to previous experience in teaching English.

தற்கொலைகள்

***534** கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1961-62, 1962-63-ல் தற்கொலை செய்து கொண்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக?

THE HON. SRI P. KAKKAN: A statement* is placed on the table of the House.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த தற்கொலை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 1961-ம் ஆண்டில் மொத்தம் 3,164 என்றும், 1962-ம் ஆண்டில் 3,095 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1963-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாள் வரையில் 6 மாதத்திற்கு 1,626 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் 6 மாத காலத்திற்கு எவ்வளவு தற்கொலைகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

கனம் திரு. பூ. கக்கன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மந்திரி, ஜோஸ்யம் தெரிந்த மந்திரி அல்ல. எவ்வளவு தற்கொலைகள் ஆகும் என்று சொல்ல முடியாது. ஆனால் தற்கொலைகளே ஆகக் கூடாது என்று தான் வேண்டிக்கொள்கிறேன்.

* Printed as Appendix VII on pagos 799–800 infra.

23rd November 1963]

திரு. இரா. நெடுஞ்செழியன்: தற்கொலைகளுக்கு என்ன காரணங்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? எது அதிகமான காரணமாக இருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: சிலர் கடன்பட்டவர்கள்; நோயின் காரணமாகவும் இருக்கிறது; தீர்க்கப்படாத வியாதி காரணமாகவும் இருக்கிறது; ஃப்ராஸ்ட்ரேஷன் இன் லவ்; அதாவது காதல் காரணமாகவும் இருக்கின்றன. இந்த மாதிரி காரணங்களினால் தற்கொலைகள் நடைபெறுகின்றன.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: ஸார், கொடுக்கப்பட்ட தகவலில் ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசம் இருக்கிறது. ஒரு ஜில்லாவில் 300 அல்லது 400 என்று இருக்கிறது. இன்னொரு ஜில்லாவில் குறைவாக இருக்கிறது. மதுரை அர்பன், மதுரை நார்த் இரண்டையும் சேர்ந்தால் 400-க்கு மேல் போகிறது. எங்கள் ராமநாதபுரம் ஜில்லாவில் 50 தான் இருக்கிறது. இவ்வளவு ஜில்லாவுக்கு ஜில்லா வேரியேஷன் இருக்கக் காரணம் என்ன என்று கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: என்ன காரணம் என்று கண்டுபிடிக்க முடியாது. இருந்தாலும் இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன்: இந்த தற்கொலைகளில் பெரும்பாலானவை மூட்டைப்பூச்சி மருந்தினால் ஏற்படுவதாகத் தெரிகிறது. மூட்டைப் பூச்சி மருந்தினால் மூட்டைப்பூச்சிகள் இறப்பதை விட அதிகமாக மனிதர்கள் இறக்கின்ற காரணத்தினால், இதைத் தடை செய்யவோ அல்லது லெதால் டோஸாக இல்லாமல் குறைக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: மூட்டைப் பூச்சி மருந்தை பத்திரமாக உபயோகிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. மூட்டைப் பூச்சி அதிகமாக இருக்கிறது, மனிதர்களுக்கு தொந்தரவாக இருக்கிறது என்று அதற்கு ஒரு மருந்து கண்டுபிடித்தோம். அதையே மக்கள் உண்டு இறப்பது என்றால், அம்மாதிரி இறக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மக்கள்தான்.

திரு. கரு. சீமைச்சாமி: தற்கொலைகள் வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மேல் நாடுகளில் தற்கொலைகள் இதைவிட அதிகமாக இருக்கின்றன. முதன்மையாக இருக்கக் கூடிய சில நாடுகளில் கூட தற்கொலைகள் அதிகமாக இருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் மாத்திரம் தற்கொலைகள் நிகழ்கின்றன என்று சொல்லுவதற்கில்லை.

திரு. சா. கணேசன்: பத்திரிகைகளில் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி வரும்போது, மூட்டைப் பூச்சி மருந்து தின்றார், அதைத் தின்றார், இதைத் தின்றார் என்று விளக்கம்

[23rd November 1963

கொடுப்பது அவ்வாறு எண்ணம் இருப்பவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் கொடுப்பது போன்று இருப்பதால் இந்த முறையைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: சில பத்திரிகைகள், பத்திரிகை விற்க வேண்டுமென்று போடுகிறார்கள். அவ்வாறு போடாமல் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

மெட்ரிக் எடைமுறை

*535 கேள்வி.—**திரு. ந. ப. செங்கோட்டுவேலு:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர், தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மெட்ரிக் எடையை அறிமுகப்படுத்தும் வகையில் ஏற்பட்ட செலவு எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH: The expenditure on the introduction of metric weights and measures in this State up to the end of March 1963 was rupees twenty lakhs, forty nine thousand (Rs. 20,49,000).

Sanitary Inspectors

* 536 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to entrust the works of the Sanitary Inspectors of Town Panchayats to the Health Inspectors of Panchayat Union Councils in their respective areas?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.

ஏரிகள் பராமரிப்பு

* 537 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தற்போது பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் இருந்து வரும் ஏரிகளைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்து அதன் பராமரிப்புக்கான நிதியையும் பஞ்சாயத்து யூனியன்களிடம் கொடுப்பதற்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை.

பாசன வாய்க்கால் (திருத்துறைப்பூண்டி)

* 538 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருத்துறைப்பூண்டியிலிருந்து நேர் கிழக்கே போகும் (சேகல்மடபுரம், மகராஜபுரம் வழியாக) போக்கு வாய்க்காலைப் பிரித்து, ஈரவாய்க்காலில் தண்ணீரை வடியவிடும் உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN: No. Sir.

23rd November 1963]

கஜானாத்துறை

* 539 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கஜானாக்களுக்கென தனியாக ஒரு துறையை அரசினர் அமைத்ததற்கான காரணங்கள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The question of reorganisation of the Treasuries was under the consideration of the Government for a long time. The Reserve Bank of India, the Public Accounts Committee, the Special Officer for Reorganisation for Government departments and the Pay Commission all recommended on different occasions the separation of the Treasuries from the Revenue Department. With the growth in the volume of transactions in the Treasuries and the growing complexity of Government accounts, the separation of the Treasury from the Revenue Department was considered necessary and desirable and was effected accordingly from 1st April 1962.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, ஸ்டேட் பாங்க் இருக்கிற இடத்திலே கஜானா பக்கத்தில் இல்லை. கஜானாவில் பில் வாங்கினால் ஸ்டேட் பாங்கில் மாற்ற அரை மைல் அல்லது ஒரு மைல் போகவேண்டியிருக்கிறது. ஸ்டேட் பாங்க் பக்கத்தில் கஜானா இருக்க ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

கனம் திரு. எம் பக்தவத்சலம்: சர்க்கார் கஜானாக்கள் எங்கெங்கு இருக்கிறது என்பது அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நெல்லிக்குப்பம் நகர பஞ்சாயத்து டிஸ்பென்ஸரி

* 540 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் நகர பஞ்சாயத்தில் இருக்கும் டிஸ்பென்ஸரியை அரசாங்கம் எடுத்து நடத்த உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில் எப்போது? இல்லையென்றால் காரணமென்ன?

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM: (*a*) No.

(*b*) Under the Madras Panchayats Act 1958, it is the responsibility of the Nellikuppam Panchayat Union to maintain the dispensary.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த நெல்லிக்குப்பத்தில் இருக்கிற ஆஸ்பத்திரியானது ஏறக்குறைய 40,000 மக்களுக்கு வைத்திய வசதி செய்துதரும் நிலையில் இருக்கிறது. பல காலமாக அரசாங்கத்திடம் அதை மேற்கொள்ளவேண்டுமென்று

[23rd November 1963

கேட்டுக்கொண்டும் மேற்கொள்ளாத காரணத்தினுல், பஞ்சாயத்து யூனியனும் சரிவர நிர்வகிக்காத காரணத்தினுலும், இதைப் பற்றி பரிசிலித்து உடனடியாக இதை அரசாங்கம் எடுத்துக்கொள்ள முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஸார், பல ரெப்ரெஸெண்டேஷன்ஸ் வந்த காரணத்தினுல் இப்போது அரசாங்கம் அதற்கு எப்படி நிதி உதவி செய்து டிஸ்பென்ஸரியை ஃபங்க்ஷன் செய்யப் பார்ப்பது அல்லது அதை எடுத்துக்கொள்வது என்று அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

Lands to soldiers

* 541 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to distribute poramboke lands to the families of soldiers who fought the Chinese; and

(*b*) whether the Central Government have made any suggestions to the State Government in this matter ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Yes. A statement[a] is placed on the Table of the House.

Nationalisation of text-books

* 542 *Q*.—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any resolution passed by the State Aided Secondary School Managements' Association regarding the Nationalisation of Text-books; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் (மின்சார இலாகா அதிகாரிகள்)

** 543 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு:*** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மின்சார இலாகா தலைமை இன்சினியர், சூப்பரின்டென்டிங் இன்சினியர், டிவிஷனல் இன்சினியர் ஆகியோரின் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏன் அனுப்பப்படுவதில்லை?

(இ) இனியேனும் அனுப்ப ஆவன செய்யப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) & (இ)—தமிழ்நாடு மின்சார போர்டைச் சேர்ந்த அதிகாரிகள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது, சப்-ஸ்டேஷன்களையும் நடைபெற்று வரும் வேலைகளையும் பார்வையிடுவதோடு திரும்புகின்றனர். எனவே, இந்த அதிகாரிகளின் சுற்றுப்பயண அறிக்கைகளை சட்டப் பேரவை அங்கத்தினர்களுக்கு அனுப்புவது அவசியமில்லை என்று கருதப் படுகிறது.

[a] **Printed as Appendix VIII on pages 801-802 infra.**

23rd November 1963]

Loans on lands

* 544 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government are aware of the difficulties experienced by the public in getting loans on lands assigned to them, since the copies of pattas and other records are not communicated to the Sub-Registrar's Offices for entries in their books ?

THE HON. SRI V. RAMAIAH : Rules do not contemplate the communication of copies of the order of assignment or pattas, etc., to the Sub-Registrar's Offices. Copies of such orders are sent to the parties concerned and also to the village officers for incorporation in the village registers. The non-communication of copies of assignment orders or pattas to Sub-Registrar's offices should not therefore present any difficulty to the Public in getting loans on the lands assigned to them as they can obtain loans on the strength of the orders of assignment or pattas issued to them.

மூட்டைப்பூச்சி

** 545 **கேள்வி—திரு. சி. ம. அம்பிகாபதி:*** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொசுக்கடியால் மலேரியா மற்றும் தொத்து நோய்கள் பரவுவது போல மூட்டைப்பூச்சி ரத்தத்தை உறிஞ்சுவதால் ஏதேனும் புது நோய் பரவுகிறதா?

(இ) இதுபற்றி, மருத்துவத்துறையினர் ஆராய்ச்சி செய்தனரா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) and (இ) சில மூட்டைப் பூச்சிகளால் தொற்றுநோய்கள் ஏற்படுவதில்லை என்பது பொதுவான அபிப்பிராயமாகும்.

நிலவரி

** 546 **கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி:*** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நிலவரி, நிலசெஸ், கூடுதல் சர்-சார்ஜ் போன்ற பல்வகை நில வரிகளை எடுத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக ஒரே வரியை விதிக்கும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH : No.

[23rd November 1963

திரு. கரு. சீமைச்சாமி: பலவகை நிலவரிகள் இருப்பதினால் கணக்கு வைத்துக் கொள்ளுவதற்கு கிராம கர்ணம், ஹெட்மென் ஆகியோர்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, நிலவரியை அடியோடு ரத்துசெய்துவிட்டு, மற்ற தொழில்களுக்கு வருமான வரி இருப்பதுபோல, விவசாயிகளுக்கு ரூ. 3,000-க்கு மேல் வருமானம் வருபவர்களுக்கு வரிபோட ஏற்பாடு செய்ய அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: The supplementary does not arise from the main question.

Tuberculosis clinic

* 547 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to establish one Tuberculosis Clinic in each district with the aid of UNICEF; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம். உண்டு.

(இ) இம் மாநிலத்தில் இரண்டாவது திட்டக் காலத்தில் 13 செஸ்ட் கிளினிக்குகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது திட்ட காலத்தில், மேலும் 4 கிளினிக்குகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு கிளினிக்குகள் ஏற்படுத்தும் விஷயமும் ஆலோசிக்கப்படும்.

திரு. செ. மாதவன்: இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே தனிப்பட்டவர்கள் நடத்தும் இதுபோன்ற சானிடோரியங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கு முயலுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்பொழுது தனிப்பட்டவர்கள் நடத்துகிற சானிடோரியங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ரெப்ரஸென்டேஷன் வந்திருக்கிறது. ராமநாதபுரம் ஜில்லாவில் சோமநாதபுரம் சானிடோரியத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வதுபற்றி அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

பிராவிடென்ட் நிதித் திட்டம்

*548 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சினிமாத் தொழிலாளிகளுக்கு கட்டாய சேமிப்பு நிதித் திட்டம், Compulsory Provident Fund Scheme அமுல் நடத்தப்படுகிறதா ?

(இ) இல்லையென்றால், இத்திட்டத்தை ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ?

23rd November 1963]

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The Employees' Provident Funds Scheme is being implemented in respect of workers in establishments covered by the Employees' Provident Funds Act.

(b) Does not arise.

மூலிகை மருந்துகள்

* 549 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெறிநாய்க்கடி, பாம்புக்கடி, எலும்பு முறிவு போன்றவற்றிற்கு தற்போது நாம் கையாண்டுவரும் ஆங்கில மருத்துவ சிகிச்சையைவிட உயர்ந்த உடனடி பயன்தரும் முறையில் மூலிகைகளால் சில நாட்டு வைத்தியர்கள் குணப்படுத்தி வருகிறார்கள் என்ற தகவல் அரசினருக்குத் தெரியுமா ?

(இ) அவர்களால் கையாளப்படும் மூலிகைகளை ஆராய்ந்தறிந்து எல்லோரும் பயன்பெற அரசாங்கம் வகைசெய்ய உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) and (இ) சில சமயங்களில் இவ்விதத் தகவல் அரசாங்கத்திற்கு கிடைக்கின்றது. இப்படிப்பட்ட தகவல் கிடைத்ததும், மாதிரி மருந்துகள் வரவழைத்து பரிசோதனைச் சாலைக்கு அனுப்பப்படுகின்றன. பெரும்பான்மையான மருந்துகள், குணப்படுத்தும் தன்மையில் ஊக்கமளிப்பவையாக இல்லை. ஆயுர் வேத, சித்த, யுனானி முறையில் ஒரு ஆராய்ச்சித் திட்டம் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் இப்பொழுதும் நடைபெற்று வருகிறது.

விவசாய நிலங்களை ஆர்ஜிதம் செய்தல்

* 550 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் பொதுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விவசாய நிலங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டாமென ராஜ்ய சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் யோசனை கூறியுள்ளதா ?

THE HON. SRI V. RAMAIAH: Yes.

திரு. கரு. சீமைச்சாமி: விவசாய நிலங்களை ஆர்ஜிதம் செய்வதால், உணவு உற்பத்தி குறைந்துவிடுகிறது என்ற காரணத்தினால் தான் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு இம்மாதிரி உத்தரவிட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு ஒன்றும் உத்தரவிடவில்லை. ஒரு ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆலோசனையை நமது அரசாங்கம்

[23rd November 1963

கண்டுபிடித்து, எங்கெங்கே சாத்தியமோ அங்கெல்லாம் விவசாய நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்யக்கூடாது என்று முக்கியமாகச் சொல்லியிருக்கிறது.

பஞ்சாயத்து அலுவலர்கள் (கன்னியாகுமரி மாவட்டம்)

* 551 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பஞ்சாயத்துக்களில் வேலை செய்யும் (Upper Division and Lower Division) குமாஸ்தாக்களின் சம்பள விகிதங்கள் என்ன?

(இ) Pay Commission விகிதாசாரங்களின்படி இவர்களின் சம்பளம் திருத்தி அமைக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) குமரி மாவட்டத்து பஞ்சாயத்துகளில் மேல்நிலை குமாஸ்தாக்கள் இல்லை. அங்கு ரூ. 20—1—25 சம்பள விகிதத்தில் பஞ்சாயத்து உதவியாளர்களும், மாதம் ரூ. 15 நிலைச்சம்பளத்தில் பஞ்சாயத்து குமாஸ்தாக்களும் தான் இருந்தனர்.

(இ) ஆம்.

* 552 Q.—SRI M. WILLIAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the scale of pay and allowances of the Panchayat Officers, Executive Officers, clerks and peons working in the various panchayats in Kanyakumari district have been revised and brought on a par with that of similar staff in the panchayats of the other districts in the Madras State?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கன்யாகுமரி மாவட்டத்தில் பஞ்சாயத்துகளில் பணிபுரியும் ஊழியர்களில், பஞ்சாயத்து ஆபீசர்களைத் தவிர மற்றவர்கள் விஷயத்தில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. பஞ்சாயத்து ஆபீசர்கள் விஷயமாக விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

ட்ராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டம்

* 553 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசாங்கம் டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டத்திற்காக அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகளிலிருந்து எத்தனை (Heavy Tractors) வரவழைக்கப்பட்டன?

(இ) இதற்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

(உ) எத்தனை டிராக்டர்கள் வந்தன? அவை எங்கெங்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன?

23rd November 1963]

(எ) மேலும், எத்தனை டிராக்டர்கள் வரவேண்டும்? அவை எப்போது வரும்?

(ஐ) அவைகளை எந்தெந்த மாவட்டங்களில் பயன்படுத்த உத்தேசம்?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Eight tractors from United States of Amercia and twenty-one tractors from U.S.S.R. were imported during the years 1961–62 and 1962–63.

(*b*) The amount spent for the import of eight tractors from United States of America was Rs. 5,96,377.67 nP. and for the import of 21 tractors from U.S.S.R. Rs. 18,14,062.18 nP.

(*c*) All the eight tractors from United States of America and 21 tractors from U.S.S.R. have been received. They are being put to use in all the districts of the State except in the districts of Madras, the Nilgiris and Kanyakumari.

(*d*) No tractors are yet to be received. But it has been proposed to import 10 tractors from the U.S.S.R. during the current year. A contract in this regard has been signed with the Trade Representative of the U.S.S.R. in India at Madras on 20th August 1963. These 10 tractors are expected to be received during the first quarter of 1964.

(*e*) On receipt of new tractors, they will be allotted to the various districts considering the total demand in each district.

திரு. எம். தண்டாயுதபாணி: சர்க்கார் கொடுக்கும் இந்த டிராக்டர்களுக்கு வாடகைத் தொகை அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக அவைகளை அதிகமாக பயன்படுத்த முடியவில்லை. ஆகையால், அதைப் பரிசீலனை செய்து குறைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: ஏராளமான டிராக்டர்கள் இந்த மகாணத்திற்கு வந்தபிற்பாடு, வாடகையைக் குறைப்பதுபற்றி யோசனை செய்யலாம்.

விவசாய வருமான வரி

* 554 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1962-63 பூராவிலும் விவசாய வருமான வரி மூலம் எவ்வளவு தொகை அரசாங்கத்திற்குக் கிடைத்தது?

(இ) விவசாய வருமான வரி வசூலுக்காக ஏற்படுத்தியுள்ள அலுவலர்களுக்காக 1962-63-ல் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமைய்யா: (அ) ரூ. 1,16,21,139.92 ந.பை.

(இ) ரூ. 12,06,928.54 ந.பை.

[23rd November 1963

சிமெண்ட் தொழிற்சாலை (வடாற்காடு மாவட்டம்)

***555 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யும்படியான சிறிய அளவில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அம்மாவட்டத்தில் நிறுவ உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அத்தகைய உத்தேசம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன்: மாவட்டங்களுடைய தேவையை பூர்த்தி செய்வதற்காக, ஆங்காங்கு பரவலாக சிறிய அளவிலே கிடைக்கும் கற்களை ஒன்றாகச் சேர்த்து, சிறிய அளவிலே சிமெண்டுத் தொழிற்சாலை அமைக்கக்கூடிய எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அப்படிப்பட்ட ஆராய்ச்சி அரசாங்கத்தினிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர்கள் கேள்வி போடுகின்ற முறையிலே சர்க்காரிடம் அந்த யோசனை இருக்கிறதா என்று பொருள்பட கேள்வி போடுகிறார்கள், அதற்கு நாங்கள் இல்லை என்று சொல்லுகிறோம். இதை எல்லா கேள்விகளிலும் நான் பார்க்கிறேன். இது சம்பந்தமாக வேறு யாராவது தனியார் துறையில் முயற்சி செய்கிறார்களா என்று கேள்வி போட்டால், சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று கேட்காமல், வேறு எந்தவிதமான முயற்சியும் இருக்கிறதா என்று கேட்டால், இன்னும் அதைப்பற்றி விவரமாக பதில் கொடுக்க முடியும்.

சிறு சிமெண்டு தொழிற்சாலைகள் வைக்கவேண்டுமென்ற பரிசீலனை சர்க்காரில் நடந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. ஒன்று இது கட்டுப்படியாகாது என்ற கருத்து, மற்றொன்று இதைச் செய்ய முடியும் என்ற கருத்து. சமீபத்தில் நிபுணர்கள் என்னிடம் கலந்து பேசியபொழுது, இது சத்தியமாகும், கட்டுப்படியாகும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். சர்க்கார் அந்தவிதமான சிறு சிமெண்டு தொழிற்சாலைகள், 15 டன், 20 டன் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலைகள் அமைப்பது கட்டுபடியாகுமா, சாத்தியமாகுமா என்பதைப் பரிசீலனை செய்து, வேண்டிய உதவி செய்யும். தனியார் துறையில் யாராவது முயற்சி எடுத்துக் கொண்டால், அதற்கு உதவிகள் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

பக்கிங்காம் கர்னாடிக் ஆலை

***556 கேள்வி.—திரு. எம். எஸ். மணி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை பக்கிங்காம் அண்டு கர்னாடிக் மில்-லில் சிக்கனச் சீரமைப்பின் காரணமாக வேலையிலிருந்து விலக்கப் பட்டவர்கள் எத்தனை பேர்?

23rd November 1963]

(இ) அவர்களுக்கு திரும்ப வேலை வாய்ப்பு தர அரசினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) About 615 workers with less than one year of service.

(*b*) The Labour Department advised the management of Buckingham and Carnatic Mills, Madras, to provide employment for these retrenched workers as and when vacancies arose as per the list maintained for the purpose. Accordingly the management have re-employed 456 workers so far.

திரு. எம். எஸ். மணி: காண்டிராக்ட் தொழிலாளர்கள் என்று எடுக்கப்பட்டிருப்பவர்களுடைய ஸ்தானத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை எடுத்துக்கொள்ள அரசாங்கம் நிர்வாகத்தினரை வற்புறுத்த தவறியது ஏன் என்று அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாக் கேள்வி கேட்டால் விடை அளிக்கலாம்.

Takkavi loans (Encumbrance certificate)

*557 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state whether it is a fact that the Government insist the public in getting encumbrance certificates for Thakkavi loans issued by the Block Development Officers for sums exceeding Rs. 1,000 by paying Rs. 22 for each Survey number?

THE HON. SRI V. RAMAIAH: Under the rules, where the loan amount exceeds Rs. 500 the applicant should produce encumbrance certificate for a period of 12 years in respect of the property offered as security. The maximum fee for obtaining an encumbrance certificate is Rs. 20.75 nP.

டூரிங் சினிமா கொட்டகைகள்

*558 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போது உள்ள டூரிங் சினிமா கொட்டகைகள் எத்தனை?

(இ) அரசாங்க அனுமதி பெற்றும் ஆரம்பம் ஆகாமல் இருக்கும் டூரிங் சினிமாக்கள் எத்தனை?

(உ) அரசாங்கத்திற்கு மனுச் செய்து பரிசீலனையில் இருந்து வரும் மனுக்கள் எத்தனை?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM (*a*) 470 as on 15th September 1963.

(*b*) Approval of Government is not necessary for starting touring cinemas.

(*c*) Does not arise.

[23rd November 1963

Inspectresses of Girls' Schools

* 559 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIYAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Inspectresses of Girls' Schools are Members of the District Development Councils in their respective districts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

UNSTARRED QUESTIONS.

Engineering Contingent employees (Nagercoil)

161 *Q.*—SRI R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any proposal has been received from the Nagercoil Municipality during the year 1962 for the regularization of Engineering contingent employees to regular cadre and to revise their scales of pay; and

(*b*) if so, whether the Government will be pleased to sanction the above proposal at an early date?

A.—(*a*) Yes, Sir.

(*b*) The proposals have been approved by the Government.

(அ) ஆம்.

(இ) இந்த திட்டம் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

Bus Route (Sithayankottai-Madurai)

162 *Q.*—SRI V. S. S. MANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to open a new bus route between "Sithayankottai Town to Madurai City"; and

(*b*) if so, when?

A.—(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Large Scale Industries (Licences)

163 *Q.*—SRIMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how many licences for large scale industries were granted during the period 1960–63; and

(*b*) who are the licensees?

A.—(*a*) Three hundred and seventy-six licences were issued under the Industries (Development and Regulation) Act, 1951, during the years 1960–63 (up to 30th September 1963) in respect of Madras State.

(*b*) Three copies of a list furnishing the particulars of the licences have been placed in the Legislature Library for reference by the Members.

23rd November 1963]

(அ) சென்னை மாகாணத்தில் 1960-ம் வருடம் முதல் 1963-ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை 376 தொழிற்சாலைகள் நிறுவ லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

(இ) லைஸென்ஸுகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல் சட்டசபை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

Veterinary College (Lecturers)

164 *Q.*—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the University has insisted that only Post-graduate Degree holders should be appointed as Lecturers in the Veterinary College; and

(*b*) the qualification of the present incumbent of Professor of Statistics in Veterinary College?

A.—(*a*) The question does not arise as it is not necessary to consult the University before rules prescribing qualifications for a post are framed. Government frames the rules in consultation with the Madras Public Service Commission only.

(*b*) B.A. (in pure mathematics) G.M.V.C., B.V.Sc.

Training.

Certificate in the Training in Agricultural and Animal Husbandry Statistics at the Indian Council of Agricultural Research in the Directorate of Economics and Statistics, Ministry of Agriculture, New Delhi (9 months). Training in Agricultural and Animal Husbandry Samples Surveys at the Indian Society of Agricultural Statistics (1 month). Training at the International Centre of Design of Experimentation and Sampling Techniques at New Delhi sponsored by the Food and Agricultural Organisation of the United Nations (3 months). Animal Husbandry Department Test, Account Test for Executive Officers Second class Language Test (Telugu).

(அ) ஒவ்வொரு பணிக்கும் தேவையான தகுதிகள் சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு நிர்ணயிக்கப்படுகின்றன. பல்கலைக் கழகத்தை கலக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே இந்த வினா எழவில்லை.

(இ) பி. ஏ. சுத்தக் கணிதம் (Pure Mathematics), ஜி. எம். வி. சி., பி.வி.எஸ்.சி.

பயிற்சி

(1) புது டில்லி விவசாய அமைச்சகத்தில் பொருளாதார புள்ளி விபர நெறியாளர் அலுவலகத்தில் பிராணி வளர்ப்புப் புள்ளியலில் (ஒன்பது மாதம்) பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்றவர்.

(2) இந்திய விவசாயப் புள்ளி விபரங்கள் சங்கத்தில் விவசாயம்—பிராணி வளர்ப்பு சாம்பிள் சர்வேயில் (ஒரு மாதம்) பயிற்சி பெற்றவர். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த உணவு விவசாய நிலையத்தார் நடத்தும் புது டில்லி, சர்வதேச டிசைன் சாம்பிள் பரிட்சார்த்த நிலையத்திலே (மூன்று மாதம்) பயிற்சி பெற்றவர். பிராணி வளர்ப்புத் துறை பரீட்சை, நிர்வாக அதிகாரிகளுக்கான அக்கவுண்ட் டெஸ்ட், இரண்டாம் வகுப்பு மொழிப் பரிட்சை (தெலுங்கு) ஆகியவற்றிலும் தேர்ந்தவர்.

[23rd November 1963

Harijan Welfare Work (Thanjavur District)

165 *Q.*—Sri A. K. SUBBIAH : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

1962–63-ல் தஞ்சை மாவட்டத்தில் அரிசன நலத்துறையினரால் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ? தாலூகா வாரியாக ?

A.—A statement[a] is placed on the Table of the House.

சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

Drinking water wells (Tiruchirappalli district)

166 *Q.*—Sri T. P. ALAGAMUTHU : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில், முதலாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் வெட்டப்பட்ட குடி தண்ணீர் கிணறுகளில் குடிப்பதற்கு லாயக்கற்றது என எத்தனை கிணறுகள் பரிசோதனையின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது ?

A.—Out of 653 drinking water wells sunk during the first Five-Year Plan, and 993 wells sunk during the Second Five-Year Plan in the Tiruchirappalli District, 10 and 14 wells respectively have been declared unfit for drinking purposes.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வெட்டிய 653 குடிநீர்க் கிணறுகள், இரண்டாவது திட்டத்தில் வெட்டிய 993 கிணறுகள்—இவற்றில் முறையே 10 கிணறுகளிலும், 14 கிணறுகளிலும் கிடைத்த நீர் குடிப்பதற்குத் தகுதியற்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

Last Grade Servants (Panchayats)

167 *Q.*—Sri K. R. NALLASIVAM : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962–63-ல் இம் மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன்களில் எத்தனை கடைநிலை ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர், மாவட்டவாரியாக ?

(இ) இவர்களில் எத்தனை பேர் ரெவின்யூ இலாகாவில் இருந்து வேலைக்கு வந்தவர்கள் ?

A.—(*a*) and (*b*).—The particulars are furnished below:—

Serial number and name of District.	*Number removed from service.*	*Number retrenched from service.*	*Number ousted from service.*
(1)	(2)	(3)	(4)
1 North Arcot	2 (One from Revenue Department).	Nil.	Nil.
2 South Arcot	1 (one from Revenue Department).	1 (from Revenue Department).	Nil.
3 Tiruchirappalli ..	1	Nil.	Nil.
4 Thanjavur	1 (from Revenue Department).	Nil.	Nil.
5 Salem	Nil.	Nil.	1
6 Coimbatore	*1 (from Revenue Department).	Nil.	Nil.

[a] Printed as Appendix IX on pages 802–803 infra.

23rd November 1963]

* Reinstated in May 1963.

In the other districts no Last Grade Servant was removed or retrenched during the year 1962–63.

(அ) & (இ) இது குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தொடர் எண்.	மாவட்டம்.	வேலையிலிருந்து நீக்கப்பட்டவர் எண்ணிக்கை.	ஆட்குறைப்பு காரணமாக வேலையிலிருந்து எடுக்கப்பட்டவர் எண்ணிக்கை.	வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டவர் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
1.	வட ஆற்காடு	2 (ரெவின்யூத் துறையிலிருந்து ஒருவர்)	....	..
2.	தென் ஆற்காடு	1 ௸	1 (ரெவின்யூத் துறையிலிருந்து)	....
3.	திருச்சிராப்பள்ளி.	1	....	....
4.	தஞ்சாவூர்	1 (ரெவின்யூத் துறையிலிருந்து)	....	....
5.	சேலம்	....	....	1
6.	கோயம்புத்தூர்	*1 (ரெவின்யூத் துறையிலிருந்து)	....	....

* மே மாதம் 1963-ம் வருடம் மறு நியமனம் செய்யப்பட்டவர்.

மற்ற மாவட்டங்களில், 1962–63ல் எந்தக் கடைநிலை ஊழியரும் ஊழியத்திலிருந்து நீக்கப்படவுமில்லை, ஆட்குறைப்பு காரணமாக எடுக்கப்படவுமில்லை.

Collection of Panchayat Taxes

168 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR.—Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

whether suitable instructions have been issued to the Village Munsiffs regarding the collection of Panchayat taxes and the procedure to be followed by them during the time of any controversies regarding the payment of taxes ?

[23rd November 1963

A.—Instructions have been issued in October 1961, regarding the specification of duties of village officers and the procedure to be adopted by them for the collection of Panchayat taxes. The working of the above procedure is being watched for issuing final orders.

கிராம அதிகாரிகளின் கடமைகளை வரையறை செய்தும் பஞ்சாயத்து வரிகளை வசூலிக்க அவர்கள் மேற்கொள்ளவேண்டிய நடைமுறையைக் குறித்தும் 1961 அக்டோபரில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. முடிவான ஆணைகள் பிறப்பிக்குமுன் இந்த நடைமுறை எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கவனித்து வருகிறோம்.

Full Finance Scheme

169 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR.— Will the Hon. the Minister for Food be pleased to place on the Table of the House the details of the Full Finance Scheme and the names of the places where such schemes have been introduced in the State, districtwise during 1962 ?

A.—A paper [a] is placed on the Table of the House.

Co-operative Societies

170 *Q.*—SRI A. K. SUBBIAH.— கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் 1961 முதல் 1963 வரை எத்தனை கூட்டுறவு சங்கங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(இ) அதில் பிரதேச, தாலுகா, ஜில்லா சங்கங்கள் எத்தனை ?

(உ) விபரம் மேஜைமேல் வைக்கப்படுமா ?

A.—(*a*), (*b*) and (*c*)—The particulars are furnished in the statement below :—

a Printed as Appendix X on pages 803-809 infra.

23rd November 1963]

	Co-operative year—1960-61.				Co-operative year—1961-62.				Co-operative year—1962-63.			
	Number of Societies.	Out of Societies in Col. (2) number at			Number of Societies.	Out of Societies in Col. (6) number at			Number of Societies.	Out of Societies in Col. (10) number at		
		State level.	District level.	Taluk level.		State level.	District level.	Taluk level.		State level.	District level.	Taluk level.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
Co-operative Societies liquidated.	125	..	3	1	95	..	..	..	55	..	..	..
Co-operative Societies Superseded.	18	..	..	4	7	..	..	..	10	..	..	2

(அ), (இ) & (உ) : பின்வரும் அறிக்கையில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன :—

அறிக்கை

	கூட்டுறவு ஆண்டு—1960-61.				கூட்டுறவு ஆண்டு—1961-62.				கூட்டுறவு ஆண்டு—1962-63.			
	சங்கங்களின் எண்ணிக்கை.	(2) பத்தியில் சொல்லிய சங்கங்கள்.			சங்கங்களின் எண்ணிக்கை.	(6) பத்தியில் சொல்லிய சங்கங்கள்.			சங்கங்களின் எண்ணிக்கை.	(10) பத்தியில் சொல்லிய சங்கங்கள்.		
		மாநிலம்.	ஜில்லா.	தாலூகா.		மாநிலம்.	ஜில்லா.	தாலூகா.		மாநிலம்.	ஜில்லா.	தாலூகா.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
கலைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.	125	..	3	1	95	..	..	..	55	..	..	..
ரத்து செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.	18	..	..	4	7	..	..	..	10	..	..	2

[23rd November 1963

Surcharge on Stamp Duty

171 *Q.*—Sri V. S. S. MANI.—Will the Hon. Minister for Local Administration be pleased to state—

(*a*) The basis on which the revenue from surcharge on stamp duty is allocated between Sithayankottai Town Panchayat and Athoor Village Panchayat in the Athoor Panchayat Union in Madurai District ; and

(*b*) Whether population and ownership of the lands in these areas are taken into account.

A.—(*a*) The basis of allocation is laid down in sub-section (3) of section 124 of the Madras Panchayat Act, 1958. The surcharge on stamp duty collected for properties lying within the Sithayankottai Town Panchayat area is credited directly to the accounts of that Town Panchayat and the surcharge collected in respect of the properties lying within the Athoor Village Panchayat is initially credited to the accounts of the Athoor Panchayat Union along with the surcharge amount in respect of all other Village Panchayats of the Union and the total amount so pooled is distributed among all the constituent Panchayats in proportion to the land revenue of the respective villages constituting the panchayat Union. Thus, the Athoor Village Panchayat will get surcharge duly distributed to it by the Athoor Panchayat Union pool, based on the land revenue of the village.

(*b*) No.

(அ) தொகை பிரித்துக்கொடுக்கும் முறை பற்றி 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின் 124-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் சொல்லியுள்ளது. சித்தையன்கோட்டை நகரப் பஞ்சாயத்து பகுதியில் உள்ள சொத்துக்களின்பேரில் வசூலாகும் முத்திரைத் தீர்வை சர்சார்ஜ் நகரப் பஞ்சாயத்து கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. ஆத்தூர் கிராமப் பஞ்சாயத்திலுள்ள சொத்துக்கள் சம்பந்தமாய் வருமான சர்சார்ஜ் ஷை யூனியனைச் சேர்ந்த இதர கிராமப் பஞ்சாயத்துக்கள் சம்பந்தமான சர்சார்ஜ் தொகையோடு ஆரம்பத்தில் ஆத்தூர் பஞ்சாயத்து யூனியன் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. அவ்வாறு சேர்ந்த மொத்தத்தொகை ஷை யூனியனில் அங்கம் வகிக்கும் அந்தந்த பஞ்சாயத்துக்களின் நிலவரி வருமானத்துக்கு ஏற்ப அவைகளுக்கிடையே பிரித்துக் கொடுக்கப்படுகிறது. ஆக, ஆத்தூர் கிராமப் பஞ்சாயத்து அதனுடைய நிலவரி வருமானத்திற்கேற்ப ஆத்தூர் பஞ்சாயத்து யூனியன் மொத்தத் தொகையிலிருந்து சர்சார்ஜ் தொகையைப் பெறுகிறது.

(இ) இல்லை.

Roads in Villupuram Division

172 *Q.*—Sri K. GOPALA KOUNDER.—கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விழுப்புரம் டிவிஷனில் உள்ள Major District Roads, State Highways ரோடுகளின் நீளம் எவ்வளவு ?

(இ) 1962–63-ல் கவர்ன்மெண்டாரால் பராமரிப்புக்கு அளிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) அதிகப்படி ஏதாவது செலவு செய்யப்பட்டதா ? எவ்வளவு ?

A.—(*a*) State Highways 39 miles 3 furlongs; Major District Roads 275 miles.

(*b*) Rs. 9,33,000.

(c) No.

(அ) மாநில நெடுஞ்சாலைகள் 39 மைல் 3 பர்லாங். பெரிய மாவட்டச் சாலைகள் 275 மைல்.

23rd November 1963]

(இ) ரூபாய் 9,33,000.

(உ) இல்லை.

State Transport Department

173 *Q*—Sri M. S. MANI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இலாகாவில் ஏற்படும் குமாஸ்தா காலி ஸ்தானங்களுக்கு அந்த இலாகாவிலேயே வேலைசெய்யும் எஸ். எஸ் எல்.சி. பாஸ் செய்த கண்டக்டர்களை நியமிக்கும் உத்தேசமுண்டா ?

(இ) இல்லையெனில், ஏன் ?

A.—(*a*) No. There is no such proposal at present.

(*b*) The conductors are eligible for promotion as checking Inspectors or Time-keepers in the Traffic Branch of the Department to which category they belong.

(அ) இல்லை. தற்பொழுது அந்தவிதமான உத்தேசமில்லை.

(இ) ஷை துறையின் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த கண்டக்டர்களுக்கு செக்கிங் இன்ஸ்பெக்டர்களாகவும், டைம் கீப்பர்களாகவும் பதவி உயர்வு பெற வாய்ப்பு உண்டு.

State Transport Buses (Insuring of)

174 *Q.*—Sri M. S. MANI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் இருக்கிற பஸ்கள் அனைத்தும் இன்ஷூர் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

(இ) இல்லையென்றால், காரணமென்ன ?

A.—(*a*) No.

(*b*) Under section 94(3) of the Motor Vehicles Act, 1939, the State Government may exempt any vehicles owned by a State Transport Undertaking from taking insurance policy provided a fund is established and maintained in accordance with the rules made in that behalf under the Act to meet any liability arising out of the use of any vehicle of the undertaking. An accident Reserve Fund is maintained in the Madras Branch of the Department and it is used for payment of compensation in connection with accidents caused by the Departmental buses and also to meet the liability of the Department under the Workmen's Compensation Act. As regards the Kanyakumari Branch of the Department proposals for the creation of a similar fund are under consideration. Pending finalisation of the proposals the vehicles have not been insured against third party risks and the expenditure in connection with accidents is debited to the revenue account head of the Madras State Transport Department.

(அ) இல்லை.

(இ) 1939-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 94 (3) பிரிவின்கீழ், அரசாங்கப் போக்குவரத்து நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமான வண்டிகள் இன்சூரன்ஸ் பாலிசி எடுத்துக்கொள்ள வேண்டுமென்கிற நிபந்தனையிலிருந்து மாநில அரசாங்கம் விலக்கு அளிக்கலாம். ஆனால், இது விஷயமாக ஷை சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையொட்டி, வண்டிகளைப் பயன்படுத்துவதால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களைச் சரிக்கட்டுவதற்கென நிதி ஒன்றை ஏற்படுத்தி வைத்துவரவேண்டும். மேற்படி துறையின் சென்னைப் பிரிவில் விபத்து ரிசர்வ் நிதி ஒன்று வைத்துவரப்படுகிறது. அரசாங்க பஸ்களால் ஏற்படும் விபத்துக்கள் சம்பந்தமாகவும், தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டத்தின்கீழ் மேற்படி துறையினருக்குள்ள

பொறுப்பை நிறைவேற்றுவது சம்பந்தமாகவும் நஷ்ட ஈடு செலுத்து வதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது. இத்துறையைச் சேர்ந்த கன்னியாகுமரிக் கிளையில் இதைப்போன்ற நிதியை ஏற்படுத்துவதற்கான திட்டம் குறித்து யோசிக்கப்பட்டு வருகிறது. இத திட்டம் முடிவுபெறும் வரையில், வண்டிகள் இன்ஷூர் செய்யப்படவில்லை. அதுவரையில் விபத் துக்கள் சம்பந்தமான செலவு சென்னைப் போக்குவரத்துத் துறை ரெவின்யூ கணக்குத் தலைப்பிற்குப் பற்று எழுதப்படும்.

Government Transport Employees (Gratuity and Provident Fund)

175 *Q.*—SRI M. S. MANI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா —

ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் இருந்து விலகும் அல்லது விலக்கப்படும் தொழிலாளர்களுக்கு கிராட்யுட்டி, பிராவிடெண்டு பண்டு முதலியன கொடுக்க ஏற்படுத்தியுள்ள விதி முறைகள் யாவை ?

A.—The members of the Madras State Transport Operation Subordinate Service (i.e.) (traffic and technical workers) and the menials paid from contingencies (i.e. watchmen, sweepers, water carriers, scavangers, etc.) are entitled to gratuity according to the Madras State Transport Operation Subordinate Retired, Invalid and Compassionate Gratuities (Non-Pensionable) Establishment Rules. Under the above rules gratuity is payable to employees who retire from service or are invalidated from service. No gratuity will be paid to an employee who resigns from service or who is dismissed from service for misconduct, insolvency, corruption, etc., but the Government may sanction discretionary gratuity in deserving cases. The amount of gratuity is calculated on the basis of the total qualifying service put in by each employee and the pay last drawn by him. In the case of deceased workers the family is entitled to compassionate gratuity.

2. The members of the technical and supervisory staff coming under the Madras State Transport Subordinate Service are governed by Madras Liberalised Pension Rules, 1960.

3. Regarding Provident Fund the traffic and technical workers of the Madras State Transport Department are covered by the Employees Provident Fund Act, 1952 and the scheme framed thereunder and they are entitled to all benefits under the Act.

4. As regards the allotted personnel from the former Travancore-Cochin State, they come under the following three groups, namely :—

(1) Pensionable employees opted to retirement benefits under the Travancore Service Regulations or Madras Pension Scheme ;

(2) Non-Pensionable employees contributing to the Travancore-State Transport Provident Fund ;

(3) Certain non-pensionable employees who have not opted to either of the above ;

(4) The question of bringing the workers in item (3) above, under the Madras State Transport Operation Subordinate Service Retired Invalid and Compassionate Gratuities (Non-pensionable) Establishment Rules is under the active consideration of the Government.

அரசாங்க பஸ் சர்வீஸைச் சேர்ந்த டிராபிக், டெக்னிகல் தொழிலாளர் களுக்கும், வாட்ச்மென், தோட்டிகள் போன்ற பணியாளர்களுக்கும் வேலை யிலிருந்து அவர்கள் ஓய்வு பெறும்போது அல்லது இயலாமை காரணமாக வேலையிலிருந்து நின்றுபோகும்போது சம்பந்தப்பட்ட விதிகளின்கீழ் கிராட்யுட்டி (பணிக்கொடை) பெற உரிமை உண்டு. வேலையை ராஜிநாமா செய்பவருக்கும், துர்நடத்தை, இன்சால்வென்சி, லஞ்சம் போன்ற

குற்றங்களுக்காக வேலையிலிருந்து விலக்கப்படுபவர்களுக்கும் கிராட்யுட்டி கொடுக்கப்படமாட்டாது. ஆனால் உதவி பெறுவதற்கு ஏற்றவர்களுக்கு அரசாங்கம் யுக்தப்படி கிராட்யுட்டி கொடுக்கலாம். ஒவ்வொரு தொழி லாளியும் ஆற்றிய மொத்தப்பணிக் காலத்தை அடிப்படையாக வைத்தும் கடைசியாக அவர் வாங்கிய சம்பளத்தை அடிப்படையாக வைத்தும் கிராட்யுட்டி தொகை கணக்கிடப்படுகிறது. இறந்துபோன தொழிலாளிகளைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய குடும்பத்தினருக்குக் கருணை பணிக் கொடை (Compassionate Gratuity) கொடுக்கப்படுகிறது.

2. அரசாங்க பஸ் சர்வீஸில் வேலையிலுள்ள மேற்பார்வைப் பணி யாளர்கள், டெக்னிகல் பணியாளர்கள் இவர்களைப் பொறுத்தமட்டில், சென்னை தாராளப் பென்ஷன் விதிகள் பயன்படுகின்றன.

3. பிராவிடண்ட் பண்டைப் பொறுத்தவரையில், அரசாங்க பஸ் சர்வீசைச் சேர்ந்த டிராபிக் தொழிலாளர்களும், டெக்னிகல் தொழிலாளர் களும் தொழிலாளர் பிராவிடண்ட் பண்டு சட்டத்திற்கும் அதன்கீழ் தயாரிக்கப்பட்ட பிராவிடண்ட் பண்டு திட்டத்திற்கும் உட்பட்டவராவர். இவர்கள் மேற்சொன்ன சட்டத்தின்கீழ் எல்லா நன்மைகளையும் பெறுவார்கள்.

4. பழைய திருவாங்கூர்–கொச்சி மாநிலத்திலிருந்து இம் மாநிலத் திற்கு வந்த தொழிலாளிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் பின்வரும் மூன்று தொகுதிகளில் அடங்குவர் :—

(1) திருவாங்கூர் சர்வீஸ் ரெகுலேஷன்கள் அல்லது சென்னை பென்ஷன் திட்டம் இவற்றில் எவற்றின்கீழ் வேலை ஓய்வு நன்மைகளைப் பெறுவதற்குத் தொழிலாளிகள் விருப்பப்படுகிறார்களோ அத்தகைய தொழிலாளிகள் ;

(2) திருவாங்கூர் மாநில பஸ் போக்குவரத்து பிராவிடண்ட் பண்டுக்குத் தொகை செலுத்திவரும் (பென்ஷன் பெற முடியாத) தொழிலாளிகள் ;

(3) மேற்சொன்ன இரண்டிலும் சேராத (பென்ஷன் பெற முடியாத) பிற தொழிலாளிகள்.

(4) மேலே (3) இனத்தில் சொல்லப்பட்டுள்ள தொழிலாளிகளை அரசாங்க பஸ் சர்வீஸ் கிராட்யுட்டி விதிகளின்கீழ் கொண்டுவருவதை அரசாங்கம் தீவிரமாக யோசித்து வருகிறது.

Siddha Dispensary

176 *Q.*—SRI C. M. AMBIKAPATHI : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நகராட்சிகளால் நடத்தப்பட்டு வரும் Siddha Dispensary-கள் தமிழ் நாட்டில் எத்தனையுள்ளன, மாவட்ட வாரியாக ?

A.—The districtwise number of Siddha Dispensaries run by Municipal Councils are as follows :—

North Arcot	7
South Arcot	1
Chingleput	Nil.
Coimbatore	3
Salem	1
Nilgiris	1
Tiruchirappalli	2
Thanjavur	4
Tirunelveli	Nil.
Madurai	7
Ramanathapuram	4
Kanyakumari	Nil.

நகராட்சிகளால் நடத்தப்பட்டுவரும் சித்த மருத்துவ மனைகள் மாவட்ட வாரியாக பின் வருமாறு :—

வட ஆற்காடு	7	திருச்சிராப்பள்ளி	2
தென் ஆற்காடு	1	தஞ்சாவூர்	4
செங்கல்பட்டு	இல்லை	திருநெல்வேலி	இல்லை
கோயம்புத்தூர்	3	மதுரை	7
சேலம்	1	இராமநாதபுரம்	4
நீலகிரி	1	கன்னியாகுமரி	இல்லை

Ceiling on land

177 *Q.*—SRI C. M. AMBIKAPATHI : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நில உச்ச வரம்பு சட்டம் அமுலுக்கு வந்தபின் தமிழகத்தில் அதிக பட்சம் 30 ஸ்டாண்டர்டு எக்கர் நிலம் வைத்துக்கொண்டுள்ளவர்கள் எத்தனை பேர் ?

A.—There is no information as to the number of persons holding 30 standard acres of land. According to the statistics collected by the Land Ceiling Staff, after field verification up to 15th September 1963 the number of persons holding more than 30 standard acres of land is 3,769. This is however not the final or complete figure, which will be known only after the completion of field verification in all likely cases.

30 ஸ்டாண்டர்டு எக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் எத்தனைபேர் என்று தெரியவில்லை. நில உச்ச வரம்பு சிப்பந்தியினர் நேரில் சென்று பரிசீலனை செய்து 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதி வரை சேகரித்த புள்ளி விவரக் கணக்குப்படி 30 ஸ்டாண்டர்டு எக்கருக்குமேல் நிலம் வைத்திருப்பவர்கள் 3,769 பேர். இது முடிவான அல்லது பூர்த்தியான புள்ளிவிவரமல்ல. சந்தேகத்துக்கு இடமான எல்லா கேசுகளையும் நேரில் சென்று பரிசீலனை செய்த பின்னர்தான் முடிவான புள்ளி விவரம் கிடைக்கும்.

Bus Stand at Tiruchirappalli

178 *Q.*—SRI M. S. MANI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்தில் கட்ட இருக்கும் வெளியூர் பஸ் ஸ்டாண்டை திருச்சி ரயில்வே ஜங்ஷனுக்கு அருகாமையில் கட்டவேண்டுமெனக் கோரி அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

A.—(*a*) Yes.

(*b*) The question of location of the bus stand is for the Municipality to decide.

(அ) ஆம். வந்துள்ளது.

(இ) பஸ் ஸ்டாண்டை எங்கே கட்டவேண்டும் என்பது திருச்சி முனிசிபாலிட்டி தீர்மானிக்கவேண்டிய விஷயமாகும்.

Meenakshi Temple (Madurai)

179 *Q.*—SRI P. MURUGAIYAN : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் வருமானம் எவ்வளவு ?

(இ) 1962-ம் ஆண்டிற்கான செலவு எவ்வளவு ?

(உ) கோவிலுக்குச் சொந்தமான நகைகளின் மதிப்பு எவ்வளவு ?

A.—(அ) Rs. 11,58,270·68 for Fasli 1372.

(இ) Rs. 11,60,513·73 for Fasli 1372.

(உ) About Rs. 18 (eighteen) lakhs.

Government Seed Farm (Pudukkottai)

180 *Q.*—SRI P. MURUGAIYAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை பகுதியில் உள்ள திருவரங்குளத்தில் உள்ள சர்க்கார் விதைப்பண்ணைக்கு எத்தனை எக்கர் நிலம் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது ?

(இ) அப்படி வாங்கப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு இதுவரை ஈட்டுத்தொகை (Compensation) கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(உ) ஆமெனில், அதனைக் கொடுக்கவேண்டிய ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படுமா ?

A.—(*a*) An extent of 48·09 acres of lands was purchased at a total cost of Rs. 61,541·54 nP.

(*b*) Compensation has been paid to all land owners except one and the amount of compensation to be paid is Rs. 120.

(*c*) The compensation amount of Rs. 120 could not be paid as the land owner is in Malaya. The amount has been kept in Revenue Deposit.

(அ) 48·09 எக்கர் பரப்புள்ள நிலம், மொத்தம் ரூ. 61,541·54 செலவில் வாங்கப்பட்டது.

(இ) ஒருவரைத் தவிர மற்ற நிலச் சொந்தக்காரர்கள் அனைவர்க்கும் நஷ்ட ஈட்டுத்தொகை கொடுக்கப்பட்டுவிட்டது. இன்னும் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத்தொகை ரூ. 120.

(உ) சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர் மலேயாவில் இருப்பதனால், மேற்சொன்ன நஷ்ட ஈட்டுத் தொகை ரூ. 120-ஐக் கொடுக்க முடியவில்லை. அந்தத் தொகை ரெவின்யூ டிபாசிட்டில் கட்டப்பட்டுள்ளது.

Vanaspathy Factory for Alangudi

181 *Q.*—SRI P. MURUGAIYAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, ஆலங்குடி வட்டத்தில் நிலக்கடலை அதிகமாக சாகுபடி ஆகின்றதால் நல்ல முறையில் அங்கு ஆராய்ச்சி செய்து வனஸ்பதி தொழிற்சாலை அமைக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

A.—(அ) No.

(இ) Does not arise.

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

[23rd November 1963

Employment Exchange (South Arcot)

182 *Q.*—SRI K. NARAYANASWAMI PILLAI : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் தென்னாற்காடு ஜில்லா வேலை தேடித்தரும் நிலையத்தில் எத்தனை பேர்கள் பதிவு செய்தனர் ?

(இ) எத்தனை பேர்களுக்கு வேலை கிடைத்தது ?

A.—(*a*) During the period from 1st April 1962 to 31st March 1963, a total number of 18,748 persons was registered at the Employment Exchanges in South Arcot district.

(*b*) Of these, 4,042 persons were placed in employment.

(அ) தென்னாற்காடு ஜில்லா வேலை தேடித்தரும் நிலையத்தில் 1—4—62-லிருந்து 31—3—63 வரை மொத்தம் 18,748 பேர் பதிவு செய்தனர்.

(இ) அதில் 4,042 பேருக்கு வேலை கிடைத்தது.

Juvenile delinquents

183 *Q.*—SRI K. CHEEMAICHAMY : கனம் செய்தித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-63-ல் மாவட்ட வாரியாக இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கை என்ன ?

A.—The following statement shows the district-wise particulars of Juvenile delinquents during 1962-63 in Madras State.

District.	Number of juveniles concerned in property offences.	other offences.
(1)	(2)	(3)
Railway Police ..	49	2,340
Tiruchirappalli ..	80	143
Thanjavur	94	50
South Arcot	67	53
Chingleput	110	72
Madurai Urban ..	80	351
Madurai North ..	50	17
Ramanathapuram ..	68	19
Tirunelveli	89	58
Kanyakumari ..	27	8
Coimbatore	156	43
Salem	140	31
The Nilgiris	28	4
North Arcot	111	154
Madras City	322	1,534
Total ..	1,471	4,877

23rd November 1963]

1962–63-ல் சென்னை மாநிலத்தில் இளங்குற்றவாளிகள் சம்பந்தமாக மாவட்ட வாரியான விவரங்களைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது :—

மாவட்டம்.	குற்றவாளிகளின் எண்ணிக்கை. சொத்து சம்பந்தமான குற்றங்கள்.	ஏனைய குற்றங்கள்.
(1)	(2)	(3)
ரயில்வே போலீஸ் ..	49	2,340
திருச்சிராப்பள்ளி ..	80	143
தஞ்சாவூர்	94	50
தென்ஆர்க்காடு	67	53
செங்கற்பட்டு	110	72
மதுரை நகர்ப் பகுதி ..	80	351
மதுரை வடக்கு	50	17
ராமநாதபுரம்	68	19
திருநெல்வேலி	89	58
கன்னியாகுமரி	27	8
கோயமுத்தூர்	156	43
சேலம்	140	31
நீலகிரி	28	4
வட ஆர்க்காடு	111	154
சென்னை மாநகரம் ..	322	1,534
மொத்தம் ..	1,471	4,877

Youth Employment Service Units

184 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether vacational guidance has been organised as part of work of Employment Exchange in the State ;

(*b*) If so, the details thereof ;

(*c*) Whether any survey has been made regarding the working of this Scheme ; and

(*d*) If so, the details thereof.

A.—(*a*) Yes.

(*b*) There are six Youth Employment Service/Employment Councelling Units at present at the District Employment Offices, Madras, Madurai, Tiruchirappalli, Coimbatore, Vellore and Cuddalore. It is also proposed to extend the Scheme to cover the remaining districts in the State on phased programme.

(*c*) No ' Survey ' was conducted. However, evaluation of the working of the Scheme in the Units at Madras, Madurai, Tiruchirappalli and Coimbatore was undertaken.

(*d*) The finding of this evaluation was that the Youth Employment Service Units had rendered useful service in preparing the Youth of the State in choosing careers.

[23rd November 1963

(அ) ஆம்.

(இ) சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், வேலூர், கடலூர் ஆகிய இடங்களில் உள்ள ஜில்லா எம்ப்ளாய்மெண்டு ஆபிசுகளில் ஆறு இளைஞர் வேலைவாய்ப்பு/வேலைவாய்ப்பு ஆலோசனை யூனிட்டுகள் உள்ளன. இத் திட்டத்தை இம் மாநிலத்திலுள்ள எஞ்சிய மாவட்டங்களிலும் படிப்படியாக விஸ்தரிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(உ) 'சர்வே' எதுவும் நடத்தவில்லை; எனினும், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் யூனிட்டுகளில் இத்திட்டம் எப்படி நிறைவேறி வருகிறது என்பது சீர்தூக்கிப் பார்க்கப்பட்டது.

(எ) இதனால் இளைஞர்கள் தங்கள் வேலைவாய்ப்புகளைத் தெரிந்தெடுப்பதில் இந்த யூனிட்டுகள் பயன்தரும் பணியாற்றியிருப்பதாகத் தெரிந்தது.

Stores Purchase Committee (Agriculture Department)

185 Q.—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) Whether any Stores Purchase Committee is functioning in the Agricultural Department; and

(b) If so, the details of its composition.

A.—(a) There is no Stores Purchase Committee in the Agricultural Department. But there is an Agricultural Machinery Advisory Committee constituted by the Government to advise the Department about all proposals for the purchase of Agricultural machinery costing Rs. 10,000 or more.

(b) The Agricultural Machinery Advisory Committee as reconstituted in 1959 consists of the Commissioner of Food Production, Madras, as Member-Chairman, the Director of Agriculture as Convenor and member, the Joint Director of Agriculture (Engineering), Madras, the Principal, Engineering College, Guindy and the Chief Engineer, Public Works Department as members and one non-official member representing agriculturists.

(அ) விவசாயத் துறையில் ஸ்டோர்ஸ் பர்ச்சேஸ் கமிட்டி எதுவுமில்லை. ஆனால் விவசாய யந்திர ஆலோசனைக் கமிட்டி ஒன்று உள்ளது. ரூபாய் 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட விலையுள்ள விவசாய யந்திரங்களை வாங்குவது சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் விவசாயத் துறையினருக்கு ஆலோசனை கூற அரசாங்கம் இக் கமிட்டியை அமைத்துள்ளது.

(இ) விவசாய யந்திர ஆலோசனைக் கமிட்டி 1959-ல் மீண்டும் புதிதாய் அமைக்கப்பட்டது. சென்னை உணவு உற்பத்திக் கமிஷனர் இதன் அங்கத்தினர்-தலைவர் ஆவார். விவசாயத் துறை டைரக்டர் கமிட்டியின் அங்கத்தினர்-அமைப்பாளர் ஆவார். விவசாயத் துறை கூட்டு டைரக்டர் (என்ஜினீரிங்), கிண்டி என்ஜினீரிங் கல்லூரி முதல்வர், பொதுப்பணித்துறைத் தலைமை என்ஜினீயர் ஆகியோர் அதன் அங்கத்தினர்களாவர். இவர்கள் தவிர, விவசாயிகளின் பிரதிநிதியாக அரசாங்கச் சார்பற்ற அங்கத்தினர் ஒருவரும் இதில் இருக்கிறார்.

Stamp-Vendors

186 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon the Minister for Works be pleased to state—

(a) Whether it is a fact that the stamp-vendors are appointed on population basis; and

(b) If so, the details thereof.

23rd November 1963]

A.— (a) Yes.

(b) Private persons are licensed as non-official stamp-vendors by Collectors and Revenue Divisional Officers. The number of non-official vendors in each district should be at least 5 for every one lakh of population.

(அ) ஆம்.

(இ) கலெக்டர்களும், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்களும், அரசாங்கச் சார்பற்ற ஸ்டாம்பு விற்பனையாளர்களாகத் தனி நபர்களுக்கு லைசென்சு வழங்குகின்றனர். இந்த விற்பனையாளர்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு லட்சம் ஜனத்தொகைக்கும் குறைந்தது ஐந்து பேராவது இருக்கவேண்டும்.

Stage Carriage

187 Q.—Sri M. S. MANI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் இம் மாநிலத்தில் எத்தனை Stage carriage-கள் இருக்கின்றன?

A.—5,782 including 1,007 spare buses on 1st September 1963.

1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ந் தேதிவரையில், 1,007 ஸ்பேர் பஸ்கள் உட்பட 5,782 பஸ்கள் உள்ளன.

Social Welfare Workers

188 Q.—திரு. ம. கமலநாதன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் எத்தனை சமூகநல ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்?

(இ) இவர்களில் தியாகிகள் எத்தனை பேர்?

(உ) தியாகிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

(எ) மாஜி இராணுவத்தினருக்கோ அல்லது அவர்களது குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கோ இத்தகைய உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா?

(ஐ) ஆமென்றால், எத்தனை பேர்?

A.—(a) 744.

(b) 457.

(c) 286.

(d) Only Ex-Indian National Army men are appointed as Social Welfare Workers.

(e) One.

(அ) 744.

(இ) 457.

(உ) 286.

(எ) மாஜி இந்திய தேசீய இராணுவத்தைச் சேர்ந்தோருக்கு மட்டும் சமூகநல ஊழியர் வேலை கொடுக்கப்படுகிறது.

(ஐ) ஒருவர்.

[23rd November 1963

Harikatha Kalakshepam for Juvenile delinquents

189 *Q.*—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) Whether there is any proposal to conduct "Harikatha Kalakshepam" to convert Juvenile delinquents in Borstal Schools; and

(*b*) If so, the details of the scheme.

A—(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

Policemen (supply of leather goods)

190 *Q.*—SRI K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Home be pleased to state, the expenditure incurred for the purchase of leather goods for the Policemen such as belts, boots, etc., during the year 1962-63?

A.—The expenditure incurred during 1962-63 was as follows:—

	RS.	NP.
(1) For the purchase of black leather ammunition boots and leather laces from the Central Jail, Vellore.	4,66,832	93
(2) For the purchase of boots and shoes brown leather from the Government Footwear Unit, Perambur, Madras-12, and belts, leather pouches, etc., from the Government Footwear Unit, Pallavaram.	31,731	16
Total ..	4,98,564	09

இது சம்பந்தமாக 1962–63-ல் செய்த செலவுகளாவன:—

(1) வேலூர் மத்தியச் சிறையிலிருந்து கருப்புத் தோல் பூட்சுகளும் தோல் லேஸ்களும் வாங்குவதற்காக.	ரூ.	4,66,832	93
(2) சென்னே-12, பெரம்பூரிலுள்ள அரசாங்கக் காலணித் தயாரிப்பு யூனிட்டிலிருந்து பழுப்புத் தோல் பூட்சுகள், செருப்புகள் இவற்றையும் பல்லாவரம் அரசாங்கக் காலணித் தயாரிப்பு யூனிட்டிலிருந்து பெல்டுகள், தோல் பைகள் முதலியவற்றையும் வாங்குவதற்காக.	ரூ.	31,731	16
மொத்தம் ரூபாய் ..		4,98,564	09

Encroachment (Burial Ground)

191 *Q.*—SRI S. MADHAVAN: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா, வரப்பூர் கிராமத்தில் ஹரிஜனங்களுக்கான இடுகாடு அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதா?

(இ) இது விஷயமாக மேற்படி கிராமத்து ஹரிஜனங்கள் அரசாங்கத்துக்கு பிராது அனுப்பியிருக்கிறார்களா?

23rd November 1963]

(உ) மேற்படி இடுகாடு அரசாங்க ரிகார்டுகளில் புறம்போக்கு எனக் காட்டப்பட்டிருப்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

A.—(*a*) Yes. The owner of the adjoining land has encroached upon the burial ground in S. No. 112/4 of the Warappur village, Tirupathur taluk which is being used by the Harijans of the village for burying the dead bodies of the children. The encroachment had been booked and highest dry rate plus penalty has been charged pending inspection. The Collector has instructed the Tahsildar to evict the encroachment quickly.

(*b*) No.

(*c*) Yes. The burial ground in S. No. 112/4 of Warappur village has been shown as 'burial ground poramboke' in Government records.

(அ) ஆம்; திருப்பத்தூர் தாலூகா, வரப்பூர் கிராமத்தில் சர்வே எண் 112/4-ல் உள்ள இடுகாட்டு நிலத்தை அடுத்துள்ள நிலச் சொந்தக்காரர் ஆக்கிரமித்துள்ளார். இந்த இடுகாட்டில் ஹரிஜன குழந்தைகளின் சவங்களைப் புதைக்கிறார்கள். மேற்படி நில ஆக்கிரமிப்பு குறித்துக்கொள்ளப்பட்டு பரிசிலனே செய்கிறவரையில் அதற்கு தண்டத் தீர்வையோடு கூட மிக அதிக அளவு புன்செய்த் தீர்வையும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பாளரை உடனடியாக வெளியேற்றுமாறு தாசில்தாருக்குக் கலெக்டர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

(இ) இல்லே.

(உ) ஆம்; தெரியும். வரப்பூர் கிராமம், சர்வே எண் 112/4-ல் உள்ள இடுகாடு அரசாங்க ரிகார்டுகளில் 'இடுகாடு புறம்போக்கு' எனக் காட்டப்பட்டிருக்கிறது.

Jeep Buses

192 *Q.*—PULAVAR K. GOVINDAN: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

ஜீப் பஸ் ஓட்டும் திட்டம் நடைமுறையில் இருக்கிறதா அல்லது கைவிடப்பட்டுள்ளதா?

A.—The scheme for the introduction of jeep stage carriages in rural areas is still in force. Further progress is however, not possible now, as jeep type vehicles have been frozen for defence purposes.

கிராமப் பகுதிகளில் ஜீப் பஸ்களே விடும் திட்டம் இன்னும் அமுலில் உள்ளது. ஆயினும், ஜீப் வண்டிகள் பாதுகாப்புக் காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளபடியால், இத் திட்டத்தை இப்போது மேலும் அமுல் செய்வதற்கில்லே.

Municipalities (Embezzlement and misappropriation of funds)

193 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to place on the table of the House a statement showing:—

(*a*) the list of municipalities in which cases of embezzlement of collections and misappropriations have been noticed during the last three years for which audit have been completed;

(*b*) the total amount involved in each municipality for each year under reference; and

(*c*) the number of Municipal employees involved.

A.—(*a*), (*b*) and (*c*): A statement [a] is placed on the table of the House.

[a] Printed as Appendix XI on pages 809–810 infra.

[23rd November 1963

Special District Educational Officers

194 *Q.*—SRIMATHI T. N. ANANDANAYAKI :—Will the Hon. the Chief Minister be pleased to state how many schools are generally under the control of one Special Education Officer ?

A.—The average number of schools under the control of one Special District Educational Officer is 100, though it varies from 70 to 130 in some districts.

மாவட்ட விசேஷக் கல்வி அதிகாரியின் மேற்பார்வையில் உள்ள பள்ளிகளின் சராசரி எண்ணிக்கை 100 ஆகும். ஆனால், சில மாவட்டங் களில் இது 70-லிருந்து 130 வரை கூட இருக்கிறது.

Gold Refineries

195 *Q.*—SRI A. K. SUBBIAH : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கத்திடம் மாநில அரசாங்கம் 14 காரட் தங்கத் தயாரிப்பு தொழிற்சாலை ஆரம்பிக்க அனுமதி கோரினார்களா ?

(இ) அப்படியானால், மத்திய அரசாங்கத்தின் பதில் என்ன ?

A.—(*a*) and (b) : With the concurrence of the Government of India and the former Gold Board, the Madras Industrial Co-operative Gold Refinery Limited was registered, at Madras on 15th July 1963, for the manufacture of 14ct. gold alloy. It was officially started on 20th September 1963.

(அ) & (இ): இந்திய அரசினரின் சம்மதத்தைப் பெற்றும் முன்னாள் தங்க போர்டின் சம்மதத்தைப் பெற்றும் சென்னையில் 15—7—63-ல் சென்னைத் தொழில் கூட்டுறவு தங்கச் சுத்திகரிப்புச்சாலை லிமிடெட் பதிவு செய்யப்பட்டது. 14 காரட் தங்கம் தயாரிப்பது இதன் நோக்கமாகும். இது 20—9—63-ல் ஆரம்பிக்கப்பட்டது.

Loans to displaced Goldsmiths

196 *Q.*—SRI S. MADHAVAN :—Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) Whether it is a fact that undue delay has been caused in disposing of the applications for loans from goldsmiths ;

(*b*) the number of loan applications given by the goldsmiths in the months of April to June 1963 ; and

(*c*) the number of goldsmiths who were given loans in each district?

A.—(*a*) No, Sir.

(*b*) 3,227.

(*c*) The number of goldsmiths who were given loans district-war upto 15th October 1963, is as follows :—

Madras	148
Chingleput	179
Salem	135
North Arcot	176
South Arcot	87
Coimbatore	128
Tiruchirappalli	158
Thanjavur	729
Madurai	223
Ramanathapuram	248
Tirunelveli	346
Kanyakumari	197
Nilgiris	7
Total	2,761

23rd November 1963]

(அ) இல்லை.

(இ) மூவாயிரத்து இருநூற்று இருபத்தேழு.

(உ) 1963 அக்டோபர் 15-ம் தேதி வரையில் மாவட்ட வாரியாக கடன் வழங்கப்பட்ட பொற்கொல்லர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

சென்னை	148
செங்கற்பட்டு	179
சேலம்	135
வட ஆற்காடு	176
தென் ஆற்காடு	87
கோயம்பத்தூர்	128
திருச்சிராப்பள்ளி	158
தஞ்சாவூர்	729
மதுரை	223
இராமநாதபுரம்	248
திருநெல்வேலி	346
கன்னியாகுமரி	197
நீலகிரி	7
மொத்தம்	2,761

197 *Q.*—SRI K. S. MANI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வேலையிழந்த பொற்கொல்லர்கள் எத்தனை பேர் கடனுதவி கோரி மனு செய்துள்ளனர் ?

(இ) மனுச் செய்தவர்களில் எத்தனை பேருக்கு இதுவரை கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது ?

(உ) கடனுதவி அளிக்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு ?

A.—(*a*) 1,769 goldsmiths applied for loan upto the 15th October 1963.

(*b*) 729 goldsmiths up to 15th October 1963.

(*c*) Rs. 4,78,600.

(அ) 1963 அக்டோபர் 15-ம் தேதி வரையில் 1,769 பொற்கொல்லர்கள் கடன் கோரி மனுச் செய்துள்ளனர்.

(இ) 1963 அக்டோபர் 15-ம் தேதி வரையில் 729 பொற்கொல்லர் களுக்கு கடன் அளிக்கப்பட்டுள்ளது.

(உ) ரூ. 4,78,600.

[23rd November 1963

Selection of Students to Engineering Course

198 *Q.*—Sri RAMA ARANGANNAL: Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) How many students are selected to the Engineering Course for the current year ?

(*b*) Whether the communal Government Order was adopted and if so, to place the details on the table of the house ; and

(*c*) Whether any preference was given to those children born out of inter-caste marriage ? How many ?

A.—(*a*) 1,100.

(*b*) There is reservation of seats upto 16 per cent for Scheduled Castes and Tribes and 25 per cent for Backward Classes. No other reservation on a "cummunal" or "caste" basis is made.

(*c*) No.

(அ) 1,100.

(இ) ஹரிஜனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் 16 சதவீதம் வரையிலும், பின்னிலை வகுப்பினருக்கு 25 சதவீதம் வரையிலும் இன்ஜினீரிங் கல்லூரியில் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, வகுப்பு அடிப்படையிலோ, சாதி அடிப்படையிலோ வேறு எந்தவிதமாகவும் மாணவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்படுவதில்லை.

(உ) இல்லை.

Co-operative Societies

199 *Q.*—Sri P. U. SHANMUGAM: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை தாலுக்கா, கீழ்பெண்ணாத்தூர் கிராம கூட்டுறவு பாங்கியில் அடமானம் வைக்கப்பட்ட தானியங்கள் கடன் தொகை வசூலாவதற்கு முன்பாகவே விடுவிக்கப்பட்டன என்பது உண்மையா ?

(இ) அப்படியானால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

A.—(*a*) No, Sir.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

200 *Q.*—Sri P. U. SHANMUGAM: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மார்க்கெட்டிங் சொசைட்டியின் தலைவராகவோ, செயலாளர்களாகவோ அல்லது டைரக்டர்களாகவோ தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் வர்த்தக சங்கத்தின் தலைவராகவோ அல்லது செயலாளராகவோ, இருத்தல் கூடாது என்ற விதி உண்டா ?

A.—There is no such rule.

அத்தகைய விதி எதுவும் இல்லை.

23rd November 1963]

Government Hospitals (bed bugs)

201 *Q.*—Sri R. NARAYANAN: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க மருத்துவ விடுதிகளில் உள்ள மூட்டைப் பூச்சிகளை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

A.—The following steps are taken for eradication of bugs in Government Hospitals :—

(i) The mattressess are sterilised periodically.

(ii) The cots are flamed with blow lamps.

(iii) The disinfectants, Basuddin Diazinon, etc., are sprayed in the hospital premises.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மூட்டைப் பூச்சிகளை ஒழிப்பதற்கு அடியிற் கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(1) படுக்கைகளை அவ்வப்போது சுத்தப்படுத்தி கிருமி நீக்கம் செய்கிறார்கள்.

(2) புலோ லாம்புகள் (blow lamps) மூலம் கட்டில்களைச் சூடேற்றுகிறார்கள்.

(3) பாசுடீன், டயாசினான் போன்ற கிருமிகொல்லி மருந்துகளை ஆஸ்பத்திரிகளில் தெளிக்கிறார்கள்.

Selection of students in Polytechnics

202 *Q.*—Sri K. NARAYANSWAMY PILLAI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962–63-ல் சர்க்கார் பாலிடெக்னிக் பள்ளியில் சேருவதற்கு எத்தனை பேர் மனு கொடுத்தனர் ?

(இ) எவ்வளவு பேர் பள்ளியில் சேர்க்கப்பட்டனர் ?

A.—(அ) 3,847.

(இ) 1,072.

Sub-Registrar's Office, Nainarkoil

203 *Q.*—Sri C. SRINIVASAN: Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) Whether there is any proposal for the establishment of a Sub-Registrar's Office at Nainarkoil, Paramakudi taluk, Ramanathapuram district ; and

(*b*) If so, when ?

A.—(*a*) & (*b*) There is a proposal under consideration for opening of a Sub-Registry Office either at Nainarkoil or at Salaigramam.

(அ) & (இ): நயினார்கோயிலிலாவது, சாலைக் கிராமத்திலாவது சப்-ரிஜிஸ்டரார் ஆபீஸ் ஒன்றைத் திறக்கும் திட்டம் அரசாங்கத்தின் யோசனையில் உள்ளது.

[23rd November 1963

Karur Municipality (Appointment of a Special Officer)

204 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state —

(*a*) the circumstances leading to the appointment of a Special Officer to exercise the powers of hearing appeals against taxes and the reasons for taking away such powers from the Municipal Council, Karur ; and

(*b*) Whether its views were obtained from the concerned Council before issuing the said Government Order ?

A.—(*a*) The Karur Municipal Council through its Tax AppealCommittee reduced taxes liberally. There were several cases of under-assessment. Taxes which had been fixed after taking into consideration the nature of the building, its size, its rental value, etc., were reduced by the Appeal Committee, without assigning any reasons for such a wholesale reductions. In most of the cases, the tax was reduced by about 33 per cent and in some cases by even more than 50 per cent. This policy of reducing taxes in such liberal manner and without any justification was found to be detrimental to the financial interests of the Municipality. The Council was apprised of this position in May 1959 by the Chief Electoral Officer but with no result. Again early in 1961, the Government also wrote to the Council and it was pointed out that if the Committee or the Council followed such a policy of liberal reduction without assigning reasons therefor, the Government may be compelled to consider the question of appointing a Special Officer under Rule 28-A of Schedule IV to the Madras District Municipalities Act, 1920.

The Appeal Committee did not however pay heed to this caution also and again, in December 1961, and in year 1962 it reduced the tax considerably in a very large number of cases without assigning any reasons whatever. As this persistent action of the Council very seriously affected, the financial interests of the Municipality, it was found necessary to withdraw its power and appoint a special officer.

(*b*) No, Sir.

As mentioned earlier, the Council was given a caution well in advance and was given sufficient time to take note of the situation.

(அ) கரூர் நகராட்சி மன்றம் அதன் வரி அப்பீல் கமிட்டியின் மூலம் வரித் தொகைகளை தாராளமாகக் குறைத்துள்ளது. நியாயமான வரிக்குக் குறைவாகவே பலருக்கு வரி விதிக்கப்பட்டிருந்தது. கட்டிடத்தின் வகை, அதன் அளவு, அதன் வாடகை மதிப்பு முதலியவற்றைப் பரிசீலித்து நிர்ணயிக்கப்பட்ட வரித் தொகைகளை வரி அப்பீல் கமிட்டி எந்தவிதமான காரணமும் காட்டாமல் வெகுவாகக் குறைத்துவிட்டது. பெரும்பாலோருக்கு சுமார் 33 சதவீத அளவுக்கு வரி குறைக்கப்பட்டும், சிலருக்கு 50 சதவீத அளவுக்குக் குறைக்கப்பட்டும் உள்ளது. இவ்வாறு நியாயமான காரணமின்றி தாராளமாக வரியைக் குறைக்கும் கொள்கையினால் நகராட்சியின் நிதிநிலை பாதிக்கப்படுவதாகத் தெரிந்தது. தலைமைத் தேர்தல் அதிகாரி 1959 மே மாதத்தில் இந்த நிலையை நகராட்சி மன்றத்திற்குத் தெரிவித்தும் பலன் ஏற்படவில்லை. மீண்டும் 1961 தொடக்கத்தில் அரசாங்கமும் நகராட்சி மன்றத்திற்கு எழுதியது. அப்பீல் கமிட்டியோ நகராட்சி மன்றமோ காரணமின்றி தாராளமாக வரியைக் குறைத்துக்கொண்டே போனால் 1920-ம் ஆண்டு சென்னை ஜில்லா முனிசிபாலிட்டிகள் சட்டத்தின் IV-வது அட்டவணையைச் சேர்ந்த 28-A விதியின் கீழ் விசேஷ அதிகாரி ஒருவரை நியமிக்கலாமாவென்று யோசிக்கும் நிர்ப்பந்தத்திற்கு அரசாங்கம் வர நேரிடும் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது.

23rd November 1963]

என்றாலும், அப்பீல் கமிட்டி இந்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தவில்லை. 1961-ம் ஆண்டு டிசம்பரிலும், 1962-ம் ஆண்டு ஜனவரியிலும் மீண்டும் எந்தக் காரணமும் குறிப்பிடாமல் பலருக்கு வரியைக் குறைத்தது. நகராட்சி மன்றத்தின் இந்தப் பிடிவாதமான நடவடிக்கையின் மூலம் நகராட்சியின் நிதிநிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டதால், அதன் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு விசேஷ அதிகாரி ஒருவரை நியமிப்பது அவசியமெனத் தெரிந்தது.

(இ) இல்லை.

மேலே சொல்லியிருப்பதைப்போல, நகராட்சி மன்றத்திற்கு முன் கூட்டியே எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. இந்த நிலையைக் கவனித்து நடக்க அதற்குப் போதிய அவகாசம் கொடுக்கப்பட்டது.

State Transport Workshop, Chromepet

205 *Q.*—Sri MUNU ADHI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) குரோம்பேட்டையிலுள்ள அரசாங்க பஸ் கட்டும் தொழிற்சாலையில் மொத்தம் எத்தனை பேர் பணி புரிகின்றனர் ?

(இ) அவர்கள் தொழில் செய்யும் இடத்திற்கு அருகாமையில் குடியிருக்க வேண்டும் என்கின்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதா ?

(உ) அத்தொழிலாளர்களுக்கு குரோம்பேட்டையிலேயே வசிப்பதற்கேற்ப குடியிருப்பு வசதி செய்துதரும் உத்தேசமுண்டா ?

A.—(*a*) The strength of the staff working in the State Transport Central Workshop at Chromepet is 913 (as on 1st October 1963).

(*b*) No.

(*c*) Yes.

(அ) குரோம்பேட்டையிலுள்ள ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சென்ட்ரல் வொர்க் ஷாப்பில் பணியாற்றும் தொழிலாளிகளின் எண்ணிக்கை (1-10-1963-ல் இருந்தபடி) 913 ஆகும்.

(இ) இல்லை.

(உ) ஆம்.

Lorries (State permit)

206 *Q.*—Sri K. GOPALA KOUNDER : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதிக்கு முன் பர்மிட் கொடுக்கப்பட்ட லாரிகளுக்கு மாநிலம் பூராவும் போக ஸ்டேட் பர்மிட் கொடுப்பது சம்பந்தமாக உள்ள அரசாங்க ஆணை மேஜை மீது வைக்கப்படுமா ?

(இ) 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதியிலிருந்து லாரிகளுக்கு ஸ்டேட் பர்மிட் கொடுப்பது சம்பந்தமாக எந்தவித நடைமுறை அனுசரிக்கப்படுகிறது ?

(உ) அது சம்பந்தமாக உள்ள அரசாங்க ஆணை நகலும் மேஜை மீது வைக்கப்படுமா ?

A.—The answer* is placed on the table of the House.

சபையில் ஓர் அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

* Printed as Appendix XII on page 810-815 infra.

[23rd November 1963

Sugar Factories

207 *Q.*—SRI MUNU ADHI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963–64-ம் ஆண்டில் எத்தனை புதிய சர்க்கரை ஆலைகள் திறக்க லைசென்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளன ?

(இ) செங்கல்பட்டு மாவட்டத்தில் தனியார் துறையில் சர்க்கரை ஆலை திறப்பதற்காக லைசென்சு கோரி எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன ?

(உ) எத்தனை பேர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

(எ) அவை எங்கெங்கு நிறுவப்படும் ?

A.—(*a*) No licence has been granted during 1963–64 for the establishment of new sugar mills in Madras State.

(*b*) There has been no application for licence to set up a sugar factory in Chingleput district.

(*c*) & (*d*) Do not arise.

(அ) புதிதாக சர்க்கரை ஆலைகள் நிறுவ 1963-64-ம் ஆண்டில் லைசென்ஸ் எதும் வழங்கப்படவில்லை.

(இ) செங்கல்பட்டு மாவட்டத்தில் சர்க்கரை ஆலை நிறுவ ஒரு விண்ணப்பமும் வரவில்லை.

(உ) & (எ) வினாவிற்கு இடமில்லை.

Vedaranyam Forest (Sale of animals)

208 *Q.*—SRI. C. M. AMBIKAPATHI : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யத்திலுள்ள மான், குதிரைகள் முதலியன விற்பனை செய்யப்படுகின்றனவா ?

(இ) அப்படியானால், 1962-ம் ஆண்டு எத்தனை விற்பனை செய்யப் பட்டன ?

A.—(*a*) There were no sales of these animals by the Forest Department.

(*b*) Does not arise.

(அ) இந்த விலங்குகளைக் காட்டு இலாகா விற்பனை செய்யவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Cashew Cultivation

209 *Q.*—SRI P. MURUGAIYAN : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் ஊருக்கு அருகாமையில் முந்திரி பயிரிடு வதால் அங்குள்ள கிணறு, குளம் ஆகியவற்றில் உள்ள தண்ணீரை முந்திரி மரம் விரைவில் உறிஞ்சிவிடுவது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அப்படியானால் நன்கு ஆராய்ச்சி செய்து முந்திரி பயிரிடுவதை ஊருக்கு அருகில் பயிர் செய்யாது காடுகளின் நடுப்பகுதியில் பயிர் செய்ய உத்திரவிடப்படுமா ?

(உ) அப்படி முந்திரி பயிரிடுவதற்குப் பதில் யூகலிப்டிஸ் மரம் ஊருக்கு அருகில் வளர்க்க உத்தேசமுண்டா ?

23rd November 1963]

A.—(*a*) Cashew is mostly grown under rainfed conditions and like all rainfed trees, it will utilise the underground water to a certain extent. By growing cashew in the villages, the water in the tanks and wells may not get depleted rapidly.

(*b*) The question does not arise.

(*c*) The Forest Department has proposed to raise Eucalyptus hybrid on a large scale in this State, both in the forest areas as well as in the adjoining village lands, available for afforestation.

(அ) முந்திரி பெரிதும் மானம் பார்த்த பூமியிலேயே பயிரிடப் படுகிறது. மற்ற மானம் பார்த்த மரங்களைப்போலவே, இதுவும் பூமிக் கடியிலுள்ள தண்ணீரை ஓரளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளும். கிராமங் களில் முந்திரியை வளர்ப்பதால், ஏரி, குளம், கிணறுகளில் உள்ள தண்ணீர் விரைவில் வற்றிவிடாது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) இம் மாநிலத்தில் காட்டுப் பகுதியிலும் காடு வளர்ப்புக்கு ஏற்றதாய் கிராமங்களுக்கு அருகிலுள்ள நிலங்களிலும் வன வளத் துறையினர் யூகலிப்ட்ஸ் மரங்களை வைத்து வளர்க்க உத்தேசித்துள்ளனர்.

Private Printing Presses

210 *Q.*—SRI P. MURUGAIYAN : கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

1963-ல் தமிழ் நாட்டில் எத்தனை தனியார் துறை அச்சகங்கள் உள்ளன ?

A.—The total number of private printing presses in this State covered by the Factories Act, 1948, as on 30th June 1963 is 532.

1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்திற்குட்பட்ட தனியார்துறை அச்சகங்களின் மொத்த எண்ணிக்கை 30—6—63 வரை 532 ஆகும்.

Slum Improvement, Madras City

211 *Q.*—SRI K. NARAYANASWAMY PILLAI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் சென்னை கடற்கரை ஓரத்தில் உள்ள சேரிகளில் வாழ் பவர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப் பட்டது ?

(இ) எத்தனை வீடுகள் கட்டப்படும் ?

(உ) மேற்படி வீடுகள் கட்ட ஏற்படும் செலவில் நம் மாநில அரசாங்க மும் மத்திய அரசாங்கமும் எவ்வளவு தொகை கொடுக்க உத்தரவிடப் பட்டுள்ளது ?

A.—(*a*) & (*b*) A sum of Rs. 60·00 lakhs has been provided in the Budget Estimate for 1963–64 towards implementation of the Slum Improvement Scheme in Madras City and in the mufussal. The amount required for the implementation of the following three Slum Improvement Projects along the sea-shore of Madras City will be drawn from this provision :—

1. Kasipuram 'A' Block Slum Improvement Scheme. .. 59 Tenements.
2. Tondiarkuppam Slum Improvement Scheme .. 375 Tenements.

[23rd November 1963

3. The Santhome Beach Area Slum .. .. Improvement Scheme 1,100 Tenements.

(*c*) The expenditure on these projects will be met by the State and Central Governments as shown below :—

		RS.
State Governments subsidy	.. ..	31,07,620
Central Government's loan and subsidy	..	47,67,300

(அ) & (இ) : சென்னை நகரிலும் வெளியூர்களிலும் சேரி அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு 1963–64 பட்ஜெட் மதிப்பீட்டில் ரூ. 60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னைக் கடற்கரையோரத்தில் கீழ்க்கண்ட மூன்று சேரி அபிவிருத்தித் திட்டங்களுக்கு வேண்டிய தொகை மேற்சொன்ன நிதி ஒதுக்கத்திலிருந்து பெறப்படும் :—

1. காசிபுரம் 'A' தொகுதி சேரி அபிவிருத்தித் திட்டம்.	..	59 குடியிருப்புகள்.
2. தொண்டையார்குப்பம் சேரி அபிவிருத்தித் திட்டம்.	..	375 குடியிருப்புகள்.
3. சாந்தோம் கடற்கரைப் பகுதி சேரி அபிவிருத்தித் திட்டம்.	..	1,100 குடியிருப்புகள்.

(உ) இத் திட்டங்களுக்கு வேண்டிய செலவு மாநில அரசினாலும், மத்திய அரசினாலும் கீழக்கண்டவாறு ஏற்கப்படும்.—

மாநில அரசாங்கத்தார்	..	ரூ. 31,07,620.
மத்திய அரசாங்கத்தார் கடன் உதவித் தொகை.	..	ரூ. 47,67,300.

Archaeological Excavations, North Arcot

212 *Q.*—PULAVAR K. GOVINDAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டத்தைச் சேர்ந்த அத்தி, ஆளப்பிறந்தான் என்ற ஊர் பகுதிகளில் கல்வெட்டு ஆராய்ச்சியாவது, புதைபொருள் ஆராய்ச்சியாவது நடைபெற்றிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அவ்வாராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் யாவை ?

A.—(*a*) No, Sir.

(*b*) Does not arise.

(அ) இல்லை, ஐயா.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Registration of Marriages

213 *Q.*—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Food be pleased to State—

(*a*) whether there is any proposal to make registration of marriages obligatory for all persons in Madras State ; and

(*b*) the details thereof ?

A.—(*a*) No, Sir.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

MR. DEPUTY SPEAKER : The questions are over.

23rd November 1963]

III.—REQUEST FOR A HALF-HOUR DEBATE.

திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த குறுகிய காலக் கேள்விக்கு ஒதுக்கப்பட்ட நேரம் குறைவாக இருந்த காரணத்தால், மேற்கொண்டு அதற்கு அரை மணி நேரம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 11-00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது பிரத்தியேகமாகக் கேட்கப்பட்ட கேள்வி. அதிலே பல உப கேள்விகள் கேட்கப்பட்டன. இன்றைக்குத்தான் சபையின் இக்கூட்டத்தின் கடைசி நாள். இன்னும் பல மசோதாக்கள் இருக்கின்றன. ஆகவே, மேலும் அவகாசம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

கனம் உதவி சபாநாயகர் : இந்தக் கேள்விக்கு 15 நிமிஷம் அவகாசம் கொடுக்கப்பட்டது. பல அங்கத்தினர்கள் அதிலே பங்கு கொண்டார்கள். அமைச்சர் அவர்களும் விவரமாகப் பதில் அளித்திருக்கிறார்கள். ஆகவே, மேலும் அரை மணி நேரம் இதை விவாதிக்க வேண்டியதில்லை என்று நான் தீர்மானிக்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் துணைத் தலைவர் அவர்களே, சபை முன் இருக்கின்ற மசோதாக்கள் மீது அதிக நேரம் விவாதம் நடைபெறவில்லை.

MR. DEPUTY SPEAKER : I have already given the ruling.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இது எங்களுடைய ஒரு முக்கியமான பிரச்னையாக இருப்பதாலும், இந்த சபைக் கூட்டம் இன்று ஒத்திவைக்கப்படுகிற காரணத்தினாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உரிமை இதனால் பாதிக்கப்படுவதாலும் . . . .

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member resume his seat.

IV.—PRIVILEGE MATTERS.

1. PRESENCE OF POLICEMEN WITHIN THE PRECINCTS OF THE HOUSE.

SRI K. A. MATHIALAGAN : Mr Deputy Speaker, Sir, I wish to raise the following matter of privilege :—

" A number of policemen in plain clothes have stationed themselves in the lobbies around the Chamber, in front of the room of the Leader of the Opposition in front of the Hon. Speaker's room, at all entrances within the precincts of the House, in the canteen and near the bath rooms. Not only have they entered the precincts of the House but they are also questioning individual members about their programme of public speeches, etc. Some uniformed men were also seen in the precincts. An officer of the Police Intelligence Department was seen in the Officers' Gallery when I raised the question of privilege yesterday morning. This is an unwarranted invasion of the privileges of this House."

Sir, I request that I may be allowed to explain the privilege matter.

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member be brief.

SRI K. A. MATHIALAGAN : Sir, the term 'privilege' is defined in May's Parliamentary Practice as follows :—

'The distinctive mark of a privilege is its ancillary character. The privileges of Parliament are rights which are "absolutely necessary for the due execution of its powers". They are enjoyed by individual Members, because the House cannot perform its functions without unimpeded use of the services of its Members; and by each House for the protection of its Members and the vindication of its own authority and dignity.'

Then in the case of Shirley v. Fagg, the House of Commons, in asserting that privilege of Parliament belongs to every Member of the House of Commons, declared—

'That the reason of that privilege is, that the Members of the House of Commons may freely attend the public affairs of that House, without disturbance or interruption.'

Sir, I request that the words 'unimpeded use of the services', 'without disturbance' and 'without interruption' may be underlined.

In further explaining the scope of the privilege matter, I shall quote a case which had come up before the House of Commons and which was referred to the Committee of Privileges.

On 6th June 1780 the Commons resolved, "that the taking possession of the lobby and the avenue to this House on Friday last, by a large and tumultuous assembly of people, and maintaining the same, to the great obstruction of the business of this House, though frequently desired by the Serjeant at Arms attending this House, and by several Members, to withdraw, was a high violation of the privilege of this House, tended to control the freedom of debate, and was a gross and notorious insult on the dignity and constitution of Parliament".

Further, about the privilege of hon. Members, the House of Commons again decided on 12th April 1733—

'That the assaulting, insulting or menacing any member of this House, in his coming to or going from the House, or upon the account of his behaviour in Parliament is a high infringement of the privilege of this House, a most outrageous and dangerous violation of the rights of Parliament and a high crime and misdemeanour.'

So far as my privilege matter is concerned, the Police officers have entered the precincts of the House. We have to discharge our duty without interruption. We must have absolute freedom. As a

matter of fact, even the Police Officer in the corridor near our Opposition Leader's room enquired me on Saturday, whether I was going to defy the ban at Chingleput. Sir, entering the precincts of the House by high Police Officials is an invasion on the rights of the members of this House. They are not entitled to enter this House. So, I request that this matter may be referred to the Committee of Privileges.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** துணைத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கிளப்பினார்கள். இதிலே உரிமைப் பிரச்னை ஒன்றுமில்லை. ஹவுஸ் ஆப் காமன்ஸ் நடவடிக்கைகளிலிருந்தும் படித்துக் காட்டினார்கள். அதற்கு நன்றி. நமக்கு எல்லாம் தெரிகிறது. அதற்கும் இங்கே நடைபெற்றதாகக் குறிப்பிட்டதற்கும் சம்பந்தமில்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை நிறைவேற்றுவதிலும், அவர்கள் பொறுப்பை வகிப்பதிலும், யாரும் குறுக்கே நிற்கவில்லை. யாராவது போலீஸ் அதிகாரி பேசினால், இவர்கள் பேச வேண்டாம். நட்புறவைக்கொண்டு பேசி இருக்கலாம். எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கும் அவர்களிடம் நட்புறவு இருக்கிறது. தெரிந்தவர்களைக் கண்டால் "என்ன, ஏது" என்று பேசுவதுண்டு. தடையை மீறப்போகிறார்களா என்று கேட்டிருந்தால் கூட அதிலே ஒன்றும் தப்பு இல்லை. அவர்கள் வேண்டுமானால் பேச வேண்டாம். இவர்கள் போவதையும், வருவதையும் யாரும் தடை செய்வதில்லை. இங்கே யூனிபாரம் போட்டுக்கொண்டு 'கார்டு' பண்ணுகிறவர்கள் யாரும் இல்லை. இங்கே டிரஷரி பெஞ்சுகளில் இருப்பவர்கள்கூட சில சமயங்களில் தகவல் வேண்டியிருக்கிறது. பிரச்னைகள் வருகின்றன. உப கேள்விகள் கேட்கப்படுகின்றன. என்ன நடந்தது என்பதைப்பற்றி தகவல்கள் வேண்டியிருக்கும். நானே ஒரு பெரிய போலீஸ் அதிகாரியை இங்கே வரச்சொன்னேன். அரசாங்க அலுவல்களை ஒட்டி அவர்கள் வர வேண்டியிருக்கிறது. அவர்கள் இங்கே வருவதிலே தவறு இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குறுக்கே நின்றால் அவர்கள் ஆட்சேபிக்கலாம். அப்படி ஒன்றுமில்லை. போலீசாரைக்கண்டு யாரும் பயப்பட வேண்டியதில்லை. கடமையைச் செய்வதற்காகத்தான் அவர்கள் இங்கே வருகிறார்கள். ஆகவே இதிலே உரிமைப் பிரச்னை ஒன்றும் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : அமைச்சர் அவர்கள் கூறுகிற பெரிய அதிகாரிகளைப்பற்றி நான் சொல்லவில்லை. காரிடார், பாத் ரூம்களில்கூட நூற்றுக்கணக்கான போலீசார் வருகிறார்கள். இங்கே நடைபெறுகிற விவாதத்தைத் தடைப்படுத்தும் முறையிலும், எங்களுடைய உரிமையைப் பாதிக்கும் வகையிலும் அவர்கள் நடந்து கொள்கிறார்கள். இது எங்களுடைய அடிப்படை உரிமையைப் பாதிக்கிறது. ஆகவே பிரைமபசி கேஸ் இருக்கிறது என்று ஒப்புக்கொண்டு, அருள் கூர்ந்து உரிமைக் கமிட்டிக்கு பிரச்னையை விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The decision of the Chair on the point whether there is a *prima facie* case will be given at the next sitting of the House.

[23rd November 1963

(2) Functioning of the D.M.K. members of the House in view of the Party's announcement to burn a part of the Constitution

Sri S. NANJUNDA ROW : Mr. Deputy Speaker, Sir, I raise the following matter of privilege :

'All the Members of this Assembly have taken oath before entering office that " they will bear true faith and allegiance to the Constitution of India as by law established and that they will faithfully discharge the duty up on which they are about to enter.".' Now I wish to raise a matter of privilege, whether the Dravida Munnetra Kazhagam Party Members, who form the main Opposition in the Assembly, having publicly announced that their policy is to burn a part of the Constitution, can be allowed to function as Members in the Assembly, since they have flagranity broken or propose to break the solemn oath taken by them. It is my rather unfortunate lot to move this privilege motion here in this House, on this solemn day, the sad day of the death of President Kennedy. President Kennedy, you know, Sir, died for a cause. He died fighting for the integration of his country. He died fighting for civil rights of the people of the United States of America. On hearing such sad news, we in this Assembly, paid our homage to that soul, one who was the symbol of unity and integration of the United States of America. On this day it is my painful duty to raise this privilege matter because I fear that what we talk is not strictly followed. It has been prescribed under Article 188 of the Constitution of India that every member of the Legislative Assembly of a State should take an oath of allegiance to the Constitution of India in the form set out in the Third Schedule to the Constitution. It says as follows :—

" I, ... having been elected as a member of the Legislative Assembly do swear in the name of God/solemnly affirm that I will bear true faith and allegiance to the Constitution of India as by law established and that I will faithfully discharge the duty upon which I am about to enter."

Every member of the Legislative Assembly of a State has to take an oath of allegiance to the Constitution on the above lines. He is expected to obey the Constitution and law is a great task-master. Constitution is also a great task-master. If I have to faithfully discharge my duty, I must obey the Constitution. Not only that; we must faithfully and truly obey the Constitution. That is the point. I should not say one thing and do another thing. If I say that I would bear true faith to the Constitution, I must abide by it. ' True ' is an adjective which has no other comparative degrees. There is no " truer " or " truest ". I am not able to give any other definition to it. We must be true to the Constitution. There are no other comparative or superlatives to " true ". ' True ' means ' True '. If I have true faith and allegiance to the Constitution, I must be implicitly true to the Constitution. We cannot mince matters. We cannot read between the lines. So I feel that if I have to faithfully discharge my duty, I should move

23rd November 1963] [Sri S. Nanjunda Row]

this privilege motion here. As a citizen of India and all the more so as an M.L.A. I have to raise this privilege matter. Thank you.

Sri V. KRISHNAMOORTHY : Sir, I am opposing the privilege motion.

Mr. DEPUTY SPEAKER : It is not a motion.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சார், இதைப்பற்றி நான் ஒன்றும் கூறுவதற்கு இல்லை. எதிர் கட்சித் தலைவரும் தாங்களும் தான் அதை முடிவு செய்ய வேண்டும்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கொண்டு வந்துள்ள உரிமைப் பிரச்னை பற்றிக் கூறும்போது அதில் உரிமைப் பிரச்னை எதுவும் இல்லை என்றுதான் சொல்லுவேன். இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளைக் காப்பாற்றவும், ஒழுங்கு முறைப்படி நடக்கவும் எந்த வாக்குறுதியை எடுத்துக் கொண்டிருக்கிறோமோ அதை உறுப்பினர்கள் அத்துணைப்பேரும் காப்பாற்றி வருகிறார்கள். வெளியில் தனிப்பட்ட குற்றம் செய்கிறவர்களைத் தண்டிக்க சட்டங்கள் இருக்கின்றன. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுக்க அரசாங்கத்தின் நிர்வாகம் தனியாக இருக்கிறது. சபையின் உரிமை பற்றிக் கனம் உறுப்பினர் எடுத்துக் கூறினார்கள். இதில் உரிமை பிரச்னை எதுவும் எழவில்லை. சில சட்ட மன்றங்களிலே அங்கத்தினர்கள் மசோதாக்களைக் கிழித்து காலால் மிதித்து இருக்கிறார்கள்; சில மன்றங்களிலே எரித்திருக்கிறார்கள். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன். அதெல்லாம் தப்பு) பாராளுமன்றத்தின் தாழ்வாரத்திலே, டெல்லியிலே ஒரு சமயம் மசோதாவை நெருப்பிலே போட்டு யாகம் செய்து கொளுத்தியிருக்கிறார்கள். பாராளுமன்றத்திலோ வேறு சட்ட மன்றங்களிலோ உரிமை பிரச்னை எழுந்தது இல்லை. அது தவறாக இருந்திருந்தால் உரிமை பிரச்னை வந்திருக்கும். ஆகவே இந்த மன்றத்தைப் பொறுத்தவரை எந்த உரிமையும் பாதிக்கப்படவில்லை, இதிலே உரிமை பிரச்னை எதுவும் இல்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் துணைத் தலைவர் அவர்களே, மசோதாவையோ நிறைவேற்றப்பட்ட சட்டத்தையோ, கொளுத்துவதோ, காலால் மிதிப்பதோ தவறுதான். அரசியல் சட்டத்தை, அதன் ஒரு பாகத்தை கொளுத்துவேன் என்று முற்படுவது வேறு விஷயம். அது குற்றம் என்பதற்கு சட்டம் இருக்கிறது. சட்டம் மட்டுமல்ல, அது நாட்டுக்கு அவமதிப்பை அளிப்பது. ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் சட்டத்தை எரிப்பது என்ற திட்டம் இருக்கிறது, இயக்கம் இருக்கிறது. அதைப்பற்றி கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்களும், எதிர்கட்சி அங்கத்தினர்களும் என்ன அபிப்பிராயம் கூறுகிறார்கள் என்று தெரிந்தால் நலம் என்று கருதுகிறேன்.

(கவுன்ஸில் அங்கத்தினர் திரு. கே. ராஜாராம் கவுன்ஸில் மெம்பர்கள் உட்காரும் தனியிடத்தில் உட்கார்ந்திருந்தார்.)

திரு. க. ர. நல்லசிவம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த சபையில் கவுன்சில் அங்கத்தினர் உட்காரலாமா, அது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் உதவி சபாநாயகர் : அவர்கள் (திரு. கே. ராஜாராம்) தனியாக இந்த சபைக்கு வெளியிலே உள்ள இருக்கையில்தான் உட்கார்ந்திருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : துணைத்தலைவர் அவர்களே எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னை அடிப்படையில் மன்றத்தின் முதல்வர் அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தின் நிலை என்ன என்று அறிய முற்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் கழகத்தின் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா சென்னையிலே நடந்த இந்தி எதிர்ப்பு பொது மகாநாட்டில் விளக்கியதைப்போல இந்தித் திணிப்பை இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் வகையில், தமிழ் நாட்டு மக்கள், குறிப்பாக தென் நாட்டு மக்கள் இந்தி மாநில மக்களுக்கு இரண்டாந்தர குடி மக்களாக ஆகும் தீதான, தீங்கு பயக்கும் நிலையை உருவாக்காமல் தடுக்க அமைகின்ற போராட்டத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய அங்கத்தினர்கள் ஈடுபடுவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினன் என்ற முறையில் நான் தஞ்சை மாநகரில் ஜூலை திங்கள் 19-ம் நாள் அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதாக மாநாட்டில் அறிவிக்கப்பட்டதிலிருந்து—

கனம் உதவி சபாநாயகர் : 1964-லா ?

திரு. மு. கருணாநிதி : ஆம், 1964 ஜூலையில் அரசியல் சட்டத்தை கொளுத்துவதாக அறிவிக்கப்பட்டதிலிருந்து நான் பின்னடையப் போவதில்லை. அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் முயற்சியில் என்மீது ஏவப்படும். எந்த அடக்குமுறையையும் ஏற்றுக் கொள்ளத் தயார். எந்த நடவடிக்கைகளுக்கும் உள்ளாகத் தயாராக இருக்கிறேன். தமிழுக்காக, தமிழ் அன்னையின் மீதுள்ள பற்றின் காரணமாக என் உள்ளத்து உறுதியை வெளியிடுகிறேன்.

அரசியல் சட்டத்திற்கு சத்தியம் எடுத்துக் கொண்டதற்குப் புறம்பாக நடக்கலாமா என்று கேட்பதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ்காரர்கள் வெள்ளைக்காரன் காலத்தில் அரசியல் சட்டத்துக்கு சத்தியம் செய்து கொடுத்து விட்டு, அதை எதிர்க்கும் வகையில் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள், அப்பொழுது எந்த உரிமைப் பிரச்னையும் எழவில்லை என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : துணைத் தலைவர் அவர்களே, ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் எதுவாக இருந்தாலும், அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன் என்பது இந்த சட்ட மன்ற உறுப்பினருக்கு பொறுப்பற்றது, முறையற்றது. அதற்கு மேலும் அவர்கள் அதைச் செய்வேன் என்று வற்புறுத்தினால் அது பரிசீலனை செய்யப்படவேண்டிய விஷயம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The decision of the Chair whether there is a *prima facie* case of breach of privilege or not will be given in the next sitting.

V.—CALLING ATTENTION TO DAMAGES TO PLANTAIN AND BETELVINES GARDENS IN THANJAVUR AND SOUTH ARCOT DISTRICTS.

MR. DEPUTY SPEAKER : I have received a notice under Rule 41 from the hon. Members Sri M. Kalyanasundaram, Sri K. A. Mathialagan, Sri K. S. Mani and Sri K. B. Palani.

SRI K. A. MATHIALAGAN : Sir, I call the attention of the Hon. Minister for Works to a matter of urgent public importance, viz. :—

"Heavy damages caused to the plantain and betel-leaf gardens in some parts of Thanjavur and South Arcot districts due to the heavy rain and cyclone during the month of October 1963 and the necessity for giving immediate relief measures to the affected agriculturists."

THE HON. SRI V. RAMAIAH : Mr. Deputy Speaker, Sir, due to cyclone followed by heavy downpour of rains with high winds on 21st October 1963 and 22nd October 1963, damages were caused to the plantain, betelvines, paddy and sugarcane crops in certain taluks of Thanjavur and South Arcot districts. The extent of damage caused in the two districts is estimated as follows :—

Damage to irrigation sources.

Damage to crops—

SOUTH ARCOT DISTRICT.

Name of crop.	*Total extent damaged.*		*Estimated value of loss.*
(1)	(2)		(3)
	A.	C.	
1 Paddy	463	68	Total loss in 50 per cent of the extent Rs. 8,83,000.
2 Sugarcane	6,883	61	
3 Plantain	78	63	Badly damaged.
4 Betelvine	104	49	Badly damaged.

THANJAVUR DISTRICT.

1 Paddy (Kuruvai) ..	530	00	Loss of 50 per cent of the yield.
2 Plaintain	1,518	34	Loss of over 50 per cent of the yield in an area of 712·06 acres.
3 Betelvine	95	36	Third and second year crops only damaged and that too not extensively.
4 Sugarcane	..		No damage.

[Sri V. Ramaiah] [23rd November 1963

Damage to irrigation sources.

South Arcot district: Six irrigation tanks in Villupuram taluk, six in Vridhachalam taluk, nine in Tirukoilur taluk, three in Kallakurichi taluk and one in Cuddalore taluk are reported to have breached. Prompt steps were taken to close the breaches in the minor irrigation tanks with the assistance of the villagers and the Revenue and Development Officers. In respect of the P.W.D. tanks, necessary action was taken by the officers of that department. It is reported that no damages were caused to houses, crops, human lives and cattle due to the breaches.

Thanjavur district.—There were breaches in Samudram Eri, Kannanar river and river Nandalar in Thanjavur district, but there was no damage to the crops due to the breaches as the water completely drained seen after the closure of the breaches.

Relief measures.—The question of giving relief by way of grant of loan as indicated below to the owners of plantain and betelvine garden is being examined by the Government:—

(i) grant of loss of Rs. 200 per acre to the owners of plantain garden where the damage to the plantain is 50 per cent and more. The loan to be recovered in four equal annual instalments;

(ii) grant of loan of Rs. 500 per acre to the owners of betelvine garden whose crops have been damaged to enable them to recultivate the damaged extent. The loan to be recovered in four equal annual instalments.

The question of granting relief by way of loan to the sugarcane growers in South Arcot district is also under the consideration of the Government. The Collector has been asked to furnish certain particulars. On receipt of the particulars, orders will be passed. The grant of remission of land revenue or water-cess on paddy, plantain, betelvine and sugarcane crops which have been damaged is also being examined by the Government and full particulars have been called for from the Collectors of South Arcot and Thanjavur. On receipt of the particulars, orders will be passed granting relief to the extent necessary.

I may therefore inform the House that all possible efforts have been taken to give relief to the ryots affected by the cyclone wherever necessary.

VI.—ANNOUNCEMENTS.

(1) Election to Madras Land Improvement Board.

Mr. DEPUTY SPEAKER: I have to announce that three nominations for election to the Madras Land Improvement Board have been received. As the number of candidates duly nominated

23rd November 1963] [Mr. Deputy Speaker]

is equal to the number of vacancies to be filled, viz., THREE, I declare the following three candidates to have been duly elected to the Madras Land Improvement Board:—

1. Sri R. Krishnaswamy Naidu.
2. Sri R. Rajagopalaswamy.
3. Sri A. Thiagarajan.

(2) Bills passed by the Council.

Mr. DEPUTY SPEAKER: I have also to announce to the House that the Madras Legislative Council have passed the following Bills without any amendment:—

1. The Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 25 of 1963).

2. The Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963 (L.A. Bill No. 23 of 1963).

3. The Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Bill, 1963 (L.A. Bill No. 26 of 1963).

VII.—STATEMENT BY MINISTER *re* CORRECTION TO ANSWER TO A SUPPLEMENTARY QUESTION UNDER Q. No. 394.

The Hon. Sri V. RAMAIAH: Mr. Deputy Speaker, Sir, I wish to make the following correction to an answer to a supplementary question under question No. 394. From memory I gave an answer to a supplementary that Krishnagiri might be the headquarters for one of the bifurcated portions. I have now verified from the records that the Government have not yet taken a decision regarding the matter.

VIII.—GOVERNMENT RESOLUTION.

Draft rule under the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952.

The Hon. Sri R. VENKATARAMAN: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the following draft of a rule proposed to be made by the Government of Madras under Section 4 (2) of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952), amending the Schedule to the Act, be approved.

Draft rule.

In the said schedule to rule 2, the following proviso shall be added, namely—

"Provided that in respect of the vehicles operated by the Madras State Transport Department, it shall be permissible for that department to pay composition fee once a quarter by book adjustment on a consolidated application for grant or renewal of permission to pay the composition fee once a quarter."

[Sri R. Venkataraman] [23rd November 1963

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்காரினால் நடத்தப்படுகிற டிரான்ஸ்போர்ட் இலாகா, தனியார் நடத்துகிற டிரான்ஸ்போர்ட் கம்பெனிகளைப் போலவே அரசாங்கத்திற்கு எல்லாவிதமான வரியையும் கட்டிக்கொண்டிருக்கிறது. அந்த வரியைக் கட்டுவதில் நான்காவது ரூலில், 2-ஆவது பிரிவில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அந்த வரிப்பணத்தைக் குறிப்பிட்ட தவணைக்கு முன்னால் கஜானாவில் கொண்டுபோய் சலான்போட்டுக் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. இப்படித்தான் கட்டிவந்தார்கள். இதனால் க்ளரிகல் வேலை அதிகமாக இருக்கிறது. பொதுவாக சர்க்கார் இலாகாக்கள் ஒன்றையொன்று பொறுத்த வரையில் புக் அட்ஜட்ஸ்மெண்டு மூலம்தான் செய்வது. ஆகவே டிரான்ஸ்போர்ட் இலாகா சம்பந்தப்பட்ட வரையில் இனிமேல் சலான் போட்டு கஜானாவில் கட்ட வேண்டியதில்லை. புக் அட்ஜஸ்ட்மெண்டு மூலமே அந்தப் பணத்தை சர்க்காருக்கு வரவு வைக்கலாம் என்பதற்காக இது கொண்டுவரப்பட்டுள்ளது.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the following draft of a rule proposed to be made by the Government of Madras under Section 4 (2) of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952), amending the Schedule to the Act, be approved."

Draft Rule

In the said schedule, to rule 2, the following proviso shall be added, namely :—

"Provided that in respect of the vehicles operated by the Madras State Transport Department, it shall be permissible for that department to pay composition fee once a quarter by book adjustment on a consolidated application for grant or renewal of permission to pay the composition fee once a quarter."

The Resolution was put and carried.

VI.—ANNOUNCEMENTS—*Contd.*

(3) THE MADRAS (ADDED TERRITORIES) EXTENSION OF LAWS BILL, 1963.

MR. DEPUTY SPEAKER : I have to announce that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963.

IX.—GOVERNMENT BILLS.

(3) THE MADRAS (ADDED TERRITORIES) EXTENSION OF LAWS BILL, 1963.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg leave to introduce the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963.

23rd November 1963]

MR. DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS APPROPRIATION (NO. 5) BILL, 1963.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Appropriation (No. 5) Bill, 1963 (L.A. Bill No. 27 of 1963) be taken into consideration."

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 5) Bill, 1963 (L.A. Bill No. 27 of 1963) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

The Schedule was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Appropriation (No. 5) Bill be passed."

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 5) Bill be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS APPROPRIATION (NO. 6) BILL, 1963.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Appropriation (No. 6) Bill, 1963 (L.A. Bill No. 28 of 1963) be taken into consideration."

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 6) Bill, 1963 (L.A. Bill No. 28 of 1963) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration. 11-30 a.m.

Clauses 2 and 3 were put and carried.

The Schedule was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

[23rd November 1963

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Appropriation (No. 6) Bill, 1963 (L.A. Bill No. 28 of 1963) be passed.'

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Appropriation (No. 6) Bill, 1963 (L.A. Bill No. 28 of 1963) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS IRRIGATION (LEVY OF BETTERMENT CONTRIBUTION) AMENDMENT BILL, 1963 (L.A. BILL No. 19 OF 1963)—*cont.*

Clause 2.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 2 do stand part of the Bill.'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move the following amendment :—

In sub-clause (v) of clause 2, substitute the following words and figures for the words and figures "the 1st January 1947" :—

"the 1st July 1963".

SRI S. MADHAVAN : Sir, I second the amendment.

MR. DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

* **திரு. செ. மாதவன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் மூலம் இந்தச் சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதுதான் நோக்கம். குறிப்பாக இப்போது விதிக்க இருக்கிற இந்த வரியை ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து வசூலிப்பது என்றால் விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினால்தான் இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவைப் பார்க்கிறபோது இதன்மூலம் 1947-ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் நிறைய வேலைகள் பூர்த்தியாகியிருக்கின்றன. ஆகவே எல்லா திட்டப் பகுதியில் உள்ள மக்களும் இந்தச் சட்டத்தின் கீழ் லெவி கட்டவேண்டி வரும் என்றே தோன்றுகிறது. இதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் இந்தச் சட்டத்தை 1963-ஆம் ஆண்டு கொண்டு வருகிறோம். ஆனால் 1947-லோ அல்லது 1948-லோ ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அவர்களும்கூட இப்போது இந்தச் சட்டத்தின்கீழ் வரி கட்டவேண்டுமென்பது சரியாக இருக்காது. காரணம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகுதான் குறிப்பாக 1947-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பது உண்மை. 1955-ஆம் ஆண்டே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் இதுவரை வரி விதிக்கப்படவில்லை. அல்லது சில பகுதிகளில் வரி

23rd November 1963] [திரு. செ. மாதவன்]

விதிக்கப்பட்டு அப்புறம் நிறுத்தி வைக்கப்பட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைய தினம் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இருந்துகூட விவசாயிகளிடம் இருந்து வரி வசூலிக்கவேண்டுமென்றால், வசூலிக்கவேண்டுமென்ற கருத்தை இந்தச் சட்டமன்றம் ஏற்றுக்கொண்டால், அந்த வரி தங்களை எவ்வளவு பாதிக்குமோ என்று பயந்து கொண்டிருந்த மக்களை, அந்த வரி தங்களை பாதிக்குமாதலால் அந்த வரியே கூடாது என்று கோரிக் கொண்டிருந்த மக்களை அவர்கள் எதிர்பார்க்காத நிலைமையில் எதிர்பார்க்காத வகையில் பழைய வருடங்களுக்கும் சேர்த்தாக கட்டவேண்டுமென்று சொல்வது மிகவும் பாதிக்கும். இதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இந்தக் கருத்தையொட்டி இந்த ஆண்டில் இருந்து அல்லது இனிமேல வரப்போகிற ஆண்டில் இருந்து இந்த வரியை விதிக்கக்கூடிய சூழ்நிலையை கனம் அமைச்சர் அவர்கள் உருவாக்குவது விவசாயிகளின்பால் ஓரளவு கருணை வைத்து உதவியதாக இருக்கும் என்று சொல்லி இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது எழுப்பிய திருத்தத்திற்குப் பதில் சொல்ல வேண்டுமானால் திரும்பவும் நான் பொது விவாதத்திற்கு சொன்ன பதில்கள் அத்தனையையும் சொல்ல வேண்டும். இருந்தாலும் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஏன் இயலாது என்பதை ஒன்றிரண்டு வார்த்தைகளில் சொல்கிறேன். நாம் ஏதோ புதுச் சட்டத்தையோ, புதிய வரி அமைப்பையோ திடீரென்று கொண்டு வரவில்லை. இந்தச் சட்டம் 1955-ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட ஒன்றாகும் என்பதை கனம் அங்கத்தினர்களே அறிவார்கள். ஆகையால் இன்றைக்கு ஏதோ எதிர்பார்க்காத வகையில் இந்தப் புதிய வரி மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது என்று யாரும நினைக்க வேண்டாம். அதோடு அல்லாமல் கனம் அங்கத்தினர் அவர்கள் இனிமேல் அமைக்கப்படுகிற நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மட்டும் பொருந்தும் வகையில் இந்த ஆண்டில் இருந்து, அல்லது இனிமேல் வரப்போகிற ஆண்டில் இருந்து இந்த வரி விதிப்பைக் கொண்டு வந்தால் போதும் என்று சொன்னார்கள். 1947-க்குப் பிறகு கடந்த பதினைந்து பதினாறு ஆண்டுகளுக்குள் நம் மாநிலத்தில் அமைக்கப்படக்கூடிய பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அனைத்தையும் நாம் எடுத்து நிறைவேற்றிவிட்டோம். அந்த அந்தத் திட்டங்களின் பயனைக்கூட அந்த அந்த திட்டப்பகுதி மக்கள் அனுபவிக்கத் தொடங்கிவிட்டார்கள். இனிமேல் பெரிய திட்டங்களை நாம் அமைக்க விரும்பினாலும்கூட அதிகமான திட்டங்களை அமைக்க வசதியில்லை. மேலும் பெரிய பெரிய அணைத் திட்டங்களை நாம் முன்பு ஏற்றுக் கொண்டபோது அந்த அந்தத் திட்டப்பகுதியில் உள்ள மக்களே இம்மாதிரி லெவி கொடுக்கத் தயாராய் இருப்பதாக முன்பே உத்தரவாதம் அளித்துள்ளார்கள். பொதுவாக நான் சொன்னது போல இது ஒன்றும் புதுப்பிரிவில்லை.

1955-ஆம் வருஷத் சட்டத்தில் உள்ள பிரிவுதான். ஆகையால் ஏதோ ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் நாம் கொடுப்பதாகக் கற்பனை செய்து கொள்வதில் லாபம் இல்லை. எந்த எந்த திட்டங்கள் இது வரை நிறைவேற்றப்பட்டு இருக்கின்றனவோ அந்த அந்தத் திட்டப் பகுதிகளுக்காகத்தான் இந்த லெவியைக் கொண்டு வருகிறோம். ஆகவேதான் கனம் அங்கத்தினர் அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 3 do stand part of the Bill.'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move the following amendments :—

'In the proposed new section 4-A, add the following proviso, after the existing proviso :

"Provided that no betterment contribution shall be levied on a landholder who owns not more than five acres of land".'

'In the proposed new section 4-B (2), in clause 3, substitute the words "annual income of revenue" for the words "annual increase in revenue, if any,".

'After the proviso to the proposed new Section 4-B (1), add the following provisos :—

"Provided further that no betterment contribution shall be levied on any land in any improved old ayacut under a notified work, the cost of which does not exceed two lakhs of rupees if the said notified work has been executed for the lands which have been taken over by the Government under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948."

"Provided further that no betterment contribution shall be levied on a landholder who owns not more than five acres of land".'

SRI S. MADHAVAN : I second the amendments.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move the following amendments :—

'(i) In the proviso to the proposed new Section 4-A, for the words "one lakh of rupees", substitute the words "one lakh and fifty thousand rupees".

(ii) In the proviso to sub-section (1) of the proposed new Section 4-B, for the words, "one lakh of rupees", substitute the words "one lakh and fifty thousand rupees".'

MR. DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I do not think that I need elaborate the objects underlying the amendments which I have moved just now. I am confident that hon. Members will appreciate the fact that the Government have further considered and raised the limit from one lakh of rupees to one lakh and fifty thousand rupees. I am also certain that this will take away the hardships to be experienced by ryots in the small irrigation project areas and particularly in the dry areas. This will go a long way to give a big relief to ryots in small irrigation project areas where we are taking up works or we have taken up works, particularly in the districts like Tirunelveli and Ramanathapuram and dry areas like Pudukkottai. I am sure the action of the Government in bringing forward these amendments will be highly praised and appreciated by all the hon. Members of this House as a very good decision.

* திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து நேற்று இந்த மன்றத்திலே கூறிய கருத்துக்களையெல்லாம் மனத்திலே கொண்டு, நாங்கள் இரண்டு லட்சம் என்று சொன்னாலும், அவர்கள் 1-1/2 லட்சம் என்றாவது ஆக்கியதற்காக நான் பொதுமக்களின் சார்பாக் அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று இந்தப் பிரிவுக்கு எங்களுடைய பகுதியிலிருந்து இன்னும் மூன்று திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அந்தத் திருத்தங்களையும் கொஞ்சம் கருணையோடு பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போடக்கூடிய வரி எல்லா விவசாயிகளையும் ஒரே மாதிரி பாதிக்கக் கூடிய நிலையிலே இருக்கக் கூடாது என்ற கருத்தை நான் மட்டு மல்ல, இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பல குழுக்களிலும் தெரிவித்திருக்கிறார்கள். குறைந்த ஏக்கர் நிலம் வைத்திருக்கக் கூடிய விவசாயிகளுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்ற கருத்தை 1951-52-ஆம் ஆண்டிலேயே அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு கூறியுள்ளது. அப்படிப்பட்ட கருத்தை வலியுறுத்த வேண்டுமென்ற எண்ணத்திலேதான் ஐந்து ஏக்கர் உள்ள விவசாயிகளுக்காவது இந்த வரி விதிக்கப்படாத சூழ்நிலை இருக்கவேண்டுமென்பதைத் திருத்தமாகக் கொடுத்திருக்கிறேன். ஐந்து ஏக்கர் என்ற அளவுக்கு எங்களுடைய கருத்தை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், நிலத்தையே நம்பி வாழக்கூடிய சாதாரண ஏழை விவசாய மக்களுக்காவது, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கக் கூடிய அத்தகைய விவசாயிகளுக்காவது இந்த வரியிலிருந்து சலுகை கொடுக்க வேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் கருணையுடன் பரிசிலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதே பிரிவிலே—2-வது பிரிவுக்கு 'Annual income of revenue' என்ற வார்த்தைகளை நாங்கள் போட்டிருக்கிறோம். இப்போது இருக்கக் கூடிய சட்டத்திலே 'increase in revenue' என்று இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட ஆயக்கட்டிலே இந்தத் திட்டம் வந்ததற்குப்

விரும்புகிற காங்கிரஸ் மகாசபையைச் சேர்ந்தவர்கள் இதைக் கூடப் பரிசீலிக்கக் கூடாதா?' என்று கொஞ்சம் அழுத்தம் திருத்தமாகவே கேட்டார்கள். சோஷலிசத் தத்துவத்திற்குப் புறம்பாக இந்த மசோதாவில் ஒன்றும் இல்லையென்பதை இந்த மசோதாவின் தத்துவம் என்ன என்பது பற்றி அவர்கள் யோசித்துப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். இதிலே, பெரிய நிலச்சுவான்தார்கள், சிறிய நிலச்சுவான்தார்கள் என்ற பிரச்னை கிடையாது. இது நாட்டிலுள்ள எல்லா விவசாயிகளையும் சம்பந்தப்பட்ட பிரச்னையும் இல்லை. இதனுடைய நோக்கமே ஒருசில பகுதிகளில் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான். சில இடங்களில் பெரிய திட்டங்களையும், சில இடங்களில் நடுத்தரத் திட்டங்களையும், சில இடங்களில் சிறு திட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தினுடைய பொது நிதியையும் நாம் செலவு செய்கிறோம். அந்தத் திட்டத்தினால் உடனடியாக லாபம் அடையக் கூடியவர்கள் அந்தத் திட்டப் பகுதிகளைச் சார்ந்திருக்கக் கூடிய விவசாயிகள்தான். ஆகவே ஒரு திட்டம் விவசாயிகளுக்காக நிறைவேறும் பொழுது பொதுவாக சென்னை ராஜ்யத்தில் இருக்கும் எல்லா விவசாயிகளுக்கும் நன்மை வந்துவிட்டது என்று சொல்ல முடியாது. ஒரு திட்டம் போடும்போது. அதற்காக செலவு செய்யும்போது, இதன் காரணமாக பலன் அடையும் விவசாயிகளிடமிருந்து பெட்டர்மெண்ட் லெவி என்பது வாங்கப்படுகிறது. மொத்தமாக வாங்கப்படுகிறது என்று சொல்லப்படுகிற குறைகளைப் பார்க்கும்போது ஏதோ விவசாயிகள் எல்லோரிடமிருந்தும் வாங்குகிறோமோ என்ற சந்தேகம்கூட ஏற்பட்டது. கனம் அங்கத்தினர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, லோயர் பவானி திட்டத்தை அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்காக நிறைவேற்றும்போது, அதற்காக அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து பெட்டர்மெண்ட் லெவி வாங்கும்போது, அது எப்படி புதுக்கோட்டையிலுள்ள விவசாயிகளின் பிரச்னையாக வரும் என்று எனக்குப் புரியவில்லை. இது வருஷாந்திர வரியாக போடப்படும் வரியல்ல. பெட்டர்மெண்ட் லெவி என்று மொத்தமாக வாங்கப்படுகிறது, விவசாயிகளை பாதிக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உதவி செய்வதற்கு முடியாது. இது உடனடியாக லாபம் அடைகிறவர்களிடமிருந்து நாம் இந்த வரியை வாங்குகிறோம். வருஷாந்திரமாக வாங்கக்கூடிய வரியல்ல. முன்கூட்டியே அவர்களிடம் ஒரு ஏக்கருக்கு இத்தனை ரூபாய் செலவாகும், விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு இத்தனை ரூபாய் லெவியாக கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை சொல்லி, பெட்டர்மெண்ட் லெவி என்று ஒரு முறை போடுகிறார்கள். பார்க்கப்போனால் ஒரு ஏக்கருக்கு 200 ரூபாய் என்ற அளவில் அல்லது ஷெட்யூலில் கண்டுள்ளபடி விதிக்கப்படும், 200 ரூபாய்க்கும் குறைந்த அளவில் போட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதில் சோஷியலிச தத்துவத்திற்கு எந்தவித

மான மாறுபட்ட கருத்தும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு திருத்தம் கொண்டு வந்த அங்கத்தினர்கள் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதனால் யாருக்கு நன்மை ஏற்படுகிறது என்பதை சிந்தித்துப் பார்ப்பார்களானால், விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு அரசாங்கம் ஆதரவு கொடுத்து வந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். இந்தச் சட்டம் வரும்போது, முன்பு இருந்த சட்டத்தில் உயர்ந்த பட்சம் 25 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் என்று வைத்திருந்தோம். இப்போது பொறுக்குக் கமிட்டிக்குப் போய்விட்டு வந்ததின் பின்னால் புது வேலைகள், சப்ளிமெண்ட் வேலைகள் என்று ஒரு திட்டத்தை வைத்தோம். இதைப்பற்றி நன்கு ஆலோசித்து இப்போது ஒன்றரை லட்சம் ரூபாய் என்று கொண்டு வந்திருக்கிறோம். இதன் காரணமாக சிறு நிலச்சுவாந்தார்களுக்கு பெரும் ஆதரவு கிடைக்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். லோயர் பவானி, அமராவதி, மணிமுத்தார் போன்ற திட்டங்களில் எல்லாம் ஐந்து ஏக்கர் நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். ஆகவே இதிலும் ஐந்து ஏக்கர் நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுங்கள் என்று சொன்னால் அது இதில் பொருத்தமாக இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக. ஜமீன் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு இதில் விசேஷ சலுகை காட்டவேண்டும் என்று இன்னொரு திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றியும் நாம் முன்பாகவே பரிசீலித்திருக்கிறோம். இதிலுள்ள வாதம் என்னவென்றால், ஜமீன் பகுதியில் பாசன ஆதாரங்கள் எல்லாம் முன்னால் மிகவும் புறக்கணிக்கப்பட்டிருந்தது என்பதுதான். இதை அரசாங்கம் நன்கு உணரும். ஆகவே இந்தப் பகுதிகளுக்கு இரண்டு லட்சம் அல்லது மூன்று லட்சம் என்று போட வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது ஜமீன் பகுதிகளுக்கு நீண்டகாலமாக பாசன ஆதாரங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தது.. ஜமீன் ஒழிப்பிற்குப் பிறகு அந்தப் பகுதியில் மராமத்து வேலைகள், ரிப்பேர் வேலைகள், மெயின்டனன்ஸ் வொர்க்ஸ் இதற்காக கோடிக்கணக்கில் செலவிடப்பட்டிருந்தாலும் அது இந்த லெவி சட்டத்தில் வராது. இதற்குப் புறம்பானது, அப்பாற்பட்டது என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது. ஜமீன் பகுதியாக இருந்தாலும், ரயத்துவாரி பகுதியாக இருந்தாலும் புதுவேலை எடுத்துக்கொள்வதாக இருந்தால் அதற்கு லெவி போடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதற்கு விதிவிலக்கு கொடுப்பது என்றால் நிச்சயமாக அது டிஸ்கிரிமினேஷன் ஆகும். ஆகவே இதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்றுதான், கனம் சங்கரன் அவர்கள் 'இன்க்ரீஸ் இன் ரெவின்யூ' என்பதில் கொடுத்திருக்கும் திருத்தத்தையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வெ. ராமையா] [23rd November 1963

பொதுவாக விவசாயிகளுடைய நன்மைக்காகவே இச்சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதை கனம் மாதவன் அவர்களும், வரண்ட பிரதேசத்திலிருந்து வந்திருக்கும் கனம் அழகமுத்து அவர்களும் உணர்வார்கள் என்று நம்புகிறேன். ஆகவே அவர்களுடைய திருத்தத்தை வற்புறுத்தவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. செ. மாதவன் :** மிஸ்டர் டெப்யுடி ஸ்பீக்கர் ஸார், பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் இந்தத் திருத்தத்தைப் பற்றி சொன்னார்கள். இந்தத் திருத்தம்பற்றி நான் அமைச்சர் அவர்களிடமிருந்து கேட்க விரும்புவதெல்லாம் இதைத்தான். அதாவது பொதுவாக ஜீவநதி பகுதிகள், காட்டாறுப் பகுதிகள் என்று இரண்டு பகுதிகள் இருக்கின்றன. இவற்றில் ஜீவநதி பகுதிகளில் ஆயக்கட்டு நிலங்களிலிருந்து 'இன்க்ரீஸ் இன் ரெவன்யூ' அதிகமாக இருக்கும். காட்டாறு பகுதிகளில் குறைவாக இருக்கும். இதை 20 மடங்காக பெருக்கி கணக்காக்கும் போது, ஜீவநதி பகுதிகளில் இப்போது இருப்பது குறைவாக வரும், காட்டாறு பகுதிகளில் கூடுதலாக வரும். ஆகவே இந்த வித்தியாசத்தை உணர்ந்து 'இன்க்ரீஸ் இன் ரெவின்யூ' என்றிருப்பதில் 'ஆனிவல் இன்கம் இன் ரெவின்யூ' என்று சேர்த்தால் நன்றாக இருக்குமல்லாவா? இல்லையென்றால் 'கால்குலேஷன்' செய்யும்போது, அதிகவரி காட்டாறு பகுதிகளுக்கு வருமல்லவா, ஏன் இந்த வித்தியாசத்தை ஏற்படுத்தவேண்டும்? ஏன் இந்த வேறுபாடு இருக்கிறது என்பதையும், இதில் கனம் அமைச்சர் அவர்களின் கருத்து என்ன என்பதையும் கூற கேட்டுக்கொள்கிறேன்.

[இச் சமயத்தில் கனம் திரு. வெ. ராமையா அவர்கள் (அமைச்சர்) அதிகாரிகள் மாடத்தின் பக்கத்திற்கு ஆலோசனைக்காகச் சென்றிருந்தார்.]

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் வக்கீல் ஆதலால், இதில் ஏதாவது பாகுபாடு இருக்கிறதா என்பதை அதிகாரிகளிடத்தில் கேட்டுத் தெரிந்து கொண்டு பதில் சொல்லலாம் என்றுதான் போயிருந்தேன். இதில் எந்த விதமான பாகுபாடும் இருக்காது. ஜீவநதி பகுதி, 'காட்டாறு பகுதி என்ற இரு பகுதிகளிலும் எந்தவிதமான பாகுபாடும் இதனால் வராது என்பதை நிச்சயமாக தெரிவித்துக் கொள்கிறேன். இதில் 'டிஸ்க்கிரிமினேஷன்' ஏற்படுவதற்கு வழியில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

The amendments of Sri T. P. Alagamuthu were put and lost.

The Government amendments were put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clause 4 was put and carried.

23rd November 1963]

Clause 5.

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That clause 5 do stand part of the Bill."

Sri T. P. ALAGAMUTHU : Sir, I move the following amendments :—

In the proviso to the proposed sub-section (1) of section 7, substitute the words "five years" for the words "two years".

In the proposed sub-section (1) of section 7, substitute the words "whichever is lower" for the words "whichever is higher".

Sri S. MADHAVAN : I second the amendments.

Mr. DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

* **திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் அடிப்படையைப் பற்றியும் நேற்று அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். இந்தத் திருத்தம் ஏற்றுக் கொள்ளக்கூடிய திருத்தம்தான் என்று நம்புகிறேன். அதை ஆழ்ந்து ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே முதல் பகுதி வருஷங்களைப் பொருத்தது. இந்த வரியை ஒரு விவசாயி ஒரே தவணையில் கொடுக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், அவருக்குச் சலுகை காண்பிக்கக் கூடியது ரிபேட் செக்ஷன் என்று தனியாக இருக்கிறது. அதை இரண்டு வருஷங்களுக்குள் கொடுத்துவிட்டால் சலுகை உண்டு, அதற்கு மேல் என்றால் கிடையாது என்ற கருத்து தொனிக்கிறது. நம் நாட்டு விவசாயிகளைப் பற்றி நாம் எல்லோரும் அறிவோம். இத்தகைய சட்டங்களைப் புரிந்துகொண்டு, உடனடியாக சட்டங்களின் பலனை அனுபவிக்கும் சூழ்நிலையில் இல்லை என்பது எல்லோரும் ஒத்துக் கொள்ளக்கூடிய உண்மை. நான் கேட்டிருப்பது, இரண்டு ஆண்டுகளை ஐந்து ஆண்டுகளாக ஆக்குங்கள் என்பதாகும். எப்போதும் கேட்பது என்றால் கூடுதலாகத்தான் கேட்போம். கொடுக்கிறவர்கள் குறைத்துத்தான் கொடுப்பார்கள். இரண்டு என்பதை ஐந்து ஆக இருக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதற்கு மனம் இல்லை என்றால், அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகை காட்டும் முறையில் இரண்டு ஆண்டுகளை அதிகமாக்க முன் வருவார் என்று நம்புகிறேன். 12-00 noon.

இன்னொன்று திருத்தம் கொஞ்சம் சிந்திக்கப்படக்கூடிய திருத்தம்தான். அந்தப் பிரிவிலே 20 தவணைகளில் அந்த வரியைச் செலுத்தலாம் என்ற கருத்து கனம் முதல் அமைச்சரால் பொறுக்குக் குழுவிலே தெரிவிக்கப்பட்ட கருத்து. 10 ரூபாய் என்பதை 5 ரூபாயாக ஆக்கவேண்டும் என்று அவர் சொன்னார்கள். அதை பொறுக்குக் குழு ஏற்றுக்

கொண்டது. ஆனால் இப்போது இந்தப் பிரிவை உன்னிப்பாகப் படித்துப் பார்த்தால், 20 தவணைகளில் கட்டலாம் என்று வலது கையால் கொடுத்ததை இடது கையால் எடுத்துக்கொண்ட முறையில் இருக்கிறது. காரணம் 5 ரூபாய் அல்லது 20 தவணைகளில் கொடுக்கலாம் என்று கூறிவிட்டு "விச்செவர் இஸ் ஹையர்" என்று சேர்த்திருக்கிறார்கள். ஆகவே நம் முதல் அமைச்சர் அவர்கள் அளித்த உறுதி, 20 தவணைகளில் கொடுக்கலாம் என்ற உறுதி இன்னொரு முறையில் தட்டிப் பறிக்கப்படுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே முதல் அமைச்சர் அவர்களுடைய உறுதியை நிலைநாட்டும் வண்ணம் "விச்செவர் இஸ் லோயர்" என்று திருத்திவிட்டால், 20 தவணைகளில் அல்லது 5 ரூபாய்க்குக் குறைத்தும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது என்ற வாதத்தையாவது சொல்லுவதற்கு இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டு திருத்தங்களில் முதல் திருத்தம் இரண்டு வருஷங்களை ஐந்து வருஷங்களாக ஆக்கவேண்டும் என்பது. நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேறி அதை விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய முறையைத் தெரிந்திருந்தால் இந்தத் திருத்தத்திற்கு அவசியமே இராது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், எந்தத் திட்டம் நிறைவேறினாலும், திட்டம் நிறைவேறக்கூடிய நேரத்திலேயே உடனடியாகப் பெரும் அளவுக்கு அந்தத் தண்ணீரை விவசாயிகள் பயன்படுத்திவிடுகிறார்கள். ஒரு சில குறிப்பிட்ட கஷ்டமான பகுதிகளுக்குத்தான், அந்த பூமியின் உயரத்தைக் குறைப்பதோ அல்லது பூமியை சீர் செய்ய வேண்டிய வேலைகளால் தாமதம் ஏற்படும். ஆனால் இந்த பாசனத் திட்டங்களைத் தெரிந்துகொண்ட வரையில் இரண்டு வருஷங்களுக்கு அதிகமாக உயர்த்தவேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆனால் அதே நேரத்தில் உண்மையிலேயே சில இடங்களில் கஷ்டம் இருக்கிறது அங்கே பூமியினுடைய உயரத்தை குறைக்க அல்லது பூமியைப் பண்படுத்த பல கஷ்டங்கள் இருக்கின்றன. அந்த கஷ்டங்கள் இருக்கக்கூடிய பகுதிகளுக்கு ஆதரைஸ்ட் ஆபீஸர் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்கலாம் என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. இரண்டு வருஷமே போதும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக 20 வருஷம், 5 ரூபாய் என்ற பிரச்னையை கிளப்பினார்கள். இதில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய உறுதியை தன்னுடைய வாதத்திற்கு கனம் அங்கத்தினர் ஆதாரமாகச் சொன்னார்கள். கனம் முதலமைச்சர் கொடுத்த உறுதியையொட்டித்தான் இந்தப் பிரிவு அமைந்திருக்கிறது. ஆகையால் இந்தத் திருத்தமும் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

The amendments were put and lost.

Clause 5 was put and carried.

Clauses 6 to 10 were put and carried.

The Schedule was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 (L.A. Bill No. 19 of 1963), as amended, be passed."

MR. DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 (L.A. Bill No. 19 of 1963), as amended, be passed."

* **திரு. க. ச. நல்லசிவம்:** மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது சட்டம் நிறைவேற இருக்கிறது. இந்த நேரத்திலே பொதுவான என்னுடைய கருத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் கூறும்போது ஒரு குறிப்பிட்ட பகுதியிலே அபிவிருத்தி ஏற்படும்போது அதன் பலனை குறிப்பிட்ட விவசாயிகள் அடைவதாகச் சொன்னார்கள். நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை. என்னைப் பொறுத்தவரையில் அபிவிருத்தியின் பலனை நாட்டில் உள்ள எல்லா மக்களும் அனுபவிக்கிறார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. பொதுவாக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மட்டும் அனுபவிக்கிறார்கள் என்று நினைத்தால் அது நியாயம் ஆகாது. எங்கள் பகுதிக்கு 1954-ல் தண்ணீர் வந்தது. தண்ணீர் வந்து 10 ஆண்டுகள் ஆகின்றன. இவ்வளவு ஆண்டுகளுக்குப் பின்பும் கூட சுமார் மூன்றில் ஒரு பங்கு பேர்கள்தான் முழுப் பலனையும் அனுபவிக்கிறார்கள். மூன்றில் இரண்டு பங்கு மக்கள் இன்றைக்கும் கூட தொல்லைகளையும் சங்கடங்களையும் அனுபவித்து வருகிறார்கள். அவர்களுடைய தொல்லைகளும், கடன்களும் அப்படியே இருக்கிறது என்பதில் சந்தேகம் கிடையாது. அதைப் பற்றி நான் ஒரு திருத்தம் கூட கொடுக்க நினைத்தேன். ஆனால் நான் பொறுக்குக் கமிட்டியில் இருந்த காரணத்தினால் திருத்தம் ஏதும் கொடுக்க இயலாதிருந்தேன். ஒரு விஷயத்தை சர்க்கார் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தச் சட்டம் வந்தவுடன், தண்ணீர் விட்ட பிறகு இரண்டு ஆண்டுகளில் இந்த வரி விதிப்பு என்று இருக்கிறது இந்த மசோதாவிலே. பொதுவாகப் பார்க்கும்போது ஆங்காங்கு இது தொல்லை தரும். கீழ் பாவானித் திட்டத்தைப் பொறுத்த வரையில் முதல் முதல், சுதந்திரம் அடைந்த

பின்னாலே 'increase in revenue' என்று எடுத்துக் கொண்டால் மிகக் குறைவாக இருக்கும். ஆகவே அதைக் கணக்கிட்டு அதை 20 மடங்காக ஆக்கி கழித்த பிறகு வரக்கூடிய தொகையை ஆயக் கட்டின் மீது வரியாகப் போட்டால் அதிகமாக இருக்கும். அப்படிப் பட்ட ஒரு சூழ்நிலை இல்லாமல் இந்த ஆயக்கட்டில் இருந்து எவ்வளவு வருமானம் வருகிறதோ அந்த வருமானம் முழுமையும் 20 மடங்காக ஆக்கி அதைத் கழித்த பிறகு பின்னால் வரக்கூடிய தொகையை வரியாகப் போட்டால் விவசாயிகளுக்கு இன்னும் கொஞ்சம் சலுகை காட்டியதாக இருக்கும் என்பதையும் நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில், இந்தப் பிரிவைப் பொறுத்தவரை ஒரு பாகுபாடு இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் ஏற்கனவே எடுத்துக் காட்டியது போல் ஜீவநதி உள்ள பகுதிகளுக்கும், காட்டாறு உள்ள பகுதிகளுக்கும் உள்ள வரி விகித வேறுபாட்டை எடுத்துப் பார்த்தால் ஜீவநதிப் பகுதிக்கு வரக்கூடிய வரி விகிதம் குறைவாகவும் அதே சமயத்தில் காட்டாறு பகுதிக்கு அதிகமாகவும் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதையும் யோசித்து, மொத்த வருமானத்தை எடுத்துக்கொண்டு கணக்கிட்டுப் பார்க்கவேண்டுமென்ற கருத்தை அமைச்சர் அவர்கள் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு கருத்தையும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். 1948-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலமாக ஜமீன் பிராந்தியங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஜமீன் பிராந்தியங்களைப் பொறுத்தவரையில் 'இரண்டு லட்சம் ரூபாய்' என்று ஆக்க வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறோம். மற்றப் பகுதிகளுக்கு '1½ லட்சம் ரூபாய்' என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஜமீன் பிராந்தியத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் நிச்சயமாக அந்தப் பகுதியிலுள்ளவர்களின் கஷ்டத்தை நன்கு உணருவார்கள். ஆகவே, ஜமீன் பிராந்தியங்களைப் பொறுத்த வரை 'இரண்டு லட்சம்' என்று ஆக்கவேண்டுமென்ற எங்களுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

* **திரு. க. ர. நல்லசிவம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மூன்றாவது பிரிவின் கீழ் 'ஐந்து ஏக்கர்' என்று இருக்கவேண்டுமென்ற திருத்தத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். காங்கிரசானது ஜனநாயக சோஷலிசத்தை ஏற்றுக்கொண்டு அந்தப் பாதையிலே போவது என்று முடிவு எடுத்துள்ளனர். அவர்கள் அந்தப் பாதையிலே போகவேண்டுமென்பதிலே உண்மையிலேயே நம்பிக்கை இருக்குமானால் குறைந்த அளவு நிலம் உள்ள விவசாயிகளுக்காவது இந்த வரியிலிருந்தும் விதிவிலக்குக் கொடுப்பது மிகவும் அவசியமாகும். குறிப்பாக, ஐந்து ஏக்கருக்கும் அதிகமாக நிலம் உள்ளவர்கள் அதிக அளவு இந்த வரியினால் பாதிக்கப்படமாட்டார்கள். ஆகவே, சோஷலிச

பாணி சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறவர்கள் சிறிய நிலச் சொந்தக்காரர்களுக்கு இந்த வரியிலிருந்து விதிவிலக்குக் கொடுத்தால்தான் உண்மையிலேயே அவர்கள் தங்களை சோஷலிச சமுதாயத்தை அமைப்பதிலே அக்கறை கொண்டவர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும். ஆகவே, வெறும் வாயளவில் சோஷலிசம் என்று சொல்லிக் கொண்டிராமல், ஐந்து ஏக்கர் என்று இல்லாவிட்டாலும் மூன்று ஏக்கர் அளவுக்காவது இந்த வரியினின்றும் விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஐந்தாவது திருத்தத்திலே—

"In the proposed new section 4-B(2), in clause 3, substitute the words "annual income of revenue" for the words "annual increase in revenue, if any,""

என்று இருப்பதை நான் ஆட்சேபிக்கிறேன். இந்தத் திருத்த மசோதா ஒரு அடிப்படையான காரணத்தின் பேரில் கொண்டு வரப் பட்டிருக்கிறது. ஏற்கனவே ஆயக்கட்டு பகுதிகளில் 'இரிகேஷன் சோர்ஸ்' இருக்கின்றன. அதற்கென்று தனியாக ரெவின்யூவும் இருக்கிறது. அதை மேலும் 'இம்ப்ரூவ்' செய்வதால் ரெவின்யூ அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அபிவிருத்தி செய்வதன் காரணமாக ஏற்படக்கூடிய செலவைச் சரிகட்ட 'பெட்டர்மென்ட் லெவி' போடப்பட்டிருக்கிறது. அபிவிருத்தித் திட்டத்தினால் பலன் அடையக்கூடிய விவசாயிகள் 'அடிஷனல் ரெவின்யூ' கட்ட வேண்டும். பழைய வருமானத்தைப் பார்த்து, ரெவின்யூவைக் கணக்கிட்டு அதே விகிதத்தில் வரி இருக்க வேண்டுமென்று சொல்வது அடிப்படைக்கே விரோதமாக இருக்கிறது.

இன்னொன்று, எப்போது வரி போட்டாலும் எதிர்க்கட்சியினர் 'வரி, வரி' என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அபிவிருத்தித் திட்டத்தினால் பலனை அனுபவிக்கும் விவசாயிகள் அதற்கு ஆகும் செலவின் ஒரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சிறு நிலச்சுவான்தார்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்ளலாம் என்றாலும், அவ்வாறு சலுகை கொடுத்தால் இந்தச் சட்டத்தின் அடிப்படை நோக்கமே மறைந்து விடும். அப்படி விலக்குக் கொடுத்தால் 80 சத விகிதம் பேர் அதிலே வந்து விடுவார்கள். ஆகவே, அப்படிச் செய்தால் அடிப்படை நோக்கம் தகர்ந்துவிடும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இதிலே முக்கியமாக கொடுத்திருக்கக்கூடிய திருத்தம் ஐந்து ஏக்கர் அல்லது மூன்று ஏக்கர் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்த 'லெவி'யிலிருந்து விதிவிலக்குக் கொடுக்க வேண்டும் என்பது. இதைக் குறித்து சோஷலிஸ்ட் அங்கத்தினர் அவர்கள் பேசும் போது, 'சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று

வூர விரும்புகிறேன். கடந்த பல வருஷங்களுக்கு முன்பாக நிறைவேற்றப்பட்ட சில திட்டங்களிலே மணிமுத்தாறு திட்டம் ஒன்று. மற்ற திட்டங்களிலிருந்து மணிமுத்தாறு திட்டம் வேறுபட்டது. ஏனென்றால், அரசாங்கம் எப்படி 'பெடர்மெண்டு லெவி' பயன் அடைவோர் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறதோ, அதேபோல ஒரு குறிப்பிட்ட 'எக்ரிமெண்டு பிட்வீன் தி பார்டீஸ்' ஏற்கனவே ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது முதல் அமைச்சராக இருக்கக் கூடியவர் அன்றைய தினம் பி.டபிள்யூ.டி. அமைச்சராக இருந்தார்கள். இந்த அங்கம் வகிக்கக்கூடிய திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் அப்பொழுது பிரதிநிதியாக இருந்தார்கள். அவர்கள் ஒரு கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக சர்க்காருக்கு கடனாக வசூலித்துத் தருகிறோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்பைவிட அதிகமாகவே ஒரு கோடி 38 லட்ச ரூபாய் இந்த ஜில்லா மக்கள் இந்தத் திட்டத்திற்காக கடனாக உதவி அளித்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்த கடன் தொகையை, ரூ. 100-க்கு ரூ. 7, 8, 10 குறைத்துத்தான் அந்தப் பணத்தைத் திரும்ப வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த விதமாக ஏறக்குறைய ரூ. 12, 13 லட்சம் விவசாயிகள் கடன் கொடுத்ததன் மூலம் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் உதவித் தொகையாக எடுத்துக் கொள்வதற்கு முடியும் என்று கருதுகிறேன். அத்தகைய ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் மூலம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அப்படி இந்தத் திட்டம் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றால், இதை நோடிபை செய்து, இது பெடர்மெண்டு லெவி வசூலிக்கத்தக்க திட்டமாக அமைய முடியுமா என்பதைத் தீவிரமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

மற்றொரு கோரிக்கை. ஒரு திட்டத்திற்கு எவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டமாக இருந்தாலும், கடைசியில் சில வேலைகள் பாக்கி நிற்கின்றன. கடைகோடியில் உள்ள சில குளங்களில் வாய்க்கால்கள் வெட்டாமல், கண்ணிகள் வெட்டாமல் வேலைகள் பாக்கி இருந்து கொண்டிருக்கின்றன. அதை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு விவசாயிகளுடையதாக இருக்கிறது. அப்படி வேலைகள் பாக்கி இருக்குமானால், அதை பூர்த்தி செய்து, நிறைவேற்றக்கூடிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என்பதை நான் பணிவாக நினைவு படுத்திக் கொள்கிறேன்.

மணிமுத்தாறு, லோயர் பவானி போன்ற திட்டங்கள் சம்பந்தமாக அரசாங்கம் ஆரம்பத்தில் சில கணக்குகள் போட்டு, எத்தனை ஆயிரம் ஏக்கருக்கு அது பயன்படவேண்டும் என்ற ஒரு நியதி ஏற்படுத்தியிருந்தார்கள்; இவ்வளவு ஏகரேஜுக்கு பயன்படும் என்ற ஒரு அளவு நிர்ணயித்திருந்தார்கள். உதாரணமாக முதலில் 20,000 ஏகருக்கு பயன்படும் என்று நினைத்து, இப்பொழுது 18,000

ஏகருக்கு மட்டும் பயன்பட்டால், அந்த 2,000 ஏகரை விட்டு விட்டு, இன்னும் பயன் அடையாத பகுதி இருக்குமானால் அதை விட்டுவிட்டு, ஆரம்பத்தில் எத்தனை ஏகரேஜுக்கு பயன்படும் என்று கணக்குப் போட்டார்களோ, அந்த ஏகரேஜிலிருந்து பயன் படாத அளவுக்கு உள்ள ஏகரேஜைக் கழித்து, அந்த மதிப்பின் அடிப்படையிலே அந்தத் திட்டத்தைப் பொருத்தவரையில் கணக்கிடுவதுபற்றி, அதாவது எந்த அளவுக்கு பயன்படுகிறதோ அந்த அளவுக்கு மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்வதுபற்றி, தீர்க்கமாக பரிசீலனை செய்து விவசாயிகளுக்கு தெரிவித்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

ஏழு வருஷங்களில் அநேக நிலப்பரிமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. திட்டம் ஆரம்பித்த காலத்தில் யாருக்கு நிலம் சொந்தமாக இருந்ததோ, அவர்களிடமிருந்து சில நிலங்கள் கைமாறிப் போயிருக்கிறது. அப்படி கைமாறி வந்தவர்களிடம் இந்த வரியை வசூலிப்பதா, அல்லது அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் யார் நிலச்சொந்தக்காரராக இருந்தாரோ அவரிடம் வசூலிப்பதா, ஏற்கனவே முதலில் அந்த நிலத்திற்கு சொந்தக்காரர்களாக இருந்தவர்களுக்கு இந்தப்பொறுப்பு உண்டா, அல்லது இப்பொழுது நிலம் கைமாறி வந்தவர்களுக்கு இந்தப் பொறுப்பு உண்டா என்பதைப்பற்றி விவாதம் இல்லாமல் தெளிவாக விவசாயிகள் மனதிற்கு தெளிவுபடுத்துவது அவசியம் என்று கருதுகிறேன். இதைத் தீர்க்கமாக பரிசீலனை செய்து அரசாங்கம் முடிவு எடுப்பது நல்லது என்று கருதுகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சற்று முன்பு பேசிய கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் ஒரு பொது விவாதத்தை மீண்டும் கிளப்பியிருக்கிறார்கள். ஒரு திட்டத்தை நிறைவேற்றினால், பொதுவாகவே, தமிழ் நாட்டிற்கே, இந்தியாவுக்கே அது லாபம் தரக்கூடிய திட்டம் என்ற கருத்தை மட்டும் சொன்னார்கள். அவருடைய அந்தக் கருத்துக்கு ஒன்றும் புறம்பான கருத்தை நான் எப்பொழுதும் சொல்லவில்லை. அதே நேரத்தில் அவர்கள் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக பலன் மாகாணத்திற்கும், தேசத்திற்கும் இருந்தாலும்கூட, உடனடியாக பலன் அடையக்கூடியவர்கள் அந்தத் திட்ட எல்லைக்குள் இருக்கக்கூடியவர்கள் என்று சொன்னால், ஒன்றும் மிகையில்லை. ஆகையால், சம்பந்தப்பட்டவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவி கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்வதில் ஒன்றும் தவறு இல்லை என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ நீர்ப்பாசன திட்டம் அமைப்பதில் மட்டுமல்ல இதுமாதிரி செய்வது. மின்சார விஸ்தரிப்பு திட்டத்தை எடுத்துக் கொள்வோமானால், கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும், அந்த விஸ்தரிப்புக்கு ஆகக்கூடிய மூலதனச் செலவில் 10 சத விகிதம் வரைக்கும் காரண்டி கொடுத்தால்தான் மின்சார விஸ்தரிப்பு நடக்கும். அதை

VI—ANNOUNCEMENTS—*cont.*

(4) THE MADRAS SUGARCANE CESS (VALIDATION) BILL, 1963.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the President has given his sanction and the Governor has given his recommendation to the introduction of the Madras Sugarcane Cess (Validation) Bill, 1963, in the Madras Legislative Assembly.

IX—GOVERNMENT BILLS—*cont.*

(5) THE MADRAS SUGARCANE CESS (VALIDATION) BILL, 1963.

* THE HON. SRI P. KAKKAN : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Sugarcane Cess (Validation) Bill, 1963, and move—

"That the Bill be taken into consideration."

Sub-section (1) of section 14 of the Madras Sugar Factories Control Act, 1949 (Madras Act XX of 1949), as it originally stood, empowered the State Government to levy, by notification, a cess on sugarcane, brought *into any area* specified in such notification for consumption, use or sale therein. The said section was enacted with reference to Entry 52 of the State List in the Seventh Schedule to the Constitution and the corresponding entry in the Government of India Act, which empowered the State Legislature to levy a tax on the entry of goods into a "local area".

In Diamond Sugar Mills v. *State of U.P.* (A.I.R. 1961, S.C. 652) the majority of the Supreme Court decided that the proper meaning to be attached to the words "local area" in the said Entry 52 is an area administered by a local body like a municipality, a district board, a local board, a union board or a panchayat or the like, and that the premises of a factory was not therefore a local area. They accordingly held, that section 3 of the U.P. Sugarcane Cess Act, 1956, empowering the Government to impose a cess on the entry of sugarcane into the premises of a factory did not fall within the said Entry 52 and that as there was no other entry either in the State List or in the concurrent list permitting such Act, the Act was beyond the legislative competence of the U.P. State Legislature.

In the light of this decision, the Government examined the provisions of section 14 of the Madras Sugar Factories Control Act, 1949, and decided that the word "area" occurring in sub-section (1) of section 14 should be substituted by the words "local area" so as to bring that section into conformity with the decision of the Supreme Court. Accordingly, the Madras Sugar Factories Control (Amendment) Act, 1962 (Madras Act 1 of 1962), was enacted substituting the words "local area" for the word "area" in sub-section (1) of section 14 referred to above, replacing an Ordinance. The said Amending Act came into force on 1st March 1962, as Parliament had validated the levy and collection of cess

prior to that date by the Sugarcane (Validation) Act, 1961 (Central Act 38 of 1961) under the residuary powers available to it in Entry 97 of List I. The result of the Madras Amending Act was that the Government could levy a cess, by notification, after 1st March 1962 on sugarcane brought into any local area specified in the notification. A notification under the said section was issued only on 28th July 1962 as the Government had to consult the Advisory Committee (constituted under section 3 of the Act) as required by sub-section (1) of section 14 of the Act. But in a few cases, the cess had been levied and collected on sugarcane brought into any local area during the period between 1st March and 27th July 1962. As there was, in fact, no notification during the period such levy and collection of cess were not legally permissible. It is, therefore, necessary to validate this levy and collection by an Act of the Legislature. The Bill is intended to achieve this object. The Bill also provides that if actual levy has not been made on or after 1st March 1962 and on or before 27th July 1962, the officer can proceed to levy and collect the cess in the manner provided under the Principal Act. The amount of cess still due to the Government for the said period is about Rs. 12 lakhs. I commend this Bill for the consideration of this House.

MR. DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Sugarcane Cess (Validation) Bill, 1963, be taken into consideration."

* SRI S. MADHAVAN : Mr. Deputy Speaker, Sir, this Bill was brought with a view to levy cess retrospectively. I oppose this view. Of course, I agree that according to our Constitution, this House has got every right to levy taxes retrospectively. But this should not be taken as a privilege to levy every tax retrospectively. As pointed out by the Hon. Minister, it is true that a case was reported in A.I.R. 1961, Supreme Court, at page 652. In that case, the Supreme Court has decided about the words "local area". It was stated in that judgment that the premises of a factory was not a local area and did not fall within the Entry 52. So it may be correct to amend the word "area" as "local area" but according to section 14 of the Act XX of 1949, the Government have got powers to levy this tax only after publishing a notification. 12-30] a.m.
So, the Government have taken powers to levy the tax only under section 14 and they are entitled to levy the tax only after the publication of the notification. Even if the amending Act is to come into force from March 1962, that does not mean that the Government are entitled to levy the tax from that date. According to section 14 of the Act, they are entitled to levy it only after the publication of the notification. The Government have failed to publish the notification on the date when the amending Act came into force. Therefore, the Government have now come forward to bring forward a Bill giving effect to the levy of the tax retrospectively. But I feel, certainly, that this will amount to misuse of the powers of this House by the Government to levy the tax retrospectively without any reason at all. So, I oppose this Bill.

[23rd November 1963

***கனம் திரு. பூ. கக்கன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த அரசாங்கமானது எப்பொழுதும் இந்த சபையின் அதிகாரத்தை மிஸ்யூஸ் பண்ணினது கிடையாது என்பதை இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஏரியாவைப் பரிசீலித்து நிர்ணயிக்க ஒரு அட்வைசரி கமிட்டி அமைத்தார்கள். அதன் பிறகு அவர்கள் விசாரித்து ரிபோர்ட் கொடுத்த பிறகு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் ரிபோர்ட் உடனடியாக வராததால் தாமதம் ஏற்பட்டது. அது மிஸ்யூஸ் பண்ணுவது என்று அர்த்தமல்ல.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Sugarcane Cess (Validation) Bill, 1963, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI P. KAKKAN: Sir, I move—

"That the Madras Sugarcane Cess (Validation) Bill, 1963, be passed."

MR. DEPUTY SPEAKER: The quesion is—

"That the Madras Sugarcane Cess (Validation) Bill, 1963, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(6) THE MADRAS CATTLE DISEASE (AMENDMENT) BILL, 1963.

*THE HON. SRI P. KAKKAN: Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Cattle Disease (Amendment) Bill, 1963, and move—

"That the Bill be taken into consideration."

Sir, the Madras Cattle Disease Act was enacted in the year 1866 with a view to enabling the Government to take measures for preventing the spreading of contagious or infectious diseases among animals in the State of Madras and with that object, to prescribe by law in what manner animals so infected shall be dealt with.

At present, in the definition of the word "Animal" in the Madras Cattle Disease Act, 1866 (Madras Act II of 1866) as in force in the State of Madras except the Added Territories, that is, the territories that have been transferred from the State of Andhra Pradesh and added on, to this State under the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act 56 of 1959) dog has not been included, although dog has been included

23rd November 1963] [Sri P. Kakkan]

within the definition "Animal" in the above Act as in force in the Added Territories. It is, therefore, felt that it is desirable to include dog within the definition of the Act in its application to the rest of the State of Madras also. The Bill provides for this.

I request the House, Sir, to accept the motion.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Cattle Disease (Amendment) Bill, 1963, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI P. KAKKAN: Sir, I move—

"That the Madras Cattle Disease (Amendment) Bill, 1963, be passed."

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Cattle Disease (Amendment) Bill, 1963, be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. DEPUTY SPEAKER: The House is adjourned *sine die*.

The House then adjourned *sine die*. 12-37 p.m.

X.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

261. *Notification issued with G.O. Ms. No. 1336, Public (Services-A), dated 26th August 1963 amending the Madras Public Service Commission Regulations, 1954, regarding the inclusion within the Commission's purview, the post of Demonstrator in Mechanical and Metallurgical Laboratory section of the Chemical Testing and Analytical Laboratory, Madras. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]*

262. *Notification issued with G.O. Ms. No. 1726, Education, dated 23rd July 1963 amending Schedule to the Madras Gift Goods (Unlawful Possession) Act, 1961 (Madras Act 49 of 1961). [Laid on the Table of the House under Section 6 (b) of the Madras Gift Goods (Unlawful Possession) Act, 1961 (Madras Act 49 of 1961).]*

[திரு. க. ர. நல்லசிவம்] [23rd November 1963

பிறகு வந்த திட்டம் அது. அந்தத் திட்டம் வந்து 10 ஆண்டுகள் ஆகின்றன. அப்படியிருந்தாலும் கூட வருமானத்திற்குத் திண்டாடும் விவசாயிகள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். குறைந்த பட்சம் ஒரு திட்டம் நிறைவேற்றப் பட்ட பிறகு 5 ஆண்டுகள் கழித்து ஏதோ வரி கொடுக்கும் சக்தி வரும். இதிலே பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. பஞ்சப் பிரதேசமாக இருந்து, பஞ்சம், பசி இவைகளை அனுபவித்து வந்தவர்கள், தண்ணீர் வந்த பிறகு நிலத்தை சீர்திருத்தவேண்டியிருக்கிறது. நிலத்தை சீர்திருத்துவதற்கு சர்க்கார் பணம் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். பெருவாரியாக தண்ணீர் கிடைக்கும்போது எல்லோரும் கடன் பெற முடியாது. அதோடு தண்ணீர் வந்து பாசனம் பெற்ற பிறகுதான் மதிப்பு உயருகிறது. அந்த மதிப்பு வைத்துத்தான் கடனைப் பெற முடியும். பல சிக்கல்கள் காரணமாக எந்த அளவுக்கு நிலம் இருந்தாலும் கூட சாகுபடிக்குக் கொண்டுவர பல வருஷங்கள் ஆகின்றன. இந்த அடிப்படையில்தான் முதல் வருஷத்தில் பாதி தண்ணீர் தீர்வை, இரண்டாவது வருஷத்தில் முக்கால் தண்ணீர் தீர்வை, மூன்றாவது வருஷத்தில் முழு தண்ணீர் தீர்வை என்று அந்த மாதிரி வைத்திருக்கிறார்கள் ரெவின்யூ வசூலிலே. திட்டம் நிறைவேற்றப்பட்டு தண்ணீர் கிடைத்ததற்குப் பின்னால் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு காலமாவது கழித்து வரி போட்டால்தான் விவசாயிகள் பலன் பெற முடியும். இல்லாவிட்டால், விவசாயிகளுக்கு பெரிய தொல்லையாகப் போய்விடும். கொப்பு வாய்க்கால் பிரச்னை என்றைக்கும் தீராத பிரச்னை. முதன் முதலாக ஒரு சட்டம் வந்தது. அதற்குப் பிறகு ஒரு தனிச் சட்டம் போடப் பட்டது. அதற்குப் பின்னால்கூட ஒரு சில இடங்களில் கொப்பு வாய்க்கால் வெட்ட முடியாத நிலை இருக்கிறது. சட்டத்தைப் போட்டு விட்டால் மட்டும் போதாது, விவசாயிகளுடைய ஒத்துழைப்பும் வேண்டும். நாம் ஒரு திட்டத்தை நிறைவேற்றினால், தண்ணீர் கிடைத்ததற்குப் பிறகு சில ஆண்டுகளுக்குப் பின்னால்தான் விவசாயிகள் பலனை அனுபவிக்க முடியும். தண்ணீர் கிடைத்ததற்குப் பின்னால், குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுக்குப் பிறகு தான், இந்த வரியை வசூலிப்பது என்று சர்க்கார் முடிவு செய்தால், விவசாயிகளுக்கு மிகவும் ஆதரவாக இருக்கும்.

நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம், விவசாயிகள் மட்டும்தான் பயன் அடைகிறார்கள் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்க முடியாது. ராஜ்யம் பூராவும் இருக்கக் கூடிய ஜனங்களுக்கும் பயன் கிடைக்கிறது, அவர்களும் அபிவிருத்தி அடைகிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல இடங்களில் ஜனங்கள் அபிவிருத்தி வரி கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்று சொன்னதாகச் சொன்னார்கள். வேண்டுமானால், 100 ஏகரா, 200 ஏகரா, 1,000 ஏகரா நிலங்களுக்கு இது பொருத்த

23rd November 1963] [திரு. க. ர. நல்லசிவம்]

மாக இருக்குமே தவிர, மற்றபடி பொருத்தமாக இருக்காது. நான் ஒன்று அவர்களைக் கேட்க விரும்புகிறேன். பரம்பிக்குளத் திட்டப் பகுதியில் லட்சக் கணக்கான ரூபாய் வாங்க முடியுமா என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உண்மையில் ஜனங்கள் முதலில் தண்ணீரை எப்படியாவது கொண்டுவந்து விடுங்கள் என்று சொல்லுவார்கள், தண்ணீரை எப்படியாவது கொண்டுவந்து திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புவார்கள். பின்னால் எதிர்காலத்தில் அவர்கள் கஷ்டங்களை அனுபவிக்கும்பொழுது, அவர்கள் அவதிப்படுகிறார்கள். (குறுக்கீடு) கிளர்ச்சியில் பலன் இருக்கிறது....

கனம் உதவி சபாநாயகர்: மீண்டும் கனம் அங்கத்தினர் பொது விவாதத்தில் ஈடுபடுகிறார்.

திரு. க. ர. நல்லசிவம்: கீழ்பவானி பிரதேசத்தில் கிளர்ச்சிக்கு பலன் இருக்கிறது என்பதை ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன். அன்றையதினம் கிளர்ச்சி நடத்தவில்லையென்றால் விவசாயிகள் அந்த சட்டத்தை ஏற்றுக்கொண்டு ஒரு ஏகருக்கு ரூ. 500, ரூ. 1,000 வரி செலுத்தக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கக்கூடும். கிளர்ச்சி செய்ததினால்தான் சர்க்கார் வேறு வகையில் கருத்தைத் திருப்பிக் கொண்டார்கள், பிறகு சட்டத்தைக் கீழே போட்டுவிட்டார்கள். பிறகு இப்பொழுது இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏக்கருக்கு ரூ. 250 செலுத்த வேண்டியதாக வந்திருக்கிறது. கிளர்ச்சியினால் ஒன்றும் பலன் இல்லை என்று சொல்ல முடியாது.

நான் கடைசியாகக் கேட்டுக் கொள்கிறேன், விவசாயிகளைப் பொருத்த மட்டில் குறிப்பாக ஒன்றைச் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். கீழ்பவானிப் பிரதேசத்தைப் பொருத்தவரையிலே, ஐந்து ஆறு நாட்களுக்கு ஒரு தடவைதான் தண்ணீர் பெற்று நெல் சாகுபடி செய்கிறார்கள். தஞ்சாவூரில் திட்டம் இருந்தால், தினசரி தண்ணீர் பெற்று நெல் சாகுபடி செய்கிறார்கள். இது குறித்து விசேஷ பிரிவு ஒன்றும் இந்த மசோதாவில் கிடையாது. நிச்சயம் குறிப்பிட்ட அதிகாரிகள் இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, 4-வது, 5-வது தரத்தின்கீழ் பவானிப் பிரதேசத்தை சேர்த்துக் கொண்டால்தான் நியாயமாக இருக்க முடியும். விவசாயிகளைப் பாராட்டாவிட்டாலும்கூட, ஒரு போக நஞ்சை தரத்தில் இந்தப் பகுதியையும் சேர்த்து, விவசாயிகள் தலையில் பெரிய பாரத்தை சுமத்தி வைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாகக் கூடிய சந்தர்ப்பத்தில் நாம் இருக்கிறோம். அரசாங்கம் 'நோடிபை' செய்து சில திட்டங்களை பிரசுரம் செய்வதற்குரிய அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்றை நினைவுக்குக் கொண்டு

[திரு. வெ. ராமையா] [23rd November 1963

விவசாயிகள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இந்த வாதத்தை அந்தப் பக்கம் கொஞ்சம் இழுத்தோமானால், எந்த விதத்திலும் மின்சார விஸ்தரிப்புக்கு காரண்டி வாங்கவே முடியாது. இந்த நீர்ப்பாசன திட்டங்களைவிட மின்சார திட்டம் சம்பந்தமாக விவசாயிகளுக்கு ஏராளமான பொருள் செலவு ஆகிறது. ஒரு விவசாயி பெரிய அளவுக்கு செலவு செய்து கிணறு வெட்ட வேண்டும். அதற்கு மின்சாரம் விஸ்தரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், குறைந்த பட்ச கட்டணம் கட்ட வேண்டும். சமீபகாலம் வரை ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூ. 50 கட்ட வேண்டும். இப்பொழுது கொஞ்சம் இதைத் தளர்த்தியிருக்கிறார்கள். ஐந்து ஹார்ஸ் பவருக்கு ரூ. 250 கட்டவேண்டும், மின்சாரம் எடுத்துக் கொண்டாலும், எடுத்துக் கொள்ளாவிட்டாலும் கட்ட வேண்டும். உடனே லாபம் தருகிறது என்று விவசாயிகள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது நியாயம் என்று கருதுகிறார்கள். அதே தத்துவ அடிப்படையில் பார்த்தால், எந்த ஒரு பெரிய நீர்ப்பாசன திட்டத்தையும் நிறைவேற்றுவதன் காரணமாக, வறண்ட பகுதி விவசாயிகளுக்கு நிரந்தரமாக, நிச்சயமாக உழைப்புக்குத் தகுந்த லாபம் கிடைக்கும் என்று உறுதி அவர்களுக்கு ஏற்படும்பொழுது, அந்த விவசாயிகள் இதை ஒரு பெரிய பாதகமாக நினைப்பது கிடையாது.

இந்த லெவி முறையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் நினைப்பதைவிட, விவசாயிகளே ஒரு திட்டம் நிறைவேற வேண்டுமென்றால், நிச்சயமாக அவர்கள் உதவித் தொகை கொடுக்க முடியும், அவர்களுடைய பூமியின் மதிப்பு உயருகிறது, ஆகவே அதிலிருந்து ஒரு பங்கை எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லா விவசாயிகளிடமிருந்துதான் இந்தக் கருத்து அதிகமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தடவையும் ஏதேனும் ஒரு திட்டத்தைக் குறித்து கோரிக்கை வரும் பட்சத்தில், கோயம்புத்தூர் ஜில்லா விவசாயிகளாக இருந்தால், "நாங்கள் பெட்டர்மென்ட் லெவி கொடுக்கத் தயாராயிருக்கிறோம்" என்று அதிலே எழுதியிருப்பார்கள். ஆகவே இதை ஒரு பொது வரி என்ற அடிப்படையில் குழப்புவதில் நியாயம் இல்லை.

அரசாங்கம் இதை ஏற்றுக் கொள்ளும்பொழுது பல சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரிவித்தார்கள். சில இடங்களில் விவசாயிகளே முன்வந்து பணம் கொடுக்கிறார்கள். திரு. நல்லசிவம் அவர்கள் மதிப்புப்படி, பெரிய நிலச்சுவான்தார்கள் மட்டும்தான் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதற்குப் பதில் சொல்லக்கூடிய முறையிலே, திரு. எம். எஸ். செல்வராஜன் அவர்கள், பெரிய விவசாயிகளிடமிருந்து கடன் தொகையை வாங்காமல், சிறிய விவசாயிகளிடமிருந்து வாங்கி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். வறண்ட பகுதிகளுக்கு எல்லாம் நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் எவ்வளவு தூரம் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமோ, அதைக் கொடுப்பதற்கு விவசாயிகள் தயாராய் இருக்கிறார்கள்.

23rd November 1963] [திரு. வெ. ராமையா]

ஏதோ கிளர்ச்சியின் காரணமாக பல ஆண்டுகளுக்கு முன்பு முடிவு செய்யப்பட்ட சட்டம் கைவிடப்பட்டது என்று திரு. கே. ஆர். நல்லசிவம் தெரிவித்தார்கள். அப்படி ஒன்றும் கைவிடப்படவில்லை. அந்தச் சட்டம் உயிரோடு இருக்கிறது. நடைமுறையில் இருக்கக்கூடிய சிக்கல்களைப் போக்கக்கூடிய முறையிலே திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறோம். கிளர்ச்சி செய்வதன் மூலம் சட்டத்தைக் கைவிட்டு விடுவோம் என்று சொன்னால், அந்தக் கருத்தை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். திரு. நல்லசிவம் அவர்கள்கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நடைமுறையில் அதிகாரிகளால் கூட தீர்க்க முடியாத பல சிக்கல்கள் இருப்பதால், அவற்றின் காரணமாக விவசாயிகளுக்குத் தொந்தரவு ஏற்படக்கூடாது என்பதை மனதில் வைத்து, மறுபடியும் பரிசீலனை செய்து, கொண்டு வரவேண்டிய திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் மாதா கவுடர், இதிலேயும் கூட சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். காடாரம் போன்ற பகுதிகளில் சில கஷ்டங்கள் இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இந்தத் திருத்தம் அதிகக் கஷ்டத்தைத் தராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் செல்வராஜன் பேசும்பொழுது, மணிமுத்தார் திட்டத்திலுள்ள விசேஷப் பிரச்னைகளைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, அதில் விசேஷ கவனம் செலுத்தி, அரசாங்கம் வேண்டிய முடிவுகளை எடுக்கும்.

அவர் மற்றொரு கருத்தையும் தெரிவித்தார். திட்டம் உருவாகும்பொழுது, திட்ட அறிக்கையைப் பார்த்தால், இத்தனை கோடி ரூபாய் லெவி செலுத்தினால், இத்தனை லட்சம் ஏக்கர் சாகுபடிக்கு வரும் என்று என்ஜினியர்கள் முடிவு செய்திருப்பார்கள். ஆனால் திட்டம் முடிந்ததற்குப் பிறகு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகுகூட சில நிலங்கள் திட்டத்தினால் பயன் அடையாமல் போய் விடும். உத்தரவு பிறப்பிக்கும் நேரத்தில் அதைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். இதை எல்லாம் அரசாங்கம் மனதிலே கொண்டு, இதுபோல ஏதேனும் கஷ்டங்கள் வந்தால் விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்றாலும், அதற்குத் தகுந்த முடிவுகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை சபை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Mr. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 (L.A. Bill No. 19 of 1963), as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended, was **passed.**

B.—Reports, Notifications and other papers.

92. *List of Unstarred Questions Nos.* 161 *to* 190.

93. *Supplemental List of Unstarred Questions Nos.* 191 *to* 213.

* 94. *The Madras Appropriation (No. 5) Bill*, 1963 *(L.A. Bill No.* 27 *of* 1963).

* 95. *The Madras Appropriation (No. 6) Bill*, 1963 *(L.A. Bill No.* 28 *of* 1963).

---

* Circulated to Members on 22nd November 1963.

APPENDIX I.

[*Vide* Answer to Private Notice Question No. 1 on page 671 supra].

Anti-Hindi Agitation of the Dravida Munnetra Kazhagam—List of places where, and the periods for which, orders under section 144, *Cr.P.C. have been promulgated.*

District. (1)	*Places.* (2)	*Duration of order.* (3)
1. North Arcot	Throughout the district	For 15 days from the midnight of 17th/18th November 1963.
2. South Arcot	Throughout the district	For one month from 17th November 1963.
3. Chingleput ..	Kancheepuram Taluk including Damal and Walajabad.	From 15th to 19th November 1963.
	Saidapet Taluk including Tiruvottiyur Municipal Town and Madhavaram Panchayat Union Limits.	From 16th to 30th November 1963
	Kunnathur Police Station limits in Sriperumbudur Taluk.	From 16th November 1963 to 15th December 1963.
	Chingleput Taluk	From 18th November to 2nd December 1963.
	Madurantakam taluk	From 19th November to 4th December 1963.
4. Coimbatore	Throughout the district	For 7 days from 16th November 1963.
	The order has since been extended up to noon of 28th November 1963 in the following areas, viz., Municipalities of Coimbatore, Mettupalayam, Pollachi, Erode, Gobichettipalayam, Udumalpet, Tiruppur and Tarapuram, belt areas of five miles and to the Panchayat areas of Avanashi, Somanoor, Sulur, Chennimalai, Perundurai, Bhavani, Sathyamangalam and Puliyampatti.	
5. Kanyakumari	Municipal Towns of Nagercoil, Padmanabhapuram, Colachel and Kulithurai and also the entire Agastheeswaram Taluk.	For 15 days from 19th November 1963, afternoon.
6. Madurai ..	Madurai Taluk	For 10 days from 17th November 1963.
7. Ramanathapuram.	Elayiram Pannai in Sattur Taluk ..	For 15 days from 20th November 1963.
	Srivilliputtur Town Municipal area, Inam Karisalkulam and Mamsapuram.	From 18th November to 8th December 1963.
	Sivakasi Municipal Town	From 19th November to 4th December 1963.
8. Salem ..	Throughout the district	For 15 days from 17th November 1963.
9. Thanjavur ..	In all Municipal Towns of Thanjavur, Kumbakonam, Mannargudy, Nagapattinam, Tiruvarur and Mayuram and in the Panchayat areas of of Pattukottai, Tiruthuraipoondi, Arantangi, Aduthurai and Peravoorani.	For 15 days from 18th November 1963 midnight.
	Tiruvaiyaru Circle limits	For 15 days from 20th November 1963.
10. Tiruchirappalli	Musiri	For 7 days from 19th November 1963, afternoon.
11. Tirunelveli	Kulathur Panchayat area in Vilathikulam Circle.	For 5 days from 17th November 1963.
	Koilpatti Taluk	For 10 days from 19th November 1963.

[23rd November 1963

Appendix II.

[Vide Answer to Starred Question No. 488, on page 679 supra]

Under the National Malaria Eradication Programme, regular domiciliary and institutional visits are made for the detection of fever cases or history of fever cases. The Panchayat Union Elementary School at Melnangavaram was visited by the Malaria Surveillance Inspector as per the above scheme on 24th June 1963 and a survey was conducted. Smears were taken from children who gave the history of fever and presumptive treatment was given. Forty-six children were treated. Each of them swallowed two to three tablets of Camoquin and later complained of vomitting and drowsiness but none become serious. All of them were taken to the Headquarters hospital at Tiruchirappalli. Eight were admitted as in-patient for drowsiness and for observation. Other cases were treated as out-patients and sent back to school. The eight children, who were admitted as in-patients, were discharged on 26th June 1963 completely cured.

2. The Director, National Malaria Eradication Programme, has been appraised of the effect of Camoquin tablets and he has since arranged to supply Chloroquin tablets instead.

மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின்கீழ், மலேரியா ஜுரம் பீடித்துள்ளவர்களைப் பற்றி அறிவதற்காகவும், அவர்களுடைய ஜுர வரலாற்றினைத் தெரிந்து கொள்வதற்காகவும் திட்டப் பணியாளர் வீடு வீடாகவும், ஸ்தாபனம் ஸ்தாபனமாகவும் போய்ப் பார்த்து வருகின்றனர். இத் திட்டத்தின்படி, மலேரியா ஆய்வு இன்ஸ்பெக்டர் 24—6—63-ல் மேல் நங்கவரம் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிக்கு வந்து விசாரணை செய்தார். தங்களுக்கு ஜுரம் வருவதாகச் சொன்ன மாணவர்களிடமிருந்து ரத்தம் எடுத்துப் பரிசோதனை செய்து, அவர்களுக்கு மலேரியா இருப்பதாக அனுமானித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. 46 சிறுவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு அல்லது மூன்று காமோக்வின் வில்லைகள் உட்கொண்டனர். இவர்கள் பின்னர் வாந்தி எடுத்ததாகவும் மயக்கம் வருவதாகவும் தெரிவித்தனர். ஆனால், இவர்களில் யாருடைய நிலையும் மோசமாகவில்லை. இவர்கள் அனைவரும் திருச்சி தலைமையிட மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் எட்டு பேர் மயக்க நிலையில் இருந்ததால் அவர்களைக் கவனித்து வருவதற்காக அவர்கள் மருத்துவ மனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மற்றவர்கள் வெளி நோயாளிகளாகக் கருதி சிகிச்சை அளிக்கப்பெற்று, பள்ளிக்கூடத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். உள்நோயாளிகளாகச் சேர்க்கப்பட்ட எட்டு சிறுவர்கள் பூரண குணமடைந்ததன் மேல் 26—6—63-ல் விடுவிக்கப்பட்டனர்.

காமோக்வின் வில்லைகளை உட்கொள்வதால் நேரிடும் விளைவுகள் மலேரியா ஒழிப்பு தேசியத் திட்ட டைரக்டருக்கு எடுத்துரைக்கப்பட்டன. இவர் இவ்வில்லைகளுக்குப் பதிலாக, இப்போது குளோரோக்வின் வில்லைகள் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளார்.

Appendix III.

[*Vide* Answer to Starred Question No. 492 on page 683 supra]

Adulteration of food is prevalent in every variety of food. It has not assumed any widespread proportion because, the provision of the Prevention of Food Adulteration Act and the Rules framed thereunder are being enforced strictly. The adulteration of food and food-poisoning in hotels take place in the following ways :—

23rd November 1963]

(1) through procurement of adulterated raw materials, storing of food and exposing them to insects or rodent pests ;

(2) use of utensils not kept properly tinned or which are not in proper repair for preparing and storing of food ;

(3) inadequate cleaning and sterlisation of plates and vessels in which food is served ; and

(4) use of poisonous chemicals, synthetic flavours, colours, sweeteners, etc., for processing food and re-processing of unsold left over and stale food of the previous day with intention for resale.

2. The Government have already taken measures to increase the laboratory facilities for analysis of food samples and have sanctioned the establishment of a Principal Laboratory at Coimbatore. When this laboratory is established more samples can be taken and tested and a greater drive to arrest food adulteration could be undertaken.

3. Section 108 of Madras Public Health Act, 1939, also prohibits the sale of unwholesome food which is also enforced by the Public Health staff.

4. The provisions in the Prevention of Food Adulteration Act are sufficiently deterrent. The Act provides :

(1) for the first offence, imprisonment for a term which may extend to one year or with fine which may extend to two thousand rupees or both ;

(2) for the second offence, imprisonment for a term which may extend to two years and with fine : and

(3) for the third and subsequent offences, with imprisonment for a term which may extend to four years and with fine.

5. These deterrent provisions are expected to bring down adulterations to substantial level in due course.

எல்லா வகை உணவுப் பொருள்களிலும் கலப்படம் செய்யப்படுகிறது. உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டம், அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகள் ஆகியவை கண்டிப்பாக அமல் நடத்தப்படுவதால், உணவுப் பொருள் கலப்படம் மிகப் பரவலாக நடைபெறுவதில்லை. ஹோட்டல்களில் உணவுக் கலப்படமும் உணவு விஷமும் அடியிற்கண்ட வகைகளில் ஏற்படுகின்றன :—

(1) கலப்பட மூலப் பொருள்களை வாங்குதல், உணவுப் பொருள்களை சேகரித்து வைத்து பூச்சிகளுக்கும், எலிகளுக்கும் உணவாகவைத்தல்;

(2) சரிவர ஈயம் பூசப்படாத அல்லது தகுந்த வகையில் இராத ஏனங்களை உணவு தயாரிக்கவும் சேகரித்து வைக்கவும் பயன்படுத்தல்;

(3) உணவு வழங்கப்படுகிற தட்டுகளைப் போதிய அளவு சுத்தம் செய்யாதிருப்பதும், கொதி நீரில் போட்டுக் கழுவாமலிருப்பதும் ;

[23rd November 1963

(4) உணவு தயாரிக்கவும், முந்தைய நாளில் விற்காது எஞ்சியுள்ள உணவுப் பண்டங்களை விற்கும் நோக்கத்துடன் மீண்டும் தயாரிக்கவும், விஷ ரசாயனப் பொருள்களையும், செயற்கை மணங்களையும், நிறங்களையும் இனிப்பூட்டும் பொருள்களையும் பயன்படுத்தல்.

2. உணவு மாதிரிப் பொருள்களை நுணுகிப் பரிசிலனை செய்ய ஆய்வுக்கூட வசதிகள் ஏற்படுத்த அரசினர் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளனர். கோயம்புத்தூரில் முக்கிய ஆய்வுக்கூடம் அமைக்கவும் அரசினர் அனுமதி வழங்கியுள்ளனர். இந்த ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டதும், அதிக உணவு மாதிரிகள் எடுத்துச் சோதனை செய்யலாம். அதனால் உணவுக் கலப்படத்தைத் தடுக்க அதிக அளவில் முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

3. 1939-ம் ஆண்டு சென்னை பொதுச் சுகாதாரச் சட்டத்தின் 108-வது பிரிவு சுகாதார முறையில் இராத உணவு விற்பனை செய்வதைத் தடை செய்கிறது. இச் சட்டத்தையும் பொது சுகாதாரப் பணியாளர் அமல் நடத்துகின்றனர்.

4. உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் ஷரத்துக்கள் போதிய அளவு தீவிரமுள்ளவையாயிருக்கின்றன. இச் சட்டத்தில் அடியிற்கண்டவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

(1) முதல் குற்றத்திற்கு, ஓராண்டு வரை காவல் தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய் வரையில் அபராதம் அல்லது இருவகைத் தண்டனையும் ;

(2) இரண்டாவது குற்றத்திற்கு, இரண்டாண்டு வரை காவல் தண்டனையும் அபராதமும் ;

(3) மூன்றாவது குற்றத்திற்கும் அதற்குப்பின் செய்யும் குற்றத்திற்கும், நான்காண்டுவரை காவல் தண்டனையும் அபராதமும் ;

5. இவை காரணமாக நாளடைவில் உணவுக் கலப்படம் கணிசமான அளவுக்குக் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

APPENDIX IV.

[Answer to Starred Question No. 494, on page 684 supra.]

The functions of the Social Welfare Workers are given below :—

1. Duties connected with National Emergency and Village Volunteer Force.

2. *Small Savings.*—Every Social Welfare Worker should either enlist ten persons per month for Small Savings or canvass for an amount of Rs. 50 (rupees fifty only) per month.

3. *Family Planning.*—At least four persons should be enlisted every month for Vasectomy operations.

4. *Conduct of 'days' and 'week'.*—About twenty-five days for a year.

5. *Enlisting of subscribers for 'Grama Nalam'.*—Two subscribers should be enlisted every month.

6. *Cottage Industries and Khadi.*—The duties in this regard should be fixed by the Block Development Officer in consultation with the Secretary, Khadi and Village Industries Board.

23rd November 1963]

7. *National Integration and Five-Year Plans.*—Five meetings should be held every month. The meetings should be in the form of informal assemblage of fifteen to twenty persons at which talks and discussions on National Integration and Five-Year Plans are arranged.

சமூக நலத் தொண்டர்களின் அலுவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. தேசிய நெருக்கடி நிலைக்குச் சம்பந்தப்பட்ட அலுவல்கள், கிராமத் தொண்டர் படை சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. **சிறு சேமிப்பு.**—ஒவ்வொரு சமூக நலத் தொண்டரும் பிரதி மாதமும் சிறு சேமிப்புத் திட்டத்தில் பத்து பேரைச் சேர்க்கவேண்டும் அல்லது ஒவ்வொரு மாதமும் சேமிப்பு பற்றி பிரசாரம் செய்து ரூ. 50 (ஐம்பது ரூபாய் மட்டும்) சேமிக்க வகை செய்ய வேண்டும்.

3. **குடும்பக் கட்டுப்பாடு.**—பிரதி மாதமும் நான்கு பேராவது 'வாசக்டமி ஆபரேஷன்' செய்துகொள்ளத் தூண்ட வேண்டும்.

4. **'தினங்களும்', 'வாரங்களும்' கொண்டாடுதல்.**—ஆண்டு ஒன்றுக்குச் சுமார் இருபத்தைந்து தினங்கள்.

5. **'கிராம நலம்'.**—சஞ்சிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்தல். மாதம் ஒன்றுக்கு இரண்டு சந்தாதாரர்களையாவது சேர்க்க வேண்டும்.

6. **குடிசைத் தொழில்களும் கதரும்.**—இது சம்பந்தமான அலுவல்கள் கதர்—கிராமக் கைத்தொழில் போர்டு செயலாளரைக் கலந்தாலோசித்து வட்டார அபிவிருத்தி அதிகாரி நிச்சயிப்பார்.

7. **தேசிய ஒருமைப்பாடும் ஐந்தாண்டுத் திட்டங்களும்.**—பிரதி மாதமும் ஐந்து கூட்டங்கள் நடத்த வேண்டும். கூட்டத்தில் பதினைந்து அல்லது இருபது பேர் கூடி தேசிய ஒருமைப்பாடு, ஐந்தாண்டுத் திட்டங்கள் இவற்றைக் குறித்து உரைகளும் விவாதங்களும் நிகழ்த்த வேண்டும்.

APPENDIX V.

[Vide answer to starred question No. 502 an page 690 supra.]

The following are the measures so far taken to relieve traffic congestion in Madras City with reference to the recommendations made by the Madras City Road Development and Traffic Planning Committee :—

(1) *Widening of roads.*—The following roads have been widened :—

1. Pattullo's Road.
2. White's Road.
3. Pantheon Road.
4. Wallajah Road.
5. Poonamallee High Road.
6. Usman Road.
7. Fort Station Road.
8. Gopathynarayanaswamy Chetty Road.

[23rd November 1963

As there are two foot bridges near the Fort Railway Station for the convenience of railway passengers and as there is heavy pedestrian cross traffic at this Railway station, most of the passengers have to cross Muthuswamy Iyer Road from west to east to reach the entrance of the bridges. Hence, the portion of the road has been widened to accommodate an extra lane of traffic.

Road markings on South Beach Road and Poonamallee High Road guide the motorists and car parking stalls enable care to be parked in an orderly manner.

(2) *Slow-moving traffic.*—With a view to relieving traffic congestion in the heart of the City, prohibition of slow-moving vehicles such as hand carts, platform trucks, double bullock carts push carts, etc., was ordered during peak hours on important roads and this prohibition has been continued with suitable modifications and adjustments.

Restriction on the movement of lorries in George town area was also imposed as a result of which lorries are allowed only from 7-30 p.m. to 9 a.m.

As an experimental measure, a six-lane traffic system between the Spencer and Wellington roundabouts on Mount Road was introduced. Slow-moving vehicles are not allowed to ply along this stretch of Mount Road between 9 a.m. and 1-30. p.m. and between 4 p.m. and 7 p.m.

The lane system has also been introduced from Periamet level crossing to General Hospital Mortuary point and from Transport House to Central Station light point along Body Guard Road.

From 1st October 1962, slow-moving vehicles on Marmalong Bridge have been diverted during peak hours *via* the causeway and this has contributed much to freer flow of traffic.

(3) *Provision of automatic signals.*—Automatic traffic signals were installed in the area covered by the six-lane system.

As there was delay in clearance of traffic at Pattullo's Road and Mount Road junction due to lack of space for storage of vehicles at the automatic signal point, Pattullo's Road was made 'one way' prohibiting entry from Mount Road. Smith Road was provided as an alternative route for clearance of traffic from Mount Road. Provision of a secondary signal for Pattullo's Road is also under examination.

It has been decided to instal automatic traffic signals at the following intersections and the installation work will commence shortly:—

1.	Poonamallee High Road	× Muthuswamy Iyer Road.
2.	Poonamalee High Road	× Gandhi Irwin Bridge Road.
3.	Poonamallee High Road	× Dr. Nair Bridge Road.
4.	Mount Road	× Eldam's Road Junction.

23rd November 1963]

(4) *Overbridges.*—Construction of an overbridge at the Washermenpet Railway level crossing has already commenced. The work of construction of an overbridge at Arcot Road near Kodambakkam Railway Station has commenced.

(5) *Construction of subways.*—The construction of subways at Round Tana, Mount Road, will be taken up shortly.

It has been decided to construct a sub-standard subway across the railway line opposite to Griffith Road and standard subway at Kannammapet level crossing and the construction work will commence shortly.

The question of preparing a master plan to solve traffic problems in Madras City is under examination.

